# பகுத்தறிவு

ஆசிரியர்: அண்ணாதுரை

கழக வார இதழ். ★ ★ ★ விலை அணா ஒன்று.

மலர் 6 | சேலம் 17-8-56. வள்ளுவராண்டு 1987. ஆவணி 2. | இதழ் 6.


**உரிய இடம்.**

உழைப்பாளிகளிடம் உள்ள தொழில்திறமை—கைவண்ணம் — அவர்கட்கு, சமூகத்தில் உரிய இடத்தைப் பெற்றுத் தருவதில்லை. "ஜாதிமுறை" தான், அவர்களுக்கு இன்னதுதான் இடம் என்று நிர்ணயிக்கிறது.

—அண்ணா

# வேண்டுமென்றே மீறவில்லை; வேதனை விளைத்தார்கள்!

# பலாத்காரமில்லை; ஆனால், பதைக்கச்சுட்டது போலீஸ்!

சேலம் தம்மம்பட்டியில், சென்ற ...பிப்ரவரி 20-ல் நடந்த சர்வகட்சி ...த்தாலின்போது அடக்கு... கொடுமை தாண்டவமா... ...ற்று. துப்பாக்கிப் பிரயோகம் ...பெற்றது. பலபேர் படுகாய... ...றனர். இருபத்தைந்து தோழர் ...து போலீஸ் வழக்குத் ...த்திருந்தது. அதில் மூவர் மட்டுமே குற்றவாளிகள் எனக் கண்டு மற்றவர்கள் அனைவரையும் வி... ...தலை செய்துவிட்டார் நீதிபதி.

குற்றவாளிகள் எனப்பட்ட மூவருக்கும் அவர்கள் செய்துள்ள குற்றம் வெறும் கீழ்ப்படியாமை "டெக்னிக்கல்" குற்றம் எனக் கூறி நது மன்றம் கலையும்வரை தண்டித்து உள்ளார். குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தோழர் இராமலிங்கம் துப்பாக்கிக் குண்டடிக்குப் பலியாகி, ஆறுமாதங்களாகியும் குணமடையாமல் சேலம் மருத்துவ மனையிலேயே இருந்து வருவதால், அவர்மீது உள்ள வழக்குமட்டும் இன்னும் முடிவு செய்யப்படாமல் இருந்து வருகிறது.

இவ்வழக்கை விசாரித்த ஆத்தூர் சப் மாஜிஸ்திரேட் அவர்கள், தமது தீர்ப்பில் குறிப்பிடுவதாவது:

ஆலோசனைக்குரிய அம்சமாவதெனில்:- "ஏற்கனவே ...வாக அறிவிக்கப்பட்ட உத்தரவைமீறும் நினைப்புடன் சட்டவிரோதமாகக் கூடி இருந்தார்களா?

"முதல் குற்றவாளியிலிருந்து நான்காவது குற்றவாளிவரை கலைந்து போகும்படி சொன்ன பிறகும் கலைந்து செல்லாது சட்ட விரோதமான கூட்டத்தில் இருந்தார்களா?

"சென்னை போலீஸ் சட்டத்தின் 30-வது பிரிவின் கீழ் கிராமக்கல் ...டிப்டி-சூப்ரியண்டெண்டால பிறப்பிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை, தம்மம்பட்டியில், தண்டோரா மூலம் விளக்கமாக அறிவிக்கப்பட்டிருந்தது என்பது போலீஸ் சார்பில் சாட்சியம் கூறிய முதல்—எட்டாவது சாட்சிகள்மூலம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. நாம், அதை நம்பாமல் இருப்பதற்குக் காரணம் எதுவுமில்லை மேலும், எட்டாவது சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்யவுமில்லை 'முன் அனுமதி பெறுமல் கூட்டமோ, ஊர்வலமோ நடத்தக்கூடாது' எனப் போடப்பட்டிருந்தத் தடை உத்தரவு, கிராமத்தில் விரிவாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது என்பது இதனால் தெளிவாகத் தெரியவருகிறது.

"20-2-56 ...ஊர்வலம் ...நடத்துதற்கும் ஊர்வலம் செய்வதற்கும் தம்மம்பட்டியைச் சேர்ந்த சத்தியநாராயணன் என்பவருக்கு அளிக்கப்பட்டிருந்த அனுமதிச்சீட்டை, பதின்மூன்றாவது சான்றாக போலீஸ் சார்பு பத்தாவது சாட்சி இங்கு கொடுத்... ...உத்... ...ப்பட்ட முதல்—ஐந்தாவது குற்றவாளிகள், தங்கள் தலைவர்கள் மூலம் அனுமதி பெற்றிருப்பதாகக் கூறி உள்ளார்கள். அவ்வனுமதியை வைத்திருந்த சத்தியநாராயணன் அந்த அனுமதியின் காலை ஒன்பது மணியிலிருந்து சிறை அறைக்குள் மூடப்பட்டு இருந்திருக்கிறார். இவ்வகையில் பெற்றிருந்த அனுமதியைப் பயன்படுத்த முடியாமல் அவர் (சத்தியநாராயணன்) தடுக்கப்பட்டு இருக்கிறார்.

"சத்தியநாராயணன் மூலம் அனுமதி கோரப்பட்டு பெறப்பட்டு இருந்தும், சத்தியநாராயணன் பெறப்பட்ட அனுமதி

[8-ம் பக்கம் பார்க்க]

சிறுகதை

# பேராண்மை.

சி. என். நாச்சியப்பன்.

தமிழ்நாடு உலகோடு சமமாக நின்ற காலம். தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழித்தோங்கும் கோலம். ஞாலமே நம் தாயகத்தைக் கண்டு வாய் பிளந்து நின்றது, அன்று!

ஒரு கற்பனை நாடு...வீராசபுரம்! வீரர்களும், அவர்களுக்குரிய அரசனும் வாழ்ந்தபுரம் அது.

வீராசபுரத்தின் வீதிகளிலே ஒரு நாள், வெள்ளம்போல் தமிழர் கூட்டம் பொங்கி வழிந்தது. தங்கு தடையின்றித் தெருவிலே போகமுடியாத நிலை. காரணம், பக்கம் வந்து விட்டதாம் நாட்டிற்கு—படையெடுத்து வருகிறாம் [illegible] எதிரி... [illegible] கள் உள்ளமெல்லாம் மாபெரும் உணர்ச்சி—தோள்கள் விம்மின—வாள்கள் ஏங்கின, இரத்தப் பசியால். வேல்களைத் தாங்கி நின்ற வீரர்கள், வேல்விழி மாதரையும் மறந்து, பாசம் நேசமெல்லாம் துறந்து படை வரிசையிலே முன்னணியிலே [illegible]னர்.

எதிரிநாடு, பெயா[illegible]ங்கபுரம்.

அந்நாட்டு சேனாதிபதி—வீரன்—ஆனாலும் பெரும் மூர்க்கன்...அவனை இதுவரை வென்றவர்களே கிடையாது... தொடுத்த போரிலெல்லாம் அவனுக்கு எடுத்தவுடன் வெற்றிகிட்டும். ஆனாலும் அக்பாவி...அநியாயமாக பிறநாட்டின்மேல் படையெடுப்பதுதான் அவனது பழக்கம் தன்னுடைய வெற்றிப் பிரதாபத்தை நிலைநாட்ட வேண்டுமென்பதற்காகவே அவன் இவ்வாறு செய்வது வழக்கம்' அதோடு அவன், மேலும் ஒரு சவால் விடுத்திருந்தான்...என்னை யாராலும் வெல்லமுடியுமா? உயிரைக் கொல்லவும் முடியுமா; என்பதுதான் அது. அவன் பெயர் அக்கிரம சிங்கன்!

வீராசபுரத்தாருக்கு இந்தச் செய்தியெல்லாம் முழுதும் தெரியும். அந்த நாட்டு வீரர்கள் அனைவரும், இந்தப் போர் அக்கிரமசிங்கனை வென்று' அவன் அகம்பாவத்தை அடக்குவதற்குக் கிடைத்த ஒரு சந்தர்ப்பமாகவே கருதினர். போர் முரசம் கொட்டப்பட்டதும் அத்தனை வீரர்களும் சேர்ந்து தளபதியிடம் பேசினர், இதுபற்றி. வீராசபுரத்துத் தளபதி, உயர்ந்த வீரன்—நற்குண நற்செய்கைகளுடையவன். சுருக்கமாகச் சொன்னால், முழு வீரன்—மானமுள்ள தமிழன். பெயர் அன்புச் சிங்கம்!

அன்புச் சிங்கம் இந்தச் செய்தியைக் கேட்டதும் புன்னகை புரிந்தான். வாயொன்றும் பேசவில்லை. சிலசந்தர்ப்பங்களில் மொழிவழியாக வெளிப்படும் உணர்ச்சிகளைக் [illegible] வழியாக வெளிப்படும் உள்ளுணர்ச்சிகளுக்கு அதிக மதிப்பு இருக்கத்தான் செய்கிறது!

*   *   ★

புலிகள் போர்க்களத்தில் பாய்ந்தன...எலியென இருந்த கோழைகள் குப்புறச் சாய்ந்தன...வாள்கள் மின்னின—வேல்கள் ஒன்றையொன்று பின்னின [illegible]. கத்தியும் கட்டாரியும், விண்ணைப் பிளந்தன, வேதனைக்குரல்கள். பண்ணைக்கட்டிய மென்மொழியார் தம் மார்பகத்திலே மகிழ்வோடு புரண்ட தலைகள், பல மைல்களுக்கப்பால் கொய்தெறியப்பட்டன!

அக்கிரமசிங்கனும்—அன்புச் சிங்கனும் மோதினார்கள். இடையிலே சேதி கூடப் பேசினார்கள். அக்கிரமன் சொன்னான், 'அடா, பொடியா! மடியப் போகும் உனக்கு மமதை வேறு? மாநிலத்தில் என்னை வென்றவர் யாருமில்லை'' எனக் கர்ஜித்தான்...அன்பு பதில் பேசினானென நினைக்கிறீர்களா? இல்லை. அப்பொழுதும் அந்தப் புன்னகை...அவன் பேசுவானேன்? அவனுடைய கத்திதான் பேசிக்கொண்டேயிருக்கிறதே, உள்ளத்து உறுதியை. வீசிக்கொண்டே இருந்தான், விநாடிக்கு விநாடி வேகமாக...

வெற்றி அன்பின் பக்கமே! அக்கிரமம் எங்காவது வென்றதாகச் சரித்திரம் உண்டா?... சாஸ்திரமிருக்கலாம். ஆரிய அணைப்பிலே...! ராமஜெயக் கதையிலே...!

ஞால சிங்கபுரம் தோற்றது—வீராசபுரம் வெற்றி பெற்றது...அக்கிரமசிங்கன் தப்பி ஓடினான். அன்புச் சிங்கத்தின் படைகள் சொந்த நாடு திரும்பினர்...வீராசபுரத்துப் படைகளுக்கு வெற்றியில் திருப்தியேயில்லை. அக்கிரம சிங்கனைக் கொல்லாமல் விட்டது பெருங்குற்றம்—வீரத்திற்கு இழுக்கு, என்றெல்லாம் வாதிட்டனர், அன்புச் சிங்கத்திடம். அப்பொழுதும் அவன் தந்த பதில், அதே புன்னகை!

வீராசபுரத்திற்குத் திரும்பும் வழியிலே ஒரு பெருங்காடு நல்ல இருள்... தனிமனிதன் மட்டுமாயின் மருள் ஒன்றினாலேயே மாண்டு போவான். அன்புச் சிங்கனின் படைகள் கூடாரம் [illegible]...குடித்து மகிழ்ந்த[illegible] தன—[illegible]ன—பா[illegible]ன—அமை[illegible]றிக் அங்குமிங்கும் ஓடின—செ[illegible] 'து' களிப்பு—சுற்றி நின்ற பகை[illegible]ரம் அவர் யெனத் தள்ளிவிட்ட எக்க[illegible] கிடக் கள் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து [illegible]தனர்.

அன்புச் சிங்கம் ஒதுங்கிப் போய்... ஒரு பாறையோரம் சென்று படுத்துக் கொண்டான். பெருமூச்சு விட்டான்—சிந்திக்க ஆரம்பித்தான்—எப்பொழுதுமே அவனுக்குத் தனிமையிலே கொஞ்சம் இனிமையுண்டு.

அக்கிரமசிங்கத்தைக் கொல்வது சரிதானா? என்பதுதான் அவனது சிந்தனைக்குக் கருவூலம்.

அன்புச் சிங்கத்தால் இன்னும் முடிந்த முடிவிற்கு வரமுடியவில்லை. மேலும் அவன் உள்ளம் கொஞ்சம் குழம்பிப் போயிருந்தது. சிந்தனைக்குத் தெளிவுப் பாதை ராஜபாட்டையைப் போல, குழப்பத்திற்குப் பின்புதான் தெளிவும் ஏற்படுகிறது! கண்ணை கண்ணுக மூடிக்கொண்டான்.

திடீரென ஒரு பயங்கரமு[illegible] சப்த நாடியும் ஒடுங்கிவி[illegible]

[7-ம் பக்கம் பா[illegible]



# எதிரொலி



வடநாட்டானையும் ஆரியனையும் எதிர்த்து நிற்பதென்றால் காங்கிரஸ்காரராலோ மற்றக் கட்சிகளாலோ முடியாது.

—விடுதலை.

அப்படிப்பட்ட முடியாத பஞ்சைகளை ஆதரித்து, அரியாசனத்தில் ஏற்றி வைக்க எங்களால் மட்டுமே முடியும் என்கிறாரோ விடுதலையார்?

*   *   *

பொதுத் தேர்தலில் பெண்களின் ஆதரவைப் பெற, விசேஷ முயற்சி செய்ய காங்கிரஸ் மேலிடம் முடிவு செய்திருக்கிறது.

—செய்தி

அரசியல் ஞானமற்றவர்கள் பெண்கள்; அவர்களைத்தான் எளிதில் ஏமாற்ற [illegible]யும் என்று நம்புகிறார்கள் போலும்!

*   *   *

மராட்டியர்-குஜராத்திகள் கூட்டு மாகாணம், புதிய திட்டத்தை டெல்லி சர்க்கார் ஏற்றது.

—செய்தி.

சர்க்கார் ஏற்றிருக்கலாம்! மக்கள் ஏற்கவில்லையே! துப்பாக்கி வேட்டுச் சப்தம் காதைத் துளைக்கிறதே!

*   *   *

காங்கிரஸ்காரரின் கதர்க்குல்லாய்களை குஜராத்திகள் பிடுங்கி நடுத்தெருவில் தீவைத்துப் போகக்கிறார்கள்.

—செய்தி.

குல்லாய்களுக்கே குல்லாய்கள்மேல் வெறுப்பு மூண்டதென்றால் வேதனை எவ்வளவு மிகுந்திருக்கும்?

*   *   *

பள்ளிக்கூடங்களில் மதபோதனை வகுப்புகள் நடத்த சர்க்கார் உத்தேசித்திருக்கிறது.

—மந்திரி பக்தவத்சலம்

பலே! பொய், திருடு, கொலை, கொள்ளை, விபசாரம் முதலிய தெய்[illegible] [illegible]ணங்களை இளம் வயதிலேயே [illegible] கற்கலாம் சிறுவர்; சிறுமி

# சேலத்திலே அலுமினியம், ★ ★ செழிப்பதோ வடநாடு!

ஆகஸ்ட் 12-ம் நாள், புதுடெல்லி செய்தியொன்று கூறுகிறது:

"ஆண்டுக்கு சுமார் 10,000 டன்கள் உற்பத்தியுள்ள 3 அலுமினியத் தொழிற்சாலைகள் சென்னை, ஒரிசா மாநிலங்களில் ஏற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

சென்னை மாநிலத்தில், சேலம்-மேட்டூரில் அலுமினியத் தொழிற்சாலை நிறுவப்படும்; இது, சர்க்கார் பொதுத் துறையில் ஏற்படுத்தப்படுமாம்; இது சம்பந்தமாக மத்திய சர்க்கார் தொழில்-வர்த்தக இலாகா ஒரு அமெரிக்க நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறதாம்; இதற்கு 10 முதல் 12 கோடி ரூபாய்வரையில் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது; இதற்கான மின்சாரத்தை பெரியாறு நிலையத்திலிருந்து நியாயமான விலையில் தருவதாக இந்திய சர்க்காருக்குச் சென்னை சர்க்கார் வாக்களித்துள்ளது."

இந்தச் செய்தியாவது— உத்தேசத் திட்டமாவது—மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறதா? ஒரிசா மாநிலத்தில் நிறுவப்படும் தொழிற்சாலை, அந்த மாநிலத்தவர் பொறுப்பிலேயே நடைபெறும்! சேலத்தில் நிறுவப்படும் தொழிற்சாலையில் இங்கு யாருக்கும் பொறுப்பில்லை! சென்னை சர்க்கார் என்ன செய்கிறது?

அமெரிக்கரின் கூட்டுறவோடு, இந்திய சர்க்காரின் நேரடியான பார்வையில் நடைபெறும் இந்த அலுமினியத் தொழிற்சாலைக்கு, சென்னை சர்க்கார் உதவிமட்டுமே செய்வார்களாம்! அப்படியென்றால் என்ன பொருள்?

ஒரிசா அலுமினியத் தொழிற்சாலையின் நிர்வாகம், நடப்பு, இலாப நட்டம் யாவும் அந்த மாநிலத்தைச் சேர்ந்தவை. சென்னை அலுமினியத் தொழிற்சாலையின் நிர்வாகம், பொறுப்பு, நடப்பு, வளம் வாய்ப்பு எல்லாம் டெல்லி அதிகாரபீடத்தைச் சேர்ந்தவை! எப்படியிருக்கிறது உத்தேசம்?

"வடக்கை வளப்படுத்த [illegible] ஏகாதிபத்தியம் முயலுகின்றது; [illegible] தேய வைப்பதோடு விடவில்லை; சுரண்டவும் முயலுகிறது" என்று எடுத்துக் காட்டினால் எரிந்து விழும் காங்கிரஸ் தோழனே! இதற்கு என்ன பொருள்? நீதான் சொல்லேன்!

—பகணன்.


# சேலத்தில் அண்ணா.



சிறப்புக் கூட்டம்.

20-8-56 திங்கள் காலை 10-மணிக்கு
சேலம் அம்பிகா டாக்கீசில்
அறிஞர் அண்ணா,
என். வி. நடராசன் பேசுவார்கள்.
நன்கொடை ரு. 1—0—0, 0—8—0, பெண்கள் 0—4—0
இ. ஆர். கிருஷ்ணன், செயலாளர்,
நகர தி. மு. கழகம், சேலம்.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்

# இதழும்

மலர் 6 | சேலம் 17—8—56 | இதழ் 6

## அரசாங்கம் நீதி வழங்குமா?

அரசாங்கப் புனரமைப்புச் சட்டம், அதன் விளைவான செயல் முறைகளில், தமிழகத்திற்குப் பெருந்தீங்கு இழைக்கப்பட்டது. தமிழனுக்குரிய நிலம்—எல்லை பறிபோயிற்று; தட்சிணப் பிரதேசம் என்ற சதித்திட்டம் உருவாயிற்று; தமிழ் மண்ணிற்குத் "தமிழ் நாடு" என்று பெயரிடவும் மறுக்கப்பட்டது. இவற்றை எதிர்த்து மக்கள் உரிமைக் குரல் எழுப்பினர்; ஊராள்வோர் பொருட்படுத்தவில்லை. சதிக்கு உடந்தையான காங்கிரஸ் தவிர, சகல கட்சிகளும் தமிழகப் பிரச்சினையிலே ஒன்றுபட்டன. எழுந்தது ஃபிப்ரவரி 20 வேலை நிறுத்தம்—அர்த்தால்.

தமிழ்நாடுமுழுமையும மவறறுகரமாக நடைபெற்றது வேலைநிறுத்தம். குடியரசிலே மக்கள் பெற்றுள்ள உரிமைக்குக் களங்கம் ஏற்படாத வகையில் எங்கும் அமைதியாக அர்த்தாலை நடத்திக் காட்டினர். எனினும், போலீஸ்காரர்களின் வெறித்தனமான செயல்கள் சில இடங்களிலே பெரும் வேதனைகளை விளைவித்தன; அவசியமற்ற—நியாயமற்ற அடக்குமுறை தர்பார் நடைபெற்றது. மக்களின் உரிமையைப் பறித்திடும் அத்தகு கொடுமைகளில் ஒன்று—முக்கியமானது—தம்மம்பட்டி துப்பாக்கிப் பிரயோகம்!

ஜனநாயக ஆட்சியிலே, ஆளவந்தார்களால் மக்களின் குரல் மதிக்கப்படாத நேரத்திலே, கிளர்ச்சிகள் தோன்றுவது இயற்கை. அச்சமயங்களிலே அமைதி காப்பதுதான் போலீசின் கடமையாக இருக்கவேண்டுமேயொழிய, அமைதி குலைப்பதன்று. தம்மம்பட்டி துப்பாக்கிப் பிரயோகத்தில் போலீசின் குருட்டுத்தனமான நடவடிக்கை; கடமை மறந்த செயல்; கண்டிக்கத் தக்க நிகழ்ச்சியாகும்!

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வெறியர்களிடம் பணியாற்றிய போலீஸ் புலிகள், சுதந்திரம் கோரிப் போராடிய காங்கிரஸ்காரர்பால் நீட்டிய துப்பாக்கிமுனையை இன்னும் அப்படியே பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது தம்மம்பட்டி போலீசின் போக்கு. இது காங்கிரஸ் ஆட்சியினர்க்குக் கேவலம் என்பதோடு, ஜனநாயக முறைகளுக்கும் இழுக்குத் தருவதாகும்.

தம்மம்பட்டி துப்பாக்கிப் பிரயோக வழக்கை விசாரித்த ஆத்தூர் நீதிபதி அவர்கள், தமது தீர்ப்பில் போலீசின் தவறான நடத்தையினை நன்கு விளக்கியுள்ளார். "ஊர்வலத்திற்குப் பெற்றிருந்த அனுமதியைப் பயன்படுத்த முடியாமல் தடுக்கப்பட்டது" "விதிக்கப்பட்டிருந்த தடையை வேண்டுமென்றே மக்கள் மீறவில்லை" "பலாத்கார உணர்ச்சியுடன் மக்கள் நடந்துகொள்ளவில்லை, போலீஸ்மீது கல் எறியவில்லை" "மக்கள் கலகஉணர்ச்சியின்றி அமைதியாக இருந்து வந்தனர். எந்தவித முழக்கத்தையும் அவர்கள் முழங்கவில்லை" "வேண்டுமென்றே ஊர்வலத்தினர் தடையை மீறவில்லை" "அவர்கள்ஒன்றுகூடியிருந்ததும் சட்டவிரோதமான கூட்டமில்லை" இவ்வளவும் அவரது தீர்ப்பிலே இடம் பெற்றுள்ளன.

இவ்வளவு அமைதியாக—நேர்மையாக நடத்தப்பட்ட ஒரு கிளர்ச்சியை அடக்கிட, ஆணவ வெறிகொண்ட போலீஸ் மக்களை துப்பாக்கியால் சுட்டுத்தள்ள முனைந்ததென்றால், அது எத்தகைய கொடுமை, எத்தகைய மிருகத்தனமான செயல் என்பதை நாட்டின் எதிர்கால நன்மையில் கருத்துள்ள அறிஞர்களும், நீதி பரிபாலிக்கும் பொறுப்பிலுள்ள ஆட்சியினரும் சிந்தித்தல் வேண்டும். இதுபோன்ற கொடுஞ்செயல்கள் இனியும் நிகழ்தல்கூடாது. எனவே, இந்த அக்ரமத்திற்கு வித்தான போலீஸ் அதிகாரியின்மேல் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும், பாதிக்கப்பட்டோர்க்கு நீதி வழங்கவேண்டும்; செய்வார்களா? ●

### தி. மு. க. பொதுக்கூட்டம்.

20—8—56 திங்கட்கிழமை மாலை 7-மணிக்கு கொளத்தூர் சூளை மைதானத்தில் நடைபெறும்.

தலைமை: தோழர், கே. பி. நரசிம்மன்.

பேசுபவர்: அறிஞர், சி.என். அண்ணாதுரை

கே. குருசாமி,
செயலாளர், தி. மு. கழகம், தெ



கருத்துரை.

### கலைக்கோயில்.

மதுரையினின்றும் திங்களுக்கு இருமுறை மலருகின்ற சிறந்த கலை இலக்கிய ஏடு! சிறுகதை, குறள் விளக்கம், இலக்கிய—கலை விமர்சனம், சிந்தனைக் கட்டுரைகள் மனம் கவருகின்றன, மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன்விழா மலர் மிகப் பயனுள்ள படைப்பு. தோழர். ரவி, சரோஜா திரவியம் கட்டித்தரும் கலைக்கோயிலில் தமிழ் மணக்கிறது, தமிழ்ப்பண்பு மணக்கிறது; அன்பு மணக்கிறது; அறிவும் மணக்கிறது! படிக்கவேண்டிய இதழ். தனிப்படி 0—2—0. ஆண்டுக்கு 3—0—0.
**அலுவலகம்:** 27-சப்பாணி கோயில் தெரு. வடக்குமாசி வீதி, மதுரை.

### மலர்.

செந்தமிழ் இலக்கியப் பொன்னேடு. [illegible] முறிஞர்கள் மு. வரதராசனார், [illegible] ரா. கிருட்டினசாமி, ம. கி. சண்முகம், மு. ஆரோக்யசாமி, புலவர் அரசு, வே. கபிலன் போன்றோர்களை ஆசிரியர் குழுவினராகப் பெற்று திங்கள்தோறும் வெளிவரும் நல்லிதழ். சங்ககால இலக்கிய மணமும் தமிழுணர்வும் சாம்பும் இனிய மலர். பதிப்பாசிரியர் கோ. செயராமன். மலரின் விலை 0—4—0 ஆண்டுக்கு 3—0—0
**அலுவலகம்:** தனம் பதிப்பகம், 5 ஆண்டியப்ப கிராமணி தெரு. சென்னை—13.

## உப்பு மிஞ்சினால் தண்ணீர்; தண்ணீர் மிஞ்சினால் உப்பு!

**தம்பி:-** அண்ணா! குடியரசுத்தலைவர் ராஜேந்திரப் பிரசாத் 9-ம் ஆண்டு சுதந்திர விழாவைத் தென்னாட்டில் கொண்டாடினாரே! காமராஜருக்கு எவ்வளவு பெருமை! எவ்வளவு மதிப்பு!

**அண்ணன்:-** பெருமை, இதுமட்டுமா? இன்னும் வரப்போகிறதடா தம்பி! "ஹோலி" பண்டிகையை தமிழ்நாட்டிலே கொண்டாடி, காமராஜரையும், அவரைத் தாங்கி நிற்போரையும் மகிழவைக்கப் போகிறார்களாம் வடவர்கள்! தெரியுமா!

**தம்பி:-** அது என்ன அண்ணா "ஹோலி"ப் பண்டிகை?

**அண்ணன்:-** அதுதானடா, இராவணன், இந்திரசித்தன், கும்பகர்ணனைப்போல் பொம்மைகள் செய்து, நெருப்பிலிட்டு எரித்து மகிழ்வது! அதற்கப்புறம் வடநாடு தென்னாடு என்ற வேற்றுமையே இருக்காது பாரேன்! இருக்காது!

**தம்பி:-** ஏனண்ணா! இதைக் காமராஜர் வரவேற்கலாமா, களிப்படையலாமா, சிரிக்கலாம்! அவரைத் தாங்கும் தன்மானத்தார்கள் என்ன நினைப்பார்கள்?

**அண்ணன்:-** நினைப்பதையெல்லாம் சொன்னால், சொல்லுவதையெல்லாம் செய்தால் நன்றாயிருக்குமா? நடக்குமா காரியம? உப்பு மிஞ்சினால் தண்ணீர்; தண்ணீர் மிஞ்சினால்உப்பு! கலந்துகொள்ள வேண்டியதுதான்!

—வாலி.

### பொதுச்செயலாளர் போத்தனூர் வருகை.

20—8—56 திங்கள் மாலை 6-மணிக்கு திரு வி. க. திடலில் பொதுக்கூட்டம்.

தலைமை: தோழர், வி. காளியப்பன் B. A; B. L.

நாவலர் இரா. நெடுஞ்செழியன் M. A.

வி. சிவப்பிரகாசம் B. A; B. L. பேசுவார்கள்.

தி. மு. கழகம் போத்தனூர்

மலை. சகந்நாதன்,
செயலாளர்.

### பகுத்தறிவு.

(வார இதழ்)
கையொப்பத்தொகை:
ஆண்டு 1-க்கு 3-8-0
ஆறு மாதங்கள் 2-0-0
தனிப்படி 0-1-0
விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.
[illegible]த்தறிவு அலுவலகம்,
சேலம்-1.

### திருமண அழைப்பு.

அன்புடையீர்! நாளது 19-8-56 ஞாயிறு காலை 9-மணி அளவில்
என் மகன் செல்வன்: காங்கயனுக்கும்
பேளுக்குறிச்சி மிட்டாதார் திரு V. சுப்பராயனார்
அவர்களின் மகள் செல்வி: மங்களம்மாளுக்கும்
என் இல்லத்தில் அறிஞர் C. N. அண்ணாதுரை
அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்.
வருகைதர வேண்டுகிறேன்.

தங்களன்புள்ள,
G. P. சோமசுந்தரம்.
பேளுக்குறிச்சி.

# கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● மா. அரங்கசாமி,
15/81, திருமால் வீதி,
கோயமுத்தூர்.

**பா. நடராசன், கோவை**

கே: கல்வியில் பெரியவர் கம்பரா? வள்ளுவரா?

ப: சுவையூறச் சொல்லுவதில் கம்பர் பெரியவர்! அறிவூறச் சொல்லுவதில் வள்ளுவர் பெரியவர்!

* * *

கே: திரு வினோபாஜியைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: பகவத் கீதைப் பிரியர்; திருக்குறளின் பகைவர்! முற்போக்கு சமதர்மம் பேசும் பார்ப்பனர்; புத்துலகப் புரட்சியின் பகைவர்!

**● இரா. பரமசிவம், காரமடை.**

கே: "ஒற்றைப் பார்ப்பானைப் பார்த்துவிட்டுப் போனால் ஒரு காரியமும் ஆகாது" என்று ஆரியர்கள் சொல்லி வைத்ததன் நோக்கமென்ன?

ப: "அவாள்" சொன்னதல்ல இப்பழமொழி. ஆரியர் பண்பினை வெறுத்த திராவிட முதியவர்களின் வேதனையிலே வெடித்தது; விஞ்ஞானம் ஏற்காதது!

* * *

கே: சாதியை ஒழிக்க வேண்டும் என்று கூறும் காங்கிரஸ்காரர்கள், பூணூல் கல்யாணத்திற்குத் தலைமை தாங்குவதேன்?

ப: ஐயோ பாவம்! சாதிப் பிரிவினைக்கு அடிப்படையே பூணூல் என்பதை அறிந்து கொள்ளாத அப்பாவிகள் என்று மக்களை நம்பச் செய்கிறார்கள்!

**ஆ. பழ. குமரப்பன், வேகுப்பட்டி.**

கே: நம்மாநிலத்தில், தமிழ்மொழி ஆட்சிமொழியாகுமென்று கவர்னர் கூறுகிறார்; புகைவண்டி, அஞ்சல் துறைகளில் இந்தி படித்தவர்களுக்குத்தான் உத்தியோகம் என்று டெல்லி கூறுகின்றது. இது எதைக் குறிக்கிறது?

ப: தமிழர்களை எய்க்கும் நாடகத்தில், "ஓயாமல் அடிக்கிறேன், நோகாமல் அழு" என்ற கட்டத்தை அழகாக நடிக்கும் டெல்லியாரின் நடிப்புத் திறமையைக் குறிக்கிறது!

**மா. அரங்கசாமி, கோயமுத்தூர்**

கே: தனித்தமிழ்ப்பாடல்கள் படத்துறைக்கு வந்தால் வெற்றியடையுமா?

ப: பாபநாசம் சிவன்களின் "முகுந்தா முராரே" காலத்தில் எழுந்த இந்த ஐயத்தை, நாராயணக்கவி, கண்ணதாசன், மருதகாசி, கல்யாணசுந்தரங்கள் முறியடித்து விட்டனரே!

* * *

● கே: பூசானத் தந்தை வினோபா, கீதைப் பேருரை எழுதக் காரணம் என்ன?

ப: புதிய கருத்துக்களை, பழைய கடவுள், மதம், புராண, இதிகாசங்களோடு இணைத்து நிலைக்கவைக்கும் எண்ணமாக இருக்கலாம்!

**ச. ப. சுப்ரமணியம், சின்னகொல்லப்பட்டி.**

கே. இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞான யுகத்தில் கற்பனையைக் கடவுளாக்கி, மக்களை வழிபடச் செய்து உண்டுகளிப்போரை என்னவென்று அழைப்பது?

ப: மக்களின் அறிவுக் குறைவை கைமுதலாகவைத்து பக்தி வியாபாரம் செய்யும் எத்துக்கார மதப்பூசாரிகள் எனலாம் மதிப்போடு.

# கலைக்கூடம்

## தசாவதாரம்.

"உனது வணக்கத்திற்குரிய கடவுள், தூய்மையே உருவான தெய்வம் எப்படியிருக்கும், என்னவெல்லாம் செய்யும்" என்று கேட்டால்,

"மலந்தின்னும் பன்றியாக இருக்கும், மாதேவியைப் புணர்ந்து பிள்ளை தரும், சிங்கமாகவரும், சிதேவியைத் தூக்கிக் கூடிடும், ஆமையாக இருந்து, கடலைக்கடைகின்ற மத்தைத்தாங்கும், மோகினியாகவரும், பகைவருக்கு சுராபானம் கொடுக்காமல் சூதுபண்ணும். மீனாக உருவெடுக்கும், கடலுக்குள் கரைந்திடும் வேதங்களைக் காப்பாற்றும். வாமனப் பார்ப்பனனாகவரும்; வல்லவர்களை வஞ்சித்து மண்ணிலே புதைக்கும். கிருஷ்ணனாக வரும், கோபியர் பல்லாயிரவரைக் கற்புக்கோலங்கெடுக்கும். ராமனாக வரும், பெண்களின் அங்கங்களை அறுத்துக் கொலைசெய்யும்." என்று பெருமையாகச் சொல்லுவார் ர... ரமண பக்தர்!

பச்சையாக இப்படிச் சொல்லுவாரா என்று கேட்பீர்கள்; நியாயமான கேள்விதான். சொல்லமாட்டார், சொல்லவே மாட்டார்! பகவத், ஆத்மார்த்தம், அவதாரம், தார்மீகம், தேவான், அசுரான், மோட்சம், நரகம் என்ற பொருளற்ற சொற்களைப் போட்டுக் குழப்பி மகத்துவம் ததும்ப, பக்தி பீறிட்டெழ, மனம் குழையக் குழையச் சொல்லுவார்! எப்படிக் கூறினால் என்ன? விஷயம் இதுதானே?

ஒரு பக்தர் இதைக் கூறினாலாவது, "பாவம்! பகுத்தறிந்து பார்க்கமுடியாத தற்குறி" என்று அனுதாபம் கொள்ளலாம். மகாப்பெரிய கலை நிபுணர், நாடகக் கலைவேந்தர், நவாப் ராஜமாணிக்கம் மக்களைத் கூட்டிவைத்துக் கொண்டு இதை "தசாவதார" நாடகம் என்று நடத்திக் காண்பிக்கிறாரே, சேலத்தில்! அவரது அறிவு, பண்பு, அனுபவம், ஆற்றல் பற்றி என்ன நினைப்பது? எப்படிச் சொல்லுவது?

"பக்தி மிகுந்தால் புத்தியிருக்காது" என்பார்கள், அந்த இழிவு—பழிச்சொல், பக்தர்களோடு நிற்கப்படாதா? நாடகக் கலையை—நடிகர்களை—நாடக ரசிகர்களையுமா பற்றிக் கொள்ள வேண்டும்? இதுவா நவாப் ராஜமாணிக்க[illegible] அருக் கலைப்பணி?

—இந்திர[illegible]



[2-ம் பக்கத் தொடர்ச்சி]

...து. சந்தேகமேயில்லை, வரிப்புலியின் சப்தந்தானது! கூடாரத்திற்குப் போய் விடலாமென எழுந்தான். அதையடுத்து ஒரு மனிதக்குரல்! ஐயோ! அம்மா! ஆ! தமிழன் குரல், தூக்கி வாரிப் போட்டது அன்புச் சிங்கத்தை. எந்தப்படை வீரனோ என்னவோ? கட்டாரியைக் கையில் பிடித்தான், வேகமாக எழுந்து குரல்வந்த திக்கில் புகுந்தான்.

புலியொன்று திவட்டிக் கண்களைக் காட்டி வாலைச் சுருட்டி வட்டமிட்டபடி, படுத்திருந்த மனிதனின்மேல் பாயயத்தனித்தது திடீரென ஒரு யுக்தி தோன்றியது அன்பிற்கு. கட்டாரி வீச்சில் கெட்டிக்காரன்.

குறிபார்த்தான்—தவறவில்லை மீண்டும் அதே பயங்கரச் சப்தம். புலியின் கண்ணிலே இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது. படுத்திருந்த மனிதன் எழுந்து நிருமினான். அன்புச் சிங்கம் புன்னகையோடு வரவேற்றான் அவனை.

...வரை யொருவர் கூட்டிக் கொண்டு அன்புச் சிங்கத்திற்கு ஆனை நன்றிந்தது அவன் படுத்திருக்கும் போதே சிறு சந்தேகம், அவனைத் ... பொழுது அது தீர்ந்து ...மேயில்லை, ... அக்கிரம

அவனுடைய உடல் பட, படத்தது. திடீரெனத் தேளைத் தீண்டியவனைப் போல ஒதுங்கிக் கொண்டான்—ஓடவும் முயிற்சித்தான். அவனின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டபடியே புன்னகை புரிந்தான் அன்புச் சிங்கம்! ஆஃகா! அந்தப் புன்னகையில் தான் என்ன கவர்ச்சி! என்ன எழில்!

ஆனாலும் அக்கிரம சிங்கனின் ஐயப்பார்வை தெளியவில்லை என்பதை உணர்ந்து கொண்ட அன்பு பேச ஆரம்பித்தான். அங்கு அன்பே பேசிற்று.

கூடாரத்தில் கும்மாளமடித்த வீரர்களில் சிலர் குடல் நடுக்கம் கொண்டனர். சிலர் திகைப்படைந்தனர், ...ரின் திகைப்புத் தீர வெகுநேரமா... சிலர் செய்தியைப் புரிந்து ...

முடிவு! பாவியைக் ...டுக், சித்திரவதை செய்ய வேண்டும், உத்தரவு விடுங்கள், உடனே செய்து முடிக்கிறோம், அப்பொழுதுதான் வெற்றிவிழாப் பூர்த்தியாகும், என்பதுதான்.

அப்பொழுதும் அதே புன்னகைதான் அன்புச் சிங்கத்தின் பதிலாகக் கிடைத்தது அவர்களுக்கு. ஆனால் இப்பொழுது அந்தப் புன்னகையைக் கண்டு வெறுப்பே கொண்டனர், வீரர்கள்.

வீரர்களின் வெறுப்பு வந்தால் விரக்தியடைந்து—மதிப்பு வந்தால் மகிழ்ச்சி யடையும் நிலையிலில்லை அவன். ஒரே கட்டளை! கடுமையானது.

"அக்கிரம சிங்கன் என் பாதுகாப்பிலே இருக்கிறார். தோற்றதால் ஏற்பட்ட நிலையுடன் நாடு திரும்ப மனமில்லாது, காடுநோக்கி நடந்தார். புலியிடமிருந்து புகலிடம் தர நான் முடிவு செய்து விட்டேன். விடியும் வரை அவர் என்னுடைய விருந்தாளி! யாரும் அவரை நெருங்கக்கூடாது, என் போன்ற இதயத்தினரைத்தவிர!"

இந்த அறிவிப்பு அன்பின் வாயிலிருந்து அனல் வேகத்தில் பிறந்தது. வீரர்கள் முகம் சுளித்து ஒதுங்கிவிட்டனர்.

மது, மாமிசம் எல்லாம் புதிய விருந்தாளிமுன் கொண்டுவந்து கொடுக்கப்பட்டது. குசிக்க மனமில்லை அவனுக்கு. அறிவுக்குத்தான் புதிய உணவு கிடைத்து விட்டதே. மனக் குழப்பத்தோடு சோர்ந்து போயிருந்தான் அவன். அன்புச் சிங்கமும், அக்கிரம சிங்கமும் ஒரே படுக்கையில் உறங்கினர். பண்பென்னும் தேவிக்கு மட்டும் அன்று இரவு மட்டும் தூக்கமே வரவில்லை. பார்த்துக்கொண்டேயிருந்தாள், அன்பின் ஆச்சரியத்திற்குரிய செய்கைகளை தன்னை முழுதும் புரிந்து கொண்ட ஒருவனாவது இருக்கிறானே என்ற மகிழ்ச்சி அவளுக்கு!

விடிந்தது! விடைபெற்றுக்கொண்டான் அக்கிரமசிங்கன், வீரர்கள் சூழ்ந்துகொண்டனர்—விளக்கம் கேட்டனர், தலைவனை.

இதயம் தெளிய இருக்கிறது ஒரு மருந்து என்றான் அவன். எங்கே? என்றனர் வீரர்கள். இதோ, இங்கே, என்றான் அன்புச் சிங்கம்.

"போரன்மை என்ப தறுகண் ஒன்றுற்றக்கால் ஊராண்மை மற்றதன் எஃகு!"

"வீரர்களாய் மட்டும் இருந்தால் போதாது; விவேகிகளாகவும் இருக்க வேண்டும்" என்றான். ★★


TEL: Gurucures. PHONE: 248.

60 ஆண்டுகள்—3 தலைமுறைகள்

ஆங்கிலம் தமிழ் மருத்துவ சிறப்பைப்பெற்றது குருமருந்து சாலை, அதன் 60-க்கு மேற்பட்ட தயாரிப்புகளில் தலையான

குரு தைலம்.

குரு பல்பொடி.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,
குருமருந்து சாலை, :: திருச்சிராப்பள்ளி.

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

யுடன் சிறையில் மூடப்பட்டு விட்டதால், ஊர்வலம் செய்வதற்கும், கூட்டம் நடத்துவதற்கும் குறிப்பிட்டுள்ள காலத்தை அறிந்துகொள்ள முடியாமல், 'அனுமதி பெற்றிருக்கிறோம்' என்ற உறுதிப்பாட்டில் நடந்துகொண்டுள்ளதாகக் குற்றவாளிகள் சார்பில் கூறப்பட்டிருக்கிறது. இதற்கு அரசாங்க வழக்கறிஞரோ, 'சத்தியநாராயணனை மட்டுமே அனுமதியை வைத்திருப்பதால்; மற்ற குற்றவாளிகளுடன் அவர் ஊர்வலத்தில் வராததால், மற்ற குற்றவாளிகள் அந்த அனுமதியைப் பயன்படுத்த முடியாது' என்கிறார்.

"அந்த வாதத்தை என்னால் ஏற்க முடியவில்லை. கொடுக்கப்பட்டுள்ள அனுமதி ஒரு கட்சிக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே அல்லாது, ஒரு தனி நபருக்காகக் கொடுககப்பட்டிருக்கவில்லை. அரசாங்க வழக்கறிஞரின் கூற்று, 'ஒவ்வொரு தனி நபரும் தனித்தனியாகத் தன் பெயரில் அனுமதி பெறவேண்டும்' என்ற பொருத்தமற்ற முடிவைத் தருவதாக இருக்கிறது.

"காங்கிரஸ் கட்சி நீங்கலாக மற்ற கட்சிகள் அனைத்தும் அர்த்தாலில் கலந்துகொண்டதாகவும், ஒரு கட்சித் தலைவர் மூலமாக அனுமதி கோரப்பட்டதாகவும் போலீஸ் சார்பு இரண்டாவது சாட்சி கூறியுள்ளார். சத்தியநாராயணன், தான் பெற்ற அனுமதியுடன் சிறைக்குள் அடைக்கப்பட்டு விட்டதால், அனுமதியில் உள்ள காலக்குறிப்பை மற்றவர்கள் தெரிந்திருக்க முடியாது; எனவே, அந்தத் தேதியில கூட்டம் நடத்துவதற்கும் ஊர்வலம் செல்வதற்கும தங்களுக்கு அனுமதி கிடைத்து விட்டதாகக் குற்றவாளிகள் உணரலாயினர்.

"அனுமதியுடன் சத்தியநாராயணனை சப்-இன்ஸ்பெக்டர் தடுத்துவிட்டதின் மூலம், அனுமதியில் குறிப்பிட்டுள்ள காலத்தைப் பொதுமக்கள் தெரிந்துகொள்ளமுடியாமல் சப்-இன்ஸ்பெக்டர் செய்திருக்கிறார் என நான் முடிவாகக் கருதுகிறேன். மாலையில் ஊர்வலம் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்ற நன்னம்பிக்கையின் மீதே ஊர்வலம் சென்றதாகக் குற்றவாளிகள் சார்பில் கூறப்பட்டுள்ள வாக்குமூலத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

"விதிக்கப்பட்டிருந்தத் தடையை வேண்டுமென்றே மக்கள் மீறவில்லை; தங்களுடைய தலைவர் சத்தியநாராயணுவிற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்ற நன்னம்பிக்கையின்மீதே அவர்கள் செயல்பட்டு இருக்கிறார்கள்.

'பலாத்கார உணர்ச்சியுடன் மக்கள் நடந்துகொள்ளவில்லை. போலீஸ்மீது கல் எறியவில்லை.

"போலீஸ் சார்பு ஐந்து, ஆறு, ஏழு சாட்சிகள் தங்களுடைய தோழரை விடுவிப்பதற்காகக் குருதி கொட்டுவோம் எனக் கூச்சலிட்டதாகக் கூறியுள்ளனர். போலீஸ் சார்பு பத்தாவது சாட்சியான சப்-இன்ஸ்பெக்டர், மக்கள் எழுப்பிய முழக்கம்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. குருதி கொட்டப்போவதாக மக்கள் முழக்கமிட்டது குறித்து, போலீஸ் சார்பு ஏழாவது சாட்சியான தலைமை—கான்ஸ்டபிள், அதுபற்றி சப்-இன்ஸ்பெக்டரிடம் எதுவும் கூறவில்லை' எனத் தானே ஒப்புக்கொண்டும் உள்ளார். போலீஸ் சர்ர்பு ஐந்தாவது, ஆறுவது சாட்சிகள் தங்களுடைய இ. பி. கோ. 162—பிரிவு வாக்குமூலத்தில் இரத்தம் சிந்துவது பற்றி தன்னிடம் ஒன்றும் குறிப்பிடவில்லை என சப்-இன்ஸ்பெக்டர் ஒப்புக்கொண்டுள்ளார். அம்முழக்கம் பற்றிய குறிப்பு ஏதுவும் முதல் குற்றப் பதிவு அறிக்கையில் இடம் பெற்றிருக்கவில்லை. இவைகளை எல்லாம் ஏற்று ஆராயும்பொழுது, இரத்தம் சிந்துவதாக முழக்கமிடப்பட்டது எனப் போலீஸ் சார்பு ஐந்து, ஆறுவது சாட்சிகளின் கூற்று, வெறும் பின் நினைப்பின் விளைவு என்றே நான் நம்புகிறேன்."

"போலீஸ் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருந்தாலே கூட்டம் கலைந்துபோயிருக்கும். அன்று தம்மம்பட்டி அமைதியாகவே இருந்தது என ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது. பஸ் போக்குவரத்து நடைபெற்றது; பள்ளிகள் பணியாற்றின; மக்களும் கலக உணர்
யின்றி அமைதியாக இருந்த
னர்; எந்தவித முழக்கத்
அவர்கள் முழங்கவில்லை.
நேரத்தில், ஊர்வலம்
அனுமதி கிடைத்தி
என்ற தவறான
கையின்மீது அவ
பட்டு இருக்கிறார்கள். இ
உண்மைகளை எல்லாம் கருத்துள்கொண்டு தடைஉத்தரவை மீறவேண்டும் என்ற கருத்தில், வேண்டுமென்றே ஊர்வலத்தினர் தடையை மீறவில்லை என நான் முடிவிற்கு வருகிறேன். அவர்கள் ஒன்று கூடி இருந்ததும் சட்ட விரோதமானக் கூட்டம் எனவும் கூறுவதற்கில்லை."

கலை, யார் யார் கையிலோ அகப்பட்டுக்கொண்டு படாதபாடு படுகின்றது. அதன் உயர்ந்த தத்துவங்களை—பண்
களை உணர்ந்தவன் எங்கோ இரு
றன். ஆனல், அதன் நிறைகூட ச
யாதவன் உலகம் செவிடு படும்படி ட
ரம் அடிக்கிறன்!

—யா

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப கண்ணனல் அச்சிட
சேலம்–1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

1124

1124

# பகுத்தறிவு

[illegible]

கழக வார இதழ். ★ ★ ★ விலை அணா ஒன்று.

மலர் 6 | சேலம் 24-8-56. வள்ளுவராண்டு 1987. ஆவணி 9. | இதழ் 7.

**அநீதி!**

மராட்டியர்களும், குஜராத்திகளும் விரும்பாத போது, அவர்கள்மீது இருமொழி பம்பாய்மாகாணம் திணிக்கப்பட்டிருக்கிறது இது, இவ்விரு சமுதாயங்களுக்கும் இழைக்கப்பட்ட மாபெரும் அநீதியாகும்!

—டாக்டர், என். பி. கரே

# குணமில்லா திட்டத்திற்கு குசலகுமாரியின் நாட்டியமாம்! விளம்பரத்தால் மயக்கிடும் வெத்து வேட்டுகளின் வித்தை!

எங்கோ படித்தேன். ராஜாஜிதான் எழுதியிருந்தார். சென்னை மாநிலத்திற்கு இரண்டே வழிகள்தான் உண்டாம். ஒன்று பிற மாநிலங்களோடு சேர்ந்து தட்சிணப் பிரதேசமாக அமைவது. இல்லையென்றால் டில்லியின் நேரடியான ஆட்சியின்கீழ் வருவது. என்னே தீர்க்கதரிசனம்! ராஜாஜிதாசர்கள் இதனைப் பொன்னேட்டிலே தீட்டி சட்டைப் பித்தானில் தொங்கவிட்டுக் கொள்ளட்டும். வேண்டாமென்கவில்லை. ஆனால் ஒன்று. ஆண்டால், தான் ஆளவேண்டும்; இல்லையென்றால் உலகைக் கட்டியாண்ட தமிழகம் ஒருபிடி மண்ணாக வேண்டும் என்பதுதான் அந்த அவதார புருஷனின் அபிலாஷையென்றால், அவரது எண்ணம் ஈடேறுவதாக! ஆம், பச்சையாகச் சொல்கிறேன் தமிழகம் அழிந்து ஒழியட்டும், வெந்தழலில் வேகட்டும்; துயர்க்கடலில் மூழ்கட்டும். அது மறைந்த இடத்திலே மணல் தூவி ஆரியக் கொடிக் கம்பம் நாட்டுக. மானங்கெட்டு வாழ்வதைவிட மறைவது எவ்வளவோ மேல். வரலாற்றிலாவது தமிழனின் மாண்பு விளங்கும். மானம் வாழும்.

ஆரியக்கலப்பற்ற தூய திராவிட ஆட்சி என்கிறார் பெரியார்! ஐயகோ! என் அடிவயிறு பற்றுகிறது. ஆட்சியா நடக்கிறது இந்த நாட்டில்? அறிவுள்ள மனிதனைப் பிறப்பது எத்தனை ஆபத்து பெரியார்மீது எவ்வளவோ பற்றுண்டு; பாசமும் உண்டு. ஆனாலும் உண்மை கண்டு கொதிக்கும் உதிரத்தை எங்கே கொண்டு கொட்டுவது? நேயமும் அன்பும்நெஞ்சத்தைப் பிணித்தாலும், அறிவு அதனைப் பிளக்கிறது உண்மை தெரியாதவன் கொடுத்து வைத்தவன். கவலையற்று வாழ்கிறான். கண் மூடி எதையும் பின்பற்றுகிறான். பலவற்றையும் புரிந்து கொண்டவனே புழுங்கிச் சாகிறான்; புழுவாய்த் துடிக்கிறான்.

'பெற்றதாய்' என்னும் உரிமை கொண்டவள் கூடத் [illegible] சட்டத்தின் பிடியிலே சிக்குகிறான். பரவாயில்லை, என் தங்கை தானே என்னைக் கொல்ல வந்தாள்; நேற்று என் தங்கை இன்று நான்' என்று எந்த மகனும் மகிழ்ச்சியால் பூரித்து நான் கண்டதில்லை. ஆனால்,

பாராள்வோன் திராவிடன்—பச்சைத் தமிழன்—என்பதற்காக தமிழினம் தன்மானமிழந்து வாழவேண்டும்!

பச்சைத் தமிழன். என் இந்தச் சொல்லை இப்படிப் பாழ்படுத்துகிறார்கள்? தமிழன் என்ற இனப்பெற்று, தமிழ்மொழி என்ற உணர்ச்சி, எழுச்சி இவற்றைக் கனவிலாவது உணரும் வாய்ப்புக்கிடைத்திருக்கிறதா இந்த நாடாள்வோருக்கு? தன் இனத்தின் அழிவிலே — தன்மானத்தின் வீழ்ச்சியிலே—தன் மொழியின் தாழ்ச்சியிலே—தமிழ் நாட்டில் ஆட்சி! தமிழனின் ஆட்சியென்று இதற்குப் பெயர்! ஆளட்டுமே ஆரியம்—மாற்றார் ஆட்சி இப்படித்தான் இருக்கும் என்றுணர ஆறுதல் அடையலாமல்லவா?

★ ★

ஐந்தாண்டுத் திட்டம் என்று ஒன்று தீட்டினார்களல்லவா [illegible] நாட்டை வாழ்விக்க? அது வடவரை வாழ்விக்கத்தான் என்பது நம் மாநில மன்றப் பொம்

[8-ம் பக்கம் பார்க்க]

சிறுகதை.

# சகோதரக் காதல்!

வே. மதுரப்பாள்.

மனோரமா சிரித்தாள்!

"உன் அழகு, புகழ், தைரியம், படிப்பு யாவற்றையும் மிகவும் பாராட்டுகிறேன். ஆனால்......" அவன் குரலில் சற்று கோபம் தொனித்தது; சிறு குழந்தைகள் ஏதேனும் ஒன்றைக் கேட்டுச் சிணுங்குவதும், அது கிடைக்காவிட்டால் கோபித்துக் கொள்வதுமான செய்கைபோல் இருந்தது அவன் கோபம்.

அதை உணர்ந்த மனோரமா மீண்டும் பலமாகச் சிரித்தாள். கன்னக் குழிகள் விழ, அந்த முல்லைப் பற்களைக் காட்டிக் கலகலவென நகைப்பது என்ன அற்புதமான காட்சி! இன்றெல்லாம் பார்த்துக்கொண்டேயிருக்கலாம் போலிருந்தது அவனுக்கு.

"உன் அழகு-சமர்த்து இவைகளை விட கள்ளம் கபடு இல்லாத அந்தச் சிரிப்பு எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது மனோரமா" என்றான்.

"அப்படியில்லாமற்போனால் என்னைக் கைதியாக வைக்கவேண்டிய அவசியமேயிராதே" என்றாள் அவள்.

"மனோரமா! நீ என் கைதியா? என்ன தப்பான எண்ணம், என் எஜமானி அல்லவா நீ!" என்றான் மனோகரன்.

"வசமாக அகப்பட்டுக் கொண்டாய் அண்ணா! உன் எஜமானி என்ன சொல்லுகிறாள் தெரியுமா? உனக்கு அடிமையான ஒரு அழகுப் பெண்ணை மணந்து கொள்ள வேண்டும். புரிகிறதா...?"

"ரமா! பெண்ணை அடிமையாக்கும் பித்தனா நான்?"

"ஊஹூம்! அப்படி யார் சொன்னது! பெண்ணுக்கு அடிமையாகும் உத்தமன்! சரிதானே அண்ணா?"

அவள் அண்ணாவென்று அழைப்பதும் அவனுக்கு ஓர் இன்பமாகத்தான் இருந்தது. பிறந்தது முதல் இந்தப் பரந்த உலகத்தில் தனக்கென யாருமேயில்லாத மனோகருக்கு, அண்ணாவென்று முறைகொண்டாட ஒரு பெண் கிடைத்தது மகிழ்ச்சிக்குரியதாகவே இருந்தது.

"மனோரமா! உண்மையைச் சொல். என்மேல் உனக்கு அன்பேகிடையாதா? என்னை ஒன்றுமேயறியாத காட்டுமிராண்டி என்று நினைக்கிறாய்? எனக்கும் கொஞ்சம் பகுத்தறிவு உண்டு. உண்மையை மறைக்காமல் கூறு. என்மேல் உனக்குக் காதலேயில்லை?"

மனோரமாவின் முகம் சிவந்தது. "காதல்-காதல்-காதல்! அந்தப் புனித வார்த்தையை ஏன் இப்படி கேவலப்படுத்துகிறாய்! உன்மேல் எனக்குக் காதல் உண்டு; ஆனால், சகோதரக் காதல்! அன்புத் தமையனைக் காதலிக்கிறேன். அண்ணா! உனக்கும் பகுத்தறிவு உண்டென்கிறாயே, பிழைப்புக்காக வேலை தேடிவந்த ஒருபெண்ணை கூண்டிலடைத்துவைத்து மனையாளாக்கு என்று பகுத்தறிவு சொல்லுகிறதா? உன்போன்ற தமிழ் வீரர்களுக்கு சுயநலமா பெரிது? என்போன்ற அனாதைப் பெண்களுக்குப் புரியும் கடமையா இது? பிறமங்கையர்கள் தங்களை வலிய வந்து அடைந்தபோதும் நிராகரித்து, ஒழுக்கத்தை நிலைக்க வைப்பதன்றோ மனிதாபிமானிகளின் கடமையாக இருக்கவேண்டும்? தூயவழியில் ஒரு மனையாளை அடைய நீ முயற்சி செய்யண்ணா!"

மனோரமாவின் பேச்சு வாள்போல் [illegible] அவனை! உள்ளமும், உடம்பும் வலியெழுந்து கலகலத்துப் போயின! ஏதுமே பேசத்தோன்றாது மௌனம் சாதித்தான் மனோகரன். பிறகு எழுந்து வெளியே சென்றான். கதவு பூட்டப்பட்டது!

மனோகர் வீட்டிற்கு வரவில்லை. மிகுந்த துணிச்சலாக மனோரமா அங்கிருந்த மேஜை நாற்காலிகளை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கினாள். அதன்மேல் ஏறி, ஓட்டைப் பிரித்து வீட்டின் மேல் ஏறினாள்.

* * *

அந்திப்பொழுது. இயற்கை அன்னையின் எழில், மனதை அள்ளி விளையாடியது. சிலுசிலு வென்ற இளங்காற்று உள்ளத்தைக் கவர்ந்தது. இந்தக் குதூகலமான வேளையில் மனோகரின் மனம் அவமானத்தால் குன்றிக்கிடந்தது. என்றாலும், பிடிவாதம் ஒருபக்கம் தலைவிரித்தாடியது. மனோரமாவை விட்டுவிடுவதா? தங்கையாகவேயிரு என்றாலும் இனி ஒப்புவாளா? உலகந்தான் நம்புமா? பலவாறு எண்ணி, எண்ணி ஏங்கியது இதயம். அவன் மெதுவாக ஆற்றங்கரை நோக்கி நடந்தான்.

சற்றுத் தொலைவில் முக்காடிட்ட பெண்ணுருவமொன்று ஆற்றைநோக்கி வேகமாக நடந்தது. உற்று நோக்கினான் மனோகரன். சந்தேகப் புயல் எழுந்தது அவன் உள்ளத்தில். அதனைப் பின்தொடர்ந்தான். அவள் ஆற்றை நெருங்கினாள்; அவனும் அவளை நெருங்கிவிட்டான். ஆற்று வெள்ளத்திலே பாய்ந்தாள் அவள்; அவனும் பாய்ந்தான் அவளைக் காப்பாற்ற!

படுக்கையில் துவண்டு கிடந்தான் மனோகர். அவன் அருகில் சித்தப்பிரமை கொண்டவன்போல் உட்கார்ந்திருந்தாள் மனோரமா.

[7-ம் பக்கம் பார்க்க]

பகுத்தறிவு.
(வாரஇதழ்)
கையொப்பத்தொகை:
ஆண்டு 1-க்கு 3-8-0
ஆறு மாதங்கள் 2-0-0
தனிப்படி 0-1-0
விற்பனையாளர் இல்லாத
இடங்களுக்கு, முன்பணம் கட்டும்
விற்பனையாளர் தேவை.
பகுத்தறிவு அலுவலகம்.
சேலம்-1.

# எதிரொலி

தமிழ்நாடு என்ற இருளடைந்த மண்டபத்தில் பிற இனத்தார், பிறநாட்டார், பிறமொழிக்காரர் ஆகிய வவ்வால்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

—"விடுதலை"

அவற்றின் வலுவிலே வாழுகின்றவர் விழாமல் தாங்கிப் பிடிக்க கொள்கைத் துரோகிகள் இருக்கும்போது கொண்டாட்டந்தானே!

* * *

பெயரளவில் தமிழ்நாடு ஆகிவிட்டால் போதுமா? பிறமொழிக்காரர்கள், பிற இனத்தவர், பிறநாட்டவர் ஆகியோரின் ஆதிக்கம் ஒழிய வேண்டாமா?

—"விடுதலை"

அதெல்லாம் ஒழியக்கூடாது என்று கண்காணிப்போருக்குக் கால்பிடித்துக் கொண்டே இந்த விருப்பு வேறு! வெட்கமில்லை?

* * *

என்பேச்சை அமைதியாகக் கேட்க மக்கள் வரும்வரை உணவை உண்ண மாட்டேன்.

—பம்பாய் மந்திரி தேசாய்

இந்தப் பரிதாப நிலை-பயங்கரமானக் கேடு-சென்னை மந்திரிகளுக்கு எப்பொழுதோ?

* * *

இதர மொழிகளிலிருந்து சொற்களைச் சேர்ப்பதால் தமிழ் வளம் பெருது.

—குன்றக்குடியார்.

உண்மைதான்! தனித் தமிழில் வேண்டினுள்—பாடினல்— கொழுகால் ஆரியக் கடவுள்களுக்குக் கண் சிவக்கிறதாமே!

* * *

இன்று இந்தியாவில் நடப்பது பூணூல் ஆட்சி, ஆரிய ஆட்சி, வர்ணசிரம ஆட்சி, இந்துமத ஆட்சி, முதல்தரமான மதவெறிகொண்ட ஆட்சி.

—"விடுதலை"

ஆனல், இதைக் கவிழ்க்கும் நோக்கத்தோடு வேறு கட்சியார் சட்டசபைக்குப் போனல் காமராசர் கவிழ்ந்துவிடுவார்! ஆகவே, இவைகள் நீடுழி வாழ்க! நீடுழி வாழ்க!

திறனாய்வுக் கட்டுரை

# இன்றைய இலக்கியம்.

"தமிழ்த் தும்பி"

சென்ற மாதம் 27-ம் நாளிட்ட பகுத்தறிவு இதழில் சிறுகதை இலக்கியத்தில் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்களை ஆதரித்து அன்னர் படைப்புகளை வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தோம்.

இவ்வாரம், தற்காலச் சிறுகதை இலக்கியத்தின் தூதுவர்களாக உலவிக் கொண்டிருக்கும் வார-மாத ஏடுகளைப் பற்றியும், அவற்றில் எழுதுவோரின் நிலை பற்றியும் ஆராய்வோம். வார ஏடுகளைப்பற்றி எண்ணும்போது 'விகடன்' 'கல்கி' போன்ற ஏடுகளே முதலில் நினைவிற்கு வருகின்றன. காரணம், அவை சிறுகதை இலக்கியத்திற்குச் சிறப்பான தொண்டு புரிகிறது என்ற காரணத்திலுலல்ல. சிறுகதைத் துறைக்குச் சிறுபான்மைத் தொண்டும், பெரும்பான்மைப் பேரழிவும் புரிந்து வருகின்ற காரணத்தினுலேயே என்க. இவ்விரண்டு ஏடுகளைக் காட்டிலும் சிறப்பாக 'ஆரியபுரி' இலக்கியத்திற்குத் தொண்டாற்றுவது "தினமணி கதிர்." இம்மூன்று ஏடுகளிலும் உள்ள தலைமையான குறையாக நாம் குறிப்பிடுவது, அவற்றில் வரும் சிறுகதைப் பாத்திரங்கள் பெரும்பான்மையும் பார்ப்பனராக இருத்தலும், மொழிநடையும் அவ்வகுப்பாரின் கொச்சைத் தமிழாகவும் இருத்தலுமேயாகும்.

நாடகமாக இருந்தால் பாத்திரத்திற்கேற்ற 'கொச்சை மொழி உரையாடல்' பொருத்தமானதே. ஆனல், சிறு கதையில் இவை நுழைக்கப்படுவது படிப்போர் எல்லோராலேயும் வரவேற்க இயலாததொன்று. இவ் ஏடுகளில் இக் குறைபாடுகள் இருந்தும் இவை அதிக விற்பனையாவதற்கும், செல்வாக்குடன் விளங்குவதற்கும் காரணம் என்ன என்று சிந்தித்தல் வேண்டும். இவற்றில் பொதுவாக எல்லோராலும் விரும்பப்படும் அம்சங்கள் ஒரு சில உள்ளன. அந்த ஒருசில அம்சங்களே பெரும்பான்மையோராகிய நம்மவர் பலரை அவற்றை வாங்கத் தூண்டுகின்றன. அதோடு மட்டுமல்லாமல், பொதுவான தமிழ் நடையில் செறிவான சிறுகதைகள் புனையும் தமிழர் சிலர் அவ் ஏடுகளில் அடைக்கலமாகிவிட்டனர்!

அன்னரின் களங்கமற்ற படைப்புகள்தான் இவ் ஏடுகளை வளர்க்கும் உரமாக இருக்கின்றன. எனவே, இவ் ஏடுகளை 'செல்லாக் காசாக' ஆக்கிவிடும் திறமை அவர்களிடம் உண்டு. ஆனல், மனம் வேண்டுமே! தனித்தமிழ்ப் பண்பாட்டிற்கு ஊறு செய்யும் ஏடுகளுக்குத் தாங்கள் எழுதுவதில்லை என்ற உயர்ந்த உறுதியை அன்னர் மேற்கொண்டால், இழிமனம் கொண்ட ஏடுகள் நாட்டில் உலவ இயலாது.

சிறுகதைத் துறையைச் சுவையுள்ளதாக்கி, இனிய கதைகள் எழுதும் 'அகிலன்' 'சுகி' போன்ரேருடைய ஆற்றல்; சிறுகதை இலக்கியத்தில் சிறுமை செய்வோரின் வளர்ச்சிக்கல்லவா பயன்படுகிறது?

(தொடரும்)

தென்றல் வெளியீடு.

நாடகங்கள்.

மு. கருணநிதியின்

ஒரே முத்தம் 1—4—0

ப. கண்ணனின்

புரட்சிப் பாடகன் 1—8—0

வீரவாலி 1—4—0

கன்னியின் சபதம் 0—8—0

மின்னெளி 0—6—0

*

வாணிபர்க்குக் கழிவு உண்டு.

*

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சங்ககிரிடபுரம். :: சேலம் மாவட்டம்.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 24—8—56 | இதழ் 7

## விசித்திர ஜனநாயகம்!

★

இருமொழி பம்பாய் மாநில அமைப்பை எதிர்த்து, வடக்கே குஜராத்திய மக்கள் பெரும் கிளர்ச்சி புரிகின்றனர். ''மொழிவழியே மாநிலம் அமைத்தல் வேண்டும், தாயகத்திலே அன்னிய மொழியினரின் ஆதிக்கம் கூடாது'' என்பதே அடிப்படை நோக்கம். மொழிப்பற்று வடவர்க்கும் சரி; தென்னவர்க்கும் சரி; பொதுப் பண்பு தானே! யார் மறுப்பார் இதனை?

மராட்டியர்கள் தனி மாநிலம் கேட்டனர்; குஜராத்தியர்களும் கேட்டனர்; அமைத்துத்தர ஆட்சியினரும் விரும்பினர். பம்பாய் மராட்டியருக்கா, குஜராத்தியருக்கா என்ற பிரச்சினையிலே ஆளவந்தார்க்கு ஏற்பட்ட கொள்கைக் குழப்பமும், அதிகார வெறியும் மீண்டும் இருமொழியினர்க்கு ஒரு மாநிலமாக உருவெடுத்தது! குழப்பம் அதிகரித்தது. போராட்டம் எழுந்துவிட்டது.

இந்தியாவில் ஜனநாயக ஆட்சி நடைபெறுவதாக சொல்லப்படுகிறது. ஆட்சியில் இருப்போர் குருட்டுத்தனமாகச்சொல்லுவதையும்மக்கள் அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டும் என்று சண்டித்தனம் செய்வதற்குப் பெயர் தான் ஜனநாயக ஆட்சியென்றால்,ஒப்புக்கொள்ளலாம். மக்களுக்காக, மக்கள் மனதறிந்து, மக்களாட்சி நடத்துகிறோம் என்று சொல்லுகிறார்களே வெட்கமில்லாமல்! எப்படி ஒப்புவது?

''என்னுடைய பேச்சைக் கேட்க மக்கள் வந்து கூடவேண்டும். அப்படி அவர்கள் வராவிடில்உண்ணாவிரதம் இருந்து உயிர் விடுவேன்'' என்று பம்பாய் முதலமைச்சர் மொரார்ஜி தேசாய்பட்டினிக்கிடக்கிறார்,ஆகமதாபாத்தில்! உலக ஜனநாயக நாடுகளிலே, எங்கனும் நடைபெறாத பரிதாபகரமான நிகழ்ச்சி! எந்த அமைச்சருக்கும் நேரிடாத மானக்கேடு!

அமைச்சரின் இருமொழி மாநில ஏற்பாட்டைப் பொதுமக்கள் ஒப்புக்கொள்ளவில்லை. எனவே, அவரது பேச்சைக் கேட்க யாரும் வரவில்லை! மக்களின் மனம்தான் வெளிப்படையாகப் பிரதிபலித்து விட்டதே; இந்த நிலையில் அமைச்சர் தேசாய் உணவையா விடுவது? பதவியையல்லவா விட்டிருக்க வேண்டும்? மக்கள் குரலை மதித்து, கருத்தை மாற்றிக் கொண்டிருந்தாலும் கண்ணியமாக இருந்திருக்கும். ''அதிகாரத்தில் உள்ளவர்களின் எதேச்சாதிகார முடிவுகளை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்; இல்லையேல் நான் உயிரைவிட்டுவிடுவேன்'' என்று மிரட்டுவது சண்டித்தனத்தின் விளைவா, ஜனநாயகப் பண்பா என்று கேட்கிறோம்!

வங்க—பீகார் இணைப்பு முயற்சியை மக்கள் நிராகரித்ததைக் கொண்டும்; மலையாள—தமிழ்—கன்னட மாநிலங்களை இணைத்து, தட்சிணப் பிரதேசமாக்கும் முயற்சியைத் தென்னகத்து மக்கள் எதிர்த்ததைக் கொண்டும் இந்திய அரசினர், மக்களின் கருத்தை அறிந்துகொள்ளவில்லையென்றால், அது யாருடைய தவறு? மக்கள் கருத்தினை மதித்தல்; உரிமையை வழங்கல்; பாதுகாத்தல் என்பனவற்றிற்கு என்னதான் பொருள்? எங்கே ஜனநாயகம்?

தனது பேச்சைக் கேட்க மக்கள் வரவில்லையே என்பதற்காக உண்ணாவிரதம் இருக்கிறார் அமைச்சர் மொரார்ஜி தேசாய். அதே ஆகமதாபாத்தில், தனது பேச்சைக் கேட்க விரும்பியும் மக்களிடை பேச முடியாது தடுக்கப்பட்டு, சிறைச்சாலையிலே உண்ணாவிரதம் இருக்கிறார், தோழர் ஏ. கே. கோபாலன்!

ஒருவர், மக்கள் கருத்துக்கு விரோதமாக இருமொழி மாநில ஏற்பாட்டினை பலாத்காரமாகப் புகுத்த விரும்பும் அமைச்சர்; மற்றவர், மக்கள் கருத்துக்கு ஏற்றதான ஒருமொழி மாநில ஏற்பாட்டினை விரும்பும் டெல்லி ராஜ்ய மன்ற உறுப்பினர்.

இரண்டு உண்ணாவிரதங்களும், காந்தியம் அங்கீகரித்துள்ள போராட்ட முறைகள்தான். மக்கள் சார்பிலே ஒன்று, ஆட்சியினர் சார்பிலே ஒன்று! காந்திய வழியில் நடப்பதாகப் பறைசாற்றிடும் ஆளவந்தார்கள், அவர்தம் கூலிகள், ஏடுகள்—இதழாளர்கள் ஒன்றை ஆதரிக்கின்றனர்! மற்றொன்றை மறுக்கின்றனர்; பழிக்கின்றனர்! என்னே இந்தியக் குடியரசின் விளங்காத போக்கு! விசித்திர ஜனநாயகம்!

ஓ○ஓ



ஊரம்பலம். ஒற்றன்.

## குருக்கள்விட்ட பெருமூச்சு.

அவசரமாக ஆலமரத்தடிக்கு வந்தார் சிவன் கோயில குருக்கள். வியர்த்து வடிந்த அவரது முகத்தைக் கண்ட மணியக்காரர் ''என்ன சுவாமி?'' என்று கேட்டார் பதற்றத்தோடு.

''ஒழிஞ்சுது! வாழ்க்கையே ஒழிஞ்சுது!'' என்றார் குருக்கள்.

''ஏனுங்க? வீடு நெருப்பிலே வெந்து போச்சா?'' என்றார் மணியக்காரர்.

''அது போனாலும் பாதகமில்லியே, ஆலயத்துக்கோன்னு ஆபத்து வந்துடுத்து! என்றார் குருக்கள்.

''என்னங்க?'' புரியாமல் கேட்டார் மணியக்காரர்.

''விநோபா எங்களவா, ஆனதாலே அவரோட பூதான யாத்திரையை புனித யாத்திரையா மதிச்சோம, பேசினோம், ஆதரவுகாட்டினோம. நன்றிமறந்தபாவி மனுஷன்,சேலம பாப்பாரப்பட்டியிலே பேசறப்போ ''கோயில்களுக்கு நிலம் கொடுக்கறது பாவமனு'' சொல்லிட்டாரே! என்ன அக்ரமம! அப்படின்னு, இதுவரைக்கும் கோயிலுக்கு செஞ்ச வாள்ளாம மடையன்களா? பாவிகளா? இனிமே எவன் கொடுப்பான்? கோயில்லே செல்வம் பெருகலேன்னு ஐயயோ! எங்களவா எப்படிக்காணும வாழமுடியும? ஆஸ்திகத்தை வளாக்க வேண்டியவர், நாஸ்திகத்தை யோன்னு வளர்க்கறார். வைதிகத்தோட மதிப்பு மறையறதே! ஆஸ்திகம் ஒழிஞ்சுடுமே, என்றார் குருக்கள்.

''அதெல்லாம் ஒண்ணுமே வராது'' என்ற குரல்கேட்டது. திரும்பினார் குருக்கள். வாத்தியார் பரமசிவம் நின்று கொண்டிருந்தார்,

''என்ன சொல்றீர்?'' ஆவலோடு கேட்டார் குருக்கள். வாத்தியார் கூறினார்: ''கடவுள் இல்லே, அவர் சொன்ன சாஸ்திரமில்லே, புராணமில்லேன்னு தீவிரமா பிரசாரம் செஞ்சே ஒழியாத கோயிலுங்க, பகவத்கீதையை விற்பனை செஞ்சிகிட்டு, ராமன் வேணும் ராமாயணமும் வேணும்னு சொல்லிகிட்டுத் திரியற விநோபாவாலா ஒழிஞ்சிடப் போவுது! வைதீகத்தோட மூக்குமயிர் கூட அசையாது, பயப்படாதேயும், இப்பவும அவர் ஒங்களவாதான்! சமுதாய அவகேடுகளுக்கெல்லாம அடிப்படையா இருக்கறது எது எதுவோ, அதெல்லாம ஒழியனும்னு அவர் எங்கேயும சொல்லலியே, கவனிச்சீரா?''

குருக்களின் முகம் மலர்ந்தது. 'அப்படியா? நீ மகராஜனா இருக்கணும்!'' என்றார், பெருமூச்சுவிட்டவண்ணம்! குருக்களின் காதுகளிலே ''ரகுபதி ராகவ ராஜாராம், பதிதபாவன சீதாராம்'' என்று பாடுகின்ற விநோபாபாவேயின் பஜனை ஒலித்தது! ★

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!

தமிழ்ச்சுவையிலே தன்னையிழந்த தார்வேந்தன்; பல்லவ மாவீரனின் வரலாற்று நாடகம். வண்ணத் தமிழோவியம்!

ஆசிரியர், ப. கண்ணன் தீட்டிய

நந்திவர்மன்.

விரைவில் ''பகுத்தறிவு'' இதழில் ஆரம்பமாகின்றது.

வள்ளுவர் நெஞ்சம்.

## உலக வாழ்த்து.

அதிகாரம் க. பாட்டு க.

''திருக்குறள்'' எல்லா நாட்டுமக்களின் வாழ்க்கைக்கும வழிகாட்டும் ஏற்புடைய நூலாகையால், முதல் அதிகாரமாக—மக்கள் வாழ்வதற்குரிய உலகையும், வாழ்க்கைக்கு உரிய குணங்களையும் கூறும ''உலக வாழ்த்து'' அமைக்கப்பட்டுளது. வள்ளுவர் நெஞ்சப்படி முதல் அதிகாரம கடவுள் வாழ்த்தல்ல. உலக வாழ்த்துத்தான் என்பதை குறள் முழுவதையும ஊன்றி ஆய்பவர் அறிவர்.

''அகர முதல எழுத்து எல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு''

எல்லா எழுத்துக்களும் ஒலிவடிவிலும், அவ்வொலிவடிவைக் காட்டுவதற்கு அடையாளமாக எழுதப்பட்ட வரிவடிவிலும, அகரத்தை முதலாக உடையன. அதேபோல உலகம், தோன்றுதற்கு சூரியனைத் தனக்கு முதலாக உடையது.

விளக்கம்:

பகலவன் எனுஞ்சொல் சூரியனைக் குறிக்கும் சொல்லாகும். படலம் என்பது படம எனவும், சடலம் என்பது சடம் எனவும் மருவியுள்ளதுபோல ''பகலவன்'' என்பது பகவனெனக் குறுகியுள்ளது. சூரியனுடைய தீக்கோளத்திலிருந்து சிதறிய சிறுபொறியிலிருந்தே உலகம் உண்டாகியது என்பதவும சிந்திக்கத் தக்கது.

—மீ சு. இளமுருகு பொற்செல்வி.

### இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம், கொழும்புக் கிளை.

வரும் ஆகஸ்டு திங்கள் 26—8—56 ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணியிலிருந்து இரவு 9-மணி வரையிலும் 7-வது ஆண்டு விழா இயல், இசை, நடனத்துடன் சாகிரா கல்லூரி 'வள்ளுவர் அரங்கில்' நடைபெறும்.

எம். முக்தார்,
செயலாளர்,
140, செப்பட்டாத் தெரு,
கொழும்பு.

## கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● ஓ. எம். சுப்ரமணியன்,
பொத்தனூர் P. O.
வேலூர். சேலம் Dt.

அ. கந்தசாமி, கடலூர்.

கே: அண்ணாவுக்குப்பின் தி. மு. க; பெரியாருக்குப்பின் தி. க; நேருவுக்குப்பின் காங்கிரஸ் நிலை என்ன?

ப: தி. மு. க. வுக்கும் படை பலமுண்டு. நிலைக்கும், தி. க. வுக்கு 'மணி' பலமுண்டு, இருக்குமவரை பிழைக்கும். அகில இந்திய காங்கிரசுக்கு நேருவே கடைசித் தலைவர்!

கே. எம். ரங்கநாதன், சின்னப்பம்பட்டி.

கே: சினிமாவுக்குக் கதை, வசனம் எழுதுவோருக்கும் நடிப்போருக்கும் தேர்தலில் எப்படி வோட்டுப் போடுவது?

ப: அவர்களது படம் வெளியான தியேட்டரில் வோட்டுப் பெட்டியைத் தேடாதீர். எந்தத் தொழில் செய்வோருக்கும் சரி; பெட்டிகள் வோட்டுச் சாவடியில்தான் இருக்கும்.

★ ★ ★

கே: பார்ப்பனியக் பெரு நோயெனக் கண்டும், மேல்புண்ணுக்கு மட்டும் சிகிச்சை செய்வது ஏன்?

ப: நோயில் எத்தனை வகையுண்டோ, சிகிச்சையிலும் அத்தனை வகையுண்டு. நமக்குத் தேவை குணம்தானே?

மா. பிச்சாண்டி, திருவண்ணாமலை.

கே: "பிச்சை எடுக்குமாம் பெருமாள், அதைப்பிடுங்குமாம் அனுமார்" என்கிறார்களே, இக்காலத்தில் யாருக்குத் தகும்?

ப: பதவி பெற்ற காமராசரும், பகிர்ந்துகொண்ட சுப்ரமணியனும் அந்தப் பரம்பரைகள் தானே!

சி. தியாகராசன், சேலம்.

கே: பாம்புக் கூட்டத்தில் ஒரு நல்ல பாம்பைத் தேர்ந்தெடுத்து கீரிப்பிள்ளை கொஞ்சி விளையாடுமா?

ப: நடக்கிறதே! இனத் துரோகி காங்கிரஸ் காமராசருடன், திராவிடப் பெரியார் கொஞ்சிக் குலாவுகிறாரே!

டி. பி. பழனிசாமி, துளசம்பட்டி.

கே: அரசர்கள் உலவும் அரண்மனை வாழ்வும், ஆண்டிகள் தங்கும் அரசமரத்தடியும் ஒரே தகுதியுடையனவா?

ப: இல்லவேயில்லை. இரண்டும் ஒன்றென வேதாந்தம் பேசிடுவோர் மக்கள் எழுச்சியின் பகைவர்!

★ ★ ★

கே: ஈக்கத் திருவிடத்திலே, சிறிவரும் இந்தியை அடித்து விரட்டுவது என்று?

ப: காமராசர் போன்ற அடிமைகளும், அடிமைக்கு அடிமைகளும் தன்மானம் பெறுகின்றபோது!

● ஓ. எம். சுப்ரமணியன், பொத்தனூர்.

கே: அழகு மங்கைக்கும், உங்கள் அறிவு இயக்கத்திற்கும் உள்ள ஒற்றுமை என்ன?

ப: இன்பம்! அழகு மங்கை ஆளனின் கண்களுக்கு இன்பம்; அறிவு இயக்கம் மக்களின் வாழ்வுக்கு இன்பம்!

★ ★ ★

கே: வினோபா தானங்களை வாங்குகிறாரே ஒழிய, யாருக்கும் வழங்குவதாகத் தெரியவில்லையே! ஏன்?

ப: வழங்குகிறார் தோழரே! வழங்குகிறார். ஒரு ரூபா பெற்றுக்கொண்டு "பகவத் கீதை"யும் வழங்குகிறார்; அதற்கு முரண்பாடான பகுத்தறிவுக் கருத்துக்களையும் கூடவே வழங்குகிறார்!

## கலைக்கூடம்

## வெற்றி வீரன்.

கதையின் ஆரம்பத்தில் கணவனே கண்கண்ட தெய்வம்தான் நினைவு வருகிறது. கதாபாத்திரங்களின் அமைப்பு அவ்வாறிருக்கிறது. பிற்பகுதியில் மர்மமாக ஒரு வீரன் வந்து போகின்றான். அது யாரென்று கதாநாயகன் உட்பட, பலருக்கும் புரியவில்லை. பிரசண்டனுக்கும், பிரதாபனுக்கும் சண்டை நிகழும் பொழுது, மனதிற்குள் ஏதோ முடிவு செய்து கொண்டவரைப் போல, தலையாட்டிவிட்டுப்போகும் அஞ்சலிதேவியைக் கூர்ந்து கவனித்தவர்களுக்கு, மர்மவீரன் யாரென்று முதலிலேயே புரிந்துவிடும். இவன்தான் இந்தப் படத்தைப் பார்த்தபின்தான் கதாநாயகிக்கு முகமூடிமாட்டும் கற்பனை உதயமாயிற்றோ, அல்லது சொந்தச் சரக்கோ, அது அவர்களுக்கே வெளிச்சம்! பிரதாபன் குகையில படைதிரட்டி வஞ்சினம் கூறுவதும், தீமை நிகழுமிடங்களிலெல்லாம் அங்கை எய்வதும் "மாமயோகி"யை நினைவுப் படுத்துகிறது.

வி. எஸ். ஆரின் நடிப்பு நன்றாகயிருக்கிறது. அதையும்விட மேலான முறையிலமைந்திருக்கிறது, சக்கரவர்த்தியாக நடிக்கும் முகமுடியின் குகை மறைவங்கள். ராமராவ் வரும்போதெல்லாம் கத்தியுடன்தான் வருகிறார். நடிப்பதற்கு பிரமாதமான சந்தர்ப்பமொன்றுமில்லை. சண்டையிலேயே படத்தை நடித்து முடித்து விடுகிறார். அஞ்சலிதேவியின் நடிப்பு எல்லாப் படங்களையும்போல நன்றாகவேயிருக்கிறது.

பேச்சிற்குப் பின்னணி அமைத்திடும் முறை (டப்பிங்) முதல்தரம். நடிகர்களின் சொந்தக் குரலைக் கேட்குமபடியிருந்தால நன்றாயிருக்கும். பிரதாபனின் தந்தை இறப்பதுக—ப்ரதிப்தான் பிரதாபன் என உமாதேவி அறிவதுமாகிய கட்டங்கள், உணர்ச்சிமிகுந்தவையாயிருக்கின்றன. உமாதேவி பிரசண்டனின் கண்ணைக் கட்டிவிட்டுப் பிரதாபனுடன் காதல் பாட்டுப்பாடி நடனமாடுவதும்—ரேலங்கியின் தப்பறியும் ராமகிளிப் பாட்டுக் காட்சியும் ரசிக்கத் தகுந்தவை.

கதையில் பழமை மின்னுகிறது. புதியக் கருத்துக்களுமில்லை. வீரர்கள் பவனிவரும் தற்காலத் திரையுலக வானிலே இந்த வீரன் பெயரளவிலேயே வெற்றிவீரன்!

—சி. என். நாச்சியப்பன்.

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

"என்னம்மா! உன் கணவன் எப்படியிருக்கிறார்?" என்று கேட்டுக்கொண்டே தன் பூட்ஸ் கால்கள் தாளம் போட நடந்து வந்தாள் அந்த வார்டு நர்சு சாந்தா.

அவளை எரித்துவிடுவதுபோல் பார்த்தாள் மனோரமா. "ஏன்! உனக்கு உடம்பு எப்படியிருக்கிறது?" எனச் சீறினாள்.

ஏளனமும், கோபமும் பொங்கியெழ "டாக்டரம்மா! எனக்கு உடம்பு சுகமில்லை. கொஞ்சம் தயவுசெய்து மருத்துவம் பார்க்கவேண்டும்" என்றாள் நர்சு சாந்தா.

மனோரமாவுக்கு ஆத்திரம் பொங்கியது. "டாக்டரம்மாளாக இருந்தால் மட்டும் போதாது! பண்பட்ட இதயம் வேணும். ஒரு ஆடவன் ஒரு பெண்ணுக்கு கணவனாகத்தான் இருக்க முடியுமா? தமயனே, தம்பியோ அல்லது வேறு எந்த முறையாகவோ இருக்க முடியாதா? அவ்வளவுக்கு அறிவு எட்டினால்தானே!" என்றாள் கடுகடுப்பாக.

நர்சு சாந்தா சிரித்தாள். "பத்தினித் தங்கை—இது நாடக மேடையல்லடியம்மா, நீ நடித்துக் காட்டுவதற்கு" என்றாள்.

அவள் கன்னத்தில் சுடச்சுட நாலு இழுக்கத் தன் கையை ஓங்கினாள் மனோரமா? ஓங்கின கையை யாரோ பலமாகப் பிடித்ததை உணர்ந்தாள். அவள் சீற்றம் அதிகரித்தது. திரும்பிப் பார்த்தாள்......"

மனோரமா தன் கண்களையே நம்பாமல், அந்தப் பாதிரியாரின் முகத்தை உற்று நோக்கினாள். நேருக்கு நேர் அவரை நோக்க அவள் விழிகள் கூசின. அன்பும் அறிவும் போட்டியிட்டுப் பிரகாசித்தன, அவர் சாந்த முகத்தில்! கையை இழுத்துக்கொண்டு நாணத்தோடு தலை குனிந்தாள்.

அந்தக் கலகத்தைத் தடுத்த பாதிரியாருக்கு சாந்தாவும் மனோரமாவும் தங்களை மறந்து வணக்கம் செலுத்தினார்கள். அவரும் அன்புததும்பும் இனிய குரலில் "குழந்தைகளே! இதென்ன சண்டை?" என வினவினார்.

"அறிவைப் பயன்படுத்திப் பேசத் தெரியாத மக்களுக்கு சண்டையைத் தவிர வேறு என்ன தெரியும்?" என்றாள் மனோரமா.

மனோரமாவின் பேச்சு, தைரியம், அந்த முகபாவம் யாவும் அவர் மனதை ஏதோ செய்தன. எங்கோ பார்த்த முகம் போல், மனதின் அடித்தளத்தில் அடங்கிக் கிடந்த வேதனை கிளர்ந்தெழுந்தது.

அதே சமயம் "மனோரமா! தங்கை மனோரமா!" எனக் கூவினான் படுக்கையிலிருந்த மனோகரன்.




"வீரவாலி" தீட்டப்பட்ட போர் வாள்—திராவிடத்தின் விடுதலைப் படைக்கலன்களிலே ஒன்று! —மு. க.

★

விலை 1-4-0

★

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சலகண்டபுரம், :: சேலம் மாவட்டம்.

"இதோ, இருக்கிறேன் மனோகர அண்ணா!" என்று ஓடினாள் மனோகரிடம்.

மனோகர்—மனோரமா என்ற சொல், சாமியாரின் உள்ளத்தில் மின்னல் வேகத்தில் புகுந்து தாக்கியது. தன் காணாமற்போன இரட்டைக் குழந்தைகளை ஒரேயிடத்தில் தன்னிடம் காட்டிக் கொடுத்த இயற்கையின் விநோதத்தை எண்ணி வியந்தார்! திடீரென்று வந்த அந்த ஆனந்தத்தைத் தாங்கமாட்டாது அவர் இதயம் திக்குமுக்காடியது! குழந்தைகள் இருவரும் தந்தையை அடைந்த பெருமிதத்தால், துள்ளிக்குதித்து கூத்தாடினார்கள்! ஆற்றில் மடியப்போன தங்கையை எத்தனை வீரத்துடன் கரை சேர்த்திருக்கிறான் என வியந்தார், நாலு வயதில் குழந்தைகள் காணாமற் போனதைச் சகிக்க முடியாமல் சாமியாராக மாறிய தியாகராஜன்!

★★

வெண்சங்கு சீயக்காய் தூள் — எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி
&
சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

மைகளுக்கும் தெரியும். சில போது தம்மை மறந்து தம் உணர்ச்சியை அவர்களே வெளியிட்டும் இருக்கிறார்கள். அதனை மக்கள் மறந்துவிட மாட்டார்கள். தேர்தல்ஜுரம் இன்று அமைச்சர்களைத் திண்டாட வைக்கிறது. அதன் விளைவாக குடியரசு என்ற எண்ணமே அவர்களுக்குத் தோன்றவும் மறுக்கிறது நாகரிகமின்றி, நாடாளத் தந்த பணத்தால் கட்சியின் நன்மையை—பணமூட்டைகளின் செல்வாக்கு மங்காமல் இந்த மாநிலத்தில் வாழ்வதற்காகவே வாழும் காங்கிரஸின் நன்மையைக்—கருத்தில் கொண்டு செயல் புரிகிறார்கள். குடியரசுக் கொள்கையைக் கொஞ்சம் புரிந்தவனும் அருவருப்பான்; அடாத செய்கை என்று எட்டி விலகுவான். பிரசாரத்திற்கென பல திட்டங்கள் உருவாகின்றன. முதலாவது விளம்பரம். கடந்த ஒன்பது ஆண்டுகளாக இல்லாத அக்கறை இன்று ஏன்? மக்களுக்குச் செய்ததோ பூஜ்யம். மார்தட்டிப் பேசக்கூடத் திறனில்லை ஆட்சியிலுள்ள ஒருவருக்கும். காரணம்? உண்மையாகப் பேசுவதற்கு ஒன்றுமேயில்லை! புளுகலாம் என்று தொடங்கினாலும் அது கொஞ்ச நாளில் 'புஸ்'ஸென்று போய்விடுகிறது. இந்த நிலையில் விளம்பர இலாகாவை விரிவு படுத்தியிருக்கிறார்கள்; படுத்திக் கொண்டே இருக்கிறார்கள்! காங்கிரஸ் ஆளவந்தார்கள்!

மாவட்டத்திற்கு ஒரு செய்தி விளம்பர அதிகாரி. அவருக்கு ஒரு மோடு வண்டி; காங்கிரஸ் நாற்றம் வெளியிலே வீசாமல் இருப்பதற்காகவோ என்னவோ! மாவட்டமெங்கும் சுற்றி, மாநிலத்தார் செய்த நன்மைகளை மக்களுக்கு எடுத்துக் கூறுவதே அவருடைய பணி. இதுபோக ஒவ்வோரிடத்திலும் திட்டக் கண்காட்சி ஒன்று நடக்கும். ஐந்தாண்டுத் திட்டத்தின் சாதனைகளை மக்களுக்கு உடனடியாக அறிவுறுத்தியே தீரவேண்டுமாம். ஆஹா! மக்கள்மீது இந்த மகேசுவரன்களுக்குத்தான் என்னே அன்பு! என்னே பாசம்! என்னே அருள்!

கண்காட்சி மட்டுமில்லை. நாட்டியமும் உண்டு. திட்டத்தின் சாதனைகளைக் குசலகுமாரியின் நெளிவிலே நிறுத்தி, மக்கள் நெஞ்சத்திலே நுழைக்கத் திட்டமொன்று உருவாகின்றதாம். நடன நாடகமாம்! திடீரென்று இப்போது என்ன வந்துவிட்டது விளம்பர இலாகாவிற்கு?

ராஜாஜி மண்டபத்திலே ஐந்தாண்டுத் திட்டக் கண்காட்சியைத் திறந்து வைத்தார் சொல்லின் செல்வராம் சுப்ரமணியம். அவர் பேசினார்:

விளம்பரம் எதற்கு என்று அவர் முன்பெல்லாம் எண்ணியதுண்டாம். ஆனால், மேநாடுகளுக்குச் சென்ற விடத்தில் தான் அதன் இன்றியமையாமையை உணர்ந்தாராம்! இரவு நேரத்தில் ஒரு கடைத்தெருவில் நுழைந்தார்களாம். ஒவ்வொரு இடத்திலும் கண்கவர் வனப்பிலே, கண்ணாடி மறைவிலே, மின்னிடும் எண்ணற்ற பொருள்கள் காட்சியறையிலே வைக்கப்பட்டிருந்ததாய்! கண்டவர்கள் மறுநாள் காலையில் அக்கடையினைத் தேடிச்சென்று பொருளை வாங்கினால்தான சிந்தை குளிருமாம். நெஞ்சம் ஆறுதலடையுமாம். 'பார்த்தீர்களா விளம்பரத்தின் பயனை?' என்று கேட்டார்.

கொல்லென்று சிரித்தேன். பலர் என்னை நோக்கினர். அமைச்சர் பெரிதும் ஏமாந்தார். அவர்தான் சிரித்தாரே யொழிய கூட்டத்தில் வேறு யாரும் (என்னைத்தவிர) சிரித்ததாகத் தெரியவில்லை. பாவம்; அங்கிருந்த பலர் காங்கிரசிலே உண்மையாக பற்றுக்கொண்டவர்போல் தோன்றியது. அவர்கள் முகத்தில் வழிந்த அசடே அதற்குச் சான்று.

அமைச்சரும் நானுமே சிரித்தோம் என்றேனே; இரண்டும் ஒன்றல்ல. விளம்பரத்தின் தேவையை அழகிய உவமை மூலம் விளக்கிவிட்டதாக அவர் நினைத்தார்; அந்த மகிழ்ச்சி அவருக்கு. காங்கிரசின் பெயரால் நாட்டை ஆளுவோர் ஒரு 'வணிகக் கூட்டம்' என்பதை இவ்வளவு பச்சையாக ஒப்புகிறாரே என்று நான் எண்ணினேன்; நகைத்தேன். 'அமைச்சர் புரிந்தோ புரியாமலோ மானத்தை இப்படி வாங்கிவிட்டாரே' என்ற எண்ணத்தில் காங்கிரசின் பிறருக்கு அசடு வழிந்தது! உவமையைப் பாருங்கள். எவ்வளவு பொருத்தம். தன் ஓட்டை உடைசல்களை, எப்படியேனும், நப்பாசை காட்டி மக்களுக்கு விற்றுக் கொழுப்பதிலேதான் முதலாளிக்குக் குறி. அதற்காக விளம்பரம் அவனுக்கு மிகவும் பயன்படுகிறது; அவன் வாழ்வு வளமடைகிறது. அதைப்போலவே நம் அரசாங்கத்திற்கும் விளம்பரம் தேவையாம்! பொருட்செலவைப்பற்றிக் கவலையில்லையாம்! அதனால் பயனுண்டாம்! யாருக்கு? ஏமாந்து பொருளை வாங்குவோனுக்கா? கடைக்காரனுக்கா? கடையிலுள்ள வேலையாளுக்கா? யாருக்கு? அதிலும் தேர்தல் வருகின்ற நேரத்திலே!

—"இளந்தமிழன்"

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப, கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்—1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

கழக வார இதழ் ஆசிரியர்:- ப.கண்ணன்

மலர் 6. | சேலம் 28—9—56. ★ விலை அணா ஒன்று | இதழ் 12

## ... கொடு —வரிப்புலி.

திராவிடத்தின் வளத்தை, ஏக இந்திய வாதத்தின் பெயரால் எத்தர்கள் சுரண்டுகின்றனர். "பாரத மாதாவின் புத்திர சிகாமணிகள் நாமெல்லோரும்" என்று பஜனை பண்ணிக் கொண்டே தென்னாட்டை மெலிய வைத்து வடநாடு வலுக்கிறது பலமான மத்திய அரசாங்கம் தேவையென்று, வளமான வரியனைத்தும் இங்கிருந்து வாரிச் செல்லுகின்றனர் வரிப்புலி நெஞ்சம் வாய்ந்தவடவர்கள்.

அண்மையில் சென்னை கூட்டமொன்றிலே அறிஞர் அண்ணா பேசுகையிலே கூறினார்கள்:

"தன் அருமைப் பாலகனை வீட்டில் தூங்கவைத்துவிட்டு தன் வேலையைக் கவனித்துக்கொண்டிருந்தாய், திடீரெனப் புறக்கடையிலே, "ஓநாய் ஓநாய்" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டாள். அக்கம்பக்கத்திலிருப்பவர்களின் துணைகொண்டு ஓநாயை விரட்டிவிட்டாள். குழந்தையைப் பார்க்க உள்ளே சென்றாள்.

அங்கே ஒரு புலி வாட்டசாட்டமாக உட்கார்ந்திருக்கக் கண்டாள் அந்தத்தாய், "ஐயோ, புலி வந்திருக்கிறதே!" என்று அலறினாளாம். அப்போது "ஓநாய் ஓட உதவி செய்யவந்த உபகாரியாயிற்றே நான்; என்னைக்கண்டு ஏன் நடுங்குகிறாய்? நான் ஓநாயை விரட்டாதிருந்தால் உன் குழந்தை உயிர் பிழைத்திருக்கமுடியாதல்லவா? ஆதலாலே, நான் இங்கேயே இருக்கிறேன்; உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்; எனக்குப் பசிக்கும்போது மட்டும் உன்னுடைய பாலகனைக் கொடுத்தால் போதும்'— என்று புலி கேட்டால், அது எவ்வளவு அக்கிரமமானதோ—அவ்விதம் கேட்கும் புலி ஓநாயைவிட எவ்வளவு கடூர நெஞ்சம் படைத்ததோ அதைப் போலத்தான், இன்று வடநாட்டினர் 'வெள்ளையர்களை விரட்ட நாங்கள் உதவி செய்யவில்லையா? ஆதலாலே திராவிடத்தின் வளப்பத்தை எங்கள் வாழ்விற்குப் பயன் படுத்திக் கொள்ள உரிமையிருந்தால் போதும்'




[10-ம் பக்கம் பார்க்க]

# அரசாங்கப் புள்ளி விபர அலங்கோலம்!

திறமையான நிர்வாகம்—நேர்மையான ஆட்சி—நாணயமுள்ள ஆட்சியாளர்—இவைகளைக் காணவேண்டுமா? உடனே கட்டிச்சோறு கட்டிக்கொண்டு தாமதிக்காமல் புறப்படுக. சென்னை என்ற ஒரு பெருநகரம் வங்காள விரிகுடாவின் கரையிலே உள்ளதாம். அங்குள்ள கலங்கரை விளக்கைக் கடந்து சென்றால் ஒரு கோட்டை உள்ளதாம், கோட்டைக்குள் நேராக நுழைந்து செல், யாரும் உன்னைத் தடுக்கமாட்டார்கள். நாய்கூட நுழையலாமாம். காரில் வரும் காக்காய்களுக்கோ அளவே இல்லையாம்! அங்கே உன வரிப்பணம் சிந்திச் சிதறிக் கிடக்கும் அலங்கோலத்தைக் கண்முன்னாக் காணலாம். நெஞ்சு சோர்ந்து, குருதி வற்றி, ஊன் வாடிச் சாகலாம். கவலைப்படமாட்டார் அங்குள்ள சீமான்கள்.

இது என் கற்பனைதான். என்றாலும் உண்மை. அரசாங்கத்தாரின் வெளியீடுகளே அவர்தம் அலங்கோல ஆட்சிக்குச் சான்று பகர்கின்றன. அவற்றைப் படிக்கும் சிந்தனையுள்ள எவர்க்கும் சென்னை அரசாங்கக் காரியாலத்தைப் பற்றி எனக்குத் தோன்றிய இத்தகைய எண்ணம்தான் தோன்றமுடியும். சிந்திப்பதே பாவம் என்று நினைப்போரும், அடிமை வாழ்விலேயே ஊறி, மணம் மிக்க உரிமைப் பூங்காவிலே உலவினால் எங்கே மரணம் வந்தெய்திடுமோ என்றஞ்சி, அச்சாக்கடையே சுகமென்றிருக்கும் புழுக்களும் மட்டும் இதற்கு விதிவிலக்கு.

இந்த அலங்கோலம் பக்கிங்காம் கால்வாய்க்கும் அந்தப் பக்கத்திலேயே இருந்திருக்கக்கூடாதா? உள்நாட்டிலும் பரவ ஆரம்பித்து விட்டதுதான் எனக்கு வருத்தத்தைத் தருகிறது. ஏதோ வரியைக் கொடுத்து விட்டோம், கண் மறைவாக என்னவேண்டுமானாலும் நடந்து தொலைக்கட்டும் என்று அமைதியாக இருக்க விடமாட்டார்கள் போலிருக்கிறதே! விளம்பரம் என்ற பெயரால் நமது வயிற்றெரிச்சலையல்லவா கிளப்பி விடுகிறார்கள்!

சென்னை அரசாங்கச் செய்தித் துறையைக் காங்கிரஸ் பிரசார அமைப்பாக மாற்றினர், ஆறுதலடையவில்லை அரசாங்கம். குசலகுமாரியின் நெளிவிலேகூட அவர்களுக்குக் குதாகலம் பிறக்கவில்லை! முதல்திட்ட சாதனைகளை ஒலிப்பதிவு செய்து மூலை முடுக்கெல்லாம் ஒப்பாரி வைக்க அனுப்பினால் போதும் என அமைதியுறும் மனமும் இல்லை. மாவட்டத்திற்கொரு டமாரத்தைப் போட்டு முழக்குவதும் போதாதாம். அமைச்சர்களே தாம் செல்கின்ற இடமெல்லாம் தம நாவே கோலாக, வாயே பறையாகக் கொட்டி முழக்குகின்றனர். சிரம் குனிந்துபோட்டு சிரத்தையோடு பஜனையைக் கேட்கவரும் ஒன்றிரண்டு சீமான்களாவது அங்கங்கே உண்டல்லவா? ஆனால், அரசாங்கம் இப்பொழுது ஓயாமல் கூக்குரலிடத் தொடங்கியிருக்கிறது. ஆனால் ஒவ்வொன்றும் தெளிவாக, அது மந்தம் என்பதைத்தான் திருப்பத்திருப்ப வற்புறுத்துவதாக உள்ளது. 2000 கோடி ரூபாய்களை கேட்டு வாங்கேன் என்றால், ஐயோ இரண்டாயிரம் கோடியா என்று வாயைப் பிளக்கிறது! பணத்தை எப்படிச் செலவழிப்பது என்று விழிக்கிறது! திட்டம் ஒன்று தருகிறாயா என்று நம்மையே திருப்பிக்கேட்கிறது! ஐயோ, இது மந்தம்கூட அல்ல போலிருக்கிறதே! வேறு என்னவோ...சரியாகத் தெரியவில்லை!

## "இளந்தமிழன்"

இதை மேலும் நன்கு மெய்ப்பிக்கும் ஒரு சுவையான உண்மையைக் கூறுகிறேன், கேளுங்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நம மாநில அரசாங்கம் தனக்கு வேண்டுமென்று கேட்ட பங்கு 400 கோடி ரூபாய் என்றும், ஆனால், பெற்றுள்ளது 170 கோடி ரூபாய் என்றும் பல செய்தி ஏடுகள் ஒருமுகமாகக் கூறுகின்றன. மாநில மக்கள் தொகைக்கு ஏற்பப் பார்த்தால் குறைந்தது 400 கோடியாவது நமக்கு வந்துதான் ஆகவேண்டும். ஆனால் அமைச்சர், திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் கூறுவதைக் கேளுங்கள்:

"இம்மாநிலத்தின் மக்கள் தொகைக்கு ஏற்ப, இம்மாநிலத்தின் திட்டங்கள் முழுவதற்குமாகச் சேர்த்து 220 கோடி ரூபாய் கேட்கப்பட்டது. திட்டக்குழு இன்னும் அதற்கு இசையவில்லை—" (இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிய பொதுநோக்கம்—பக்கம்-5)

இந்த நூல், இந்த ஆண்டில்தான் வெளிவந்துள்ளது, 220 கோடி ரூபாய் கேட்கப்பட்டதாகச் சொல்லுகிறார்! அப்படியானால் 400 கோடி ரூபாய் கேட்கப்பட்டிருப்பதாக மக்களிடம் சொல்லியது என்ன ஆயிற்று? அசட்டுப் பிள்ளைதான் என்பது அப்பட்டமாகத் தெரிகிறதல்லவா? இதோடு முடிந்து விடவில்லை கதை, ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னையின் சாதனை என்ற ஒரு சிறு நூலை 1955-ம், ஆண்டிலே வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே ஒரு தொடர்:

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகிறது. அதன்படி ரூ 200 கோடி சென்னை ராஜ்யத்திற்குச் செலவு செய்யப் படலாம்" (ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னையின் சாதனை—பக்கம்-2) நமது மாநில மன்றம் 200 கோடி ரூபாயைத்தான் எதிர்பார்த்துள்ளது! 200 கோடியை எதிர்பார்த்து, எதற்கும் 20 கோடி சேர்த்துக் கேட்கலாம் எனத் தயங்கியவாறே 220 கோடி ரூபாயைக் கேட்டு, மக்களிடம் தலைதப்ப வேண்டுமே என்பதற்காக 400 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம் என மார்தட்டியிருக்கிறது! எப்படி நம் பிள்ளையின் சூரத்தனம்!

நம திட்டம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துள்ள நிலையைப் பார்த்தால் இன்னும் அதன் நிறமை புலப்படும். 'முதல் ஐந்தாண்டுத் திட்ட சாதனைகள்' என்னும் தலைப்பில், முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்தபிறகு. ஒரு நூல் வெளியிடப்பட்டுள்ளது. அதன் இறுதியிலே, இரண்டாவது திட்டத்தில், நம மாநிலத்தில்

[9-ம் பக்கம் பார்க்க]

மைத்ரே:- அப்படியானால், மன்னன் நந்தி வர்மனின் பாராட்டினை ஓவியம் பெறப் போவதில்லையா?

சந்திர:- ஏன் பெறாது? செங்கரும்பை விரும்பாத யானையுண்டோ?

மைத்ரே:- நாம் சந்திக்கும் நேரத்தில், யானைக்கு மதம் பிடித்தால்........?

சந்திர:- நான் அடக்குகிறேன். மைத்ரேயரே! மன்னனின் பாராட்டைப் பெறவேண்டும் இந்த மகத்தான சித்திரம். அவ்வளவுதானே? அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.

மைத்ரே:- அரசவைக்கு நான் புதியவன்.

சந்திர:- அச்சம் வேண்டாம். அருகிலேயே நான் இருப்பேன்.

மைத்ரே:- வெறும் நாயோடு சந்தைக்குப் போய், வெள்ளிக் கோலால் அடிபட்ட கதையாகிவிடக் கூடாதே!

வித்யா:- கலைவளர்க்கும் பல்லவ மன்னன் சபையிலே, மைத்ரேயரின் ஓவியத்திற்கு மதிப்பில்லையென்றால், கலைமகளின் கண்களுக்கு ஒளியில்லையென்றுதான் பொருள்.

சந்திர:- பொன்னான பேச்சு!

மைத்ரே:- பிறகென்ன; செம்பு பித்தளையாகவா இருக்கும் என் சிஷ்யையின் வாய்மொழி?

(அவளைத் தட்டிக் கொடுக்கிறார் மைத்ரேயர். சிரிக்கின்றனர்)

## காட்சி 2.

(காஞ்சியின் தெருவொன்று. பச்சை, ஒரு வாழைப்பழத்தை உரித்துத் தின்றவண்ணம் வருகிறான். எதிரே உச்சிக்குடுமியைத் தட்டி முடிந்தவண்ணம் மைத்ரேயன் வருகிறான்)

மைத்:- என்ன பச்சை! வாழைப்பழம் தின்கிறாயா?

பச்:- பச்சை வாழைப்பழமா? அருமையான தேன்கதலி சுவாமி! ஒமக்கு வேணுமா? வாங்கிட்டு வர்றேன். பக்கத்து தெருக்கோயில்லேதான் பிரசாதப் பட்டுவாடா நடக்குது.

மைத்:- (சிரித்து) பச்சை! வாழைப்பழம் ஒரு ஏழைப் பழமப்பா! உனக்குச் சரிதான்; எனக்குப் பிடிக்காது.

பச்:- அப்படியானால், நீங்க சாப்பிடறது?

மைத்:- பலகாரம்.

பச்:- பலகாரம்! பழ ஆகாரம்! இந்தப் பழ ஆகாரந்தான் காளடைவிலே பலகாரம் என்பதாகமருவிற்று. ரெண்டும் ஒண்ணுதான் சுவாமி!

மைத்:- நீயும் கெட்டாய். உன் தமிழும் கெட்டது, போ! ஏண்டா! ஏழையும் பிரபுவும் ஒன்றாக முடியுமா?

பச்:- ஏனுங்க? கண்ணு, காது, காலு, கையி எல்லாம் ஒண்ணுதானுங்களே?

மைத்:- உணவு?

பச்:- மனுஷனுங்க திங்கறதைத்தான் ஏழைங்க திங்கறாங்க, பிரபுங்க?......

மைத்:- தேவர்களின் உணவைச் சாப்பிடுகிறார்கள். தேவர்கள் பாஷையிலேயே பேசுகிறார்கள்!

பச்:- தேவர் உணவுன்னு சொன்னீங்க! பொங்கல், புளியோதரை, தேங்கா, பழம் அது இது சரிதான்! அதென்னங்க தேவபாஷை?

மைத்:- மண்டு! அதுதாண்டா சம்ஸ்கிருதம்! பவித்ரமான பாஷை. மகான்கள்—பக்தர்கள்—உயர்ந்தவர்கள் போற்றிப் பாதுகாக்கும் மேலான பொக்கிஷம்!

பச்:- தமிழுங்க?

மைத்:- தமிழ்! மிகத் தாழ்ந்தது. பாமர மக்களின் பாஷை! பகவானுக்குப் புரியாதது!

பச்:- கெடையாது, நீங்க சொல்றது தப்பு. (தொலைவில் நோக்கி) சுவாமி! தோ; புலவர் பெருந்தேவனார் வர்றார். கொஞ்சம் இருங்க. அவரு கிட்டையே கேட்டுடுவோம்.

மைத்:- (பார்த்து அஞ்சி) ஐயயோ! பச்சை! வேண்டாம்! விஷப் பரீட்சை! (பணம் எடுத்துக் கொடுத்து) இந்தா, இதை வைத்துக்கொள். நாம் பேசியதை அவரிடம் சொல்லிவிடாதே!

பச்:- ஏனுங்க சுவாமி?

மைத்:- பெரியவர்களிடம் விவாதம் பேசக் கூடாதடா! நான் வருகிறேன். சாயுங்காலம் வித்யாவதியின் வீட்டுக்கு வருகிறாயா?

பச்:- வர்றேனுங்க.

(மைத்ரேயன் ஒரு பக்கம் போக, மறுபக்கம் பெருந்தேவனார் வருகிறார்)

(வளரும்)

# நந்திவர்மன்



## காட்சி 1.

(வித்யாவதி வீடு. பாடியவண்ணம் மாலை தொடுக்கிறாள் வித்யாவதி. அணிந்து கண்ணாடியில் அழகு பார்க்கிறாள். பின்னர் கையில் வைத்து ஆளை எதிர்பார்க்கிறாள்; சந்திரவர்மன் வருகிறான். ஆசையோடுசென்று மாலையைக் கழுத்தில் அணிவித்து, திருஷ்டி கழிக்கிறாள்)

**சந்திர:-** (தழுவி) இன்பம்! வித்யாவதி! இன்பத்தின் எழில்வடிவம்! இசைக் கலையின் சுவைக் கடல்! சௌந்தரியத்தின் சிகரம்! காதலின் கலையமுது! உனக்கல்லவோ கண்ணேறு கழிக்க வேண்டும்!

(திருஷ்டி கழிக்கிறான்: கைகளை பற்றிக்கொள்கிறான்)

**வித்யா:-** எனக்கின்பம் தருபவர் நீங்கள், பெறுபவள் நான்!

**சந்திர:-** தருவதும் பெறுவதுமான காதற் கலையிலே, மணிமுடி புனைந்த மகாராணி நீ!

**வித்யா:-** சுவாமி! தகுதியற்ற தங்கள் அடிமைக்கு, எவ்வளவு மிகுதியான பாராட்டுகள்! கொஞ்சமும் பொருந்தாது சுவாமி!

**சந்திர:-** வயிரத்தின் தகுதி, அதனை வைத்திருப்பவர்க்கல்லவோ தெரியும்! வித்யாவதி! அரச குடும்பத்திலே பிறந்தும் அரியாசனம்கிட்டாதவன். கல்லதமிழறிந்தும் நாடோடியாகச் சுற்றுபவன். நான் கற்றுமறந்த கல்வியை; உன் காதலின் பேரொளி பெற்றுத் தந்ததடி எனக்கு!

**வித்யா:-** அப்படி என்னிடம் என்ன சுவாமி இருக்கிறது?

**சந்திர:-** மனிதன் விரும்புகின்ற கலையின்பம் அத்தனையும் மண்டிக்கிடக்கிறதே, இந்தத் தங்கத் திருமேனியில்!

**வித்யா:-** உண்மைதானு சுவாமி?

**சந்திர:-** காற்று வீசுவதும், கதிரவன் காய்வதும் உண்மைதானே?

**வித்யா:-** (அணைத்து, அவன் உதடுகளை கிள்ளி) இந்தச் சுவையான இன்பம்போல, அவை நிலையான உண்மையாயிற்றே!

**சந்திர:-** ஒப்புக்கொள்ளவேண்டும் அப்படி. இதுதான் நாணயம். (அணைத்தல்)

(கையிலே ஓவியத்தோடு, பின்புறம் வந்து நிற்கிறான் மைத்ரேயன்)

**மைத்ரே:-** கொஞ்சம் திரும்பவேண்டும் இப்படி. இதுதான் ஓவியம்!

**சந்திர:-** (விலகி) ஓ! மைத்ரேயரா? வாரும். முடித்துவிட்டீரா ஓவியத்தை?

**மைத்ரே:-** அசந்தர்ப்பம் ஏதுமில்லையென்று நினைக்கிறேன். அப்படியிருந்தால்... மன்னிக்க வேண்டும்.

**சந்திர:-** (ஓவியத்தை வாங்கிப் பார்த்து) முடியாது. மன்னிக்கும்படியான காரியத்தையா நீர் செய்திருக்கிறீர்? வித்யாவதி! பார்த்தாயா ஓவியத்தை?

**வித்யா:-** (பார்த்து) அற்புதமான சித்திரம்! பாடுகின்ற நீங்கள், அபிநயம்பிடித்து ஆடுகின்ற நான்! அடடா!

**மைத்ரே:-** ஆமாம், தேவலோகத்து சித்திரசேனனும் ஊர்வசியும்போல!

**சந்திர:-** அன்பின் மிகுதியால் நம்மைச் சேர்த்துவைத்த மைத்ரேயர்; கலையின் திறத்தால் நம்மை அமரக் காதலராக்கி விட்டார்! வித்யாவதி! எப்படி இவரை மன்னிப்பது? என் கையிலே ஆட்சி இருந்தால், பொற்காசுகளை வெள்ளம் வெள்ளமாக இவரது தலையிலே கொட்டி, அந்தக் குவியலிலே திணறடிப்பேன் இவரை!

ப.கண்ணன்



## எத்ரோல்

லஞ்சம் கொடுக்காமல் தேர்தலில் ஜெயிக்க முடியுமா என்று நான் கேட்கிறேன்.

—ராஜாஜி

குடியரசு நாட்டிலே, கொள்ளை வழியிலே புகுந்து, அதிகாரத்தைக் கைப்பற்றுபவன் யோக்கியனு என்று நாம் கேட்கிறோம்.

* * *

கோர்ட் செய்திகளைப் படிக்கும்போது, வக்கீல் வேலை பார்க்கலாமா என்ற ஆசை ஏற்படுகிறது.

—மந்திரி சுப்ரமணியம்

நாட்டு நிலையைப் பார்க்கும்போது, தேர்தலில் ஜெயித்து மந்திரியாக வருவது முடியாது போலவும் தெரிகிறது, இல்லையா?

* * *

ஈ. வே ரா. பெரியாருக்கு குன்றக்குடி மடாதிபதி பொன்னாடை போர்த்தினர்.

—செய்தி.

காமராஜர் போர்த்துவதில் உள்ள ஆபத்தைக் காட்டிலும், இது சற்று குறைவுதான்.

* * *

வ. உ. சி. கப்பல் ஏலம் போயிற்று

—மந்திரி, சுப்ரமணியம்.

ஆனாலும், மந்திரிகளின் மானம் போகவில்லை.

* * *

இந்தி தேசீய மொழியல்ல; பொது மொழியே!

—கவனர், ஸ்ரீ பிரகாசா.

உண்மை. தேசத்துக்கு உரியதுவே தேசிய மொழி. இந்தி நம் தேசத்துக்கு உரியதல்லவே!

* * *

ஓடும் ரயிலுக்கு தீ விபத்து. 5 பெட்டிகள் பாழாயின.

—செய்தி.

பார்ப்பனர்கள் இருந்திருப்பார்கள். அவாளின் வலது கையில்தான் அக்கினி இருப்பதாக சாஸ்திரம் சொல்லுகிறதே!

# டாக்டர் மதுரம்.

தமிழ்ப் பெருமக்களுக்கு டாக்டர் மதுரம் என்றால், திருச்சிராப்பள்ளி நினைவு வரும். அடுத்து அவர் நிர்மாணித்த குருமருந்துசாலை நினைவுக்கு வரும், அடுத்து வருவன. புகழ்பெற்ற குரு பற்பொடி, குருதைலம் போன்றவை.

இன்று, குருமருந்துசாலை உரிமையாளரும், டெல்லி சட்டசபை உறுப்பினருமான டாக்டர் பால் மதுரம் அவர்களின் தந்தையாரே இவர்.

டாக்டர், அய்யாத்துரை மதுரம் 29-6-1877. திருச்சி மாவட்டத்திலுள்ள இருங்களூர் கிராமத்தில் பிறந்தார். அவருடைய தந்தையார் டாக்டர் சாமுவேல் மதுரம்.

இவருடைய குடும்பமும். குடும்பத்தைச் சார்ந்தவர்களும் மூன்று, நான்கு தலைமுறைகளாக தமிழ், ஆங்கில வைத்திய முறைகளில் பட்டங்கள் பெற்றுப் பணியாற்றியவர்கள் ஆவார்கள். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாசரேத் இவர்களுடைய சொந்த ஊர்.

டாக்டர், அய்யாத்துரை மதுரம் அமெரிக்கா, இலண்டன் கெமிக்கல் ஆராய்ச்சி நிலையத்தில் 1907 முதல் 1915 வரை இந்தியாவின் பிரதிநிதியாக இருந்தார். 9 ஆண்டுகள் திருச்சி நகரசபை உறுப்பினராகவும், 9 ஆண்டுகள் மாவட்ட மன்ற உறுப்பினராகவும் இருந்தார். திருச்சி மாவட்ட நீதிக்கட்சித் தலைவராகப் பல ஆண்டுகள் இருந்தார். கல்லூரி நிருவாகக்குழுக்களிலும், பொது நிலையங்களிலும் ஆதரவாளராக இருந்திருக்கிறார். பல நிலையங்களுக்கும் பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் நன்கொடையாக வழங்கி இருக்கிறார்.

அண்மையில், திருச்சியில் இவரது உருவச்சிலையை சென்னை முதலமைச்சர் கனம் காமராசர் திறந்துவைத்தார். டாக்டர் மதுரத்தின் மருத்துவப் பணியின் சிறப்பு குறித்துப்பல அறிஞர்கள் பாராட்டினர். ஆங்கில வைத்திய முறைகற்று, தமிழ்முறை தேர்ந்து, இரண்டினையும் கலந்து புதுமுறையில் தயாரிக்கப்பட்ட எளிய விலையுள்ள குரு மருந்துகள் மிகப் பயனுள்ளவை என்பது அனுபவஉண்மை. டாக்டர் மதுரம் அவர்களின் இக்கூட்டு மருத்துவப்பணியினை நாம் மனமுவந்து பாராட்டுகிறோம். வாழ்த்துகிறோம்!

திறப்பு விழாக் கூட்டத்திலே தி. க. பொதுச் செயலாளர் தோழர், எஸ். குருசாமி "நாங்கள் காங்கிரசில் சேரப்போகிறோம்" என்றாராம், காமராசர் முன்பு. சிரித்தாராம் அவர்.

மேலைநாட்டு மருத்துவமும் தமிழ்நாட்டு மருத்துவமும் இணைந்ததால், மருத்துவத் துறையிலே டாக்டர் மதுரம் பலன்காண முடிந்தது. வடநாட்டு அரசியல் அடிமைகளையும், தென்னாட்டு விடுதலை வீரர்களையும் இணைத்து, குத்தூசி குருசாமியார் அரசியல் துறையிலே என்ன பலன் காணப் போகிறாரோ! பார்ப்போம். ØØ

### எனக்கு நம்பிக்கையில்லை!

நான் தனித்தமிழ்நாடு (மத்திய ஆட்சி, ஆதிக்கம் இல்லாத தமிழ்நாடு) கேட்கிறேன். அவர் (காமராசர்) அது கூடாது என்கிறார். நான் கேட்கும் காரணம் தனித்தமிழ்நாடு (பூரண சுயேச்சை உரிமையுள்ள தமிழ்நாடு) இல்லாவிட்டால் தமிழர் வாழ்வு சிதைந்து போகும், தமிழ்நாடு சுரண்டப்பட்டுவிடும் எனகிறேன்.

அவர், அதுகூடாது என்பதற்குச் சொல்லும் காரணம்: தமிழர் சிதைய மாட்டார்கள், சுரண்டப்பட மாட்டாது. நான் பார்த்துக் கொள்கிறேன் என்கிறார். இவர் இப்படிச் சொல்லுவதில், அதாவது "நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்லுவதில் எனக்கு நம்பிக்கையில்லை.

—பெரியார் ஈ. வே. ரா.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 28—9—56 | இதழ் 12

## தீண்டாமை ஒழிக்க.

)-(

பெரியார் வினோபா கூறுகின்றார்:

"சூரியனது கிரணங்கள் ஒவ்வொரு வீட்டிலும் பிரவேசிக்கின்றன. அரிசனங்கள், சாதி இந்துக்கள், மூசல்மான்கள் அனைவரது வீட்டிலும் சூரியனுக்கு எவ்வித வேற்றுமையும் கிடையாது. இவ்விதப் பாகுபாடுகளைப் பாராட்டுவது தவறாகும். எங்கு எல்லோரும் எவ்விதத் தடையுமின்றி போவதற்கு அனுமதியிருக்கிறதோ, அந்த இடந்தான் ஆண்டவன் வாசம் செய்யும் இடமாகும்."

14–9–56-ல் பெத்தநாய்க்கன் பாளையத்தில் இவ்வாறு பேசிய திரு. வினோபாபாவே, சாதி இந்துக்களைப் பார்த்து மேலும் கூறுகின்றார்:

"நாய், பூனை, எலி போன்ற பிராணிகளை வீட்டில் வைத்துக்கொள்ளும் மேல் சாதிக்காரர்கள், அரிசனங்களைக் கண்டுமட்டும் ஏன் அருவருக்க வேண்டும்? கிராமத்தில் தங்களோடு அவர்களை வாழவிடுவதில் என்ன தவறு? ஒரு மனிதனை மற்றொரு மனிதன் தீண்டத்தகாதவன் என்று வெறுப்பது பெருங்குற்றம். சாதி, குலம், பிறப்பு என்ற மாயச்சுழலில் சிக்கிச் சீரழியாதீர். இழிந்த எண்ணத்தை இன்றோடு விட்டுவிடுங்கள். அரிசனங்கள் ஆட்டுச் சாதியாகவும், மேல் சாதிக்காரர் ஓநாய்ச் சாதியாகவுமா வாழுவது? மனிதர்களுக்குள் ஒருவருக்கொருவர் பயமுறுத்தவோ, பயப்படவோ கூடாது."

இப்படிக் கூறிய வினோபா வாளாவோடு நிற்கவில்லை. ஆதித் திராவிடர்க்கும், சாதி இந்துக்களுக்கும் அங்கு நிலவிய பூசலை நீக்கிட, மூத்தன் என்ற தாழ்த்தப்பட்டோன் கரத்தைப் பற்றி, சாதி இந்து ஒருவரது கரத்தோடு சேர்த்தார். "நான் சென்றபிறகும் இவர்களை பயமுறுத்தக் கூடாது" என்று சத்தியம் வாங்கினர். பிறகு அங்கேயே தயிர் அருந்தினாராம். சாதி இந்துக்களை நோக்கிக்கேட்டாராம்: "இந்த அரிசன சகோதரனைத் தீண்டிவிட்டு இப்போது நான் சாப்பிட்டேன், நான் நரகத்திற்குப்போவேன்; நீங்கள் மட்டும் சொர்க்கத்தில் சுகமாக இருப்போம் என்று எண்ணுகிறீர்களா?" என்று.

பெரியார் வினோபாவின் இந்தப் பேச்சையும், செயலையும் நாம் மனமுவந்து ஒப்புகிறோம். பாராட்டுகிறோம். இந்துமதத்தின் சொத்தான தீண்டாமை யெனும் இழிவைப் போக்குவதிலே பகுத்தறிவு இயக்கத்திற்குப் பெரும்பங்கு உண்டு. தீண்டாமைக்கு எதிராக மனப்புரட்சியை மலரவிட்டு கல்லடியும், சொல்லடியும் பெற்றவர்கள், தமிழகத்தைப் பொறுத்தமட்டில் சுயமரியாதைக்காரர்களே ஆவார்கள்.

பார்ப்பானையும், பறையனையும் ஒன்றாக்க விரும்புகிறவன்; வேத நிந்தகன், சாஸ்திர விரோதி, சம்பிரதாயப் பகைவன், கடவுளை மறுக்கும் கயவன் என்றெல்லாம் இழித்தும் பழித்தும் பேசினார்கள்; இடையூறுகள் பல செய்தார்கள்; அடி, உதை, குத்துக்களைப் பரிசாகத் தந்தனன்றி மதவெறிகொண்ட ஆத்திக மணிகள்! அத்தனையும் சமாளித்துக்கொண்டு நாம் கூறினோம்: "தீண்டாமை இருக்க வேண்டும் என்று வேதம் கூறினால் அதனை அழிப்போம்; சாஸ்திரம் சாற்றினால் எரிப்போம்; சம்பிரதாயம் இருந்தால் சாய்ப்போம்; கடவுள் குறுக்கிட்டால் மாய்ப்போம்" என்று. அன்று நாத்திகர் என்றார்கள்; இன்றும் சொல்லுகிறார்கள்.

அன்னாளில் தீண்டாமை ஒழிப்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்ட காந்தியார், இந்துமதத்தைக் காப்பாற்றும் கடமையை மேற்கொண்டு, தீண்டாமை வளர்வதற்கான ஆதாரங்களை வாழவிட்டு, தீண்டாமையைமட்டும் ஒழிக்க முனைந்தார்; பயனற்ற பணி என்றோம். அவர் வழியினைப் பின்பற்றி காங்கிரஸ் ஆளவந்தார்கள் சட்டங்கள் பல செய்தார்கள்; ஆலயப்பிரவேச ஆர்ப்பாட்டம் நடந்தது. கண்ட பலன் என்ன? ஒழிந்ததா தீண்டாமை? தீர்ந்ததா வேற்றுமை நோய்? சாய்ந்ததா சாதிபேதம்? சமரசம் தழைத்ததா கிராமங்களில்? ஏன் இல்லை? ஏன்? ஏன?

பூணூலையும், உச்சிக் குடுமியையும் வாழ்த்திக்கொண்டு பார்ப்பனீயத்தை ஒழிக்க முடியாது. ராமநவமி விழாக்கொண்டாடி மதப்பூசலை மாய்க்க முடியாது. பகவத்கீதையை பாராயணம் செய்துகொண்டு பகுத்தறிவு சமதர்மம் வளர்க்க முடியாது என்பதை, தீண்டாமை ஒழிக்க விரும்பும் திரு. வினோபாவுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம். சிந்திக்க மறுத்திடும் சிறுமதியாளரல்லவே! சிந்திப்பாரா இதுபற்றி? ●●





"திராவிடம் பிரிந்ததும், முதல் கவர்னர் ஜெனரல்" என்று பெரியார் சாமியைப் பாராட்டினார். திராவிடம் பிரியு முன்பே, நம்மைவிட்டுப் பிரிந்தாரே! பெரியாரும் இலட்சியத்தை மறந்தாரே!

## மறைந்திட்ட மாவீரன்.

ஐயகோ! நெஞ்சொடிக்கும் துயரச் செய்திகேட்டோம்! வேதனைப் புயலில் சிக்கினோம்! தென் பாண்டி வீரன், பாண்டியனார் வழித்தோன்றல்; திராவிடத்தின் விடுதலைப்பணி முதல்வன், தன்மான இயக்கத்துத் தமிழ் மறவன், தூத்துக்குடி கே. வி. கே. சாமி தூர்த்தனால் கொல்லப்பட்டார்! எண்ணக் கலங்குகிறது இதயம்! எழுத நடுங்குகின்றது கை! அந்தோ! அண்ணா வென்றழைத்து அன்புமொழிபேசிடும் செயல்வீரனை—சிங்க ஏறினை இனி என்று காண்போம்! "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்ற அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரைக்கோர் எடுத்துக்காட்டாக—ஆற்றல்மிக்க குணக்குன்றாக—பொதுவாழ்வின் பண்பறிந்தவீரனாக—பகுத்தறிவின் முழக்கமாக—பாட்டாளிகளின் தலைவனாக—கழகத்தின் காவலனாக விளங்கிய கர்மவீரன், ஐயகோ வீழ்த்தப்பட்டான்; தேம்புகின்ற திராவிடமே! நினது விடுதலைக்காகப் போராடிய மாவீரன் ஒருவன் மடிந்திட்டான்! எமது வீர வணக்கத்தை, சவமாகிவிட்ட எங்கள் சகோதரன், தூத்துக்குடி சாமியின் பாதங்களிலே படைக்கின்றோம்! அன்னாரின் குடும்பத்தினர்க்கு வழிகின்ற கண்ணீரோடு அமைதி கூறுகின்றோம்; ஆறாத் துயரிலே பங்கு கொள்ளுகின்றோம்.

—ப. கண்ணன்.

TEL: Gurucures. PHONE: 248.

60 ஆண்டுகள்—3 தலைமுறைகள்

ஆங்கிலம் தமிழ் மருத்துவ சிறப்பைப்பெற்றது குருமருந்து சாலை

அதன் 60-க்கு மேற்பட்ட தயாரிப்புகளில் தலையான

குரு தைலம்.

குரு பல்பொடி.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,

குருமருந்து சாலை, :: திருச்சிராப்பள்ளி.

## சேலத்தில் துக்கம்.

தூத்துக்குடி மாவீரன் கே. வி. கே. சாமியின் கோரமரணச் செய்தி, சேலத்துக் கழகத் தோழர்கள் சொதிப்படைந்தனர். பெருங் கவலையுற்றனர். சேலம் நகர தி. மு. க. சார்பில் 23—9—56. ஞாயிற்றுக்கிழமை மாலை ஒரு பெருந்த அனுதாப ஊர்வலம் நடைபெற்றது. கருப்புச் சின்னமணிந்த 1000-த்துக்கு மேற்பட்ட தோழர்கள் அமைதியாகச் சென்ற காட்சி, பார்த்தோரின் நெஞ்சை உருக்கிற்று

ஏற்பாடு செய்திருந்த குமாரசாமிப் பட்டி, தி. மு. க. கிளையின் ஆண்டு விழாக் கூட்டம் நடைபெறும் இடம் வந்து ஊர்வலம் முடிந்தது. தோழர், எஸ். மெய்யப்பன் தலைமையில் அனுதாபத் தீர்மானம் நிறைவேறியது. பிறகு தோழர், வெ. பெரியசாமி தலைமையில் நடைபெற்ற ஆண்டுவிழாக் கூட்டத்தில் கல்லூரி மாணவர் பெரியசாமி, கவுன்சிலர்கள் பி. கே. வரதராசலு, வ. மாரியப்பன் ஆகியோரும், பி என். அக்மச்சி ப. கண்ணன், ஈ. ஆர். கிருஷ்ணன், சிற்றுளி–சுப்ரமணியம் ஆகியோரும் திராவிட விடுதலைப் போராட்டம் குறித்தும், மாவீரன் சாமியின் தியாகம் குறித்தும் பேசினர். —நி-தி

# கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● கு. இரா. பரமசிவம்,
தெற்குரத வீதி,
காரமடை.

மு. முருகேசன், கம்பம்.

கே: கலையுலகில் நடமாடும் பச்சோந்திகள் பற்றித் தங்கள் கருத்தென்ன?

கே: அவர்களின் தகுதி—தரத்தினை உணரும் சக்தி, கலாரசிகர்களிடம் வளரவேண்டும் என்பதுதான்.

மா. அரங்கசாமி, கோவை,

கே: எல்லாவித பாசங்களையும் அடக்குபவர்கள், எந்தப் பாசத்தை அடக்க முடியாமல் தவிக்கிறார்கள்?

ப: எல்லாப் பாசங்களையும் அடக்கும் வன்மை பெற்றவர்கள், எந்தப் பாசத்தையும் அடக்கிடுவார்களே!

★ ★ ★

கே: வருகிற பொதுத் தேர்தல் ஜுரம், எத்தனை டிகிரியாக அதிகரித்து உள்ளது?

ப: காங்கிரஸ் மந்திரிகளுக்குத் தவிர, மற்றவர்க்கு "நார்மலில்"தான் நிற்கிறது.

● கு. இரா. பரமசிவம், காரமடை.

கே: "மலர் மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்!" என்ற குறளின் கருத்துக்கும், "வாழ்வு நிலையாதே—நீ மயங்கித் திரியாதே" என்ற மதவாதியின் கருத்துக்கும் வித்தியாசம் என்ன?

ப: இவ்வுலகில் வாழ அறை மதிப்பது குறள். "அவ்வுலக" ஆசையினை எழுப்பி வாழ்வைக் குலைப்பது மதம்! ஒன்று பசும் பால்; மற்றொன்று எருக்கம் பால்.

★ ★ ★

கே: புராணங்களைச் சாடுவோர் மீது, முத்துராமலிங்கத் தேவர் ஏன் சீறிவிழுகிறார்?

ப: கண்ணொளி மங்கியிருக்கலாம்; அதனால் கண்டிக்கப்பட வேண்டியவர்களை அடையாளம் புரிந்து கொள்ளாமல் பாவம், அவர் எங்கெங்கோ மோதிக் கொள்கிறார்.

எஸ். சுப்பரமன், சென்னை 1

கே: மாடர்ன் தியேட்டரின் "பாசவலை" படத்தில், தோழர் டி. வி. நாராயணசாமி ஒப்பந்தம் செய்யப்பட்டு பிறகு நடிக்க மறுத்துவிட்டது உண்மையா?

ப: அப்படி ஒன்று நடந்ததாக நண்பர் நாராயணசாமியே ஒப்பமாட்டார். அவ்வளவு பொய்.

★ ★ ★

கே: "பாசவலை"யில், மாயாஜால மந்திர தந்திரக் காட்சிகள் உண்டா?

ப: எது இருக்கிறது எது இல்லை என்பது, படத்தைப் பார்த்த பிறகுதான் தெரியும்.

கே தருமன், கடலூர்

மந்திரி சுப்ரமணியம் முதன் மந்திரியாகவும், காமராசர் நிதி மந்திரியாகவும் இருந்திருந்தால்......?

கே: கட்டாய இந்தி வேண்டாம் என்று கூறிட, ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிமான தொகை பெற்றிட முடியாமல், அப்போதும் இப்படித்தான் விழிப்பார்கள்!

கட.லவேந்தன், தரமங்கலம்.

கே; திராவிடம் பிரிந்தால், கம்யூனிஸ்டுகள் தேவைப்படுவார்களா?

ப: சமதர்மக் குடியரசு வெற்றிபெற அவர்கள் ஒத்துழைத்தால், வரவேற்கத் தானே வேண்டும்!

ஏ மாணிக்கம், துவசம்பட்டி.

கே: நமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் திறவுகோல் எது அண்ணா?

ப: கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பண்பு நிறைந்த உழைப்பு, தம்பி!

தலைமை நிலையச் செய்தி:

## தேர்தல் ஆய்வுக் குழுச் சுற்றுப் பயணம்.

———::———

பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் தேர்தல் ஆய்வுக்குழு உறுப்பினர்களான தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத்து, ஏ வி பி ஆசைத்தம்பி, என். வி நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோரும் அக்டோபர் திங்கள் 12-ம் நாளிலிருந்து, 23-ம் நாள்வரை கீழ்க்கண்ட தமிழகத்தின் குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டுமே சென்று தங்கியிருந்து, அந்த இடங்களைச் சுற்றியுள்ள தொகுதிகளைச் சார்ந்த கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும் சந்தித்துப் பொதுத்தேர்தல் சூழ்நிலை குறித்துவிவரம் அறிவார்கள்.

### ஊர்கள்:

காஞ்சீபுரம், வேலூர் (வ ஆ) திருப்பத்தூர், கிருஷ்ணகிரி சேலம், ஈரோடு, கோயமுத்தூர், உடுமலைப்பேட்டை, கரூர், திருச்சி, பெரியகுளம், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, நாகர்கோவில், குற்றாலம், காரைக்குடி, பட்டுக்கோட்டை, மாயவரம், கடலூர்.

தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் தெரிவிக்கக் கூடிய அந்தந்தத் தொகுதியிலுள்ள கிளைக் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும், அன்பு கூர்ந்து அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறேம்.

—தலைமைக்கழகம் (தி.மு.க)
'அறிவகம்' சென்னை 20-9-56



[2-ம் பக்கம் தொடர்ச்சி]

ஒவ்வொரு துறைக்குமாகச் செலவிடப் போகும் தொகையைப்பற்றிய பட்டியல் ஒன்று கொடுத்திருக்கிறார்கள். அதில் காணப்படும் தொகை விவரம் எவ்வளவு தெரியுமா? 184 கோடியே 66 லட்சம் ரூபாயாகும். இப்புத்தகம் அச்சாகி அங்காடிக்கு வருவதற்குள் 14 கோடி ரூபாயைக் கோட்டை விட்டிருக்கிறார்கள்! தேவிகுளம், பீர்மேட்டைக் காப்பாற்றப்போய் செங்கோட்டையையும் பறிகொடுத்த வீரத்திற்கு இழுக்கு நேரலாமா? எனவே, விட்டுக் கொடுப்பதையே தம் பணியாகக் கொண்டிருக்கிறான் நம் கந்தப்பிள்ளை. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளராதோ என்பது அவன் சித்தாந்தம்!

82 கோடியை திருத்தி திதானமாக ஐந்து ஆண்டுகளில் செலவழித்திருக்கிறதே, அதையேனும் ஒழுங்காகச் செலவு செய்திருக்கிறதா என்றால் அதுவுமில்லை! ஒருசில சிக்கல்களை உங்கள் முன் வைக்கிறேன். விடை கண்டுபிடிக்க முடியுமா என்று முயலுங்கள்:

'வழவழா' என்று படங்கள் நிறைந்து கவர்ச்சியோடு கூடிய ஒரு நூல், தொடுவதற்கு நன்றாக இருக்கிறது! ஆங்கிலத்தில் எழுதப்பட்டு உள்ளது. "சென்னை மாநிலத்தில் பாசனம்" (Irrigation in Madras State) என்னும் தலைப்பில் 1955-ம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது "ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னையின் சாதனை" என்ற தமிழ் நூலும் அதே ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது. இரண்டிலும் குறிப்பிட்ட சில தேக்கங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் தொகை, ஒன்றோடொன்று உதைத்துக் கொள்கிறது. அதற்குள் கொஞ்சமும் ஒற்றுமையைக் காணோம்! இதை யாரிடம் சொல்லி அழுவது? இரண்டும் அரசாங்க வெளியீடுகள்! ஒரேயாண்டில் வெளியிடப்பட்டவை!

மணிமுத்தாறு தேக்கச் செலவு மதிப்பீடு; ஒன்றிலே 398 லட்சம், இன்னொன்றிலே 500 லட்சம்! வைகை நீர்த்தேக்கத் திட்டத்தின் செலவு மதிப்பீடு; ஒன்றிலே 243 லட்சம், மற்றொன்றிலோ 310 லட்சம்! சாத்தனூர் தேக்கத்திட்டம் 263 லட்சத்தைச் சாப்பிடும் என்று எண்ணப்பட்டது ஒரு ஏட்டில். ஏனைய ஒன்றில் அதன் செலவீடு 289-ஆக உயர்ந்துள்ளது! இவை இரண்டு நூல்களும இப்படி முட்டிக்கொள்வது போதாதென்று "முதல் ஐந்தாண்டுத் திட்ட சாதனைகள்" என இந்த ஆண்டிலே வெளியிடப்பட்டிருக்கும் நூலும் இவற்றை இடிக்க வருகிறது. இதன்படி மணிமுத்தாறு நீர்த்தேக்கச் செலவு ஐந்துகோடியே ஐந்து லட்சம்! ஓராண்டில் ஐந்து லட்சமேனும் உயரவேண்டாமா? வைகைத் தேக்கம் இன்னும் சற்று முன்னேக்கிப் பாய்கிறது. இந்நூலின் கணக்குப்படி வைகைத் திட்டத்தின் செலவு மதிப்பீடு மூன்று கோடியே முப்பது லட்சம்! ஒரே தாண்டில் இருபது லட்சம் எகிறியுள்ளது! இதன்முன் மணிமுத்தாறு கண்ணைக் கவ்வுகிறது. 5 லட்சந்தானே அதனால் உயர முடிந்தது? வைகையைப் பாருங்கள், 20 லட்சம் எட்டிக் குதித்துள்ளது! எப்படி நமது நிர்வாகம்?

இதைவிட மோசமாம் வடக்கே. இந்திய அரசின் மாட்சிமைக் கற்பனை செய்து பார்க்கக்கூட ஒருவராலும் இயலாது. மலையினும் மாணப் பெரிது!

உயர்வெல்லாம் செலவிலே மட்டும் தான். வரவிலேயல்ல. செலவினம் உயர்ந்திருப்பதுபோல் (ஏன் உயர்ந்ததென்று ஒருவருக்குமே தெரியாது போனும்!) நீர்பாயும் பரப்பு அதிகரிக்கவில்லை. ஆனால், இதற்கு மாறாகச் செலவு மதிப்பீட்டுக் காலத்தில் இவ்வளவு பாயும் எனத் திட்டமிடப்பட்டிருந்த பவானித் தேக்கம், அத்தனை ஏக்கருக்கும் நீர் தருவதாக இல்லை. செப்டம்பர் 15-ம் தேதிக்குப் பிறகு கீழ்பவானித் தேக்கம் மட்டும், சுமார் 1 லட்சத்து 95 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு நீர்வசதியளிக்கும்—இது 'இந்து' ஏடு தரும் செய்தி. இந்தமாதம் முதல்வாரத்தின் ஏடுகளைப் புரட்டிப் பாருங்கள். (தேதியை நான் குறித்து வைக்கவில்லை) ஆனால் இத்தேக்கம் 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கருக்கு நீர்ப்பாய்ச்சும் என்று எதிர்பார்க்கப்பட்டது! ஆர்ப்பரிப்பதைக் கண்டு மயங்காது சிந்தித்தால் அனைவருக்கும் நன்மையுண்டு.

வள்ளுவர் நெஞ்சம்.

## உலக வாழ்த்து-ச.

அதிகாரம்-க. பாட்டு-ச.

**வேண்டுதல் வேண்டாமை**
**-இலான் அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல.**

எதிலும் விருப்பமும், வெறுத்தலுங் காட்டாது; யாவையும் சமநோக்குடன் கருதி வாழ்கின்றவருக்கு எவ்விதத் துன்பங்களும் உண்டாவதில்லை. துன்பங்கள் எல்லாம் ஆசையாலும், அகங்காரத்தாலுமே விளைவதாகும். அவை அகற்றப்பட்டு விட்டால் துன்பமில்லையாம்.

விளக்கம்:

"இலான் அடி" என்பது அறிவை "ஆன்" விகுதி கொடுத்துளது சிறப்பு கருதி.

—மீ சு. இளமுருகு பொற்செல்வி


## தென்றல் வெளியீடு.

நாடகங்கள்.

மு. கருணாநிதியின்
ஒரே முத்தம் 1—4—0

ப. கண்ணனின்
புரட்சிப்பாடகன் 1—8—0
வீரவாலி 1—4—0
கன்னியின்சபதம் 0—8—0
மின்னொளி 0—6—0

★

வாணிபர்க்குக் கழிவு உண்டு.

★

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சங்ககிரி. :: சேலம் மாவட்டம்.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

என்று கூறுகின்றனர்—'ஏக இந்தியா' பேசுகின்றனர்!

ஆனால், கொடும் புலிகூட அவனிடம் கேட்காது—வடவர் கேட்கின்றனர்!

இந்தியத் துணைக்கண்டத்தில் அதிகாரம் செலுத்திவந்த வெள்ளையரை ஆட்சிப் பொறுப்பிலிருந்து வெளியேற்ற அனைவருமே கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாயினர்; இன்னும் சொல்லப்போனால் தென்னாட்டு மக்கள்தான் தீவிரக் கிளர்ச்சிகளில் முன் நின்றனர். ஆனால், இன்று வடநாட்டினர் ஏகபோக உரிமை கொண்டாடுகின்றனர்.

வெள்ளையர் ஆட்சி கொடுமையானதென்றால், வடவர்கள் ஆட்சி, கொடுமையும் வஞ்சகமும் நிறைந்ததென, நம் நாட்டின் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர்களே தங்களையும் மறந்து சில நேரங்களில் உண்மை பேசுவதை நாம் கண்டு வருகிறோம்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை எடுத்துக்கொண்டால்கூட மக்கள் எண்ணிக்கைப்படி குறைந்தது 700 கோடி ரூபாயாவது ஒதுக்கியிருக்க வேண்டும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நேரு சர்க்காரின் வஞ்சனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள நம் நாட்டுக்கு 1,000 கோடி ரூபாயாவது ஒதுக்கிப் பெருந் தொழிற்சாலைகள், அணைக்கட்டுத் திட்டங்கள் அமைக்க முன்வந்திருக்கவேண்டும். நேரு பண்டிதர் செய்ததென்ன? 170 கோடி ரூபாய்தான் தர முடியும் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்''

●



## தாய்க்குப்பின் தாரம்.

சொல்லும் முறை தெரிந்து சொன்னால் அது சிறிய விஷயமாயினும் சோபிக்கும் என்ற கருத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது "தாய்க்குப்பின் தாரம்!"

அகந்தையும், ஆணவமும் கொண்ட பண்ணையார் துரைசாமி துறையூர் கிராமத்திற்கு ஒரு சர்வாதிகாரி! அவர் அதிகாரத்திற்குப் பணிய மறுக்கின்றனர் ரத்தினம்பிள்ளையும் அவன் மகன் முத்தையனும்! பண்ணையார் அதிகார வெறி ரத்தினம்பிள்ளையை பலி கொள்ளுகிறது! முத்தையன் மனதில் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்ற பகை வளர்கிறது. அதற்கு உரமிடுகிறாள் முத்தையனுடைய அன்னை. இடையிலே பண்ணையார் மகள் சிவகாமி முத்தையன் இருவரும் காதலில் இணைகின்றனர். முடிவிலே முரட்டுக்காளையால் சிவகாமிக்கு நேரவிருந்த பேராபத்திலிருந்து அவளைக் காப்பாற்றி, துரைசாமியின் ஆணவத்தை முறியடித்து, தன் தாய்க்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றி தன் சபதத்தை முடித்து சிவகாமியை மணக்கிறான் முத்தையன்!

கதையில் பிரமாதமான கருத்துக் குவியலோ, கற்பனைப் பின்னலோ, கதையம்சமோ இல்லை! என்றாலும் ஆர்வத்துடன் ரசிக்கச் செய்கின்றன கதையை விவரித்திருக்கும் முறையும், காட்சிகளைப் படமாக்கி இருக்கும் கற்பனைத் திறமையும்!

முரட்டுக் காளையுடன் முத்தையன் போராடும் கட்டம் கதையின் உச்சம்! பண்ணையாரின் உயிரை வாங்கிவிடுவதென்று ஓடிய முத்தையன் அவர் கன்னத்தில மட்டும் அறைந்துவிட்டு ஓடிவருவது அவன் வீரத்திற்கு ஒரு இழுக்கு!

சில காட்சிகள் மனோகரா. பொன்முடி. காலம் மாறிப்போச்சு போன்ற வெற்றிப் படங்களை நமக்கு நினைவூட்டுகின்றன!

முத்தையன் தந்தை இறந்து விட்டதைக் கேட்டுக் கதறுவதும், தாயைக் கட்டிக்கொண்டு அழுவதும் உணர்ச்சிகரமாக இருந்தாலும், மிகைபடக் காணப்படுவதால் சலிப்பாக இருக்கிறது!

வள்ளியாக வரும் ஜி. சகுந்தலா மற்றப் படங்களில் நடித்ததைவிட இதில் நன்றாக நடிக்கிறார்.

ச. அய்யா(பிள்ளை)வின் வசனங்கள் நன்றாக இருக்கின்றன. பகுத்தறிவுக் கருத்துக்களும் தெறிக்கின்றன. திரையுலகின் பின்னால் மறைந்து நின்றவர், முன்னால் வந்தார்; வெற்றிபெற்று விட்டார். வாழ்க!

மருதகாசியின் "மனுசனை மனுசன் சாப்பிடுறாண்டா தம்பிப் பயலே!" என்ற ஒரு பாட்டைத் தவிர மற்ற பாடல்கள் சோபிக்கவில்லை!

படத்தை விறுவிறுப்புடன் கொண்டு செல்வது 'எடிடிங்!' இதைச் செய்தவர் எம். ஏ. திருமுகம்! டைரக்டரும் இவரே. டைரக்ஷனில் புதுமை இல்லாவிட்டாலும் சோடை இல்லை!

மக்களின் ஆரவாரத்தையும், கைதட்டலையும் கொண்டு ஒரு படத்தின் வெற்றியை நிர்ணயிப்பதானால் "தாய்க்குப் பின் தார"த்தை ஒரு வெற்றிப் படமென்றே கூறலாம்!

—"அமரன்"

டாக்டர் சோதனை விளக்கத்தின்படி
ஏற்ற கண்ணாடி எம்மிடம் கிடைக்கும்.




ராதா ஆப்டிகல் கம்பெனி,
முதல் அக்ரகாரம், சேலம்-1.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்-1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

கழக வார இதழ் — ஆசிரியர்:- ப.கண்ணன்

மலர் 6 | சேலம் 2-11-56. ★ விலை அணா ஒன்று. | இதழ் 18

# கிருஷ்ணன் கடவுளல்ல; கொலைகாரன்!

"சிசுபாலன், ஜராசந்தன், பீஷ்மன் முதலியவர்களைக் கொன்றவன் கிருஷ்ணன், அழகான மனைவி, மகள் ஆகியவர்களைப் பெற்றிருந்த ஆண்கள் கிருஷ்ணனைக் கண்டு பயந்து கொண்டிருந்தனர், ஏனெனில் கிருஷ்ணனுக்கு வயதாகி கிழவனாகி விட்டாலும், அழகில் மயங்கி பெண்கள் அவனோடு ஓடிவிடுவார்களே என்று நடுங்கி வாழ்ந்தனர்.

திரௌபதி என்ற பெண்ணுக்காக மகாபாரதப் போரை கிருஷ்ணன் தொடங்கினான். கோடிக்கணக்காக மக்களைக் கொன்று, பாண்டவர்கள் என்ற பித்தர்களுக்கு ராச்சியம் பெற்றுத் தந்தான். நண்பர்களையும், குருவையும் அஞ்சாமல் கொலை செய்தான்.

கிருஷ்ணன் இறுதிக் காலத்தில் "தெய்வமே! என் வாழ்க்கை முழுதும் 'நான் கொலைகள் தவிர ஒரு நன்மையும் செய்யவில்லை. எனது வாணாள் வீணாயிற்று. என்னை விரைவில் அழைத்துக்கொள்!" என்று அழுதுகொண்டே செத்தான்."

உத்தரப் பிரதேச கவர்னர், திரு. கே. எம். முன்ஷியின் மனைவி லீலாவதி முன்ஷி, பம்பாய் இந்திய வித்தியாபீடம் என்ற நிறுவனத்தார் வெளியிட்டுள்ள புத்தகமொன்றில் "கிருஷ்ணனின் இறுதிக் காலம்" என்ற கட்டுரையில் இவ்வாறு கூறுகிறார்:

காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர்—பார்ப்பனீயச் சார்புடைய தமிழறிஞர், எஸ். வையாபுரியார் பகவான் கிருஷ்ணனுடைய வரலாற்றினை சரித்திர ரீதியாக ஆராய்ந்து, "கிருஷ்ணன் கடவுளல்ல. பிற்காலத்திலே கடவுளாக ஆக்கப்பட்டவன்" என்று ஏற்கனவே கூறியிருக்கிறார்.

தோழியர், லீலாவதி முன்ஷியும் பேராசிரியர் வையாபுரியாரும் பகுத்தறிவுவாதிகளின் தொடர்பற்றவர்கள்; திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேராதவர்கள். அவர்களே சொல்லுகிறார்கள்: 'கிருஷ்ணன் கடவுளல்ல; மனிதனே; மனிதரிலும் ஒழுக்கமற்றவன்; கொடியவன்; கொலைகாரன்; சாகும்போது கடவுளை நோக்கிக் கதறியவன்" என்று.

இந்தக் கொடியவனை, கொலைகாரனை, கோயிலில் வைத்துக் கும்பிடலாமா? இவனொரு கடவுளா? இவனுக்குத் தேர் திருவிழா நடத்தலாமா? பிரார்த்தனை, அபிஷேகம், உண்டியல் என்று பகுத்தறிவையும், பணத்தையும் பாழாக்கலாமா?

இந்தக் கொலைகாரன், அர்ச்சுனனுக்கு, உறவினரைக் கொலை செய்! என்று போதித்ததாகக் கூறப்படும் கொலை நெறிமை-கொலைநூலை பகவத்கீதையென்று பாராட்டலாமா? பரப்பலாமா?

'பித்தர்கள்' என்று தோழியர் லீலாவதி கூறுகின்ற, ஒரு தந்தைக்குப் பிறவாத பஞ்சபாண்டவர்களுக்காகவும், அவர்களது பொதுவுடைமைக் கற்பரசி—திரௌபதைக்காகவும் கிருஷ்ணன் நடத்திய போராட்டக் கதையை மகாபாரதம்—பாரதப் பண்பாட்டின் பிறப்பிடம்—பாரத கலாசாரத்தின் கலங்கரை விளக்கம்—என்றெல்லாம் கே. எம். முன்ஷி, ராசேந்திரப்பிரசாத். ஜவகரிலால் நேரு போன்ற தலைவர்கள் போற்றுவதின் மர்மம் என்ன?

[8-ம் பக்கம் தொடர்ச்சி]

புத்தர் நெறி.

# எல்லோரும் ஓர்குலம்.

பி. வி. இராமசாமி.

**எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஒரினம் என்ற சாதி பேதமற்ற சமத்துவக் கொள்கையினை, 2000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய பேரறிஞர் புத்தர் விளக்கியுள்ளார். அஃது வருமாறு:**

"புத்தர்பிரான், இள வேனில்—மாலை, அறிவுச்சோலையிலே ஓய்வு பெற்றமர்ந்திருந்தார்.

மன்னன் பாசேனஜித்தன்; உயர் குலத்தாரென்பவர் பலர் சூழவந்து கண்டனன். புத்தர் பிரானை நோக்கி மன்னன் வினவினன்:

அறிஞர் பிரானே! 'இது என்ன அநியாயம்' தங்கள் தலைமைச்சீடர் ஆனந்தர், மதங்க சாதி, சண்டாளப் பெண்ணின் கையால் தண்ணீர் குடித்தார். தாங்களோ அந்த சண்டாளப் பெண்ணையே பிட்சுவாக்கிக்கொண்டு விட்டீரே! அடுக்குமா இந்த அநாசாரம்?

புத்தர்:- இதோ, நம் காலடியில் இருப்பது மண். நீர் அணிந்திருக்கிறீர் பொன், தங்கநகைகள். இரண்டுக்கும் வேற்றுமை காணப்படுகிறதல்லவா?

மன்னன்:- ஆம்.

புத்தர்:- உம்மைச் சூழ இருக்கின்றனரே, உயர்சாதிக்காரர் என்று கூறிக் கொள்பவர்கள்; இதோ எமது குழாமில் உள்ளனரே சண்டாளர்; தாழ்ந்த சாதியார் என்று நீங்கள் குறிப்பிடுகிறவர்கள்; இவ்விருவருக்கும் உருவ—அமைப்பிலே, பிறப்பு முறையிலே வேற்றுமையுண்டா?

உயர்சாதியினர், நெருப்பிலே இருந்து பிறந்தனரா? ஆகாயத்திலிருந்தோ—காற்றிலிருந்தோ—அல்லது நிலத்தைக் கிழித்துக்கொண்டோ பிறந்தனரா? அவர்கள் எல்லாரும் பெண்ணின் கர்ப்பத்தில் உற்பத்தியாகி — இயல்பான இயற்கை முறையில் பிறந்தவர்கள் தானே?

மன்னன்:- தர்மசாஸ்திரம் அப்படி வகுத்துள்ளதே.

புத்தர்:- ஒரு விளக்கம். பிராமண—க்ஷத்ரியர்—வைசியர்—சூத்திரர் என்றது நீங்கள் கூறும் பிரிவினை. சரி, ஒரு க்ஷத்ரியர் பெரும் பணக்காரனாகி விடுகிறார். அப்போது, மற்ற மூன்று பிரிவினரில் யாரையாவது தன் பணியாளராக வைத்துக்கொள்ள முடியுமா?

மன்னன்:- முடியும்.

புத்தர்:- மூன்றாம் பிரிவினரோ, நான்காம் பிரிவினரோ, பெரும் சீமானாகிவிட்டால், மற்ற இரு உயர்ந்த பிரிவைச் சேர்ந்தவர்கள் பணிவிடை செய்வரா?

மன்னன்:- செய்வர்.

புத்தர்:- உண்மை இப்படியானால்; இந்த நான்கு இனங்களும் ஒரே சமநிலையினர் ஆகின்றனர் என்பது புலப்படவில்லையா?

மன்னன்:- அப்படித்தான் புலப்படுகிறது.

புத்தர்:- மற்றொரு உதாரணம்!

ஒரு க்ஷத்திரியன் திருடினால்—கொலை செய்தால்—பொய் பித்தலாட்டம் செய்தால்—வசை மொழி மொழிந்தால்—கேடு நினைத்தால்; தவறான நோக்கம் கொண்டால், அவன் அல்லல்படுவானு?

மன்னன்:- ஆமாம்.

புத்தர்:- முற்றும் உண்மை. சரி. இதேபோல் மற்ற மூன்று பிரிவினர் செய்தால்?

மன்னன்:- அவர்களும் துயருறுவர்.

புத்தர்:- இதில் நான்கு பிரிவினர்களுக்குள் வேற்றுமையுளதா?

மன்னன்:- இல்லை.

புத்தர்:- மற்றொரு விளக்கம். ஒரு உயர் சாதியான் கொள்ளைக்காரனுனன்—திருடினுன், அவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்து, உம்முன் கொண்டு வந்து நிறுத்தினுன்—நீர் என்ன செய்வீர்?

மன்னன்:- தடையின்றி. தண்டிப்பேன்.

புத்தர்:- மற்ற மூன்று பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இம்மாதிரி செய்தால்?

மன்னன்:- அவர்களுக்கும் உரிய தண்டனை விதிப்பேன்,

புத்தர்:- இதிலும் அவர்களுக்குள் வேற்றுமையில்லையே?

மன்னன்:- இல்லை.

புத்தர்:- இந்த உயர் சாதியார் ஒருவர் பிட்சுவாகி— அறநெறித் தொண்டராகி, உமது அரண்மனைக்கு வந்தால் என்ன செய்வீர்?

மன்னன்:- உரிய மரியாதை உபசாரம் நடத்துவேன்.

புத்தர்:- மற்ற மூன்று பிரிவுகளைச் சேர்ந்தவர் பிட்சுவானுல், தோற்றத்தில் வேற்றுமை காணுமா? அறிவிலும் சிறப்பிலும் பொதுநலப்பணியிலும் வேற்றுமை காணுமா?

மன்னன்:- மெய்யொளி பெற்றேன்; புத்தரே! மற்றொரு வினு: உயர்ந்தோர் சிறந்தோர் என்போர் யாவர்? அவர்களுடைய சிறப்பிலக்கணம் யாதோ?

புத்தர்:- யாருடைய சிந்தை நடப்புகளால் கலக்கமடையாதிருக்கிறதோ—யாருடைய மனம் குழப்பமற்றிருக்கிறதோ, யார் புண்ணிய பாபம் என்பன பற்றி சிந்திப்பதில்லையோ, அவன் துக்கம், அச்சம் என்பனவற்றைக் கடந்தவனாவான்.

மலர்களைக்கொண்டு பலவித அலங்காரமாலைகள் செய்வதுபோல், நல்லறிஞன் தமது திறமையால், வாழ்க்கையில் பலவித நற்செயல்கள் செய்யவல்லான்.

ஆசையற்றால் துக்கமில்லை. இன்ப வாழ்வுக்கு வழிசெய்யும் பண்புகள், நற்காட்சி, நற்சிந்தை, நல்வாய்மை, நற்செயல், நல்வாழ்க்கை, அன்பு, பரோபகாரம், ஊக்கம் நல்வழி, மன அமைதி பொதுநலப்பணி ஆகியவைகளாகும். இத்தகைய நற்பண்புகளைக் கொண்டவர்களே உயர்வும் சிறப்பும் பெற்றவர்களாவர்."

★★



# எத்ரேரால்



ஸ்ரீ வில்லிப்புத்தூரில், குளத்தில் குளித்த இளம் பெண்களை வட்டமிட்ட வாலிபர்கள், கைது செய்யப்பட்டார்கள்.

—செய்தி.

ஐயயோ! கிருஷ்ண பரமாத்மாவின் வாரிசுகளைக் கைதுசெய்யலாமா இந்தப் போலீசார்? நாத்திகர்கள்! நாத்திகர்கள்!

*　*　*

காமராசர் போன ரெயிலை, தமிழரசுக் கழகக் காரர்கள் நிறுத்தினர்கள்.

—செய்தி.

தேர்தலில் காங்கிரசை ஆதரிப்பதை நிறுத்த வேண்டுமே!

*　*　*

சாப்பாட்டைவிட அறிவுதான் முக்கியம்.

—கிருபானந்தவாரி

ஐயாவோ! பக்தி பாழாகி விடுமே!

*　*　*

சென்னை புதிய கவர்னர் யாரென்று அறிவிக்கப்படவில்லை.

—செய்தி.

ராஜாஜியின் பெயர் இழுபடுவதாக இயம்புகிறதே ஒரு ஊர்க்குருவி.

*　*　*

சட்டசபைத் தேர்தலில் இரண்டே கட்சிகள் உள்ளன:

—பெரியார்.

கிடையாது. ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லை. குடியாசு ஒருபித்தலாட்டம், தேர்தல் என்பதே மடத்தனம் என்று சொல்லுகின்ற கட்சியும் உண்டு.

*　*　*

தமிழா! தீபாவளி என்பது ஆரியனின் ஆபாசப் பண்டிகை! நினைவிருக்கட்டும். அதைக் கொண்டாடாதே!

—"விடுதலை"

காமராசர் அதைக் கொண்டாடியே தான் தீருவார். தமிழா! அதையும் மறந்து விடாதே!

# தாய் ஒருத்தி; தந்தை பலரா?

"கடவுளை நம்பாதவர்களுக்கு ஓட்டுப் போடலாமா?" என்று கேட்கிறார் காமராசர். நாமும் இதுவரை பல மாநாடுகள் கூட்டியிருக்கிறோம். எத்தனையோ தீர்மானங்கள் போட்டிருக்கிறோம். ஆனால், "நாங்கள் கடவுள் இல்லை என்கிறோம்" என்று ஒரு தீர்மானம் கூட போட்டது கிடையாதே! கடவுளைப் பற்றிப் பேசுகிறோம். அது தவறு என்று சொல்ல முடியுமா? கடவுளைப் பற்றிப் பேசாதவர்கள் யார்? "தென்னாட்டுக் கோயில்கள் விபச்சார மடங்கள்" என்று காந்தியார் சொல்லியிருக்கிறாரே! அவருடைய சீடர் தானே இந்தக் காமராஜர்! இன்னும், சித்தர், இராமலிங்கர், பட்டினத்தார் ஆகிய இவர்களெல்லாம் கடவுளைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள்.

தி. மு. க. ஒரு விடுதலை இயக்கம்; வெறும் அரசியல் கட்சி மட்டுமல்ல! நமது இலட்சியம் சமுதாயத்தை ஒட்டி வகுக்கப்பட்டது. இந்த நாட்டிலே இருந்துவரும் சாதி அமைப்பு முறைகளினுலே, வாழ்க்கையில் சிலர்மட்டும் வளரவும், பலர் தேயவும் நேரிடுகிறது. இத்தகைய சமுதாய அமைப்பை மாற்றியமைக்க நாம் முயற்சி செய்கையில், "இதெல்லாம் சாஸ்திரப்படி எழுதப்பட்டது" என்று சிலர் சொல்லுகின்றனர். "அப்படியானுல் அந்த சாஸ்திரத்தைக் கொண்டுவா! அதையும் ஒழிக்க வேண்டும்" என்று நாம் கூறுகிறோம். உடனே "சாஸ்திரம் கடவுளால் எழுதப்பட்டது" என்கின்றனர். பிறப்பினுல் உயர்வு, தாழ்வு, கற்பிக்கும் அந்த சாஸ்திரத்தை யார் எழுதியிருந்தாலும் சரி, அவர்களும் அந்த சாஸ்திரத்துடன் சேர்ந்து வெளியேற வேண்டும் என்கிறோம்.

ராஜகோபாலாச்சாரியாரும் பாரத மாதாவின் புதல்வராம்! காமராசநாடாரும் பாரதமாதாவின் புதல்வராம்! முத்துராமலிங்கத் தேவரும் பாரதமாதாவின் புதல்வராம்! ஒரே தாய்க்குப் பிறந்த குழந்தைகளுள் ஒன்று ஆச்சாரியாராகவும், மற்றொன்று நாடாராகவும், இன்னொன்று தேவராகவும் இருந்தால், அந்தத் தாயைப் பற்றி நாம் என்ன நினைப்பது?

ஒரு மனிதன் தேகப்பயிற்சி செய்யும்பொழுது, எல்லா உறுப்புகளும் வலிவடையவே முயற்சி எடுத்துக் கொள்வான். தண்டால் மட்டும் எடுத்தால், கைகளும், மார்பும்தான் பலப்படும். கால்களைப் பலப்படுத்த அதற்கேற்ற தேகப்பயிற்சியைச் செய்ய வேண்டும். பாரத மாதா வெறும் தண்டால் எடுக்கிறாள். அதனால்தான், அவளுடைய கால்கள் (தென்னகம்) மெலிந்து போகின்றன.

(தோழர், டி. கே. தாமரைச்செல்வனின் சேலம் பேச்சு, இன்னும் வரும்)


**பகுத்தறிவு.**

(வாரஇதழ்)

கையொப்பத்தொகை:

ஆண்டு 1-க்கு 3-8-0

ஆறு மாதங்கள் 2-0-0

தனிப்படி 0-1-0

விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.

பகுத்தறிவு அலுவலகம்,

சேலம்-1.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 2—11—56 | இதழ் 18

## தேர்தல் முனையிலே நாம்.

நாடெங்கும் 13 நாட்கள், 1500 மைல்களுக்கு மேல் சுற்றி, 21 இடங்களிலே தங்கி, 6,500 பேர்களின் கருத்துக்களைப் பதிவுசெய்து கொண்டு திரும்பியது, பொதுச் செயலாளர் நாவலர், நெடுஞ்செழியனர் தலைமையிலே சென்ற தேர்தல் ஆய்வுக்குழு.

கிடைத்த தகவல்களையும், கருத்துக்களையும் சீர்தூக்கிப் பார்த்து, பொதுத் தேர்தலில் நாம் 150 இடங்களுக்குப் போட்டியிட வாய்ப்பிருக்கிறது என்ற நல்ல செய்தியினை, 24–10–56-ல் சென்னை கோகலே மண்டபக் கூட்டத்தில் அறிவித்தார் அறிஞர் அண்ணா! மகிழ்ச்சிக்குரிய செய்தியே; எனினும் நம்மீது சுமரும் பொறுப்புகளை நினைக்கும்போது, மகிழ்ச்சி மறைந்து அச்சம் தலைதூக்குகின்றது.

திராவிட முன்னேற்றக் கழகம் வெறும் தேர்தல் கழகமன்று. அது தாழ்த்தப்பட்ட ஒரு இனத்தின் உயிர் மூச்சாக—நாட்டின் அடிமை விலங்கொடிக்கும் விடுதலைப்பாசறையாக-விளங்குகின்ற மாபெரும் இயக்கம். விடுதலை பெற்ற திராவிடத்தில் பகுத்தறிவு பூர்வமான சமதர்மக் குடியரசு நிர்மாணிக்கும் அதன் போராட்டப் பணியிலேபலமுனைகள் அமைகின்றன. அதிலே ஒன்று தேர்தல் முனை. தேர்தல் தவறான செயலன்று. குடியரசு நாட்டிலே ஆட்சியினரை உருவாக்கும் உலைக்களம்—கொள்கை முரசொலிக்கும் போர்க்களம் அதுவே!

"தேர்தல் என்பது பித்தலாட்டம், பணம் படைத்தோரே வெல்ல முடியும், அந்தத் தகுதி காங்கிரசுக்கே உண்டு" என்ற நிலையில், பணபல மற்ற நாம்—பொய் புனைசுருட்டு கல்லாத நாம் தேர்தலில் ஈடுபடுவதென்பது எளிதான செயலன்று. எனினும் ஈடுபடுகின்றோம், அடிமைப் பட்டுழலும் திராவிடத்தின் விடுதலைக் கோரிக்கையினை முன்வைத்து! பணம் படைத்தோரே வெல்ல முடியும், சட்டசபைக்குச் செல்ல முடியும் என்ற நிலையிருப்பது நாட்டுக்கும் நல்லதன்று; குடியரசு முறைக்கும் சிறப்புத் தருவதன்று. இருக்கும் இழிநிலையினை நாம் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

ஊர்பிக்கைக்கும், நன்மதிப்புக்கும் உரிய நம்மரும் தலைவர்கள் நம்மைக்காட்டிலும் இதனை நன்கறிவர். தேர்தல் முனையிலே நாம் இயங்க வேண்டிய நன் முறைகளை வகுத்தளிப்பர்; கண்ணியம், கடமை, கட்டுப்பாடுகளைத் தவறாது கைக்கொண்டு, தலைமை காட்டிய வழியே பணியாற்றி, நமது இலட்சிய வெற்றியினைப் பெறுவோமாக. வெல்க திராவிடம்! ●

## கொடிப்போர்; கழக வெற்றி.

சேலம் அம்மாப்பேட்டையில், காந்தியார் சிலை வைக்கப்பட்டுள்ள பொது மண்டபத்திலே மற்றவர்களைப்போல தி. மு. க. கொடியையும் ஏற்றினர் கழகத் தோழர்கள். அந்த வட்ட காங்கிரஸ் தேசிய வாலிபர் சங்கத்தினர் அதனைத் தடுத்தும், பிடுங்கி எறிந்தும், மண்டபம் எங்களது என்று அட்டகாசம் செய்தனர், சென்ற ஆண்டில், சேலத்திலே பரபரப்பைஉண்டாக்கிய இச் சம்பவம் நீதி மன்றத்திற்குச் சென்றது.

சேலம் முதல் வகுப்பு நீதிபதி, "மண்டபம் தேசிய வாலிபர்சங்கத்திற்கே சொந்தம்" என்று தீர்ப்பளித்தார். இதனை எதிர்த்து அம்மாப்பேட்டை தி. மு. க. தோழர்கள், சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

வழக்கினை விசாரித்த நீதிபதி கனம், சோமசுந்தரம் அவர்கள் 28—10—56-ல், தமது தீர்ப்பினை வழங்கினர்:

"மண்டபம் சர்க்காரின் சொத்து, நகர சபையின் உபயோகத்திற்காகத் தரப்பட்டிருக்கிறது. நகரசபையின் அனுமதியின்றி அங்கு கொடி ஏற்றிக்கொள்ள எந்த ஒரு கட்சிக்கும் தனியுரிமை கிடையாது" என்ற நல்ல தீர்ப்பு கிடைத்தது. நாம் மகிழ்கின்றோம்.

பொதுச் சொத்தை—சர்க்கார் உடைமையைத் தம்முடையதென்று கூறி, தடித்தனம் புரிந்த சேலம் காங்கிரஸ்காரர்கள் கொடி நாட்டும் உரிமைப் போரில் தோற்றனர்; நம் தோழர்கள் வென்றனர்! வாழ்த்துகிறோம்; பாராட்டுகிறோம் முன்னின்று பணிபுரிந்த தோழர்களை! ●






[முன் இதழ் தொடர்ச்சி]

மைத்:- கவலை வேண்டாம், கர்த்தர் இருக்கிறார் காப்பாற்ற. படைத் தலைவர்க்கெல்லாம் தலைவன் நீர்! வாய்ப்பு இருக்கிறது, விவேகத்தோடு நடந்துகொண்டால். பரிசு ஆயிரம் கழஞ்சு பொன்; பிறகு பல்லவநாட்டு அமைச்சர்!

விக்ர:- எப்படிச் செய்வதென்று........

மைத்:- மலைக்காதீர்!

("மன்னர் போர்முனையில் பகைவனோடு போராடிக் கொண்டிருக்கும்போது, பின்புறமிருந்து முதுகிலே ஒரு குத்து, ஒரு வீச்சு. உடனே மறைவு. அவ்வளவுதான் கூட்டத்திலே யாரோ, எவரோ என்று போய்விடும். அடிக்கடி வராது இதுபோல அரிய சந்தர்ப்பம்." சேனாபதியின் காதருகே ரகசியமாகச் சொல்கிறான் மைத்ரேயன்)

மைத்:- (வெளிப்படையாக) என்ன சொல்லுகிறீர்?

விக்ர:- அப்படியே செய்து முடிக்கிறேன் சுவாமி!

(முரசு, தாரை, எக்காள ஒலி கேட்கிறது)

விக்ர:- அதோ, முரசொலி கேட்கிறது! படை புறப்பட ஆயத்தமாகிவிட்டது. நான் வருகிறேன், வணக்கம்.

(வணங்கிச் செல்கிறான்)

### காட்சி 11.

(முல்லையின் வீடு. பச்சையும், அவளும் இருக்கின்றனர்)

முல்லை:- எங்கே; நாஞ் சொல்ற மாதிரி மட மடன்னு சொல்லு பாக்கலாம்.

பச்சை:- முல்லை! இதிலே நான் ஜெயிச்சேன், என் கையாலே நாலு அறை நீ வாங்கிக்கணும்.

முல்லை:- சரி. "அடடா நரி கரடேறுதடா ஒன்பது நரியினில் ஒரு நரி சின்ன நரியடா சின்ன நரி முதுகினில் ஒருபிடி நரை மயிரடா நரைமயிர் நுனியினில் புதுமலர் மணமடா புது மலர் மணமதில் குமரியின் நினைவடா!"

பச்சை:- (நிதானமாக) அடடா, நரி கரடேறுதடா, ஒன்பது நரியினில் ஒருநரி....சின்ன, நரியடா! சின்னநரி முதுகினிலே!....

முல்லை:- (வெடுப்பாக) பனங்காய்! சே! சே! இப்படி ஆமை வேகத்திலே ஆருந்தான் சொல்லுவாங்க! நீயென்ன!

பச்சை:- முல்லை! வேகம் பெரிசா? பாவம் பெரிசா? நான் புலவர் மகன். பாவத்தோட பக்குவமா, புரியராப்லேதாஞ் சொல்வேன். அடடா தடடா தடாதடா வெல்லாம் ஒதவாது.

முல்லை:- அப்படின்னா தோல்வி! தோல்வி! வேகம் ஒனக்கு வராது!

பச்சை:- நெனச்சுகிட்டே! வச்சுப்பாரேன் ஒரு ஓட்டப் பந்தயம் நாந்தான் ஜெயிப்பேன்.

முல்லை:- ஓட்டப் பந்தயமா? அதிலே ஔறுவாயனும் ஜெயிக்கலாம்! அதெல்லாம் கதவுக்கு வெளியே. இன்னொரு பந்தயம், அதிலே தோத்தவங்க ஜெயிச்சவங்களுக்கு மூணுமாசம் அடிமையா இருககணும். என்ன சொல்றே?

பச்சை:- அடிமையா? அப்படின்னா, சொல்ற வேலையெல்லாஞ் செய்யணுமோ?

முல்லை:- ஆமாம். நான் ஜெயிச்சேன்னு வச்சுக்க. ஒனக்கு உத்தரவு போடுவேன்: சோறாக்கு—ஆக்கணும். சேலை துவை—துவைக்கணும். வீட்டைப் பெருக்கு—பெருக்கணும். வென்னீர் போடு—போடணும். படுக்கையை விரி—விரிக்கணும.

பச்சை:- நான் ஜெயிச்சா உத்தரவு போடுவேன்: சோறு போடு—போடணும். கைக்கழுவு—கழுவணும், அப்பறம் படுக்கையிலே [illegible]

படுப்பேன்! காலைப்புடி—புடிக்கணும். வெத்திலே மடி—மடிக்கணும் வாயிலே வையி—வைக்கணும். அப்புறம்....அப்புறம்....வந்து....

முல்லை:- கன்னத்திலே குடுன்னு சொல்லுவே. ஒங்கிக் குடுப்பேன் இப்படி.

(அவன் கன்னத்தில் அறைகிறான்)

பச்சை:- முல்லை! ஏது, ஏமாந்தா அறைஞ்சிடுவே போலே இருக்குதே!

முல்லை:- பந்தயத்திலே நான் ஜெயிச்சவ; ஒங்கணக்குப்படி நாலுக்கு இன்னும் மூணு பாக்கி. இந்தா வாங்கிக்கோ!

(அவள் அறைய, அடிக்குத் தப்பி லாவகமாகப் பின்னால் நகருகிறான். தள்ளாடி உள்ளே நுழைந்த ஒரு வீரன் பச்சைமேல் மோதிவிழுகிறான்)

பச்சை:- (அஞ்சி) ஐயயோ? இதென்ன பேயா? பிசாசா?

முல்லை:- எதுவுமில்லை. ஒரு ஆளு. (பார்த்து) அடடே! பாவம்! பசி மயக்கம போலேருக்குது.

வீரன்:- (குழறி) அம்மா! தாகம்....கொஞ்சம் தண்ணி.

(முல்லை ஓடிச்சென்று தண்ணீர் கொண்டுவருகிறாள். அதை வாங்கி வாயில் ஊற்றுகிறான் பச்சை. தெளிந்து எழுந்திருக்கிறான்)

பச்சை:- யாருப்பா நீ? என்ன ஒடம்புக்கு?

வீரன்:- (நடுங்கிக்கொண்டு) குருக்கோட்டையிலேருந்து வர்றேன். குருதை வெளியே நிற்குது. ஒவியர் மைத்ரேயரை அவசரமா பார்க்கணும். வழியிலேயே ஜொரம் வந்துடிச்சு. குளிரு தாங்க முடியலே. நாகெல்லாம் வரண்டு போச்சு. ஐயா! மைத்ரேயர் வீடு எங்கேருக்குது?

முல்லை:- (சந்தேகித்து) அவசரமா பாக்கணுமா? அப்படி என்ன சேதிங்க? சொல்லுங்க.

வீரன்:- (நடுங்கியவண்ணம்) ராஜாங்க சேதி-ஓலை கொண்டாந்தேன். அவசரமா அவருகிட்டே சேக்கணும். சேத்தப்புறம் நான் செத்தாலும் பாதகமில்லே. ஐயா! ஐயா! எடத்தைச் சொல்லுங்க ஐயா!

பச்சை:- இந்தாய்யா! கெழக்காலே போறு மண்டபத் தெரு; அதுலே வலது பக்கம் மூணாவது வூடு வித்யாவதிக்குச் சொந்தம். அங்கேதான் இருக்காரு மைத்ரேயர். பொறப்படு.

(வீரன் வணங்கிவிட்டு போகிறான் தள்ளாடிய வண்ணம்)

முல்லை:- (கடுப்பாக) நீயொரு மனுஷன்! நீ எங்கேருந்து வர்றான்னு அவனைக் கேட்டியா?

பச்சை:- குருக்கோட்டையிலேருந்து.

முல்லை:- நம்மவனா? அன்னியனா?

பச்சை:- அன்னியன்!

முல்லை:- (வியந்து) அடஐயா! குருக்கோட்டை மேலேதானே நம்ம மகாராஜா படையெடுத்திருக்காரு. இவன் அங்கேருந்துதானே சேதி கொண்டாந்திருக்கான். ராஜாங்க சேதின்னா னே! நேர்மையா மகாராணிகிட்டே, மந்திரிகிட்டேல்ல போகணும்? மைத்ரேயருகிட்டே போவானேன்? ஏதோ மர்மம் இருக்குது ஐயா இருக்குது!

பச்சை:- (யோசித்து) முல்லை! மைத்ரேயர் கூட நம்ம நாட்டாரல்ல. தெரியுமா ஒனக்கு?

முல்லை:- (வியந்து) அப்படியா? மண்டுவே! பொறப்படு வித்யாவதி வீட்டுக்கு. இளைய மன்னர் சந்திரவர்மரை இப்பவே பார்க்கணும். விபரத்தைச் சொல்லணும்.

பச்சை:- அவுரு சக்திமுனியரைப் பார்க்க கோயிலுக்கல்ல போயிருப்பாரு.

முல்லை:- வா, நாம்பளும் கோயிலுக்கே போகலாம்.

பச்சை:- கோயிலுக்கா?...கோயிலுக்கேவா?

முல்லை:- (பழித்து) ஆமா; ஆமா! கோயிலுக்கேதான்!

(அவனை இழுத்துக்கொண்டு போகிறாள்)

## காட்சி 12.

(வித்யாவதி வீடு. கையிலே உள்ள ஓலையை பரபரப்போடு படித்துக் கொண்டிருக்கிறாள் வித்தியாவதி.)

"பாண்டியன் ஸ்ரீ வல்லவன் படையெடுக்கு முன், காஞ்சியிலே நமது பன்றிக்கொடி பறக்க வேண்டும். பாண்டியன் நமது நேச மன்னன் எனவே நம்மை எதிர்க்க மாட்டான்; பல்லவத்தை கைப்பற்ற சாதகமான சூழ்நிலை. தாமதம் கூடாது. உடனே சந்திரவர்மனைக் கொன்று விடவும். மிக அவசரம்."

—தைலபன்,
சாளுக்கிய மன்னன்.

மைத்ரே:- (வந்து) வித்யாவதி! என்ன ஓலை!

(வளரு)



## தமிழக சட்டசபையில்.

வருகிற ஏப்ரலில் சென்னை ராஜ்யத்தில் நடக்கப்போகும் தேர்தல்களில் மொத்தம் 205 எம். எல். ஏ க்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்களில் 6பேர்கள் சென்னையுடன் இணையப் போகும் தென் திருவாங்கூர் பிரதிநிதிகள்; 39 பேர்கள் ஷெட்யூல்டு வகுப்பினரின் பிரதிநிதிகள்.

(இப்பொழுது சென்னை அசெம்பிளியில் 230 ஸ்தானங்கள் இருக்கின்றன.)

சென்னை ராஜ்யம், பார்லிமெண்டுக்கு 41 மெம்பர்களைத் தேர்ந்தெடுக்கும். (இவர்களில் ஒருவர் நமுடன் சேரப் போகும் தென் திருவாங்கூர் பிரதிநிதியாக இருப்பார்)

சென்னை அசெம்பிளியின் ஒவ்வொரு தொகுதிக்கும் சராசரி 1½ லட்சம் வோட்டர்கள் இருப்பார்கள். பார்லிமெண்டரி தொகுதி ஒவ்வொன்றுக்கும் இதைப்போலஐந்துமடங்கு வோட்டர்கள்.

சென்னை மேல் சபையில் 48 அங்கத்தினர்கள் இருப்பார்கள். இவர்களில் 16 பேர்கள் அசெம்பிளியால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்; 16 பேர்கள் ஸ்தலஸ்தாபனங்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்; 4 பேர் பட்டதாரிகளின் பிரதிநிதிகள், இன்னொரு 4 பேர் உபாத்தியாயர்களின் பிரதிநிதிகள்: பாக்கி எட்டு பேர்களை; கவர்னர் நியமனம் செய்வார்.

ஆ. ந.

வள்ளுவர் நெஞ்சம்.

### உலக வாழ்த்து-எ.

அதிகாரம்-க. பாட்டு-எ.

**தனக்குவமை இல்லாதான்**
**-தான்சேர்ந்தார்க்கு அல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது.**

பலகாரணங்களால் பொதுவாக மனக்கவலை ஏற்படும். அந்தக் கவலையை மாற்றுவதற்கு வழி, கவலையின் காரணத்தை யறிந்து தக்க காரியத்தைச் செய்வதேயாகும். அதற்குத் தன்னைக் காட்டிலும் அறிவும், அனுபவமும் உள்ளவரின் நட்பும் அன்பும் கிடைத்தாலன்றி அரிதாகும்.

விளக்கம்:

தனக்குவமை—தன்னிலும் அறிவாற்றல் மிகுந்தவர்.

—மீ. சு. இளமுருகு பொற்செல்வி.

### இலங்கை 'பகுத்தறிவு' முகவர்.

தோழர், ப. சுப்ரமணியம், பகுத்தறிவுப் பண்ணை, 121. செட்டியார் தெரு, கொழும்பு. இலங்கையிலே நம் இதழ் விற்க விரும்புவோர் இவருக்கு எழுதுக.

## முன்னேற்றப்—
## —பாதையிலே

**சேலம்.**

சென்ட்ரல் டாக்கீசுக்கு முன்பு, வேங்கடப்ப செட்டியார் ரோடில் அமைந்துள்ள, சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக அலுவலகத்தை 4-11-56 மாலை 4-மணிக்கு கவிஞர். கண்ணதாசன் திறந்து வைப்பார்.

—ஜி. பி. சோமசுந்தரம், செயலாளர்.

**சென்னை.**

தி. மு. க. 27-வது வட்டக் (15, பிள்ளையார் கோவில் தெரு) துவக்கவிழாப் பொதுக்கூட்டம். 14-11-56 மாலை, நடைபெறும். தலைமை: ஏ. த. மாணிக்கம், பொதுச் செயலாளர், நாவலர். நெடுஞ்செழியன், எஸ். வி. நடராசன், ஆ. இராசன், வே. அன்புமணி ஆகியோர் பேசுவர்!

—W. P. S. சுந்தரம், செயலாளர்.

**இலங்கை.**

மூன்றாவது திருக்குறள் மாநாடு, 3, 4-11-56 இருநாட்களிலும் பம்பலப்பிட்டி, இந்துக் கல்லூரி, சரசுவதி மண்டபத்தில் நடைபெறும். பல தமிழறிஞர்கள் கலந்துகொள்வர். இசையரங்குகள் நடைபெறும். தலைமை: திரு. என். மாணிக்க இடைக்காடர், புலவர்மணி. ஏ. பெரியதம்பி(பிள்ளை) தோழர்கள்: கி. மனோகரன், திருச்சி, கி. ஆ. பெ. விசுவநாதன், டாக்டர், அ. சிதம்பரநாதனார், தோழியர், நேசமலர். மற்றும் பலர் சொற்பொழி வாற்றுவர்.

—சி. சேதுராமன், செயலாளர்.

### முகவரி மாற்றம்.

இதுவரை, மதுரை கட்ருபாளையம் 4-ம் எண்ணில் இயங்கி வந்த தி. மு. கழக மதுரை நகரக்கிளை, மதுரை மாவட்டக் கிளை 1-11-56 முதல் 66, மேலக்கோபுரத் தெரு, மதுரை என்ற முகவரியில் இயங்கும். தோழர்கள் புது முகவரிக்கே தொடர்பு கொள்ளவும்.

—எஸ். முத்து, செயலாளர்.

வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த



செல்வம் ராணி
&
சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

## கேள்விக் கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● அ. மு. சாமி,
க. உயர்நிலைப்பள்ளி,
பட்டுக்கோட்டை.

**இரா. குமாரசாமி, சென்னை-5:**

கே: இராமன் மகாவிஷ்ணு அவதாரம், புத்தரும் அந்த அவதாரமே என்கிறார்கள். இராமன் நெற்றியில் வைணவச் சின்னமாக நாமம் இருக்கிறது; புத்தர் நெற்றியில் அது ஏனில்லை?

ப: புத்தர் வேத—வைதிக மதத்தின் பகைவர். அவரை விஷ்ணுவின் அவதாரம் என்பது வைதிகரின் பலவீனப்பித்தலாட்டம்! இப்போதும் பௌத்தர்கள் சற்று ஏமாந்தால், புராணவாணியர் புத்தர் சிலைக்கு நாமம் போட்டுவிடுவார்களே!

* * *

கே: அறிவின் எல்லை எது?

ப: செவ்வையான வாழ்க்கை!

**சி. சு. தேவராமன், சிறுதையூர்.**

கே: ஒருவனுக்கு எப்போது லட்சியம் ஏற்படும்?

ப: நெருக்கடியும், துயரும் நேரும்போது.

* * *

கே:- உங்கள் பேருக்கும் பகுத்தறிவுக்கும் ஒத்து வருகிறதா?

ப: ஏன் வராது? சிறந்த வீரம் படைத்தவனை வீரன் என்பதுபோல, நல்ல கண்களைப் படைத்தவனை கண்ணன் என்பதில் தவறில்லையே!

**அ. மு. சாமி, பட்டுக்கோட்டை.**

கே: ஆளவந்த ஆணவக்காரர்கள், பகுத்தறிவுப் பாசறையிலே தென்றல் வீச, முரசொலி முழக்க தமிழ்நாடு தருவார்களா?

ப:- அவர்களாகத் தரமாட்டார்கள் தோழரே! நாம்தான் முயன்று பெறவேண்டும்.

● கே: "அந்தணர்" என்ற சொல் யாருக்குச் சொல்லப்பட்டது? அஃது பார்ப்பனருக்குப் பொருந்துமா?

ப: எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு வாழ்வோர், அந்தணர். ஆடு, மாடுகளைக் கொலைசெய்து யாகம் புரியும் பார்ப்பனர்க்கு அப்பெயர் பொருந்தாதே!

**கு. இரா. பரமசிவன், காரமடை.**

கே: தி.மு.க. வின் கொள்கைப்படி சாத்தியப்பட்ட அளவுக்குக்கூட நடக்காதவன் அதிலே உறுப்பினனாக இருப்பது கட்சிக்கு துரோகமல்லவா?

ப: கட்சிக்குத் துரோகம் மட்டுமல்ல; கொள்கைக்குத் துரோகம்; இனத்துக்குத் துரோகம்; தனது முன்னேற்றத்திற்கும் துரோகம் புரிவதாகும்!

* * *

கே:- எம். ஆர். ராதா, டி. கே. எஸ். சகோதரர்கள், நவாப் ராஜமாணிக்கம் இவர்களில், நாடக சேவையில் சிறந்தோர்—பகுத்தறிவு உலகின் பாராட்டுதலைப் பெறுபவர் யார்?

ப: நடிகவேள். எம். ஆர். ராதாவைக் கூறலாம்; டி. கே. எஸ். சகோதரர்களையும் சேர்க்கலாம். நவாப் ராசமாணிக்கம் நாடகமா நடத்துகிறார்? அவர் கம்பெனியே, மதுரை ஸ்ரீதேவி பாலவிநோத சங்கீத சபை தானே!

**இல இரா. மெய்யழகன், துளசப்பட்டி.**

கே: ஆண்டவன் ஒருவனே பெரியவன், அவனுக்கே எல்லாம் தெரியும் என்கிறார்களே; உண்மையா?

ப: கிடையாது. தன்பெண்டாட்டியின் கழுத்துத்தாலியை அறுப்பவனைத் தடுக்கவோ, பிடிக்கவோ மட்டுமல்ல; இன்னாரெனத் தெரிந்து போலீசுக்குத் தகவல் கொடுக்கவும் முடியாதவனே, ஆண்டவன்.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்திய உபகண்டத்திற்கு "பாரதம்" என்று பெயரிட்டு அதனைப் பிடிவாதமாக அமலாக்க முயன்றுவரும் காங்கிரஸ்காரர்களுக்கும், கிருஷ்ணனைக் கடவுளென்று வழிபட்டு—விழாவெடுத்து— பஜனைபாடிப் பிழைப்பு நடத்தும் பஞ்சாங்கச் சுவடி — பஜகோவிந்தங்களுக்கும் தோழியர் லீலாவதியின் கருத்துரை தக்கதோர் அறிவு விளக்கமன்றோ?

"கோயிலுக்கு வரமாட்டேன், அங்கு என்ன கிடக்கிறது? மக்கள் பணியே இறை வணக்கம்" என்று கூறிடும் உத்தமர் வினோபா, அந்தக் கொடியவனின் கொலை நூலாம் "கீதைக்"குப் புதிய பாஷ்யம் புனைந்து, தலையிலே சுமந்து கொண்டு ஊர்சுற்றுவது கேவலமல்லவா? கொலைகாரன் புகழ் பாடுவது அறிஞர்க்கு அழகாகுமா?

பக்தசிகாமணிகளே! வைதிக விற்பனர்களே! "கிருஷ்ணன் கடவுளல்ல, கொலைகாரன்!" என்று நாங்கள் சொன்னோம்; இப்போது நல்லவர்கள் சொல்லுகிறார்கள்; நாடும் சொல்லத் தொடங்குகிறது! இனியேனும் உண்மையுணர்ந்து திருந்துவீர்களா? மூடநம்பிக்கை—முற்றடிமை விளையாட்டினை விடுவீர்களா?

—வாலி.

**பாரிஸ் அழகிகள்.**

கவர்ச்சிநிறைந்த பாரிஸ் யுவதிகளின் இயற்கை அழகை பலவித படுக்கையறைத் தோற்றத்தில் காணவல்ல 36 அசல் போட்டோ படங்கள் ரூ. 10 முன்பணம் அனுப்பினால் தபால் செலவு இலவசம். சாம்பிள்கள் கிடையாது.

வீனஸ் டிரேடிங் கம்பெனி(த ப)
தபால் பெட்டி 1693,
சென்னை-1.



# தமிழ்நாட்டுக் காங்கிரஸ் இளைஞனுக்கு!

அருமை இளைஞனே! இது எனது இரண்டாவது மடல். சிறிது சினத்தோடுதான் இருப்பாய்! பாராட்டப் போகிறேன் என்று தொடங்கினேன்; அதற்குரிய காரணங்களை விளக்குவதற்காகப் பேனாவை விரட்டினேன்; இந்தப்பாழும் பேனாவோ 'ஒரு சின்ன ஐயம்' என்று கூறி எங்கோ தடம் மாறிச் சென்று விட்டது. இப்படித்தான் நீர் எண்ணியிருக்கிறீர்! 'மாளிகை' வாசிக்கு இது சிறிது கசப்பாகத்தான் இருக்கும். இருப்பினும் எனது ஐயங்களை எடுத்துரைப்பதன் மூலமாகத்தான் உம்மைப் பாராட்டுவதற்குரிய காரணங்களைத் தெளிவாக உணர்த்த முடியும். எனவே பொறுத்தருள்க!

காங்கிரசுமருத்துவக்கல்லூரி மங்கை; எனவே மணமலர் சூடமாட்டாள்— சூடக்கூடாது என்றேன். இந்த இடத்தில் எனக்கே ஒரு சந்தேகம் எழுந்துவிட்டது! எந்தக் காங்கிரசு? தமிழ்நாட்டில் இருப்பது ஒரு காங்கிரசல்லவே! பாலை நிலத்தில் நீர்ச்சுனைகளும், பசும்புல் வெளிகளும் அங்கங்கே தென்படுவதுபோல காங்கிரசிலும் பாலைவனச் சோலைகள் இருக்கத்தான் செய்கின்றன! தமிழ்நாடு என்னும் பெயரை விரும்பித் தன் தலையைக் கொடுத்த பெருமகனைக் காங்கிரஸ்காரன் அல்லவென்று கூற, கதர் அணிந்த காங்கிரசுள்ளும் ஆளில்லை! இதெல்லாம் கிடக்கட்டும். நீ எத்தகையவன்? நீ சார்ந்திருக்கும் காங்கிரசு எத்தகையது என்பதுதான் யாவருமறிந்தது—நாடே சிரிப்பது! மலர்மணத்தால் மருத்துவத்திற்குக் குந்தகம் நேரும் என்றெண்ணும் மங்கையைப்போலத் தமிழ்நாடு என்னும் பெயரைச் சொன்னாலே தன் ஆட்சி முழுகிவிடும் எனக் கருதும் பச்சைத்தமிழன் காங்கிரசு! ஆனால் நீ—உனது உள்ளம்—அது, 'தமிழ்நாடு' என்னும் பெயரைப் பொறுத்தமட்டிலேனும் எத்தகையது?

நீ சார்ந்துள்ள காங்கிரசைக் குறித்துச் சிறிது பார்த்தபின்னர், இதற்கு வருவோம். 'வீரமுழக்கம்' செய்யும் இளவலே! அணிமையில் ஒருவர் செத்துப் போனார் என்பது உனக்குத் தெரியுமா? 'ஒழியட்டும்—கூட்டத்தில் ஒன்று குறைந்தது' என்கிறாயா? காய்ந்த மரத்திலும் துளிரில் சிறிது பசுமையிருக்கக் கண்டிருக்கிறேன். எனவே உன்னிடத்திலும் சிறிது இரக்கத்தை எதிர்பார்க்கிறேன்!

தள்ளாத வயதில் உண்ணாநோன்பை மேற்கொண்டு இந்தத் தமிழினமும் நாடும் பீடுறுவதை நாடி உயிர்நீத்த அந்த ஆண்மையாளனை எண்ணிப்பார்! தமிழ்நாடு என்னும் இனியபண் தன் சப்பை வாயிலே தவழ வேண்டும்—தன் பேரப்பிள்ளைகளின் மழலையிலே தத்த வேண்டும் என்பதைக் குறிக்கொண்டு உயிர்நீத்த அப் புனிதனைச் சிறிதே நினை! வயது ஆக ஆக உயிர்மேல் ஆசை வளரும்! உலகியலிலே காணத் தவறியிருப்பினும் உளவியல் ஏட்டிலேனும் இதை அறிந்திருப்பாய். இளைஞன் ஒருவன் இளமை உணர்வால் உந்தப்பட்டு இத்தகு செயலில் உயிர்கொடுப்பது எளிது! வீரன் வடக்கிருத்தல் பழந்தமிழகத்தில் மிகச் சாதாரண ஒன்று. ஆனால், வயதான ஒருவர்—தொண்டு கிழவர்—கொள்கைக்காக உடலை வதைத்து மடிகிறார் என்றால், அவன் பெருமைக்கு அளவுகோல் ஏது!! எனக்குத் தெரிந்த அளவில் தமிழில் 'அண்ணல்' என்ற சொல்லால் இவரை அழைக்கலாம்.

இவ்வளவுக்குப் பிறகும் அசையப் போவதில்லை உன் காங்கிரஸ்! எதற்குமே அசையாது—காரணம்? பசையற்று விட்டது! இந்த 'வறட்சி'யை மங்கையுடன் உவமித்துக் கூறுவது கூட அவ்வளவு பொருத்தமானதல்ல! அந்தச் சொல்லே கறைப்பட்டுவிடும்! அதைவிடக் காங்கிரசை, பல்விழுந்து, உடல் கூனி, நரைத்த முதுகிழவிக்கு ஒப்பிடலாம்—அவளும் விதவைக் கிழவி—வெறும் விதவைமட்டுமல்ல, நாதியற்றவள்! அவளுக்கு வாழ்வும் ஒரு கேடா? இப்படித்தான் நீ காங்கிரசைப்பற்றி கருதியிருக்கிறாய்!

'சுத்த அபாண்டம்! என் அருமைக் காங்கிரசுக்கும் எனக்கும் கலகமூட்டும் நாரதப் பேச்சு இது! அவள் வாழ்வையே நான் குறியாகக் கொண்டிருக்கிறேன் என்பதை நீயே முதலில் ஒப்புக் கொண்டுவிட்டு, நான் வேறுவிதமாக நினைப்பதாகக் கூறுகிறாயே; இது அடுக்குமா?' என்றாய்; விளக்கமாக மொழிந்து விடுகிறேன்.

தமிழ்நாடு என்ற பெயரை நீ விரும்புகிறாய்; தமிழ்நாடு காங்கிரசு மாநாடு என்ற தொடரை மட்டும் வைத்துக் கொண்டு நான் இந்த முடிவுக்கு வந்துவிடவில்லை. சென்ற ஆண்டு மாநிலத் திருத்தமைப்புக் குழுவின் அறிக்கை வெளியானபோது, சென்னை மாணவர் ஒருநாள் மறியல் நடத்தினர். மறியலுக்கான காரணங்களில், தமிழ்நாடு என்ற பெயர் சென்னை மாநிலத்திற்குச் சூடப்பட வேண்டும் என்பது சிறப்பான ஒன்று. அம்மறியலில் கலந்து கொண்டவர்களுள் நீயும் ஒருவன்! கட்சி வேறுபாட்டால் அன்று கடற்கரைக் கூட்டத்தில் நம்மிடையே சிறிது பூசல் ஏற்பட்டது. இன்னும் உன் நினைவைவிட்டு அகன்றிருக்க முடியாது. எனவே தமிழ்நாடு என்னும் சொல் எனக்கு இனிப்பதுபோல் உனக்கும் இனிக்கிறது என்றுதானே நான் கருத முடியும்?

ஆனால், சேலத்தில் நீ உன் விருப்பத்தைத் தெரிவிக்கவில்லை! இது எதைக் காட்டுகிறது? 'கிழவியைப் போய் மலரணியச் சொல்வதா!' என நாணியிருக்கிறாய் என்பதைத்தான் காட்டுகிறது. திக்கற்ற விதவைக் கிழவியிடம் அவ்வாறு பேசுவது கேலிப்பேச்சாகுமே என்று கருதி, நாக்குக் கூசி ஊமையாகி விட்டாய்! மணம் நின் மூக்கைத் துளைக்கிறது; காங்கிரசின் பரிதாப நிலையோ அவள் மீது கழிவிரக்கம் கொள்ளச் செய்கிறது!

இந்த இக்கட்டான நிலையில், சிக்கலைக் கதவுகளுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, மாநாட்டைக் கூட்டினாயே அந்தத் துணிச்சலைப் பாராட்ட வேண்டும். ஐம்புலனையும் அவித்துச் செயலாற்றிய நின் மாவீரத்தை நெஞ்சால் நினைந்து எழுத்தால் வழுத்துகிறேன். பிறகு சந்திப்போம். வணக்கம்.

"இளந்தமிழன்"

# 1-11-56

முதல்

தென்னாடெங்கும்

★

மாடர்ன் தியேட்டர்ஸின்
மகத்தான திரைச்சித்திரம்

★




# ★ பாசவலை ★




M. K. ராதா, G. வரலட்சுமி,
M. N. ராஜம், E. V. சரோஜா,
கருணாநிதி, V. K. ராமசாமி

முதலியோர் நடித்தது.

★

டைரெக்ஷன்: A. S. நாகராஜன்.

சங்கீத அமைப்பு: விஸ்வநாதன் & ராமமூர்த்தி.

வசனம்: ப. கண்ணன்.


சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்–1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.




# பகுத்தறிவு

கழக வார இதழ் — ஆசிரியர்:- ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 9-11-56. ★ விலை அணா ஒன்று. | இதழ் 19


# கல்யாணம் செய்வோர் காமாந்தகர்களா?

"தி.மு.க. வினர்க்கு என்ன திறமை இருக்கிறது, சட்டசபைக்குப் போக" என்று கேட்கிறார்கள். திறமை இருப்பதும் இல்லாததும் அங்குபோன பிறகல்லவா தெரியும்? காங்கிரஸ்காரர்களுடைய திறமையைத்தான் பார்க்கிறீர்களே! பந்த் உள்நாட்டு மந்திரியாக இருக்கிற காலத்தில் நாக காட்டில் தொடங்கி, தமிழ்நாடுவரை துப்பாக்கி வெடித்துக் கொண்டேயிருக்கது! இரத்த வெறியன் என்று தூற்றப்பட்ட டயர் கூட 1700 ரவுண்டுகள்தான் சுட்டான். பம்பாயிலோ 2500 ரவுண்டுகள் சுடப்பட்டன. ரேடியோவுக்கு ஒரு மந்திரி! ஆனால், யாருமே உள்நாட்டு ரேடியோவைக் கேட்பதில்லை. சிலோன் ரேடியோவைத்தான் கேட்கிறார்கள், கலயாணமான பெண் பக்கத்து வீட்டைப் பார்க்கிறாளென்றால், அது கணவனுடைய திறமையின்மையைத்தானே காட்டுகிறது? சுதந்திரம் வந்ததற்குப் பின் வருடத்திற்கு இரண்டு இரயில்கள் கவிழ்ந்து கொண்டே இருக்கின்றன. யார் யாரைப் பார்த்து திறமையற்றவர்களென்று சொல்வது?

"பதவிப் பித்தர்கள்! அதனால்தான் தேர்தலில் நிற்கிறார்கள்"—இப்படி ஒரு கூக்குரல். சட்டசபைக்குப் போவதாலேயே பதவி கிடைத்துவிடாது. சட்டசபையில் பதவி ஒரு பகுதி! கல்யாணம் செய்து கொள்பவர்களெல்லாம் காமாந்தகாரர்களா? 'அது' கல்யாணத்தில் ஒரு பகுதி. இவனுக்கு அது புரியாது. எப்படியாவது காமராஜர் மந்திரியாக வர வேண்டும். இவர்கள் அவரை மந்திரியாக்க முடியுமா? காமராஜர் காங்கிரஸ் கட்சிக்குக் கட்டுப்பட்டவர். காங்கிரஸ் கட்சி தீர்மானித்தால் அவர் தேர்தலிலேயே நிற்கமுடியாது. அவர் மந்திரியாக வர நாம் அங்கு போகக்கூடாதாம்! ஏன்? அவர்களுடைய அரசியலறிவு அவ்வளவுதான்!

"தேவிகுளம், பீர்மேடு" என்ன ஆயிற்று" என்று கேட்டால், "மேடாவது, குளமாவது! அது இங்கிருந்தாலென்ன, அங்கிருந்தாலென்ன?" என்கிறார் காமராஜர். தேர்தலில் நின்று ஓட்டு கேட்க வரும்போது அப்படிச் சொல்லிப் பார்க்கட்டும். "ஓட்டாவது, சீட்டாவது! நீங்கள் சட்டசபைக்குள்ளிருந்தாலென்ன, வெளியிலிருந்தாலென்ன?" என்றல்லவா மக்கள் சொல்லுவார்கள்!

திராவிடக் கழகத் தோழர்கள் 'மேலே'யிருப்பவர்களைப் பார்த்து ஏமாந்துவிட வேண்டாம். அரசியலில் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தித்தான் ஆகவேண்டும்.

நள்ளிரவில் ஒரு தெருவில் திருடன் நுழைந்து விடுகிறான் "திருடன், திருடன்" என்று கூக்குரல் கிளம்புகிறது. எல்லோரும் தத்தமது வீட்டிலிருந்து கதவைத் திறந்துகொண்டு ஓடிவருகிறார்கள். திருடனையும் அடித்து விரட்டி விடுகிறார்கள். பிறகு அவனவன் தத்தமது வீட்டிற்குப் போவதுதானே நியாயம்? அப்படியில்லாமல் ஒருவன் வேறொருவனுடைய வீட்டிற்குள் புகுந்தால் இவனல்லவா திருடன்! அதைப்போலத்தான் வெள்ளையனை விரட்டிய பின்பு, வடநாட்டுக்காரன் இங்கு வந்து உட்கார்ந்து கொண்டான்.

'சோறு பெரிதா, மானம் பெரிதா' என்று கம்யூனிஸ்ட் தோழர்கள் கேட்கிறார்கள். சோறு உருவமுள்ளது; மானம்

(10-ம் பக்கம் பார்க்க)

# சிவாஜியும், சிவஞானமும்.

சேரலாதன்.

## கி. பி. 1665.

"என்னைப் பெற்றெடுத்த இத் தாய்த் திருநாடு, பேயர்களின் பிடியி லிருப்பதா? நான் உரிமையோடு தவழ்ந்து விளையாடிய மண்ணிலே அடிமையாக வாழ்வதா? அவமானம், அவமானம்! முகலாயர்கள் நம்மை ஆளுவது நமக்கெல்லாம் பொருந்த அவமானம்! நாமென்ன சாவுக்கஞ்சும் சமுதாயமா, சமருக்கஞ்ச? சோலையிலே தென்றலிலே சொகுசு! பின்னர்சொந்த நாட்டைக் காப்பாற்ற சுழற்றுங்கள் வாளை! வாழ்ந்தால் விடுதலைபெற்று வாழ்வோம். இல்லையேல், விடுதலை பெறுவதற்காகச் சாவோம். மராத்திய இனத்தை மாற்றான் ஆளுவதா?நாமெல்லாம் மாளுவதா? வெட்கமில்லையா? கட்கமேந்தி புறப்படுங்கள்! கபோதிகளை ஒழிப்போம!" என்று சீறியெழுந்தான் சிவாஜி யெனும் மாவீரன்—மராத்திய வீரன்! ஆயிரக்கணக்கான அடலேறுகள் அவன் அடியைப் பின்பற்றினர். நூற்றுக்கணக்கான கோட்டைகளைக் கைப்பற்றினர்.

அவற்றில் ஒன்று பூனா மாவட்டத்தி லிருந்த **புரந்தர் கோட்டை!**

புரந்தர்கோட்டை சிவாஜியின் கைக்குவந்த சின்னாட்களுக்குப் பிறகு—

திடீரென்று ஒருநாள் அந்தக் கோட்டையைக் கைப்பற்ற முகலாயப் படை திரண்டு வந்தது. படையை நடத்தி வந்தான் **ஜெய்சிங்** என்ற ராஜபுத்திர வீரன். மராத்திய வீரர்களும் சினந்தெழுந்தனர்.

படையோடு படை கலந்தன. ஆட்களோடு ஆட்கள் மோதினர்; வாட்களோடு வாட்கள் மோதின! தலைகள் தெறித்து விழுந்தன இரத்தச்சேற்றில், பலம்பொருந்திய முகலாயப் படையுடன் அதிக நேரம் போரிட மராத்திய வீரர்களால் இயலவில்லை. விரைவிலே, புரந்தர் நகரின் இரட்டைக் கோட்டைகளுள் கீழ்க்கோட்டை ஜெய்சிங்கிற்குப் பணிந்தது.

அடுத்து, சுற்றுப்புறத்தைக் கொள்ளையடிக்க ஆர்த்தனர் முகலாய வீரர்கள். **முரார் பாஜி பிரபு** உட்பட பெயர்பெற்ற பெரும் வீரர்கள் பலரை மராத்தியப் படை இழந்து விட்டது. மராத்திய மக்களையர் பலர் கோட்டைக்குள்ளிருந்தனர். அவர்களெல்லாம் மாற்றார் கையில் சிக்கினால்...... மானமிழந்து, உயிரிழந்து......அப்பப்பா! எவ்வளவு கொடுமைக்கு ஆளாவர்!

சிந்தித்தான் சிவாஜி! அந்த சிந்தனையின் முடிவு **புரந்தர் உடன்படிக்கை!** அந்த உடன்படிக்கையின் விளைவு, புரந்தர் கோட்டை உட்பட சிவாஜிக்குக் கீழ்ப்படிந்திருந்த பல கோட்டைகள் ஜெய்சிங்கிற்குக் கிடைத்தன. அன்றிருந்த முகலாயப் பேரரசன் ஔரங்கசீப்பினிடம், சொல்லி சிவாஜியைத் தக்கணத்திற்குத் தலைவனுக்கு வதாகவும் வாக்களித்தான் ஜெய்சிங். மன்னனைச் சந்திக்க வழி செய்வதாகவும் கூறினன். இது நடந்தது 1665-ல்!

அடுத்த ஆண்டு—1666-ல், ஜெய்சிங்கின் அழைப்பின் பேரில், சிவாஜி தனது மகன் சாம்பாஜியுடன் ஔரங்சீப்பை சந்திக்க ஆக்ரா நகருக்குச் சென்றான். அங்கு அவனை எதிர்நோக்கி வரவேற்பும், தக்கணத்தின் தலைமைப் பதவியும் காத்திருக்கவில்லை; அவமதிப்பும், சிறைக்காவலும் இருந்தன.

> ## வாய்வு சூரணம்.
>
> உஷ்ண வாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, பித்த வாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீரணம், புளியேப்பம், கைகால் அசதி,பசியின்மை, செறியாமை, வயிற்றுவலி, பித்த மயக்கம், பித்தசூலை, சோம்பல் முதலான வாய்வு ரோகங்களை அறவே நீக்கி நல்ல பசி எடுப்பதற்கும், தேகாரோக்கியத்துக்கும் மிகச் சிறந்த சூரணம். மூலிகைகளினால் தயாரிக்கப் பெற்றது (பத்தியமில்லை)
>
> **5-பலம் டின் ரூ 3—0—0**
>
> **சம்பு இண்டஸ்ட்ரீஸ்,**
>
> **சேலம்-2.**

ஜெய்சிங்கின் அரசியல் தந்திரம் சிவாஜியை சிறைப்படுத்தி விட்டது! பிறகு, சிவாஜி தப்பிவிட்டபோதிலும், அரசியல் உலகத்தில் அன்று முதல் நடைபெற்றுவரும் தந்திரங்களும், மோசடிகளும் இன்றுவரை குறைந்தபாடில்லையே!

## கி. பி. 1956.

"தமிழ்நாடு தமிழருக்கே!
தமிழ்ப் பகுதிகளை தமிழகத்
துடனே சேர்!
சித்தூர், திருத்தணி தமிழ்நாட்டுக்கே!"

இப்படிப்பட்ட முழக்கங்கள் சில நாட்களுக்கு முன்பு தமிழ் நாட்டிலே கேட்டன. **திரு. ம. பொ. சிவஞானத்தின்** தலைமையிலே நூற்றுக்கணக்கான தமிழரசுக் கழகத் தோழர்கள் **வடஎல்லைப் போராட்டத்தில்** கலந்துகொண்டு சிறை புகுந்தனர். சட்டசபைக்கு முன்பும், அஞ்சல் நிலையங்களுக்கு முன்பும் மறியல்! இரயில்கள் நிறுத்தப்பட்டன! மானங்கெட்ட மந்திகள் போன இடங்களிலெல்லாம் கருப்புக் கொடிகள்! பலன்? "மண்டல சபை வந்துதான் எல்லைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும். அதற்காக எல்லைக் கமிஷன் அமைக்கமுடியாது" என்று அதிகார போதையில் டெல்லி சொன்ன ஆணவமான பதில்தான்!

ஆனாலும், போராட்டம் நிறுத்தப்பட்டு விட்டது. ஏன்? ஏன்? ஏன்?

"எல்லைப் பிரச்சினை பற்றிப் பண்டித நேருடன் சிவஞானம் பேசி, ஒரு முடிவுக்குவர வழி செய்கிறேன்" என்று சொல்லி விட்டாராம அமைச்சர் சுப்ரமணியனார்!

"இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் தமிழ்நாட்டுக்கு அதிக தொகை ஒதுக்க வேண்டுமென்று டெல்லியிடம் வாதாடப் போகிறேன்; சென்னை மாகிலத்திற்குத் தமிழ் நாடு என்று பெயர் வைப்பதற்கு டெல்லியிடம் சண்டையிடப் போகிறேன்; தேவிகுளம்—பீருமேடு தமிழ்நாட்டுடன் சேராவிட்டால் கேரளாவையே ஒருகை பார்க்கிறேன்" என்ற அளவுக்குப் பேசிக் குதித்த வாய்விச்சுக்காரரல்லவா இந்த நிதி அமைச்சர்? இவர் சொன்னார் என்பதற்காகவா

[9-ம் பக்கம் பார்க்க]



## எதிரொலி

என்னுடைய கஷ்டங்களை எடுத்துச் சொல்லி, கதா காலட்சேபம் செய்வேன்.

—மந்திரி, சுப்ரமணியம்.

ஆச்சாரியாரின் சீடரென்றால், அந்த வழியில்தானே போகவேண்டும்?

*   *   *

சேலத்தில், கிருஷ்ணலீலா நாடகம் பார்த்தவருக்கு மயக்க மருந்து

—செய்தி

மயக்க மருந்தால் பணமும், மோதிரமும் பறிகொடுத்தார்; நாடக மருந்தால் நல்லறிவைப் பறிகொடுத்தாரோ?

*   *   *

கர்நாடக இசையைக் கலப்படமாக்க டெல்லியார் முயற்சி.

—செய்தி

கோதுமையும், நெல்லும் சேர்த்து பயிரிட்டால்,கோதுமையும் இருக்காது, நெல்லும் கிடைக்காதே!

*   *   *

கடப்பை மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் நாத்திக முன்னணியினர் போட்டியிடுவர்.

—செய்தி.

எதிர்ப் பிரசாரத்திற்கு ஆண்டவர்களே பிரசன்னமாகக் கோரி பக்தர்கள் யாகம் செய்யலாமே!

*   *   *

திராவிடக் கழகம் தேர்தலில் போட்டியிடாததற்குக் காரணம் என்மேலுள்ள பிரியமல்ல; தோற்பது நிச்சயம் என்ற பயம்தான்!

—முதலமைச்சர் காமராஜர்

இந்தத் தாக்குதலையுங்கூட "பச்சைத் தமிழரின் ராஜ தந்திரம்" என்று பாராட்ட முடியுமே "குத்தூசி"யால்! சீடர்கள்தான் சிந்திக்கக்கூடாதே!

*   *   *

குழந்தைகளே! வால்மீகி ராமாயணத்தைப் படியுங்கள்; ராமனாகவும், சீதையாகவும் ஆக முயலுங்கள்.

—சுவாமி சிவானந்தர்.

குசன்தான் ராவணன் மகன், லவன் யாருடைய பிள்ளையென்று கேட்காதீர்கள்! அது ராமனுக்கே புரியாமல்தான் விபசாரி யென்று நெருப்பில் தள்ளினான் சீதையை!

# தேர்தல் நிதி தாரீர்!

கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே! பொதுமக்களே! பொதுத் தேர்தல் நெருங்குகிறது! மிக விரைவாக நெருங்கிக் கொண்டிருக்கிறது! பொதுத் தேர்தலில் ஈடுபடுதலாகிய மக்களாட்சி முறைமையைத் தூய உள்ளத்தோடும், நேரிய செயல் முறையோடும் நிறைவேற்றுவதென்று திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்திருப்பதை எல்லோரும் நன்கு அறிவீர்கள்! அடுத்துவரும் பொதுத் தேர்தலில், 150 தொகுதிகளில் தி. மு. கழகம் போட்டியிட வாய்ப்பு இருக்கிறதென்று,நாடெங்கும் சுற்றி விபரம் அறிந்துள்ள தேர்தல் ஆய்வுக் குழு, சுவையான செய்தியைத் தந்துள்ளது. இந்தச் சுவையான செய்தியைச் செயலாக்கிக் காட்ட, இலட்சக்கணக்கிலே பொருள் தேவைப்படுகிறது. கழகத் தோழர்கள் தேர்தல் களத்திலே வீறுநடை போட்டு வெற்றிஉலா வரவேண்டுமானால்,தொகுதி தோறும் செய்யப்படவேண்டிய அடிப்படை நியாயமான செலவுகளுக்கே ஆயிரக்கணக்கில் ஆகும்.

**எனவேதான், இச்சூழ்நிலையை ஆராய்ந்தறிந்த மத்திய செயற்குழு,தேர்தல் பணியை நிறைவேற்ற,குறைந்த அளவு ரூபாய் ஐந்து லட்சம் தேவையென்று மதிப்பிட்டது.**

சிறுதுளி பெருவெள்ளம்!

கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் பெருமுயற்சி எடுத்து, கைநிறைய காசுகளை அள்ளியள்ளி வழங்குவார்களேயானால், கழகம் எதிர்பார்க்கும் ரூபாய் ஐந்து இலட்சம் விரைவிலே சேர்ந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

கிளைக் கழகங்கள், ஆங்காங்கு முறைப்படி முயற்சி எடுத்து நிதி திரட்டி, திரட்டிடும் தொகையைச் சேரச்சேர அவ்வப்போது நேரே தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மாவட்டச் செயலாளர்கள், ஆங்காங்குள்ள கிளைக் கழகங்களை அவ்வப்போது தூண்டி, நிதி சேர்த்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும் பணியில் துணைபுரியுமாறு விரும்பிக் கேட்டுக் கொள்கிறோம்.

தனி அமைப்புகளும், தனிப்பட்ட தோழர்களும் தனித்தனியாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும் தேர்தல் நிதியும் நன்றியதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

**தேர்தல் நெருங்குகிறது!**
**பொறுப்பு மிகுகிறது!**
**கடமை விரைந்து செய்ய வாரீர்! வாரீர்!**

வணக்கம்

'அறிவகம்'
சென்னை-13
31-10-56

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்.

குறிப்பு:— நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:—
பொதுச்செயலாளர்—தி. மு கழகம்,
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
> —திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 9—11—56 | இதழ் 19

## தேர்தல்; விபசாரமா?

மக்களுக்காக, மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் ஆளுவதற்குத்தான் மக்களாட்சி என்று பெயர். அத்தகு மக்களாட்சி நடைபெற வாய்ப்பளிப்பதே குடியரசு—சனநாயக—முற்போக்கு அரசியல் முறையாகும்.

முடியரசு, சர்வாதிகாரம் போன்ற தனி மனித பலத்தால் மக்களை ஆட்டிமந்தைகளாக்கிக் கோலோச்சிய கொடுமையாளர்களை வீழ்த்தி, சனநாயக முறையினை மேற்கொள்ள பல நாடுகளிலே செய்யப்பட்ட கிளர்ச்சிகள், புரட்சிகள் கொஞ்சமல்ல; சிந்தின குருதி, செத்து விழுந்த பிணங்கள் குறைவல்ல!

அளவிடற்கரிய தியாகத்தின்மீது அரும்பிய சனநாயக முறையினை மேற்கொள்ளும்வாய்ப்பு இந்திய துணைக்கண்டத்திற்கு மிக எளிதாகக் கிட்டியது, சாதகமான சூழ்நிலையின் பயனாக!

ஒரு கருத்தினரை—கட்சியினரை ஆட்சி பீடத்தில் ஏற்றி வைக்கவும், இறக்கிவிடவுமான சக்தியை மக்கள் பெற்றிருப்பதும், அந்த சக்தியின் சின்னமாக வாக்குரிமை விளங்குவதும் உய்த்துணர்ந்த எவரும், அந்த வாக்குரிமையைப் பயன்படுத்தி நம்மை ஆளுவோரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலைத் தவறானதென்றோ, தீதானதென்றோ கருதமாட்டார்கள்; பேசமாட்டார்கள், எழுதமாட்டார்கள்.

இந்நாட்டு மக்கள் மக்களாக வாழவேண்டும் அத்தகைய வாழ்வுபெற முடியரசு ஒழிந்து குடியரசு தோன்றவேண்டும் என்ற லட்சியத்தோடு "குடி அரசு" பத்திரிகை நடத்தி, புதியதோர் விழிப்புணர்ச்சியினைத் தோற்றுவித்தவர் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் பெரியார் இராமசாமி அவர்களேயாவர்.

இழிநிலை போக்க சமுதாயப் புரட்சியும், புரட்சியின் பலனை அமலாக்க முற்போக்கான அரசாங்கமும் தேவையென்பதுதான் நியாயமும் கூட! ஆனால்,

7—11—56 "விடுதலை" எழுதுகிறது: "திராவிடக் கழகமோ, தேர்தலில் கலந்துகொள்ளாத, சமுதாயப் புரட்சித் தொண்டு செய்துவருகின்ற கழகம். இதைக்காணும் மற்ற அரசியல் கட்சிகளுக்குப் பொறாமை பொங்கி வழிகிறது. "நீங்களும் தேர்தலில் ஈடுபட்டுப் பாருங்கள். நிச்சயம் தோற்றுவிடுவீர்கள்" என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. மரியாதையான குடும்பப் பெண்ணை நோக்கி "நீயும் என் தொழிலில் இறங்கிப் பார்த்தால் தெரியும்" என்று வழுக்கி விழுந்த பெண் அறைகூவி அழைப்பது போலிருக்கிறது இந்தப் பேச்சு."

இவற்றிலிருந்து தேர்தல் என்பது கேவலமானவொன்று; தோல்விக்குரியது; விபசாரம் போன்ற ஈனத்தன்மை வாய்ந்தது என்ற கருத்தினைப் பெறமுடிகின்றது. முற்போக்கு நாடுகள் அறிவின் விளைவாக—தியாகத்தின் விலையாகப் பெற்றெடுத்த தேர்தல் முறையினை, இருபதாண்டுகளாக 'குடி அரசு' மூலம் பெரியார் பரப்பிய முன்னேற்றக் கருத்தினை, அரசியல் விடுதலை எண்ணங்களை இவ்வளவு கீழ்த்தரமாகவா—அயோக்கியத்தனமாகவா "விடுதலை" தாக்கிக் கிழித்து எறியவேண்டும்? திராவிடக் கழகத் தொண்டர்கள் சிந்திக்க வேண்டாமா?

'நம்மை ஆளுவோர் யார்; எக்கொள்கையுடையவர்; எத் தகுதிபடைத்தவர் நமக்குவேண்டும்; எவரால் நமக்குற்ற இழிவு நீங்கும்' என்பனவற்றை ஆராய்ந்து பார்த்து, வாக்குரிமையைப் பயன்படுத்தி ஆளுவோரை நிர்ணயிக்கும் அரியதோர் பணியினை விபசாரத்திற்கு ஒப்பிடுகிறது 'விடுதலை'! இது சரிதானா? நியாயம்தானா?

தேர்தல் தீதானது என்று கருதினால் தேர்தலை எதிர்க்கலாம்; தேர்தலே தேவையில்லையெனலாம்; முறைகளைக் கண்டிக்கலாம் அதிலே காரணமுமுண்டு. மலம் கேவலமானது என்று சொல்லிவிட்டு, அதை என் இலையிலே வை என்றல்லவா சொல்லுகிறது 'விடுதலை!'

"தேர்தல் ஒரு தீமை. ஆனால், நான் காட்டுகிற காமராசருக்கு ஓட்டுப்போடு" என்பதற்கு வேறு என்னதான் பொருள்? "தேர்தல் விபசாரம். நமக்கு வேண்டாம். என்றாலும் தொண்டர்களே! காமராசருக்காகச் செய்யுங்கள்!" என்று கட்டளையிடுகிறது 'விடுதலை'! தி. க. தொண்டர்களே! பக்தர்களே! உங்கள் பரிதாப நிலைக்கு வருந்துகிறேன்.

—ப. கண்ணன்.



# நந்திவர்மன்



ப.கண்ணன்

[முன் இதழ் தொடர்ச்சி]

வித்யா:- (பதைத்து) ஆ! சண்டாளா! ஒவியனா நீ? சாளுக்கிய நாட்டின் ஒற்றன்! பல்லவர் ஆட்சியைக் கவிழ்க்கவந்த அரசியல் கொலைகாரன்.

மைத்:- யார் சொன்னது?

வித்யா:- இதோ, இந்த ஓலை.

(விட்டெறிகிறாள். பரபரப்போடு எடுத்துப் பார்த்து)

மைத்:- இதைக் கொண்டுவந்தது யார்?

வித்யா:- ஒரு சாளுக்கியன். சாகக் கிடக்கிறான் கொல்லைப்புறத்தில். வஞ்சகப்பேயே! இந்தப் பழிபாவத்திற்காகவா நீ, என் வீட்டில் குடியேறினாய்?

மைத்:- (சிரித்து) பைத்தியக்காரி! தோட்டிக்கு கண் பிணத்தில்! தாசிக்குக் கண் தனத்தில்! தேடிவரும் வாழ்வைத் தீதென ஒதுக்கிடும் வேசியுமுண்டோ?

வித்யா:- வாழ்வு! வஞ்சகத்தின் அணைப்பிலே வாழ்வா கிடைக்கும்? நரகம் கிடைக்குமென்று சொல்! நான் தாசியாக இருக்கலாம்; உன்போல் செய்நன்றி மறக்கும் துரோகியல்ல!

மைத்:- குருவையே மிஞ்சுகிறாயே! (சிரித்து) பேதையே! எலியைக் கொல்வது பூனையின் துரோகமல்ல; அதன் இயற்கை!

வித்யா:- ருத்ராட்சப் பூனையே! உன் இயற்கையறியாமல் இத்தனை நாள் ஏமாந்துவிட்டேன். மன்னன் நந்திவர்மன், இளையவர் சந்திரவர்மன்; இருவரையும் வஞ்சகமாய் மாய்த்துவிட்டு, காஞ்சியிலே சாளுக்கிய ராஜ்யம் நிறுவவந்த சதிகாரா! உன் எண்ணம் ஈடேற நான் விடப் போவதில்லை.

மைத்:- முடியாது பெண்ணே; முடியாது! ஈசனே வந்தாலும் அது முடியாது! காரியம் மிஞ்சி விட்டது. குருக்கோட்டைப் போர்முனையில் நந்திவர்மன் கொல்லப்பட்டிருப்பான். சந்திரவர்மன் இங்கு புதைக்கப்பட வேண்டியவன்! அதற்கு நீ உடன்பட்டே யாகவேண்டும்.

வித்யா:- ஒருக்காலும் முடியாது.

மைத்:- வெண்ணை திரளும் போது தாழியை உடைக்காதே! என் விருப்பம்போல் நடந்தால், நீ அரண்மனை நாட்டியக்காரி! அந்தஸ்தில் உயர்வு! பரிசு கொஞ்சமல்ல! ஆயிரம் பொற்காசுகள்!

வித்யா:- தூ! உன் பொற்காசு, என் கால் தூசு! என் காதலருக்குத் துளியளவும் துரோகம் செய்யமாட்டேன்.

மைத்:- காதலர்! நானில்லாமல் எங்கேயடி வந்துவிட்டார் காதலர்? உங்களைச் சேர்த்து வைத்தவன், பஞ்சு மெத்தையிலே கொஞ்சிக் குலாவிட வாய்ப்பளித்தவன் நான். என் சொல்லையா மறுக்கிறாய்?

வித்யா:- மறுப்பது மட்டுமல்ல. உம்மை அடியோடு வெறுக்கிறேன்.

மைத்:- பல்லாண்டு முயற்சியிலே கட்டி முடித்த கோட்டையடி. பாவி! தகர்த்து விடாதே! தவிட்டுபொடியாகி விடுவாய்!

வித்யா:- நான் கொலையுண்டாலும் சரி; கொலைகாரியாக மாட்டேன்.

மைத்:- (தணிந்து) முல்லை! நல்ல சந்தர்ப்பம். சந்திரவர்மனைக் கொலை செய்ய வேண்டாம். சிறிதுநாள் உன் வீட்டிலே சிறைப்படுத்தவாவது உதவு. மன்றாடிக் கேட்கிறேன்.

வித்யா:- அற்பனே! யார் யாரைச் சிறைப் படுத்துவது? சற்று பொறு; வருகிறேன்.

(வெளியே போக முயல, வழிமறித்து)

மைத்:- (கடுமையாக) நில்! எங்கே போகிறாய்? (அங்கிருந்த வாளெடுத்து) கள்ளி! ஒரு அடி எடுத்து வைத்தாய், உயிரைக் குடித்துவிடும் இந்த வாள்! இரண்டில் ஒன்று; என்

சொற்படி நடக்கப் போகின்றாயா? இல்லை, மடியப் போகின்றாயா?

வித்யா:- காதலனுக்குச் சிறை; தாயகத்திற்குத் துரோகம்; என்னைச் சித்ரவதையே புரிந்தாலும் இதற்கு ஒப்பமாட்டேன்.

மைத்:- பீடையே, ஒழிந்துபோ!

(வாளை வீச, அவள் லாகவமாகக் குனிந்து தப்புகிறாள். மீண்டும் வீச வாசற்படியின் வெளியிலிருந்து வாளொன்று மோதித் தடுக்கிறது. வாளால் மைத்ரேயனைத் தள்ளியவண்ணம் சந்திரவர்மன் உள்ளே வருகிறான்)

சந்தி:- (சினந்து) பெண் கொலை புரியத் துணிந்த பேயனே! என்ன, விபரீதத்தோடு விளையாடுகின்றாய்?

மைத்:- நல்ல சமயத்திலே வந்தாய்! நடந்ததென்ன தெரியுமா?

(வித்யாவதி, சாமர்த்தியமாக மைத்ரேயன் கையிலிருந்த ஓலையைப் பிடுங்குகிறாள்)

வித்யா:- (படபடத்து) ஐயோ! ஒலியனை நடித்த ஒற்றன் இவன்! தங்களைச் சாய்க்கவந்த சதிகாரன்! ஐயையோ! கொல்லுங்கள் இந்த நல்ல பாம்பை! கொல்லுங்கள்!

சந்தி:- வித்யாவதி எல்லாம் தெரியும் எனக்கு. ஒற்றனைத் தப்பவிடாது என் வாள்!

மைத்:- உங்களை வாழவிட்டு, நான் வாழ உத்தேசமில்லை. எனது கடைசி முயற்சி, கடைசி மூச்சாக முடிந்தாலும் சரி. இசைப் புலவரே! ...

சந்தி:- சதிகார சைத்ரிகரே! உம்.... வாய் வீச்சு வேண்டாம். காட்டு உன் வாள் வீச்சை!

(இருவர்க்கும் வாட்போர் நடக்கிறது. மார்பில் குத்துண்டு சாய்கிறான் மைத்ரேயன்)

மைத்:- ஆ!.... ஐயோ!.... தைலபா....(மடிதல்)

வித்யா:- சுவாமி! கலைவளர்க்க வந்தவனல்ல மைத்ரேயன். கலகம் வளர்த்து, பல்லவ அரசபரம்பரையை அழிக்கவந்தவன். சாளுக்கிய மன்னனின் சதிக் கருவி. பாருங்கள் இந்த ரகசிய ஓலையை!

சந்தி:- (வாங்கிப் பார்த்து) ஆ! எவ்வளவு மடத்தனமாக ஏமாந்திருக்கிறேன்! வித்யாவதி! எப்படியோ நயவஞ்சனிடமிருந்து நான் தப்பினேன்.

வித்யா:- மன்னவர் நிலை? ஐயோ! போர் முனையில் என்ன பொல்லாங்கு நேர்ந்ததோ தெரியவில்லையே!

சந்தி:- (சிந்தனையோடு) போர்முனையில்.......! போர்முனையில்.......! மைத்ரேயன் ஏற்பாட்டின்படி, மன்னவர் அங்கே மடிந்திருந்தால்.. இங்கு ஆட்சியில் அமரவேண்டியவன் நான்தானே?.... ஆ!.... நல்லதொரு சந்தர்ப்பம் வாய்த்தது நான் மன்னனாக! இப்பொழுதே மகாராணியிடம் செல்வேன்; இந்த ஓலையைக் காட்டி, மைத்ரேயன் மரணத்தைக் காட்டி, எனது ராஜ பக்தியை உறுதிப்படுத்திக் கொள்வேன்.

வித்யா:- (மகிழ்ந்து) அம்மாடி!.... உள்ளம் திருந்தினீர்களா என் சுவாமி? துரோகம் என்றைக்கிருந்தாலும்....

சந்தி:- வெல்லாது என்கிறாய்! பொறு வித்யாவதி; பிறகு வந்து சொல்லுகிறேன்.

(வேகமாக செல்கிறான்)

## காட்சி 13.

(அரண்மனை, ஆலோசனை மண்டபம். இராணி சங்காதேவியும், அமைச்சர் சீலாதித்தரும் இருக்கின்றனர்)

சங்கா:- மன்னரில்லாத வேளையிலே மாபெரும் இங்கு! அமைச்சரே! பாண்டியன் சீவல்லபன், நம்மீது போர்தொடுக்கவேண்டிய காரணம்?

சீலாதி:- ஏதுமே கிடையாது. இது சந்திரவர்மரின் சதித்திட்டம்.

சங்கா:- ஆதாரம்?

சீலாதி:- இதோ, நமது ஒற்றர்கள் பாண்டிய வீரனிடமிருந்து கைப்பற்றிய முடங்கல். (கொடுக்க)

சங்கா:- (வாங்கிப்படித்தல்) காஞ்சி இளவல் சந்திரவர்ம பல்லவர்க்கு வணக்கம். யாவுமறிந்தோம். உமது சகோதரன் நந்திவர்மனை வீழ்த்தவும், உம்மை அரியாசனத்து ஏற்றவும் நமது படை புறப்பட்டு விட்டது. வரும் மதியத்தன்று பெண்ணையாற்றங்கரையிலே தங்கும். மற்ற காரியங்கட்கு படைத்தலைவன் எல்லப்ப நம்பியோடு தொடர்பு கொள்ளவும்.

இங்ஙனம், பாண்டிய மன்னன்,
சீவல்லப தேவன்.

(பதறி) துரோகம் அமைச்சரே! மாபெரும் துரோகம்! அண்ணனைக் கொல்வது; ஆட்சியைக் கைப்பற்றுவதாம். எண்ணக் குலைநடுங்கும் ஈனத்தனம்! எப்படித்தான் துணிந்தார்? அன்பு பெரிதென்றேன் அன்றொருநாள்; பரம்பரைக்குப் பங்கமென்றாரே சந்திரவர்மன்; பல்லவ பரம்பரைக்குப் புகழ் சேர்க்கும் காரியமா இது? அடுக்குமா இந்த அநியாயம்? சந்திரவர்மன், பல்லவர்குடியிலே ஒரு பாபி! (வளரும்)



# நவம்பர் 11:
## தமிழக அமைப்பு நாள் விழா.

அகத்தீசுவரம், தோவாளை, விளவங்கோடு, கல்குளம் ஆகிய நாஞ்சில் பகுதியைச் சார்ந்த நான்கு வட்டங்களும், செங்கோட்டை வட்டத்தில் ஒரு பகுதியும், நவம்பர் முதல் நாளிலிருந்து தமிழ் மாநிலத்துடன் இணைந்துள்ளதை வரவேற்று மகிழவும், செங்கோட்டை வட்டத்தின் பிற பகுதியையும், தேவிகுளம், பீருமேடு, நெய்யாற்றின் கரை, சொச்சி–சித்தூர், பாலக்காடு ஆகிய வட்டங்களிலுள்ள தமிழ்ப் பகுதிகளையும், ஆந்திராவின் சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளையும், தமிழ் மாநிலத்தோடு இணைக்கும்படி மத்திய மாநில அரசியலாரை வற்புறுத்தவும், நவம்பர் திங்கள் 11-ம் நாள் ஞாயிற்றுக்கிழமையை தமிழக அமைப்பு நாள், விழாவாகக் கொண்டாடும்படி நாடெங்கிலுமுள்ள திராவிட முன்னேற்ற கழகக் கிளைகளையும், ஆதரவாளர்களையும், பொதுமக்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நவம்பர் 2-ம் நாளன்று நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் சார்பில் நாகர்கோவிலில் நடைபெற்ற இணைப்பு விழாவில் நான் கலந்து கொண்டு நம் கழகச் சார்பிலும், தமிழ் மக்கள் சார்பிலும் வரவேற்பையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துவிட்டு வந்துள்ளேன்.

அன்பன்,
இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர், தி. மு. கழகம்.
'அறிவகம்' சென்னை-13; 5-11-56.

## முன்னேற்றப்— —பாதையிலே

### கிருட்டிணபுரம்.

10–11–56 மாலை 2.30 மணிக்கு, சேலம் மாவட்டம் கிருட்டிணபுரத்தில் (எ புதூர்) தி. மு. க. துவக்கவிழா.

தலைமை: ஜி. பி. சோமசுந்தரம். கொடியேற்றுபவர்: இரா. தாண்டவன். துவக்குபவர்: கலைஞர், மு. கருணாநிதி மற்றும் எம். பி. சுப்ரமணியம், முல்லை–சக்தி, ப. இராமலிங்கம், சிற்றுளி–சுப்ரமணியம் கலந்துகொள்வர்.

### கோனேரிப்பட்டி.

10–11–56 மாலை 4.30 மணிக்கு, சேலம் மாவட்டம் கோனேரிப்பட்டி தி. மு. க. துவக்கவிழா.

தலைமை: ப. இராமலிங்கம். கொடியேற்றுபவர்: எம். பி. சுப்ரமணியம். துவக்குபவர்: கலைஞர், மு. கருணாநிதி நூலகம் துவக்குபவர்: முல்லை–சக்தி மற்றும் ஜி. பி. சோமசுந்தரம், ஏ. ஆனைமுத்து, சிற்றுளி–சுப்ரமணியம், இரா. தாண்டவன் கலந்துகொள்வர்.

### தம்மம்பட்டி.

10—11—56 மாலை 6.30 மணிக்கு. தலைமை: எம். பி. சுப்ரமணியம். கொடியேற்றுபவர்: ஜி. பி. சோமசுந்தரம். துவக்குபவர்: கலைஞர், மு. கருணாநிதி மற்றும் முல்லை–சக்தி, சிற்றுளி–சுப்ரமணியம், ஏ. ஆனைமுத்து கலந்துகொள்வர். ★

**ஏற்றதாக!**

நீங்கள் இறந்தபிறகும் உங்கள் பெயர் நிலைக்க வேண்டுமா? பிறரால் படிக்கப்படுவதற்கு ஏற்ற பொருள்களைப் பற்றி எழுதுங்கள். அல்லது பிறரால் எழுதப்படுவதற்கு ஏற்ற தன்மையுள்ள செயல்களைச் செய்யுங்கள்.

—பெஞ்சமின் ஃபிராங்கலின்.


டாக்டர் சோதனை விளக்கத்தின்படி ஏற்ற கண்ணாடி எம்மிடம் கிடைக்கும்.




ராதா ஆப்டிகல் கம்பெனி,
முதல் அக்ரகாரம், சேலம்–1.

TEL: Gurucures.
PHONE: 248.

60 ஆண்டுகள்–3 தலைமுறைகள்
ஆங்கிலம் தமிழ் மருத்துவ சிறப்பைப்பெற்றது குருமருந்து சாலை
அதன் 60-க்கு மேற்பட்ட தயாரிப்புகளில் தலையான

குரு தைலம்.

குரு பல்பொடி.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,
குருமருந்து சாலை, :: திருச்சிராப்பள்ளி.

## கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● ச. சு. மணி,
செந்தோம் உயர்நிலைப்பள்ளி,
மயிலாப்பூர், சென்னை-4.

ப. பெரியசாமி, புதுப்பேட்டை.

*கே: மனித இனத்தில் மதம் என்ற அமைப்பையே எதிர்க்கும் நம்மைச் சார்ந்தோர், அம்பேத்கார் புத்தமதத்தில் சேர்ந்ததற்கு ஆதரவு அளிப்பதேன்?*

*ப: பௌத்தம் ஒரு நெறி. புத்தரின் கருத்துக்கள் தெய்வீகமற்ற—சாதிபேதமற்ற—மூடநம்பிக்கையற்றவை. பார்ப்பனீயத்திற்குப் பணியாதவை என்பனவே காரணங்கள்.*

* * *

*கே: சென்னை மாநில அரசியலில் துருப்புச் சீட்டாக மதிக்கப்படுபவர் யார்? ஏன்?*

*ப: வெட்கப்படுகிறேன் தோழரே! கேள்வியே புரியவில்லை, காரணம்: சீட்டாட்டம் நானறியேன்!*

ச. சு. மணி. சென்னை-4

● *கே: கேள்வியை தாங்கள் கணை என்று ஏன் கூறவேண்டும்?*

*ப: கூர்மையாக இருக்க வேண்டியது கருதியே!*

மா. அரங்கசாமி, கோயமுத்தூர்.

*கே: மனிதராய்ப் பிறந்தவர்களின் கடமையென்ன?*

*ப: மனிதப்பண்போடு தானும் வாழ்ந்து, பிறரையும் வாழவிடுவது.*

* * *

*கே: உலகத்தில் யுத்தங்கள் யாரால் நடைபெறுகின்றன?*

*ப: இனவெறி, பணவெறி, ஆதிக்கவெறி பிடித்தவர்களாலேயே அதிகம் நடக்கின்றன.*

எஸ் முகமதுமீரான், பம்பாய்-3.

*கே: பத்தினி என்பவள் பலரைக் காதலிப்பவளா? ஒருவரைக் காதலிப்பவளா?*

*ப: பலரைக் காதலித்து வாழ்பவள் புராணப்பத்தினி. ஒருவனைக் காதலித்து வாழ்பவள் ஒழுக்கமுடையாள்.*

தயா. ஜெயபால், காரமடை.

*கே: தமிழ்நாடு இந்தியாவின் "ஹங்கேரி"யாக மாறுமா?*

*ப: தமிழ்நாடு, தமிழ்நாடாகவே இன்னும் மாறவில்லையே!*

* * *

*கே: சண்டைக்கும் சமாதானத்திற்கும் ஆண்டவனே காரணம் என்கிறார்களே; அவர் இப்போது என்ன செய்கிறார்?*

*ப: எகிப்துக்குப் போகத் தடியாகத் துடித்தாராம்; வாகன அறையின் சாவியைத் தேடித்தேடியும் கிடைக்காமையால் திகைத்துக் கல்லாகி விட்டாராம்!*

ஆர். கே. சிங்காரம், சேலம்-2.

*கே: "தேவாசுரர் போராட்டம்" நாடகத்திற்குத் தடையுத்தரவு போட்டதால், நஷ்டம் யாருக்கு?*

*ப: திராவிட கழகத்திற்குத் தான் என்கிறாராம் ராதா? ராதாவுக்குத்தான் என்கிறாராம் பெரியார். காமராஜருக்குத்தான் என்கிறார்களாம் தி. க. தொண்டர்கள்!*

வள்ளுவர் நெஞ்சம்

### உலக வாழ்த்து-அ.

அதிகாரம்-க. பாட்டு-அ.

**அறவாழி அந்தணன்-**
**-தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**
**பிறவாழி நீந்தல் அரிது**

*அறம் என்பது ஒரு கடலென்றால், ஆசை, பொய், நெறிதவறல் போன்றவை பல கடல்களாகும். அதிலும், செந்தண்மை நிறைந்த, தீமையற்ற செயல் எனும் தெப்பம் அறக் கடலிலே தானுண்டு. அந்தத் தெப்பத்தை உருவாக்கிக்கொண்டால் இந்தக் கடலைக் கடந்துவிட முடியும். மற்ற கடல்களுக்கு தெப்பமில்லை என்பதாம். வாழ்க்கையைக் கடல்போன்றது என்று உவமை நயத்தால் கூறியதாகும்.*

**விளக்கம்:**

அந்தணன்—செந்தண்மையுடையவன். அறம் செந்தண்மைநிறைந்தது. செயலை உருவகமாக்கிய கலைநயம்.

—மீ. சு. இளமுருகு பொற்செல்வி


## நீங்கள் படித்தீர்களா?

எழுத்துக்கு எழுத்து தித்திக்கும் அழகு தமிழ் நடையில்,
தோழர், க. அண்ணாமலை தீட்டிய சித்திரங்கள்.

| | | |
|---|---|---|
| தமிழச்சி | (நாடகம்) | 0—3—0 |
| குற்றவாளி | ஷை | 0—8—0 |
| வெடிகுண்டு | (கட்டுரை) | 0—2—0 |

விபரங்களுக்கு:
மதிமன்றம். கொண்டலாம்பட்டி, சேலம்.




[2-ம் பக்கம் தொடர்ச்சி]

*அவர் போராட்டத்தை நிறுத்தி விட்டார்?*

*அந்த 'சத்தியவானின்' பேச்சை நம்பிக்கொண்டு, உள்நாட்டு மந்திரியைச் சந்தித்துப் பேசப் போகிறேன் என்ற அதிர்ச்சியினாலோ, மகிழ்ச்சியினாலோ அல்லது வேறெந்த காரணத்தினாலோ "போராட்டத்தை நிறுத்து!" என்று சொல்லிவிட்டார் சிவஞானம்!*

*ஜெய்சிங்கின் பேச்சை நம்பி ஆக்ராவுக்குச் சென்றான் சிவாஜி, ஔரங்சீப்பை சந்தித்துப் பேசலாம் என்ற நல்லெண்ணத்துடன்! என்ன நடந்தது? ஏமாற்றப்பட்டான்! சிறைவைக்கப்பட்டான்!*

*சுப்ரமணியத்தின் பேச்சை நம்பிக்கொண்டு, சிவஞானம் டெல்லி செல்வாரா? பண்டித பந்தைச் சந்திப்பாரா? எல்லைப் பிரச்சினை தீர்க்கப்படுமா? அல்லது...... (சிவாஜியைப் போலவும், ஷேக் அப்துல்லாவைப்போலவும் சிறைவைக்கப்படாது போனாலும்) ஏமாற்றத்துடன்தான் திரும்புவாரா?*

*ஜெய்சிங்கை சிவாஜிக்குத் தெரியாது. அதனால் அவன் பேச்சை நம்பினான்!*

*சுப்ரமணியனாரை சிவஞானத்திற்குத் தெரியாதா? நாடே அறியுமே அவரது நற்குணத்தையும், வாக்குத் தூய்மையையும்!*

*சிவஞானம், சிவஞானமாகவே இருப்பாரா? சிவாஜியாகி விடுவாரா? 1937 விடையளிக்குமா?* ★


# பகுத்தறிவு.

(வாரஇதழ்)

கையொப்பத்தொகை:

ஆண்டு 1-க்கு 3-8-0
ஆறு மாதங்கள் 2-0-0
தனிப்படி 0-1-0

விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.

பகுத்தறிவு அலுவலகம்,
சேலம்-1.


திறனாய்வுக் கட்டுரை

# இன்றைய இலக்கியம்.

"தமிழ்த் தும்பி"

III

*இன்றைய இலக்கியத்தில் புதுப்பாதை வகுக்க முயலும் சஞ்சிகைகளும் இல்லாமல் போகவில்லை. அறிவியக்கத்தின் சார்பாகத் தூதுவரும் வார-மாத ஏடுகள் அரசியல் பணியோடு நின்று விடாமல், திருந்திய இலக்கியப் பணியும் புரிந்து வருவது சிறுகதை இலக்கியத்தின் மறுமலர்ச்சிக்கு நம்பிக்கை யூட்டுவதாயிருக்கின்றது. இவை தவிர நடுநிலையிலிருந்து ஆராயும்போது அறிவியக்கத்திலில்லாத வேறு சில ஏடுகளையும், அவற்றின் புதுமைமிகு தொண்டிற்காகப் போற்ற வேண்டிய கடப்பாடு நமக்குண்டு. இந்த வகையில் ஆரியபுரியினரின் ஏடுகளுக்குள்ள செல்வாக்கிற்கு எதிர்ப்பணி அமைத்து, வளர்ந்து வரும் 'குமுத'த்தைக் குறிப்பிட வேண்டும்.*

*பெரும்பான்மையான ஆரியர்களின் வீடுகளில் 'விகடன்' காணப்படுவதைப்போல இன்று பெரும்பாலான தமிழர் இல்லங்களில் குமுதம் காணப்படுகின்றது. இவ்வேடு 'அவாளின்' இலக்கியப் பாதையிலிருந்து நேர் எதிரான பாதையை வகுக்காவிடினும், அந்த இழிவான சாதித் தமிழ் நடையிலிருந்து சிறுகதை உலகை விடுவித்த பெருமை இதற்கு உண்டு.*

*தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளை ஆதரிக்கும் போக்குடைய 'உமா' சில புதுமைகளை நுழைத்து வருகிறது. இருப்பினும் அதில் இடம் பெறும் சிறுகதைகள் இனனும் தமிழ்க்கண் கொண்டு பார்க்கப்பட வேண்டும்.*

*கி. வா. ஜகந்நாதனை ஆசிரியராகக் கொண்ட 'கலைமகள்' என்ற மாத இதழ், நீண்ட நாட்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இருப்பினும் அதில் இடம்பெறும் சிறுகதைகளும் 50 சதவிகிதம் 'அவாள்' இலக்கியத்தைப் பரப்பும் நோக்கத்துடனேயே காணப்படுகின்றன.*

*அரு. இராமநாதனை ஆசிரியராகக் கொண்ட 'காதல்' இலக்கிய வளர்ச்சிக்கு இன்னும் திருந்தியபணி ஆற்றவேண்டிய நிலையிலேயே உள்ளது.*

*இறுதியாகப் பொதுக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் போது, இன்றைய சிறுகதை இலக்கியம் சிறிது சிறிதாக மாறி வருவது நமது அகக் கண்ணுக்குப்புலப்படுகின்றது. அந்த மாற்றமும், சிறுகதையுலகில் இனி 'அக்ரகார நடை'க்கு இடமில்லையென்பதை உணர்த்தும் பாடமாகத்தான் இருக்கப் போகின்றது.* ★


அனைவரும் விரும்பி
அருந்துவது

**சங்கர்ஸ்**
**காபி.**

**சங்கர்ஸ் காபி ஒர்க்ஸ்,**
தேவேந்திரபுரம்—சேலம்.

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

உருவமற்றது. இரண்டையும் ஒப்பிடுவதே தவறு. இருந்தாலும், உங்களுக்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். 'பராசக்தி' படம் பார்த்திருப்பீர்கள். அதில் ஒரு பெண் இட்லி வியாபாரம் செய்கிருள். அவளிடம் ஒரு போடி வந்து தன் இச்சைக்கு இணங்கும்படி கேட்கிருன். அவள் மறுக்கிருள். அப்பொழுது அவன் அந்தப் பெண்ணைப் பார்த்து, "உனக்கு சோறு பெரிதா? மானம் பெரிதா?" என்று கேட்பானேயானல், அவனை நீங்கள் என்னவென்று சொல்வீர்கள்? (கூட்டத்தில் சிலர்: அயோக்கியன், அயோக்கியன்) ஆமாம்! அரசியலில் அவர்களுக்குப் பெயர் கம்யூனிஸ்ட்டுகள்!

இந்தியப் பிரதமர் நேரு மிக உயர்ந்து விட்டார். அவ்வளவு உயரத்திலிருந்து அவரால் வெளிநாடுகளைத்தான் பார்க்க முடிகிறது; உள்நாட்டைப் பார்க்க முடியவில்லை.

"கண்ணீர்த்துளிகள் சட்டசபைக்குப் போகக்கூடாது" என்று குருசாமி கூறுகிருர். நாங்கள் போகவில்லையென்ருல், அவராவது போகிருரா? அதுவுமில்லை! நாங்கள் கண்ணீர்த்துளிகள்தான்! கண்ணீரில் பிறந்து கண்ணீரிலேயே வளர்ப்பவர்கள்தான் என்பதைப் பெருமையுடன் ஒப்புக்கொண்டு, வருகிற பொதுத் தேர்தலில் இந்தக் கண்ணீர்த் துளிகளின் சார்பில் யாராவது இந்தத் தொகுதியில் நிறுத்தப்பட்டால், அவரை நீங்கள் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.

தோழர், டி.கே. தாமரைச்செல்வன் அவர்களின் சேலம் பேச்சு. தொகுத்தவர், சேலம் ஏ. பெரியசாமி

## கலைக்கூடம்

## ரங்கோன் ராதா.

சமூகப் படங்களின் வரிசையிலே, "ரங்கோன் ராதா" ஒரு சிறந்த படம் என்று தாராளமாகச் சொல்லலாம்.

பணத்திமிர் பிடித்து, பக்திமான் என்று சொல்லிக்கொண்டு மனைவியிருக்கும்பொழுது, வேறு ஒருத்தியை விரும்புவதால் ஒரு குடும்பத்தில் ஏற்படும் சிக்கலை எடுத்து விளக்குகிறது கதை. தர்மலிங்க முதலியாராக நடிக்கும் சிவாஜி கணேசனின் நடிப்பும், ரங்கோ—பானுமதியின் நடிப்பும் இப்படத்தில் "கள்வனின் காதலி"க்குப்பிறகு சிறிது மாற்றம் அடைந்திருக்கின்றன.

வாழ்க்கையில் ஏற்படும் பூகம்பம், எரிமலை, காட்டாறு அனைவைகளை சகித்து நடிப்பது அவரது வாழ்க்கையில் இதுதான் முதல்தடவை என்று தெரிகிறது. தந்தையின் அக்கிரமத்திற்கு அடிபணியாது. பகுத்தறிவுப் பாதையில் பொதுவுடமை தத்துவத்தை மேற்கொண்டு பணிபுரியும் நாகசுந்தரம்— எஸ். எஸ் இராசேந்திரன் நடிப்பு இப்படத்தில் "குலதெய்வ"த்தைக் காட்டிலும், சிறப்பாக அமைந்திருக்கிறது. அவரது காதலியாக வரும், ரங்கோன் ராதா—ராஜசுலோசன 'ராஜா தேசிங்கு' நாடகத்தின் மூலம் நல்லதொரு புகழைத் தேடிக்கொண்டார். கலைவாணர்—செந்தமிழ்ச்செலவி மதுரத்தின் நகைச்சுவைக் காட்சிகள் "கொக்கு-கூந்தலும்" பாராட்டும் படியாகவுள்ளது. பழைய நடிகை பி. எஸ். ஞானத்தின் நடிப்பும், மற்றவர்களின் நடிப்பும் மோசமில்லை. கலைஞர் கருணாநிதி சிறந்த வசனங்களோடு சில பாடல்களும் இயற்றியுள்ளார். அவரின் 'பொதுநலம்,' 'வான்மலர்' 'ஓடையிலே ஒரு நாள்' என்ற பாடல்கள் இனிமையாக—பொருளோடு இருக்கின்றன. மற்றபடி உடுமலையாரின் 'என்றுதான் திருந்துவதோ' பாடலும், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் 'நாட்டுக்கொரு வீரன்' என்ற பாடலும் "ராஜாராணி"யில் சேரன் செங்குட்டுவனின் நாடகத்தை நினைவுறுத்துகிறது. காசிலிங்கம் டைரக்ஷனில் புதுமையில்லை. ஓட்டம் மந்தகதிதான்! படநீளம் அதிகம்.

மேக்கப், இசையமைப்பு, ஒளி, ஒலிப்பதிவு, நடனங்களும் நன்கு சோபிக்கின்றன. அறிஞரின் 'ரங்கோன் ராதா' கலைஞரின் கைவண்ணத்தால் ஒரு சிறந்த சமூகப் படமாக அமைந்துவிட்டது. அனைவரும் பார்க்கவேண்டிய படம்.

—மா. அரங்கசாமி.

## சங்கரதாஸ்.

தெருவிலே புழுதிகிளம்பக் குதித்தாடும், இசைக்கூத்துக்களே தமிழ்நாட்டின் பரம்பரையாக வந்த நாடகங்கள். 19-ம் நூற்றாண்டின் இறுதியிலேதான் பேநாட்டு நாடகங்களைப் பின்பற்றி மேடை நாடகங்கள் தோன்றின.

தமிழகத்து மேடை நாடகங்களை வளர்த்த பெருமைப்பணியில் குறிப்பிடத்தக்கவர்கள்; பம்மல் சம்பந்த முதலியாரும், சங்கரதாஸ் சுவாமிகளும் ஆவர்.

தூத்துக்குடியிலே 1867-ம் ஆண்டில் தோன்றி, சிறந்த நாடக ஆசிரியராகவும், நடிகராகவும் நாடகக்கலை வளர்த்து 1922 நவம்பர் 13-ம் நாள் புதுவையிலே இயற்கை எய்திஞர் சங்கரதாஸ்.

பல புதிய, பழையகதைகளை நாடகங்களாக்கி மேடையேற்றியும், பல நடிகர்களைத் தட்டிக்கொட்டி தயாரித்தும், முப்பதாண்டுகளாக அப் பெரியார் ஆற்றிய நாடகப் பணியிலே பூத்த மணமலர்கள்—நடிக நட்சத்திரங்கள்—இன்றும் மேடையிலும்—திரையிலும் ஒளி வீசுகின்றன.

நற்றமிழர்-நாடகப் பெரியார் சங்கரதாசுக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் பணியினை, கலைஞர்கள், டி. கே. எஸ். சகோதரர்கள் மேற்கொண்டுள்ளனர். நவம்பர் 13-ம் நாள், புதுவையிலே விழாவாக. கலைஞர்களுக்குக் காட்டும் கௌரவம் கலைகளை உயர்த்துமாக!

—இந்திரசித்தன்.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்–1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

பகுத்தறிவு
கழக வார இதழ் ஆசிரியர்:- ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 16–11–56 ★ விலை அணு ஒன்று. | இதழ் [illegible]

# கலவரம் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் யார்?

"தமிழ்நாடு" என்று கூறிட வெட்கப்படும் "மதராஸ் நாட்"டின் அமைச்சர் பெருமக்கள் கனம் காமராசர், சுப்ரமணியம், பக்தவத்சலம் மூவரும் தேர்தல் பிரசாரத்தில் மும்முரமாக ஈடுபட்டு விட்டனர். திராவிட முன்னேற்றக் கழகத்தை நாம்பற்ற நாக்கினர்போல்பேசத்தொடங்கிவிட்டனர். இந்த உண்மையற்ற—உரமற்ற நெஞ்சினர்!

அரசாங்கச் செலவிலே—பொதுமக்களின் வரிப்பணத்திலே—தம் கட்சியின் தேர்தல் பிரசார வேலை நடத்துகின்ற இந்த தியாகமூர்த்திகள், பேச்சிலாவது தரம் காட்ட வேண்டாமா? பதவியின் பொறுப்பினை—கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டாமா?

"தேர்தல் என்பதே பித்தலாட்டம். பணம் படைத்தோரின் சூதாட்டம், பொய் புனைசுருட்டு பேசி பொதுமக்களை ஏமாற்றத் தெரிந்தனே கெலிப்பான். அரசியல் என்பதே அயோக்யர்கள் வேலை" என்ற பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் கூற்றுக்கு எடுத்துக்காட்டாக செயற்படுகின்றனர் போலும் ஆளுகின்ற அமைச்சர்கள்! இல்லையெனில், மட்டரகமாகப் பேசுவானேன்? மக்களிடையே வெறுப்பையும், கொதிப்பையும் விளைவிப்பானேன்?

திருச்சியில் இவர்கள் பேசிய கூட்டத்தில் கலவரம் ஏற்பட்டதாகவும், கூட்டம் இடையிலே கலைந்து, போலீஸ் உதவியோடு காரில் ஏறும்படி நேர்ந்ததென்றும் பத்திரிகைச் செய்திகள் வந்தன. இதனை வெளியிட்ட காங்கிரஸ் ஏடுகளே, மந்திரிகள் தி. மு. க. வை கடுமையாகத் தாக்கிப் பேசினர் என்றும் கூறின. ஆனால், கேள்விகேட்டவர்கள், கலவரம் செய்தவர்கள் தி. மு. கழகத்தாரல்ல.

இதுகுறித்து விசாரித்தறிந்த தி. மு. க. தலைமை நிலையம் ஒரு அறிக்கையில் கூறுகின்றது:

அண்மையில் திருச்சியில், முதலமைச்சர் காமராசரும், பிறரும்பேசிய காங்கிரஸ் கூட்டம் ஒன்றில் குழப்பம் ஏற்பட்டதாகவும், அக் குழப்பத்திற்குக் காரணம் திராவிடமுன்னேற்வக் கழகத்தினர் என்றும் சில செய்தித் தாள்கள் வெளியிட்டுள்ளன.

திருச்சியிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தை விவரம் கேட்டதில், அக்குழப்பத்திற்கும், கழகத்திற்கும் சிறிதும் சம்பந்தமில்லையென்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி இழித்தும் பழித்தும் பேசுவதைப்பற்றி நம் கழகத்தோழர்கள் பொருட்படுத்தவில்லையென்பதை அனைவரும் அறிவர். கழகத் தோழர்கள் அந்தக் கண்ணியத்தைக் கடைப்பிடித்து வரும்போது அதற்கு மாறன செய்திகளை வெளியிடும் செய்தித் தாள்களின் போக்கு மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

தேர்தலுக்கு முன்பே இல்லாதனவும், பொல்லாதனவும் கூறிப் பழிசுமத்துகின்ற காங்கிரஸ் ஏடுகள், தேர்தல் நடக்கின்ற நேரத்திலே எப்படி நடந்துகொள்ளும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் நமது தோழர்கள். எச்சரிக்கை வேண்டும்; ஏற்ற முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

திராவிடத் தந்தை பெரியார் இந்தத் தேர்தலில், சனநாயக முறையிலேஒரு விசித்திர நிலையை உண்டாக்க விரும்புகிருர். "தேர்தலில் இரண்டே கட்சிகள் தான். ஒன்று காமராசர் கட்சி; மற்றொன்று ராஜாஜி

(8-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்நாட்டு வானொலி நிலையங்களிலே...

ஆந்திரர்களுக்கென்று விசாகப்பட்டினம், விஜயவாடா நிலையமும், மலையாளிகளுக்கென்று திருவனந்தபுரமும், கோழிக்கோடு நிலையங்களும், கன்னடியர்களுக்கென்று பெங்களூரும் இருப்பதால் தமிழர்களுக்கென்று திருச்சி நிலைய நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழிலேயே இருத்தல் வேண்டும். அந்தப்பகுதியில் அமைந்துள்ள வானொலி நிலையங்கள், அந்தந்தப் பகுதி மொழியிலேயே மக்களுக்கு நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்ப வேண்டுமென்ற மக்கள் விருப்பத்தைப் புறக்கணிக்க முடியாது. இந்த வகையில் மேற்கூறிய மற்றப் பகுதி நிலையங்கள் எல்லாம் அந்தந்தப் பகுதி மொழிகளிலேயே எல்லா நிகழ்ச்சிகளையும் தயாரித்து வருகையில், நம் திருச்சி நிலையம் மட்டும் ஏன் தமிழுக்கு முழு இடம் அளிக்காமல், ஏதேதோ நிகழ்ச்சிகளை ஒலிபரப்பவேண்டும்? மற்றவர்களைப் பார்த்தாவது திருச்சி நிலையம் தனது தற்போதைய கொள்கையை மாற்றிக்கொண்டு, தமிழுக்கே முழு இடம் அளிக்க முன்வந்தாலன்றி தமிழ்நாட்டு மக்களின் நன்மதிப்பையும், ஆதரவையும் பெற முடியாது. ஆகவே, திருச்சி நிலைய அதிகாரிகள் உடனடியாக இதைக் கவனித்துத் தக்க நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும்.

இந்த நியாயமான கோரிக்கையை வற்புறுத்தும்போது, பிறமொழி வெறுப்புக் கூடாதென்று அதிகாரிகளால் ஒரு சமாதானம் கூறப்படுகிறது. பெரும்பாலான அளவுக்கு தமிழ்ப் பாடல்கள் ஒலிபரப்பப் படுகிறதென்கிறார்கள். வானொலிப் புத்தகத்தைக்கொண்டு பார்த்தால், 100-க்கு 50 அல்லது 60 பாடல்கள் தமிழாக இருப்பதையும் காண்கின்றோம். என்றாலும், மற்ற பகுதி நிலையங்களில் 100-க்கு ஒரு பாடலாவது தமிழ் இருப்பதாகத் தெரியவில்லை. இந் நிலையில், நமது திருச்சி நிலையம் மட்டும் மற்ற பகுதி மொழிப் பாடல்களுக்கு இவ்வளவு முக்கியத்துவம் அளிப்பது பொருந்தாது. தமிழ்நாட்டு மக்களுக்கும் மற்ற பகுதி மக்களைப் போலவே மொழிப் பற்றும் உணர்ச்சியும் உண்டு. ஆகையால் திருச்சி நிலையம் தமிழுக்கு முக்கிய இடம் கொடுத்துவிடுவதால் மட்டும் மனநிறைவு அடையமுடியாது. மற்ற நிலையங்களைப்போல் இங்கும் தமிழுக்கு முழு இடம் அளித்தால்தான் மனநிறை அடையமுடியும்.

## கண்ணைத் துடைக்கக் கையாளப்படும் வழி

மேலும் தற்போது 100-க்கு 60 பாடல்கள் தமிழாகவே திருச்சி நிலையத்தில் ஒலி பரப்புவதாகக் கூறுவதிலும், சில முக்கிய அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டியிருக்கிறது. முழுநேரக் கச்சேரிகளில் எல்லாம் தெலுங்குதான் அதிகம் இடம் பெறுகிறது. வாய்ப்பாட்டுக் கச்சேரிகளிலெல்லாம் தெலுங்குப் பாடல்களை அதிகமாகவும், பெயருக்கு இரண்டொரு தமிழ்ப் பாடல்களை மட்டும் போட்டுவிட்டு, வாத்தியக் கச்சேரிகளிலேயே தமிழ்ப் பாடல்களை அதிகம் சேர்த்து வருகிறார்கள். இது தமிழ் மக்களின் கண்ணைத் துடைப்பதற்குக் கையாளப்படும் ஒரு சூழ்ச்சியே தவிர, உண்மையில் தமிழுக்கும் தமிழ்ப் பாடல்களுக்கும் உரிய முறையான மதிப்புக்கொடுப்பதாகாது என்பது ஊன்றிப் பார்க்கும் யாருக்கும் எளிதில் புலனாகாமற் போகாது. எனவே, மேற்கூறியபடி தமிழ்நாட்டு நிலையத்தில் தமிழுக்குத்தான் முழு இடம் இருக்கவேண்டும் என்ற நிலை ஏற்பட்டால்தான், நிகழ்ச்சி அமைப்பாளர்கள் செய்யும் இத்தகைய சூழ்ச்சிகளுக்கு இடமில்லாது போகும். தமிழுக்கு உண்மையான மதிப்பு ஏற்படும். தமிழ் மக்களுக்கும் பூரண மனநிறைவு ஏற்படும்.

மற்றும் ஒன்று. திருச்சி நிலையத்தில் ஒலிபரப்பாகும் தமிழ்ப்பாடல்களில் என்றைய ஒரு குறிப்பிட்டநாள் நிகழ்ச்சியை எடுத்துப்பார்த்தாலும், அதில் வரும் பாடல்கள் திருப்பத் திருப்ப சுத்தானந்த பாரதி, பாபநாசம் சிவன், நீலகண்ட சிவன், கோபால கிருஷ்ண பாரதி இவர்களுடையதாகவே இருக்கின்றன. பாடகர்களும் தமிழர்களைவிட ஒருசாராரே அதிகமாக இடம்பெற்று வருகின்றனர். முத்துத்தாண்டவர், மாரி முத்தாப்பிள்ளை, வேதநாயகம்பிள்ளை, பாரதிதாசன், கே. எம். பாலசுப்பிரமணியம், இலட்சுமணபிள்ளை, தஞ்சை பொன்னையா பிள்ளை மற்றும் தற்கால இளம் கவிஞர்கள் என். எஸ் சிதம்பரம், திருச்சி ஜி. தியாகராசன், கு. சா. கிருஷ்ணமூர்த்தி போன்ற பலர் எத்துணையோ பாடல்கள் இயற்றியிருக்கிறார்களே. அண்மையில் பல்கலைக் கழகத்திலும் தமிழ்ப்பாடல்தொகுதிகள் சுரதாளக் குறிப்புகளுடன் 15-க்கு மேல் வெளியிடப் பட்டிருக்கிறதே; இவற்றையெல்லாம் நிகழ்ச்சிகளில் மிக அரிதாக ஒன்றிரண்டுமட்டும், சேர்த்து சுத்தானந்த பாரதி, பாபநாசம் சிவன் பாடல்களையே ஏன் அதிகமாகத் திருமபத் திருமபச் சேர்க்க வேண்டும்? இந்நிலையும் உடனடியாக மாறி எல்லோரது பாடல்களுக்கும் சம வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். தமிழ்ப்பாடகர்களுக்கும் நிலைய நிகழ்ச்சிகளில் அதிக வாய்ப்பு அளிக்கவேண்டும்.

திருச்சி நிலையத்திலிருந்து கலைஞர்களுக்கு அனுப்பப்படும் ஒப்பந்தச் சீட்டுகளில் முன்பு "முக்கியமாகத் தமிழ்ப் பாடல்கள்" என்று ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. தற்சமயம் அந்த நிபந்தனை நீக்கப்படக் காரணம் தெரியவில்லை. மீண்டும் அந்த பழைய நிபந்தனை ஏற்பட்டு, அதுவும் சரியானபடி அமுல் நடத்தப்பட்டாலன்றி இப்போதைய சூழ்நிலை மாறுவதற்கே இடமில்லாது போய்விடும்.

## சென்னை நிலையமும் கவனிக்க வேண்டும்.

சென்னை வானொலி நிலையமும் தமிழ் நாட்டில் அமைந்திருக்கும் காரணத்தால், அங்கு ஒலிபரப்பாகும் பாடல்களிலும் 100-க்கு 80 சதவிகிதமாவது தமிழாகவே இருக்கவேண்டும். சென்னை நிலையத்தில் இரண்டு ஒலிபரப்பிகள் இருப்பதால் ஒன்றைப்பூரணமாக தெலுங்குக்குப் பயன் படுத்திக்

(9-ம் பக்கம் பார்க்க)



# எதிரொலி



நேருவை யாராலும் அசைக்க முடியாது.

—பெரியார்.

முதலில் காமராசர், இப்போது நேரு; பிறகு காங்கிரசை அசைக்க முடியாது என்பாரோ?

* * *

நமக்குள்ளிருக்கும் வேற்றுமைகள் மறைய, புத்தரது உபதேசம் நமக்கு பெரும்வழிகாட்டியாக இருக்கவேண்டும்.

—சர். ராதாகிருஷ்ணன்.

புத்தர் விஷ்ணுவின் அவதாரம் என்பதை அக்ராகாரம் விட்டால்தானே அது நடக்கும்!

* * *

ஐந்தாண்டுத் திட்டம் பற்றி சிறந்த நாடகம் எழுதுவோர்க்கு அரசாங்கம் 1000 ரூபா பரிசு கொடுக்கும்.

—செய்தி.

அதிலே "மாட்டுக்கு ஓட்டுப் போடுங்கள்" என்று சிறந்த பாட்டும் இருக்க வேண்டுமே!

* * *

குடந்தை கோயில்களிலே அதிசயத் திருட்டு.

—செய்தி:

பாவம், அந்தத் திருடன் என்ன பிரார்த்தனை வைத்துக்கொண்டானோ!

* * *

மூக்குக் கண்ணாடி, காமிரா தயாரிக்கும் தொழிற்சாலைகள் தென்னாட்டில் ஏற்படுத்தப் படும்.

—செய்தி

அந்தக் கண்ணாடி மூலம் வடநாட்டு வஞ்சனையைப் பார்க்கவோ, காமிரா மூலம் படம் பிடிக்கவோ முடியுமா?

* * *

மலையாளி பிரின்ஸ்பாலை எதிர்த்து சேலம் கல்லூரி மாணவர் கிளர்ச்சி.

—செய்தி

பிறகென்ன? அக்ரமம் செய்பவரைக் கண்டிக்க ஆண்டவனு அவதாரம் எடுக்கப் போகிறான்?

புத்தர் நெறி

# மெய்யின்பம்!

பி. வி. இராமசாமி

மாரிக்காலம், புத்தர்பிரான், தாருகா வனத்திலே தங்கியிருந்தார். அப்போது அடியார்கள் வந்து வணக்கம் தெரிவித்தனர். வினவினர், மத வாழ்க்கை என்பது என்ன என்பதாக.

அன்புநெறிப் பிரான் சொன்னார். அப்போது:—

உலகம் நித்தியமா? அநித்தியமா?— ஆத்மாவும் மதமும் ஒன்று? வெவ்வேறு? செத்தபின் பிழைத்திருக்கின்றனரா என்று ஆராய்ந்து கொண்டிருப்பதல்ல உண்மை மதம். இவற்றை ஆராய்ந்து கொண்டிருப்பதால் கிடைக்கும் பலன் யாதொன்றுமில்லை. அறநெறி (தர்மம்) என்பதற்கும் இவற்றிற்கும் தொடர்பே கிடையாது.

மனிதர்களுடைய, துக்கம், துயரம், ஆசை ஆகியவற்றை இவைகள் நீக்கா. நல்லறிவும், நல்வாழ்வும், செயலறிவும், நற்பண்பும், மெய்யின்பமும் இவற்றால் பெற முடியாது.

அறிவுக் கண்ணில்லாதவர்கள் உண்மையில் குருடர்களே. சுகபோகங்கள் என்பனவற்றிற்கு இடையில் கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டால் அந்த சுகபோகங்கள் முடிவெய்திவிடும். இளமைக்கு முதுமை முடிவு; அன்புக்கு இழப்பிலே முடிவு.

உலகம் நித்தியமா, அநித்தியமா என்று ஆராய்ந்து கொண்டிருப்பது, கடுங்கானகத்திலே எதையோ தேடித் திரிந்துகொண்டிருப்பது போன்றதாகும்.

ஒரு விளக்கம்:—

விஷ அம்பு பாய்ந்து விட்டது ஒரு மனிதனுடைய உடலில். நேயரும் உறவினரும் விஷ வைத்தியனை அழைத்து வந்துள்ளனர். அம்பு பாய்ந்து கிடக்கும் அந்த மனிதன், அவர்களைப் பார்த்து "என்னைக் காயப்படுத்திய அந்த மனிதன் யார்? அவன் எந்த குலத்தைச் சேர்ந்தவன்? அவன் நெட்டையா, குட்டையா, கட்டையா? என்று நான் அறிந்துகொள்வதன் முன்னர், எனக்கு சிகிச்சை செய்ய விடமாட்டேன்" என்று கூறினால்; அவன் சாகத்தானே வேண்டும்?

செயலின் ரகசியங்களை—நடப்பின் காரணங்களை யாரும் முன்னதாக அறிந்துகொள்ள முடியாது. ஆசை, வெறுப்பு முதலியன விடுத்து, தூய அன்பு வாழ்க்கை நடத்துபவனே, மெய்யான இன்பமும், நல்வாழ்வும் பெறுவான்.

அறியாமையால்தான் குழப்பமும் கலக்கமும் ஏற்படுகின்றன. அறியாமை ஒழிந்தால் துக்கத் தொடக்கமும் ஒழியும்.

மனத்தூய்மை, செயல் தூய்மை பெற்று நல்லவனாக வாழ்ந்திடு. கேடானவற்றை நீக்கு. நல்லனசெய் தன்னைச் சுத்தப்படுத்திக் கொள்பவரும், அசுத்தப்படுத்திக் கொள்பவர்களும் அவரவர்களே. பிறர் நம்மைத் தூய்மைபடுத்த முடியாது.

காலை பிறரையும் தூய்மைப்படுத்த முடியாது. விஷத்தைக் கண்டு அஞ்சுவதுபோல், தீமையானவற்றைக் கண்டு அஞ்சி, அவற்றை ஒதுக்கு. பொன்னைத் தீயிலிட்டுக் காய்ச்சித் தூய்மையாக்குவதுபோல், மனிதர்களும் தத்தமது முயற்சியாலும் நடவடிக்கைகளாலும் தமைமத் தாமே தூய்மைபடுத்திக் கொள்ள வேண்டும்.

நன்னம்பிக்கை கொள்; துக்கமும் துயரமும் உன்னை அணுகாது. நேர்மையாக நட; அஞ்சாதே.

நல்லெண்ணமற்ற இனிப்புப்பேச்சு, மணமற்ற மலரைப் போன்றது.

கவரப்படுபவன் வீரனல்ல. உன் குறைகளை எடுத்துக் காட்டுபவனே உனக்கு நற்புதையலை கட்டிக் காட்டுபவனாவான். வைரம் வைரத்தை அறுப்பது போல; கேடு செய்வதால் அக்கேடு செய்தவருக்கும் கேடுதான் விளையும்.

நல்ல உடல்வளமே சிறந்த "வரப் பிரசாதம்" மனத்திருப்தியே சிறந்த சொத்து. அன்பே தோழன். அவரவர் செயலே அவரவரை உயர்த்துவதும் தாழ்த்துவதும். அமைதியான, அன்பான, தோழமையான வாழ்க்கை நடத்து. உழைத்துப் பிழை. தேவையான அளவுக்குத் தேடிக்கொள். தேவையானவர்களுக்குத் தேடித்தா. இத்தகையநல்வாழ்க்கையேமெய்யின்பமாகும்.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்

## இதயம்

மலர் 6 | சேலம் 16—11—56 | இதழ் 20

# நல்லுணர்விலே நஞ்சு!

பக்தி முக்கியமா?—பகுத்தறிவு முக்கியமா? பக்தி பெரிதா?—பகுத்தறிவு பெரிதா?

பக்தியே முக்கியம்—அதுவே பெரிது என்பர், பக்தியாலே நாடு நலம் பெறும் என்று சொல்லுகின்ற பழமை விரும்பிகள்.

பகுத்தறிவு முக்கியம்—அதுவே பெரிது, நல்வாழ்வுக்கு ஏற்றது என்போம் பகுத்தறிவு வாதிகளாகிய நாம். கருத்துக்கள் மோதுகின்றன!

பக்திக்கும், பகுத்தறிவுக்கும் நடைபெறுகின்ற இந்தப்போட்டியிலே, காலத்திற்கும், வாழ்வுக்கும் தேவையான பகுத்தறிவு வெல்லுகின்றது. தேவையற்றதான—மடமையின்பாற்பட்டதான பக்தி படுதோல்வியடைகின்றது. இதனைப் பார்த்துப் பதைக்கின்றனர், புண்ணிய காதை புகன்று பக்தி வளர்க்கும் புத்திசாலிகள்!

அவர்களிலே ஒருவரான ராஜாஜி, "நவம்பர் 11-ம்நாள் 'கல்கி' இதழில் என்னுடையகருத்து" என்ற தலைப்பிலே, பகுத்தறிவு தேவையற்ற பக்தர்களுக்கு அபயஸ்தம் அளிக்கிறார்!

"பக்திக்கும் சமயங்களுக்கும் அடிப்படை ஆதாரமான புண்ணிய கதைகளும், திருவிழாக்களும் எல்லாம் கதை. உருவகம், நீதி போதிக்கும் கற்பனைகள், அவ்வளவே என்று ஒரு சாரார் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். பகுத்தறிவுக்கும் பக்திக்கும் நடக்கும் போட்டிச் சண்டையில் தோல்விக்கு பயந்து அந்தமாதிரி பேச வந்திருக்கிறார்கள். இதை நான் ஒப்புக்கொள்ள இயலாது இது தோல்வியை ஒப்புக்கொள்வதாகவே முடியும்."

தோல்வியை நாணயமாக ஒப்புக்கொள்ளுகின்ற நல்லவர்களை நோக்கி "ஐயயோ! ஆபத்து, தோல்வியை ஒப்புக்கொள்ளாதே, சண்டித்தனம் செய் மூக்கறையான் வேஷம்போடு" என்கிறார் பக்திவளர்த்து நாட்டைப் பாழாக்கும் பரம்பரையின் தலைவர்! மேலும் அவர் சொல்லுகின்றார்: ராமாயணமும், பாரதமும் வெறும் நீதிக் கதைகள் அல்லவாம். பாரத மக்களுடைய உள்ளங்களை, குயவன் மண்ணிலிருந்து பாண்டம் செய்வதுபோல் பண்பட்ட உயிர்களாக ஆக்கியிருக்கின்றனவாம். சீதையும் ராமனும் லட்சுமணனும் பரதனும் இந்தநாட்டு மண்ணிலிருந்து உண்டாகி உயிர்கொண்டு வாழ்ந்தவர்களாம்!

"ராமாயணமும், பாரதமும் நீதிகளை போதிக்க எழுந்தவை" என்று கூறிடும் வினோபாஜி, குன்றக்குடியார் போன்றவர்களின் கருத்துக்கள், அவற்றின் தெய்விகத்தை—புண்ணியத்தைப் பாழ்படுத்தி விடுகின்றதாம். பாதுகாக்கப் புறப்படுகின்றார் இந்தப் பஜகோவிந்தம்!

ராமாயணம் பாரதம், பாகவதம் போன்றவை புண்ணிய கதைகள் உண்மையானவை; உயர்ந்தவை. பக்தியென்ற அடிமைமயக்கம் கலந்து அவைகள் பரப்புகின்ற வருணாசிரம தர்மப் பித்தலாட்டங்கள், சமுதாய பேதாபேதங்கள், ஆண்டான் அடிமை முறைகள், மனிதப் பண்பழிக்கும் சோம்பேறித் தத்துவங்கள், சுயமரியாதையற்ற சரண்டல் சம்பிரதாயங்கள் புனிதமானவை என்று பஞ்சாங்கமும், தர்ப்பையும் ஏந்திப் பிழைக்கும் சவுண்டிப்பார்ப்பனர் சொல்லலாம்; சங்கரரும் சொல்லலாம். சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியாரா சொல்லுவது?

நாட்டின் பிற்போக்கு சக்திகளை மழித்து, பகுத்தறிவு பூர்வமான சமதர்ம சமுதாயத்தை நிர்மாணிக்க வேண்டும்என்ற எழுச்சியும், ஆர்வமும் மக்களிடையே காட்டுத்தீப்போல் பரவிவருகின்றபோது, ராஜாஜியைப் போன்ற தொண்டு கிழவர்கள், அந்த நல்லுணர்விலே நஞ்சினைக் கலப்பது நாட்டுக்கு நல்லதல்ல. அவர்களுக்கும் நல்லதல்ல என்பதே எம்முடைய கருத்து.

—ப. கண்ணன்.






[முன் இதழ் தொடர்ச்சி]

சீலா:- பேசிப் பயனில்லை மகாராணி! வெல்லவேண்டும் பகையை! வேரறுக்க வேண்டும் சதியை!

சங்கா:- அதற்கு என்ன செய்ய வேண்டுமென்கிறீர்?

சீலா:- தக்க நடவடிக்கைகளை இப்பொழுதே எடுக்கவேண்டும். வஞ்சகத்தை வாழ விடக் கூடாது. காட்டிக்கொடுக்கும் கயவர்களைப் பூட்டிவைக்க வேண்டும் சிறைச்சாலையில்.

(ஒரு வீரன் வருகிறான்)

வீரன்:- வணக்கம், மகாராணி!

சங்கா:- என்ன செய்தி?

வீரன்:- இளைய மகாராஜா, தங்களைப் பார்க்க விரும்புகிறார்.

(அமைச்சரும், மகாராணியும் பார்த்துக் கொள்கின்றனர்)

சங்கா:- திருடன் தலையாரியிடமே வருகிறான். நல்லது; வரட்டும்.

(வீரன் செல்ல, சந்திரவர்மன் வருகிறான்)

சந்தி:- வணக்கம் தேவி! விபரீதச் செய்தியொன்று! ஓவியனாக நடித்தான்; நமது ஆட்சியைக் கவிழ்க்க சூழ்ச்சி செய்தான் ஒற்றன் மைத்ரேயன்!

சங்கா:- அப்படியா? உண்மையாகவா?

சீலா:- அவர், உமது நண்பராயிற்றே?

சந்தி:- நண்பனாகக் கோலமிட்ட நரிக்குட்டி. தேவி! இதோ பாருங்கள், சாளுக்கிய மன்னனின் சதிவோலை! (கொடுத்து) இதைக் கண்டதும், துண்டம் துண்டமாக வெட்டி வீழ்த்தினேன் அந்தவீணனின் உடலை!

சீலா:- கொன்றே விட்டீரோ? நன்று செய்தீர்!

சங்கா:- (படித்து) ஆ! மைத்ரேயன் திட்டப்படி, குருக்கோட்டைப் போர்முனையிலே மன்னவர் வஞ்சகமாய்த் தாக்கப் பட்டிருந்தால்.......

சீலா:- அப்படியொரு திட்டமா? ஆனால், நானறிவேன் நேற்றுவரை மன்னவர் போர் முனைக்கே போகவில்லை.

சந்தி:- போகவில்லையா? ஏன்?

சீலா:- எலியைக் கொல்லுவதற்குப் புலி தேவையில்லை. மன்னவர் களம் புகுமுன்பே பகைவரின் பலம் சரிந்துவிட்டதே!

சங்கா:- என்றாலும், அவர் உடனே அறிய வேண்டும் இந்த சதித் திட்டத்தை.

சீலா:- பாண்டியன் படையெடுப்புச் செய்தியோடு, இதனையும் சேர்த்து இப்பொழுதே அனுப்புகிறேன், மகாராணி!

சந்தி:- (வியந்து) பாண்டியன் படையெடுப்பா? ஏன்? எதற்கு? எப்போது?

சங்கா:- மன்னவரை வீழ்த்தி, உம்மைச் சிங்காதனத்தில் ஏற்ற திட்டப்படி புறப்பட்டு விட்டது பாண்டியன் படை.

சந்தி:- (அஞ்சி) ஆங்! ... அபாண்டம்!

சங்கா:- இல்லை. உமது சதித் திட்டத்தின் அற்புதம்!

சந்தி:- இது, ஆதாரமில்லாத குற்றச் சாட்டு.

சங்கா:- பாவம்! உமக்கு வந்த ஓலை உமக்கே கிடைத்திருந்தால், இங்கு வந்தே இருக்கமாட்டீர்! மதிவளம் மிக்க மைத்துனரே! ஓவியன் மைத்ரேயன் சதிக்கு ஆதாரம், சாளுக்கிய மன்னனின் முடங்கல். உமது சதிக்கு ஆதாரம், இதோ பாண்டிய வேந்தனின் முடங்கல். (காட்டுகிறாள்)

சந்தி:- (அஞ்சி) ஆ! ... என்ன!.... என்ன! ... எனக்கொன்றுமே தெரியாதே!

சீல:- கள்ளனுக்குள் குள்ளன் பாய்ந்தான்; குள்ளன் ஒழிந்து விட்டான்! கள்ளன் கலங்குகின்றான் அகப்பட்டுக்கொண்டு!

சந்தி:- அமைச்சரே! எனக்கும் பேசத் தெரியும்.

சங்கா:- அது எனக்கு நன்றாகத் தெரியுமே! ஆனால், விவாதம் புரிய நேரமில்லை. மைத்துனரே! மைத்ரேயன் சதிக்கு மரண தண்டனை பெற்று விட்டான். உமது சதிக்கு நான் சிறைத் தண்டனை யளிக்கிறேன். மன்னவர் வந்தபிறகு என்னவோ செய்யட்டும். யாரங்கே?

வீரர் இருவர்:- (வந்து வணங்கி) மகாராணி!

சங்கா:- இவரைச் சிறையிலே வையுங்கள்.

வீரர்கள்:- உத்தரவு.

(தலைகவிழ்ந்து நிற்கும் சந்திரவர்மனை இழுத்துச் செல்லுகின்றனர்)

சங்கா:- அமைச்சரே! இந்த இரு சதி ஓலைகளோடு ......

சீலா:- இப்பொழுதே மன்னருக்குச் செய்தி யனுப்புகிறேன் மகாராணி!

(ஓலையைத் தர, அவர் வாங்குகிறார்)

## காட்சி 14.

(தைலபனை வென்றடக்கி, வீரமுழக்கத்தோடு காஞ்சி நோக்கி வந்து கொண்டிருக்கிறது, நந்திவர்மனின் படை—நிழற் காட்சி)

(மலைக் காடு. அந்திவேளை. மரங்கள் சூழ்ந்த பகுதியில் தங்கல், மன்னவரும், சேனாபதியும் தனித்திருக்கின்றனர்)

நந்தி:- சேனாபதி! படைவீரர்கள் தங்குவதற்குரிய வசதிகள் யாவும் செய்து முடித்தீரா?

விக்ர:- செய்துவிட்டேன் மகாராஜா!

நந்தி:- சேனாபதி! தோல்வியடைந்த தைலபன், நமது நிபந்தனைகள் யாவும் அப்படியே ஒப்புக் கொண்டானே; அதன்படி நடப்பானா? நீர் என்ன நினைக்கிறீர்?

விக்ர:- நிச்சயம் நடப்பான் மகாராஜா! போரில் பெருத்த சேதம். நமது பலத்தை நன்றாக உணர்ந்துவிட்டான்.

(ஒரு வீரன் வந்து வணங்குகிறான்)

நந்தி:- காஞ்சியினின்றும் வருகிறாயா? என்ன செய்தி?

வீரன்:- மகாராணியாரின் மடங்கல். (கொடுக்க)

நந்தி:- (வாங்கிப் பார்த்து) ஆ! இவ்வளவு பெரிய சதியா? எனது ஆட்சியைக் கவிழ்க்கவும் என்னைத் தொலைக்கவுமா? இவ்வளவு துணிவா?

விக்ர:- மகாராஜா! விளங்கவில்லையே!

நந்தி:- குருக்கோட்டைப் போர்முனையிலேயே என்னைக் கொல்ல ஒரு திட்டமாமே! உமக்கேதேனும் தெரியுமா?

விக்ர:- தாங்கள்தான் போர்க்களத்திற்கே வரவில்லையே!

நந்தி:- வந்திருந்தால் சதி நடந்திருக்குமோ?

விக்ர:- ஒருக்காலும் நடந்திருக்க முடியாது. நானல்லவோ அருகில். தங்களுக்காக எனது உயிரையே கொடுத்திருப்பேனே!

நந்தி:- இது, சாளுக்கிய மைத்ரேயனின் சதி. ஒழிந்தது; ஒழிந்தான். மற்றொன்று: சந்திரவர்மனை மன்னனாக்க காஞ்சியின்மீது படையெடுத்துள்ளானாம் பாண்டியன் சீவல்லபன். சதிகாரப் பயல்கள்! என்ன வேலை செய்கின்றார்கள்!

விக்ர:- விபரீதமாக இருக்கிறதே!

நந்தி:- வினையமாகவும் இருக்கிறது, என் தம்பியின் வஞ்சகம்! சேனாபதி! பாண்டியன் படை, சந்திரவர்மனின் செய்தியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது, பெண்ணையாற்றங்கரையில்! சிறையிலே கிடக்கிறான் அந்த சகோதரத் துரோகி!

விக்ர:- (வியந்து) சிறையிலா? சந்திரவர்மரா?

நந்தி:- ஆம்! கிடக்கட்டும் அவன். நாம் விடக் கூடாது பகைவரை. இப்படியே பெண்ணையாற்றங்கரை சென்று, பழிபாவத்திற்குப் பரிந்து வந்திருக்கும் பாண்டியன் படையை அழித்து நிர்மூலமாக்கி விட்டுத்தான் காஞ்சி நகர் திரும்ப வேண்டும். நாடறிய வேண்டும்—நயவஞ்சகர் உணரவேண்டும் கழற்சிங்கனின் வல்லமையை! சேனாபதி! காலை அருணோதயத்திற்கு முன் புறப்படச் சித்தமாகட்டும் நமது படை!

விக்ர:- கட்டளை மகாராஜா!

(வணங்கிச் செல்கிறான்)

நந்தி:- வீரனே! வா, மகாராணிக்கு ஓலையொன்று தருகிறேன்.

வீரன்:- உத்தரவு.

(மன்னவர் செல்ல, தொடருகிறான் வீரன்)

(வளரும்)



(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ப. கண்ணனின் வசனங்களுக்காகவும், கல்யாணசுந்தரம், மருதகாசி பாடல்களுக்காகவும், விஸ்வநாதன்—ராமமூர்த்தி இசையமைப்புக்காகவும், சித்தப்பா செயராமன் கானத்திற்காகவும் பார்த்து மகிழவேண்டிய படம் "பாசவலை"

—க. அண்ணாமலை, சேலம்.

★ ★

ஏழைமைக்கு வக்காலத்து வாங்கிடும் சில நிகழ்ச்சிகள். கருத்துக்கு இனிப்பூட்டும் அழகான பாடல்கள். அறிவுக்கு விருந்தளிக்கும் அருமையான உரையாடல்கள் இவைகள் அத்தனையும் அமையப் பெற்ற சோகச் சுரங்கம்தான் மாடர்ன் தியேட்டர்ஸார் தயாரித்து வெளியிட்டுள்ள "பாசவலை" என்ற திரைக்காவியம்!

காமவெறி பிடித்த புத்திரன் கன்னிப் பெண் ஒருத்தியைக் கெடுக்க முயல்கிறான். சமயத்தில் காப்பாற்றப்பட்ட அவள், அவன் அண்ணனும், அரசனுமாகிய மகேந்திரனிடம் நீதி வேண்டி வழக்கு தொடுக்கிறாள். அதன் பலனாக மக்களால் மன்னன் புறக்கணிக்கப்படுகிறான். தன் கோல் முறையில் கறைபடிந்ததைக் கண்ட மகேந்திரன் மனம் தாளாது அதைக் கழுவிக்கொள்ள முடியாது, மனைவி அமுதவல்லியையும் குழந்தைகள் விக்ரமன் பிரதாபன் இருவர்களையும் அழைத்துக்கொண்டு நாட்டைவிட்டகல்கிறான்.

காட்டை அடைந்தபோது, குழந்தைகளின் பசியை தணிக்க மகேந்திரன் கனிபறித்து வர மனைவிமக்களைத் தனியே விட்டுப் பிரிந்து சென்றவன், நச்சுப் பொய்கையில் விஷநீர் அருந்தி மயங்கி வீழ்கிறான். மணாளன் வரவிற்காகக் காத்துநின்ற அமுதவல்லி காட்டு மிருகங்களுக்குப் பயந்து, ஆற்றைக் கடக்க முயல்கிறாள். அந்தோ, குழந்தைகள் இக்கரையில் ஒன்றும் அக்கரையில் ஒன்றுமாக ஏங்கித் தவித்து அழ, அமுதாவை ஆற்றோடு அடித்துச் செல்லப்படுகிறாள்.

அழகான அன்புக் குடும்பம் அக்கு வேறு ஆணி வேறாகப் பிரிக்கப்பட்டு, பல துன்பங்களைப் பரிசாக அடைந்து இறுதியில் ஒன்று சேருகிறது.

கதை பழமையானது. என்றாலும் அதில் காலத்திற்கேற்ற கருத்து வைரங்களை அங்கங்கே பட்டைதீட்டிப் பளிச்சிடவைக்கிறது "பகுத்தறிவு" சாணைகள்! திரு. ப. கண்ணன் அவர்களின் அழகு வசனங்கள் சுவையாக இருக்கின்றன.

திரு. ப. க. அவர்களின் பகுத்தறிவுக் கொள்கைக்கு எதிராக பட அதிபர்களோ—மற்றவர்களோ சோதனை ஏற்படும்போது, லாவகமாக தட்டிக்கொண்டு "என்லட்சியம் அறியாமை இருளை அகற்றுவதுதான்!" என்று மெய்பட கூறாமல் கூறிவிடுகிறார், சில வசனங்களில்!

மகேந்திரன் தன் தம்பியின் திருந்திய மனதையும் தியாக புத்தியையும், அவன் இன்னுயிர் சிலவினாடிகளில் இறக்கப் போவதையும் கேட்டுக்கதறிடும் கட்டத்திலும், கிராஞ்சலியிடம் தன் மனைவி அமுதவல்லியின் அன்பையும் பண்பையும் எடுத்துக்கூறி அழுதிடும் போதும், தன் செங்கோல் கறைபடிந்தது என்று கேட்டு குமுறும் கட்டத்திலும் திரு. ப. க. அவர்களின் பண்பட்ட எழுத்துவன்மை நம் இதயங்களை நெருப்பில் காட்டிய மெழுகாக்கி விடுகிறது.

மகேந்திரனாக வரும் எம். கே. ராதா அவர்களின் நடிப்பு மேற்குறிப்பிட்ட இடங்களிலும், வைத்தியரைமாற்றி உலகத்தை எள்ளி நகையாடும் கட்டத்திலும், நெருப்பால் வெந்து மடியப் போகும் தன் மனைவி அமுதாவைக் காப்பாற்ற ஓடிவரும் கட்டத்திலும் அபாரமாய் இருக்கிறது.

அமுதாவாக வரும் ஜி. வரலட்சுமியும், கிராஞ்சலியாக வரும் எம். என். ராஜமும் தன் பாத்திரங்களை நன்கு உணர்ந்து நடித்திருக்கின்றனர். குமாரி ராஜாமணி சொல்லிப்பாவையாக வருகிறார். சோபை இல்லை.

புத்தராஜுவாக வரும் வி. கோபாலகிருஷ்ணன் நன்றாக நடித்திருந்தாலும் சில சமயம் நாடகபாணியில் பேசுகிறார்.

மாஸ்டர் பாஜி, வெங்கடேசன் குழந்தைகளாக சொல்லமுடியாதபடி நடித்திருக்கின்றனர். நகைச்சுவையளிக்க [illegible]யும் முத்துலட்சுமியும் வருகின்றனர். தங்கள் வேலையைச் செவ்வனே செய்துள்ளனர். டைரக்டர் ராவின் நடிப்புமிக அபாரம். காட்சி அமைப்புகள் ஒலி, ஒளி மிக்கன்று.

## முன்னேற்றப்—
## —பாதையிலே

**சேலம்.**

சென்ட்ரல் டாக்கீசுக்கு எதிரே, தி. மு. க. மாவட்ட அலுவலகக் கட்டடத்தில், 18-11-56 ஞாயிறு காலை, தேர்தல் நிதி சேர்ப்பதுபற்றி ஆலோசிக்க, சேலம் நகர தி. மு. க. மாணவர் கழகத்தின் கூட்டம் நடைபெறும். தோழர், வி. செல்வப்பிரகாசம் B. A; B. L. தலைமை வகிப்பார். திராவிட மாணவர்கள் திரண்டு வருக.

—நடராஜன், செயலாளர்.

பாடல்கள் உயிருள்ளவை. இயற்றியவர்கள்: பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், அ. மருதகாசி. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் உயர்ந்து காணப்படுகிறது.

சங்கீதம் அமைத்தவர்கள் விஸ்வநாதன்—ராமமூர்த்தி. இனிமைக்கு கேட்க வேண்டுமா?

"பாசவலை" ஒரு அழகு சிலை. ஆனால், சிறு குறையும் இருக்கிறது. தவிர்க்க முடியாத சுவைகள் இருப்பதால்.

—இரா. அருணாசலம்.
பக்கவெளி.


தாயகத்திற்கு வெற்றி!
இரண்டேநாட்களில் இருநூறு புத்தகங்கள் விற்பனையாயின!!
முகவுரை — முன்னுரை கிடையாது — அட்டைப்படமில்லை — போர்வையும் போர்த்தப்படவில்லை! குறையும் வெற்றிமுரசு கொட்டுகிறது!
தி. எஸ். தி. ரங்கன் தீட்டிய கருத்தோவியம்.
**தாயகம்** (நாடகம்)
விலை ரூபாய் 1-4-0
கிடைக்குமிடம்:
பகுத்தறிவு அலுவலகம், சேலம்-1

# கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● செ. இலக்குவன், ஓவியர், பொத்தனூர், வேலூர்-சேலம்.

டி. பி. பழனிசாமி, தோளசம்பட்டி.

கே: எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பற்றற்ற கடவுள், ஏன் மனைவி மக்களோடு இன்பமாக வாழவேண்டும்?

ப: கடந்து நிற்கவும், உடைந்து போகவும் அவர் விரும்பினாலும், கல்யாணவிழா நடத்தி, படுக்கையறையில் பாலும் பழமும் வைத்து, இன்பமாக வாழுங்கள் என்று இந்த பக்தர்கள்தானே தொல்லை கொடுக்கிறார்கள்!

* * *

கே: பக்திப் பாதையும் அறிவுப் பாதையும் சந்திக்கும்போது உறவு கொள்ளுமா?

ப: அறிவு, மக்களின் கூட்டுறவை விரும்பும். பக்தியோ, பகவானின் பாதார விந்தத்தையே விரும்பும்; உறவு எப்படி மலரும்?

து. ப. மாரியப்பன், துறையூர்.

கே: பெண்ணின் அறிவை எதைக் கொண்டு அளப்பது?

ப: ஆணின் அறிவை அளந்திடும் கோலே பெண்ணுக்கும் பொருந்தும்.

* * *

கே: படத்தொழிலை அரசாங்கத்திற்குச் சொந்தமாக்கினால் என்னவாகும்?

ப: படாதிபதிகள் செய்கின்ற தவறுகளை, அரசாங்கமே செய்யவேண்டிய நிலைமை ஏற்படும்.

அறிவழகன், கொழும்பு-11.

கே: பாரத அரசாங்கத்தில் தமிழர் உரிமைகள் மறிக்கப்பட்டிருக்கின்றனவே; அவர்களை என்ன செய்வது?

ப: பாரதத்தார்களே! உங்கள் சமானத்துவம் எங்களுக்குத் தேவையில்லை யென்ற முடிவினை, பொதுத் தேர்தலில் காட்ட வேண்டியதுதான்.

முரசுமணி, திருவண்ணாமலை.

கே: விதி என்பது என்ன? விதியை வென்றவர் யார்?

'விதி"யைச் சட்டமென்று கூறுவோம்; அதற்குக் கட்டுப்பட வேண்டும். 'தலையெழுத்து' என்பர் வைதிகர்கள். அந்த மடமையை வென்றவர்களிலே ஒருவர் இளங்கோ அடிகள்!

● செ. இலக்குவன், பொத்தனூர்.

கே: கலை, கட்சி, காதல் இவை மூன்றும் எத்தன்மைத்து?

ப: கலை, அழகும் சுவையும் நிரம்பியது; கட்சி, கொள்கையும் பணியும் கொண்டது; காதல், இன்பமும் அன்பமும் இணைந்தது.

* * *

கே: உலகில் யாரை நம்பலாம்? ஏன்?

ப: நல்ல மனிதனை நம்பலாம்; அவர் நல்ல மனிதராக இருப்பதால்.

க. குருநாதன், காரமடை.

கே: திருமால் மண்ணையும் விண்ணையும் இரண்டடிகளால் அளந்து, மூன்றாவது அடியால் மாவலிச் சக்கரவர்த்தியைக் கொன்றது உண்மையா?

ப: வெறும் கற்பனைக் கதையென்றாலும் விட்டு விடலாமே. தெய்வீகம் கலந்த புராணப் புளுகைப்பி! நம்பாதே!

**பாரிஸ் அழகிகள்.**

கவர்ச்சிமிகுந்த பாரிஸ் யுவதிகளின் இயற்கை அழகை பலவித படுக்கையறைத் தோற்றத்தில் காணவல்ல 36 அசல் போட்டோ படங்கள் ரூ. 10 முன்பணம் அனுப்பினால் தபால் செலவு இலவசம் [illegible]

வீனஸ் டிரேடிங் கம்பெனி(த ப)
தபால் பெட்டி 1693,
சென்னை-1

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

கட்சி; ராஜாஜியும், அவரது ஆட்களும் செலித்தால் தமிழனுக்குத் தீங்குநேரும் காமராஜரும் அவரது ஆட்களும் செலித்தால் தமிழனுக்கு நன்மை கிடைக்கும்" என்று புதுமையான பிரசாரம் துவக்கியுள்ளார். எனவே இவரைப் பின்பற்றுவோர் காங்கிரசுக்குள்ளேயே காமராஜர் ஆட்களை ஆதரிக்கவும், ராஜாஜியின் ஆட்களை எதிர்க்கவும் கடமைப் பட்டவர்களாகின்றனர். இப்படியாக கருப்புச் சட்டை, கதர்ச்சட்டைக்குள் நுழைகின்றது!

காமராஜர் பேசுகின்ற காங்கிரஸ் கூட்டத்திலேயே, ராஜாஜியின் கையாள் சுப்ரமணியமும் பேசுகிறார். கலவரமும் நடக்கிறது! காரணம் ஏதாக இருக்க முடியும்?

காமராஜர் வென்றாலும், சுப்ரமணியம் வென்றாலும் அது காங்கிரஸ் வெற்றிதான்; வடநாட்டு அடிமைகளின் வெற்றிதான்; தமிழ்நாடு என்று பெயரிடவும், தமிழனுக்குரிய நிலங்களைப் பெறவும், தமிழ்நாட்டை வளப்படுத்தவும் தகுதியற்றவர்களின் வெற்றிதான் என்பதாகவே தி. மு. க. கருதுகின்றது. கருத்திலே தெளிவு இருக்கின்றது; எனவே கலவரம் தேவையில்லை. எதிர்ப்பினைச் சமாளிப்போம்; பழிகளை, அபாண்டங்களைத் துச்சமென மதிப்போம். தூய்மையோடு தாயகவிடுதலைக்குப் பணியாற்றுவோம் வாருங்கள் தோழர்களே!

—வாலி.

உலகிலேயே இன்று நாம் இழிந்த நிலையில் வறுமை வாய்ப்பட்டு உழலுவதற்கும், எடுப்பார் கைப்பிள்ளையாக ஏமாந்து விழிப்பதற்கும் நமது பழைய நாகரிகத்திலுள்ள தீய அம்சமே காரணமாகும்.

—ஜவகர்லால்நேரு.



(2-ம் பக்கம் தொடர்ச்சி)

கொண்டு, மற்றொன்றிலும் 100-க்கு 20 சத விகிதம் தெலுங்குக்குப் போனாலும் மீதி 80 சதவிகிதமாவது தமிழுக்குப் பயன்பட வேண்டுமென்று கோருவது நியாயமான கோரிக்கையென்பதை மறுக்கமுடியாது.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள சென்னை, திருச்சி இரண்டு நிலையங்களிலும் நிருவாகிகள், நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள் நியமனத்தில், சென்னை முதல் அமைச்சர் திரு. காமராசரும் கவனஞ் செலுத்தி, தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற முன்வருவாரென்று நம்புகிறோம்.

குறிப்பு:–

திராவிட கழகத்தலைவர் எனப்படுபவரும் திருச்சி வழக்கறிஞருமான தோழர், தி. பொ. வேதாசலம் அவர்கள் அண்மையில் வெளியிட்ட ஒரு அறிக்கையின் முக்கியப் பகுதி, இது! தமிழை மறந்த வானொலி நிருவாகிகளும், "தமிழ்நாடு" மறந்த ஆளவந்தார்களும் கவனிப்பார்களா? ●

## தென்றல் வெளியீடு.

**நாடகங்கள்.**

ப. கண்ணனின்

| | |
|---|---|
| புரட்சிப்பாடகன் | 1—8—0 |
| வீரவாலி | 1—4—0 |
| கன்னியின்சபதம் | 0—8—0 |
| மின்னொளி | 0—6—0 |

மு. கருணாநிதியின்

| | |
|---|---|
| ஒரே முத்தம் | 1—4—0 |

*

வாணிபர்க்குக் கழிவு உண்டு.

*

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
குமாரசாமிப்பட்டி, :: சேலம்-1.

# மொழித்தூய்மை கெடுகிறதே!

பாவலர்–வேலாயுதசாமி

அழகான மொழி, தனித்தியங்கும் தகுதி பெற்ற மொழி, ஏனைய மொழிகட்கெல்லாம் தொன்மை வாய்ந்த தாயமொழி, கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு ஆகிய நன்மொழிகளையீன்றெடுத்தும் இளமை நலங் குன்றாத இனியமொழி. சொற்கள் பலிந்தது, எடுக்க எடுக்கக் குறையாத எதுகை மோனை வளங்கொண்டது. கற்பனை யூற்றும், காவியத் திறமையுங் கருத்தினிக்கத் தரவல்ல கற்கண்டு போன்றது, நமது கன்னித் தமிழ்மொழி. மறுப்பாரில்லை; மாற்றியுரைப்பாருமில்லை. எனினும்,

முற்காலத்து முதுபெரும் புலவர்கள், நாவலர்கள், பாவலர்கள், தமிழறிஞர்கள் அத்தகு தமிழ்மொழியைக் கற்றுக் கொண்ட எண்ணமும் முறையும் வேறு இக்காலத்திற் கற்றுக் கொண்டதாக நினைத்துக் கொண்டிருக்கும் இளந் தமிழர்களின் எண்ணமும் முறையும் வேறு. அக்காலத்தில் தேனெனத் தித்திக்கும் செந்தமிழ் மொழியின்பால் எழுந்த அளவு கடந்த ஆர்வத்தினால் குற்றங் குறையின்றித் தெள்ளத் தெளியக் கற்க வேண்டுமென்று தக்க ஆசிரியரை யணுகி, அன்பு செலுத்தி மனக்கத்துடனும், முயற்சியுடனும் கற்றுத் தேர்ந்தார்கள்; கவின்பெறும் பல நூல்கள் எழுதினார்கள்; தமிழன்னையைப் பிழையறப் பேணிவளர்த்துப் பெருமையடைந்தார்கள்.

இக்காலத்திலோ நாவற்றமிழன், பத்திரிகைத் தமிழுமே தமிழ்க் கடலின் இரு கரைகளென எண்ணி ஏமாந்து, புகழும், பெருமையும், பொருளும் விரைவில் அடைய வேண்டுமென்று அவாக் கொண்டு பிழைமலிந்த உரை நடைகளும், கவிதைகளும், பாடல்களும் எழுதத் துணிந்து விட்டார்கள். மொழிக்காகவும், கலைக்காகவும் கற்பதை விடுத்துப் பொருளுக்காகவும், புகழுக்காகவும் கற்கத் தொடங்கியதன் விளைவாக தமிழ்மொழி பல வகையில் சீர்கெட்டுத் திரிந்தும், தனக்குரிய எழில் உருவம் மாறுபட்டும், விகாரத் தோற்றத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறது.

இந்த நிலை மாறாமல் இப்படியே இருக்குமானால், உலகம் புகழும் உன்னதத் தமிழ்மொழி, எவரும் வெறுக்கும் அளவுக்கு இழிநிலையடைந்து விடுமென அஞ்சவேண்டியிருக்கிறது. சான்றுக்கு சில:– சுவரில், தலற்றை, வெண்ணெய், நிலைமை, அடிமை. இவற்றிற்குப் பதில் சுவற்றில், தவறை, வெண்ணை. நிலமை, அடமை, இப்படிச் சொற் பிழைகள்.

அவ்வழகிய, நற்றேன், அந்நாள், இவற்றிற்குப் பதில், அவ்அழகிய, நற்தேன், அன்நாள், இப்படிச் சொற்றொடர்ப் பிழைகள் பலப்பல!

மற்றும், எழுத்துப் பிழைகள்: ர-ற ல—ழ—ள, ன-ண மாறுபாடுகள். வட சொற்கள், ஆங்கிலச் சொற்கள் பெருமளவிற் கலந்து எழுதல் முதலியவைகளால் தமிழுக்குப் பெருந் தீங்கிழைக்கின்றனர். உரைநடையிலேயே இக் கேடென்றால், கவிதையிற் சொல்ல வேண்டுமோ? செழித்துப் படர்ந்த பசுங் கொடியில் மலர்ந்து மணம் வீசி அசைந்தாடி அழகு தரும் வண்ண மலரைப் பறித்துப் பிய்த்துக் கசக்கிக் குப்பை மேட்டில் எறிந்துள்ளதைப் போன்று காணப்படுகின்றது! இப்படி மனம் போன போக்கில் எழுதிப் பத்திரிகைகளாகவும், புத்தகமாகவும் வெளியிடுகின்றனர். இவைகளன்றித் திரைப்படத்தின் பாடல்களோவெனில் பார்க்கக் கண் இடறுகின்றது; சொல்ல வாய் கூசுகின்றது; தமிழ்மொழிதானோவெனஐயமெழுகின்றது. அப்படி அலங்கோலமான நிலைமை. இவைகள், தமிழ் மொழியின் தூய்மையிலும், வளர்ச்சியிலும் அக்கறையுள்ளவர்களுக்குப் பெரிய மன வேதனை தரக்கூடிய செயல்களும். மொழிப்பற்று மிக்க தமிழ்ப் பேரறிஞர்கள் தக்க கவனஞ் செலுத்துவார்களானால் இப்போக்கை மாற்ற முடியாதா? ★



## பாசவலை.

இறந்த பதவி—பிரிந்த குடும்பம் இழந்த கண்கள் இவைகளை திருப்பபெற்ற மன்னனின் வாழ்க்கை ஓவியம். 'அலிபாதுஷா' என்னும் முகலாயக் கதையின் அடிச்சுவட்டை பின்னணியாகக் கொண்டு, தமிழர் பண்பாட்டிற்கேற்றவாறு 'பாசவலை'யைப் படமாக்கியிருக்கின்றனர், சேலம் மாடர்ன் தியேட்டர்ஸார்.

"பகுத்தறிவு" ஆசிரியர் ப.கண்ணன் திரைக்கதை, வசனங்களை எழுதியிருக்கிறார்.

கொல்லியமலை மூலிகைக்குச் சொந்தக்காரியாக சூனியக்காரியை சிருஷ்டித்திருப்பது நன்றாக இல்லை.

"பாலநாகம்மா" (தெலுங்கு) படத்தில் வரும் 'நாய்' காட்சிகள் வெகுவாக மக்கள் மனதைக் கவர்ந்துவிட்டதாகக்கருதி—நாயின் நன்றியை வெளிப்படுத்தும் விதத்தில், படமாக்கினால் பாராட்டுதலைப்பெறமுடியுமென்று புரந்தரன் நாயாக்கப்படுகிறான். அந்தக் கட்டம் அறிவுக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது. காலத்திற்கேற்றதல்ல.

நல்லப்பன்—செல்லம்மா நகைச்சுவை கதையை ஒட்டி வருவது சுவையாக இருக்கிறது. அவர்களிடம் குழந்தை பிரதாபனை வளரவிட்டது மிகப் பொருத்தம்.

வசனம் தென்றுதமிழ் நடையில், எடுப்பான வார்த்தைகளால் மிடுக்காக அமைக்கப்பட்டிருக்கிறது. குற்றம் குறை கூறமுடியாதபடி வசனங்கள் அளவோடு இருக்கின்றன.

ஆரம்பக் காட்சியிலே உணர்ச்சியை தூண்டும் பேச்சுகள் வருகின்றன—மக்கள் சக்திக்காக மகேந்திரன் முடிதுறக்கும் கட்டத்தில், கருத்து மாரி பொழிகின்றது!

"எம்பெருமான் கிருபை" நவகோடி நாராயண செட்டியார் பாகத்தில் சுயமரியாதைத்துவங்கள் செறிந்திருக்கின்றன.

சகோதர பாசம்—தாய்ப்பாசம்—மகப்பாசம்—சட்டப் பாசம் போன்ற விளக்கங்கள் முதல்தரம். கலைப்பாசத்தால் அழியும் தொஞ்சலியின் பாத்திரம் ஒரு புதுமை!

பாடல்களை எ. மருதகாசியும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் இயற்றியுள்ளனர், உயர்ந்த பொருள் நயத்தோடு சிறப்பாக அமைந்திருக்கின்றன.

'இந்த ஆட்டுக்கும் நம்ம நாட்டுக்கும்' என்ற பாட்டு, நாட்டு நிலைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு: 'குட்டி ஆடு தப்பி வந்தால் குள்ளநரிக்குச் சொந்தம்' சிறந்த படிப்பினை. 'ஆகாசவீதியிலே அமைதி கொஞ்சும் நிலவினிலே' நாட்டியக் கலைக்கு உயர்வு. சூனியக்காரிக்கென கொடுக்கப்பட்டிருக்கும் பாடல்களில் விரசம் தட்டுகிறது.

விஸ்வநாதம்—ராமமூர்த்தி இவர்களின் இசையமைப்பின் திறமைபுகழத்தக்கதே தென்னகத்துப்பண்டைஇசைமுறைக்கு பங்கம் வராவண்ணம் செய்திருப்பது வரவேற்கத்தக்கது

சிதம்பரம் சி.எஸ். செயராமன், திருச்சி லோகநாதன், ஜிக்கி, லீலா, கோமளா, ஜமுனாராணி மற்றும் பலர் பின்னணி பாடியிருக்கின்றனர். முன்னணியில் நிற்கின்றனர்.

மகேந்திரன்—எம்.கே. ராதா தனக்கு கொடுக்கப்பட்ட பாகத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். வி. கே. ராமசாமி 'நந்தகோபன்' பாத்திரம் சிறிது; போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்று நடிக்கிறார். ஏ.கருணாநிதி இணைத்தவரல்ல. எஸ் எம். திருப்பதிசாமி திருப்திகரமாக நடிக்கிறார். என. என் கிருஷ்ணன், சுந்தரராசன், சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன், ராஜசேகரன் (கணக்குப்பிள்ளை) பரவாயில்லை. புரந்தரன் கோபாலகிருஷ்ணன் எதிர்கால நடிகர். ஜி. வரலட்சுமி அமுதவல்லி பாகத்திற்கு மிக ஏற்றவர். எம். என். ராஜம் ஏ—ஏன்! புதுமுகக் குமாரி ராஜாமணியும் தேவலாம்! டி. பி. முத்துலட்சுமி தனக்கே உரித்தான பாணியில் வருகிறார். நகைச்சுவை தருகிறார்.

டைரக்ஷன் ஏ. எஸ். நாகராஜன் கலை நுட்பங்களை தெளிவுறக் காட்டவும், புதுமைகளைப் புகுத்தவும், ஏனோ தவறி விட்டார்.

ஒலி, ஒளிப்பதிவு தரமாக உள்ளன.

(7-ம் பக்கம் பார்க்க)


வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி & சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.


சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்–1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.


# பகுத்தறிவு

கழக வார இதழ் ஆசிரியர்:- ப.கண்ணன்

மலர் 6 | சேலம் 23-11-56 ★ விலை அணா ஒன்று. | இதழ் 21


## சூனிய வெளியிலே சுழலுகின்ற சாட்டை!

கையெழுத்துப் போடும்போது தன் பெயருக்கு முன்னால் "திரு" என்று போட்டுக் கொள்வதைப் போல், தன்னுடைய பத்திரிகையிலேயே தன் பெயருக்கு முன் "கலைஞர்" என்று அடைமொழி சேர்த்துக் கொள்பவர் ஒருவரின் பத்திரிக்கை, 9—11—56 'பகுத்தறி'வில் வெளியான 'சிவாஜியும் சிவஞானமும்" என்ற கட்டுரையை எதிர்த்துக் கண்டனக்குரல் எழுப்பியிருக்கிறது கட்டுரையின் உட்கருத்தைப் புரிந்துகொள்ளாமல், முன்னுக்குப்பின் முரணாக ஏதேதோ எழுதித் தள்ளியிருக்கிறது. தமிழரசுக்கழகம் ஆளுவோர் வாக்கைநம்பி போராட்டத்தை நிறுத்தியது தவறு என்பதே கட்டுரை வலியுறுத்திக் கூறும் கருத்து என்பதையும் தெளிவாகக் கூறிவிட்டு, நாங்கள் செய்தது தவறு என்றால் நீங்களாவது போராட்டத்தை ஆரம்பிக்கக் கூடாதா என்று கேட்கிறது 18—11—56 "சாட்டை" இதழ்.

அதோடு விட்டிருந்தாலும் நாம் அதைப் பற்றிக் கவலைப் படப் போவதில்லை. ஆனால், தி. மு. கழகத்தினர் கட்டுப்பாட்டற்றவர்களா?" என்று குற்றச் சாட்டை கேள்விக் கணையாக மாற்றி நம்மீது வீசுகிறது. ஜனநாயக முறையை அப்படியே பின்பற்றும் அரசியல் கட்சி தி. மு. க. அதிலிருக்கும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தன்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல உரிமையுண்டு. தனிப்பட்ட மனிதனின் கருத்துக்கு தடைபோடும் அரசியல் கண்ணியமற்றவர்களைத் தலைமையாகக் கொண்டிருக்கவில்லை தி. மு. க. தமிழரசுக் கழகம் போராட்டத்தை நிறுத்திவிட்டதென்றால், அதை ஒவ்வொருவரும் ஒவ்வொரு கண்ணோட்டத்துடன் பார்க்கத்தான் செய்வார்கள். போராட்ட நிறுத்தம் வட எல்லைப் பறிபோவதற்குக் காரணமாக அமைந்துவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்துடன் தான் கட்டுரை தீட்டப்பட்டது. கட்டுரை குறைகூறும் நோக்கோடும், கையாண்டி செய்யும் குறிக்கோளுடனும்தான் எழுதப்பட்டது என்று யாராவது சொன்னால், "காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்நிறம்" என்ற பழமொழிக்கு அவர்களையே எடுத்துக் காட்டாக வைத்துக் கொள்ளலாம்.

தி. மு. க. போராட்டத்தை ஆதரித்ததானாலும், நேரிடையாகப் போராட்டத்தில் குதிக்கவில்லை என்று மற்றொரு குற்றச் சாட்டு! ஒரு கட்சி மற்றொரு கட்சி நடத்தும் போராட்டத்தில்—அந்தப் போராட்டத்தின் நோக்கம்எவ்வளவு உயர்ந்ததாயிருந்தாலும்—கலந்து கொள்ளாததற்கு எவ்வளவோ காரணங்கள் இருக்கலாம். போராட்டத்தில் கலந்து கொள்ளாது போனாலும், மக்களின் ஆதரவைத் திரட்டித்தரும் வகையில் பத்திரிக்கை பிரசாரம் செய்ததே தி. மு. க. கடைப் பிடிக்கும் அரசியல் நாகரிகத்திற்குப் போதுமான சான்றாகும்! "தமிழ் வாழ்க" என்று முழங்கும் தமிழரசுக் கழகத்தினர்—இந்தியை எதிர்க்கும் தமிழரசுக் கழகத்தினர்—அன்று புகைவண்டி நிலையங்களில் திராவிடர்கள் "இந்தி அழிப்புப் போராட்டம்" நடத்தியபோது, அதை எதிர்த்து மறியல் செய்தனரே, அது இந்தக் "கலைஞ"ருக்குத் தெரியுமா?

"பகுத்தறி"வின் கருத்து தி. மு. கழகத்தின் கருத்தாக இருக்க நியாயமில்லை என்று ஒப்புக் கொள்கிறார் கட்டுரை ஆசிரியர். ஆனால், தலைமைக் கழகத்தின் உத்தரவின் மூலம் தமிழரசுக் கழகத்தார் எப்படி

[8-ம் பக்கம் பார்க்க]

கற்பனைலோகத்திலே

ஏ. பி. சாமி.

# கனாக் கண்டேன் தோழி!

"பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப் பொருத்தலும் வல்லது அமைச்சு" என்ற குறளை இசையோடு பாடிய வண்ணம் காமராஜர் அவர்களது பங்களாவிற்குள் நுழைந்தேன். 'விடுதலை'யுங் கையுமாக எதிரே வந்த காமராஜர், "வாப்பா" ஏது, பாட்டு இட்டெல்லாம் பலமா இருக்கே! சினிமாவுக்குப் போயிட்டு வர்றியா?" என்று கேட்டுக் கொண்டே தன் கதர்ச் சட்டையில் பட்டிருந்த கருப்புப் புள்ளியைத் துடைப்பதில் ஈடுபட்டார்.

"இது சினிமாப் பாட்டு இல்லீங்க! குறள்! அதாவது திருக்குறள்! அதைத் தான் ராகம் போட்டு பாடிக்கிட்டு வந்தேன். அதிலே பாருங்க, உங்க பங்களாவைப் பார்த்தவுடன் இந்தக் குறள் நினைவுக்கு வந்தது. உங்க திறமையும் புரிந்தது. உடனே உங்களைச் சந்தித்துப் பேசிட்டு......"

"ரொம்ப சந்தோஷம்! இப்படி உட்கார். டேய் பையா, ரெண்டு ஓவல் கொண்டு வா"

இருவரும் உட்கார்ந்தோம்.

"அப்பப்பா, எகப்பட்ட உஷ்ணமாயிருக்கே,' என்றவர் 'விடுதலை'யை மடித்து விசிறிக் கொண்டே என்னைப் பார்த்தார். அந்தப் பார்வையிலேயே, தமிழ் நாட்டு அரசியலில் வீசும் வெப்பத்தையும், அவர் அதைத் தணித்துக் கொள்ளும் 'முறை'யையும் புரிந்து கொண்டேன்.

"ஏதோ குறளைப் பத்திப் பேசினியே, என்ன அது?"

"ஓ, அதுவா? அதாவது, வள்ளுவர் என்ன சொல்றாருன்னு, பகைவர்க்குத் துணையாயிருப்பவரை அவரிடமிருந்து பிரித்து, தம்மைச் சேர்ந்தோரை பகைவர் பிரித்து விடாமல் பாதுகாத்து, தம்மை விட்டுப் பிரிந்தோரை மீண்டும் தம்மோடு சேர்த்துக் கொள்ளுகிறவர்கள்தான் சரியான அமைச்சர்கள்-அப்படின்னு சொல்றார். இதை அப்படியே நடைமுறையில் செய்து காட்டறவர் நீங்க ஒருத்தர்தான். தி. க. விற்கும், தி. மு. க. விற்கு மிடையில் பகையை வளர்த்து, தி. க. வைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு, காங்கிரஸ் காரர்களையும் விடாது இழுத்துப் பிடித்துக் கொண்டு......"

"ஊக்...என்னோட திறமை உனக்குத் தெரியுது. ஜனங்களுக்குத் தெரியுதா? அன்னிக்கு பாரு, திருச்சியிலே நான் பேசின கூட்டத்திலே ஒரே கலாட்டா...பத்திரிகைக் காரனுங்க இதை சாக்காவச்சிகிட்டு என் மானத்தையே வாங்கிட்டானுங்க"

"என்ன இருந்தாலும், நீங்க இடம் பொருள்பார்த்துப் பேசணும். "அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக" என்று கூட திருவள்ளுவர் சொல்லியிருக்கார். தி. மு கழகத்தாருங்க மாநாடு நடத்தினதிலேயிருந்து திருச்சியே மாறிப் போயிருக்குது...இந்தச் சமயத்திலே... ஆமா, தமிழ்நாடுன்னு ஏன் பெயர் வைக்க வில்லேன்னுதானே கூட்டத்திலே கேட்டாங்களாம். அதுவும் ஒரு விதத்திலே நியாயமாத்தான் படுது..."

"ஏய்! என்ன சொன்னே? என்னைப் 'பச்சைத் தமிழன்னு' சொல்லிப் பாராட்டுற பெரியாரே இதைப் பத்தியெல்லாம் என்கிட்டே பேசறதில்லே!"

"மன்னிக்கணும்! இன்னொரு விஷயம். தேர்தலில் பெரியார் உங்களை ஆதரிக்கப் போறது நிச்சயந்தானே?"

'அதிலென்ன சந்தேகம்?'

"இல்லே...நீங்க நிக்கிற தொகுதியில், பெரியாருக்கு ரொம்ப சொந்தக்காரரா ஒருத்தரைப் பார்த்து தி. மு. க. சார்பில் உங்களுக்கு எதிரா நிறுத்தி வைக்கப் போறாங்களாம்...அப்போ, பெரியார் ஆதரவு...?"

"ஏது, நீயே அவுங்களுக்கு 'பிளான்' போட்டுத்தருவே போலிருக்குதே! போ, வெளியே!" என்று கத்திக் கொண்டே கையிலிருந்த 'விடுதலை'யைக் கொண்டு என்னைத் தாக்க வந்தார். அங்கு பிடித்த ஓட்டம் பெரியார் முன்னிலையில் வந்து தான் நின்றேன்.

'வணக்கம் ஐயா!'

'தேவாசுரப் போராட்டத்தில்' மனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தவர் என் குரலைக் கேட்டு தலை நிமிர்ந்தார்.

'ஏனய்யா, விபீஷணன் அயோக்கியன்தானே?'

'ஆமா, அதிலென்ன சந்தேகம்? நான் தான் ராமாயணத்தை ஆராய்ச்சி செஞ்சு அழுத்தம் திருத்தமா என் புத்தகத்திலே எழுதியிருக்கேனே! வேணுமின்னு அதை வாங்கிக் கிட்டுப் போய்ப் படிச்சுப் பாரு. புத்தகத்து விலை ஒண்ணரை ரூவாண்ணு அச்சுலே போட்டிருக்குது. நீ பன்னெண்டணா கொடுத்துட்டு எடுத்துக்கோ!'

'என்ன இருந்தாலும்...விபீஷணன் இராவணனுடைய தம்பி! அவனும் தமிழன்தானே?'

'தமிழன்தான். ஆனா, வடநாட்டு ராமன் காலிலே போய் விழுந்த சகோதரத் துரோகியாச்சே! அவனை எப்படி நல்லவன்னு சொல்ல முடியும்?'

'அதனாலே என்னங்க ஐயா? இப்ப வடநாட்டு நேரு சொல்றபடி ஆடற காமராஜரை நீங்க 'பச்சைத்தமிழன்'னு பாராட்டலியா? அதுபோல...உம்...

(9-ம் பக்கம் பார்க்க)

வாய்வு சூரணம்.

உஷ்ண வாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, பித்த வாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீரணம், புளியேப்பம், கைகால் அசதி, பசியின்மை, செரியாமை, வயிற்றுவலி, பித்த மயக்கம், பித்தசூலை, சோம்பல் முதலான வாய்வு ரோகங்களை அறவே நீக்கி நல்ல பசி எடுப்பதற்கும், தேகாரோக்கியத்துக்கும் மிகச் சிறந்த சூரணம். மூலிகைகளினால் தயாரிக்கப் பெற்றது (பத்தியமில்லை)

5-பலம் டின் ரூ 3—0—0

சம்பு இண்டஸ்ட்ரீஸ்,
சேலம்-2.



# எதிரொலி



எதிர்க் கட்சிகள் என்பது வெறும் ஆடம்பரம்.

—ஸ்ரீமன் நாராயணன்.

ஆளும் கட்சி என்பது ஊதியம் பெறும் ஆடம்பரமோ?

* * *

டெல்லியில் நேருவின் எதிரே தமிழ் நாட்டு காவடி ஆட்டம்.

—செய்தி

ஆடியவர்கள் காமராசர், சுப்ரமணியம், பக்தவச்சலங்களோ?

* * *

கலைகளைச் சுவைக்க எல்லோருக்கும் சமவாய்ப்பு வேண்டும்.

—மந்திரி, சுப்ரமணியம்

அதற்காகவே ஐந்தாண்டுத் திட்டப் பிரசார நாடகம், நாட்டியம் எல்லாம் என்கிறதாம் ஒரு ஓட்டைச் சாவடி கதர்க் குல்லா!

* * *

எனக்குக் கொடும்பாவிகட்டி எரித்தால் அதுபற்றி எனக்கு அக்கரை இல்லை:

—ஜவகர்லால்நேரு.

மாவீரன் இராவணனையும், இந்திரசித்தையும் எரித்து மகிழ்ந்ததன் விளைவு போலும்!

* * *

எட்டயபுரத்துக்கு அருகே மஞ்சள் மழை பெய்தது, கூரையெல்லாம் மஞ்சள் கறை.

—செய்தி

சிவபெருமான் தலையிலிருக்கும் கங்காதேவி மஞ்சள் பூசிக்குளித்த இந்த மகத்துவச் செய்தியை நம்பாதவர், கடவுளை நம்பாதவரே!

* * *

பட்டினியால் குழந்தை துடிப்பதைச் சகியாமல், வாலிபரிடம் மானத்தை விலை பேசினேன்.

—பொன்னம்மாள்

மக்களுக்காக நடைபெறும், மக்கள் சர்க்காரிலே கற்பொழுக்கம் படும்பாடு காணீர்!

# வேண்டாம் மலையாளி கவர்னர்.

தமிழ்நாட்டுக்கு "தமிழ்நாடு" என்று கூடப் பெயரில்லை. தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சிமொழியாக வில்லை. அதற்காக உண்ணாவிரதம் இருந்த ஒருவர் இறந்து விட்டார். அவருடைய கோரிக்கைகளை கவனிப்பாரில்லை. அவரது கோரிக்கைகளுக்குத் தடையாக இருப்பவர்கள் யார்? அந்தத் தடையைத் தகர்த்து தூள் தூளாக்கத் தமிழர்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போது மற்றொரு மாற்றம்; திரு. ஏ. ஜே. ஜான் என்ற மலையாளி தமிழ் நாட்டு கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஒரு மலையாளியை தமிழ் நாட்டு கவர்னராக்குவதை தமிழர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. இதைத் தமிழ் நாட்டு அரசாங்கம் டெல்லி அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லவேண்டும். தடுத்து நிறுத்த வேண்டும்.

தமிழர்கள் தலையில் ஒரு மலையாளி கவர்னரை சுமத்தியிருப்பதை எதிர்த்து திரு. காமராஜர் ராஜிநாமா செய்ய வேண்டும். மலையாளி கவர்னராக வந்த பிறகும், காமராஜர் முதன் மந்திரியாக இருக்கலாமா?

தமிழர்களுக்கும் மலையாளிகளுக்கும் இடையிலே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் எவ்வளவோ இருக்கின்றன. இந்த சமயத்தில் ஒரு மலையாளியை தமிழ்நாட்டு கவர்னராக நியமிப்பதைத் தமிழர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

—கி. ஆ. பெ விசுவநாதம்.

இன்றுள்ள சூழ்நிலையில் திரு. ஜான் சென்னைக் கவர்னராக நியமனம் பெறுவது ஏற்றதாகத் தெரியவில்லை, இந்து சகோதரர்கள் கிறித்தவ மக்களிடம் கொண்டுள்ள நல்ல உறவு நிலைமைக்கு இது மாற்றுணர்ச்சியை உண்டாக்கி விடுமோ என்றுகூட நான் அச்சப்படுகிறேன். ஆகவே, இந்தியக் கிறித்தவப் பிரிவினர்களுக்கு இந்திய அரசாங்கம் ஏதேனும் உள்ளவாறு நல்லெண்ணம் காட்டவிரும்பினால் திரு ஜானை சென்னையின் கவர்னராக நியமிக்கக் கூடாது.

—டாக்டர். இ. பி. மதுரம் M. P.

தமிழ் தெரிந்த ஒருவரையே தமிழ் நாட்டின் கவர்னராக நியமிக்கவேண்டும். தமிழறியாத திரு. ஜான் தமிழ் நாட்டின் கவர்னராக்கப் பட்டது வருந்தத் தக்கது.

இந்த நியமனம் தமிழ்மக்களின் ஒன்றுபட்ட கருத்துக்கு எதிரானதாகும், தமிழ்நாட்டின் நலன்களைக் காப்பாற்றும் திறமை சென்னை அரசாங்கத்திற்கு இல்லை என்பதை திரு. ஜான் நியமனம் எடுத்துக்காட்டி விட்டது.

—ம. பொ. சிவஞானம்.

## புதிய குழந்தை.

திருப்பத்தூர், பள்ளவெளி தோழர், இரா. அருணாசலம் அவர்களின் துணைவியார் தோழியர், பார்வதி, 18—11—56 ஞாயிறு காலை ஓர் ஆண் மகவை ஈன்றார்கள். அதன் மகிழ்வுக்குறியாக, "பகுத்தறிவு" வளர்ச்சிக்கென ரூபா 5. அன்பளிப்பாகவரப்பெற்றோம். மகிழ்வு; மிக்க நன்றி. புதிய குழந்தைக்கு எமது வாழ்த்து.

— ஆசிரியர்.

டாக்டர் சோதனை விளக்கத்தின்படி ஏற்ற கண்ணாடி எம்மிடம் கிடைக்கும்.




ராதா ஆப்டிகல் கம்பெனி,
முதல் அக்ரகாரம், சேலம்-1.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்

இதயம்

மலர் 6 | சேலம் 23—11—56 | இதழ் 21

# காமன்வெல்த் உறவு ஏன்?

பிரிட்டன் தன்னுடையவும், தன்னைச் சார்ந்தோருடையவும் நலனுக்கென்று அமைத்துக் கொண்டிருப்பதே 'காமன் வெல்த்' நிறுவனம். பிரிட்டிஷ் மகாராணியின் தலைமையில் இயங்குகின்ற அந்தக் காமன் வெல்த்திலே, மன்னராட்சியை விரும்பாத பண்டித ஜவகர்லால் நேருவைப் பிரதமராகக் கொண்ட இந்திய அரசாங்கம் ஒரு உறுப்பாக அமைந்துள்ளது

காமன் வெல்த் உறவால் இந்தியா பெற்றுள்ள இலாபம் என்ன? குறிப்பிட்டுக் கூறத் தக்கன ஏதும் கிடையாது. ஆனால், அந்த ஒட்டுறவால் இந்தியா பெற்றுள்ள இழிவுகள்—இடர்ப்பாடுகள் எத்தனை எத்தனையோ!

ஆப்பிரிக்காவும், இலங்கையும் காமன் வெல்தின் அங்கங்களாக உள்ளவைதாம். அந்தக் கூட்டிலே இணைந்தவைதாம். என்றாலும் இந்தியர்களையும், தமிழர்களையும் அந்த நாடுகள் எத்தகு கேவலமாக நடத்தின—நடத்துகின்றன? ஏனென்று கேட்கமுடியவில்லையே, இந்தியாவால். எதற்கு காமன் வெல்த் உறவு?

சூயஸ் கால்வாயில் உரிமை வேண்டி, ஐக்கிய நாடுகள் சபையையும் பகைத்துக்கொண்டு எகிப்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது தன்னல வெறிபிடித்த பிரிட்டன்! அந்த பிரிட்டனின் தலைமையிலே இயங்குகின்ற காமன் வெல்த்தில் இந்தியா இணைந்திருப்பது அக்ரமத்திற்குத் துணைபுரிவதன்றோ? போரினைத் தடுத்து உலகின் அமைதி நாடிப் பணியாற்றுகின்ற ஐ. நா. வுக்கு எதிரான முறையில், காமன் வெல்தோடு இணைந்திருப்பது இந்தியாவுக்கு இழிவு மட்டுமல்ல, அழிவுதேடும் அறிவற்ற செயலாகும். எனவேதான் நாம் இந்தியா காமன் வெல்த்திலின்றும் வெளியேறவேண்டும் என்கிறோம் ●

# வளரும் "பகுத்தறிவு"

திங்கள் இதழான "பகுத்தறிவு" கிழமை இதழாக மாறிய பிறகு, மக்கள் மன்றத்திலே நல்லிடம் பெற்று நாள்தோறும் வளர்ந்து வருகிறது. 'நந்திவர்மன்' நாடகம் பெரிதும் விரும்பி வரவேற்கப்படுகின்றது என்பதை துவக்க முதல் இதழ் கேட்டு நமக்கு வரும் கடிதங்களே மெய்ப்பிக்கின்றன.

எனினும் "நந்திவர்மன்" இதழ்தோறும் இன்னும் சற்று அதிகமாக இடம்பெற வேண்டும் என்பதும் ஒப்பவேண்டிய ஒன்றுதான். அதற்குப் பக்கங்களை அதிகப்படுத்தல் வேண்டும். காகித விலையோ கனவேகத்தில் பறந்து ஏறுகின்றது! ஓரணாவிலையில் பத்திரிகை வெளியிட முடியாத நிலை நெருங்கி விட்டது.

எனவே வாசகர்கள் திருப்திக்காக பக்கங்களைக் கூட்டவும், நமக்கு நட்டம் வராமலிருக்க விலையில் சிறிது ஏற்றவும் முடிவு செய்துவிட்டோம்.

நாளது 7—12—56 முதல் "பகுத்தறிவு" முகப்பில் கார்ட்டூன் அல்லது சித்திரத்தோடும், புதிய அச்செழுத்தின் பொலிவோடும், 12-பக்கங்களாக 1½ அணா விலையில் வருகின்றது.

"நந்திவர்மன்" 3 அல்லது 4 பக்கங்களில் இடம் பெறுவதோடு, தி. மு. க முன்னணி வீரர்களில் ஒருவரும், பண்பட்ட சிறந்த எழுத்தாளருமான நண்பர், ப. உ. சண்முகம் அவர்களின் தொடரோவியம் ஒன்றும் இடம் பெறுகின்றது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறோம். அன்பர்களின் ஆதரவு பெருகவேண்டும்.

இதழ் தொடர்ந்து பெறுவதற்கு விற்பனையாளர்களும், வாசகர்களும் தக்க ஏற்பாடுகளைச் செய்துகொள்ளல் நலமாகும். மேலும், இவ்வாண்டு "பகுத்தறிவு பொங்கல் மலர்" உண்டு என்பதையும் இப்பொழுதே தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்பன்,
ப. கண்ணன்.






[முன் இதழ் தொடர்ச்சி]

## காட்சி 15.

(வித்யாவதி வீடு சந்திரவர்மனை நினைந்து அவள் சோகத்தோடு பாடிக்கொண்டிருக்கிறாள்)

ஒளியிலா நிலவாகினேன்
உணர்விலா உடலாகினேன்
தெளிவிலா உரையாகவோ?
தீந்தமிழ் சுவைமாளவோ?

தென்றலும் புயலாச்சுதே
தெய்வம்கை விடலாச்சுதே
என்னரும் கலைவாழ்விலே
இன்னலும் புகலானதோ? (ப. க.)

முல்லை:- வித்யாவதி! நீ இப்படி அழுதுகிட்டே இருக்கிறது நல்லதில்லே!

வித்யா:- (வருந்தி) அவரது அன்புக் கடலிலே மீனுகத் துள்ளினேன். காதல் வானிலே வானம்பாடியாகப் பறந்தேன்! இப்பொழுது தணலில் புழுவாகத் துடிக்கின்றேனடி முல்லை! இனி எப்படியடி நான் வாழ்வேன்?

முல்லை:- என்ன செய்யறது? நம்ம கொலத்துலே நீ ஒருத்தி ஒழுத்து வச்சவன்னு இருக்கேலே, ஒன் விதியும் இப்படியாச்சு. நம்மபிறவன் நேரம், ஒன் விதியும் இப்படியாச்சு. நம்மபிறவன் கோயில் பரிபாலகர், சக்திமுனையார்கூட உனக்காக வருந்தினாடி.

வித்யா:- கழுத்தறுக்கும் காபாலிகருக்கும் என்மேல் கருணைபிறக்கிறது மகாராணியின் மனமிரங்கவில்லையே!

முல்லை:- இவ்வளவுக்கும் காரணமே அந்தச் சமணராணி தான்னு சொல்றார் சக்திமுனையார்.

வித்யா:- இல்லவேயில்லை. மகாராணி மாசற்ற செம்பொன். இது மைத்ரேயன் மூட்டிவிட்ட பெருநெருப்பு.

(பச்சை வேகமாக வருகிறாள்.)

பச்சை:- வித்யாவதி! வித்யாவதி! சேதி தெரியுமா ஒனக்கு?

வித்யா:- என்ன சேதி?

பச்சை:- குருக்கோட்டையில் தைலபனைத் தோற்கடிச்ச மகாராஜா, பாண்டியன் படையெடுப்பு தெரிஞ்சு, அப்படியே பெண்ணையாற்றுப் பக்கமா வந்து, தெள்ளாறுங்கிற எடத்திலே, பாண்டியன் படையை அடிச்சு நொறுக்கி படுசூரணமாக்கிட்டாராம்.

வித்யா:- (மகிழ்ந்து) ஆஃகா! பகைவரை வென்றாரா நமது பார்த்திபர்? முல்லை! நமது மன்னரின் வீரம் குன்றின்மேல் நந்தா விளக்கடி!

பச்சை:- அந்த வெளக்கு, நாளை மறுநாள் நகரத்துக்கு வரப்போவுது வரவேற்புக்கு பிரமாத ஏற்பாடுகள்ளாம் நடக்குது.

வித்யா:- அப்படியா?

பச்சை:- வித்யாவதி! இன்னொரு பிரமாதமான சங்கதி! ஆனா இப்ப இங்கே சொல்லமாட்டேன்.

வித்யா:- ஏன்?

பச்சை:- அது ரகசியம். முல்லை இருக்காளே!

வித்யா:- முல்லைதான் உனக்கு வெல்லமாயிற்றே?

பச்சை:- இல்லே. இப்ப கசப்பு மருந்தாயிட்டா.

முல்லை:- (சாகசமாக) போ பச்சை! நான் உசுரையே வச்சிருக்கேன் ஒம்மேலே. நீ என்னடான்னா..........

பச்சை:- அப்படீன்னா இனிமே என்னை அடிக்கமாட்டியே?

முல்லை:- சத்தியமா அடிக்கமாட்டேன். (தலைமேல் அடிக்கிறாள்)

பச்சை:- அம்மாடி! எவ்வளவு பலமான சத்தியம்! வித்யாவதி அந்த ரகசியம் என்ன தெரியுமா?

வித்யா:- சொன்னால்தானே தெரியும்?

பச்சை:- நம்ம சந்திரவர்மன் சிறையிலேருந்து தப்பிட்டாரு ராத்திரிக்கு ரகசியமா இங்கே வரப்போறாரு.

வித்யா:- (மகிழ்ந்து) ஆ! தப்பிவிட்டாரா என் சுவாமி? ஒப்பிவிட்டாரா எனக்கு வாழ்வு தர? முல்லை! என்னடி முழிக்கிறாய்? போன இன்பம் வந்ததடி பொன்னான முல்லை! என் கண்ணான முல்லை!

(ஆர்வம் பொங்க அவளைக் கட்டிக் கொள்கிறாள்.)

## காட்சி 16.

(பாதை. வெற்றிமுழக்கம். நந்திவர்மன், படைவீரர்களோடு வந்து கொண்டிருத்தல். (நிழல் காட்சி) எக்காளம். சங்கநாதம் முதலியன ஒலித்தல்.

## காட்சி 17.

(அரச சபை மன்னர் வருகை எதிர்நோக்கி, அனைவரும் குழுமியிருக்கின்றனர்.)

கட்டியக்காரன்:- ராஜாதிராஜ, ராஜவிக்ரம, அவனி நாரண, பல்லவர் கோளரி, பராஅர்க்க மர்த்தன, கம்பீர கழற்சிங்க தனிச்செங்கோல் மாய, வீரபுரந்தர நந்திவர்ம மகாராஜா பராக், பராக்........

(மன்னன் சிங்காதனத்தில் வந்தமர்கின்றான் அனைவரும் வணங்குகின்றனர் )

பெருந்தேவனார்:- (எழுந்து) மன்னன் வாழ்க! வீரத்தமிழ் மறவன் வாழ்க! பகைவென்ற பார்த்திபன் வாழ்க.

(பாடுகிறார்)

வன்மையால் கல்வியால் மாபலத்தால் ஆள் வினையால்
உண்மையால் பாராள் உரிமையால்—திண்மையால்
தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானை
ஆர்வேந்தர் ஏற்பார் எதிர்!

எல்லோரும்:- ஆஹா! அஹா!

பெருந்:- கொற்றவன் வாழ்க!

எல்லோ:- வாழ்க! வாழ்க!

நந்தி:- புலவரேறு பெருந்தேவனார்க்கு மிக்க நன்றி. என்னைக் குதூகலத்தோடு வரவேற்ற குடிப் பெருமக்களே! மிக்க நன்றி. ஆணவத்தால் கப்பம் கட்டுமாறு ஆணையிட்டான் சாளுக்கிய தைலபன். அடிமைப்பட்டான்! வஞ்சகத்தால் நம்மீது போர் தொடுத்தான் பாண்டியன்! தோல்வியுற்றான்! இந்த இரு பெரும் போர்களின் வெற்றிகளுக்கும் காரணமாயிருந்த வீரர்கள் அனைவரையும் நெஞ்சுகந்து பாராட்டுகின்றேன். மகிழ்வு பொங்கும் இந்த நேரத்தில் மனம் நோகும் சேதியொன்று. சொல்லாது விடமுடியவில்லை. சந்திரவர்மன் சதிகாரனாக—அரசத் துரோகியாக—மாறிவிட்டானே! வருந்துகிறேன். மிக மிக வருந்துகிறேன்.

சீலாதி:- (எழுந்து) மன்னர் பெரும! அவர் சிறையினின்றும் தப்பிவிட்டார்.

நந்தி:- (வியந்து) ஆ! தப்பிவிட்டானா தாந்தோன்றி? எங்கு சென்றாலும் சரி. பிடித்து வந்து தண்டிக்க வேண்டும். அத்தக் கயவனைக் கண்டுபிடித்துக் காவற் கூடத்திலே ஒப்படைக்கிறவர்க்கு கணிசமான பரிசு வழங்கப்பட வேண்டும் பறையறைவித்து நாடெங்கும் பரவச் செய்யும் இச் செய்தியை.

சீலாதி:- கட்டளை.

(தலை தாழ்ந்து ஒப்புகிறார்)

## காட்சி 18.

(அந்தப்புரம். மகாராணி சங்காதேவி மன்னரை வரவேற்க ஆயத்தமாயிருக்கிறாள். மன்னரின் வருகையின் சின்னமாக எக்காள ஒலி கேட்கிறது.)

சங்கா:- (ஆர்வம் பொங்க) அடியே! வந்துவிட்டாரடி மன்னவர். எடுத்து வாருங்கள் ஆரத்தியை. எடுத்துவாருங்கள்.

நந்தி:- (வந்து) கண்மணி சங்கா!....

சங்கா:- காதல் மன்னவரே!....

(அரசி. மாலை சூட்டுகிறாள் இரு பெண்கள் ஆரத்தி கொண்டுவர, பாடியவண்ணம் ஆரத்தி சுற்றுகிறார் )

(வளரும்)



# கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● மு. கலைமன்னன்,
C/o. ஞா. சாமி,
குருப் ஆஸ்பத்திரி, முட்கூ அஞ்சல்

**இரா. வெங்கடாசலம், சகண்டபுரம்**

கே: ராஜாஜியும், சுப்ரமணியமும் பிரசாரம் செய்துவரும் தட்சிணைப் பிரதேசத்திற்கும், தி.மு.க. கேட்கும் திராவிட நாட்டிற்கும் உள்ள வேறுபாடுகள் என்ன?

ப: முன்னது; வடநாட்டுத் தலைமையை ஏற்கும் அடிமை முறை. பின்னது; நம்மை நாமே ஆண்டுகொள்ளும் உரிமைநெறி. ஒன்று வாடகை வீடு; மற்றது சொந்த வீடு!

* * *

கே: தி.மு.க.வின் தேர்தல் சின்னமாகிய "உதய சூரியன்" காலையில் மலர்ந்து மாலையில் மறைந்து விடுவதே போல், சட்டசபைக்குச் சென்றதும் தேர்தல் வாக்குறுதியும் மறைந்துவிடும் என்கிறார்களே; இதற்கென்ன சொல்லுகிறீர்கள்?

ப: திராவிட வாழ்வின் புத்தொளியாக, விடுதலைச் சின்னமாக உதய சூரியனைக் கருதுகிறோம். சொல்லுகிறோம்; சொல்லின் வழி செயலாற்றுவோம். மாலை, சூரியன் மறைந்தாலும், மீண்டும் காலை மலர்ந்துவிடும். ஆனால், மாட்டுக்கு அந்த நிலை வந்தால் சுடுகாட்டுக்குத்தானே போகவேண்டும்?

**கே. சிங்காரம், சென்னை-1**

ஆசிரியர், ப. கண்ணன் "சூனியக்காரி"யைப் புகுத்தி கதை, வசனம் எழுதலாமா? அது மடமையை வளர்ப்பதல்லவா?

ப: "பாசவலை"யில் அவர் சித்திரித்தது மூலிகைக்காரியை; "அவாள்" சூனியக்காரியாக்கி விட்டனர்! எனினும், அந்தக் கதை புராணக் கலப்பற்ற, தெய்வீகம் கலவாத கற்பனையானதால், நம்பிக்கை விளைக்காது; மடமை வளர்க்காது!

**பா. இராசமணி, கோயம்புத்தூர்**

கே: "பாசவலை" பார்த்த பிறகு மந்திரக்கோல் நினைந்து நான் மனம் கலங்குகிறேன். தாங்கள் இப்படிச் செய்யலாமா?

ப: நடவாத நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் அற்புத ஆங்கிலப் படங்களைப் போன்றதோர் கற்பிதமே பாசவலை! கலங்காதீர்! கலையுரைக்கும் கற்பனையை நிலையெனக் கொண்டாட வேண்டாம்!

● **மு. கலைமன்னன், முட்கூ**

கே: காதல் எங்கிருந்து பிறக்கிறது?

ப: ஆண் பெண் உடம்பிலிருந்து, கண்களின் வழியே பிறக்கிறது!

* * *

கே: உங்கள் வாழ்க்கையின் லட்சியம் என்ன?

ப: எல்லோரும் இன்புற்று வாழ, என்னால் இயன்றதைச் செய்வது.

**விரைவில் எதிர்பாருங்கள்!**
சென்னை அழகிரி நாடகமன்றத்தினர் நடிக்கும்
**புரட்சிப் பாடகன்**
(தமிழ் நாடகம்)
★
கதை வசனம்: ப. கண்ணன்
பயிற்சி: ஏ. தன்ராஜ்
அமைப்பாளர்: வே. கன்னியப்பன்

## முன்னேற்றப்— —பாதையிலே

**சென்னை.**

அண்மையில் மலேயா, சிங்கப்பூர் பகுதிகளுக்குச் சென்று நாடகங்கள் நடத்தி, பேரோடும் புகழோடும் திரும்பி வந்துள்ள நண்பர், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களைத் தி.மு.கழகத் தலைமை நிலையத்தின் சார்பில் வரவேற்றுப் பாராட்டும் வகையில், இராயபுரம் 'அறிவக'த்தில் 25-11-56 ஞாயிறன்று மாலை 5-மணிக்குத் தேநீர் விருந்தொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

—தி. மு. கழக தலைமை நிலையம்.

முதியோர் கல்வி இலவச இரவு பாடசாலை நிதிக்காக, 25—11—56 மாலை 6-மணிக்கு சென்னை சௌந்தரிய மகாலில், எம். ஈசுவர் எழுதிய வேடதாரி என்ற சமூக நாடகம் அறிஞர் அண்ணா தலைமையிலும், தோழர், என். வி. நடராசன் முன்னிலையிலும் நடைபெறும்.

—டி. எம். பி. கிருஷ்ணராஜ், அமைப்பாளர்.

## தி. மு. க. மாணவர் கிளை.

18—11—56 ஞாயிறு காலை சேலம் வெங்கடப்ப செட்டியார் ரோட்டிலிருக்கும் மாவட்ட தி. மு. க. அலுவலகக் கட்டிடத்தில்வழக்கறிஞர் திரு. வி. சிவப்பிரகாசம் B. A. B. L. அவர்கள் தலைமையில் தி.மு.க. மாணவர் கிளையின் கூட்டம் நடைபெற்றது

மறைந்த மாவீரர் கே. வி. கே. சாமி, திரு சங்கரலிங்கனார் முதலானோர்க்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் நிதிக்காக மாணவர் கிளையின் சார்பாக சிறப்புக் கூட்டமொன்று 16—12—56-ல் நடத்துவதென்றும் HOME LAND இதழுக்குச் சேலத்தில் குறைந்தது 100 சந்தாதாரர்களை சேர்க்கும் பணியினை மாணவர் கிளை மேற்கொள்வது என்றும், சேலம் நகர தி. மு. க. மாணவர் கிளையின் அலுவலகத்தை சேலம் மாவட்ட தி. மு. க. அலுவலகக் கட்டிடத்திலேயே இலவசமாக வைத்துக்கொள்ள அனுமதிக்குமாறு சேலம் மாவட்ட தி. மு. க. செயலாளரை கூட்டம் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேறின.

திரு. அ. முத்து அவர்கள் நன்றி நவில கூட்டம் முடிவுற்றது.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

இருக்கிறார்களென்று ஆழம் பார்க்கிறார்களா என்று உடனேயே ஐயத்துடன் நோக்குகிறார். கடைசியில், தேர்தலில் காங்கிரசின் செல்வாக்கை இழக்கவைக்க போராட்டம் தொடர்ந்து நடப்பட வேண்டும் என்ற விருப்பத்தை தலைமை வெளியிட அஞ்சி, "பகுத்தறி"வைக் கொண்டு சொல்ல வைத்தது போலும் என்று அச்சத்துடனேயே தனது கற்பனைத் திறனை விளக்கிக் காட்டுகிறார்.

"சிவாஜியும், சிவஞானமும்" என்ற கட்டுரைக்கும், தேர்தலுக்கும் என்ன சம்பந்தம்? ஒன்றுமேயில்லை! என்றாலும் இரண்டிற்கும் சம்பந்தம் கற்பிக்க முயலுகிறார் இந்தப் "பகுத்துணர்ந்த பண்பாளர்!" காரணம்? காங்கிரசின் மேல் இன்னுமிருக்கும் ஒருதலைக் காதலா? அல்லது, தி மு க. தன் தொண்டர்களைப் போராட்டத்திற்கு அனுப்பி வைக்கும் என்ற எண்ணத்தில், "ஆயிரக்கணக்கான தொண்டர்கள் சிறை புகுவார்கள்" என்று ம. பொ. சி. சொல்லியதற்கு மாறாக தி. மு க கலந்து கொள்ளாததால் தொண்டர் பட்டியல் நூற்றுக் கணக்கிற்குக் குறைந்துவிட்டதே என்று கோபமா?

ம பொ. சி. அவர்கள் உள்நாட்டு மந்திரி பந்த் அவர்களைச் சந்திக்க விரும்புவதாக யாரிடமும் கூறவில்லை. உண்மைதான்! அவர் அப்படிக் கூறியதாக யார் சொன்னார்கள்? ஆனால்...'பண்டித பந்தை சந்தித்து எல்லைப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க வழி செய்கிறேன்" என்று சுப்ரமணியனார் சொல்லவில்லை என்பது முழுப் பூசணிக் காயை இலைச் சோற்றில் மறைக்கும் முயற்சி! பரிதாபம்! இந்த செய்தி 'தினமணி' போன்ற பத்திரிக்கைகளில் கொட்டை எழுத்தில் வெளியிடப் பட்டதை இந்தப் 'பண்பாளர்" பார்க்கவில்லை போலும்!

"தமிழின மக்களுக்குப் பாடுபடுபவர் ம. பொ சி. ஒருவரே என்பதை சிவாஜியும் சிவஞானமும் கட்டுரை நிரூபித்து விட்டது" என்று தனக்குத்தானே ஆறுதல் கூறிக் கொள்பவர், மேலும் சிறிது எழுதுவதற்குள் "ம. பொ. சி. யை திட்டுவது தான் "பகுத்தறி"வின் தொண்டு என்றால்...." என்று ஏன் இழுத்துப்பேசவேண்டும்?

தமிழகத்தின் எல்லைகள் மீட்கப்பட வேண்டும் என்ற அக்கறை எங்களுக்கும் இருக்கிறது. அதைத் தலைமை நிலையத்திற்கு எடுத்துச் சொல்வதற்கு இடமும், காலமும் இருக்கின்றன. பத்திரிகையில எழுதி குழப்பம் விளைவிப்பதற்கு நாங்கள் கட்டுப்பாடற்றவர்களல்ல! "இப்படியும் இருக்கலாம்" என்ற கற்பனைப் போக்கில் கட்டுரை எழுதுவது அழகல்ல. கட்டின வீட்டிற்குக் குறை சொல்வது தவறு! ஆனால், பாதியில் நிற்கும் வீட்டை ஏன் கட்டி முடிக்கவில்லை என்று கேட்பதில என்ன தவறு? அப்படிக் கேட்டால், "நீதான் வீட்டைக் கட்டி முடியேன்" என்றா சொல்வது?

"சஞ்சல புத்திக்காரர்—சாதிக்க முடியாதவர் பேச்சை நம்பி சிவஞானம் போராட்டத்தை நிறுத்தியது தவறு" என்று சொல்லுவதே தவறு என்றால், "போராட்டம் நிறுத்தப் படவில்லை; தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது" என்று சுருக்கமாகப் பதில் சொல்லிவிட்டுப் போய் விடலாமே! அதற்காக, எழுதுவதற்குரிய செய்திகள் எவ்வளவோ இருக்க, அவற்றையெல்லாம் விட்டுவிட்டு இப்படி ஏன் பொழுதையும், பத்திரிகையின் பக்கங்களையும் வீணாக்க வேண்டும்? நண்பரே! சூனிய வெளியிலே நின்றுகொண்டு சாட்டையைச் சுழற்ற வேண்டாம்! அடி உமது உடலில்தான் படும்!

—சேரலாதன்.

காங்கிரசுக்குத்தான் ஆட்சி என்ற நிலையை ஒழித்தால்தான் இந்தியாவில் சனநாயக முறையைக் காப்பாற்ற முடியும்.

—ஜெயப்பிரகாஷ் நாராயண்.

வள்ளுவர் நெஞ்சம்

## உலக வாழ்த்து-௯.

அதிகாரம்-க. பாட்டு-௯.

**கோளில் பொறியில் குண-**
**-மிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை.**

தங்கள் தங்களுக்கு உரிய உணர்ச்சியைக் கொள்ளாத மெய், வாய், கண், மூக்கு, செவி பயன்பட மாட்டாது. அதுபோல அன்பு, உண்மை, எண்ணம், நம்பிக்கை, சொல், செயல், உழைப்பு, அமைதி ஆகிய வாழ்க்கைக்குரிய எண்வகை குணங்களுக்குத் தலைவணங்காதவர் வாழ்க்கை வளம் பெறாது.

விளக்கம்:

எண்குணத்தான் — உண்மை, அன்பு, எண்ணம், நம்பிக்கை, சொல், செயல், உழைப்பு, அமைதி இக்குணங்களையுடையவன். புத்தர்கூட எண்வகைக் கொள்கைகளையே பரப்பினர் என்பது உணர்வதற்குரியது

—மீ. சு. இளமுருகு பொற்செல்வி



# மும்முனைப் போர்!

[—]

(குன்று தோறுடிவரும்: என்ற இசை)

செந்தமிழ் நாட்டினிலே திரண்டதுபார் கூட்டம்
நல்ல செய்கையிலே நாட்டம்
வளர் தி மு. க வீரர்களின்
மும்முனைப்போ ராட்டம்.
மானமதைக் காப்பதுவே மறத்தமிழர் பழக்கம்
இது மறந்திடாத வழக்கம்
உயர் வானதிர முழங்கியதே
உரிமைக் குரல் முழக்கம்!

கண்ணியம் கடமை கட்டுப்பாடு மாறாமல் வழி
காட்டும்நம் அண்ணாவின் சொல் மீறாமல்
எண்ணமும் செய்கை ஒருமையினாலே
எங்கும் பெரிய ஆதரவே
என்றும் காணக் காட்சி யென்றே
எல்லா வாயும் கூறிடவே
மண்ணில் உரிமைப் போரில் நின்று
மாண்டாரே நம் தோழர்களே!

தொகையறா.

ஆயிரத்துத் தொளாயிரத்து
ஐம்பத்து மூன்றில்
ஜூலைபதி னன்கில் அமைச்சர்
ஆச்சாரி ஆட்சியில்
புதுக்கல்வித் திட்டமதை
எதிர்த்துச் செய்தார் மறியல்!

பாட்டு.

வீர லட்சியத்தை நெஞ்சிலேந்தி உண்டு
வெற்றியென ஆடும்கொடி கையிலேந்தி
ஆட்சியிட்ட சட்டம்
அரைப்படிப்புத் திட்டம்
ஒட்டை உதவாது
ஒழிகவென்று கோஷம்
போட்டாரே இஷ்டப்படி வீசுதையோ
போலீசு குண்டாந்தடி!

மண்டையடியாலே மயங்கிமண்ணைக் கவ்வினரே
மயங்கி மண்ணைக் கவ்வினரே
வந்துள்ள சுதந்திரத்தால்
வாழ்வதற்கு மார்க்கமில்லை!
கண்ணீர்ப்புகை யாலே
கலங்கி மக்கள் நொந்தனரே
கலங்கி மக்கள் நொந்தனரே
காங்கிரசு ஆட்சியிலே
கண்டசுகம் இப்படியோ!

—பாவலர்-வேலாயுதசாமி

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

அது கிடக்குது! ஒரு மலையாளியை அல்லவா நம்ம ராஜ்யத்திற்குக் கவர்னரா போட்டுட்டாங்க...அதை எதிர்த்து ஐயா ஒரு போராட்டம் நடத்தினா...'

"நடத்தலாம். ஆனா, தேர்தல் சமயமாச்சேன்னு பார்க்கறேன்..."

"இன்னொரு யோசனை...வந்து...நீங்கதான் திராவிட நாடு கிடைக்கறது கஷ்டம். தமிழ்நாடு கிடைச்சா போதும்னு சொல்லிட்டீங்களே! இனிமேல் 'விடுதலை'யில் "திராவிட நாடு திராவிடருக்கே!" என்று போடுவதை நிறுத்திவிட்டு 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று போடச்சொல்லுங்கள். அதோடு கழகத்தின் பெயரைக் கூட......"

பெரியார் தலை குனிந்தார்—கையிலிருந்த புத்தகத்தைப் படிப்பதற்காகத்தான்!

"ரகுபதி ராகவ ராஜாராம்
பதித பாவன சீதாராம்"

என்று வெளியிலிருந்து பாட்டுச் சப்தம் கேட்டது. காங்கிரஸ்காரர்கள் இப்பொழுதே ஓட்டுக் கேட்கப் புறப்பட்டு விட்டார்கள் போலிருக்கிறதே என்று எண்ணிக்கொண்டே, பெரியார் மாளிகையிலிருந்து வெளியே வந்து பார்த்தேன்.

ஒரு பிச்சைக்காரன் தெருவில் பாடிக்கொண்டிருந்தான்!

சட்டென்று என் தூக்கம் கலைந்தது. விழித்தெழுந்து பார்த்தேன்......இதையெல்லாங்கூட சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமா? ★★

## பகுத்தறிவு.

7–12–56 முதல்

கையொப்பத்தொகை:

ஆண்டு 1-க்கு 5-0-0
ஆறு மாதங்கள் 2-8-0
தனிப்படி 0-1-6

விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை,

பகுத்தறிவு அலுவலகம்,
சேலம்-1.

## கலைக்கூடம்

### மறுமலர்ச்சி.

குடும்பக் குழப்பலின் அடித்தளத்தில் பிறந்திருக்கிறது ஆனந்தாவின் "மறுமலர்ச்சி' ராஜா என்னும் பெண்மணி வாழ்விலே புயலடிக்கிறது; அநாதையாகிறாள். மேனேஜர் போர்வையிலே வாழும் காமத்திமிங்கலம் வாய் பிளந்தது. சேகர் உருவில் காதல் தென்றலும் நிலவியது! வாட்டு கௌரவம் எதிர்த்தது: வரதட்சிணை என்ற சனாதன சாப்பக் படையெடுத்தாடியது! எல்லாவற்றையும் சகித்த—சங்கடத்தோடுதான் வாழ்ந்தாள் பணத்திற்காக கணவனை கொள்ளையடித்து சிறை சென்றான் காதலன் சேகர் காலம் வருமென்று காத்திருந்தாள், உடல் உழைப்பையே ஊதியமாக கொண்டாள். சந்தர்ப்பமும் சூழ்நிலையும் பிரசாத்துடன் கள்ளநட்புக் கொண்டிருக்கிறாள் என்ற கற்பனைக் கயிறை திரித்தன! விடுதலையான சேகர் வெகுண்டான்! விரட்டினான்! போலீஸாரின் சந்தேகக் கண்கள் 'ராஜா'வின் மேல் விழுந்தன. அப்பப்பா...எத்தனை கஷ்டங்கள் இவைகளை யெல்லாம் கடந்து மறுமலர்ச்சியைக் காண்கிறாள். கதையின் வேகம் வெகுவாகக் கவருகிறது. ஆனால் பல படங்களிலிருந்து சிற்சில சம்பவங்களை எடுத்து 'மறுமலர்ச்சியாகத் தொடுத்திருக்கிறார்கள். 'கண்டுபிடியுங்கள் எந்தப் படத்தில் வந்த காட்சி?' என்ற திரைப்பட நினைவுப் போட்டி ஆரம்பிக்க பத்திரமாக வைத்துக்கொள்ள உதவும். இதை எவ்வளவோ சிரமத்தோடு தாமியும், எஸ். ஏ சுப்பராமும் பின்னி இருக்கிறார்கள். பின்னல் வேலை சரி, ஆனால் பின்னப்பட்டமுறை தவறு. வசனம எஸ் ஏ. சுப்பராமனால் வரையப் பட்டிருக்கிறது. கூர்த்தமம், திறமையை வெளிப்படுத்தும் கட்டங்களில் சுமாரான வார்த்தையாடல்கள் ஏனோ தானோவென்று இருக்கின்றன.

எஸ். எஸ். சுப்ரமணியம், பாடல்களை இயற்றியிருக்கிறார். கருத்துகள் இல்லாவிட்டாலும் பெண்டியாலா நாகேஸ்வரராவின் சங்கீதத்திற்கு ஏற்றதாக அமைந்துள்ளன, 'வானவீதி தன்னில் ஆதவன் உதிக்கிறான்' என்ற பாட்டிற்கு டி. எம். சௌந்தரராஜன் குரலோசை உயிர் ஊட்டுகிறது. ஏ. பி. கோமளா, ஜிக்கி பாடும் 'மனமறியாத பேரானந்தமேனோ' என்ற பாட்டின் நடனநாடகம் நன்றாக இருக்கிறது, இதனை பாரின் ரீதியும் என்று தொகையறுவில் தொடங்கிய 'பொல்லாத விதியும் வேலையுங்கூட' என்ற பாட்டை கண்டசாலா பாடுகிறார். தமிழ் எழுத்துக்கள் வதைபடுகின்றன. லீலா, ராணி, ஏ. எம். ராஜாவும் பாடுகின்றனர்.

'ராஜா'வாக வரும் ஜி. வரலட்சுமி நடிக்கிறார் என்று சொல்லுவதைவிட பாத்திரத்தோடு இரண்டறக் கலந்துவிட்டார் என்னலாம். ஆனால் அவருடைய காதலர் சேகராக வரும் ஸ்ரீராம் சரியில்லை; வந்துபோகிறார். ரஜினியாக வரும் ஈ. வி. சரோஜா ஏறத்தாழ நடித்தாலும் அவர் காதலராகவரும் பிரசாத் எம். என். நம்பியார் தெம்பூட்டும்படியாக இல்லை. காதல் ஜோடிகள் பொருத்தமாக இல்லை. படத்தின் டைரக்டர்களில் ஒருவரான லங்காசத்தியம் பியூன் கந்தப்பனாக வருகிறார். பி. நாகேஸ்வரராவ் பின்னணிப — லுக்கு நடிக்கும் வாய்ப்பும் இருக்கிறது. பரவாயில்லை, ஈ. ஆர் சகாதேவன், சி எஸ் ஆர், டி. என். மீனாட்சி போன்றவர்களும நடிக்கின்றனர். ரசிக்கும்படியாக இல்லை.

கே. எஸ் பிரகாஷ்ராவ், லங்காசத்யம் இருவரும் டைரக்ஷன் செய்திருக்கின்றனர். நல்ல நடிகர்களிடம் வேலை வாங்கவில்லை, உவமான உவமேயங்களை விளக்கிக் காட்டவேண்டிய இடத்தைப் பயன் படுத்திக் கொள்ளவில்லை. குறைபாடுகள் நிறைய இருக்கின்றன.

நேரத்தைச் செலவிட்டுப் பார்த்தறிந்து கொள்ள ஒன்றுமில்லை. பொழுது போகவில்லையென்றால் போய்ப் பார்க்கலாம்.

டப்பிங் "மறுமலர்ச்சி"யில் தக்க "புதுமலர்ச்சி" இல்லை.

—க. அண்ணாமலை, சேலம்.


TEL: Gurucures. PHONE: 248.

60 ஆண்டுகள்—3 தலைமுறைகள்

ஆங்கிலம் தமிழ் மருத்துவ சிறப்பைப்பெற்றது குருமருந்து சாலை

அதன் 60-க்கு மேற்பட்ட தயாரிப்புகளில் தலையான

**குரு தைலம்.**

**குரு பல்பொடி.**

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

**டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,**

குருமருந்து சாலை, :: திருச்சிராப்பள்ளி.


சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்-1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

கழக வார இதழ் — ஆசிரியர்:- ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 30-11-56 ★ விலை அணா ஒன்று. | இதழ் 22


## அரியலூர் விபத்து; ஓர் அறைகூவல்!

அரியலூர் இரயில் விபத்துச் செய்தி, தென்னாட்டு மக்களை பெருங் கலக்கத்தில் ஆழ்த்திருக்கிறது. இரயிலில் பிரயாணம் செய்வது ஆபத்துக்குரியவொன்று என்ற பீதியினை எங்கும் வாரியிறைத்துவிட்டன, அங்கு நிகழ்ந்த கோர நிகழ்ச்சிகள்!

காட்டாற்றுப் பெருவெள்ளம் பாலத்தைச் சிதைத்தது; தூத்துக்குடி செல்லும் துரிதவண்டி பன்னூற்றுவர் வாழ்வினைச் சிதைத்து விட்டது!

மழலைக் குழந்தைகள், மாண்புறு பெண்டிர், சிரித்து விளையாடும் சிறுவர் சிறுமியர், எழில் பூத்த இளம் மங்கையர்—இளைஞரேறுகள், குடும்பம் புரக்கும் தலைவர்கள், நண்பர்கள், நல்வாண்மையாளர் நூற்றுக் கணக்கிலே கையொடிந்தும், காலறுந்தும், உடற்சிதைவுண்டும், நீரில் மூழ்கியும் படு கோரமான சாவுக்கு இரையாகியுள்ளனர். எண்ணமுடியாத பெரு விபத்து! என்றும் நடவாத பயங்கர சம்பவம்!

இதுவரை கண்டுபிடிக்கப் பட்டுள்ள பிணங்கள் சுமார் 150. இனியும் கிடைப்பன எத்தனையோ; கிடைத்தும் அழுகி உருத்தெரியாமல் போகிறவை எத்தனையோ; அந்தோ! நினைக்கவே இதயம் குலுங்குகின்றது.

இத்தகைய கோர இரயில் விபத்தினை தென்னகம் இன்றுவரை கண்டதில்லை. கண்டிருக்கிறது காங்கிரஸ்-டெல்லியாரின் ஆட்சியிலே!

அரியலூர் சோகக் காட்சி குறித்து, திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர், அபில் தருமலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலே கூறுகின்றார்: "பிழைத்தவர்கள் எண்ணிக்கையைத்தான் சொல்ல வேண்டுமே தவிர, இறந்தவர்கள் எண்ணிக்கையை யாராலும், எப்படியும் சொல்ல முடியாது" என்று. எவ்வளவு உயிர் நாசம்; எவ்வளவு சொத்துச் சேதம்; எவ்வளவு நகை நட்டு—பணம் பத்திரம் போன்ற உடைமைகள் பாழ்; இனித்தான் தெரிய வேண்டும்.

இப்பெரு விபத்து இயற்கையின் கோளாறால் நேர்ந்தது; கடவுளின் செயலால் ஏற்பட்டது என்று கூறி, கடமைப் பட்ட எவரும் தப்பிவிட முடியாது. எனவேதான் பொறுப்புணர்ந்த டெல்லி போக்குவரத்து அமைச்சர், சாஸ்திரியல்லாத—லால்பகதூர் சாஸ்திரி தனது பதவியை ராஜிநாமா செய்துள்ளார். அண்மையிலே ஐதராபாத்தருகே மகபூப் நகரில் பாலத்தின் மீது சென்ற புகைவண்டிக்கு இதுபோல் விபத்து நேர்ந்தது. அப்பொழுதே அவர் பதவி விலக விரும்பினார்; அதே போன்ற அரியலூர் பெரு விபத்து அவர் எண்ணத்தை முடித்துவிட்டது. அவரது செயலினைப் பாராட்டுகிறோம். தன் பொறுப்பினைச் சரிவர நிறைவேற்ற முடியாமையே விபத்துக்குக் காரணம் என்றவுண்மையை ஒப்புகின்ற அந்த நியாயவுள்ளம், எத்தனை அமைச்சர்களுக்கு இருக்கின்றது?

செத்து மடிந்தோரின் குடும்பங்களுக்கு அரசாங்கம் சரியான நீதி வழங்க வேண்டும். விபத்தின் விளைவால் கதியற்றுப் போனவர்க்கு வாழ்வளிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட நிருவாகிகளை விசாரித்து தண்டிக்க வேண்டும். இதே போன்ற இந்தியப் பேரா

(10-ம் பக்கம் பார்க்க)

புத்தநெறி

# பகுத்தறிய வழிகூறினர்.

பி. வி இராமசாமி.

எப்பொருள் எத்தன்மைத்தாயினும்
அப்பொருள் மெய்ப் பொருள்
காண்பதறிவு

அன்புற்றமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ்சிறப்பு.

பவுத்த நெறிக் கொள்கையின் குறள் சுருக்கக் கருத்து இவையேயாகும். அன்பர் பணிசெய்தலே இன்ப நிலை எய்தவழி எனவும் வலியுறுத்துகிறது. இத்தகைய இன்ப நிலையை எய்த பிறர் உதவியோ பிற அருளோ தேவையில்லை என்றும் அறிவுறுத்துகிறது.

இந்த அன்புநெறியை — பகுத்தறிவு இயலைத்தோற்றுவித்த புத்தர் பிரான் தம்மை அவதார புருஷனாகவோ—கடவுள் தூதனாகவோ கூறிக்கொள்ளவில்லை.

"உலகிலுள்ள எல்லா மனிதப்பிறவிகளைப் போலவே நானும் ஒரு மனிதன் தான்" என்று விளக்கமாக தம்மைப் பற்றித் தெரிவித்துக்கொண்டார்.

உலகம் காண்பதும், உலகுக்குப் பயன்படுவதுமான மெய்மைகளையே திரட்டிக் கூறினர். மனிதர்களுக்குள் மனிதராக வாழ்ந்தார். தமது முயற்சியால் மெய்யறிவு பெற்றார். தாம் கண்ட மெய்மைகளைப் பிறருக்கும் கூறினர்.

மூடநம்பிக்கைகளால் அறியாமையால் துயர்படும்மக்களின் பகுத்தறிவை துலக்கச்செய்து, அவர்களைத் தமது தெளிந்த அறிவு கொண்டு நன்னெறி கண்டு நடக்கச் செய்ய வழிகூறினர்.

"உனக்கும் உன் செயல்களுக்கும் அவற்றின் பல பலன்களுக்கும் நீயே கர்த்தா. வேறு கர்த்தா கிடையாது" என்று 'தர்ம பாதம்' என்ற நூலில் சாக்கிய முனிவரே குறிப்பிட்டுள்ளார். நாம் உள்ளதன் அவைதுடமான நிலைமை, நமது எண்ணத்தின் செயலின் விளைவு என்பதும் இவர்கூறும் விளக்கம்.

'மகாபரிநிர்வாண சூத்ரா' என்பதில் புத்தர்பிரான் தமது சீடனை ஆனந்தரிடம், "ஆனந்தா உனக்கு நீயே ஒளியாக இரு உனக்கு நீயே அடைக்கலமளித்துக்கொள், தர்மத்தைக் கைப்பிடித்துநட, உன்னைத் தவிர்த்து வேறு யாரையும் உனது ரட்சகராக எதிர்பாராதே, அறிவுச் சிகரத்தை அடைய விரும்புவோரும் நல்வாழ்க்கையை அடைய விரும்புவோரும், தன்னம்பிக்கைகொள்ள வேண்டும் சுயமுயற்சியில் ஈடுபட வேண்டும் என்று கூறியுள்ளார்."

"பாபத்தை நீக்குபவரும்—நீக்கக்கூடியவரும் இல்லை — உருவத்துக்கு மதிப்பு தராதே! நேர்மையை கவனித்து நடந்துகொள் என்று கூறி உருவ வணக்கத்தை வெறுக்கச்செய்தனர். தெய்வீகத் தாரகங்களையும் இவர் கண்டிக்கிறார்.

—(வஜ்ரசேதிக)

இவர் கல் ஆல் நிழலில் அமர்ந்திருந்தபோது ஒரு பார்ப்பனன் இவரை அணுகி, "நீர் தேவனா? கந்தர்வனா? யக்ஷனா?" என்று வினவினன். அதற்கு சித்தார்த்தர் "உன் மனதில் உள்ள ஆசைகளால்தான், நான் தேவனா—கந்தர்வனா—என்று சந்தேகிக்கச் செய்தது. இவ்விதக சந்தேகத்தைத் தூண்டுவது ஆசை. அவ்வகை ஆசைகளை ஒழித்தவன்தான்—புத்தன்"

என்று பதிலளித்தார். புத்தன் என்றால் மெய்யறிவொளி பெற்றவன் என்று பொருள்.

இவரது இயற்பெயர் கவுதம சாக்கியர்.

கி, மு. 563-ஆண்டில், வட இந்தியாவில் கபிலவஸ்துநகர்— அண்மையிலிருந்த லும்பினி பூங்காவனத்தில் பிறந்தார்.

'சித்தார்த்தர்'—'கவுதமர்' இடப்பட்ட பெயர்.

கோரக்பூர் ஜில்லாவிலுள்ள புத்தர் பிறப்பிடத்தில் அசோக மன்னர் 239-ல் ஒரு கல்வெட்டு நட்டு புத்தர் பிறந்த இடம் என்று எழுதிவைத்துள்ளார். தந்தை சுத்தோதனர்; தாயார் மாயாதேவி—பிரசவ மரணமுற்றதால் வளர்ப்புத்தாய் பிரஜாபதி கவுதமி (அத்தை) வளர்த்தார், இவரது மனைவி யசோதரா மகன் ராகுலன்.

சித்தார்த்தர் தமது 29-ம் வயதில், உலகமக்கள் படும் அல்லல்களைக்கண்டு அவர்களுக்கு நல்வாழ்வு தர வழிதேடி, வீட்டைவிட்டு ஏகினர்.

வேதமதத்தினர்கூறியகோட்பாடுகள் அறிவுக்குப் பிடித்தமாக இல்லை என்று கண்டார்.

தனித்து ஆலோசித்தார். மக்களின் அல்லல் அவதிகளுக்குக் காரணம் 'ஆசை' என்று கண்டார்.

இந்த ஆசையைக் கட்டுப்படுத்தி, நல்வழி நடத்தலே நல்வாழ்வுக்கு வழியெனக் கண்டார்.

இவருக்கு எதிராக இவரது தாயாதி தேவதத்தன் கிளர்ச்சி புரியத் கண்டனன்—இவன் வேத மதச்சார்பினன் அஜா தசத்ருமன்னன் உதவிகொண்டு புத்தருக்கு பலவித இன்னல்களும் ஆபத்துகளும் விளைத்தான். இவர் மலை அடிவாரத்தில் அமர்ந்திருக்கும்போது இவர் மீது பெரும் பாறையுருட்டித் தள்ளப்பட்டது. மற்றொரு சமயம் மதமூட்டிய யானை ஏவப்பட்டது. இவ்விரண்டு ஆபத்துக்களிலும் இவர் தப்பினர்.

ஒரு பெண்ணை ஏவி, இவர்மீது விபசாரக்குற்றம் சுமத்த சதி செய்யப்பட்டது. ஆனால் சதி வெட்ட வெளிச்சமாகி இவர் தூய்மையாளர் என்பது நிரூபிக்கப்பட்டது. மற்றொரு பெண்ணை கொன்று இவர் இருப்பிடத்தின் முன் போட்டு இவர்மீது பெண் கொலைக்குற்றம் சுமத்தினர். ஆனால் உண்மைக் குற்றவாளிகளான அந்த காட்டுமிராண்டி மதவெறியர்கள் கண்டுபிடிக்கப்பட்டு—மரண தண்டனை விதிக்கப்பட்டனர். இத்தகைய எதிர்ப்பு அலைகள் இப்போதும் இக்மாதிரி கொள்கையாளர்களுக்கும் ஏற்பட்டு வருவது அறிந்ததே.

புத்தர் தமது கோட்பாடுகளைப்பரப்ப கைக்கொண்டது 'பார்ப்பன மத முறையல்ல—அதாவது பூசை யாகங்கள்—மந்திரங்கள் முறையல்ல.

கால்நடையாக ஊர்தோறும் நாடு தோறும் சென்று பாமர மக்களும் உணர்ந்துகொள்ளும் முறையிலும்,

(9-ம் பக்கம் பார்க்க)



# எதிரொலி



கவர்னர் ஸ்ரீ பிரகாசா வடக்கு-தெற்கு பிரிவினைக்கூற்றை ஒழித்தவர்.

—ராஜாஜி.

கிடையாது! மல்லியான மணம் கமழ்ந்தாலும், மனம் வடக்கைத்தானே நாடுகிறது?

*    *    *

இளம்பிள்ளையில் திரு. வி. க; நூல் நிலையம் கல்வி மந்திரி திறந்து வைத்தார்.

—செய்தி

திரு வி. க. எழுதிய நூல்களைப் படித்தால் தமிழன், தமிழ்நாடு, தன்மானம் என்று வருவதைக் காணச் சகியாமல் கண்களை மூடி வைப்பாரோ?

*    *    *

நாலுக்கும் தேசவுக்கும் அதிகத் தொடர்பு அவசியம்.

—பக்தவச்சலம்.

ஆமாம்; அமைச்சருக்கும், அறிவுக்கும் போல் இருந்துவிடக் கூடாதே!

*    *    *

சிவாஜி கணேசன் தாயார் செல்லம்மாள் அரியலூர் விபத்தில் சிக்கி மடிந்தார்

—செய்தி.

அவருக்கு அனுதாபம்; ஆனால், திருப்பதி வெங்கடாசலபதி... அட ஏழுமலையானே! நீ இருக்கிறாயா? செத்துவிட்டாயா?

*    *    *

'தமிழ்நாடு' எனப் பெயரிடக்கோரி திருப்புத்தூரில் 22 வயது இளைஞர் உண்ணாவிரதம்,

—செய்தி.

விருதை சங்கரலிங்கனாரைத் தொடர வீரர் காமராசர் வழிகாட்டுவாரோ?

*    *    *

அரிசனங்கள் மதம் மாறுவதால் நிலைமை உயர்ந்துவிடாது;

—ஜகஜீவன்ராம்

மாறுமலிருந்தால் உயரவில்லையே!

★ 7-12-56 ★

"பகுத்தறிவு" பக்கங்கள் உயருகின்றன;
தரமும் உயருகின்றது; விலையும்
சற்று உயருகின்றது.

## இலக்கியச் சோலையில்

ஒரு புதுப்பகுதி. செந்தமிழும் பகுத்தறிவும் செழிக்கும் வகை, நந்தமிழ் இலக்கிய நயங்களை எடுத்தியம்பும் எழிலோவியமாகத் தொடருகின்றது.

தோழர், ப. உ. சண்முகம் அவர்களின்
பண்புத் தமிழோவியம்

## தேசிங்குராஜன்

விரைவில் தொடங்குகிறது.

பக்கங்கள் 12. விலை 0-1-6.

## பகுத்தறிவு பொங்கல் மலர்.

சிந்தைக்கு விருந்தளிக்கும் பைந்தமிழ் முழக்கம்!

★

இன்பத்தேன் பிலிற்றும் இலக்கியச் செல்வம்!

★

குறைந்த விலையில் நிறைந்த மண மலராகத் தயாராகிறது.

விலை 0—8—0 தான்!

விற்பனையாளரிடம் உங்கள் பிரதிக்கு இப்போதே சொல்லி விடுங்கள்.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
> —திருவள்ளுவர்.

# இதயம்

மலர் 6 | சேலம் 30—11—56 | இதழ் 22

## தேர்தல் நிதி தாரீர்.

—::—

தென்னகத்து விடுதலை இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபடப் போகின்ற செய்தி நாட்டு மக்களிடையே ஒரு பரபரப்பினை உண்டாக்கியிருக்கிறது.

ஆளும் கட்சினர் கண்மூடித்தனமாக நம்மைத் தூற்றுவதையும், தாக்குவதையும்; நமது கோரிக்கைகள், குற்றச்சாட்டுகளுக்கு விடையிறுக்க வக்கு வகையின்றி திக்குமுக்காடுவதையும், நாட்டுமக்கள் நன்கு உணரத் தொடங்கி விட்டனர்.

அதே நேரத்தில் நமது கொள்கை—குறிக்கோளினையும், கழகத்தின் நடைமுறையிலே பொலிகின்ற கடமையுணர்ச்சி, கண்ணியம்—கட்டுப்பாட்டு வலிமைகளையும் காணுகின்றனர். விமோசனம் கிட்டிடுமென்று நன்னம்பிக்கை கொள்கின்றனர்.

திராவிடத்தின் உரிமையற்ற இருண்ட வாழ்விலே செவ்வொளி பரப்பிடும் உதய சூரியனை, சுதந்திரவுணர்வு பெற்ற தமிழ் மாந்தர் ஒவ்வொருவரும் கைகூப்பி வரவேற்கக் காத்திருக்கின்றனர். அவர்களது நம்பிக்கை—நல்லுணர்வை மெய்யாக்க நம்மிடம் லட்சிய உரமிருக்கிறது. அந்த அளவுக்கு பணபலம் இல்லை. இதனை மறைப்பதிலே பயனில்லை.

ஜனநாயக வளர்ச்சிக்குத் தேர்தல் எவ்வளவு முக்கியமோ, அந்த அளவுக்குத் தேர்தலில் ஈடுபட பணமும் முக்கியத்துவம் பெறுகிறது. ஆட்சிக்குத் தேர்தல் தேவை; தேர்தலுக்குப் பணம் தேவை; சாட்டையின்றி பம்பரம் ஆட்டுவது வெறும் பேச்சிலே முடியலாம். செயலாக்கத்திலே நிச்சயம் முடியாது.

24—11—56 சென்னை கூட்டமொன்றில் அறிஞர் அண்ணா பேசுகையில்: "தேர்தலில் நாம் 150 இடங்களுக்குப் போட்டியிடுகிறோம் என்றால், 'டிபாசிட்' தொகைக்காக நாம் கட்ட வேண்டிவருவது மட்டும் சுமார் ரூ. 49,000 ஆகும். ஒரு தொகுதிக்கு தலைமைக் கழகம் ரூ. 1000 தருவதானாலும். ரூ. 1,50,000 வேண்டியிருக்கும். போஸ்டர்கள் வெளியிடுவதற்கு ஒரு லட்சம் ரூபாய் தேவைப்படலாம். இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் நமது பொதுச் செயலாளர் 5 இலட்சம் ரூபாய் வேண்டுமெனக் கேட்டிருக்கிறார்" என்று கூறியுள்ளார்கள். கழகத் தோழர்களும், அனுதாபிகள், ஆதரவாளரும் இதனை ஊன்றி நோக்கல்வேண்டும்.

மேலும், டிசம்பர் 10-ம் நாள் முதல் தேர்தல் நிதி திரட்டும் வாரமாகக் கொண்டாடி நிதி வசூலிக்குமாறு பொதுச் செயலாளர் நாவலர், நெடுஞ்செழியன் அவர்கள் வற்புறுத்தி வேண்டியுள்ளார்கள். பெரியதோர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டு விட்டோம். கடமையைச் செய்யப் பின்தங்குவதோ, காலங்கடத்துவதோ அழகன்று. எனவே நாம் பணிவன்போடு வேண்டுகிறோம்; தேர்தல் நிதி தாருங்கள்! இலட்சிய வெற்றிக்கு பலம் தேடுங்கள்! தேச விடுதலைப் பணிக்கு வீசுங்கள் வெள்ளித் தோட்டாக்களை! அருமைத் தோழர்களே! தாய்மார்களே! உங்கள் நிதி எவ்வளவு? எப்போது? எங்கே? யாரிடம்? பதில் பேச்சாகவோ, எழுத்தாகவோ வேண்டாம். பணமாகவோ, 'கரன்சி'யாகவோ இருக்கட்டும்.

—ப கண்ணன்.

தலைமைக் கழக அறிக்கை எண் 11/59:

## தேர்தல் நிதி திரட்டும் வாரம்

**[டிசம்பர் 10-ம் நாளிலிருந்து 16-ம் நாள்வரை]**

**கடமையைச் செய்ய கிளைக் கழகங்களுக்கு வேண்டுகோள்.**

நாடெங்கணும் அமைந்துள்ள தி. மு. கழகக் கிளைகள் அனைத்தும், 1956 டிசம்பர் 10-ம் நாளிலிருந்து 16-ம் நாள்வரையிலும் உள்ள ஒரு வார காலத்தைத் 'தேர்தல் நிதி திரட்டும் வாரமாக'க் கருதித் தேர்தல் நிதி திரட்டும் பணிகளில் தீவிரமாக ஈடுபடும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

அந்த ஒருவார காலத்தில் திரட்டிடும் நிதியை நேரிடையாக தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

நிதி அனுப்பிவைக்க வேண்டிய முகவரி;-

பொதுச்செயலாளர், தி. மு. கழகம்,
'அறிவகம்' இராயபுரம் சென்னை 13

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர், தி. மு கழகம், 28-11-56




[முன் இதழ் தொடர்ச்சி]

எங்கள் பெருமன்னவரே வாழி
ஏதிலரை வென்றவரே வாழி
திங்கள் நிகர் தண்ணமுதே வாழி
சிந்தையினில் நல்லவரே வாழி-வாழி.

கழற்சிங்க நாயகரே வாழி
கருணை வடிவானவரே வாழி
சுழல் கின்ற வேல் மறவ வாழி
சூரர்குல காவலனே வாழி-வாழி

(தட்டத்திலிருந்து நீராஞ்சனம் எடுத்து, மன்னரின் நெற்றியில் இடுகிறாள் பன்னீர் தெளிக்கிறாள்)

நந்தி:- (மகிழ்ந்து கரம்பற்றி) கண்மணி சங்கா! களிப்பால் துள்ளுகின்றது நெஞ்சம். நான் துய்க்கின்ற மகிழ்வும் பெருமையும் உனது நல்லெண்ணத்தின் பிரதிபலிப்புகள்!

சங்கா:- நாதா! மிகைபடக் கூறுகின்றீர்கள். தங்கள் வெற்றிக் காவியத்தின் பொன்னேட்டிலே நான் ஓர் எழுத்து! வீரக்களஞ்சியத்தின் செம்பொருளில் ஓர் துரும்பு.

நந்தி:- சிறு துரும்பு கலன் நீர் தேக்கிற்றும்! என் செங்கரும்பு நாட்டிற்கு வந்த பேராபத்தையே நீக்கிற்றே! சங்கா! நீ மகாராணி என்ற சொல்லின் மகத்தான இலக்கியம்!

சங்கா:- (நாணி) தங்கள் அன்பின் பெருக்கு, என்னை நாண வைக்கின்றது. ஆனாலும், இவ்வளவு அதிகமாகப் புகழக் கூடாது நாதா!

நந்தி:- மேலும் சுவைபடப் புகழ்வதற்குப் புலமையில்லையே என்று வருந்துகிறேன் நான்.

(சிறுவன் நிருபதுங்கன் ஓடிவருகிறான்)

நிருப:- அப்பா! அப்பா!

நந்தி:- வாடா கண்ணே! (வாரியணைத்து) நிருபதுங்கா! நீ விரும்பியபடியே பகைவரை வென்றேனடா. நமது தாயகம் மாற்றானுக்கு அடிபணியவில்லை; மாற்றாரையே நம் முன் பணியவைத்து.

நிருப:- சிங்கத்தின் முன்பு சிறுநரிகள் என்னப்பா செய்ய முடியும்? ஆனாலும் சித்தப்பா செய்தது..?

நந்தி:- பெரிய துரோகம். அன்றொருநாள் துடுக்குத்தனமாக அவனைப் பேசினாய். அதைக் காதென்று கோபித்தேன். இப்பொழுது தெரிகிறது அவனது வக்ரபுத்தி! சங்கா! உன் கருத்துக்கள் எதுவும் பலிக்காமல் போவதேயில்லை.

சங்கா:- மீண்டும் புகழ்ச்சிப் படலம் ஆரம்பமாகின்றதோ?

நந்தி:- நானுமின்றா? அப்படியானால் சொல்லவில்லை. சங்கா! நமது வெற்றிக்காக நாளை சிவாலயத்தில் வழிபாடு. வருவாயோ?

சங்கா:- என் பாக்யமாயிற்றே நாதா!

நந்தி:- மதபேதமற்ற உன் பரந்த நோக்கம், மக்களுக்குத் தெரியவில்லையே!

சங்கா:- என்னுள்ளம் தாங்களறிந்தால் போதாதா?

நந்தி:- நானறிந்துதானே உன்னை விரும்பினேன். மணந்தவனுக்கல்லவோ தெரியும் இந்த மல்லிகையின் நறுமணம்!

(அன்போடு முகவாய்க்கட்டையைப் பிடிக்கிறான்)

## காட்சி 19.

(தெரு. சேனாபதி விக்ரமகேசரி வந்துகொண்டிருக்க, பின்னால் வந்த பரதேசியொருவன் உடையைப்பற்றி இழுக்கிறான்)

விக்ரம:- (சினந்து) யாரடாவன் பரதேசிப் பயல்? என்ன குறும்படா உனக்கு?

பரதேசி:- சிவோகம் ... சச்சிதானந்தம் .... அடியேன் சக்திமுனையரின் சிஷ்யன்.

**விக்ரம:-** பொய் அவரது சிஷ்யர்கள் எல்லோரையும் எனக்குத் தெரியும். நீ யார்?

**பரதேசி:-** சிவோகம்...சச்சிதானந்தம்!

**விக்ரம:-** (சினந்து) சிவோகமாவது, சச்சிதானந்தமாவது; பிச்சைக்காரப் பயலே!

(கையால் தாடியைப் பற்ற, தாடியும், மீசையும் கையோடு வந்துவிடுகின்றன. எதிரே சந்திரவர்மன் நிற்கிறான்)

**விக்ரம:-** (வியந்து) அடடே! சந்திரவர்மரா? மன்னிக்கவேண்டும் மன்னிக்க வேண்டும். தாங்கள்........

**சந்திர:-** முதலில் அந்தக் கோலத்தைக் கொடும். பிறகு பேசுவோம்.

(மீசையும், தாடியும் வாங்கியணிந்து கொண்டு, சுற்றுமுற்றும் பார்த்து கவலையோடு)

சேனாபதியாரே! நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைத்து விட்டது, திட்டம் நிறைவேற வேறு மார்க்கமில்லையா?

**விக்ரம:-** என் விஷயம், தலை தப்பினதே தம்பிரான் புண்ணியமாய் விட்டதே! ஓலையில் என் பெயர் இருந்திருந்தால், ஒழிந்திருக்குமே என் வாழ்வு!

**சந்திர:-** சேனாபதியாரே! நடந்ததை மறந்துவிடும். ஏதேனும் புதுவழிகாண்போம். இனி, நீர்தான் எனக்குத் துணை. (கைப்பற்றி) எப்படியாவது நான் மன்னனாக வேண்டும். உமது விருப்பம்போல் நடந்து கொள்வேன்; என்ன சொல்லுகிறீர்? என்ன சொல்லுகிறீர்?

**விக்ரம:-** (யோசித்து) நான் கேட்பதைத் தருவீரா?

**சந்திர:-** நிச்சயமாக.

**விக்ரம:-** (தயங்கி) வடிவழகி வித்யாவதி எனக்கு வேண்டும்.

**சந்திர:-** இவ்வளவுதானே! எடுத்துக்கொள்ளும் அந்தப் பச்சைக்கிளியைக் காட்டிலும் பல்லவ சாம்ராஜ்யம் எனக்குப் பெரிதாயிற்றே!

**விக்ரம:-** (தட்டிக்கொடுத்து) சபாஷ்! சபாஷ்! சந்திரவர்மரே! நாம் அடிக்கடி சந்திப்போம். வித்யாவதியை .......

**சந்தி:-** தக்க சமயத்தில் உம்மிடம் ஒப்படைப்பேன், கவலைவேண்டாம்.

(பச்சையும் முல்லையும் வாக்குவாதம் புரிந்தவண்ணம் வருகின்றனர். இவர்கள் பதுங்குகின்றனர்)

**பச்சை:-** முடியாது! முடியாது!! முடியாது!!!

(யாரோ என்றஞ்சி, சந்திரவர்மனும் சேனாபதியும் மறைவில் பதுங்குகின்றனர்.)

**முல்லை:-** ஏம்பா முடியாது? ஏன் முடியாதுன்னேன்?

**பச்சை:-** உச்சாணிக் கொம்பிலேருக்கிற இச்சிலிப்பழத்தை ஒன்னாலேமட்டுமல்ல, என்னாலேகூடப் பறிக்க முடியாது.

**முல்லை:-** எப்படியும் எனக்குப் பழம்வேணும். யாராலும் பறிக்க முடியாதுன்னு சொல்றே? நீ ஆம்பிளே; நான் பொம்பளே; வா என்னோட; நான் பறிச்சுத் தர்றேன் ஒனக்கு.

(அவனைப் பிடித்து இழுத்துக்கொண்டு போகிறாள். சந்திரவர்மனும் விக்ரமகேசரியும் வருகின்றனர்)

**விக்:-** (அலட்சியமாக) ப்பூ! இதுகள்தானா?

**சந்தி:** சேனாபதியாரே! பச்சை என் கையாள், பித்தன் போலிருந்தாலும், எனக்காக எதையும் செய்வான். நம்பிக்கையோடு நமக்குப் பயன் படுவான்.

**விக்:-** நல்லது. நான் வரட்டுமா?

**சந்தி:-** (வருந்தி) சேனாபதியாரே! மறைந்து வாழும் இந்த மானக்கேடு என்று தீரும்?

**விக்:-** கலங்காதீர். காலம்வரும். நான் வருகிறேன்.

(வேகமாகப் போகிறான்)

## காட்சி 20.

(சிவன் கோயில். சன்னிதியில் ஒரு பெண் பரதநாட்டியமாடுகிறாள். பக்தர்கள் சிலர் ரசிக்கின்றனர். மன்னர்—மகாராணி—நிருபதுங்கன் மூவரும் வந்து நின்று பார்க்கின்றனர். நாட்டியம் முடிந்து, பெண்ணும் பக்தர்களும் செல்லுகின்றனர்)

**சங்கா:-** நாதா! இது சிவன்கோயில் மட்டுமல்ல; ஓவியம், சிற்பம், இசை, நாட்டியம் முதலிய நற்கலை வளர்க்கும் சிறந்த கலைக்கோயில்!

**நந்தி:-** சங்கா! இங்கு இருப்பவை, நடப்பவை எல்லாம் ஆகம விதிப்படிதான். இவையாவும் மகத்தானவை. பல்லவர் பெருமையையூழிக் காலம்வரை நிலைக்க வைப்பவை.

**சங்கா:-** சிறந்த நற்கலைகள் சிரஞ்சீவித்துவம் பெற்றவை. சந்தேகமில்லை.

(அங்கு கிடந்த மலரொன்றை குனிந்தெடுத்து முகருகின்றாள்)

(வளரும்)



தலைமைக் கழகம்: அறிக்கை—9/56

# ஒழுங்கு நடவடிக்கை.

கழகத்தின் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் புறக்கணிக்கும் வகையிலும், தலைமைக் கழகத்தை அலட்சியக்கும் வகையிலும், தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ள சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர், இளம்பரிதி, சென்னை 43-வது வட்ட கிளைச் செயலாளர், தோழர், மு புரட்சிமணி ஆகிய இருவர் மீதும், 34-வது வட்ட தி மு க கிளையின் மீதும் கீழ்க்கண்டவாறு ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருப்பதற்கான காரண விளக்கங்கள் முறைப்படி சென்னை மாவட்டக் கழகக் கூட்டத்திலும் பொதுக்குழுக் கூட்டத்திலும் அறிவிக்கப்படும்.

தோழர், இளம்பரிதி அவர்கள் 23-11-56 முதல் 22-11-59 வரையில், மூன்றாண்டு காலத்திற்குக் கழகத்தில் சாதாரண பொது உறுப்பினராயிருப்பதைத் தவிர, தி மு கழகத்தின் எந்த ஒரு கிளையிலோ அல்லது மாவட்டக் கழகத்திலோ, அல்லது தலைமைக் கழகத்திலோ அல்லது துணை அமைப்புகளிலோ நிர்வாகியாகவோ அல்லது செயற்குழு உறுப்பினராகவோ இருப்பதற்கும், மாவட்டப் பிரதிநிதியாகவோ அல்லது பொதுக்குழு உறுப்பினராகவோ இருப்பதற்கும் அறவே உரிமை இல்லை என்று முடிவு செய்யப்படுவதோடு, கழகத்தின் சார்பாகவோ அல்லது துணை அமைப்புகளின் சார்பாகவோ நடைபெறும் எந்த ஒரு நிகழ்ச்சியிலும் பொறுப்பு ஏற்கவோ அல்லது சொற்பொழிவு ஆற்றவோ. அறவே உரிமை இல்லை என்று முடிவு செய்யப்பட்டு, அதன்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

தோழர், மு. புரட்சிமணி அவர்கள் 23-11-56 முதல் 22-11-58 வரை இரண்டாண்டுகாலத்திற்குக் கழகத்தில் சாதாரண பொது உறுப்பினராயிருப்பதைத் தவிர, தி மு கழகத்தின் எந்த ஒரு கிளையிலோ அல்லது மாவட்டக் கழகத்திலோ, அல்லது தலைமைக் கழகத்திலோ துணை அமைப்புகளிலோ, நிர்வாகியாகவோ, அல்லது செயற்குழு உறுப்பினராகவோ இருப்பதற்கும், மாவட்டப் பிரதிநிதியாகவோ அல்லது பொதுக்குழு உறுப்பினராகவோ இருப்பதற்கும் அறவே உரிமை இல்லையென்று முடிவு செய்யப்படுவதோடு, கழகத்தின் சார்பாகவோ அல்லது துணை அமைப்புகளின் சார்பாகவோ நடைபெறும் எந்த ஒரு நிகழ்ச்சியிலும் பொறுப்பு ஏற்கவோ அல்லது சொற்பொழிவு ஆற்றவோ அறவே உரிமை இல்லை என்றும் முடிவு செய்யப்பட்டு, அதன்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

சென்னை 43-வது வட்டத் தி மு. கழகக் கிளை 23-11-56 முதல் தலைமைக் கழகத்தின் மறு அறிக்கை வெளிவரும் வரையில் கலைக்கப்படுகிறதென்று முடிவு செய்யப்பட்டு அதன்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (தலைமைக் கழகத்தின் உத்தரவுப்படி) மறுதேர்தல் நடைபெறும் வரையில் 43-வது வட்டத்திலுள்ள கழக உறுப்பினர்கள் அனைவரும் சாதாரண பொது உறுப்பினர்களாகவே இருந்து வருவார்கள்.

குறிப்பு:- சென்னை மாவட்டத்தின் புதிய செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் ஆகியோர் தேர்வு நடைபெறுவதற்கான நாள் விரைவில் அறிவிக்கப்படும்.

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்,
'அறிவகம்' சென்னை-13
23—11—56

மக்கள் முட்டாள்களாக இருந்த பொழுது கடவுள் அறிஞராகக் காட்சியளித்தார். மக்கள் அறிஞர்களாக மாறுகிற பொழுது கடவுள் முட்டாளாகக் காட்சியளிக்கிறார்!

—ஞானி.

## முன்னேற்றப்—
## —பாதையிலே

**கும்பகோணம்.**

தவரங்குறிச்சியில், 2-12-56 ஞாயிறு மாலை தோழர், ஏ கே. வெங்கடாச்சாரி தலைமையில், எஸ். ஆர்: ராதா, கே.கே. நீலமேகம், இரா. இளமவழுதி M.A;B.L. டி. கே. சீனிவாசன் பேசுவார்கள்.

வள்ளுவர் நெஞ்சம்.

## உலக வாழ்த்து-ய.

அதிகாரம்-க. பாட்டு-ய

பிறவிப் பெருங்கடல்-
-நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

எல்லாந் தெரிந்துணர்ந்த அறிவாளியின் துணையைக் கைகொண்டவர் காரண காரிய தொடர்ச்சியால் வாழ்க்கையெனுங் கடலை, அறிவின் துணையெனும் கப்பலால் எளிதில் கடப்பர். அதாவது, இன்ப வாழ்வு வாழ்வார் அறிவாளியின் அன்பைப் பெறாதவர் அல்லலனுபவிப்பார் தெளிவில்லாத காரணத்தால், என்பதாம்.

—மீ. சு. இளமுருகு பொற்செல்வி

# பகுத்தறிவு.

7–12–56 முதல்
கையொப்பத்தொகை:
ஆண்டு 1-க்கு 5-0-0
ஆறு மாதங்கள் 2-8-0
தனிப்படி 0-1-6
விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.
பகுத்தறிவு அலுவலகம்,
சேலம்-1.

# கேள்விக்கணை

> இக்கிழமை பரிசு பெற்றவர்:
> ● கு. இரா. பரமசிவன்,
> தெற்குரத வீதி,
> காரமடை, கோவை மாவட்டம்.

**எம். பழனிசாமி, தொளசம்பட்டி.**

*கே: பக்தவத்சலம் இணைப்பூர், தி. மு. க. வின் கொள்கை பலமும் ஒன்று சேருமா?*

ப: தேவையில்லையே. தி. மு. க. வின் கொள்கைபலமும், பொது மக்களின் வோட்டு பலமும் இணைந்தால் போதும்.

* * *

*கே: எடுத்ததற்கெல்லாம் அவன் செயல் என்போரின் நோக்கம் என்ன?*

ப: நோக்கம் எதுவுமேயின்றி, நொடித்துப்போன நெஞ்சை உள்ளத்தில்தானே இந்த ஏக்கம் பிறக்கிறது!

**கு. இரா. பரமசிவன், காரமடை.**

*கே: பாம்புக் கிரியுக் சண்டை பிடிக்க விடுவது குற்றமாம். "கணவனே கண்கண்ட தெய்வ"த்தில் செய்கிறார்களே; ஏன் தண்டிக்கவில்லை?*

ப: இருமனைவியரை மணப்பதும் குற்றம்தான். முருகனுக்கு, வள்ளி தெய்வானைகளை மணம் முடிக்கும் திருவிழாப்பக்தர்களை தண்டிப்பதில்லையே! அதுபோல்தான் இது.

* * *

*கே: பெரியார் காமராஜரை ஆதரிப்பது, பூனை எலிக்கு மனைவியாவது போல் இல்லையா?*

ப: மனைவியாவது மட்டுமல்ல, சுதந்தரமற்ற, பகுத்தறிவற்ற அடிமை மனைவியாக எலியின் ஏசலையும், தூற்றலையும் என் பாக்யம் என்று போற்றி வாழவும் முனைந்துவிட்டது முதுபெரும்பூனை!

**மா. அரங்கசாமி கோவை**

*கே: உண்மைக் காதல் தோன்றிய உள்ளங்களின் வாழ்விலே, அது எந்த வகைய விந்தைகளைப் புரியும்?*

ப: மலையைக் கடுகாக்கும், இரவைப் பகலாக்கும், துன்பத்தை இன்பமாக்கும், இன்னும் எத்தனை எத்தனையோ அற்புதங்கள் செய்திடும்!

* * *

*கே: இன்றைய சென்னை மந்திரிகளில் யாருக்குப் பார்வை மக்கள்?*

ப: வடநாடு வளர்வதையும், தென்னாடு தேய்வதையும் காணமுடியாதவர்கள்தானே மந்திரிகளாகத் தகுதி பெற்றவர்கள்! அனைவருமே அரைக் குருடர்கள் தாம்.

**தாரை-கரன், நாரமங்கலம்**

*கே: திருவிடம் தேய்ந்ததற்கு முக்கிய காரணம் ஆரியர்களா? வடநாட்டார்களா?*

ப: வடநாட்டு ஆரியரும், அவர் வழிவந்த வடநாட்டு வாணிபரும் முக்கிய காரணமானவர்கள்தான்!

**"பகுத்தறிவு"ப் பிரியன், சாத்தூர்.**

*கே: தி. மு. க. வில் எந்த மேடையில் யார் பேசினாலும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற முப்பொருள்களையும் கூறுவது ஏன்?*

ப: அவைகள், ஒரு கட்சிக்கும், நாட்டுக்கும் அத்தியாவசியப் பொருட்கள் என்பதால்தான்.


## பாரிஸ் அழகிகள்.

கவர்ச்சிமிகுந்த பாரிஸ் யுவதிகளின் இயற்கை அழகை பலவித படுக்கை யறைத் தோற்றத்தில் காணவல்ல 36 அசல் போட்டோ படங்கள் ரூ. 10 முன்பணம் அனுப்பினால் தபால் செலவு இலவசம் சாம்பிள்கள் கிடையாது

வீனஸ் டிரேடிங் கம்பெனி (த ப)
தபால் பெட்டி 1693,
சென்னை-1


<u>விநோபா ராமாயணம்.</u>

## நான் அறிந்த வரையில்.

*ராமனை எதிர்த்து மக்கள் இங்கே பேசுவதில் நான் அறிந்தவரையில் இரண்டு கருத்துக்கள் வருகின்றன. ஒரு ஆட்சேபனை என்னவென்றால்; அவன் வட இந்தியன் என்பதும், ராமாயணம் வடஇந்தியா தென் இந்தியாவை எப்படி அடக்குவது என்ற சரித்திரம் என்பதுமாகும். இரண்டாவது ஆட்சேபனை; ராமனது வாழ்க்கையை மக்கள் எவ்வளவு ஆதாரமாகக் கருதுகிறார்களோ அவ்வளவு ஆதாரமாக இல்லையென்பதும், அதிலே மிகுதியான குறைகளும் இருக்கின்றன என்பனவுமாகும்.*

—விநோபா பாவே.
1-8-56 கோரம்பூரில்.

திராவிட நாட்டில் ராமாயணத்திற்குப் பெருத்த எதிர்ப்பு இருப்பதை இங்குள்ள வைதிகர்கள்—ஆரியர்கள் கண்டறிவர். எனினும், எதிர்ப்பினை அறிந்ததாகக் காட்டிக் கொள்ளவோ, எதிர்ப்புக்கு மதிப்பளித்து, சமாதானம் கூறுகின்ற வகையில் வெளிப்படையாகப் பேசவோ, எழுதவோ இங்குள்ள ஆரியர்கள் துணிவு கொண்டதில்லை. வடநாட்டு விநோபா துணிவோடு, தான் கொண்ட கருத்தினை வெளியிடுகின்றார், இவ்வாறு!

ஒரு பிரச்சினை எழுந்த பிறகு; அதை கொழுந்துவிட்டு எரியும்பொழுது, அப்படியொரு பிரச்சினை நாட்டில் இல்லாததுபோல் காட்டிக் கொள்வது சரித்தனம்; அதனைப் பிறர் அறியாமல் செய்ய முயலுவது பேடித்தனம்; பிரச்சினையை திரித்துக் கூறி, உண்மைக்கு எதிராகப் போரிட மக்களையும், அரசினரையும் தூண்டிவிடுவது ஈனத்தனம்! இவ்வகைத் "தனங்கள்" எதுவுமில்லாமல் இராமாயண எதிர்ப்புப் பிரச்சினையை அணுகி, ஆராய்ந்து, சரியோ தவறோ தன் மனதிற்பட்ட கருத்தினைக் கூறியுள்ளார் பெரியார் விநோபா. பாராட்டுகிறோம்!

—ப[illegible]

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

எளிய பேச்சிலும் சீர்திருத்தங்களை எடுத்துரைத்து வந்தார் ஊரூராகச் சென்றார். வீடுவீடாகச் சென்றார். மக்களுடன் சமத்துவமாகப் பழகினார். அறிவுவிளக்கம் செய்தார்.

இவ்வுலகில் இவ்வாழ்வில் இவ்வுடலில், தமது சொந்த நடவடிக்கைகளினால் இன்பம் எய்தும் வழிகளைக் கூறினார்.

புராணக் கோட்பாடுகளின் பித்தலாட்டங்களை வெட்ட வெளிச்சமாக்கினார். எதிர் மதத்தினருடன் அமைதியாக வாதம் செய்து அவர்கள் கோட்பாடுகள் பொய்யென்பதை நிரூபிப்பார். இவருடைய சொற்பொழிவுகளில் குட்டிக் கதைகள் பழங்கதைகள், புதுக்கதைகள் உவமானமாகக் கூறப்படும்.

கடவுள் கொள்கையில் கவலைகொள்ளாதே என்பது புத்தரின் அறிவுரை. நல்லறிவு கொள்; நல்லதை அறி; நல்னெறி நட; நல்வாழ்வுபெறு; அன்புசெலுத்து; எல்லாருக்கும் அன்பனாக இரு என்பதே இவரது சொல்லுரைகளின் ரத்தினச்சுருக்கம்.

தெய்வீகக் கோட்பாடு கொண்டது தான் மதம் என்றால் அந்தவகையில் பவுத்தம் ஒரு மதமல்ல. பவுத்தம் ஒரு நன்னெறி இயக்கம்.

ஒரு பிராமணனிடம் புத்தர் பிரான்,

"சாஸ்திரங்கள் பிரமாணங்கள் முதலியன பகலை இரவென்றும், இரவைப் பகலென்றும் சாதிக்கின்றன. நானோ பகலை பகலென்றும் இரவை இரவென்றும் கூறுகிறேன்" என்றார்.

பல மதத்தினரும் பலவிதக் கோட்பாடுகளைக் கூறுகின்றனரே எதை நம்புவது என்று சிலர் கேட்டபோது புத்தர் பிரான்.

"சந்தேகம் எழுவது இயற்கையே. பல தலைமுறைதத்துவமாக பலவிடங்களில் பலரும் கைக்கொண்டு நடந்திருக்கின்றனரே என்பதற்காக பரம்பரை பழக்கவழக்கங்களில் நம்பிக்கை கொள்ள வேண்டாம். பழைய முனிவர் ஒருவர் எழுதி வைத்திருப்பதை ஆதாரமாகக் காட்டுவதை ஏற்று எதையும் நம்பவேண்டாம் மனதிலே கற்பனை செய்துகொண்டதை உண்மையென்றோ ஆசிரியனென்றோ தேவ வாக்கென்றோ நம்பாதே எதையும் ஆராய்ந்து பார்—பகுத்தறிவுக்கு ஏற்றதாயின் மக்கள் பலருக்கும் பயன்படுவதாயின் அதையே ஏற்றுக்கொள்—கைக் கொண்டு நட"

என்று அறிவுரைகள் கூறினார்.

விசாரணையின்றி எதையும் ஏற்றுக் கொள்ளாதே என்பதே பவுத்தத்தின் முக்கிய புத்திமதி மற்றும் அறிந்து கொள்ளவேண்டியதற்காகவும் கண்மூடித்தனமாக எதிலும் நம்பிக்கை கொள்ளலாகாதென்றும் எச்சரிக்கிறது.

மூடநம்பிக்கைத் திணிப்பு வேதமதத்தின் உயிர்த்தாது இந்த உயிர்த்தாதுவை சுட்டெரிக்கிறது பகுத்தறிவு நெறியான பவுத்தம்.

அர்த்தம் புலனாகாதது—புரியமுடியாதது என்பதற்காக அவற்றை கண்மூடித்தனமாக நம்புவதுதானே இந்த மதத்தின்படி தெய்வீகம். இந்த கண்மூடி நம்பிக்கையை புத்தர் கண்டிக்கிறார். அறிவியக்கத்துக்கு அதிக ஊக்கமளிப்பது பவுத்தம்.

"சந்தேகம் கொள்-விசாரணைசெய்-மெய்மையில் மனத் திருப்திகொள்—அதன்பின் அதனைக் கைக்கொண்டு நட" என்பது இவரது நன்மொழி.

"எனக்கு மதிப்புத்தர வேண்டுமே என்பதற்காக என் தர்மத்தை ஏற்றுக் கொள்ள வேண்டாம். தங்கத்தின் மாத்தை உரைத்து அறிவதுபோல், நான் கூறுவனவற்றின் மாத்தையும் கவனித்தறிந்துகொள்" என்று வெளிப்படையாகக் கூறினார்.

புனிதம், புண்ணியம், தெய்வீகம் என்பது பித்தலாட்டப் பேச்சென்கிறார். இவ்விதம் கூறுவது குருடருக்கு குருடர் வழிகாட்ட முற்பட்ட கதை என்கிறார். கண்மூடித் தனமாக ஒரு கருத்தை ஏற்றுக் கொள்பவன் தேனின் சுவையறியாத கரண்டிக்கு ஒப்பாவான் என்கிறார்.

"மன்னனுடைய சொற்களை ஒப்புவிப்பதால் மன்னனாகிவிட முடியாது. அதே போல், வேதமொழிகள் என்பனவற்றை குருட்டுப்பாடம் செய்து ஒப்புவிப்பதால் அறிவொளி ஏற்பட்டு விட்டது. பரம்பரை பழக்க வழக்கத்துக்கும் அதிகாரத்துக்கும் தலைகுனிந்து நடப்பது மதிப்பும் பயனும் தந்துவிடாது. விசாரணையும் அனுபவமுமே அறிவு வளர்த்தரும். மதத்துறைத் கருத்துக்களை மறைத்துவைப்பவர்கள் திருட்டுக் கர்ப்பத்தை மறைக்கும் மாதைப் போன்றவர்" என்கிறார்.

"காயமடைந்தவர்களே, உங்கள் காயத்தை நீங்களே மருந்திட்டு ஆற்றிக் கொள்ளுங்கள்—பசித்தவர்களே, பசியாற உணவைத் தேடியுண்ணுங்கள். தாகவிடாய் கொண்டவர்களே, தண்ணீரிருக்கும் இடம் தேடிச்சென்று அந்நீரையுண்டுவிடாய் தணியுங்கள். இருட்

(பின்பக்கம் பார்க்க)

வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த
செல்வம் ராணி
&
சேகர் ஊதுபத்திகளை
வாங்கி உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்:
வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037–38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

டிலே அமர்ந்திருப்பவர்களே! வெளிச்சத்தைக் காணுங்கள். கவலையில் மூழ்கியிருப்பவர்களே! கவலைவிட்டுக் களிப்புக் கொள்ளுங்கள்.''

இவையே புத்தநெறிச்சாரம்.

ஈசுவரன் மனிதனை உண்டாக்கவில்லை. மனிதன்தான் கடவுள் இலட்சணங்களை கற்பித்துக் கொண்டான். பலர் நம்புகின்றனர் என்பதற்காக கடவுள் இருப்பதாகத் தீர்மானிப்பதா என்பதே இந்த அறிவு மதம் தரும் விளக்கம். மெய்யல்லவற்றைக் கூறி மெய்யெனச் சாதிக்க முற்பட்டனர் வேத மதத்தினர். இவ்வவை மதநம்பிக்கைகள் வெறும் கற்பனைக் கனவே.

நடைமுறையில் காட்சிப் பொருளாகக் கடவுளைக் காண்பதற்கில்லை; எந்த மதமும் கடவுள் தன்மையைத் திட்டவட்டமாகக் கூறவில்லை. அந்தந்த வட்டார மக்கள் தத்தமது சூழ்நிலை பழக்க வழக்க வாய்ப்பு வசதிகளுக்கேற்றபடி கடவுள் தன்மையைக் கற்பனை செய்து கொண்டனர்.

மனிதத்தன்மையை திட்டவட்டமாக நிர்ணயிக்கப்படாதபோது, மனிதர்கள் அறியாத அந்தக் கடவுளின் தன்மையை எப்படி நிர்ணயிக்க முடியும்? நரகம்,மோட்சம் ஆகியவை பகுத்தறிவு ஒப்பமுடியாத கற்பனை.

பவுத்த மதத்தில் 'கர்மம்' என்றும் குறிப்பிடப்படுகிறது. ஆனால் இந்துமதம் குறிப்பிடும் குறுகிய அர்த்தத்திலல்ல. கர்மம் என்பது மனிதருக்கு மாத்திரமல்ல, உலகம் முழுமைக்கும் உரியதென்கிறது பவுத்தம்.

திரு. குருதத்தர் என்பவர் எழுதியுள்ள பவுத்த நூலில் ''கர்மா'' என்பது பற்றி குறிப்பிட்டிருப்பதாவது:-

சிருட்டிப்பவர்களுமில்லை; சிருட்டிக்கப்படுபவர்களுமில்லை. மனிதர்களும் உண்மை உயிரினமல்ல நடப்பும், காரணங்களும் சாதாரண நிலைமையில் அவற்றைப் பிறப்பிக்கின்றன மனிதவுடல் ஸ்கந்தங்களின் தற்காலிகக் கூட்டு அமைப்பு. இந்தக்கூட்டமைப்பின் தலைக்கமே பிறப்பு. இந்தக் கூட்டமைப்புச் சிதைவே சாவு.

இந்தக் கூட்டமைப்பு நிலைமை நீடித்திருக்கையில் நல்லது கெட்டது செய்யப்படுகின்றன. இவையே மக்களின் பிற்கால மகிழ்ச்சிக்கும், தொல்லைகளுக்கும் வித்தாகின்றன. இவ்வாறாக பிறப்பும், சாவும் முடிவின்றித் தொடர்கின்றன. மனிதர்கள் பிறப்புக்கும், இறப்புக்கும் இடையில் தாங்களாகவே நடமாடுகின்றனர், அவர்களுடைய நடவடிக்கைகளே இவற்றை விளக்குகின்றன.

இயற்கைப் பொருள்களின் நடவடிக்கைகளே—இயக்கமே பல்வேறு மலைகள், ஆறுகள், காடுகள், நதிகள் முதலியனவற்றை உண்டாக்குகின்றன.

இந்தக் கடவுள்கள் உருவம் கோரமாக வுள்ளனவே!

உள்ளத்தூய்மை கொண்டோர் முகத்திலே கொடுமைச்சாயல் கொண்டிரார். நல்ல பழக்க வழக்கம் முறைகள் கொண்ட நாட்டில், நல்ல நிலைமையும், கெட்ட பழக்கவழக்கங்கள் கொண்ட நாட்டில் கேடுகளும் நிலவும் அவரவர்களின் செய்கைகளுக்கேற்ப மூகமும் உடலும் தோற்றமும் ஏற்படுகின்றன. அதற்கேற்றபடி பலனுமடைகின்றனர்.

இயற்கை விதிகளை வகுத்துத் தருவாருமில்லை. எனவே, இயற்கை விதிகளை மீறுவதென்பதுமில்லை. அவ்விதம் மீறுவதைக் காட்டித் தண்டிப்பாருமில்லை. ஆகவே, கடவுள் தண்டனை என்பது ஆதாரமற்றதாகிறது. மோட்சமும் நரகமும் அறியாமையின் கற்பனை. கர்மம் என்றால் செயல். இச்செயலின் விளைவு தத்தமக்குரியது. வேதம் கூறுவதுபோல் ''கர்மா'' என்பது கடவுள் தொடர்பு கொண்டதல்ல. ஆத்மா என்பது ஐம்புலன்களின் உணர்ச்சிப் பீடமே!

> தவறு செய்தால் வெட்கப் படுதல் நல்லதே. ஆனால் அதை ஒப்புக்கொள்ள ஒரு நாளும் வெட்கப்படாதே
>
> —ஆவ்பரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னொன்றையும் சிந்திக்க வேண்டும். அனைத்திந்திய ரீதியில் பரந்த நிலப்பரப்பிலே, பல்லாயிரக்கணக்கான மயில்களிலே ஓடுகின்ற புகைவண்டித் தொடர்கள் அத்தனையின் நிருவாகத்தையும் டெல்லியிலே பிடித்து வைத்துக் கொண்டிருப்பது நியாயம்தானா? அஃது திறமையோடு பணியாற்ற முடிந்த செயல்தானா? அரியலூர், மகபூப் நகர் விபத்துக்களும், அமைச்சர், சாஸ்திரியாரின் ராஜிநாமாவும் இயலாமையை அங்கை நெல்லிக்கனி போல் காட்டிடவில்லையா? ஏன் இன்னும் அகில இந்தியா? எண்ணிப் பார்க்க வேண்டும், தென்னாட்டுக் கதர்ச்சட்டைகளேனும். அரியலூர் விபத்து, அரசியலாரின் சிந்தனைக்கு ஓர் அறை கூவல்!

பத்து ஏக்கர் உழுபவனிடம் பத்தாயிரம் ஏக்கர் நிலத்தை ஒப்படைத்தால், வேளாண்மையின் தரம் குறையுமா? உயருமா? அறுபதினாயிரம் மனைவியரைக் கட்டிக் காத்து மலடிகளாக்கிய தசரதச் சக்கரவர்த்தியின் கதையை, ராமராச்சியம் விரும்பும் புண்ணிய சீலர்கள் அரசியலில் புகுத்தி, அகில இந்திய ரீதியாக்கிய அநீதியை ஒழிக்க வேண்டும். தரம் வளர, திறமை உயர, நிருவாகம் வலுப்பெற, நாட்டு மக்கள் நலம்பெற வேறு வழியில்லை!

அரியலூர் இரயில் விபத்தில் அநியாயமாக பலியான மக்களுக்கும், அவர்தம் குடும்பத்தினர்க்கும் ஆறாத்துயரம் பொங்கிட ஆழ்ந்த அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவிக்கின்றோம்.

—வாலி.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்-1 குமாரசாமிப்பட்டியின்றும் வெளியிடப்படுகிறது.

பகுத்தறிவு
கழக வார இதழ் ஆசிரியர்:- ப. கண்ணன்
மலர் 6 | சேலம் 14-12-56 ★ விலை 0-1-6 | இதழ் 23

# கைக்குடையால் கதிரவனை மறைப்போர்!




தேர்தல் பிரசாரத்திற்கென காங்கிரஸ், பெரியாருக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுக்கப் போவதாக வதந்தி! நாடகத்தை வெறுப்போர் ஆடுகின்ற அரசியல் நாடகம் காணீர்! அற்புத நாடகம் காணீர்!

# மந்திரிகளின் மட்டரகப் பித்தலாட்டம்.

**ஈ. வே. கி. சம்பத்து.**

நீண்ட நாட்களுக்குப் பின்னர், சேலத்திற்குப் பேச வந்திருப்பதுகுறித்து மகிழ்ச்சியடைகிறேன். இது நமக்கெல்லாம் பரபரப்பான நேரம், குறிப்பாக, அம்மாப்பேட்டைத் தோழர்கள் கழகத்தை வளர்ப்பதிலே பரபரப்பு கொண்டவர்கள். அதற்கு என் நன்றி. அம்மாப்பேட்டைத் தோழர்களின் பரபரப்புக்கு, அடிக்கடி இங்கு காங்கிரஸ் நண்பர்கள் செய்யும் அநாவசியக் கிளர்ச்சிகளும், ஒரு விதத்தில் உதவுகின்றன. எனவே, அந்தக் காங்கிரஸ் நண்பர்களுக்கும் என் நன்றி.

இன்று, தமிழ் நாடெங்கிலும் நமக்கு எதிர்ப்புகள் நிறைந்திருக்கின்றன. எந்தக் கட்சி கூட்டுகின்ற பொதுமேடையிலும் நமக்கு ஏராளமான தாக்குதல்களைக் காண்கிறோம். திருச்சியில் நடந்த தி. மு. க. மாநில மாநாட்டிற்கு முன்பு, நம்மை "பேசத் தகுதியற்றோர்" என எண்ணிவந்த எதிர்க்கட்சிகள், மாநில மாநாட்டிற்குவந்திருந்த மக்கள் திரள் மூலம், நம் செல்வாக்கைத் தெரிந்து கொண்டார்கள். அஞ்சிய சில கட்சிகள், காங்கிரசோடு சேர்ந்துகொண்டு, நம்மை ஒடுக்க வேண்டுமென்று முரசு கொட்டுகிறார்கள்! வளரும் கழகம்தனைக் கண்டு, அச்சம் கொண்டு, ஆச்சாரியாரிலிருந்து காமராசர்வரை; பள்ளிகளோ, நர்சுகளின் கூட்டமோ, கம்பவுண்டர்களின் மாநாடோ, எதுவோ, சென்ற இடமெல்லாம், சொல்லக்கூடாத ஆபாசச் சொற்களால், நம் கழகத்தைத் தூற்றி வருகிறார்கள். காங்கிரஸ் உள்பட, எல்லாக் கட்சிகளுமே, இன்று தி.மு.க. வின் எதிர்ப்பு முன்னணியிலே நின்றிருக்கிறார்கள். கடந்த இரண்டு மாதமாக, நம் மந்திரிகளின் நடமாட்டம் மட்டுமல்லாமல், நாக்குத் துடிப்பும் அதிகமாகி வருகிறது. நமது மதிப்பிற்குரிய நிதியமைச்சர் சுப்பிரமணியமோ சென்றவிடமெல்லாம், தி.மு.க. மவுண்ட்பாட்டனுக்குத் தந்தியடித்த கட்சி, என்று ஓயாமல் உளறிவருகிறார். மவுண்ட்பாட்டன் இந்தியாவைவிட்டு வெளியேறிய நாள், 1947-ம் ஆண்டு ஆகஸ்ட்-15. ஆனால், தி.மு.க. தோன்றியது 1949-ம் ஆண்டு செப்டம்பர்-17. நாட்டில் மிக அதிகமாக வளர்ந்துவிட்ட தி.மு.க. எப்படியும், தோன்றி இருபதாண்டுகள் ஆகியிருக்கும் என்ற நம்பிக்கையில், அப்படி உளறிவிட்டார் மந்திரி! அருமை அண்ணாவை, நெடுஞ்செழியனை, கருணாநிதியைப் பார்த்து, ஜரிகைத் தலைப்பாக்களென்றும், ஜஸ்டிஸ் கட்சியினர் என்றும் கூறி வருகிறார்! ஆனால், இன்று ஜரிகைத் தலைப்பாக்கள் எல்லாம் எங்கேயிருக்கின்றன? மூன்று வருடத்திற்கு முன் காங்கிரசிற்கு எதிரியாக விருந்த ராமநாதபுரம் ராஜா; முன்னாள் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்த ஏ. பி. ஷெட்டி; வெள்ளைக்காரனுக்கு யுத்தப் பிரச்சாரகராய் இருந்த பரமேஸ்வரன்: வெள்ளைக்காரனின் சலுகை பெற்று வியாபாரியாய் இருந்த கிருஷ்ணமாச்சாரி; இவர்களையெல்லாம் கொண்டுள்ள காங்கிரசார் நம்மைப்பார்த்து ஏகாதிபத்திய வெறியர்கள் எனக் கூறுகின்றனர்! 1947, 48-ம் ஆண்டு, அண்ணா தன்இதழான "திராவிட நாட்டில்," முழக்கிய, விடுதலை முழக்கத்தை படித்திருந்தால்தெரியும், இவர்களுக்கு!

மக்கள் அனைவரும், நம்மை-நம் கொள்கைகளை — சரிசரியென முழக்கும் நேரத்தில்; காங்கிரசார்; நம் கொள்கைகளைக் குற்றம் சாட்டிக் கூறத் துணிவில்லாமல், தூற்றத் தொடங்கியிருக்கிறார்கள். மாற்றுக் கட்சிகளைப்போல, கொள்கையை விட்டு, மானமிழந்து மன்னிப்புக் கேட்காமல், கொள்கைக்காகப் பாடுபடும் கட்சி தி. மு. க. ஒன்றுதான். காங்கிரசோ, இன்று கவனிப்பாரற்று காட்சி தருகிறது. காமன்வெல்த் வேண்டுமென்று நேரு சொல்ல, வேண்டாமென்று ராஜாஜி சொல்கிறார். இங்கும், காமராசர் கூட்டத்தில் ஒன்று சொன்னால், அதை எதிர்த்து, அடுத்தநாள் காங்கிரஸ் கூட்டத்தில் மாற்றிச் சொல்கிறார்கள் மற்றவர்கள். இப்படியாக, உள்ளுக்குள்ளேயே முரண்பாடு! கொள்கை, லட்சியம் ஏதுமில்லாமல், பதவி ஆசையுள்ள ஒரு கட்சியில்தான் இத்தகைய மாறுபாடுகள் இருக்க முடியும்! நம்மவர் அனைவரும், எங்கும், ஒரே மாதிரிதான் பேசுவார்கள். கருத்திலே மாற்றமிருக்காது. இன்றைக்கு, ஒழுக்கமும், கட்டுப்பாடும் உள்ள தி.மு.க. தான் நாட்டில் நாணயமுடன் நல்ல தொண்டாற்றமுடியும். பழைய காங்கிரஸ்காரர் தவிக்க, புதிய காங்கிரசாருடன் குலவுகின்ற காங்கிரசு இன்று, மக்கள் பகைவர்களின் புகலிடமாகவும், செல்வர் பலரின் கூடாரமாகவும், கட்டுப்பாடற்ற கட்சியாகவும், கதவும், சுற்றுச் சுவர்களுமில்லாமல் காட்சிதருகிறது!

கடந்த ஐந்தாண்டு காலமாக, புள்ளி விவரத்தோடு சொன்னோம், ஐந்தாண்டுத் திட்டத்தால் நமக்கேதும் பயனில்லையென்று. தமிழ் நாட்டுக்கு முதலில் 400 கோடி கேட்டு, பின்னர் அது 270 ஆகி, முடிவில் 170 கோடி பெற்றபின், பொதுக்கூட்டங்களில் அழுது புலம்பிய மந்திரி சுப்பிரமணியம், இன்று, ஆக்கத் தொழில் பற்றிக் கேட்டால், தனிப்பட்டவன்

(11-ம் பக்கம் பார்க்க)

# எதிரொலி

இந்தியப் பேரரசு 16 கோடிக்கு புதிய வரிகள் போட்டிருக்கிறது.

—செய்தி

11 கோடி ரூபா வரி கொடுக்க வேண்டியவர்கள், கொடுக்காமல் ஏமாற்றி விட்டு இந்தியாவினின்றும் வெளியேறி விட்டார்களாமே!

* * *

அவனவன் சொந்தக்காசை லட்சம் லட்சமாகப் பதுக்கி வைத்துக்கொண்டு வெளியே கிளம்பிவிட்டான் பிச்சையெடுக்க!

— 'குத்தூசி'

பெரியாரிடம் சம்பளம் பெற்றுக் கொண்டு, பெரியாரின் "விடுதலை" யிலேயே, பெரியாரைப்பற்றி இப்படி எழுத எவ்வளவு நெஞ்சழுத்தம் வேண்டும்?

* * *

இந்த நாசமாய்ப்போன எலக்ஷன் இருபது வருஷத்துக்கு ஒரு தடவை வந்து தொலையக் கூடாதா?

—'குத்தூசி'

"குடியரசு" கோரியவர்—ஜனநாயக விரும்பி குரல் மாற்றி கத்துகிற இந்த சப்தம், வண்ணன் காதில விழக் கூடாதே!

* * *

பலகாரியநெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் இன்னும் பூர்வாங்க நிலையிலேயே இருக்கிறது.

—மந்திரி, கே. சி. ரெட்டி.

இருக்கட்டும், இருக்கட்டும்! வடநாட்டு மந்திரிகள் தமிழ் நாட்டுக்கு வந்து ஊர் சுற்றும்போது "செய்திரேடு" என்று சொல்ல ஒன்று வேண்டுமல்லவா?

* * *

பாரதநாடு க்ஷேமம் அடைய வேண்டும், தமிழர்கள் என்றுமே குறுகிய புத்தி படைத்தவர்களல்ல.

—காமராஜர்.

தமிழ் நாட்டுக்குத் தனியரசு வேண்டாம், தமிழ் நிலம் வேண்டாம், "தமிழ் நாடு" என்ற பெயர்கூட வேண்டாம என்பதிலிருந்து அந்தப் புத்தி தெரிகிறதே!

## கமலவேணி—கோபாலசாமி.



சேலம் மாவட்டம், இடைப்பாடி, எக்ஸலெண்ட் டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரீஸ் உரிமையாளர் தோழர், ஏ. கே. கே. இராசமாணிக்கம் அவர்கள் புதல்வி தோழியர், ஆர். கமலவேணிக்கும், தோழர், கே. எல். கோபாலசாமிக்கும் 14—11—56 இடைப்பாடியில் சடங்குகளற்ற திருந்திய திருமணம் நடைபெற்றது. தோழர், மு. சிவரத்தினம் மணத்தை நடத்தி வைத்தார். ஆசிரியர், ப. கண்ணன் தலைமை தாங்கி வாழ்த்துரை வழங்கினர். தோழர்கள், இரா. தாண்டவன், ப. இராமலிங்கம், ர. வரதராசன் ஆகியோர், திருந்திய மணச் சிறப்பு குறித்தும், மணமக்களை வாழ்த்தியும் சொற்பொழிவாற்றினர். "பகுத்தறிவு" வளர்ச்சிக்கென தோழர், ஏ. கே. கே. இராசமாணிக்கம் ரூ. 10 நன்கொடை நல்கினர் நன்றியுடன் பெற்றுக்கொண்டோம். புதுமணம்புனைந்துமனையறம் ஏற்றுள்ள மணமக்களுக்கு எமது நெஞ்சுகந்த வாழ்த்துக்கள்!


# பகுத்தறிவு பொங்கல் மலர்.

- சிந்தனைக்கு நல் விருந்து!
- மடமைக்கோர் மாமருந்து!
- செந்தமிழும் பகுத்தறிவும் செழிக்கச் செய்யும், கதைகள், கவிதைகள், கட்டுரைகள் அத்தனையும் கொம்புத் தேன்!
- பேனா மன்னர்கள் பலரின் எழுத்தோவியம், மலரை மணக்கச் செய்கிறது!

விலை 0—8—0 தான்!

விற்பனையாளரிடம் உங்கள் பிரதிக்கு இப்போதே சொல்லி விடுங்கள்.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
>
> —திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 14—12—56 | இதழ் 23

## அறிஞர் அம்பேத்கார்.

—::—

சமுதாயப் புரட்சிவீரர்; தலைசிறந்த பகுத்தறிவாளர்; தாழ்த்தப்பட்டோரின் தனிப் பெருந் தலைவர் அறிஞர் அம்பேத்கார் அவர்கள் 6—12—56 காலையில், புதுடெல்லியில் மரணமடைந்தார். செய்தியறிந்த நாம் திடுக்கிட்டோம்; திகைத்தோம்; செயலற்று—நினைவற்று நின்றோம்.

அறிஞர் அம்பேத்காரின் மறைவு பகுத்தறிவாளர்களுக்குப் பெரும் இழப்பு; ஈடுசெய்ய முடியாத நட்டம். அவர் ஐந்துகோடி ஆதித்திராவிட மக்களின் தலைவராக மட்டுமில்லை: தன்மானம், தன்னுணர்வு, பகுத்தறிவு பூர்வமான சமுதாய முன்னேற்றம் நாடுகின்ற பலகோடி மக்களின் மதிப்பினைப் பெற்ற மாபெரும் தலைவராக விளங்கினார்.

அவரது எதிர்பாராத மரணத்தில்—இரவுபடுக்கச் சென்றவர் படுக்கையிலேயே இறந்துகிடந்த சோக நிகழ்ச்சியில்—மர்மம் இருக்குமென சிலர் ஐயுறுகின்றனர். அது, ஆய்வுக்குரிய ஒன்று.

எனினும் இறந்தவர் பிழைத்தெழுந்து நம்முடன் நடமாடப் போவதில்லை; நாட்டின் பலவகைப் பிரச்சினைகளிலே வழிகாட்டியாக நல்லுரை வழங்கப் போவதில்லை. எதிர்ப்புக்கஞ்சாது கொள்கை முழக்கமிடும் அந்தக் கோமகனை இனி நாம் காணப்போவதில்லை. அம் மேதையின் அரிய உழைப்பும்; எழுத்தும், பேச்சுமான நூல்களுமே இனி நமக்கு வழிகாட்டுபவை.

இந்துதர்மம், இந்துமதம் என்று கூறப்படுகின்ற இனவெறிக் கோட்பாடுகளின் நிழலிலே, ஆரியம் வளர்த்த தீண்டாமைத் தொழுநோயைப் போக்கிட அறிஞர் அம்பேத்கார் ஆற்றிய பணிகள் என்றும், எவராலும் மறக்க முடியாதவை. இந்திய துணைக் கண்டத்தின் வரலாற்றிலே இடம்பெறத் தக்கவை.

தீண்டாமை ஒழிப்புப் பிரச்சினையில் காந்தியாரின்—காங்கிரஸ்காரர்களின் கண்துடைப்பு வேலைகளை ஆதியிலிருந்தே எதிர்த்துவந்தவர். மத ஒழிப்பு, சாதி ஒழிப்பு, சாஸ்திர—புராண-இதிகாசப் புரட்டுகள் ஒழிப்பு ஆகியன நிகழ்ந்தாலொழிய தீண்டாமை ஒழியாதென்பதை ஆணித்தரமாக விளக்கிய வீரர்.

இந்துமதக் கொடுமைக்கு ஆற்றாது மனம் நொந்து "நான் இந்துவாகப் பிறந்தாலும் இந்துவாக இறக்கமாட்டேன்" என்றார். அவ்வாறே தன் மனைவி மக்களோடு, சுமார் 3 லட்சம் தாழ்த்தப்பட்ட மக்களை அழைத்துக்கொண்டு, இந்துமதத்தை உதறிவிட்டு புத்த நெறியாளராக மாறினார் சென்ற திங்கள். பவுத்தராகவே இறந்தார். இறந்து சவ அடக்கத்தின் சமயத்திலே 50 ஆயிரம் பேரை புத்தநெறிக்கு ஈர்த்துள்ளார்! அம்பேத்காரின் பேச்சும், எழுத்தும் அறிவியல்—அனுபவ பூர்வமானவை; பகுத்தறிவு மணக்கும் பண்பேபோவியங்கள்; சமுதாயப் புரட்சிக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கங்கள்.

அவர் சிறந்த சட்டநிபுணர்; இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சிற்பி; இணையற்ற சிந்தனையாளர்; டாக்டர் லட்சுமி என்ற பார்ப்பன மாதைக் கலப்புமணம் புரிந்துகொண்டு, சபிதா தேவியாக்கி புத்தநெறியை மேற்கொண்ட புனிதர்; உலகமேதை; அவரது வாழ்வும், வாக்கும் மதத்தால், அரசியலால், பழமைப் பற்றுக் கோடுகளால் அடிமைப் பட்டுக்கிடக்கும் கோடிக்கணக்கான அழுத்தப்பட்ட மக்களுக்கு அறிவொளி நல்கவேண்டும்! வாழ்விலே புதுமைபெற வேண்டும்!

அறிஞர் அம்பேத்கார் மறைந்துவிட்டார். கண் கலங்குகிறோம்; அனுதாபம் தெரிவிக்கிறோம்; இத்தோடு நின்று விடாமல், அவரது சமுதாயப்புரட்சிக் கருத்துக்களை ஏற்போம்; சாதிமத பேதமற்ற பகுத்தறிவு பூர்வமான சமதர்ம சமுதாயத்தை அமைப்போம் வாரீர்!

—ப. கண்ணன்.

தில்லை வள்ளுவர் நாடக மன்றம்
சென்னையில் நடத்தப்போகும்
அழகுதமிழ் நாடகம்.
**கன்னியின் சபதம்.**
கதை, வசனம்: ப. கண்ணன்.
விரைவில் எதிர்பாருங்கள்.
கோவில். சு. இராசன்,
செயலாளர்

# நிதியமைச்சரே!
# திரு. வி. க. வின் அறிவுரை கேளும்.

"இளந்தமிழன்"

(சென்ற இதழ் தொடர்ச்சி)

"பரந்த நோக்குடன் காங்கிரசின் பாடுபட்டு உழைத்த எனது நண்பர் பெரியார் ராமசாமியும் விலகினர். ஏன்? இதே காரணங்களால்தான். வ. உ. சிதம்பரனாரும் வெளியேறினார். ஏன்? உரிமை, உரிமை மறுக்கப்பட்டது. பிரிந்தோம்......

"காங்கிரஸ் பதவி வேட்டையாடும் சுயநலவாதிகளின் பிடியிலே சிக்கிக் கொண்டுள்ளது. காங்கிரஸ் பாசிசப் போக்குடன் செல்கிறது. இல்லையா என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரையே கேட்கிறேன். இல்லையென்று திரு. காமராஜர் கூறுவாரா?

"சமதர்மம்தான் காங்கிரஸ் கொள்கை" என்று வாய்தவறி காமராஜ் அவர்கள் கூறிவிட்டார். அது அல்ல, அல்ல, அல்ல என்று நான் கூறுகிறேன். வெகு சுலபமாகச் சொல்லிவிட்டார் இப்படி. இவ்வளவு வயதான எனது அனுபவத்தின் மூலம் உணர்ந்து கூறுகிறேன்: காங்கிரஸ் சமதர்மத்தை நிலைநாட்டுவது எவ்வளவு கடினமென்று

வ. உ. சி. அவர்கள் சைவர், ஆனால் வடநாட்டுச் சைவத்தைப் பின்பற்றுகின்ற திருவாவடுதுறை, தருமபுரம் ஆகிய மடத்தார் போற்றுகின்ற சைவமல்ல. சாதி சமய வழக்குகள் தென்னாட்டுச் சைவத்தில் இல்லை; எவ்வுயிரிடத்தும் அன்பாயிரு, எல்லோரும் ஒரு குலம் என்பதே வ. உ. சி. யின் கொள்கை. தென்னாட்டு மகாஜன சபை உண்மையாக வடநாட்டுக் காங்கிரசை எதிர்ப்பதற்காக ஏற்பட்டது. ஆனால், அது இன்றைக்கு அக் கொள்கைக்கு முரண்பட்டிருக்கிறது.

"வடநாட்டாரால் திணிக்கப்பட்ட போலித்தியாகம் தமிழர்களின் நாகரிகத்தையும் கலைப்பண்பையும் பாழ்படுத்தி விட்டது......

"வ. உ. சி. யின் தொண்டினைப் பற்றிப் பேசப் பேச நம் நாட்டில் தன்னம்பிக்கை யுண்டாகும். அப்போது நேருவின் கண்காணிப்பு தேவையில்லை......

"தமிழ்நாடு தமிழருக்கானால், ஆந்திர நாடு பிரியும், மலையாளநாடு பிரியும், கன்னட நாடு பிரியும், எல்லாம் தனித் தனி...பிரிந்த சில மாதத்திற்குள் என்ன ஏற்படும்?

"ஆந்திரர்கள் அச்ச தெலுங்கு காவல (சுத்த தெலுங்கு வேண்டும்) என்பார்கள். மலையாளிகளும் அச்ச மலையாளம் வேண்டும் என்பார்கள். கன்னடியர்களும் அப்படியே. அப்பொழுது சுத்தத் தெலுங்கில் 100-க்கு 90 தமிழ்ச் சொற்களாக இருக்கும். சுத்த மலையாளத்தில் 100-க்கு 95 தமிழாகும். அப்படியே கன்னடத்திலும் அமையும். அதுபோது மொழியால் எல்லோரும் ஓர் இனம் என்பதை உணர்வார்கள். இன்பத்தால் ஒன்றென்று அணைவர்.

"எனவே இப்பொழுது தமிழ்நாடு, ஆந்திர நாடு, மலையாள நாடு; அதற்குப் பிறகு என்ன?......

"ஆம்! அடுத்து, திராவிடநாடு திராவிடருக்கே ஆகும்.

"இப்பொழுது வடவேங்கடம் எல்லை. பிறகு இன்னும் விரியும், மராட்டியரும் கண்விழிப்பர். அவர்களும் மொழியால் திராவிடர், இனத்தால் திராவிடர் என்பதை உணர்வர்...

"அப்போது நமக்கு வடக்கு எல்லை வடவேங்கடம் அல்ல, விந்திய மலையாக விளங்கும். இதுதான் முடிவு தமிழ்நாடு தமிழருக்கே! திராவிடநாடு திராவிடருக்கே என்பது.

"இதை அடைவதுதான் தமிழனுக்குப் பெருமை. வடநாட்டுப் பாசிசத்தைத் தமிழன் இன்று தாங்கி, நிறைவேண்டி யிருக்கின்றது — இதையே நான் கடலூர் மாநாட்டிலும் கூறினேன்.

"வெள்ளையனுக்குத் துணையாக இருந்து கொண்டு வடநாட்டுப் பாசிசம் நம்மை ஆட்டிப் படைக்கின்றது. அதற்கு இடம் தராதே, தராதே, தராதே! இந்த வடநாட்டுப் பாசிசத்தை யொழிப்பதுதான், எந்தக் கழகமாய் இருந்தாலும், அக் கழகத்தின் முதல் வேலையாக இருக்க வேண்டும்.

"தமிழ் மக்கள் உரிமை உணர்வு கொண்டவர்கள். பாசிசம் எந்த வடிவிலே வந்தாலும் விரட்டத்தானே செய்வர்? எனவே ஜனநாயகம் தழைக்க சமதர்மம்—நம் நாட்டு விடுதலைக்குப் பாடுபடுவதே நமது கடமையாகும்! ஓங்குக விடுதலை!"

திருச்சி மாநாட்டு முழக்கங்கள் கூட இதற்கு ஈடாகமாட்டா. இத்தகு கொண்டலின் பெயரால் நூல்நிலையம் நிறுவியவர்களைப் பாராட்டத்தான் வேண்டும்.

இப்பேச்சு தி. மு. க கூட்டம் ஒன்றிலும் திரு. வி. க. பேசியதல்ல. 9-11-47 ஞாயிறன்று சென்னை செயின்ட் மேரி மண்டபத்தில் இந்த உரை அவரால் நிகழ்த்தப் பட்டது. அதுவும் தமிழரசுக் கழக மாநாட்டில்! வ. உ. சிதம்பரனாரின் படத்தைத் திறந்துவைத்த அண்ணல் திரு. வி. கலியாணசுந்தரனார், அன்று காட்டியுள்ள வழியைப் பின்பற்றி நடப்போமாக! கொங்குநாட்டு அமைச்சர் உள்ளம் உண்மையுணர்ந்து —பொய்மறந்து சாந்தி அடைவதாக!

~~

**பகுத்தறிவு.**

வார இதழ்

கையொப்பத்தொகை:

ஆண்டு 1-க்கு 5-0-0

ஆறு மாதங்கள் 2-8-0

தனிப்படி 0-1-6

விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.

பகுத்தறிவு அலுவலகம், சேலம்-1.




[முன் இதழ் தொடர்ச்சி]

## காட்சி 23.

(வித்யாவதி வீடு. ஏடும் எழுத்தாணியும் வைத்து எழுதிக் கொண்டிருக்கிறான் சந்திரவர்மன். பிச்சையும், வித்யாவதியும் நிற்கின்றனர்)

**வித்யா:-** மாள்வதற்குப் பாடினீர்கள்; வாழ்வதற்கு வழிகாட்டினார் மன்னவர்! எத்தகைய பெருந்தகைமை! தம்பியின் மீதும், தமிழ்மீதும் எவ்வளவு பாசம்! ஐயோ! இன்னுமா மாறவில்லை உங்கள் மனம்?

**சந்தி:-** மாறிவிட்டது வித்யாவதி! மனம் மட்டுமல்ல; திட்டமே மாறிவிட்டது.

**வித்யா:-** விளங்கவில்லையே சுவாமி!

**சந்தி:-** போகப் போக விளங்கும்.

**பச்சை:-** வரவர விளங்காது.

**சந்தி:-** பச்சை! நீயுமா எனக்கு எதிர்ப்பு?

**வித்யா:-** நான் தங்களை எதிர்க்கவில்லை சுவாமி! நமது காதல் மாளிகையின் இன்ப வாழ்வுக்கு பங்கம் வரக்கூடாதே என்று கவலைப்படுகிறேன்.

**சந்தி:-** அப்படியானால், விளக்கம் கேட்காமல் என்னோடு ஒத்துழைக்கவேண்டும். அப்பொழுதுதான் நிலைத்திருக்கும் அது!

**வித்யா:-** கட்டளைப்படி நடக்கிறேன் சுவாமி!

**வித்யா:-** இதோ, இந்தப் பைந்தமிழ்ப் பாடல்களை இரவுதோறும் நீ பாடவேண்டும். நகர் சோதனைக்கு வரும் மன்னன் செவியில், இது மதுரமாகப் பாயவேண்டும். தமிழ்ச் சுவையிலே சொக்கிப்போய், தேனையருந்த வரும் அந்தப் பொன் வண்டு என்ன சொல்லுகிறாய்?

**வித்யா:-** பாடுகிறேன் சுவாமி!

(கொடுக்க. ஓலையை வாங்கி வீணையில் இசைத்துப் பாடுகிறாள் வித்யாவதி)

செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தன மென்றுரோ தடவினார்......

**விக்ர:-** (வந்து) சபாஷ்! அருமையான பாடல்! அற்புதமான கற்பனை!

**சந்தி:-** வாரும் சேனாபதியாரே! வாரும், உட்காரும்.

**விக்ர:-** வித்யாவதி; கலாவதி!

**சந்தி:-** கலாவதி மட்டுமல்ல விவேகவதி!

**பச்சை:-** கலையும் விவேகமுந்தானா? அற்புதமான கட்டழகி!

**வித்யா:-** (சினந்து) பச்சை! மூடு வாயை.

**பச்சை:-** மூடிகிட்டேன். (மூடுகிறான்)

**சந்தி:-** சேனாபதியாரே! மகாராணியின் பிரிவுக்குப்பின் மன்னவர் நிலை எப்படி?

**விக்ர:-** (வித்யாவதியைப் பார்த்தபடி) ஒரே குழப்பம்! சாதகமா? பாதகமா? ஒன்றும் புரியலே!

**சந்தி:-** அப்படியானால் ஆட்சி?

**விக்ர:-** அமைச்சரின் சமயோசித புத்தி தான் ஆட்சியை நடத்துகிறது.

**சந்தி:-** அவரை மடக்க வழியில்லையா? எப்படியாவது ஒழிக்கவேண்டுமே!...... சேனாபதியாரே! மந்திரியார்க்கும் மகாராணிக்கும் கள்ள முடிச்சுப் போட்டு,மன்னரின் கருத்தைக் குழப்பினால்......ஒருக்கால்......

(வெறுப்போடு எழுந்து, உள்ளே போகிறாள் வித்யாவதி)



**விக்ர:-** சபாஷ்! அற்புதமான யோசனை! ஆமாம், வித்யாவதி ஏன் போகிறாள்?

**சந்தி:-** வேலையிருக்கும்.

**பச்சை:-** (வாயை மூடியபடியே) நான் திறக்கட்டுமா?

**விக்ர:-** திறப்பா திற நீ மூடுவதும் திறப்பதும் மட்டுமென்ன; சாவதும் பிழைப்பதும்கூட ஒன்றுதான்!

**பச்சை:-** சேனாபதியாரே! அவ்வளவு கேவலமா நெனைச்சுடாதிங்க! தோ பாருங்க, இது என்ன தெரியுமா? மகாராஜாவிடம் அரம்பாடியாம் பெற்ற பரிசு.

(முத்துமாலையைக் காட்டுகிறான் பெருமையோடு தலையிலடித்துக் கொள்கிறான் சந்திரவர்மன்)

**விக்ர:-** மன்னிக்க வேண்டும், புலவரே! மன்னிக்கவேண்டும்

(எரிச்சலோடு அவன் தலையிலடிக்கிறான் சேனாபதி விழிக்கிறான் பச்சை)

## காட்சி 24.

(பாதாளச் சிறை. மகாராணி சங்காவும், நிருபதுங்கனும். சோகித்துப் பாடுகிறார் தேவியார்)

**நிருப:-** அம்மா! எத்தனை காலைக்கம்மா இந்த நரக வேதனையிலே கிடப்பது? நமக்கு விடுதலையே கிடையாதா?

**சங்கா:-** அரைக்க அரைக்க சந்தனத்தின் மணம் குன்றாதடா மகனே! துன்பத்தைப் பொறுக்கும் சக்தியுள்ளவர்கள்தான், இன்பத்தை பெறத் தகுதியுள்ளவர்கள்!

**நிருப:-** நாம் என்ன குற்றம் செய்திட்டோம் தாயே, இந்தக் கொடுமை அனுபவிக்க?

**சங்கா:-** நாம் குற்றமற்றவர்கள் என்பதை உலகறியச் செய்யக் காலம் வருமடா, நிருபதுங்கா! அதுவரை பொறுத்திருக்கத்தான் வேண்டும்.

**நிருப:-** பொறுமை! பொறுமை! எத்தனை காலத்திற்கம்மா பொறுமை? நினைக்க நினைக்கக் குமுறுகின்றது என் மனம்!

**சங்கா:-** பதறாத காரியம் சிதறாது நிருபதுங்கா!

**நிருப:-** தத்துவம் மேலாக இருக்கலாம்; மெய்யாக இருக்கலாம்; நிலைமை......

**சங்கா:-** பாதகமில்லையடா! நம்மீது பற்றுள்ளவர்கள் நாட்டில் யாருமில்லையென்றா நினைக்கிறாய்?

**நிருப:-** வெறும் இரக்கமும், அனுதாபமும் என்னம்மா செய்துவிடும்?

**சங்கா:-** என்ன செய்துவிடுமா? அனுதாபமும், இரக்கமும் நீதி நெறியைச் சார்ந்து நிற்கும்; கொடுமை மிகுந்தால் பொங்கியெழுந்து அறிவுறுத்தும் — மிஞ்சினால் போராடவும் சித்தமாகும் மகனே! பொறுத்தவர் பூமியாள்வார் என்பது பொன்னான மொழியடா?

**நிருப:-** (சலிப்போடு) என்னவோ, எப்படியோ, எத்தனை நாளைக்கோ? எனக்கொன்றுமே பிடிக்கவில்லை!

(வேறுபக்கம் போகிறான்)

## காட்சி 25.

(வித்யாவதி வீடு. நள்ளிரவு. வீணையோடு இசைத்துப் பாடுகிறாள் பாட்டினை)

செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தனமென்றுரோ தடவினார்—பைந்தமிழை
ஆய்கின்ற கோனந்தி ஆகம் தழுவாமல்
வேகின்ற பாவியேன் மேல்.

(மாறுவேடத்தில் நகர்வலம் வந்த மன்னன், வாசலினின்றும் கேட்டுச் சுவைத்து வசமிழக்கின்றான்)

**நந்தி:-** ஆஹா! என்ன கற்பனை! என்ன நயம்! பைந்தமிழால் பாடுகின்றாளே என்னை! இன்ப வெறி ஏறுகின்றதே இதயத்தில்! சீலாதித்யரே! வாரும் உள்ளே செல்வோம்.

**சீலா:-** (தடுத்து) வேண்டாம். குற்றங் குறைகளைக் கண்டறிய வந்தோம் குற்றவாளிகளாக வேண்டாம்.

**நந்தி:-** கன்னித் தமிழால் கனிந்துருகப் பாடுகின்றாள்! இதனைக் கேட்டு ரசிப்பதா குற்றம்?

**சீலா:-** இது கணிகையின் வீடு! நள்ளிரவு நேரத்தில், காவலன் நுழைவது கேவலம். முறையற்ற செயல். மன்னவரே! பதற வேண்டாம்! நாளை சபையிலே அழைத்துப் பாடச்செய்வோம்.

**நந்தி:-** (யோசித்து) உம்...? நன்று. அவசியம் பாடச் செய்யவேண்டும். அதுவரை......

**சீலா:-** யாரோ வருகிறார்கள். நாம் போய் விடுவோம்.

(சந்திரவர்மன் வந்து அவர்கள் செல்வதைப் பார்க்கிறான்)

சந்தி:- (மகிழ்ந்து) நாளை சபையிலே பாடச் செய்வோம். (சிரித்து) விளக்கிலே விழுந்தது விட்டில் பூச்சி!

வித்யா:- எங்கே? எப்பொழுது?

சந்தி:- இங்கேயே, இப்பொழுதே. மன்னன் கேட்டு மனம் சொக்கினன் உன் பாட்டில்! நாளை அரசவையிலே பாட அழைப்பு வரும் உனக்கு.

வித்யா:- என் பாக்யம்.

சந்தி:- உன் பாக்யம் மட்டுமல்ல, இந்த அழைப்பிலேதான் இருக்கிறது எனது குறிக்கோளின் வெற்றியும்.

வித்யா:- எப்படி சுவாமி?

சந்தி:- வா; சொல்கிறேன் என் வண்ணத் தாமரையே!

(அணைத்தவண்ணம், அழைத்துச்சென்று உட்கார்ந்து சொல்லத் தொடங்கல்)

## காட்சி 26.

(சீலாதித்தர் வீடு. சேனுபதியும் அவரும் பேசியிருத்தல்)

சீலா:- என்றேனும் ஒருநாள், மன்னன் மகன் மன்னனாக வேண்டியவன் தானே?

விக்ர:- இந்த நேரத்தில் அதைத்தான் எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்?

சீலா:- ஏன்? ஏதாவது புரட்சி பொங்குமென்ற சந்தேகத்திற்கு இடமிருக்கிறதா?

விக்ர:- (துணுக்குற்று) இல்லை, இல்லை! உலகத்தில் மானிட வாழ்க்கையே ஒரு அநித்யமாயிற்றே; அதற்குச் சொன்னேன்.

சீலா:- விக்ரமகேசரி! புன்னகையை வெறுக்கும் காதலன்; புலாலை வெறுக்கும் வரிப்புலி, வேதாந்தம் பேசும் சேனுபதி, மக்களின் மதிப்பிலே மிகமிக மட்டரகம்!

விக்ர:- (திணறி) உம்.... ஆமாம், ஆமாம், மன்னிக்கவேண்டும்.

சீலா:- போகட்டும். பாதாளச் சிறையில் மகாராணியும், இளவரசரும் எப்படியிருக்கிறார்கள்?

விக்ர:- நான் பார்க்கவில்லையே!

சீலா:- நான் பார்க்கவேண்டும்! விக்ரமகேசரி! மன்னருக்குத் தெரியாமல் சென்றுவர ஏற்பாடு செய்ய முடியுமா? இதனை, நீர் எனக்குச் செய்த உதவியாகக் கருதுவேன்.

விக்ர:- (யோசித்து) ஓ!... செய்கிறேன். சந்தர்ப்பம் வரட்டும், நிச்சயமாகச் செய்கிறேன்.

சீலா:- மிக்க நன்றி

(கைகுலுக்கல்)

## காட்சி 27.

(அரசவை. வித்யாவதி பாடுகிருள்)

செந்தழலின் சாற்றைப் பிழிந்து.....................

.................................................................

நந்தி:- (மகிழ்ந்து) ஆஹா! பேரானந்தம்! பாடு, இன்னும் பாடு!

நீருந்தேர் புகழ்நந்தி தேசபண்டாரி வெற்பில்
மருந்தேர் குழலிக்குக் கார்முந்துமாசில மருடரத்னப்
பரிந்தேரும் பாகனும் என்பட்டவோ எளபங்கயக்கை
நெரிந்தே வயிற்றில் வைத்தே நிற்பனோ வஞ்சி நெஞ்சுலர்ந்தே

நந்தி:- பாடு இன்னும். இன்னும் பாடு!

வித்யா:- மன்னிக்கவேண்டும் மன்னர் பெரும! கலம்பகப் பாடல்கள் நூறில்; நான் கற்றவை இரண்டுதான்.

நந்தி:- (ஆவலோடு) கலம்பகமா? நூறு பாடல்களா? ஆஹா! எங்கே அவை? எங்கே? யார் பாடியவை?

வித்யா:- எழிசை வல்லபர், செந்தமிழ்ப் பாவலர்.......

நந்தி:- யார் அவர்? எங்கே இருக்கிறார்?

வித்யா:- மன்னர் பெரும! பெயரைச் சொல்வதற்கு........

நந்தி:- ஏன் தயக்கம்?

வித்யா:- பாடியவரை தாங்கள் வெறுக்கக்கூடுமோ என்று நான் அஞ்சுகிறேன்.

நந்தி:- என்பால் அன்புகொண்டு, கலம்பகம் பாடிய பைந்தமிழ்ப் பாவலனையா வெறுப்பேன்? ஒருக்காலுமில்லை. பரிசு வழங்குவேன்; பாராட்டுவேன்!

வித்யா:- மகிழ்ச்சி மன்னவ! பாடியவர் தங்கள் சகோதரர் சந்திரவர்மன்!

நந்தி:- (வியந்து) ஆ! என் தம்பியா? சந்திரவர்மனு என்மீது கலம்பகம் பாடியிருக்கிருன்? தன் தவற்றை உணர்ந்துவிட்டான் போலும்! நன்று. அவனது மனமாற்றத்திற்கு மகிழ்ச்சியடைகிறேன். பெண்ணே! கலம்பகம் முழுமையும் அவன் வாயாரப் பாட, நான் செவியாரக் கேட்கவேண்டுமே. கிடைக்குமா பாக்கியம்?

(வளரும்)



இலக்கியச் சோலையிலே

# இளங்கோ கண்ட கோவலன்.

ஏ. பெரியசாமி.

கதையோ, காப்பியமோ, நாடகமோ, எதுவானாலும் சரி, அதிலுள்ள ஒவ்வொரு மாந்தருடைய குணங்களும் எந்த அளவுக்கு வெற்றிகரமாக உருவாக்கப்பட்டிருக்கிறதோ, அதைப் பொறுத்துத்தான் அதனுடைய வெற்றியும், அமையும். அதாவது, ஆசிரியர் உருவாக்கும் ஒவ்வொரு மாந்தருடைய குணநலன்களும் முதலிலிருந்து முடிவு வரையில் ஒரே முறையில் அமைய வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட குணநலங் கொண்ட மாந்தரைப் படைக்கும் பொழுது, அந்த மாந்தருடைய பேச்சும், செயலும் அவனுடைய குணத்திற்கேற்றவாறு இருத்தல் வேண்டும். முட்டாள் என்றால் அவன் இறுதிவரை முட்டாளாகவே காட்டப்பட வேண்டும். அவனுடைய பேச்சுக்களும், செயல்களும் முட்டாள்தனமானதாகவே அமைக்கப்படல் வேண்டும். மாறாக, ஆசிரியர் ஒருவனை முட்டாள் என்று மற்றவர்களுக்கு அறிமுகப் படுத்திவிட்டு, பிறகு அவன் பேசும் பேச்சுகள் அறிவோடு கூடியவையாக இருப்பது போன்றும், அவனுடைய செயல்களில் அறிவு சுடர் விடுவது போலவும் எழுதிக்கொண்டு போனால் அது எப்படி பொருத்த முடையதாகும்? 'படிக்கத் தெரியாதவன் கடிதமெழுதினன்' என்பது எவ்வளவு முரண்பட்ட கருத்து!

இதுமட்டுமின்றி, ஆசிரியர் தான் அக்குறிப்பிட்ட மாந்தரை எந்த சூழ்நிலையில் உலவ விடுகிருரோ அந்நிலையில் உணர்ந்து எழுதல் வேண்டும். 'அன்பான வரவேற்பு' என்பதற்கு "WARM WELCOME" (வெப்பமான வரவேற்பு) என்றிருப்பதைப் படித்த தமிழனொருவன், அதையே தமிழ் நாட்டிற்கும் பொருத்தி, "வெப்பமான வரவேற்பு" என்றோ, "வெப்பமான உள்ளத்துடன் வரவேற்றான்" என்று எழுதினால் அது எவ்வளவு நகைப்புக்கிடமாகும்? குளிர் நாட்டைச் சேர்ந்த ஆங்கிலேயர்களுக்கு, 'வெப்பம்' மகிழ்ச்சி தருவதால் அவர்களுடைய பேச்சில் 'வெப்பமே' மகிழ்ச்சிக்குப் பதிலாக நிற்கிறது. அதேபோல், வெப்பமிகுந்த தமிழ் நாட்டில் 'குளிர்ந்த உள்ளம்' என்ற சொற்றொடர் பயன்படுத்தப் படுவதைப் பாருங்கள். 'வெப்பம், குளிர்' என்ற இரு சொற்களும் முறையே ஆங்கில நாட்டிலும், தமிழ் நாட்டிலும் ஒரே பொருளை குறிக்கின்ற போதிலும், இரண்டு சொற்களையும் சூழ்நிலைக்கு ஒவ்வாத வகையில் மாற்றியமைத்தால் அதன் பொருள் விரும்பத்தகாததாகப் போய்விடுகிறது.

இந்த அடிப்படை உண்மைகளை எல்லோருமே அறிவர் ஆனல், இவ்வுண்மைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு, அதன்படி எழுதுவதில்தான் ஒரு ஆசிரியருடைய தனிப்பட்டத் திறமை மேலோங்குகிறது. இவ்வகையில் ஒவ்வொரு மாந்தரையுந்தான் எடுத்துக் கொண்டதற்கேற்ப வெற்றிகரமாக உருவாக்கி, அவர்களுடைய தன்மைக்கும், அவர்கள் வாழும் சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில், அவர்களது சொல்லையும், செயலையும் அமைப்பதில் சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோ அடிகள் மிக்கத் திறம் படைத்தவர் எனலாம்.

சிலப்பதிகாரத்தின் ஒரு முக்கிய மாந்தனை கோவலனை இளங்கோவின் திறமைக்கு ஒரு எடுத்துக் காட்டாவான். ஒரே ஒரு சான்றை வைத்துக்கொண்டு இவ்வுண்மையை விளக்கிவிடலாம்.

புகார்க் காண்டம்—மனையறம் படுத்த காதை—கோவலனும், கண்ணகியும் நடத்தும் காதல் வாழ்விற்கு ஒரு விளக்கம்.

எழுநிலை மாடத்தின் இடை நிலை; மாசற்ற மணத்துடன் கூடி வீசுகின்றது தென்றல்; நிலா முற்றத்தை அடைகின்றனர் கோவலனும், கண்ணகியும். தனித்திருக்கும் அவர்களது தாரும், மாலையும் தம்மில் மறந்து, ஒன்றோடொன்று கலக்குகின்றன. அவ்வமயம், தீராக் காதல் கொண்ட கோவலன் அத்தேன் மொழியாளின் நுதல், புருவம், கண், இடை, நடை, சொல் முதலியவற்றைப் பொருத்திய உவமைகளாற் புனைந்துரைக்கின்றான்.

(அடுத்த இதழில் முடிவுறும்)


வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி
&
சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

# கேள்விக்கணைகள்?
## "கேடயத்தான்"

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● ஆர் எம்.பி. பண்பரசன்
நெ. 82 தண்டலம், கோவூர்,
பூனமல்லி (வழி)

● ஆர். எம். பி. பண்பரசன், கோவூர்

கே: பணம், காதல், கட்சி, பாசம், ஆட்சி இவைகளில் எதைக் கைக்கொள்ள வேண்டும்?

ப: அறிவைக் கொல்லாத வகையில் எல்லாவற்றையும் அளவோடு கைக்கொள்ள வேண்டும்.

* * *

கே: தேர்தலில ஏன் நிற்கிறீர்கள்?

ப: ஜனநாயகம் ஏன் வந்தது?

நா. ஐயனாரப்பன், திருச்செங்கோடு.

கே: தி. க., தி. மு. க. இரண்டிற்கும் வித்தியாசம் என்ன?

ப: தி. க. மாற்றானுக்கு வேட்டி கட்டுவது; தி. மு. க. தனக்கென கட்டி தன்மானம் காப்பது.

* * *

கே: ஒருவன் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து பகுத்தறிவை வளர்க்க வேண்டுமென்று துடிக்கிறான். ஆனால் தொழிலில் ஆளும் கட்சியாரிடம் சிக்கி அல்லற்படுகிறான். அவன் கனவை நனவாக்க என்ன வழி?

ப: அடக்கமாக கழக இதழ்களைப் படித்து, அன்பாக எவரிடமும் பேசி, அமைதியாகக் கொள்கையைக் கடைப்பிடிப்பின் வெற்றி பெறலாம்.

கே: சோமசுந்தரம், கோயம்புத்தூர்.

கே: பதவியான கவர்னர் ஜானை பெரியார் வரவேற்கிறாரா, எதிர்ப்பு செய்கிறாரா?

ப: காமராஜர் எதைச் சொல்லுகிறாரோ அதைச் செய்வார்.

* * *

கே: பெரியார் கோயில் சென்று கடவுள் வழிபாடு செய்ய ஒப்புவிட்டதாக குன்றக் குடியார் சொல்லுகிறாரே! உண்மையா?

ப: பெரியார் மறுக்கவில்லை. ஒருக்கால் தேர்தலுக்காக காமராஜர் அந்த வேஷம் போடச் சொன்னாரோ, என்னவோ.

பி. ஏ. காவேரி, சின்னப்பம்பட்டி.

கே: மெஞ் ஞானியாக, கடவுள் கருணை செய்வார் என்கிறார்களே; அவர்களை என்னவென்று சொல்லுவது?

ப: "டாபர் வேலை விரும்புவோர்" என்று கூறலாம்.

இல. வெங்கட்ராமன், முத்திலவாடி.

கே; திராவிடக் கூட்டாட்சியில் மத்திய அரசாங்கம் என்ற அமைப்பு இருக்குமா? அதற்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்கும்?

ப: திராவிட மத்திய சர்க்கார் நிச்சயம் இருக்கும். பாதுகாப்பு, வெளிநாட்டுத் தொடர்பு போன்றவை அதனிடம் இருக்கலாம்.

கே. சுப்ரமணியம், காரமடை.

உண்மையான கற்புக்கரசி எப்படி இருக்கவேண்டும்.

ப: கற்ற நன்னெறி வழுவாமல் கணவனோடு ஒத்து வாழ்பவராக இருக்கவேண்டும்.

# முன்னேற்றப் பாதையிலே

## மதுரை.

தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டம், 15—12—56 சனி மாலை 7-மணிக்கு தமுக்கம் மைதானம் திறந்தவெளி அரங்கில் இசை முரசு, நாகூர் அனிபா நாட்டுப் பண்பாடுவார். புரட்சி நடிகர், எம். ஜி. இராமச்சந்திரன் "நாடும் நடிகர்களும்" என்பது பற்றியும், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் "வள்ளுவர் காட்டும் அரசியல் நெறி" என்பது பற்றியும் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். நன்கொடை ரூ. 1. அணா 8.

—நகர் தி. மு. க. மதுரை.

## சேலம்.

சே. மா. தி மு. கழகக் கூட்டம் 17—12—56 திங்கட்கிழமை மாலை 3-மணிக்கு சேலம், வெங்கடப்ப செட்டியார் ரோட்டிலுள்ள (சென்ட்ரல் டாக்கீசிற்கு எதிரில்) மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறும். பொருள்:—
1. தொகுதிக் குழுக்கள் அமைத்தல்.
2. தேர்தல் சம்பந்தமான விஷயங்கள்.

—ஜி. பி. சோமசுந்தரம், செயலாளர்.

தேர்தல் நிதிக்கு, சேலம் தி. மு. க. மாணவர் கிளையின் சிறப்புக் கூட்டத்தில் புரட்சி நடிகர், எம். ஜி. இராமச்சந்திரன் கலந்து கொள்கிறார். இடம், காலம் அடுத்த அறிக்கையில்.

—தி. மு. க. மாணவர் கிளை, சேலம்.

தொழிலாளி தன் அடிமை என்ற மனப்பான்மையை, முதலாளி அடியோடு விட்டுவிட வேண்டும். தன்னைப்போலவே தொழிலாளியும் ஒத்த உரிமையுள்ள பங்காளி என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். தொழிலாளியும் தன் ஆற்றலை உணர வேண்டும்.

—புத்தர்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கட்டுமே, என்கின்ருர். ஆறுலட்ச மூலதனத்தில் தொழில் தொடங்கி, ஆக்கவேலைத் தொழிற் சாலையை நிறுவிட எல்லாச் செலவுகளும் செய்தபிறகு, வடநாட்டானிடம் தொழிலை ஆரம்பிக்கும் பொறுப்பை ஒப்படைத்ததுகண்டு கண்ணீர் வடிக்கிருர். முன்ளுள் அமைச்சர், ரோச் விக்டோரியா! தப்பித்தவறி எவனுவது முன்வந்தால், சர்க்கார் பட்டைநாமம் சாத்துவதற்குச் சாட்சியாக ரோச் விக்டோரியா இருக்கையிலே, இந்த சுப்ரமணியம் 'தனிப்பட்டவன் தொழில் தொடங்கட்டுமே' என்கிருர்! எவ்வளவு கொடுமை?

சேலத்தில் இரும்பு கிடைக்கும் உண்மை தெரிந்தும், இரு மந்திரிகள், அவ்விரும்பு பயன்படாது எனப் பித்தலாட்டம் செய்து, பின்னர், மேல்நாட்டு நிபுணர்கள், 'சேலத்து இரும்பு உலகிலேயே சிறந்தது' என அறிவிக்க, மந்திரிகள் மனதினுள் கடிந்து, மக்கள் முன் வேலூரில் ஏமாற்று நாடகம் ஆடினர். மின்சாரத் துறையில் முன்னேற்றம் காண்பதைவிட்டு, நெசவாளிகளைஒடுக்க விசைத்தறி கொண்டு வருகிருராம் காமராசர்! நாட்டின் துயரங்களை மிகுவிக்க வழிகள் தேடுகிருர்கள்! வடநாட்டில் கனரகத் தொழில்கள் மிகும் போது இங்கு குடிசைத்தொழில்களால் முன்னேறச் சொல்கிருர், கிருஷ்ணமாச்சாரியார்! வனஸ்பதித் தொழிற்சாலைகள் வார்தாவில் வளம் கொழிக்க! வார்தாவில் செய்யப்பட்ட எண்ணெய்ச் செக்குகள் தென்ளுட்டில்! அந்தச் செக்கு எண்ணெய் ஆட்டவல்ல; நம்மை ஆட்டுவதற்கு! நாட்டு மக்களை வாட்டுவதற்குத்தான் வழி புரியும்! வேருெரு பலனுமில்லை!

சங்கரலிங்கனுரின் சாவைப்பற்றித் திமிருகச் சொன்ன காமராசருக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன்; நாட்டுக்காக உழைப்பவர்களை இனி இப்படித் தூற்றுதீர்கள்; தூற்றினுல் மக்கள் விடமாட்டார்கள்! தமிழர்களின் உடமைகளான தேவிகுளம் பீர்மேட்டைக் கோட்டைவிட்டபின், அரசியல் பேசுகிருர்கள், நம் மந்திரிகள்! மூன்று கோடி பேரைக் காட்டிக் கொடுத்த பின், கொலுமண்டபத்திலே கொடி பிடிக்கும் கோணங்கிகளாக இருந்து, சமுதாயத்திற்கு விரோதமாக, மானக்கேடான நிலையில் செயல் செய்கிருர்கள்! வேறென்ன? இன்று, ஜான் என்னும் மலையாள கவர்னரைக் கொண்டு வருகிருர்கள்; அவமானத்திற்குமேல் அவமானத்தை எத்தனைநாள் தாங்குவது? கொள்கை, லட்சியம், சுயமரியாதை ஏதுமில்லாமல், 1500 ரூபாயையே பெரிதென எண்ணும் இந்த சுப்ரமணியம், நம்மைப் பார்த்து பதவிப் பித்தர்கள் என்கின்ருர். எது பதவிப்பித்து?

சமுதாயத்திலே உள்ள, அத்தனை துறைகளிலும் பலம் பொருந்தியவர்கள் பலரைப் பெற்றிருக்கும் நம்மைப் பார்த்து, "டிராமாக்காரர்கள்" எனக்கேலிபுரியும் காமராசர், இலங்கைப் பிரதமர் பண்டார நாயகா மர்மக்கதை எழுதுகிருரே, அதற்கு என்ன சொல்லுகிருர்? எல்லோரும் காமராசரைப் போலவே இருக்கவேண்டும், என்று நினைத்துவிட்டார்போலிருக்கிறது!

நாம் தேர்தலில் நிற்பதுகுறித்துப் பலர், "காங்கிரஸ்தானே வரப் போகிறது; ஏன், வீண்சண்டை?" என்கின்ருர்கள். நாட்டை ஆளும் கட்சியை எதிர்த்துக்கேட்க வேறு ஒருவரும் இல்லையென்ருல், ஜனநாயகம் என்ன ஆகுமென எண்ணிப் பாருங்கள்! காந்தியாரின் சொல்லை அலட்சியம் செய்து, காங்கிரசைக் கலைக்காமல், அதை தாம் வாழப் பயன்படுத்திக் கொண்ட, காங்கிரசாரின் ஆட்சியிலே, பல பயங்கரங்களைக் காண்கிருேம்! வரவிருக்கும் பொதுத் தேர்தலில், பற்பல பயங்கரங்களை எதிர்த்து, அதில் பங்கெடுத்துக் கொண்டு, நம் கழகம் வெற்றி பெற வழிசெய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**(சேலம் அம்மாப்பேட்டை காந்தி மைதானத்தில் 2-12-56 மாலை தோழர் எஸ். கே. குழந்தையின் தலைமையில் நடைபெற்ற தி.மு.க கூட்டத்தில், தோழர் ஈ. வே. கி. சம்பத்து அவர்கள் பேசியதன் சுருக்கம். தொகுத்தவர்: தோழர், நா. சோமு )**

மலரின் உண்மையை, அதன் மணமும் செயல் திறனை அவனது சொல்லும், நெஞ்சத்துள்ள தீமையை மனமும், உள்ளக் குறிப்பை முகமும் அறிவிக்கும்.

—பாரோ

# தோழியர், விசாலட்சி.

—— :: ——

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரமுகர்களில் ஒருவராகிய நண்பர் இரெ. இளம்வழுதி அவர்களின் துணைவியார் தோழியர், விசாலட்சி அவர்கள் சென்ற 29—11—56 காலை இயற்கை முடிவெய்தினர். என்ற செய்தியறிந்து பெரிதும்வருந்துகின்ருேம். கழக வளர்ச்சியில் பெரும் பங்குகொண்டுழைத்த நண்பர் இளம்வழுதி அவர்கட்கு அருந்துணையாக விளங்கியவரின் இழப்பு நண்பருக்கு ஈடுசெய்ய முடியாத நட்டமாகும். இயற்கையின் பண்பறிந்த நண்பருக்கு ஆறுதல் கூறுகின்ருேம். அமைதிகொள்ள வேண்டுகிருேம்.

— ஆசிரியர்.

Regd No. M. 5721. PAKUTHARIVU. 14—12—56

விநோபா ராமாயணம்.

# பொய்யான கதையிலே தெய்விகமாம்!

"என் குடும்பத்தில் மிகச் சிறுவயதிலிருந்தே இராமாயணத்தைக் கேட்டு வந்திருக்கிறேன். அதைப் படிக்கும் பொழுதோ அல்லது கேட்கும் பொழுதோ அதில் ஏதோ சரித்திர சம்பந்தமான சம்பவம் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்ற எண்ணமே எனக்கு வந்ததில்லை" என்கிறார் 1-8-56-ல் மொரப்பூரில் பேசிய விநோபா பாவே,

சிறு பிராயத்திலே தாய், தந்தை, அத்தை, பாட்டி, மூதவியோர் கூறுகின்ற கதைகளிலே சரித்திர சம்பந்தமிருக்கிறதா, புராணக் கதையா, கற்பனையாகப் புனைந்த கதையா, உண்மையுண்டா, பொய் மூட்டைதானா என்பனவற்றை ஆராயும் அறிவோ, ஆற்றலோ எந்தக் குழந்தைக்கும் இருக்க முடியாது. எனவே, விநோபாவுக்கும் சிறுவயதிலே அது போன்ற ஆராய்ச்சி எண்ணமே தோன்றாததில் வியப்பில்லை எனவே,

இதனை ஒரு காரணமாகக் காட்டி, இராமாயணத்தை சரித்திரமல்ல என்று கூறுவது பொருந்தும் வாதமன்று.

அடுத்து அவர் கூறுகின்றார்: "இராவணன் என்ற பெயர்கொண்ட ஒரு மனிதன் இருந்தான் என்று ஒருபொழுதும் எனக்குப் புலனானதில்லை. நான் இந்தியாவில் அதிகம் சுற்றியிருக்கிறேன். இதுவரையில் அதுபோல் ஒரு மனிதன் பார்க்கக் கிடைக்கவில்லை. இராவணனுக்கு பத்துத் தலையாம்! இரண்டு தலை மனிதனையே பார்க்கவில்லையென்றால் பத்துத் தலை மனிதனை எங்கே பார்ப்பது?

உலகத்து வேறு எந்த சரித்திர புத்தகத்திலும், பத்துத் தலை மனிதன் வருணனையை நான் படித்ததில்லை. ஆகையால் பத்துத் தலை மனிதனைப் பற்றிய குறிப்பு இருக்கும் புத்தகம் சரித்திரமாக முடியாது. இதை நன்கு புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். கும்பகர்ணன் என்றொரு திராவிட மனிதன் இருந்தானென்று எனக்கு ஒருபொழுதும் தோன்றியதில்லை. இன்றுகூட நான் திராவிட நாட்டில் யாத்திரை செய்கிறேன், அப்படிப்பட்ட மனிதனை நான் பார்க்கவேயில்லை" என்கிறார்.

பத்துத் தலை மனிதனைப் பற்றி கூறும் புத்தகம் சரித்திரமாகாது என்பதை நாம் ஒப்புகிறோம். இயற்கைக்கு மாறுபட்ட முறையிலே, புத்ர காமேஷ்டி யாகம் புரிந்து, செத்த குதிரையைப் புணர்ந்து அதன் பயனாக இராம லட்சுமணர்கள் பிறந்தார்கள்; அறுபதினாயிரம் மனைவியரை மலடியாக வைத்திருந்தான் தசரதச் சக்கரவர்த்தி; பாலராமனின் பாதம் பட்டதும் அக்ரமம செய்து கல்லாகிவிட்ட அகலிகை மனித உருப்பெற்றாள் என்பன போன்ற தெய்விகப் பித்தலாட்டங்கள் இராமாயணத்தில் ஏராளம்! ஏராளம்! எனவே இராமாயணத்தை வரலாற்று நூலென்று யாரும் கூறிட முடியாது. வரலாற்றுத் துறை வல்லுனர்களும் அப்படிக் கூறினார்களில்லை.

இராமாயணத்தில் வருகின்ற கதா பாத்திரங்களின் குணச் சித்திரங்கள், நடைமுறைகள், பழக்க வழக்கங்கள் போன்ற பலவகைப்பட்ட பண்புகளையும் ஆராய்ந்து பார்த்து, அது இரு கலாச்சாரங்களின் மோதல்களை—இரு இனத்தவர்களின் போராட்டங்களை அடிப்படையாகக்கொண்டு, ஆரிய வால்மீகியால் ஆக்கப்பட்ட புனைகதை என்றே புகழுகின்றனர்.

இராமாயணம் வரலாற்று நூலல்ல என்றே நாமும் கூறுகின்றோம். விநோபாவும் கூறுகின்றார். இதிலென்ன விசித்திரமென்றால் இராமாயணம் பொய்க் கதை, நடவாத கற்பனை, அதை நம்ப வேண்டாம். நமக்குத் தேவையில்லை என்கிறோம் நாம். இராமாயணம் சரித்திரமல்ல; என்றாலும் அது இருக்கவேண்டும், அதை நம்ப வேண்டும், போற்றிப் புகழ்தல் வேண்டும், புனிதம் பெறுதல் வேண்டும் என்கிறார் விநோபா. பொய்யான கட்டுக் கதைதான். என்றாலும், தெய்விகம் அதிலே பொங்கித் ததும்புகிறதாம் எப்படியிருக்கிறது கதை? எப்படி நம்புவது இதை?

—பகணன்.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்-1 குமாரசாமிப்பட்டியின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

கழக வார இதழ் ஆசிரியர்:- ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 21-12-56 ★ விலை 0-1-6 | இதழ் 24

## கூடா நட்பு விளைத்த கொடுமை காணீர்!




பெரியார் நினைந்ததையே புரிகின்றார் காமராசர் என, அறியாத சிறியார்கள் ஆர்ப்பாட்டம் புரிகின்றார். நடப்பதென்ன தோழா? நாம் காண்பதென்ன தோழா?

இலக்கியச் சோலையிலே

# இளங்கோ கண்ட கோவலன்.

ஏ. பெரியசாமி.

[சென்ற இதழ் தொடர்ச்சி]

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா இசையே யென்கோ
தாழிருங் கூந்தல் தையால் நின்னை..."

(மனையறம் படுத்த காதை, 73.80)

(காசறு விரையே—உயிர்ப்பின் இனிமையால் குற்றமற்ற விரையை ஒப்பாய், என்கோ—என்பேனு, தாழிருங் கூந்தல்—நீண்ட கரிய கூந்தல் )

சிலப்பதிகாரத்தில் சுவை மிகுந்த பகுதிகள் பலவற்றுள் இதுவும் ஒன்று. படித்தவுடன் புரிந்து கொள்ளக் கூடிய அளவிலே எளிமையாக இருந்தாலும், இப்பகுதியின் பொருளாழத்தில்தான் புலவரினுடைய கற்பனைத் திறனும், நூலாசிரியன் திறனும் மேலோங்கி நிற்கின்றன.

மனித வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியைப் பற்றியும் விளக்கிப் பாடிய திருவள்ளுவர் காமத்துப் பாலில் "புணர்ச்சி மகிழ்தலைப்" பற்றிக்கூறுகின்றார்.

"கண்டுகேட் டுண்டுயிர்த்
துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள,"

(அதி-111, குறள்-1) என்று.

கண்ணகியினுடைய ஒளியும், ஊறும், நாற்றமும், சுவையும், ஓசையுமாகிய ஐம்புலனுக்கூறி நலம் பாராட்டிய கோவலனது உரை மேற்கண்ட குறளுக்கு ஓர் இலக்கணமாய் அமைந்தது எனலாம்.

அடுத்து, கோவலனுடைய இந்தப் பாராட்டுரை அவனுடைய குணத்திற் கேற்றவாறு அமைந்திருப்பதை நோக்கத்தக்கது.

பிறப்பிலேயே கோவலன் பெருஞ்செல்வன். புகார் நகரத்திலேயே புகழ் பெற்ற வணிகன், பொன்னிலும் மணியிலும் புரண்டவன்; முத்துக் குவியலிலே மூழ்கி எழுந்தவன்.

கிராமத்தில் வாழ்பவனொருவன் தன் மனைவியைப் புகழும்போது, "செவ்வாழையைப் போன்ற உடல்; எலுமிச்சை நிறம்; கதிரையொத்த அழகிய கைகள்..." என்றெல்லாம் கூறுவான். அவனுடைய புகழுரையிலிருக்கும் உவமைகள், அவன் வாழும் சூழ்நிலையைப் பொறுத்து அமைவதைக் காணலாம்.

அதைப்போல, கோவலனுங் கண்ணகியைப் பாராட்டிக் கூறும்போது, அவ்வுரையில் பொன்னும், மணியும், முத்தும் முதலிடம் பெறுகின்றன. அவை கூட உவமைகளாக அமையவில்லை. கண்ணகியைப் பொன்னும் மணியும், முத்துமாகவே உருவகித்து விடுகிறான் கோவலன்.

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
..........................................
மலையிடைப் பிறவா மணியே யென்கோ"

பொன்னினிடத்தில் கோவலனுக்கு என்ன ஈடுபாடோ! கண்ணகியை வர்ணிக்கும் பொழுதெல்லாம் பொன்னுக்கே முதலிடம் தருகிறான்.

கண்ணகியினுடைய காற்சிலம்பொன்றை விற்று வரும்பொருட்டு, மதுரை நோக்கிப் புறப்படுகிறான் கோவலன். கண்ணகி கலங்கி நிற்கிறாள். அவளுடைய கலக்கத்தை நீக்கும் பொருட்டு, கோவலன் கண்ணகியை நோக்கி,

"பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி"

என்று பலபடப் புகழ்ந்து கூறி, "மயக்காதொழிக" என்று ஆறுதலளித்து விட்டுச் செல்கிறான். இங்ஙனம், ஒவ்வோரிடத்திலும் பொன்னுக்கு முதன்மை தருவதற்குக் காரணம், கோவலனிடம் அமைந்திருந்த வணிகரது இயல்பான குணம்தான்! அந்தக் குணம் தான்.

"பெருங்குடி வாணிகன் பெருமட மகளே" என்று கண்ணகியுடன், அவளது தந்தையையும், வணிகக் குலத்தையும் புகழ வைத்ததோ என்னவோ!

கோவலனது மற்றொரு இயல்பும் இங்கு வெளியாகிறது. சாதாரணமான பொன்னையும், முத்தையும், மணியையும் கோவலன் எடுத்துக் கொள்ளவில்லை. ஒவ்வொன்றும் உயர்ந்த வகையைச் சேர்ந்தவை என்னும் பொருள் விளங்க,

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
..........................................
மலையிடைப் பிறவா மணியே"

என்று குறிக்கிறான்.

"மாசறு பொன்னே" என்றதால் "குற்றமற்ற பொன்" என்னும் பொருள் தொனிப்பதோடு, கோவலன் தன் காதற் கிழத்தியை எவ்வளவு உயர்வாகக் கருதினானென்பதும் புலப்படுகிறது.

(11-ம் பக்கம் பார்க்க)

பகுத்தறிவு.
வார இதழ்.
கையொப்பத்தொகை:
ஆண்டு 1-க்கு 5-0-0
ஆறு மாதங்கள் 2-8-0
தனிப்படி 0-1-6
விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.
பகுத்தறிவு அலுவலகம், சேலம்-1.






ஏழைத் திராவிடமக்களின் கல்வி வளர்ச்சியைத் தம் கண்களைப்போலக் கருதியிருப்பவர் முதலமைச்சர் திரு. காமராசர்.

—"விடுதலை"

ஆனால், ஏக இந்தியா எனும் நாலை, இந்தி எனும் ஊசியில் கோர்த்து கண்களைத் தைத்துவிடு என்றால் கட்டாயம் செய்து முடிப்பாரே காமராசர்!

* * *

உண்மைத் திராவிடர் எவரும் முதலமைச்சருக்கு துரோகஞ்செய்யத் துணிய மாட்டார்.

—"விடுதலை"

தமிழனுக்கு அவர் செய்து வருகின்ற துரோகங்களைப் பொறுத்துக்கொண்டு இருக்கவும் மாட்டார்!

* * *

சேலத்திற்கு இரும்பு தொழிற்சாலை கிடையாது டெல்லி சட்டசபையில் மந்திரி கைவிரிப்பு.

—செய்தி

டெல்லி காங்கிரஸ் அடிமைகளுக்கு தமிழ் நாட்டில் ஓட்டுக் கிடையாது என்று மக்கள் கை விரிப்பார்களா?

* * *

ஈ-வே-ரா பெரியாருக்கு பைத்தியமா?

—சக்கரை செட்டியார்

பணப்பற்றுக்கு அப்படி ஒரு பெயரோ?

* * *

பம்பாய் முதன் மந்திரிமீது கல்வீச்சு! கருப்புக் கொடியோடு குஜராத்திகள் ஆர்ப்பாட்டம்.

—செய்தி

மராத்தி—குஜராத்தி கூட்டு மாநில அமைப்பின் கோரமை, கலவரமும், கொடியாகவும் பறக்கிறது!

* * *

வடவர் ஆட்சிக்கு அடிமைப்பட்டிருப்பது சுதந்திரமாகுமா?

—பெரியார்.

அந்த அடிமைகளுக்கு ஆதரவுகாட்டி அடிமைத்தனத்தை இறுக்கிக்கொள்வது சுயமரியாதை ஆகுமா?

# வருங்காலம் நமதே!

——:-:——

(சுதந்திரச் சிந்து)

1. வண்ணத் தமிழினைப் போற்றினர்—சிறு
வஞ்சந் தனையறத் தூற்றினர்—பெரும்
வையந் தனிலிசை ஏற்றினர்—மேரு
மலைதூடின சிலைசேரநும்
புலிசேலுறும் வலிராசரும்
வாழச் செலுத்தினர் ஆட்சியே—இன்று
வீழப் புரிகிறர் மாட்சியே

2. ஆதித் தமிழினை நீக்கினர்—இந்தி
ஆளும் மொழியென ஆக்கினர்—நம
தானநல் எல்லைகள் போக்கினர்—புவி
அறியாதொரு தமிழ்நாடென
தெரியாதுரை பலபேசியே
ஆட்சி செலுத்துவார் வாழ்வதோ?—பதவி
நீட்சி கொடுத்துநாம் தாழ்வதோ?

3. கொள்கைக் குரலினை நாட்டவே—நாம்
கொண்ட இழிவினை ஓட்டவே—உரிமை
கொண்டு புகழினை ஈட்டவே—மிகக்
குதித்தாடிடும் எதிர்ப்போடிடக்
கொதித்தார்வமும் படைத்தோர் நமை
ஞாலம் அறிதினங் கொஞ்சமே—வருங்
காலம் நமதேயாம் நெஞ்சமே!

—தொல்காப்பியன்.

தமிழ் மண்ணிலே வளரும் தமிழ் மூலிகைதான் தமிழ் மக்களுக்கு மாமருந்தாக அமைய முடியும். ஆயுர்வேதம், யூனானி வைத்திய முறைகளை வளர்க்க முற்படும் அரசாங்கம், தமிழ் வைத்தியமாகிய சித்த வைத்தியத்தை வளர்ப்பதில் சிறிதேனும் கவனம் செலுத்தவில்லை. இத்துறையில் தமிழ் பல்கலைக் கழகமாவது கவனம் செலுத்த வேண்டும்.

—கி. ஆ. பெ. விசுவநாதம். 16-12-56

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 21—12—56 | இதழ் 24

## அநியாயம்! அநியாயம்!

சேலத்தில் கஞ்சமலைப் பகுதியில் ஏராளமான இரும்பு கிடைக்கிறது; அவற்றைத் தோண்டி எடுத்து உருக்கத் தொடங்கினால் பல்லாயிரக் கணக்கான வர்க்குத் தொழில் கிடைக்கும்; தென்னாடு செல்வம் கொழிக்கும் வள நாடாக மாறும்; வறுமையால்—வேலையின்மையால்—வதைபட்டு மாளுகின்ற மக்களுக்கு வாழ்வு கிடைக்கும் என்றெல்லாம் கனவு கண்டனர் நாட்டுப்பற்று மிக்க நல்லவர்கள்!

சேலத்தில் பெரிய இரும்புத் தொழிற்சாலை ஏற்படப் போகிறது; கிடைக்கும் இரும்பின் தரம் குறித்துப் பரிசோதனை நடக்கிறது; தொழிற்சாலைக்கு ஏற்ற இடம் பார்க்கப் படுகிறது; வெளிநாட்டுத் தொழில் நிபுணர்கள் பார்வையிட்டுச் சென்றுவிட்டனர் பலித்துவிட்டது பல்லாண்டுகளாகச் செய்த முயற்சி என்றனர் காங்கிரஸ்காரர்கள்! அந்த மந்திரி வந்தார்; ஆஹா அற்புதமான இரும்பு என்றார்! இந்த மந்திரி வந்தார்; இதோ தொடங்கப்போகிறோம் தொழிற்சாலை என்றார்; மற்றொரு மந்திரி வந்தார், "நாங்கள்தென்னாட்டுக்குப்பாரபட்சம்காட்டுவதாகக் கூறுகிறார்கள், சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைப்பதன் மூலம் அந்தக் குறையைத் தீர்க்கப் போகிறோம்" என்று வீராப்புப் பேசினார்.

சேலம் காங்கிரசுக்காரர்—டெல்லி சட்டமன்ற உறுப்பினர், பாரிஸ்டர் எஸ். வி. இராமசாமி அவர்கள் உண்மையாகவே பாடுபட்டார்: தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும்; தமிழ்நாட்டில் காங்கிரசின் மானம் காப்பாற்றப்பட வேண்டும் என்று. அந்தோ! போய்விட்டது! எல்லாம் போய்விட்டது! எண்ணமெல்லாம் மண்ணாகி விட்டது!

இந்தியப் பேரரசின் இரும்பு, உருக்கு, நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் 18-12-56 டெல்லி சட்டசபையில் இறுதியாகக் கூறிவிட்டார்: "சேலத்தில் இரும்பு, உருக்குத் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் எதுவும் தற்போது இல்லை," என்று! எத்தகைய அவலச்செய்தி!

தென்னகத்தை வளம்நிறைந்த நாடாக்கும் தீஞ்சுவைக்கனவை — பொருளாதாரம் பூரிக்கச் செய்திடும் கனிச்செல்வ ஓவியத்தைக் கலைத்துவிட்டனர் வடநாட்டுப் பாசிச வெறிபிடித்த காங்கிரஸ் கனவான்கள்! அநியாயம்! அநியாயம்!

திராவிடத் திருநாட்டின் பெருமக்களே! நமக்கு வாழ்வு தேடிக்கொள்ள, நமது கேவலநிலையை மாற்றிக்கொள்ள நமக்குரிமையில்லை; தகுதியில்லை; யோக்கியதையில்லை! இந்த நிலையில் நம்மை வைத்திருக்கின்றனர் இந்நாட்டுக் காங்கிரஸ் மகானுபாவர்கள்! நம்நாடு வளம்பெறவேண்டுமானால், நம் மக்கள் நல் வாழ்வு பெறவேண்டுமானால், ஓரவஞ்சனை புரியும், தமிழகத் துரோக காங்கிரஸ்கட்சிக்குத் தக்க பாடம் புகட்டவேண்டாமா?நாட்டு நிலைகண்டு நாணித் தலைகுனியும் நல்லவர்களே! என்ன செய்யப் போகிறீர்கள்?

— ப. கண்ணன்.

## முத்தமிழ்க் காவலர்.

திருச்சி தோழர், விசுவநாதம் பகுத்தறிவு இயக்கம் பெற்றெடுத்த செல்வம்,பைந்தமிழ்ச்சிறந்த பண்பாளர்; சீர்திருத்தப் பேச்சாளர்; எழுத்தாளர்.

பெரியார் ஈ. வே. ரா. தோற்றுவித்த சுயமரியாதைக் கட்சியில் அவராற்றிய அரும்பணியும், 1938-ல் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பெரியாரின் வாரிசாகத் தலைமையேற்று புயல்போல் நாடுசுற்றிச் செயல்புரிந்த பெருந்திறனும் தமிழகம் மறவாது. அவரது பேச்சுகள் உணர்ச்சிக்கு விருந்து; எழுத்துக்கள் அறிவுக்கு விருந்து! செயல்கள் அடிமை நோய்க்கு அருமருந்து!

திருக்குறளை பகுத்தறிவுச் சல்லடையால் சலித்தெடுத்து, மணி மணியாக மக்கள் மன்றத்திலே வைத்துப் பயன் விளைப்பவர். நியாயமாக திராவிட முன்னேற்றக் கழகத் தூண்களிலே ஒருவராகத் திகழ வேண்டியவர்.

திருச்சி தமிழ்ச்சங்கத்தின் சார்பிலே 16—12—56-ல் நாவலர் விசுவநாதம் அவர்களுக்கு விழா நடத்திப் பொன்னாடை போர்த்து, "முத்தமிழ்க் காவலர்" என்ற பட்டம் வழங்கியுள்ளனர். பாராட்டியுள்ளனர். நாம் மகிழ்கின்றோம்;செந்தமிழ்க் காவலர்க்குச் செய்த சிறப்பு, தமிழுக்குச் செய்த சிறப்பாகும். வாழ்க முத்தமிழ்க் காவலர்! வளர்க அவரது தமிழ்ப்பணி! எமது நெஞ்சுகந்த வாழ்த்துக்கள்!



சிறுகதை.

# இன்பக் கனவா?

இரா. சி. சவுண்டப்பன்.

★

கண்ணாளா! நின்மடல் வரப்பெற்றேன். நீக்கா மகிழ்ச்சி கொண்டேன்—நித்தமுக நின் நினைவுதான் எனக்கு.

நுங்கள் மதிமுகத்தை ஒருதடவையேனும் காணலாம—கனிவுடன் பேசலாம—என்றாலோ இங்கு காவல் அதிகமாக இருக்கிறது. ஏதாவது காரணத்தைக் கொண்டு வெளியே புறப்பட்டால்...வார்த்தைகள் வந்து என்னை வழி மறிக்கின்றன, எங்கே செல்லுகிறாய்? எதற்கு? இப்படியாக.

எப்படியும் நாளை மாலை பூம்பொழிலில் உங்களை சந்திக்கிறேன்.

உங்கள் காதலி,
வனஜா.

அன்பே! ஆருயிர்க் காதலி! இல்லற ஜோதியாக உன்னை ஏற்குக நான் விரைவில். கவலைப்படாதே! இன்பத்தை அடைய வேண்டுமானால் இன்னல் பல அனுபவிக்கத்தான் நேரும். இன்னலைக் கண்டு அஞ்சினால் இன்பத்தை அடைய முடியுமா? துன்பத்தின் கடை கோடியிலேதான் இன்பம் இருக்கிறது.

சாதிமத வேறுபாட்டால் துண்டிக்கப்பட்டவர்கள் நாம! துயரம் எதிர்நோக்கும். எனினும் தூய காதல் கொண்டுள்ள நமக்கு துன்பம் ஓர் துரும்பு. இன்பம் காணும் தூயநாள் விரைவில். உன் மடல் கிடைத்தது. உனக்காக காத்துக் கிடப்பேன்.

உன் அன்புக் காதலன்,
ராஜா.

காத்திருந்து ஏமாந்து களைத்திருப்பீர். கோபமும் அடைந்திருப்பீர் என்மேல். என்ன செய்வது? இன்று உங்களை சந்தித்துவிட முடிவுசெய்தேன், முடியவில்லை. மதமும்,சாதியும்பல்பயாக மதில் சுவர்கள் தான். என்றாலும் நம் காதல் வெல்லாதோ? அவைகிடக்கட்டும்.

மணி மூன்று இருக்கும், என்னுடைய அத்தை மகள் அனுசூயா ஊரிலிருந்து வந்துவிட்டாள்-சிவ பூஜைபிலே கரடி புகுந்தது போல. அவளிடமிருந்து தப்பித்துவர என்ன தந்திரமெல்லாமோ கையாண்டேன்; முடியவில்லை!

குளக்கரை ஓரத்திலே! குன்றின் உச்சியிலே! குளுமையான காற்றினூடே! குதூகலத்துடன் உங்களோடு கைகோர்த்து — அன்னநடை போட்டு ஆனந்தமாக இருந்து வரலாம் என ஆசைப்பட்டேன். எண்ணக்கோட்டை சரிந்துவிட்டது. அவள் ஊருக்குச் சென்றதும் உங்களை சந்திக்கிறேன்.

அன்புக் காதலி,
வனஜா.

எழிலரசி! காத்திருந்தேன் உனக்காக. கதிரவனும் தன் கடமை முடித்தான். காரிருள் கப்பியது. காரிகை நீ வரவில்லை. காத்திருந்தேன், நடுநிசி வரையிலும் காத்திருந்தேன்!

எங்கும் அமைதி நிலவியது. ஏகாந்தத்தில் அமர்ந்திருந்தேன் நான்—எல்லாம உன் நினைவாக. நிர்மூலமாக இருந்த வானத்திலே திடீரென கருமேகங்கள் ஒன்று சேர்ந்து கிளம்பின, ஆர்ப்பரித்தன, அட்டகாசம் செய்தன, என் அமைதியைக் குலைக்க; மோனத்தைக் கலைக்க; அயரவில்லை நான். எப்படியும் நீ வந்துவிடுவாயெனும் நம்பிக்கையினால்.

வானத்தே கிளம்பிய மேகங்கள் என் மேல் அமுதத் துளிகளைத் தெளித்தன. ஆம்! சிறுசிறு மழைத்துளிகள் என் மேல் விழுந்தன. அலட்சியமாக அமர்ந்திருந்தேன் அழகரசியைக் காணும் ஆவல் மிகுதியால்.

எவ்வளவு நேரம் காத்திருந்தேனோ எனக்கே தெரியாது! அயர்வு ஆட்கொண்டது என்னை; தூக்கம் சுண்டி இழுத்தது: மயங்கி விழுந்தேன் மாதரசியின மடியில் சாய்வதாக நினைப்பு அப்பொழுது, "சலப்! என்ற சப்தம். சகதி என்வாயினுள்ளே புகுந்தது! ஒருவித நெடி. குடலைக் குமட்டி எடுக்கிறது இப்பொழுது நினைத்தாலும், அப்பொழுது? தங்கச் சிலையாளின் தளிர் அதரத்திலிருந்து வழிந்தோடும் அமுதத் தேனூற்றை அள்ளிப் பருகுவதாகவே நினைப்பு. "பளீரென" ஒரு மின்னல்! இருந்த நிலையை உணர்த்தியது. நான் விழுந்து கிடந்தது, பாசிபடிந்த ஓர் குட்டை!

தட்டுத்தடுமாறி எழுந்து உட்கார்ந்தேன் மறுபடியும் ஓர் மின்னல். மின்னல் கீற்றின் ஒளியிலே தெரிந்தது ஓர் உருவம். என்னை நோக்கி வருவது போல.

வான்மயிலாள், வண்ணக் காதலிதான் என நினைப்புடன் எழுந்தேன்—கால்களை எட்டிப்போட்டேன் கனிமொழியைத்தாவி அணைக்க. என்னவோ சப்தம்!

சிங்காரியின் சிரிப்பொலிதான் அது. மாதரசியின் வளைக்கரங்களின் ஒலிதான் அது என நினைப்பு.

அருகில் வந்துவிட்டேன். அசையாமல் நின்றாய் நீ! அன்பே என்றேன். ஆருயிரே என்றாய், ஆவலோடு தாவினேன் உன்னை அணைக்க. "தடால்!" ஆய்! பக்கத்திலிருந்த பாழுங்கிணற்றிலே விழுந்தேன். ஐயோ என அலறி. மூர்ச்சையானேன். நினைவு வந்து எழுந்தபோது நான் என் படுக்கையிலிருந்து கீழே உருண்டு கிடப்பதை அறிந்தேன். ஆ! நான் கண்டது யாவும் கனவுதான்! கனவிலும் ஓர் களிப்பு! அதிலேயும் ஓர் இன்பம். எவரும் அடைய முடியாத அளவிலா ஆனந்தம். மீண்டும் உன் கடிதம் படித்தேன். நம் சந்திப்புக்குத் தடையாக அனுசூயா அமைந்தாள்; நம் வாழ்வுக்குத் தடையாக பாசி படிந்த அந்த மதக் குட்டையும், பாழும் சாதிப் பழங் கிணறும் அமைந்து விட்டால்...? ஐயோ!...

காதலன்,
ராஜா.

---

விளம்பர உலகம் இது. சேவை புரிந்தால் போதாது. தமுக்கும் போட வேண்டும்.

—யாரோ.




[முன் இதழ் தொடர்ச்சி]

வித்யா: தாங்கள் விரும்பினால் நடவாததும் உண்டோ?

நந்தி:- முழுமனதோடு விரும்புகிறேன் பெண்ணே! ஏற்பாடு செய்யமுடியுமா உன்னால்?

வித்யா:- அவரது நிபந்தனைகள் சில வற்றைத் தாங்கள் ஒப்புவதானால் .......

நந்தி:- சொல். என்ன நிபந்தனைகள்?

வித்யா:- முதலில் அவருக்கு மன்னிப் பளிக்க வேண்டும்.

நந்தி:- மனப்பூர்வமாக மன்னித்தேன். அறியாமையால் அவன் செய்த குற்றங்களை மறந்தே விடுகிறேன்.

சீலாதி:- (எழுந்து) மன்னர் பெரும! சந்திர வர்மன் செய்த குற்றங்கள் மிகப் பெரியவை. இவ்வளவு எளிதாக மன்னிப்புத் தருவது நலமன்று.

நந்தி:- (மிடுக்காக) எனக்குத் தெரியும். வேம்பின் காய் கசக்கிறது; பழம் இனிக்க வில்லையா? கெட்டவன் கெட்டவனாகவே இருக்க வேண்டுமா? உட்காரும்.

(தலைகுனிந்து அமர்கிறார் சீலாதித்தர்)

நந்தி:- பெண்ணே! அப்புறம் என்ன?

வித்யா:- கலம்பகம் அரங்கேற்ற சில விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

நந்தி:- தமிழுக்குப் பெருமை! தாராள மாகச் செய்வோம். விபரம் சொல்.

வித்யா:- ஒரு பரந்த மைதானம். அதிலே நாற்சதுர அமைப்பில் பத்து பச்சைப் பந்தல் கள் நடுவிலே ஒரு மேடை. அதிலிருந்து அவர் நூறு பாடல்களையும் பாடுவார். பந்தலுக்குப் பத்தாக, பத்துவகை ஆசனங்களில் அமர்ந்து தாங்கள் அவற்றைக் கேட்டு இன்புறவேண்டும்.

நந்தி:- ஆசனங்கள் என்னென்ன?

வித்யா:- அவர் நிர்ணயித்துக் கொடுப்பார்! பிடிக்கவில்லையென்றாலும், தமிழ்ச்சுவை நுகர வும், இறைவனின் அருளைப் பெறவும் துணிந்து ஏற்க வேண்டும் அதனை! சிந்தையிலே கலக்கம் கொண்டால் செந்தமிழ்த் தாய் சினந்திடுவாள்!

நந்தி:- இதுவென்ன விந்தை! பைந்தமிழின் பாட்டுச் சுவை; பரம்பொருளின் பெருங் கருணை, ஏககாலத்தில் இரண்டும் கிட்டுவது எத் தகையபேறு! எத்தகையபேறு! அப்படியே செய்வோம்.

சீலாதி:- (எழுந்து) பெண்ணே! சந்திரவர்ம ருக்காக இவ்வளவு பேசுகிறாயே! அவருக்கும் உனக்கும் என்ன உறவு?

வித்யா:- (நாணி) அவர் .. என் காதலர்.

சீலா:- ஒரு ராஜத் துரோகியைக் காதலிப் பது குற்றமென்பது உனக்குத் தெரியுமா?

விக்ரம:- (எழுந்து) மன்னவரால் மன்னிக் கப்பட்டவர், அமைச்சரால் அவமதிக்கப் படு கிறார்! மகாராஜாவின் விருப்பத்தில் மந்திரியார் குறுக்கிடுவதை நான் வெறுக்கிறேன்.

நந்தி:- அமைச்சரே! செந்தமிழ்க் காவியத் தால் எனது பெயர் சிறப்புப் பெறவேண்டும். தமிழன்னையின் பேரருளுக்கும் பாத்திரமாக வேண்டும். நடந்துபோன பழங்கதையை மறந்துவிடும். கலம்பக ஏற்பாடுகள் விரைந்து முடியட்டும்.

சீலா:- (வணங்கி) கட்டளை.

நந்தி:- பெண்ணே! தம்பிக்கு என் மன் னிப்பைச் சொல். கலம்பகம் அரங்கேற்றச் செய்யும் மகத்தான ஏற்பாடுகளையும் சொல்.



வித்யா:- உத்தரவு மகாராஜா!

(சபை கலைதல்)

## காட்சி 28.

(அரண்மனை மன்னனும், சேனபதியும் பேசு கின்றனர்)

விக்ர:- சபையிலே, மகாமேதாவிபோல் நீதிமுறை பேசினரே மந்திரியார். இப்போது என்ன செய்திருக்கிறார் தெரியுமா மகாராஜா?

நந்தி:- என்ன செய்கிறார்?

விக்ர:- (மெதுவாக) இரகசியமாக மகா ராணியைச் சந்திக்க, பாதாளச் சிறைக்குப் போயிருக்கிறார்.

நந்தி:- (வியந்து) ஏன்? எதற்காக?

விக்ர:- சொல்லவாய் கூசுகிறது மகா ராஜா! தங்கள் மனம்......

நந்தி:- வருந்தும்; சொல்லவந்ததைச் சொல்லாவிட்டால்!

விக்ர:- எப்படிச் சொல்லுவது? மகாராணி யையும், மந்திரியாரையும் இணைத்து, என்னென் னவோ வதந்திகள். நாம் குருக்கோட்டைப் போருக்குச் சென்றிருந்தபோது, இருவரும் அரண்மனையில் குதூகலமாக இருந்தார்களாம்! அதை மறக்க முடியவில்லையாம் மந்திரியாரால்!

நந்தி:- (பதைத்து) ஆ! எத்தகைய பெரும் பழி! சேனபதி! நாம் இப்பொழுதே செல்ல வேண்டும் பாதாளச் சிறைக்கு.

விக்ர:- (அஞ்சுவதுபோல்) வேண்டாம் மகா ராஜா! வேண்டாம். ஏதாவது விபரீதம் ஏற்பட் டால், பிறகு என்மேல் ....... பயமாயிருக்கிறது எனக்கு.

நந்தி:- சே! வேண்டாம்; நானே போகி றேன் (வேகமாகச் செல்ல)

விக்ர:- வருகிறேன்! நானும் வருகிறேன்.

(சொல்லியவண்ணம் பின்னால் ஓடுகிறான்)

## காட்சி 29.

(பாதாளச் சிறை சிறைக்குள்ளிருக்கும் மகா ராணியும், பார்க்கவந்த சீலாதித்தரும்)

சங்கா:- (அஞ்சி) வஞ்சகம் விரித்த மாய வலையிலே விழுந்தாரா மன்னவர்? தடுக்க முடிய வில்லையா தார் வேந்தரை?

சீலா:- முயன்றேன் மகாராணி! மன்னவ ரின் தமிழார்வமும், சேனபதியின் குறுக்கீடும் சேர்ந்து சிதைத்துவிட்டன என் முயற்சியை

சங்கா:- சேனபதி விக்ரமகேசரியுமா உண்மையை உணரவில்லை.

சீலா:- ஆம் மகாராணி! அவர் இப்படிப் போவாரென்று நான் எதிர்பார்க்கவில்லை!

சங்கா:- அமைச்சரே! உண்மைக்குப் போராடும் நிலையில் நீர்தான் இருக்கிறீர். அந்தச் சதியின் பிடியிலிருந்து எப்படியாவது மீட்க வேண்டுமே மன்னவரை.

சீலா:- முயலுகின்றேன் தேவி! எனது கடைசி மூச்சு உள்ளவரை கடமையை நிறை வேற்றுவேன். நம்புங்கள்.

சங்கா:- நம்புகிறேன் அமைச்சரே! மலை போல் நம்புகிறேன். உம்மை விட்டால் வேறு கதியில்லை.......

(மன்னவரும், சேனபதியும் வருகின்றனர்)

நந்தி:- (கோபச் சிரிப்பு) "மலைபோல் நம்புகி றேன். உம்மை விட்டால் வேறு கதியில்லை" சண்டாளப் பிண்டங்களா? சிறைச்சாலையை மலர் மஞ்சமாகவா மாற்றுகிறீர்கள்? என்ன நெஞ்சழுத்தம்!

சங்கா:- (பதைத்து) ஆ! மன்னவரே! என்ன வார்த்தை சொல்லுகிறீர்கள்?

சீலா:- (வருந்தி) மன்னர் பெரும! மன் னிக்கவேண்டும் என்னை.

நந்தி:- மன்னிப்பு! கள்ளத்தனமாகத் தன் மனைவியிடம் கொஞ்சுகிறவனை, ஒரு பிச்சைக் காரன் மன்னிக்கமாட்டானே! நன்றி கெட்ட வனே! நான் மன்னிக்க வேண்டுமோ உன்னை?

சீலா:- (பதைத்து) அடாத பெரும் பழி! இது அடுக்காது; அநியாயம். மன்னவா! என்னை கண்கறிந்த தாங்களா இப்படிப் பேசுவது?

சங்கா:- பொறுக்க முடியாத அபாண்டத் தைப் போடவேண்டாம் எங்கள் தலையில். நொந்து கிடக்கிறேன் சுவாமி! வெந்த புண் ணிலே வேலிடாதீர்கள்.

நந்தி:- (சிரித்து) நொந்து கிடக்கிறாயா? ஏன்? காதலனைக் கட்டித் தழுவ முடியாமல் சிறைக் கம்பிகள் குறுக்கின்றனவோ சிறுக்கி!

விக்ர:- கள்ளச் சாவிகூட வைத்திருப்பான் காதகன்!

நந்தி:- மகாராணியின் காதலல்லவோ! எதைத்தான் செய்யக்கூடாது?

நிருப:- (முன்வந்து) அப்பா! நேர்மை தவருத என் தாய்மேலா இத்தகைய நிந்தை? உங்கள் கொடுமைக்கு முடிவே கிடையாதா? கரமிழந்த மாதாவின்மேல் கற்பிழந்தாள் என்ற பழியை வேறு சுமத்துகின்றீர்?

நந்தி:- கண்களால் கண்டதைத்தானடா சொல்லுகிறேன், காவாலிப் பயலே!

நிருப:- எதையப்பா கண்டுவிட்டீர் இங்கு? என்ன விபரீதம் நடந்து விட்டது? நெஞ்சிலே நஞ்சு; பார்வையிலே குருடு பாய்ந்து விட்டது! நீதியைப் பரிபாலிக்கும் மன்னவரா நீர்? பகுத்தறிவு இழந்த பாவி! கொதிக்கிறதே என் ரெத்தம்! இன்னொரு முறை என் தாயைக் குறை சொன்னால் அறுக்கிவிடுவேன் நாக்கை!

நந்தி:- வெட்கங்கெட்ட வீரப்பு! தூ! விபசாரி பெற்ற பேடிப்பயலே! (காறித்துப்புகிருன்)

நிருப:- (ஆத்திரமும், அழுகையுமாய்க் கதவை உலுக்கி) ஆ! அம்மா! வாளெங்கே? என் வல்லமையெங்கே? தடந்தோளெங்கே? தன்மானமெங்கே! ஒழிந்ததம்மா எல்லாம் ஒழிந்தது! இந்தக் கொடிய சொல்லைக் கேட்கவா, பொறுமை பொறுமையென்று புழுங்கிக் கிடந்தோம் இரும்புக் கதவுக்குள்? ஒழுக்கத்தின் உயிர் நாடியான உத்தமியைப் பழித்தவாய் புழுக்க வேண்டாமா? என் வீரத்தாயை விபச்சாரியென்ற வீணனின் வாய் வேக வேண்டாமா தீயில்? விபரீதம் தாயே, விபரீதம்! ஐயோ! என்னல் பொறுக்க முடியவில்லையே அம்மா!....... அம்மா!........ அம்மா......!

(கதறியவண்ணம் தாயின் காலில் விழுந்து புரளுகிருன்)

சீலா:- (சினந்து) மன்னவ! சேனுபதி கொடுத்த விஷம் தலைக்கேறி விட்டது. சிந்தை குழம்பி விட்டது. வஞ்சகப் பயிருக்கு இப்படியா எருவாக வேண்டும் உமது அறிவும் ஆற்றலும்? தவறு! மிகப் பெரிய தவறு செய்கின்றீர்!

நந்தி:- தவறு! யோக்கிய சிகாமணியே! நள்ளிரவிலே கணிகையின் வீட்டிலே காவலன் நுழைவது தவறு! யாருமறியாமல் மந்திரியார் இப்படி மகாராணியைச் சந்திப்பதற்கு என்ன பெயரடா என்ன பெயர்?

சீலா:- தவறுதான். இதைச் செய்தவன் நான். என்னைத் தண்டியுங்கள். கற்பின் சிகரமான தேவியாரின் நெஞ்சிலே பெரு நெருப்பைக் கொட்டவேண்டாம். தியாகத்தின் சின்னத்தை—தாய்மையின் வடிவத்தை இப்படிச் சித்ரவதை செய்யவேண்டாம்.

விக்ர:- பரிகொடுத்தவன் ஏமாந்தால், திருடன் தர்ம நெறியும் போதிப்பான் மகாராஜா!

சீலா:- விக்ரமகேசரி! கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான். வஞ்சகம் வாழ்ந்ததில்லை நெடுங்காலம்.

விக்ர:- இது உமது நெடுங்காலம். மன்னிக்க முடியாத துரோகம்! மகாராஜாவின் பெருந்தன்மை இதுவரை உம்மை வாழவிட்டிருக்கிறது.

நந்தி:- இனிப் பொறுக்கமாட்டேன் அவ கேட்டினை! களங்கம்! களங்கம்! என் குலப் பெருமைக்கே களங்கம்! துரோகி!

(வாளை உருவி சீலாதித்தனை வெட்டப் போகிருன்)

சங்கா:- (சினந்து) நிறுத்துங்கள்! குலப் பெருமைக்குக் களங்கம் யார்? நானுமல்ல, அமைச்சருமல்ல, நினைத்துப் பாருங்கள். நெஞ்சிலே கைவைத்துச் சொல்லுங்கள்; நாட்டை அன்னியனுக்குக் காட்டிக் கொடுத்தவர் களங்கமா? துரோகத்தைத் துடைத்தவர்கள் களங்கமா? கலையென்றும், பக்தியென்றும் கலகம் விளைத்தவர் களங்கமா? அறமென்றும், அன்பென்றும் அகத்தைத் திருத்தியவர் களங்கமா? யாருக்கு யார் களங்கம்?

நந்தி:- பழங்கதை பேசாதே!

சங்கா:- புதிய கதை மன்னவரே! இது புதிய கதை! சிங்காசனத்தைக் கவர சதித் திட்டமிட்டவருக்குச் சிங்கார மேடை; சதியைக் குலைத்து உரிமையைக் காத்தவர்க்குச் சித்ரவதை! கடித்துக் கொல்லவந்த விஷப்பாம்புக்குப் புகழ்மாலை. தடுத்துப் போராடிய சீரிக்கு சிறைச்சாலை? இதுவா நேர்மை? இதுவா தர்மம்? இதுவா அறம் வழுவா ஆட்சி முறை?

நந்தி:- எல்லாம் தெரியுமடி எனக்கு! நல்லவன் என் தம்பி! பொல்லாத நீதான் பொசுக்குகிறாய் என் மானத்தை! சண்டாளி! சாகசக்காரி!

(வளரும்)



## முன்னேற்றப்- -பாதையிலே

**சேந்தமங்கலம்.**

23—12—56 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு பெருமாள் கோவில் முன்பு திரு. அழகு அவர்கள் தலைமையில், திரு. கி. மனோகரன் பி. ஏ. ஆனர்ஸ், ஜி. பி. சோமசுந்தரம் ஆகியோர் பேசுவார்கள்.

—செயலாளர் தி. மு. க.

### தேர்தல் நிதி நிகழ்ச்சி.

சேலம் மாவட்டம், இடைப்பாடியில் 27-12-56 வியாழன் மாலை 4-மணிக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் தோழர், பி. எம். குப்புசாமி அவர்கள் தலைமையில்,

தோழர்கள் இரா. தாண்டவன், மு இராசு, ஆர். வி. பெருமாள், நாராயணன் மற்றும் பலர் பங்கு பெறும்.

கைப்பந்தாட்டம், உடற்பயிற்சி விளையாட்டுகள், குஸ்தி, குறவன் குறத்தி நடனம், ஓரங்க நாடகம், சிலம்ப விளையாட்டுகள், இசை நிகழ்ச்சி இத்தனையும் நடைபெறும்.

கட்டணம்: ஆண்கள் 0—4—0
பெண்கள் 0—2—0

—தி. மு. க இடைப்பாடி.


1957

திராவிடர் நாட்குறிப்பு [டயரி]

* தி. மு. கழக முழு விவரங்கள்
* 1200 தி. மு க. கிளைகளின் விபரங்கள்
* பேச்சாளர் முகவரிகள்
* அஞ்சல் செய்திகள்
* விற்பனைவரி, வருமான வரி, பதிவுக் கட்டணங்கள்
* பக்கத்துக்கு ஒன்று வீதம் அறிஞர்களின் 365 பொன்மொழிகள்
* இன்னும் பலவித குறிப்புகளும் விவரங்களும் அடங்கியது

காலிகோ பைண்டு-உதயசூரியன் முகப்பு

ஒன்றின் விலை ரூ 1-0-0

செலவு தனி.

போர்வாள் அலுவலகம்,
128 பிராட்வே. :: சென்னை-1.


## கலைக்கூடம்

### வானரதம்

"உடன் கட்டாலோ" என்று இந்தியில் வந்து பெயரெடுத்த படம், "வானரதம்" என்று தமிழில் வந்து பெயரை எடுத்துவிட்டது!

கதைக்குக் காலில்லை! பழுதுபட்ட விமானமொன்று ஏதோ ஒரு நாட்டில் இறங்க, அதிலிருந்த 'பாரத நாட்டான்' ஒருவன், அந்த நாட்டு ஏழையினத்து எழிலரசி ஒருத்தியின் காதலுக்கும், வாழ்வினில் ஏற்றங்கொண்ட நாட்டரசியின் காதலுக்கும் பாத்திரமாகி, முடிவில் நாட்டரசியின் சூழ்ச்சியால், மனத்தில் வரித்த மங்கை நல்லாளை இழந்து, மனங்குன்றி, மரணத்தை எட்டிப் பிடிக்கும் கதைதான் "வானரதம்."

காட்சி அமைப்புகள், அலங்கார வேலைப்பாடுகளுடன் அருமையாக இருக்கின்றன. வெளிப்புறக் காட்சிகளைத் திறமையாகப் படமாக்கியிருக்கிறார்கள்.

நிம்மியின் நடிப்பு நன்றாக இருக்கிறது சோகக்கட்டங்களில் நடிக்கும்பொழுது மனவுணர்ச்சிகளை நன்றாக பிரதிபலிக்கிறார். திலிப்குமார் கட்டைபோல வந்து போகிறார். சூரியகுமாரியின் நடிப்பு சோபிக்கவே இல்லை. காதல், சோகம், கோபம், தாபம் எதுவானாலும் சிரித்துக்கொண்டே போய்விடுகிறார். ஆகாவின் நகைச் சுவையில் சுவையில்லை. மாறாக, அவருடைய கோமாளிக் கூத்து எரிச்சலைத்தான் ஊட்டுகின்றது. ஒலி, ஒளிப்பதிவுகள் ஏதோ பரவாயில்லை.

படத்திற்கு உயிரூட்டுவது நௌஷாத்தின் இசையமைப்பு. நான்கைந்து பாடல்கள் நன்றாயிருக்கின்றன. ஆனால் அநாவசியமான நடனங்களும், பாடல்களும் ஏராளம், இருந்தும் படம் பதினாறாயிரம் அடி நீளம்தான். அந்தமட்டில் நாம பிழைத்தோம்! வடமொழியின் அசைவுக்கேற்ப வசனத்தை அமைக்க எண்ணி, தமிழையே கொலை செய்திருக்கிறார்கள்.

இறந்துபோன காதலி வானரதத்தில் ஏறிக்கொண்டு, தன் காதலனிடம் வந்து, அவனையும் தன்னுடன் அழைத்துக் கொள்கிறாள். கதாநாயகன் உயிர் விடுகிறார். படம் பார்ப்போர் சிரிக்கிறார்கள். "வானரதமா அது? வானரம்!" என்கிறார்கள் கொட்டகையிலிருந்து வெளியே வரும் ரசிகப் பெருமக்கள்.

—நா. சோமசுந்தரம்.


'வாழு வாழவிடு' எனும் இலட்சிய ஏடு!

"மக்களாட்சி" (திங்களிருமுறை)

ஆசிரியர்: மீ. சு. இளமுருகுபொற்செல்வி.

● அவர்கள் கருத்து ● ஏணியும் தோணியும்
● அன்றும் இன்றும் ● தமிழாக்கம்
● நாமிருவர் ● வினவிடை

ஆகிய அம்சங்களுடன் வாழ்க்கைத் தோழமையுள்ள மக்களின் பத்திரிக்கை. விலை இரண்டணு.

விவரங்கட்கு:

பொறுப்பாளர், "மக்களாட்சி" அலுவலகம்,
32, மேலப் புலிவார் தெரு,
திருச்சி 1. (தமிழ் நாடு)

நாடெங்கும் விற்பனையாளர் தேவை

# கேள்விக்கணைகள் ? "ஜடாயுத்தான்"

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● இரா. கண்ணப்பன், குறிசிலாப்பட்டு (அஞ்சல்) வ. ஆ. மாவட்டம்.

ஜி. கே. வேலன், சந்திரப்பட்டி.

கே: அரசியலில் வழுக்கி விழுந்தவர்கள் வாழ்வு பெறுவது எப்பொழுது?

ப: சந்தர்ப்ப வாதிகளின் கட்சி எதிர்பாராது வலுவடையும்போது.

* * *

கே: உங்கள் எழுத்தை சினிமா கட்சி என்று காங்கிரசும், கம்யூனிஸ்டும் கொக்கரிக்கிறார்களே! என்ன பதில்?

ப: அவர்கள் கட்சியைச் சேர்ந்தோர் சிறந்த சினிமா எழுத்தாளர்களல்ல என்பதை அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். அவ்வளவுதான்.

மு கலியமூர்த்தி, முடிசூ.

கே: காங்கிரசின் கண்கள் எவை?

ப: வடநாட்டு முதலாளிகளின் பணப்பெட்டி!

ஏ. எஸ். சுப்ரமணியன், அக்ரகாரம்.

கே: "பாசவலை" போலவும், "நந்திவர்மன்" போலவும் கற்பனை நயத்தோடு கம்பன் ராமாயணத்தை எழுதினான்! அதை ஏன் நாம் ஒழிக்கவேண்டும்?

ப: இவைபோல் என்றால் இருகை ஏந்திவரவேற்கலாமே! கதா நாயகனைக் கடவுளாக்கி, கோயில்கட்டி மணியும் தட்டுமல்லவா தூக்கிக்கொண்டார்கள்!

கே: அண்ணாவை அறிவற்றவர் என்று கூறுகிறார்களே மந்திரிகள்; அவர்களை என்னவென்று கூறுவது?

ப: அறிவைப்பற்றி நினைத்துப் பார்க்கவே நேரமற்ற அடிமைகள் என்று சொல்ல வேண்டாம். பாவம்; தமிழர்கள்!

சி. சு. தேவராசன், சிறுதையூர்

கே: கீலிக் கண்ணீர், முதலைக் கண்ணீர்!—இவற்றிற்கு என்ன பொருள்?

ப: வஞ்சகமாய், பிறரை மயக்கவடிப்பது ஒன்று; வடிக்காமலேயே வடிப்பதுபோல் காட்டுவது மற்றொன்று.

* * *

கே: திடீர் என்று நேருவந்து "திராவிடநாடு" பிரித்துக்கொடுத்தாலென்ன செய்ய முடியும் உங்களால்?

ப: ஆளமுடியும் தோழரே, நம்மால்.

● இரா. கண்ணப்பன், குறிசிலாப்பட்டு

கே: இராமாயணத்தில் குரங்குகள், இராட்சதர்கள் என்று வருணிக்கப்படுவது திராவிடர்களைத்தான் என்று பிரதமர் நேருவே எழுதியிருக்கும்போது, காங்கிரஸ் திராவிடர்கள் இராமாயணத்தைப் போற்றுவது ஏன்?

ப: தலைவரது கருத்துக்கு மதிப்பளித்து, இராட்சசர்களாகவும், குரங்குகளாகவும்நடந்துகொள்வது அவர்களின் விருப்பமாயிருக்கலாம்,

* * *

கே: "ஆறுகெட நாணலிடு, ஊருகெட பூணலிடு" இந்தப் பழமொழியின் பொருள் என்ன?

ப: ஆற்றிலே வளர்ந்த நாணல் புதர் வெள்ளப்போக்கை மறித்து வழிமாற்றி விடுமாம்; அதுபோலவே ஊருக்குள் வளரும் பூணூல்காரர், ஊர் நலத்தைத் தன்னலமாக மாற்றி விடுவார்களாம்!

## தி. க. வா? கா. க. வா?

சேர்தலை முன்னிட்டும், மக்களின் நன்மையை முன்னிட்டும் இம்மாதிரி கல்வி வசதிகளையெல்லாம் ஏழைமக்கள் இல்லந்தோறும் சென்று கூறவேண்டியது, பொதுநலத் தொண்டர்களின் நீங்காக் கடமையாகும்; அவசரக் கடமையுமாகும்.

காங்கிரஸ்காரர் யாவரும் ராஜாஜி கட்சி—காமராசர் கட்சி என்று பிரிந்துகொண்டு தமிழ் நாட்டைப் பாழாக்காதபடி—இம்மாதிரி நன்மைகளைப் பற்றித் தீவிரமாகப் பிரசாரம் செய்யக் கேட்டுக் கொள்கிறோம்.

—"விடுதலை"
18—12—56

தி. க. விடுதலை, கா. க. விடுதலையாக மாறுகிறது! வேண்டுகோள் விடுகிறது காங்கரசுக்கு!

நாம் ஆதரிப்பது தமிழ்க் காமராசரை, எதிர்ப்பது பார்ப்பன ராஜாஜியை என்று ஏமாளித் தனமாக நம்பிக்கொண்டிருக்கும் தி. க. தோழனே! தொட்ட குறை, விட்டகுறை இருப்பதால் சொல்லுகிறேன்: உன் முகத்தில் கரி பூசிவிட்டு காங்கரஸ்காரன் முகத்திற்குப் பவுடர் பூசத் தொடங்கி விட்டார் விடுதலையார்! முகம் சுளிக்காதே! பணநாதன்; பதவி நாதன்; பொறுமைநாதனின் பொல்லாத விளையாட்டுகளுக்கு பகுத்தறிவு படைத்த நீ இனியும் பகடைக்காயாகத்தான் இருக்கப் போகிறாயா? இல்லை; இலட்சிய வெற்றிக்குப் பணியாற்றப் போகிறாயா? என்ன உன்முடிவு?

—வாலி.



(2-ம் பக்கம் தொடர்ச்சி)

"வலைபுரி முத்தே!"—முத்திலேயே சிறந்த வகை, வலைபுரி என்ற சங்கிலேயிருந்து கிடைக்கும் முத்துதான் என்பது அக்காலத் தமிழ் மக்களது கருத்து.

'வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்' (ஆத்திரையன், பெருந்தொகை) என்றும், வலம்புரி முத்துக்கள் தென்கடலில் மிகுதியாகக் கிடைத்தமையால்,

"தென் கடல் முத்தும்..." (189, பட்டினப்பாலை) எனவும் பண்டைய தமிழ் நூல்கள் கூறுகின்றன.

"மலையிடைப் பிறவா மணியே!"—மலையிடையிலிருந்து எடுக்கப்படும் மணிகள் மிக்க உறுதியாயிருக்கும்; குழைந்து போகா.

"மலையிடைப் பிறந்த மணியும்" (187) என்று மலையிடைப் பிறந்த மணியின் சிறப்பு பற்றிப் 'பட்டினப்பாலை' பேசுகிறது.

கண்ணகி ஒளியிலே மலையிடைப் பிறந்த மணியை ஒத்தவள் ஆயின், "மலையிடைப் பிறவா மணியே" என்று கோவலன் கூறுவதற்குக் காரணமென்ன?

"மலையிடைப் பிறந்த மணி குழையாது. கண்ணகியோ தன்னுடைய பேச்சிலும், செயலிலும் இயல்பாகவே குழைவு மிக்கவள்; அதனால்தான் 'மலையிடைப் பிறவாமணியே' என்று கூறப்பட்டது." என்று சிலப்பதிகார உரையாசிரியர் 'அடியார்க்கு நல்லார்' விளக்கம் தருகின்றார்.

நூல் முழுதும் தான் தோற்றுவித்த மாந்தர்களின் குணங்களை மறந்தாரில்லை இளங்கோ. கோவலன் வணிகக் குலத்தில் பிறந்தவனல்லவா? அதனால்தான் சாதாரண மக்களைப்போல "பொன், முத்து, மணி" என்று வெறுமனே சொல்லாமல், தனக்கே உரித்தான வணிகக் குலக் குணத்தின் காரணமாக 'மாசறு பொன், வலம்புரி முத்து, மலையிடைப் பிறவா மணி' என அவற்றின் உயர்வையும், சிறிய தன்மையையும் சேர்த்துக் கூறினான்.

இது மட்டுமின்றி, கோவலன் ஒரு கலைஞனுமாவான். இசையிலே தேர்ந்தவன். யாழ் வாசிப்பதிலே வல்லவன்.

கோவலன் மாதவியை விட்டுப் பிரிவதற்குக் காரணமே யாழோடு சேர்த்துப் பாடிய கானல்வரிப் பாடல்கள்தான்.

இந்திர விழா முடிந்து, மாதவியின் நாட்டியமும் முடிவுற்றபின்பு கோவலனும் மாதவியும் ஊர் மக்களோடு கடற்கரைக்குச்சென்று, புன்னை நிழலில் அமருகின்றனர். மாதவி யாழைக் கையிலெடுத்து, நரம்புகளை மீட்டி கோவலனிடம் கொடுக்கிறாள். அவன் அதை வாங்கி இசையமுது பொழியத் தொடங்குகிறான் அந்த இசைதந்த இன்பவெள்ளத்தில் மாதவியின் உள்ளம் நீந்தி மகிழ்கிறது.

"கோவலன் கையாழ் நீட்ட அவனும்
காவிரியை நோக்கினவுங்
கடற்கானல் வரிப்பாணியும்
மாதவிதன் மனமகிழ
வாசித்தல் தொடங்குமன்"

(கானல் வரி)

என்று இளங்கோ அங்கிலையைப் பாடுகின்றார், கோவலன் யாழ் இசைப்பதிலே சிறந்தவன். ஆகவேதான்,

"யாழிடைப் பிறவா இசையேயென்கோ"

என்று கூறுகிறான். யாழினுடைய இசையைப் பற்றி அறியாதவன் அதை உவமையாகவோ, உருவமாகவோ கையாள்வது பொருத்தமுடையதாகாது. யாழ் வாசித்தலிலே தேர்ந்த கோவலன், யாழிசையையே கண்ணகியாக உருவகப் படுத்தியதில் வியப்பு மில்லை.

★★


## தென்றல் வெளியீடு.

நாடகங்கள்.

ப. கண்ணனின்

| | |
|---|---|
| புரட்சிப் பாடகன் | 1—8—0 |
| வீரவாலி | 1—4—0 |
| கன்னியின் சபதம் | 0—8—0 |
| மின்னொளி | 0—6—0 |

மு. கருணாநிதியின்

| | |
|---|---|
| ஒரே முத்தம் | 1—4—0 |

*

வாணிபர்க்குக் கழிவு உண்டு.

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
குமாரசாமிப்பட்டி, :: சேலம்-1.

TEL: Gurucures. PHONE: 248.

60 ஆண்டுகள்—3 தலைமுறைகள்

ஆங்கிலம் தமிழ் மருத்துவ சிறப்பைப்பெற்றது குருமருந்து சாலை.

அதன் 60-க்கு மேற்பட்ட தயாரிப்புகளில் தலையான

குரு தைலம்.

குரு பல்பொடி.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,
குருமருந்து சாலை, :: திருச்சிராப்பள்ளி.

வினோபா ராமாயணம்.

# தத்துவ மெருகால் தூய்மை கிட்டிடுமா?

இராமாயணத்தில் மட்டுமல்லாமல், புராணங்களில் இடம் பெற்றுள்ள தேவாசுர யுத்தம் என்ற நிகழ்ச்சிகள்யாவும் ஆரியருக்கும், திராவிடருக்கும் நடந்த போராட்டத்தைக் குறிப்பிடுகின்றகற்பனைக் கதைகளாகும் என்று பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் பன்முறை பேசியும், எழுதியும் உள்ளார்கள். அக்கருத்தானது படிப்பு, யுக்தி, அனுபவங்களை ஒட்டியதும், ஏற்கத்தக்க கருத்துமாகும். ஆனால், பெரியார் வினோபா பாவே இவற்றை மறுக்கின்றமுறையில், தேவாசுரப் போராட்டத்திற்கு தத்துவார்த்தம் கூறுகின்றார்:

"இந்த தேவ அசுர யுத்தம், நம்முடைய உள்ளத்தில் நடைபெறுகிறது. இராவணன் ரஜோகுணமுடையவன். கும்பகர்ணன் தமோ குணமுடையவன். விபீஷணன் சத்வ குணமுடையவன். இம்மாதிரி அவர்கள் உருவாக்கப் பட்டனர். நமது உள்ளத்தில் இருக்கும் பத்துத் தலை இராவணன் அங்கிருந்து விடுதலைப் பெற்றால் நம்முடைய உள்ளம் சுத்தமாகும்.

இராமன் பெயரை ஸ்மரிப்பதனாலே, அவன் கதையைக் கேட்பதனாலே மனித உள்ளத்திற்கு இவ்வாறு பலம் ஏற்படுகிறது. அதனால் உள்ளம் சுத்தமடைகிறது என்று சிறுவயதிலிருந்தே கேட்டு வந்திருக்கிறேன்" என்கிறார் ஆச்சார்ய வினோபா.

இராவணன், கும்பகர்ணன், விபீஷணன் ஆகியோர்க்கு குண விசேஷ தத்துவார்த்தங்கள் கற்பிக்கப் படுவதால், அவர்களை வதைத்து ஆட்கொண்ட இராமன் உயர்ந்து விட்டானா? அப்படியானால் இராமனுக்கு என்ன தத்துவம்? இராமனது பெயரை உச்சரிப்பதால் உள்ளம் எப்படி பலமடைந்து விடும்?

மேற்குறிப்பிட்ட ரஜோ, தமோ, சத்வ குணங்கள் இராமனிடம் இல்லையென்று கூற முடியுமா? இராமாயணப் பாத்திரங்களுக்கு தத்துவார்த்தம்கற்பித்துஉயர்த்திக் காட்டியோ தாழ்த்திக் காட்டியோ உள்ளத் தூய்மை பெறவேண்டுமெனில், உலகில் நடைபெற்ற—நடைபெறுகின்ற திருட்டு, புரட்டுகள், காமம், கொலை, சூது, வஞ்சகம், துராசை போன்ற அக்கிரமங்கள், அநீதிகள் அத்தனைக்கும் தத்துவார்த்தம் கற்பிக்க முடியாதோ? எல்லாவற்றாலும் தூய்மை கிட்டுமா? அத்தனை அயோக்யர்களையும், புனிதர்களாக—பூசிக்கத் தக்கவர்களாக தத்துவ மெருகேற்றிக் காட்டமுடியுமே தெய்வீகத்தால்! உள்ளம் பலமடைந்து விடுமா?

தம்பிக்குரிய நாட்டைத் தன தாக்கிக் கொள்ள துராசைப் பட்டவன், பெண்ணைக் கொலை புரிந்தவன், பெண்ணின் உறுப்புகளைத் துண்டித்துப் பெரும்பழி ஏற்றவன், சகோதரர்களுள் சண்டை மூட்டி மறைந்திருந்து கொலை புரிந்த மாபெருங் கோழை, கர்ப்பவதியான மனைவியைக் காட்டுக்குத் துரத்திய கல் நெஞ்சன் ஆகிய இராமனது பெயரை—அவனது கதையை மனதால் நினைத்து, வாயால் சொல்லி விட்டால் மனித உள்ளம் பரிசுத்தமடைந்துவிடும் என்பதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

சிறுவயதில் பாட்டிமாரிடம் நாம் கேட்ட பித்தலாட்ட பேய்க் கதைக்கு, வயது முதிர்ந்து அறிவு பெற்ற காலத்தும் தத்துவ மெருகிட்டு பொக்கிஷமெனப் போற்றிப் புகழ்வது நியாயமென்றால், வினோபாவின் இந்தக் கூற்றும் நியாயமாக இருக்க முடியும்!

—பகண்ணன்.


தி. மு. கழக முரசு கொட்ட

**போர்வாள்.**

[ஜனவரி முதல் வெளிவருகிறது]

ஆசிரியர்:

காஞ்சி. மணிமொழியார்.

கதைகள், கட்டுரைகள், கவிதைகள், தயவு தாட்சணியமற்ற அரசியல் விமர்சனங்கள், அறிஞர்களின் வாழ்க்கை ஓவியங்கள், அடங்கிய அரசியல் வார இதழ்

கட்டுரைகள். கே. ஜி. இராதாமணாளன் எழுதும் இன்சுவைக் கதைகள். கவிஞர் சுரதாவின் கவிதைகள் வாரந்தோறும் உண்டு

தனி இதழ் அணா 2.
ஆண்டு சந்தா 6-8-0.

எல்லா ஊர்களுக்கும் முகவர்கள் தேவை

போர்வாள் அலுவலகம்,
128 பிராட்வே, :: சென்னை-1.


சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப, கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்-1 குமாரசாமிப்பட்டியின்றும் வெளியிடப்படுகிறது.


# பகுத்தறிவு

கழக வார இதழ் — ஆசிரியர்: ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 28-12-56 ★ விலை 0-1-6 | இதழ் 25


# காட்டாட்சி நடத்தும் கனங்களின் பவனி!




மொழிவழி நாடு கேட்போரைச் சுட்டுப் பொசுக்கிடும் பழிகாரரைச் சுமந்து சதிகாரர் வரப்போகின்றார்! தன்மானத் தமிழனே! நீ தரப்போவது காணிக்கையா? கண்டனமா?

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்

இதயம்

மலர் 6 | சேலம் 28—12—56 | இதழ் 25

# சேலத்திலே பொதுக்குழு.

தீராத இடும்பை பெற்று தேயும் தென்னகத்தின் தனிப்பெரும் விடுதலை இயக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகம் தனது செயற்குழுவையும், பொதுக்குழுவையும் 29, 30-12-56 நாட்களில் சேலத்திலே கூட்டுகின்றது.

திருச்சி மாநில மாநாட்டிற்குப் பிறகு தி. மு. க. என்ற மூன்றெழுத்துக்கள் தமிழகத்திலே முக்கியத்துவம் பெற்றுவிட்டன. பட்டிதொட்டிகளிலேயும் பாங்காகப் பரவி, நாட்டுப்பற்று மொழிப்பற்று மிக்க நல்லவர்களின் இல்லங்கள்தோறும்,இளைய பரம்பரையின் உள்ளங்கள் தோறும் புத்துணர்ச்சியைக் கிளப்பிவிட்டிருக்கின்றது. "நாமிருக்கும் நாடு நமதே; இங்கு நல்வாழ்வுபெற வேண்டியவர் நாமே" என்ற திராவிடத் தேசீய உணர்ச்சி எதிர்பாராத இடங்களிலும் முளைவிடத் தொடங்கிவிட்டன! கழகத்தின் கிளர்ச்சிகளிலே; போராட்டங்களிலே நாம் செய்த தியாகம்,சிந்திய இரத்தம்வீண்போகவில்லை. தி.மு.க தேர்தலில் ஈடுபடுவது, பொங்கிவரும் விடுதலை வேட்கையினை வலுப்பெறச் செய்து, மங்கிவரும் திராவிடத்தில் மானவிளக்கேற்றி, பாழ்பட்ட இதயங்களிலே பகுத்தறிவு ஒளிகாட்டி, அடிமைவிலங்கறுக்கும் அரியபணிகளிலே ஒன்று. இஃது எளிய காரியமுமன்று. எங்கெங்கிருந்தோ எப்படி எப்படியோ எதிர்ப்புகள் தோன்றிடும்; எவரெவரோ பகையாவர். நமது இலட்சியப் பங்காளிகளே நமது காலை வாரிவிடக் கச்சை கட்டுகின்றனர்;கண்களை உருட்டுகின்றனர்; கடிந்து பேசுகின்றனர்! "அகில இந்திய ரீதி"களைப் பற்றியோ பேசவே வேண்டாம்; சந்தர்ப்பவாதிகள்... செல்வர்கள்!

பொதுத் தேர்தல் நெருங்கிவிட்டது; செய்ய வேண்டிய காரியங்களோ ஏராளமாக இருக்கின்றன. பொறுப்புகளும், கடமைகளும் தலைமைப் பீடத்தை நெருக்குகின்றன. இந்த நேரத்தில் சேலத்தில் கூடுகின்றன: செயற்குழுவும் பொதுக்குழுவும்.

உழைப்பினை மட்டுமல்ல; கண்ணியம், கட்டுப்பாடுகளை கழகத் தோழர்கள் புறக்கணிக்க மாட்டார்கள். தேர்தல் நேரத்திலே அவை மிக மிகத் தேவையென்பதையும் நன்கறிவர், நம் தோழர்கள்.

கழகப் பணியாற்ற வரும் தலைவர்களை, சேலம் மாவட்டத்தின் சார்பிலே சிரம்தாழ்த்தி வரவேற்கிறோம். வருக! வருக! நடைமுறைக்கு ஏற்ற முடிபுகள், திட்டங்கள்தருக!ஏற்றுப் பணிபுரியச்சித்தமாயிருக்கிறது திராவிடம்!செயல்படக் காத்திருக்கிறது சேலம்!

— ப. கண்ணன்.

# நாதசுர மேதை.

தென்னகத்தின் குழற் கலைஞன்; நாயனப் பெருவேந்தன்; திருவாவடுதுறை டி.என். இராசரத்தினம் 12-12-56-ல், இயற்கை முடிவினை எய்திவிட்டார்! தமிழகம் ஈடுஇணையற்ற கலைவேந்தனை இழந்து விட்டது! தேம்பியழுகின்றது கலையுலகம்!

இராசரத்தினம் இசையுலக ரத்தினம் மட்டுமல்ல; முப்பதாண்டுகளுக்கு முன்னரே, பெண்களை கடவுளுக்குப் பொட்டுக்கட்டிவிடும் வழக்கத்தை எதிர்த்துப் போராடிய வீரர். பென்னம் பெரிய திருவிழாக்களில், நாதக்குரல் எழுப்பி நற்றேன் மழை பொழிந்து தெய்வபக்திக்கு ஆக்கமளித்தவர், அறிஞர் அண்ணாவின் கட்டளையேற்று நமது மாநில மாநாட்டில் நாதமுழக்கம் செய்தார்.

கலைஞர்களின் வாழ்விலே தேக்கமிடும் நச்சு நடத்தைகள் உயிர்க் கொல்லியாக மாறுவதுண்டு; பலபேர் மாண்டதுண்டு, அவர்களைத்தொடர்ந்தார் அருங் கலைச்செல்வர்! மிக மிக வருந்துகிறோம். நிதியிழந்த அவரது குடும்பத்திற்கு நிதியளிக்க தோழர்கள் முன்வந்திருக்கின்றனர்; சிலை நிறுவ முயலுகின்றனர்; வேறு என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்! ●●

## முக்கிய அறிவிப்பு.

**பொங்கல் மலர் வேலை கருதி 'பகுத்தறிவு' அடுத்த இருவார இதழ்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்பதை கையொப்பதாரர்க்கும், விற்பனையாளர்க்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**டிசம்பர் பட்டியல் பாக்கியுள்ளவர்க்கும், முன்பணம் அனுப்பாதவர்க்கும் மலர்கள் அனுப்பப்படமாட்டாது.**

—நிர்வாகி,



# எதிரொலி

*இலங்கையிலிருந்து வெளியேற்றப்படும் மக்கள் பிரச்சினை பெரிதல்ல.*

—மந்திரி அனிர்சந்நா.

*காரணம்: அவர்கள் வடவரல்லவே; தமிழர்கள்தானே!*

* * *

*தமிழில் அர்ச்சனை நடைபெற வேண்டுமென்றுலும் திராவிடர் கழகந்தான்!*

—"விடுதலை"

*அர்ச்சனை கிடக்கட்டுமென்ன? தமிழிலேயே பிரார்த்தனை வைத்து, தமிழ்க் கோயிலில் மொட்டையடித்துக் கொள்பவர்களும் இவர்கள்தானே!*

* * *

*கோயிலுக்குள்ளே மாத்திரம் அன்னிய மொழி இருக்கலாமா?*

—"விடுதலை"

*தமிழில் மந்திரம் சொல்லிவிட்டால் மாத்திரம் ஆலய வழிபாட்டை ஒப்பலாமா?*

* * *

*(தி மு. க. தேர்தல் நிதி கொடுக்காதே என்று) உண்டியல் பிச்சை எடுத்தாலது ஒரு லட்சம் பிரதி அச்சிட்டு......*

—"குத்தூசி"

*பிச்சையா? ஏன்? சொந்த வீடில்லையா? உமது பெண்டாட்டிமேல் நகையில்லையா விற்பதற்கு? பிச்சை போடாதேயென்று சொல்வதற்கும் பிச்சை தானா எடுக்கவேண்டும்?*

* * *

*தமிழரசுக் கழகத் தோழர், கே. விநாயகம் சட்டசபையில் தமிழில் பேச மறுத்தார்.*

—செய்தி

*இதென்ன பிரமாதம்? "குடியரசு" கேட்டு எடெழுதிய பெரியார்; குடியரசு ஜனநாயகம்—தேர்தல் எல்லாம் பித்தலாட்டம் என்று மறுக்கிறாரே!*

* * *

*தமிழ் ஆட்சி மொழியாகும் சட்டம் வரப்போகிறது.*

—செய்தி

*தமிழில் ஆட்சி நடத்தப்போகும் நாடு என்ன நாடு?*

தயாராகிறது! நல்விருந்து!

# பகுத்தறிவு

## ஏழாவது ஆண்டு பொங்கல் மலர்.

தீங்கான பழமை யழித்து, பாங்கான புதுமைக்கு
வழிகாட்டும் எண்ணக்குவியல்களின்
வண்ணக் களஞ்சியம்!

★

சிந்தனைக்கு விருந்தான சிறுகதை, விஞ்ஞானக்
கட்டுரை, வாழ்வுக் கவிதைகள், வகை
வகையான ஆய்வுரைகள், விளக்கங்
கள், பொன்மொழிகள் யாவும்
நிறைந்த செந்தமிழ்க்
கருவூலம்!

★

தி. மு. க. தலைவர்களின் தன்மானக் கருத்தோவி
யங்கள்; கேலிச் சித்திரங்கள்; துணுக்குகள்
அறிவொளிக் கற்றைகள்!

எம். பி. சுப்ரமணியம் B. A; M. L. A.
வி. சிவப்பிரகாசம் B. A; B. L.
சாலை-இளந்திரையன் B. A. (Hons)
கனகசவுந்தரி-இளந்திரையன் B. A. (Hons)
எஸ். பி. சின்னையன் B. A; B. L.
"முத்தமிழ்க் காவலர்" விசுவநாதம்.
இளமுருகு-பொற்செல்வி.
பாவலர்-வேலாயுதசாமி.
"இளந்தமிழன்" கண்ணகனுர்.
க. அண்ணுமலை. தமிழ்ப்பித்தன்.
அமரன். ஏ. பெரியசாமி.
மற்றும் பலரின் எழுத்தோவியங்களோடு!

**ஆசிரியர், ப. கண்ணன் வரையும்**

பிரசார நாடகமொன்றும் இடம் பெறுகின்றது.

1×8-ல், பக்கங்களோ 100-க்கு மேல்! இவ்வளவுக்கும்

**விலை எட்டணுவே!**

**விற்பனையாளரிடம் உங்கள் பிரதிக்குச் சொல்லிவிட்டீர்களா?**
**தனிப்பிரதி வேண்டுவோர் 0-10-0 முன்பணம் அனுப்பவும்.**

# நன்றி, நண்பரே!

சேரலாதன்.

"என்ன நண்பரே! 2—12—56 'சாட்டை'யில் வந்த 'ஒப்பாரி'யைப் பார்த்தீர்களா? பதில் சொல்ல வழியில்லாமல் ஒரேயடியாக உங்கள் வாயை அடைத்து விட்டதே!"

"அதிலே பதில் சொல்வதற்கென்ன இருக்கிறது?"

"ஏனில்லை? பத்திரிகையை வெளியிடுபவர் ஒருவராயிருக்க, அதன் ஆசிரியர் மீது பாய்ந்தீர்களே, அது தவறல்லவா?

"ஒரு பத்திரிக்கையில் எந்தக் கட்டுரை வெளியானாலும், அந்தக் கட்டுரையை எழுதியவர் யார் என்று பெயர் போடாதவரை அது ஆசிரியரால் எழுதப்பட்டது என்றே பொருள். பத்திரிகையின் இலாப நட்டத்திற்கு சம்பந்தப்படாத ஒருவரை ஆசிரியராகப் பத்திரிகை நடத்துவோர் கொள்வதெனில் "கௌரவ ஆசிரியா" என்று வெளியிடுவதே முறை, இதழ் நடத்துபவர்களுக்குத் தெரியவேண்டிய இந்த அடிப்படை உண்மைகளே புரியாதவா; பாவம், என்னைவிட்டுவிட்டு 'பகுத்தறிவு' ஆசிரியரின்மேல் தாவி விழுந்திருக்கிறார்."

"அது சரி. உங்கள் கழகத்தில் மட்டும் 'கலைஞர்' என்று போட்டுக் கொள்பவர்கள் இல்லையா?"

"தாமே போட்டுக்கொள்கிறவர் இல்லை; பிறரால் போட்டு பாராட்டப்படுகிறவர்கள் இருக்கிறார்கள். உண்மையிலேயே எங்களிடம் அறிஞர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் எல்லோரும் இருக்கிறார்கள். ஆனால், அந்தப் பட்டங்களைத் தாமே போட்டுக்கொண்டு பிறரை எழுதச்செய்து பத்திரிக்கையின் ஆசிரியர் என்று சொல்வதுதானே பரிகாசத்திற்குரியது என்கிறேன்"

"அது போகட்டும். தன்னுடைய கருத்தைச் சொல்ல உரிமையுண்டு என்று கூறிவிட்டு, பத்திரிக்கையில் எழுதிக் குழப்பம் விளைவிக்க மாட்டோம் என்று நீங்கள் சொல்வது முரணல்லவா?"

"நடந்ததைப் பற்றிய கருத்தைச் சொல்வதற்கும், நடக்கவேண்டியதற்கு யோசனை கூறுவதற்கும் எவ்வளவோ வேறுபாடு உண்டு. இதை உணராதவர்களுக்கு நான் எழுதியது முரண்பாடாகத்தான் தெரியும்." பாவம்! நான் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் ஏதேதோ கைபோனபடி கிறுக்கியிருக்கிறார் 'சாட்டை'யார்!"

"நீங்கள் என்ன கேட்டீர்கள்?"

"இந்தியை எதிர்க்கும் தமிழரசுக் கழகத்தினர் திராவிடர்கள் 'இந்தி அழிப்புப்போராட்டம்' நடத்தியபோது அதை எதிர்த்து மறியல் செய்தனரே, அது இந்த சாட்டையாருக்குத் தெரியுமா என்று கேட்டேன்."

"என்ன சொன்னார்?"

"திருடனைத் தேள் கொட்டியது போல், வாய்மூடி மௌனியானார்."

"வேறு... பிறகு...?"

"பண்டித பந்தைச் சந்தித்து எல்லைப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வழிசெய்கிறேன் என்று சுப்ரமணியனார் சொல்லவில்லை என்பது முழுப் பூசணிக்காயை இலைச்சோற்றில் மறைக்கும் முயற்சி என்றேன்"

"ஒப்பினாரா? மறுத்தாரா?"

"இல்லை. முழுப்பூசணிக்காயை இலைச் சோற்றில் மறைத்தே விட்டார்!"

"அப்படியா? ஐயோ பாவம்."

"தமிழின மக்களுக்குப் பாடுபடுபவர் ம. பொ. சி. என்பதை நாங்கள் ஒப்புக் கொள்வதாகக் கூறிவிட்டு, பிறகு அவரைத் திட்டுவதாகக் கதறுகிறீரே, ஏன்? என்று கேட்டேன்."

"என்ன சொன்னார்?"

'பதிலில்லை. தேர்தலுக்கும், 'சிவாஜியும், சிவஞானமும்' என்ற கட்டுரைக்கும் ஏன் முடிச்சுப்போடுகிறீர் என்று கேட்டெழுதினேன். அதற்கும் பதிலில்லை காரணம்; தெளிவில்லாத நெஞ்சம்!"

"மன்னிக்க வேண்டும். நீங்கள் எழுதியதைப் படிக்காமல், 'சாட்டை'யை மட்டும் படித்து விட்டு நான் பேசிவிட்டேன்"

"சரி, வரட்டுமா?"

"நில்லுங்கள். ஒரு யோசனை......"

'என்ன?'

"இனி நீங்கள் அந்த 'சாட்டை'யின் உளறல்களைப் பற்றியே சட்டைசெய்ய வேண்டாம"

'ஏன் தோழரே?' என்று கேட்டேன்.

"ஊமையுடன் பேசினால் பார்ப்பவர்களுக்கு யார் ஊமை என்றே தெரியாது. செவிடர்களுடன் பேசும் போதும் அப்படித்தான்! அதைப்போல் பகுத்தறிவு வேண்டாதவர்களுடன்—பகுத்தறிவைப் பயன் படுத்தாதவர்களுடன்-தெளிவான கொள்கையற்றோரிடம் வாதிட்டால் இறுதியில்......"

"உண்மைதான். சாட்டையாரின் ஒப்பாரிக்குரல் மட்டும் கேட்கிறது. பொருள் புரியவில்லை"

அப்பொழுது "லொள், லொள்" என்று குரைத்துக்கொண்டே ஒரு நாய் எங்களை நோக்கி ஓடி வந்தது. குனிந்து ஒரு கல்லை எடுத்தேன், நாயை விரட்டுவதற்காக!"

நண்பர் கூறினார்: "கல்லைக் கீழே போடுங்கள்... ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு தெரியுமா? நாயைத் துரத்தி விட்டுத்தான் தெருவைக்கடக்க வேண்டுமென்றால், கடைசிவரை தெருவைக் கடக்கமுடியாது" என்று சொன்னார்: அவர் இதழ்க்கோடியிலே தெளிந்த புன்னகையின் பொருளைப் புரிந்து கொண்ட நான், கல்லைக் கீழே எறிந்து விட்டு, "நன்றி நண்பரே!" என்று சொல்லிவிட்டு நடக்கலானேன். ★★

---

திராவிட முன்னேற்றக்கழகத்தில் செயலாற்றும் இளைஞர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். எதிர்காலத் தமிழகம் அவர்களுடைய கையில்தான் இருக்கிறது.

—கி. ஆ. பெ. விசுவநாதம்,
16—12—56

---



இலக்கியச் சோலையிலே

# மறக்க முடியாதது.

வித்வான்: இரா. சொக்கலிங்கம்.

அது ஒரு முல்லைக்காடு. அங்கு மழைவளம் கொழித்து மண்வளஞ் செழித்துக் கிடந்தது. காணுமிடமெல்லாம் கண்ணுக்கு இனிமையூட்டும் பசுமை. நீலவானில் வெண்முத்துத் தாரகைபோல் முல்லைமலர்கள் பூத்துக் குலுங்கின. பள்ளமெல்லாம் வெள்ள நீர் கிடந்து பார்மகளைப் பனிமகளாக்கியிருந்தது. அந்த இனிமை சூழ் காட்டின் இடையே ஒருபாதை எங்கெங்கோ இருந்த ஊர்களை இணைத்துக் கிடந்தது.

அந்தப் பாதை வழியாகத்தான் தமிழ் மகன் ஒருவன், 'ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்லை' யெனும் பொன்னுரை தெளிந்து—நாடு பல கடந்து பொருள் ஈட்டி-மணியொலிக்கும் தேர் ஊர்ந்து வருகின்றான். அந்தக் காட்டு வழியில் அவனுடைய தேரிலுள்ள மணியொலியும், மழை நீர்த் தேக்கத்தில் கிடந்த தவளைகளின் ஒலியும் தவிர வேறு ஆரவாரமில்லை. கொடிகளை அறுத்தெறிந்து ஈரத் தரையில் கோடிட்டுச் சுழன்ற தேர்ச் சகடம் தலைவன் ஊருக்குள்ள தூரத்தைக் குறைத்துக் கொண்டிருந்தது! தேரில் வீற்றிருக்கும் தலைமகன் சிந்தனையின் உறைவிடமாய்க் காட்சியளிக்கிறான். அதோடு அவன் முகத்தில் ஒரு விரைவு உணர்ச்சியும் துடித்து நிற்கின்றது ஆம்! "தேர் எப்பொழுது வீட்டை அடையும், அங்குத் தனிமையில் வாடும் காதலியை எப்பொழுது பார்க்கப் போகிறேயு?" என்ற நினைவின் சாயல்தான் அத்துடிப்புணர்ச்சி.

அவன் காதலியோ தமிழ்க்குடி தந்த தோகையாள். தொழுநனைத் தொழுதெழும் கொள்கையாள். காதலனைப் பிரிந்த அவள் துயரம் உரைக்கும் தரத்ததோ?

தலைவனின் சிந்தனைச் சகடம் சுழன்றது. அதன் விளைவாக பழைய நிகழ்ச்சியோவியம் ஒன்றை அகக் கண்ணால் காணுகின்றான்.

முன்பு ஒரு முறை இவ்வாறு பொருளீட்டச் சென்று காட்டு வழியே தேரில் வந்துகொண்டிருந்தான். தேர், ஊருக்கு அண்மையில் வந்து கொண்டிருந்தது. தேரில் ஒலிக்கும் மணியொலி கேட்டு தன் காதலி தன் வருகையை யறிந்து தன்னை வரவேற்க தனியாக் காதலுடன் வருவாள் என்று அவன் நினைத்தான். ஆனால் அந்தப் பொல்லாத தவளைகள் தேர்மணியின் ஒலியைவிட உரத்த குரலில் தம மகிழ்ச்சியை அறிவித்துக் கொண்டிருந்தன! ஆதலால், தேர்மணியின் ஓசையைத் தலைவி கேட்கஇயலாது. தலைவன் சிந்தித்தான். தன்னுடன் வந்த இளையர்களை முன்பாக அனுப்பித் தன் வருகையைத் தலைவி யறியச் செய்தான். அவர்களும் சென்று அவன் வரவு உணர்த்தினர் அந்தப் பொன்னான செய்தி கேட்டு தலைவியடைந்த மகிழ்ச்சிக்களவேயில்லை. இனிய செய்தி கேட்ட அவள், தலைவன் பிரிந்ததிலிருந்து தண்ணீர் காணாக் கூந்தல் நனையப் புனலாடி புத்துடையுடுத்துத் தலையில் பூச்சூடச் சென்றாள். பூவைத் தலையில சூடும் நேரந்தான், நெஞ்சங் பிணித்த காதலன் மனையுள் புகுந்தான். பிரிவுத் துயரில் பல நாட்களைக் கழித்த அம்மங்கை நல்லாள் காதலனை நோக்கி விரைந்தோடி அவனை ஆரத்தழுவி, அவன் அகன்ற மார்பில் தன் கண் புதைத்தாள்.

இந்தப் பழைய காட்சியை நினைந்த தலைவன், தன் காதலியின் தண்டாக் காதலை நினைந்து உணர்ச்சி மிக்கவனாகின்றான் உணர்ச்சிப் பெருக்கு, தேர்ப்பாகனிடம் அந்நிகழ்ச்சியைக் கூறத் தூண்டிற்று. அந்த இன்ப நிகழ்ச்சியைத் தேர்ப்பாகனிடம் கூறி, தான் அதை மறக்கவே இயலாது என்கின்றான். அவன் அவ்வாறு கூறுவதில் பழமையை நினைந்து பெருகும் அன்பு வெளிப்படுகின்றன. பிரிந்து கூடிய பின்னர் ஏற்படும் அந்தப் பேரின்பத்தைப் பெற்றிட இப்போதும் பாகன் தேரினை விரைந்து செலுத்த வேண்டும் என்ற குறிப்பும் காணக் கிடக்கின்றது. இந்நிகழ்ச்சியோவியம் அடங்கிய சொல்லோவியம் பின் வருமாறு:—

"மறத்தற் கரிதால் பாக! பன்னாள்
வறத்தொடு பொருந்திய
—உலகுதொழிற் கொள
பழமழை பொழிந்த புதுநீ ரவல
நாநவில் பல்கிளை கறங்க நாவுடை
மணியொலி கேளாள் வாணுதல் அதனால்
ஒருமின் என்ற இளையர் வல்லே
இல்புக் கறியுந ராக மெல்லென
மண்ணுக் கூந்தல் மாசறக் கழீஇச்
சிலபோது கொண்டு பல்குரல் அழுத்திய
அந்நிலை புகுதலின் மெய்வருத் துறுஅ
அவிழ்பூ முடியினள் கவைஇய
மடமா அரிவை மகிழ்ந்தயர் நிலையே"

(நற்றிணை 42. 'கீரத்தனார்')

மண்ணுக் கூந்தல்-ஒப்பனை செய்யப் பெறாத கூந்தல். போது-மலர். குரல்-கூந்தல். கவைஇய—அணைத்துக் கொண்ட.


வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி
&
சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037-38, டபீர் குளம் ரோடு. தஞ்சாவூர்.




[முன் இதழ் தொடர்ச்சி]

சங்கா:- (பதைத்து) சொல்லால் அடித்துக் கொல்லாதீர்கள். நாதா! சதியும் பதியுமாக இவ்வளவு காலம் வாழ்ந்தோமே என்ன குற்றம்—என்ன சாகசத்தைக் கண்டீர்கள் என்னிடம்? காபாலிகன் சொற்கேட்டுக் கரத்தை வெட்டினீர்கள், கடிந்து கொண்டேனா? குடிக்கொரு மகனாய்ப் பிறந்த செல்வனைச் சிறைப்படுத்தினீர்கள், சீறி விழுந்தேனா? நீங்கள் வஞ்சகரின் மாய வலையில் விழக்கூடாதே என்று சஞ்சலப்பட்டேன் அமைச்சரிடம், இது சாகசமா? சண்டாளமா? சதித் திட்டமா? சதுரங்கம் ஆடிவென்ற போது பகைமை வெல்வாய் என்ற மதிப்புரை; இப்போது, பதித்துரோகி என்ற பழிப்பா? சிற்றப்பனிடம் வாதிட்டு வென்றபோது செல்வன் சமர்த்தன் என்ற மதிப்புரை; நீதி கேட்டபோது நிந்தனைக் குரியவன்—நீசன் என்ற பழிப்புரையா? தம்பியின் சதித்திட்டம் கண்டறிந்து தகவல் தந்தபோது அமைச்சர் அறிவுப் பெட்டகம்; அறம் காக்கப் பரிந்துவந்தபோது அவர் ஆகாதவரா? நன்றி கெட்டவரா? பதிக்குத் துரோகமிழைத்த பாவி—துர்நடத்தைக்காரியென்று நெஞ்சாரக் கருதினால் கொன்றுவிடுங்கள் என்னை. ஆனால் நேர்மைக்குப் பரிந்துவந்த மந்திரியாரை வதைத்து வளைக்க வேண்டாம் செங்கோலை! குலைக்க வேண்டாம் அரசதர்மத்தை! வேண்டாம்!... வேண்டாம்!....

நந்தி:- (வாளை உறையிலிட்டு) பாவிகள்! இப்போது இவர்கள் உடலைத் தீண்டி கறைப்பட வேண்டாம் எனது வாள். சேனாபதியாரே! கலம்பகம் அரங்கேற்றும் மகிழ்வு நேரத்தில் கொலைகள் கூடாது இவர்களை தண்டிப்பதை பிறகு வைத்துக்கொள்வோம். இந்தப் படுமோசக்காரனையும் தள்ளி அடையும் சிறையில்.

விக்ர:- மகாராஜா! தேளைக் கண்ட பிறகும் பிள்ளைப் பூச்சியென்று விட்டுவிடக் கூடாதே!

நந்தி:- பாதகமில்லை. கொடுக்கை நறுக்கி விட்டால், அடுக்கு அடங்கிவிடும்!

விக்ர:- கட்டளை.

(சிறைக்கதவை திறந்து, சோதித்தனையும் தள்ளுகிறான் உள்ளே)

## காட்சி 30.

(வித்யாவதி வீடு. சந்திரவர்மன், வித்யாவதி, பச்சை இருக்கின்றனர்)

சந்தி:- பச்சை! அரசருக்குரிய கடைசி கைங்கரியம், உன் திருக்கரத்தால் நடைபெற வேண்டும். துணிவிருக்குமா?

பச்சை:- நீங்களும் சேனாபதியும் இருக்கறப்போ, துணிவுக்கு என்னாங்க பஞ்சம்? மகாராஜாவின் தலையைக்கொண்டு வரணுமா? உம்.... சொல்லுங்க!

சந்தி:- அடே, பித்துக்குளி! நான் சொல்வதைச் செய்யடா.

பச்சை:- சொல்லுங்க.

சந்தி:- ஏற்பாட்டின்படி அரங்கேற்றத்தில், ஒவ்வொரு ஆசனமாக மன்னர் உட்காருவார்; நான் பாடுவேன். கடைசி ஆசனம் என்ன தெரியுமா? சிதை! அதிலே மன்னர் அமருவார், நான் சுவையோடு பாடத் தொடங்குவேன். (காதருகே ரகசியமாகச் சொல்லுகிறான்) செய்வாயா?

பச்சை:- அந்தச் சந்தேகமே ஒங்களுக்கு வேணும்னேன். ஏது?

சந்தி:- (தட்டிக்கொடுத்து) சபாஷ்! சபாஷ்!

வித்யா:- சுவாமி! என்ன இதுவெல்லாம்! எனக்கு கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை.



சந்தி:- கடலின் விருப்பம் கேட்டா கப்பல் பயணம் போக முடியும்? உனக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக நிறுத்த முடியுமா காரியத்தை? வித்யாவதி! நமது வாழ்க்கையிலே ஒரு மகத்தான மாற்றம் ஏற்படப்போகிறது. நல்லதோ கெட்டதோ; அதனை ஏற்கச் சித்தமாயிருக்க வேண்டும் நீ!

வித்யா:- என்ன சுவாமி அத்தகைய மாற்றம்?

(சேனாபதி உற்சாகத்தோடு வருகிறான்)

சந்தி:- அதோ, சேனாபதியாரே வந்து விட்டார்.

விக்ர:- வெற்றி! வெற்றிகரமாக முடித்து விட்டேன்! மகாராணியைப் பார்க்கப்போன மந்திரியார் பாதாளச்சிறையிலேயே அடைக்கப் பட்டு விட்டார் ஒழிந்தது முட்டுக்கட்டை. சந்திரவர்மரே! இனி மகாராஜாவிடம் நான் வைத்தது தான் சட்டம்!

சந்தி:- சபாஷ்! நன்று செய்தீர் சேனாபதியாரே! இது தக்க சமயத்தில் செய்த தனிப் பேருதவி. இனி, தவறாது நிறைவேறும் நமது திட்டம். இதற்காக நானளிக்கும் பரிசு என்னவென்று தெரியுமா?

விக்ர:- மகாராஜாவின் சித்தம். என் பாக்யம்.

சந்தி:- (வித்யாவதியின் கரம்பற்றி) சித்திரப் பதுமை, சிங்காரப் பூம்பொழில், வித்தகத் தென்றல் எனது வித்யாவதி! இன்று முதல் உமக்குச் சொந்தம்!

(சேனாபதியிடம் கொடுக்கிறான் அவளை, வெடுக்கென்று கையை இழுத்துக் கொள்கிறாள் வித்யாவதி)

வித்யா:- (சினந்து) சே! சே! கேவலம்! மிகக் கேவலம்! சுவாமி! இந்த ஈனச்செயலுக்கு எப்படித்தான் மனம் ஒப்பியது? நெஞ்சாரக் காதலித்தவளை, கரம்பற்றி மாற்றானின் பஞ்சணையிலே கொஞ்சிட வெட்கமில்லையா உமக்கு? முடியாதா?

சந்தி:- காசுக்குப் பாய் விரிக்கும் வேசியிடம் என்னடி வெட்கம்? நீலி! காதல் காதலென்று கதைத்தது போதும். காதலாவது வெங்காயமாவது! என் விருப்பப்படி நடக்க முடியுமா? முடியாதா?

வித்யா:- ஆ! நாம் வாழ்ந்த வாழ்வு?....

சந்தி:- சேர்ந்து வாழ்ந்தோம் இத்தனை நாள் சிறப்பாக! என் சித்தம்போல் நடந்தாய், ஒப்புகிறேன். இனியும் நீ சிறப்பாக வாழ வேண்டாமா? அதற்காகவே ஒப்படைக்கிறேன் சேனாபதியிடம்.

வித்யா:- சுவாமி! இது வாழ்வில் மாற்றமல்ல; ஏமாற்றம். அந்தோ!.... தாங்கள் கொண்டது போலிக் காதல்தானா? இன்பத்தின் எழில் வடிவே, இசைக் கலையின் சுவைக் கடலே, காதலின் கலையமுதே என்று கட்டித் தழுவியதெல்லாம் கள்ளத் தனம்தானா? உன்னை மறந்து ஒருக்கணமும் தாள முடியாது என்றீர்களே! அது தன்னலம்தானா? அந்தோ! காதலை மெய்யென்று நம்பி, தங்கள் சதிக்கெல்லாம் உடந்தையாயிருந்தேனே இந்தச் சண்டாளி! அதற்கெல்லாம் இதுதானா பலன்? இதுதானா பரிசு?

சந்தி:- (சினந்து) வித்யாவதி! என் சொற்படி நடக்க முடியுமா? முடியாதா?

வித்யா:- (கண்டிப்பாக) முடியாது. நீரொனது காதலரல்ல! ஆகவே, எனக்குக் கட்டளையிட உமக்கு உரிமையில்லை!

சந்தி:- பல்லவ நாட்டின் முடிசூடும் மன்னனடி நான். மன்னன்!

வித்யா:- துரோகி! சதிகாரா! நீயா மன்னன்! கனவிலும் அது நிறைவேறப் போவதில்லை! உன் சதித் திட்டத்தை வெளிப்படுத்தி ஒழித்துக் கட்டுவேன், இந்த ராஜத்ரோகக் கும்பலையே!

(ஓடுகிறாள் வெளியே. சென்று தடுத்து, கூந்தலைப் பற்றி இழுத்துக் கீழே தள்ளுகிறான் சந்திரவர்மன்)

சந்தி:- எங்கேயடி போகிறாய் கள்ளி?

வித்யா:- சொல்ல முடியாது. (எழுந்திருக்க)

விக்ர:- பிள்ளையாரென்று பிடிக்கக் குரங்காக மாறுகின்றதே! இவள் எப்படி என்னிடம் அடங்குவது? நான் இன்பத்தைப் பெறுவது?

சந்தி:- கவலை வேண்டாம் சேனாபதியாரே! இவள் விருப்பப்படியா நாம்விடுவது? ஒப்பினால் இவ்வுலகம்! ஒப்பாவிடில் அவ்வுலகம்! பார்த்துக் கொள்வோம். நமது காரியம் முடியும்வரை இவள் சிறைக் கைதியாக இருக்கட்டும் இந்த அறைக்குள்ளே.

(கழுத்தைப் பிடித்து அறைக்குத் தள்ளிச் செல்லுகிறான்)

வித்யா:- ஐயோ! சண்டாளா! விடு என்னை. பாவி! விட்டுவிடு!

(வேகமாகத் தள்ளிக் கதவைச் சாத்துகிறான். "ஐயோ" என்று அலறியவண்ணம் விழுகிறாள் வித்யாவதி கதவைப் பூட்டிய பின்)

சந்தி:- ஒழிந்தது பீடை! எதிர்பாராது விழுந்த கடைசி முட்டுக் கட்டையையும் சமாளித்து விட்டோம்! சேனாபதியாரே! நம்வழியில் இனி எதுவும் குறுக்கிட முடியாது. வாரும் துவக்குவோம் நமது காரியத்தை.

(வேகமாகச் செல்கின்றனர் வெளியே)

## காட்சி 31.

(அரங்கேற்ற மேடை. 10 பச்சைப் பந்தல்கள், பலவகை ஆசனங்கள், மன்னன், சேனாபதி, காவலர், குடிகள் இருக்கின்றனர். மேடை மீது வீற்றிருக்கிறான் சந்திரவர்மன்)

**விக்ர:-** (எழுந்து) சபையோர்களே! நந்திக் கலம்பகம் அரங்கேற்றத் துவக்கம். முதற் பந்தல்; மன்னர் இருக்கவேண்டிய முதல் ஆசனம், முக்காலி. பாட்டினைப் பாடுவார் பாவலர் சந்திரவர்மன்.

(மன்னன் அவ்வாறே சென்று அமர, பாடுகிறான் சந்திரவர்மன்)

### (1) விருத்தம்.

மண்டலமாய் அம்பரமாய் மாருதமாய் வார்புனலாய்
ஒண்சுடராய் ஒளியென்றும் ஒருருவாய் மூன்றுருவாய்
மைவடிவோ வளைவடிவோ மரகதத்தின் திகழ்வடிவோ
செவ்வடிவோ பொன்வடிவோ சிவனே நின் திருமேனி

**நந்தி:-** வாழ்க தமிழ்!

**விக்ர:-** இரண்டாவது பந்தல். ஆசனம் கட்டில்.

### (2) விருத்தம்

ஒருபெருங் கடவுள் நிற் பரவுது மெங்கோன்
மல்லை வேந்தன் மயிலை காவலன்
பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி
வடவரையளவும் தென்பொதியளவும்
விடையுடன் மங்கல விசயமும் நடப்ப
ஒருபெருந் தனிக்குடை நீழல்
அரசு வீற்றிருக்க அருளுக எனவே

**நந்தி:-** ஆஹா! என்ன சுவை!.... என்ன சுவை!...

**விக்ர:-** மூன்றாவது ஆசனம் பாய்.

### (3) பாட்டு.

ஓடரிக்கண் மடநல்லீர் ஆடாமோ ஊசல்
உத்தரிசப் பட்டாட ஆடாமோ ஊசல்
ஆடகப்பூண் மின்னாட ஆடாமோ ஊசல்
அழகுமலர்க் குழல்சரிய ஆடாமோ ஊசல்
கூடலர்க்குத் தெள்ளாற்றில் விண்ணருளிச் செய்த
கோமுற்றப்படை நந்தி குவலய மார்த்தாண்டன்
காடவர்க்குமுன் தோன்றல் கை வேலைப்பாடி
காஞ்சிபுரமும்பாடி ஆடாமோ ஊசல்.

**நந்தி:-** அற்புதம்! ஆனந்தம்! ஆனந்தம்!

(காட்சி மாற்றம்)

## காட்சி 32.

(பாதாளச் சிறை. சீலாதித்தரும், சங்கா தேவியும் சோர்ந்து உட்கார்ந்திருக்கின்றனர்)

**சங்கா:-** ஐயோ! இந்நேரம் கலம்பக அரங்கேற்றம் நடந்து கொண்டிருக்குமே! என்ன வஞ்சகம் செய்வார்களோ தெரியவில்லையே! அமைச்சரே! என்ன செய்வது?

**சீலா:-** நாம் வெளியேற வாய்ப்பிருந்தால், இப்போதும்கூட அவர்கள் சதியை முறியடிக்கலாம் மகாராணி! என் செய்வது? எதற்கும் வழியற்றுக் கிடக்கிறோமே!

(வெளியே அழைத்துச் சென்ற நிருபதுங்கனை அந்த அறையில் கொண்டுவந்து விட்டு, கதவைப் பூட்டிச் செல்கிறான் காவலாளி)

**நிருப:-** (ஆவலோடு) அம்மா! இந்தக் கணையாழியைப் பார், அப்பாவுடையது!

**சங்கா:-** (வாங்கிப் பார்த்து வியந்து, எழுந்து) ஆமாம். இது உனக்கு எப்படியடா கிடைத்தது? எங்கே கிடைத்தது?

**நிருப:-** வரும்போது, வழியில் கிடந்தது. அப்பா இங்கு வந்தபோது தவறி விழுந்திருக்குமென்று நினைக்கிறேன்.

**சங்கா:-** (மகிழ்ந்து) ஆஹா! நமது விடுதலைக்கு வழி பிறந்துவிட்டதடா மகனே! அமைச்சரே! இது மன்னரின் கணையாழி!

**சீலா:-** ஆஹா! காரிருளில் ஒளி கிடைத்துவிட்டது. மகாராணி! இப்பொழுதே புறப்படுவோம். (வெளியே பார்த்து) காவலாளி! காவலாளி!

**காவலாளி:-** (ஓடிவந்து) ஏன் என்ன வேணும்?

**சங்கா:-** (கணையாழி காட்டி) இதோ மன்னவர் ஆணை. நாங்கள் இங்கிருந்து உடனே வெளியேற வேண்டும்.

**காவலாளி:-** உத்தரவு.

(திறந்து விடுகிறான் சிறைக் கதவை. வேகமாக வெளியேறுகின்றனர் மூவரும்)



## காட்சி 33.

(அரங்கேற்ற மேடை. நடந்து கொண்டிருக்கிறது அரங்கேற்றம்)

**விக்ர:-** ஒன்பதாவது ஆசனம்; திண்ணை.

### (4) பாட்டு.

மலர்க்குழல் அமர்ந்தினிய வண்டார்க்கும் காலம்
வரிக்குயில்கள் மாவில் இளந்தளிர் கோதும் காலம்
சிலர்க்கெல்லாம் செழுந்தென்றல் அமுதளிக்கும் காலம்
தீவினையேற்கத் தென்றல் தீவீசும் காலம்
பலர்க்கெல்லாம் கோனந்தி பன்மாடக் கச்சில்
பனிக்கண்ணார் பருமுத்தம் பாத்தாடும் காலம்
மலர்க்கெல்லாம் ஐங்கணைவேள் அலர்தூற்றும் காலம்
அகன்று போனவர் நம்மை அயர்த்திட்ட காலம்.

**நந்தி:-** பாக்யம்! ஆஹா! பெறற்கரிய பாக்யம்! மகாபாக்கியம்!

**விக்ர:-** பத்தாவது ஆசனம்; சிதை.

### (5) விருத்தம்.

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
வையகம் அடைந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்

(பாட்டு முடியுமுன்னரே சிதையில் நெருப்பு பற்றுகிறது. பார்த்துப் பதைக்கின்றனர் மக்கள்)

**ஒருவன்:-** ஆ! நெருப்பு! நெருப்பு!

**மற்றவர்:-** சிதை பற்றி எரிகிறதே! ஐயோ! மகாராஜா! மகாராஜாவுக்கு ஆபத்து!

**விக்ர:-** (எழுந்து கடுமையாக) மூடுங்கள் வாயை! அரங்கேற்றத்தின் புனிதமறியாத புல்லர்களே! சத்தமிடாதீர்கள்!

(பாடிக்கொண்டே இருக்கிறான் சந்திரவர்மன்)

தேனுறு மலரான் அரியிடம் சேர்ந்தாள்
செந்தழல் புகுந்ததுன் மேனி
யானுமென் கலியும் எவ்விடம் புகுவோம்
எந்தையே நந்தி நாயகனே

**மக்கள்:-** (பதறி) ஐயயோ! மகாராஜாவைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்.

**ஒருவர்:-** ஐயோ! வேகின்றதே வேந்தரின் உடல். தீயை அணைப்போம் வாருங்கள்.

**மற்றவர்:-** வாருங்கள்! வாருங்கள்! ஓடி வாருங்கள்.

(எல்லோரும் கும்பலாக சிதையை நெருங்க முயல)

**சந்தி:-** (எழுந்து ஓடிவந்து தடுத்து) நில்லுங்கள். உங்களுக்கு ஆண்டவனிடம் பக்தியிருந்தால்—பயமிருந்தால் இப்பால் நகரக்கூடாது! சிதையை நெருங்கக் கூடாது! தமிழ்த்தாயின் மகிமையை நாசமாக்கக்கூடாது! பைந்தமிழ்ப் பாடல் பெற்று, பரமனின் அருளைப் பெற்றார் மன்னவர்! இறப்பிலே இறவாத சிறப்படைந்தார் என் அண்ணன். எவருக்குக் கிடைக்கும் இந்த பாக்யம்? யார் பெறுவார் இத்தகைய கீர்த்தி? வாழ்த்துங்கள் மன்னவரை! போற்றுங்கள் இப்புனித நிகழ்ச்சியை!

**விக்ர:-** அமரப் புகழ் பெற்றார் நந்திவர்மன். ஆட்சியுரிமை பெற்றார் சந்திரவர்மன். வரவேற்போம்; வாழ்த்துவோம் புதிய மன்னவரை. சந்திரவர்ம பல்லவ மகாராஜா........

**சிலர்:-** வாழ்க! வாழ்க! நந்தி நாயகம் வாழ்க! மன்னர் பெருமான் வாழ்க!

**சந்தி:-** வாழ்க பல்லவர்குலப் பெருமை! செந்தழற் கடவுள் சிவபெருமானின் அருள் பெற்றார்; சிறப்போடு அவர் திருவடி நிழலைச் சென்றடைந்தார் மன்னவர்! ஆளத் தகுதியுள்ளவன் நான் என்பதை அண்ணன் நன்கறிவார். ஆகவே, அதற்குரிய ஏற்பாடுகளையும் செய்து முடித்துவிட்டார். எனக்கு மன்னிப்பளித்தார்; பொறுமைப் பிண்டங்களான மகாராணியையும், மகனையும், அவர்களுக்குப் பரிந்து பேசிய அமைச்சரையும் முன்கூட்டியே சிறையில் அடைத்துவிட்டார். பொதுமக்களே! பிரதானிகளே! இன்று முதல் நானே பல்லவ மண்டிலத்தை அணிசெய்யப் போகும் மணிமுடி மன்னன். சேனாபதி விக்ரமகேசரியே எனது நல்லமைச்சர்; இதனை ஒப்பவேண்டும் நீங்கள்.

**விக்ர:-** மனமுவந்து ஒப்புகிறோம் மன்னவரே! வாருங்கள் இப்பொழுதே அரசவையைக் கூட்டி மகுடாபிஷேகத்தை முடிப்போம்.

**சிலர்:-** ஐயோ! இதுவென்ன அக்ரமம்!

**சிலர்:-** மன்னர் வாழ்க! சந்திரவர்ம சக்கரவர்த்தி வாழ்க!

(வாழ்த்தொலியுடன் கிளம்புகின்றனர்)

## காட்சி 34.

(தெரு. மகாராணி சங்காதேவியும், அமைச்சர் சீலாதித்தர், இளவரசன் நிருபதுங்கன் ஆகியோரும் சில வீரர்களும் வேகமாக குதிரைகள் மீது வந்து கொண்டிருக்கின்றனர்)

## காட்சி 35.

(அரங்கேற்ற மேடைக்குச் சற்று தொலைவில். சந்திரவர்மன் குழுவினர் செல்லுகையிலே, எதிரே வருகின்றனர் நிருபதுங்கன், சங்காதேவி முதலானோர்)

நிருப:- (சினந்து) நில்! வஞ்சகத் தீயிலே என் தந்தையை வேகடித்த செந்தமிழ்ப் புலவா! எங்கே போகிறாய்?

சந்தி:- (அஞ்சி) ஆ! நிருபதுங்கன்!... மகாராணி! ... அமைச்சர்!.... பாவிகளே! சிறையிலிருந்து எப்படி வந்தீர்கள்? எதற்கு வந்தீர்கள்?

நிருப:- எதற்காக வந்தோம்? வஞ்சகனே! உன் துரோக வாழ்வை முடிக்கத்தான்!

(சந்திரவர்மன் வாள் எடுக்கும் முன், தனது வாளை அவன் மார்பில் பாய்ச்சுகிறான் நிருபதுங்கன்)

சந்தி:- ஆ! சேனாபதி! ... (விழுந்து) ஐயோ! ... ஆ! ... ஒழிந்தேன். விக்ரமகேசரி! ... ஐயோ... !

நிருப:- வீரர்களே! கைது செய்யுங்கள் சேனாபதியை!

விக்ர:- (அஞ்சி) இளவரசே! நான் குற்றமற்றவன். சூழ்ச்சியொன்றும் எனக்குத் தெரியாது. நடந்ததை விபரமாகச் சொல்லி விடுகிறேன். காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்னை.

(மண்டியிடுகிறான். அதே நேரத்தில், கையிலே தீவட்டி வைத்திருக்கும் பச்சையை கழுத்தைப் பிடித்துத் தள்ளியவண்ணம் தலைவிரிகோலமாக ஓடி வருகிறாள் வித்யாவதி)

வித்யா:- (ஆத்திரத்தோடு) துரோகி! இதோ மற்றொரு துரோகி! அவனும் துரோகி; இவனும் துரோகி; எல்லோரும் துரோகிகள்! வாழவிட வேண்டாம் அந்த வஞ்சகனை! இதோ மன்னரின் சிதைக்குத் தீயிட்ட மாபாவி! இந்தப் பாவியின் கையிலே தீவட்டியைத் தந்தவன் இந்தச் சேனாபதி! இவர்களுக்குத் தலைவன் சந்திரவர்மன்!

சங்கா:- (வியந்து) ஆ! கணிகை வித்யாவதியா? நீயா இந்தக் கோலத்தில்?

வித்யா:- ஆம் மகாராணி! சந்திரவர்மனைக் காதலித்த சண்டாளி; ஏய்ப்புக்கும் சூழ்ச்சிக்கும் பலியாகிவிட்ட படுபாவி! இவர்களின் சதிச் செயலை தடுக்க முயன்ற என்னைச் சிறை வைத்தார்கள். மன்னவரைகாக்கப் பெரும் பாடுபட்டு தப்பி ஓடி வந்தேன். ஐயோ! ... நேரம் தாழ்ந்து விட்டது மகாராணி! தாழ்ந்து விட்டது. மன்னியுங்கள். தீரமற்ற சேனாபதி, மானமற்ற இந்தத் தீவட்டி மடையன்; இவர்களை வாழ விடுவது நாட்டிற்கே ஆபத்து! கொல்லுங்கள்; வெட்டுங்கள்; புதையுங்கள் இந்தத் துரோகிகளை!

நிருப:- உம்... வீரர்களே! கைது செய்யுங்கள் சேனாபதியையும், இந்தக் கயவனையும்.

(விக்ரம கேசரியும், பச்சையும் கைது செய்யப் படுகின்றனர்)

சீலா:- சிறைச்சாலைக்கு கொண்டு போங்கள்.

(இழுத்துப் போகின்றனர்)

வித்யா:- (பைத்தியம்போல் சிரித்து) ஒழிந்தாரய்யா! ஒழிந்தாருங்க வஞ்சகப் பேடியர்கள்! (சந்திரவர்மன் பிணத்தைப்பார்த்து) ஆ!...சந்திரவர்மபல்லவ மகாராஜா! ... இன்பத்தின் எழில்வடிவே! இசைக் கலையின் சுவைக் கடலே! காதலின் கலையமுதே... ! (சிரித்து) காதலாவது வெங்காயமாவது! நியாயமாவது நேர்மையாவது! ... ஆ! (பிணத்தின் முகம் பார்த்து) ஐயோ! நான் மோசம் போய் விட்டேனே! நான் உயிராகக் காதலித்த கலைவேந்தர், உனைத் துறந்தாரா? என் வாழ்வுக்குச் சுவைதந்த வண்ணத் தமிழ்ப் புலவர் மண்ணிலே சாய்ந்துவிட்டாரா? ஆ! ... ஐயோ!....

(தடாலென்று சந்திரவர்மன் மீது விழுகிறாள் வித்யாவதி. உயிர் துறக்கிறாள். பாட்டுக் குரல் கேட்கின்றது. கணிகையின் தியாக வாழ்வும், நந்திவர்மனின் தமிழ்ப் பற்றும்—அதற்காக உயிர் நீத்த அரிய பண்பும் குறித்து புலவர் பெருந்தேவனார் பாடியவண்ணம் அங்கு வருகிறார்)

பெருந்:- அமைதி! அமைதி! அமைதி கொள்ளுங்கள்! நடந்தன நடந்தனவாக இருக்கட்டும்; இனிநடப்பன நல்லனவாகவிளங்கட்டும்!

சங்கா:- (சோகித்து) புலவர் பெரும! மன்னவரைக் காக்க வந்த நான், இந்த மரணங்களையா பார்க்கவேண்டும்? என்னருமை மணாளர், ஈடற்ற தமிழ் மறவர் துரோகத்தின் தீயிலே வெந்து சாம்பராகி விட்டாரே! கலம்பக அரங்கேற்றம் காஞ்சிக்கோர் களங்கமாக முடிந்து விட்டதே! அந்தோ! வாழவைக்கும் பைந்தமிழை மாள வைக்கும் கருவியாக்கிய மாபாதகத்தை மறக்குமா இந்த உலகம்?

பெருந்:- மகாராணி! உயிர்ப் பற்றினும் மொழிப் பற்றினைப் பெரிதாக்கினார்; உன்னத நிலைபெற்றார் மன்னவர்! நடந்ததை மறந்து, நடப்பதைப் பாருங்கள். மன்னரின் சடலம் அடக்கம் செய்யப்பட வேண்டும். ஆட்சியின் பொறுப்பேற்க வேண்டும் தாங்கள். முடிசூட்ட வேண்டும் இளவரசர் நிருபதுங்கருக்கு.

சங்கா:- (கண்களைத் துடைத்துக்கொண்டு) ஆம்! தந்தையால் வெஞ்சிறையிலே தள்ளப்பட்டிருந்தும், தனயனுக்குரிய கடமையைச் செய்து முடித்தான், செல்வன் நிருபதுங்கன். நாட்டாட்சி எமக்கே உரியது. ஆள வேண்டியவன் என் மகன். எவர் மறுப்பார் இதனை? அமைச்சரே! எல்லாவற்றிற்கும் ஏற்பாடு செய்யும்.

சீலா:- கட்டளை.

(காட்சி மாற்றம்)



## காட்சி 36.

(அரண்மனை. நிருபதுங்கனுக்கு முடிசூட்டு விழா. மகாராணி சங்காதேவி, அமைச்சர் சீலாதித்தர், பிரதானியர், வீரர்கள், குடிமக்கள் குழுமியிருக்கின்றனர்)

பெருந்:- (மகுடத்தை கையில் ஏந்தியவண்ணம்) செந்தமிழ் இன்சுவைக்குத் தன்னுயிரளித்த தார் வேந்தன்; இலக்கியக் காதல் கொண்டு இவ்வுலக வாழ்விழந்த மனிதகுல மாணிக்கம்; பல்லவர் பரம்பரையின் பைந்தமிழ்ப் பார்த்திபனாகிய நந்திவர்மவேந்தரின் புதல்வன்! இளவரசன் நிருபதுங்கன் இந்நாட்டின் மணிமகுடம் ஏற்கின்றார். நெஞ்சார வாழ்த்துவோம். கோடாத செங்கோல் நடாத்தி நீடூழி வாழ்க! பல்லாண்டு பல்லாண்டு வாழ்க; நிருபதுங்க மன்னவர்...

எல்லோரும்:- வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க!

(முற்றும்.)

குறிப்பு:- அறிஞர் மா. இராசமாணிக்கனார் அவர்களின் "பல்லவர் வரலாறு"ம், "நந்திக்கலம்பக" முன்னுரைக் குறிப்புகளும் இந்நாடகத்தை உருவாக்க உதவின.

—ப. க.

"பகுத்தறிவு" நல்கும் அடுத்த
தொடரோவியம்
பண்பெழுத்தாளர்,
ப. உ. சண்முகம்
தீட்டிய
**தேசிங்குராஜன்**
பொங்கல் மலருக்குப் பிறகு
துளிர்க்கும் இதழில்
துவங்குகிறது.
சுவைக்கத் தவறாதீர்கள்!

## கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● இரா. அருணாசலம்,
பள்ளவள்ளி, குறிசிலாப்பட்டு (அஞ்சல்)
திருப்பத்தூர், வ. ஆ. மாவட்டம்

ஆ. பி. இராசன், வெங்கிடாபுரம்.

கே: தமிழரசுக் கழகத்திற்கு வித்தூன்றியது ம. பொ. சி. யா? திரு. வி. க. வா?

ப: 1938-ல் திராவிட இயக்கம் நடத்திய இந்தி எதிர்ப்பு—மொழிப்போர்!

ஏ. மாணிக்கம், தொளசம்பட்டி,

மனிதன் கடமையினால் வாழ்கிறானா? மடமையினால் வாழ்கிறானா?

ப: கடமைக்கும், மடமைக்கும் இடையிலே நின்று போராடியவண்ணம் நாட்களைக் கழிக்கிறான்.

* * *

கே: தமிழ்மொழி சிறப்புற்று விளங்கக் காரணம் என்ன?

ப: எளிமை, இனிமை, பழமை, புதுமை, இலக்கியம், இலக்கணம் எல்லாம் இருப்பதால்!

இரா. அருணாசலம், பள்ளவள்ளி.

கே: தற்கொலையால் மாண்ட பிணங்களை அறுத்தபின் தைக்கும் குத்தூசி, ஏடெழுதும் எழுத்தாணியாக மாறினால் என்ன நடக்கும்?

ப: கொள்கைக் குழப்பங்களை, இலட்சியக் கொலைகளை, அறுவைகளை, பிணவாடைகளை அதிகமாக்கும்!

* * *

● கே: பச்சைத் தமிழன் காமராசர் என்பதற்காக காங்கிரசை ஆதரிக்கும் தி. க. வினர், பச்சைத் தமிழன் கம்பன் எழுதிய இராமாயணத்தை மட்டும் ஏன் எதிர்க்க வேண்டும்?

ப: கம்பன் வெறும் ஆரிய அடிமை; காமராசர் ஆரிய வடவ இந்தி ஏகாதிபத்திய அரசியல் அடிமை! வித்தியாசமில்லையா?

எம். சாத்தப்பன், திருச்சிராப்பள்ளி.

கே: கொள்கைக்குத் துரோகமிழைக்கும் துரோகிகளை என்னவென்றழைப்பது?

ப: தற்போதைக்கு "குத்தூசிகள்" என்று அழைக்கலாம்.

சேலத்தில் தி. மு. கழக
**மத்திய செயற்குழுக் கூட்டம்**
29-12-56 சனியன்றும்,
**பொதுக்குழுக் கூட்டம்**
30-12-56 ஞாயிறன்றும்,
முறையே சுயமரியாதைச் சங்க ரோடு மாவட்டக் கழக அலுவலகத்திலும், அன்னதானப்பட்டி பிட்டா ரைஸ்மில் கட்டிடத்திலும் நடைபெறும்.
ஞாயிறு மாலை 6-மணிக்கு வி. மார்க்கெட்டில் மாபெரும் கூட்டம். தலைவர்கள் அனைவரும் பேசுவார்கள்.

Regd No. M. 5721. PAKUTHARIVU. 28—12—56




## ★ மாதர்குல மாணிக்கம். ★

ஒரு ரயில்விபத்தை அடிப்படையாகக் கொண்டு "மாதர்குல மாணிக்க"த்தின் கதை எழுதப்பட்டிருக்கிறது. அதற்கேற்றபடி, அண்மையில் அரியலூர் ரயில் விபத்தும் நடந்திருப்பதால் கதையின் திருப்பம் ரசிகர்களின் மனதை வெகுவாகக் கவருகிறது.

ரவியும், லட்சுமியும் காதலர்கள். ரவியினுடைய தந்தையின் சாதிப்பித்து மகனின் காதலை உடைத்தெறிந்து தேவகிஎன்ற பெண்ணை அவன் மனைவியாக்குகிறது. அதே சமயம், தன் நண்பனின் தங்கை கல்யாணத்திற்குச் சென்ற டாக்டர் சேகர், எதிர்பாரா விதத்தில் அக் கல்யாணம் நின்று விடவே, தன் நண்பனின் துயரத்தைக் காணச் சகியாது, அவன் தங்கை பார்வதியைத்தானே மணக்கிறான். இரண்டுஜோடி மணமக்களும் ரயிலில் வரும்போது விபத்து நேரிடுகிறது. கதையிலும் சிக்கல் ஆரம்பமாகிறது. வெள்ளத்தில் ஒதுக்கப்பட்டு, மணக்கோலத்துடன் கிடந்த பார்வதியைத் தன் மனைவி என்று நினைத்து அவளை வீட்டுக்குக் கூட்டிப்போன ரவி, பார்வதி தன் மனைவியல்லவென்று அறிகிறான். உண்மையை அவளுக்குத் தெரிவிக்காமலேயே' அவளுடைய கணவனைத் தேடும் முயற்சியில் ஈடுபடுகிறான். ஒருநாள், பார்வதி உண்மை தெரிந்து வீட்டைவிட்டு ஓடிவிடுகிறாள். ஓடியவள், சேகரின் வீட்டுக்கே போய்ச் சேருகிறாள். சேகர்தான் தன் கணவன் என்றும் தெரிந்துகொள்கிறாள்.

கதையில் மேலும் சிக்கல்! வைத்தியத்திற்காக சேகரிடம் வந்த லட்சுமிக்கும், சேகருக்கும் திருமணம் நடத்த ஏற்பாடாகிறது. சூழ்நிலையால் தன் வாழ்வையும் தியாகம் செய்யத் துணிகிறாள் மாதர்குலமாணிக்கமான பார்வதி! இறுதியில், சிக்கல்களெல்லாம் தீர்ந்து, ரவி லட்சுமியை அடைய, பார்வதி சேகரிடம் சேர, "வாழ்க பெண்குலம்" என்று கதை முடிகிறது. சதாசிவப் பிரம்மம் என்ற தெலுங்கு எழுத்தாளர் கதையைக் கட்டியிருக்கிறார்.

நல்ல விறுவிறுப்பான கதை. கூடியவரை அந்த விறுவிறுப்புக்குப் பங்கம் ஏற்படாத வகையில் வசனத்தை அமைத்திருக்கிறார் ஸ்ரீதர். ஆனால், சேகரின் தாய் தன் மருமகளை இன்னாரென்று அடையாளம் கண்டுகொண்டது போல் பேசுவதையும், நடந்து கொள்வதையும் தவிர்த்திருக்கலாம். சாதி பேதத்தைக் கண்டிக்கும் வகையில் எழுதும் கதாசிரியர், கடைசியில் ரவியையும், லட்சுமியையும் ஒரே சாதியினராகக் காட்டிவிடுவது ஏனோ? வசன கர்த்தா அடிக்கடி 'விதி'யைப் பற்றிக் குறிப்பிடுவது நல்ல வேடிக்கை!

இரண்டொரு பக்திப் பாடல்களைத்தவிர எல்லா பாடல்களுமே மனதில் நிற்கக் கூடியவை.

நாகேஸ்வரராவ், ஜெமினி கணேசன், அஞ்சலிதேவி, சாவித்ரி போன்ற பல முன்னணி நட்சத்திரங்கள் நடித்திருக்கின்றனர். நல்லவேளையாக, படம் 'உலகம்' மாதிரி சோடை போகவில்லை. எல்லோருமே பாராட்டும்படி நடித்திருக்கிறார்கள். நாகேஸ்வரராவும், ரங்கராவும் தெலுங்கு பேசுவது போல் தமிழையும் உச்சரிக்கிறார்கள். அதாவது பரவாயில்லை! நாகேஸ்வரராவ் தன் நெற்றியை அடிக்கடி சுருக்கி 'கிராப்'பை அப்படி மேலுங் கீழுமாக ஆட்டிக்காட்டியிருக்க வேண்டாம். சாவித்ரியை நடனம் வேறு ஆடவிட்டிருக்கிறார்கள். பாவம்!

ஒளிப்பதிவு நன்றாகஇருக்கிறது. ஒலிப்பதிவு பரவாயில்லை.

கணவன், மனைவியாக வரும் தங்கவேலும், ராஜமும் நகைச்சுவை விருந்தளிக்கிறார்கள். தங்கவேலு வழக்கம்போல உடலை நெளித்து, சுளித்து நடித்தாலும் சிரிப்புவரத்தான் செய்கிறது. மிளகாய் தமாஷ், மாமனாரின் திருடன் வேஷம், மருமகன் கொதிக்கும் கொப்பரையில் மாட்டிக் கொள்வது—ஆகியவை நம்பமுடியாதவையாக இருந்தாலும், ரசிக்கும்படியாக இருக்கின்றன.

எப்போதுமே சிறு விஷயங்களில்தான் நமது டைரக்டர்கள் தவறு செய்து விடுகிறார்கள். ரவி லட்சுமிக்கு எழுதிய கடிதத்தைத் தன்னிடம் வைத்துக் கொண்டே, பார்வதி தற்கொலை செய்ய முயற்சித்து நீரில் மூழ்கி எழுந்து வந்த போதிலும், கடிதம் அப்படியே இருப்பதாகக் கடைசியில் காட்டப்படுகிறதே, அது ஏதாவது 'விநோதமை'யினால் எழுதப்பட்டதோ?

இதுபோன்ற சிறு குறைகளிருந்தாலும், எல்லோரும் பார்த்து மகிழத் தக்க நல்லபடம் "மாதர் குல மாணிக்கம்."

—நா. சோமசுந்தரம்.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்—1 குமாரசாமிப்பட்டியின்றும் வெளியிடப்படுகிறது.


# பகுத்தறிவு

திங்கள் இருமுறை. ஆசிரியர்:— ப. கண்ணன்.

மலர் 7 | 1-4-57. ★ விலை 0-2-0 | இதழ் 3.


## கருத்துக் கலைஞர், கருணாநிதி வாழ்க!

அரசியல் சமுதாய விடுதலைக் கிளர்ச்சிகள், போராட்டங்களில் மட்டுமல்ல; நாடகம்-சினிமா கலைத்துறையின் புதிய பரம்பரையில் அறிஞர் அண்ணாவின் தம்பிமார்களில் சிறப்பிடம் பெற்ற ஒருவர் கலைஞர், மு. கருணாநிதி. தன்மானப் பாத்தியிலே வளர்ந்த தளிர்க்கொடி! கொள்கை மணக்கும் பகுத்தறிவுப் பூங்கா!

குளித்தலை தொகுதியினின்றும் சென்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார் நண்பர் கருணாநிதி. கடுமையான போட்டி; பன்முனைத் தாக்குதல்கள்; கொள்கைத் துரோகிகளின் கொக்கரிப்பு; பண மூட்டைகளின் கைவரிசை; சுயேச்சைகளின் நச்சரிப்பு அத்தனையும் முறியடித்து வெற்றி வாகை சூடினார்! முழக! நாடு மகிழ்ந்தது; நல்லவர் மகிழ்ந்தனர்; கழகத்தவர் களிப்பெய்தினர்; நாம் களிபேருவகை கொண்டோம்!

கருணாநிதியின் வெற்றி கருத்துக் கதிர்களின் வெற்றி! தியாகத்தின் வெற்றி! உழைப்பின் வெற்றி. வாழ்த்துகிறோம் நாம்.



"எதிர்க்கட்சியாக தி.மு.க. 15. பேர்தானே இருக்கின்றனர். என்ன செய்யமுடியும்" என்கின்றனர் சிலர். திருவண்ணாமலையில் 19-3-57-ல், நண்பர். ப.உ. சண்முகம் இதற்கு விடையளித்தார்:

"ஐம்பதாயிரம் பேருள்ள நகரத்தை ஒருசில போலீசுக்காரர்கள் காக்கின்றனர். அதுபோல் அறிஞர், அண்ணா சப் இன்ஸ்பெக்டராகவும், கருணாநிதி ஹெட் கான்ஸ்டபிளாகவும் நான் கான்ஸ்டபிளாகவும் இருந்து சட்டசபை வேலைகளைக் கண்காணிப்போம்" என்று.

அரசியலில் கள்ளர், கயவர், கங்காணிகளின் தீங்கான திட்டங்கள். செயல்முறைகள், திராவிட உரிமையைப் பாதிக்கும்பொழுது, எதிர்த்துப் போராடும் இலட்சியப் படை சிறிதெனினும்; விளையும் பயன் எழுச்சி தருவது; விடுதலைப்போருக்கு வலியூட்டுவது; திராவிடம் வெல்க! வாழ்க!

# கல்வித்துறை அறிஞர்கட்கு.

சாலை—இளந்திரையன்.

"நமது நாட்டு மக்களில படித்துப் பட்டம் பெறுபவர்களால் அவர்களுக்கும் பயனில்லை; பிறருக்கும் பயன் இல்லை" என்று பலர் கூறிவந்தனர். அதற்குக் காரணம்: நம்மை ஆண்டுவந்த வெள்ளையர்களால் வகுக்கப்பட்ட கல்வித்திட்டத்தின்படி நாம் கற்றும் கற்பித்தும் வருவதே என்றும் நாட்டுப் பற்று மிக்கவர்கள் கூறி வருந்தினர். படிக்காமலும் பட்டங்கள் பெறாமலும் இருந்தும், கொஞ்சம் பணத்துக்கு உரியவராகிவிட்ட முதியவர்களெல்லாம், "பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது" என எள்ளி நகையாடி வந்தனர்; வருகின்றனர்.

சிறந்த அறிஞர்களாகவும் மக்கள் நலனில் கருத்துடையோராகவும் உள்ள சிலர்' 'கற்றவர்கள் சமூகச் சீர்கேடுகளைப் பற்றி எண்ணுவதோ, அவற்றைப் போக்க முயல்வதோ இல்லை; அவர்கள் பெறும் கல்வியே அவர்களை அவ்வாறு ஆக்கி வைத்துவிட்டது'' என்று குறிப்பிட்டு வந்துள்ளனர். மாணவப் பருவத்தினர்கூட, தாம் பெறும் கல்வியில் ஏதோ குறைபாடு இருப்பதாகப் பல சமயங்களில் உணருகின்றனர். எனினும் அக் குறைபாடு யாது என்பது அவர்களுக்கு விளங்குவதில்லை.

எது எவ்வாறாயினும் கல்வித்திட்டத்தில் ஏதோ குறைபாடு இருக்கிறது என்பதை அனைவரும் ஒத்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. விடவே, சமயவாதி,

"சமய உண்மைகளையும், நூல்களையும் மிகுதியாகக் கற்பித்தால் இக்குறை நீங்கும்"

என்று தன் காரியத்தில் கண்ணாயிருந்தான். இன இயல் ஆராய்ச்சியாளன்,

'ஆண், பெண் இன உறவு (Sexuel Science) பற்றிய உண்மைகளைக் கற்பித்தால் தான் இக்குறை நீங்கும்''

என்று தன் 'கடை'க்கு விளம்பரம் தேட முயன்றான் பகுத்தறிவுவாதி,

"மூடப்பழக்க வழக்கங்களையும் கொள்கைகளையும் ஒதுக்கி அறிவு நூற்பயிற்சியை விரிவுபடுத்த வேண்டும்"

என்று விண்ணப்பம் செய்தான். கல்வித்துறை அறிஞர்கள் என்றிருப்போர், பெரும் பெரும ஆராய்ச்சிகளுக்குப் பின்,

"அறிவு இயலும், மன இயலும் (Science and Humanities) இணைத்துக் கற்பித்தால்தான் முழுமை பெற்ற மனிதர்களை உருவாக்க முடியும்" என்றனர்.

இன்னும், சில பாடங்களைக் கூட்டிச் சில பாடங்களைக் குறைத்தனர்; நான்காண்டுப் படிப்பை மூன்றாண்டென்றும் ஐந்தாண்டுப் படிப்பை ஆறாண்டென்றும் மாற்றி அமைத்தனர்; சூழ்நிலைகளை மாற்றினர் ஆசிரியர்களையும் மாற்றினர். ஆனால், இவற்றாலெல்லாம் மாணவர்களை மட்டும் மாற்றிவிட முடியவில்லை. பழைய நிலையிலேயே மாணவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

நோயாளி ஒருவனுக்குச் சில மருந்துகளும், குறிப்பிட்ட சில உணவுகளும் கொடுக்கப்படுகின்றன. அவற்றால் நோய் வளருகிறதே தவிரக் குறைவதாகக் காணோம். உறவினர்களுக்கு, 'நோய் தீரவில்லையே' என்ற ஏக்கம். அந்த ஏக்கத்தில் மருத்துவரையும், செவிலி (NURSE) யையும், நோயாளியின் படுக்கையையும் மாற்றுகின்றனர். உணவு, முன்னர்க் கொடுக்கப்பட்ட அதே உணவு; மருந்தும் அதுவே! நோயாளியின் நிலை என்ன ஆகும்?

நம் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களும் இப்படித்தான் இருக்கின்றன. மாணவன் மூளை உடையவனாகவும், நெஞ்சமுடையவனாகவும் வளருவது அவனது மூளைக்குள் செலுத்தப்படும் செய்திகளின் தன்மையையே பெரும்பாலும் பொறுத்திருக்கிறது. ஆசிரியர் முதலியோர் அதற்குத் துணையாக இருப்போரே. எனவே மாணவனுக்குக் கற்றுக் கொடுக்கப்படும் செய்திகள் கூடியவரை நல்லனவாக இருக்க வேண்டும்; நன்மையை நாடுபவனாகவும், தீமையைச் சாடுபவனாகவும், அவனை ஆக்குவனவாக அவை அமைய வேண்டும். இந்த நிலை வராதவரை கல்வி கற்போர் நமக்கும் நாட்டுக்கும் பயன்படுவோராக வளர இயலாது

(15-ம் பக்கம் பார்க்க)






ஏப்ரல் 1-ந் தேதி முதல் புதிய தபால் கார்டு 5 நயா பைசா, கவர் 13 நயா பைசா!

—செய்தி.

இதனால் மேலும் விலை உயர்வதும், ஏழைகளுக்குக் கேடுவிளைவதும் மாடுகள் வென்றதன் விளைவோ? மகேசன் அருளோ?

* * *

திராவிடர் கழக ஆலோசனைகளை காங்கிரஸ் ஒருபோதும் ஒப்புக்கொண்டது கிடையாது.

—அமைச்சர், சுப்ரமணியம்.

காமராசர் ஒப்புக் கொண்டாரமே; செய்தாராமே; அதனால்தானே உதைக்கும் காலுக்கு முத்தமிடுகிறது தன்மானக் கழகம்!

* * *

தேர்தல் வெற்றியிலே கேரளாவில் காங்கிரசை கம்யூனிஸ்ட் மிஞ்சிவிட்டது.

செய்தி.

தமிழ் நாட்டிலே, காங்கிரசுக்கு வோட்டுப் போடுங்கள் என்று கடைசி நேரத்தில் புலம்பிய கம்யூனிஸ்டுகளின் துரோகத் தனம்தான மிஞ்சியது!

* * *

பவுடர் பூசிகளை தம்பிஜேர் பன்னத்தில் தள்ளப்பட்டார்.

—"விடுதலை"

குத்தூசிகளும், வெத்துவேட்டுகளும் நடிப்பதில் மட்டுமல்ல; அடுக்கு மொழிகளை காபி அடிப்பதிலும் வல்லவர்கள்தானய்யா!

* * *

பதவி நன்றே! பதவி நன்றே! பொய்யும் புளுகும் புளுகேயேனும் பதவி நன்றே! பதவி நன்றே!

—"குத்தூசி"

ஆமாம்சாமி! அவசரசாமி! அதற்குத்தானே ஆட்சியாளர் காலை நக்குகிறாய்! வாலைக் குழைக்கிறாய்!

## தென்னகம்.

தொளசம்பட்டி தி. மு. க. செயலாளர், எம். பழனியப்பன் துணைவியார் தோழியர், சின்னப் பொண்ணு 20-2-57 அன்று பெண் மகவு பெற்றார். கழகத் தோழர்கள் அக் குழந்தைக்கு "தென்னகம்" என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர். தென்னகம் தோன்றியதன் மகிழ்வுக்குறியாக "பகுத்தறிவு"க்கு ரூ. 2 நன்கொடை யளிக்கப்பட்டது. வரப்பெற்றோம். குழந்தைக்கு எமது வாழ்த்து; பெற்றோர்க்கு நன்றி.

## பூங்கோதை.

திண்டிவனம் "பகுத்தறிவு" விற்பனையாளர் திரு. மு. மாரிசாமி, திரு. மாரியம்மை இவர்கள் பெண்மகவுக்கு 15-1-57-ல் திரு வே. நடராசன் அவர்கள் "பூங்கோதை" எனப் பெயர் சூட்டினார். இதன் நினைவாக "பகுத்தறிவு" வளர்ச்சிக்கு ரூ. 2 அனுப்பப்பட்டது. மகிழ்வோடு பெற்றுக்கொண்டோம். நன்றி! வண்ணப் பொலிவோடு வாழ்க பூங்கோதை!

## பகுத்தறிவு.

(திங்களிருமுறை)

**புதிய தசாம்ச நாணய விகிதத்தில்:**

**உள் நாடு:**

| | |
|---|---|
| ஆண்டு 1-க்கு | 3—00 |
| 6 மதங்களுக்கு | 1—75 |

தனிப்படி 13 சல்லிக்காசு (நயா பைசா)

பழைய நாணயத்தில் 0-2-0
சிலோனில் 25 சதம்

**பகுத்தறிவு அலுவலகம்**
**சேலம்—1.**



**இராமன்:-** "நாடகம் ஆடுவோன் நாடாளலாமா" என்று காமராசர் கேட்டாரே; நடிகை கே. பி. சுந்தராம்பாள் தேர்தல் பிரசாரம் செய்யலாமா?

**சோமன்:-** போடா, போ! காங்கிரஸ் பெயரும், கடவுள் பெயரும் சொல்லிவிட்டால் கழுதை கூட சிங்காதனம் ஏறலாம்!

* * *

**கருப்பன்:-** "கண்ணீர்த் துளிகள்" சட்ட சபைக்குப்போய் என்ன செய்ய முடியும் என்று நினைக்கிறாய்?

**சிவப்பன்:-** வடக்கத்தியானுக்கு மெத்தை விரித்து, மென்மலர் தூவி, பாதம் பிடித்து, பன்னீர் தெளிக்கும் வேலையை நிச்சயமாக அவர்களால் செய்ய முடியாது என்றே நினைக்கிறேன்.

—இந்திரசித்தன்,
சலகண்டபுரம்.

* * *

**சுப்பன்:-** குப்பா! வெளிநாட்டுக் கம்யூனிஸ்டுகள் கடவுள்—மத எதிர்ப்புப் பிரசாரம் செய்கையில், தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள், கடவுளுக்கு அபிஷேகமும், கம்பராயணப் பிரசங்கமும் செய்கிறார்களே! ஏனடா?

**குப்பன்:-** சுப்பா! மக்கள் தொடர்பை அதிகமாக்கிக் கொள்ளும் இந்த மகத்தான செயல்கள் இவர்களுக்குத் தானப்பா தெரியும்! பூசாரி சக்தியும், புரோகித சக்தியும் சேர்ந்துதானே ஜனசக்தியாம்!

—வே. சுப்பராயன்,
திருச்சி.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.
>
> —திருவள்ளுவர்

# இதயம்

மலர் 7 | சேலம் 1—4—57 | இதழ் 3

## ஆச்சாரியார் துராசை!

"மனிதர்கள் எவ்வளவுக் கெவ்வளவு பகவானிடத்தினின்றும், அவருடைய ஆக்ஞைகளான தர்ம நூல்களினின்றும் விலகுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள். அறிவுச் சக்தியோ, ஆற்றலோ அதிகப் படப்பட உலகத்துக்கு ஆபத்தும் அதிகரிக்கிறது. பக்தியும் சாந்தமுமே இவைகளுக்கு எல்லாம் உற்ற மருந்து...... ஆட்சி மன்றத்தின் முதற்கடமை பக்தியையும், சாந்தத்தையும் பரவச் செய்வதே."

இவ்வாறு தன் முன்னால் கைகூப்பி மண்டியிட்டிருக்கும் மன்னனுக்கு, ஆச்சாரிய சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளுவார். குருநாதரின் ஆக்ஞையை சிரமேற்கொண்ட மாமன்னன், மந்திரி பிரதானிகளை அழைப்பான்; கட்டளையிடுவான்: "மக்கள் துன்பம் தீர்க்க மார்க்கம் பிறந்து விட்டது! மகேஸ்வரனுக்கு ஆலயம் கட்டு; மடங்கள் எடு; பக்தி பரவ அபிஷேக ஆராதனைகள், ஆடல் பாடல்கள், வேத பாராயணங்கள், யாக எக்யங்கள் நடைபெறட்டும்" என்பான்.

மன்னவனின் விருப்பத்தை மந்திரி பிரதானியர் நிறைவேற்றுவார்கள். அதன் பலனைப் பெற்று மன்னனும் "மோட்சலோகம்" சென்று விடுவான்! கதை முடிந்துவிடும். அறிவாற்றலும் குறைந்திடும்!

ஏமாந்த காலத்திலே ஏற்றங் கொண்டவர்கள், இதுபோல் பேசியும், எழுதியும், பாடியும், ஆடியும் காட்டிப் பகுத்தறிவுள்ள மனித வர்க்கத்தை மிருக வர்க்கமாக மாற்றுகின்ற மகத்தான பணியைச் செய்து கொண்டிருந்தனர், ஐம்பதாண்டுகளுக்கு முன்புவரை!

இன்று, அந்த மன்னரைச் சார்ந்த மக்களும் இருக்கிறார்கள். ஆச்சாரியார் பரம்பரையும் வாழுகின்றது. என்றாலும், காலம் மிகமிக மாறிவிட்டது. துன்பம் வந்தால் துடைக்கும் வழி, அறிவுக் கேற்ப தேடப்படுகின்றது. நோய் வந்தால் ஆலயத்தை நாடுவதை விட்டு, ஆசுபத்திரிக்கு ஓடுகிறான்; ஏன், எதற்கு என்று கேட்கத் தொடங்கிவிட்டான். இதனால் மக்கள் நலம் பெறுகின்றனர். ஆனால், மகான் வழி வந்தவர்கள் நடுங்குகின்றனா!

தன் முன்னால், கைகூப்பி மண்டியிடும் மன்னர்கள் இல்லை. "மைக்கு"தான் இருக்கிறது. என்றாலும் அந்நாளைய குருநாதர் செய்த உபதேசங்களையே இப்போதும் புரிகின்றார் இன்னாளைய ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்!

24—3—57 "கல்கி" இதழில் சங்கராச்சாரியார் படத்தோடு, அவர் பொன்விழா விசேஷச் செய்தியாக "வையகம் துயர்தீர வழி" என்ற கட்டுரையொன்று வந்திருக்கிறது. அதிலே ஒரு பகுதிதான் நாம் துவக்கத்தில் எடுத்தாண்டிருப்பது.

நாடு சீர்கெட்டு விட்டது, மக்கள் துன்பப் படுகின்றனர். கட்சிகளால் வெறுப்பும், கசப்பும் அதிகரிக்கின்றன. அறிவுச் சக்தி மிகுகின்றது. இவைகளை ஒழிக்க ஆட்சி மன்றத்தாரின் முதற்கடமை பக்தியைப் பரப்புவதுதான் என்கிறார் சங்கராச்சாரியார். ஆளவருவோரும் செய்வார்கள்; ஆட்சி மக்களாட்சியாகவன்றோ போய்விட்டது! தட்டிக் கேட்பவர் தோன்றிவிட்டார்களே!

இந்தப் பகுத்தறிவு யுகத்திலும், அந்தப் பரம்பரைக்கு எவ்வளவு துணிச்சல்! "பகவானை விடாதே, அவரது ஆக்ஞையான தர்மநூலை விட்டு விலகாதே, அறிவுச் சக்தியோ ஆற்றலோ வேண்டாம், பக்தி தான் வேண்டும்" என்கிறாரே; பல்லாயிரம் பகவான்களிலே இவர் குறிப்பிடுவது எந்தப் பகவானை? பன்னூறு தாமங்களிலே இவர் குறிப்பிடுவது எந்த தாம நூலை? பக்தி! மகனைக் கொலை செய்யும் பக்தியா? மனைவியை மாற்றானுக்குப் பெண்டாக்கும் பக்தியா? தாயைப் புணர்ந்து, தகப்பனின் தலையறுக்கும் பக்தியா? வழிமறித்துக் கொள்ளையிடும் பக்தியா? எந்தப் பக்தியை இவர் குறிப்பிடுகின்றார்? விளக்கிட முன் வருவாரா சங்கராச்சாரியார்?

"திராவிடத்தைக் காப்போம்" என்று அரியதோர் அரசியல் தலையங்கம் இடம் பெற்ற "கல்கி"யில், இந்தச் சமுதாய அழிவுக்கு வழிகாட்டும் வடிகட்டிய "துராசை" யெளியிடப்பட்டிருக்க வேண்டியதில்லை. மக்கள் இன்னும் அவ்வளவு படுமோச அறியாமையிலா இருக்கிறார்கள்? —ப. கண்ணன்.

### அடுத்த இதழில்:

**தேர்தலில் வெற்றிபெற்றுள்ள தி.மு.க. செயல் வீரர்களின் படங்களும், அவர்களைப் பற்றிய குறிப்புகளும் அடுத்த இதழில் இடம் பெறும்.**

சிறுகதை.

# இன்ப வாதனை.

குஞ்சிதம்-வடிவேலு.

★ "சந்திரிகாவுக்கு என்னப்பா குறை? உன்மேல் உயிரையே வைத்திருக்கிறாளே" என்றாள் யசோதை.

● "தங்கள் அன்புக்காகவே பிறந்தவள்; அன்புக்காகவே மடிவேன்! அத்தான்! என்மீதா சந்தேகம்?"

★ வார்த்தை யொன்றும் இராகவனின் மனதைத் தொட வில்லை. ஆனால், திலகவதி வந்தாள். பார்த்ததும் திடுக்கிட்டான்! ஏனோ, அவன் முகம் குரூரமாக மாறியது......

**வெ**ளிவராண்டாவில் சோபாவில் சாய்ந்து கொண்டிருந்தான் ராகவன். தோட்டத்தில் அசைந்தாடிய அழகிய பூங்கொடிகளும், மலர்மணத்தை வாரிவந்த தென்றலும் அவனது வாலிப உள்ளத்தில் இன்ப உணர்ச்சியை எழுப்பவில்லை. மாறாக அவன் பார்வை சூனிய வெளியிலேயே நிலைத்திருந்தது.

புதுப் பொலிவும், குழைவுமாக அருகில் வந்து நின்ற மாமன் மகள் சந்திரிகாவினாலும் அவனைத் திருப்ப முடியவில்லை. அவன் பார்வை அசையாது நிலைத்தஇடத்திலேயே நின்றது. மருண்ட மான் போல் நின்ற சந்திரிகாவுக்கு கால்களும் கடுத்தன. 'கண்ணே! மணியே' என்று கொஞ்சிப் பேசும் அத்தானை எதிர்பார்த்த பெண்ணுள்ளம் ஏங்கியது. அத்தானின் அலட்சியமும், புறக்கணிப்பும் கன்னியின் நெஞ்சைப் பிளந்தது. உற்சாகமாகப் பேசவந்தவள் வாய் புதைத்து நின்றாள்.

அந்த நேரத்தில் ஆபத்பாந்தவன், அனாதரட்சகன் என்பார்களே, அதுபோல் சந்திரிகாவுக்குத் துணையாகவந்தான் குணசேகரன். வாருங்கள்! அண்ணா! என்று வாய்குளிர வரவேற்றாள். மலர் முகத்திலே மகிழ்வு பொங்கியது ஆனால், ஆபத்பாந்தவனாலே ஆபத்தும் விளைந்தது.

திடுக்கிட்டு நிமிர்ந்தான் ராகவன். ஏதோ பார்க்கச் சகிக்காததைப் பார்த்தவன் போல் முகம் சுளித்தான். குணசேகரன் கூறினான்: "ராகவன்! நீ வரப்போவதைப் பற்றி இந்த ஒருமாதமாகச் சந்திரிகா சொல்லிக் கொண்டே இருந்தாள். இன்றாவது வந்தாயே! பாவம்; சந்திரிகாவுக்கு எந்த நேரமும் உன்னைப் பற்றியே பேச்சுத் தான்" என்றான். சந்திரிகாவை நோக்கினான்: "சந்திரிகா! உன் அத்தானைப் பார்த்ததும் பதுமைபோல் நிற்கிறாயே!" என்று இருவரையும் இணைத்துப் பேசினான் குணசேகரன். அவன் எப்போதுமே உற்சாகமாகப் பேசக் கூடியவன்.

இதொன்றும் காதில் வாங்கிக் கொள்ளாமல் எழுந்தான் ராகவன். 'குணசேகரன்! எனக்கு கொஞ்சம் வேலையிருக்கிறது. உன்னிடம் பிறகு பேசுகிறேன். மன்னிக்கவும்,' என்றவண்ணம் தெருவை நோக்கி நடந்தான். இருவரும் பிரம்மித்து நின்றனர்.

காலையிலிருந்தே அத்தானின் போக்கை கவனித்த சந்திரிகா, அவனுடைய எண்ணத்தை அறிந்தவள் போல் சாம்பிய முகத்துடன் உள்ளே சென்றாள். 'அத்தை! அத்தானின் மனம் எனக்குப் புரிந்து விட்டது. அவருக்கு என் மீது அன்பில்லை. நான் நினைத்ததெல்லாம் நாசமடைந்து விட்டது' என்று குமுறினாள், மனம்விட்டு. கன்னிப் பருவத்துக் கனவுகள் சிதைந்து, ஏமாற்றம் அணையாத் துயராகக் கொழுந்து விட்டது. அவள் நெஞ்சம்.

சந்திரிகாவின் பொருமலையும் விம்மலையும் செவிமடுத்தான் குணசேகரன். அவனுடைய பாலப் பருவத்துநண்பன் ராகவன். ஆனால், இப்போது அவனுடைய மாற்றத்தையும், நிலையையும் ஓரளவுக்குப் புரிந்து கொண்டான். எனவே பிறகு பேசிக்கொள்ளலாம் என்று மௌனமாகத்திரும்பினான்.

அத்தை யசோதையும் மருமகளின் துன்பத்தில் பங்கு பெற்றாள். கண் கலங்கினாள். மகனின் புறக்கணிப்பு அவளுக்கும் பெரும் சோதனையாக இருந்தது. சென்ற நாட்களை நினைத்து நெஞ்சுருகிப் போனாள்.

★ ★ ★

யசோதை ஒரு பணக்காரருக்கு இரண்டாம் தாரமாக வாழ்க்கை பட்டாள். எனினும் ஏழ்மையில் வாடிய யசோதை சொத்து, பத்துகளைப் பார்த்துப் பெருமை யடைந்தாள். அதோடு தன் பொறுப்பு முடிந்ததென்று கண்ணை மூடினார்' அவள் தந்தை. இருந்த ஒரே அண்ணன் அழகேசன் வேலைநிமித்தம் வேறு ஊரில் வசித்தார். அவருக்கு தங்கை யசோதையை இரண்டாம் தாரமாகத் தருவதில் சிறிதும் விருப்பமில்லை. எனினும் தந்தையின் பிடிவாதத்தால் அது நடந்து விட்டது.

பாவம், யசோதையின் பெருமைக்கும் சோதனை ஏற்பட்டது. ராகவன் அப்போது 10 வயதுச் சிறுவன். ஒருநாள் வயல் வரப்புகளைப் பார்த்து விட்டு வண்டியில் திரும்பி வந்து கொண்டிருந்தார், அவன் தந்தை. வண்டி [illegible]

சாய்ந்தது. மண்டையில் பலத்த அடி. உயிர் பிழைத்தார். எனினும் நினைவு மாறிவிட்டது. யசோதையின்வாழ்நாளும்கண்ணீரில்கரைந்தது. சொத்தும், சுகமும் கசந்தன. அண்ணன் அழகேசனேயசோதைக்கு ஆறுதலாக இருந்தார். ஆதரவாகச் சிலகாலங்கள் தங்கினார். நிலம் நீச்சுகளைக் கவனிப்பதிலும், ராகவனைப் பேணி வளர்ப்பதிலும் சிறிது கருத்தைச் செலுத்தினாள் யசோதை. அவளுடைய கணவருக்கு பைத்தியக்கார ஆஸ்பத்திரியே இருப்பிடமாயிற்று. அழகேசன், இந்த அவல நிலை கண்டுகலக்கமுடன் ஊர் திரும்பினார்.

வாழ்க்கையில் வெறுப்போடும், தவிப்போடும் ராகவனை படிப்பில் ஆர்வமிக்க இளைஞனாக வளரச் செய்து விட்டாள், யசோதை. கல்லூரிப் படிப்பிற்கு சென்னை செல்ல விரும்பினான், ராகவன். யசோதைக்கு அண்ணன் மகளை மகனுக்குத் திருமணம் செய்து, வீட்டோடு வைத்துக் கொள்ள வேண்டுமென்பது எண்ணம். அண்ணனின் சொல்லுக்காகவும், மகனின் பிடிவாதத்திற்காகவும் சென்னைக்கு அனுப்பினாள். கண் போல் காத்த மகனைப் பிரிந்திருக்கப் பெரிதும் வருந்தினாள். வீடு வாசலை விட்டுச் செல்லவும் முடியவில்லை. அப்போது தான் எதிர்பாராத பேரிடியான அந்த நிகழ்ச்சி நடந்தது.

அண்ணன் அழகேசனுக்கு விஷ ஜுரம் என்ற செய்திகேட்டுச் சென்றாள் யசோதை. மறு நாளே அண்ணன் மாண்டார், இரண்டு, மூன்று தினங்களிலேயே அண்ணன் மனைவியும் விஷஜுரத்தால் இறந்தாள். இருந்த ஒரே ஆதரவையும் இழந்து கதறினாள் யசோதை. தாயையும், தந்தையையும் ஒருங்கே இழந்த சிறுமி சந்திரிகாவுக்கு யசோதைதான் ஆதரவு. எனவே ஆறுதல் கூறி சந்திரிகாவைத் தன்னுடனே அழைத்து வந்து விட்டாள்.

சந்திரிகா பெற்ற மகளுக்கு மகளாகவும், மருமகளாகவும் நடந்து, அத்தையின் பேரன்பைப்பெற்றாள், யசோதைக்குச் சந்திரிகாவிடம் அன்பும், அரவணைப்பும் பெருகின. இப்படியே 2-3 ஆண்டுகள் ஓடிமறைந்தன. சந்தரிகா இப்போது பருவப் பெண்ணாக, பூரண அழகுடன் பிரகாசித்தாள். ராகவனுக்குப் படிப்பு முடிய வில்லை. இருப்பினும் திருமணத்தை முடித்துவிட வேண்டுமென்றுதீர்மானித்தாள் தாய். ஆனால், ராகவனோ வருடம் பூராவும் ஊருக்கு வரவில்லை. இப்போது கோடை விடுமுறையில்தான் வந்திருந்தான். அதுவும் தாயின்பலவந்தத்தினால். வந்தவன் சந்திரிகாவை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவளாகப் பேசச் சென்றும் பேசவில்லை!

* * *

வெளியே சென்றராகவன் கால் போன போக்கில் நிச்சிந்தையாக நடந்தான். இருட்டும் வரையில் நடந்துகொண்டே இருந்தான். உற்ற நண்பன் குணசேகரனிடமே பேசமனமின்றி வந்தவன், குனிந்த தலை நிமிராமல் நடந்தான். ஊரில் தெரிந்தவர்களெல்லாம் ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள், அவனை. அவனுக்கே தன் போக்கில் வெறுப்புத் தட்டியது.

இரவு 8 மணிக்குமேல் வீடு திரும்பிய மகனைப் பார்த்தபின்பே யசோதைக்கு நல்ல மூச்சு வந்தது. சந்திரிகா, அத்தானின் பார்வையிலே பட அஞ்சியவளாக அறைக்குள் பதுங்கினாள். மௌனமாக சாப்பாட்டை முடித்துக் கொண்டு, வந்து உட்கார்ந்தான் ராகவன். யசோதையும் வேலைகளை முடித்துக்கொண்டு மகன் இருக்குமிடம் வந்தாள். பேச்சுக் கொடுக்க அஞ்சியவளாக நின்றாள். மீண்டும் ராகவன் வெளியே ஓடிப்போய் விடுவானோ என்று பயந்தாள்!

ராகவனுக்கும் தாயின் நிலைமை புரிந்தது. அவனாகவே நிலத்தின் விளைச்சல் விபரங்களைப் பற்றிப் பேசினான். பேச்சோடு பேச்சாக திருமணத்தைப் பற்றியும் கூறினாள் தாய். மௌனமானான் ராகவன். யசோதை கூறினாள்: "ராகவா! உன் தந்தையின் பைத்தியம் இன்று மாறும், நாளைமாறும் என்ற நம்பிக்கையுடன், அமைதியின்றியே வருடங்களை ஓட்டிவிட்டேன். அவருக்குப் பணிபுரிய கல்லுப்போல நான் காத்திருக்க, அவர் அங்கே யார் யார் கையில், எப்படியெல்லாம் தவிக்கிருரோ, நினைத்தால் நெஞ்சு வேகிறது. அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்ததுகூட உனக்காக—உன்மனம் வாடாமல்—இருக்கத்தான். இனிமேல் நீ குடியும், குடித்தனமுமாக இருந்தால் தானே எனக்கு நிம்மதி? சந்திரிகாவுக்கு என்னப்பா குறை? உன்மீது உயிரையே வைத்திருக்கிறாளே" பணிவும் கனிவுமாகக் கூறினாள் யசோதை.

தாயின் முகம் நோக்கினான் தனயன். பின்பு தலைகுனிந்தான்.

"திருமணம் செய்துகொண்டு நானும் பைத்தியமாக வாழுவது தான் உங்களது விருப்பமா? அழுகுப்பேய் சந்திரிகாவுக்காகத்தான் குணசேகரன் வருகிறானே. என்னை வீணாகத் தொந்தரவு செய்யாதீர்கள்." என்று படபடப்பாகப் பேசினான் ராகவன். துடி துடித்துப் போனாள் யசோதை.

"ராகவா! என் முகத்தைப் பார்த்துப் பேசு. மாற்றில்லாத பசும் பொன் அவள். உன் பால்ய நண்பன் என்பதனாலேயே குணசேகரனிடம் பேசுகிறாள். அவள் பேசுவதெல்லாம் உன்னைப்பற்றியேதான் இருக்கும். தவறாக நினைக்காதே! மனதாரக் கூறுகிறேன்: அவள் களங்கமில்லாத கன்னி. குணசேகரனுக்குக்கூட நாளை மறுநாள் திருமணமடா; அதற்குத்தான் அழைக்க வந்தான். நீ அவனையும் விரட்டிவிட்டாய்." என்று ஆதங்கத்தோடு கூறினாள் யசோதை. தாயின் வார்த்தைகள் அவன் மனதைத் தொடவில்லை.

(11-ம் பக்கம் பார்க்க)






[முன் இதழ் தொடர்ச்சி]

தட்டி விட்டான் பாராசாரியை! மின்னல் வேகத்தில் மறைந்துவிட்டது பாராசாரி! கூடியிருந்தோர் அனைவருமே ஆச்சரியத்தால் அறையுண்டு கிடந்தனர், மகமத்கான் மட்டில் தைரியமாய் நின்று கொண்டிருந்தான்.

நெடுநேரத்திற்குப் பிறகு பாராசாரி திரும்பியது. தேசிங்கு அப்போதும் அதன்மீது இருந்தான். மக்கள் பலத்த ஆரவாரம் செய்து வரவேற்றனர். பாராசாரி தேசிங்கிடம் பணிந்துவிட்டது; படு சாதாரண புரவியாகிவிட்டது!

தேசிங்கின் பலமான கால் பிடிகளுக்கிடையில் சிக்குண்டிருந்த அதன் வயிறு ஒடுங்கிப் போயிருந்தது! அவனின் இரும்புப் பிடிக்கிலக்கான கடிவாளமும், அதனின் வாயிலிருந்து வழிந்த நுரையும் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது! தேசிங்கு சிரித்த முகத்தோடு பாதுஷாவின் எதிரில் பாராசாரியைக் கொண்டு வந்து நிறுத்தினான். பார்த்தான் பாதுஷா. அவமானம், தன் தோல்வியை எண்ணி! மக்களின் வாழ்த்தொலிகளுக்கிடையில் பாராசாரியை விட்டிறங்கினான் தேசிங்கு! மகமத்கான் தன் நண்பனை ஆரத் தழுவிக் கொண்டான். பாதுஷா தன் பீடத்தைவிட்டு இறங்கி வந்தான். கட்டிப் பிடித்துக்கொண்டான் தேசிங்கை! புகழ்ந்தான் வாயார!

## 7. வெற்றி முழக்கம்.

மக்களின் ஆரவார ஒலி சிறை மதில்களுக்குள்ளும் எட்டியது! களிபேருவகை எய்தினர் தேரணிசிங்கும், தரணிசிங்கும்! சிறிது நேரத்திற்கெல்லாம் அவர்கட்கு விடுதலை ஓலைவந்தது! அரச மரியாதைகளோடு புறப்பட்டனர், அரண்மனை நோக்கி. பதுஷாவின் விசேட விருந்தினர்களாகத் தங்கினர்!

தேசிங்கிற்கு உயரிய மரியாதைகள் கொடுத்தான் பாதுஷா. ஆயிரம் குதிரைகள், ஆயிரம் யானைகள்! தேசிங்கின் உபயோகத்திற்காகப் பாராசாரியையே தந்தான்! அவன் நண்பன் மகமத்கானுக்கு, தான் ஏறும் நீல வேணியை அளித்தான்! வைர மாலைகளும், முத்தாரங்களும் ஏராளமாய்த் தந்தான். இதற்கும் மேலாகத் தன் மகள் ராணியை தேசிங்கிற்கு மணம் செய்துதரவும் இசைந்தான்! ஆற்காடு [illegible] பகுதிப்பணம் கா[illegible] என்றும் கூறினான்! தனியுரிமை தந்தான்

அரண்மனையின் விருந்தினனாகத் தேசிங்கு தங்கியிருந்தபோது, பாதுஷா மகள் ராணியை சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றான்! அழகுச் சிலையென காந்த ஒளியோடு விளங்கும் அத் தங்கப்பதுமையின் அங்க அசைவுகளைக் கண்டதும் உணர்ச்சி வெள்ளத்தால் உந்தப்பட்டு, அவளையே மணப்பதென்று உறுதி பூண்டான். காரிருளைக் கிழிக்கும் மின்னலினும் வேகமாக, காங்கமில்லர் வாலிபர்களின் நெஞ்சில் காதற் கதிர்கள் பாய்கின்றனபோலும்! இல்லையேல் ராணியும் தேசிங்கை மணக்க விரும்புவாளா?

ஆனால், பாதுஷா மகளைத் தன் மைந்தனுக்கு மணம் முடிக்க தேரணிசிங்கிற்கு விருப்பமில்லை. எனினும் அவனை எதிர்க்க இயலாத துர்பாக்ய நிலையில் சம்மதித்தான்!

செஞ்சி சென்று, திருமண நாள் நிச்சயித்துப் பிறகு வந்து ராணியை அழைத்துப்போய் மணமுடிப்பதாகக் கூறி விடைபெற்றான் பாதுஷாவிடம்.

வெற்றி முழக்கங்களோடு டில்லியை விட்டு புறப்பட்டான் தேசிங்கு.

## 8. கலப்புக்கு எதிர்ப்பு.

மகனின் வெற்றியையும் வருகையையும் கேள்வியுற்றுள் ராம்பாயி! மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினுள்!... ஆடம்பரமான வரவேற்பிற்கு ஏற்பாடு செய்யும்படி அமைச்சருக்கு ஆணையிட்டாள். வரவேற்புகள் ஏற்பாடாயின. வெற்றிக்கோலம் பூண்டு விளங்கியது செஞ்சி! வீதிகள் தோறும் மாவிலை தோரணங்களும், மாடி வீடுகள் தோறும் மலர்தூவி மகிழ்விக்கும் மங்கையர்குல திலகங்களும், திருவிழாவைப்போல் திரளான மக்கள் கூட்டத்தின் நடமாட்டங்களும், கண்கொள்ளாக் காட்சிகளாக இருந்தன! தன் தலைநகர் நுழைந்தான் தேசிங்கு! களிப்பு நீர் கன்னங்களில் வழிய, அகத்தில் கூத்தாடும் ஆனந்தம் முகத்தில் பிரதிபலிக்க, மஞ்சள ... யும் வரவேற்றுள் ராம்பாயி! வாத்திய முழக்கங்களும் வாழ்த்து ஒலிகளும் கோட்டையின் மதிற் சுவர்களில் பட்டு எதிரொலித்தவண்ணமிருந்தன! பாராசாரிமீதேறி பார்ப்பவர்களுக்கெல்லாம் தன் புன்னகையை வீசியவாறே பவனி வந்தான் தேசிங்கு!

தேரணிசிங்கும் ராம்பாயும் சேர்ந்தனர் ... ன்ன வரம ... ந்து கிடந்தனர்.

நாட்கள் நகர்ந்தன. தேசிங்கின் நெஞ்சில் ராணியின் நினைவுகள் நீங்கவில்லை' மைந்தன் மனதை அறிய தேரணிசிங்கும் ராம்பாயும் முயன்றனர். அறிந்தனர் அவன் நெஞ்சை. துடித்தனர் இருவரும்!

"பாதுஷா படை பலவற்றை வைத்திருக்கலாம்; கொடைகள் பல நமக்குத் தந்திருக்கலாம்...இருப்பினும் அவன் ஒரு முகலாயன்" என்று இதமாய்ச் சொல்லி, தேசிங்கு மனதைத் திருத்த முயன்றனர்! முகலாய வழியில் வந்த பெண்ணை மகனுக்கு மணம் முடிப்பதை ஏற்கவில்லை, அவர்கள். ஆனுல், தேசிங்கு திடமான குரலிலே தன் தீர்ப்பைச் சொல்லி விட்டான்.

'ராணியை மணந்து கொள்வதாக பாதுஷாவிடம் சொல்லியதை நிறைவேற்ற நான் விரும்புவதற்குக் காரணம், பாதுஷாவின் படைபலத்திற்குப் பயந்தோ, அன்றி அவன் கொடுத்த கொடைகளில் மயங்கியோ அல்ல. கொடுத்த வாக்கைக் காக்க வேண்டும் என்பதற்காகத்தான்!"

"வாக்குத்தந்தது நான்தானே?"

"பாதுஷாவிடம் வாக்குத்தந்தது தாங்கள்! ஆனுல், பாவையவளிடம் வாக்குக் கொடுத்தது நான்"

"ஹா!...நீயா...? அவளிடமா?"

"ஆம்...பாதுஷாவின் பளிங்கு மாளிகையிலே தங்கப் பதுமையைக் கண்டேன்! தென்றலினும் மெல்லிய நடைபயிலும் பேடை அவள், புயலினும் வேகமாய்ப் புகுந்தாள் என் நெஞ்சில்! சுழற் கண்ணியவளின் காதலுக்கு நான் இறையாகினேன்"

"காதல்! ஒரு முகலாயப் பெண்மீதா?"

"தந்தையே! தங்கள் கண்களுக்கு மலைபோல் தெரியும் 'மதம்' என் கண்களுக்கு பாழ்மடுவாகத் தெரிகிறது! அவளுக்குக் கொடுத்த வாக்கை என்னுல் மீற முடியாது. சொல்லைக் காக்க இயலாதவன் கையில் சிக்கிடும் செங்கோலுக்கும், கள்ளன் கையில் கிடைக்கும் கன்னக்கோலுக்கும் என்ன வேற்றுமை? வாக்கைக் கொன்று வேந்தனுக இருப்பதைவிட வாக்கைக்காத்து வெறும் மனிதனுகிவிடுவது மேல்!"

தேசிங்கின் தீர்ப்பு தாய் தந்தையர்க்கு திகைப்பையூட்டியது. இந்து சிங்கு வம்சத்தில் முகலாயக்கலப்பு —தேரணி சிங்கால் அனுமதிக்க முடியவில்லை! அவன் உடலில் ஊறியிருந்த நோய் வெளிக்கிளம்பியது! ஆனுல், அதற்குள் அவன் அருமை மனைவி ராம்பாயி மரணத்தின் கோட்டை மிதித்துவிட்டாள்! "நோயைப் போக்கும் மூலிகைகள், என்றுயினும் ஓர் நாள் உயிரைப் போக்கி விடுகிறதே!" ராம்பாயி மாண்டாள்! தேசிங்கின் கண்ணீரால் குளிப்பாட்டப் பட்டு, தேரணி சிங்கின் கரங்களால் தீக்கிரையாக்கப் பட்டாள்!

மனைவியின் மரணம், தேரணிசிங் பிணியின் தூண்டுகோலாகியது. சின்னுளில், மரணம் அவனையும் அணைத்தது; நெருப்புக்கு உணவானுன்.

## 9. மதமா? வாழ்வா?

தாய் தந்தையர் மரணத்தில் மனமுடைந்த தேசிங்கின் நிலை சீர்பட ஆண்டு ஒன்றுகியது! சிறப்பா தரணிசிங்கின் துணையோடு நாட்டையாண்டு

வந்தான்! ஆயினும், ராணி அவன் நெஞ்சில் நீங்கா நிலவாக நின்றிருந்தாள்! இந்த வேளையில் இந்து மதத்தின் குரு ஒருவரின் நட்பு, தேசிங்கிற்குக் கிடைத்தது. அவரின் தொடர்பால் தேசிங்கு, உறங்கி எழாத அரங்கன் பக்தனானான்!

ஓர் நாள்; டெல்லி பாதுஷாவிடமிருந்து விசேடத் தூதன் தேசிங்கின் திருமணம்பற்றி விசாரிக்க வந்தான்! இசைந்தான் தேசிங்கு—தன் சிற்றப்பன் தரணிசிங்கை அனுப்பி ராணியை அழைத்துவரச் சொன்னான்! பாதுஷாவின் பரிவாரங்கள் புடைசூழ ராணி செஞ்சிவந்து சேர்ந்தாள்! திருமண ஏற்பாடுகள் துவங்கின துரிதமாக—முடிந்தன மங்களமாக!

சூதும் சூழ்ச்சியும் பிறந்ததே அரண்மனையில் தான் போலும்! மதப் போர்வையிலே நடமாடுபவர்கள், மதயானையினும் மூர்க்கர்கள்! ராணி—தேசிங்கு உறவை, வாளின் கூர்மைக்குப் பயந்து ஆமோதித்தாலும்,மதத்தின் புனிதத் தன்மையை காக்கவென்று மதோன்மத்தர்களின் அந்தரங்க மாநாடு கூடியது! தேசிங்கின் காதற்பாதையில் மதம் தவிடு பொடியாகியதைக் கண்டவர். மதத்தின் மேன்மையை மீண்டும் அவனிடம் எடுத்துக்கூறிட தைரியம்பெற்றனரில்லை. வேதனையில் வெந்தனர். வேறுமுறை தேடினர்! குதர்க்க வாதிகளுக்கு குறுக்குவழி சுலபத்தில் கிடைக்கும் போலும் "தேசிங்கு ஓராண்டு காலம் மனைவியின் முகத்தைப் பார்க்கக் கூடாது! பார்த்தால் பேராபத்து சம்பவிக்கும்"—என்று தேசிங்கிற்கு உபதேசிக்க முடிவுகட்டினர்! மேலும் அந்த ஓராண்டுக் காலமும் அரங்கனைப் பஜித்தால் 'தோஷம்' தொலையும்" என்றும் எடுத்துச் சொல்ல குருவைத் தயாரித்தனர்! தேசிங்கின் கவனம், பக்தியில் ஈடுபட்டால் 'ராணி'யைப் பக்குவமாகப் பரமண்டலம் அனுப்பிவிடலாம் என்று முடிவு கொண்டனர்.

அணுகினர் அரசனை! வெள்ளை உள்ளம் படைத்த வேந்தன் தேசிங்கு, கள்ள உள்ளம் கொண்டவர்களின் சொல்லைக் கேட்டான். திடுக்கிட்டான் முதலில் மதத் தரகர்களின் மந்திரமொழி கேட்டதும் தயங்கினான்! இறுதியாய் மோசக்காரர்களின் மயக்கு வார்த்தைக்கு ஒப்பம் தந்தான்!

தேசிங்கு பக்தியில் ஆழ்ந்தான்! ராணி கவலையில் வீழ்ந்தாள்!

• காதலன் வராமைக்குக் காரணம் கேட்டாள். கலங்கி விட்டாள்! தங்கள் காதல் வாழ்விற்குக் களங்கம் நேராதிருக்கத்தான் இந்த இடைக்காலப் பிரிவினை என்று மணாளன் சொல்லியனுப்பிய சமாதானம், அவளைத் திருப்திப்படுத்தவில்லை. வாலிபத்தின் எழுச்சிகள் வார்த்தைகளால் எப்படி அடங்கும்? கண்ணீர் விட்டாள்! டெல்லியைவிட்டு செஞ்சி வந்தாள்...விரதமிருக்க அல்ல...விரகதாப வேட்கையைத் தணிக்க! பாராசாரியை அடக்கிய பராக்கிரம சாலியை மணக்க அவள் இசைந்ததற்குக் காரணம், அவன் பக்தியைக் கண்டல்ல; சக்தியைக் கண்டு! எனினும் எண்ணத்தில் மண்விழுந்தது.

இந்நிலையில் பத்துமாதங்கள் பறந்தன. கண்ணீரும் கம்பலையுமாய் 'ராணி'யிருக்கும் சேதி கேள்விப்பட்டான், ஆற்காட்டு நவாப் சைதுல்லா! தன் இனப் பெண்ணும் டில்லி பாதுஷா மகளுமான ராணியோடு வாழ்க்கை நடத்தாதிருப்பதால் கோபங்கொண்டான் தேசிங்கிடம் பகுதிப் பணம் வசூலிப்பதென்று முடிவு கொண்டான்! ஏவினான் தோன்றல் மல்லை!

தேசிங்கின் மெய்க்காப்பாளனும், அவன் படையின் தளபதியுமான மகமத்கானின் திருமணம் வழுதாவூரில் நடக்க ஏற்பாடாகியது! தன் தோழனுக்கு வாழ்த்துக்கள் கூறி வழியனுப்பினான் தேசிங்கு.

## 10. நவாபின் படையெடுப்பு

தூதன் தோன்றல் மல்லின் வருகையைக் கேள்வியுற்றான் தரணிசிங்கு! ஓடினான் அரங்கன் கோயில்! தேசிங்கின் தியானத்தைக் கலைத்துக் கூறினான்: ஆற்காட்டு நவாபின் ஆளைப்பற்றி, அரசு அவைக்குத் தோன்றல் மல்லை வரச்சொல்லிவிட்டு, அரங்கன் ஆலயத்திலிருந்து அரண்மனைக்குக் கிளம்பினான் தேசிங்கு!

கூடிற்று அரசவை. பாயும் வெள்ளம்போல் மாடியை விட்டு அவைக்கு ஓடிவந்தான், தேசிங்கு! அழைத்தான் தோன்றல்மல்லை. தோன்றல்மல் வந்தான். பார்த்தான் தேசிங்கை. தேசிங்கின் தோற்றமே அவனைக் கோழையாக்கியது. கைகால்கள் நடுங்க அவன்முன் நின்றான்...வளைந்தான்...வணங்கினான்! ஆனால், வார்த்தை அவன்வாயை விட்டு வெளிவரவில்லை.

(வளரும்)

கலீல் கிப்ரானின்

# வசை பாடுவோனே!

சகதீசன், ஆ. மா.

என்னை எப்போதும் திட்டுவோனே! அகன்று விடு. உன் உள்ளுணர்வை உன் காதலியுடன் சேர்த்து ஒன்றாக்குவதற்காக என்னை விட்டகன்று விடு. தாயின் அன்புடன் உன் உள்ளத்தை ஒன்றாக்கி, உன் இதயத்தை தாய்த்தன்மையுடன் இணைக்கும் காரணத்திற்காக என்னை விட்டு விலகிச்செல், நான் என் தேய்பிறை உள்ளத்துடன் உறவாட என்னை விட்டு தூரப்போ!

நான் கனவுக் கடலிலே மிதந்து செல்லுகின்றேன்! நீ நாளை வரை காத்துக்கொண்டிரு. 'நாளை' என்னை எதுவேண்டுமானாலும் செய்யச் சுதந்திரம் பெற்றது!

உன் கண்டன நிழல், என் உள்ளுணர்வுடன் என்னை எதிர்ப்புச் சமாதிக்கு வழிநடத்திச் செல்கின்றது, அப்படி நடந்து சென்று குளிர்ந்து இறுகிய இம் மண்ணையே காட்டுகின்றது. என் கடுகு உள்ளத்தை அதன் சிறைக் கூடத்தினின்று விடுவித்து, என் உள்ளங் கைமேல் நிறுத்தி, அவ்வுள்ளத்தின் ஆழத்தைத் துருவி அறிந்து அதன் இரகசியத்தை வெளிப்படுத்த வேண்டுவதே என் ஆவல்.

உன் கூர் அம்புகளை அதன் மேல் எய்துவிடாதே ஏனெனில், அன்பும் அழகும் கொண்டு அதை உருவாக்கிய அந்த இறைவன் நம்பிக்கை பலிபீடத்திலே, அதன் இரகசிய இரத்தத்தைத் தியாகத்தின் சின்னமாய் கொட்டுவதற்கு முன்பு, அது பயந்து பறந்து மறைந்துவிடப் போகின்றது

ஆதவன் உதிக்க இன்பக் குயில் கூவுகின்றது. மனோரஞ்சிதம் தன் மணத்தை பரந்த வெளியெல்லாம் வாரி இறைக்கின்றது, நான் என்னைத் தவற்றின் மெத்தைத் தூக்கத்தினின்றும் விடுவித்துக்கொள்ள விரும்புகின்றேன். வசைசவோனே! என்னைத் தடுத்து நிறுத்திவிடாதே.

சீறிடும் சிங்கம், ஆடிடும் பாம்பு, பாயும் புலி இவற்றின் பெயரைக்கூறி என்னை பயப்படுத்தாதே! ஏனெனில் என் உள்ளம் மண்ணுலக பயத்தையே உணராதது. கெடுதி வருவதற்கு முன்னே அளிக்கப்படும் கெடுதி எச்சரிக்கையை என் உள்ளம் வரவேற்காது.

வசை பாடுவோனே! எனக்குப் புத்திகூறாதே! ஏனெனில் தொடர்ந்து வரும் துன்பங்கள் என் உள்ளத்தைத் திறக்க, கண்ணீர் என் கண்களைத் தூய்மைப் படுத்த, தவறுகள் என் இதயத்தின் மொழியைக் கற்பிக்கலாயின.

என்னை நாடு கடத்திவிடாதே! ஏன்? உள்ளுணர்வே என் நீதிபதி நான் கள்ளம், கபடு அற்றவன். ஆகவே, என் ஒழுங்கு அறிந்து காப்பாற்றுவான், நான் குற்றவாளியானால் என் வாழ்க்கையைப் பறித்து விடுவான்

காதல் ஊர்வலம் நகர, அழகுக் கொடிவனில் படபடக்க, இளமை இன்ப பேரிகை கொட்டுகின்றது. வசைசவோனே, நான் குற்றத்தை எண்ணி அல்லல் உறுவதைக் கலைத்துவிடாதே. மல்லிகையும் முல்லையும் இனிய மணத்தை வாரி இறைக்கும் வழியே செல்லும் என்னை விட்டுவிடு.

பணப்பெருமை நிறைந்த கதைகளை நீ என்னிடம் சொல்லாதே.

சட்டத்தையும் சாம்ராஜ்யத்தைப் பற்றியும் என்னிடம் பேசாதே. ஏனெனில் இப்பரந்த பாருலகே என் பிறப்பிடம். எல்லா மக்களினமும் என் உடன் பிறந்தோர்.

வசை பாடுவோனே! என்னை விட்டகன்றுவிடு. தவறை உணர்ந்து வருந்தும் ஒளியை என்னிடமிருந்து கவர்ந்து, தேவையற்ற வார்த்தைகளை விட்டுச் செல்கின்றாய் நீ! போ! போய்விடு!

தமிழ் இலக்கியத்தின் தலைமை நூலாகிய திருக்குறளை ஓதியுணர்ந்தாலல்லது, தமிழறிந்தவன் என்று எவனும் கூறிக்கொள்ள முடியாது என்பதில் ஐயமில்லை.

—பிரெடெரிக் பின்காட்

(6-பக்கத் தொடர்ச்சி)

"அம்மா! உங்களைப் போலவே எல்லோரையும் நினைக்கிறீர்கள்—நம்புகிறீர்கள். இந்தக் காலத்துப் பெண்கள் மோசக்காரிகள். நய வஞ்சகிகள் என்பதை நான் அறிவேன். நான் இங்கிருக்க வேண்டுமாஞல் திருமணப் பேச்சை இனிமேல் எடுக்காதீர்கள்" உறுதியோடு கூறிஞன் ராகவன்.

சந்திரிகா வந்தாள் படபடப்போடு. "அத்தான்! என் மீது அபாண்டமாகப் பழிசுமத்தாதீர்கள். தங்கள் அன்புக்காகவே பிறந்தவள் நான். அன்புக்காகவே மடிவேன். என்மீதா சந்தேகம்? அத்தான்......" ஆவேசத்தோடு மேலும் பேச முனைந்த சந்திரிகா, அழுகை பீறிட்டுக் கிளம்ப, திணறிக் கொண்டு நின்ருள்.

நிலைமை எசகுபிசகாக மாறுவதை உணர்ந்த யசோதை, மருமகளை அரவணைத்து மொதுவாக உள்ளே அழைத்துச் சென்ருள். "காலம் மாறும்; உண்மை வெல்லும்." என்று கூறி, ஆறுதல் அளித்தாள் சந்திரிகாவுக்கு.

* * *

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. இந்தப் பத்து நாட்களும் யசோதைஎதிர்பார்த்த ஒளியின்றி இருளாகவே ஓடிவிட்டன. மூவருடைய உள்ளத்திலும் மூன்றுவித நினைவுகள் சுழன்றடித்தன. வீட்டினுள் புயல் சூழ்ந்தது போலிருந்தது!

பத்தாம்நாள் காலை, எதிர்பாராது தெருவில் ஒரு கார் வந்து நின்றது. குணசேகரனும் அவன் மனைவி திலகவதியும் இறங்கினர்! 'அத்தை! அத்தை!' என்று உற்சாகத்தோடு அழைத்தவண்ணம் வீட்டிற்குள் வந்தான் குணசேகரன். "வாப்பா! வா! இத்தனைநாள் ஏன் வரவேயில்லை? உன் மனைவியையும் அழைத்து வந்திருக்கிருயா? வாம்மா! உட்கார்!" என்று வரவேற்ருள். யசோதை. ராகவன் திருமணத்திற்குப் போகாவிட்டாலும் அவஞக வந்திருப்பதில் பெருமகிழ்ச்சி அவளுக்கு.

"திருமணத்தன்றே மாமா எங்களை அழைத்துச் சென்று விட்டார். இன்றுதான் ஊருக்கு வந்தேன். திருமணத்திற்கு முன்பும் அவனைப் பார்க்க முடியாமல்போய் விட்டது. எங்கே ராகவனைக் காணேம்? சந்திரிகா எங்கே?" என்ற வினவியவண்ணம் உட்கார்ந்தான். "ராகவன்...இங்கேதான்...இருக்கிருன்." என்று தயங்கித் தயங்கிப் பேசிஞள், யசோதை.

"நாங்கள் வருவோமென்றுஎதிர்பார்த்திருக்கமாட்டான். திலகா! வா நாமே போய்ப் பார்க்கலாம்." என்ற வண்ணம் ராகவனின் அறைக்கு நடந்தான். யசோதையும் திகிலோடு அவர்களைத் தொடர்ந்தாள்.

நாவல் படிப்பதில் ஆழ்ந்திருந்த ராகவன் சந்தடிகேட்டுத் தலை நிமிர்ந்தான். திலகவதியைப் பார்த்ததும் திடுக்கிட்டான்! ஏனே, அவன் முகம் குரூரமாக மாறியது. கொந்தளிப்பால்—கோபத்தால் கண்கள் சிவப்பேறின!

"குணசேகரா! போயும், போயும் இந்த சாகசக்காரிதாஞ உனக்குக் கிடைத்தாள்? நீ பட்டிக்காட்டிலேயே இருந்ததால் ஏமாந்து விட்டாய். கொள்ளியைஎடுத்துத் தலையைச் சொறிந்து கொண்டாயே, மூட்டாள்!" என்று ஆத்திரத்தோடு பேசிஞன் ராகவன். கடகடவென்று சிரித்தான் குணசேகரன். பின்பு கூறிஞன்:

"நீ தான் ஏமாந்துவிட்டாய். நான் கல்லூரிப் படிப்பு படிக்காவிட்டாலும் பண்பறிந்து நடந்து கொண்டேன். நீ படிக்கப்போய் பதருஞய்! கண்டபெண்களைப் பார்த்துக் காதலித்தாய். ஆஞல், உனக்காக இருக்கும் பெண்மீது மட்டும் அவதூறு சுமத்துகிருய், நல்லவனைப்போல! நீ திலகவதியிடம் காதல் கொண்டாய். இவள் எனது ஒன்றுவிட்ட மாமன் மகள் என்பது உனக்குத் தெரியாது. ஆஞல், இவளுக்கு உன்னைப்பற்றித் தெரியும். உனக்காக சந்திரிகா காத்திருப்பதும் தெரியும். எனவே உனக்கொரு படிப்பினையாக—அறிவுறுத்தலாக நடந்து கொண்டாள்திலகவதி. நீ இவளைச் சுற்றி வருவதையும், காதல்மொழி பேசுவதையும் சகித்துக் கொண்டிருந்தாள். இவளிடம் நீ உயிரையே விட்டாய். ஊரையேமறந்தாய். தன் அண்ணனேடு காரில் செல்லுவதும், கைகோர்த்துக்கொண்டு கடற்கரையில் உலாவுவதுமாக உன்பார்வையில்பட்டு ஆத்திரத்தைக் கிளறிஞள். அதஞல்தான் இந்த விடுமுறைக்காவது ஊருக்கு வந்தாய். இதுதானே நடந்தது? ராகவா! ஏமாந்தது யாரென்று சொல்!" என்ருன் குணசேகரன்.

யசோதை. மகனின் மனக்குழப்பத்தைஉணர்ந்துவிட்டாள். "படிக்கப்போன இடத்தில் இவ்வளவு பாதகம் நடந்துவிட்டதா?" என்று வியந்தாள். "இராகவன்ஒரு காதல் பைத்தியம்" என்ருள் திலகவதி. ஆச்சரியத்தாலும், அவமானத்தாலும் குன்றிப்போஞன் குற்றமுள்ள ராகவன். "அம்மா இந்தக்காலத்து ஆண்பிள்ளைகளையே நம்பக் கூடாது. உங்கள் வீட்டில் நடந்ததெல்லாம் எனக்குத் தெரியும். இவருடைய புல்லறிவாண்மை சந்திரிகாவையும் குற்றவாளியாக்கி விட்டது. உங்கள் மகனுடைய நன்மைக்காகத்தான் நான் அப்படியெல்லாம் நடித்தேன். குற்றமாயின்மன்னித்துவிடுங்கள்" என்ருள் திலகவதி. "மகராசியாக வாழவேண்டும் நீ" என்ருள் யசோதை.

"சந்திரிகா!" என்றழைத்த குணசேகரனின் குரல்கேட்டு ஓடி வந்தாள் சந்திரிகா. கள்ளமற்ற அக்கன்னியின் கரத்தையும், ராகவனின் கரத்தையும் இணைத்து வைத்தாள் திலகவதி. பேதைப் பெண் சந்திரிகா பூரிப்போடு புன்னகைபுரிந்தாள். ராகவனின் குற்றமுள்ளநெஞ்சுகுறுகுறுத்தது. எனினும், அதிலே புதியதோர் இன்ப வாதனையையும் பொங்கிப் பெருகவே செய்தது! ●

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

கலம்பு வியாபாரத்தையும் அவன் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதியச் செய்கின்றது. அங்கே முக்கியத்துவம் கணக்கிற்கேயாதலால், அதில் கூறப்பட்டுள்ள செய்தியைப் பற்றிய ஆராய்ச்சி அங்கு எழுவதில்லை. எனினும் அச் செய்தியை உள்ளம் சரியானதாக ஏற்றுக்கொண்டே கணக்கில் மூழ்குகிறது

இவ்வாறாக, கசப்பை இனிப்பிலே கலந்து ஊட்டுவதுபோல மூடக் கொள்கைகளை உயர்ந்த கொள்கைகளோடு கலந்து (சிலர்) பரப்புவதுபோல, இழிவான ஒன்றைக் கணக்கில் கலந்து ஊட்டுகின்றார்கள் கல்வித்துறையினர். இப்படிக் கணக்குகளைப் படித்துப் பழகிவிட்ட மாணவன், சமூகத்தில் இச் செயல்கள் நடைபெறுவதைக் காணும்போது வியப்படைவதில்லை. ஏனெனில் அது தவறு என்று அவன் கற்றபோது சொல்லிக் கொடுக்கவில்லை. மாறாக, அவன் கணக்குப் படித்து மூளையை 'தீட்டி'க் கொள்ள அதுவே ஆதாரமாக நின்று துணைபுரிந்திருக்கிறது! இளம் உள்ளத்தில் சாதாரணமானதாகவும், இயல்பானதாகவும் நிலை பெற்று விட்ட இச் செய்தி அவன் மனத்தில் கசப்பையோ கொதிப்பையோ ஏற்படுத்த முடியாது.

மூளையைக் கூர்மைப்படுத்தி அறிவை வளர்க்கின்ற கணக்குப் பாடம், சமூக சூழல்களைக் கண்டு பொங்கியெழ முடியாத 'அப்பாவி'களாக்கி விடுகிறது மாணவர்களை. இதுபோலவே பாலில் தண்ணீர் ஊற்றுவது, தொடர்வட்டி வாங்குவது, நல்ல பழத்தையும் அழுகிய பழத்தையும் விற்பது போன்ற செய்திகளெல்லாம் படித்தவனின் உள்ளத்தில் தவறானவைகளாகப் படுவதில்லை. எனவே படித்தவன் ஆமைபோல அடங்கிக் கிடக்கிறான். சமூகக் கொடுமைகளும், இழிந்த செயல்களும் அவனுக்குச் சாதாரணமாகவே தோன்றுகின்றன. அவன் அவற்றைப் பின்பற்றத் துணிகிறான்; பின்பற்றுபவனைக் கண்டிக்க முனைவதில்லை.

இப் பெருங்குறை கணக்குப் பாடத்தின் குறையல்ல; அதில் கலந்து ஊட்டப்படும் செய்தியின் குறையே ஆகும். புத்தகம் எழுதுவோரின் அனுபவக் குறைவும், பாடப்புத்தகக் குழுவின் கவனக் குறைவுமே இத்தகைய தவறுகளுக்குக் காரணம், இப்படியே ஒவ்வொரு துறையிலும் குறைகள் மலிந்து மாணவர்களின் உள்ளத்தைக் கெடுத்துவருகின்றன. இவற்றைப் போக்காதவரையில் கல்வியால் நல்ல பயன் ஏற்பட இயலாது. ஆதலால் கல்வித் துறை அறிஞர்கள் மாணவர்களின் அறிவுக்கு உணவாக ஊட்டப்படும் செய்திகளில் கவனஞ் செலுத்த வேண்டும். புறக்கோல ஆடம்பர மாற்றங்கள் உள்ளத்தை வளர்த்து உயர்வுதர மாட்டா என்பதை இந்தப் 'பள்ளிக் கணக்கு"ப் பயிற்று அறிஞர்கள் உணர வேண்டும்.

~—~

நடந்தால் நாடெல்லாம் உறவு; படுத்தால் பாயும் பகை.' —பழமொழி.

## பொன்மொழிகள்

மேலோர் கெடினும், அவரது உயர்ந்த பண்புகள் கெடா.

—லாங் ஃபெல்லோ.

நோயாளிக்கு மருந்துபோல்; நல்லோர் சான்றோருக்குப் பகைவராயினும் விரும்பத்தக்கவர்.

—காளிதாசன்.

தன்னை மதித்தாரை இகழாமை; பின் சிறக்க வாழ்ந்தாலும் முன் நட்டை மறவாமை;பிறரின் நல்வாழ்வுக்கு ஊறு செய்யாமை இம் மூன்றும் புகழுக்கு அடிப்படை.

—திரிகடுகம்.

புதுமை என்பது புரட்சியின் விளைவு; முன்னேற்றத்தின் முதற்படி புரட்சி.

—பாவலர்.

கல்யாணம் என்பது கடைசியாக வந்துசேரும் இடமல்ல; அது ஒரு பிரயாணம்!

—ஜர்னல் ஆப் லிவிங்.

அறிவு தன்மானத்தைத் தோற்றுவிக்கிறது; சிந்தனை அதை உறுதிப்படுத்துகிறது.

—ரூசோ.

ஆண் ஆண்மையின் அறிகுறி; பெண் அழகின் அறிகுறி! ஆண் வீரத்தின் அறிகுறி; பெண் காதலின் அறிகுறி!

—ஞானி,

நீ உள்ளன்போடு ஒரு பெண்ணைக் காதலித்தாயானால், அவள் ஒருபோழுதும் வயதேறியவளாகக் காணப்பட மாட்டாள்.

—இங்கர்சால்.



# புதிய காலண்டர்.

சகசகாப்தம் (சாலிவாகன சகாப்தம்) 1879 சித்திரை மாத முதல் தேதி (1957 மார்ச் 22) இந்தியாவில் சகவருடக் கணக்குப்படி, இந்திய காலண்டர் முறை அமலுக்கு வந்துவிட்டது. ஏற்கனவே இந்தியாவில் பழக்கத்திலிருந்து வருகிற கிரிகோரியன் காலண்டரும் கூடவே கையாளப்பட்டு வருமாம், இது பழகும்வரை.

இந்தியாவில் சகவருடமானது கி பி 78 வசந்த விஷு தினமுதல் கணக்கிடப்பட்டுவருகிறது கதையும் உண்டு.

இந்தியாவில் சக (சாலிவாகன) சகாப்தம் பிரபலமாகக் கையாளப்பட்டு வருகிறதாம். இந்தியப் பஞ்சாங்கத் தயாரிப்பாளர்கள், இப்போதும அதையே உபயோகித்து கணித்தபின் மற்றமுறைகளுக்குப் பொருத்தமாய் மாற்றிக்கொள்ளுகிறார்கள்

12 மாதங்களுக்கும் புதிய காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. புதுவருடம் எப்போதுமே வசந்தகாலவிஷு தினத்தன்று (வெர்னல் இக்வினகஸ்) மறுதினம் முதல துவங்கும். எனவே புதிய காலண்டர் முறைக்கு கிரிகோரியன் காலண்டர் முறையோடு ஒரு நிரந்தரப் பொருத்தம் இருந்து வருமாம்.

புதிய காலண்டரின் பல்வேறு மாதங்களின் கால-விபரம் வருமாறு:—

சைத்ரம் (30 நாட்கள்) (லீவ் ஆண்டில் 31 நாட்கள்) சாதாரண ஆண்டில மார்ச்சு 22-ந் தேதி ஆரமபமாகிறது.

வைசாகம் (31 நாட்கள்) ஏப்ரல்21-ந்தேதி ஆரம்பமாகிறது.

ஜேஷ்டம (31 நாட்கள்) மே 22-ந் தேதி ஆரமபமாகிறது.

ஆஷாட (31 நாட்கள்) ஜூன் 22-ந் தேதி ஆரமபம்.

சிரவண(31 நாட்கள்)ஜூலை 23-ந் தேதி ஆரம்பம்.

பாத்ர (31 நாட்கள்) ஆகஸ்ட் 23-ந் தேதி ஆரம்பம்.

ஆஸ்வின (30 நாடகள்) செப்டம்பர் 23-ந் தேதி ஆரமபம்.

கார்த்திக (30 நாட்கள்) அக்டோபர் 23-ந் தேதி ஆரம்பம்.

அக்ரஹாயன (30 நாட்கள்) நவம்பர் 22-ந் தேதி ஆரம்பம்.

பௌஷ (30 நாட்கள்) டிசம்பர் 22-ந் தேதி ஆரம்பம்.

மாக (30 நாட்கள்) ஜனவரி 21-ந் தேதி ஆரமபம்.

பல்குன (30 நாட்கள்) பிப்ரவரி 20-ந் தேதி ஆரமபம்.

இந்திய உபகண்டத்தை ஏக இந்தியாவாக நிலைப்படுத்தவென்று இந்திய அரசாங்கம் செய்துவரும் பல முயற்சிகளிலே இந்தக் காலண்டர் கணித மாற்றமும ஒன்றாம்.

கால மாறுதலுக்கேற்ப எண்ணங்களும, ஏற்பாடுகளும் மாறவேண்டும் என்பதில் அக்கறையுள்ளவன்தான் பகுத்தறிவாதியாக இருக்கமுடியும். நன்மையான மாற்றஙகள் எத்துறையிலும தேவையே!

இந்தக் காலண்டர்—பஞ்சாங்க கணித மாற்றம் மாதங்களை மாற்றுகிறது; வழக்கமாகப் பிறக்கும் சித்திரைத் திங்கள் 20 நாட்கள் முந்தியே பிறந்துவிடுகிறது. மற்ற மாதங்களும அவ்வாறே பிறந்துவிடுவதால், தற்போது அமலில் இருக்கும், நல்ல மாதம், கெட்ட மாதம், சூனிய மாதம்; சுக மாதம் என்ற மூட நம்பிக்கைகள்—அதன்மீது நடைபெறும் செயல்முறைகள் தடைபட்டு, உடைபட்டுப் போகின்றன. வரவேற்கிறோம்.

என்றாலும், மாதப் பெயர் மாற்றங்களின் மூலம் வடமொழிக்கு உயிரும்—இந்திக்கு ஆதரவும் தருவது தமிழகத்தைப் பொறுத்தமட்டில் தேவையில்லாத — வெறுக்கத்தக்க செயலாகும்.

தமிழ்நாட்டில் தமிழையே படிக்கத் தெரியாதவர்கள் 100-க்கு 80-பேர் இருக்கும் பொழுது. தமிழ்ப் படிப்புக்கும் தமிழ் மொழியின் ஏற்றத்திற்கும வேண்டியன செய்யாமல், "நயே பைசே" "சைத்ரம், வைசாகம்" போன்ற இந்தி—சமஸ்கிருதச் சொற்களை மக்களின் தலைமீது வலிந்து சுமத்துவது குழப்பத்திற்கு வழிகாட்டுவதாகுமே தவிர, சமுதாய—மொழிவளர்ச்சிக்குப் பயன் நல்குவதாகாது! ●●

### எது சரி?

புதிய தசாம்ச நாணயங்களில் ஒரு ரூபாய்க்குரிய 100. துண்டு நாணயங்களை

**சதம்**

என்றழைப்பதே சரியென்கிறது "தமிழ் நாடு" நாளிதழ்.

**புதுக் காசு**

என்று வெளியிடுகிறது "விடுதலை" நாளிதழ்.

**சல்லிக் காசு**

'என்பது சரியாக இருக்கும் என்கிறோம் நாம்.

**நயா பைசா**

என்கின்றன பல பத்திரிகைகளும்.

**நயே பைசே**

என்கிறது அரசினரின் அறிக்கை.

இவற்றில் எது சரி?

# கேள்விக்கணை

இம்முறை பரிசு பெற்றவர்:
● இரா. கஸ்தூரிரங்கன், மலங்காடு, புத்தூர் அஞ்சல், சேலம் மாவட்டம்.

**சி. மனோகர், லால்குடி.**

*கே: நம்மைப் பார்த்து "கண்ணீர்த்துளி" என்று கூப்பிடுகிறார்களே; அவர்களை "செந்நீர்த்துளி" என்று அழைத்தால் என்ன?*

ப: வேண்டாம் தோழரே! நாய் மனிதனைக் கடித்தால் மனிதன் நாயைக் கடிப்பதில்லையே!

* * *

*கே: ஈ. வே. ரா. பெரியார் தேர்தலில் எவ்வளவு பணம் சேர்த்திருப்பார்?*

ப: சேர்த்த பணம் பல்லாயிரம்; இழந்த குணமோ பல லட்சம் பெறுமானது!

**ஏ. மாணிக்கம், தோளசம்பட்டி.**

*கே: மனிதன் மதுவினால் மயங்குகிறானா? மாதால் மயங்குகிறானா?*

ப: இருவகையில், இரண்டாலும் மயங்குகிறான்.

* * *

*கே: மனிதன் போராடுவது உயிருக்கா? உரிமைக்கா?*

ப: மனிதருள் வீரன் போராடுவது உரிமைக்கு; கோழை போராடுவது உயிருக்கு!

**● இரா. கஸ்தூரிரங்கன், மலங்காடு.**

*கே: நாம் யாரையாவது எதிர்த்து வாதாடினால், "பெருநெருப்பிடம் ஈரம் என்ன செய்யும்" என்கிறார்கள். எரியும் பெருநெருப்பை ஈரம் அணைக்காதா?*

ப: நிச்சயமாக அணைக்கும். தன்னலப் பெருநெருப்பு; தியாகப் பெருமழையின் முன்பு மாண்டு விடும், அறிவின் முன்பு மடமை அழிவதுபோல்.

* * *

*கே: அறிஞர் அண்ணாவின் "ரங்கோன் ராதா"வில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் உடுக்கடித்துப் பேய் ஓட்டுகிறார். அதே உடுக்கை வைத்திருக்கும் ஈஸ்வரன் என்ன செய்கிறார்?*

ப: கழுத்திலே பாம்பணிந்து, தலையிலே பெண் சுமக்கும் காட்டுமிராண்டிக் கடவுள், அந்தத் தெய்வீக உடுக்கையை அடித்து, மனிதர்களின் காமப் பேயை ஓட்டுவதாகப் புராணிகர் புகலுவாரே துணிவாக!

**ஜி. கே. வேலன், சத்திரப்பட்டி.**

*கே: ராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது தி. மு. க. வினரைக் கணக்குத் தீர்த்து விடுகிறேன் என்றாரே; இப்போது அண்ணாவைச் சந்தித்துப் பேசியது ஏன்?*

ப: கணக்கைப் பார்த்திருப்பார். தி. மு. க. வின கொள்கை, நடப்பு கொள்முதல் மிகுந்திருப்பதைக் கண்டிருப்பார்; இது தீர்க்கமுடியாத கணக்கு என்பதை உணர்ந்திருப்பார்; அண்ணாவைப் பார்க்கத் துணிந்திருப்பார்!

* * *

*கே: பத்து ஈ. வே. ராக்கள் வந்தாலும் காங்கிரசை அசைக்க முடியாது என்று சொல்லும் காமராசருக்கு ஈ. வே. ரா. வலியச் சென்று உதவுவானேன்?*

ப: பலசாலியை விரோதியாகக் கருதிக் கொண்டவன், அவனை ஒழிக்க, பரம்பரைப் பகைவன் காலிலும் விழுகின்ற பரிதாபக் கதைதான் இது.

## சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை!

"சேலத்திற்கு மத்திய சர்க்கார் மந்திரிகள் பலதடவை வந்தார்கள். சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்த சகல முயற்சிகளையும் செய்வதாக உறுதியளித்துச் சென்றார்கள். ஆனால், இப்பொழுது சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை கிடையாது என்று அவர்கள் முடிவு செய்வதைக்கண்டு வருந்த வேண்டியுள்ளது. சேலத்தில் கிடைக்கும் இரும்பு தாதுப்பொருள்களை கோவைக்குக் கொண்டு சென்று கோவையில் இரும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம். நெய்வேலியின் இருந்து கோவை அதிக தூரத்தில் இருக்கிறது. எனவே, சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஏற்படும் திட்டத்தை மத்திய சர்க்கார் கைவிடக் கூடாது. சேலம் ஜில்லாவில் இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமாறு மத்திய சர்க்காரை கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு, அகில இந்திய உற்பத்தியாளர் சங்கத்தின், சேலம் மாவட்டக் கிளையின் செயலாளர் தோழர், எஸ். சத்திய நாராயணன் அண்மையில் வெளியிட்டிருக்கும் வேண்டுகோள் அறிக்கையில் கூறுகின்றார்.

அகில இந்தியாவுக்கும் ஒரு சர்க்கார்; அதிகாரம் அனைத்தும் அவர்களிடம்; தமிழ் நாட்டின் தொழிகள்-உற்பத்திகள்—அவர்களின் கடைக்கண் அருள்நோக்கிலேதான் செழிக்கவேண்டும்! என்று மாறப்போகிறது இந்தநிலை? வளம் பெறப் போகிறது சேலம்?



(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி நமது கல்வியில் புகுந்துள்ள ஒரு சிறு குறையைச் சுட்டிக்காண்டு. அது மாணவனை எப்படிக் கோழையாக்குகின்றது என்பதையும் சிறிது ஆராய்வோம். கணக்குப்பாடம் மூளையைக் கூர்மைப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது என்று பலர் சொல்லக் கேட்கிறோம். கணக்குப் படித்தவனின் மூளை நுட்பமாகவும், தீவிரமாகவும் வேலை செய்யும் ஆற்றல் பெறுகிறது என்பதும் பொது நம்பிக்கையாக இருந்து வருகிறது. ஆகையினால் நாம் பள்ளியில் படித்த கணக்குப் பாடத்தையே ஒரு முறை திரும்பிப் பார்ப்போம்.

"***ஒரு எண்ணெய் வியாபாரி இரண்டு தினுசு எண்ணெய்களை, ரூ. 2-8-0 வீதமும், ரூ. 3—0—0 வீதமும் வாங்கி, 3:5 என்ற ரீதியில் கலந்து, வீசை ரூ. 3—6—0 வீதம் விற்றால், எவ்வளவு சதவீதம் லாபம் வரும்?***"

இக் கணக்கு நான்காம் படிவ (IV Form) த்துக்குரிய கணக்குப் புத்தகம் ஒன்றில் இருக்கிறது. இப்புத்தகத்தின் ஆசிரியர்,

"இப்புத்தகம், உயர்தர கலாசாலைகளின் புதிய கல்விமுறையை அனுசரித்தும், இக்காலத்தின் வாழ்க்கை நிலைக்கு உதவும் முறையிலும், எளிய முறையில் வெளியிட்டிருக்கிறது. தற்போதைய கருத்துகளைச் சேர்த்தும் சமுதாய வாழ்க்கை, .... நாட்டுத் தொழில் முதலியவைகளைத் தழுவியும் எழுதப்பட்டுள்ளது"

என்று முன்னுரையில் குறிப்பிட்டுளளார். சென்னைப் பாடபுத்தகக் குழு "இவ்வகுப்புகளில் பாடப் புத்தகமாக வைக்கலாம்" என்று 1954-ஆம் ஆண்டில் (Gazette-dated 19-5-54) ஏற்றுக்கொண்டிருக்கிறது.

மற்றொரு கணக்கு:

"***பவுண்டு ஒன்றுக்கு ரூ 2-12-0 விலையுள்ள ஒருரகப் புகையிலையை, பவுண்டு ஒன்றுக்கு ரூ 2-0-0 விலையுள்ள மற்றொரு ரகப் புகையிலையுடன் எந்த விகிதத்தில் (Proportion) கலந்து வைத்துக்கொண்டு, கலப்பை பவுண்டு ஒன்றுக்கு ரூ. 2—13—0 வீதம் விற்று 25 சதவீதம் லாபம் அடையலாம்?***"

இந்தக் கணக்கு 1950 (October) S. S. L. C. தேர்வில் கேட்கப்பட்டுள்ளது. அதாவது இப்படிக் கணக்குக்களை மாணவர்களுக்குக் கற்பிப்பதிலும், அவைகளை மாணவர்கள் சரியாகப் புரிந்து கொண்டுள்ளார்களா என்பதைக் கவனித்தறிவதிலும் நம் கல்வித்திட்டம் ஊக்கம் காட்டி வருகிறது.

இக் கணக்குகளின் மூலம் மாணவனுக்குக் கற்பிக்கப்படுவது பேறு-இழப்பு (இலாப நட்டம்) க் கணக்குவகை என்பது கல்வித்துறை அறிஞர்களின் எண்ணம்: அது கற்பிக்கப்படுவது என்னவோ, உண்மைதான். ஆனால், ஆசிரியன் விரும்புவதற்கு அப்பால், அவனை அறியாமலே மாணவனின் இதயத்தில் வேறொன்று சென்று குடியேறுகிறது என்பதைக் கற்பிக்கும் ஆசிரியன் நினைப்பதில்லை; அதில் வியப்பிலலை. ஏனென்னில் இதைப் படிக்கும்போது அவன், 'பேறு—இழப்பு' ஒன்றைத்தான் நினைக்கிறான் ஆனால், அறிவுத்துறை முற்றிய பெருமக்கள் அதை உணராதிருப்பது பெருவியப்பாகும்.

இளம் உள்ளம் கணக்கைப் படிக்கும்போது, வெறும் எண்களைமட்டும் வைத்துக் கொண்டு அதைப் புரிந்துகொள்ளுவதில்லை. கணக்கில் வரும் 'உயர்ந்த ரகம்' 'தாழ்ந்த ரகம்' 'கலப்பு' ஆகிய அனைத்தும் சேர்ந்தே அவனுக்குக் கணக்கை விளக்குகின்றன. எனவே, கணக்கு விவகாரம்

[12-ம் பக்கம் பார்க்க]

TEL: Gurucures.
PHONE: 248.

**60 ஆண்டுகள்—3 தலைமுறைகள்**
ஆங்கிலம், தமிழ் மருத்துவ சிறப்பைப் பெற்றது குருமருந்து சாலை.
அதன் 60-க்கு மேற்பட்ட தயாரிப்புகளின் தலையான

**குரு தைலம்.**

**குரு பல்பொடி.**

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,
குருமருந்து சாலை, :: திருச்சிராப்பள்ளி.

இரு குடும்பங்களின் தகராறை மையமாக வைத்து, கிராம சூழ்நிலைகளைக் கொண்டு "மக்களைப்பெற்ற மகராசி"யைப் படமாக்கியுள்ளனர் லக்ஷ்மி பிக்சர்ஸார்.

கதை, வசனத்தை ஏ. பி. நாகராசன் எழுதியிருப்பதாகத் திரையில் காட்டப்படுகிறது.

வந்துபோன சிலபல படங்களின் முக்கிய காட்சிகளை எடுத்து, வெட்டு ஒட்டு வேலைகள் செய்து தொடுத்திருப்பது போல கதையமைப்பு இருக்கிறது. படம் பார்க்கும்போது 'தாய்க்குப்பின் தார''த்தை மாற்றம் செய்து காண்பிக்கப் படுவதாகவே கருதுகின்றோம். இருப்பினும் தந்தி, காலேஜ் படிப்பு ஆகியவைகள் ஏனோ புகுந்துகொண்டன. கதையில் மக்களுக்கு தேவையான கருத்தில்லை; புதுமையில்லை. குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அம்சமுமில்லை. முதல் பல காட்சிகள் சப்பென்றிருக்கின்றன. வேண்டாத சம்பவங்கள் நீட்டி வெளித்து நகர்த்தப்படுகின்றன. இடையிலே எதிர்பார்க்கும் படியான் காட்சிகள் வருகின்றன. கதையின் முடிவு விரசமானது.

தங்கமும் கண்ணனும் தற்கொலை செய்துகொண்டார்கள் என்ற வதந்தி வந்தவுடனேயே திரைக்கதையின் சாயம் வெளுத்து விடுகிறது.

வசனம் சமபவங்களுக்கேற்ப இல்லை ரங்கம்மாள் பேசுவது தஞ்சாவூர் மாவட்டத்தில் பேசும் தமிழ் போன்றது. செங்கோடனுக்கு கொடுக்கப் பட்டிருக்கும வசனங்களோ சென்னிமலை, தாராபுரம், பொள்ளாச்சி போன்ற கொங்குநாட்டு சந்தைக்கடை வார்த்தைகள், மர்யாண்டி 'மதராஸ் ரௌடி' பாணியில் பேசுகிறான். கதை நடப்பதும் அந்த கதாபாத்திரங்கள் வளர்ந்து வாழ்வதும் ஒரே கிராமத்தில்! கதைமுடிவில் அங்கம்மாள் பேசும் வசனங்கள் தாய்க்குப்பின் தாரத்தின் அசல் என்பதை காட்டிக்கொடுத்து விடுகின்றன. நகைச்சுவை, சில இடங்களில் ரசிக்கும்படியாக இருந்தாலும், பயனுள்ள கருத்தாக இல்லை.

## மக்களைப் பெற்ற மகராசி

செங்கோடன்—சிவாஜி கணேசன். பாகம் உணர்ந்து பாராட்டும்படியாக நடித்திருக்கிறார். அவர் கையில் கம்பு கொடுத்து சண்டை செய்யவும் வைத்திருக்கிறார்கள். பானுமதி வழக்கமபோல குறும்புக்காரியாக ரங்கம் உருவில் வந்து போகிறார். பண்ணையார் சங்கலியப்பனாகவரும் வி. கே. ராமசாமி நடிப்பை கவுட்டுகிறார். தெவிட்டுகிறது. பி. கண்ணாம்பா அவர் 'டைப்'பிற்கு ஒருசுற்று குறைந்துதான் நடிக்கிறார். மாயாண்டி—ஆர். சகாதேவன். அவர் சொல்லுவதுபோல நடிப்பிலும் வெட்டு ஒன்று துண்டு ஒன்றுதான்! சமபந்தமும், ஏழுமலையும் நடிக்கிறோம் என்று சொல்லாமல் சொல்லுகின்றனர். சி. டி. ராஜகாந்தம, சந்தானம், எஸ். வி. ராஜகோபால் முதலானோரும் இருக்கின்றனர்!

பாடல்கள்: கல்யாணசுந்தரத்தின் 'மலர்ச்சண்டை' கருத்து நயத்தோடு மிளிர்கின்றன, ஆனல், அதற்கு நடனமாடும் சாமி—சுப்புலட்சுமி, டி. பி. கிருஷ்ணவேணி முதலியவர் களை நன்கு பயன் படுத்திக் கொள்ளவில்லை. மருதகாசியின் 'பொன் விளையும் பூமியடா....' சௌந்தரராசனின் குரலிசைக்கு நன்றாக இருக்கிறது. மற்றவைகள் சுட்டிக்காட்டிச் சொல்லும் தரமல்ல. தஞ்சை ராமையாதாசு[illegible] விட்டால் 'அடி தாராபுரம் தாம்பரம்' என்ற தகரடப்பா பாட்டு படத்தில் ஒலிக்குமா? இசையமைப்பாளர் கே. வி. மகாதேவன் இன்னும் முயன்றிருக்கலாம். எஸ். சி. கிருஷ்ணன், ரத்தினமாலா, கோமளாவையும பாடவைத்திருக்கிறார்கள்.

டைரக்டர் கே. சோமு எவரிடமும் நன்றாக வேலை வாங்கவில்லை, புதுமையாக உபமானங்கள் புகுத்தவேண்டிய இடங்களையும் கவனிக்காமல் விட்டுவிட்டார். எனினும் கடமையைச் செய்துள்ளார்.

ஒளி, ஒலிப்பதிவு ஆகிய கலை அமசங்களில், பிலிம சென்டரில் தயாரிக்கப்பட்ட மற்ற படங்களைவிட சற்று பரவாயில்லை.

மக்களைப் பெற்ற மகராசியின் மூகராசி, நல்ல ரசிகர்களைக் கவரவில்லை.

—க. அண்ணாமலை.

### நடிப்பிசைப் புலவர்.

தி. மு. க. இலட்சியக் கலைஞர், நடிப்பிசைப் புலவர். கே. ஆர். இராமசாமி, சென்ற 22-3-57 ஓங்கோலில் கார்விபத்துக்கு ஆளானார். உடனிருந்த ஒருவர் மாண்டார். டைரெக்டர் காசிலிங்கத்திற்குச் சிறுகாயம். உடம்பினுள் ஊமைக்காயம் பட்டு படுக்கையில் இருக்கிறார் நமது நடிப்பிசைப் புலவர். மிகவும் வருந்துகிறோம்; விரைவில் நலம்பெற்று அவர் தமது கலைப் பணியினை தொடர்ந்து செய்ய வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறோம.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்-1 குமாரசாமிப்பட்டியிலிருந்தும் வெளியிடப்படுகிறது.


# பகுத்தறிவு

திங்கள் இருமுறை. ஆசிரியர்:- ப. கண்ணன்.

மலர் 7 | 15-4-57. ★ விலை 0-2-0 | இதழ் 4




தன்னைப் பிறருக்குப் பராதீனப் படுத்
திக் கொடுக்கிற ஒவ்வொரு மனிதனும், தன்
னைத்தான் பராதீனப் படுத்தலாமேதவிர, தன்
சந்ததியாரைப் பராதீனப் படுத்த முடியாது.
அந்தச் சந்ததியார் சுதந்திரத்துடனேயே பிறக்
கின்றனர். அவர்களுடையசுதந்திரம் அவர்களு
க்கே சொந்தமானது. அவர்களைத்தவிர, வேறு
யாரும்அவர்களுடையசுதந்திரத்தைவிக்கிரயஞ்
செய்யமுடியாது. அவர்கள் தக்க வயதடைவ
தற்கு முன்னர் வரையில் அவர்களுடைய தகப்
பனர் அவர்கள் பெயரால் அவர்களுடைய
பாதுகாப்புக்கும் நன்மைக்கும் உகந்த முறை
யில் ஒப்பந்தம் செய்துகொள்ளலாம். ஆனல், அவர்களை திரும்பப் பெற
முடியாதபடியும், எவ்வித நிபந்தனையின்றியும் பிறருக்கு ஒப்ப
டைத்துவிடக் கூடாது. அப்படி ஒப்படைப்பது இயற்கைக்கு விரோதம்;
ஒரு தகப்பனுக்குரிய உரிமையினின்றும் மீறியதுமாகும். ஆதலின் ஒரு
அரசாங்கம் தர்ம நியாயமான அரசாங்கமாக இருக்கவேண்டு
மானல், அந்த அரசாங்கத்தை ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்
கவோ ஒவ்வொரு தலைமுறையினருக்கும் உரிமை அளிக்க வேண்டும். இந்த
உரிமை ஒவ்வொரு தலைமுறையினருக்கும் இருக்குமானல் அரசாங்கம் எதேச்
சாதிகார அரசாங்கமாயிருக்க முடியாது.

—ரூசோ.

# கல்வித்துறை அறிஞர்கட்கு...2.

புதுமைக் கவிஞர் ஒருவர், "புதுமையைப் புகுத்துவதாக எண்ணிக்கொண்டு நம் இளைஞர் பலர், நமது பண்பாட்டுக்கு ஒவ்வாத முறையில் நாடகங்களையும், கவிதைகளையும், கதைகளையும் எழுதி வருகின்றார்கள்" என்று குறிப்பிட்டார்.

"நீங்களும் உங்கள் போன்ற சிலரும் புதுமைக் கருத்துக்களை இலக்கியத்தில் படைத்து வரவில்லையா? உங்களை யெல்லாம் பின்பற்றித் தானே இளைஞர்கள் இலக்கியம் படைக்கிறார்கள்!" என்று கேட்ட போது.

"புதுமை என்பது பழமையில் முகிழ்த்ததாக—பழமை என்னும் செடியின் வளத்தை ஏற்று மலரும் நன் மலராக இருக்க வேண்டுமே தவிர, நமக்கும் நம் நாட்டின் அடிப்படை இயல்புகளுக்கும் எட்டாத கருத்துக்களும், நிகழ்ச்சிகளுமாக இருக்கக் கூடாது" என்று அவர் பதில் தந்தார்.

புதிய இலக்கியப் பரம்பரை ஒன்று தமிழகத்தில் புயலெனப் பரவிவருவதும், இதன் போக்கில் பெரும்பகுதி விரும்பத் தகாததாக இருக்கிறது என்பதும்உண்மையே, அதுமட்டுமல்லாமல், இப்போது பட்டம் பெற்றுவரும் இளம் பட்டதாரிகளும், பட்டம்பெற இருக்கும் புதுமாணவரும் இப்புதிய இலக்கியப் பரம்பரையின் போக்கிலேயே வளர்ந்து வருகின்றனர்.

இப்போது வருவோரும் இந்த நாட்டின் எதிர்காலக் குடிகளுமாகிய இவர்கள் நமது பண்பைவிட்டு நாளுக்கு நாள் ஓடிக்கொண்டிருப்பது ஏன்? நமது இலக்கியங்களின் மேல் அவர்கள் கொண்டுள்ள வெறுப்பும், அவற்றை அவர்கள் ஊன்றிப் பயிலாததுமே காரணம் என்று சொல்லலாம்.

தமிழ்நாட்டுத் தமிழ் மாணவன் தமிழ் இலக்கியத்தைப்புறக்கணிக்கிறான்? தமிழ் ('தமிழ்' என்னும் சொல்லுக்கே 'இனிமை' என்னும் பொருள் இருந்தும்)இலக்கியத்தை

## சாலை-இளந்திரையன்.

வெறுக்கிறான்? என்று சிலர் கேட்கலாம். பாவம்; கல்லூரிகளில் பட்டப் படிப்புப் படிக்கும் மாணவரிடையே நிலவும் இந்த நிலைகண்டு ஆசிரியர் பலர் இரத்தக் கண்ணீர் வடிப்பதை அறியாதவர்களே இப்படியெல்லாம் கேட்பார்கள்!

தமிழ்ப் பாடங்களை மாணவர் வெறுப்பதற்குக் காரணங்கள் உண்டு. உயர்நிலைப் பள்ளியிலிருந்து தமிழ் நூல்களைப் படித்து வரும் மாணவன் **காதல், வீரம், கொடை** ஆகிய மூன்றையும் அவற்றைப்பற்றிய புகழ் மொழிகளையும் தவிர வேறெதையும் கேட்பதில்லை. கவிதையிலும் சரி, உரை நடையிலும் சரி ஒருசில பழம் பாடல்களும் அவற்றின் ஒரே வகையான விளக்கங்களுமே மாறிமாறி வந்து கொண்டிருக்கின்றன. அதுமட்டுமா? கற்கும் மாணவனும் கற்பிக்கும் ஆசிரியனும் புலவர்களையும் வள்ளல்களையும் பற்றிப் படிக்கும்போதெல்லாம்,

"தமிழகம் வள்ளன்மைக்குப் பெயர் பெற்றது"

என்றுதான் நினைத்துக்கொள்ள வேண்டும். 'வள்ளன்மை ஏன் இருந்தது; வறுமை இருந்ததனாலா?' என்று எண்ணவோ, பேசவோ, எழுதவோ கூடாது!

புத்தகம் எது பாடமாக வந்தாலும் அதில் புதுமைஇருப்பதில்லை. ஏனெனில் இலக்கியம் வரலாறு பற்றிய புதிய கருத்துக்கள் இங்கு எப்போதுமே ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை. செல்வமும்—செல்வாக்கும் படைத்த சிலர் எதைப் பற்றி என்ன எண்ணுகிறார்களோ அதுதான் சட்டம். அதைப் பின்பற்றி அதே போக்கில் எழுதப் படும் 'செக்குமாட்டு' நூல்களே மாணவர்க்குப் பாடப் புத்தகங்களாக வரும். மற்றவை மாணவர் கவனத்துக்குக் கொண்டுவரப்படுவதே இல்லை.

(15-ம் பக்கம் பார்க்க)

**பகுத்தறிவு**
(திங்களிருமுறை)
**புதிய தசாம்ச நாணய விகிதத்தில்:**
**உள் நாடு:**
ஆண்டு 1-க்கு 3-00
6 மதங்களுக்கு 1-75
தனிப்படி 13 சல்லிக்காசு
(நயா பைசா)
சிலோனில் 25 சதம்
**பகுத்தறிவு அலுவலகம்**
**சேலம்-1.**



(13-ம் பக்கம் தொடர்ச்சி)

வந்து காரிய மாற்றுவார்களேயானால் நாம்,நிச்சயம் அந்தவிவாதங்களில் பங்குகொண்டு பயன் தரும் வகையில் நடந்துகொள்வோம்.

ஆளுங்கட்சியினர், தப்பித் தவறி நல்லது செய்தால், அவற்றிற்கு நிச்சயம் ஆதரவு தருவோம்; தவறான வழி சென்றால், கண்டிக்கத் தவறமாட்டோம்.

இங்கே வீற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக சட்டசபை உறுப்பினர்களைப் பாருங்கள்.

இவர்கள் எல்லாம் கல்லடியைத் தாங்கியவர்கள்! சொல்லடியை ஏற்றவர்கள்! சிறைவாழ்வை அனுபவித்தவர்கள்! ஏளனத்தையும் இழி செயலையும் கண்டு கலங்காதவர்கள்! நெறித்த புருவத்தை மறந்தவர்கள்! 'புன்னகைதான், கொள்கை வெற்றி பெற உதவும்,' என்பதை உணர்ந்தவர்கள். நாட்டின் அருமையான செல்லப்பிள்ளைகள். இவர்கள் ஒரு நல்ல பொறுப்பான எதிர்க்கட்சியினராகப்பணியாற்றாவிட்டால் வேறு யார்தான் பணியாற்றுவார்கள்? நான் அடிக்கடி கூறுகிற-'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?'--என்ற மொழிப்படி, இப்போதும் கூறுகிறேன்—'இவர்கள் நல்ல எதிர்க்கட்சியினராக முடியாவிட்டால், வேறு யார் ஆகமுடியும்?'—என்று!

இப்போது சிலர் ஒரு யோசனை சொல்லுகின்றனர்; வடநாடு—தென்னாடு; ஆரிய—திராவிடப் பிரச்சினைகள் இரண்டையும் விட்டுவிட்டால் திராவிட முன்னேற்றக் கழகம் வளரலாம் என்று கூறுகிறார்கள்.

அழகி ஒருத்தியை மணமுடித்துத் தருகிறேன்; ஆனால் ஒரு நிபந்தனை—முதலில் நீ செத்து விட வேண்டும்; பிறகு உனக்கு அழகியை மணமுடிக்கிறேன்—என்பது போலிருக்கிறது, இந்த யோசனை! இதற்கு இணங்குவதற்கு அண்ணாதுரை ஒன்றும் அரசியல் அப்பா[illegible]!

எதிர்க் கட்சியிலிருந்தாலும், வேறெந்தக் காரணத்திற்காகவும் நாங்கள், கழகத்தின் மூலாதாரமான இலட்சியத்தையும், கோட்பாடுகளையும் விட்டுவிடமாட்டோம் என்பதைத் திட்டவட்டமாக அறிவிக்க விரும்புகிறேன்.

இந்த நாட்டில் ஆரிய கலாச்சாரம், திராவிடப்பண்பாடு என்ற வெவ்வேறான இரண்டு கலாச்சாரங்கள் நிலவுவதை யாரும் மறுக்கவில்லை. திராவிடப் பண்பாட்டினைக் கொண்டவர்கள்—அவர்களது மதம், சாதி எதுவாயினும்—அவர்கள் திராவிடர்களே!

நாங்கள், 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்றுதான் வைத்திருக்கிறோமே தவிர, **திராவிடர் முன்னேற்றக் கழகம்'** என்றுகூட அல்ல!

நாங்கள், ஆரியரும் திராவிடரும் என்று பிரித்துப் பேசி துவேஷம் வளர்ப்பதாகக் கூறுகிறார்களே, அவர்களுக்குச் சொல்லுவேன்—'நாங்கள் முறைகளைக் கண்டிக்கிறோமே தவிர, நபர்களை அல்ல! இந்த உண்மையை, நான் 'ஆரிய மாயை' என்ற நூல் எழுதியதற்காகச் சர்க்கார் என்மீது தொடுத்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகளே ஒப்பியிருக்கிறார்கள். மூன்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஒப்பியுள்ள இந்த உண்மை நாடறிந்த ஒன்றாகும்.

திராவிடம் என்றால் '**தீராவிடம்**' என்றுபேசிய ஆச்சாரியாரே இப்போது 'திராவிடத்தைக் காப்போம்,' என்று எழுதியுள்ளார்.

திராவிடத்தைக் காப்போம் என்றால், யாரிடமிருந்து காப்பது? எப்படிக் காப்பது? திராவிடத்திற்கு இப்போது என்ன ஆபத்து என்று விளக்கவேண்டாமா?

பாகிஸ்தான் வேண்டுமென்ற போது, 'பாரதத்தை துண்டு போடுவதா? பசுவை வெட்டுவதா?'—என்றுபேசிய ஆச்சாரியார், பின்னர் பாகிஸ்தான் கோரிக்கையை ஆதரித்த தலைவரானார்!

[14-ம் பக்கம் பார்க்க]

## எதிரொலி

அறிவுச் சக்தியோ ஆற்றலோ அதிகப் படப்பட உலகத்துக்கு ஆபத்து அதிகரிக்கிறது

—சங்கராச்சாரியார்.

**மடமையும் கோழைத்தனமும் பெருகினவரைக்கும் எத்தர்களின் கொடுமை வலுவடைகிறதே!**

* * *

மண்ணைக்கவ்விய கண்ணீர்த்துளிகள்.

—"விடுதலை"

**கொள்கையின் "கண்ணைக்கவ்விய மண்ணீர்த்துளிகள்" இப்படி எழுதுகின்றன!**

* * *

குஜராத்தைப் பின்பற்ற வேண்டும்.

—"விடுதலை"

**பாவம்; இனிமேல் வேறு என்ன தான் செய்வது?**

* * *

இந்தக் கண்ணீர்த்துளிகளுக்குத்தான் என்ன கொள்கை?

—பெரியார்.

**திராவிடநாட்டை வெங்காயமாக்கி, வடக்கத்தியான் வட்டிலில் பரிமாறுமலிருப்பது.**

* * *

ஒரு தொழில் வைத்துக்கொண்டு உட்கார்ந்தால் எனக்குப் பணம் சம்பாதிக்கத் தெரியாதா?

—பெரியார்.

**ஆமாம் ஐயா!ஒரு படக் கம்பெனி தொடங்குங்கள். எழுதத் தங்கராசும் நடிக்க ராதாவும இலவசமாகவே வருவார்களே!**

* * *

மாற்றுக் கட்சிக்காரர்களிடம் பகுத்தறிவுப் பிரசாரத்தை எப்படி எதிர்பார்க்க முடியும?

—"விடுதலை"

**அப்படியானல் அவர்களை ஆதரித்து, சீவிச் சிங்காரித்து ஆட்சிபீடம் ஏற்றிவது வெறும் கூலிவேலைதானே? கொள்கைக்கு அல்லவா?**

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு
திருவள்ளுவர்

இதயம்

மலர் 7 | சேலம் 15—4—57 | இதழ் 4

# வேண்டாம் இராமராச்சியம்!

"இந்தியாவுக்கு சுயராச்சியம் கிடைத்தால், அது இராமராச்சியமாக நடைபெறும்" என்றார் காந்தியார். வாழ்நாள் முழுதும் இராம பஜனை செய்தார்; இராமநாமமே தெய்வீக தாரகமந்திரம் என்றார். இறுதியில் அவரே கூறிவிட்டார் "அயோத்தி ராமன் வேறு, நான் சொல்லும் ராமன் வேறு" என்று.

அயோத்திராமன் தசரதச் சக்கரவர்த்தியின் புதல்வன்; யாகத்தின் மூலம் புரோகிதர்களுக்குப் பிறந்தவன்; நாடாளும் விருப்பத்தால் சூழ்ச்சி பல புரிந்தவன்; சம்புகன், வாலி, இராவணன் போன்ற வீரர்களை அநியாயமாகக் கொலை புரிந்தவன்; வருணாசிரமதர்ம வெறி பிடித்தவன்; பெண்களை அங்கம் சிதைத்தும், அடித்துக் கொன்றும், காட்டுக்குத் துரத்தியும், கருணையற்ற முறையில் நடந்துகொண்ட காதகன்! இவ்வாறெல்லாம் பகுத்தறிவாளர்களால் எடுத்துக் காட்டப்பட்ட பிறகே காந்தியார் மனம் மாறினார். "என் ராமன் வேறு, அயோத்தி ராமன் வேறு" என்று கூறிவிட்டார்!

இராமராச்சியத்தை விரும்பிய—பிரசாரம் செய்த—காந்தியாரே இராமனை ஒப்புக் கொள்ளாத போது, அவரது வாக்கினை வேதவாக்காக சிரமேற்கொண்டு நடப்பதாகக் கூறும் காங்கிரஸ் தலைவர்கள், அந்த ராமனை ஏன் தலைமேல் தூக்கிச் சுமந்து திரியவேண்டும்? காந்தியார் மறுத்த ராமனுக்கு ஏன் விழாவெடுக்க வேண்டும்? அரசினர் ஏன் விடுமுறை அளிக்க வேண்டும்? இது காலம் ஏற்கும் செயல்தானா?

'வள்ளுவன் தன்னை உலகினுக்களித்தே வான்புகழ் கொண்ட தமிழ் நாட்'டிலே, வள்ளுவனுக்கு விழாவில்லை; அரசாங்க விடுமுறையில்லை; வஞ்சக ராமனுக்குக் கோயில் குளமாம்; திருவிழாவாம், நவமியாம்—தசமியாம், இராமாயண காலட்சேபமாம், பாராயணமாம், பஜனையாம் ஆச்சாரிய சுவாமிகளின் ஆசீர்வாதமாம், திருப்பாவை திருவெம்பாவைக் குழுவின் அறிக்கையாம், பத்திரிகைகளில் விளம்பரமாம்! இவற்றிற்கெல்லாம் ஆதரவு காட்டுவதற்கு அரசாங்கம் விடுமுறை அளிக்கின்றதாம்! மதச்சார்பற்ற ஆட்சியிலே இது தேவைதானா?

"இராமாயணம் ஆரிய திராவிட போராட்டக் கதை' என்பதை ஒப்புக்கொண்டிருக்கும் இன்றைய இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்கள். திராவிட நாட்டிலே ஆரியத் தலைவனுக்கு விழாவெடுப்பதை ஆதரித்து விடுமுறையளிக்கலாமா? தன்மானத் தந்தை பெரியாரின் கண்மூடித்தனமான ஆதரவைப் பெற்ற பச்சைத் தமிழர் காமராசர், இதனை அனுமதிக்கலாமா?

இராமநவமி கொண்டாடுவதின் சாக்கிலே, பக்தி வளர்ப்போம், பகவத்பஜனை செய்வோம் என்ற போக்கிலே பழமை விரும்பிகள்—சாதி வெறியர்கள்—மதப் பூசாரிகள் இன்றைய மக்களை பழங்காலத்திற்கு இட்டுச் செல்ல முயலுகின்றனர்! திட்டங்களை விளம்பரப்படுத்துகின்றனர் இராமராச்சிய பகற்கனவு காணுகின்றனர்!

நல்லவரே! நாம் வேண்டுவது இன, மத, சம்பிரதாய வேற்றுமை மலிந்த இராமனது மன்னராட்சியா? எல்லோரும் சமவாழ்வுபெறும் சமதர்ம மக்களாட்சியா? எதுவேண்டும் நமக்கு?

—ப. கண்ணன்.

## "பகுத்தறிவு" புதிய விலை.

காகித விலை ஏற்றம் காரணமாகவும், புதிய நாணய முறையை ஒட்டியும் 1—5—57 முதல் "பகுத்தறிவு" தனி இதழின் விலை 16 புதுப் பைசாவாகவும், ஆண்டுக் கட்டணம் ரூபா 4 ஆகவும் மாற்றப் பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

—நிருவாகி.



# நமது புதிய பொறுப்புகள்.

அறிஞர் அண்ணா.

★

வெற்றி பெற்ற கழகத் தோழர்களைப் பாராட்ட சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் 31 3-57-ல், பொதுச்செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலே, அறிஞர் அண்ணா அவர்கள் பேசிய தன் சுருக்கம் இது.

15 பேர்தானே வெற்றி பெற்றார்கள் என்று கேலி பேசுகின்றனர்—ஏளனம் செய்கின்றனர்; 'திராவிட முன்னேற்றக்கழகம் பெற்ற வெற்றி அதிகமா; குறைவா'—என்ற சர்ச்சையில் ஈடுபடுகின்றனர்; அவர்களுக்கு நான் கூறவிரும்புகிறேன்— 'நாங்கள் பெற்ற வெற்றிகுறைவானதுதான். என்றாலும், முக்கியத்துவம் வாய்ந்ததாகும்,' என்று!

இன்று கேலி பேசுகிற- அதே தலைவர்கள், நாம் தேர்தலில் ஈடுபடுகிறோம் என்று அறிவித்ததும், 'இவர்களுக்கு' என்றுகூட அல்ல —'இதுகளுக்கு தேர்தலில் போட்டியிட யார் கிடைப்பார்கள்'— என்று பேசினார்கள். கழகத்தின் சார்பில், நமது பொதுச்செயலாளர் தலைமையில், நமது தோழர்கள் ஐந்து பேர் நாடெங்கிலும் சென்று, தேர்தல் சூழ்நிலைகளை ஆராயப் புறப்பட்டனர்.

அப்போது கூறினர்—'பஞ்ச பாண்டவர்'கள் சென்று சுற்றிப் பார்த்துவிட்டு, சென்னையிலேயே தங்கியிருக்கிற கண்ணனை வந்து பார்த்து, 'கண்ணா! கண்ணா! தேர்தலுக்கு நிற்க ஆளே கிடைக்கவில்லை,' என்று கூறுவது போலவும், கண்ணன் பஞ்ச பாண்டவர் வடிக்கும் கண்ணீர்த் துளிகளைத் துடைப்பது போலவும் கேலிமொழி பேசினார்கள்!

பின்னர், 150இடங்களில் நாம் போட்டியிட வாய்ப்பு இருக்கிறது என்று அறிவித்தான பிறகு, 150 பேர் போட்டியிட்டால் என்ன; இவர்கள் ஒருவர்கூட வெற்றிபெற மாட்டார்கள் என்று ஏளனம் செய்தனர்.

'நாம் இப்போது 15 இடங்களைப் பெற்றிருப்பது கண்டு, '15 இடங்களைத்தானே பெற்றார்கள் என்று பேசுகிறார்கள்.

'எனவே, இன்று ஏளனம் செய்வோர்-கேலி பேசுவோர் என்றுமே நம்மை வாழ்த்தியவர்கள் அல்லர்! நமது வளர்ச்சி, அவர்களின் வீழ்ச்சி!

அவர்கள், நம்முடைய வளர்ச்சியில் அவர்களுடைய வீழ்ச்சி இருப்பதாகக் கருதிக் கொண்டிருப்பவர்கள்.

மற்ற மற்றக் கட்சியினர் நம்மைக் கேலி பேசும்போது—'15 இடங்கள்தானே பெற்றனர்?' என்று ஏளனம் செய்யும் போது அதில் துக்கம்தான் தொக்கி நிற்கிறது. அவர்களது கேலி மொழிகள், நமக்கு மேலும் உற்சாகத்தைத் தரட்டும்!

அவர்களது கேலி மொழியில் நமது நாவலர் வெற்றிபெற வில்லையே என்ற துக்கமும் கலந்திருக்கிறது. நாங்கள் 15 பேர் சட்டசபைக்குச் செல்லும்போது, ஈட்டி பாய்ந்த இதயத்துடன்தான் செல்கிறோம்.

நமது நாவலரையும் என்றைக்கு நாம் சட்ட மன்றத்திற்குள் அழைத்துச் செல்கிறோமோ அன்றுதான் நாம் மன நிம்மதிபெற முடியும்.

சட்ட மன்றத்திற்குச் செல்லும் நமது தோழர்களுடைய பொறுப்புகள் மூன்றுவகையானவையாகும். ஒன்று—அங்கே நடைபெறக் கூடிய விவாதத்தை நாகரிகமான தாக்குவது; இரண்டாவது -அவரவர்கள் அவரவர் தொகுதி நலன்களுக்கான காரியங்களைச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு; மூன்றாவது—நமது தி. மு. கழகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து வழுவாதிருப்பது. இந்தப் பொறுப்புகளை நாம் சரிவர நிறைவேற்றியாக வேண்டும்.

எனவே, கேலி பேசுகிறவர்கள் தயவு செய்து நாங்கள் வெட்கப்படும் அளவுக்குக் கேலி பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 'நாற்பது இடங்களில் டிபாசிட் இழந்தவர்களே' என்று பேசுங்கள்! அப்போதுதான், எங்களின் ஆர்வம் மேலும் பெருகும்; திராணி மேலும் வளரும்!

வேகமாக ஓடுகிற குதிரையைக் கூட சவுக்கால் தட்டிக் கொடுக்கிறார்களே, எதற்காக?

மேலும், வேகமாக ஓடக்கூடியது அந்தக் குதிரை என்பதினால்தான்!

அதேபோலத்தான், இன்று நம்மைப்பற்றிப் பேசும் கேலி மொழிகளும் நம்மை மேலும் வேகமாக ஓடச்செய்ய, அந்தச் சவுக்கடி போலப் பயன்படவேண்டும்.

பெரியார் கேலி பேசுகிறார் என்றால், அது கேலி அல்ல! 'என்னிடத்தில் பாடம்பெற்றும் பதினைந்து தானா? எத்தனை ஆற்றல் தந்தேன் —அப்படியிருந்தும் பதினைந்து தானா?' என்று கேட்பது போலத்தான் பெரியார் நம்மைக் கேலி செய்வது இருக்கிறது.

இதனால்தான் நான் அடிக்கடி கூறுகிறேன்—'ஒரேகம்பெனிதான் லேபிள்தான் இரண்டு'—என்று!

'திராவிட முன்னேற்றகழகம் தேர்தலில் பெற்ற வெற்றியின்

(13-ம் பக்கம் பார்க்க)

# அவளுக்குத் தெரியும்.

"அமரன்"

"டண்! டண்! டண்!....

சுவரில் மாட்டப்பட்டிருந்த நாழிகை வட்டில் பத்துமுறை முழங்கி ஓய்ந்தது. தமிழர் அறிவில் சொத்தை ஏற்படுத்தி, மடமையில் வீழ்த்திய ஆரியம்போல்! உலகை இருட் குழியில் தள்ளிவிட்ட இரவுப் பெண்ணைப் பார்த்துக் குமுறுவது போன்று சன்னல் ஓரத்தில் நின்று வான வெளியைப் பார்த்து சோகப்பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த மனோரமா, கடிகாரத்தின் ஒலி முழக்கத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு அப்பக்கம் திரும்பினாள்.

அறைக்குள் வந்து கொண்டிருந்த அவள் தாய், மகளின் சோக நிலைகண்டு "மனோ! இன்னும் உன் துக்கம் தீரவில்லையா?" என்றாள்.

"என் துக்கம் தீரவேண்டுமா அம்மா? அப்படி யென்றால் என் உயிரைப் போக்கிக் கொள்ள விஷம் கொஞ்சம் கொடுங்கள்!" கண்ணீர் அவள் கன்னங்களை வருடக் கூறினாள் மனோ!

"அடி பைத்தியமே! உனக்கு ஏன் புத்தி இப்படிக் கெட்டு விட்டது? எல்லாம் கூடிவார நேரத்தில் நீ ஏன் பிடிவாதம் செய்கிறாய்?"

"....அம்மா! ..."

"....அம்மா! உன் பிடிவாத குணத்தைக்கண்டு அவள் என்றோ செத்துவிட்டாளடி! இங்கே பார் மனோ! இது என் கடைசி வார்த்தை! என் விருப்பப்படி நடந்துகொள். இன்றேல்!....நாம் ஒருவரை யொருவர் பார்க்க முடியாது!...மணி பத்தாய் விட்டது. இன்னம் ஒருமணி நேரம்தான் இருக்கிறது: அதற்குள் திருந்திக் கொள்!" பட்டாஸ் கட்டு வெடிப்பதைப்போலவார்த்தைகளைக் கொட்டிவிட்டு அவ்விடத்தை விட்டகன்றாள்.

அன்னையின் நிர்மானமான வார்த்தைகளைக் கேட்டதும் தேளால் கொட்டப்பட்டவள் போன்று துடித்துப் படுக்கையில் ஓடிப்படுத்தாள்!

மனோரமா 'தேவதாசி' வகுப்பைச் சேர்ந்தவள். வாலிப உள்ளங்களில் ஆசையை வளர்க்கும் வனப்புச் சிலை! அந்த அழகு ரோஜாவை அவர்கள் குலவழக்கப்படி தெய்வசன்னதியில் 'பொட்டு' கட்டிப் பொசுக்கி விட்டனர்! அதாவது கடவுளாக நிற்கும் கற்சிலைக்கு மனைவியாக்கி விட்டனர்! இனி அவள் சீமான்களின் படுக்கையறைப் பதுமை! சுருக்கமாகச் சொல்லப்போனால் வடவருக்கு வளைந்து கொடுத்தால் வாழலாம் அமைச்சராகலாம் சிலர். இன்றேல்?.... அதுபோல்தான் இருந்தது மனோவின் நிலை!

மனோவுக்கு இந்த இழிநிலை பிடிக்கவில்லை. ஒழுக்கமும் நேர்மையும் கொண்ட ஒரு வாலிபனுக்கு மனைவியாகிக் குலப் பெண்ணாக வாழ எண்ணினாள். அவள் ஆசைக்குக் குறுக்கே நின்றாள் அவள் தாய்; திராவிட நாடாவது மண்ணாவது; நமக்கு வேண்டியது பொருள் என்று தன்மானத்தை விற்கும் திராவிடர்போல்! தாயின் பேராசையால் மனோ பகிரங்க ஏலத்திற்கு விடப்பட்டாள், படுக்கையறை மோகினியாக! போட்டியிட்டனர் பல சீமான்கள். வெற்றி பெற்றவர் பிரபல வணிகர் சோமநாதஞ் செட்டியார் ஒருவர்தான்! அவர் சரியாகப் பதினொரு மணிக்கு வந்து விடுவார். அந்தக் கிழட்டுப் பிணத்தை மகிழ்விக்க மனோ அலங்காரப் பதுமையாகிவிட வேண்டும்!

அறையினுள் சுடர்விட்டுக் கொண்டிருந்த மின் விளக்கு, ஏதோ கோளாறால் 'குப்' பென்று அணைந்தது. ஒரு நிமிஷம் மனோவின் வாழ்வைப் போல அந்த அறை இருளால் சூழப்பட்டது! அடுத்த நிமிஷமே அணைந்துவிட்டிருந்த விளக்கு சீராகி ஒளிவிடத் தொடங்கியது! மனோவின் வாழ்விலும் அப்படிப்பட்ட திருப்பமொன்று ஏற்படுமோ?

ஒருமுடிவுக்கு வரமுடியாமல் குழம்பிக் கொண்டிருந்த மனோ திறந்து கிடந்த சன்னல்கதவை மூட எண்ணிப் படுக்கையை விட்டெழுந்தாள். அதே நேரத்தில் கம்பிகள் இல்லாத அந்த சன்னல் வழியே நுழைந்த இளைஞன் ஒருவன், கையில் 'பிச்சுவா'வுடன் அறையினுள் 'பொத்'தென்று குதித்தான்! அவனைக் கண்ட மனோ பயத்தால் நடுங்கி சப்தம் செய்ய முயன்றாள். அதைக் கருவிலேயே சிதைத்துவிட்டன இளைஞன் கையிலிருந்த கொலைக்கருவியும், அவன் அதட்டல் குரலும்! அவள் சர்வாங்கமும் நடுங்க அவனைப் பார்த்தபடியே கற்சிலையாக நின்றுவிட்டாள்!

(11-ம் பக்கம் பார்க்க)

இளம் வயதில் செய்யும் தவறுகள், மனிதத் தன்மையின் பாவங்களாக மாறி, கிழவயதில் அவமானமாகக் காட்சியளிக்கிறது.

—எல். ஈ. லேண்ட்.






[முன் இதழ் தொடர்ச்சி]

''ஆற்காட்டு, நவாப் சைதுல்லாவின் தூதுவன் தோன்றல்மல்," என்ற உடனேயே தேசிங்கு நடுங்குவான், மண்டியிட்டு மரியாதை செய்வான்! கொஞ்சிக் குழைந்து கருணை வேண்டுவான், பகுதிப் பணத்தைப் பாதத்திலே கொட்டி, கட்டிய கரத்தோடு எட்டிநின்று "எடுத்துக்கொள்ளுங்கள்" என்று வேண்டுவான்,—என்றெல்லாம் எண்ணிவந்தான்! மானைப் பிடிக்கப்போய் மலைப்பாம்பு தென்பட்டாற்போல், முயலைப் பிடிக்கத்தாவி முள்ளம்பன்றி பிடிபட்டாற்போல் கோழையைச் சந்திக்க வந்தவன் வீரனைக்கண்டான்! தோன்றல் மல்லின் உடல்முழுதும் வியர்த்தது! விளையாட ஓடிய வெள்ளாடு வேங்கையிடம் சிக்கியது போல் திகைத்தான்!

**தேசி:** பார்த்தான்; கேட்டான். தோன்றல் மல்! வந்த காரணம் சொல்!

இந்த ஒலி காதிலே வீழ்ந்ததும் அவனுக்குப் பயம் அதிகரித்தது. தைரியமிழந்த அவன், தழதழத்த குரலிலே "பகுதிப்பணம் கேட்டு வரும்படி ஆற்காட்டு நவாப்பு அனுப்பினார்" என்று அவன் சொல்லி முடிப்பதற்குள், சீரி எழுந்தான் தேசிங்கு!

"என்ன? பகுதிப் பணமா? தோன்றல்மல்! உனக்கு மூளைக் கோளாறில்லையே!......"

அவையின் சுவர்களிலே எதிரொலித்தது அக் கர்ஜனை! அச்சம் தோன்றல் மல்லை மௌனியாக்கியது!

"சிங்கத்திடம் சிறுநரி குருதி கேட்பதா? வெள்ளாட்டு வேங்கையிடம் புல் கேட்பது? என்னிடமா பகுதிப் பணம்? என்ன துணிச்சல்! ஆணவத்திற்கு அளவுகோல் இல்லையா? செஞ்சிக் கோட்டை அஞ்சி வாழ்வதாகவா எண்ணினான் ஆற்காட்டு நவாப்! வஞ்சகமாய் வாங்கியது போதா தென்று எஞ்சியதைக் கேட்கவா வந்தாய்? இந்த நெஞ்சுரம் எப்படிப் பெற்றாய்? கொஞ்சமும் வாய் கூசாது கூறிய உன் நாக்கை ஏன் துண்டிக்கக் கூடாது?"

அவன் கூறினான் "போ என்றார் வேந்தன் வந்தேன்" என்று.

"புல்லனின் சொல் கேட்டதும் வந்தாய்! அற்பனே கேள்! தேசிங்கின் கையிலிருப்பது வாள்! வெண்சாமரமல்ல! வெட்டும் வாளைக் கையில் வைத்துக் கொண்டு, பகுதிப் பணம் கொட்டித்தரும் கோழையல்ல நான்! என் நாட்டவரும் பட்டி மாடுகளல்ல! கட்டப் பட்டுள்ள குருளைகள்! அவையிலே அரசனாகவும், ஆற்காட்டானுக்கு அடிமையாகவும் இருக்கும் முடிதாங்கிகள் பட்டியலிலா என்னையும் சேர்த்தான்? முடிதரித்து முகலாயனின் அடிவருடும் பேடி யென்றா என்னை எண்ணினான்? பகுதிப்பணம் பெறும் தகுதி இவன் எப்படி பெற்றான்? பாம்பிடம் பால் கேட்கும் பைத்தியக் காரனின் சேவகனே! ஓடு! சொல் அந்த சோற்றுத்துருத்தியிடம்! கலயம் கையிலேந்தி, பஞ்சையின் கோலம் பூண்டு, செஞ்சியின் எல்லையிலே வந்து நிற்கச் சொல்! கஞ்சி ஊற்றுகிறேன்! பகுதிப்பணம் வேண்டுமென்றால் ஆண்கள் போர் வையிலே உலாவும் அலிகளைப் போய் கேட்கச் சொல்! பசும்பாலை அருந்துபவனை புலிப்பாலுக்கு ஆசைப்பட வேண்டாமென்று சொல்! ஆசைப்படுவதாயின், நாளையல்ல இன்றே, இப்போதே, தன் வாரிசுக்கு மரண சாசனம் எழுதி வைத்து விட்டு வரட்டும்! முரசத்தின் முழக்கங் கேட்டதும் முழங்

காலிட்டு மணிமுடியை அவன் காலடியில் வைத்து முகாரிபாடும் மரபினன் அல்லநான்! அந்த வேட்டை நாயிடம் நாட்டை சிக்க விட்டு கோட்டையைப் பூட்டிக் கொண்டிருக்கமாட்டான் தேசிங்கு! செஞ்சியின் எல்லையிலே, உருவியவாளோடு நிற்பான்! அவ்வாள்முனைதரும் வெகுமதியே பகுதிப்பணம்! ஏமாந்தகாலத்தில் ஏற்றங்கொண்ட எத்தர்களின் எடுபிடியே! வளையலணிந்த கரமல்ல!

வீரக் கழல் பூண்ட கரங்கள், வேலெறிந்து வேழத்தை வீழ்த்தும் கரங்கள், வேங்கையைக் கிழித்து அதன் விலா எலும்பை நொருக்கும் கரங்கள், ஆயுதமின்றி பாயும் புலியை பலிவாங்கும் கரங்கள்; ஆட்டுக்குட்டியைக் கண்டா அஞ்சப் போகிறது? நாகத்தைக்கண்டு பயப்படாதவன் ஓணானைக் கண்டா நடுங்கப் போகிறான்! இல்லை. முக்காலும் இல்லை. தூங்கும் சிங்கத்தைத் துச்சமென எண்ணி, தேசிங்கு போர்க்கோலம் பூண்டு விட்டான் என்று போய்ச் சொல்! யானை மீது அம்பாரி கட்டி ஏரி, பரிவாரங்கள் புடை சூழ வரச்சொல்! கூண்டோடு கைலாயம் அனுப்புகிறேன்! நவாபின் எழும்பைக் கொண்டு அவன் படையினரின் குருதியிலே தோய்த்து செஞ்சியின் சரித்திரத்தைத் தீட்டுகிறேன்! பணம் கேட்ட அப்பதருக்குப் பிணக் குவியலைப் பரிசாகத் தருகிறேன்! ஆற்காட்டானைப் புதைக்க தனி மசூதி தயாராகிறதென்று போய்ச் சொல்! ஆற்காட்டான் ஆண்மையாளன் என்றால் வாளை உருவி வரச்சொல். இல்லையேல் காலில்வந்து சரணடையச் சொல்! ஓடு!"

கைகால்கள் நடுங்க நின்றிருந்த தோன்றல் மல், தேசிங்கின் வீர முழக்கங் கேட்டதும் துவண்டு விட்டான்! விட்டால் போதுமென்று காத்திருந்த அவன் தேசிங்கிற்கு வணக்கந் தெரிவித்துப் புறப்பட்டான்! வேகமாக வந்து சேர்ந்தான் ஆற்காட்டிற்கு! கூறினான் நடந்தவற்றை! துள்ளியெழுந்தான் நவாப்! தனக்கு அடக்கமான பல சிற்றரசர்களுக்கும் செய்தி அனுப்பினான்! பாளையப் பட்டக்காரர்கள் புடைசூழ பெரிய சைன்யந்திரட்டிப் புறப்பட்டான் செஞ்சிக் கோட்டை நோக்கி!

## 11. மணவிழா நின்றது.

ஆற்காட்டான் படைத்திரண்டெழுந்துவரும் சேதி கேட்டான் தரணிசிங்கு! அரங்கன் ஆலயத்திலே ஆழ்ந்த நிட்டையில் இருந்த தேசிங்கை எழுப்பி கூறினான்.

"மகமத்கானுக்கு ஆள் அனுப்புங்கள்" என்று சொல்லி விரைந்தான் அரண்மனை நோக்கி தேசிங்கு.

வழுதாவூரில் மணக்கோலத்தோடு பந்துமித்திரல் புடைசூழ வீற்றிருந்தான் மகமத்கான்! திருமணச் சடங்குகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. மௌலிசூரான் ஓதிக்கொண்டிருந்தான். இந்த வேளையில் தான் தேசிங்கின் ஆள் ஓடிவந்து கொடுத்தான் ஓலையை! மண விழாவிலே வீற்றிருந்த மகமத்கான் ஓலையைப் படித்ததும் துள்ளி எழுந்தான்! மணக்கோலத்தைக் களைந்து மணவிழாவை நிறுத்துங்கள் என்று மௌலிக்குச் சொல்லி புறப்பட்டான்! தாய் தந்தையர் தடுத்தனர்; உற்றார் உறமுன்றாயோர் வழி மறித்தனர்! மதகுரு 'மணவிழா முடிந்ததும் போ' என்றார். 'நண்பனுக்கு ஆபத்து என்ற சேதியைக் கேட்டதும் நில்லேன்' என்று கூறிப் பாய்ந்தான் நீல வேணியின்மேல்;' பறந்தான்; மறைந்தான்!

நவாபின் போர்முழக்கங் கேட்டதும் தேசிங்கின் படையினர் தாரை ஊதித் தயாராயினர் போர்க்களம் போக! உருவிய வாளேந்தி உறுதிகுலையா நெஞ்சினராய் அணிவகுத்து நின்றனர்! தரணிசிங்கு பார்வையிட்டான்! பாயும் வேங்கைகள்போல் பகைவர்களின் சதையைக் கிழித்திட துடித்து நிற்கும் வீரர்களின் வரிசைகளைப் பார்த்ததும் தரணிசிங்கின் தைரியம் வளர்ந்தது.

## 12. மனப் போராட்டம்.

களம்புகத் தயாரானான் தேசிங்கு! களங்கமோ கலக்கமோ இல்லாத நெஞ்சினன். அவன் நிலைக் கண்ணாடி முன்பு நின்று வாளை இடுப்பில் கட்டினான் நெஞ்சினம் வழியும் அவன் விழிகளில், விரலிலிருந்த கணையாழிபட்டது! மணவிழாவன்று 'ராணி' அணிவித்த அம்மோதிரம் மாதவளின் பரிதாப நிலையைப் படம் பிடித்துக் காட்டியது! உருக்கி வார்த்த பத்தரை மாற்றுப் பதுமை அவள் தோற்றம், அவன் மனக்கண்ணில் பட்டதும் நெகிழ்ந்தான்!...பகைவரின் பாணங்களைத் தடுக்கும் இரும்புக் கவசம் பூண்டிருந்தும் பாவையவளின் 'கண்' அமைப்புகள் துளைத்தன அவன் மார்பில்!

பழவகைகளும் பாற்சொம்பும் பக்கத்தில் இருக்க, பசியைப் போக்கிக் கொள்ளாது பட்டினி



கிடப்பவனைப்போல், சொர்ணச் சிலையவள் சுலபத்தில் கிடைத்தும் சுகத்தைக் காணாது, வேட்கையை அறுத்து வாழ்ந்துவந்த அவன் நினைவில் நடமாடும் நிலவவளின் நீள்விழிகள் பட்டதும் தன்நிலை இழந்தான். சிங்கமெனச் சீரி எழுவோராயினும் சிங்காரியின் மெல்லிய சிரிப்பின் முனைபட்டதும் அவரின் சீற்றம் சிதைந்து ஓடாதா?

"கமல விழிபடைத்த காரிகையாளவளைக் காணலாமா!" என்ற நினைவு மோதியது, அவன் நெஞ்சில்! ஆசை காட்டுத்தீயினும் வேகமாய்ப் பரவும் ஆற்றல் கொண்டதாயிற்றே! புறப்பட்டான் காண. தடை போட்டது ஆருடக்காரரின் அரண். திகைத்தான். ஆசைத் தூண்டியது. அரண் தடுத்தது. வேதனைப் பட்டான். மனைவியின் மாசற்ற முகமும் மதகுருவின் மயக்க மொழியும் மாறி மாறிப் பற்றி உலுக்கியது வீரன் தேசிங்கை!

"போர்க்களம் போகிறாயே மனைவியின் மதிமுகத்தைக் கண்டு போகக்கூடாதா! களத்திலே கத்தியோடு கத்தி மோதும் போதும், மாற்றார்களை மார்பைத் துளைக்கக் காற்றில் பறந்து வரும்போதும், எதிரியின் ஈட்டி உயிரைக் குடிக்க நெஞ்சிற்கு நேராக பாயும்போதும்...ஏன்!...போர்க்களத்தில் ஒவ்வொரு நாடியும் உயிருக்காகப் போராடவேண்டிய நேரந்தானே! அத்தகைய ஆபத்தான வேளையில் இறக்கப் போகுமுன் வாழ்க்கைத் துணைவியைக் கண்டுவிட்டுப் போகக்கூடாதா?" என்றுக் கூறியது அவனின் ஆசையுள்ளம்!

"மூடனே! பத்து மாதங்கள் பறந்தோடிவிட்டன! இன்னும் இருப்பது இரண்டு மாதங்கள்தானே? போர்க்களம் சென்றால் என்ன? வெற்றிமாலை நிச்சயம் சூடப்போகிறாய்! போருக்குப் போகும் சேதியை விட வெற்றிச்சேதியை அவள் கேட்டால் எவ்வளவு மகிழ்வாள்'—என்று சொல்லித்தடுத்தது, அவனின் 'பக்தி' நெஞ்சம்!

இந்தச் சிக்கலான சூழ்நிலையில் தவித்திட்ட அவன் வந்தான் ஓர் முடிவிற்கு! திரையிட்டு அதற்குப் பின்னால் பொற்கொடியாள் அவளை வரவழைத்துச் சேதிச் சொல்லி விடைபெற்றுப் புறப்படலாம் என்று முடிவுகொண்டான்! விரைந்தான் ராணியின் மாளிகை நோக்கி!

## 13. காதற் குமுறல்.

மணாளன் வருகையைக் கேட்டதும் களிப்புக் கூத்தாடினாள் ராணி! கண்ணீர் வழிந்து, கவலை தோய்ந்திருந்த அவள் முகத்தில், காந்த ஒளி தாண்டவமாடியது! நகரும் நாளை எண்ணி, நாயகன் வருகைக்காக வழிமேல் விழிவைத்துக் காத்துக் கிடந்தாள். காதலன் காண வருகிறான் என்றறிந்ததும் மங்கியிருந்த முகம் மலர்போல் சிரித்தது! மெருகு குலையா மேனிக்கு ஏற்ற ஆடைதேடி உடுத்தினாள்! அழகை அதிகரிக்க ஆபரணங்களைப்பூட்டினாள்! வாசனைத் தைலத்தை வாரி வாரிப் பூசியவாறே புள்ளி மானைப்போல் துள்ளி ஓடிவந்தாள். கண்ணிற்கு விருந்தாக காதற் கரும்பவன் வருவான், வாரியெடுத்து அணைப்பான் என்ற நினைப்போடு ஓடோடி வந்தாள்! 'காதல் தீயில் சிக்கி மீளும் வழியறியாது வாடித் தவித்திட்ட நம்மைக் கட்டித் தழுவி, களிப்பூட்டுவான்' என்ற ஆசை அலைமோத ஓடோடி வந்தாள் அவ்வமுத சுரபியாள்!

ஆனால், கண்டாள் திரையை! வியந்தாள்! ஆசை நினைவுகளைக் கலைத்த காரணம் கேட்டாள் கலங்கினாள்!

"வாழ்க்கையின் வாலிபக்கூட்டின் எந்த ஒரு பாகத்தையும் அனுபவித்தறியாத நான்!...காதல் தீயைக் கண்ணீரால் கழுவிவரும் நான்!...வேட்கையின் வேதனைகளைப் பெருமூச்சால் அடக்கி அவதியுறும் நான்!...இயற்கையின் குறும்புச் செய்கைகளை பெருமையோடு சகித்துவரும் நான்!...என்ன தவறு செய்தேன்? உங்களைக் காதலித்து உமக்கு மாலையிட்ட சுகத்தைத் தவிர வேறு எதை அனுபவித்தேன்? ஏன் இன்று திரையிடச் சொன்னீர்?"

"அமுதமே! தவறாக நினைக்காதே! ஓராண்டுக் காலம் பிரிந்திருக்க வேண்டுமென்று கூறினார் குருமார்கள்! இன்னும் அவ்விரதம் முடியவில்லையே... ராணி! நெஞ்சிலே சதிராடும் நின் நினைவுகளை இத் திரையா தடுத்திடும்?"

"மனப்புண்ணிற்கு மருந்திடவந்தீர் என்றெண்ணினேன்! வேதனையை வளர்த்து விட்டீர்! உம்மை உள்ளன்போடு காதலித்தவளுக்கு தாங்கள் அளிக்கும் சன்மானம் கண்ணீரா? டில்லியை விட்டு வந்தது திரைமறைவில் நின்று பேசவா? இச் சிங்கார மாளிகையிலே என்னைச் சிறைவைக்கவா அழைத்து வந்தீர்?

(வளரும்)

# கடவுள் தன்மை.

கடவுள் தன்மை என்ன? எதற்காக வணங்குகிறார்கள்? நோயின்றி வாழவும் செல்வச் சிறப்புடன் வாழவுமேதான் பெரும்பாலானோர் வணங்குகிறார்கள். மக்கள் விரும்பிய நல்வாழ்வை அளிப்பதுதானே கடவுள் தன்மை? ஆனால் நடப்பது நேர்மாறாகவே இருக்கிறது. நாள்தோறும் துன்பத்தில் உழலும் பாட்டாளி மக்கள் மட்டும் கடவுளை வணங்குவதில்லையா? கடன் வாங்கியும் கடவுளுக்கு காணிக்கை செலுத்துபவர்கள் எத்தனை பேர், அதனால் கஷ்டமடைகின்றவர்கள் எவ்வளவோ பேர். மக்களை வியாதிக்குள்ளாக்கி வேடிக்கைப் பார்ப்பதும் ஒருவித கடவுள் தன்மையாம்.

வைசூரிக்கு மாரியம்மனையும், காலராவுக்கு காளியம்மனையும் பொறுப்பாளியாக்குவதேன்? மாரியம்மனால் உண்டாகும் வைசூரியால் கண் இழந்தும், முடமாகியும் நிற்பவர்கள் எத்தனையோ பேர். மக்களைக் கொடுமைப் படுத்துவதுதான் கடவுள் தன்மையா? ஆனால் வைசூரி உடற்கோளாறால் வரும் நோய் என்றால் அதனை யாரும் ஒப்புவதில்லை. ஒரு சமயத்தில் கடவுளை கருணையுடையாராகவும், ஒரு சமயத்தில் அன்புறத்துபாராகவும் மனம் போல் மதிப்பிடுகிறார்கள். இந்த நிலைமாறவேண்டும். சிந்தனையைப் பயன்படுத்த வேண்டும்.

கடவுள் இருப்பது உண்மையானால், மக்களுக்கு நன்மை செய்யாமல் தீங்கு செய்வதும் கடவுள் தன்மையா? நமக்கு தீங்கு செய்பவர்களை விரோதியாகத்தானே நினைப்போம்? அப்படி இல்லாமல் வைசூரி மாரியம்மன் விளையாட்டு என்பது பொருந்துமா? வியாதியை மனிதனுக்கு உண்டாக்குவதுதான் மாரியம்மனுக்கு விளையாட்டா? தான் விளையாடும் பொம்மையைக் கூட சிறுமிகள் அலுங்காமல் தானே வைத்திருப்பார்கள். விளையாட்டுப் பொம்மையிலும் கீழானவர்களா மனிதர்கள்? ஆறறிவுள்ள மனிதர்கள் நாம் என்பதை மனதில் வைத்து இதைச் சிந்திக்க வேண்டும்.

கடவுள் தன்மை யாது? என்பதில் ஆண்களைவிட பெண்கள் நன்கு சிந்தனையைச் செலுத்த வேண்டும். குழந்தைகளைப் பராமரிப்பதில் பெரும்பங்கு பெண்களையே சார்ந்தது. வருங்கால ஆண், பெண்களின் வாழ்வு அவர்களால் தான் வளம்பெறும். குழந்தைக்கு சாதாரணமாக காய்ச்சல் வந்தாலும், மருந்து கொடுப்பதால் குணமடையும் என்று பொறுப்பதில்லை. வைத்தியர்கள் கவனிப்பதிலும் நம்பிக்கை ஏற்படுவதில்லை. திருப்பதிக்கோ, பழனிக்கோ, ஏதாவது பிரார்த்தனை வைத்துக் கொண்டுதான் திருப்தி அடைவார்கள். சாமி குற்றத்தால்தான் ஏற்பட்டதென்றும் நினைப்பார்கள். "சாமி என்னைக் காப்பாற்று" என்று நோய் வந்த குழந்தையைக் கும்பிடச் சொல்வார்கள். குழந்தையின் மனநிலை எப்படி மாறும். நம் நோயை கடவுளாலேதான் தீர்க்க முடியும் என்றுதானே எண்ணும். மருந்தினால் குணமடையும் என்று நினைக்குமா? கடவுளால் தான் எல்லாம் செய்யமுடியும் என்ற நம்பிக்கை வேரூன்றினால், தன் முயற்சியிலேயே அவநம்பிக்கை ஏற்படும். பிற்காலத்திலும், நான் இதை செய்ய நினைக்கிறேன், கடவுள் சித்தம் எப்படியோ என்ற எண்ணம் தானே முட்டுக்கட்டையிடும். எந்த வேலையிலும் தன்னம்பிக்கையோடு ஈடுபடவே முடியாது. சோம்பேறித்தனமே உண்டாகும். மக்களை சோம்பேறிகளாக்குவதுதான் கடவுள் தன்மையா? எல்லாம் அவன் செயல், இன்றைக்கிருப்பார், நாளைக்கில்லை நம்மால் என்ன முடியும்? என்ற வேதாந்தம் பேசுவோரால், பிற்கால வாழ்வைப்பற்றி என்ன முடியுமா? வாழ்க்கையில் முன்னேற்றம்தான் ஏற்படுமா? வாழ்வைப் பாழாக்கும் வேதாந்தத்தையும், அதைச் சேர்ந்த பக்தியையும் விட வேண்டும். அன்பே கடவுள், அறிவே துணை என்பதைப் பின்பற்றவேண்டும். மக்களின் வாழ்வு வளமாக்க வேண்டும்.

—அறிவுக்குஞ்சு.

நாம் இன்பமடைய மற்றவர்களை எதிர்பார்க்கும்வரை, நாம் அடிமைகளே. —விவேகானந்தர்.



(ம் தொடர்ச்சி)

அந்த இளைஞன் வாட்டசாட்டமான வயிர உடலைப் பெற்றிருந்தான். மெருகேறி அழகொளி வீசிக்கொண்டிருந்த அவன் ஒவ்வொரு அங்கமும் கண்களுக்கு விருந்தாக இருந்தன! மனோ இமைக்காமல் — ஆனால் கொஞ்சம் பயம் தெளிந்து ஆசை பொங்க அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்! அவன் கட்டுடல் அவள் கருத்தைக் கவர்ந்து விட்டதோ!

இளைஞன் தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு, கையிலிருந்த பிச்சுவாவை இடுப்பில் செருகியவண்ணம் அவள் அருகில் நெருங்கி, "வீட்டைப் பார்த்ததும் கட்டுக்காவல் பலமாக இருக்கும்; நம் கைகளுக்குப் பலமான வேலைகொடுத்துதான் காரியத்தைச் சாதிக்க வேண்டுமென்று எண்ணினேன். இங்கோ இளமை பூரிக்கும் ஒரு பொற்சிலையைத் தவிர வேறு யாருமே இல்லை! ஹூம்! பயந்து விட்டாயா?" என்றான். அவன் குரலில் பரிவும் குழைவும் கலந்திருந்தன! அவளும் அவன் எழிலில் மயங்கி விட்டாளோ!

"நீயார்?" துணிவோடு கேட்டாள்.

"திருடன்!" ஒரே வார்த்தையில் பதில் தந்தான்!

"திருடனா?"

"ஆம்; திருடன்தான்! இவ்வளவு வலுவான உடலைப் பெற்றிருக்கிறாயே, நீ ஏன் திருடுகிறாய்? உழைத்துச் சாப்பிடக் கூடாதா என்று கேட்கலாம் நீ! உழைக்கும் உடல்தான் இது. உள்ளத்தில் கள்ளமொன்றும் இல்லாமல் வாழ்ந்தவன்தான் நான். ஆனால், என்னை இப்படி வாழும் வண்ணம் செய்துவிட்டான் ஒரு கொடியவன்."

'வேடிக்கையாக இருக்கிறது உன் வார்த்தைகள்!''

'வேதனையாக இருக்கும் விளக்கம் தெரிந்தால்.'

'அப்படியா? சொல்லேன்!'

அவளுக்கு ஏனோ அவன் வரலாற்றை அறிய ஆவல் பிறந்தது. அவனுக்கும் ஏனோ தன் கதையை அவளிடம் கூற ஆசை அரும்பியது.

அவள் விருட்டென்று ஓடி அறையின் கதவைத் தாளிட்டாள். அவன் உரிமையுடன் ராஜநடை நடந்து படுக்கை மேல் போய் அமர்ந்தான். ஏதோ ஒரு எண்ணம் அவளையும் மெதுவாக அவன் அருகில் போய் அமரச் செய்தது! இருவர் விழிகளும் ஏக காலத்தில் சந்தித்தன! அந்த தங்கச்சிலையைப் பார்த்தவண்ணமே அவன் தன் கதையைக் கூறத் தொடங்கினான்:

"நான் ஒரு நிலப்பிரபுவின் பண்ணையில் மாடாக உழைத்தவன்! அந்த சீமான் என்னை அதிலிருந்து விடுதலையளித்து கள்ளச் சாராயம் காய்ச்சி விற்கச் செய்தான்! அவன் என் எசமான் அல்லவா? சொன்னபடியெல்லாம் சுழன்றேன். அதன் பயனாக அவன் லாபத்தில் வளர்ந்தான்; நான் உழைப்பால் தேய்ந்தேன்! ஒரு நாள் எதிர்பாரா விதமாய் போலீசாரிடம் அகப்பட்டுக் கொண்டேன். அதை என் அசாக்ரதை என்று கருதினார் முதலாளி! நான் யாரிடமும் பிடிபடாமல் தொழில் செய்து லாபத்தைக் கொடுக்க வேண்டுமென்பது அந்த உல்லாசியின் லட்சியம்! சட்டத்தின்முன் என் வாதம் அலையில் வீழ்ந்த முயலாகி விட்டது! நான் சிறைத் தண்டனை பெற்றேன். சிறையிலிருந்து மீண்டபின் முதலாளியிடம் சென்றேன். அவன் என்னை வெறிநாய்போல் எண்ணி விரட்டினான். அந்தப் 'பெரிய மனி'தன் ஆதரவு அற்றதும் ஊரே என்னை விரட்டியது. வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை என்மேல் படையெடுத்தன. நான் அவைகளிடமிருந்து தப்புவதற்கு போராடினேன். இன்று அதுவே என் நிரந்தரத் தொழிலாகிவிட்டது. இதுதான் அந்தப் பிரபல 'பெரிய மனி'தன் வரலாறு!"

இளைஞன் கூறிமுடித்தான். அவள் பெருமூச்செறிந்தாள்.

"ஏன் பெருமூச்செறிகிறாய்?"

"உலகில் நான் ஒருத்தி மட்டும்தான் துரதிர்ஷ்டக்காரி என்று எண்ணி வருந்தினேன். ஆனால், அது எவ்வளவு தப்பு" என்றாள் மனோ!

அவன் நகைத்தான். அவள் அவன் கேட்காமலேயே தன் சோகக் கதையைக் கூறி முடித்தாள். முழுதும் கேட்ட அவன் உறுதியுடன் பேசினான்:

"மனோ! இந்த உலகம் நம் போன்றவர்களுக்கு ஒரு தூக்கு மேடை! இதில் நாம் தலைநிமிர்ந்து வாழவேண்டுமானால் தன்னம்பிக்கையும், துணிவும் வேண்டும்! கொடுமைக்குத் தலை வணங்குவதும், வாட்டும் வறுமைக்கு வளைந்து கொடுப்பதும் தற்கொலைக்கொப்பாகும்! எதையும் தாங்கும் இதயம் வேண்டும்! கொடியவனின் கைஅம்பாக இருந்து வேதனைக்கு இரையாகி நான் பெற்ற பாடம் இது!"

புன்னகை தவழ்ந்தது அவள் முகத்தில். நெருங்கி அவன் காதில் ஏதோ முணகினாள். அடுத்தகணம் அவளைத்தான் அணைத்தான் ஆனந்தம் மேலிடப் பேசினான்:

"மனோ! இனி எனக்கு வாழ்வில்லை என்றிருந்தேன். அதனால்தான் திருடுவதை இவ்வளவு தைரியமாகச் செய்து வந்தேன்! என் வாழ்வில் நீ துணை

சேர்ந்த பின்னும் எனக்கு ஏன் அந்த இழிதொழில்! இனி நான் புதிய மனிதன்! — ஏன்? நாம் இருவருமே புதிய வாழ்வு பெறுவோம்! உம்?

அவன் வார்த்தைகள் அவளைப் பூரிப்பின் உச்சியிலே ஏற்றி விட்டன! உணர்ச்சியற்றுப் போனாள்!

இந்த நேரத்தில் அறையின் கதவு 'தட தட,' வென்று தட்டப்பட்டது! விழிப்பு பெற்ற மனோ, இளைஞன் அணைப்பிலிருந்து விலகி கதவை ஒடித்திறந்தாள். வெளியே அவள் தாயும், சோமநாதஞ்செட்டியாரும் நின்றுகொண்டிருந்தனர்.

மனோவைக் கண்டதும் அவள் தாய் மகிழ்வுடன், மனோ! ஐயாவை அழைத்துக்கொண்டுபோ! உன்மேல் உயிரையே வைத்துக்கொண்டு ஓடி வந்திருக்கிறார், என்றாள்.

தாயின் வார்த்தைகளைக் கேட்டதும் மனோவின் உள்ளம் கொதித்தது. "அம்மா! எனக்குப் பிடித்தமான கணவனை நானே தேர்ந்தெடுத்துக் கொண்டேன். அதோ பார் அவரை!" தைரியமாகக்காட்டினாள் படுக்கையின்மேல் அமர்ந்திருந்த இளைஞனை!

இளைஞனைப் பார்த்தனர் செட்டியாரும், அவள் தாயும்! பேயறைந்தவர் போலாய் விட்டனர்!

'யாரோ திருட்டுப்பயல்! இவனா உனக்குப் புருஷன்?" கோபத்தால் குமுறினாள் தாய்!

அவன் முகத்தில் அறைவது போல் மனோ பதில் கூறினாள்:

"அம்மா! இவர் திருடர்தான் மறுக்கவில்லை! ஆனால், நீ கூட்டிக் கொண்டு வந்திருக்கும் இந்தப் பகற்கொள்ளைக் காரனைப் போன்று வட்டியின் பேராலும், கள்ள வாணிபத்தின் பேராலும் மக்களைச் சுரண்டும் கொடியவரல்ல; கொடியவராகக் கப்பட்ட குணவான்; என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட உத்தமன். இன்பத்தை விலை பேசும் ஈனனைப் போல் அல்லாமல் என்னை ஊரறிய மனைவியாக ஏற்று, வாழ்நாள் முழுதும் காப்பாற்ற முன் வந்திருக்கும் கண்ணியவான்!......"

'மனோ!......"

"இவரிடம் பொன்னும் மணியும், பொருளும், இல்லையென்று மருள்கிறாயா அம்மா? எனக்கு வேண்டியது—என்; ஒவ்வொரு பெண்ணுக்கும் வேண்டியது கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தான கணவன் தானம்மா! தங்கமும் வெள்ளியும் என் உடலைப் போர்த்தாவிட்டாலும் அவருடைய குறையாத அன்பு ஒன்றே எல்லாமாக இருக்கிறது!......"

"மனோ!......"

"நீ போகலாய்!"

மனோ கதவை இழுத்துச் சாத்திக் கொண்டு இளைஞனருகில் சென்றாள். அவள் தாயாரும் செட்டியாரும் அவமானத்தால் குன்றிப்போய் அவ்விடத்தை விட்டகன்றனர்.

இளைஞனை கள்ளச்சாராய உற்பத்தியிலும் விற்பனையிலும் ஈடுபடுத்தியிருப்பது, செட்டியார்தான் என்பது மனோவின் தாய்க்குத் தெரியாது. ஆனால், மனோவுக்கு எப்படித் தெரியாமல் இருக்க முடியும் இனிமேல்?

●●●

## பொன்மொழிகள்

பூமியைத் தூய்மையாக்க அன்பும் அமைதியும் தேவை.

—கன்பூஷியஸ்.

அச்சம் உள்ளவனுக்கு ஆண்மை ஒரு போதும் உண்டாகாது.

—ஞானி.

மனைவியால் மாண்பு பெறாதது வாழ்க்கையன்று.

—முதுமொழிக்காஞ்சி.

மூடன், ஞானமுள்ளவனுக்கு அடிமையாவன்.

—பைபிள்.

உள்ளொளியினால் ஒளிரும் அகக் கண்ணை உடையவனே, சாதி வேற்றுமைகளுக்கு அப்பால் பார்வை செலுத்தி ஒற்றுமைத் தத்துவத்தை உணருகின்றான்.

—ரவீந்திரநாத் தாகூர்.

மனிதன் நியாயமாக நடந்தால் தான் சனநாயகம் சாத்தியமாகும்; அநியாயமாக நடப்பதாலேயே சனநாயகம் தேவைப் படுகிறது

—ரெயின்ஹோல்டு நீபுர்.

எதையும் உற்றுக் கேட்டவர்களாலேயே புத்திசாலித்தனமான பல கேள்விகளுக்கு பதிலளிக்கமுடியும்.

—ஏங்கல்ஸ்.

இன்பம் அடையவேண்டுமானால், அறிவு, அடக்கம், தெளிவு முதலிய நற்பண்புகள் அமையவேண்டும்.

—பிளாட்டோ.

அரசு, சமூக தத்துவத்தின் மீது இயங்கும் தேசியக் கூட்டுறவேயன்றி வேறல்ல.

—தாமஸ் பெயின்.



(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்மை குறித்து, தலைமையுரை ஆற்றிய பொதுச்செயலாளர் அவர்கள் நன்றாக ஆராய்ந்து, தெளிவாக எடுத்துக் கூறினார்.

நாம் பெற்றுள்ள இடங்கள் 15-தான். என்றாலும்,நாம் பெற்றுள்ள வாக்குகள் 17இலட்சம் என்பதை அவர் விளக்கினார்.

நமக்கு 17இலட்சம் பேர் இந்தத் தேர்தலில் ஆதரவு தந்திருக்கிறார்கள்.

நம்மைப் பற்றி மாற்றுக் கட்சிகள் அனைத்தும் எல்லாவிதமான கெட்ட பேச்சுக்களையும் பேசினர்; இழிமொழிகளை வீசினர்!

இவர்கள் எல்லாம் நாஸ்திகர்கள்; இவர்கள் வெற்றி பெற்றால், ஆலயங்களில் ஆராதனை நடைபெறாது; ஆஸ்திகம் அழிந்துபடும் —என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட பிறகும் தான், 'தி. மு. கழகத்தினர் நாஸ்திகர்கள் அல்ல; இவர்கள் ஆஸ்திகத்தின் பெயரால் நடைபெறும் அக்கிரமங்களை மட்டுமே கண்டிப்பவர்கள்; அநியாயங்களை மட்டுமே அம்பலப் படுத்துபவர்கள்,' என்று உணர்ந்து, 17இலட்சம் பெர் ஆதரவு அளித்திருக்கின்றனர். இவர்கள் அழிவு வேலைக்காரர்கள் அல்ல என்பதை 17 இலட்சம் மக்கள் உணர்ந்து நமக்கு வாக்களித்திருக்கிறார்கள்.

இந்தக் கெட்ட பிரசாரத்தை எல்லாப் பெரிய கட்சிகளும்—நம்மை சிறுவர்கள் என்று ஏசுகிற எல்லாப் பெரிய கட்சிகளும்—நான் பெரிய கட்சிகள் என்று கூறுவதற்குக் காரணம், எல்லாப் பெரிய 'இடங்களை'யும் பிடித்துக் கொண்டிருக்கிறவர்கள் என்பதினால்தான்—செய்தன; என்றாலும், நம்மீது நம்பிக்கை தெரிவித்திருப்பவர்களின் எண்ணிக்கை 17 இலட்சம் பேர்.

இந்துவும், மித்திரனும், விகடனும் இன்று காட்டும் பரிவினை அன்றே காட்டியிருந்தால், 15 இடங்களை மட்டுமா பெற்றிருப்போம்?

17 இலட்சம் மக்களை நம் பக்கம் ஈர்த்திருப்பதற்கு நம்மிடம் உள்ள சக்திதான் என்ன?

அடுக்கு மொழி பேசத்தானே இவர்களுக்குத் தெரியும்? அடுக்கு மொழி பேசிவிட்டால் ஆகுமா?—என்று கேட்டார்கள்,கேலிபேசினார்கள்! எங்களுக்கு அடுக்குமொழி பேச மட்டுமேதான் தெரியும் என்றால், 17 இலட்சம் மக்களையும் ஈர்த்திருப்பது அந்த அடுக்கு மொழிதானா? அப்படியானால், 'அடுக்குமொழி ஒரு சக்தி அல்ல' என்று வேறு பேசினார்களே!

இங்கு எனக்கு முன்பு பேசிய, சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்ட நமது தோழர்கள் யாரும் அடுக்குமொழி பேசவில்லை. ஆனால், நம்மைக் கேலி பேசுகிறவர்கள் பேசும் தடுக்குமொழியை விட நமது அடுக்கு மொழியே மேலானது என்று மக்கள் கருதுகிறார்கள் என்பதையாவது ஒப்புவார்களா?

எனவே, நமது வெற்றி சாதாரணமான சம்பவம் அல்ல; தமிழக அரசியல் வரலாற்றில் புதியதோர் கட்டம்! நமது கழகத்தின் வரலாற்றில் புதிய பொறுப்பானதோர் கட்டம்!

நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற புதிய பொறுப்பினை நாம் நன்கு உணருவோம்.

நமது தோழர்கள் இனி தங்களுடைய பேச்சில், சூட்டினை குறைத்துக்கொண்டு, ஒளியை அதிகரித்துக் கொள்ளவேண்டும்; வீரம் குறைய வேண்டும்-விவேகம் மிகவேண்டும்; நாம், நல்ல பக்குவமும் பயிற்சியும் பெறவேண்டும்.

தீவட்டிக்கும்-டார்ச் விளக்கிற்கும், சம்மட்டிக்கும்—ஆபரேஷன் கத்திக்கும் உள்ள வேறுபாடு நமக்குத் தெரிந்தே இருக்கிறது! மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் சட்டசபையில் நாம் பணியாற்றுவோம்!

எதிர்க்கட்சி எப்படி இருக்க வேண்டும் என்ற அரசியல் தத்துவம் பற்றிப் கேட்பார்களானால், நான் கூறுவதெல்லாம், எங்களைக் கேட்பதைவிட ஆளுகின்ற கட்சியைக் கேட்கவேண்டும், என்று தான் கூறுவேன். எதிர்க் கட்சி எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும் என்பதை, ஆளும் கட்சியினர் நடந்துகொள்வதைப் பொறுத்துத் தான் கூறமுடியும்.

ஆளும்கட்சி அடக்க ஒடுக்கமாக நடந்து கொண்டால் எதிர்க் கட்சியும், அவ்வாறே இருக்கும்.

ஏனோதானோ என்ற போக்கில் எடுத்தேன்—கவிழ்த்தேன் என்று ஆளுங்கட்சி நடந்துகொண்டால், எதிர்க்கட்சியும் அதற்குத் தகுந்த மாதிரிதான் அமையும். சட்டசபையில் நல்ல விவாத உணர்ச்சியுடன் ஆளுங்கட்சியினர் நடந்து கொள்வார்களேயானால், நாமும் நமது பங்கினைக் கட்டாயம் சரிவரச் செலுத்துவோம்.

எதிர்க் கட்சியை உருவாக்க வேண்டிய பொறுப்பு ஆளுங் கட்சிக்கு உண்டு என்ற கருத்தில் தான், ஜெயப்பிரகாஷ் நாராயணன் கூறினார்—'எதிர்க் கட்சி அமைக்க உதவுங்கள்' என்று! இங்கு இப்போது எதிர்க் கட்சி உருவாகியுள்ளது. இந்த எதிர்க் கட்சியிடம் ஆளுங் கட்சியினர் எப்படி நடந்துகொள்ளப் போகின்றனர்?

எதிர்க் கட்சியினருக்குத் தர வேண்டிய மரியாதையுடன் அவர்களை நடத்துவார்களா, ஆளுங் கட்சியினர்? அந்தப் பொறுப்புணர்ச்சியுடன் அவர்கள் நடந்துகொண்டால் நாமும் பொறுப்புடன் காரியங்களை கவனிப்போம்.

சட்டசபைக் கட்சிக் கூட்டங்கள், மந்திரிசபைக் கூட்டங்கள் என்ற அளவுடன் அவர்கள், விவகாரங்கள் பற்றிய விவாதங்களை நிறுத்திக் கொள்ளாமல், சட்டசபையின் விவாதத்திற்கு எல்லா விவகாரங்களையும் கொண்டு

(9-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வேட்டியில் பொத்தல் விழுந்து விட்டால் அதனை இரண்டாகக் கிழித்துவிடு. உபயோகமான யோசனை என்று கூறினர்; பாகிஸ்தான் கோருவது சரியே—தரத்தான் வேண்டும் என்று துணிந்து பேசினர்!

அதுதானே இது—என்று,நமது நெஞ்சு அடித்துக் கொள்கிறது!

எனவே ஆச்சாரியார்—அந்தப் பெரியவர், நல்லவர்—திராவிடத்தை யாரிடமிருந்து காப்பது? எப்படிக் காப்பது? ஆபத்து என்ன? — என்பதையெல்லாம், எனது பேதை நெஞ்சத்தை இன்னும் அலைக்கழிக்கவிடாமல், விளக்கிக் கூற வேண்டுகிறேன்.

இந்தத் தேர்தல் நேரத்தில் நாடெங்கிலும் நமது தோழர்கள் முழக்கிய திராவிடநாடு திராவிடருக்கே' என்ற இலட்சிய நாதம், ஆச்சாரியாருக்கு, காற்றினிலே வரும் கீதமாகக் கேட்டு, அவர் நெஞ்சில் நுழைந்துவிட்டது என்பதையே அவரது, 'திராவிடத்தைக் காப்போம்' என்ற எழுத்து கூறுகிறது.

சட்டசபையில், நாங்கள் அமர்ந்திருக்கிறோம என்றால், எங்களுக்குப் பின்னால் 17-இலட்சம் மக்களின் இதயம் இருக்கிறது என்பதை ஆட்சியாளருக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

இனிய குரலில் ஒருவன் பாடினால்— உண்மையில் அவன் குரல் இனிமையாயிருந்தால்- அவனுக்கு முறைப்படி சங்கீதம் கற்றுத் தருவார்கள்; அவனும் கற்றுக் கொள்வான்.

அதுபோல நாம், இதுகாறும் தன்னந் தனியாகப் பாடிக்கொண்டிருந்தோம். முறைப்படி சங்கீதம் கற்றுக்கொண்டவன் பக்க வாத்தியங்களுடன் பாடவேண்டியிருப்பதுபோல, சட்ட சபைக்குச் செல்லும் நாம் பக்கவாத்தியங்களுடன் தான் பாடுவோம்.

பாடுவோருக்குப் பக்க வாத்தியங்கள் துணையாக இருக்கவேண்டும். ஆனால், பக்கவாத்தியங்கள், பாடும் பாட்டைவிட்டு விலகிச் செல்லுமானால், பாடகனின் தனிக் குரல் தனித்து ஒலிக்கத்தான் செய்யும்.

கழகத் தோழர்களுக்கு நான் மீண்டும் கூறுவேன். நமதுவெற்றி சாதாரணச் சம்பவம் அல்ல; நாம் பெரியதோர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நம்மை இன்று மற்றவர்கள் ஆராய்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

நம்மைப்பற்றி ம. பொ. சி. கூட ஆராய்ந்து கூறியிருக்கிறார். 'இவர்கள், பாண்டிநாடு — சேரநாடு—சோழநாடு இங்கெல்லாம் வெற்றிபெறவில்லை; தொண்டை நாட்டில்தான் வெற்றி பெற்றிருக்கிறார்கள்'— என்று.

உண்மைதான்; அவருக்கு நான் ஒன்று கூறுவேன்— 'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து.' என்ற பழமொழியை அவருக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். பாண்டிநாடு-சேரநாடு—சோழநாடு என்று கூறியவர்கள், தொண்டை **நன்னாடு** என்று அடைமொழியுடன் கூறியிருக்கிறார்கள். சான்றோருடை தொண்டை நாட்டில் தி. மு. கழகத்திற்கு வெற்றி கிட்டியுள்ளது. இந்தச் சான்றோர், இதர நாடுகளிலும் வெற்றியை தேடித் தருவார்கள்.

நமது தேர்தல் அனுபவங்கள் நமக்கு மேலும் வளர்ச்சியைத் தேடித் தரவும், பொறுப்போடு காரியமாற்றவும் நிச்சயம் பயன் பட வேண்டும்.

● — ●

## கேள்விக்கணை

**வை கோவிந்தன், மதுரை.**

***கே பெரியார்-ராஜாஜி சந்திப்புக்கும், அண்ணா-ராஜாஜி சந்திப்புக்கும் உள்ள தராதரம் என்ன?***

ப: பெரியார் சந்திப்பால் ஒரு கிழவருக்கும் குமரிக்கும் திருமணம் நடந்தது; அண்ணா சந்திப்பால் "தென்னாடு" என்பது "திராவிட நாடு"தான் என்பதை அக்ரகாரம் ஒப்புக் கொண்டது.

**கு இரா பரமசிவம் காரமடை.**

***கே: போதுமான அளவுக்கு புத்தி விசாலமுடையவர்களால், போதுமான அளவுக்குப் பொருளாதார சக்தியைப் பெற முடியவில்லையே; ஏன்?***

ப: அவர்களின் விசால புத்தியை சமூகமும், அரசாங்கமும் பயன்படுத்தும் அளவுக்குப் பண்பு பெருதது ஒன்று; அவர்களின் முயற்சியில் உள்ள குறைபாடு மற்றொன்று.

## எது சரி?

தமிழ்நாட்டை ஆண்டுகொண்டிருந்த ஆங்கிலேயர் தமிழன் கொண்டாடவேண்டிய புத்தாண்டுத் தொடக்கம்

**ஜனவரி**

என்றனர். இன்று ஆண்டு கொண்டிருக்கும் வடநாட்டு இந்திக்காரர் புத்தாண்டுத் தொடக்க மாதம்

**சைத்ரம்**

என்கின்றனர். பழைய பஞ்சாங்கமும்,நடைமுறை நம்பிக்கையும்

**சித்திரை**

என்கின்றன. தமிழ் வான நூலறிஞர், ஆராய்ச்சியாளர்கள் ஆண்டுத் தொடக்கம்

**தை**

என்கின்றனர். தமிழனுக்கு எத்தனை புத்தாண்டுகள்? இவற்றில் எது சரி?



(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படிப்பட்ட ஒரே கருத்தை வளராததும், வளர்ச்சிக்கு அடிகோலாததுமான கருத்தை மாணவன் எத்தனைமுறை படிப்பான்? அதுவும், அதைத்தான் படிக்க வேண்டும்; மூளையில் பதியவைத்துக்கொள்ள வேண்டும்; தேர்வில் எழுதவேண்டும்' என்று கட்டாயப் படுத்தினால் மாணவனுக்கு அதன்மேல் வெறுப்பு ஏற்படுவது இயல்புதானே?

இனி, நமது கல்வி முறையும் பாடத்திட்டங்களும், ஒன்றுக்கொன்று முரண்பட்டனவாக இருக்கின்றன. முற்காலத்தில் குருகுலமுறை இருந்தது. மாணவர்கள் தமது ஆசிரியரோடேயே உண்டு, உறங்கி, உலவிக் கல்வி பயில்வர். அப்போது மாணவர் காணும் உலகம் ஆசிரியர் ஒருவரே, அவர் சொல்வதே இலக்கியம். அதற்குமேல் மாணவன் எதையும் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால் இப்போதோ, ஆசிரியரும் மாணவரும் ஒருநாளில் ஒருசிலமணி நேரங்களே ஒன்றாக இருக்கின்றனர். மற்ற நேரங்களில் மாணவர் உலகில் பழகுகின்றனர்; கிடைக்கும் நூல்களைப் பயில்கின்றனர்; பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு பெறுகின்றனர், எனவே அவர்கள் வெளியில் பெறும் அனுபவம் மிகுதியாக இருக்கின்றது; அங்கே பெறும் கருத்துக்கள் வேறாக இருக்கின்றன, கல்விநிலையமோ கண்ணை மூடிக்கொண்டு பழைய கருத்துக்களையே கிளிப்பிள்ளை போலச் சொல்லிக்கொண்[illegible]ருக்கின்றது!

[illegible]வே மாணவர் பாடங்களை [illegible]றுக்கின்றனர்,எனினும் பட்டம் பெற வேண்டுமே என்பதற்காக (முதல்நாள் இரவு மட்டும்) படித்[illegible]த் தேர்வில் எழுதிவிட்டு அதை[illegible]ம் மறந்து விடுகின்றனர்.

[illegible]டித்து வெளியேறிய பின்னரும் [illegible]மிழ் என்றால் வேம்பாகக் கசக்கி[illegible] இளைஞனுக்கு காதல்—வீரம் [illegible]ாடை மட்டுமே கொட்டுகின்ற [illegible]மிழ் தெவிட்டுகிறது. வாழ்வின் பல கோணங்களையும்,பற்பலவகைகளில் விளக்கும் மேனாட்டு இலக்கியம இனிக்கிறது அவனுக்கு! இப்படி யெல்லாம் எழுதாமல், அடுப்புக்கட்டிகள் போன்ற மூன்றுக்கே புகழ் பாடுவதா என்று எண்ணுகிறான் அவன்.

இப்போது அவன் பேணு வரைகின்ற இலக்கியத்தில் மேனாட்டு வாடைதானே வீசும்? தமிழ் இலக்கியம் காட்டுகின்ற தமிழ்ப்பண்பை அறியவிடாத படி தடுத்து விட்டது கல்வி. தமிழ்ப் பண்புத் தொடர்பின்றித் தொங்குகிறது அவன் படைக்கும் இலக்கியம்!

கல்வித்துறை அறிஞர்கள் நடத்திவருகின்ற இந்தத் தமிழ் ஒழிப்பு இயக்கம்,எதிர்காலத்தில் தமிழ் வெறுப்பாளர்களையே மிகுவிக்கும் என்பதை யாவரும் உணரவேண்டும். பல்வேறு வகைப்பட்ட கருத்துக்கள் கொண்ட நூல்களுடன் பழகும் வாய்ப்பைக் கல்லூரி மாணவர்களுக்காவது தருதல் வேண்டும். சோம்பேறிப் பெரிய மனிதர்கள்—சிந்தனைவளம் இல்லாத இயந்திர எழுத்தாளர்கள் ஆகியோரின் படியெடுப்பு நூல்களை ஒதுக்கித்தள்ளி, மாணவர் காண்பவை, கேட்பவை, பழகுபவைகளோடு தொடர்புடைய சிந்தனையை வளர்க்கும் நூல்களைப் பாடமாக அமைக்கவேண்டும்!

ஒரே செய்தியைப் பல்வேறு தலைப்புக்களில் தந்து ஏய்க்கும் அறிவு வறண்ட ஆசிரியர்களின் நூல்கள் பாடப்புத்தகங்களாக வராதபடி கவனித்துக்கொள்ளல் வேண்டும்: இவை யாவற்றுக்கும் ஒரேவழி, **பாடப் புத்தகக் குழுவினர், (இப்போது இருப்பது போல) நூலாசிரியரையோ பதிப்பாளரையோ பார்த்து நூல்களைத் தேர்ந்தெடுக்காமல், குறிப்பிட்ட அந்த நூல்களைப் படித்துப் பார்த்துத் தேர்ந்தெடுக்க வேண்டும்!** உரைநடை இலக்கியங்களைப் பற்றிய தங்களின் கொள்கைகளைக் கூட இவர்கள் காலத்துக் கேற்பச் சிறிது மாற்றிக்கொள்வதுநல்லது.

இவ்வாறு தக்க நடவடிக்கைகளை எடுக்காமல், சும்மா உட்கார்ந்து கொண்டு "ஐயோ! மாணவர் தரம் குறைகிறதே! நாட்டின் பண்பாடு நலிகிறதே" என்று முதலைக் கண்ணீர் வடிப்பதில் பயனில்லை, நாம் எதையாவது சொல்லிக் கொடுத்துக் கொண்டே இருப்போம், மாணவர்கள் சுடர் மணிகளாக— நாட்டின் பண்பறிந்த நல்லோராக வளர்ந்து விட வேண்டும் என்று சோம்பேறிக்கனவு காண்பது கல்வித்துறை அறிஞர்க்கு அழகன்று, நெல்விதைத்தால் நெல்லும், புல் விதைத்தால் புல்லும்தான் வளரும்! ●●


வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி

&

சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,

3037-38, டபீர்குளம் ரோடு, தஞ்சாவூர்.

கருத்துரை.

## மகுடம் காத்த மங்கை.

பத்மினி நடித்த ஒரு இந்திய படத்தின் தமிழ்ப் பதிவு. கதை ஆரிய நாட்டில் நடப்பது போல எழுதப்பட்டு, படமாக நாட்டு கலாச்சாரத்தை ஒட்டி தயாரிக்கப்பட்டிருப்பதால், பேச்சுக்கள் — பாட்டுக்கள் தமிழாக இருந்தும் தமிழர்கள் உள்ளத்திலே இடம்பெற முடியாமல், தாமரை இலைத் தண்ணீர் போல் தத்தளிக்கின்றன!

பத்மினிக்கு நாட்டியங்களை — தெவிட்டும் அளவுக்குக் கொடுத்திருக்கின்றனர். நடிப்பதற்கு அவசியமில்லை. "மேக்கப்" ஒரு ஜோராய்!

வசனம்: ஆரூர்—தாஸ் என்பவர் எழுதியுள்ளார். தமிழ் இருக்கிறது. அ. மருதகாசியின் பாடல்களில் செந்தமிழ் கொஞ்சுகின்றது. காட்சி, ஒளி, ஒலிப்பதிவுகள் தரமாகவே உள்ளன. எனினும் படம் முழுதும் பார்க்க வேண்டும் என்றால் நிறைய சகிப்புத்தன்மை வேண்டும்!

—இந்திரசித்தன்.

### தாய் மகளுக்குக் கட்டிய தாலி.

அறிஞர் அண்ணாவின் புதுமைக் கதையும், அரங்கண்ணலின் செந்தமிழ் வசனமும் குறிப்பாகவும், சிறப்பாகவும் பெற்று எடுக்கப்பட்டுவரும் சமூகச் சித்திரம்: "தாய் மகளுக்குக் கட்டிய தாலி" புரட்சி நடிகரும், பானுமதியும் கதைத் தலைவனும், தலைவியுமாக நடிக்கும் இப்படத்தை, கலைஞ கலாமந்திர் அதிபரான ஆர். ஆர். சந்திரனே டைரெக்ட் செய்து வருகிறார். தமிழகப் படக் காதலர் எதிர்பார்க்கும் சிறந்த படங்களில் இது ஒன்று என்பதில் ஐயமிருக்க முடியாது.

### தமிழரசன்.

உருண்டையான "உலகம்" படத்தை தயாரித்த மூனுஸ் கிறனத்தார் பன்மொழி பேசும் "தேவசுந்தரி"யோடு, "தமிழரசன்" என்ற படமொன்றும் எடுக்கப்போகிறார்களாம். டி. ஆர். மகாலிங்கமும், மாதுரிதேவியும் பிரதான நடிகர்களாம். செய்தி நன்று; பெயரும் நன்று; தமிழும், தமிழ்ப்பண்பும் படத்தில் மணக்க வேண்டுமே!

### விக்கிரமாதித்தன்

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி சோடி நடிக்கும் பாரத் புரொடக்ஷன் சாரின் "விக்கிரமாதித்தன்" வேகமாக வளர்ந்து வருகிறது. டைரெக்ஷன் பொறுப்பை டி. ஆர். ரகுநாதமும், அலங்காரக்கலைப் பொறுப்பை அதிபர் வி. நமசிவாயமும் ஏற்றுள்ளனர். அனுபவசாலிகளின் முயற்சி; அழகாகத் தானே இருக்கும்?

### போட்டி-மரகதம்.

கோவை பட்சிராஜா ஸ்டுடியோவினரின் "மரகதம்" படம் தயாரிப்புச் செய்தி, மாறவில்லை — மறையவில்லை. சென்னை வி. கே. ஆர். புரொடக்ஷன் கார் "மரகதம்" என்ற பெயராலேயே ஒருபடம் தயாரிக்கும் செய்தியும் வருகின்றது. இப்படத்தின் வசனப் பொறுப்பை ஏ. எஸ். முத்துவும், டைரெக்ஷனை டி. ஆர். ரகுநாதனும் கவனிப்பார்களாம்.

"கன்னியின் சபதம்" என்ற நமது ஆசிரியர், ப. கண்ணனின் நாடகம் புத்தகமாக படிக்கவும், நாடகமாக நடிக்கவும் இருக்கவே, அந்தப் பெயரை ஒரு படாதிபதி குறுக்குவழியில் ஆக்கிரமிக்கும் தயவைச் செயல் போல இருக்கிறது இந்த "மரகதம்" விஷயமும்! தமிழ் நாட்டில் இந்த அளவுக்கா பெயர்ப் பஞ்சமும், திறமைப் பஞ்சமும் நேர்ந்து விட்டது?

### நந்திவர்மன்.

சலகண்டபுர இளைஞர் ஒற்றுமை நாடக மன்றத்தினர் ஆசிரியர் ப. கண்ணன் அவர்களின் "நந்திவர்மன்" என்ற வரலாற்று நாடகத்தினை நடத்த முடிவு செய்திருக்கின்றனர். தக்கபயிற்சிக்குப் பிறகு பொங்கல் விழாவில் இந்நாடகம் அரங்கேற்றப்படுமாம்.


சிதம்பரம் ராஜா டாக்கிஸில்
11—5—57 சனிக்கிழமை இரவு 10-மணிக்கு
அறிஞர் அண்ணா M. A; M. L. A.
அவர்கள் தலைமையில்
ப. கண்ணன் அவர்களின்
கன்னியின் சபதம்
நாடகம் நடைபெறும்.
கோவில்-சு. இராசன்,
வள்ளுவா நாடக மன்றம், சென்னை 24.


சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப கண்ணனால் அச்சிடப்பட்டு சேலம்-1 குமாரசாமிப்பட்டியிலிருந்து வெளியிடப்படுகிறது.


# பகுத்தறிவு

திங்கள் இருமுறை. ஆசிரியர்:- ப. கண்ணன்.

மலர் 7 | 1-5-57 | விலை 0-2-6 (16 காசு) | இதழ் 5.


## விடுதலைப் பயணம் விரையுமா? குறையுமா?




தாயக விடுதலைப் பணியாற்றும் தன்மான வீரர்களை—கழகத்தை—மூர்க்கத் தனமாகத் தாக்குகின்றனர் முதியவரும், வடவர் கைப்பதுமையரும்! வேகம் குறைந்திடுமா? விருப்பம் கூடிடுமா?

# கல்வித்துறை அறிஞர்கட்கு...3

"மாணவர்களின் தரம் மிக மிகக் குறைந்து விட்டது. இந்தக் காலத்து பீ. ஏ. பழைய 'ஸ்கூல் பைனலுக்குக்கூட (பள்ளியிறுதி வகுப்பு S. S. L. C.) வாாது"

ஐம்பது வயதுக்கு மேற்பட்ட பழைய 'ஸ்கூல் பைனல்' களின் கருத்து இது.

"எப்போது பார்த்தாலும் கடற்கரை, குளக்கரை, சினிமா, கிரிக்கெட்டு என்று சுற்றி அலைகிறார்கள் மாணவர்கள். புத்தகத்தைக் கையில் எடுப்பதாகவே காணோம். அறிவு எப்படி விருத்தியாகும்?"

மக்களைப் பெற்ற மகராசர்—மகராசிகளின் ஆராய்ச்சி இது.

"தேர்வுக்கு முந்தின நாள் இரவுதான் பையன் பாடப் புத்தகத்தை எடுக்கிறான். எதைப் படிப்பான்? என்ன அறிவு வளரும்?"

ஆசிரியப் பெருமக்களின் அவலக் குரல் இது.

"ஆமாமாம், மாணவர்களின் தரம் (Standard)குறைந்துகொண்டு தான் வருகிறது. இதை எப்படி யாவது தடுக்கத்தான்வேண்டும!"

கல்வித்துறை அறிஞர்களின் கண்டு பிடிப்பும், கண்டிப்பான பேச்சும் இவை.

மாணவர் சமூகத்தின் மேல் வீசப்படும் இப்பெரிய குற்றச்சாட்டில் உண்மை இல்லாமலில்லை. பட்டம் பெற்ற மாணவனுக்கு—

கல்கத்தா, இலண்டன், லெனின்கிராட், நியூயார்க், சிட்னி, பீகிங், டோக்கியோ போன்ற நகரங்களைப் பற்றித் தெரியும்; அந்தந்த நாட்டு மக்களைப் பற்றித் தெளிவாக ஒன்றும் தெரியாது!

அறிவியல் கண்டு பிடிப்புக்களில் அங்கொன்றும் இங்கொன்றும் தெரியும்; அதன் வரலாறும் அதை வளர்க்கும் முறையும் தெரியாது!

கசினி முகம்மது, துக்ளக் மகேந்திரவர்மன், குலசேகர பாண்டியன், இராசேந்திரன், அசோகன் என்னும் சில பெயர்களும் அவர்கள் ஆட்சிக்கு வந்த முறையும், செய்த சீர்திருத்தங்களும், சீர்கேடுகளும் தெரியும்; முறையான வரலாற்று உணர்வு தெரியாது!

## சாலை-இளந்திரையன்.

அவ்வையும் அதியமானும், இளங்கோவும் சிலப்பதிகாரமும், கம்பனும் விபீடணன் அடைக்கலப் படலமும், குமரகுருபரரும் இரட்டை மணிமாலையும் பற்றிக் கேள்விபட்டிருப்பான்; அவற்றுக்கு மேல் ஒன்றும் தெரியாது!

இன்னும் இவ்வாறே ஒவ்வொரு பாடத்திலும் சிற்சில குறிப்பிட்ட பகுதிகளை மட்டும் 'நுனிப்புல் மேய்ந்திருக்கிறான்.' கல்விப் பயிற்சியில் குறிப்பிடத்தக்க தொரு நிலையை அடைந்திருப்பதற்கு அறிகுறியாகப் பட்டம் பெற்றுள்ள ஒருவன், சிற்சில இடங்களை மட்டும் தொட்டுப் பார்த்திருக்கிறான். எந்தத் துறையிலும் தானாகச் சிந்திக்கவோ, ஏதேனும் செய்யவோ அவனுக்குத் தெரிவதில்லை.

ஏன் இந்த நிலை? யார் இதற்குப் பொறுப்பாளி?...

மாணவனை—எதிர்கால மனிதனை "மரப்பாச்சி"யாக்கும் இந்தப் பெரும் பணியில் எல்லாருமே பங்கு பெற்றுள்ளனர்.

பள்ளியிறுதி (S. S. L. C.)வகுப்பு வரை மாணவன் வளர்கிறான்—வளர்த்து வரப்படுகிறான். கொடுக்கப்பட்டுள்ள பாடங்களை முழுவதுமாகப் படிக்க வேண்டுமென்னும் நிலை அவனுக்கு இருக்கிறது. ஒவ்வொரு துறைக்கும் உரிய அடிப்படைப் பொதுஅறிவு அவனுக்கு அதுவரை ஊட்டப் பெறுகிறது. இவ்வாறு செய்வது விரிந்த படிப்புக்கு அவன் அறிவைத் தயார் செய்யும் நன்முயற்சியாகும். ஆனால், அதைத் தாண்டிக் கல்லூரிக்குச் செல்லும் மாணவன் என்ன செய்யப்படுகிறான் தெரியுமா? அந்த வளர்ச்சியோடேயே நிறுத்திவிடப்படுகிறான்! இது வரை எந்த அளவு கற்றானோ அதைவிட அதிகம் கற்க முடியாதவனாக முடக்கப்படுகின்றான்!

உயரமான வீடு எழுப்பவேண்டுமென்பதற்காகவே அடிப்படை அமைக்கிறோம். அடிப்படை அமைத்த பின்னும் அதிலேயே சாந்து பூசிக் கொண்டிருந்தால் கட்டிடம் எழுவது என்று?

கல்லூரிக்கு வந்ததும் பாடங்கள் அதிகமாகின்றன. இவற்றை மாணவன் படிப்பதற்குக் கீழ் வகுப்புகளிலேயே பயிற்சி தரப்பட்டிருக்கிறது. ஆனால், கல்லூரி ஆசிரியர்களும் கல்வித்துறை அறிஞர்களும் "தம்பி, நீ பள்ளியில் படித்தஅளவு படித்தால் போதும்" என்று சொல்லித் தருகின்றனர்.

(15-ம் பக்கம் பார்க்க)



சென்ற 31-3-57-ல் சென்னை அறிவகத்தில் பொதுச்செயலாளர், நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தி. மு. க. சட்டசபை உறுப்பினர் கூட்டத்தில், தி. மு. க. சட்டசபைக் கட்சி அமைப்பட்டது.

அறிஞர் அண்ணா தலைவர்.
க. அன்பழகன் து. தலைவர்.
மு. கருணாநிதி கொறடா.
ஏ. கோவிந்தசாமி,
எம். பி. சுப்ரமணியம்,
கூட்டுச் செயலாளர்கள்.



**கலைஞர். கருணாநிதி M. L. A.**

சுயமரியாதை இயக்கம் தந்த சுடரொளி, சிறந்த பகுத்தறிவு எழுத்தாளர்-பேச்சாளர். நாடக சினிமாத் துறையிலே கருத்துப்புரட்சி விளைத்த கலைஞர், கல்லக்குடிப் போராட்டத்தில் சிறைசென்ற தீரர். தி.மு.க சட்டசபைக் கட்சியின் கொறடா.



**ஏ. கோவிந்தசாமி M.L.A.**

தென்னார்காடு மாவட்ட தி. மு. க. செயலாளர்; தலைவர்கள் சிறைசென்ற போது பொறுப்பாளராகப் பணியாற்றியவர். சட்டசபை அனுபவம்பெற்ற பேச்சாளர். தி. மு. க. சட்டசபைக் கட்சியின் கூட்டுச் செயலாளர்.



திராவிடத்தின் விடுதலை வீரர் படைத் தலைவர்; தலைசிறந்த தன்மதிப்பாளர்;

**சிந்தனைக் கருவூலம், அறிஞர். அண்ணா M. L. A.**



**டாக்டர். சத்தியவாணிமுத்து M L A**

தி. மு. க. வில் தொடக்கமுதல் தொண்டாற்றும் பெண்கள் நாயகம். விடுதலைப் போரில் சிறைசென்ற வீராங்கனை. கொள்கை வழுவாத குணக்குன்று. பேச்சிலும் எழுத்திலும் வல்லவர். திராவிட மகளிர் மன்றத்தின் தீரத் தலைவியார்.

**உறுப்பினர்கள்:**

ஏ. வி. பி. ஆசைத்தம்பி,
ப. உ. சண்முகம்,
சத்தியவாணிமுத்து,
எம். பி. சாரதி,
களம்பூர்—அண்ணாமலை,
சி. நடராசன்,
கள்ளக்குறிச்சி ஆனந்தன்,
ஆத்தூர்—இருசப்பன்,
எம். செல்வராஜ்,
சந்தானம்.



**எம்.பி.சுப்ரமணியம் M.L.A.**

சேலம் மாவட்ட தி. மு. க. பிரமுகர். கழக வளர்ச்சியில் கருத்தும், உழைப்பும் மிக்கவர், சட்டசபை நடப்புகளில் அனுபவம் பெற்ற முன்னாள் திராவிட பார்லிமெண்டரி கட்சிச் செயலாளர், தி. மு. க. சட்டசபைக் கட்சியின், கூட்டுச் செயலாளர்.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.
> —திருவள்ளுவர்

# இதயம்

மலர் 7 | சேலம் 1—5—57 | இதழ் 5

## பிராம்மணியம் ஒழிப்போம்.

"பிறப்பு ஒக்கும் எவ்வுயிர்க்கும்" என்ற சமத்துவப் பெருநெறி முளைத்தது தமிழ் மண்ணில். இந்த அடிப்படை நன்னெறியில் வளர்ந்தது திராவிட இனம்—திராவிட கலாச்சாரம்

"நான்கு வருணங்களை நானே படைத்தேன்" என்று பகவான் கூறியதாகப் புளுகும் சிறுநெறி தோன்றியது வடக்கே. அந்த அடிப்படைப் புன்மை நெறியில் வளர்ந்தது ஆரிய இனம்—ஆரிய கலாச்சாரம்.

வரலாற்று ஆதாரங்களால் மட்டுமன்று; இன்றைய மொழி, கலை, உணவு, உடை, நடைமுறை, நம்பிக்கை, சமுதாயப் பழக்க வழக்கங்கள் போன்றன கொண்டும். ஆரிய திராவிட வேற்றுமைகளை அறியக் காட்ட முடியும்.

ஆரியம் திராவிடத்தில் கலந்ததுமுண்டு; திராவிடம் ஆரியத்தில் கலந்ததுமுண்டு; எனினும் இவற்றால் ஆரியத்தின் நச்சுத்தன்மை நலிந்திடவில்லை! பகவான், பக்தி, மதம், தர்மம், ஆத்திகம், ஆச்சாரம், புராணம், இதிகாசம், மோட்சம், நரகம், சனாதனம், சாதிகுலம், உயர்ந்தவன், தாழ்ந்தவன், புரோகிதம், சடங்குகள் எனப்பரவி, பிராம்மணிய வடிவில் பெரும் பாதகம் புரிந்து கொண்டுதான் இருக்கிறது இன்றும், நாளையும் இருக்கும்.

பிராம்மணியத்தின் கர்த்தாக்கள் பிராம்மணர்—ஆரிய மேலோர்! ஆனால், அஃது ஏமாளித் திராவிடரிடத்தும் தொத்திக் கொண்டிருக்கிறது! தொல்லை தருகின்றது!

பஞ்சாங்கம், பஞ்சகச்சம், உச்சிக்குடுமி, பூணூல் முதலிய பிராம்மணியச் சின்னங்கள் அவர்களிடம் மட்டுமா இருக்கின்றன? படித்தவர்கள், பண்டிதர்கள், பண்பாளர் என்று சொல்லப்படுகிறவர்கள் "பிராம்மணியம்" வளர்க்கும் திருக்கூத்தைப் பார்க்கின்றோமே!

அதேபோல் ஆரியப் பிராம்மணர்களிலே நல்லவர், நாட்டுநிலையறிந்தோர், திராவிடநெறி காக்கும் சமத்துவ விரும்பிகள் இல்லையென்று சொல்லிவிட முடியாது.

இந்தியப் பகுத்தறிவாளர்களின் தலைவர். டாக்டர் ஆர்.பி. பராஞ்சிபை பிறப்பால் பிராம்மணர். சிறந்த சிந்தனையாளர். எம். என் ராய் பிறப்பால் பிராமமணர். அவர்களின் பேச்சும் எழுத்தும், பெரும்பணியும் பகுத்தறிவாளர்க்குத் தேன்போல் தித்திக்கின்றனவே! நாட்டுக்கு நல்லன செய்கின்றனவே! எவர் மறுப்பார் இதனை? "பிராம்மணியம்" பகுத்தறிவுக்கு முரண்பட்ட, தேவையற்ற சுரண்டல் கொள்கை; மனித சமூக சமதர்ம வாழ்வுக்கு முட்டுக்கட்டை. எனவே அதனை ஒழிப்பது பகுத்தறிவாளரின் முதற்கடமையாகும். அப் பெரும்பணியினைச் செய்து வருகின்றனர் பகுத்தறிவாளர்—தி.மு.க. வினர்! இனியும் செய்வர். பிராம்மணியம் செத்துச் சுடுகாடு சென்று புதையுண்டு, அதன் சமாதியின்மேல் புல் முளைக்கும்வரை செய்து கொண்டே இருப்பார்கள்.

ஆனல், பிராம்மணியத்தை விட்ட பிராம்மணனை, தெய்வத்தன்மை துறந்து மனிதத் தன்மைபெற்ற மறையோனை புறக்கணிக்க வேண்டியதில்லை. புறக்கணித்து ஒதுக்கிவைப்பது திராவிடப் பெருநெறிக்கு உகந்ததுமல்ல; மனிதாபிமானத்திற்கு ஏற்றதுமல்ல! "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற பொதுமைத் தமிழறம் பொய்யறமாதல் வேண்டாம்.

திராவிட மொழி, பண்பு, கலை, வீரம், நெறி, முதலியன வளரவேண்டும். திராவிடநாடு திராவிடருக்கே ஆதல்வேண்டும் இங்கு மனிதனை மனிதன் ஏய்க்காத பகுத்தறிவுபூர்வமான சமத்துவ நல்வாழ்வு மலரவேண்டும். அத்தகு நிலையினைப் பெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். ஆம்! அனைவருமே!

ஆரியப் பிராம்மணியத்தை வெறுக்கிறோம்; பிராமமணியத்தை விட்ட பிராமமணர்களை வரவேற்கிறோம், திராவிட சமத்துவ நெறியை வரவேற்கிறோம்; அச் சமத்துவ நெறியைவிட்ட திராவிடர்களை வெறுக்கிறோம். நல்லன பாராட்டுவோம்; அல்லன கண்டிப்போம்! தவறென்ன? இதனை கொண்ட கொள்கையை எப்படி திராவிட முன்னேற்றக் கழகம் கைவிட்டதாகிவிடும்?

நமக்குப் பகைமை பிராம்மணியம்! பிராம்மணர்களல்ல; நாம் ஒழிக்க வேண்டியது பிராம்மணியத்தை; பிராமணர்களையல்ல. ஒழிப்போம் வாருங்கள் தன்மானத் தோழர்களே! ●●



# தசாம்ச நாணய முறை

தசாம்ச முறையைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு ஒரு சுலபமான உதாரணத்தைக் கவனிக்கலாம்: 456 என்ற இலக்கத்தை எடுத்துக்கொள்வோம். இது எவ்வளவு என்று ஒருவரிடம் கேட்டால் அவர் "இது தெரியாதா நானூற்று ஐம்பத்தாறு" என்று சொல்லிவிடுவார். 'ஏன்' என்று கேட்டால், '6' அதற்குரிய மதிப்பைப் பெற்றிருக்கிறது. ஐந்து பத்தாவது ஸ்தானத்தில் இருப்பதால் ஐம்பது ஆகிறது அதேபோல் '4' நூறாவது ஸ்தானத்தில் இருப்பதால் நானூறாகிறது. மொத்தம் 456 நானூற்று ஐம்பத்தாறாகிறது என்று கூறிவிடுவார். அதாவது 4, 5, 6 என்னும் இலக்கங்கள் அவை வகிக்கும் ஸ்தானத்தைப் பொறுத்து மதிப்புப் பெறுகின்றன.

இவ்வாறு ஸ்தானத்தைப் பொறுத்து மதிப்புப்பெறுகிற ஒரு முறைதான் தசாம்ச முறைக்கு அடிப்படையாகும். பணம், எடை, படி, நீளம், பருமன் முதலிய எதுவாயிருந்தாலும் சரி, கீழ் இனமாக்கவோ, மேல் இனமாக்கவோ சதா பத்துதான் உபயோகிக்கப்படுகிறது.

இவ்வாறு ஸ்தானத்தின் மூலம் எண்களுக்கு மதிப்பு கிடைக்கிற முறை ஏற்பட்டு சுமார் 2000 வருஷங்கள்தான் ஆகியுள்ளன. அதாவது கிறிஸ்து சகாப்த ஆரம்பமுதலதான் அது ஏற்பட்டிருக்கிறது.

அதற்குமுன் பத்துக்கு மேற்பட்ட எண்களை எழுதுவதே சிரமம். எகிப்தியர்கள் 15 என்று எழுதுவதற்கு 33333 என்று எழுதினார்கள்.

இந்திய கணித சாஸ்திரிகள் சுன்னம் அல்லது சுழி அல்லது பூஜ்யம் (0) என்பதைக் கண்டு பிடித்ததால்தான் இந்த ஸ்தான மதிப்புக் கணக்கு முறை சாத்தியமாயிற்று இந்தியா மனித சமுதாயத்துக்கு அளித்துள்ள மிக சூட்சுமமான நன்கொடை உதவி இது, என்று அறிஞர்கள் பாராட்டியிருக்கிறார்கள். பூஜ்யம் கண்டு பிடிக்கப் பட்டதன் மூலம் கணக்கு முறையே புரட்சிகரமாக மாறிவிட்டது; சுலபமாகவும், துரிதமாகவும் கணக்கிடுவது சாத்தியமாகிவிட்டது.

இந்த ஸ்தான முறை சுலபமான கணிப்பு முறையாக அமைந்து, மேலினம், கீழினம் வரிசைகளில் கணக்கிட சுலப வழி ஏற்பட்டதால், உலகத்தில் முக்கால் பங்கு நாடுகளில் இந்த முறை பின்பற்றப்படுகிறது. முதலில் அமெரிக்காதான் (1786, 1792 வருஷங்களில்) வழிகாட்டியது. பிறகு பிரான்ஸ் (1799-1803) அதைப் பின்பற்றியது.

காலப் போக்கில். ஜெர்மனி ஸ்காண்டிநேவிய நாடுகள் ஆஸ்திரேலியா, ஹங்கேரி ருஷ்யா, தென்னமரிக்க நாடுகள், ஜப்பான் ஆகியவையும் அதை மேற்கொண்டன. இப்போது சுமார் 60 நாடுகள் தசாம்ச முறையைப் பின்பற்றி வருகின்றன.

இந்தியாதான் பூஜ்யம்பிறந்த நாடாக இருந்தபோதிலும், பல்வேறு காரணங்களால் இங்கே தசாம்ச முறை வெகுகாலத்திற்குப் பின்புதான் மேற்கொள்ளப் படுகிறது தேசம் துரிதமாகத் தொழில் மயமாகி வருவதால், இப்போது அதைக் கையாளத் தீர்மானிக்கப்பட்டிருப்பதானது. விசேஷமாக தொழில் துறையில், தசாம்ச முறை. கணக்குகளுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும்.

நாணயங்கள் அச்சிட்டு வழங்குகிற மொத்தம் 140 நாடுகளில் 105-ல், தசாம்ச நாணயமுறை இருந்து வருகிறது. பிரமாண்டமான அளவில் தொழில் அபிவிருத்தி தொடங்கியுள்ள இந்தியாவும் பிரிட்டனைப்போல் காத்துக்கொண்டிருந்தால் பிறகு தசாம்ச முறைக்கு மாறுவது அதிகச் செலவுள்ள சிரமமான ஏற்பாடாகிவிடும். ஏனென்றால் அதற்குள் சதாரண முறைப்படி தயாரிக்கப்பட்டுள்ள ஆயிரக் கணக்கான கணிப்பு யந்திரங்கள் உபயோகத்துக்கு வந்துவிடும். விஞ்ஞானக் கருவிகளையும் திரும்ப மாற்ற வேண்டியிருக்கும்.

இந்த அம்சங்கள் தவிர எதிர்காலச் சந்ததிகள் தற்போதைய கணக்கு முறைப்படி—ஒரு ரூபாய்க்கு 16 அணா, ஒரு அணா

[12-ம் பக்கம் பார்க்க]

தி. மு. க. வின் பண்புமிக்க சிறந்த பேச்சாளர்-எழுத்தாளர்களிலே ஒருவர். பகுத்தறிவு நெறிகாக்கும் செயல்வீரர், கலப்புமணம் புரிந்தவர், கண்ணியம் நிறைந்தவர். திருவண்ணமலை நகரசபைத் தலைவராகப் பணியாற்றி நல்லோரின் நன் மதிப்பும், நிர்வாகத் திறனும் படைத்த நேர்மையாளர்.



ப. உ. சண்முகம் M. L. A.



ஈ. வே. கி. சம்பத்து M.P.

ஈரோடு குடியரசுப் பாசறை தந்த சொல்லின் செல்வர்; நிகரற்ற திராவிட சம்பத்து; அறிவாற்றல் மிக்க அரசியல்வாதி; சீர்திருத்தச் செம்மல்; பகுத்தறிவுப் பண்பாளர்; விடுதலைப்படை நடத்தி சிறை சென்ற வீரர்; அரசியல் அடிமைத் தளையறுக்க, ஆதிக்கபுரி டெல்லி பாராளுமன்றம் செல்லுகின்ற செயல் மறவர்.

எளிய தோற்றம், இனிய பேச்சு, தன்னடக்கப் பண்புமிக்கவர்; இலட்சியப்பாதை விட்டு விலகாதவர்; வேலூர் நகரசபை உறுப்பினர்: பொதுவாழ்வில் கண்ணியமும், காரியமாற்றும் வல்லமையும் பெற்றவர்.



எம். பி. சாரதி M.L.A.

## எதிரொலி

மானமதுரையில் சித்திரைத் திருவிழா தேர் அச்சு முறிவு! நீ விபத்து ஆனாலும் உயிர்ச்சேதமில்லை.

—செய்தி.

ஆண்டவன் நிலைமை பெருமை; அவனது அளப்பரிய சக்திகளுக்குப் பெருஞ் சோதனையாயிற்றே!

* * *

நாஸ்திகர் இல்லை என்று சொல்லிக் கொள்ளும் அண்ணாதுரை சாமி கும்பிடத் தயாரா?

—ம. பொ. சிவஞானம்.

சாமி கும்பிடுவோரெல்லாம் ஆஸ்திகர்கள்தான் என்பதை சிவஞானம் ஒப்புகிறாரா?

வாலிபர்களே! ஆபாசப் புத்தகங்களைப் படிக்காதீர்கள்.

— மந்திரி. சுப்ரமணியம்.

ஆலயக் கோபுரத்தில் நிர்வாணப் பதுமைகள்! அங்கேயும் போகாதீர்கள்!

* * *

ஸ்ரீ ரங்கம் அம்மன் சாமிக்கு வைரத்தாலி. ரூ 10 ஆயிரம் செலவில் செய்து போட்டார் ஒரு பக்தை!

—செய்தி.

ஆண்டவன் அடித்தாலும், உதைத்தாலும், கடித்தாலும் அம்மன் இனிமேல் விவாகரத்து செய்யமுடியாதல்லவா? எவ்வளவு மதிப்புயர்ந்த தாலி!

* * *

தமிழக மக்கள் உழைப்பின் விசை டில்லியில் இருப்பது விசித்திரமாக இருக்கிறது. தமிழகம் விடுதலைபெற வேண்டும்!

—வினோபாபாவே.

தமிழகத் துரோகிகளும், அவர்களுக்கு வால்பிடிகளும தூர்த்தர்களும் இருந்தவேண்டுமே!

* * *

இலங்கை அகதிகள் புனர்வாழ்வு. கவனிக்கப்படுமா?

—செய்தி.

இதைச்செய்ய இங்கே தமிழரசுமில்லை, வடக்கே தமிழமைச்சருமில்லையே!



இலக்கியச் சோலையிலே,

# தெள்ளுதமிழில் உள்ளுறை உவமை.

மாருதம் வீசும் மாலைவேளையில் மருத நிலத்து சூழ்நிலை மிக மனோரம்யமாக இருந்தது. அவ்வேளையில் தான் அவன் அவள் வீட்டை வந்தடைந்தான். வீட்டினுள்ளே ஒரு திரைச் சீலைக்குப் பின்புறம், அந்த மங்கை மஞ்சமதில் ஒய்யாரமாக அமர்ந்திருந்தாள். இவன் வரவை கடைக் கண்ணால் பார்த்த பின்பும் அவள் அலட்சியமாக இருந்தாள். அவள் அவனுடையவளாக இருந்திருந்தால் அவன் வருமுன் வரவேற்கக் காத்திருப்பாள். ஆனால், அவளோ பொதுச் சொத்தாயிற்றே! முத்து நகை காட்டி, வகை காட்டி, இடை காட்டி, நயம் கூட்டி இளையோர்க்கு ஆசை காட்டுபவளாயிற்றே! அவள் எப்படி எதிர் கொண்டழைக்க முன் வருவாள்? சில நாட்களுக்கு முன்பு வரை இவனுடன் கூடிக் குலவியவள் தான் என்றாலும், அவனுடைய மனைவி அவனை அவளிடமிருந்து பிரித்து விட்டாள். மேலும், இவளைப் பற்றி அவன் மனைவி குளக்கரையிலே அவதூறாகப் பேசியதை இவளே கேட்டுவிட்டாள். அவளுடைய பேச்சினால் தன்னுடைய தன் மானமே (?) பறி போய்விட்டதென்று கோபங்கொண்டாள். பழி தீர்த்துக்கொள்ள எண்ணி இப்பொழுது இவனை இகழத் தலைப்பட்டாள். அவளுடைய தோழி இவனுடைய வரவை அறிவிக்க எண்ணி, "அம்மா, யாரோ வந்திருக்கிறார் போலிருக்கிறது" என்றாள். அதற்கு அவள், "அந்த ஆடிப் பாவை தான் வந்திருக்கும்" என்றாள்.

"ஆடிப் பாவையா? அது என்னம்மா?"

"நாம் கண்ணாடியின் முன் நிற்கும்போது கண்ணாடியில் ஒரு நிழலுருவம் தெரிகிறதே, அதற்குத்தான் ஆடிப்பாவை என்று பெயர்"

"அதற்கும் இவருக்கும் என்னம்மா சம்மந்தம்?"

"இது தெரியாதா? அந்த ஆடிப்பாவைக்கு உயிரும் உணர்ச்சியும் கிடையாது. நாம் செய்வதையெல்லாம் அது திருப்பிச் செய்யும். நாம் கையைத் தூக்கினால் அதுவும் தூக்கும். அதுபோல இவருக்கும் உணர்ச்சியே கிடையாது. இவர் தன் மனைவியின் சொற்படி ஆடுவார். அவள் ஆடு என்றால் ஆடுவார்; பாடு என்றால் பாடுவார். வயல் வரப்பிலே உள்ள மாமரத்தில் காய்த்த மாம்பழம்கனிந்து, தானே அருகில் உள்ள குளத்தில் விழும்; உடனே அக் குளத்தில் உள்ள வாளைமீன் அக் கனியை உண்ணும்; அந்த அளவிற்கு வயல்களும் வாவிகளும் நிறைந்த ஊரைச் சேர்ந்த இவர், இங்கே நம்மிடம் வந்தால் மட்டும்பெரிய வீரப்புப் பேசுகிறார். வீட்டிற்குப் போனால் தன் மனைவிக்கு அடங்கி ஒடுங்கி நடப்பார். தாய் விரும்புவதையெல்லாம் தனயன் செய்வதுபோல, இவரும் தன் மனைவி விரும்புவதையெல்லாம் தட்டாது செய்து முடிப்பார்" என்று கூறி முடித்தாள்.

இந்தக் கருத்தில் ஆலங்குடி வங்கனார் என்ற நல்லிசைப் புலவர் குறுந்தொகையில் ஒரு செய்யுள் எழுதியிருக்கிறார்:-

"கழனி மாத்து
விளைந்துகு தீம்பலம்
பழன வாளை
கதூஉ மூரன்
எம்மிற் பெரு மொழி
கூறித் தம்மில்
கையும் காலும்
தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல்
மேவன செய்யும்
தன் புதல்வன் தாய்க்கே"

இச் செய்யுளை மேலெழுந்தவாரியாக நோக்கினால் மேற்கூறிய பொருள்தான் புலப்படும். ஆனால் திறனாய்வு (Criticism) முறையில் சற்று உற்று நோக்கினால், இதனுள் மறைந்து நிற்கும உள்ளுறை உவமை புலனாகும். இந்த உள்ளுறை உவமைகள்தான் இலக்கியத்தில் நாம் சுவைக்கும் இன்பங்களில் மிகச் சிறந்ததாகும். வேற்று மொழிகளிலே இத்தகைய இன்பத்தைக் காண முடியாது. இச் செய்யுளின் முதலிரண்டு வரிகளில் தான் அவ்வின்பம் மறைந்து நிற்கிறது. இதில் வயல், மாமரம், வாளை என்பவை மருத நிலத்துக்கருப்பொருள்களாகும். எனவே, இப் பாட்டு மருதத் திணையைச் சேர்ந்ததாகிறது. மருத நிலம் ஊடலுக்கு உரியது. எனவே விலைமகள் ஊடலின் காரணமாக தலைவனைப் பழிப்பதாக இச் செய்யுள் அமைகிறது. எனவே முதலிரண்டு வரிகளில் உள்ளொன்று வைத்துப் பேசுகிறாள். அதாவது:

[11-ம் பக்கம் பார்க்க]




[முன் இதழ் தொடர்ச்சி]

"கரும்பே! இன்னும் இரண்டு மாதகாலந் தானே!"

"ஊகும்! வாழ்க்கையின் வளமான வயதுபோன பின்பு வரப் போகிறீர்களா? சுவாமி! அதுவரை ஒரு நாளைக்கு—ஒருமுறையாகிலும் தங்களைக் காணக் கூடாதா? நானென்ன அவ்வளவு கொடுமைக் காரியா?"

"ராணி! வருந்தாதே..."

"அடியாளைக் காணத்தங்களுக்குப் பிரியமில்லா திருக்கலாம்......தங்களைக் காண எனக்கு ஆவல் இருக்காதா?

"ராணி! ஆசையைக் கொன்ற ஆசிரமவாசி யல்ல நான், இங்கு வந்ததிலிருந்தே அதைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டுமே!"

"ஊகும்! கண்ணைக் கட்டிக்கொண்டு நிலா முற்றத்தில் உலாவ வந்து விட்டீர்! வேடிக்கையாயிருக்கிறது! காணத்தான் தடை.... திரை மறைவில் இதுபோல் நிதம் பேசவாவது அனுமதிப்பீரா?"

"கண்ணே! போர்க்களம் போய் திரும்பி வந்ததும்........"

"போர்க்களமா?...யாரோடு போர்? எப்போது? ஏன்?"

"செம்மறி ஆட்டுக் கூட்டம் சேர்ந்து வந்துள்ளது! விரட்டியடித்து 'விட்டு விரைவில் திரும்புகிறேன்! விடைதா!"

"யரோடு போர்?" யாரோடு?

"ஆற்காட்டு நவாப் போர்க்கோலம் பூண்டு மரணத்தைத் தழுவ ஓடோடியும் வந்திருக்கிறான்! பச்சோந்திகளைப் பயமுறுத்தி பகுதிப்பணம் வசூலித்து வந்தவன், இன்று நம்மைக் கேட்கிறான்! கதவை அரிக்கும் கரையான் கல்லை அரிக்க ஆசைப்படுகிறது! அவன் மரண சாசனத்தை என் வாள்கொண்டு எழுதப் போகிறேன்!"

"ஐயோ!......உங்கள் முகத்தைக் கூட சரியாய் பார்த்ததில்லையே!......இதற்குள் போருக்குப் போகிறீரே!"

"ராணி! கடலிலே கலம் ஓட்டுபவன் புயலை எதிர்பார்த்துத்தான் போகிறான்! அதைப்போல் புவியை ஆளுவோன் போரை எதிர் பார்த்துத்தானே வாழ வேண்டும்? போர்! வீரனின் விளையாட்டு! வீணனின் உயிர்க்கொல்லி! ஆண்மையின் அளவுகோல்! பேடியின் படப்பிடிப்பு! மன்னர்களின் திருவிழா! மதோன்மத்தர்களின் மரணவிழா! இதைக் கண்டாநீ அஞ்சுகிறாய்? விடைதா வெற்றிமாலையோடு வருகிறேன் பார்! எரிமலையைப் பனித்துளிகளாலா அணைக்கமுடியும்? அச்சம் விடு! வழி அனுப்பி விடை கொடு,'

வீரமொழி கேட்டு மகிழ்கிறாள் செஞ்சிராணி! ஆனால் போரின் விளைவுகளை எண்ணிக் கலங்குகிறாள்.

"என் காதலி இத்தகைய கோழையாயிருப்பாளென்று நான் நினைக்கவில்லையே!"

"சுவாமி! ஒரு பெண்ணின் உள்ளம்............ அதுவும் மாலையிட்ட நாள் கூட மணாளன் முகத்தை



சரியாகப் பார்த்தறியாத பெண்ணின் நெஞ்சம் எப்படி யிருக்கும் என்பதை ஏனோ எண்ணிப் பார்க்க மறுக்கிறீர்?"

"ராணி! அறிவேன் உன் மனநிலையை! இருப்பினும்,நினைத்துப்பார்! கப்பம் கட்டும் கோழையின் மனைவியாக நீ இருக்கச் சம்மதிக்கிறாயா? சுமைதாங்கிக் கல்லைப்போல உன் கணவன் முடிதாங்கித் திரிவதை ஏற்கிறாயா? மக்கள்முன் வாளை நீட்டி வரிவசூலித்து, அதை மாற்றானுக்கு வெண்சாமரம் வீசி வெகுமதி தர இசைகிறாயா? எளியோர்களை மிரட்டி ஏமாளிகளை வஞ்சித்துப் பணம் சேர்த்து, வஞ்சகன் ஒருவனுக்குக் காணிக்கையாக்க உபதேசிக்கிறாயா? நவாபின் பாதத்தை மணிமுடி யாகச் சூட்டிக் கொண்டு மன்னன் என்ற பெயரோடு உலாவச் சொல்கிறாயா? பத்தினியே! ஆற்காட்டான் அழைத்த போதெல்லாம் அவன் அவையிலே கரம் கட்டி காத்துக் கிடந்து, இட்டபணியைத் தட்டாது புரியும் ஏவலாளியாக இருக்கச் சொல்கிறாயா? பதில் சொல்......எந்த வாழ்வு வேண்டும்? ஆற்காட்டான் அடிமை வாழ்வா? அன்றி சுதந்திர சுகவாழ்வா? முடிதாங்கிய சேவகத் தொழிலா? அல்லது வாள் ஏந்திய வீரமரணமா? அடிமை அரசனென்று சரித்திரம் என்னை இழித்துரைக்க இடம் தந்துவிட்டு, உன் மடியிலே படுத்துப் புரளட்டுமா? அல்லது அஞ்சா நெஞ்சினன் என்ற புகழ்ச்சொல்லோடு புதை பூமி புகட்டுமா? முந்தியதன் முடிவில் செத்தால் பிழைக்க முடியாது' பிந்திய முறையில் செத்தாலும் சாகாது உலாவலாம்! எது வேண்டும்?"

"கல்லாக்கிக் கொண்டேன் என் காதல் நெஞ்சை! சென்று வாருங்கள்! மாற்றானுக்கு மண்டியிடுவோனின் மனைவியாக வாழ்வதை விட வீரனின் மனைவியாகத் தீக்குளிப்பேன்! வெற்றி உங்கள் பால் நிற்கட்டும்! ஆனால்........"

"ஆனால்.........?"

"புறமுதுகில் அம்பு பட்டு இறந்தால்"

"இல்லை அந்தப் பழிச்சொல் நம் வரலாற்றில் வராது!......என்னை ஈன்ற தாயின் மீது ஆணை! நான் தவழ்ந்த இம்மண் மீது ஆணை! நிதம் நீராடிய சங்கராபரணி நதியின் மீது ஆணை! பகைவரிடம் புறமுதுகு காட்டேன்! நான் வெற்றி பெற்றால் முரசு முழங்கும்! தோற்றால் தாரைசப்தம் கேட்கும்! ராணி! காலதாமதம் செய்யாதே, உன்தளிர்க்கரத்தால் தாம்பூலம் கொடு"

கிழித்தான் திரையை வாளால்; நுழைத்தான் கையை; பிடித்தாள் பாவையவள்; பார்த்தாள் ஆவல் தீர! விழித்தாள், கண்ணீர் வீழ்ந்தன இரு துளிகள்! இட்டாள் வெற்றிலைப் பாக்கு. முத்தமிட்டாள் கரத்தை. அந்தச் சில விநாடிகள் அவனுக்கு இன்ப லோகம் காட்டியது! புறப்பட்டான்!

## 14. வீர முழக்கம்.

மணக்கோலத்தைக் கலைத்து விட்டு, போர்க்கோலம் பூண்டு ஓடோடி வந்த நண்பனைக் கண்டான் தேசிங்கு!

"மணம் முடியாது ஏன் வந்தாய்?"

"மணம்!.........நவாபின் மரணத்தின் மறுநாள் தான் மணம்!......அவன் குருதியில் நடந்துதான் மணப்பந்தல் புகுவேன்! தாங்கள் போர்க் கோலம் பூண்டிருக்கையில் நான் மணக்கோலத்தில் மகிழ்வோடிருப்பதா? பிணவாடை வீசும் போர்க்களத்தில் தாங்கள் இறங்குகையில் மணம் வீசும் போக பூமியில் நான் இருப்பதா? அத்தகைய கடையன் என்றோ என்னை எண்ணினீர்? உத்தரவு தாருங்கள்; உலுத்தர்களைத் துரத்தியடித்து விட்டுத் திரும்புகிறேன்! காலதாமதம்செய்யாதீர்!நவாபின் காலனுக்கு விடைதாருங்கள்! கிழித்தெறிகிறேன் அவன் சதையை! ஆற்காட்டான் மணிமுடியைத் தங்கள் திருவடியில் கொண்டு வந்து சேர்க்கிறேன். அவன் கண்களை நோண்டி தங்கட்குக் காணிக்கையாக்குகிறேன்! 'சதைமலை' அவனைக்கொன்று, சந்துமுனையில் கொலுவைத்துக் காறி உமிழச் செய்கிறேன்! அவன் தோலில் மேளம் கட்டி, அவன் எலும்பு கொண்டு அதை அடிக்கச் செய்கிறேன்! அவன் கறியை வான வீதிகளில் எறிந்து, காகத்திற்கும், கழுகிற்கும் இரையாக்குகிறேன்! தாருங்கள் உத்தரவு! பாருங்கள் விளைவை!"

"மகமத்கான்! பாயும் புலியே! வா.........நானும் வருகிறேன். தலை கனத்த அந்த தலைகளைச் சவக் குழிக்கு அனுப்புவோம்"

"இதற்குத் தாங்களா வரவேண்டும்? என் திறமையில் நம்பிக்கையில்லையா?

"நண்பா! நம்பிக்கைக்குறைவல்ல, உதவிக்கு வருகிறேன் என்றேன், வா போகலாம்!"

புறப்பட்டனர் இருவரும். வாளேந்தி நிற்கும் வீரர்களைப் பார்த்தனர்!சென்று அவர்கள் முன்னால் நின்றான் தேசிங்கு.

"நண்பர்களே! புலியின் புதரைப் பன்றிக் குட்டிகள் முற்றுகை இட்டிருக்கின்றன, விந்தை! ஆயினும் நடைபெற்றிருக்கிறது! வாளையும் தோளையும் நம்பி வாழும் நம்மைச் சோடைகள் என்றெண்ணி விட்டான் நவாப். வேங்கைகளை வீழ்த்த வேழங்களைக் கூட்டி வந்திருக்கிறானாம். சிங்கக் குட்டிகளை முறியடிக்கக் குதிரைப் படைகளைக் கூட்டி வந்துள்ளானாம். வேட்டைப்புலிகளை வீழ்த்த ஒட்டகைளும் வந்துள்ளனவாம். 'அடிமையாக்குவேன்'என்று வந்திருக்கிறான்! பகுதிப் பணம் கேட்டான்;மறுத்தோம்; படைகளைக் கூட்டி வந்திருக்கிறான்! வாள் பிடித்த கரங்கள் அவன் தாள் பிடிக்காது. வீரர்களே! எந்தச் சங்கராபரணி ஆற்றில் உரிமையோடு நீராடினீரோ, அந்தச் சங்கராபரணி ஆற்றை அடிமையாக்க வந்திருக்கிறான்! மூதாதையர் கட்டி முடித்த இக்கோட்டைகளை சூதாகத் தன் உடமையாக்கிக் கொள்ள ஓடோடி வந்துள்ளான்! நம்மை வெட்டிச் சாய்த்திட படைகள் பலவற்றை அழைத்து வந்துள்ளான்! தலைகளை உருட்டி, அவயவங்களை அறுத்து, குருதியைக் குவலயத்திற்கும், சதைகளைப் பறவை கட்கும் விருந்தாக்க "விஷ" நினைவு கொண்டு வந்துள்ளான். வாருங்கள்!தாய்நாட்டைக் காக்க,பேய்க்கூட்டத்தை ஓட்ட வாருங்கள்!

அடிமை வாழ்வைவிட அழியா மரணத்தைத் தழுவிடல் மேல்! பெற்ற பொன்னாட்டையும் பெண்டு பிள்ளைகளையும் அயலானுக்கு அடகு வைத்துவிட்டு, ஆணைப் போல் ஆடையுடுத்தி, பெண்ணையும் போல் பதுங்கி வாழும் பேடி வாழ்க்கை நமக்கு வேண்டாம்! உறையில் உறங்கும் வாளைக் காட்டி உழவனிடம் வரியை வாங்கி, முகத்தில் துலங்கும் மீசையைக் காட்டி, அகத்திற்கு ஆறுகை வாழ்ந்து, உடலில் ஒட்டிய கரங்களைத் தூக்கி உலுத்தனை வணங்கி 'வீரனுக' இருப்பதைக் காட்டிலும், மானம் காக்கும் போரிட்டு மண் மாதா மடியில் படுப்பது மேல்! கோழைகளாயிருப்போர் ஒதுங்கி நிற்கட்டும். அலிகளெல்லாம் பதுங்கி வாழட்டும்! குருதியிலே குளிக்க அருகையுடையோர் மட்டில் எங்கள் பின்னால் வரட்டும்! விரட்டுவோம் பகைவரை! வெட்டி வீழ்த்துவோம் அக்கயவரை! முரசு கொட்டிடுவோம் இறுதிவரை!''

தேசிங்கு முழங்கினான். வீரர்கள் சூளுரைத்துப் புறப்பட்டனர்!

பாய்ந்தான் தேசிங்கு பாராசாரிமீது! நீலவேணியின் மீது ஏறினான் மகமத்கான்!

## 15. ஆற்றைக் கடந்தனர்.

நவாப் தேவனூரைச் சூறையாடினான்,கொள்ளையடித்த வீடுகளில் கொள்ளி வைத்து, பெண்களை போகப் பொருளாக்கும் கொடும்போர் முறையில் ஈடுபட்டனர் நவாபின் படையினர்!

தேசிங்கு கொதித்தெழுந்து வருவதைக் கேட்டான் நவாப்! அவனுடனிருந்த சுபங்கித் துரையும், ஷேக்மகமதுவும், வெங்கடராயனும், அப்துல் காதரும் பாராசாரி மீது பறந்து வரும் தேசிங்கின் கோபத்தைக் கேட்டதும்,நடுங்கினர்! பாய்ந்து வருகிறான் எனக் கேட்டதும், பயந்து ஓட முனைந்தனர்! தன் பரிவாரம் பயந்தோட முனைவதைக் கேள்வியுற்றான் நவாப். அழைத்தான் படைத் தலைவனை. அவன் ஆலோசனையின் பேரில் தாழனூர்-மலையனூர் ஏரிகளை உடைத்துவிட உத்தரவிட்டான். உடைக்கப்பட்டன அவ்விரு ஏரிகளும்!சங்கராபரணியில் வெள்ளம் பெருக்கெடுத்தது. தேசிங்கின் வேகம் தடைப்பட்டது, அதனால். அறிந்தான் காரணத்தை. சிற்றப்பன் தரணிசிங் தடுத்தும் கேளாது, தாவினான் ஆற்றில். ஒரு நொடியில் பாராசாரி அவனை அக்கரை சேர்த்தது. மகமத்கான் பாய்ந்தான் நீலவேணியோடு! வீரர்கள் சிலர் பாய்ந்தனர்! பலர் நின்று விட்டனர். திரும்பிப் பார்த்தான் தேசிங்கு. அக்கரையிலேயே நிற்கும் கோழையர்களைக் கண்டு எள்ளி நகைத்தான். பெருங் கோபங் கொண்டான் மகமத்கான். நெருங்கினான் தன் நண்பனை.

"வேந்தே! வந்தவர் போதும்; வராதவர் வேண்டாம்! ஆணையிடுங்கள், ஆற்காட்டான் சேனையை அதம் செய்கிறேன், அரை நொடியில், பீரங்கியோடு முதல் வரிசையில் நிற்கிறான் சுபங்கித்துரை.கடைசியில் நிற்கிறான் நவாபு. இருவர் தலையையும் தங்களிடம் சேர்க்கிறேன்!"

"மகமத்! நானும் வருகிறேன். இருவரும் சேர்ந்து அந்த ஆட்டுக் கூட்டத்தை வெட்டிச் சாய்ப்போம்!" என்றான் தேசிங்கு.

(வளரும்)



(15-ம் பக்கம் தொடர்ச்சி)

வதும் படிப்பானு? அட, என் அருமைப் பெற்றோர்களே, நீங்களும் தான் உங்கள் மக்களின் அறிவு வளர வேண்டுமென்று நினைக்கிறீர்கள்? பட்டம் ஒன்று பெற்றுவிட்டால் போதும் என்றுதானே நினைக்கின்றீகள்!

1957-ம் ஆண்டில், அதாவது இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒவ்வொரு கல்லூரி ஆசிரியனும் (ஒரு வேலை எங்கோ ஒன்றிரண்டு பேர் தவிர) தன் ஆசிரியன் தனக்கு முக்கியமானது என்று எழுதித் தந்த பாடக் குறிப்பையே (Notes) தன் மாணவனுக்குச் சொல்லுகிறான்; மாணவன் அதை மட்டும் எழுதி வைத்துப் படிக்கிறான். ஒருவேளை ஆசிரியன் மறந்து விட்டாலும், "முக்கியமானவற்றை மட்டும் கொடுங்கள் ஐயா, எழுதிக் கொள்ளுகிறோம்" என்று கேட்டு நினைவு படுத்த மாணவன் தவறுவதில்லை!

முக்கியமானது என்கிறார்களே, அது எங்கிருந்து வந்தது? அது பிறந்த கதை மிக விந்தையானது. வினாத்தாள் குறிக்கும் ஆசிரியனின்கோழைத்தனத்துக்கும் சோம்பலுக்கும் பிறந்த அருமைக் குழந்தைதான் இந்த 'முக்கியமானது!'

'முந்தி வந்தவர்களெல்லாம் இதைத்தானே முக்கியமென்று கருதியிருக்கிறார்கள்; அதனால் தானே இதைக் கேட்டிருக்கிறார்கள். நாம் போய் அதை விட்டு வேறொன்றைக் கேட்டால் நம் மூளையைப் பற்றி...?' இப்படி எண்ணுகிறகோழைத்தனம் ஒன்றையே மீண்டும் மீண்டும் முக்கியமானதாக்குகின்றது.

மற்றவர்கள் முக்கியமானது என்று குறிப்பிட்டதை விட்டு வேறு ஒரு முக்கியமானதைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் முயற்சி வேண்டுமல்லவா? இந்த முயற்சியை மேற்கொள்ள இவர்கள் விரும்புவதில்லை. 'என்னத்துக்குத் தொல்லை? பழையதையே கொடுத்து விட்டால் போகிறது' என்று பழைய செக்கையே சுற்றுகின்றனர். முதுபெரும் புலவர், அறிஞர், அவர் இவர் என்றெல்லாம் (உழைப்பாலும்தான்)பட்டங்களைப் பெற்று வைத்துக்கொண்டு அவற்றையே செதுக்கித் தின்று கொண்டிருக்கின்ற இந்தச் சோம்பேறிக் கிழங்களை ஏனென்று கேட்பாருமில்லை! பிறகென்ன? தலைமுறை தலைமுறைகளாக ஒன்றிரண்டு செய்திகளுக்குத்தான் முக்கியத்துவம். அதை மட்டும் படித்து விட்டுத் தேர்வெழுதி மறந்து விட்டு "அறிவு நிர்வாணி" யாக நிற்கிறான் மாணவன்!

தாள்களையே பார்த்துப் பார்த்து, தம் கீழுள்ள அலுவலரின் சொற்களையே நம்பி நம்பித் திட்டங்கள் தீட்டி, அவை வெற்றிகரமாக நடைபெறுகின்றன என்னும் கனவில் காலங் கழிக்கின்ற கல்வித் துறை அறிஞர்கள் கண்திறந்து மாணவர்களையும் அவர்கள் 'மொட்டை'யடிக்கப் படுவதையும் பார்த்தல் வேண்டும். ●●

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

*தலைவியானவள், நம்மிடமிருந்து பிரித்துக் கொண்டுபோன தலைவனை தன் வீட்டிலேயே வைத்துக்கொண்டு தன் சொற்படியெல்லாம் அவனை ஆட்டி வைத்துக் கொண்டிருந்தாள். ஆனால், விலை மகளிராகிய நாம் அப்படி யெல்லாம் செய்வதில்லை. நாமாக ஒருவரைப் போய் வலிய அழைத்து வர மாட்டோம. நம்மிடம ஆசை கொண்டு மனங்கனிந்து தாமாக வலிய வருவோரை மட்டுமே நுகரும் இயல்புடையவர்கள் நாம'' என்று தன்னைப்பற்றி பெருமையாகப் பேசுகிறாள். இதுதான் அவ்விரு அடிகளில் உள்ளஉள்ளுறை உவமையாகும். இதை இன்னும் விளக்கினால்:*

*"வயல் வரப்பிலே உள்ள மாமரத்தில் உள்ள மாங்கனி, கனிந்து காம்பறுந்து குளத்திலே விழுந்தால் மட்டுமே, அக்குளத்தில உள்ள வாளை மீன் அதை உண்கிறது. அதுவல்லாது தலைவியைப்போல இங்கிருந்து பிரித்துக்கொண்டு போய், வீட்டிலே சிறை வைத்துக்கொண்டு நாம் இன்பம் பெறுவதில்லை''*

*இனத்ததாகும் அறிவு என்பது போல, அவள் தன் குலப் பண்பை ஒட்டிப் பேசுவது போல் இச் செய்யுளை ஆசிரியர் அமைத்திருப்பது நோக்கற்பாலது. —இரா. வை. கணபதி.*


சிதம்பரம் ராஜா டாக்கீஸில்

11—5—57 சனிக்கிழமை இரவு 10-மணிக்கு

**அறிஞர் அண்ணு M. A; M. L. A.**

அவர்கள் தலைமையில்

**ப. கண்ணன் அவர்களின்**

**கன்னியின் சபதம்**

நாடகம் நடைபெறும்.

கோவில்-சு. இராசன்,

வள்ளுவர் நாடக மன்றம், சென்னை 24

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

வுக்கு 12 பை என்ற கணக்குப் படி—சிக்கலான பின்னங்களையும், மாற்றல் அட்டவணைகளையும் கெட்டுருப்பண்ணி காலத்தையும், சக்தியையும் விரயம் செய்ய வேண்டியிருக்கிறது. எடை படிகள் விஷயத்தில் 280 தோலா முதல் 8320 தோலா வரையில் பல்வேறு அளவுள்ள பலரக மணங்குகள் இருக்கின்றன. அவைகளின் எண்ணிக்கை 100-க்கு மேற்பட்டது. ஸ்டாண்டர்டு மணங்கு 3200 தோலா உள்ளது. இவை தவிர 143 விதமான அளவுகளும உள்ளன.

தற்கால சூழ்நிலையில் முக்கியமாக வர்த்தகம், வியாபாரம் முதலிய துறைகளில் துரிதமாகவும், சுலபமாகவும் கணக்கிட வேண்டியிருக்கிறது. 10-ஐக் கொண்டு பெருக்குவதைவிட சுலபமான முறை என்று எதையும் கூற முடியாது.

பெரும்பாலான நாடுகளில் அது அமுலில் இருப்பதால் வெளிநாடு வர்த்தகத்தை அது சுலபமாக்கும். இந்திய சரக்குகள் அதிகமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிவர இருப்பதை உத்தேசித்தும், தேசத்தின் தொழில் அபிவிருத்தியும் பொருளாதார முற்போக்கும் முழுமூரம் அடைந்துவரும் கட்டத்தில் இருப்பதை உத்தேசித்தும், இப்போது அந்த முறை விசேஷ அனுகூலமுள்ளது.

எனவே, இந்தியா தசாம்ச முறைக்கு மாறத்தீர்மானித்திருக்கிறது. உலகத்தில் முற்போக்கான நாடுகளைப்போல் நடக்க அது தீர்மானித்திருக்கிறது. ஆனால், இந்த மாறுதல் படிப்படியாகத்தான் நடக்கும்.

இன்னும் பத்து வருட காலத்தில் மெட்ரிக் எடை, படிகள் அமுலுக்கு வரலாம். தசாம்ச நாணயமுறை அதற்கு முதற்படியாக நின்று வழிகாட்டுகிறது.

தசாம்ச நாணய முறையில் ரூபாய்க்கு அதன் தற்போதைய மதிப்பு இருக்கும். அரைரூபாய், கால்ரூபாய்களுக்கு நேர் சரியாக, 25 புதியகாசுகள் இருக்கும் தற்பொழுது 10, 5, 2, புதியகாசு நாணயங்கள் தான் புதிதாக வெளியிடப்படுகின்றன 2 அணாவுக்கும் அதற்குக் குறைந்த நாணயங்களுக்கும் நேர் சரியான புதிய நாணயங்கள் இல்லை.

இந்திய தசாம்ச நாணய முறையில் பத்தின் மேலினப் பெருக்கம், கீழினப் பெருக்கம் உள்ள மதிப்பு நாணயங்கள் எல்லாம் வெளியிடப்பட மாட்டா. அதனால் பல கஷ்டங்கள் குறையும். பழைய நாணயங்களும் மூன்று வருஷகாலத்திற்கு புதிய நாணயங்களுடன் இணைப்பாக அமுலில் இருந்து வரும். அதனால் மாறுதல் காலத்தில் மக்களுக்கு பழக்கம் ஏற்பட வசதி இருக்கும்.

"சரஸ்வதி"

மனைவி இல்லாத வீடும்,
நண்பர் இல்லாத ஊரும்,
ரசிகர் இல்லாத சபையும்,
அறிவு இல்லாத உடம்பும்
பாழ்.

—விளம்பிநாகனார்.






# பார்ப்பனராகவே இருப்பீர்களா?

## அறிஞர் அண்ணா

வளர்ந்து வருகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேருண்மைகளை எனது மதிப்பிற்குரிய பார்ப்பன இளைஞர்களும், அறிவாளிகளும், படித்த வாலிபர்களும் கொஞ்சம் மனதாரச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்களுக்கு நான் பன்னிப்பன்னி பல ஆண்டு காலமாகச் சொல்லி வருகிறேன்; இன்னும் அவர்கள் என்னுடைய பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டுதான் போகிருர்கள்.

மடாதிபதிகளைக் கண்டிக்கிறோம்-அவர்கள் பார்ப்பனரல்லாதார் என்று தெரிந்தும் கண்டிக்கிறோம்! ஜமீன்தாரர்களைக் கண்டித்தோம்-அவர்கள் பார்ப்பனரல்லாதார் என்று தெரிந்தும் கண்டித்தோம்! ஜஸ்டிஸ் கட்சியைக் கண்டித்தோம்– அதிலுள்ளவர்களெல்லாம் பார்ப்பனரல்லாதார் என்று தெரிந்தும் கண்டித்தோம்!

பார்ப்பனீயத்தைக் கண்டித்தால் அது பார்ப்பனரைக் கண்டிப்பதாகும் என்று கருதி இன்னமும் நீங்கள் தி. மு. கழகத்தை விட்டு ஒதுங்கி நிற்கிறீர்கள். ஏன் ஒதுங்கி நிறகவேண்டும்?

அப்படி ஒதுங்கி நின்றால், அறிவாளிகள் சமூகம் என்று உங்களுக்கு இருக்கிற பெயர் பொய்த்துப்போகும். ஏனெனில் இன்னும் ஒரு 10 வருடத்திற்குத்தான் தி. மு. கழகம் பிறருடைய துணையைக் கேட்டுப்பெறுகின்ற கட்டம் இருக்கும். அதற்குப் பிறகு, பிறருடைய உதவியில்லாமலேயெ தி. மு. கழகம் தன் காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் கட்டம் பிறக்கும்.

அதற்கு 10 வருடந்திற்குப் பிறகு, யாரும் தி. மு. கழகத்தை அண்டி வரவேண்டிய அளவிற்கு நல்ல ஒரு எதிர்காலம் தி. மு. கழகத்திற்கு ஏற்படும்.

இந்த உள்ள உண்மையை நான், சொன்னால் புரியும் என்ற முறையிலும், சொன்னால் புரிந்து கொள்பவர்கள் இங்கிருக்கின்றார்கள் என்று நான் அறிந்திருக்கின்ற காரணத்தாலும் தெளிவாகச் சொல்கிறேன்—இந்த 10 வருடம் தான் நீங்களும், மற்ற சமூகத்தாரும் ஒன்றுபடுவதற்கேற்ற ஒரு காலகட்டம் பிறந்திருக்கிறது. நீங்கள் கடைசி வரையில் பார்ப்பனராகவே இருக்க முடியும் என்றும் கருத வேண்டாம். அது நடக்கவும் நடக்காது. இன்னமும் ஏன் ஒதுங்கியிருக்க வேண்டும்? அதனால் என்ன இலாபம்? என்ன மதிப்பு வந்துவிடும்?

**7—4—57 சென்னை திருவல்லிக்கேணி பொது கூட்டத்தில் பேசியது.**

ஆகையால்தான், எப்படி ஜப்பான் நாட்டில் சமுரா என்ற வகுப்பார் தாங்களே ஒன்றுகக்கூடி, இனி நாம் தனிவகுப்பு என்றிருக்கிற வரையில் உலகத்தில் ஜப்பானுக்கு மதிப்பு இருக்காது என்று தீர்மானித்து, ஒரே நாளில் சமுரா வகுப்பார் தங்களுக்கு இருந்த பிறப்புரிமைகளையெல்லாம் விட்டுக் கொடுத்து, ஜப்பான் நாட்டு சமுதாயத்தில் இரண்டறக் கலந்தார்களோ அதுபோல், பிராம்மண வாலிபர் மாநாடு, பிராம்மண முற்போக்கு வாலிபர் மாநாடு-பிராம்மணர்களுடைய முன்னேற்ற வாலிபர்கள் மாநாடு என்று இப்படிப் பல பெயர்களில் சேர்ந்தாலும் சரி, பார்ப்பனீயத்திலுள்ள கேடுபாடுகளை நீக்க 'படித்த பார்ப்பனர்களாகிய நாங்கள் முன் வந்திருக்கின்றோம்' என்று நீங்கள் கிளம்பினாலொழிய உண்மையிலேயே இந்த நாட்டில் வகுப்புகளுக்குள் இருக்கும் மனமாச்சரியமும் போகாது—சமுதாயம் வளராது.

இந்த சமுதாயம் வளராது இருக்கின்ற வரையில்-தென்னாட்டைப் பொறுத்தவரையில் - பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் பேதம் இருக்கின்றவரையில்-தெளிவாக திட்டமாக எழுதிக் கொள்ளுங்கள்-வடநாட்டான் காட்டுகிற வழியில் தான் தென்னாடு நடக்கும்.

பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் பிரச்சினை தீர்க்கப்பட்ட மறு மாதத்தில், வடநாட்டான் தென்னாட்டை அடக்கி ஆளமுடியாது என்ற பேருண்மையை வடநாட்டுத் தலைவர்களும் உணர்ந்து கொள்வார்கள்.

ஆகவேதான், பார்ப்பன நண்பர்கள் இந்தக் கட்டத்தில் செய்ய வேண்டிய காரியம் நாட்டுக்காகவும், தங்கள் சமூகத்துக்காகவும், காலத்திற்காகவும், அறிவுக்காகவும் என்றுதான் கருதவேண்டும். தவிர, வேறெந்த தப்புக் கணக்கும் போடக் கூடாது.

ஆகவேதான், இன்றைய தினம் அவர்கள் தங்களிடையுள்ள மனமாச்சரியம் இல்லாமலிருக்கச் செய்ய நல்ல சமுதாய சீர்திருத்தக் காரியத்தில் ஈடுபட்டு, எங்களுடன் இரண்டறக் கலந்து நல்ல முறையில் பணியாற்றினால், நம் வாழ்நாளில் நிச்சயமான பலனைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

அந்த வகையில் வெளியில் பணியாற்றுவதற்கும், சட்டசபையில் நல்ல காரியங்களைச் செய்வதற்கும், நல்ல பயிற்சி பெற்று, ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கும் நீங்கள் உறுதுணையாக எங்களோடு இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ●

## கேள்விக்கணை

இம்முறை பரிசு பெற்றவர்:
● துரை-முருகேசன்,
பசுபதியப்பா பள்ளி,
காரமடை, கோவை மாவட்டம்.

சு. மணவாளன், மதுரை

*கே: நம்மைக் "கண்ணீர்த் துளிகள்" என்று கூறும் தி. க. வினரை "பன்னீர்த் துளிகள்" என்று அழைக்க முடியாதா?*

ப: ஏன் முடியாது? திராவிடத்தின் உரிமையை—வளங்களை வடநாட்டானிடம் ஒப்படைத்து, கைம்மாறு பெற்றுத் தின்று கொழுத்து, காங்கிரஸ் மாளிகையிலே கதர் மெத்தையிலே படுத்துப்புரளும் கனவானுக்கு அடிவருடி, அடைக்காய் கொடுத்து, சந்தனம் பூசி, சாமரம் வீசி, பன்னீர் தெளிக்கும் வேலையினை பகிரங்கமாகவே செய்கிறார்களே!

* * *

*கே: சினிமாக் கொட்டகை விபசாரமடம், சினிமா பார்ப்பவள் தேவடியாள், சினிமாத் தொழில் நடத்துவோர் டாபர் மாமாக்கள் என்று குத்தூசி குருசாமி சேலம் தி. க. மாநாட்டில் பேசினாராமே, உண்மையா?*

ப: ஆமாம் தோழரே, ஆமாம்! சினிமாவில் நடிக்கவும், கதை எழுதவும், படவினியோகம் செய்யவும், படங்காட்டவும், பார்க்கவுமாக உள்ள தி. க. ஆண் பெண் அத்தனை பேரையும், அவர் இவ்வளவு கேவலமாகத் தாக்கியிருக்கவேண்டியதில்லைதான்!

சி சு. தேவராசன், சிறுதையூர்

*கே: கேரளத்தில் கம்யூனிஸ்ட் மந்திரி சபை அமைந்தது பற்றித் தங்கள் கருத்து என்ன?*

ப: வரவேற்கிறோம். வாழ்த்துகிறோம்; கேரளத்தின் முன்னேற்றத்திற்குரிய செயல்களை 'பாரதமாதா' தடுத்தாலும், 'கேரளமாதா'வுக்காக விடாது செயற்படுத்த வேண்டுமென விரும்புகிறோம்.

* * *

*கே: நீங்கள் தற்சமயம் எந்தப் படத்திற்கு வசனம் எழுதிக் கொண்டு இருக்கிறீர்கள்?*

ப: எழுதிக் கொண்டிருக்கும் படம் எதுவுமில்லை. எழுதவேண்டிய படங்கள் பல இருக்கின்றன.

துரை-முருகேசன், காரமடை.

*கே: வெளவால் மனம் படைத்தோர், கட்சிகளில் பங்கு பெறுவதன் காரணம் என்ன?*

ப: இரவுக் கட்சி எது, பகல் கட்சி எது என்பதைக் கண்டறிந்து ஏற்றபலன் பெறுகின்ற நோக்கமாக இருக்கலாம்.

* * *

● *கே: பண்டித நேருவுக்கு ஆண் குழந்தைகள் இருந்திருந்தால்......?*

ப: தென்னாட்டுப் பார்ப்பனக் குடியில் நிச்சயமாக சம்பந்தம் ஏற்பட்டிருக்கும்.

ஏ. மாணிக்கம், தோளசம்பட்டி.

*கே: பகுத்தறிவால் வகுத்தறிய முடியுமா?*

ப: வகுத்தும், பகுத்தும் பார்த்து உண்மையை அறியக் கூடிய பண்புக்குத்தான் தோழனே; பகுத்தறிவு என்று பெயர்.

எம் சுப்ரமணியம் கீழ்கொடுங்காலூர்

*கே: தி. மு. க. பொதுச் செயலாளர் நின்ற சேலம் தொகுதிக்கு மறுதேர்தல் நடப்பது எப்போது?*

ப: அது, நாம் தொடுத்துள்ள வழக்கின் முடிவைப் பொறுத்து நிகழ வேண்டிய செய்தி.

## பொன் மொழிகள்

உண்மையான நாகரிகம் என்றால் மனம், செயல், வாழ்க்கை மூன்றிலும் சுத்தமாக இருப்பதேயாகும்.

—சிவானந்தா.

பிறர்வாழ்வுக்கு வெளிச்சம் காட்டுகின்றவர், தங்கள் வாழ்வுக்கும் அதனை காட்டிக் கொண்டவர்கள் ஆகின்றனர்.

—பாரின்.

தன்னையறிந்து சீர்திருத்திக்கொள்வதே கல்வியின் முக்கிய சாதனையாகும்.

—பத்மபூஷணர்.

பெரும்பான்மையான மக்களுக்கு ஆற்றலில் குறைவு இருப்பதில்லை; செயலாற்ற மனமின்மையால் அது வீணாகிறது.

—விக்டர் ஃயூகோ.

மடமை மனிதனில் மிருகப் பண்பை வளர்க்கிறது; பகுத்தறிவு மிருகத்தினுள் மனிதப்பண்பை வளர்க்கிறது.

—ஞானி.

மனிதன் மட்டுமன்று, எல்லா உயிர்களுமே தமக்குக் கிடைப்பதை விட அதிகமாகச் சிலவற்றைப் பெற்றுவாழ ஆசைப்படுகின்றன. அந்த ஆசையிலிருந்துதான் உலக முன்னேற்றமே ஏற்பட்டுள்ளது.

—சாமுவேல் பட்லர்.

வினை செய்யுங்கால் அதனால் அழிவதையும், பின் ஆவதையும், ஆகி நின்று பின்புவரும் பயனையும் சீர் தூக்கி, தக்கதாயின் செய்தல் வேண்டும்.

—திருவள்ளுவர்.



(2-ம் பக்கம் தொடர்ச்சி)

முன்பெல்லாம் பொதுவாகப் படித்து வந்த மாணவன், இப்போது தேர்ந்தெடுத்துப் படிக்கத் தொடங்குகிறான். சோழர் வரலாறு என்று எடுத்துக் கொண்டால் விசயாலயன், இராசராசன் I, இராசேந்திரன், குலோத்துங்கன் I, ஆகிய இவர்களைப் பற்றிய செய்திகளை மட்டும்தான் படிக்கிறான். இதேபோல, கணக்குப் பாடமானால், முக்கியமான சில தேற்றங்களையும், அவற்றின் கீழ்வரும் கணக்குகளையுமே படிக்கிறான். ஒவ்வொரு பாடத்திலும் இது முக்கியம், இது முக்கியமில்லை என்று தேர்ந்தெடுத்தே படிக்கிறான். மற்றவற்றை ஒரேயடியாகப் புறக்கணித்து விடுகிறான்.

ஏன் இப்படி?

இதற்கு விடைகாண வேண்டுமானால் பல்கலைக் கழகத் தேர்வுத் தாள்களைப் புரட்டவேண்டும். பல்கலைக் கழகம் தொடங்கியதிலிருந்து இன்றுவரை ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வோராண்டும் சில வினாக்களே திரும்பத் திரும்பக் கேட்கப்பட்டிருப்பதை அங்கே காணலாம். எந்தப் பாடத்திலும் இந்த நிலைதான்!

இதைக் காணும் மாணவன் எதைப் படிப்பான், எதை விடுவான் என்று சொல்லத் தேவை இல்லை. கட்டாயமாக வரப்போகும் கேள்விகளை விட்டுப் புத்தகம் முழுவதையும் படித்துப் பொழுதைப் போக்கும் அளவுக்கு எந்த மாணவனுக்கும் அறிவுக் குறைபாடு இருக்காது.

இப்போது பாருங்கள் படிப்பதற்குரிய பாடப்பகுதி பள்ளியிறுதி வகுப்பைவிட ஏழெட்டு மடங்கு அதிகமிருந்தாலும், ஒவ்வொன்றிலும் சிலவற்றை மட்டும் தேர்ந்தெடுத்துப் படிப்பதனால், படிக்க வேண்டிய பாடத்தின் அளவு பழைய பள்ளி வகுப்பு அளவுக்கே வந்து விடுகிறது.

250 பவுண்டு எடை தூக்கும் பயில்வான், எடைக்கற்களை மட்டும் மாற்றிப் போட்டு, அதே 250 பவுண்டுதான் வாழ்நாள் முழுவதும் தூக்கிக் கொண்டிருக்கிறான். 252 பவுண்டை அவனால் எப்படித் தூக்க முடியும்? மாணவனின் அறிவு இப்படி வளர்க்கப்படுகிறது.

நண்பர் அருமையான வினா ஒன்றை எழுப்புகிறார். "கடல் போல் பரந்து கிடக்கும் கல்வியில் தேர்ந்தெடுத்துத்தானே படிக்க முடியும்? எல்லாவற்றையும் படித்து ஆற்றலை ஏன் வீணாக்கவேண்டும்? வள்ளுவர்கூட கற்கக் கசடறக் "**கற்பவை**" என்று சொல்லவில்லையா?"

மாணவன் முக்கியமானவற்றைத்தான் ஊன்றிப் படிக்கவேண்டும். ஆனால், அது முக்கியமானது என்பதை உணர்ந்தன்றோ படிக்க வேண்டும்? ஒன்று முக்கியமானது, சிறந்தது என்பதெல்லாம் தனிப்பட அதன் நிலையிலல்லவே, மற்றவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போதுதானே அதன் சிறப்பு விளங்கும்? ஒரு கட்டுரையில் முக்கியமான பகுதியைத் தடித்த எழுத்திலும் மற்றப்பகுதிகளைச் சாதாரண எழுத்திலும் அச்சிடுகிறார்கள். முக்கியமான பகுதியை மட்டும் அச்சடித்துக் கொண்டு மற்றப் பகுதிகளை அச்சிடாமலேயா விட்டு விடுகிறார்கள்?

மாணவன் மட்டும் முக்கியமானவைகளை மட்டும் படித்துக் கொண்டு பிறவற்றை விட்டுவிடுகிறானே! இப்படி விட்டு விடுவதனால், தான் படித்தது முக்கியம் என்று அவனுக்குத் (அடிக்கடி தேர்வில் கேட்பதனால்) தெரியுமே தவிர, அதன் முக்கியத்துவத்துக்குரிய காரணம் அவனுக்குத் தெரியாதே! இது மிகப் பெரிய மூடநம்பிக்கையல்லவா? அறிவு ஊட்டுகின்ற இடமே மூடநம்பிக்கையை ஊட்டினால்...?

இவ்வாறு (யாரோ சொல்லுவதற்காக) தேர்ந்தெடுத்துப் படிப்பதனால் எந்தத் துறையிலும் ஒரு தொடர்ச்சியான அறிவு மாணவனுக்கு ஏற்படுவதில்லை. அம்மட்டோ? தேர்வு முடிந்த உடனேயே தெரிந்திருந்தும் மறந்து விடுகிறது! இப்படி வளர்க்கப்படும் மாணவரின் தரம் (Standard) உயர்ந்து கொண்டு வரவில்லை; குறைந்துகொண்டே போகிறது என்று கவலைப்பட்டு முதலைக் கண்ணீர் வடிப்பதில் பொருளுண்டென்று எண்ணத் தோன்றவில்லை.

ஒரு நாளில் படித்து, இரண்டு நாட்களில் மறந்துவிட வேண்டிய சில பகுதிகள் ஒரு B. A., M.A. பட்டம் வாங்கித்தரும் என்று தெரிந்திருக்கும் மாணவன் ஆண்டு முழு

[11-ம் பக்கம் பார்க்க]

வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த
செல்வம் ராணி
&
சேகர் ஊதுபத்திகளை
வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:
வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037-38, டபீர்குளம் ரோடு, தஞ்சாவூர்.

## கலைக்கூடம்

### வணங்காமுடி.

பழைய கதைகளின் முக்கியங்களை வைத்துக்கொண்டு ஒன்றாகப் புதுப்பித்து உருவையும் மாற்றி, எளிதில் அடையாளம் கண்டுபிடிக்க முடியாதபடி செய்துவிடலாம் என்பதை 'வணங்காமுடி' மூலம் சரவணபவா-யூனிட்டி பிக்சர்சார் விளக்கி விட்டனர்.

கதை-வசனம் ஏ. கே. வேலனால் எழுதப்பட்டிருக்கின்றன.

கவிஞனை-சிற்பியாக்கி, கம்பனை சேவப்பனாக்கி, அமராவதியை தேவசுந்தரி யாக்கி, சோழனை பொன்னிநாட்டு மன்னனாக்கி, சேனாதிபதி உக்கிரசேனனை நரேந்திரனாக்கி இடைவேளை வரை 'அம்பிகாபதி'யையே 'வணங்காமுடி' யாக்கிவிட்டார் கதாசிரியர். சிக்கலில்லாத கதை. கதைக்குப் புத்துயிரளிக்கிறது வசனம். பிறந்தநாட்டின் மண்ணை மறந்தும் மிதிக்கக் கூடாது என்னும் தண்டனை கேட்டு சீறியெழும் சித்திரசேனன் பேச்சு வீர நடைக்கோர் இலக்கணம். உரிமைப் போரின் முழக்கம். நகைச்சுவை மிதச்சுவையாக இருக்கிறது; ஆராய்ச்சி மணி அடிக்கும் அன்னை, அதுகேட்டு அவை கூட்டும் அரசன், அங்கு நடக்கும் நிகழ்ச்சி—நம் தமிழ் பண்பாட்டை நினைவுறுத்துகின்றன. 'தாயை விட்டுப்பிரிந்தாலும் மகனிடமே தாயன்பு சுற்றிக் கொண்டிருக்கும்' என்று ஆசிரியர் உணர்ந்து எழுதியிருப்பது நம்மை வெகுவாகக் கவர்ந்து விடுகிறது.

தஞ்சை ராமையாதாசின் பாடல்களைப் பற்றி சொல்லுவானேன். ஜி. ராமனாதனின் இசையமைப்பில் தப்பித்துக் கொண்டது.

சௌந்திரராசன், சீர்காழி, கிருஷ்ணன், ராஜா சுசீலா, ஜிக்கி, லீலா பின்னணியில் குறை சொல்லுவதற்கில்லை.

சிற்பி சித்திரசேனன்-சிவாஜி கணேசனுக்குப் பழக்கப்பட்ட பாகம். சிலை வடிக்கும் சிற்பியாக இருந்தும் வாள் பிடித்து சண்டை செய்திருக்கிறார். சாவித்திரி இரண்டு பாகங்களை ஏற்றிருக்கிறார் குறத்திமேல் காட்டியிருக்கும் அபிமானத்தை இளவரசியின்மேல் காட்டவில்லை கடமை வீரனாக வரும் சேவப்பன்—வி. நாகையாவுக்கு இன்னும் வசனங்களை கொடுத்திருக்கலாம். ஆனால், அவர் பேச்சு, கொடுக்கப்பட்டிருப்பதையே குறைத்தால் தேவலை என்கிறது. எம். கே. ராதா பொன்னிநாட்டு மன்னனாகவே மாறிவிடுகிறார். மங்களம்—கண்ணாம்பாவின் மாமூல் பாத்திரம்தானே! அம்பிகா—ராஜசுலோசனா நடிப்பை உணர்ந்து நன்கு நடிக்கிறார். எம். என். நம்பியார் உடலில் நச்சுப் பாம்பாகவே காட்சியளிக்கிறார். பாஞ்சோதி-தங்கவேலு காமிக்ஜோடி என்பதை காட்டி விடுகிறார். அவரது ஜதை நீலவேணி எம். சரோஜாவும் பரவாயில்லை.

டைரெக்டர், பி. புல்லையா பி. ஏ. டைரெக்ட் செய்த மற்றப் படங்களை விட முதல்தரம் என்பதை 'வணங்காமுடி'க்குச் பறைகிறது.

ஒளி, ஒலிப் பதிவுகளில் சொட்டை சொள்ளை இல்லை. சந்திரகிரி கோட்டை, மகாபலிபுரம், கிருஷ்ணகிரி மலை நல்ல முறையில் கையாளப்பட்டுள்ளன.

கதையில் கால வரம்பு, கலாச்சாரம் பற்றிய சிலபல குறைபாடுகளிருந்தாலும். வசனம் அவைகளை நிறைவு படுத்துகிறது. ஏ. கே. வேலன்-பகுத்தறிவுக் குளத்திலே பூத்த தாமரை. மணக்காமலா போய்விடும்?

வணங்காமுடி, தற்போது ஓடிக்கொண்டிருக்கும் புதுப் படங்களுக்கு வணங்காமுடிதான்.

—க. அண்ணாமலை.


**பகுத்தறிவு.**

(திங்களிருமுறை)

புதிய தசாம்ச நாணய விகிதத்தில்:

உள்நாடு:

| | |
|---|---|
| ஆண்டு 1-க்கு | 4-00 |
| 6 மதங்களுக்கு | 2-00 |

தனிப்படி 16 காசுகள்

சிலோனில் 25 சதம்

**பகுத்தறிவு அலுவலகம்**

சேலம்-1.


சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்-1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.


# பகுத்தறிவு

திங்கள் இருமுறை. ஆசிரியர் :- ப. கண்ணன்.

மலர் 7 | 15-5-57 | விலை 0-2-6 (16 காசு) | இதழ் 6.


## வண்டிமாடுகள் மந்திரியானல்....?




தேர்தல் வண்டியிழுத்த இரட்டைமாடுகளையே மதராஸ் நாட்டின் அமைச்சர் பதவியில் அமர்த்திவிட்டார் பண்டித நேரு! "தமிழ்நாடு" வேண்டாம் என்று தலையாட்டுகின்றன அவை. வடவரின் அதிகாரச் சாட்டையின் சொடுக்குப்படி அங்கம் குழைத்து நடக்கின்றன! பங்கம்! பங்கம்!

# நாத்திகரோ நாங்கள்?

## அறிஞர் அண்ணா



யார் நாத்திகர்கள்—யார் ஆத்திகர்கள்—என்று, மக்களே சந்தேகப்படவில்லை; ஆனால், சில தலைவர்களுக்கு அந்தச் சந்தேகம் இருக்கிறது. அந்தச் சந்தேகத்தில் ஒன்றுதான் நண்பர் சிவஞானத்திற்கு வந்திருக்கிறது—'அண்ணாதுரை ஆத்திகர் என்றும், ஒன்றே குலம்; ஒருவனே தேவன்-என்ற முறையைப் பின்பற்றுகிறவர் என்றும் சொல்லப்படுகிறது; ஆனால், அவர் ஆண்டவனை எம்முறையில் வழிபடுகிறார் என்று சிவஞானம் கேட்டால், நான் அதற்கு என்ன பதில் சொல்லுவது? ஆண்டனை வழிபட்ட பக்தர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு முறையிலே வணங்கியுள்ளனர்; இயற்பகை நாயனார் ஒரு முறையிலே வழிபட்டார்; 'இறைவன்' என்று கேட்ட நேரத்தில் இல்லக்கிழத்தியைப் பின்னால் அனுப்பி, அதை 'பக்தி' என்றார்; சிறுதொண்ட நாயனார், பிள்ளையை அறுத்துக் கறியாக்கி, அதன் மூலமாக தனது பக்தியைக் காட்டிக் கொண்டார்; இராமதாசர், சர்க்கார் பணத்தைக்கொண்டு கோயில் கட்டி அதன்மூலம் தன் பக்தியைக் காட்டிக் கொண்டார்; மாணிக்கவாசகர், குதிரை வாங்குவதற்கென கொடுத்தனுப்பிய பணத்தைக் கோயில் கட்டுவதிலே செலவழித்து, அதன்மூலம் தனது பக்தியைக் காட்டிக் கொண்டார்.

இப்படி, பக்தியைக் காட்டிக் கொள்ளுவதற்கு இவர்கள் வழிபடுகின்ற ஆழ்வாராதிகள்-நாயன்மார்களுக்கே விதவிதமான வழிகள் இருந்தபோது, அண்ணாதுரை வழிபடும் முறைபற்றி என்ன அக்கறை? நான் இப்பொழுது சொல்லுகிறேன்-நான் ஆண்டவனிடத்திலே ஐக்கியமாகி விட்டேன்; இல்லை என்று சொல்லுவதற்கு யாருக்கு என்ன அத்தாட்சி இருக்கிறது? இந்நேரத்தில் நான் உங்களையே பார்த்துக்கொண்டிருக்கின்றேன்; பார்த்துக்கொண்டிருக்கின்ற இதே நேரத்தில், நீங்களெல்லாம் ஒரே உருவமாகி என்னுடைய கண் பார்வையிலே ஒரு பெரிய ஆண்டவன் தெரிவதாக எண்ணுகிறேன்; எனக்குத் தெரிகிறது அந்த உருவம்-நான் செய்த புண்ணியம்-எனக்குத் தெரிகிறது; நீங்கள் பாவிகள் உங்களுக்குத் தெரியவில்லை!

என் மனதுக்குப் பிடித்தமான வழியில் ஆண்டவனை வழிபடுகிறேன்; ஒரு ஏழையின் வியர்வையைத் துடைத்தால் அதை, ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்ததாகக் கருதுகிறேன்; பட்டப்பகலில் கால் கொதிக்கின்ற வெய்யிலில் நடந்துசெல்பவனுக்கு ஒரு பழைய செருப்பை யாராவது வாங்கி இனாமாகக் கொடுத்தால், அது ஆண்டவனுக்குப் பட்டுப் பட்டாடை கொடுப்பதைவிட பெரிய பக்தியென்று கருதுகிறேன்; கோயில் கோபுரத்திலுள்ள தங்கக் கலசத்திற்கு மெருகு பூசுவதைவிட, அணிந்திருக்கிற ஆடையில் ஏறியிருக்கின்ற கறையை-அழுக்கைப் போக்க ஒரு சோப் வாங்கிக் கொடுப்பவர்களைப் பெரிய பக்திமான் என்று கொண்டாடுகிறேன். இதையெல்லாம்வேண்டாமென்று சொல்லியிருக்கின்றது, நீங்கள் படித்திருக்கின்ற வேதத்தில்—திருவாசகத்தில்— பக்தர்களின் கதைகளில்—மத தத்துவத்தில்?

பக்தி என்றால் 20-30 பேர் வேதபாராயணம் செய்ய, நாலைந்து பேர் தீவட்டி பிடிக்க, 10-15 பேர் தொலைவிலிருந்து வேடிக்கை பார்க்க, ஒரு வாகனத்திலே சாமியை அமர்த்தி, அதற்குப் பக்கத்தில் இரண்டு, அர்ச்சகர் நின்றுகொண்டு, ஒரு அர்ச்சகர் மற்றொரு அர்ச்சகரிடம் குடும்பப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவது தான் பக்தியா? இதற்குப் பெயரா பக்தி? இந்த முறையிலே என்னை ஆண்டனை வழிபடச் சொன்னால் நான் சம்மதிக்க முடியுமா?

நான் ஆண்டவனை வழிபடுவது ஏழைகளின் துயரை நீக்குவதற்கு

**சென்னை, பி. & சி. ஆலைத் தொழிலாளர் சார்பில் 28—4—57-ல் நடைபெற்ற பாராட்டு விழாவில் அறிஞர், அண்ணா பேசியது.**






இராமன்—தசரத புத்திரன், சூழ்ச்சிக்காரன்; கோழை; பெண்மையின் பெருமையுணராது கொடுமை செய்யும் சிறுமதியாளன்!

★

காமவல்லி—இராவணன் தங்கை, நாடாளும் ராணி; நல்லற மடந்தை; கற்பு, கண்ணியம் வழுவாத கலைமகள்!

ஆரிய திராவிட போராட்டக் களத்திலே அழகு ராணியும் ஆண்மையற்றவனும் சந்திக்க நேருகின்றது. அதன் விளைவாக எத்துணை கொடுமைகள்!... வஞ்சனைகள்!... போராட்டங்கள்!... பொல்லாங்குகள்!...

**ஆசிரியர், ப. கண்ணன் தீட்டுகின்ற**

# மானவதி

**வரலாற்று ஆய்வு நாடகம்.**

ஜவகரிலால் நேரு, விவேகானந்தர், பி. டி. சீனிவாசய்யங்கார், சி. எஸ். சீனிவாசாச்சாரியார், சந்திரசேகரப்பாவலர், பேராசிரியர்கள் சுந்தரனார், பூரணலிங்கனார், சக்கரவர்த்தி, புலவர் குழந்தை போன்ற அறிஞர் பலர் ஆய்ந்தறிந்து பெருகவிட்ட கருத்தோடையிலே முகிழ்த்தெழுகின்ற பைந்தமிழ் நாடகமலர்!

**1-6-57 "பகுத்தறிவு" இதழில்**

மணம் வீசத் தொடங்குகின்றது. தொடர்ந்து நுகர "பகுத்தறிவு"க்கு கையொப்பதாரராகுங்கள்; அல்லது விற்பனையாளரிடம் உங்கள் பிரதிக்குச் சொல்லிவிடுங்கள்.


# எதிரொலி

*திருப்பதி வேங்கடேசன் முன்பு நடிகை அஞ்சலிதேவி தமது சொந்தப் படமான "சொர்ணசுந்தரி"யை வைத்து வணங்கினள்.*

—செய்தி.

ஐயோ பாவம்! "புது வாழ்வு" படத்தை வைத்துக் கும்பிட்டு வசூல்தருமாறு பாட்டுப்பாடிய பாகவதரையே ஏமாற்றியவராயிற்றே, வேங்கடேசப் பெருமாள்!

* * *

*பங்களாப்புதூரில், குளிக்கப்போன இளம் பெண்ணிடம் வாலிபர் வம்பு.*

—செய்தி.

கிருஷ்ண பகவானின் சிஷ்யப் பிள்ளை போலிருக்கிறது. இனியாவது அந்த ஊரில் இருக்கும் குளக்கரை கோபியர் நிர்வாணப் படங்களுக்கெல்லாம் நல்லவர்கள் தீ வைப்பார்களா?

* * *

*குடிதண்ணீர் பஞ்சம் போக்க 500, ரூபா செலவில் சாமிக்கு அர்ச்சனை! மதுரை நகரசபைக் காங்கிரஸ் மெம்பர் யோசனை!*

—செய்தி.

எந்த சாமிக்கு எந்த விதமான அர்ச்சனை செய்வது என்பதை நிர்ணயிக்க கமிட்டியொன்று நிறுவவேண்டாமோ? அட மதவெறி பிடித்த மண்டுகளா!

* * *

*குறைந்த செலவில் நாக் கிணற்சி செய்து அதிக பலன் காணவேண்டும்.*

—"விடுதலை"

மூன்று காசு கற்பூரத்தில் முப்பதாயிரம் ரூபா இலாபம் வேண்டுகிற பக்தனைப் போலவா?

* * *

*பார்ப்பனர் மந்திரமக்களைமல், அரசாங்கம் முதல் எதிரியாக நம் முன்னால் மலைபோல் நின்று, நம் போக்கை மறிக்கிறது.*

—"விடுதலை"

ஐயோ! அரசாங்கமா மறிக்கிறது? பச்சைத் தமிழர் அரசாங்கமா? கண்ணாவியே! மலைபோலவா குறுக்கே நிற்கிறது? நிற்காதே!

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்

# இதயம்

மலர் 7 | சேலம் 15—5—57 | இதழ் 6

## வெல்லுமோ துராசை?

"மாணவர்கள், ஆசிரியர்கள் எவரும் அரசியலில் பங்கு எடுத்துக் கொள்ளக் கூடாது. என்று பறைசாற்றி வந்தனர் காங்கிரஸ் அமைச்சரும், தலைவர்களும், அவர்தம் ஆதரவாளரும்.

மாகாணக் கல்வி ஆணையாளர் இந்த அடிப்படையில் கட்டளையும் பிறப்பித்துள்ளார். செல்லுமிடங்கள் தோறும் "மாணவர்களை அரசியலில் இழுத்துக் கெடுக்காதீர்கள். முதிர்ந்து பழுக்க வேண்டிய சுவைக்கனியை பிஞ்சிலேயே உதிர்த்து விடாதீர்கள்" என்று மனங்கசிந்து சொற்பொழிவாற்றி வந்தார் கல்வி ஆணையாளர் திரு. என். டி. சுந்தரவடிவேலு அவர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் மாணவர்களைக் கெடுக்க என்றுமே விரும்பியதில்லை. "மாணவர்கள் அரசியலைக் குறித்து தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்" என்கிறேமே தவிர "அரசியலில் பங்கெடுத்துக்கொண்டு, படிப்பைக் கெடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறினேமில்லை. செய்தோமில்லை. ஆனால், காங்கிரஸ் காரர்கள் செய்கின்றனர். கட்சிப் பணிக்குப் பயன்படுத்த முயலுகின்றனர்.

பசுத்தோல் போர்த்திருந்த புலி, சொந்த உருவைக் காட்டிவிட்டது! பத்தினி வேஷமிட்டவள், படுமோச விபசாரி என்பது விளங்கி விட்டது!

நாட்டிலுள்ள இளைஞர்களோடும், மாணவர்களோடும், ஆசிரியர்களோடும் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டு கரைந்துவரும் காங்கிரசைக் கட்டிக் காக்கப் போகிருர்களாம். இதற்காக ஒவ்வொரு மாகாணக் காங்கிரசுக் குழுவிலும் முழுநேர ஊழியர் ஒருவராம், அவருக்குரிய பாதி சம்பளத்தை காங்கிரஸ் தலைமைப்பீடம் தருமாம். டெல்லியினின்றும் எல்லா மாகாணக் காங்கிரசுக்கும் சென்றிருக்கிறதாம் கட்டளை!

இளைஞர் காங்கிரஸ் என்ற பெயரால் இளைஞர்களை வசப்படுத்தி, அவர்களை "ரௌடி"களாக மாற்றி குழப்பம் விளைவித்துக் காங்கிரசை வலுப்படுத்த விரும்பினர்கள்; தோற்ருர்கள். இப்போது வெட்கமில்லாமல், சூடு சுரணையில்லாமல், தாம் சொல்லி வந்த கொள்கைகளுக்குப் புறம்பான வழியிலே புகுந்து மாணவர்களையும், ஆசிரியர்களையும் இளைஞர்களோடு சேர்த்துக்கொண்டு கட்சி வளர்க்க முனைந்து விட்டார்கள்! அக்கிரமம்! அக்கிரமம்!

பணபலம் இருக்கிறது அவர்களிடம்,படைபலம் இருக்கிறது. சனநாயக அரசில் அதிகாரம் எப்பொழுதும் தன்கையிலேயே இருக்கவேண்டும்; வடவர்க்கே வாழ்வு கிடைக்கவேண்டும் என்று விரும்புகிறது காங்கிரஸ் கட்சி! இதற்காக யார் யாரையோ பலிகொள்ளத் துடிக்கிறது!

பகுத்தறிவு பூர்வமான குடியரசு தழைக்க வேண்டும், திராவிடம் வாழவேண்டும் என்று விரும்பும் இளைஞர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரிடம்-தன்மானத் தமிழரிடம் வெல்லுமோ இந்த முயற்சி? வெல்லுமோ இந்தத் துராசை?

—ப. கண்ணன்.

திருவலம் திராவிடமுன்னேற்றக் கழகத்
**துவக்க விழாவும்,**
மேதின விழா
**பொதுக்கூட்டமும்.**
27—5—57 திங்கள் மாலை 6 மணிக்கு,
தலைமை:
தோழர். M. P. சாரதி M.L.A. & M.C.
பேசுவோர்: தோழர். N. S. இளங்கோ
,, ப. கண்ணன்
—தி. மு. க. கிளை,
திருவலம், வ. ஆ. மாவட்டம்.

குறிப்பு:- கூட்டம் ஆற்றில் நடைபெற இருப்பதால், தாய்மார்களுக்கு தனி வசதிஉண்டு.



என்தாய் வேலைக்காரிதான். ஆனல், முருகானந்தரின் இதயம் கவர்ந்த எழிலரசி! இந்த நிலை நீடித்ததா?

ஏதோ ஒரு முரட்டுப் பிடியில் அகப்பட்டுத் திணறிக்கொண்டிருந்தேன்; என்னல் விடுவித்துக்கொள்ள முடியவில்லை.

## ஐயோ மகளே!

திருத்தங்கல், எம். கே. தாயப்பன்.

நீதி மன்றம்!

மதுரை நகரின் சரித்திரத்திலேயே — என்றும் கண்டிராத அளவில் கூட்டம் தேங்கி நின்றது! காடாளும் அமைச்சரோ, அன்றி நல்லெண்ண தூதுக் குழுவினரோ அன்று வரவில்லை!

தீர்ப்பு கூற விருந்த ஒரு வழக்கின் முடிவை அறியவே அவ்வளவு கூட்டம்! ஒவ்வொருவரின் முகத்திலும் கேள்வி ரேகை படர்ந்திருந்தது! ஆவலுடன் நீதிபதியின் முகத்தைப் பார்த்தனர் அத்தனைபேரும்!

ஏன்.......?

வழக்கு சாதாரணமானதல்ல! கொலைக் குற்றம்—அத்துடன் தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்தல் ஆகிய இரண்டு குற்றங்களை செய்திருக்கிருர் குற்றவாளி! செய்கை கொடுமையானதுதான்! ஆனல் ஏன் இப்படியொரு சூழ்நிலை ஏற்பட்டது? புதிர், விடைபெற வேண்டிய நேரத்தை எதிர் பார்த்தனர் அனைவரும்! ஆனல்......?

குற்றம் சாட்டப்பட்டிருப்பதோ ஒரு பெண்! இளமை பூத்துக் குலுங்கும் கட்டழகி! பதினெழு வயதைத் தாண்ட முடியாத பாவை! பட்டுப் போன்ற மேனி! பவளவாய்!— முல்லை அரும்புகளைப்போன்ற பற்கள்! பார்ப்போரின் கவனத்தை காந்தக் கல்லாக கவரும் எழிலரசி! இப்படிப்பட்டவள் எப்படிக் கொலைகாரியானள்...?

"தான் பெற்ற மகளைக் கொலை செய்தாள்—தானும் தற்கொலை செய்து கொள்ளத் துணிந்தாள்" குற்றப் பத்திரிகை கூறியது இப்படி!

ஆனல் அவள்........?

குற்றத்தை ஒப்புக் கொண்டாள்—குற்றம் புரியக் காரணமாக உள்ள சம்பவங்களை கூற மறுத்து விட்டாள், இதுவரை! பேச முடியாத ஊமையல்ல—அப்படியானல்......?

அவளது கலங்காத நெஞ்சம் கலங்கியது! தீர்ப்புக் கூறவேண்டிய நேரம் நெருங்க—நெருங்க—அவளது இதயம் படபடவென வேகமாக அடிக்கத் தொடங்கியது!

"குழந்தையைக் கொலை செய்தது—நீயும் தற்கொலை செய்து கொள்ள முயன்றது உண்மை தானே?" நீதிபதி கேட்டார் இப்படி!

"உண்மைதான்! ஆனல் ஏன் கொலைகாரியானேன? பழி பாவத்திற் கஞ்சாமல் நான் பெற்ற செல்வத்தை— என் இன்ப வாழ்விலே பூத்த அரும்பை ஏன் கிள்ளியெறிந்தேன்? இதையெல்லாம் நீதியின் சந்நிதியிலே வீற்றிருக்கும் நீங்கள் கேட்க வேண்டாமா?" குற்றக் கூண்டிலே நின்றுகொண்டிருந்த பிரபா கேட்டாள் நீதிபதியை!

"செய்த குற்றத்திற்கு நீதி வழங்குவதுதான் என் கடமை!"

"அதே கடமையைத்தான் நானும் செய்தேன்! குற்றம் புரிந்துவிட்ட என் வாழ்வில் அவமானத்தின் சின்னமாக— ஆணவக்காரர்களின் கண்ணெதிரே என் மகள் வாழக் கூடாதே என எண்ணித்தான் இந்தக் கொடிய செயலில் இறங்கினேன்.

"என்ன விருந்தாலும் குற்றம் குற்றம்தான்...."

"என் கதையைக் கேளுங்கள்! மனித தர்மத்தை நீங்கள் மதிப்பதாக இருந்தால்-அதன் பின் தீர்ப்பு வழங்குங்கள் ..." தேம்பிய நிலையிலே கூறினள் அவள்.

"நேரத்தை வீணுக்காமல் விரைவில் கூறு!"

அவள் பேச ஆரம்பித்தாள். எல்லோரது கண்களும் அவளை மொய்த்து முற்றுகையிட்டன! பலர் "இச்சு" கொட்டினர்கள்! சிலர் அனுதாபப்பட்டார்கள்! ஆனல், இவை யொன்றையும் லட்சியம் செய்யாமல் அவள் பேசிக் கொண்டேயிருந்தாள்.

தீர்ப்பு........?

* * *

முல்லைக்காடு பண்ணையார் முருகானந்தர் என்ருல் உங்களுக்குத் தெரியாமலிருக்க முடியாது; பிரபலமானவர்; காங்கிரஸ்காரர்! நகரசபையின் தலைவர், பழனியாண்டவர்சன்னதிக்கு தர்மகர்த்தா! அவர்தான் இந்தக் கொலைக்கு மூல காரணம்......

கூடியிருந்த மக்களது முகம் "குப்"பென வியர்த்துக் கொட்டியது! உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம்! எந்தக் குழந்தையை நான் கொலை செய்

(12-ம் பக்கம் பார்க்க)

# சாதியை ஒழிப்பது எப்படி?

1. சாதிப் பெயர்களை பயன்படுத்தக் கூடாது.

2. மற்றவர்களின் சாதிப் பெயரைக் கேட்கக் கூடாது.

3. அரசினருக்கு விண்ணப்பம் போடும்போதும் மற்ற நேரங்களிலும்சாதியை தெரிவிக்கக்கூடாது.

4. வேறு ஒரு பகுத்தறிவு வாதி தன் சாதிப் பெயரைப் பயன்படுத்தினால் அவரைப் பகுத்தறிவற்றவர் எனக்கூறவேண்டும்.

5. சாதி, மத,மாகாண, இனக் கலப்புத் திருமணங்களை மேற்கொள்ள வேண்டும்.

6. தன் சாதியிலே திருமணம் செய்து கொள்கிறவர்களை தங்கள் சொந்தத் தாயார், தங்கைகளைத் திருமணம் செய்து கொண்டவர்களாகவும், சமூகத் துரோகிகளாகவும் நடத்தவேண்டும்.

7. எல்லா பகுத்தறிவு வாதிகளும் ஒரே வகுப்பினர் போலப் பழகவேண்டும்.

8. பார்வதி, சிவன் போன்ற கடவுள் பெயர்களை பகுத்தறிவு வாதிகள் தங்கள் குழந்தைகளுக்கு வைக்கக் கூடாது.

9. பிறப்பு, இறப்பு, திருமண நேரங்களில் எத்தகைய சடங்குகளையும் செய்யக்கூடாது. சடலங்களை மருத்துவக் கல்லூரிகளுக்குத் தந்துவிட வேண்டும்.

10. பிள்ளையார் பூசை, பழனி யாத்திரை, காளி பூசை, போன்றவைகளுக்கு பணம் தரக்கூடாது.

11. பிறப்பு, இறப்பு, திருமண நேரங்களில் அந்தந்த வட்டாரங்களிலுள்ள பகுத்தறிவு வாதிகள் உதவி செய்ய வேண்டும்.

12. தங்கள் வாழ்க்கைத் துணைவர்களைத் தேடிக்கொள்ளும் விஷயத்தில் தத்தம் மக்களுக்கு முழு உரிமை தரவேண்டும். தன் சாதியிலேயே அவர்களுக்கு மணமக்களைத் தேட உதவக்கூடாது.மற்ற சாதிகளிலிருந்து பகுத்தறிவு வாதிகளிடம் மணமக்களைத் தேட முயற்சிக்க வேண்டும்.

13. ஒவ்வொரு கலப்பு மணத்துக்கும் சிறந்த விளம்பரமளித்து மிகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும்.

14. சாதிப்பட்டம் கொண்ட பெரும் புள்ளிகளைவிட சாதியில் நம்பிக்கையற்ற சாதாரண ஆட்களையே ஆதரிக்கவேண்டும்.

—"இந்தியன் ரேஷனலிஸ்ட்"

# திராவிடம் நம்நாடு.

பாவலர்: வேலாயுதசாமி.

அன்னையும் தந்தையும்—என்ற மெட்டு.

எடுப்பு.

திராவிடமே நம்மநாடு கொள்வோம்
சேர்ந்திட வாருங்கள் செய்வோம் ஏற்பாடு (தி)

தொடுப்பு.

காவிரிபாய்ந்திடும் நாடு செந்நெல்
கன்னல் விளைந்திடும் நன்னயநாடு
காவியச்சீர்திகழ்நாடு பண்டைக்
காலமூவேந்தர் செங் கோலுடைநாடு (தி)

தொகையரு.

ஞானமும் ஈகையும் வாய்ந்து மாந்தர்
நலமதற்கே தினம் பண்புகெடாமல்
மானமும் வீரமும் தாங்கி நல்ல
மேலோர்கள் வாழ்ந்து வளம்பெறும் நாடு (தி)

முடிப்பு.

வாணிபம் ஓங்கியநாடு போரின்
வன்மையும் ஊக்கமும் மன்னியநாடு
பேணியமெய்ப்பொருள் நாடு என்றும்
பேரறம் காப்பதில் பார்புகழ்நாடு! (தி)



# இரழ்சியாவை நினைத்ததுண்டா?

"இளந்தமிழன்"

ஆரவாரத்திலே அழியும் நேரத்தில் சிறிதளவேனும் சிந்தனைக்குப் பயன்படுமானால் அந்நாடு உலகின் முன்னோடியாக விளங்கும் தகுதியை விரைவில் பெற்றுவிடும். ரழ்சியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளரும், அந்நாட்டமைச்சின் முதல்வரும் இங்கு வந்தபொழுது இந்தியா விழாக்கோலம் பூண்டது. பேராரவாரத்தில் மூழ்கியது. உண்டு முடிந்ததும் வெற்றிலையைக் குதப்பியவாறே சிறிது நேரம் இளைப்பாறுவது போலவேனும் கொஞ்சநேரம் அந்த நாட்டைப் பற்றி—அவர்கள் திரும்பிச் சென்ற பிறகாவது எண்ணியிருந்தால் எவ்வளவோ உண்மைகள் நமக்கு விளங்கியிருக்கும். பொதுமக்களைப்பற்றிக்கூட அல்ல நான் குறைபடுவது பொதுவுடைமைத் தோழர்கள் சிறிதேனும் அந்நாட்டை நினைத்திருக்க வேண்டாமா? எண்ணியிருந்தால் இந்நேரம் அவர்களின் கண்கள் திறந்திருக்குமே! அரசியலிலும் வழிபாடுதானா? அதுவும் பொதுவுடைமைக் கட்சியிடமா!

இந்தியாவைவிடப் பன்மடங்கு வேறுபட்ட பண்பாடுகள்—மொழிகள்—மக்களினங்கள்—இயல்புகள் இவற்றைக் கொண்டது ரழ்சியா. ஆனால், அந்நாட்டின் கட்டுக்கோப்பே அதன் முன்னேற்றத்திற்குப் பலந்தருவது என்கிறார் குருசேவ். மக்களின் நட்பே எங்கள் மூலபலம் என்கிறார். இங்கு ஏன் அதைக் காணோம்? எண்ணிப் பார்த்ததுண்டா? மக்களின் குறைபாடா? அவர்கள் அறியாமைதான் காரணமா? அல்லவே அல்ல. ரழ்சியா விடுதலை பெற்ற காலத்தில் நம்மைக் காட்டிலும் அறியாமை இருளில் மூழ்கியிருந்தது.

காரணம் இதுதான். அங்கு ஒவ்வொரு நாட்டுக்கும் உரிய இடம் தரப்படுகிறது. அவற்றின் பண்பாடுகள் தனித் தனியே வளர்க்கப்படுகின்றன. இயல்புக்கேற்ற முறையில் செம்மையாக முன்னேறுகின்ற காரணத்தில் ஒவ்வொரு நாடும், இனமும் பலம் பெறுகின்றது. ரழ்சியாவின் பலத்தை மிகுக்கின்றது. நவம்பர், 21-ந் தேதியன்று தில்லிப் பாராளுமன்றத்தில் குருசேவ் பேசியதில் ஒரு தொடர்:

The Soviet union is a Firmly cemented multi national state, comprising sixteen equal Republcs, each having its own developed national Economy, and its own Distinctive culture.

சமநிலையில் பதினாறு குடியரசுகள் தாமாக விரும்பிச் சேர்ந்த கூட்டமைப்பே ரழ்சியா எனப் பிறிதோரிடத்திலும் வலியுறுத்திக் கூறுகிறார்.

ஆனால், இங்கு யாவும் தலைகீழ்! தனித்தனிப் பண்பைப் பேணுவது தேசியத்திற்கு ஊறு விளைவிக்கும் என பாரதத்தின் தவப்புதல்வர்கள் எல்லோரும் நம்புகிறார்கள்! தனக்குப் புரியாத மொழியில் வழங்கப்படும் நாணயத்தைக் கையில் வைத்திருப்பவன் மனம் விடுதலை உணர்வில் துள்ளி மகிழ முடியுமா? மகிழுமானால் அது மனமல்ல—பிணம்! ராமாயணமும், பாரதமும் உலகெங்கும் பரவி விட்டன; இந்தியப் பண்பாட்டை உலகம் வியக்கிறது என்ற செய்திகள் தமிழன் உள்ளத்தையும், உணர்வையும் கிளற முடியாது. வெட்கித் தலைகுனியவே பண்ணும்! கருநாடக இசையும், இந்திப் பண்ணையும் கலக்கித் தேசியப் புத்திசை யமுது வழங்கப் போகிறார்களாம்! அது இசையாகவா இருக்கும்! மருத்துவத்திலும் இப்படி ஒரு கூட்டுத் தேவையாம். ஒற்றுமையென்பது யாவற்றையும் ஒன்று போல் ஆக்குவது அல்ல. சிறந்த இசை என்றால் ஒவ்வொரு கருவியும் அதற்கு உரிய ஸ்தாயில் இருக்க வேண்டும். எல்லாம் ஒரே ஸ்தாயில்தான் இருக்க வேண்டும் என்கிறது பாரத வருஷம்!

நாடுகளின் கூட்டமைச்சு என்று சொல்லுவதை விடுத்து, அமைச்சுப் பகுதிகள் (States) பல சேர்ந்த ஒரு நாடு எனத் தன்னை அழைத்துக் கொள்ளுவதென்றே இந்தியாவின்

(11-ம் பக்கம் பார்க்க)




(முன் இதழ் தொடர்ச்சி)

"வேண்டாம்! தாங்கள் இங்கிருந்தே வேடிக்கை பாருங்கள்! சிதறடிக்கிறேன் சிறுநரிகளை!"

"மகமத்! பீரங்கியிருக்கிறது எதிரில்"

"அதற்குத் தீவைப்பதற்குள் அவர்கள் தலையை உருட்டுகிறேன்."

"வேழங்கள்"

"வேங்கை நான்"

"தனி ஆள் நீ"

"ஆட்டு மந்தை அது! தாமதம் வேண்டாம்! முதற்போர் என்னுடையது! உத்தரவு தாருங்கள்! வெற்றியை இழுத்து வந்து நிறுத்துகிறேன் உங்கள் முன்னிலையில்! சந்தேகிக்காதீர்."

"புறப்படு......இரக்கத்தை இதயத்திலிருந்து எடுத்து எறிந்து விட்டுப் புறப்படு! வெட்டு! வெட்டிக் குவி!......போய்வா!" சொல்லி முடித்தான் தேசிங்கு. மகமத்கான் பறந்தான் நீலவேணி மேல்! தொடர்ந்தனர் சில வீரர்கள்.

## 16. போர்முனையிலே.

எதிரியின் படைமுன் மகமத்கான், பீரங்கிக் குண்டுகளைத் தாண்டிப் பாய்ந்தான் வேங்கையைப் போல!சூழ்ந்தனர் எதிர்ப்படையினர். குதிரைகளையும் வீரர்களையும் மாறிமாறி வெட்டினன்!சுழன்று வரும் பகைவர்களின் வாள்களைத் தடுத்து, அவர்களின் அவையவங்களைப் பொத்தலிட்டான். அவன் ஒருவன்; துரத்தித் துரத்தி அடித்தான். லகானை இழுத்துப் பாய்ந்தான், சுபங்கித்துரை அம்பாரி நோக்கி. 'பாலா' எடுத்து அடித்தான் யானையின் மண்டை மேல். மண்டை பிளந்து மண்ணில் விழ்ந்தது யானை! வீசினன் வாளை! சுபங்கித் துரையின் வலதுகரம் காற்றில் பறந்தது! மறு வீச்சு அவன் மார்பை நோக்கிச் சென்றது. சுபங்கி சரணடைந்தான். மன்னிப்புக் கோரினன். விட்டான் மகமத்கான். அடுத்து திரும்பித் தாவினன், ஷேக் முகம்மது மேல். வீசினன் வாளை... மன்ருடினன் மன்னிப்புக்கு. விட்டான் அவனையும். மீண்டும் பாய்ந்தான். ஈட்டி எறிந்த கரங்களை வான வீதியில் பறக்க விட்டான்! அம்பெய்தியவர்களின் தலைகள் ஆகாயத்தில் பறந்தன. வெட்டிக் குவித்தான் வீரர்களை—வேழங்களை—குதிரைகளை......!! களைத்தான் அம்மாவீரன். பெற்ற வெற்றியை மன்னனிடம் போய் சொல்லச் திரும்பினன்! பதுங்கியிருந்த இருவர் பீரங்கிக்கு நெருப்பிட்டனர். சப்தம் கேட்டுத் திரும்பினன் மகமத்! அவன் நெற்றியைத் துளைத்தன பீரங்கிக் குண்டுகள். சாய்ந்தான் மண்ணில் மகமத்! நீலவேணி அவனை சுற்றிச் சுற்றி வந்த! அதைப் பிடிக்க ஆட்களை ஏவினன் நவாப்! நெருங்கியவர்கள் உதை பட்டனர். பாய்ந்தது நீலவேணி. சென்று நின்றது தேசிங்கின் எதிரில்!

கண்களில் நீர் வழியும் நீலவேணியைக் கண்டான் தேசிங்கு; திகிலுற்ருன். உடனே சேதியும் வந்தது. அலறினன்!கதறிக் கதறி அழுதான்;புலிபோல் பாய்ந்து போரிட்ட நண்பன், வஞ்சகமாக பதுங்கியிருந்து படுகொலை செய்யப்பட்டான் என்றறிந்தும் "பழிவாங்குவேன் பகைவர்களை" என்று கூறி புயலெனக் கிளம்பினன், பாராசாரி மீது!



தேசிங்கின் வாள் வீச்சிலே அறுபட்ட அவையவங்களோடு அலறித்துடித்தனர் பலர்; அஞ்சி ஓடினர் பலர்; பிணம் போல் படுத்து மெள்ள நகர்ந்து ஓடி ஒளிந்தவர்கள் ஏராளம்! கால்போன குதிரைகளும், கழுத்து அறுபட்ட குதிரைகளும் ஏராளம். அவன் பாலா அடிபட்டு மண்டை பிளந்து மண்ணைக் கவ்விய யானைகள் ஏராளம். வெட்டினன் தென்பட்டோர் அனைவரையும், ஒரு வாள் வீச்சும் வீணுகவில்லை! பாராசாரி பறந்த வேகமும், அவன் கைவாள் வீச்சின் வேகமும் வீழ்த்தின எண்ணற்றவர்களை.வெறி பிடித்தவனைப்போல் வெட்டினன்... வெட்டினன்... யானை மீது ஏறி அம்பெய்தவர்களையும் வெட்டினன். இந்த வெறியிலும் நவாபைத் தேடியவாறேயிருந்தான்.போர்க்களம் குருதிக்குளமாகியது! அப்போதும் அவன் போர்வாள், பலரின் குருதியை ஓட வைத்தது. இவன் வெட்டும் வேகத்தையும், வெற்றியை விரைந்து பிடிக்கும் போக்கையும், பிணமானவர்கள் தவிர, பிறர் எல்லாம் பறந்தோடும் பரிதாபக் காட்சியையும் கண்ட நவாபு இறங்கினன், அம்பாரியை விட்டு. ஓடி ஒளிந்து கொண்டான்! அவனைத் தேடித்திரிந்த தேசிங்கு, பாய்ந்தான் ஓர் அம்பாரியின் மேல். நவாபுதான் அதன்மீது இருப்பான் என்றெண்ணி வீசினன் வாளை. உருண்டது அம்பாரிமேல் இருந்த தாவுத்காரன் தலை. பகைவன்தான் தொலைந்தானென்றெண்ணி பெரு மகிழ்வோடு திரும்பினன். எதிர்ப்போர் எவருமின்றி புறப்பட்டான். எதிரில் வந்தான் தரணிசிங்கு ராஜன். செத்தது நவாப் அல்ல என்ற உண்மையைச் சொன்னன்; மீண்டும் புகுந்தான் களத்தில்! ஓடும் நவாபின் பானையத்தை வெட்டி, வெட்டி வீழ்த்தினன். அவன் எதிரில் வெள்ளைக் கொடி ஏந்தி "தோன்றல் மல்" வந்தான்; வணங்கினன் தேசிங்கை.

"சமாதானம் செய்து கொள்ளலாமெனச் சொல்கிருர் நவாபு! தயை செய்து போரை நிறுத்துங்கள்"

"சமாதானம்!......பல்லாயிரவர் உயிரைப் பலி வாங்குவதற்கு முன்பு பேசவேண்டியது. என் நண்பன் மகமத்கானைச் சாகடித்த பிறகா?... முடியாது; ஓடிவிடு! எனக்கு பலமிருந்தால் ஆற்காட்டை நான் கைப்பற்றுகிறேன். அவனுக்கு பலமிருந்தால் செஞ்சியை அவனைப் பிடிக்கச் சொல்."

தான் தப்பித்தால் போதுமென்று ஓடினன் தோன்றல்மல்!

## 17. மாவீரன் தேசிங்கு.

தேசிங்கு தட்டி விட்டான் குதிரையை! பறந்தது பாராசாரி. ஒளிந்திருந்த நவாபின் முன் வந்து நின்றது. யானை மீதிருந்தான். அங்கிருந்தபடியே சமாதானம் வேண்டினன்! மறுத்தான் தேசிங்கு. ஏவினன் பாராசாரியை! யானைமேல் இருகால் வைத்து நின்றது அது! யானையின் வயிற்றில், தொட்டில் கட்டி ஒளிந்து கொண்டிருந்தான் மாவெட்டி! பார்த்தான் பாராசாரியின் காலை; வெட்டினன் குதிரையின் வலது காலை. வீழ்ந்தது தரையில் பாராசாரி!... மீண்டும் எழுந்து நின்றது. முன்னங்காலை யானையின் துதிக்கையின் மேல் வைத்து நின்றது. பாலாவைத் தூக்கி வீசிட ஓங்கினன் தேசிங்கு. ஆனால், அதற்குள் மறுகாலும் வெட்டுண்டு வீழ்ந்தது தரையில்! குதிரையை விட்டு நகர்ந்து இரு கையிலும் வாளேந்திப் போரிட்டான்! ஒளிந்திருந்தோரும், ஓடிப் போனவரும் வந்து வளைத்துக் கொண்டனர்! இருப்பினும், வெள்ளரிக்காய் சீவுவதைப் போல் சீவினன் எதிர்த்தோரின் அவயவங்களை! கிழித்துப்போட்டான் குறுக்கிட்டோரை! இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு நவாபு மீண்டும் ஓடி ஒளிந்துகொண்டான். எதிர்த்தோர் அனைவரையும் வெட்டிக் குவித்துவிட்டுச் சுற்றிப் பார்த்தான்! அவையவங்கள் அறுந்து அலறுவோரும், புரளுவோரும் தவிர, வேறு அசையும் பொருள் எதுவுமே இல்லை!ஓடிஒளிந்த நவாபைத் தேடிப் பிடிக்கவும் வழியின்றி திகைத்தான்; திரும்பினன். பார்த்தான் தனக்கென்றே பிறந்திருந்த பாராசாரியை; மாண்டு விட்டிருந்தது! மாவீரன்; அவன் கன்னங்களில் உருண்டது இரண்டு துளிநீர்!

நடந்தான்...நடந்தான்...தன் நண்பன் மகமத்கான் பிணத்தைத் தேடி நடந்தான் வீரன் தேசிங்கு. படுகளத்தில் புறட்டினன் சந்தேகித்த பிணங்களை. இறுதியில் கண்டு பிடித்தான் பிணத்தை! அலறியெடுத்து மடிமேல் வைத்துக் கதறினன்!கதறினன்!

## 18. பிரிந்தாயோ நண்பா!

"மகமத்......மகமத்! என்று உன்னை இனிக் காண்பேன். ஐயோ... படுகொலை செய்து விட்டனரோ பாதகர்கள்! புயலெனக் கிளம்பி; புல்லர்களைப் பறக்கடிக்கச் செய்து, அலுத்துத் திரும்புகையில் உலுத்தர்களால் கொல்லப்பட்டாயோ! மகமத்...... மகமத்! மணக்கோலத்திலிருந்த உன்னை அழைத்தது

இந்த பிணக்கோலத்தில் காணவா? நவாபு சொந்த இனத்தவனென்றும் பாராது, பகைத்துப் போரிட்ட நற்குணத்தவனே! வேழங்கள் மத்தியில் வேங்கையெனப் புகுந்து, வஞ்சகர்கள் எறிந்த ஈட்டிகளைத் தள்ளி, மழைபோல் வீழ்ந்த அம்புகளைத்தள்ளித் தாண்டி, கொடியவர்கள் வீசிய வாள்களை உடைத்து, பகைவர்களைக் கிழித்தெறிந்த மாவீரனே! சூருவளி போல் சுழன்று தாக்கி பேராசைக் காரர்களைச் சிதறடித்து, ரணகளத்திலும் நேர்மையை மறவாது, நிராயுதபாணிகளை மன்னித்த மறவனே! குருதிக்குளத்தையும், அறுந்த அவயவங்களையும் கிழிந்த குடல்களையும், பிளந்த மண்டைகளையும் கண்டு அஞ்சாது, ஆற்காட்டான் படையை அதம் செய்த நண்பனே! எப்படி என்னை விட்டுப்பிரிந்தாய்! ஈனர்களிடம் இறக்கம் காட்டியதாலோ வீரன் உன்னைச் சூதாய்க் கொன்றனர்! ஐயோ...மகமத்...சாகும்போது...என்னென்ன எண்ணினாயோ? 'உற்றார் உறமுறையூர் புடைசூழ, பெற்றோர் மனமகிழ, புதுவாழ்வு தந்திடும் பூங்கொடியாள் ஒருவள் மறுபக்கம் காத்திருக்க, வீற்றிருந்தேன் மணப்பந்தலில்; கொற்றவன் அழைப்பு கண்டு, நற்றிருமணத்தை மறந்து கண்ணீர் அணை போட்டுத் தடுத்தவர்கள் தடைகளைத்தாண்டி, நீல வேணி ஏறிப் பறந்தோடி வந்தேன்!...வாளேந்தினேன்!...வெட்டி வீழ்த்தினேன் வீணர்கூட்டத்தை; வெற்றியின் வாயிலை நெருங்கினேன்; வழியில் வெறியர்கள் குண்டுக்கிரையானேனே! காக்கவரவில்லையே தேசிங்கு" என்றெண்ணி வருந்தினாயோ கயவர்க்குக் காட்டிய கருணையே குண்டாக மாறிப்பாய்ந்ததே என்று கலங்கினாயோ! மலர்ப்பந்தலிலே வீற்றிருந்த மாது சிரோன்மணியை நினைத்து ஏங்கினாயோ! 'போர்' என்ற சேதி கேட்டதும் பதறி எழுந்து, கதறித் தடுத்த பெற்றோரை உதறித்தள்ளி வந்ததன் விளைவோ என்று மனம் நொந்தாயோ!...உடன் பிறவாத் தம்பியே! திடமான உன்குரல் எங்கே? பம்பரமெனச் சுழல்பவனே! கெம்பீரமான நின் தோற்றமெங்கே? வீர விழி எங்கே?...நீ எங்கே? மகமத் எங்கே...ஐயோ...ஐயோ நீல விழிகளுள் நீர் வடித்து நிற்கும் நீலவேணியையும், வழிமேல் விழிவைத்து மகன் வருகைக்காகக் காத்து நிற்கும் நின் பெற்றோரையும், மணவாழ்வு பெற ஏங்கிடும் ஏந்திழையாளையும் ஆற்றுவார் யார்; தேற்றுவார் யார்? ஐயோ... புதுவாழ்வு பெற இருந்தாய்...புதை பூமிக்கு அனுப்பிவிட்டேனே!...கனக மஞ்சம் காத்திருக்கக் குருதிக் குளத்திலே உன்னைப் படுக்கச் செய்தேனே! மனிதருள் மாணிக்கமே!...நண்பருள் நாயகமே! நற்பண்பு நிறை அன்பர்கள் தலைவனே! உன்னையோ என்னிடமிருந்து பிரித்தனர்...இல்லை...இல்லை...பிரிக்க முடியாது அவர்களால்! மகமத் நம்மைப்பிரிக்க முடியாது இதோ வந்துவிட்டேன்...நீ போய் நான் வாழ்வதா... இல்லை!...நீ படுத்த மண்ணில் நானும் படுக்கிறேன்! பிறந்த பொன்னாடே!...உன்னைவிட்டுப் போகிறேன். இல்லை!...உன் மடியிலே என் நண்பனோடு உறங்கப் போகிறேன்!...தாயே...ஏற்றுக்கொள்!"

## 19. வீரமும் புகழும்.

படுகளம், பதைத்து வெறித்த நெஞ்சம்! வாளைத் தூக்கிப் பிடித்தான் தேசிங்கு.

"பகைவர்கள் குருதியைக் குடித்த கூரியவாளே! இறுதியாய் என் குருதியையும் ருசித்துப் பார்த்து விடு!"

வீசினான் தூக்கி, வாளை; மார்பைக்காட்டி நின்றான். புதைந்தது மார்பில். "ராணி" என்று கூவியவாறே வீழ்ந்தான் தரையில்! மாற்றானுக்குப் பணியாத மாவீரன் மரணத்தைத் தழுவினான்.

கணவன் மாண்ட சேதி கேட்டாள் ராணி! வழியும் கண்ணீரோடு வெறி பிடித்தவள்போல் ஓடோடியும் வந்தாள், போர்க்களம். கண்டாள் மார்பில் வாள் புதைந்து மாண்ட கணவனை. கதறினாள் சுகமேதும் அனுபவித்தறியா ஆரணங்கவள்! பார்த்தவர், கேட்டவர் கண்களும் நீரோடைகளாயின!

வாழ்க்கையில் மாலையிட்ட சுகத்தைத்தவிர வேறு எதையும் கண்டறியாக் காரிகையாளவள் கணவனை மடிமேல் வைத்து அலறித்துடித்தாள்! சந்தனக்கட்டை கொண்டு சிதை தயாரிக்கச் செய்து, தீயிட்டாள்! பலர்தடுத்தும் பாய்ந்தாள் தீயில்; வெந்து பொடியானாள்! வீரம் புகழோடு கைகோர்த்தது!

செஞ்சி மலைக்கோட்டையின் சிகரங்கள், இடிந்து பாழடைந்த கட்டிடங்கள், மாடங்கள்-கூடங்கள், இன்றும் இந்த வீர வரலாற்றின் சின்னங்களாகக் காட்சி தருகின்றன.

முற்றும்.



# பிராம்மணீயம் என்றால் என்ன?

## 1. பிராம்மணீயம் ஒரு மதம்!

சநாதனம், வருணாசிரமம் என்கின்ற சாதிப் பிரிவினையின் அடிப்படையில் பிராம்மணனை உயர்த்துவதற்காக மற்றவர்களைத் சூத்திரர், பஞ்சமர் என்பதாக மிக மிகத் தாழ்த்தி இழிவுபடுத்துவதும், விதி, கர்மம், முற்பிறப்பு என்பதான நம்பிக்கைகளை உண்டாக்கி தமது வாழ்வைக் குலையாமல் காத்துக் கொள்வதுமான ஒரு கொள்கை பிராம்மணீயம்!

## 2. பிராம்மணீயம் ஒரு கொள்கை!

இந்துக்கள், இந்துக் கடவுள்கள், இந்துப் பண்டிகைகள் என்பதாகப் பல நடைமுறைகளைச் சமுதாயத்திலே புகுத்தி, இதுதான் இந்துமதம் என்று அரசாங்கத்திலே நிலைக்க வைத்து அவற்றின் மூலம் பிராம்மணரின் சுரண்டலை—உயர்வாழ்வை உறுதிப்படுத்திக் கொள்ளும் மதம் பிராம்மணீயம்!

## 3. பிராம்மணீயம் ஒரு சூழ்ச்சி.

பிராம்மணர்கள் பூதேவர்—பூசுரர்! அவர்கள் வார்த்தைகள் வேதவாக்கு, அவர்கள் ஞான போதகர்கள், ஆண்டவனின் அருளைப்பெற்றுத் தருவோர். புரோகிதர்—குருமார்கள், மோட்சலோக வழிகாட்டிகள் என்பதான நம்பிக்கையை வளர்த்து கல்யாணம், கருமாதி, திதி, திருநாள், சடங்கு என்பதாக பலப்பல காரியங்களிலே நம்மை ஏய்த்துப் பணம் பறித்து வயிறு வளர்க்கும் சூழ்ச்சி பிராம்மணீயம்!

## 4. பிராம்மணீயம் ஒரு மாயை!

பொய்யான புராணக் கதைகளை எழுதி வைத்து, மோட்சம், நரகம் கற்பித்து, பக்தி செய்தால் முக்தி, பார்ப்பானை வணங்கினால் பரகதி; தர்மம் செய்து அவன் காலைக் கழுவிய நீரைக் குடித்தால் பரலோகம், இல்லாவிட்டால் நரகலோகம் என்பதான பீதியை விளைவித்து, கற்பனையால் மக்களை வசப்படுத்தி ஏய்க்கின்ற படுமோச மாயை பிராம்மணீயம்!

## 5. பிராம்மணீயம் ஒரு நஞ்சு!

சுதர்மம், ஆச்சாரம், கடவுள், பக்தி, பாராயணம், அபிஷேகம், அர்ச்சனை ஆராதனை என்பதாகப் பல கூறி, இவற்றிற்கு மூலம் சமஸ்கிருதம்-தேவமொழி என ஏற்றிப் போற்றி வடமொழியை வளர்த்தும், தென் மொழியை-தீந்தமிழை அநியாயமாக அழித்தும் வருவதும், திராவிட மொழிகளைச் சிதைத்து உருக்குலைத்தும், இந்தியாவின் பொதுமொழியாகி சிங்காதனம் ஏறத் துடித்துக்கொண்டிருப்பதுமான சமஸ்கிருத எண்ணங்களுக்கும், துராசைக்கும், முயற்சிகளுக்கும் மூலகாரணமாகவுள்ள நஞ்சு பிராம்மணீயம்!

**சிந்தித்துப்பார் தமிழா! சிந்தித்துப்பார்! பிராம்மணீயம் தரும் கேட்டினைப் பார்! திராவிடத்திலே இந்தத் தீய சக்திகள் வாழவேண்டுமா? மாளவேண்டுமா? —வாலி.**

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கோணலைத் தெளிவாகக் காட்டுகிறது. மற்ற நாடுகள் காலால் நடக்கின்றன. எனவே தான் ஒரு புதுமுறையைப் புகுத்த வேண்டும் என்று இதற்கு ஆசை!

தி. மு. க. வைத் தம் உயிர்க் கொல்லி எனக் கருதி நடுங்கும் தமிழகப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர்கள் இதனை நன்றாக எண்ணிப் பார்க்க வேண்டும். தி. மு. க. இந்த உண்மையைத் தெளிவாக உணர்ந்தது. உணர்த்த முயல்கிறது. தனிநாடுகள்—தனியுரிமைகள்—கொண்ட கூட்டமைச்சு என்பதை இந்தியா உணர வேண்டும் என வலியுறுத்துகிறது. அதற்காகத் தான் ஒருநாடு விரும்பினால் இந்திய யூனியனிலிருந்து பிரிந்துபோகும் உரிமை அதற்கு இருக்கவேண்டும் எனத் தனது தேர்தல் அறிக்கையில் குறித்திருக்கிறது. ரஷியாவில் இந்த உரிமை இருக்கிறது என்பதை நமது பொதுவுடைமைத் தோழர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

இந்த அடிப்படை உண்மையை உணர்ந்து நாட்டில் ஒற்றுமை ஏற்படுத்தத் திறனற்ற காரணத்தால் மக்கள் உயிரோடு விளையாட வேண்டிய அவலம் காங்கிரசுக்கு நேர்ந்தது. ரஷியாவுக்கு ஜே போடும் பொதுவுடைமைகளேனும் இதனைச் சுட்டிக் காட்டியிருந்தால் சிறிது மாறுதல் ஏற்பட்டிருக்கக் கூடும். அவர்கள் செய்திருக்க வேண்டியதைத் தி. மு. க. செய்கிறது. அதை உணரும் ஆற்றலும் படைத்திலதே இந்த நாட்டுப் பொதுவுடைமை! ●●

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

கேனே அந்தக் குழந்தைக்கு அவர்தான் தந்தை! என் குழந்தைக்கு மாத்திரமல்ல—எனக்கும் அவர் தந்தைதான்! விழிக்கிறீர்கள்; விபரீதமான நிகழ்ச்சி, அது!

என் தாய் கண்ணம்மா சின்ன வயதிலே நல்ல அழகி, கருப்பு நிறமானாலும் கவர்ச்சிகரமான தோற்றமுடையவள்; ஆனால், முருகானந்தர் வீட்டு வேலைக்காரி!

முருகானந்தர் நாற்பது வயதைத் தாண்டிவிட்டாலும் வாலிபம் குறைந்தவராகக் காணப்படவில்லை! மாருக மங்கையர் பலரை வேட்டையாடிக் கொண்டிருந்தார், ஒவ்வொரு நாளும்! அவர் செய்துகொண்டிருந்த திருவிளையாடல்களை "பெரிய மனிதர்" என்ற பட்டம் வெளியுலகம் காணமுடியாத நிலையில் மறைத்துக் கொண்டிருந்தது! ஆனால்...?

என் தாய் கண்ணம்மா வழுக்கி விழுந்தாள் ஒருநாள், அவரது வலையில்! என் தாய் வேலைக்காரிதான்! ஆனால் முருகானந்தரின் இதயம் கவர்ந்த எழிலரசி! அவரது சப்ரகூட மஞ்சத்தை அலங்கரிக்கும் சரசி! இந்த சூழ்நிலை அதிகநாள் நீடிக்கவில்லை! ஏன்.......?

என் தாயை அவர் "தாலி" கட்டாத மனைவியாகக் கருதினரே யொழிய-உள்ளன்புடன் உறவாடவில்லை! அவரது உள்ளப்பசிக்கு-என் தாய் உணவு! இந்த நிலையிலேதான் அவர்களது உறவு வளர்ந்தது!

மலரிலே தேன் குறைந்ததும்-புதிய மலருக்கு வண்டு பறப்பதுபோல, முருகானந்தருக்கு புதிய மலர்மீது கண் பாய்ந்தது! அதன் பலன்....?

என் தாய் விரட்டப்பட்டாள்! வேங்கையை எதிர்க்க முடியாத வெள்ளாட்டின் நிலையிலே, ஊராரின் அவமானத்திற்கஞ்சி ஊரை விட்டே ஓடினாள்!

ஆண்டுகள் பல ஓடி மறைந்தன.

நான் பிறந்து, வாலிபத்தின் எல்லைக்கோடு வரை கடந்து விட்டேன். வறுமை எங்களை வதைத்தது. வேலை கிடைக்காத நிலையால் என் தாய் தெருத்தெருவாக பிச்சை எடுத்தாள்: அந்த வாழ்விலும் நிம்மதி இல்லை! ஒருநாள்! பொங்கிய அகத்தை அடக்கமுடியாத நிலையில "அம்மா எனக்கு அப்பாவே கிடையாதா?" என்றேன்:

"இருக்கிறார்! பிரபா....உன் தந்தை சாதாரணமானவரல்ல! பெரிய மிராசுதார். முல்லைக் காட்டின் பண்ணையார் முருகானந்தர்! ஆனால்....?

அவள் கூறிய சோகக் கதையை கண்ணீருடன் கேட்டேன்: நாலுபேரறிய அவரை நான் தந்தையெனக் கூறமுடியாது! இந்த நிலையில் நாங்கள் வாழ்வதைவிட....?

* * *

ஒரு நாள்....

என் வாழ்விலே மறக்க முடியாத சம்பவம்! கனத்த இருள் உலகை விழுங்கிவிட்ட நேரம்! வறுமையின் கோரப்பிடியிலே சிக்கிய நானும்—என் தாயும் முல்லைக்காடு வந்தடைந்தோம்! ஒரு காலத்தில் எழிலரசியாக இருந்தவள்—இன்று எலும்பும் தோலுமாக காட்சியளித்தாள்! அவள் உயிர்வாழ்ந்துகொண்டிருப்பதே எனக்காகத்தான்! என்மீது அவளுக்கு அவ்வளவு ஆசை!

ஏழையாகப் பிறந்துவிட்டவர்களுக்கு—தங்கள் குழந்தைகளைத்தவிர வேறு யார்மீது ஆசைகொள்ள உரிமையுண்டு?

ஊரையடுத்த பாழ்மண்டபத்திலே—பயங்கரமான நள்ளிரவிலே தங்கியிருக்கும்போது இடிவிழுந்தாற்போன்ற நிலை ஏற்பட்டது எங்களுக்கு! எங்கிருந்தோ ஓடிவந்த நான்கு முரடர்கள் என்னைத் தூக்கிச்சென்றனர்: என் அம்மா வீறிட்டலறினாள். நான் துடித்தேன். அதன்பின்...?

நினைவு தப்பியது எனக்கு!

மீண்டும் ...

கடிகாரத்தின் "டிக்-டிக்" கென்ற ஓசை என்னை நினைவுக் கிழுத்து வந்தது: சுற்றுமுற்றும் பார்த்தேன்; பிரமாண்டமான மாளிகை! ஸ்பிரிங் கட்டில்! மின்சாரவிசிறி! ஒரே அலங்கார தாண்டவம்! வறுமையிலே வாடிக்கிடந்த எனக்கு ஏதோ ஒரு புதிய உலகில சஞ்சரிப்பதாக எண்ணம்!

அடுத்த வினாடி!

என் தாயின் நினைவுவரவே நரம்புகள் துடித்தன. ஏக்கம் வதைத்தது! அதைக்கலைத்து ஒரு முரட்டு உருவம் உள்ளே நுழைந்தது! திடுக்கிட்டேன் நான....

"பயப்படாதே!புதிய பெண். இங்கு உனக்கு எந்தவிதமான குறைவுமிருக்காது...!" என் அருகே நெருங்கினார் இவ்விதம் கூறிக்கொண்டு! மின்சார ஒளியால் அவரைப் பார்த்தேன்.

பட்டை பட்டையாக விபூதிப் பூச்சு! மார்பிலே சந்தனம், மேனியிலே பட்டாடை, நெற்றியின் நடுவே சிவப்பு திலகம், அவரைப் பார்த்தால் பக்தியின் சின்னமாகத் தென்பட்டார்!

வேங்கையிடம் அகப்பட்ட வெள்ளாடாகத் திகைத்து நின்றேன். எனக்கும் அவருக்குமிடையே உள்ள இடம் வரவர குறைந்தது... என் கரங்களைப் பற்றினார்: அந்த ஒரு வினாடியில் அவரது எண்ணம் புரிந்தது எனக்கு! ஏதோ ஒரு



முரட்டுத்தைரியம் அவரதுகரங்களை உதறிவண்ணம் ஓங்கி அறைந்தேன்; ஆனால், மறுவினாடி.....

ஏதோ ஒருமுரட்டுப் பிடியில் அகப்பட்டு திணறிக் கொண்டிருந்தேன்; அதன் கோரப் பிடியிலிருந்து என்னால் விடுவித்துக்கொள்ள முடியவில்லை! தூண்டிலில் அகப்பட்ட மீன் எங்காவது தப்பியதுண்டா? அந்த பக்தியின் உருவம், அதன் கோரப் பசிக்கு என்னை உணவாக்கியது!

* * *

கடிகாரத்தின் முள் தன்னைத் தானே சுழல்வதைப்போல் நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன! நான் அந்த காட்டுப் பங்களாவிலே தப்பியோடமுடியாத நிலையில் சிறை வைக்கப் பட்டேன்.

அறுசுவை உண்டு-பட்டாடை போகபோக்கியம்தான்! ஆனால் என் தாய்...? அவளது நிலை....? இதையெல்லாம் எண்ணி—எண்ணி ஏங்கித் துடிப்பேன்! ஆனால் ஆறுதல்! ஒரு நாள்.... அந்த பணம் படைத்த சீமான் கூறினார்:

"பிரபா... என் இன்பவல்லியாக-எனக்கேற்ற சரியாக வம்பு செய்யாத நிலையில் வாழ்வதாக இருந்தால், வறுமையிலே நீ வாடவேண்டியதில்லை!" கூறினார் இப்படி!

ஆம்! நான் மானத்தை இழந்து விட்டேன்! தமிழகப் பெண்களுக்கு எது அணிகலனோ அது என்னைவிட்டு ஓடி மறைந்துவிட்டது! இப்போது நான்...?

பாதை தவறியவள்! ஒழுக்கம் கெட்டவள்! தெரிந்தோ—தெரியாமலோ வழுக்கிவிழும் நிலையடைந்து விட்டேன்! பாழும் பொல்லாத வறுமை என் வாழ்வை விழுங்கி ஏப்பமிட்டுவிட்டது!

ஒரு நாள்.......

என்னை உயிரோடு வதைக்க வேண்டாம்; வெளியே போய் வர உரிமை கொடுங்கள். அனாதையான என் தாயைப் பார்க்க வேண்டும் என்றேன்.

"அந்த பிச்சைக்காரியை ஏன் பார்க்கப் போகிறாய்? அவளை ஊரைவிட்டே துரத்தி விட்டேன் எனது ஆட்களைக் கொண்டு! நான் பெரிய மனிதன்!... முல்லைக்காடு பண்ணையார் முருகானந்தர் என்றால் இந்த வட்டாரமே நடுங்கும்? நீ வெளியே சொன்னால்என்னைப் பற்றி இந்த ஊர் என்ன நிலையில் எண்ணும்...?

எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது! உலகமே பிரளயத்தில் மூழ்குவது போன்ற நிலை! முல்லைக்காடு பண்ணையார் முருகானந்தர் எனக்குத் தந்தை! அம்மாவின் வாழ்வை கொலைக்களத்திலே நிறுத்திவிட்ட பாபி! அன்பு மகளே என்று கொஞ்ச வேண்டிய நேரத்தில்-மஞ்சத்திலே புரளச் செய்துவிட்டார்!

பணம் அவரது வெறிகொண்ட கண்களுக்கு திரையிட்டு விட்டது!பெரிய மனிதன் என்ற பட்டம்-சின்னத்தனங்கள் செய்ய உறுதுணையாகிவிட்டது! பக்தியின் சின்னம் அவரது துரோகச் செயல்களை அம்பலமாக்காமல் மறைத்துவிட்டது! தந்தைக்கு தாரமாகிவிட்டேன் நான்..? இந்த இழிகொட்ட நிலையில் நான் வாழ்ந்து கொண்டிருப்பதைவிட........?

தற்கொலைக்கு துணிந்தேன்! ஆனால்? என் நிலைகெட்ட வாழ்விலே அரும்பிய மலர்...? தற்கொலை எண்ணத்தைக் கைவிட்டேன்! அத்துடன் அவரது பயங்கரமான பிடியிலிருந்தும் தப்பி விட்டேன்!

மீண்டும் நாட்கள் சுழன்றன!

இப்போது ஒரு குழந்தைக்கு நான் தாய்! திருமணமாகாமலேயே குழந்தைக்குத் தாயாகி விட்டேன்! ஆனால் மூலகாரணம்....? என் தாயைத் தேடினேன்; என்னால் முடிந்த அளவு முயன்றேன். ஆனால், தோல்விதான் எனக்குக் கிட்டியது! என் தாயை நான் தேடியலையும் வேளையிலே முறைத்துப் பார்ப்போர்; முறைகெட்ட வாழ்வுக்கு வழிதேடியோர்; கண் வீசுவோர்! கயவாளித்தனம் புரிவோர், இப்படிப் பட்டோரையெல்லாம் நான் சந்திக்க வேண்டியதாயிற்று! எந்தவிதத் துணையுமின்றி நான் அஞ்சாமல் வாழ முடியாது என்ற நிலை ஏற்பட்ட பின்னரேதான் முடிவு கொண்டேன்!

தீராத அவமானத்திற்குள்ளான நான், இந்தச் சமுதாயத்திலே வாழ முடியுமா? இந்த முறையற்ற நிலையிலே பிறந்துவிட்ட என் சிசுவைக்கொன்றுதானும் தற்கொலை செய்துகொள்ள முயன்றது குற்றமா? நான் வாழ்வது முறையா? சரியா? இந்த அவல நிலைக்கு ஆளாக்கியவர்களையல்லவா தண்டிக்க வேண்டும்?

கூறுங்கள் நீதியை. நிலை நிறுத்துங்கள் சட்டத்தை.... இதுதான் என் கதை...." பிரபா கூறிமுடித்தாள்...

கூட்டத்திலேயிருந்து 'இச்' என்ற ஒலி கிளம்பியது!

"குழந்தையைக் கொன்று—தானும் தற்கொலை செய்ய முயன்றது சட்டப்படி குற்றம் எனக் கருதப்படுவதால், குற்றவாளிக்கு ஏழு வருட தண்டனை விதிக்கிறேன்" நீதிபதி கூறினார் தீர்ப்பு!

கூட்டத்தின் இடையிலே ஒரு சல சலப்பு! தீர்ப்பைக் கேட்டதும் தலைவிரி கோலமாக ஓடிவந்தாள் ஒரு பெண்....

ஆத்திரமும்—சோகமும் கலந்த நிலையில் "ஐயோ மகளே இப்படியா முடிய வேண்டும் நம் வாழ்வு!" என்ற வார்த்தைகள் அம்மூதுமகள் வாயிலிருந்து வெளியேவந்தன.

மறு வினாடி! "தொப்" என்ற ஓசை! வெட்டுண்ட மரமாகச் சாய்ந்தாள் அவள்!

திகிலுடன் பார்த்த பிரபா, "அம்மா"வென ஓலமிட்டாள். ஆம்! அவளை சீராட்டிய தாய் பிணமான கோலத்தை கை விலங்குகளுடன் கண்டாள்! கூட்டத்தினர் கண்ணீர் பெருக கண்டனர் இந்தக் காட்சியைக்கண்டு!

* ★ *

ஆனால்....? அன்று!

முல்லைக்காடு நகர சபைக்கு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதலைவராக முருகானந்தர் பவனி வந்தார்! அவரது காட்டுப் பங்களாவிலே விருந்தும், கேளிக்கையும் ஏக அமர்க்களமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன! அவரால் சின்னாபின்னமாக்கப்பட்ட இரு ஜீவன்களின் வாழ்வு! "ஐயோ மகளே" என்று அந்தத் தாய் போல் துயரப்படுவதை தவிர வேறு கதி?

~●~

# கேள்விக்கணை

> இம்முறை பரிசு பெற்றவர்:
> ● இரா. செல்லத்துரை,
> மாரியம்மன் கோவில் தெரு,
> கோரிப்பாளையம்,
> தல்லாகுளம் அஞ்சல், மதுரை.

**இரா. அம்பிகாபதி, குறிஞ்சிலாப்பட்டி.**

*கே: அரிச்சந்திரனுக்கு தாய் சந்திரன், தகப்பன் விஷ்ணு என்றும்; அவன் மனைவி சந்திரமதிக்கும் தாய் சந்திரன், தகப்பன் மட்டுமே சிவன் என்றும் புராணம் கூறுகின்றதே, இந்த ஆபாசம் பற்றிய தங்கள் கருத்து என்ன?*

ப: மனிதப் பண்பற்ற மட்டரகமான ஆபாசக் கதை! இந்தக் கதையை மாணவர்களின் பாட புத்தகத்தில் போட்டு "இந்திய சரித்திரம்" என்று சொல்லுகிறவர்கள்; பாட புத்தமாக ஏற்கிறவர்கள்; கற்பிக்கிறவர்கள் செய்கிற குற்றத்தை மன்னித்துக்கொண்டு இருக்கிறோமே!

* * *

*கே: இந்தியை பலமாக எதிர்த்த பெரியார், காங்கிரசை ஆதரித்துக் கொண்டும், புதிய காங்கிரஸ் மூலம் இந்தி பரவுவதை எதிர்க்காமலும் இருக்கிறாரே; கொள்கையைப் பறக்கவிட்டு விட்டாரா?*

ப: பறக்கவிடவில்லை. தேவிகுளம, பீருமேட்டைப் பறிகொடுத்தவரும் "தமிழ் நாடு" என்ற பெயரை எதிர்ப்பவரும், இந்திக் காதலருமான பச்சைத்தமிழருக்கு கொள்கையை இரவல் கொடுத்திருக்கிறார்; வளர்ப்பதற்கு!

**சி. கூ. மழைஅரசன், சிந்தகம்பள்ளி**

*கே: சிவாஜி கணேசன், "ரங்கோன் ராதா"வில் நடித்த தற்காக முதற்பரிசு பெற்றாரே; கதைக்குரிய அண்ணாவையும், வசனத்திற்குரிய கருணாநிதியையும் பாராட்டுவார்களா?*

ப: மற்றவர்களைப் பற்றிய கவலை நமக்கேன்? பாராட்ட வேண்டிய பொதுமக்கள் பாராட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள்!

* * *

*கே: ஏற்காட்டில் மே 27-ல் நடக்கவிருக்கும் தேர்தலில் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் போட்டியிட்டிருக்கலாமே! ஏன் போடவில்லை?*

ப: அரசியல் மழலையாரே! தேர்தல் நடக்கும் ஸ்தானம், மலைவாழ் மக்களுக்குரிய தனித் தொகுதி. நமது பொதுச் செயலாளரோ தரை வாழ்பவர்; நமது கழகச் சார்பில் தோழர், சின்னான் என்ற மலைவாழ்நர் நிறுத்தப்பட்டுள்ளார்! ஆதரவு காட்டும் ஐயா!

**இரா. செல்லத்துரை, மதுரை.**

*கே: சேலம் தேர்தல் வழக்கு நிதி வளர வழி என்ன செய்திருக்கின்றீர்கள்?*

ப: கழகத் தோழர்கள், நண்பர்கள், அனுதாபிகள் விரும்பும் தொகையினை பொதுச் செயலாளருக்கே அனுப்பலாம். நிதிக்காக நடத்தப்படும் சிறப்புக் கூட்டங்கள், நிகழ்ச்சிகளிலே நுழைவுக் கட்டணம் கொடுத்து பங்கு கொள்ளலாம்.

* * ★

● *கே: கோவில்—கடவுள்—காணிக்கை இவைகளுக்கு விடுதலை பெற்ற திராவிடத்தில் பொருள் என்ன?*

ப: கோவில்—கலை வளர்க்கும் கூடம், கடவுள்—கண் காட்சிப் பொருள், பிரார்த்தனை—வீட்டினுள்ளே நடக்கும் மத விழா, காணிக்கை—சமதர்ம நெறி வளர்க்கத் தருகின்ற ஒத்துழைப்பு என்பதாக இருக்கலாம்.



(2-ம் பக்கம் தொடர்ச்சி)

என்ற முறையும் இருக்குமானால் அவ்வாறுதான் செய்வேன்; அந்த முறையிலே நான் பணியாற்றுகின்ற நேரம் தவிர மற்ற எல்லா நேரத்திலும் ஆண்டவனைத்தான் வழிபட்டுக் கொண்டிருக்கிறேன். அதைப்பற்றி நண்பர் சிவஞானத்திற்குச் சந்தேகம் வருவானேன்? அவரது சந்தேகம் அவருக்கு நன்றாகத் தெரியும்; அந்தச் சந்தேகத்தை மக்கள் உள்ளத்திலே புகுத்தினால் எங்களுக்கு வாக்களித்த 17 இலட்சத்தில் கொஞ்சம் குறைகிறதா பாக்கலாம் என்பதுதான் அந்தச் சந்தேகம்! ஆனால், 17 இலட்சம் மக்கள் நாளாக நாளாக வளர்ந்து வருவார்களே தவிர, 'இவர்களெல்லாம் சாமியில்லாத கட்சி'யென்று எந்த மக்களும் எங்களைத் தள்ளிவிட மாட்டார்கள்.

"பண்டித நேரு எழுதியிருக்கிறார்:- 'ஆண்டவன் என்ற உணர்ச்சி அச்சத்திலே இருந்து பிறந்ததே தவிர, அறிவிலே இருந்து பிறந்தது அல்ல'-என்று!

அவரை எந்தக் கூட்டத்திலே சேர்க்கிறீர்கள்? அவரை நீங்கள், 'ஆசியாவின் ஜோதி' என்கிறீர்களே! என்னை அவ்வளவு பெரிய இடத்திற்கு ஜோதியாக்க வேண்டாம்; நான் ஒரு சாதாரணமானவன் என்றாலும், நாத்திகன் என்று சொல்லாமல் ஆத்திகன் என்று என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது? அவர் சொன்னால் அது மேதாவித்தனமாகிறது; நான் அதே கருத்தை இன்று இன்னும் கொஞ்சம் நாசூக்காகச் சொன்னால், உடன்பிறந்த தோஷத்தால்-இந்த இனத்தைச் சேர்ந்தவன் என்ற காரணத்தால்-இந்த நாட்டுக்காரன் என்ற காரணத்தால் இது நாத்திகமாகத் தோன்றுகிறது. ஆனால், எங்கோ தொலைவிலே இருக்கின்றவர்கள், எதை எதையோ சொல்லுகிறார்கள்; அவை அத்தனையும் மேதாவித்தனமாகப்படுகிறது!

ஆண்டவன் என்ற உணர்ச்சி அச்சத்திலேயிருந்து பிறந்ததே தவிர அறிவிலேயிருந்து பிறந்தது அல்ல—என்று, நேரு சொல்லுவதின் பொருள் என்ன?

ஆண்டவனை மனிதர்கள்தான் உண்டாக்கினார்கள்; அறிவு பிறந்தபோது அல்ல-அச்சம் ஏற்பட்டபோது-பயம் வந்தபோது உண்டாக்கினார்கள் என்று, பண்டித நேரு இவ்வளவு பச்சையாக நாத்திகம் பேசுகிறார். அவரைப் பாரத நாட்டுக்கு மட்டுமல்ல—'ஆசியாவிற்கே ஜோதி' என்கிறீர்கள். நாங்கள், ஆண்டவன் என்பது, 'ஒன்றே குலம்—ஒருவனே தேவன்' என்று திட்டவட்டமாக-தேர்தலுக்கு முன்னாலிருந்தே சொல்லி வந்திருக்கிறோம். எங்களைப் பார்த்து நாத்திகர்கள் என்று சொல்லுகிறீர்கள் என்றால், என்ன பொருள் அதற்கு? எதையோ சொல்லி மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள் என்பதைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்?

கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்—என்பதுதானே வேதாந்தியின் முடிவு! 'கண்டவர் விண்டிலர்'-ஆண்டவனைப் பார்த்தவர்கள் சொல்லவில்லை! 'விண்டவர் கண்டிலர்'—சொன்னவர்கள் பார்க்கவில்லை!

ஒன்றே குலம்; ஒருவனே தேவன்-என்று நாங்கள் சொல்லுவதற்குக் காரணம், அந்த ஒரு தேவன் எப்படி இருப்பான் என்பதை விளக்குவதற்கு அல்ல! அந்த ஒரு தேவனை இன்னின்ன விதமாக நீங்கள் வழிபடுங்கள் என்று போதிப்பதற்கு நாங்கள் மதவாதிகள் அல்ல! அது மதவாதிகள் செய்யவேண்டிய காரியம்!

அவர்களே எப்படி இறைவனைக் கும்பிடுகிறார்கள் என்றால், சிலர் நின்றுகொண்டு கும்பிடுகிறார்கள்; சிலர் சாஷ்டாங்கமாகவே வணங்குகிறார்கள்; சிலர் முழங்கால் குதியிட்டு வணங்குகிறார்கள்; சிலர் தலையை நிலத்திலே தாழ்த்தி வணங்குகிறார்கள்; அன்றியும் நம்மிலே சில பக்தர்களின் தரம் குறையக் குறைய வீதியிலே புரளுகிறார்கள்; வேல் குத்திக் கொள்கிறார்கள்; நாக்கில் சிலர் வேல் குத்திக் கொள்கிறார்கள்; வேப்ப மரத்தைச் சுற்றுகிறார்கள். இப்படி, தரத்துக்கு ஏற்றபடி ஆண்டவனைக் கும்பிடுவது மாறிக்கொண்டே போகிறது. இப்படி இருக்கும்போது என்னைப் பார்த்து 'நீ எப்படி சாமி கும்பிடுகிறாய்?' என்றால் என்ன அர்த்தம்?

இதை ஏன் இப்படிச் சொல்லுகின்றார்கள் என்றால், இந்த ஒரு ஆயுதத்தை வைத்துக்கொண்டு நம்மை வாட்டலாம்—வதைக்கலாம் என்று பழைய நாளிலே எண்ணிக் கொண்டிருந்ததைப் போல், இன்றையத் தினமும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்; அது தவறு என்பதை நாடு இன்றைய தினம் காட்டியிருக்கின்றது.

●●

> ஒருவன் சால்புடைமை தன்னிடமிருந்து நீங்காமையை வேண்டுவானாயின், அவன் பொறையுடைமையைப் பாதுகாத்து ஒழுகவேண்டும்.
>
> -திருவள்ளுவர்.




## எக்காள முழக்கம்.

திருச்சி வானொலி நிலையத்தில் 26-4-57 இரவு 8-மணிக்கு, ஆசிரியர் ப. கண்ணன் அவர்கள் எழுதிய "எக்காள முழக்கம்" என்ற வரலாற்று நாடகம் நடைபெற்றது.

கதை மூன்றாம் ராஜராஜ சோழனைப்பற்றியது. அவர சமுத்திரம் மன்னன் வீர நரசிம்மன்—அவரது மகள் யசோதையின் பெருமைகளை விளக்குவதாகவும் இருந்தது.

நாடக நிகழ்ச்சிகளும், வசனங்களும் கவனத்தை இழுத்தவை, இறுதிவரை விடவில்லை அரைமணி நேரம் ஐந்து நிமிடங்களாகப் பறந்துவிட்டது.

நிலைய நடிகர்கள் பங்கெடுத்துக்கொண்டு சிறப்பாக நடித்தனர். வழிப்பயணம் போவது, குதிரைப்படை செல்வது, கத்திச் சண்டை புரிவதுபோன்ற ஒலிகளை வெகு சாதுரியமாகப் பயன் படுத்தி, சம்பவங்களைக் கண்ணால் காணுவதைப் போன்ற பிரமையை உண்டாக்கினர் வானொலி நிலையத்தின் நாடகப் பகுதியினர். ரசித்தோம். பாராட்டுகிறோம்.

இரா. சாம்பசிவன்,
கோ. சகாதேவன்,
சேலம்.

### தேவி நாடக சபா.

மந்திரிகுமாரி—ஒரே முத்தம்—பராசக்தி போன்ற சிறந்த நாடகங்களை மேடையேற்றி பிரபலப்படுத்திய தேவி நாடக சபாவினர், சலகண்டபுரத்தில் நாடகம் நடத்தி வருகின்றனர்.

தேவி நாடக சபாவின் உரிமையாளர் தோழர். கே. என். இரத்தினம் அவர்கள் நாடக உலகில் பல்லாண்டு அனுபவம் பெற்றுத் தேர்ந்தவர். பலநடிக நடிகையரை உண்டாக்கியவர். தமிழ் மொழிக்கும், தமிழர்களுக்கும், புத்துணர்வு தரவல்ல புதுமை நாடகங்கள் பலவற்றை மேலும் மேலும் தமிழ்நாட்டுக்குத் தருவார் என்று எதிர் பார்ப்போம். ●


**வெண்சங்கு சீயக்காய் தூள்** எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த
**செல்வம் ராணி**
&
**சேகர் ஊதுபத்திகளை**
வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:
**வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,**
3037-38, டபீர்குளம் ரோடு, தஞ்சாவூர்.





சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்-1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.


# பகுத்தறிவு

திங்கள் இருமுறை. ஆசிரியர்:- ப. கண்ணன்.

மலர் 7 | 1-6-57 விலை 0-2-6 (16 காசு) | இதழ் 7.


## எரிபலி கேட்குது வடபத்ரகாளி!




வரிக்கொடுமையால் துயரப்படும் ஏழை மக்களிடம், புதிய காணிக்கை போடுங்கள், காளி கருணைசெய்வாள் என்கிறார் பூசாரி காமராசர்! உண்டியலைக் கையால் தீண்டத் திறனுண்டா இவருக்கு? உண்டியல் பணத்தால் வாழ்வுண்டா தென்னக மக்களுக்கு?

# கல்வித்துறை அறிஞர்கட்கு...4

சாலை—இளந்திரையன்.

"நாடு அழிந்து போகும் நலிவுகண்டு தாளாமல் ஏடெழுதி வைத்தான் என்னருமை வள்ளுவன்" அவன் ஏடுதான் எந்தத் துறையிலுமுள்ள குறைநிறைகளை ஆராய்கிறது; குறைகளைப் போக்க வழியும் வகுத்துத் தருகின்றது. வள்ளுவனுக்குப் பின்னர் வளர்ந்த தமிழினம், ஒருவேளை ஒன்றையொன்று தாக்கியே வளர்ந்து வந்த சமயங்களின் செல்வாக்கால்போலும், மற்றவர்களைத் தாக்குவதிலேயே நல்ல திறமை பெற்றதாக இருந்திருக்கின்றது; இப்போதும் இருக்கிறது. இதனால் ஏதேனும் ஒன்றில் குறை இருக்கிறது என்பதுவரை தெரிந்தவனும் அது என்ன குறைஎன்று எண்ணிப்பார்க்கிறனில்லை. 'தவறு, குற்றம், இழிவு....' என்றெல்லாம் இவன் சொன்ன உடனேயே மக்கள் கைதட்டி ஆரவாரஞ் செய்யவும் அவனை ஏற்றிப் போற்றவும், பழகிவிட்டனர். எனவே என்ன குறை என்று எண்ணிப் பார்க்க வேண்டிய தேவை அவனுக்கில்லை; அவன் எண்ணிப்பாராததினல் அவன் மூளை வளருவதுமில்லை. இதனல் அறிஞன் என்று இருப்பவனல் நாட்டில் வளர்ச்சி எதுவும் ஏற்படுவதில்லை.

எதிலாயினும், யாரிடத்திலாயினும் உள்ளகுறை யாது; அதன் அடிப்படை யாது; அது இன்றைய நிலையில் அடைந்துள்ள வளர்ச்சி யாது என்பனவற்றைத் தெளிவுபடுத்திக் கொண்டாலொழிய நாட்டில் நற்செயல் முகிழ்க்காது; பயன் விளையாது.

நமது கல்வித்துறையில் குறை இருக்கிறது என்று பலரும் கூறி வருகின்றனர். இவர்களில் பலவகையினர் உண்டு. இருக்கின்ற ஒன்றில் குறை சொன்னல்தான் தமது மதிப்பு உயரும் என்று எண்ணுவோர் சிலர்; அவர்களின் உப்பை (அல்லது அவர் தரும் உத்தியோகத்தை)த் தின்று கொண்டு, 'அது என்ன குறை என்று உணராமலும்—அவரைக் கேட்கும் துணிவில்லாமலும், "ஆமாம், குறைதான் இருக்கிறது" என்று தாளம் போடுவோர் பலர்; இவர்களின் சொல்லுக்குத் தலையசைத்து உரத்த குரலில் 'குறை குறை' என்று கூச்சலிட்டுத் திரிவோர் பலர். மொத்தத்தில், குறை இருக்கிறது என்றால் அது என்னகுறை?" என்று எண்ணிப் பார்ப்போரின் தொகை மிகமிகக் குறைந்துவிட்டது. அவர்கள் எடுத்துச் சொன்னலும் அது சோம்பேறி அம்பலத்தில் ஏறுவதில்லை. ஆகையினல் கல்வித்துறையில் ஒரு சிலர், குறை என்கிறர்கள்; சீரமைப்பு என்கிறர்கள்; மாற்றி அமைத்துவிட்டோம் என்கிறர்கள். ஆனல், பாடமும், அது சொல்லும் முறையும், அதிலுள்ள குறையும், அதனல் விளையும் கேடுகளும் முன் இருந்தபடியே இருக்கின்றன!

சில காலமாக, கல்வித்துறையில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்காகப் பெரும் பெரும் மாநாடுகளெல்லாம் நடைபெற்றிருப்பதாகவும் செய்தித்தாள்கள் அறிவிக்கின்றன. ஆனல், இவையாவும் சில சாதியாருக்குப் புதிய உயர்ந்த அலுவல்களைத் தேடித் தந்திருப்பதைத் தவிர வேறு பயன் விளைத்திருப்பதாகத் தெரியவில்லை. வேறென்ன பயன் வேண்டியதிருக்கிறது—குறை இன்னது என்றே இதுவரை தெரிந்து கொண்டிருப்பதாகத் தெரியவில்லையே!

தாழ்ந்த படிப்புகளை முடித்து உயர்ந்த பட்டப் படிப்புக்கு வருகின்ற மாணவர்களின் 'அறிவு வளர்ச்சி'யைக் காணும் எந்த ஆசிரியனும் இந்நாட்டின் எதிர்காலத்தை எண்ணிக் கண்ணீர் வடிக்காமலிருக்க இயலாது! எந்த ஒரு பொருளைப் பற்றியும் நாலு வாக்கியம் சொல்லவோ எழுதவோ தெரியாமல் வந்து நிற்கிறன் மாணவன். ஏன் இந்த நிலை? அவனுக்கு எண்ணிப் பார்க்கும் பயிற்சி அளிக்கப்படவில்லை என்பதைத் தவிர இதற்கு வேறென்ன காரணம் இருக்க முடியும்?

**"தம்மினும் தம்மக்கள்**
**அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம்**
**இனிது"**

என்றுன் வள்ளுவன். அருமை ஆசிரியப் பெருமக்கள் தங்கள் 'மக்களை' அறிவுத்திறன் குன்றியவர்களாக 'வளர்த்து' இருக்கிருர்கள்! எதைப்பற்றியுமே தாங்களாக எண்ணிப் பார்க்கும் இயல்பும் திறனும்

([illegible] பக்கம் பார்க்க)



# எதிரொலி

இந்தியாவின் ஒற்றுமையின்மைக்கு சாதிகளே காரணம்

—ஜவகர்லால் நேரு.

சாதிகள் வளர்வதற்கு இந்துமத சாஸ்திர புராணங்கள் காரணம், அவற்றைப் போற்றுவதன் மூலம் சாதிகளைப் போக்குவதெப்படி?

* * *

சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை வேண்டும், தமிழ்நாடு காங்கிரஸ் கோருகிறது:

—செய்தி

அவர்களுக்கும் மானம் இருப்பதை இப்படியாகக் காட்டிக் கொள்ளும் நெருக்கடிக்கு ஆளாகி விட்டனரே!

* * *

தேர்தல் வேலைக்கு சர்க்கார் விமானத்தைப் பயன்படுத்தவில்லை

—ஜவகர்லால் நேரு

இதனுலே; தேர்தல் பிரசாரங்களுக்கு மந்திரிகள் செல்லுவதெல்லாம், சொந்தக்காரிலே, சொந்தச் செலவிலே என்று எண்ணிவிடாதீர்கள்! ∴கம்பக்!

* * *

பார்ப்பானைத் தரைமட்டமாக்குவதே தமிழர் கடன்

—புரட்சிக்கவிஞர்.

அதற்கு வழி என்ன தெரியுமா? தேர்தல்களில் பூணூலை விடாத பச்சைப் பார்ப்பானை ஆதரித்து "இவர் நல்ல பரம்பரை. ஓட்டுப் போடுங்கள்" என்று கெஞ்ச வேண்டும் மக்களிடம்.

* * *

பார்ப்பான் உண்டிச்சாலையில் தின்பதை விடப் பட்டினி கிடப்பதே மேல்.

—"விடுதலை"

அவனுக்கு ஓட்டுப் பிரசாரம் செய்யும்போது, உணவுக்கு அங்கே ஏற்பாடு செய்துவிட்டாலோ?

# நியாயமா? நேர்மையா?

ஜாதிமாத்ரோ பஜீவீவா காமம் ஸ்யாத் ப்ராஹ்மணப்ருவ:
தர்மப்ரவந்தா, ந்ருபதோ நது சூத்ர: கதாசன. (மனுதர்மம்)

**பொருள்:** (பஞ்சமா பாதகனுயினும்) பிறவியினுலேனும் பிராம்மண குலத்தில் பிறந்த ஒருவனை அரசன் மந்திரியாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அறிவில் சிறந்தவனுயினும் சூத்திரன் ஒருபோதும் அரசசபைக்கு உரியவனுகமாட்டான்.

பகுத்தறிவுவாதிகள் ஆரிய திராவிட, பிராமண அப்பிராமண வேற்றுமையைக் கிளறிவிடுகிருர்கள் என்று சொல்லிடும் சூது மொழியை நம்புகின்ற நல்லவர்களுக்கு இதனை சமர்ப்பிக்கின்ருேம்.

பிறவியைக் காட்டி, ஜாதியைக் காட்டி அறிவற்றவனும்—அயோக்கியனும் அரசியல் ஆதிக்கம்பெற வழி வகுக்கின்றது பிராம்மணீயம்! பிறவியையும், ஜாதியையும் காட்டியே நம்மவரை, அறிவிற் சிறந்தவரையும் ஆட்சி மன்றம் ஏறக்கூடாது என்று தடுத்திடும் வஞ்சகம் பாரீர்! வகைமோசம் காணீர்! நியாயமா? நேர்மையா?

பகுத்தறிவு பூர்வமான மக்களாட்சி மலரவேண்டுமாயின் ஒழியவேண்டாமா இந்த ஓரவஞ்சக தர்மசாஸ்திரங்கள்? அழியவேண்டாமா பிராம்மணீயம்? இதனை எதிர்த்து ஒடுக்குவது சுதந்திரம் பெறத் துடிக்கும் நமது அரசியல் கடமைகளிலே ஒன்றல்லவா?

—வாலி.


வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

**செல்வம் ராணி**
**&**
**சேகர் ஊதுபத்திகளை**

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037-38, டபீர்குளம் ரோடு, தஞ்சாவூர்.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு
—திருவள்ளுவர்

# இதயம்

மலர் 7 | சேலம் 1—6—57 | இதழ் 7

## சண்டாளத்தனம்!

நாட்டிலே நடைபெறுவது குடியரசு—மக்களாட்சி; எனவே மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான கருத்துக்களை, இலட்சியங்களை மக்கள் மன்றத்திலே வைத்து, அவர்களது ஆதரவினைப் பெற்றவர்கள் ஆட்சிபீடம் ஏறிடுவர்; நாட்டினை ஆண்டிடுவர்; இதுதான் குடியரசு—மக்களாட்சி—சனநாயக முறை! பண்பு!

நல்ல கருத்துக்கள்—உன்னத லட்சியங்களைக் கொண்டிருக்கிற அரசியல் கட்சிகள், மக்களிடையே வெளிப்படையாகத் தமது கொள்கைகளை, திட்டங்களை எடுத்து வைக்கின்றன; ஆதரவு பெறுகின்றன; கொள்கை வலிவு பெறுகின்றது; கட்சியும் பொலிவு பெற்று வளருகின்றது.

இந்த முறையிலே, தமிழகத்திலே அறிவியல்ஆக்கம், மொழிவளர்ச்சி, விடுதலைவேட்கை, வாழ்வுரிமை கோரி வலுப்பெற்றுவரும் அரசியல் கட்சி திராவிட முனேற்றக் கழகம்! இஃது கொள்கைப் பகைவரும் ஒப்புகின்ற முடிவு. உள்ளங்கை நெல்லிக்கனி!

கொள்கை பலம் காரணமாக, "திராவிட நாடு திராவிடருக்கே" என்று இலட்சிய முழக்கமிட்டு வளர்ந்தோங்கி வரும் தி. மு. க. வைக் கண்டு வயிறெரிந்து, வெந்து போகின்றனர் அரசியல்வெறியாட்டக் குழுவினர்சிலர். தெளிவற்ற போக்கு; தேவையற்ற பயம்!

ஆயுதம் ஏந்தி பயங்கரப் புரட்சி செய்வதன் மூலம் ஆட்சி மாற்றம் நாடுகிறவர்கள் கம்யூனிஸ்டுகள்! அருள்நெறியிலே, சனநாயக முறையிலே அவர்கள் நம்பிக்கையற்றவர்கள்! அவர்களின் நடைமுறைகள்-நாச வேலைகள் பொன் போன்ற பொதுவுடமை-சமதர்மக் கொள்கையினை களங்கப்படுத்தி வந்தன—வருகின்றன.

இரஷ்சியத் தலைவர்கள் குருசேவ், புல்கானின் போன்றவர்களின் மனமாற்றத்திற்குப் பிறகு, சனநாயக வேஷம் போடுகின்றனர். எப்படியும், அது வேஷந்தான் என்பதை அவர்களின் கொடூரச் செயல்கள் அவ்வப்போது மெய்ப்பிக்கத் தவறுவதில்லை!

தூத்துக் குடியிலே கொலை; கொலைக்கு மேல் கொலை! மதுரையிலே வெட்டு, குத்து என்பனபோன்ற திடுக்கிடும் நிகழ்ச்சிகளிலே; திராவிட முன்னேற்றக் கழகத்தாரைத் தாக்கிடும் திருப்பணியிலே கம்யூனிஸ்டுகளே முக்கியத்துவம் பெறுகின்றனரே. இதன் பொருள் என்ன? மர்மம் என்ன?

ஆயுதப் புரட்சி விழைவோர்; அரசியல் பொருமைகளை-பொச்செரிப்புகளை; தேர்தல் போட்டிகளை-தீராக் கருத்து வேற்றுமைகளாக்கி கத்தி முனையிலே தீர்க்க முனைந்துவிட்டார்களா? மற்றவரும் இவ்வாறு முனைந்தால் மக்கள் நிலை என்ன ஆகும்? குடியாட்சி எப்படி நடந்திடும்? நாட்டிலே அன்பும், அறமும் எவ்வாறு வாழ்ந்திட முடியும்?

தூத்துக்குடி வீரர் தாளமுத்து வெட்டப்பட்டார்; இரத்தினம் செத்துவிட்டார்; மதுரை பகுத்தறிவுப் படிப்பகத்திலே வெள்ளியம்பலம், கணேசன், மணி தாக்கப்பட்டனர் என்ற செய்திகள் நம்மை திடுக்கிட வைக்கின்றன. இது நல்லோர் வாழுகின்ற நாடா, விலங்குகள்நடமாடும் காடா என்று நினைந்து குழம்புகின்றோம்; குமைகின்றோம்!

கொலைபுரிந்தவர் யார், தண்டிக்க வேண்டியது யாரை என்பதைநீதிமன்றம் விசாரிக்கும்; முடிவுகட்டும். ஆனால், கருத்து வேற்றுமைகளை கௌரவிக்கும் பண்புத் தமிழகத்திலே, வள்ளுவர் குறள்வாழும் செந்தமிழ்மண்ணிலே இதுபோன்ற சண்டாளத்தனம் தேவைதானா? இதனை முடிவு கட்டுவது மக்களின் கடமையன்றோ? ஆட்சியாளரின் அவசரப்பணியன்றோ?

—ப. கண்ணன்.





# செந்தாமரை.

ஏ. பெரியசாமி.

தங்கைக்குத் திருமணம் என்றால் தமையனின் மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்!

புதன் கிழமையன்றுதான் என் தங்கை தங்கத்திற்குத் திருமணம். நான் ஒரு நாளாவது முன்னால் போகவேண்டுமல்லவா? செவ்வாய்க்கிழமை காலையில் போய் விட்டு, புதன்கிழமை மாலை வந்து விடுவதென்று முடிவு கட்டினேன். எனக்கு முதலாளி கொடுத்த விடுமுறையும இரண்டு நாட்களுக்குத்தான்.

திங்கட்கிழமை இரவு—விடியற்காலையிலேயே புறப்பட வேண்டுமென்பது என் திட்டமாகையால், எல்லாவற்றையும்எடுத்து ஒழுங்குபடுத்த ஆரம்பித்தேன். நான் படுக்கையில் படுத்தபொழுது மணி பத்தரை.

தூக்கம் வரவில்லை. வழக்கம் போலதங்கையின் திருமணத்தைப் பற்றிய கற்பனைகள்! திடீரென்று ஏதோ சிரிப்பொலி! நான், என் மனக் கொட்டகையில்— எதிர் காலத் திரையில் பார்த்துக் கொண்டிருந்த எண்ணப் படமும் முடிந்தது.

எழுந்து உட்கார்ந்து யார் சிரிப்பது என்று கவனித்தேன். "நல்ல மனிதர்! தூங்கும் நேரத்தில்கூட இதே எண்ணங்கள்தானா?" என்று சொல்லாமல் சொல்லி விட்டுக் 'கலகல'வென்று சிரித்துக் கொண்டிருந்தாள் கடிகார வனிதை.

படுக்கையைவிட்டு இறங்கி அவள் அருகில் சென்றேன். "மணி நாலரை" என்றாள்.

*     *     *

பஸ் வேகமாகப் போய் கொண்டிருந்தது. காலமோ பனிக்காலம்; நேரமோ விடியற்காலை; நான் இருந்ததோ ஓடிக்கொண்டிருக்கும் பஸ்சில். அப்புறம், குளிருக்கென்னகுறைச்சல்; நான்பஸ்சிலிருந்த படுதாவை இறக்கி விட்டேன். இரவெல்லாம் தூக்கமில்லை. பஸ்சின் ஆட்டமும், பெட்ரோல் நாற்றமும் சேர்ந்து எனக்கு மயக்கத்தைக் கொடுத்தன. அந்த மயக்கத்திலேயே தூங்கியும் விட்டேன்.

"நகர்ந்து உட்காரய்யா" என்ற கண்டக்டரின் குரல் என்னைத் திடுக்கிட்டெழ வைத்தது. அருகில் ஒரு இளைஞர் நின்று கொண்டிருந்தார். நான் நகர்ந்து அவருக்கு இடம் கொடுத்துவிட்டு, நான்செய்த உதவிக்குக் கைமாறு பெற்றுக் கொள்வதுபோல அவரையே "மணி என்னசார் ஆச்சு?" என்று கேட்டேன். "ஆறு ஐம்பது" என்றார் இளைஞர். நான் வெளியே பார்த்தேன். "ஊர் நெருங்கி விட்டது" என்றன, நான் பார்த்துப் பார்த்துச் சலிப்படைந்த போன அந்தச் சிறிய மலையும், அதன் அடிவாரத்திலிருந்த வரிசையான தென்னைகளும்.

அதோ, என் ஊர் தெரிகிறது. பஸ் என்னுடைய கிராமத்தை நெருங்கி விட்டது. கண்டக்டர் ஒருவிதமாக வாயிலேயே விசிலடித்தான். பழக்கமான அந்த விசிலைக் கேட்டதும் காரோட்டி வண்டியை நிறுத்தினார். நான் அவசர அவசரமாக அங்குமிங்கும் இடித்துக்கொண்டு கீழேஇறங்கினேன். கண்டக்டர் "ரைட்" கொடுத்தான். பஸ் புறப்பட்டுவிட்டது.

பாதையிலிருந்து இரண்டு மூன்று பர்லாங் தள்ளியிருந்தது கிராமம். நான் பையை எடுத்துக் கொண்டு வயல்களினூடே ஒற்றையடிப் பாதை வழியாக கிராமத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். இரண்டு புறங்களிலுமிருந்த பசுமையான வயல்கள்கூட என் தங்கத்தினுடைய வளமான வாழ்வைத்தான் எனக்கு நினைவுபடுத்தின. குனிந்தவாறே நடந்து சென்று கொண்டிருந்த என் காதுகளில், எதிரே யாரோ வருவது போன்ற ஒலி விழுந்தது. நிமிர்ந்து பார்த்தேன்.

என் கண்கள் கூசவில்லை. ஆனாலும் கூசுவது போன்ற ஒரு உணர்ச்சி! காரணமில்லாமல் ஒரு அதிர்ச்சி! எதிரே வந்த அந்தப் பெண் மிகவும் அருகில் வந்து விட்டாள். அவள் வரவர உலகத்திலுள்ள அழகெல்லாம் உருப் பெற்று வருவதாக எனக்குப் பட்டது. இவளைப் போன்று யாருக்குமே அழகில்லை என்று கூறிவிட முடியாது. ஏனெனில், நான் உலகத்திலுள்ள அத்தனைப் பெண்களையும் பார்த்தவனல்ல. இருந்தாலும், இவளைவிட யாருக்கும் அதிக அழகு இருக்க முடியாது என்று மட்டும் உறுதியாக எண்ணினேன். இவ்வளவு உணர்ச்சிகளும், எண்ணங்களும் ஒரு நொடியில் ஏற்பட்டுவிட்டன.

அவள் எனக்காக ஒதுங்கி வழி விட்டாள். அதே சமயத்தில்

[12-ம் பக்கம் பார்க்க]

அரசியல் கதை.

# கிழவியின் காதலர்கள்

புலியூர்—வளையாபதி.

வயது முதிர்ந்தவள் தான்; வாளிப்பான உடலமைப்புக் கொண்ட வனிதையாகக் காட்சியளித்தாள். வயதின் அளவினை வரைந்து காட்டும் வரிக் கோடுகளும், வடுக்களும் அவள் முகத்தில் வளர்ந்து கொண்டுதான் வந்தன. அறுபது வருடங்கள் ஓடிவிட்டன என்பதை அனைவரும் சொல்லுவர், அவளைப் பார்க்கும் போதெல்லாம். ஆனால், இன்று....?

வெள்ளிக் கம்பிகளாய்க் கிடந்த முடி திருத்தப்பட்டு கருமை தடவப்பட்டது. விழுந்துபோன பற்களுக்குப் பதிலாக வேறு பற்கள் நடப்பட்டன. வெடிப்புகள் நிறைந்த இதழிலே வேண்டிய மட்டும் இரத்தம் பூசப்பட்டது. வெண் குட்டம் பிடித்த மேனியிலே வாசம் வீசிற்று. அநேக ஆண்டுகளாக பூவின் மணத்தை நுகர்ந்திராத அவளது கூந்தல், அன்று எப்படித்தான் அத்தனைப் பூக்களைச் சுமந்ததோ? எப்படியோ இறப்பெனும் படிகளில் ஏறிக்கொண்டிருந்தவள் எழில் மங்கையானள். இள நகைகாட்டினள். இதழிலே இன்பத்தைத் தூண்டிவிடும் நெளிவுகளை ஓட்டினள்.

இவளைப்பற்றி எல்லோருக்கும் தெரியும், இருவரைத் தவிர! ஏனையோருக்குப் புரியும் எல்லாம் மேல்பூச்சு என்று. ஆனல், அந்த இருவர் மட்டும் அவளை அடைய தவம் கிடந்தனர்.

"அவளின் நடையிலே அன்னத்தின் சாயல் தோன்றுகிறது. ஆகவே, அவளைக் காதலிக்கிறேன்" என்றான் முதற் காதலன்.

"அந்த வனிதையின் வாயிலிருந்து வருவது வெறும் வார்த்தைகளல்ல. வடித்தெடுத்த கரும்புச்சாறு. வற்றாத தேன் ஆறு! ஆகவேதான் அந்த 'வாலைக் குமரியைக் காதலிக்கிறேன்'— என்று வர்ணித்தான் இரண்டாவது காதலன்.

இருவரும் காதலித்தனர் ஒருத்தியை. எப்படிப்பட்டவளை என்பதை மீண்டும் எண்ணிப் பாருங்கள், காதலர்கள் இருவரும் அவளை உண்மையாகக் காதலிக்கிறார்களா, இல்லையா என்பது தெரியாது. ஆனல், அவள் மட்டும் அவர்களை ஏமாற்றுகிறாள் என்றவிஷயம் அந்த ஊரிலுள்ளோர் அனைவருக்கும் தெரியும். இல்லையென்றால், நரைத்த மூடியை நாகக் கூந்தலாக மாற்றுவானேன்? நாற்றமெடுத்த மேனியிலே நறுமணத்தைப் பூசுவானேன்?

அந்த 'திருக்கிழவி' திணறித் திணறி நடந்து சென்றாள், தேர்தல் சோலைக்கு. அப்பொழுது எங்கிருந்தோ ஓடிவந்தான் முதற் காதலன்.

'காங்கிரஸ்' கட்டழகி! உன்னைக் காணவில்லையே என்று கலங்கித் தவித்துக்கொண்டிருந்தேன். வந்தாய்! என் வாட்டத்தை போக்கினய்.

"கண்ணாளா! 'கம்யூனிஸ்ட்' மணாளா! உன்னைக் காணத்தான் ஓடோடி வந்தேன். என் கவலையைப் போக்கிடு, காதலைத் தணித்திடு"

இருவரும் இணைந்தனர். இன்ப லோகத்திற்குச் சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது, பக்கத்திலுள்ள செடி சலசலக்கும் சப்தம் கேட்டது. புரிந்துகொண்ட அவள் புன்னகை புரிந்தாள். புன்னகையா அது....? போதையிலே மயங்கிக்கிடக்கும் 'கம்யூனிஸ்ட்' காதலனை விட்டுவிட்டு செடிக்குள் நுழைந்து மறைந்தாள்.

[11-ம் பக்கம் பார்க்க]

## கிளைக் கழகச் செயலாளர்களுக்கு அறிவிப்பு.

சிற்றூர்—பேரூர்—நகரக் கிளைக் (சென்னை நகரில் வட்டம்) கழகங்களில் ஏற்படும் நிர்வாகிகள் மாறுதல் குறித்தும், புதிய கிளை திறக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் விபரமும் நேரடியாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பாமல், அந்தந்த மாவட்டச் செயலாளர் (அல்லது துணைச் செயலாளர்) பார்வைக்கு அனுப்பி அவரது கையொப்பத்துடன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

'நம் நாடு' இதழில் பிரசுரிக்க அனுப்பும் நிர்வாகிகள் மாறுதல், புதிய நிர்வாகிகள் விபரம் போன்றவைகளும் மாவட்டச் செயலாளர் கையொப்பத்துடன் அனுப்பிவைத்தால்தான் பிரசுரிப்பதற்கு வசதிப்படும் என்பதும், இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

—தலைமைக் கழகம் (தி. மு. க)






### காட்சி 1.

**இடம்:** ஒரு இல்லம்.

**காலம்:** முற்பகல்.

(கல்லூரி மாணவர் இராமானுசம் நெற்றியிலே பட்டைநாமம் பளிச்சிட, கம்பராமாயணத்தை சுவையோடு படித்துக் காட்டுகிறார். ரசித்துக் கொண்டிருக்கிறார் மிராசுதார் வேலாயுதம்)

**இரா:-** தண்டகவனத்திலே, இராமபிரான் முன்பு, அந்த இரக்கமற்ற அரக்கி சூர்ப்பனகையானவள் எப்படி வந்தாள் தெரியுமா? கம்பர் வருணிக்கிறார்; கேளுங்கள் பாடலை.

"பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவமனுங்க
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடியளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமெனமின்னும்
வஞ்சியென நஞ்சமென" வந்தாள்.

(அப்போது வேலாயுதத்தின் தங்கை மாணவி திலகவதி வருகிறாள்.)

**வேலா:-** வாம்மா திலகம்! வா. உட்கார். கம்ப ராமாயணம் நடக்குது!

**திலக:-** அப்படியானல், வம்பு தும்புக்குப் பஞ்சமே இருக்காது!

**இராமா:-** அடடே! என்ன திலகம் இந்தக் கட்டத்திலே!....சூர்ப்பனகை வர்ற நேரத்திலேயல்ல நீ வந்திருக்கே!

**திலக:-** பயப்படாதிங்க ராமானுசம். ராமனுடைய அயோக்கியத்தனத்தை சூர்ப்பனகை கண்டித்தமாதிரி, நான் ஏதும் செஞ்சிடமாட்டேன்.

**வேலா:-** **(வியந்து)** என்ன? ராமனுடைய அயோக்யத்தனத்தை சூர்ப்பனகை கண்டிச்சாளா? ராமனைக்கட்டியணைய வந்தா, தம்பியை விட்டு மூக்கறுத்தான்னுதானே கதை? நீ என்னம்மா புதுசாச் சொல்றே!....

**திலக:-** அண்ணு! இராமாயணக்கதை இருபத்தொன்று இருக்கிறது. ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதம். ஆராய்ச்சி நூல்கள் அனேகம்! அதையெல்லாம் படித்த பிறகுதான் இராமன் அயோக்யன், சூர்ப்பனகை நல்லவள் என்று நான் சொல்லுகிறேன்.

**இராமா:-** ஃகும்! நல்லவள்! எட்டிக்காயின் மேல் மாம்பழத்தோலைப்போர்த்துகிறமுயற்சி இது. ஏமாந்து எவரும் கடித்துச் சுவைத்து விடமாட்டார்கள்!

**திலக:-** மேல்தோலின் அருவருப்பைக் கண்டுபலாப்பழத்தைத்தூக்கி எறிகிறவர்கள் பைத்தியக்காரர்கள்! அவர்களின் பைத்தியத்தைத் தெளியவைக்க வேண்டாமா என்பது தான் என் வாதம்.

**இராமா:-** அன்னியன் மனைவி சீதையைத் தூக்கிச்சென்ற அயோக்யன் இராவணனை, வாதம்புரிந்து எப்படி நல்லவனுக்கிவிட முடியும்?

**திலக:-** என்னைத் துன்புறுத்திஞல் என் அண்ணு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார் என்று எதிர்பார்ப்பது ஏமாளித்தனம்! தங்கை சூர்ப்பனகையை மூக்கறுத்து மானபங்கப்படுத்திஞன் இராமன்; பழிக்குப் பழிவாங்கிஞர் இராவணன்! இதிலே என்ன குற்றம்? என்ன அதர்மம்?

**இராமா:-** திலகவதி! மானங்கெட்டவள் சூர்ப்பனகை! அவளோடு உன்னை உவமைக்காகவும் ஒப்பிட்டுப் பேசாதே!

**திலக:-** மானங்கெட்டவள்,சீதையென்று சொல்லும், சூர்ப்பனகையல்ல! அவள் அருள் மிகுந்த கலாவதி; கண்ணியம் வாய்ந்த குணவதி; சிங்காதனம் ஏறிச் செங்கோலோச்சிய சீலவதி; பொல்லாங்கு நேர்ந்தமைக்கு உண்ணு நோன்பிருந்து உயிர்துறந்த மானவதி!

**இரா:- (சிரித்து)** மானவதி!....என்னங்க வேலாயுதம்! பக்திக்காக—இலக்கியச்சுவைக்காக நாங்க ராமாயணம் படிச்சோம். திலகவதி, அறிவுக்காக—சரித்திர ஆராய்ச்சிக்காக எழுத்தெண்ணிப் படிச்சவள். அதனுலே....

(தன் தலையிலே கைவைத்து, மூளையில்லை என்று சாடைகாட்டுகிருன்.)

**திலக:-** மூளை வறண்டுவிட்டது; புத்தி கெட்டுவிட்டது; அறிவு தடுமாறிவிட்டது ஆராய்ச்சிக்காரர்களுக்கு! இப்படிச் சொல்ல விரும்புகிறீர் மிஸ்டர் ராமானுசம்! ஆனுல், உண்மையில் அந்த நிலைக்கு ஆளானவர் யாரென்று எண்ணிப்பாரும். படித்தவர் என்ருலே பகுத்தறிவு பெற்றவர் என்பதுதான் பொருள். மனிதனையும் மிருகத்தையும் வேறுபடுத்திக் காட்டுவதே அதுதானே? அறிவு வேண்டாம், ஆராய்ச்சிவேண்டாம் என்று காளிகோயிலில் மணியடிக்கும் கந்தப் பூசாரி கூறலாம்! பீ. ஏ. பட்டம் பெறப்போகும் கல்லூரி மாணவரா கூறுவது? சீ! வெட்கம்!

**இராமா:- (எழுந்து)** எனக்கும் வெட்கமாகத்தான் இருக்கிறது! கண்டதைப்புசித்து காமவெறிபிடித்தலைந்தகற்பொழுக்கமில்லாத ராட்சசி—சூர்ப்பனகை; கருணையே வடிவான புண்ணியமூர்த்தி—அறம் வளர்த்த அன்புக் கடவுள் ஸ்ரீராமன். தன்னை பலாத்காரம் செய்த பாதகியை மூக்கறுத்து பாடங்கற்பித்தார்! அதிலே என்ன தவறு, என்ன குற்றம், என்ன அயோக்கியத்தனம் இருக்கிறது? புனிதச் செயல்புரிந்தராமனைத் தூற்றியும்,பொல்லாங்கு செய்த காமாந்தகாரியைப் போற்றியும் பேசுவதற்கு, தமிழகத்திலே இப்படிப் பெண்களும் தயாராகிவிட்டார்களே என்பதைப் பார்க்கும்போது எனக்கும் வெட்கமாகத்தான் இருக்கிறது!

**திலக:-** ஆணுக்கும் பெண்ணுக்கும் நியாயம் ஒன்றுதான் என்பதை மறந்திட்ட மகான்கள்; குற்றங்களுக்கு தெய்வீக முலாம் பூசி மறைக்கின்ற குணக்குன்றுகள்; பெண்கொலை புரிந்த பேடியின் பாதங்களைத் திருநாமம் என்று நெற்றியிலே சாற்றிக்கொண்டிருக்கின்ற தீனதயாபரர்கள்; பயங்கரமான உண்மையொன்று வெடித்தெழும்போது வெட்கம் மட்டுமா? வேதனையுந்தான் படவேண்டும்!

**இராமா:- (சினந்து)** திலகவதி! என் திருநாமத்தைக் குறித்து எத்தனையோமுறை, எத்தனையோ இடங்களில் இழிவாகப் பேசிவிட்டாய். இதுவரை பொறுத்தேன்; இனிப் பொறுக்கமாட்டேன்!

**திலக:-** அப்படியானுல் அழித்துவிடும்.

**இராமா:-** அழிப்பதா?.... **(யோசித்து)** ஆம்! அழிக்கத்தான் வேண்டும். திலகம்! நமது கருத்து வேற்றுமைக்கு ஒரு முடிவு கட்டியே தீரவேண்டும். இராமாயணம் ஆரிய திராவிட போராட்டக் கதை; இரு பெரிய கலாசாரங்களின் மோதல் என்ற எண்ணத்தை உன் மனதிலிருந்து நீ அழிக்கவேண்டும்; இல்லை.உனது ஆராய்ச்சியை ஒப்புக்கொண்டு என் நெற்றியின் நாமத்தை நான் அழிக்கவேண்டும்!

**வேலா:- (எழுந்துவந்து)** சவாசு! நாஞ் சொல்றதைக்கேளுங்க, ரெண்டுபேரும் படிச்சவங்க, வாதம் பேசத் தெரிஞ்சவங்க. நான் படிக்காதவந்தான்; ஒங்கபேச்சு எம்மனசிலே ஒரு புரட்சியைக் கௌப்பிவிடுது, ராமாயணம் ஒண்ணுன்னுதான் நான் நெனைச்சேன். இருபத்தொண்ணு இருக்கறது இப்பத்தான் எனக்குத் தெரியுது. இதுபோல விஷயங்களையெல்லாம் நானும் தெரிஞ்சுக்கணும். ஒங்களோட அபிப்பிராய பேதங்களையும் தீர்த்து வைக்கணும். அதுக்காக இப்ப நீங்க எனக்கு ஒரு உத்தியோகம் கொடுக்கணும். என்ன சொல்றீங்க?



**திலக:-** உத்தியோகமா? என்ன உத்தியோகமண்ணு வேணும்?

**இராமா:-** எங்களைப்போல் சச்சாவிடுவோரைக் கைதுசெய்யும் போலீஸ் உத்தியோகமா? விசாரித்து தண்டிக்கிற நீதிபதி உத்தியோகமா?

**வேலா:-** நீதிபதி! ஆமாம், ஜட்ஜ் உத்தியோகம் தேவை. கொடுப்பீங்களா? நான் சொல்ற தீர்ப்புக்கு ரெண்டுபேரும் கட்டுப்பட்டு நடப்பீங்களா?

**இருவரும்:-** ஓ! கட்டுப்படுகிறேம்.

**வேலா:- (இராமானுசத்திடம்)** நாமத்தை அழீன்னு சொல்லுவேன்; அழிக்கணும். **(திலகவதியிடம்)** கருத்தை மாத்தூண்ணு சொல்லுவேன், மாத்திக்கணும். ரெண்டுபேருக்கும் சம்மதமா?

**இருவரும்:-** மனப்பூர்வமான சம்மதம்.

**வேலா:-** சந்தோஷம்!இராவணன் தங்கை சூர்ப்பனகை மானங்கெட்டவள்னு சொல்ருங்க; மானவதீன்னு தங்கச்சி சொல்லுது. சீதையை ராவணன் தூக்கீட்டுபோனது அநியாயம்னு சொல்ருங்க. நியாயந்தான்னு திலகம் சொல்லுது. இது எப்படி; ஏன்;எதனுலே? எனக்கு வெளக்கமா புரியணுமே!

**திலக:-** நான் புரிய வைக்கிறேன் அண்ணு!நினைத்தால்மனதைக் கலக்கும் அந்த நிகழ்ச்சிகளை, ஒரு கதைபோலவே தொகுத்துச் சொல்லுகிறேன், உங்களுக்கு.

**வேலா:-** கதைபோலவா? சவாசு!வா, வா, உட்காருவோம். வெளக்கமா, நல்லா, புரியராப்பலே சொல்லும்மா கதையை.

(மூவரும் சென்று நாற்காலியில் உட்காருகின்றனர்.)

## காட்சி 2.

**இடம்: விந்திய அரண்மனை.**

**காலம்: பிற்பகல்.**

(அரசி காமவல்லியின் புதல்வன்,சிறுவன் சம்புகுமாரனுக்கு ஆண்டுவிழாக் கொண்டாட்டம் நடைபெறுகின்றது.

சிறுவனை அலங்கரித்து உட்கார வைத்து,கும்மி, கோலாட்டம், குரவைக் கூத்து நடாத்துகின்றனர், பெண்கள்.

காமவல்லியும், தோழி ஐவணமும் வருகின்றனர். அரசியாரின் முகத்தில் ஆத்திரம் அலைமோதுகின்றது.

பெண்கள் மகிழ்வோடு எதிர்சென்று ஆடிப்பாடி ஆரத்திசுற்றி வரவேற்கின்றனர். "போதும்நிறுத்துங்கள்" என்று புறக்கணிக்கிருள். முகம் திருப்பி நிற்கிருள். மலைக்கின்றனர்; களியாட்டம் நிற்கிறது.

சிறுவன் சம்புகுமாரன் எழுந்து ஓடி வருகிருன்.)

**சம்பு:- (அன்போடு)** அம்மா! அம்மா! என்னம்மா கோபம் ஒங்களுக்கு? ஏன் இப்படி நிக்கறீங்க? எனக்கு ஆண்டுவிழாக் கொண்டாடறதிலே ஒங்களுக்குப் பிரியமில்லியா?

**காமவ:- (அன்பும் ஆத்திரமுமாக)** உனக்கு விழாக் கொண்டாட எனக்குப் பிரியமில்லையா? கண்ணே! அப்படி யாரடா சொன்னுர்கள்?

**சம்பு:-** வேறே யாரம்மா சொல்லணும்? ஒங்க கடுகடுத்த மொகமே சொல்லுது! போதாதுன்னு ஒங்க வாயும் சொல்லிடிச்சே; போதும் நிறுத்தூண்ணு!

**காமவ:- (குமுறலோடு)** கடுகடுத்த முகம்! சிடுசிடுத்த பேச்சு!மறுக்கவில்லையடாமகனே, நான் மறுக்கவில்லை.இதற்கெல்லாம் காரணம், உன் ஆண்டுவிழாவில்விருப்பமில்லாததன்று, மிக மிக அதிகமான விருப்பம் வைத்தது தான்!

**சம்பு:-** அதிக விருப்பம் வந்தா, ஆத்திரம் வருமா அம்மா? அப்படியானு, விருப்பத்தைக் கொஞ்சம் கொறைச்சிடுங்களேன்.

**காமவ:-** நான் எதையும் குறைக்க வேண்டியதில்லை. நம் மீதுகொண்டிருந்த அன்பு அருமை, பிரியம், பெருமை எல்லாவற்றையுந்தான் அண்ணு இராவணச் சக்கரவர்த்தியே குறைத்துவிட்டாரே! இனி நமக்கென்று என்னடா செல்வமே இருக்கின்றது, சேர்க்கவோ குறைக்கவும்?

**சம்பு:-** மாமா மேலே எம்மா இவ்வளவு ஆத்திரம்? மாமா அப்படி என்ன செஞ்சிட்டாரு?

**காமவ:-** **(குமுறலோடு)** சம்புகுமாரா! அண்ணுவுக்கு ஒரே அருமைத் தங்கைநான். எனக்கு ஒரே அன்புமகன் நீ. உனக்கு ஆண்டுவிழாக் கொண்டாட்டம் என்ருல், மாமன் அனுப்பும் சீர்வரிசை இங்கே முதலிடம் பெறவேண்டாமா? மகிழவேண்டாமா நாம்?

**சம்பு:-** **(யோசித்து)** ஆமாம்மா! வருஷந்த வருமே சீர் அனுப்புவாரே மாமா. போனவிழாவுக்குத்தானே பொன்வாள் வந்தது! இந்த வருஷம் ஏன் எதுவும் அனுப்பலே?

**காமவ:-** அதை நினைக்கத்தானடா மகனே, ஆத்திரம் பொங்குறது எனக்கு! உடன் பிறந்த தங்கையை இப்படி உல்லங்கனம் செய்வதென்ருல், என்னகுற்றம் கண்டுவிட்டார் என்னிடம்? ஏன் புறக்கணிக்கவேண்டும் நம்மை? பரிசு நல்கி சிறப்புச் செய்ய வேண்டிய பாராளும் மன்னவர், பாராமுகமாய் இருந்துவிட்டபிறகு, கடுகடுப்பு இல்லாமல் விழாவில் எப்படியடா மகனே களிப்பு இருக்க முடியும்?

(எக்காளம் முழங்குகிறது. தட்டுகளில் உயர்ந்த துணி மணி, பலகாரம், பொன்வீணை. முதலான சீர்வரிசைகளோடு, வீணைக்கொடி பறக்க இராவணச் சக்கரவர்த்தி வருகிருர். தினகரனும், தூயவனும் வருகின்றனர்.)

**காமவ:-** **(மகிழ்ந்து, வியந்து)** ஆங்! அண்ணு! அண்ணு!....வாருங்கள். வாருங்கள்!

**சம்பு:-** **(களிப்போடு)** மாமா!....மாமா!.... வாங்க மாமா.

(சம்புகுமாரன் ஓடிச்சென்று சக்கரவர்த்தியைக் கட்டிக்கொள்கிருன். எடுத்து அணைத்துக் கொள்கிருர் இராவணன். காமவல்லி கண்களைத் துடைத்துக் கொண்டு அண்ணனை வரவேற்கிருள்.)

**காமவ:-** அமருங்கள் அண்ணு! முன்னறிவிப்பு இல்லாமலேயே வந்தீர்கள்! துன்பக் கடலை, இன்பக்கடலாக மாற்றிவிட்டீர்கள்!

**இராவ:-** அண்ணு மறந்தாரோ என்று வருந்திஞயா காமவல்லி?

**காமவ:-** ஆமாம் அண்ணு என்னை ஏன் இப்படிச் சோதிக்கவேண்டும்? இன்று நீங்களே நேரில் வராமல்மட்டும் இருந்திருந்தால்....

**சம்பு:-** விழா, விருந்து வேடிக்கை எதுவும் நடக்காதுமாமா. போதும் நிறுத்துங்கோன்னு அம்மா சொல்லிட்டாங்க.

**இராவ:-** அதுமட்டுமா? என் தங்கையின் குணம் எனக்குத் தெரியுமடா செல்வமே. அண்ணன் புறக்கணித்து விட்டார்; அனியாயம் நேர்ந்துவிட்டது; இனி இந்த ஆருயிர் சுமந்து என்ன பயன் என்றுகூட எண்ணியிருப்பாள், என் தங்கை!

**காமவ:-** பின்னே, உங்கள் அன்பைத் தவிர உலகில் எனக்கு வேறென்ன இருக்கிறதண்ணு?

**இராவ:-** அதனுல்தானே ஓடோடியும் வந்தேன். காமவல்லி! நீ துயரம் எய்திஞல், அயர்கிறது என்வீரம்; உன்முகம் சுளித்தால், என் அகம் சுண்டுகிறது! உன் கண்கள் நீர்வடித்தால், உதிரத்தைக் கொட்டுகிறது என் நெஞ்சம்! மலர்ந்த முகத்தால் எனக்கு மகிழ்வைக் கொடு சகோதரி!

**காமவ:-** அண்ணு! தங்கள் அன்பாதரவு, மலர்ப் புழுவையும் வரிப் புலியாக்குமே! சிறு துளியை பெருங்கடலாக மாற்றிடுமே! என் செல்வனின் ஆண்டு விழாவுக்கு சீர்வரிசை எதிர்பார்த்தேன், நீங்களே சீரோடு வந்துவிட்டீர்கள்; சிந்தையெல்லாம் தேன் பெய்துவிட்டீர்கள், அண்ணு!

**சம்பு:-** **(மகிழ்வோடு)** அம்மா! போன வருஷம் தங்கவாள்! இந்த வருஷம் தங்கவீணை!.... **(சம்புகுமாரன் இறங்கி தங்கவீணையை எடுக்கிருன்)**

**இராவ:-** வாள் வீரத்தின் சின்னம்; யாழ் கலையின் சின்னம்! மருகனே! வீரவாழ்வோடு நமது பரம்பரைக் கலைவாழ்வின் பரிமளிப்பும் பெற்று நீ சிறக்க வேண்டுமடா! அதற்குத்தான் இதுவெல்லாம்!....

(இராவணன், கொண்டுவந்த உடுப்புகளை சம்புகுமாரனுக்கு அணிவிக்கிருர். சிறு மகுடம் ஒன்றை தலையில் சூட்டுகிருர். எல்லோரும் மகிழ்கின்றனர்.)

**தினகரன்:-** விந்தியத்தின் வருங்கால மன்னவன்.

**எல்லோரும்:-** வாழ்க! வாழ்க!

(பாட்டுத் தொடங்குகிறது. மீண்டும் களிப்பு மலருகின்றது. ஆடல் பாடல், கும்மி கோலாட்டம் மீண்டும் அமர்க்களப்படுகின்றன.) **(தொடரும்)**



(8-ம் பக்கம் தொடர்ச்சி)

"தி. க. காதலரே!"

"அன்பே! அனுதினமும் உன்னை நினைந்துஅலைகிறேன்; அல்லல் படுகிறேன். அப்படியிருக்க என்னை அடையாமல் அந்த அகில இந்தியக் கண்ணுேட்டத்தை அணுகுவது அநியாயமல்லவா?"

"தி. க. காதலரே! தெரியாமல் பேசாதீர்! என் திரு உள்ளம் உங்களைத்தான் தினம் தினம் தியானித்துக்கொண்டிருக்கிறது. இந்த தேகம் உங்களுடையது!"

தி. க. காதலனும், திருக்கிழவியும் எங்கேயோசென்றனர். மயக்கத்தில் அவனையும் ஆழ்த்திவிட்டு அந்த 'மாதரசி' மறைந்தாள்.

கம்யூனிஸ்ட் காதலன் கண் விழித்தான். காரிகையைக் காணுது கலங்கி நின்ருன். மயக்கம் தெளிந்த 'தி.க.'காதலனும்அங்குவந்துசேர்ந்தான். இருவரும் சேர்ந்து தேடினர் 'எழுபது' வயதுக்கு வந்து கொண்டிருக்கும் அந்த எழிலரசியை!

அப்பொழுது அவர்களுக்கு எதிரே 'தி. மு. க.' ஆணழகன் வந்தான், அவர்களின் நிலைமையைப் புரிந்துகொண்டான்.

"நண்பர்காள்! அந்த நாசகாரியை நம்பி உங்கள் உடலை நலியவைத்துக் கொள்ளாதீர்கள். அவள் நங்கையல்ல...:நரைத்த கிழவி! அவள் மேனியிலே மின்னுவது வாலிபத்தின் மினு மினுப்பு அல்ல, குஷ்டத்தின் தோற்றம்.

எவ்வளவோ எடுத்துச் சொன்னுன். ஆனுல், அவர்களோ சீறினர் அந்த நல்லவனின் மீது!

"போடா போக்கற்றவனே! அவள் புன்னகையையும் பொன்மேனியையும் நாம் பெற்ருேமில்லையே என்ற ஏக்கத்தால்இவ்வாறு கூறுகிருய்" என்று சொல்லிவிட்டு அவளைத் தேடும்படலத்தில் ஈடுபட்டனர்! அந்த நல்லவன் சிரித்தான், அவர்களின் அறியாமையைக கண்டு.

அவன் மட்டுமென்ன, அந்த ஊரே சிரிக்கிறது. சிரித்துக் கொண்டிருக்கிறது இப்பொழுதும். இதனை என்றுதான் உணர்வரோ அந்தக் கிழவியின் காதலர்கள்?

●~●

## பொன் மொழிகள்

உடல் வளப்பத்தைவிட மனத் தூய்மையே ஒருவனுக்கு மிக்க அவசியமானது.

—**காந்தியார்.**

புலன் இச்சைக்கு ஆளானவன், உடல் அழிந்த ஆத்மாவின் சவப் பெட்டி.

—**டாக்டர் போஸ்டிக்.**

தங்களுடைய ஆசைகளை நிறைவேற்றும் வேலைக்காரர்களால், தங்களைப்போன்று வடிக்கப்பட்ட மனிதர்களால் உருவாக்கப்பட்ட கடவுள்களையே நான் மறுக்கிறேன்.

—**ஜார்ஜ் சந்தாயனு.**

உழைப்பு நமக்கு ஊதியத்தையளிப்பதைவிட அதிகப் பயன் விளைக்கிறது நமது வாழ்க்கையையே அது நமக்குக் கொடுக்கிறது.

—**ஹென்ரி போர்டு.**

இழிந்த குலத்தாஞயினும், ஒழுக்கம் உடைமையால் ஒருவன் உயர்குலத்தான் ஆவான். அதனைத் தப்பி ஒழுகுவாஞயின், உயர்குலத்தாஞயினும் இழிகுலத்தான் ஆகிவிடுவான்.

—**திருவள்ளுவர்.**

(13-ம் பக்கம் தொடர்ச்சி)

என் உள்ளத்தைப போலவே காய்ந்து கிடந்த அந்தக் கதம்பத்தில் வைத்துக் கட்டப்பட்டிருந்த செந்தாமரையின் இதழொன்று என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது. நான் காதலனு? சோதரனு?...... எத்தகு ஏமாற்றம்?

நான் வீட்டை விட்டு வெளியே வந்தபொழுது, என் விருப்பப்படி நகரிலிருந்து திருமணத்திற்காக வரவழைக்கப் பட்டிருந்த ஒலி பெருக்கியைப் பொருத்திக் கொண்டிருந்தார்கள். நான் எதையும் கவனிக்காமல் நடந்தேன். என் கால்கள் என்னையுமறியாமல் குளக்கரையை நோக்கி நடந்தன. நான் பேசாமல் போய் குளக்கரையிலிருந்த ஒரு மரநிழலில் உட்கார்ந்தேன். உணவைப் பற்றிக் கூட நினைவில்லை. தேடுவார்களே என்ற கவலைகூட இல்லாமல் கண்ணை மூடிக் கொண்டிருந்தேன். ஆமாம்; நான் கண் மூடிதானே...

நேரம் சென்றதே தெரியவில்லை. என் வீட்டிலிருந்த ஒலிபெருக்கியில் ஒரு பாடகன் உருக்கமாகப் பாடிக் கொண்டிருந்தான். "சிந்தையைக் கவர்ந்துவிட்ட செந்தாமரையே" என்று பாடிய அந்த இசைத்தட்டைக் கேட்டதும் குளத்தைப் பார்த்தேன். செந்தாமரை குவிந்திருந்தது. சுற்றிலும் என் உள்ளத்தைப் போலவே இருள்! அடிவானத்தில் முழு நிலவு தன் பயணத்தைத் தொடங்கியிருந்தது. விதவைக்கு மறுமணம் வேண்டும் என்கிருர்கள்; காதல் மணமும் வேண்டும் என்கிறேன் நான்! என்னைக்கண்டு மலர்ந்துவிட்டது என்றுதான் மகிழ்ந்தேன்; குவிந்துவிட்டதே செந்தாமரை!

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

நான் அவளுக்காக ஒதுங்கினேன். இருவரும் ஒரே புறத்தில் ஒதுங்கினோம். அவள் பாதைக்கு வந்தாள். நானும் பாதைக்கு வந்தேன். அவள் நாணத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள். அவளுடைய கன்னக் கதுப்புகளில் அதற்குள் சிவப்பேறி விட்டது. நான் தாமரை மலர்ந்ததைப் பார்த்ததில்லை. ஆனால், தாமரை மலரும்போது இப்படித்தானிருக்கும் என்று அவள் முகத்தைப் பார்த்து நினைத்துக் கொண்டேன்.

அவள் ஒதுங்கிப் போய் விட்டாள். அவள் கையிலிருந்த குடம் அவள் தண்ணீர் எடுத்துவர 'தோட்டக் கிணறு'க்குப் போகிறாள் என்றது. உண்மையும் அதுதான். அந்த உண்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகத் திரும்பிப் பார்த்தேன். அதே நேரத்தில் அவளும் என்னைத் திரும்பிப் பார்த்தாள். அவள் முகத்திலே புன்னகை! ஆனால், இருவருமே சட்டென்று தலையைத் திருப்பிக் கொண்டோம். அவளுடைய புன்னகையாகிய தீ என் உள்ளத்தைச் சுட்டெரித்தது. அந்த நெருப்பில் என் தங்கையின் திருமண நினைவு கூடப் பொசுங்கிப் போயிற்று.

கிராமத்தின் கோடியிலிருந்த குளத்தை நெருங்கிவிட்டேன். குளத்திலே தண்ணீர் கொஞ்சந்தான் இருந்தது. அதுவும் கலங்கிப் போயிருந்தது. அதன் நடுவில்—அப்பொழுதுதான் மலர்ந்திருந்தது, ஒரு செந்தாமரை! அடிவானத்தைப் பார்த்தேன். காலைக் கதிரவனின் செந்நிற ஒளிக் கீற்றுகள் அங்கே பரவியிருந்தன. மீண்டும் மலர்ந்த தாமரையைப் பார்த்தேன். உடனே அவளுடைய முகம் நினைவுக்கு வந்தது. இந்த வானத்துக் கதிரவனைக் கண்டு குளத்துத் தாமரை மலர்ந்தது. அவளுடைய முகத்தாமரை எந்தக் கதிரவனைக் கண்டு மலர்ந்தது. ஒருவேளை, என்னைக் கண்டதாலோ...? இந்த எண்ணம் ஏற்பட்டதும் மின்சாரக் கம்பியைத் தொட்டதைப் போன்ற ஒரு அதிர்ச்சி என் உடல் முழுதும் பரவியது.

வீட்டிற்குப் போனதும் எல்லோரும் அன்போடு அழைத்தார்கள்; உபசரித்தார்கள். என் தங்கை உள்ளே உட்கார்ந்து கொண்டிருந்தாள். புது மணப் பெண்ணல்லவா! நான் உள்ளே சென்று பையிலிருந்த கதம்பத்தைஎடுத்து தங்கத்திடம் கொடுத்துவிட்டு, வெளியே வந்து பந்தலடியில் போட்டிருந்த கட்டிலில் உட்கார்ந்தேன். என்தாய் அருகில் வந்து உட்கார்ந்துகொண்டு, "ஏண்டா தம்பி, இரண்டு நாளைக்கு முன்னாலே வந்திருந்தா என்ன?" என்று கேட்டாள். அதற்கு ஏதோ சமாதானம் சொல்லிவிட்டு, வாயிற்படிபுறம் திரும்பியவன் திடுக்கிட்டு விட்டேன். அவள் அங்கு தண்ணீர்க் குடத்துடன் நின்று கொண்டிருந்தாள். அவளும் என்னைப் பார்த்துச் சிலைபோல நின்றுவிட்டாள். ஒரு சிற்பியோ, ஓவியனோ, கவிஞனோ அப்பொழுது அங்கில்லாமல் போய்விட்டான். இருந்திருந்தால், அவளுடைய அந்த நிலையைத் தன் கலைமூலம் விளக்கி உலகப்புகழ் அடைந்திருக்கலாம்.

நான் அவளை விழுங்கி விடுபதைப் போலப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கவனித்த என் தாய், "ஏந் தம்பி! அவளைத் தெரியலே உனக்கு? நல்லப்பட்டி வேலாயுதத்தின் மகள், தாலியறுத்த மரகதம்" என்று கூறிவிட்டு, "சாப்பிட வா" என்று அழைத்தாள். நான்போய் இலையில்உட்காருவதற்குள் 'மரகதம மரகதம்' என்று என்வாய் அவளுடைபெயரைப் பலமுறை உச்சரித்து விட்டது. அப்படி அவளுடைய பெயரைச் சுவைத்து விழுங்கியதாலோ என்னவோ, என் வாய் இரண்டு தோசைகளுக்குமேல் சாப்பிட மாட்டேன் என்று சொல்லி மூடிக் கொண்டது. நான் கையலம்பிக்கொண்டு வெளியே வந்தபொழுது, அவள் என்னைத் தாண்டிச் சென்றாள். நான் அவளையேப் பார்த்தேன். அவளும் என்னைப் பார்த்தாள்.

ஆம்! அவள் தாலியறுத்தவள். என்றாலும் எழில் பூத்த கட்டழகி! என் மனம் நிறைந்த மாது நல்லாள். நானும் சீர்திருத்த எண்ணமுடையவன்தானே... எனவே, சந்திப்பின் முடிவு மகிழ்ச்சியாகத் தானே இருக்கும்!

நாள் முழுதும் இப்படியே! அடிக்கடி என்னைப் பார்ப்பாள்; நானும் அவளைப் பார்ப்பேன்.


**பகுத்தறிவு.**

(திங்களிருமுறை)

**புதிய தசாம்ச நாணய விகிதத்தில்:**

**உள் நாடு:**

ஆண்டு 1-க்கு 4-00

6 மாதங்களுக்கு 2-00

தனிப்படி 16 காசுகள்

சிலோனில் 20 சதம்

**பகுத்தறிவு அலுவலகம்**

**சேலம்-1.**




மின்னலைப் போன்று அவள் பற்கள் ஒளிவிட்டு மறையும். அதைத் தொடர்ந்து அவளும் என்னுடைய பார்வையிலிருந்து மின்னலைப்போல மறைந்து விடுவாள்.

பதினொரு மணி சுமாருக்கு என் அம்மா மணப்பந்தலுக்கு வாழை மரம் கொண்டு வருவதற்காக என்னைத் தோட்டத்திற்கு அனுப்பினாள். என் தந்தை தோட்டத்தில் தான் இருந்தார். வந்ததிலிருந்து அவரைப் பார்க்கவே இல்லை. அதனால் போனதும் கொஞ்ச நேரம் என்னைப் பற்றி விசாரித்தார். பின்னர், வீட்டிற்கென்று எடுத்து வைத்திருந்த தேங்காய்களில் இளசான ஒன்றைப் பொறுக்கியெடுத்து, அதை வெட்டிக் கொடுத்தார். நானும் அந்த இளநீரைக் குடித்துவிட்டு, வாழை மரம் கொண்டுபோக வேண்டுமென்றேன். உடனே அவர் இரண்டு ஆட்களை அழைத்துக் கொண்டு, கொடுவாளுடன் வாழைத் தோட்டத்திற்குச் சென்றார். நானும் பின்னாலேயே சென்றேன். குலை ஈனாத, காய்களும், இலைகளும், நிரம்பிய இரண்டு மரங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை வெட்டச் சொன்னார் என் தந்தை. ஒருவன் வெட்டினான். மரம் சாய்ந்தது. எல்லோரும் தாங்கிப் பிடித்தனர். நானும் அவர்களுக்கு உதவி செய்ய முயன்றேன். உடனே என் தந்தை 'வேண்டாம்ப்பா! வாழைக் கறை சொக்காயிலே பட்டா போகவே போகாது" என்று கூறி என்னைத் தடுத்து விட்டார். அவர் அப்படிக் கூறி முடித்ததும், எனக்கு மரகதத்தைப் பற்றிய எண்ணம்தான் எழுந்தது. அவளைப் பற்றி நான் கொண்ட நினைவும் வாழைக் கறை போன்றதுதானே?

வாழை மரங்களை வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்தபின், முகத்தைக் கழுவிக்கொண்டு, தலையை வாரிக் கொள்வதற்காகக் கண்ணாடியை எடுத்துக்கொண்டு வெளியே வந்து நின்றேன். நான் தலையை வாரிக் கொண்டிருந்த போதே, எனக்குப் பின்னால் சிறிது தூரத்தில் மரகதம் வந்து நின்றதைக் கண்ணாடியில் பார்த்து விட்டேன். அப்புறம் தலைவாருவதிலா கவனம் இருக்கும்? ஆனாலும், அவள் சந்தேகப்படாதபடி, சாமர்த்தியமாக தலை வாருவது போலப் பாசாங்கு செய்துகொண்டே அவள் அழகைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தேன். "அவள் செந்தாமரை! அதிலும், சேற்றிலே மலர்ந்த செந்தாமரை அல்ல; சித்திரத்திலே வரைந்த அழியாத செந்தாமரை!" என்றது என் உள்ளம். அவள் என்னைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். நானும் அந்த அழகின் பிரதிபலிப்பைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டேயிருந்தேன். எவ்வளவு நேரம் தான் அப்படியே இருப்பது? திரையிலே தோன்றும் நடிகையை நேரில் காண ஒவ்வொரு ரசிகனுக்கும் ஆவல் பிறப்பதுபோல, என்னுடையஉள்ளத்திலும் ஒரு ஆசை எழுந்தது. தடாலென்று திரும்பிப் பார்த்தேன். பாவம், மருண்டு விட்டாள்! ஆனாலும் மான் மருளும் போதுதானே அதிக அழகாகக் காட்சியளிக்கிறது!

அவள் என் தங்கையிருக்கும் அறைக்குப் போய்விட்டாள். நானும் கண்ணாடியை வைத்துவிட்டு, அந்த அறைக்கு வெளியே கிடந்த பாயில்போய் அமர்ந்தேன். உள்ளே இருந்து பேச்சுக்குரல் கேட்டது.

"ஏன் மரகதம், ஒரு மாதிரியா இருக்கே?"-இதுதங்கத்தின் குரல்.

மரகதம் கம்மிய குரலில் பேசினாள்: "தங்கம்! உங்க அண்ணனைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு எப்படியோ இருக்குது..."

என் மனம் கழுத்தறுபட்ட கோழியைப் போலத் துடித்தது. மரகதம் மேலும் தொடர்ந்தாள்:

"இரண்டு வருஷங்களுக்கு முன்னே செத்துப்போயிட்ட எங்க முத்து அண்ணன், இதே மாதிரி தான் முகம், சாயல், நடை எல்லாத்திலும்! உங்க அண்ணனைப்பார்த்தா எங்க அண்ணனைப் பார்க்கறது போலவே இருக்குது. அதனாலே தான் சும்மா அவரையே பார்த்துகிட்டிருக்கேன்......"

அவள் பேச்சை முடிக்கவில்லை. நான் சட்டென்று உள்ளே நுழைந்தேன். "இதோ, அந்த அண்ணங்கூட..." என்று மெதுவாகச் சொன்னாள் மரகதம். நான் ஏதோ போலப் பாசாங்கு செய்தேன்.

"கதம்பம் காய்ந்து விட்டதே" என்று சொல்லி விட்டு, பிரம்புப் பெட்டியிலிருந்த கதம்பத்தை எடுத்து வெளியே எறிந்தாள் மரகதம். நானும் வெளியே வந்தேன்.

(11-ம் பக்கம் பார்க்க)

## திருந்திய திருமணம்.

*7-6-57 காலை 9-மணிக்கு, தொட்டம்பாளையம் (கீழ்பவானி அருகில்)எனது இல்லத்தில், தோழியர், **கிணியம்மாவும்** நானும் "பகுத்தறிவு" ஆசிரியர், **ப. கண்ணன்** அவர்கள் தலைமையில் புரிந்து கொள்ளும்வாழ்க்கை ஒப்பந்த விழாவுக்கு தாங்கள் வருகை தந்து வாழ்த்தியருள வேண்டுகிறேன்.*

அன்பன்.

**டி. எஸ். ஆர். சாமி.**

தொட்டம்பாளையம்.

# கேள்விக்கணை

இம்முறை பரிசு பெற்றவர்:
● நா. அரங்கசாமி,
கன்னூர்பாளையம்,
சிக்காரம்பாளையம் (அஞ்சல்)
கோவை மாவட்டம்.

**நா. அரங்கசாமி, கன்னூர்பாளையம்.**

● கே: மழைபெய்வது எவராலே, செடி வளர்வது எவராலே என்று கேட்டுப் பாடி வருகிறார்களே; எதனாலே என்று ஏன் கேட்கக் கூடாது?

*ப: எதனாலே என்ற நியாயமான கேள்விக்கு, இயற்கையின் விளைவாலே என்ற அறிவுபூர்வமான பதில் கிடைத்துவிடும். எவராலே என்றால் தானே அவராலே என்று ஒரு ஆண்டவனைக் குறிப்பிடும் பக்திபூர்வமான பதில்கிடைக்கும்? அதற்குத்தான்.*

* * *

சேற்றிலேமுளைத்த செந்தாமரை என்று நம் நாட்டில் யாரைச் சொல்லலாம்? எப்படிச் சொல்லலாம்?

*ப: கதரை உடுத்தியும், ஜெய்ஹிந்த் கூறியும் வடவர்க்கு பக்தி செய்வோரிலும் "வடநாட்டு அரசாங்கம் தென்னாட்டு நலத்தைப் புறக்கணிக்கிறதே" என்ற உண்மையைச் சொல்லுகிறாரே; அவரை சேற்றிலே முளைத்த செந்தாமரை என்று கூறலாம். கௌரவமாக!*

**டி. பி. பழனிசாமி, தொளசம்பட்டி**

கே: காங்கிரஸ்காரர் கதர் என்ற புதரிலே புகுந்து கொள்வது தற்காப்புக்காகவா? தன்மானம் காக்கவா?

*ப: ஆளுவோர் அவர்களாக இருப்பதால், செய்யும் தவறுகளுக்குத் தற்காப்புத்தான் தேவை. தன்மானம் தேவையிருந்தால்தான் கதரையும், புதரையும் விட்டு வெளியே வந்திருப்பார்களே!*

* * *

கே: மத்தியப் பாராளுமன்ற அமைச்சரவையிலே ஒரே ஒரு தமிழ்நாட்டுக்காரர் டி. டி. கே. வுக்கு மட்டும் எப்படி இடம் கிடைத்தது?

*ப: மூன்றுபேர் இருந்த இடத்தில் ஒருவராவது இருந்தால்தானே "தமிழருக்கு அநீதி ஏன்" என்று கேட்பாருக்கு அவரை எடுத்துக்காட்டலாம். வடவரின் அந்த எண்ணமே அவரை அமைச்சராக்கியது.*

**ப. நாராயணசாமி, காரமடை**

கே: எங்களூர் சொர்க்கவாசல் கோயில் கோபுரத்தில் கண்ணனிடம் சேலையைக் களவுகொடுத்த பெண்களை நிர்வாணச்சிலையாக்கி வர்ணம் பூசி நிறுத்திவைத்திருக்கிறார்களே; ஏன்? எதற்கு? எதனால்?

*ப: கூட்டம் சேர்க்க, பக்தி பரப்ப, பார்ப்பனீயம் வளர்க்க, தட்சிணைத்தட்டு கனக்க, தமிழனை ஏய்க்க கலையின் பெயரால் அந்த காலித்தனத்தை தெய்வீகமாக்கினர் அறிவு சுரண்டும் ஆத்திகர்கள்!*

* * *

கே: அமைதியிலிருந்து கிளம்பும் சக்திகள் எவை? அதன் தூண்டுகோல் யாது?

*ப: சிந்தனையுடன் கூடிய அமைதியினின்றும் அறிவுச் சக்தியும், செயல் வன்மையும் விளைந்திடும். "வாழ்வு சிறக்க வேண்டும்" என்ற ஆசை அதற்குத் தூண்டுகோலாக அமைந்திடும்.*

## கிளைக் கழகங்கள்--
## கழகத் தோழர்கள்--
## கழக ஆதரவாளர்கள்

**கவனத்திற்கு:**

"வளர்ந்துவரும் நம் கழகத்தின் வலிவு-பொலிவுகளைக்கண்டும், கழகத் தோழர்கள் ஒருவருக்கொருவர் ஒன்றிப் பழகிக் குடும்பப் பாசத்துடன் நடந்து கொள்வதைப் பயன்படுத்திக் கொண்டும், நமது கழகத்தைச் சேராத—கழகக் கொள்கைகளுக்கு ஒரு சிறிதும் ஒருமைப்படாத சிலர், ஆங்காங்கு சுற்றித் திரிந்து கிளைக் கழகங்களையும், கழகத் தோழர்களையும் அணுகி, கழகத் தோழர்கள் எனத் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு ஏமாற்றிப் பொழுது போக்குவதும், பொருள் பறிப்பதுமான இழி செயல்களில் இறங்கி இருப்பதுபற்றி அவ்வப்போது ஆங்காங்கிருந்து தலைமை நிலயத்திற்குச் செய்திகள் கிடைத்து வருகின்றன.

கிளைக் கழகத் தோழர்களும், கழக அனுதாபிகளும் மேற்குறிப்பிட்டது போன்ற பொறுப்பற்ற மனிதர்களிடம் எச்சரிக்கையாக நடந்துகொள்ளும்படியும், எத்தகைய இழப்புக்கும் ஆளாகாதிருக்கும்படியும்வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

—**தலைமைக் கழகம் (தி. மு. க)**

*பாராட்டுதலாலோ, பொருளாலோ, போகத்தாலோ, உண்மை இன்பம் பெறப்படுவதில்லை உருப்படியான ஏதாவதொன்றைச் செய்வதாலேயே இன்பம் கிடைக்கிறது.*

—**இரென்வெல்.**



(8-ம் பக்கம் தொடர்ச்சி)

*இல்லாதவர்களாக ஆக்கிவிட்டிருக்கின்றார்கள்!*

*வியப்பாக இருக்கிறது! குழந்தை இளம் பிராயத்திலேயே, 'இது என்ன அது என்ன? சூரியன் ஏன் அங்கேயே இருக்க வேண்டும்? சந்திரனின் ஒளியில் மட்டும் வெப்பமில்லாதது ஏன்? மண்ணில் ஏன் கால் புதைகிறது—கல்லில் ஏன் புதையவில்லை? நீ அம்மா, அவர் ஏன் அப்பா?' என்றிப்படிவினாக்களைஎழுப்பி விடை கண்டும்—காணமுயன்றும் வளருகின்றது. இந்த அருமைக் குழந்தையை ஆசிரியத் 'தந்தை' எந்த மந்திரத்தைக் கையாண்டு இப்படி ஆக்கிவிடுகிறான் என்று எண்ணிப் பார்த்தால் வியப்பாகத்தான் இருக்கிறது. ஆனாலும் அவ்வாறாக்கிவிட்ட பெருமை அவனையே சார்ந்துள்ளது.*

*ஆசிரியப் பெருமக்கள் இந்த 'அரிய' சாதனையை எப்படிச் செய்து முடித்திருப்பார்கள்? இப் 'பெரிய' வெற்றியை அவர்களுக்குத் தேடித்தந்த படைக்கலன்கள் இரண்டு. ஒன்று, 'மாணவனுக்கு மூளையே கிடையாது; தான் சொல்லுவதை அப்படியே அவன் ஏற்றுப் போற்ற வேண்டுமென்று ஆசிரியன் கொள்ளுகின்ற எண்ணம்; மற்றது, அதைப்பின்பற்றி மாணவனின் நினைவு ஆற்றல் (Memory power) ஒன்றை மட்டுமே வளர்ப்பது.*

*"பலவகைச் செய்திகளை அப்படியே தெரிந்து வைத்திருப்பதும், சிதையாமல் அவற்றை வெளிப்படுத்துவதும் நினைவாற்றலின் பாற்படும்; அவற்றை ஒன்றாக இணைத்தும் பிணைத்தும், ஒன்றோடொன்றை மாறுபடுத்திப் பார்த்தும் அவற்றின் கூட்டுறவினால் புதிய கருத்துக்களைப் பிழிந்தெடுப்பது அறிவின் பாற்படும்" என்று ஆங்கில அறிஞன் ஒருவன் கூறினான். இந்த நாட்டிலுள்ளவர்களும் இதை ஒப்புகின்றனர். என்றாலும் இதன்படி நடக்க அவர்கள் விரும்பவில்லை.*

*நமது மாணவர்களின் அறிவை வளர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு பாடங்களைக் கற்றுத்தருகின்றனர். மாணவர்களின் வளர்ச்சியைக் கணிக்கத் தேர்வுகள் (Examinations) நடத்துகின்றனர். கற்றுக்கொடுக்கும்போது மாணவன் சித்திரப்பாவை போல அடங்கியிருந்து ஆசிரியர் சொல்லுவதை அப்படியே கேட்டு* **ஏற்றுக்** *கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. யாராவது ஒரு மாணவன் எதையாவது, 'அது ஏன் அப்படி' என்று கேட்டுவிட்டால் அவனை, 'முட்டாள்' மரியாதை இல்லாதவன் என்றெல்லாம் பட்டங்கட்டி உட்காரவைத்துவிடுவது; அல்லது வகுப்பைவிட்டே வெளியேற்றி விடுவது ஆசிரியப் பெருந்தகையின் வீரச்செயல்களில் ஒன்றாக இருந்து வருகிறது. அறிவு வளர்ச்சிக்கு எதிராகத் தொடுக்கப்படுகின்ற முதல் அம்பு இது! இதைப் பார்க்கும் ஏனைய மாணவர்களின் உள்ளத்தில் அச்சம் தோன்றுகிறது; எழுச்சி குன்றுகிறது.*

*பாடத்தில்வரும் எது ஒன்றையும் ஒரு செய்தியாக, அல்லது ஒரு கதைப்பாத்திரமாகக் கருதாமல் ஒவ்வொன்றையும் தனதாக, தனது மதிப்பிற்குரியதாக ஆசிரியன் கருதுவதே இதற்குக் காரணம். "இளங்கோவடிகள் கதையின் இறுதியில், வீரனை செங்குட்டுவனை வேள்வி செய்யச்செய்துள்ளார்; எனவே அவர் வீர வெற்றியைவிடச் சமய வெற்றியையே பெரிதாக எண்ணியிருக்க வேண்டும்" என்று ஒரு மாணவன் சொல்லுவதனால்—அதற்கான விளக்கத்தைத் தெரிந்துகொள்ளுவதனால் சிலப்பதிகாரம் ஒழிந்தே போய்விடுமா?*

*"கும்பகருணனின் குண ஓவியத்தைக் கம்பர் சரியாகத் தீட்டவில்லை; வீரனாகிய அவன் காரணமில்லாமல் கோழையாகக் காட்டப்படுகிறான், சில இடங்களில்" என்று மாணவன் எண்ணிப் பார்ப்பதனால் கம்பனும் அவன் இராமாயணமும் ஒழிந்தா போய் விடுவார்கள்?*

*இப்படி அங்கொன்றும் இங்கொன்றுமாக எண்ணிப்பார்க்கும் இளைஞரை, 'உனக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லிவிடுகிறான் ஆசிரியன். சில போது இதையே கோபமாக வைத்துக்கொண்டு மாணவனை ஏளனம் செய்யவும், கெடுத்து விடவும் முனைகின்றனர் சிலர். தாம் ஆசிரிய நிலை பெற்றிருக்கிற ஒரே காரணத்தால் இவற்றைக் காணும் மாணவர்கள் சிந்திப்பார்களா? இந்த இழிநிலையில், கல்வி பெறுவதே வயிற்றுக்குச் சோறு தேடத்தான் என்னும் நிலையும் சேர்ந்து கொண்டிருக்கிறது. தன்னம்பிக்கை இல்லாத—மாணவரின் வினாக்களுக்கு விடையளிக்கத் தெரியாத—மாணவன் சொல்லுவது சரி என்றிருந்தாலும் அதை ஏற்றும் போற்றும் ஆண்மை இல்லாதவர்களெல்லாம் ஆசிரியர் என்றிருந்தால், மாணவன் எப்படி எண்ணிப் பார்க்கமுடியும்? அறிவுத்திறன் அவனுக்கு எப்படி வளரும்?*

**(அடுத்த இதழில் முடிவுறும்)**

**கூலி கொடுப்பவனைக் கீழே தள்ளுவதால், கூலி வாங்குபவனை உயர்த்திவிட முடியாது.**

**—ஆபிரகாம் லிங்கன்.**

## கலைக்கூடம்

நாடகம்.

# ஒரே முத்தம்.

கலைஞர். மு. கருணாநிதி M.L.A. அவர்களின் "ஒரே முத்தம்" நாடகம் தீண்டாமை ஒழிப்புக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டது. பழமைப் பாதுகாப்பின் பெயரால் கொட்டமடித்திடும் அதிகார வெறிகொண்ட கெடுமதியாளரின் போக்கினைச் சித்திரிப்பது. ஒரு சமதர்ம இலட்சிய முழக்கம்!

இந்த நாடகத்தை முதன் முதலாக மேடையேற்றியவர்களே அதனை நடிப்பதைக் காணும் வாய்ப்பு அண்மையிலே கிட்டியது.

சலகண்டபுரத்திலே தங்கி, பல நாடகங்கள் நடத்திவரும் திரு. கே. என். இரத்தினம் அவர்களின் ஸ்ரீ தேவி நாடக சபாவின் 20—5—57-ல், "ஒரே முத்தம்" நடத்தினர்.

என்ன காரணத்தாலோ சபாவின் குறிப்பிட்ட நடிகர்கள் சிலர் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. விபீஷணனாக நடித்த தோழர், கோபாலும், குமரியாக நடித்த தோழியர், ராஜாமணியும் பாத்திரமுணர்ந்து சிறப்பாக நடித்தனர். அவர்கட்கு எமது பாராட்டுகள்! மற்ற நடிக நடிகையரும் கற்றதைச் செய்யவல்ல நற்றுணையாக விளங்கினர். நாடகத்திற்கு ஊட்டமளித்தனர். நகைச்சுவைக் காட்சிகளைத் தொடர்பாகவும், தெளிவாகவும் அமைத்துக் கொள்ளாதது இடை இடையே தொங்கலை உண்டாக்கிற்று.

மற்றவர்கள் நடிப்பதைக் காட்டினும் இவர்கள் பன் மடங்கு சிறப்புற நடித்துக் காட்டினர் "ஒரே முத்த"த்தை. எனினும் தேவி நாடக சபையின் முழுத்திறனும் இதிலே பரிமளிக்கவில்லை!

—இந்திரசித்தன்.

## நடிகரது வேண்டுகோள்.

தமது 16-வது வயதில் நாடகக் கம்பெனியில்சேர்ந்து, 42 ஆண்டுகளாக நாடக உலகமே கதியென வாழ்ந்தவர்; தமிழ் நாடகத்தந்தை டி. டி. சங்கரதாஸ் சுவாமிகளின் ஸ்ரீ தத்துவ மீனலோசனி வித்துவ பாலகான சபா; டி. கே. எஸ். சகோதரர்களின் 'ஸ்ரீ சண்முகானந்த நாடக சபா' ஆகிய கம்பெனிகளின் பின்னணிப் பாடகா; நடிகராக மாறி நற்றமிழிசை முழக்கி, தமிழகத்திலும், மலேயா, பர்மா, சிலோன், சைகோன் போன்ற தமிழர்கள் வாழுகின்ற நாட்டிலும் நாடகமேடைப் புகழ் பெற்ற திரு. டி. எம். எஸ். இராசப்பா அவர்கள், தமது 58-வது வயதில் நாடகத் துறையினின்றும் விலகி, திண்டிவனத்தருகே அவாது சொந்தவூரிலே சிறு கடையொன்று நடத்திக்கொண்டு கடைசி நாட்களைக் கழிக்க விரும்புகிறார். "இனியும் தான் நாடகத்தில் நடிப்பது நாடகக்கலையையே பழிப்பதாகும்" என்று கருதுகின்றார்.

கலைஞர்கள், அபிமானிகள், நண்பர்களின் சிறு பொருளதவி நாடுகின்றார். வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். உதவிப் பணம் அனுப்ப விரும்புகிறவர்கள் இதனடியில் காணும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

டி. எம். எஸ். இராசப்பா, நடிகர், தடாகம் கிராமம், வேட்டவலம் (அஞ்சல்) வழி: திருவண்ணாமலை, வ. ஆ. மாவட்டம்.)




சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப கண்ணனால் அச்சிடப்பட்டு:
சேலம்–1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

1129


# பகுத்தறிவு

திங்கள் இருமுறை. ஆசிரியர் :- ப. கண்ணன்.

மலர் 7 | 15-6-57 | விலை 0-2-6 (16 காசு) | இதழ் 8.


## குடிலர்கள் கெடுவர்!

கிரேக்கநாட்டு ஹெலாட்களைப் (Helot) பலகாலம் அடக்கி வைத்திருந்த ஆண்டைக் கூட்டம் (Masters) அழிந்துபோனது சரிதம்! ரோம்நாட்டு பிளபியன் (Plebian) பெட்ரீஷியன் (Patrician) தகராற்றின் முடிவுஎன்ன? ஆதிக்கம் செலுத்திய கூட்டம் அழிக்கப்பட்டுவிட்டது. பிரிட்டனிலே காமன்ஸ் (Commons) பிரபுக்கள் (Lords) தாராற்றின் முடிவு என்ன? பிரபுக்கள் பெட்டிப் பாம்பு ஆனதுதானே! ஆண்டவனுல் ஆளப் பிறப்பிக்கப் பட்டவன் என்று ஆணவமாகப்பேசி (Civine Right of Kings) கடவுட் புதல்வர்கள் என்ற தத்துவத்தைப்பேசிய, முதலாம் சார்லஸ் மன்னனின் முடியும், முடிதரித்த சிரமும், என்ன ஆயிற்று ரஷியநாட்டிலே? முதலாளி (பூர்ஷுவா) தொழிலாளி (புரோலோடேரியன்) போர் மூண்டதன் பலன் என்ன? இங்குட்டும் என்ன? ஆரிய திராவிடப்போர் மூண்டுவிட்டது சரிதமுணர்ந்தோரின் உள்ளத்திலே! இதன் முடிவு என்னவாக இருக்கும், என்பது தெரியும்! குடிலர்கள் கெடுவர்! சழக்கர் சாய்வர்.

—அறிஞர் அண்ணு.

# இராமாயணம்-நமக்கோர் படிப்பினை.

*சுவாமி சிவானந்த சரசுவதி.*

இராமாயணம் என்ற சொல்லைக் கேட்டவுடன், நம்மவர்கள் பக்தியினால் மெய்மறந்து கூத்தாடுகிறார்கள். இஃது அறியாமையேயாகும். இராமன் பார்பபனர் சொன்னபடியே பார்ப்பனரல்லாதாரைத் துன்புறுத்தி வந்தவனாதலால், அவனை விஷ்ணுவின் அவதாரமென்று புகழ்ந்து, ஒவ்வொரு புராணங்களிலும் பாடிவைத்ததோடு அவனுக்கென்றே தனியாக "இராமாயணம்" என்னும் ஒரு பெருங் காவியத்தையும் பாடி வைத்திருக்கிறார்கள். இந்த இராமன் இராட்சதர்களைக் கொன்றான் என்று சொல்லும் இடங்கள் எல்லாம், தமிழ் மக்களையே கொன்றதாகச் சரித்திர ஆராய்ச்சியால் ஏற்படுகிற உண்மையை, நம்மவர்கள் உணராமல் பொருள் நஷ்டமும், அவமானமும் அடைந்து வருகிறார்கள். அந்தோ! கொடுமை! கொடுமை! பார்ப்பனருடைய தீய ஒழுக்கங்களைக் கண்டு மனம் பொறாமல் அவர்களை வெறுத்தவர்களையும், சிவனை வழிபடுகின்றவர்களையும், இராட்சதர், அசுரர், நிசிசரர் போன்றதான பல இழிவுப் பெயர்களால், வேதத்திலும் ஸ்மிருதியிலும் எழுதி வைத்துக் கொண்டு ஏமாற்றிவருகிறார்கள்.

ஆனால், உதவி புரிந்தோர்களையாவது தங்களுடன் சேர்த்துக் கொண்டார்களா? இல்லை, அவர்களையும் குரங்குகள்; ஆயினும் பக்தியுள்ளவைகள் என்று இழிவாகவே பேசினார்கள். இராமனால் செய்யப்பட்ட ஒவ்வொரு காரியங்களையும் மனிதர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள்; ஆயினும் இத்தருணத்திற்கேற்ற ஒரு கதையை உங்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன்.. இது இராமாயணம் உத்தரகாண்டத்தில், சீதையைக் காட்டிலே கொண்டுபோய் விட்டபிறகு, அஸ்வமேத யாகஞ் செய்யப் போகும் தருணத்தில் நடந்ததாகச் சொல்லப் பட்டுள்ளது.

ஒருநாள் ஒரு பிராம்மணன் இறந்துபோன தனது பிள்ளையினுடைய உடலைத் தாங்கிக் கொண்டு அரச சபைக்கு வந்து "உனது கொடுங்கோலாட்சியில் நடந்த கதியைப் பார்" என்று பல விதமான வசை மொழிகளைப் பொழிந்து கதறினான். அரசன் ஒன்றும் தோன்றாமல் திகைத்திருக்கும்பொழுது "சம்புகன்" என்கிற ஒரு சூத்திரன் காட்டில் தவம் பண்ணுகிறான். அவனைக் கொல்லாமலிருந்த குற்றத்தால், இக்குழவியின் உயிர் நீங்கிற்று. ஆயினுங் காலங் கடவாமல் சென்று அவனைக் கொன்றால், குழந்தை திரும்பவும் உயிர்பெற்றெழும் என்று அசரீரி வார்த்தை மொழிந்ததாம். உடனே கோடை காலத்தில் காட்டுத்தீயின் நடுவில் அகப்பட்டவன், மழையினால் எங்ஙனம் மகிழ்ச்சி யுறுவானோ, அத்தகைய மகிழ்ச்சியோடு காட்டிற்குச் சென்று அந்தத் துறவியைப் பார்த்து "நீ எதன் பொருட்டுத் தவம் பண்ணுகிறாய்" என வினவ, அதற்கு அவர் இவ்வுலகப் பொருள்கள் எதையும் நான்விரும்பவில்லை; உண்மை நிலை ஒன்றினையே விரும்புகிறேன் என்று விடை பகர, இந்த இராமன் சற்றுத் தயங்கியும், "உடனே சூத்திரன் தவம் பண்ணலாமா? இதனாலன்றோ பிராமணச்சிறுவன் இறந்தான். ஆதலால் துறவியாயினும், இந்த சூத்திரனைக் கொல்லுவது பாவமாகாது. எதிர்மறையாக இவனைக் கொல்லுவதால், இறந்துபோன பிராமணச் சிறுவன் உயிர் பெற்றெழுந்து அதனால் பெரும் புண்ணியத்தை அடைவோமே" என்று எண்ணினவனாய்த் தன் கையைப் பார்த்து இங்ஙனங் கூறுகிறான்.

"ஹே! ஹஸ்த தக்ஷிண ம்ருதஸ்யசி
சோர்த்விஜஸ்ய,
ஜீவாதவே விஸ்ருஜ சூத்ர
முனௌக்ருபாணம்;
ராமஸ்ய காத்ரமஸி.........."

[15-ம் பக்கம் பார்க்க]


**பகுத்தறிவு.**

(திங்களிருமுறை)

**புதிய தசாம்ச நாணய விகிதத்தில்:**

**உள் நாடு:**

ஆண்டு 1-க்கு 4-00

6 மாதங்களுக்கு 2-00

தனிப்படி 16 காசுகள்

சிலோனில் 20 சதம்

**பகுத்தறிவு அலுவலகம்**

**சேலம்-1.**

# எத்ரோல்



மலைநாட்டுத் தமிழர்களுக்கு வாக்குரிமை அளிக்கும் நல்லெண்ணம் [இலங்கை] அரசாங்கத்துக்குத் துளியும் இல்லை.

—'சுதந்திரன்'

அந்த அக்கிரமத்தைக் கண்டிக்க தமிழ்நாட்டு அரசாங்கத்திற்குத் திராணி துளியும் இல்லையே!

* * *

'சிங்களம் மட்டும்' என்ற சட்டம் தமிழினத்தை நாளடைவில் அழித்துவிடும்.

—தொண்டைமான்.

'இந்தி மட்டும்' என்ற நிர்ப்பந்தம் திராவிடத்திலும் கொடுங்கரம் விரிக்கின்றதே!

* * *

திருத்தணி ஆந்திராவுடனே இருக்க வேண்டும்

—அனந்தசயனம்.

அதிகாரத்திலிருந்தும் ஆந்திர அனந்தசயனம் துணிந்து பேசுகிருர். இங்கே பதவியிலிருக்கும் பச்சைச் தமிழர் என்ன செய்கிருரோ?

* * *

காலஞ் சென்ற சட்ட சபைத் தலைவர் ஒருவர் முன்னேர் சொத்து ஒருகாசுமில்லாமல் 60 லட்சம் சம்பாதித்து வைத்திருந்தார்.

—செய்தி.

இதிலே முக்கிய அம்சம் என்னவென்ருல்: இலஞ்ச ஊழலைப் போக்கி மக்களைப் புனிதமாகக வந்த காங்கிரஸ் மகான் அவர்!

* * *

சிறுத்தையின் புள்ளியை மாற்றினாலும், பார்ப்பானின் இயற்கைப் பண்பை மாற்ற முடியாது

—டி. எம். நாயர்.

இது பகுத்தறிவுக்கு முரணானது என்பதாகக் காஞ்சியிலே பார்ப்பானுக்கு ஓட்டு போடச் சொன்ன தி. க. க்கள் சொல்லி விட்டனரே!

# ஐயோ! தெரியாதே!

"ஆயுர்வேதம்,யூனனி ஆகிய சுதேச வைத்திய முறைகளுக்குரிய அந்தஸ்து பற்றி நடந்துவரும்வாக்குவாதத்தை கவனித்தேன்.இவற்றிற்குநன் மதிப்புள்ள வரலாறு இருக்கிறது. விஞ்ஞானம் நமக்கு அளித்துள்வ புது அறிவுடன் **இவ்விரு வைத்திய முறைகளை** ஏன் இணைக்கலாகாது என்பதற்கான காரணம் எனக்குத் தெரியவில்லை.''

சுகாதாரத் துறையில் இந்திய அரசாங்கம் புரிந்துள்ள 10-ஆண்டு சாதனைகளை விளக்கும் பிரசுரமொன்றில் இவ்வாறு எழுதியுள்ளராம் பண்டித ஜவகர்லால் நேரு.

இப்பொன்னுன கருத்தினை வெளியிட்டவர் வெறும் ஜவகர்லால் நேருவல்ல; இந்தியாவின் பிரதமஅமைச்சர் கனம் ஜவகர்லால் நேரு.

"ஏக இந்தியா'' என்ற தாம்புப் பிணைப்பிலே கழுத்தை மாட்டிக் கொண்டிருக்கிறது தமிழகம். "எங்கள் பிரதமர்'' என்று ஜவகர்லால் அவர்களை ஏற்றிப் போற்றுகிறது தமிழகம். வரவேற்கிறது. வாழ்த்துகிறது; பல்லாண்டு பாடுகிறது! என்ருலும் இந்நாட்டின் பழம்பெருமை வாய்ந்த—பயனும்எளிமையுமான சித்த மருத்துவம் பற்றி அவருக்குப் புரியவில்லை! வரலாறு தெரியவில்லை! தெரிந்து கொள்ள விரும்பவுமில்லை!

ஆயுர் வேதம்,யூனனி என்ற இரு முறைகளே அவருக்குத் தெரிந்திருக்கிறது. அந்த இரு முறைகளையே மதித்து விஞ்ஞானத்தோடு சேர்த்து வளர்க்க கருத்துத் தெரிவிக்கிருர், காஷ்மீர் பண்டிதர்! எண்ணம் நிறைவேறும்;ஏற்றமடையும் ஆயுர்வேதமும்,யூனனியும்! ஆனல் சித்த மருத்துவம்........?

சித்த மருத்துவம் வளர்க்க விரும்பும் செந்தமிழ்ச் செல்வர்களே!நந்தமிழ் மருத்துவம் காக்கும் நல்லவர்களே! "ஏக இந்தியத் தலைவரின் கருணை கடாட்சம் எப்போது கிடைக்கும் சித்த மருத்துவத்திற்கு? எப்போது வளரும்-வளமடையும் சித்த மருத்துவம்? எப்போது? ஐயோ! அவருக்குத் தான்இப்படியொரு மருத்துவ முறைதமிழகத்தில்இருப்பதே தெரியாதே! எப்படி வளரும்? யார் வளர்ப்பார்கள், இந்த அனுதைப் பிள்ளையை?

—வாலி.

## பொம்மை.

நுண்ணியதாய்ச் சிறந்த ஆராய்ச்சியுள்ள கல்வியறிவு இல்லாதவனுடைய எழுச்சியும்,அழகும், மண்ணினல் நன்கு செய்யப்பெற்ற பொம்மையின் எழுச்சியும் அழகும் போல்வன.

—திருவள்ளுவர்.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு
> —திருவள்ளுவர்

# இதயம்

மலர் 7 | சேலம் 15—6—57 | இதழ் 8

## எப்போது விமோசனம்?

இரும்பு, பாக்சைட், மாக்னசைட்!

பெரும் தொழில் வளத்திற்குத் தேவையான மூன்று வகை கனிப்பொருள்களும் சேலம் மாவட்டத்தில் ஏராளமாகக் கிடைக்கின்றன. வெறும் பேச்சல்ல! விஞ்ஞானிகளின்—நிபுணர்களின் நெடுங்கால ஆய்வின் முடிவு.

சேலத்தில் இரும்பு, அலுமினியம், மாக்னசைட் தொழிற் சாலைகளை ஏற்படுத்தினால், தென்னகத்தையே தொழில் துறையில் ஏற்றமுறச் செய்திட வாய்ப்புகளும், வசதிகளும் பொங்கிப் பெருகிடும்!

இயற்கை நமக்களித்த செல்வம் இரும்பாக, பாக்சைட்டாக, மாக்னசைட்டாக சேலத்து மண்ணிலே மறைந்து கிடக்கின்றது. ஞாலத்து நல்லறிஞர், தொழில் வல்லுனர் அவற்றினால் கிட்டிடும் பலன்களை வகைப்படுத்திக் கூறுகின்றனர். ஆட்சியினரும் ஒப்புகின்றனர். பொருளுதவியும், தொழில் நுணுக்க உதவியும் கிடைக்கின்றன; எனினும் செயற்படுத்த இந்திய அரசினர் முனைந்திடவில்லை. சென்னை அரசினர்க்கோ உரிமையில்லை!

சேலத்து கனிப்பொருள்களைத் தோண்டியெடுக்க டெல்லி தேவதையின் கருணை வேண்டும். சேலத்து மக்களின் வாழ்வும், வளமும் வடபத்ரகாளியின் சுட்டுவிரல் அசைவிலே சுருண்டு கிடக்கின்றன. வரிப்பலி கேட்டிடும் அந்த வடபத்ரகாளி, கோபப் பார்வையை நமக்குக் காட்டி, கொஞ்சும் பார்வையை அங்கன்றோ படர விடுகின்றாள்! ரூர்கலா-பிலாய்கள் பிறக்கின்றன; சேலம் பிறக்கவில்லையே!

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே இடம்பெற வேண்டிய சேலம் இரும்புத் தொழில் இரண்டாவது திட்டத்திலும் இடம் பெறவில்லை; மூன்றாவதிலும் முடக்கப்பட்டு விட்டது. நான்காவது....ஐந்தாவது....அப்புறம் எத்தனையாவதோ....?

அலுமினியத்தின் நிலையும் அந்தக் கதைதான். நாடு சுற்றிப் பார்க்க வந்த ருஷ்சியத் தலைவர்கள், புல்கானின், குருஷ்சேவ் இருவரும் கூறினார்கள்: "தென்னாட்டில் ஒரு அலுமினியத் தொழிற்சாலைதை ஏற்படுத்த இந்திய அரசாங்கம் முயற்சியெடுத்தால் அதற்கு ருஷ்சிய அரசாங்கம் உதவுவதற்கு தயாராக இருக்கிறது" என்று. மேட்டூரில் அதோ; ஏற்காட்டில் இதோ என்பதாக எத்துமொழி பேசி ஏமாற்றி விட்டனர் ஏகாதிபத்தியக்காரர்!

மாக்னசைட், தற்போது வெள்ளைக்காரன் கம்பெனியால் எடுக்கப்பட்டு வருகிறது. பெற்றுள்ள குத்தகை 1958-ம் ஆண்டோடு முடிவாகிறது. அதன் பிறகு "நாங்களே அத்தொழிலை எடுத்து நடத்துகிறோம். அனுமதி தாருங்கள்" என்று டெல்லி தேவதையிடம் கேட்டது சென்னை அரசாங்கம். "உங்களுக்கில்லை அவ்வுரிமை; கல்கத்தா கம்பெனியொன்றிற்குத் தந்துவிட்டோம்!" என்று சொல்லிவிட்டது டெல்லித் துரைத்தனம்!

சேலத்து இரும்பு—அது பற்றிக் கவலைப்படுவாரில்லை; பாக்சைட்—வெறும் கண் துடைப்பு; மாக்னசைட்—அதை வடவருக்குக் குத்தகை விட்டாயிற்று! சேலத்தின் முப்பெரும் கனிப் பொருட்கள், தென்னகத் தொழில் துறையையே வளமாக்கிடவல்ல அருஞ் செல்வங்கள்! அவற்றின் கதியினைப் பாரீர்! வரிக்குமேல் வரிபோட்டு "ஏக இந்தியா"வை செழிக்க வைக்கிறார்களாமே! எங்கே? யாரை?

சீரழிந்திடும் சேலமே! வற்றாத கனிச் செல்வமிருந்தும், வறண்டு கிடக்கும் உனக்கு எப்போது விமோசனம்?

—ப. கண்ணன்.



## எதிர்பாராதது!

க. ரா. அ.

சென்னை, 7-8-56

திரு. ப. கணேசன் அவர்கட்கு,

வணக்கம். ஒரு பெண்ணிடமிருந்து வரும் இந்த அஞ்சலைக் கண்டு ஆச்சரியம் அடையக் கூடும். ஆனால், நான் புதியவளல்ல-பழகியவள்தான். இருந்தும் நன்றி கெட்டவள்-நாகரிகம் அறியாதவள்-இன்னும் எது வேண்டுமானாலும் என்னைப் பற்றி தாங்கள் நினைக்கலாம். என் செய்கைக்காக மிகவும் வருந்துகிறேன்-மன்னிப்பு கோருகிறேன்.

அன்று ஒரு நாள் மவுண்ட் ரோடில்-மோட்டார் என்மீது பாய இருந்த நேரத்தில் பாய்ந்து என்னைத் தூக்கி வெளியில் விட்டீர். விபத்து வராமல் காப்பாற்றிய உம்மை கைகூப்பி வணங்கத்தான் முடிந்ததே தவிர-வாய்பேச வரவில்லை. அன்றுவரை என் தந்தையைத் தவிர வேறு ஆடவர் கை தீண்டப்படாத நான்-தங்கள் ஸ்பரிசத்தால் ஏதோ மின்சாரத்தால் தாக்கப்பட்டவளாகி விட்டேன். எத்தனையோ பேசநினைத்தேன். ஆனால், அதிர்ச்சியும்-வெட்கமும் என்னைப் பேசா மடந்தையாக்கி விட்டன.

மறுபடியம் சில வாரங்களுக்குப் பின், கடற்கரை ஓரத்தில்-சில காலிப் பயல்கள் இடையில், இருண்ட நேரத்தில் அகப்பட்டுக் கொண்டு அவமானப்பட நேர்ந்த ஆபத்தான வேளையில்-துணிகரமாக உம் உயிரையும் திரணமாக மதித்து அந்த முரடர்களோடு சண்டைபோட்டு என்மானத்தைக் காப்பாற்றினீர்கள். ஆனால், அவசரமாக உடனே புறப்பட்டு விட்டீர்கள். பேசக்கூட சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. உங்கள் உதவிகளை என் ஆயுள்வரை மறவேன்.

மறுநாள் நானும் என் தந்தையும் பல இடங்களில் தேடினோம். பயன் இல்லை. ஆயினும் சண்டை போட்ட போது கீழே தவறிவிட்ட உங்கள் பணப்பையிலிருந்த உங்கள் போட்டோவும், முகவரியும் கிடைத்தது கண்டு மகிழ்ந்தேன். உங்களை ஒருதடவை நேரில் சந்தித்து எனது நன்றியைதெரிவிக்க விரும்புகிறேன். என் தந்தையும் உம்மைப்பார்க்கத் துடிக்கிறார். உங்கள் அனுமதியுடன்—காலத்தையும் குறிப்பிடக் கோருகின்றேன்.

இங்ஙனம், தங்கள் நன்றிமறவாத,
க. மல்லிகா, ஆசிரியை,
பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
புரசைவாக்கம்.

குறிப்பு:- இத்துடன், உமது பணப்பை, பணம் 35-8-3 வுடன் ரிஜிஸ்தரில் அனுப்பியிருக்கிறேன். உம் அனுமதியின்றியே போட்டோவை என்னுடன் வைத்துக் கொண்டேன். மன்னிக்கவும்.

2.

சேலம், 10-8-56

திருமதி மல்லிகாவுக்கு,

அஞ்சல்கள் யாவும் கிடைத்தன. உமது நன்றிக்கு என் வணக்கம். நான்கடமையைத்தான் செய்தேன். ஆபத்தைக் கண்ணுறும் எந்த மனிதனும் அப்படித்தான் செய்திருப்பான். இது இயற்கையான மனிதப் பண்பு. அதற்காக என்னைப் பாராட்டவோ, புகழவோ, சிரமப்பட்டு இங்குவரவேண்டாம்.

இங்கே, மாமா முதலியவர்கள், உங்கள் வருகையைத்தவறுதலாக எண்ணிவிடவும் கூடும். காரணம் நம் வயது. பருவம்! அன்பு இருந்தாலே போதும்.

இங்ஙனம்,
ப. கணேசன்.

குறிப்பு:—அடுத்தவாரம் வியாபாரத்தின் பொருட்டு சென்னைக்கு வரும்பொழுது, கூடுமானால் சந்திக்க முயற்சிக்கின்றேன்.

3.

சென்னை, 12-8-56

திரு. கணேசன் அவர்கட்கு,

வணக்கம்பல. உங்கள் அஞ்சலை ஆயிரம்முறை படித்து மகிழ்ந்தேன். உத்தமப் பண்பாட்டையும், புகழுரை கருதாத உயரிய நோக்கத்தையும் எண்ணி நெஞ்சம் பூரிப்படைகிறது. உங்கள் வருகையை, தந்தையோடு வரவேற்க ஆவலாக காத்திருக்கின்றேன்.

காலம் அறிந்தால், இந்த அடிமை, என் உயிரையும் மானத்தையும் காப்பாற்றிய மாவீரரை இரயிலடியிலேயே சந்தித்து வரவேற்க ஆவலுடன் துடித்துக் கொண்டிருக்கிறேன்.

இங்ஙனம்,
மல்லிகா,

4.

சேலம், 15-8-56

திருமதி மல்லிகாவுக்கு,

அஞ்சல் கிடைத்தது. ஆனால், வருத்தமான பதில் அனுப்ப மன

[12-ம் பக்கம் பார்க்க]

# கல்வித்துறை அறிஞர்கட்கு...4

சாலை—இளந்திரையன். முன் இதழ் தொடர்ச்சி.

தேர்வுக்கு வருவோமானல், "ஆசிரியன் சொன்னவற்றை எல்லாம் நினைவு வைத்திருக்கின்ருயா? வரிசையாகச் சொல்லத் தெரியுமா? தெரிந்தால்வெற்றி; இல்லை தோல்வி! தொங்கு தூக்கில்!" என்று அறைகூவல் விடுகிறதுதேர்வு!

வினாக்களைப் பாருங்கள்:

1. பாஸ்கல்விதியைக்கூறுக.
2. குவியாடி (Convex Lens) யின் மூன்று உபயோகங்களைக் கூறு.
—இது விஞ்ஞானம்.
3. மின்டோ மார்லி சீர்திருத்தத்தின் இரண்டு முக்கிய ஷரத்துக்களை கூறுக.
4. பிட் இந்தியச் சட்டம் எந்த ஆண்டில் அமுலுக்கு வந்தது? —இது வரலாறு.
5. விபீடணனை அடைக்கலமாக ஏற்றுக்கொள்ள இராமன் காட்டிய ஏதுக்களில் மூன்றை எழுதுக.
6. கொங்குவேளிர் தரும் சோலை வருணனையை ஆசிரியர் கூறியாங்கு கூறுக. —இது தமிழ்.

இன்னும் இப்படியே ஒவ்வொரு பாடத்திலும் 'நினைவு வைத்திருக்கிருஞ மாணவன்?' என்று மட்டும் கவனிக்கப்படுகின்றது. நினைவு ஆற்றல் அறிவு வளர்ச்சியில் ஒருபடி என்பதை மறுக்க ஒண்ணுது. ஆனல், அந்த நினைவு கண்டதையும் கேட்டதையும் அதனேடு இணைத்து எண்ணிப் பரர்க்க மாணவனுக்குப் பயன்பட்டால் மட்டும்தான் அறிவு வளரமுடியும். கணக்குப் பாடம் படிக்கிறவனுக்கு புத்திக் கூர்மைஇருக்கிறது என்று பலர் சொல்லுகின்ருர்கள்; அது ஏன் என்று அவர்கள் எண்ணுவதில்லை. சட்டம் பயில்பவனின் அறிவு வளருகிறது என்று சொல்லுகின்ருர்கள்; அதன் காரணத்தை எண்ணிப் பாரார். கணக்கில், சொல்லிக்கொடுக்கும் செய்தி அல்லது முறை, பிறிதொன்றுக்கு அடிப்படையாக அமைந்திருப்பதை மாணவன் கணக்கைச் செய்துபார்க்கும்போது உணர்கிருன். கற்ற ஒன்று வேருென்றைப் பகுத்துப் பார்த்து முடிவுகாண அவனைத் தூண்டுகிறது. அதனுல் அறிவு வளருகின்றது. மற்றப்பாடங்களில் படித்தவற்றைக் கொண்டு மற்றவற்றை எண்ணிப்பார்க்கும் முறை வளர்க்கப்படவில்லை.

சட்டப் படிப்பில் ஏன் இப்படி இருக்கவேண்டும்? இந்த வழக்கில் ஏன் இப்படித் தீர்ப்புக்கூற வேண்டும்? சற்றேறக்குறைய ஒரே மாதிரி உள்ள நான்கு சட்டங்களில் இந்த வழக்கில் குறிப்பிட்ட ஒரு சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்ப்புக் கூறியது ஏன்....? என்றெல்லாம் எண்ணிப்பார்க்கும் வாய்ப்பு இருக்கிறது. அதனுல் அங்கே அறிவு வளர்க்கப்படுகிறது.

கணக்குப் படிப்பவர்களும்சட்டம் படிப்பவர்களும் அறிவாளர்களாக ஆகிவிடுகின்ருர்களா என்பது வேறு. அந்த முறைகள் பயன்படுத்தப் பட்டால் அறிவு வளருகிறது என்பதுதான் நமக்கு வேண்டியது.

எனவே, ஆசிரியர்களும் அவர்கள் மாணவர்களைப் பற்றிக் கொண்டுள்ள கருத்தை மாற்றவேண்டும். மாணவன் எதையும் எண்ணிப்பார்க்கும் இயல்புடன் தம்மிடம் வருகிருன் என்பதையும், அதை வளர்க்க வேண்டுவதே தம்முடைய கடமை என்பதையும் ஆசிரியர்கள் உணரவேண்டும். சூனியத்திலிருந்து எதையோ படைத்துவிடப் போவதாக ஆசிரியன் எண்ணுவது தப்புக்கணக்கு மாத்திரமல்ல; வேண்டாத பயனை விளைவிப்ப

[11-ம் பக்கம் பார்க்க]

டாக்டர் சோதனை விளக்கத்தின் படி ஏற்ற கண்ணுடி எம்மிடம் கிடைக்கும்.




ராதா ஆப்டிகல் கம்பெனி,
முதல் அக்ரகாரம், சேலம்–1.






(முன் இதழ் தொடர்ச்சி)

## காட்சி 3.

**இடம்:** காந்தமன் வீடு.
**காலம்:** காலை.

(சிற்பி காந்தமன் சிலை செதுக்குகிருன். சீடன் வாணன் உடனிருக்கிருன்.)

**வாணன்:-** குருவே! ஒரு சந்தேகம். இந்தச் சிலை ஆணுங்களா? பெண்ணுங்களா?

**காந்த:-** ஏன்? ஒனக்கு எப்படியடா தெரியுது?

**வாணன்:-** அப்படித்தாந் தெரியுது.

**காந்த:-** எப்படி?

**வாணன்:-** பொண்ணுமாதிரி.

**காந்த:-** அப்ப, பொண்ணேதான்!

**வாணன்:-** கோட்டை நந்தவனத்திலே வைக்கறதுக்கு, மந்திரிஜயா ஒரு போர்வீரன் சிலையல்ல கேட்டாருங்க!

**காந்த:-** அடே! வீரனே சூரனே! பெண் இல்லாமெ ஆணுக்கு ஏதடா பெருமை? எங்கேருந்து, எப்படியடா வந்தான் அவன்?

**வாணன்:-** தெரியாதுங்களே!

**காந்த:-** பின்னே; மூடுவாயை. மொதல்லே இது; அப்பறம் அது!

**வாணன்:-** அதுக்கப்பறம் எதுங்க?

**காந்த:-** ஒண்ணுமில்லாத ஒந் தலை மண்டை! வாணு!

**வாணன்:-** குருநாதா!

**காந்த:-** உளியோட பதம் மளுங்குது. ஒன் மூளைமாதிரி. பதம் வச்ச உளியொண்ணு கொண்டா, போடா! சட்டென்று வா!

**வாண:-** தோ! கொண்டாந்தேன் குருவே!

(பணிவோடு வாய்பொத்திச் செல்லுகிருன். பழையபடி சிலைசெதுக்குகிருன் காந்தமன். ஜவணம் வருகிருள் மெதுவாக. தன்சிலை கண்டு மகிழ்கிருள். குறும்பாக ஒரு சிறு குச்சியெடுத்து காந்தமன் காதில் விடுகிருள். ஈ எனக் கருதி கையால் விரட்டுகிருன். மறுகாதிலும் விடுகிருள்; தட்டுகிருன். மீண்டும் செய்கிருள். யாரென்பதைக் கண்டு கொள்கிருன் காந்தமன்.)

**காந்த:-** (அலைப்பாராததுபோல்) அட்ச் சீ! என்னடா பெரிய எழவா இருக்குது: இந்த ஈக்

களுக்கே கொஞ்சங்கூட புத்தியிருக்கிறதில்லே! கலைஞன்கிட்டே கைவரிசையைக் காட்றது தப்புன்னு தெரியறதில்லே. அரண்மனை ஈயாக இருந்திட்டா குறும்பும் கும்மாளமும் சொல்லவே வேண்டாம். அடேயப்பா! ஆங்காரம் பிடிச்சதுங்க! ஆங்காரம் பிடிச்சதுங்க!

**ஐவண:-** (**கடுப்பாக**) என்ன? நாக்கு ரொம்ப நீளுது போலேருக்குதே!

**காந்த:-** (**பார்த்து**) ஆங்! ஐவணம்! நீயா? அடடே! அட, நாந்தான்னு அப்பவே சொல்லியிருக்கப்படாது? போனாபோவுது, உட்காரு.

**ஐவண:-** அரண்மனை ஈய்க்கு ஆங்காரம்; கலைக்கூட ஈய்க்கு ஆங்காரம் மட்டுமல்ல; அந்தகம், ஆணவம், வக்கணை, வாய்த்துடுக்கு எல்லாமே நெறைஞ்சு வழியுது!

**காந்த:-** அடே! ரொம்ப கோவிச்சுக்கறியே! அரண்மனை அதிகாரம், கலையுலகத்திலே எவ்வாதும்மா, எவ்வாது!

**ஐவண:-** அப்படியா சங்கதி? இப்ப நீர் செய்யற வேலே நாலுபேருக்குத் தெரிஞ்சா என்ன ஆவுந்தெரியுமா?

**காந்த:-** ஐய்ய! என்ன செய்யறேனும்? எதைச் சொல்றே ஐவணம்?

**ஐவண:-** இந்த சிலையைத்தான்! நான் கல்யாணமாகாத கன்னிப் பொண்ணுங்கறது ஒமக்குத் தெரியுமா? தெரியாதா?

**காந்த:-** ஓ! அதைப்பற்றி கலைஞன் ஏன் கவலைப்படணும்? என் மனைசைத் திருடிய மகா சுந்தரி! எனது கலைப்படைப்பின் விடிவெள்ளி! பார்த்தேன், அதைப் படைக்கிறேன் அருங்கலைச் சிற்பமாக! இதை யாராலே கேக்கமுடியும்? எவராலே தடுக்க முடியும்?

**ஐவண:-** நல்லாருக்குது தோசை நாய்க்கு ரொம்ப ஆசேனாளாம்! என்னை நெனைச்சு, என்னைப் பார்த்து, என்னைப்போலவே சிலை செய்யறது;- கேட்டா யாராலே தடுக்க முடியுமா? ஒமக்கு எவ்வளவு தைரியம்! எவ்வளவ துணிச்சல்! இந்த அநியாயம் மகாராணிக்குத் தெரிஞ்சா ஒம்மோட மானமே போயிடும். சிற்பியாரே! இதைச் சொல்ல தோ, இப்பவே நாம் போறேன்.

**காந்த:-** (**அஞ்சி எழுந்துவந்து குழைந்து**) ஐயய! வேண்டாம் ஐவணம்! ஏம் பொழப்பைக் கெடுத்துடாதே! எனக்கு மட்டும் கல்யாணமா ஆயிட்டுது? நான் ஒன்னை நெனைக்கறதும், பாக்கறதும் தப்பா? இல்லே, இந்த அழகு வடிவத்தை சிற்பத்திலே வடித்தெடுத்து சிங்காரிச்சிப் பாக்கறதுதான் தப்பா?

**ஐவண:-** இல்லே. நான் ஒம்மகிட்டே வெளையாண்டதுதான் தப்பா?

**காந்த:-** இல்லியே! தப்பில்லியே, யார் தப்புன்னு சொன்னது?

**ஐவண:-** ஆங்காரம்னு சொன்னவங்க அதுக்குள்ளே மறந்துட்டாங்களாம்! காந்தமரே! சிலைரொம்பஅழகு! அது தப்பில்லேன்னா (**சிலையைக்காட்டி**) இதுவும் தப்பில்லேதான்!

**காந்த:-** (**அவன் கைப்பற்றி**) அப்படியானா, (**முத்தம் கொடுத்து**) இது?

தப்பு! தப்பு! தப்பு!

(என்று கூறியவண்ணம், கையில் உளியோடு வருகிறான் வாணன். ஐவணம் அஞ்சி காந்தமணி, பின்னால் ஒளிகிறாள்.)

**காந்த:-** (**பதறி**) ஆங்! எது? எதடா தப்பு? எதையடா சொல்றே?

**வாணன்:-** (**உளியைக் காட்டி**) இதுதாங்க! நீங்க உளி வேணுன்னீங்க. வெட்டுளியா, பட்டை உளியா. குத்துளியான்னு கேக்கலே! கண்மூடித்தனமா குத்துளியைக் கொண்டாந்திட்டேன். இது தப்புதானுங்களே! (ஐவணத்தைப் பார்த்துவிடுகிறான். அஞ்சுகிறான்) ஆங்! ஐயயோ! அரமனை! அரமனை! குருநாதா! இப்ப நான் வந்ததே தப்பு, தப்பு, தப்பு!

(வந்தவழியே திரும்பி ஓடுகிறான் வாணன். காந்தமனும் ஐவணமும் சிரித்தவண்ணம் கைகோர்த்துக் கொண்டு மறுபக்கம் போகின்றனர்.)

## காட்சி 4.

**இடம்:** விந்திய அரண்மனை.

**காலம்:** முற்பகல்.

(இராவணன், காமவல்லி, தினகரன் ஆகியோர் இருக்கின்றனர்.)



**இராவ:-** (**அன்போடு**) காமவல்லி! அன்பின் காரணமாக விந்தியப் பெருநாட்டை ஆளும் கடமையை உன்னிடம் ஒப்படைத்தேன். மற்றவர்கள் அஞ்சியதுபோல தவறேதும் நிகழவில்லை. எதிர்பார்த்ததைக் காட்டிலும் சிறப்பாகப் பரிபாலித்து வருகிறாய்! வாழ்க பெண்ணுரிமை! வளர்க பெண்ணின் பெருமை!

**காமவ:-** அண்ணன்மார் தினகரர். தூயவர் இருவரின் துணையும் இருக்கும்பொழுது, ஆட்சி ஏன் செவ்வையாக நடைபெறாது அண்ணா? ஆட்சிமுறை மட்டுமல்ல; நமது அறவழி காப்பதிலே தினகர அண்ணாவுக்கு தனித்திறன் இருக்கிறது.

**இரா:-** தினகரா! தங்கை சொல்லுவது உண்மைதானே?

**தினக:-** அண்ணா! தாங்களறியாத தனித்திறனா என்னிடம் இருக்கப்போகிறது? நமது கொள்கை வளர்ப்பதிலே எனக்குக் குறையாத ஆர்வமுண்டு. வாய்ப்பிருக்கும்போது செய்கிறேன்; அவ்வளவுதான்.

**இராவ:-** தினகரா! காமவல்லி! உங்கள் இருவருக்குமே கூறுகின்றேன்: நமது கொல்லா நெறிக்கு எதிராக, யாகத்தின் பெயரால் ஆடுமாடுகளைக் கொன்று தின்னும் பொல்லாத நெறியொன்று நாட்டிலே புகுந்து விட்டது. அதனை இங்கு வளரவிடுவது, முல்லைக்காட்டிலே கள்ளிச்செடியை முளைக்கவிடுவது போலாகும்!

**தினக:-** நமது தடுப்பு நடவடிக்கைகள், தக்க பயன் கொடுத்து வருகிறது அண்ணா!

**காமவ:-** எங்கிருந்தோ கிளம்பிய ஆரிய விஷக் காய்ச்சல், எப்படி எப்படியோ உலகம் முழுதும் பரவத் தொடங்கிவிட்டதே! இதைப் போக்க மருந்தே கிடையாதா அண்ணா?

**இராவ:-** ஏனில்லை? அந்தக் கொடுநோய் போக்கும் அருமருந்து, பகுத்தறிவு பூர்வமான நமது அருள்நெறிதான்! அம் மாமருந்தினை எங்கும் பரவச் செய்திடவேண்டும்.

(சேனாபதி தூயவன் வருகிறார், இரு வீரர்களோடு.)

**தூயவன்:-** அண்ணா! நாம் என்ன செய்தும் அடங்கவில்லை, அந்த பிராமணக்கூட்டம்! நமது தண்டகவனத்தில் ஆரியமுனிவர் சிலர் கோமேதயாகம் செய்யமுயலுகிறார்களாம். நாட்டதிகாரிகளையும், நம்மவர்களையும் சேர்த்துக்கொண்டு, பாமரமக்களை மிரட்டிப்பொருள் சேர்க்கிறார்களாம். தடுத்தால் எதிர்க்கவும் தயாரிக்கிறார்களாம் அடிமைச் சேனையொன்றை! தூதர்கள் செய்தி கொண்டு வந்திருக்கிறார்கள்.

**இராவ:-** (**எழுந்து**) ஆங்! பார்த்தீர்களா அந்தப் பாபிகளின் காரியங்களை? வாளாவிருக்காது வம்புக்கார வேதியர் கூட்டம்! கடவுளென்றும், தருமமென்றும்; யாகமென்றும், எக்கியமென்றும்மயக்கி, மக்களின் மானவாழ்வையே சிதைக்கின்றார்கள்! கெஞ்சினால் மிஞ்சுவர்; மிஞ்சினால் கெஞ்சுவர் கருணையெனும் பொருளற்ற கயவர்கள்! காமவல்லி! இந்தக் கொடுமைக்கு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

**தூயவன்:-** ஏன் அண்ணா! குணக்கேடர்களைப் பிடித்துக் கழுவேற்றிவிட்டால் என்ன?

**தினக:-** கொலைபுரியும் கொடியோரை, கடுமையாகத் தண்டிப்பது குற்றமல்லவென்றே நானும் கருதுகின்றேன்.

**இராவ:-** கடமைதான்; மறுக்கவில்லை தம்பி! என்றாலும், அருளறம் காக்கவேண்டுமே நாம்! ஆத்திரம்நமதுஅறத்தின்புனிதத்தை மாய்த்துவிடக்கூடாது. நீங்கள் செய்யவேண்டுவதெல்லாம், கொலை வேள்வியைத் தடுத்து நிறுத்தவேண்டும். நஞ்சூட்டப்பட்ட நாட்டதிகாரிகளை நல்லவர்களாக்க வேண்டும்; வருந்தவேண்டாம் கொள்கையில் மாறுபட்டோரை; திருத்தவேண்டும்!

**காமவ:-** திருந்தவில்லையென்றால், என்ன அண்ணா செய்வது?

**இராவ:-** ஆனவரை பாருங்கள். பின்னர் அளியுங்கள் ஏற்ற தண்டனை! யார் மறுப்பார் அதனை? எதற்கு வந்திடும் இழிவு? கடிக்க வரும் நச்சுப்பாம்பை அடித்தெறிவதிலே அன்பு மறைந்துவிடாது! அருள் சிதைந்துவிடாது!

**தினக:-** அவ்வாறே செய்கிறோம் அண்ணா, தம்பி தூயவா! அண்ணாவின் கட்டளைப்படி அமைதியான வழியில் அதனை கவனிப்போம்.

**தூயவ:-** நல்லது.

**காமவ:-** அண்ணா! எனது விருப்பமொன்று. காலஞ்சென்ற எனது கணவரின்

நினைவுச் சின்னமாக கலைக்கூடமொன்று அமைக்கவேண்டும். அதிலே நான் கற்றதும், கல்லாததுமான அருங்கலைகளை வளர்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

**இராவ:-** தங்கையே! இது, வித்தியாதர மாந்தர்க்கு எழவேண்டிய விருப்பமே. எண்ணம் நிறைவேறட்டும். சோதரி! என் மைத்துனர் காலகேயரின் மரணத்தால் ஏற்பட்ட புண், இந்தக் கலைக்கூட வளப்பத்தால் ஆறட்டும். கலை வளர்ச்சிப்பணியிலே உனது மன மகிழ்ச்சிபெருகட்டும்! நமது பரம்பரைப்பண்பு வளரட்டும்! அருளறமும் அருங்கலையும் இணைந்து செழிக்கட்டும் விந்திய நாட்டில்!

**காமவ:-** (**கண்களைத் துடைத்துக்கொண்டு**) தங்கள் கருத்துப்படியே நடந்துகொள்வேன் அண்ணா. நீங்கள் மட்டும் இங்கு அடிக்கடி வந்து செல்ல வேண்டும்.

**இராவ:-** முயலுகிறேன் காமவல்லி! நான் இலங்கையிலே இருந்தாலும், எனது எண்ணமெல்லாம் இங்குதான் இருக்கும். உனது நலன்குறித்து அடிக்கடி அறிவிக்க வேண்டும். ஊம்....?

**காமவ:-** கட்டாயம் தெரிவிப்பேன்!

**இராவ:-** தினகரா!

**தினக:-** அண்ணா!

**இராவ:-** பயணத்திற்குரிய ஏற்பாடுகள் முடிந்தனவா?

**தினக:-** எல்லாம் சித்தமாய் விட்டன.

(ஒரு விளையாட்டு வண்டியை உருட்டிக் கொண்டு சம்புகுமாரன் ஓடிவருகிருன்.)

**சம்பு:-** மாமா! மாமா! நானுந்தான் இலங்காபுரிக்கு வருவேன். தோ பாருங்க, வண்டி தயார் பண்ணிட்டேன்.

**இராவ:-** நன்று, மருமகனே! நானும் உன் வண்டியிலே ஏறிக்கொள்ளட்டுமா?

**சம்பு:-** அடேயப்பா! எப்படிமாமா முடியும்? நீங்க மகாமேரு; நான் மண்மேடு. வித்தியாசமில்லே? நானும் என் வண்டியும் வேணுமானு ஒங்க ரதத்திலே ஏறிக்கலாம்!

**இராவ:-** காமவல்லி! நன்ருகப் பேசுகிருனே என் மருமகன்! கெட்டிக்காரன். என்னோடு சிலநாள் இலங்கையில் இருக்க வேண்டும்! அழைத்துச் செல்லட்டுமா?

**காமவ:-** மறுக்கமாட்டேன் அண்ணா! நாங்கள் இருவருமே ஒருமுறை வருகிறோமே.

**இராவ:-** நன்று. சம்புகுமாரா! அப்போது இந்த வண்டியை ஞாபகமாகக் கொண்டுவர வேண்டும். ஊம்....?

**சம்பு:-** ஓ! இன்னும் என்னென்ன விளையாட்டு சாமான் கொண்டுவர்றேன் பாருங்க!

**காமவ:-** அண்ணா! அண்ணியாருக்கு என் வணக்கம் கூறுங்கள்.

**சம்பு:-** சக்கரவர்த்தி மாமா! வக்ரபுத்தி விபீஷண மாமாவுக்கு என் வணக்கம் சொல்லுங்க!

**இராவ:-** வெல்லமடா மருமகனே உன் பேச்சு! அவசியம் சொல்லுகிறேன்!

(குனிந்து அன்போடு சிறுவனின் கன்னத்தை தடவிக்கொடுக்கிருர் வேந்தர்.)

**(வளரும்)**

## இராவணன் ஆரியனு?

**கொழும்பு மே 29.**

இதிகாசகால இலங்கேசுவரனுன ராவணனும் ராமனைப் போன்றே ஆரிய மரபைச் சேர்ந்தவன்தான் என்று இலங்கை தேசீய மியூஸியம் டைரக்டரான, திரு. டெரினியகாலா, தன் சொந்தக் கையெழுத்துடன் ராயல் ஆசிய கழகத்தின் சமீப சஞ்சிகையில் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியுள்ளார். இதை ஆட்சேபித்து திரு. பி. தம்பிமுத்து என்ற இலங்கை நூலாசிரியர், "சிலோன் அப்ஸர்வர்" பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில் ராமனும், ராவணனும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர் என சாதித்திருக்கிருர். —**"சுதேசமித்திரன்"**

"இராவணன் எல்லா வகையான அரச அங்கங்களும் நிரம்பப் பெற்றவன்; பேரழகுடைய திருமேனியன்; மிகவும் நல்லவன்; எனினும் பிராம்மணர்கள் வேதமந்திரங்களால் யாகம் புரிந்து சோமரசத்தைக் குடிக்கும் சமயத்தில் அவற்றை அழிப்பவன்; தேவதைகளுக்கு அவர்கள் கொடுக்கும் அவிர்ப்பாகத்தை நாசம்பண்ணி அவர்களைக் கொல்லுபவன்."

—**வால்மீகி. (ஆரண்யகாண்டம்)**



[6-ம் பக்கத் தொடர்ச்சி]

தற்கு அடிப்படையுமாகும். மாணவர்க்கு இயல்பாகவே அறிவு இருக்கின்றது. ஏனெனில் அவர்களும் மனிதரின் (தங்களுக்கு அறிவு இருப்பதாக எண்ணிக்கொள்ளும் மனிதரின்) குழந்தைகள். அந்த அறிவை மட்டந்தட்டுவது அல்ல—நெறிப்படுத்தி வளர்ச்சிக்கு ஒத்துழைப்பதே ஆசிரியனின் பொறுப்பு. மாணவர்கள் விலங்கு நிலையிலிருப்பதாக எண்ணிக் கொண்டு, அவர்களின் நினைவாற்றலை வளர்ப்பதே தங்கள் கடமை என்று கல்வித்துறை அறிஞர்கள் எண்ணுவது மிகப் பெருந்தவருகும்.

நினைவாற்றல் வளரவேண்டும்தான். ஆனுல், அதுமட்டுமே வளர்வது அறிவாற்றலைப் புறக்கணிப்பதாகும். அதுமட்டுமா? சொன்னதைக் கேட்கும் மூடமனிதரையே அதுநாட்டில் மிகுவிக்கும். சமயத்துறையில் ஒருவேளை, 'எனக்கு ஒன்றும் தெரியாது' என்று மனிதன் எண்ணுவது 'வளர்ச்சி'க்கு அடிப்படையாக இருக்கலாம். ஆனுல், அறிவுத் துறையில் அப்படி எண்ணுவது வளர்ச்சிக்கு அடிகோலாது. மாருக மூடமதிக்கே வழிவகுக்கும். **இந்த வகையில் வளர்கின்ற மனிதஇனம் ஆளும் இனமாக வளராமல் ஆளப்படும் இனமாகவே போய்விடும்!**

இந்த உண்மைகளை மனத்தில் கொண்டு, இந்த நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும், கல்வித்துறை அறிஞர்கள். மற்றவர்கள் மூடராக இருந்தால்தான் தாம் அறிஞரென்று இருக்கமுடியும் என்னும் கொடிய எண்ணத்தை அறிஞர்கள் கைவிட வேண்டும்; கட்டாயம் கைவிட வேண்டும்!

× — ×


ஆந்திரரும், கேரளரும், கன்னடரும் திராவிடக் கூட்டாட்சியின்
காரணத்தை அறிய—திராவிட முன்னேற்றக்
கழகத்தின் உயிரோட்டம் உலகு அறிய

**HOMELAND**

(ஆங்கில வார இதழ்)

ஆசிரியர்: அண்ணு

**9-6-57 முதல், ஞாயிறு தோறும்**
**வார ஏடாக வெளிவருகின்றது.**

8 பக்கங்கள் கிளேஸ் காகிதத்தில்
டபுள் கிரவுன் 1×4 அளவில்

**தனி இதழ் 2 அணு — ஆண்டு சந்தா ரூ 7**

விபரங்கட்கு: நிர்வாகி, "ஹோம்லண்ட்"
95, திருக்கச்சிநம்பித் தெரு, காஞ்சீபுரம்.


## பொன் மொழிகள்

காரணத்தை அறிய நினைக்காதவன் பித்தன்; அறியமுடியாதவன் முட்டாள்! அறிய அஞ்சுபவன் அடிமை.

—**பிரில்டு சாவரின்.**

கற்ற மனிதன் ஒரு குளம்; அறிவுடையவன் ஒரு ஊற்று.

—**ஞானி.**

அறியாது பிழைசெய்தாரைப் பொறுத்துக் கொள்வதே வீரமாகும்.

—**திருவள்ளுவர்.**

கேளாமற்கெடும் கடன்; பாராமற்கெடும் பயிர்; போற்ருமற் கெடும் பொருள்; நினையாமற் கெடும் கல்வி; பழகாமற் கெடும் சித்திரம்.

—**அறிவன்.**

மின்னனைய பெண்வடிவில் மயங்காதவனே கர்மவீரன்.

—**பத்ருகரி.**

நோயால் சாகிறவர்களைவிட பயத்தால் சாகின்றவர்களின்எண்ணிக்கையே அதிகம். பயத்தை விட்டொழியுங்கள்.

—**காந்தியார்.**

நண்பன் என்ருல், நண்பனின் குறைகளைப் பொறுப்பவனுக இருக்க வேண்டும்.

—**ஷேக்ஸ்பியர்.**

கோழைகளே பாவம் செய்வர்; தைரியமுடையார் ஒருக்காலும் செய்யார்.

—**விவேகானந்தர்.**

கடவுள் தன்னை நிரூபித்துக் கொள்ள ஒருநாளும் அற்புதங்களைக் காட்டுவதில்லை. அவரது சாதாரண படைப்புகளே போதும்.

—**பேக்கன்.**

[6-ம் பக்கம் தொடர்ச்சி]

மில்லாது தாமதம் செய்தேன். மன்னிக்கவும். சென்னைக்கு என் மாமா புறப்பட்டு விட்டதால் என் பிரயாணம் நின்றுவிட்டது.

இங்ஙனம்,

**கணேசன்.**

குறிப்பு:— நான் தாய்தந்தையற்று, மாமாவினால் வளர்க்கப்பட்டு, அவர்சொற்படி நடக்கக்கடமைப்பட்ட ஒரு கடை சிப்பந்தி.

5.

சென்னை. 7-9-56

**நண்பர் கணேசன் அவர்கட்கு,**

வணக்கம். நீங்கள் யாராயிருந்தாலும் பாதகமில்லை. உங்கள் வருகையோ தடைபட்டது. என் வாழ்க்கையோ இருண்டு வருகிறது. நீங்கள் கடமை தவறுதவர். நானோகாதலால்வாடும்அனாதை, என் வாழ்வின் முடிவுதான் என்ன?

கண்டதும் காதல் எனக் கதையில் படித்தேன். ஆனால், நீர் தொட்டதும் காதல்கொண்டேன். உண்மையில்—போதாக்குறைக்கு கடற்கரை விபத்தில் என்னை மீண்டும் காப்பாற்றி, என் உள்ளத்தைப் பூரணமாகப் பெற்றுவிட்டீர். நான் வெறும் உடல்தான் — உயிர் நீங்கள். இதுவரை, தாயும் தந்தையுமாக என்னை வளர்த்த அப்பா நேற்று எதிர்பாராது இறந்துபோனார். வேறு துணை எனக்கு இல்லை.

மனம்விட்டு, உங்களை யாசிக்கின்றேன், காதல் பிச்சை, உங்களைத்தவிற இனியாரும் எனக்குக் கிடையாது. என்னை மனைவியாக ஏற்றுக்கொள்ளுங்கள்— இல்லை. மதம், சாதி, காரணமாக மனைவியாக ஏற்க நான் தகுதியற்றுப் போனால், உங்கள் வீட்டுப் பணிப் பெண்ணாகவாவது ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களிடம் வேலைசெய்தாவது என் நன்றியை செலுத்தி விடுவேன். இந்த முல்லைக்கொடி படர நீர்தான் தகுந்த உறுதியான பச்சைமரம் என முடிவு செய்துவிட்டேன்.

இங்ஙனம்,

**மல்லிகா.**

குறிப்பு:—என் தகப்பனார் இறப்பதற்குமுன்பே அவருடைய சொத்துக்களை, ஒருபாகம் எனக்கும்—மற்றொருபாகம் உமக்கும் என்று உயில் எழுதிவைத்துவிட்டார். என்னிடமும் அவர் உம் விருப்பம் எதுவோ அதன்படி நடந்துகொள் என்றும் சொல்லி வந்தார்.

இத்துடன் ஷ உயிலையும் அனுப்பியிருக்கிறேன்.

6.

சேலம். 15-9-56

**தோழியர் மல்லிகாவுக்கு,**

உனது காதல் கனிந்த கடிதம் கண்டேன்; கண்ணீர் உதிர்த்தேன். உனக்கு உந்தந்தையின் மறைவு மனதை வருத்தும் இந்தவேளையில், துக்ககரமான, ஏமாற்றமடையும் ஒருசெய்தியை அனுப்ப நேர்ந்தமைக்காக மனம் வருந்துகிறேன்.

உன் தந்தையின் கதிபோல் தான் என் மாமாவும் சில நாட்களுக்குமுன் திடீரென்று மாரடைத்து மாண்டுபோனார். மாமாவின் பெண் கமலாவை மணந்து, கடையை கவனிக்கவேண்டும் என்பது அத்தையின் ஆணை. அது கடமையும்கூட. அனாதையான என்னை வளர்த்து ஆளாக்கிவிட்ட குடும்பத்திற்கு இதுகூட செய்யாவிட்டால் செய்நன்றி கொன்ற துரோகியாவேன். இக் குடும்பத்தைக் காப்பாற்றுவது என் கடமை.

உன் தூய்மையான காதலை நுகர ஆசைப்படுகிறேன். ஆனால், நிலைமை குறுக்கிடுகிறது. நீயே சற்று சிந்தித்துப்பார், என் நிலைமையை; இப்பொழுது எனக்கு வேண்டியது காதலா? கடமையா? நீயே பதில் சொல்.

தயதுசெய்து என்னை மன்னித்துவிடு. என்மீதுகொண்ட காதலை மறந்துவிடு. என்கடமையை நான் காப்பாற்ற எனக்கு உதவிசெய். என் உறுதியைக்கலைக்காதே. அதுவே நீ செய்யும் கைம்மாறு. வணக்கம். இனி எனக்கு கடிதம்கூட எழுதாதே!

இங்ஙனம்,

**ப. கணேசன்.**

குறிப்பு:— உன் தந்தை எனக்காக எழுதிவைத்த உயிரை ரத்து செய்து அதை நீயே அனுபவித்துக் கொள்ள பூரண சுதந்திரம் கொடுக்கிறேன் என்ற அதிகாரப் பத்திரம் ஒன்று இத்துடன் அனுப்பியிருக்கிறேன்.

7.

சென்னை. 1-10-56

**திரு. கணேசன் அவர்கட்கு,**

என் நன்றிகனிந்த இறுதி வணக்கம்.

அன்பரே! தங்கள் அஞ்சல் என் கொந்தளிக்கும் மனஅலையை அடக்கிவிட்டது. அமைதி காண்கிறேன் இன்று. உங்கள் கடமையுணர்ச்சிகண்டு பூரிப்படைகிறேன். என் சுயநல ஆசைக்காக வெட்கப்படுகிறேன். "காதலன் எண்ணப்படி நடப்பது தான்உண்மைக்காதலியின் லட்சணம்" என் தர்தை உத்தரவும் உம் விருப்பப்படி நடக்கவேண்டியது தானே.

இனி உமக்குக் கடிதமும் எழுத மாட்டேன். இதுவே என் கடைசி கடிதம். நான் கன்னியா குமரி முனைக்கு நாளை இரவு மெயிலில் புறப்படுகிறேன். என் பாக சொத்துக்களை விற்றுப் பணமாக்கிக் கொண்டேன். ஆனால், உம் பாகத்தை நான் உபயோகப்படுத்த முடியாது. கண்டிப்பாக. காரணம் அது என் அப்பாவின் ஆணை. அதை நீங்கள் உங்கள் விருப்பப்படி செய்துகொள்ளுங்கள். வணக்கம்.

இங்ஙனம்,
தங்கள் அன்புமறவாத,
**மல்லிகா.**

குறிப்பு:— காதல் கிடைக்காது போயினும், அன்பைப் பெற்றுவிட்டேன். இறுதியாக உங்களை ஒரு முறை பார்த்துவிட்டு வணங்கிச் செல்ல ஆவல்படுகிறேன். தயவு செய்து நான் வரும் மெயில் வண்டியை, சேலம் சந்திப்பில் வந்து பார்த்துஎனக்குக் கடைசிமுறையாகக் காட்சி கொடுக்க பிரார்த்திக்கின்றேன். கடைசி வேண்டுகோள்.

8.

சேலம். 3-10-56

**காதலி, மல்லிகாவுக்கு,**

அஞ்சல் கண்டேன். அலறித்துடித்தேன். வாழ்வில் தினமும் மாற்றம் காண்கிறேன் மல்லிகா! நேற்று, என் அத்தையும், கமலாவும், கோயிலுக்குப்போய் திரும்பி வந்த சமயம், எதிர்பாராது மோட்டார் விபத்தில் அகப்பட்டு மாண்டுவிட்டனர். இனி நீயே துணை, சாதி, மதம், சம்பிரதாயம் பற்றிக் கவலையில்லை. உனக்கு வாழ்வில் வெறுப்பைக்கொடுக்கும் நிலைமை ஏற்பட்டதற்காக மன்னிப்புக் கோருகிறேன். இன்று இரவு மெயிலில் சென்னைக்குப் புறப்படுகிறேன்; நடந்ததை மறந்துவிடு, என்னை ஏற்றுக்கொள். நம் திருமணத்திற்கு நாளையே ஏற்பாடு செய்வோம்.

இங்ஙனம்,
உன் அன்புக்காதலன்,
**ப. கணேசன்.**

●●

**வெண்சங்கு சீயக்காய் தூள்** எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

**செல்வம் ராணி**
&
**சேகர் ஊதுபத்திகளை**

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:
**வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,**
3037-38, டபீர்குளம் ரோடு, தஞ்சாவூர்.

**வினை செய்யுங்கால் அதனால் அழிவதையும், பின் ஆவதையும், ஆகின்ற பின்புவரும் பயனையும் சீர்தூக்கி, தக்கதாயின் செய்தல் வேண்டும்.**

—திருவள்ளுவர்.



## ஆசிரியர் ப. கண்ணன்

**நிகழ்ச்சிகள்.**

ஜுன் 16. **ஆடையூர்.** (சேலம் மாவட்டம்) தி.மு.க துவக்கவிழா.

„ 19. **ஒலகடம்.** (கோவை மாவட்டம்) தி.மு.க துவக்கவிழா.

„ 20. **தொளசம்பட்டி.** (சேலம் மாவட்டம்) தி. மு. க. பொதுக் கூட்டம்.

**சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்குரிய ஒரே வழி; துன்பமின்றி சந்தோஷமாய் உயிர் துறக்க எப்பொழுதும் தயாராய் இருப்பதே என்று கூறியது முற்றிலும் சரியே. —கதே.**

## அறிவிப்பு.

தோட்டத்தொழிலாளத் தோழர்களின் வேண்டுகோளுக்கிணங்க யான் இ. தி. மு. க. பொதுக்செயலாளர் அவர்கள் அனுமதியுடன் மலைநாட்டுப் பகுதியில் சுமார் மூன்றுமாத காலம் சுற்றுப்பிரயாணம் செய்து பல கிளைக் கழகங்கள் தோற்றுவிக்க ஆவன செய்யவும், தொழிற் சங்கம் ஏற்படுத்துவதற்கான சூழ்நிலையைக் கண்டறிவதற்கும் 10—6—57-ல் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுச் செல்வதால் இலங்கை மலைநாட்டுப் பகுதியிலுள்ள கழகத் தோழர்களும், நண்பர்களும், உறவினர்களும் கீழ்க்காணும் முகவரிக்கு மறு அறிவித்தல்வரை தொடர்பு வைத்துக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

அன்பன், **இரா. திருமறவன்,**
இ. தி. மு. க. நாவலப்பட்டிக் கிளை,
23. தொளஸ்யாகை ரோடு, நாவலப்பட்டி, **இலங்கை.**

## கேள்விக்கணை

இம்முறை பரிசு பெற்றவர்:
● சி. சு. தேவராசன்,
குடியானத் தெரு,
சிறுதையூர்.
திருச்சி மாவட்டம்.

**பெ. கோபால், தாரமங்கலம்.**

கே: புலி தன் புள்ளிகளை மாற்றிக் கொண்டாலும், பார்ப்பனர் புத்தியை மாற்றிக் கொள்ள மாட்டார்கள் என்று எழுதியும், பேசியும் வந்த அண்ணா, அதே பார்ப்பனருக்கு நேசக்கரம் நீட்டுவதேன்?

*ப: திருந்தாத பார்ப்பான் மிருகம்; திருந்தி விட்டவன் மனிதன்; திருந்தாதவனைப் பகைவனாகவும், திருந்தியவனை நண்பனாகவும் ஏற்பதே இலட்சியவாதிகளின் பண்பு.*

**சி. கந்தசாமி, சேலம்-1.**

கே: அறிஞர் அண்ணாவை "முதலியார்" என்று தி. க. க்கள் எழுதியும், பேசியும் வருவதன் காரணம் என்ன? இதுவரை அண்ணா இதனை ஏன் மறுக்கவில்லை?

*ப: ஓட்டர் சாபிதாவில் அண்ணாவை "முதலியார்" என்று பிரசுரித்த அரசாங்கம்; அபேட்சா பத்திரத்தில் அவ்வாறே எழுதவேண்டும் என்று சட்டமூலம் வற்புறுத்தியது. வழியின்றி எழுதிக் கொடுத்தார். அரசாங்கத்தின் இத்தவறை அண்ணாமேலேற்றி, பச்சைத் தமிழரைக் காப்பாற்றுகின்றனர் அவரது பாதந்தாங்கிகள்! இது அண்ணாவே மறுக்கவேண்டிய அவ்வளவு பெரிய சங்கதியல்லவே!*

**து. இராசப்பா, குளைக்காயூர்.**

கே: ஆக்கும் அறிவு பெரிதா? ஆராயும் திறன் பெரிதா?

*ப: அறிவும் ஆராய்ச்சியும் மலரும் மணமும் போல்வன. இரண்டும் இணைந்து பரிமளிப்பதே பெரிது; பயனுள்ளது.*

**ப. கோவிந்தராசன், பொள்ளாச்சி.**

கே: அறிஞர் அண்ணா, ராஜாஜியை சந்தித்ததன் விளைவாக "திராவிடத்தைக் காப்போம்" என்று ராஜாஜி எழுதினாரே, அண்ணா ஜவகர்லாலைச் சந்தித்திருந்தால் என்ன நடந்திருக்கும்?

*ப: திராவிடநாட்டின் பிரச்சினைகளை ஜவகர்லால் தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பார். நேர்மைச் சிந்தையராயின் 'திராவிடத்தைக் கொடுப்போம்' என்று சொல்லியிருப்பார்!*

**● சி. சு. தேவராசன், சிறுதையூர்.**

கே: இப்போது காங்கிரஸ் என்றால் என்ன பொருள்?

*ப: "அகில இந்திய ஊழல்" என்கிறோம் நாம். "இரத்தம் செத்தது" என்கிறார் ஜவகர்லால் நேரு!*

* * *

கே: சாதி ஒழிப்புப் போராட்டத்தில் நீங்கள் கலந்து கொள்ளாதது ஏன்?

*ப: "போராட்டம் சாதி ஒழிப்பதற்காகவேதான்" என்று கூறிடும் துணிவு நடத்துவோர்க்கே இல்லையே!*

## இன்புளூயன்ஸா குணமாக.

புதிய விஷக் காய்ச்சலுக்கு சுலபமான மருந்து. அவரவர்கள் தயார்செய்துகொள்ளலாம். **பழநி, R. M. K. சித்த வைத்தியசாலை, பிரதமர் திரு. ஆர். எம் கே. சிவசுப்ரமண்யம்** அவர்கள், தேரையர் அனுபவமான எளிய மருந்து ஒன்றினை அறிவிக்கின்றார்:

**மூன்றே நாளில் நல்ல குணம் உண்டாகும்.**

2-வயது வரை 5 மிளகு. 2 முதல் 5 வயதுவரை 10 மிளகு. 5 முதல் 10 வயதுவரை 20 மிளகு. 10 முதல் 20 வயதுவரை 40 மிளகு. 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 60 மிளகு.

மேற்கண்டபடி வயதுக்குத் தக்கபடி நல்ல மிளகு (நாம் சாப்பாட்டுக்கு சேர்க்கும் மிளகு) எடுத்து வெந்நீர் விட்டு நன்றாய் அரைத்து 2 அவுன்ஸ் வெந்நீரில் கலக்கி சாப்பிடவும். இப்படி 3-நாள் 6-வேளை காலை மாலை சாப்பிடவும். பூரண சுகம் பெறலாம். உறுதி. சகலரும் இவ்விஷ சுரத்தில் பீடிக்காமலிருக்க முன் கூட்டியே 3-நாள் சாப்பிட்டுவிடுவதும் நல்லது.

முதலில் மலச்சிக்கல் ஏற்பட்டு, உடல்வலி ஏற்பட்டு பின் காய்ச்சல் ஏற்படுகிறது. ஆரம்பத்திலேயே மேலே கண்ட முறையை அனுசரித்தால் மலம் கழியும். சுகம் கிடைக்கும்.

**ஆகாரம்.**

அரிசிக் கஞ்சி, பார்லி கஞ்சி சாப்பிடவும். மாமிசம, புளி 6-நாளைக்கு, ஆகாது.

[2-ம் பக்கம் தொடர்ச்சி]

பொருள்: ஓ! வலது கையே, இறந்துபோன பிராமணச்சிறுவன் மறுபடியும் உயிர் பெற்றெழுவதற்கு இந்த சூத்திரத் துறவியைக் கொல்லுவதே மருந்தாகையால், கூசாமல் இவனை வெட்டிவிடு. நீ இராமனது அங்கங்களில் ஒன்றன்றோ?

இவ்வாறு அந்தத் துறவியைக் கொன்றவுடனேயே சிறுவன் உயிர்த்தெழுந்து விட்டதாயும் இராமாயணத்தில் எழுதியிருப்பதை யாவரும் வெளிப்படையாயறிந்ததே. என்னே இராமனின் கருணையிருந்தவாறு! இவ்வரும் பெரும் காரியஞ் செய்த அவ்விராமன் சாட்சாத் விஷ்ணுவின் அவதாரமாம்! இக்காலத்திலும் இராமனைப் போன்ற அரசர் இருந்தால் சூத்திரர்களின் கதி என்ன?

இராமாயணக் கதை எழுதிய தன் முக்கிய கருத்து, இக்கதைக்குள் அடங்கியிருக்கிறது. தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, விஷ்ணு இராமனாக அவதரித்து, இராவணன் முதலிய இராட்சதர்களை ஒடுக்கி, உலகத்திற்கு எண்ணிறந்த நன்மைகளைச் செய்தானென்றும்; குடிகளை மகிழ்விக்கும் பொருட்டுப் பதிவிரதையான தன் மனைவியையும் காட்டிற்கு ஓட்டிவிட்டார் என்றும்; மற்றும் பலவிதமாகப் புகழ்ந்து கூறி நம்மவர்களுக்கு அவரிடம் ஒரு விதமான அன்பை உண்டு பண்ணிய பிறகு, மேற் சொன்னவாறு சூத்திரத் துறவியைக் கொன்ற கதையையும் சொல்லி விடுகிறார்கள். இதைப்பற்றி யாரேனுங் கேள்விகள் கேட்டால், "அது திரேதாயுகம், அக்காலத்தில் சூத்திரன் தவம் பண்ணக் கூடாது. இது கலியுகம், இக்காலத்தில் பிராமணர்கள் கெட்டுப் போனார்கள். சூத்திரர்கள் தவம் பண்ணுகிறார்கள். இது யுகதருமம்" என்று சொல்லி ஏமாற்றிவிடுகிறார்கள். உண்மையாகச் சொல்லுமிடத்து, இவ்வஞ்சகர்கள் சொல்லும் கலியுகமாவது, கிருதயுகமாவது கிடையாது. இந்த உண்மையை

"ஸதாம் ஸத்யுக; ஸாக்ஷாத் ஸர்வதை வாஸதாம் கலி"

பொருள்: நல்லோர்க்கு எக்காலமும் கிருதயுகம், தீயோர்க்கு எக்காலமும் கலியுகமே.

இந்த இராமாயணக் கதையானது, சூத்திரர்கள் ஒரு குற்றமுமில்லாமல், மறுமையிலேனும் நற்கதி யடையலாமென்று காட்டில் சென்று தவம் பண்ணிக் கொண்டிருந்தாலும், அத்தவத்திற்கு ஆதாரமாகிய உடலை ஒழித்துவிட வேண்டும் என்று, ஏனைய அரசர்களுக்கும் போதிப்பதாயிருக்கின்றதன்றோ? இதனால், சூத்திரர்கள் என்று ஆரியர்களால் அழைக்கப்படுகிற மற்ற சுயமான சாதியார்களை, என்றென்றைக்கும் எவ்வழியிலும் முன்னேற வொட்டாமல் தடுக்கவேண்டுமென்ற தீய எண்ணம் பார்ப்பன மக்களுக்கு இருந்து வருகிறதை வெள்ளிடைமலைபோலக் காணக் கிடக்கிறதன்றோ? உண்ட வீட்டுக்கே இரண்டகம்புரியும் வஞ்சக ஜனங்களின் சுயநலத்தை மட்டுங் கோரி, அவர்கள் சொல்லுகிற வழியே ஒத்துக்கொண்டு நடக்கிற அரசனே க்ஷத்திரியன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த ஸ்ரீராமன், ஏனைய அரசர்களைப் போல ஒருவனாகவேயிருந்திருப்பான். ஆயினும் பார்ப்பனர்களின் சொற்களைக் கொஞ்சமேனும் அலட்சியம் செய்யாமல் இவன் நடந்துகொண்டு வந்திருப்பான். "புத்தருடைய கொள்கைகளைப் பற்றி, உலகத்துக்கு நன்மையே செய்துவந்த அசோகச் சக்கரவர்த்தியை உலகமெல்லாம் புகழ்ந்து கூறுவதைக்கேட்டு மனம்பொறாத பார்ப்பனர்கள்" எங்களுக்கும் ஒரு அரசனிருந்தான்; அவன் பெயர் இராமன்; அவனும் உலக உபகாரியென்று பலவித கற்பனாலங்காரங்களுடன் புகழ்ந்து இராமாயணக் கதையைப் பாடி, இப்போது சக்திவாய்ந்த சாமர்த்தியப் புலவர்கள் பொய்யாகக் கதைகளைப் புனைந்து இனிமை வாய்ந்த நவீன நாவல்களில் கற்பித்துக் கூறுவதுபோல, இராமாயணத்தை அரங்கேற்றி, இந்தியா முழுவதுமுள்ளநம்மவர்களை ஏமாற்றிவிட்டார்கள். புத்த பகவானிடத்தும், அவரைப்பின்பற்றி ஒழுகி வந்த நம் ஆன்றோர்களிடத்தும் இவர்களுக்கு இருந்த பொறாமையை இராமாயணத்தினின்று அறியலாம்.

'யதாஹி சோர; ஸ்யததாஹிபுத்த: ததாகதம் நாஸ்திகமத்ரவித்தி"

-வால்மீகி இராமாயணம்.

பொருள்: திருடனும் புத்தனும் ஒப்பாவார்; இங்கு ததாகதனை (புத்தனை) நாஸ்திகன்என்று அறியற்பாலது.

கேளுங்கள்! மனமொழி மெய்களால் எவ்வுயிருக்கும் தீங்கு நேரா முறையைக் கற்பித்து, அதன்படி ஒழுகிக் காட்டிய பெரியாரும், தானுவித்ய சூத்திரத்தில் மோட்சத்தைப் பற்றிக் கூறுமிடத்து "ப்ரஹ்ம ஸஹவ்யத்தய" (பிரம்மத்தில்இரண்டறக்கலத்தல்) என்று கூறியவருமான பகவான் புத்தரைத் திருடனுக்கொப்பாகவும், அவரது கொள்கைகளை நாஸ்திகக் கொள்கையாகவும் கூறிய பார்ப்பனர்கள் வேறு என்னதான் கூறவும், செய்யவும் துணியமாட்டார்கள்? அவரை அப்படிச் சொன்னதினால் அல்லவோ இன்றைக்கு இந்நாவலந் தீவிலிருக்கும் மக்கள் சேற்றில் புகுந்த பசுவைப் போலுள்ள தன்மையை அடைந்தது!

—"ஞான சூரியன்"

## கலைக்கூடம்

நாடகம்.

### சாந்தி.

ஸ்ரீ தேவி நாடக சபாவினர், சலகண்டபுரம் முகாமில் தமது இறுதி நாடகமாக 5—6—57 இரவு "சாந்தி" எனும் நாடகத்தை நடத்தினர்.

தன்மானத் துடிப்பும், பகுத்தறிவுக் கருத்துக்களும் பரிமளிக்கும் வண்ணம் நண்பர், பழைய எஸ். டி. சுந்தரம் எழுதிய பழைய "கவியின் கனவு" நாடகமே இது. ஆரியப் பரம்பரையும், அரசியல் அதிகார வெறியரும் செய்திடும் வஞ்சக வேலைகளை—பஞ்சமா பாதகங்களை வெள்ளிடைமலை போல் கதை விளக்கிடுகின்றது. மிகச் சிறப்பாக, பாராட்டத்தக்கவகையில் நடித்தனர், நடிகரும் நடிகையரும்.

சர்வாதிகாரி—ராஜகுருவாக தோழர் காளையும், வேலைக்காரன்—செங்கோடனை தோழர், சத்திவேலும் சக்கைப்போடு போட்டனர். கனிமொழியாக நடித்த தோழியர், ராஜாமணியும், கவியாக நடித்தவரும் தம் கடமையைச் சிறப்பாக நிறைவேற்றினர். "சாந்தி" தேவி நாடக சபாவுக்குப் பெருமையளிக்கும் நாடகங்களிலே ஒன்று என்பதில் ஐயமில்லை.

நாடகசபா உரிமையாளர், நற்கலைஞர் கே. என். இரத்தினம் அவர்களைப் பாராட்டி, ஒற்றுமை இளைஞர் நடிகர் குழுவின் சார்பில் மா. நடராசன், கிருஷ்ண கான சபாவின் சார்பில் அ. பசுவலிங்கம் ஆகியோர் மலர்மாலை சூட்டினர். தோழர் எஸ். இராசகோபாலனார், ஆசிரியர், ப. கண்ணன் ஆகியோர் மாலையணிவித்து பாராட்டுரை வழங்கினர்.

தோழர், இரத்தினம் நல்லாதரவு தந்த அனைவர்க்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

### நந்திவர்மன்.

ஆசிரியர், ப. கண்ணன் தீட்டிய பல்லவ மாமன்னன் நந்திவர்மனின் வரலாற்று நாடகத்தினை, தேவி நாடக சபாவினர் நடத்துவதற்கு உரிமை பெற்றுள்ளனர்.

தற்போது இராசிபுரத்தில் தங்கி நாடகங்கள் நடத்தி வரும் அச் சபாவினர், வரலாற்றுக் காலத்திற்கேற்ற வகையில் புதிய காட்சியமைப்புகளோடும், செட்டிங்குகளோடும் அதனை அரங்கேற்றுவார்கள் எனத் தெரிகின்றது.

### முதலாளி.

சேலம் ரத்னா ஸ்டுடியோ, உரிமையாளர் எம். ஏ. வேணு "சம்பூரண ராமாயண"த்திற்கு முன்னால் வெளியிடுவதென்ற முடிவில் "முதலாளி" என்ற சமூகப்படம் ஒன்று தொடங்கியுள்ளார். இலட்சிய நடிகர், எஸ். எஸ். இராசேந்திரன் இதிலே கதாநாயகனை நடிக்கிறார். டைரெக்‌ஷன் சீனிவாசன். படப்பிடிப்பு தொடர்ந்து நடந்து வருகிறது.




சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்—1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

540

# பகுத்தறிவு

திங்கள் இருமுறை. ஆசிரியர்:- ப. கண்ணன்.

மலர் 7 | 1-7-57 விலை 0-2-6 (16 காசு) | இதழ் 9.

## ஆடுகள் வாழுமோ? ஆதிக்கம் வளருமோ?




ஆடுகள் போன்ற திராவிட மக்களைக் காப்பதற்குக் கோலேந்திய அருமைப் பெரியார், சோச்சும் புலிகளையும், நரிகளையும் வரவேற்கும் புதுமை காணீர்! இதனால் ஆடுகள் வாழ்ந்திடுமோ? வடவரின் ஆதிக்கம் வளர்ந்திடுமோ? அதனைக் கூறீர்!

# பண்டைத் தமிழக அரசியல்

**நாவலர் இரா. நெடுஞ்செழியன்**

மாணவர் கிளையின் சார்பில், கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாணவர்கள், அரசியலில் நேரடியாக ஈடுபடக் கூடாது என்றும், ஆனால் நன்றாக அரசியலை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்றும் நாம் அடிக்கடி சொல்லிவந்திருக்கிறோம்.

இந்த நாடு மற்றநாடுகளைவிட அறிவுப் பஞ்சம் மிக்கதாக உள்ளது. நாட்டு மக்களில் 100-க்கு 13 பேர் மட்டுமே, தொடக்கப் பள்ளியில் பயிலுகின்றனர். 100-க்கு நான்கு பேர் மட்டுமே, உயர்நிலைப் பள்ளிக் கல்வி பயிலுகின்றனர். 100-க்கு ஒருவரே உயர்நிலைப் பள்ளியிலிருந்து கல்லூரிக்குச் செல்லுகின்றார். 10000-க்கு 13 பேரே கல்லூரிப் படிப்பை முடித்தவர்களாக இருக்கிறார்கள். இத்தகு இழிநிலை போக்கப்படுவதற்காகவே இந்தத் தலைமுறையில் வாழ்கிற மாணவர்கள் அதிகமாகப் பாடுபட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். நாட்டுப்பற்று மிக்க பல அறிவாளிகளை இந்த நாடு எதிபார்க்கிறது.

இங்கு குறிப்பிட்ட எந்தத் துறையிலும், நாட்டுக்குப் பயன்படத்தக்க ஆற்றலர்கள் உருவாக வழியில்லை. இப்பொழுது மாணவர்களாக உள்ளவர்களின் செயலிலேயே இந்த நாட்டின் எதிர்காலம் இருக்கிறது.

மாணவர்கள்மீது இப்பொழுது எல்லோருக்கும் அக்கரை பிறந்திருக்கிறது. எல்லாக் கட்சிக்காரர்களும் மாணவர்கள் பற்றிப்பேச ஆரம்பித்திருக்கிறார்கள். சமீபத்தில் பண்டித நேரு குறிப்பிட்டார். "காங்கிரஸ் மாணவர்கள் ஆதரவை இழந்துவிட்டது. அவர்களது ஆதரவை ஈர்க்கத்தக்க திட்டங்கள் காங்கிரசில் தீட்டப்பட வேண்டும்" என்று.

அதே நேரத்தில் இங்கே கல்வி இலாகா டைரக்டர் பேசுகிறார்; "அரசியல் கட்சிக்காரர்களே மாணவர்களை இழுக்காதீர்கள்!" என்று.

இயல்பாகவே அப்படிப்பேசப் பிரியப்படாத அவர், கல்வி இலாகா டைரக்டராகிவிட்ட காரணத்தாலேயே அவ்விதம் பேசுகிறார்.



நாம் எப்பொழுதும் சொல்வதெல்லாம் மாணவர்கள் தங்களது படிப்பைப் பாதிக்கும் அளவிலுள்ள எந்த அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடாது என்பதுதான்.

கடந்த காலத்தில் நடைபெற்ற தேர்தலில் நாம் குறிப்பிடத்தக்க வெற்றிபெற்றிருக்கிறோம் என்பதில் ஐயமில்லை. நாம் பெற்றிருக்கிற இடங்கள் பதினைந்துதான் என்றாலும், நமக்குக் கிடைத்திருக்கும் ஓட்டுகள் சுமார் பதினேழு இலட்சம் ஆகும். இந்த ஓட்டுகள் காங்கிரஸ்காரர்களைப்போல முறையற்ற செயல்களால் பெற்றவை அல்ல. நாம் எந்தத் தொகுதியிலும் வெற்றி வெறிபிடித்து அலைந்ததில்லை. ஓட்டுகளைக் காசுகொடுத்துப் பெற முயன்றதில்லை. என்றாலும் குறிப்பிடத்தக்க வெற்றியை நாம் நிச்சயமாகப் பெற்றிருக்கிறோம்.

சங்ககாலமான பண்டைநாள் தமிழக அரசியல் பற்றி நான் பேச வந்திருக்கிறேன்.

சங்ககாலத்து அரசியல்பற்றி இப்பொழுது பேசுவதற்கான காரணம், அதனை இப்பொழுதுள்ள அரசியலோடு ஓரளவு ஒப்பிட்டுப் பார்க்க முடியும் என்பதுதான்.

கடந்தகால அரசியலைப் பற்றிப் பேசுவதன் மூலம், நாம்

[15-ம் பக்கம் பார்க்க]



# எதிரொலி

**பெரியாரின் எழுத்துக்களை-கொள்கையை ஜீரணித்த பிறகே இந்த இயக்கத்தில் சேரமுடியும். சினிமாவைப் பார்த்து கட்சியில் சேருபவர்கள் அல்ல திராவிட கழக இளைஞர்கள்.**

**—ஒரு தி. க. குஞ்சு.**

தவறு தம்பி; பெரியாருடைய—குருசாமியுடைய நாடகங்களைப் பார்த்து உணர்ச்சி பெற்றும் படையில் சேருகின்றனர். சேர்ந்த பிறகு ஏற்படுகிற கொள்கைக் குழப்பத்தால் பெரியாரின் இலட்சியத்தையேசீரணித்துக்காணாமல் கரைத்து விடுகின்றனர்!

* * *

**கல்மனப் பார்ப்பனர் தம்மையும் படைத்துக் காகத்தை ஏன்செயப் படைத்தாய்?**

**—"விடுதலை"**

கல்மனப் பார்ப்பனரைத் தேர்தலில் நிற்கச் செய்யவும், காக்கை போன்ற கருப்புகளை தேர்தல் பிரசாரம் செய்யவும் படைத்திருப்பார்!

* * *

**சென்னைக்கு இப்போது "தமிழ் நாடு" என்று பெயர் இல்லாததால் என்ன கெட்டுவிட்டது?**

**—மந்திரி பக்தவத்சலம்**

என்ன கெட்டுப்போய் இந்தியா "பாரதம்" ஆயிற்று? காசி வாரணாசி ஆயிற்று?

* * *

**மத்திய சர்க்கார், சிக்கனநடவடிக்கையால் ரூ. 2 கோடி மீதமாகுமாம்!**

**—செய்தி**

பிரமாதமில்லை! ராணுவச் செலவு அதிகரிப்பு 53 கோடியில் இந்த 2 கோடி சேர்ந்தால், மேற்கொண்டு 51. கோடிக்கு என்ன வகை? எதற்கு? யாருக்கு வரி போடுவது?

**தலைமைக் கழகம்—அறிக்கை எண்: 7/57**

# ஜூலை-7 ஞாயிறு.

## பாராளுமன்ற உறுப்பினரிடம் முறையிடும் நாள்.

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாழும் ஊர்களைச் சார்ந்த தி. மு. க. கிளைத் தோழர்களும், ஆதரவாளர்களும், **7—7—57 ஞாயிற்றுக்கிழமை**யைப் பாராளுமன்ற உறுப்பினரிடம் புதிய வரி விதிப்புப்பற்றி முறையிடும் நாளாகக் கொண்டு, அன்று அந்தந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊர்களில் பொதுமக்களுடன் ஊர்வலமாகப் பாராளு மன்ற உறுப்பினர் இருக்கும் இல்லத்திற்குச் சென்று, முறையீட்டின் நகலை அவரிடம் கொடுத்துவிட்டு, உடன் பொதுக் கூட்டத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி விளக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். பாராளுமன்ற உறுப்பினர் இல்லத்திலோ அல்லது ஊரிலோ இல்லாவிட்டால், அவர்கள் இல்லத்திலுள்ள வேறு முக்கியமானவரிடம் முறையீட்டின் நகலைக் கொடுத்து உரியவரிடம் சேர்ப்பிக்குமாறு கூறக் கேட்டுக் கொள்கிறோம்.

இந்திய அரசியலார் விதித்திருக்கும் புதிய வரிகளையும், கட்டண உயர்வுகளையும் பொதுமக்கள் விரும்பவில்லை—எதிர்க்கிறார்கள் என்பதையும், பாராளுமன்றம் சென்றுள்ள உறுப்பினர்கள் அவற்றை எதிர்த்துப் பாராளு மன்றத்தில் போராடவும், வாக்களிக்கவும் வேண்டும் என்று பொதுமக்கள் விரும்புகிறார்கள் என்பதையும் பொதுக் கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றவும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊரில் மட்டும் இந்த ஏற்பாடுகளைச் செய்தால் போதும். அந்தந்தத் தொகுதிக் கூட்டத்தில் கலந்துகொள்ள முயற்சி எடுக்கவும்.

கட்டுப்பாட்டுடன், அமைதிகுலையாத வகையில் ஊர்வலங்களையும் பொதுக்கூட்டங்களையும் நடத்தவும்.

ஊர்வலத்தின் மூலம் முறையிட வருவதை முன்கூட்டியே அந்தந்தப் பாராளுமன்ற உறுப்பினருக்குப் பணிவன்போடு தெரிவித்துவிடவும்.

21-6-57
'அறிவகம்'
சென்னை-13

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர், தி. மு. க.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு
> —திருவள்ளுவர்.

# இதயம்

மலர் 7 | சேலம் 1—7—57 | இதழ் 9

## இலங்கைத் தமிழர்களுக்கு.

—::—

இலங்கை வாழ் தமிழர்கள் சிங்கள வெறியர்களால் சீரழிக்கப்படுகிருர்கள்!

பன்னெடுங்காலமான வரலாற்றுத் தொடர்பும், வாழ்வுரிமையும், "தமிழர்கள் வாழுகின்ற பூமி தமிழர்களுக்கே சொந்தம்" எனக் கோருகின்ற சுதந்திர வாய்ப்பும் பெற்றுள்ள தமிழ்ப் பெருமக்கள், அங்கே தனிச் சிங்கள மொழிச் சட்டத்தால் குனியக் குனியக் குட்டப்படுகின்றனர்! கொடுமைகளுக்குப் பலியாக்கப்படுகின்றனர்!

எண்ணிக்கையிலே சிறுபான்மையினர் என்ற காரணத்தால், இன வெறியும் மொழி வெறியும் ஊட்டப்பெற்ற திரு. பண்டாரநாயகாவின் அரசாங்கம், பண்பற்ற முறையில் நடந்து கொள்கின்றது, இலங்கைத் தமிழர்களிடம்.

இலங்கையின் வளத்திற்கும் நலத்திற்கும் தமிழர் பரம்பரை பட்டபாடுகள் கொஞ்சநஞ்சமல்ல; நடுநிலை வழுவாத நல்ல சிங்களவர் இதனை நன்கறிவர்; நாட்டு வரலாற்று ஏடுகள் செப்பிடும், இதனை.

ஆட்சித்துறையிலே சம அந்தஸ்தினைப் பெற்றிருந்த அருந்தமிழ் மொழியினைத் தாழ்த்தினர், தனிச் சிங்களச் சட்டத்தின் மூலம்; "எங்கள் உரிமைக்குப் பங்கம் விளைத்திட வேண்டாம்" எனக்கோரிய—கிளர்ச்சி செய்த தமிழர்களைத் தாக்கினர் மிருகத்தனமாக! அடித்தனர், கால் கைகளை ஒடித்தனர் புடைத்தனர், காட்டுமிராண்டித்தனமாக!

மொழியுரிமை மறுப்பின்மூலம் படிப்படியாகத் தமிழர்களின் வாழ்வுரிமை பறிக்கப்படும் என்று அறிவிப்பதுபோல் இருக்கின்றன, இலங்கைப் பிரதமரின் பிடிவாதமான—வெறித்தனமான—பேச்சுக்களும் செயல் முறைகளும்!

சிங்களவர் ஆட்சியின் முறையற்ற போக்கினைக்கண்டு அஞ்சுகின்றனர் தமிழர்கள்; மொழியுரிமை, இனவுரிமை, வாழ்வுரிமைகளோடு, மண்ணுரிமையும் கோரி அறப்போர் தொடுக்கும் நிலைக்குத் துரத்தப்படுகின்றனர் சிங்கள வெறியர்களால்!

இலங்கைத் தமிழரசுக் கழகம், முஸ்லீம், கிறிஸ்துவர், உள்ளிட்ட தமிழ்ப் பெருமக்களின் ஆதரவோடு, வருகிற ஆகஸ்ட் திங்களில் தமிழுரிமைப்போர் நடத்த முடிவு செய்துள்ளது. அவ்வுரிமைப்போர் பேச்சளவில் எளிதாக மதிக்கப்பட்டாலும், எவ்வளவு வலிவும் பொலிவும் வாய்ந்ததுஎன்பதை அதனை ஒடுக்கவும், அழிக்கவும் துடித்திடும் பண்டார நாயகாவின் பதற்றமே மெய்ப்பிக்கின்றது!

இலங்கைத் தமிழர் நல்வாழ்வில் திராவிட முன்னேற்றக் கழகம் அக்கரை காட்டுவதன் காரணமாக, தி. மு. க. வினர் இலங்கை மண்ணிலே காலடி வைக்கக்கூடாது என்பதாகத் தடைவிதித்து விட்டனர்! இத் தடைஉத்தரவு சிங்கள ஏகாதிபத்தியக் கோட்டையிலே அச்சமும் அவசரமும் கூடிப்பெற்றெடுத்த குருட்டுப்பிள்ளை! இதனுல் தமிழன் தமிழனிடம் காட்டிடும் பரிவை, பாசத்தை எப்படித்தடுத்திட முடியும்? மனிதவர்க்கப் பொதுநீதியைத்தான் உலகத்தின் கண்களில் படாமல் எப்படி மறைத்திட முடியும்?

இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகளை திரு. பண்டார நாயகா பகுத்தறிவுக் கண்களோடு நோக்குதல் வேண்டும்; புத்த பெருமானின் பரந்த நல்லிதயத்தை முன்வைத்துச் சிந்தித்தல் வேண்டும்.

சமரசம், சமாதானம் என்ற சொற்களை வாயளவிலன்றி, செயலளவிலும் மெய்ப்பிக்க விரும்பினுல், இலங்கை அரசாங்கம், இலங்கைத் தமிழர்களின் வேண்டுதலுக்குச் செவி சாய்த்து நன்னீதி வழங்கியே தீரவேண்டும்.

—ப. கண்ணன்.



## மந்திரத் தாயத்து.

"அமரன்"

நாராயணசாமியின் முகத்தில் கோபக்கனல் கொழுந்து விட்டுக் கொண்டிருந்தது. அவன் மனைவி காவேரி நடுங்கிக் கொண்டிருந்தாள்!

'காவேரி! என் விஷயத்தில் தலையிடாதே தலையிடாதேனு எத்தனை தடவை சொல்றது? நான் என்ன பப்பாவா?' எரிந்து விழுந்தான் நாராயணசாமி!

'நம்ம குடும்ப நிலைமையைக் கொஞ்சம் எண்ணி....'

'போதும் உன் பிரசங்கம்! நான் ஒண்ணும் சாக மருந்து குடிக்கலே!'

'நான் ஒண்ணும் கெட்டுப் போகச் சொல்லலியே!'

'என்னை சின்னக்குழந்தையா நெனைச்சுப் புத்தி சொல்றே?'

'ஐயோ! தவருப் புரிஞ்சிக் கிட்டீங்களே! தப்பான பாதையிலே போறது ஆபத்துண்ணு சொல்லவந்தா....'

'மூச்சுவிடாதே! பெரிய ஆட்டம்! நான் வீட்டுக்கு வர ரெண்டு மூணு நாளாகும்! கடவுள் கிருபையாலே மந்திரத் தாயத்து கெடைச்சிருக்கு. குலதெய்வத்தை வேண்டிக்கோ கைநெறையப் பணத்தோடவறேன்!"

காவேரியின் பதிலுக்குக் காத்திராமல் விடுவிடென்று நடந்தான் நாராயணசாமி.

காவேரி அவன் சென்ற திசையை பார்த்தவண்ணம் பெருமூச்செறிந்தாள்.

'அம்மா! அப்பா நெறையக் கல்கண்டு வாங்கி வர்றதாச் சொல்லிட்டுப் போனுரே, எங்கம்மா போருரு?'

பள்ளியிலிருந்து திரும்பிய மகன் ஆறுமுகம் தாயைக் கட்டிக்கொண்டு கொஞ்சலாகக் கேட்டான். காவேரியால் குழந்தையை அணைத்துக்கொண்டு விம்முவதைத்தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை!

### 2

பொழுது போகவில்லை; வேடிக்கையாக இருக்கிறது என்றுதான் நாராயணசாமி சீட்டுவிளையாடுவதில் புகுந்தான். நாளடைவில் பைசா, அணு, ரூபாக்கணக்கில் வைத்து விளையாட ஆரம்பித்தான். அவன் ஆசைக்குத் துணையாக நின்று வெறியூட்டினுர் வெங்கட்டரமண ஐயர்!

ஐயர் பர்மா, சிலோன் போன்ற வெளிநாடுகளுக்குப் போய் வந்தவர். ஜோசியம் பார்ப்பதில், மந்திரம் மாயம் செய்வதில் பிரசித்தி பெற்றவர். அவரிடம் 'யந்திரம்' கட்டிக்கொண்டால் ஓடாத பேயெல்லாம் ஓடும்; ஆகாத காரியமெல்லாம் ஆகும்என்று அவரைத் தெரிந்தோர் பேசிக்கொண்டனர். நாராயணசாமி அவர் நட்பைப் பெற்று வெற்றிக்காக மந்திரத்தாயத்து வாங்கிக் கட்டிக்கொண்டான்.

### 3.

'த்சோ! த்சோ! ஒரே ஒரு ஆஸ்மட்டும் வந்து விட்டிருந்தால்...'

'எனக்கு ஒரே ஒரு ராஜா தான் தேவை. அப்புறம் நான் ராஜாதான்!'

'ஹூம் நமக்கு ஏன் அந்த எண்ணம். எல்லாம்தான் சொல்லி வச்சாப்போலே நாராயணசாமிகிட்டே போகுதே! நாராயணு! நீ இன்னைக்கு நரி முகத்திலே தான் முழிச்சிருக்கே!'

'ஹூம்! நரியாவது மண்ணுவது! பர்மா ஐயர் கொடுத்த மந்திரத்தாயத்தோட வேலையாக்கும்! நாமும்தான் விளையாட்றம். ஒரு ஆட்டமாவது வந்திருக்கா? எல்லாம் ஐயரோட அருளப்பா!'

இப்படிப்பட்ட வார்த்தைகள் எதிரொலி செய்ய நாராயணசாமி சீட்டாட்டத்தில் மூழ்கிக் கிடந்தான்.

காலண்டரிலிருந்த தெய்தித்தாள், மூன்று நாட்கள் கழிந்து விட்டனவே என்று சிரித்தது!

நாராயணசாமி வெற்றிப் பெருமிதத்துடன் தன் முன் குவிந்து கிடந்த நகைகளையும், நாணயங்களையும் பார்த்துப் பூரித்தான்!

பொருளை இழந்து அசடு வழிந்துகொண்டிருந்த அப்பாவிகளை கர்வத்துடன் நோக்கினுன் நாராயணசாமி. மனதிற்குள் சிரித்துக் கொண்டான்!

இச்சமயம் எங்கிருந்தோ அங்குவந்த வெங்கட்டரமண ஐயர் நாராயணசாமியின் வெற்றியைக் கண்டதும், 'நாராயணு! எப்படி நம்ம தாயத்தோட சக்தி!' என்ருர்.

ஐயரைக்கண்ட நாராயணசாமி மகிழ்ச்சியுடன், 'சாமி! எல்லாம் உங்க புண்ணியந்தானுங்க!' என்று கூறிவிட்டு விளையாட்டில் முனைந்தான்.

இன்னும் அரைமணி நேரம் ஆடினுல் அவனைச்சுற்றி அமர்ந்திருந்த அத்தனைபேரும் கையிலே காலணுக்கூட இல்லாத ஆண்டியாய் விடுவர்! அப்புறம்நாராயணசாமிதான்

ராஜா!—இது ஐயரின் வேத வாக்கு. ஆனல்....

எதிர்பாராவிதமாய் நாராயணசாமி ஒவ்வொரு தடவையும் தோல்வியடைய ஆரம்பித்தான்!

நாராயணசாமியின் முன் குவிந்து கிடந்த நகைகளும், நாணயங்களும் இடம்விட்டு இடம் மாறின!

இச்சமயம் நாராயணசாமியைத் தேடியோடி வந்த ஒருவன், "அண்ணே, உன் மகன் ஆறுகம் நேத்தே புடிச்சி படுத்த படுக்கையாக் கெடக்கருன். மூடின கண் தெறக்கவே இல்லே. காவேரியம்மா கையோட கூட்டிகிட்டு வரச் சொன்னுங்க!" என்று கூறிஞன்.

மகனைப் பற்றிய சேதியைக் கேட்டதும், நாராயணசாமியின் உள்ளம் பதைத்தது. உடனே வீட்டிற்குப்போய் மகனைப் பார்க்க இருக்கையை விட்டெழுந்தான், ஆனல், அவன் நண்பர்களும், ஐயரும் விடவில்லை. ஆடுமாறு வற்புறுத்திஞர்கள். தயங்கிஞன் நாராயணசாமி.

அவன் நிலையைப் புரிந்து கொண்ட ஐயர் கூறிஞர்: 'நாராயணு! உன் மகனுக்கு ஒண்ணும் ஆபத்து நேர்ந்துடாது! கொஞ்ச நேரத்தில் சரிப்பட்டுடும். நீ பாட்டுக்கு ஆடு!"என்று. அவன் நெஞ்சில் துளிர்த்த பாசத்தை வெட்டியெறிந்தார் வேதியர்.

ஐயர் வார்த்தையை ஆண்டவன் வாக்காக எண்ணிய நாராயணன், அழைத்துச் செல்லவந்த ஆளுக்கு ஏதோ சொல்லி அனுப்பிவிட்டு ஆட்டத்தில் முனைந்தான்!

நாழிகை நகர்ந்தது!

நாராயணசாமியிடம் எஞ்சி இருந்த சொற்பப் பணமும் தொலைந்தது! நண்பர்களிடம் கடன் கேட்கத் தொடங்கிஞன்.

அவனிடமிருந்த கொஞ்ச நஞ்சப் பணத்தையும் பிடுங்கிக்கொண்டு, வெறுங் கையுடன் விரட்ட எண்ணி உட்காரச் செய்த நண்பர்கள், அவன் நிலையைக் கண்டு ஏளனம் செய்து நகைக்கத் தொடங்கினர்!

நாராயணசாமி அவமானத்தால் தாக்குண்டான். வேதனை இதயத்தை அழுத்த, ஐயரை நோக்கிஞன்.

ஐயர், 'நாராயணு! எப்படியாவது ஒரு ரவுண்டுக்கு மட்டும் பணம் கெண்டு வந்துடு. அப்புறம் பாரேன், நீ தான் ராஜா!....போ! என்னமோ விதி இப்ப சதி செய்துட்டது; என்ன யோசனை? சீக்கிரம் போடா!' என்று அவன்மேல் இரக்கம் கொண்டவர்போலக் கூறிஞர்.

நாராயணன் நெஞ்சில் மீண்டும் நப்பாசை துளிர்விடத் தொடங்கியது. ஏதோ ஒரு எண்ணத்துடன் எழுந்து நடந்தான்.

சமயத்திலே ஐயருமட்டும் வந்திருக்காட்டி, பய நம்மப் பணத்தையெல்லாம் அபேஸ் செய்திட்டிருப்பான். கடவுள் போல வந்து கைகொடுத்தார் ஐயர்!' என்று கூறிஞன் ஒருவன். அவன் வார்த்தையை எல்லோரும் ஆமோதித்ததற்கடையாளமாக ஒரு ஐந்து ரூபாய் நோட்டை ஐயர் கையில் ஏற்றினர்!

## 4.

அப்போதுதான் காலை மலர்ந்து கொண்டிந்தது!

ஆறுமுகம் கட்டிலின்மேல் சுருண்டு கிடந்தான். பாவம், அந்தப் பச்சைப் பாலகனல் 'நிமோனியா' ஜுரத்தைத் தாங்க முடியவில்லை! முக்கி முனகிக் கொண்டிருந்தான்!

காவேரி தன் குழந்தை பிழைத்துக் கொள்ள வேண்டுமே என்றஏக்கத்தோடு, குலதெய்வத்தை மனதிற்குள் வேண்டியபடி குழந்தையின் அருகில் அமர்ந்திருந்தாள். யாரோ வரும் சந்தடி கேட்டது. நிமிர்ந்து நோக்கிஞள். நாராயணசாமி கால்கள் தள்ளாட, சோர்வைச் சுமந்தபடி வந்து கொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும் காவேரியின் உள்ளம் தாயைக்கண்ட சேய்போல் கொஞ்சம் தைரியம் கொண்டது. இனி தன் மகனைக் காப்பாற்றிவிடலாம் என்ற நம்பிக்கையுடன் எழுந்தோடி, 'அத்தான்! ஆறுமுகத்துக்கு நிமோனியா. டாக்டர் ஊசி மருந்து வாங்கிவரச் சொல்லி சீட்டு எழுதிக் கொடுத்திருக்காரு. உண்டியல் பணம் அஞ்சு ரூபா இருக்கு! அதைத் தர்றேன். கொண்டு போய் சீக்கிரமா மருந்து வாங்கிக் கொண்டு வந்திடு' என்று சொல்லி, முந்தானையில் முடிந்து வைத்திருந்த ரூபாயையும் சீட்டையும் எடுத்து அவனிடம் தந்து முடுக்கிஞள்.

நாராயணசாமி பணத்தை வாங்கிக் கொண்டதும் பறந்தான் அவ்விடத்தைவிட்டு! காவேரி கண்களை மூடியபடி பிரார்த்தனையில் ஆழ்ந்தாள்!

* * *

ஏழையின் கஷ்டங்களையுணரும் ஆற்றல் படைத்த மனிதனுக்கே இரக்கம் இல்லாதபோது, அனற்பிழம்புகளைத் தன்னகத்தே கொண்டே வானத்திற்கு மட்டும் இருக்குமா என்ன? மப்பும் மந்தாரமுமாக இருந்த வானம், மழைத் துளிகளைச் சிந்த ஆரம்பித்தது!

மழை பெய்கிறதென்று பயந்து எங்காவது தங்குவதா

[11-ம் பக்கம் பார்க்க]






(முன் இதழ் தொடர்ச்சி)

## காட்சி 5.

**இடம்: காந்தமன் வீடு.**
**காலம்: முற்பகல்.**

(சிற்பம் செதுக்கிக்கொண்டிருக்கிருன் காந்தமன், ஐவணம் வருகிருள்.)

**ஐவண:-** (கைதட்டி) ஐயா, சிற்பியாரே! இப்படிக் கொஞ்சம் திரும்பணும்!

**காந்த:-** (திரும்பி) அம்மா அதிகாரதேவதை! காலையிலே ஏது இந்தக் கடாட்சம்?

**ஐவண:-** வெளையாட வந்தா ஆங்காரம், வெலகிங்ன்னுப் பேசிஞ அதிகாரம்! இந்தக் கலைஞர்கள் வர்க்கமே நெருப்படியம்மா! கிட்டப்போனு சுட்டுப்புடுது; வெலகிஞலோ பலன் மட்டுப்படுது! என்னதான் செஞ்சு தொலைக்கறது!

**காந்த:-** ஒண்ணு செய்யேன், ஐவணம்.

**ஐவண:-** என்னு செய்யட்டும்?

**காந்த:-** இந்தச் சிலைமாதிரி கல்லாயிடேன்! வேண்டும்போது கொஞ்சலாம், வேண்டாதபோது சும்மாபோட்டுடலாம். அதிகாரமும் செய்யாது, ஆங்காரமும் இருக்காது.

**ஐவண:-** (கடுப்பாக) அதிகாரம்! அதிகாரம்! அதிகாரம்!! அதிகாரம்னு கேவலமாப் பேசறது! அப்பறம் பல்லை இளிக்கிறது அவுங்ககிட்டேதான்!

**காந்த:-** அரண்மனை ஆளுங்ககிட்டே சிரிச்சிப் பேசறதே தப்புடாயப்பா!

**ஐவண:-** பார்க்கறேனே; கலைக்கூட நிர்மாணவேலைக்கு அரமனையிலேருந்து அழைப்பு வரப்போவுது. சிரிச்சிப்பேசுவீரோ! சீ! சீ! இந்தப்பழம் புளிக்கும்பீரோ!

**காந்த:-** (வியந்து) என்னு என்னு, சொல்றே ஐவணம்? கலைக்கூட நிர்மாண வேலைக்கா? எனக்கா? எனக்கா? அரண்மனை அழைப்பா? உண்மையாகவா?

**ஐவண:-** நிச்சயமாக! கணவர் ஞாபகார்த்தமா மகாராணி கலைக்கூடம் ஒண்ணு கட்டப்போருங்க. சிற்பப்குதிக்கு உம்மை நியமிக்கப் போருங்க. அழைப்பு வரும். பாருமே! (நினைவுவந்து) ஐயயோ! என்ன மடத்தனம்! அரண்மனை ஆளுங்க வந்தா நான் இங்கே இருக்கறதைப் பாத்துடுவாங்களே! மகாராணிகிட்டே சொல்லிட்டா.... ஐயயோ! நான் போறேன்.

(போகிருள். காந்தமன் தடுக்கிருன். சேலையைப்பற்றி இழுத்து நிறுத்துகிருன்.)

**காந்த:-** அட! நீ போறேன்னு, விட்டுடுவனு? அரைக்கெணறு தாண்டறவேலை வேணும்! ஏங்கிட்டே விபரமா சொல்லிட்டுத் தான் போவணும்.

**ஐவண:-** அரமனைக்குப்போக நேரமாச்சுங்க! அப்பறம் வந்து சொல்றேன். என் காதல் மன்னரல்ல; கற்பனைக் களஞ்சியமல்ல; கலைச் செல்வரல்ல! விட்டுடுங்க. விட்டுடுங்க!

**காந்த:-** முடியாதுங்க. என் அன்புக்கரசியல்ல; அரண்மனை சுந்தரியல்ல; விட முடியாது! முடியாது!

(இழுத்துப் பறித்துக்கொண்டிருக்க, வாசலினின்றும் குரலொன்று ஒலிக்கின்றது.)

"காந்தம சிற்பியாரே! மகாராணியார் கட்டளை. நீர் என்னவேலை செய்துகொண்டிருந்தாலும் அப்படியே நிறுத்திவிட்டு, உடனே அரண்மனைக்குப் புறப்படவேண்டும். அவசரக் கட்டளை! அவசரக் கட்டளை!"

**ஐவண:-** (பதறி) ஐயயோ! அரண்மனை ஆளு! பார்த்துடுவானே என்னை! என்னுடை கௌரவம் என்னு ஆகறது? ஐயயோ!

(இங்கும் அங்குமாக ஓடி ஒளிய முயலுகிருள். நடுங்குகிருள். காந்தமனைத் தள்ளுகிருள்.)

**காந்த:-** அடச்சீ! இவ்வளவுதானு தைரியம்? இதுக்கா வாணன் ஒன்னைக்கண்டா வாலை மடக்கருன்? நீ ஒரு பயங்காளி! தோ, இப்படி இந்தக் கூடையைக் கமுத்திக்க. யாரு வந்தாலும் நான் பார்த்துக்கறேன்.

(ஒரு மூலையில் அவளை உட்காரவைத்து, பஞ்சு இருந்த கூடையைக் கவிழ்த்து மூடுகிருன் காந்தமன். மீண்டும் குரல்)

"காந்தம சிற்பியாரே! காலதாமதம் கூடாது. உடனே புறப்படும். உடனே புறப்படும்!"

(சொல்லியவண்ணம் வாணன் உள்ளே வருகிருன். பார்த்துமலைக்கிருன் காந்தமன்.)

**காந்த:-** அடேய்! அயோக்யப் பயலே! என்னடா இது? யாரையடா மெறட்றே?

**வாணன்:-** குருவே! நாந்தான் நீங்கண்ணு நெனச்சுகிட்டு, அரமனை சேவகன் ஒருத்தன் இப்படி என்னை மெறட்டி உத்தரவு போட்டாங்க! அதையல்ல ஒங்ககிட்டே சொல்லவந்தேன். அவனை வெளியே நிக்கவச்சிருக்கேனுங்க. கூப்பிடட்டுங்களா?

**காந்த:-** அடப்பாவி! என் நெஞ்சைப் படபடக்க வச்சுட்டியே! பதறப்பதற அடிச்சுட்டியே!

**வாணன்:-** மன்னிக்கணும் குருவே!

(கூடைக்குள்ளிருந்த ஐவணம் கூடையைத் தள்ளிவிட்டு வெடுக்கென்று எழுந்திருக்கிருள். கூடையிலிருந்த பஞ்சு அவள் தலை முழுதும் ஒட்டிக்கொண்டு விகாரப்படுத்துகிறது.)

**ஐவண:-** அடே சண்டாளா! என்னைப் பதைக்கவச்சு, பயப்படுத்திட்டியே! திக்குமுக்காடித் திணறவச்சுட்டியே! விட்டேனு பார் ஒன்னை!

**வாணன்:** (பார்த்து பயந்து) ஐயயோ! பேயி! பிசாசு! குருவே! என்னைக் காப்பாத்துங்க. காப்பாத்துங்க!

**காந்த:-** அடச்சீ! மடையா! ஐவணம்டா! ஐவணம்! இந்தக்கோலம் ஒன்னுலே வந்த அலங்கோலந்தான்!

**வாணன்:-** (வியந்து) ஆங்! ஐவணமா....? அரமனைக்காரியா?....

(வெளியிலே இருந்து சேவகன் குரல் ஒலிக்கிறது.)

"காந்தம சிற்பியாரே! மகாராணியாரின் கட்டளை. இப்போதே புறப்படுகிறீரா? இல்லையா?"

**ஐவண:-** (பதைத்து) ஐயயோ! அரண்மனை ஆளு! அரண்மனை ஆலு!

**வாணன்:-** அவந்தான்! அவந்தான்! அவனேதான்!

**காந்த:-** அடேய்! வாணு! போடா, அவனை அங்கேயே இருக்கச் சொல்லடா, தோ, நான் வந்திட்டேன். போ போ!....



(அவன் செல்ல, பரிவோடு, அவசரம், அவசரமாக ஐவணத்தின் மேலிருக்கும் பஞ்சுகளை எடுக்கிருன்.)

**காந்த:-** பயப்படாதே ஐவணம்! தோ, இந்தப் பக்கமா, புறக்கடை வழியா நீ போயிடு. எந்தப் பயலும் ஒன்னைப் பார்க்க முடியாது!

**ஐவண:-** (துடைத்து சரிபடுத்திக்கொண்டே) நீங்க பாக்கறீங்களே, இந்தக் கண்றுவியை!

**காந்த:-** நான் பார்க்க, செய்ய கடமைப் பட்டவன்தானே? கவலைப்படாதே. வா! வா!

(அவளை அவசரமாக அழைத்துச் செல்லுகிருன் மறுபக்கம்.)

## காட்சி 6.

**இடம்: ஆலோசனை மண்டபம்.**

**காலம்: முற்பகல்.**

(காமவல்லி, தினகரன், காந்தமன், துறவி அருளாளர், வாணன் ஆகியோர் இருக்கின்றனர்.)

**தின:-** அருளாளரே! கலைக்கூடம் அமைக்க பொருட்செலவு என்ன ஆயிற்று என்பது முக்கியமல்ல; அதன் தனிச் சிறப்பு எத்தகையது எனக்கூறி வியக்கவேண்டும் மக்கள்! எவ்வளவு பெரியசாதனை என்று மலைக்கவேண்டும் கலைஞர்கள்! காலத்தாலும் கருத்தாலும் அழிக்கமுடியாத அமரசிற்பங்களும், ஓவியங்களும் அங்கே அற்புதம் விளைக்க வேண்டும்!

**அருளா:-** வீணைக்கொடி பறக்க வையகம் ஆள்பவர் இராவணச் சக்கரவர்த்தி; விவேக முரசுமுழக்கும் நல்லிசை வேந்தர்; அருளறமும், அருங்கலையும் கட்டிக்காக்கும் பெருங்குணப்பண்டிதர்; அந்தக் கலைவள்ளலே கண்டு வியக்கும் வண்ணம் அமைப்போம் கலைக் கூடம்! போதுமா தினகரரே?

**காந்த:-** ஆனு ஒண்ணு.

**தின:-** என்ன காந்தமா?

**காந்த:-** கூடகிரி மலைச்சாரல், இங்கேருந்து மிகத் தொலைவிலே இருக்கு! போறதுக்கும், தங்கறதுக்கும் வசதிகள் ரொம்பக் கொறைவு.

**அருளா:-** மனங்கவரும் இயற்கை வளம் ஏராளம்! கலைக்கூடத்தை குகைக்கோயிலாகவே அமைக்கத்தக்க குன்றுகளும் குகைகளும், அங்கிருப்பதுபோல் எங்குமில்லை!

**தின:-** வசதிகள், நாம் செய்துகொடுப்போம் காந்தமா! கூடகிரிக்குச் செல்லப் பாதையமைப்போம், சிற்பியர், ஓவியர், ஏவலர், எடுபிடி ஆட்கள் ஆயிரம்பேர் தங்குவதற்கு, அங்கே மனைகள் கட்டுவோம். பல்லாண்டுகளுக்குரிய உணவுப் பொருள்களை சேகரித்து வைப்போம். கலைஞர்கள் ஓய்வு பெற—உல்லாசப் பொழுதுபோக்க ஆடல் பாடல் கேளிக்கைகளுக்கும் வழிசெய்வோம்! இன்னும் என்ன வேண்டும்?

**காந்த:-** ஆஃகா! போதும்! போதும்! இவைபோதும்! இதெல்லாம் இருந்திட்டா உற்சாகமா வேலையை முடிப்போமே! எப்படி வாணு!

**வாண:-** அப்படித்தான் குருவே!

**காமவ:-** அண்ணு! என் விருப்பம் ஒன்று.

**தின:-** சொல்லம்மா.

**காமவ:-** கலைக்கூட அமைப்பு காண, நான் செல்லவேண்டும் அங்கே. மலைச்சாரலில் தங்குவதற்கேற்ற மனையொன்று அமைக்கவேண்டும் எனக்கு.

**தின:-** நன்று. அரண்மனையாகவே கட்டச்செய்கிறேன் தங்கையே. கலையாக்கத்திலே உனது கருத்தும் திறனும் இணைந்து பரிமளிக்க வேண்டும் என்பதே என் விருப்பமும். அருளய்யா!

**அருளா:-** அமைச்சர்பெரும!

**தின:-** நிருவாகப் பொறுப்பு தங்களுடையது. அங்கே அறிவுக்குப்புறம்பான அசம்பாவிதங்கள், சீலத்திற்கு மாறுபட்ட செயல்கள் நிகழாத வண்ணம் பார்த்துக்கொள்ளுங்கள்.

**அருளா:-** கடமையைச் செய்வேன். சொத்துக்களைப்பாதுகாக்க, படையொன்று இருக்குமல்லவா?

**தின:-** எல்லாம் அனுப்புகிறேன் ஐயா, என்றாலும் நீங்கள் தங்கப்போவது தண்டக வனத்தில். நமது கலாசாரப் பகைவர்கள்

அங்கே காலடிவைத்துவிட்டார்கள்! நமது அருளறத்தைப் பழிக்கும் அறிவற்ற வேதவாணிபரும், அரசியலைக் கைப்பற்ற விரும்பும் ஆரிய முனிவரும் அங்கே முகாமடித்துக் கொண்டார்கள்! சாக்கிரதை!

**காந்த:-** அமைச்சரே! பெரியாருக்கு எதுக்குங்க சிரமம்? அதையெல்லாம் நாங்க பாத்துக்கிறோம். எப்படி வாணு?

**வாண:-** அப்படித்தான் குருவே!

## காட்சி 7.

**இடம்: அகஸ்தியர் குடிசை.**

**காலம்: பிற்பகல்**

(அகஸ்தியர் மான்தோலாசனத்தில் அமர்ந்திருக்க, மனைவி லோபா பின்னால் நிற்கிருள். முன்னால் நாட்டதிகாரிகள் சிலம்பனும், கொம்பனும் பணிவோடு அமர்ந்திருக்கின்றனர்.)

**அகஸ்:-** தேசாதிகாரிகளே! தேவர்களோட தர்மத்தின் பெருமையும், சிரேஷ்டமும் ஒங்களுக்கு ஓரளவு புரிஞ்சிருக்கு! மதிக்கிறேள்; போற்றவும் தொடங்கிட்டேள்; சந்தோஷம்! இருந்தாலும், எங்களோட வேத சாஸ்திர புராண இதிகாசங்களை, பெரியவா வாயாலே நீங்க நன்னு கேட்கணும்.

**லோபா:- (வெடுக்கென்று)** நீங்க என்ன ரொம்ப சிறுபிராயமோ? ..உக்கும்! இப்பத்தான் கறுக்குமீசை அரும்பற தாக்கும்!

**அகஸ்:-** ,அடியே! நிறுத்து. வானப் பிரஸ்தாஸ்ரமத்திலேயும், கிரகஸ்தாசிரமத்தை நடத்திண்டிருக்கிற வல்லமை நேக்கு இருக்குடி, இருக்கு!.... இவ இப்படித்தான். நீங்க கேளுங்க.

**சிலம்:-** சொல்லுங்க சாமி. ஒங்களைவிட யாரு எங்களுக்குப் பெரியவங்க?

**அகஸ்:- (முறைப்படி சுலோகம் சொல்லுகிருர்)**

**பிராம்மணோ ஜாயமானோ ஹப்ருதில்யாம்**
**அபியாஜதே; ஈஸ்வர:**
**சர்வபூதாணும் ப்ரம்ம கோசஸ்ய குப்தயே!**

அதாவது சகலபிராணிகளுக்கும் தலைவனுயும், வேதமாகிய களஞ்சியத்தின் காவலனுயும் பிராம்மணன் படைக்கப்பட்டிருக்கான். ஆனதாலே இந்தலோகத்திலே இருக்கிறவொவ்வொரு பொருளுக்கும் பிராம்மணனே சொந்தக்காரன்! பிராம்மணன் பிச்சையெடுத்து சாப்பிடறவன் ஆனுலும், உண்பது உடுப்பது கொடுப்பதெல்லாம் அவனோட பொருளேயாகும்! யாரும் அவாளைக்கேவலமா கருதிடக் கூடாது. இப்படி எது சொல்றது தெரியுமோ?

**சிலம்:-** எதுங்க சாமி?

**அகஸ்:-** மகா சிரேஷ்டமான மனு தர்ம சாஸ்திரம் சொல்றது. இதுதான் ஆர்ய மார்க்கத் தோட ஆணிவேராக்கும். இந்த தர்மத்தைப் பரிபாலிக்கறவா, யாராக இருந்தாலும் அஷ்ட ஐசுவரிய பாக்யமும் பெற்று, மோட்சலோக சாம்ராஜ்யத்தையும் அடைவா, பகவான் அவாளுக்கு ஒரு கொறையும் வைக்க மாட்டார்.

**கொம்ப:-** ஏனுங்கசாமி! மழைமாரி பெய்யாமெ வெள்ளாமை வெளையலே. சோத்துக்குப் பெருங்கஷ்டம். சனங்க படாதபாடு படறுங்களே, இதுக்கு என்னங்க சாமி பரிகாரம்?

**அகஸ்:-** மகாராணி காமவல்லியிடம் முறையிட்டேளா? என்ன சொல்ரு? அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போறதாம்?

**கொம்ப:-** வரி வட்டத்தைவேணுக் கொறைக்கலாம்! களஞ்சியத்திலேருந்து தானியம் வேணுக் கொடுக்கலாம். மழையைக் கொண்டுவர எங்களாலே முடியாதுன்னுட்டாங்க, சாமி.

**அகஸ்:- (சிரித்து)** நல்ல அரசாங்கம்! நல்ல நாட்டதிகாரிகள்! நல்ல குடிமக்கள்! எல்லாரும் கண்ணிருந்தும் குருடாள்! காதிருந்தும் செவிடாள்! லோபா!....

**லோபா:-** சொல்லுங்க நாதா!

**அகஸ்:-** இவாளோட அறியாமையைப் பார்த்தையோடி! கையிலே வெண்ணையை வச்சுண்டே, நெய்க்கு அலையரு! **(சிரிப்பு)**

**(வளரும்)**



[8-ம் பக்கம் தொடர்ச்சி]

ணுல் ஆறுமுகத்தைக் காப்பாற்ற முடியாது! தன் குலக் கொழுந்து கருகிவிட்டால் வாழ்வதில் என்ன பிரயோசனம்? எப்படியாவது போயே தீரவேண்டும்! நாராயணசாமியின் பிள்ளைப்பாசம் அவனை முடுக்கியது. எனவே பெருமழையையும் பொருட்படுத்தாமல் நனைந்தவண்ணம் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினுன்!

திடீரென்று பெரும் புயலொன்று, மழையுடன் உறவு கொண்டது! இடியும் மின்னலும் கடன்காரன் தொல்லை போல அவன் இதயத்தைக் கலக்கின!

இன்னும் சிறிது தூரம் நடந்தால்தான் வீடுபோய்ச் சேரமுடியும்! சீறும் புயலையும் மழையையும் பொருட்படுத்தாமல் செல்ல, அவன் உடல் என்ன இரும்பால் செய்ததா? துவண்டான் நாராயணசாமி!

இனி ஒரு அடிகூட மேலே நகரமுடியாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே ஒரு மரத்தடியில்சென்று பதுங்கிக் கொண்டான்.

ஒரு நிமிடம்தான் சென்றிருக்கும்! அடுத்த விநாடி, அவன் சற்றும் எதிபாராத விதமாய் அவனுக்குப் பாதுகாவல் புரிந்த மரம் வேருடன் பெயர்ந்து அவன்மேல் வீழ்ந்தது மடிந்தான் மரத்தடியிலே சிக்கிவிட்ட நாராயணசாமி!

* * *

'ஆங்! ஐயோ!'

திடுக்கிட்டு விழித்தாள் காவேரி! கண்டது கனவு என்று அறிந்தபோது சிறிது ஆறுதல் பெற்ருள். ஆனுல், மருந்து வாங்கிவரச் சென்ற நாராயணசாமி ஒரு பகல் ஒரு இரவு கழிந்தும்கூட இன்னும் வரவில்லையே!

'என்ன செய்து கொண்டிருப்பார்? ஒரு சமயம் கனவில் கண்டதுபோல....சேச்சே! இருக்காது!...ஒரு சமயம் சீட்டாடப் போயிருப்பாரோ?'

காவேரியின் இதயம் சம்மட்டியால் தாக்குண்டதைப் போல நைந்தது! நெக்கு விட்டது!

விவரிக்க இயலாத வேதனையோடு எழுந்தோடிச் சென்று குழந்தையின் உடம்பைத் தொட்டுப் பார்த்தாள். அனலாகக் கொதித்துக் கொண்டிருந்த ஆறுமுகத்தின் உடல், பனிக்கட்டிபோல் சில்லிட்டுக் கிடந்தது! காவேரியின் நெஞ்சில் கத்தை முள் வேகமாகக் குத்தியது!

'ஐயோ, ஆறுமுகம்!'

கட்டிலில் மோதிக் கொண்டாள் காவேரி!

அதே சமயம், 'காவேரி! மந்திரத்தாயத்தின் மகிமையைப் பாரடி! ஐநூறு ரூபாய் கெலிச்சுட்டேன்! இதோ பாரு!' என்று கூறியபடி கையில் மூட்டையுடன் தலைவிரி கோலமாய் உள்ளே நுழைந்தான், நாராயணசாமி!

காவேரி கணவனை நோக்கினுள். அவன் மூட்டையை அவிழ்த்துக் கொட்டினுன்! எல்லாம் கற்கள்! காசாட்டக்காரர்களுக்குக் கற்களும் ரூபாயும் ஒன்றுதானே?

அவன் திருதிருவென்று விழித்தான்! பயங்கரமாகச் சிரித்தான்! மருந்துப் பணத்தையும் சீட்டாட்டத்தில் தொலைத்துவிட்டதால், கணவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்பதை உணர்ந்தாள் காவேரி. மகனே செத்த பிணம்; கணவனே நடைப் பிணம்; நெஞ்சம் வெடித்து மூர்ச்சை போட்டு விழுந்தாள் வேதனை தாங்கமுடியாத காவேரி! நாராயணசாமி எதனையும் உணரும் நிலையைக் கடந்து நின்ருன்; அவன் கையிலே கட்டியிருந்த மந்திரத் தாயத்து...? ஆம்! அதற்கு ஒரு ஆபத்துமில்லை! ●●

---

**எதிர்காலத்தைப் பற்றிய கவலையில்லாதவன், மண வாழ்க்கையை இன்பமாக்க முடியாது. —அறிவன்.**

---


**வெண்சங்கு சீயக்காய் தூள்** எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

**செல்வம் ராணி**

**&**

**சேகர் ஊதுபத்திகளை**

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

**வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,**

3037-38. டபீர்குளம் ரோடு, தஞ்சாவூர்.

[18-ம் பக்கம் தொடர்ச்சி]

இதில் நாகரீகச் சிறப்பை அறிகிறோம்.

இவை இரண்டும் அந்தக்காலத்தில், அந்த அரசியலில் நல்ல முறையில் அமைந்திருந்தன. நல்லறிவாளர்கள் போற்றத்தக்க முறையில் பிறருக்கு எடுத்துக் காட்டாய்த் திகழ்ந்தன.

தமிழகத்தை வன்புகழ் மூவர் சிறப்புற ஆண்டிருக்கின்றனர். சேர, சோழ, பாண்டிய மன்னர்களான அம்மூவர் மட்டுமே, முடியுடை மூவேந்தர்களாக மதிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் காலத்தில்தான், தமிழக அரசியல் உயர்நிலையை அடைந்திருந்தது.

அப்போது கையாளப்பட்ட அந்த அரசியல் முழுமையும் நல்ல முறையில் அமைந்ததே என்று நாம் கூறுவதற்கில்லை. அதுபோலவே முழுமையும் குறைபாடுகள் நிறைந்தவை என்றும் நாம் சொல்லிவிடுவதற்கில்லை. மொத்தத்தில் குறைபாடுகள் ஒரு சிலவற்றைக் கொண்ட, சிறந்த அரசியல் முறை இருந்திருக்கிறது என்பதில் கருத்து வேறுபாடே கிடையாது.

அரசு அல்லது அரசன் மக்கள் சமுதாயம் வளரவே இருப்பதாகக் கருதப்படுகிறது. மக்கள் வாழ, முறை பிறழாது அவர்களை ஆளும் கடமை மன்னனைச் சார்ந்தது.

அரசு செலுத்துபவன் அரசன்; நிலை பெற்று நிற்பவன் மன்னன்; இறை அளிப்பவன் இறைவன்; பாதுகாப்பவன் காவலன்; முடி அணிவதால் வேந்தன் — இப்படி தமிழில் அரசுக்கு வழங்கும் பெயர்களுக்கு முறையான பொருளுண்டு.

ஆட்சி மூன்று வகைப்படும். அவை கோனாட்சி, குடியாட்சி தடியாட்சி ஆகியவையாகும்.

மன்னன் கையிலேயே அதிகாரம் முழுமையும் ஒப்படைக்கப்பட்டிருப்பது கோனாட்சி முறையாகும்.

மக்களுக்கே முழு அதிகாரமும் வழங்கப்பட்டிருப்பது குடியாட்சி. இது பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்டு உருவாக்கப்பட்டது.

இந்த இரண்டு ஆட்சிக்கும் இடைப்பட்ட சர்வாதிகார ஆட்சிக்கு, தடியாட்சி என்று பெயர்.

தமிழகத்தில் கோனாட்சிதான் இருந்தது என்ற போதிலும், அது மக்கள் ஆட்சியாகவே அமைந்திருந்தது.

'குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன், அடிதழி நிற்கும் உலகு' என்ற குறள் வழி ஆட்சி அப்போது நடந்தது.

தமிழக ஆட்சி முறையை சோழ மன்னர்களான ராஜராஜன், ராஜேந்திரன், குலோத்துங்கன் ஆகியோர் காலத்து கல்வெட்டுகளும், செப்பேடுகளும் நமக்குத் தெளிவாக விளக்குகின்றன.

நாடு அக்காலத்தில் வளநாடு, கோட்டம், கூற்றம், தனியூர், பற்று தல்லது குறைப்பற்று என்ற விதத்தில் பிரிக்கப்பட்டுச் செம்மையுற ஆட்சி செய்யப்பட்டது.

இக்காலத்தில் வழங்கிவரும் தேர்தல் முறையும் அக்காலத்தில் இருந்திருக்கிறது. குடஓலை மூலமாக, அப்போது உரிய தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன.

தலைவன் வேற்றூர் செல்கிறான். தலைவி அவனுடைய பிரிவை எண்ணி வாடுகிறாள். தோழி அவளுக்கு ஆறுதல் கூறுகிறாள். தலைவன் செல்லும் பாதையில் பாலையாக இருக்கும். அங்கே பிணங்கள் வீழ்ந்துகிடக்கும். அவற்றின் குடல்களை கழுகுகள் வயிற்றிலிருந்து கொத்தி வெளியே எடுக்கும். பொதுமக்கள் கூடும் அறங்கூறு அவையில், வாக்கு ஓலைகளைக் குடத்திலிருந்து சான்றோர் எடுப்பதுபோல அது தோற்றமளிக்கும், இவற்றைப் பார்த்துவிட்டு தலைவன் திரும்பி வந்துவிடுவான் என்று தோழி தலைவிக்குக் கூறுவதாக ஒரு அகப்பொருள் பாடல் இருக்கிறது. இந்தப் பாடல் காட்டும் உவமையிலிருந்து அந்தக் காலத்திலேயே குடஓலைத்தேர்தல் முறை அமுலிலிருந்தது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

அப்போது ஊர் ஊருக்குப் பல சபைகள் நிறுவப்பட்டு அவை மூலம் ஆட்சி நடத்தப்பட்டது. வழக்கு கவனிக்க அட்டை வாரியம், புஞ்சை கவனிக்க தோட்ட வாரியம், நஞ்சை மேற்பார்வைக்கு கழனி வாரியம், ஏரி, குளத்திற்கு ஏரி வாரியம், அணைக்கட்டைப் பாதுகாக்க கலிங்கு வாரியம், நாணயச் செலவாணிக்கு பொன் வாரியம், கணக்குத் தணிக்கைக்கு கணக்கு வாரியம், சேமிப்புக்கு பஞ்சவாரியம், பாதை அமைப்புக்கு தடிவழி வாரியம், பகுதிகள் நிர்வாகத்திற்கு குடும்பு வாரியம் என்ற பலவாரியங்கள் (சபைகள்) தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி செம்மையுற நடந்தது என்று உத்திரமேரூர் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

அப்போது தேர்தலில் நிற்பதற்குப் பல தகுதிகள் வரையறுக்கப்பட்டிருந்தன.

வரிகட்டி வாழும் காணி நில உடமையாளர், சொந்த மனைவி கட்டி வீட்டோடு குடியிருப்போர், சிறந்த கல்வி நலம் பெற்றோர், காரியம் நிறைவேற்றும் ஆற்றலுடையோர், அறநெறியில் பொரு



ளீட்டி செம்மை வாழ்வு வாழ்வோர், 35-லிருந்து 75 வரை வயது உடையோர், எந்த வாரியத்திலும் மூன்று ஆண்டு தொடர்ந்து அங்கம் வகிக்காதோர் ஆகியோர் மட்டுமே தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்பட்டனர்.

வாரியக் கணக்குக் காட்டாதவர்கள், கொலை, காமம், குடி முதலிய ஐம்பெரும் குற்றம் செய்தவர்கள், ஊர்க் குற்றவாளிகள் (கேடி) பட்டியலில் இடம் பெற்றிருப்பவர்கள், பிறர் பொருளை மோசடி செய்து கவர்ந்தோர், கள்ளக் கையெழுத்திட்டோர், குற்றம் செய்தது காரணமாகக் கழுதை மீது ஏற்றப்பட்டோர், கையூட்டு (இலஞ்சம்) பெற்றோர், சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டுத் தள்ளி வைக்கப்பட்டோர், முறை கெட்ட மணம் செய்துகொண்டோர், கெட்ட துணிச்சலை (ரௌடித்தனத்தை) மேற்கொண்டோர், உண்ணத்தகாததை உண்டோர், இவர்களின் நெருங்கிய உறவினர், கீழ் மக்களோடு உறவு கொண்டோர் எனப்படும் பதிமூன்று தகுதியுடைய எவரும் தேர்தலில் போட்டியிடும் உரிமையற்றவர்களாக மதிக்கப்பட்டார்கள்.

போர் செய்வதற்கும் அன்றைய அரசியலில் முறை வகுக்கப்பட்டிருந்தது.

இரவில் போர் நடைபெறவொட்டாமல் செய்யப்பட்டது. ஊருக்குள் போர் நடைபெறுமல் தடுக்கப்பட்டது; போர் செய்யப் போகிறார்கள் என்பதற்காக மாலைகளை அடையாளமாக இட்டுச் சென்றனர். அதற்கு வஞ்சி எனும் மாலை பயன் படுத்தப்பட்டது. வெற்றி பெற்றோர் வாகை மாலை சூடினர். அப்போது அரசனே நேரடியாகப் படை நடத்திச் செல்வான்.

இவை தவிர சான்றோரை மதிக்கும் பண்பு அக்கால அரசிடம் நிரம்பிக் கிடந்தது.

தமிழுக்கும், தமிழ்ப் புலவருக்கும் உயர்ந்த கௌரவமளிக்கப்பட்டன.

இத்தகைய உயர்ந்த அரசு காரணமாக வாணிபம் வளர்ந்தது. தலைசிறந்தது. வீரம் அமைந்தது. தனிப் பண்பு ஒளி விட்டது. உலகில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றுத் தமிழகம் உலவ முடிந்தது.

இடையில் பல தொல்லைகள் ஏற்பட்டுத் தமிழகம் கீழ் நிலைக்கு வராமலிருந்திருந்தால், அன்றைய தமிழக அரசியல் மேலும் செம்மைப்படுத்தப்பட்டு உலகின் மகுடமாகத் திகழும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இந்த நமது பண்டையச் சிறப்புகளை எண்ணியபடி, எதிர்கால நமது வாழ்வை, அரசியலை நாம் வகுத்துக் கொண்டால், அவை மீண்டும் உலகில் சிறந்து விளங்கும் என்று நாம் துணிந்து நம்பலாம்.

சென்னை கோகலே மண்டபத்தில் 2—6—57-ல், நடைபெற்ற தி. மு. க. மாநில மாணவர் கிளையின் சிறப்புக் கூட்டத்தில் பேசியது.

---

நீதிக்கும் அநீதிக்கும் நெடுந்தூரமில்லை. புலியை மனிதன் கொன்றால் அது வேட்டை, மனிதனைப் புலி அடித்தால் அது ரத்த வெறி. —பெர்னார்ட்ஷா.



## கேள்விக்கணை

இம்முறை பரிசு பெற்றவர்:
● இரா. இளந்தென்றல்,
131. திருவொற்றியூர்
பெரியசாலை,
சென்னை-21.

**இரா. இளந்தென்றல், சென்னை-21**

● கே: "பகுத்தறிவு"க்கும், "பொது அறிவு"க்கும் வித்தியாசம் என்ன?

*ப: தங்கம் ஒரு பொருள். அது எப்படிக் கிடைத்தது; எங்கே கிடைத்தது; யாரால் கிடைத்தது என்பனவற்றை ஆராய்வது பகுத்தறிவு. அதனைக்கொண்டு எத்தனை வகையான ஆபரணங்களை, யார் யார் எப்படி எப்படிச் செய்து அணிந்துகொள்கிறார்கள் என்பனவற்றை அறிந்து கொள்வது பொது அறிவு.*

*　*　*

கே: மனிதன் பிறப்பதன் லட்சியம் என்ன?

*ப: மனிதப் பண்போடு வாழ்வது.*

**எம். ஜீவேந்திரன், மன்னார்குடி.**

கே: கலைக்காகப் பாடுவதாகச் சொல்லும் சில ஏடுகள், தி. மு. க. தலைவர்களைத் திட்டுவதையே தொழிலாகக் கொண்டிருப்பதன் நோக்கம் என்ன?

*ப: கலையுலகில் தி. மு. க. கலைஞர்கள் செய்திடும் புரட்சியை மறைக்க முயன்று பார்த்து முடியாமல் மனம் வெந்ததுகள், மாற்றுக் கருத்துடையாரை — காலமறியாப் பழமை விரும்பிகளை மகிழ்வித்தாவது வாழ விருப்புகின்ற பாவம்!*

**கே. இராசமாணிக்கம், மதுரை.**

கே: சாதி ஒழிய வேண்டும் என்ற கொள்கையுள்ள "விடுதலை" அறிஞர். அண்ணாவை "முதலியார்" என்று எழுதுவது ஏன்?

*ப: "அவன் கிடக்கிறான் குடிகாரன், எனக்கு ரெண்டு பாட்டல் கொண்டா" என்று கேட்பவர், மது ஒழிய வேண்டும் என்கிறார். நம்மால் தடுக்கவா முடியும்?*

*　*　*

கே: மத்திய அரசாங்கம் போட்டிருக்கும் புதிய வரிகளை ஆதரித்து தி. க. பிரசாரம் செய்வதன் நோக்கம் என்ன?

*ப: இப்படிச் செய்தால் திராவிடநாடு வாங்கிக்கொடுக்கிறேன் என்று பச்சைத் தமிழர் பெரியாரிடம் சொல்லியிருக்கிறாரோ, என்னவோ!*

**சி. சு. தேவராசன், சிறுதையூர்.**

கே: கடவுள் இல்லை என்று என்று கூறும் பெரியார். கடவுளுக்குத் தமிழில் அர்ச்சனைசெய்ய வேண்டும் என்கிறாரே: இது முரணல்லவா?

*ப: பலவகை பற்றுகளோடு அவருக்கு மொழிப்பற்றும் இருப்பதால், கடவுள் பற்றுடையவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். அவ்வளவே.*

டாக்டர் சோதனை விளக்கத்தின்
படி ஏற்ற கண்ணாடி
எம்மிடம் கிடைக்கும்.




**ராதா ஆப்டிகல் கம்பெனி,**
**முதல் அக்ரகாரம், சேலம்-1.**

## பொன் மொழிகள்

அறநெறிக்குப் பட்டினி எவ்வளவு அவசியமோ அதேபோல், தீநெறிக்குப் பெருந்தீனி இன்றியமையாதது.

—டால்ஸ்டாய்.

கொடுங்கோலர்களை எதிர்த்துப் புரட்சி செய்வது, கடவுளுக்கு வணக்கம் செலுத்துவதாகும்.

—பெஞ்சமின் ஃபிராங்க்ளின்.

ஒருவனது பெருமையானது அவனது பணத்தையும், அந்தஸ்தையும் பொறுத்ததல்ல; அவனது குணத்தையும் நடத்தையையுமே பொறுத்திருக்கிறது.

—காந்தியார்.

மனித வாழ்க்கை, மற்றெல்லா அம்சங்களையும் விட அழகிய தோற்றம் வாய்ந்தாயிருக்க வேண்டும்.

—பிளேட்டோ.

நீ மற்றவர் குற்றத்தைக் காணுமுனபு, உன குற்றத்தைக் கண்டு திருத்திக் கொள்.

—விவேகானந்தர்.

அறியாதபோது நம்பிச் செய்வதெல்லாம பக்தி யெனபர்; அறிந்த பிறகு செய்வதெல்லாம் ஞானமெனபர்.

—ஷேக்ஸ்பியர்.

### கலா நிகழ்ச்சி.

நாமக்கல் புத்துலகக் கலா மன்றத்தாரின் குறவன், குறத்தி வேடங்களுடன் தி. மு. க. கொள்கைப் பிரச்சார கலா நிகழ்ச்சி நடத்த விரும்பும் இயக்கத் தோழர்கள், கீழ்க் காணும் முகவரிக்கு கடிதம் எழுதுக.

நிர்வாகி: S. ஆனமுத்து,
C/o. A. K. நீலமேகம்,
மெயின் ரோட், நாமக்கல்,
சேலம் மாவட்டம்.



[2-ம் பக்கம் தொடர்ச்சி]

நல்லதொரு விழிப்புணர்ச்சியைப் பெறமுடியும் என்று நான் நம்புகிறேன்.

அனாதையான சிறுவன் ஒருவனை அணுகி, தம்பி! நீ ஏன் இப்படி இருக்கிறாய் தெரியுமா? வஞ்சகர்கள் உன் வாழ்வைப் பாழ்படுத்திவிட்டார்கள். இதோ செழுமையாகத் தெரியும் கழனிகள் உனது பாட்டனாருக்குச்சொந்தமானவை. அதோ இடிந்து கிடக்கும் அந்த மாளிகையில்தான் அவர் கம்பீரமாக உலாவினார். அங்கே இருந்து கொண்டுதான் அவர் தனது 'தர்பாரை' நடத்தினார். அவரோடு பழகி, அவரை வேண்டுமென்றே பல தவறான வழிகளில் ஈடுபட வைத்து. அவரது சொத்துக்களைப் பிடுங்கிப் பங்கு வைத்துக்கொண்டார்கள் அந்தத் துரோகிகள். அதனால்தான் நீ அனாதையாக வேண்டியதாயிற்று என்று பெரியவர் ஒருவர் சொல்லும்பொழுது, அவனது இரத்தம் கொதிப்பேறி ஆக்ரோஷத்துடன், 'நான் இப்படியே இருந்துவிடுவேன் என்று எண்ணிக்கொண்டுவிடாதீர்கள். நானும் நிச்சயமாக எனது பாட்டனாரைப்போல வாழ முயலுவேன். வெற்றி பெறுவேன்.' என்று அவன்—அனாதைச் சிறுவன் சொல்லமுடிகிறது.

அதுபோலத்தான் 1914-ல், தன்னுடைய நாடு யூதர்களின் காலடியில் வீழ்ந்துகிடப்பதைக் கண்டு குமுறிய இட்லர், 'ஜெர்மனியைக் காப்பேன், யூதர்களை விரட்டுவேன்,' என்று பணியாற்றினான். வெற்றி பெற்று ஆட்சிபீடமேறினான்.

சாதாரண குடிமகனான ஆப்ரகாம் லிங்கன், அதுபோன்றே உணர்வு காரணமாகவே, அமெரிக்காவின் ஜனாதிபதியானான்.

இதுபோலவே, இன்று ஒரு காலத்தில் உலகம் வியக்கவாழ்ந்த தமிழகத்தைக் குறிப்பிட்டு, இது நல்ல ஊக்கத்தையும், ஆக்கத்தையும், ஆற்றலையும், அமைப்பையும் பெற்று விடுதலைபுரிப் பயணத்தை மேற்கொள்ளும் உணர்வை நாம் வளர்த்து வருகிறோம்.

நாடு நல்ல எதிர்காலத்தைப் பெறுவதற்கு, பெறுவதற்கான ஆற்றலை மக்கள் உருவாக்குவதற்கு நாட்டின் கடந்த கால எடுத்துக்காட்டுகள் நிச்சயமாகப் பயன்படும்.

அரசியல், உலகம் இந்த அளவு வளர்வதற்கு முன்னதாகவே தமிழகத்தில் உண்டு. மற்றைய நாடுகளில் அரசியல் கருத்துக்கள் விதை தூவப்படுவதற்கு முன், இங்கே அது செம்மையாக வளர்ந்து பலன் தந்திருக்கிறது.

இன்றைய உலகில் போற்றத்தக்க அரசியல் முறையை அளித்துள்ளது கிரேக்க நாடாகும். அங்கேதான் பேரறிஞர்கள் பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும் அரசியல் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். அவற்றைப் பின்பற்றியே இடைக்காலத்தில் ஐரோப்பியநாடுகளெங்கும் அத்தகு அரசியல் முறைகள் கையாளப்பட்டுவருகின்றன. உலகெங்கும் இப்பொழுது அமுலிலிருக்கும் அரசியல் முறைகளும் அவற்றைப் பின்பற்றி அமைக்கப்பட்டனவே.

சந்திரகுப்த மௌரியர் காலத்தில், சாணக்கியனால் மாற்றுமுறையான அரசியல் முறை வகுக்கப்பட்டது. தமிழில் பலர் பலவிதமான வழிமுறைகளை அரசியலுக்கு வகுத்துச் சென்றிருக்கின்றனர்.

தமிழன் அமைத்த அரசியல், மற்றவர்கள் போற்றத்தக்கதாக அமைந்திருந்தது. வியந்து பாராட்டத்தக்க முறையில் அவை அமுலாயின. இயற்கையோடு இணைந்த வாழ்க்கையைத் தமிழர்கள் மட்டுமே எல்லோருக்கும் முன்னதாக நடத்திக் காட்டினர்.

அந்தக் காலத்தில் இருந்த நல்ல அரசு காரணமாக, நாகரிகமும், பண்பாடும் சிறந்துவிளங்கின.

நாகரிகம் என்பது, ஆங்கிலத்தில் (Civilisation) என்று அழைக்கப்படுவதாகும். பண்பாடு என்பது (Culture) என்று குறிப்பிடப்படுவதாகும். நாகரிகம் புறத்தின் சிறப்புகளைத் கொண்டிருப்பது; பண்பாடு அகத்தின் சிறப்பை எடுத்துக்காட்டுவது; உள்ளப் பாங்கைக் காட்டுவது.

*நல்ல உள்ளம் அவனுடையது; அறம் செய்வது அவனுடைய தொழில்; உண்மை வாழ்வு அவனுடையது—இதில் பண்பாட்டு உயர்வைக் காண்கிறோம்.*

மாட மாளிகைகள், கூடகோபுரங்கள், ஆடை ஆபரணங்கள்

[12-ம் பக்கம் பார்க்க]

**பகுத்தறிவு.**
(திங்களிருமுறை)
புதிய தசாம்ச நாணய விகிதத்தில்:
உள் நாடு:
ஆண்டு 1-க்கு 4-00
6 மாதங்களுக்கு 2-00
தனிப்படி 16 காசுகள்
சிலோனில் 20 சதம்
**பகுத்தறிவு அலுவலகம்**
சேலம்-1.

நாடகம்.

## மயிலாசனம்

12-6-57-ல் ஓமலூர் இயல் இசை நாடகக் குழுவினரால் நடிக்கப்பட்டது! கதை ஓர் சரித்திரக் கற்பனை.

இலங்கேஸ்வரனின் மயிலாசனம் பொன்னாலானது! நவரத்தினங்கள் பதித்தது! நல்ல நேரத்தில், விழா ஒன்றில் திருடி மறைந்தான் மயானபுரி மன்னன்! வடநாட்டான்! ரகஸ்யம் பரஸ்யமாயிற்று! அதன்மேல் கண் வைக்கிறான் ஓர் கள்ளர்த் தலைவன்! அவன் பிடியில் அகப்படுகிறாள் ஓர் சுண்டு நடைக்காரி! பெயர் கற்பக வல்லி! மயானபுரியின் இளவரசி! ஆபத்தில் தப்புகிறாள்! சந்திக்கிறாள் வெற்றி வீரனை! அவன் மணிபுரியின் இளவரசன்! கப்பம் கேட்க வந்தவன் மயானபுரியானிடம்! இருவரிடையே காதல் அலை புரள்கிறது! இளவரசனைக் கொல்லும் மயானபுரியானின் சூழ்ச்சி வீழ்ச்சியடைகிறது! மகளைத் தேடிவந்த மணிபுரி மன்னன்-தென்னவன் சிறையில் வதைபடுகிறான்! முடிவில் வெற்றி வீரன் வாகை சூடுகிறான்! மயானபுரியான் மண்டியிடுகிறான் மகளோடு! இது தான் கதை!

கதையின் அதிகப்படியான காட்சிகள்-பொறுமைக்கு ஒரு சோதனை! ரப்பர் பந்துவைப் போல் உயரக் கிளம்புகின்றன சில! தரையோடு உருண்டு போகின்றன சில. அதிலும் சிலவற்றிற்கு 'மேல் கதை விளக்கம்' தர அதிக நேரம் செலவழிப்பது, ரசிகர்கள் மத்தியில் 'ஐயோ போதுமே!' என்ற குரலை எழுப்புகிறது. புளு காய்ச்சல்

[illegible]

போல் எக்கதையிலும் தொத்திக் கொள்ளும் புதிய வியாதி ஓரங்க நாடகம், தில்லானா கூத்துக்கள்! அஃது மயிலாசனத்தையும் விடவில்லை! 'கலிங்கப் போர்'-ஓரங்க நாடகம் கதையின் ஓட்டத்தைத் தடை செய்கிறது! தொடர்ச்சியையும் கெடுத்து விடுகிறது!

வசனங்களில் கருத்தாழம் இல்லையெனினும், கவர்ச்சிக்கு வேண்டிய முலாம் பூசப் பட்டிருக்கிறது! ஆசிரியரின் திறமையைப் பாராட்டத்தான் வேண்டும்! ல, ள, ழ-எழுத்துக்கள் வருந்தியழைத்தாலும் நடிகரில் சிலரிடம் வரமாட்டேன் என்கின்றன! 'ஆற்றில் கொட்டினாலும் அளந்து கொட்டு,' என்பது முதுமொழி! இதை வார்த்தை அளப்பில் ஏனோ மறந்தார் ஆசிரியர். மகளை 'மகாராணி' என மயானபுரியான் விளிப்பது அர்த்தத்தை அனர்த்தமாக்குகிறது! சுரங்கம் வெட்ட நரபலி வேண்டுமே! வடபக்கம் வெட்டினால் வாரசூலை யாயிற்றே! போன்ற வசனங்கள் பகுத்தறிவுக்கு ஒவ்வாதவை. நினைத்திருந்தால் நிச்சயம் நீக்கப்பட்டிருக்கும்!

கற்பகவல்லியாகத் தோன்றியவர் நடிப்பு முதல்தரம்! அடுத்தயிடம் தோழி மலர் விழியாக வந்தவருக்கு! மணிபுரியின் மந்திரி வெகுஜோர்! வெற்றிவீரன், காஞ்சி, மணிபுரி மன்னன்—இவர்கள் நடிப்பும் பரவாயில்லை! ராஜகுரு, மணிபுரி மகாராணி இவர்களுக்கு வேஷப்பொருத்தமில்லை! சிலர் நடிக்கிறார்கள்! சிலர் அப்படியே ஒப்பிக்கிறார்கள்!

மொத்தத்தில் நாடகம் சுமார்! இம்முயற்சி ஓர் சமூகக் கதையில் சென்றிருந்தால் வெற்றி நிச்சயம்! மயிலாசனத்தார் கவனிப்பாராக!

—ஹுமாயூன்.

### தேவி நாடக சபா.

சேலம் மாவட்டம் இராசீபுரத்தில் தங்கி நாடகம் நடத்தி வரும் தேவி நாடக சபாவின் நடிகர், நடிகையர் நச்சுக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதன் காரணமாக நாடகங்கள் சரிவர நடைபெறுவதில்லையாம். அவர்களின், அடுத்த முகாம் ஆத்தூரில் என்று தெரிகிறது.

### எம். ஆர். ராதா.

பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் "தேவாசுரப் போராட்டம்", குத்தூசி குருசாமியின் "தசாவதாரம்" நாடகங்களை நடத்திவந்த கலைஞர் ராதா, சினிமாவில் நடிப்பதற்காக இரண்டு வருடங்களுக்கு நாடகங்களை நடத்தப் போவதில்லையாம்! அவரது சினிமா முயற்சி வெல்வதாக! தி. க. பெருமை கொள்வதாக!

வினை செய்யுங்கால் அதனால் அழிவதையும், பின் ஆவதையும், ஆகிநின்று பின்புவரும் பயனையும் சீர் தூக்கி, தக்கதாயின் செய்தல் வேண்டும்.

-- திருவள்ளுவர்.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்–1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

திங்கள் இருமுறை. ஆசிரியர் :- ப. கண்ணன்.

மலர் 7 | 20-7-57 | விலை 0-2-6 | (16 காசு) | இதழ் 10.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS



## தாய் நாட்டின் விடுதலைக்காக!

நாங்கள் சட்ட சபையில் சாதாரண சட்டசபை உறுப்பினர்களாக அமர்ந்திருக்க வரவில்லை; நாங்கள், சட்டசபையில் இடம் பெற்றிருக்கும் தாயக விடுதலைப் போராட்ட வீரர்கள்; நாங்கள் சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து கொண்டிருப்பதற்காகச் சட்ட சபைக்குச் செல்லவில்லை; சட்டத்திற்குப் பின்னால், ஒளிந்து கொண்டிருக்கும் தேசத் துரோகிகளை நாட்டுக்குக் காட்டிக் கொடுக்கவே சட்டசபைக்குச் சென்றிருக்கிறோம்.

நாம் இப்போது சட்டசபையில் ஆற்றுகிற பணி எத்தகையது என்றால், இங்கிலாந்து நாட்டுடன் அயர்லாந்து இணைக்கப்பட்டிருந்த காலத்தில், இங்கிலாந்து பாராளு மன்றத்தில் அயர்லாந்துப் பிரதிநிதிகள் ஆற்றிய பணி போன்றதாகும்.

அயர்லாந்து அடிமைப்பட்டிருந்தது; அந்தத் தாயகத்தின் விடுதலைக்காக அயர்லாந்து பிரதிநிதிகள் பிரிட்டிஷ் பாராளு மன்றத்தில், ஆதிக்கபுரியினரை முன்வைத்துக் கொண்டு வாதாடினார்கள்; விடுதலை கோருவதன் காரணங்களை விளக்கிச் சொன்னார்கள். அதேபோலத்தான் நாமும், தாய்த் திருநாட்டின் விடுதலைக்காகப் பணியாற்றுகிறோம், அந்த முறையில் சட்டமன்றத்திலும் பேசுகிறோம்.

—அறிஞர் அண்ணா.

# ஆயுள் பாதுகாப்பா? ஆரியர் பாதுகாப்பா?

பார்ப்பனீயம் ஒழிய வேண்டும், சமத்துவம் ஓங்க வேண்டும் என்று சொல்லுகின்ற நாம்; பார்ப்பனர்களின் ஏகபோக ஆதிக்கம் பல துறைகளிலும் வலுத்து வருவதை ஒப்பமுடியாது. 100-க்கு 3 பேராக உள்ளவர்கள் 100-க்கு 97 பேர்களைப் பின்தள்ளிவிட்டு அரசாங்கப் பதவிகளை ஆக்ரமித்துக் கொள்ளுவது எப்படி நியாயமாக இருக்கமுடியும்? "எல்லோரும் வாழ்வோம்" என்ற பெருநோக்கு எப்படி இலங்க முடியும்?

சமுதாய அமைப்பிலே, படிப்பின் தகுதி ஒன்றாக இருப்பினும், மேல் தட்டில் வாழ்பவனுக்குச் சலுகைகளும், அடித்தளத்திலே அல்லற்படுபவனுக்கு சஞ்சலமும் தருவது, சமதர்மத்திற்கு அரண்செய்யும் புனிதச் செயலன்று. சமதர்மப் பெருநெறியை சாய்த்திடும் கொடுவன் செயல்!

தேசீய மயமாக்கப்பட்ட இன்சூரன்ஸ் ஆயுள் பாதுகாப்புத் தொழில் துறையில் பார்ப்பனீய ஆதிக்கம் தலைவிரித்தாடுகிறது! அங்கே பார்ப்பனர் ஆரியம் வளர்க்கின்றனர்; ஆரியம் ஆரியத்தை வளர்க்கிறது; வடவரின் கூட்டுறவு பெற்று!

இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனின் தென் மண்டல மேலாளராக நியமிக்கப்பட்டவர் திரு. கே. பால சுப்ரமணிய ஐயர், அபிவிருத்தி அலுவலர் திரு. சாமிநாத ஐயர், மண்டல ஆக்சுவரி திரு. எஸ். ரங்கராஜ ஐயங்கார், கணக்கதிபர் திரு. எஸ். எஸ். ஐயர், மண்டல செயலாளர் திரு. டி. வி. இராமமூர்த்தி ஐயர், ஆக்சுவரிகள் 1. திரு. சுந்தரம் ஐயர், 2. திரு. சேதுராம ஐயர். மிகத் தகுதி வாய்ந்த திரு. என். வி. நாயுடு என்ற திராவிடர் ஒருவரை மாத்திரம், போனால் போகிறது என்று மண்டலத் துணை மேலாளராக நியமித்தனர்.

தென் மண்டலத்தில் 1. சென்னை 2. மதுரை, 3. திருவனந்தபுரம், 4. கோயமுத்தூர், 5. பெங்களூர், 6. ஐதராபாத், 7. மசூலிப்பட்டனம். இந்த ஏழு பிரிவுகளுக்கும் முறையே கே. பலராம ராவ், பட், வேங்கடசுப்ரமணிய ஐயர், டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி ஐயர், டி. ஆர். ஏ. பய், கே எஸ். ராமமூர்த்தி ஐயர், வேங்கடேச ஐயர், ஆகிய ஏழு பார்ப்பனர்களாகப் பொறுக்கியெடுத்து நியமித்தனர்.

இந்த அக்கிரமத்தை சென்ற ஆண்டு 10-8-56 "பகுத்தறிவு" இதழிலேயே நான் கண்டித்து எழுதியிருந்தேன். கூடைச் செங்கல்லும் பிடாறியாகிவிட்ட இந்தக் கொடுமையின் விளைவுகள், ஆயுள் பாதுகாப்பு கார்பரேஷனின் அலுவல் பார்க்கும் திராவிடர்களையும், அதிலேதொடர்புகொண்ட பாலிசிதாரர்களையும், கொள்ள விரும்புகின்ற படித்த இளைஞர்களையும் பதறவைக்கின்றன!

தென்மண்டல டிவிஷன் அலுவலகங்களில் இந்த ஓராண்டு காலத்தில், 100 ரூபா சம்பளம் பெறக்கூடிய கணக்காயர் பதவிகளில், சுமார் 300 பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 270 பேர் ஆரியராம், 30 பேரே திராவிடராம்! விண்ணப்பம் போட்ட பல்லாயிரம் திராவிட இளைஞர்களுக்குப் பட்டை நாமம் சாத்தப்பட்டுவிட்டது! அரசியல், அதிகார, தொழில் துறைகளிலே "அவா"ளின் ஆதிக்கம் செய்திடும் சேட்டையினைப் பாருங்கள்!

மதுரைப் பிரிவு அலுவலகத்தின் மேலாளரான திரு. பட் என்ற பார்ப்பனருக்குப் பதிலாக பெருமுயற்சியின் பேரில் திரு. ஜி. எஸ். கல்யாணசுந்தரம் என்ற தகுதி வாய்ந்த தமிழரை நியமித்தனர்; இதனைப் பொறுக்கமுடியவில்லை ஆரியக் குஞ்சுகளால்!

கணக்காயர் நியமனங்களிலே அவர் பார்ப்பனரைப்புறக்கணித்துவிட்டு, பார்ப்பனரல்லாதார் பெரும்பாலாருக்குச் சலுகை கொடுத்துவிட்டார் என்பதாக டெல்லிக்குப் புகார் எழுதினார்களாம்! விசாரணையும் நடந்ததாம்! மேலும் நடக்குமாம்! எப்படியிருக்கிறது நியாயம்?

[15-ம் பக்கம் பார்க்க]


**பகுத்தறிவு**

(திங்களிருமுறை)

புதிய தசாம்ச நாணய விகிதத்தில்:

உள் நாடு:

ஆண்டு 1-க்கு 4-00

6 மாதங்களுக்கு 2-00

தனிப்படி 16 காசுகள்

சிலோனில் 20 சதம்

பகுத்தறிவு அலுவலகம்

சேலம்-1.




## எதிரொலி

*மாகாணத்தின் சுதந்திரம் கொஞ்சம் கொஞ்சமாக டெல்லியால் பறிக்கப்படுகிறது.*

—டாக்டர். லட்சுமணசாமி

இவரைப் போன்ற பெரியவர்களும் கொஞ்சம் கொஞ்சமாகத் தானே உணருகின்றார்கள்!

* * *

*காமராசர் ஆணு, பெண்ணு, அலியா என்பது எனக்குப் புரியவில்லை*

—பெரியார்.

வேலூர் மாநாட்டில் அறிஞர் அண்ணா சொன்னபோது வேதனைப்பட்டவர்கள், இந்த வார்த்தையை ஆயிரம்முறை உச்சரித்து அமைதி பெறுவார்களாக!

* * *

*பாராளுமன்ற சனநாயகம் வெற்றி பெற எதிர்க்கட்சி அவசியம்*

—சி. பி. இராமசாமி (ஐயர்)

"ஐயயோ! அவர்கள் பேசுவார்களே!" என்கிறாராம் காங்கிரஸ் மந்திரியார்!

* * *

*நாடு மேற்கொண்டும் துண்டாடப்படுவதை சகிக்க மாட்டோம்.*

—மந்திரி சி. சுப்ரமணியம்

ஏற்கனவே துண்டாடியபோது என்ன செய்தீர்களோ; அதைச் செய்து விடுவீர்களாக்கும்!

* * *

*பஞ்சாபில் இந்திக் கிளர்ச்சி கடுமையாகிறது. இன்று 450 பேர் கைது!*

—செய்தி.

இங்கிலீஷ் வேண்டாம், இந்தியே வேண்டும்" என்று கிளர்ச்சி செய்யும் இவர்கள் யார்தெரியுமா? அறிவு வேண்டாம், ஆண்டவனே வேண்டும் என்னும் ஆரிய சமாஜிகள்!

### வாட்டி வதைக்கிறதாமே!

இன்றைய ஆட்சியாளர் ஆரியர் திராவிடர் இன வேற்றுமையை நம்பாதவர்கள் என்பது நமக்[illegible] சுயமரியாதைக் கொள்கைகளையும் நாம் எதிர்பார்க்கவில்லை. ஆனால், திராவிட மக்களுக்கு விகிதாசார உரிமைகள் தரப்படவேண்டும் என்பதைமட்டும் ஆட்சியாளரிடமிருந்து நாமும் எதிர்பார்க்கிறோம்; தமிழர்களும் எதிர்பார்க்கிறார்கள். இதில் ஆட்சியாளரிடமிருந்து பலதடவை ஏமாற்றங்கள் கிடைத்திருக்கின்றன. இவைகளை அவர்களே உணர்ந்து திருத்திக் கொள்வார்கள் என்பதனால், நாம் இவைகளைப் பெரிதாக்காமல் விட்டுவிடுகிறோம். மேலும், ஓரளவு திராவிடர் கழகத்தின் முயற்சியினால் பதவி ஏற்றுள்ள ஒரு மந்திரிசபைக்கு நாமே எதிரியாகக் கூடாது என்ற நினைப்பும் திராவிடர் கழகத்தை வாட்டி வதைக்கிறது!

—"விடுதலை" 11-7-57.




> எப்பொருள் யார் யார் வாய்க்கேட் பினும்
> அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.
>
> —திருவள்ளுவர்.

# இதயம்

மலர் 7 | சேலம் 20—7—57 | இதழ் 10

## இந்தி ஏகாதிபத்தியம்.

ஆங்கிலேயன், ஆங்கில மொழியின் மூலம் இந்திய துணைக்கண்டத்தைக் கட்டியாண்டபோது, "ஆங்கில ஏகாதிபத்தியம் ஒழிக" என்று கோஷமிட்டனர் சுதந்திரக் காங்கிரஸ்காரர்கள்.

இந்திக்காரன், இந்தி மொழியின் மூலம் இந்திய துணைக்கண்டத்தைக் கட்டியாளுகையில் "இந்தி ஏகாதிபத்தியம் வாழ்க" என்று வாழ்த்துகின்றனர் அடிமைக் காங்கிரஸ்காரர்கள்! இந்தி ஏகாதிபத்திய தாசர்கள்!

ஆங்கிலம் உலக மொழி; விஞ்ஞான வளர்ச்சிக்குத் தேவையான மொழி; பொறி இயல் துறைக்கு இன்றியமையாத செல்வம்; கல்வி, கலைத்துறைகளின் ஞான விளக்கு! அத்தகைய உயர்தனிச் செம்மொழியே ஆதிபத்திய மொழி; நம்மை ஆளுவோரின் ஆயுதம் என்கின்றபோது எதிர்க்கப்பட்டது என்றால், சொந்த எழுத்தற்ற, சுதந்திர இலக்கியமற்ற; விஞ்ஞானப் பண்பற்ற, புதுமைத் தென்பற்ற எத்தகுதியுமற்ற "லம்பாடி" இந்தி மொழியை "ஏக இந்தியா"வின் பெயரால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? எதற்கு நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்?

ஜூலை 17. சென்னை சட்டசபையில் பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ; எம். எல். ஏ. வினாவொன்று எழுப்பினார்; "ஆங்கிலம் போல் இந்தியை ஆதிக்க மொழியாக சர்க்கார் கருதுகிறதா?" என்று.

"ஆம்" என்று ஒரே சொல்லில் கூறிவிடாமல் சுற்றி வளைத்து விடையளிக்கிறார் மதியமைச்சர் சுப்பிரமணியம்: "நாட்டின் அமைப்பிலேயே வடநாட்டு ஆதிக்கம் இருக்கிறது என்று கருதுபவர்கள் இந்தியை ஆதிக்க மொழியாகக் கருதலாம். ஆனால், தேசம் ஒன்று என்று நினைப்பவர்கள் இந்தியை நாட்டு மொழியாக எடுத்துக் கொள்ளலாம்" என்று.

கடவுளை சக்தியாகவும் வணங்கலாம்; மனித உருவிலும் வழிபடலாம், ஆனை, பூனை, எலி, எருதாகவும் கும்பிடலாம்; சகதியாகவும், சாணமாகவும் வைத்துப் பூசை போடலாம் என்ற பூசாரிப் புத்தியும், அரசியல் அடிமைத்தனமும் அவரது பேச்சிலே [illegible]

மேலும் "இந்தி படிக்காதவர்களுக்கு உத்தியோகம் கிடைக்காத நிலைமை ஏற்பட்டால், பின்னர் வருத்தப்படுவதில் பயனில்லை" என்று இந்தி ஏகாதிபத்தியச் சார்பிலே நின்று மிரட்டுகிறார்!

தமிழனின் தாயகத்திற்குத் "தமிழ் நாடு" என்று பெயரிடவே மறுத்த தன்மான மற்றவருக்கு, தான் மொழிவழியே தமிழன்; இனவழியே திராவிடன்; இவர்களின் நலத்திற்கும், வளத்திற்கும் பணியாற்றுவதே கடமை என்றஉணர்வு எங்கே வரப்போகிறது?

இந்தி மொழியானது சமஸ்கிருதக் கலப்போடு ஆரிய கலாச்சாரத்தைப் பரப்புவதையே—ஆரிய இந்து மதத்தைக் காப்பதையே குறிக்கோளாகக் கொண்டது. பஞ்சாப் மாநிலத்தில் "இந்தியே வேண்டும்" என்பதற்காக நடைபெற்றுவரும் போராட்டத்தில் ஆரிய சமாசிகளும், இந்து சாமியார்களும் தலைமை தாங்குவதனின்றும் இதனை நன்கறியலாம்.

இந்தி மொழி ஆதிக்கத்தில் வடவருக்குள் கருத்து வேறுபாடே அனேகமாகக் கிடையாது. அத்துறையில் எக்கட்சி வடவரும் ஒன்றேதான்!

"கிளைவ் பிரபுவின் புத்திர பௌத்திரர்கள்தான் ஆங்கிலத்தில் பேசவேண்டும்; காந்தியாரின் புத்திர பௌத்திரர்கள் இந்தியில்தான் பேசவேண்டும்" என்று ஜூலை 15-ல், பம்பாயில் சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் திரு. லோகியா முழக்கியுள்ளார்!

இந்தி கலாச்சாரமே ஆரியக் கலாச்சாரம்; தமிழ்க் கலாச்சாரமே திராவிட கலாச்சாரம் என்பது மறுக்க முடியாத பிரத்தியட்சவுண்மை. இவை ஒன்றையொன்று அடிமைப்படுத்த முயலுவதோ, அழிக்க முனைவதோ நாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைத்திடும் ஆபத்தான விளையாட்டாக முடியும்! எனவே, அரசியலின்—அதிகார பலத்தின் துணைகொண்டு இந்தியை திராவிடத்தின் அரசாங்க மொழியாக—ஆதிக்கமொழியாகப் படர விடுவதை வன்மையாகக் கண்டித்தோம்; கண்டிக்கிறோம்; கண்டிப்போம்! இந்தி ஏகாதிபத்தியத்தை வரவேற்று வாழ்த்து பாடும் தன்மானமற்ற நமது தமிழ்நாட்டு அரசியல் பூசாரிகளை பொதுமக்கள் அறிந்துகொள்ள நெடுங்காலமாகாது! திராவிட சுதந்திர வீரர்கள் முழக்கிடும் "இந்தி ஏகாதிபத்தியம் ஒழிக!" என்ற கோஷம், சட்டசபைக்கு வெளியேயும் ஒலிக்கின்றது! உள்ளேயும் ஒலிக்கின்றதே!

—ப. கண்ணன்.



# பேய் அறைந்தது.

இரா. சி. சவுண்டப்பன்

அல்லி! ஆம்; அழகான பெயர்! ஆடி வரும் மயில்! பாடி வரும் குயில்! ஓடிவரும் மான்! எனும் அடைமொழிகளால் அழைக்கப்படத் தக்கவள்.

அதோ போகிறதே ஊர்வலம், யார் செல்லுகிறார்கள்? ஆம், அவள்தான் செல்லுகிறாள் ஊர்வலமாக!

சிரிப்பும், கேலியும் சிந்தும் சிங்காரக்கூட்டமல்ல அவளைப் பின் தொடர்வது; சிந்தும் கண்ணீர் வெள்ளத்தோடு, செயலற்று நடந்து செல்லும் சுற்றத்தார் கூட்டம் அது!

மணக்கோலத்திலல்ல, அந்த அழகு மயில்சென்று கொண்டிருந்தது; பிணக் கோலத்தில்!

பல்லக்கிலல்ல, பாடையில்! இல்லத்திற்கல்ல; இடுகாட்டிற்கு!

* * *

அமுதன் அழகன், இளைஞன், படித்தவன். பகுத்தறிவுவாதி. ஆனால், சமுதாயத்தினால் ஒதுக்கப்பட்டவன்.

அல்லி அவனைக் காதலித்தாள். அமுதன் அவளை நேசித்தான்.

தந்தை கண்டித்தார். தாய் தவித்தாள். எதிர்த்தாள் மகள். அதன் விளைவு?

அறுபது வயது அழகுச் சீமான் அருளம்பலத்திற்கு இல்லக் கிழத்தியாக மணம் முடித்தார் அல்லியின் தந்தை.

மணமான மறுநாள். மார்பு வலி எனப் படுத்தாள் மங்கை.

மானங்கெட்ட சமூகத்தாரால் ஒதுக்கப்பட்ட மறக்குடியான் அமுதன், மங்கையைக் காணாது தவித்தான்.

பணம் கொடுத்துப் பெற்றோம் பாவையை! அணுக முடியவில்லையே எனப் பதைத்தார் அருளம்பலம்.

கடன் தீர்ந்தது, கவலை ஒழிந்தது, களிப்புடன் இனி வாழலாம் எனக் கண்மூடி இருந்தார் கனகசபை—அல்லியின் தந்தை.

மகளுக்கு இப்படி ஆகிவிட்டதே என மனங் குமுறினாள் தாய்!

அவளுக்கு இனி என்ன குறைச்சல்! சீமான் வீட்டுக்காரி! என இரத்தினச் சுருக்கமாக ஒரே வரியில் நிறுத்தினர் ஊர்ப் பெரியவர்கள்.

மந்தியிடம் சிக்கி விட்டது மலர்மாலை என்றனர் மைனர் பேர்வழிகள்.

மன முறிவுக்கு மாற்று மருந்தில்லை என உணர்ந்தாள் அல்லி. எப்படியும் ஒரு தடவை அமுதனை சந்திக்க முடிவு செய்தாள். அவனும் விரும்பினான்.

* * *

இரவு!

நீல வானத்தே நிலவு பவனி வந்து கொண்டிருந்தது. இளந் தென்றல் இதமாக வீசியது. இன்ப கீதமிசைத்தன சில் வண்டுகள்.

"அல்லி!" என்றான்.

"அமுதன்!" என்றாள். ஏனோ சத்தற்றிருந்தது அம்மொழி!

சாதி, மதம் இவை யாவற்றையும்விடக் கொடியது—பலம் வாய்ந்தது பணம்! இவை யாவுமே நம்முடைய காதலுக்குத் தடை!

"இரக்கமற்ற மனித சமுதாயம்! மடமையை வளர்க்கும் மதம்! ஒன்றுபட்ட காதலரைத் துண்டிக்கும் கொடிய சாதி! இவை அனைத்தும் அழிந்தால்தான் ஆனந்த வாழ்வை அடைய முடியும், நம்போன்ற இளம் காதலர்கள்! நாம் வாழ்விழந்தோம்; மற்ற கோடி பேர்க்கு வாழ்வளிப்போம். அதற்கான ஆக்க வேலையை—பிரசாரப் பணியை நாமே தொடங்குவோம்!" ஆவேசமாக-ஆணித்தரமாக உரைத்தான் அமுதன்! சேவை புரிய ஒப்பினாள் சேயிழை. ஆனால் வழி....? அவன் பணபலமற்ற சுதந்தர வீரன். அவள் பணபலம் பெற்ற கொத்தடிமை! ஆலோசனையில் மூழ்கினர்.

கையிலே கொய்யா! அதனைக் கொத்தத் துடிக்கும் கிளி! பக்கத்தினிலே பழரசம்! அதனைப் பருகத் துள்ளும் பருவக் காளை! இப்படித்தான் நினைப்பார்கள் மற்றவர்கள்.

"அன்பே" என்றான். அவன் குரலில் காதலின் வேகமில்லை. கடமையின் கனிவு இருந்தது.

"அன்பரே!" என்றாள். அவள் குரலில் வெறியில்லை; வேதனை கலந்த தியாக உணர்வு கொப்பளித்தது!

(12-ம் பக்கம் பார்க்க)

> பிறரால் இகழப்படாமையை வேண்டுவோன் இவன் என்று சொல்லப்படும் ஒருவன், பிறரின் யாதொரு பொருளையும் கனவிலும் கொள்ளாமல் தன் நெஞ்சைக் காக்க.
>
> —திருவள்ளுவர்.



# சட்டசபையுள்ளும், புறமும்.

அறிஞர் அண்ணா

நிதி அமைச்சர் சுப்பிரமணியம், சட்டமன்றத்தில் நமது கழகத் தோழர்கள் எடுத்துச் சொன்ன அத்தனை வாதங்களுக்கும் மூன்று வகையான பதிலை அளித்ததை நீங்கள் பத்திரிகையிலே பார்க்கலாம். அதில் முதல் வகையான பதிலில், அவர் தன்னை ஒரு **ஆசிரியராக** ஆக்கிக்கொண்டார். இரண்டாவது வகையான பதிலில், அவர் ஒரு **வக்கீலாக** மாறினார்; மூன்றாவது பதிலில், அவர் **வியாபாரியாக** வடிவமெடுத்தார்.

முதல் பதிலில் ஆசிரியராக இருந்தார் என்று சொன்னதற்குக் காரணம், எங்களையெல்லாம் பார்த்து அவர் சொன்னார்: "இவர்களுக்கெல்லாம் பாவம், அனுபவமில்லை; ஆகையினால், எதை எதையோ பேசுகின்றார்கள்" என்று! அவர் கவனித்தாரோ இல்லையோ, எங்களுக்கு அனுபவமில்லை; ஏதேதோ பேசுகின்றோம் என்று எங்களைப் பார்த்து அவர்சொன்ன நேரத்தில், நான் யாரைப்பார்த்தேனென்றால் — கக்கனைப் பார்த்தேன்; லூர்தம்மையாரைப் பார்த்தேன்; வெங்கடராமன் அவர்களைப் பார்த்தேன். இராமையா அவர்களைப் பார்த்தேன்.

அந்தப் பார்வையினுடைய பொருள்: 'எங்களுக்கும் அதிக அனுபவமில்லை, மந்திரிமார்களே! உங்களுக்கும்கூட இல்லை. அதைத்தான் மந்திரி சொல்லுகின்றார் என்பது தான்! அதை சுப்பிரமணியம் புரிந்து கொண்டாரோ இல்லையோ, மற்ற மந்திரிமார்கள் தெரிந்திருக்கக்கூடும்.

இரண்டாவது பதிலில், வக்கீலாக வடிவெடுத்தார், என்று சொன்னேன்; அது எந்தவகையிலே என்றால், நாங்கள் சொல்லாத ஒன்றை எடுத்து வைத்துக்கொண்டு, சொன்னதாக அவராகக் கற்பனை செய்துகொண்டு அதற்குப் பிறகு வாதங்களை செய்தார்.

உதாரணத்திற்கு உங்களுக்குச் சொல்லுவேன் — எட்டும் நான்கும் பதினைந்து என்று ஒப்புக்கொண்டால், பதினைந்தும் ஐந்தும் இருபதுதான்; இந்தக் கணக்கிலே ஒன்றும் தப்பில்லை. பதினைந்தையும்— ஐந்தையும் கூட்டினால் இருபது; ஆனால் எட்டும் நான்கும் பனிரெண்டாகஇருக்க, எட்டும் நான்கும் பதினைந்து என்கிறார் சுப்பிரமணியம். நான் உடனே குறுக்கிட்டு எழுந்து, 'ஐயா! எட்டும் நான்கும் பதினைந்து அல்லவே; பனிரெண்டு தானே!' என்று சொன்னால், 'இப்பொழுது குறுக்கிடாதே; பின்னாலே பேசலாம்' என்கிறார்.

அதைப்போல, நாங்கள் சொல்லாத ஒன்றை எடுத்து வைத்துக்கொண்டு, 'எட்டும் நான்கும் பதினைந்து என்று அண்ணாதுரை சொன்னார்' என்று வைத்துக்கொண்டு, அந்த பதினைந்தையும்—இதோ இந்த ஐந்தையும் வைத்துக் கூட்டுங்கள்; இருபது ஆகிறதா இல்லையா?' என்று கேட்கிறார். காங்கிரஸ் அங்கத்தினர்கள் விரல் விடுகிறார்கள். 15-16-17-18-19-20; ஆகா! நம்முடைய நிதியமைச்சர் எவ்வளவு பெரிய சமார்த்தியசாலி! பதினைந்தும் ஐந்தும் இருபதுதானே! இவர்களுக்கு இது தெரியவில்லையே, என்று எங்களைப் பார்த்துக் கேட்கின்றார்கள்!

மூன்றாவது பதிலில் ஒரு வியாபாரியானார்; அந்த வியாபாரியான நேரத்திலேதான் 'ஒரு 10 வருடத்திற்கு நமக்குள்ளே தகராறு வேண்டாம்; அதற்குள்ளே என்னுடைய காரியத்தை நான் முடித்துக் கொள்கிறேன்,' என்று வியாபாரி வாதத்திலே சொன்னார்.

அவர் எந்த ரூபமெடுத்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகம் ஒரே ஒரு ரூபத்திலேதான் நாட்டு மக்களிடத்திலே காட்சியளிக்கின்றது. இந்த நாட்டு மக்களின் அறியாமையை, இந்த நாட்டு மக்களுடைய ஏழ்மையை, இந்த நாட்டு மக்களுடைய அடிமைத்தனத்தை—இவைகள் நீங்கப்பட வேண்டுமென்றால், வடநாட்டு ஏகாதிபத்தியப் பிடிப்பிலேயிருந்து விடுபட்டாலொழிய, நமக்கு மார்க்கமில்லை— நமக்கு விமோசனமில்லை—பரிகாரமில்லை என்பதை நாங்கள் ஆழ்ந்து சிந்தித்து—ஆதாரங்களைத் தேடிப் பார்த்து—புள்ளி விவரங்களை அலசிப் பார்த்து —பூகோளத்தையும் சரித்திரத்

(11-ம் பக்கம் பார்க்க)






# மானவதி

ப. கண்ணன்

(முன் இதழ் தொடர்ச்சி)

**லோபா**:- நம்மளவாளோட சமர்த்து அவாளுக்கெப்படித் தெரியும்? வெண்ணெயை நெய்யாக்குவம்; எள்ளை எண்ணெய்யாக்குவம்; பூனையைப் புலியாக்குவம், புலியை எலியாவும் ஆக்கிடுவம்: இனிமேத்தான் தெரிஞ்சுக்குவா.

**அகஸ்**:- இவாளோட க்ஷேமத்துக்காக நம்மாலே எதுவும் செய்ய முடியுமே; எதுவும்! இல்லையா?

**லோபா**:- ஆமாம், இவாளோட க்ஷேமத்துக்கு.... இவாளோட க்ஷேமத்துக்கேதான். (**நெஞ்சில் கைவைக்கிறான்**) எதுவும் செய்ய முடியுமே!

**சிலம்**:- சாமி! மழை பெய்யவைக்கவும் ஒங்களாலே முடியுமா சாமி?

**அகஸ்**:- (**சிரித்து**) சூத்ர ஜென்மங்களே! ஜென்மங்களே! எங்களாலே செய்ய முடியாத காரியம் லோகத்திலே என்னப்பா இருக்கு? சகல பிராணிகளுக்கும் நாங்களே தலைவா. எல்லா பொருளுக்கும் நாங்களே சொந்தக்காரர்னு மனுதர்ம சாஸ்திரமே சொல்லியிருக்கே! எங்களோட சக்தியைத் தெரிஞ்சுக்காமலா ஆண்டவன் அப்படி விதிச்சிருக்கார்? (**கோபித்து**) சே! நீங்க அறிவில்லாதவா; அகந்தை பிடிச்சவா, ஒங்களுக்குக் கொஞ்சமும் தெரியலே! கழுதைக்குத் தெரியுமோ கற்பூர வாசனை?

**கோர்பா**:- கோவிச்சுக்காதீங்க சாமி! சொன்னாத்தானே தெரியும். எப்படியாவது இப்ப மழை வேணும். அதுக்கு என்ன வழி? அதைச் சொல்லுங்க சாமி.

**அகஸ்**:- வழி! அற்புதமான வழியிருக்கு! மழைக்குக் கடவுள் வருணன். மந்திரம் ஜபம் யாகங்களின் மூலம் அவனோட மனசைக் குளிரவச்சோமானா, மழை கொட்டு கொட்டுன்னு கொட்டும்; தவச தான்யங்கள் ஏதேஷ்டமா வெளையும்! பசி, பட்டினியெல்லாம் பறந்து போகும்; ஆனா, அரசாங்கம் ஒப்புக்கணுமே! ஐயோ, யாகம் செய்யறாளே! ஆட்டைக் கொல்றாளே; மாட்டைக் கொல்றாளேன்னு அலறாமே இருக்கணுமே! தடுக்காமெ இருக்கணுமே!

**கோர்பா**:- அதைப்பத்திக் கவலைப்படாதிங்க சாமி. ஆபத்து வராமெ நாங்க பாத்துக்கறோம். என்ன சிலம்பா!...

**சிலம்**:- ஆமாண்ணே! யாகம் நடக்கணும். நம்ம ஜனங்க நல்லாப்பொழைக்கணும், செய்யுங்க சாமி; எதுவேணாலும் செய்யுங்க சாமி.

**அகஸ்**:- அதுசரியப்பா! நீங்க காமவல்லியோட ஆணைக்குக் கட்டுப்பட்ட நாட்டதிகாரிகள். அவ கட்டளைப்படி நடக்கவேண்டியவா. வேள்வி செய்யறதோ, இந்த நாஸ்திக ராஜ்யத்திலே சட்ட விரோதம்; நாளைக்கு வரும் அர

சாங்கத்தோட கட்டளையை மீறி. யாகத்திற்கு ஒதவ ஒங்களுக்கு ஆண்மையிருக்குமோ? ஏண்டி லோபா!...

**லோபா:-** **(சாக்கீமாக)** ஆமாமா, கேக்க வேண்டிய கேள்விதான். ஆட்களைப் பார்க்கறச்சே ஆண்மையுள்ளவா போலத்தான் இருக்கா! செயல்லே எப்படியோ?...

**சில:-** ருசுப்படுத்திக் காட்டுவோம். ஒரு புனிதமான தெய்வ காரியத்தை தடுக்கற அரசாங்கத்தை எதிர்க்கவும் நாங்க தயாரா இருக்கரோம். வேடர்களான எங்கக் குடிமக்களை யெல்லாம் தெரட்டிக் கொண்டாந்து, யாகத்தைப் பாதுகாக்கரோம் சாமி; பயப்பட வேணும்.

**அகஸ்:-** பிரம்ம சத்தியமாக?

**கொம்ப:-** சத்தியமாக!

(அவர் கையில் அடிக்கப் போகிருன். தீண்டக்கூடாது என்று அவர் பின் வாங்குகிருர். லோபா வெடுக்கென்று முன்வந்து கையைநீட்ட, அவள் கையில் கொம்பன் அடிக்கிருன். பின் இருவரும் உணர்ச்சி வயப்பட்டு விடாமல் பிடித்துக்கொண்டு நிற்கின்றனர். அகஸ்தியர் அதை கவனிக்கவில்லை.)

**அக:-** **(சிலம்பனிடம் திரும்பி)** சபாஷ்! ஜெய் ஆர்யம்! வருண பகவானை திருப்திபடுத்த கோமேத யாகமே செஞ்சுடலாம். கொழுத்த பசு ஒன்று கொணருங்கள். அரசுக்குச்சி அஞ்சு சுமை, தர்ப்பை ரெண்டு கட்டு, பசுநெய் பத்துக்குடம், பச்சரிசி நாலுமுடக்கு, மஞ்சள், மாவிலை, பழம், தேங்காய் மற்ற சாமான் விபரம் பின்னல் சொல்றேன். திருப்திதானே சிலம்பா?

**சில:-** கொம்பனைக்கேளுங்க சாமி.

**அகஸ்:-** ஒனக்கு திருப்திதானே கொம்பா?

(கேட்டவண்ணம் திரும்புகிருர். லோபாவும் அவனும் கைகளைப் பற்றியவண்ணம் ஒருவரையொருவர் ஆசையோடு பார்த்துக்கொண்டு நிற்கின்றனர். பதைக்கிருர் அகஸ்தியர்.)

**கொம்ப:-** ஆ:கா! பூரண திருப்பி சாமி; பூரண திருப்தி!

**அகஸ்:-** **(சோகத்தோடு)** :கே! வருண பகவானே! மழையைக் கொடுன்னு கேக்கறச்சே; இப்படி இடியையோன்னு ஏந் தலையிலே போடறே! இதுவும் நோக்கு திருப்திதானோ?...

(குழைந்து நெளிந்து கும்பிட்டு, கையை விரிக்கிருர்.)

## காட்சி 8.

**இடம்:** **அரண்மனைப் பூங்கா.**

**காலம்:** **மாலை.**

(காமவல்லி யாழ் மிழற்றிப் பாடுகிருள். "மானம் பெரிது—வாழ்வு சிறிது. அன்பு பெரிது—அகிம்சை கொடிது" என்ற கருத்துக்கள் பாடலில் பரிமளிக்கின்றன.

ஐவணம் மலர்மாலை தொடுத்துக்கொண்டிருக்கிருள்.

பாட்டு முடிவில் காட்டுப் புரு வொன்று பறந்து வந்து காமவல்லியின் முன்பு விழுகின்றது. பரிவோடு எடுத்து நீவிக் கொடுக்கிருள் அரசி.

நரிக்குறவன் ஒருவன் கவுதாரிக் கூடையோடு வேகமாக ஓடிவருகின்றுன். மகாராணி கையிலே புரு இருப்பது கண்டு பின்னடைகின்றுன்.)

**காமவ:-** யாரப்பா நீ? ஓ! பறவை பிடிப்பவனே? இங்கே ஏன் வந்தாய்?

**நரிக்:-** **(பணிவோடு)** மவராணி! அது ஏம் புரு மவராணி! காட்டிலே கயிட்டப்பட்டு புடிச்சதுங்க. தப்பிவந்துடிச்சி மவராணி!

**காமவ:-** பாதகமில்லை. கூடையில் இன்னும் என்ன இருக்கிறது?

**நரிக்:-** காடை, கவுதாரி, காணுங்கோழி, காட்டுப்புரு அல்லாம் ஈக்குது மவராணி.

**காமவ:-** இவற்றையெல்லாம் கொண்டு போய், வயிற்றைப் புதைகாடாக்குவோரிடம் விலைக்குத்தானே விற்கப்போகிருய்?

**நரிக்:-** ஆமா மவராணி! ஆசையா துன்றவங்க, நல்ல பணம் குடுப்பாங்க மவராணி!



**காமவ:-** உனக்குப் பணம் பெற்றளித்து விட்டுப் பிணமாகப் போகின்றன இந்தப் பறவைகள்! என்ன கொடுமையான தியாகம்! அப்பனே! எல்லாவற்றையும் நானே வாங்கிக் கொள்கிறேன். என்ன விலை கேட்கிருய்? இப்படிக் கொடு.

**நரிக்:-** **(கூடையைக் கொடுத்து)** ஒங்ககிட்டே எப்டீ மவராணி யாபாரம் பேசறது? நானு ஏளைங்க; இதேதான் சீவனம். எனக்கு ரெண்டு பொஞ்சாதி, ஆறு புள்ளைவ, வயிருறக் கஞ்சி குடிக்கணும்! குடுத்ததைக் குடுங்க மவராணி.

**காமவ:-** ஐவணம்!

**ஐவண:-** தேவி!

**காமவ:-** அரண்மனைக்கு அழைத்துச்செல் இவனை. இந்த வண்ணப் பறவைகளைக் கூடையோடு வைத்துக்கொண்டு, விலையாக இரண்டு பொன் கொடுக்கச் சொல்.

**ஐவண:-** **(கூடையைப் பெற்றுக்கொண்டு)** வாப்பா! வா, இன்னைக்கு நரிமொகத்திலே முழிச்சிருப்பே! வா!

**நரிக்:-** **(வியந்து)** ரெண்டு பொன்! அடயப் போய்! அட சாமி! அட யாத்தே! ரெண்டு பொன்!! நாலு மாசத்துக்கும் சம்பாதிக்க முடியாதே! மவராணி! நீங்க நல்லாருக்கணும் மவராணி! இன்னமே தெனம் புடிச்சாறேன்; ரொம்ப ரொம்ப புடிச்சாறேன் மவராணி!

**காமவ:-** வேண்டாம் அப்பனே! குற்றமற்ற இந்தச் சீவராசிகளை, அறுத்துத் தின்பதற்கல்ல நான் வாங்கியது. விடுதலைசெய்து பறக்கவிடவே வாங்கினேன். உயிர்களைக் கொன்று புசித்து, ஊன்வளர்க்கும் வன்செயல் இந்நாட்டில் சட்ட விரோதம்! நீயறியாய்! உனது கொலைத் தொழில் இன்றோடு முடிவு பெறட்டும். இனிமேல் இதுபோல் சுதந்திரப் பறவைகளைப் பிடிக்கக் கூடாது. இந்தக் கொலை வாணிபத்தை விட்டுவிட வேண்டும். இல்லையேல், தண்டிக்கப் படுவாய்!

**நரிக்:-** **(அழுது)** ஐயயோ! என்ன மவராணி! ஏங் குடும்பம் என்னமாப் போறது மவராணி? ஏம் பொழப்பிலே மண்ணைப் போடாதீங்க மவராணி!

**காமவ:-** உன் பிழைப்பிலே நான் போடுவது மண்ணல்ல; சர்க்கரை! நாளைமுதல் நகரத்து அறச்சாலையொன்றில் நீ காவற்காரன். மாதம் நான்கு பொன் ஊதியம். போ!

**நரிக்:-** **(மகிழ்ந்து)** மவராணி! மவராணி! நெசந்தாறு மவராணி! நீங்க நல்லாருக்கணும்! நல்லாருக்கணும் மவராணி! இன்னமே காடை கவுதாரிங்களை கனவுலேயும்பிடிக்கமாட்டேன். மவராணி!

(மண்டியிட்டு வணங்கிவிட்டுச் செல்லுகிருன், ஐவணத்தோடு. புருவைக் கையில் வைத்துப் மகிழ்வோடு பறக்க விடுகிருள் மகாராணி.)

## காட்சி 9.

**இடம்:** **தண்டகவனம்.**

**காலம்:** **மாலை.**

(இராமன், இலக்குவன், சீதை மூவரும் பரிதாப கோலத்தில் வருகின்றனர். சீதை நடக்க முடியாமல் சோர்ந்து ஒரு கல்லின்மேல் உட்கார்ந்து விடுகிருள்.)

**இராம:-** சீதே! **(அருகில் சென்று)** நடந்து நடந்து, நேக்குந்தான் கால் கையெல்லாம் நோவறது! என்னடீ செய்யறது? நம்மோட விதி நம்மை இப்படியெல்லாம் ஆட்டிப்படைக்கிறது. ஏந்துவா. இன்னும் கொஞ்ச தூரம் போனு, ஏதேனும் குடிசைகள் கெடைக்கும். ஏந்திரு! ஊம்! ஏந்திருடி!

**சீதை:-** நேக்குப் பிராணன் போறது. என்னாலே இனிமே ஒரு அடி வைக்கமுடியாது.

**இராம:-** போது மறையறதுக்குள்ளே, எங்கெயாவது போய்ச் சேரணுமேடி! சீதே! என் தோள்மேலே ஏறிண்டுடு, நான் தூக்கிண்டு போறேன். ஊம்!...

**சீதை:-** போறும் போறும்! வேணுங்கிறப்போ அன்பு அபரிமிதமா காட்டுவேள். சிரசு மேலேயும் தூக்கி வச்சுக்குவேள்! தேவை முடிஞ்சதும் திடீர்னு கீழே போடுவேள். பாதாளக் குழியிலே உருட்டித்தள்ளி, பச்சை மண்ணைப்போட்டு மூடிடுவேள்!

**இராம:-** அடி மூதேவி! என்னடி அகியாயமா வையறே? நான் ஒன்னை அப்படி என்னடி செஞ்சிட்டேன்?

**சீதை:-** **(குமுறலோடு)** என்ன செஞ்சிட்டேன்னு கேக்கறேள்? அண்ணனும் தம்பியுமா சேர்ந்து, காடுமேடெல்லாம் இழுத்தடிக்க

றேளே! போராதா? அரண்மனையிலே பஞ்சுப் பாவாடையிட்டு நடக்கற பாதங்கள், ஆரண்யத்திலே கல்லிலும் முள்ளிலுமா நடந்து ரத்தம் சிந்தறதே! நேரத்துக்கு நேரம் பாலமுதும், பரமான்னமும் புசிக்கிற வாய்க்கு ஒரு வேளைச் சோறு கெடைக்கலியே! மஞ்சத்திலே தூங்கி, பன்னீரிலே நீராடும் பொன்மேனியை, பட்டுப்பீதாம்பரங்கள்—நவரத்தின மணிமாலைகளை அணியக்கூடிய மலர் மேனியை, காட்டுப் புழுதியிலே கிடத்தி, கந்தலுடுத்தச் செய்து, கசக்கிப்பிழிஞ்சி வறண்ட மேனியாக்கிட்டீரே! என கூந்தல் எண்ணெயைக்கண்டு எத்தனை காலமாச்சு? நெனைச்சதுண்டா இதைப்பத்தி?

**இராம:-** அடடே! என்னடி நெலமை தெரியாமெ அடுக்கிண்டே போறே?

**சீதை:-** மகாராஜாவோட புத்திரியா வளர்ந்தேன், மகாராஜாவோட மகனையே பதியாக அடைஞ்சேன். என்ன பிரயோசனம்? பஞ்சையா—பராரியா—பிச்சைக்காரியா காடு சுத்தறேனே! இதுதானு கிரகஸ்த சுகம்? இதுதானு உம்மைக் கட்டிண்டதோட பலன்? சகதர்மிணியை சந்தோஷமா வைக்கமுடியாத புருஷனும் ஒரு புருஷனு?

**இராம:-** (கடுப்பாக) சீதே! அதையும் இதையும் பேசி நேக்கு ஆத்திரத்தைக்கௌப்பாதே! நான் பொல்லாதவனயிடுவேன். இப்ப நீ என்ன செய்யணும்கிறே?

**சீதை:-** நானு? நியாயமா சொல்றேன் கேளுங்க: எப்படியோ படாத கஷ்டப்பட்டு பத்து வருஷத்தை காட்டிலே கழிச்சுட்டோம். இன்னமும் தெற்கே போற காரியம் வேணும். மிதிலைக்கு எங்கப்பாகிட்டே போவோம், அரண்மனையிலே நாலு வருஷமாவது நன்னுப் பொழைச்சிட்டு அயோத்தியாவுக்குத் திரும்புவோம். வாங்க.

**இராம:-** அது முடியாது. பதினலு வருஷமும் வனவாசம் செய்யலேன்னு தெரிஞ்சா, பரதன் கொடுத்தாலும், அந்தப் படுபாவி கைகேசி அரசாட்சியைக் கொடுக்கமாட்டாளே! நான் சிங்காசனம் ஏற முடியாதே! சித்தியோட எண்ணம் நெறைவேறிப் போயிடுமே!

**இலக்கு:-** மூத்தவா சொல்றவார்த்தை அமிர்தம்னு பெரியவா சொல்லுவா. அண்ணியோட வார்த்தைக்கும் கொஞ்சம் காது கொடுங்கண்ணு!

**இராம:-** தம்பி! மூடுவாயை. அண்ணிக்குப் பரிஞ்சிண்டு பேச வறயோ? அவள் ஸ்திரீ! நாம்ப புருஷாள்டா!

**இலக்கு:-** ஆமாண்ணு! புருஷாள்!

**சீதை:-** அப்படின்னு என்னை மட்டும் மிதிலையிலே கொண்டுபோய் விட்டுடுங்க! இனிமே என்னலே சகிக்க முடியாது இந்த வனவாசத்தை!

**இராம:-** அடியே! நீ அரண்மனையிலே, நான் ஆரண்யத்திலா? சீதே! ஒன்னை விட்டுப் பிரிஞ்சு எப்படியடி ஜீவிப்பேன்? ஐயயோ! முடியவே முடியாது!

**சீதை:-** அப்படியானு கேளுங்க; கஷ்டப்பட்டுகிட்டு நானும் ஒங்களோடவே இருக்கணும்னு, ஒங்க எண்ணத்தை—நடைமுறையை கொஞ்சம் மாத்திக்குங்க. முடியுமோ?

**இராம:-** எப்படி மாத்தணும்கிறே?

**சீதை:-** தோபாருங்க. இந்த தேசம் திராவிடாளுக்குச் சொந்தமானது. இதைநாம்ப ஆள நெனைக்கறது துராசை! மேலும் அவா படைபலம் கொண்டவா, பண்பட்ட வீரா; நேர்மையானவா, அவாளை எதிர்த்துண்டு வில்லையும் அம்பையும் தூக்கறது நமக்கு ஆபத்து! நம்ம ரிஷிகளோட வார்த்தையைக் கேட்டுண்டு தெற்கே போறதும், திராவிடாளோடு சண்டை போடறதும் நேக்குப் பிடிக்கலே! வில்லையும் அம்பையும் வீசி எறிஞ்சுடுங்க! ஏதோ ஒரு குடிசையிலே மீதி காலத்தைக் கழிச்சுடுவோம். என்ன சொல்றேள் சுவாமி?

**இராம:-** முடியாது! நிச்சயமா முடியாது! நான் தென்னட்டுக்குப் போயே தீரணும். நம்மளவாளுக்கு ஏற்படற ஆபத்தைப் போக்கியே ஆகணும். சீதே! தேவேந்திரனிடம் சொன்ன வாக்குத் தவறலாமோ? துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்யறேன்னு பெரியவாளிடம் சத்தியம் செஞ்சிட்டேன்! நெறைவேத்தியே தீருவேன்!

**சீதை:-** அப்படியானு நிச்சயமா நான் ஒங்களோட வரமுடியாது. மிதிலைக்கு நேக்கு மார்க்கம் தெரியும். என்ன ஆபத்து நேர்ந்தாலும் சரி, தன்னந்தனியாகவே நான் போயே தீருவேன்.

**(வேகமாகச் செல்லுகிருள். ஓடிக் குறுக்கே நின்று தடுக்கிருன் இராமன்.)**

(வளரும்)



[6-ம் பக்கம் தொடர்ச்சி]

தையும் படித்துப் பார்த்து—உலக வரலாறுகளையெல்லாம் அலசிப் பார்த்து, அதற்குப் பிறகு இந்த முடிவுக்கு வந்தோமே தவிர, ஏதோ சபலத்திலே இந்த முடிவுக்கு வரவில்லை என்பதை நிதியமைச்சர் சுப்ரமணியம் அவர்களுக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

பெண்ணே! ஒரு 10 நிமிடத்திற்கு கண்ணை மூடிக்கொள், என்று ஒரு காமுகன் சொன்னல், பெண் கண்ணை மூடிக்கொள்ளமாட்டாள். அதைப் போல, நாட்டு விடுதலையிலே நாட்டம் கொண்டிருக்கும் ஒரு இயக்கத்தின் காரியங்களைப் பார்த்து, "திராவிட நாடு கேட்பதை 10 வருடத்திற்கு நிறுத்திக்கொள்ளுங்கள்' என்று சொல்வதற்கும், காமாந்தகாரன் கன்னிகையை அணுகி, 'நான் செய்கின்ற காரியத்தை நீ பார்த்தால்தானே அருவறுப்பாக இருக்கும்; ஒரு 10 நிமிடம் கண்ணை மூடிக்கொள்' என்று சொல்வதற்கும் அதிகமான வித்தியாசம் இருப்பதாக நான் கருதவில்லை.

நாங்கள் சட்டமன்றத்திற்குச் செல்ல முடியுமா என்ற எண்ணமே தோன்ருத நாள் முதற்கொண்டு இந்த காரியத்திலே ஈடுபட்டது எதற்காக என்ருல், நாட்டுவிடுதலைக்காகவும்—நம்முடைய அரசை நாமே அமைக்கவேண்டுமென்பதற்காகவும்தானே தவிர, வேறு எந்தக் காரியத்திற்காகவும் அல்ல! அதிலேயிருந்து இம்மியளவும் திராவிட முன்னேற்றக் கழகம் நழுவாது; ஒரு துளியும் எங்களை வேறு பக்கத்திலே திருப்பிவிட முடியாது; அல்லது போர் முழக்கத்தை ஒரு பக்கத்திலே எழுப்பி, அதன் மூலமாக மிரட்டி ஒரு பக்கத்திலே அழைக்க முடியாது!

காற்று பலமாக அடிக்கிற பொழுதுதான் விளக்கு அணையாமல் இருப்பதற்காக சன்னல் கதவை மூடுவார்கள். நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சொல்லுகிருர்: 'இந்தக் காற்று அடிக்கிறபொழுது சன்னலை மூடாதே! காற்று நின்றதும் வேண்டுமானல் சன்னலை மூடிக்கொள்' என்று' இதைத்தவிர, 'இந்த 10-வருட காலம் சும்மாயிரு' என்று அவர் சொன்னதற்கு ஒரு பொருளும் எனக்கு விளங்கவில்லை.

நேரு பண்டிதரிடத்திலே நல்ல நம்பிக்கையும், மதிப்பும் இருக்கின்ற காரணத்தினலே தான், அவர் காலத்திலேயே இந்தக் காரியம் வெற்றிபெற வேண்டுமென்று விரும்புகிறேன். அவர் இதுவரை இந்தக் காரியத்திலே கவனம் செலுத்தாமல் இருந்திருக்கின்ருர்; இனி கவனம் செலுத்துவார். கவனத்தை செலுத்தத்தக்க அளவில்—கவனத்தை ஈர்க்கத்தக்க வகையில், நாங்கள் 15 பேரும் சட்டமன்றத்திலே நம்முடைய உரிமை முழக்கத்தை அவ்வப்போது எடுத்து முழக்குவோம்.

இந்த சூட்சுமத்தை தெரிந்த காரணத்தினல்தான், நிதி அமைச்சர் சுப்பிரமணியம் மற்ருெரு புத்திமதி சொன்னர்: அண்ணதுரை—அண்ணதுரை! நீ, மேடையிலே பேசியதைப்போல இங்கே பேசாதே! இங்கே வேறுமாதிரியாகப் பேசு என்று சொன்னர்; நான் ஏமாறத் தயாராயில்லை.

சட்ட மன்றத்தில் எங்களுடைய மனக்குமுறலை உங்கள் முன்னலே எடுத்துவைக்கிரோம்; மக்கள் படுகின்ற கஷ்ட நஷ்டங்களை சித்திரித்துக்காட்டுகின்ரோம். வெடித்துக் கிடக்கின்ற—காய்ந்து கிடக்கின்ற வயலையும், எண்ணெய் காணத தலையையும், குழி விழுந்தகன்னங்களையும் புள்ளி விவரங்களாலே மட்டும் காட்டிவிட முடியாது.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் ஏழை மக்களுக்கு நன்மை செய்ததா என்று நான் சட்டசபையில் கேட்டேன். அவருடைய பேச்சில் அவர் சொன்ன பதில், 'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பலன் ஏற்பட்டிருக்கிறது' என்கிருர்: யார் இல்லை என்கிருர்கள்? நான் கேட்கும் கேள்வி, 'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தினல் ஏற்பட்ட பலன் ஏழைக்குக் கிடைத்ததா என்பது! 'சாப்பிட்டாயிற்ரு' என்று கேட்டால், 'ஆம், ஆயிற்றே' என்று வீட்டு முதலாளி சொல்வதற்காக நான் கேட்கவில்லை; நான் கேட்டது அங்கே பணியாற்றுகின்ருனே பாட்டாளி, அவனைப் பார்த்துக் கேட்கிறேன்- 'அப்பா, சாப்பிட்டாயா' என்று! ஏப்பம் விட்டுக்கொண்டே முதலாளி சொல்கிருன்: 'ஓ, சாப்பிட்டாயிற்றே!' இதனலா எனக்குத் திருப்தி இருக்கும்?

நாம் நிதிஅமைச்சர் சுப்பிரமணியத்திடம் எதிர்பார்க்கும் பதில், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், 'இத்தனை இலட்சம் பேருக்குப் புதிதாகவேலை கொடுத்தோம்; இரண்டு ரூபாய் சம்பாதித்துக்கொண்டிருந்தவன் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பின் நான்கு ரூபாய் சம்பாதிக்கிருன்; எண்ணெய் காணத தலைக்கு இன்றையத்தினம் எண்ணெய் கிடைத்திருக்கிறது; கல்வி இல்லாத மக்களுக்கு நல்ல கல்விச் சாலைகள் திறக்கப்பட்டன' என்று புள்ளிவிபரம் தருவார் என்று பார்த்தால், அவர் சொன்ன

[13-ம் பக்கம் பார்க்க]

[8-ம் பக்கம் தொடர்ச்சி]

"படார்!" ஐயகோ, பலமான ஓர் அடி; இரும்புப் பூண் போட்ட குண்டாந் தடியால். அமுதனின் மண்டையில் விழுந்தது.

"ஆ! என அலறினன் அமுதன்!

"ஆ! ஐயோ! அமுதன்! என அலறித் துடித்து அடியற்ற மரம் போல் சாய்ந்தாள் அல்லி!

*  *  *

விடிந்தது!

டாக்டர் வந்தார். படுக்கையில் கிடத்தியிருந்தனர் அல்லியை. "உயிர் நீத்து மணி இரண்டாகி விட்டது" என்ருர் பரிசோதித்துப் பார்த்த டாக்டர். அவள் படுக்கை மரணப் படுக்கையாயிற்று!

வாயிலும், வயிற்றிலும் அடித்துக்கொண்டாள், அலறிஞள் அல்லியின் தாய்!

'எல்லாம் தலைவிதி; அவன் செயல்' எனத்தலைகவிழ்ந்திருந்தார் அல்லியின் தந்தை.

"ஒழிந்தது பீடை! ஒழிந்தான் விஞசகாலன்! காப்பாற்றி விட்டோம் குலப்பெருமையை!" என்றுகுதூகலத்திலாழ்ந்திருந்தார் அருளம்பலம்!

சற்று நேரத்திற்கொல்லாம், மாந்தோப்பில்பேய் அறைந்து, அமுதன் இறந்துகிடப்பதாகப் பேசிக் கொண்டனர்.

அமுதன்! அல்லி! இவ்விருவரையும் பேய் அறைந்தது உண்மைதான்! அறைந்தது சாமான்யப் பேய் அல்ல! பணப்பேய்! மதப்பேய்! சாதிப் பேய்!

இடுகாடு இரண்டு; அருகருகே! வெந்து கொண்டிருந்தன இரண்டு பிணங்கள். சிரித்துக் கொண்டிருந்தன அந்தப் பேய்கள்!

~●~


# இனிய தென்றல்

வெளியீடுகள்.

**ப. கண்ணன்.**

| | |
|---|---|
| புரட்சிப் பாடகன் | 1-8-0 |
| வீரவாலி | 1-4-0 |
| ஜமீன்தார் | 1-0-0 |
| காதல் மணம் | 0-8-0 |
| கன்னியின் சபதம் | 0-8-0 |
| சிந்தனைச் சித்திரம் | 0-10-0 |
| மின்னொளி | 0-6-0 |
| **மு. கருணாநிதி.** | |
| ஒரே முத்தம் | 1-4-0 |
| **சி. பி. சிற்றரசு.** | |
| சிந்தனைச் சுடர் | 0-5-0 |
| **அறிஞர் இங்கர்சால்** | |
| தமிழில்: இரா. நெடுஞ்செழியன் | |
| சமுதாய விடுதலை | 0-12-0 |
| **பாவலர். வேலாயுதசாமி.** | |
| திருக்குறள் இசைப்பாடல்கள் | |
| அறத்துப்பால் | 0-7-0 |
| அறிவுத் துளிர் | 0-3-0 |
| **குஞ்சிதம்—வடிவேலு.** | |
| கெட்டிக்காரன் | 0-2-6 |
| பைங்கிளி | 0-2-0 |
| ஆலமரத்துப்பேய் | 0-2-0 |
| வால்முளைத்த சாமியார் | 0-2-0 |
| அன்புமணி | 0-2-0 |

விற்பனையாளர்களுக்கு ஏற்ற கழிவுண்டு.

**தென்றல்**

**நூற்பதிப்புக் கழகம்,**

சலகண்டபுரம். சேலம் மாவட்டம்.

**தென்றல் நூல்கள் சென்னையில் கிடைக்குமிடம்:**

**பாரி நிலையம்,**

**59, பிராட்வே, சென்னை.**

**தென்றல் நூல்கள் இலங்கையில் கிடைக்குமிடம்:**

**ப. சுப்ரமணியம்,**

**பகுத்தறிவுப் பண்ணை,**

**113, கடல் தெரு, கொழும்பு.**


# பொன் மொழிகள்

மனிதன் தன்னுடைய அறிவை எந்த அளவுக்குத் தன்னுடை தொழிலோடு தொடர்பு படுத்திப் பார்க்கிருனே; அந்த அளவுக்கு முன்னேற்றத் துறையில் முன்னேறி வருபவனுக இருக்கிருன்.

—இங்கர்சால்.

மனிதன் மாண்ட பின் மறுபடியும் உயிர்பெற்று வாழுகிருன் என்னும் கொள்கை, எண்ணவே முடியாத ஒரு கற்பனை—நடைபெறக் கூடாத ஒரு செயல்! இயற்கையின் உண்மைகள் எல்லாம் இதனைத் தெளிவு படுத்துகின்றன.

—பெர்டாண்ட் ரசல்.

அறிதற்கரிய பயன்களை ஆராய வல்ல அறிவினையுடையார், பெரும் பயன் இல்லாத சொற்களைச் சொல்லார்.

—திருவள்ளுவர்.

மனிதனுகப் பிறந்த தன் கடமையைச் செய்வதற்கு நாம் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். ஒரு இலட்சியவாதியாக ஆகிவிட்டால், நமது பொறுப்புகள் மேலும் அதிகரித்து விடுகின்றன.

—ராகுலசாங்கிருத்யாயன்.

உணர்ச்சியும், சிந்தனு சக்தியும் ஒன்ருக இயங்கும்படி பிணைக்கப் பட்டவை. என்ருலும், பாய்மரக் கப்பல் காற்றடிக்கும் திசையில் செல்வதுபோல் அவை சமயத்திற்குச் சமயம் மாறிக்கொண்டே போகும்.

—அறிவன்.

கடவுள் மனிதனை மதியுடனே படைக்கிருன். மதியிருக்கும்வரை மனிதன்சரியானவழியில்நடக்கிருன். மதியிழந்தவன் விதிக்கு அடிமையாகிருன்.

—மில்டன்.



[11-ம் பக்கம் தொடர்ச்சி]

பதில், 'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பலன் ஏற்பட்டிருக்கிறது' என்பதுதான்!

அதற்கு நிதி அமைச்சர் சொல்கின்ற பதில் எல்லாம், 'மேடைப்பேச்சு பேசாதே' என்பதுதான். மேடைப் பேச்சு பேசாமல், அவருடைய பேச்சுப் பேசிஞல், இதை மறைக்கின்ற பேச்சுதான் வரும்.

மேடைப்பேச்சு என்பது உள்ளத்தைத் திறந்து பேசுவது; இதயத்தைக் காட்டிப் பேசுவது; ஈவுஇரக்கத்தோடு பேசுவது; அந்தப் பேச்சிலே நான் கேட்டேன்.

முதல் ஐந்தாண்டுத்திட்டத்தில், ஏழைக்குப் பலன்கிடைக்கவில்லை; என்பதை நான் அல்ல காங்கிரசில் இருக்கின்ற அகில இந்தியக் காங்கிரஸ் செயலாளர் ஸ்ரீமன் நாராயணன் அவர்கள் எழுதிய கட்டுரையை அங்கே படித்துக்காட்டினேன்.

வக்குவகை இருந்தால், அறிவு தெளிவு இருந்தால், ஆணவத் துணிவு இருந்தால், ஸ்ரீமன் நாராயணன் சொன்னது முட்டாள்தனம்' என்று பேசுவது தானே? அவருடைய கட்சிக் காரர்; அவர் கட்சியின் செயலாளர்; அகில இந்தியாவுக்குச் செயலாளர்; அவர், பேச்சிலே அல்ல, எழுத்தில் எழுதிக் காட்டியிருக்கிருர். 'இந்த 10 வருட காலக் காங்கிரஸ் ஆட்சியில், ஏழையின் உள்ளத்தில் மகிழ்ச்சி இல்லை; முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் பலன் ஏழை மகனுக்குப் போய்ச் சேரவில்லை; ஏழைக்கும் பணக்காரனுக்கும் இருந்துவருகிற வித்தியாசம் 10 ஆண்டுகளில் குறையவில்லை,' என்று வெட்ட வெளிச்சமாக எழுதியிருக்கிருர். அதைப் பட்டவர்த்தனமாகப் படித்துக் காட்டினேனே-ஏன் அதற்குப் பதில் அளிக்கக்கூடாது? மேடைப் பேச்சிலே வேண்டாம்; உங்களுக்கு அனுபவத்திலே பிறந்திருக்கிற பார்லிமெண்டரி பாஷையில் பேசுவதுதானே?

நான் கேட்ட கேள்விக்கு அவர் பதில் அளித்திருக்க வேண்டும்; இதை விட்டுவிட்டு, அவர் சொன்னதென்ன? முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பலன் ஏற்பட்டிருக்கிறது—பலன் நிச்சயம் ஏற்படும்; ஆனல், ஏற்படுகிற பலன் யாருக்கு என்பதுதான் பிரச்சினையே தவிர, பலன்—டாடாவுக்கு ஏற்பட்டிருக்கிறது; பிர்லாவுக்கு ஏற்பட்டிருக்கிறது; அண்ணாமலைச் செட்டியாரின் திருக்குமாருக்கு ஏற்பட்டிருக்கிறது; ஆலை அரசர்களுக்கேற்பட்டிருக்கிறது; 'கள்ள மார்க்கெட்'டுக் காரருக்கும், கொள்ளை இலாபக்காரருக்கும் ஏற்பட்டிருக்கிறது; அதனுடைய—பலனுடைய பங்கை சென்றதடவை தேர்தலில் காங்கிரஸ் கட்சியும் அடைந்து பலனையும் அனுபவித்திருக்கிறது. ஆனல், அது அல்லவே பிரச்சினை.

> சென்னையில் 6—7—57-ல், நடைபெற்ற கோடம்பாக்கம் தி. மு. கழக 4-வது ஆண்டு விழாவில் அறிஞர் அண்ணு அவர்கள் பேசியதன் சுருக்கம்.

மேடைப் பேச்சுக்கும் சட்டமன்றத்தில் பேசும் பேச்சுக்கும் ஏதோ ஒரு ஏறுமாருன கருத்து இருப்பதாக நிதி அமைச்சர் சுப்ரமணியம் தவருகக் கருதுகிருர். உலகத்தில் நல்ல பெயர் எடுத்துள்ள அத்தனைபேரும் மேடைப்பேச்சில் நல்ல பெயர் எடுத்தவர்கள் தான்.

ஏதோ, மேடைப் பேச்சு கெட்டது என்பது போலவும், அது சட்டசபையில் பேசக் கூடாத ஒன்று போலவும், அந்த பஞ்சமா பாதகத்தை நாம் கையாள்வது போலவும் அவர் சட்டசபையில் கூறுகிருர்.

எந்த அரசியல் கட்சி, மேடைப் பேச்சிலிருந்து முளைக்காமலிருக்கிறது? 'தரையில் செடி முளைக்கக்கூடாது: கையிலேயே மண்ணைப் போட்டு, அதில் விதை விதைத்து முளைத்துக் காட்டு' என்பதுபோல் மேடைப்பேச்சு வேண்டாம்; சட்டசபைக்கு வந்து, அவருடைய 'பட்ஜெட்' பிரசங்கத்தை எடுத்து ஆறும் பக்கத்தைத் திருப்புங்கள்; பன்னிரண்டாவது வரியில் பாருங்கள்—உரத்திற்காக ஒதுக்கியிருப்பது ரூ. 12,60,486; ஒரு இலட்சமல்ல, இரண்டு இலட்சமல்ல; மூன்று இலட்சமல்ல, எட்டு இலட்சமல்ல—பத்து இலட்சமல்ல; ப....ன்....னி....ர....ண்....டு இலட்சம்! இப்படிப் பேசச் சொல்லுகிருரா? இதை சட்டமன்றப் பேச்சென்று அவர் கருதுவாரானல், சட்டமன்றத்தைப் போல் நாட்டு மக்களுக்கு அருவருப்பைத் தரும் ஸ்தாபனம் உலகில் வேறு எதுவும் இருக்காது!

●●

## கேள்விக்கணை

இம்முறை பரிசு பெற்றவர்:
● இரா. அ. பழனிசாமி,
"தமிழ் இல்லம்"
இராசிபாளையம் (அஞ்சல்)
கோவை மாவட்டம்.

**இரா. அ. பழனிசாமி, இராசிபாளையம்.**

கே: அறிவியக்கத்தாரின் அடிப்படை லட்சியத்தை ஆசியஜோதி பண்டித நேரு அறிவாரா?

*ப: முழுசாக அறிந்திருந்தால்மூர்க்கத்தனமாகப் பேச மாட்டார்; அறிய வைக்கும் பணியை அறிஞர் அண்ணாவின் ".:கோம் லேண்ட்" இனி அழகாகச் செய்து முடித்திடும்!*

* * *

● கே: சட்டமன்ற எதிர்க்கட்சியினரும், திரைப்பட விமர்சகரும் எப்படி இருக்கக் கூடாது?

*ப: பெரியாரும், அவர் தம் படையும் போலும் இருக்கக் கூடாது.*

**சி. கூ. மழவையரசன்,**
**காவேரிப்பட்டினம்.**

கே: தி.மு.க. கலையை வளர்க்கிறது. என்றாலும் அவர்கள் வளர்க்கும் கலையானது, மாணவர் உலகத்தைக் கெடுக்கிறது என்கின்றனரே; உண்மைதானா?

*ப: சிந்தனை, பகுத்தறிவு, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, செயலாற்றல்களைவளர்ப்பது தி. மு. க. வின் கலைக்குறிக்கோள். இவற்றை ஒப்புகின்றனர் மாணவர்கள், "தப்பு, தப்பு, கெடுக்கின்றார்களே மாணவர்களை" என்று துடிக்கின்றார்கள் கொள்கைப் பகைவர்கள். இது உண்மைதான்!*

கே: காங்கிரசின் பெருமையானது அதன் பணத்தையும் அந்தஸ்தையும் பொறுத்திருக்கிறதா? குணத்தையும் நடத்தையையும் பொறுத்திருக்கிறதா?

*ப: குளறுபடியாகிவிட்ட குணத்தையும் செயலையும் பணத்தாலே மூடிமறைத்து, அந்தஸ்து என்ற சாயம்பூசிப் பெருமை கொள்ளுகின்றது காங்கிரஸ்! பெருமழைக்கும் வெய்யலுக்கும் தாங்காது!*

**இர. மா. பெ. பண்பரசன்**
**பெரிய காஞ்சீபுரம்.**

கே: கம்பன் வடித்த காவியத்தில் தனக்கொரு மகன் இருப்பதாக எழுதியிருக்கிறாரா? அம்பிகாபதி யார்?

*ப: கம்பன் இராமாயணத்தில் தன் குடும்ப விபரம் கூறவில்லை. அம்பிகாபதி என்ற புலவன் இருந்திருக்கலாம். அவன் கம்பன் மகன் என்பது ஆதாரமற்ற நம்பிக்கையே.*

* * *

கே: இதிகாச புராணங்களில் வரும் கண்ணனுக்கும், பகுத்தறிவை வளர்க்கும் கண்ணனுக்கும் வித்தியாசம் என்ன?

*ப: முன்னவர் வாழ்வில் நெறியும், அறிவும் தேவையற்ற ஆண்டவனின் அவதாரம்; பின்னவர் இரண்டோடு இன்னொன்றும் தேவையுள்ள அசல் மனிதப்பிறப்பு!*

**மா. அரங்கசாமி, கோவை.**

கே: இந்தியாவுக்கு ஏன் "பாரத நாடு" என்று பெயர் வந்தது?

*ப: துஷ்யந்தன்—சகுந்தலையின் காதற் குழந்தை பரதன் என்பவன் ஆண்டதால், பாரத நாடு என்று பெயர் பெற்றதாக இதிகாசம் இயம்புகின்றது!*

## கம்பன் வெறுக்கிறான்.

கம்பன் யார்? கம்பன் தமிழன், தமிழகத்தில் ஒரு தமிழனுக்கு—அவனைப் பெற்றவள், வளர்த்தவள், அண்ணன் மனைவி, ஆசிரியன் மனைவி, அரசன் மனைவி ஆகிய ஐவரும் தாய்மாராவர் என்பது தமிழ் நூற்கொள்கை. இதனை நன்கு உணர்ந்தவன் கம்பன். ஆதலால் அண்ணன் மனைவியான தாரையை அவள் கொழுந்தனான சுக்கிரீவன் மனைவியாகக் கொண்டிருந்தான் என்ற வால்மீகியின் கூற்றைக் கம்பன் வெறுக்கிறான்; தமிழர் பண்பாட்டிற்கு இது புறம்பானது; ஆதலால் இதனை மாற்றியமைக்கிறான். அநுமானும் தொழத்தகும் நிலையில் தாரையை ஒழுக்கத்திற் சிறந்த உத்தமியாக்குகிறான்.

—மா. இராசமாணிக்கனார்.

அம்பு இன்றி வேட்டைக்குச் சென்ற வேடர்களையும், கத்தியின்றி போராடிய வீரர்களையும் எவரும் எங்கும் பார்த்திருக்கலாம். ஆனால், உணர்ச்சியின்றி வெற்றிபெற்ற மக்களை எங்கும் எவரும் காண இயலாது.

—கி. ஆ. பெ. விசுவநாதம்

டாக்டர் சோதனை விளக்கத்தின்படி ஏற்ற கண்ணாடி எம்மிடம் கிடைக்கும்.




ராதா ஆப்டிகல் கம்பெனி,
முதல் அக்ரகாரம், சேலம்—1.



[2-ம் பக்கத் தொடர்ச்சி]

குமாஸ்தா, ஸ்டெனோகிராபர், வேலைகளுக்கு விண்ணப்பம்போடுமாறு அண்மையில் பத்திரிகை விளம்பரங்கள் வந்தன. ஆரிய இளைஞர்களும், ஏராளமான திராவிட இளைஞர்களும் விண்ணப்பம் போட்டுள்ளனர். தேர்வு—பரீட்சையொன்று வைத்து ஏற்றவர்களைத் தேர்ந்தெடுக்கப் போகிறார்களாம்! இதனை நடத்தும் பொறுப்பு டெல்லியில் திரு. எல். எஸ். வைத்தியநாத ஐயர் கையிலே இருக்கிறதாம்! எண்ணிப்பாருங்கள்: இந்த நிலையில் திராவிட இளைஞர்களுக்கு நீதி கிடைக்குமா? வேலை கிடைக்குமா? சொந்த மண்ணிலே சுகம் கிட்டிடுமா? என்ன நடக்கும்?

திராவிடத்திலுள்ள இன்சூரன்ஸ் கார்பரேஷன் கிளை அலுவலகங்களிலே நுழைந்தால், அங்கே, தமிழனையோ தெலுங்கனையோ, கன்னடியனையோ, மலையாளியையோ பார்ப்பது அபூர்வம்! பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருப்பது ஆரியப் பார்ப்பனக் கூட்டமேயாகும்! இதற்குப் பெயர்தான் இந்தியத் தேசீயம்! வடவரும் ஆரியரும் சேர்ந்து நடத்துகின்ற இந்தச் சதி வேலைகளுக்குப் பெயர்தான் அகில பாரத ஐக்கியம் என்றால், அத்தகைய இந்தியாவும் பாரதமும் திராவிடனுக்குத் தேவைதானா?

தெற்கு மண்டலத்தில் — திராவிடத்தில் நடைபெறும் இன்சூரன்ஸ் கார்பரேஷன் திராவிடப் பெருமக்களின் ஆயுள் பாதுகாப்புக்கா? ஆரியர் பாதுகாப்புக்கா? படித்துவிட்டு வேலையின்றித் தவித்திடும் திராவிட இளைஞனே! எண்ணிப்பார் நிலையினை; ஏற்பன சொல்; செய்!

—வாகி.

## ஏற்றலாமா ஆட்சிப் பீடத்தில்?

*மன்னன் சபையிலே வந்தமர்ந்ததும் தேசவிசாரணை புரிவான்: "மழைபெய்கிறதா மந்திரி? நாட்டிலே தருமம் தவறாமல் எல்லோரும் நடக்கிறார்களா?" என்று.*

*மந்திரி சொல்லுவார்: "மாதமும்மாரி பொழிகிறது. மனுதர்ம சாஸ்திரப்படி எல்லாம் செவ்வையாக நடைபெறுகிறது அரசே" என்று.*

*தெருக்கூத்தில் மட்டுமல்ல; நாடகமேடை, திரைப்படங்களிலே கூட "மனுதர்மம்" இவ்வாறு போற்றப்பட்டது. "ஆட்டுமந்தை" எழுந்தாளர்களும், "அசமந்த" நடிகர்களும், "கருத்தற்ற" கலைஞர்களும் புரிந்து கொள்ளாமலேயே புலம்பிவந்தனர்; வருகின்றனரே! அந்த மனுதர்மம்தான் எத்தகையது? இதோ ஒரு 'சேம்பிள்'!*

மௌண்ட்யம் ப்ராணாந்தி
கோதண்டா
ப்ராஹ்மணஸ்ய விதீயதே.
இதரேஷாம்து, வர்ணானாம் தண்ட
ப்ராணாந்தி கோபவேத,

—மனுதர்மம்.

பொருள்:- கொலைத் தொழில் புரிந்த மற்ற வருணத்தார்களைத் தூக்கில் போடுவதுதான் தண்டனை. பிராம்மணன் அக்குற்றம் புரிந்தால், அவனது தலைமயிரை மொட்டையடிப்பதே தண்டனையாகும்.

*இந்த சாஸ்திரப்படி நாட்டையாளும் மன்னர்களிடம் நடுநிலை, நீதி, நியாயம் நேர்மை இருக்கமுடியுமா? இந்த அதருமத்தைப் போற்றலாமா? ஏற்றலாமா ஆட்சிப் பீடத்தில்? நம்மவரில் நல்லவரின் உயிரை மாய்த்துவிட்டு "மயிரே போச்சு" என்று போய்விடுவார்களே, மதம்பிடித்த கோட்சே கூட்டத்தினர்! மடிந்துபோன இந்தப் பழைய அதருமத்தைப் புதுப்பிக்க விரும்பும் 'அறிஞர்'களை கலைஞர்களை என்னவென்று அழைப்பது?*

●

வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த
செல்வம் ராணி
&
சேகர் ஊதுபத்திகளை
வாங்கி உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்:
வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037-38, டபீர்குளம் ரோடு, தஞ்சாவூர்.

1721



விமர்சனம்.

## தங்கமலை ரகசியம்.

இரகசியம் எங்கெங்கோ மறைந்திருக்கிறது. இங்கே தங்கமலைரகசியத்திலும் ஒரு ரகசியம் மறைந்து தானிருக்கிறது.

மடமை அழிந்து புதுமை பூத்துக் கொண்டிருக்கும் இக் காலத்தில், அறியாமை இருள் நீங்கி அறிவொளி படர்ந்து கொண்டிருக்கும் நேரத்தில், பழமையை வீழ்த்தி பகுத்தறிவை வாழ்த்திக் கொண்டிருக்கும் வேளையில் தங்கமலை ரகசியம் தலைகாட்ட வந்திருக்கிறது! பித்தளைக்குடத்திற்கு தங்க முலாம் பூசப்பட்டிருக்கிறது. அதுதான் தங்கமலை ரகசியம்!

பகுத்தறிவுக்குப் புறம்பான கதையை, அறிவுலகம் ஏற்காத கதையை, படமாகத் தயாரித்திருக்கிறார் திரு. பந்துலு என்றால் தவறில்லை. எனினும் சிறந்த நடிகர்களைக் கொண்டு படத்தின் தரத்தை உயர்த்திக் கொள்ள முயன்றிருக்கிறார்; பரிதாபத்துக்குரியவர்!

அரசகுடும்பத்தில் பிறந்தவளாயிருக்க வேண்டுமென்பதல்ல; அவள் "தோழியானாலும் சரி கொடுத்தவாக்கைக் காப்பாற்றியே தீருவேன்" என்று காதலைக் கடமையாக எண்ணி கைப்பிடித்தவளையே கல்யாணம் செய்து பட்டத்து ராணியாக்கும் அழகாபுரி மன்னன் ஆதித்தனின் கொள்கை பாராட்டத்தக்கதுதான்.

மன்னன் ஆதித்தனாக நடிக்கும் நம்பியாரின் நடிப்பு நல்லமுறையில் அமைந்திருக்கிறது. மன்னன்

## கலைக்கூடம்

மகன் கஜேந்திரன் காட்டில் வளர்ந்து மிருகங்களை அடக்கி வாழும் கட்டம், தண்ணீரில் யானையின் துதிக்கையை பிடித்துக்கொண்ட முதலையின் வாயைப் பிளந்து யானையைத் தப்புவித்த கட்டம் முதலியவைகளைப் பார்க்கும் பொழுது, முன்பு தமிழன் மதயானையையும் அடக்கி வாழ்ந்தான் என்று படித்த மகத்தான நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகின்றன. கஜேந்திரனாக நடிக்கும் சிவாஜி கணேசனின் நடிப்பு உன்னதமாக இருக்கிறது. இந்தப் படத்தின் உயிர் நாடியே அவரது நடிப்பு தான் என்றாலும் மிகையாகாது. தன் சுய உருவம் மாறி கிழவனாக இருக்கும் கட்டத்தில், உண்மையிலேயே ஒரு நடிகன் மேலும் இம் மாதிரி நடிப்பானா என்ற கேள்வியை எழ வைக்கிறது. வீரப்பாவும் நன்றாகவே நடித்துள்ளார்.

அமுதாவாக நடிக்கும் ஜமுனா, காட்டுப் பையனான கஜேந்திரனை வீட்டுக்கு அழைத்து வந்து பேசப் படிக்க கற்றுக்கொடுப்பதும், காதலுக்குத் தடைவிதித்த தந்தையை மறந்து அரண்மனை வேண்டாம் ஆரண்யமே போதும் என்று காதலனோடு காட்டுக்கு ஓடி வாழுவது மான கட்டங்களில் திறமையை நன்கு காட்டிக்கொள்கிறார்.

மங்களபுரி இளவரசியாக நடிக்கும் T. R. ராஜகுமாரியின் ஆடை யலங்காரம் நன்று. எப்பொழுதுமே இளமை குன்றாத கட்டழகி என்பதைக் காட்டுகிறது. ஆயிரமாயிரம் புது முகங்கள் தோன்றினாலும், புன்னகை பூத்திடும் தன் நடிப்பை மீறமுடியாது என்கிற அளவில் நடித்து, பார்ப்பவர்களுக்குப் பரவசத்தைக் கொடுக்கிறார். M. V. ராஜம்மாவின் அந்த சோக நடிப்பு வழக்கம்போலவே சோபிக்கிறது. சிரிப்பு நடிகர்கள் சாரங்கபாணி, T. R. ராமச்சந்திரன் நடிப்பும் பரவாயில்லை.

பின்னணி பாடிய ஜிக்கி, லீலா, இவர்களின் பாட்டுகள் கதைக் குழப்பத்தால் பொறுமையை இழந்துவிடும் ரசிகர்களின் இதயத்துக்கு இன்பத்தையூட்டுகின்றன. ஒளி, ஒலி, டைரக்ஷன் முதலியவைகள் பரவாயில்லை.

மந்திரத்தாலும் மகேஸ்வரனின் சக்தியாலும் மனித உருவத்தை மாற்றும் கற்பனை, காலத்திற்கு ஏற்றதல்ல. வாழ்க்கைப் போக்கை யொட்டியே கதைப்போக்கு இருக்கவேண்டும் என்பதை கதாசிரியர்கள் — டைரெக்டர்கள் — படாதிபதிகள் உணரவேண்டும். பொதுவாக "தங்கமலை ரகசியம்" ஒரு மட்டரகப் படம்! நடிப்பிற்காக வேண்டுமானால் ஒருமுறை பார்க்கலாம்.

நிலவில்லா வானம், மணமில்லா மலர், கருத்தில்லா காவியம் போன்றது தங்கமலை ரகசியம்!

—கே. சி. காவிரிமுத்து.

### தேவி நாடக சபா.

6—7—57 முதல் இவர்கள் சேலம் மாவட்டம் ஆத்தூரில் ஸ்ரீதரனில் நாடகங்கள் நடத்தி வருகின்றனர். மக்கள் ரசித்து மகிழ்கின்றனர்.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்—1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

048


# பகுத்தறிவு

திங்கள் இருமுறை. ஆசிரியர்:- ப. கண்ணன்.

மலர் 7 | 1-8-57 | விலை 0-2-6 (16 காசு) | இதழ் 11.


18 SEP 1957



## இதுவா காந்தீய இந்தி!

இந்தியில் மிகச் சிறப்பாகக் கூறப்படுவது துளசிதாஸ் ராமாயணம் ஒன்றுதான். அந்த ராமாயணத்தைப்பற்றி காந்தியார் வெகுவாகப் புகழ்ந்து எழுதி வருகையில் சில அன்பர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் கூறு முகத்தான், அவரே துளசிதாஸ் ராமாயணத்தில் தள்ளிவிட வேண்டியவை பல உண்டு என்று எடுத்துக் கூறியிருக்கிறார். அதில் ஒன்று,

"இவ்வுலகில் அடிபடுவதற்கென்றே பிறப்பிக்கப்பட்டவைகள் மூன்றாகும். அவை: ஒன்று பெண்கள்; இரண்டு சூத்திரர்கள்; மூன்று, பறை (முரசு) இவையாகும்!" இப்படிப்பட்ட மிக மிக இழி தன்மையான வருணாச்சிரம தருமத்தைக் கொண்ட ஒரு கதைக்காகவா இந்தியை இந்நாட்டில் நுழைக்கவேண்டும்?

பெண்கள் உரிமை வேட்கை கொண்டலையும் இத் தமிழ் நாட்டில், சூத்திரன் என்கிற வார்த்தையை ஏட்டில்கூட இருக்கவிட மாட்டோம் என்று எண்ணிறந்த வாலிபர்கள் துடியாகத் துடித்துக் கொண்டிருக்கும் இக்காலத்திலா, பெண்ணடிமையையும் சூத்திர இழிவையும் காக்கும் இந்தியை வீரத் தமிழ்நாட்டில் கட்டாயப்பாடமாக்க நினைப்பது? இது புத்திசாலித்தனமாகுமா? இதைவிட முட்டாள் தனமும் வேறுண்டோ?

—திரு. வி. க.

17-7-48-ல், சென்னையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில்.

# அரசியல் பேசுகிறது!

ஏ. பெரியசாமி.

"அரசியல் வேறு, ஒழுக்கம் வேறு என்று கருதுபவர்கள் இரண்டையும் அறியாதவர்கள்" என்று கூறினான் ஃபிரெஞ்சுப் போறிஞன் ரூசோ (Rousseau) அரசியலுக்கும், ஒழுக்கத்திற்கும் சம்பந்தமில்லை என்று நினைத்து, அரசியம் சந்தனக் கடையை சாக்கடையாக்கும் 'கற்கால குணம்' படைத்தோருக்கு 'அரசியல்' என்பது ஒரு வியாபாரம்; பிழைக்கும் வழி! "அரசியல் என்பதே பித்தலாட்டம்" என்ற கருத்து மக்களிடைய இன்று நிலவி வருகிறது. இந்த எண்ணத்திற்குக் காரணம் எதுவாகவோ, அல்லது யாராகவோ இருக்கட்டும்; இந்த தப்பெண்ணத்தை மாற்றி, சாதாரண மனிதனும் அரசியலில் அக்கறையும், பங்கும் கொள்ளச் செய்ய வேண்டியது நம்முடைய எதிர்காலக் கடமைகளுள் ஒன்றுகும்.

இக் கடமையைக் கருத்தில் கொண்டதன் விளைவுதான் அரசியல் நூலின் சில முக்கியமான பகுதிகளை விளக்கும் இந்தக் கட்டுரை.

## நாடு (STATE)

அரசியல் நூலின் அடிப்படையே, நாட்டைப் பற்றியும், நாட்டில் இயங்கும் அரசாங்கத்தைப் பற்றியும் அரசியலறிஞர்களிடையே நிலவும் கருத்துக்களை ஒட்டி எழுந்தது. எனவே, அரசியல் நூலில் முதன்மையானதும், முக்கியமானதும் "நாடு" என்னும் இந்தப் பகுதியே! **பேராசிரியர் தேவநேயப் பாவாணர்** அவர்கள் இதையே "*சீமை*" என்று குறிப்பிடுவார்.

வள்ளுவப் பெருந்தகையாரும் 'பொருட்பாலில்,' 'நாடு' என்பதைப்பற்றி அதற்கு இருக்கவேண்டிய குணங்களையும், தன்மைகளையும் கூறி விளக்குகிறார். ஆனல், அரசியல் நூல் முற்றிலும் வேறுன ஒரு கண்ணேட்டத்திலிருந்து இதை விளக்குகிறது.

சமூக உரிமைகளின் ஆரம்ப காலத்திலிருந்தே, மனிதன் ஏதாவதொரு அதிகார அமைப்பின் கீழ் வாழ்ந்துவந்தான். இந்த அமைப்பு காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம் தனது தன்மையில் மாறுபட்டு, வெவ்வேறு வகையான நிறுவனங்களின் மூலம் தன்னுடைய வேலைகளைச் செய்து வந்தது.

நாட்டிற்கு நான்கு முக்கியமான குணங்கள் இருக்கவேண்டும் என்று அரசியல் நூல் விதிக்கிறது. அவை—நிச்சயிக்கப்பட்ட நிலப்பரப்பு (Definite territory), மக்கட் தொகை (Population), அரசாங்கம் (Government), அரசுரிமை (Sovereignty) என்பன.

## நிலப்பரப்பு (TERRITORY)

கூட்டங் கூட்டமாக **ஜிப்ஸி** (Gipsy) போன்ற நாடோடிக் கும்பல்களை வரலாறு நமக்குக் காட்டுகிறது. 'நாடு' என்பது இவர்களால் சரியாகப் புரிந்துகொள்ள முடியாத, ஒரு சொல்லாகும். இந் நாடோடிக் கூட்டங்களின் அமைப்பை 'நாடு' என்றும் அழைக்க முடியாது. நிச்சயமான நிலப்பரப்பு இல்லாமல் எந்த நாடும் இருக்க முடியாது. இடம் விட்டு இடம் திரியும் நாடோடிகள் நாட்டை அமைக்கும் தன்மை படைத்தவர்களல்ல. முடிவாக்கப்பட்ட நிலப்பரப்பு தற்கால நாட்டிற்கு இருக்க வேண்டிய ஒரு முக்கியமான குணம்!

ஆனல், ஒரு நாட்டினுடைய அளவு இவ்வளவுதான் இருக்க வேண்டும் என்று எந்த வரைய

[16-ம் பக்கம் பார்க்க]


**பகுத்தறிவு**

(திங்களிருமுறை)

**புதிய தசாம்ச நாணய விகிதத்தில்:**

**உள்நாடு:**

ஆண்டு 1-க்கு 4-00

6 மாதங்களுக்கு 2-00

தனிப்படி 16 காசுகள்

சிலோனில் 20 சதம்

**பகுத்தறிவு அலுவலகம்**

**சேலம்-1.**



**டாக்டர் சோதனை விளக்கத்தின்படி ஏற்ற கண்ணுடி எம்மிடம் கிடைக்கும்.**




**ராதா ஆப்டிகல் கம்பெனி,**

**முதல் அக்ரகாரம், சேலம்-1.**




# எதிரொலி

*சீர்காழியில் பெண்ணைக் கெடுக்க முயன்றதாக ஒருவர் கைதாகிக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறுர்.*

—செய்தி.

**தாருகாவனத்து ரிஷி பத்தினிகளைக் கெடுத்த பரமசிவனை தண்டிக் காதுவிட்ட பாபத்தை, பக்தர்கள் இப்படியாக அனுபவிக்கிறுர்களோ?**

*   *   *

*ஒன்றுபட்ட இந்தியாவாலேயே சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைக்க முடியும்.*

—மந்திரி, சி. சுப்ரமணியம்.

**பாவமே! பிரிந்து கிடப்பதால் தான் பத்தாண்டு முயற்சி பலன் கிட்டாமல் பாழாகிறது போலும்!**

*   *   *

*கட்டபொம்மனின் வரலாற்றைப் பரப்புவதே சிறந்த நினைவுச் சின்னம்*

—மந்திரி, சி. சுப்ரமணியம்.

**இந்த நியாயம் காந்தி சிலை, திலகர் சிலை, படேல் சிலைகளுக்குப் பொருந்தாது போலும்!**

*   *   *

*ஒட்டல் போராட்டப்படை பிச்சை எடுத்து சாப்பிட்டுக்கொண்டே சென்னைக்கு வரவேண்டும்.*

—பெரியார்.

**தன்மானத்தை இழப்பதுதான் சாதியை ஒழிப்பதற்கு ஒரு தகுதியெனக் கருதுகிறுர்போலும் தன்மானத் தந்தை!**

*   *   *

*சிறந்த நாடகங்களுக்குப் பரிசு கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.*

—மந்திரி, சி. சுப்ரமணியம்.

**எது சிறந்தது என்று தேர்ந்தெடுக்கும் அளவுகோல் இருக்கிறதே; அது நேராக இருக்காதே!**

# ஓடைதரும் பேரின்பம்.

~ மணியரசன் ~

தாய்கை விட்டே மெல்லத்
தவழ்ந்தே ஓடும் சேய்போல்
பாயும் ஆற்றின் கிளையாய்ப்
பாயும் சிறிய ஓடை
தேயும் புல்லின் தரையைத்
தெண்ணீர் கொண்டே ஊட்டி
ஓய்வும் ஒழியும் இன்றி
ஓடும் ஓடும் பாடும்!

கல்லின் இடுக்கில் ஓடிக்
கனிவாய்த் தாளம் போடும்
நெல்லின் இடையே நீந்தி
நன்னீர் இசையே பாடும்
பள்ளம் மேட்டில் பாயும்
துள்ளித் துள்ளி ஆடும்
நல்லோர் உளம்போல் என்றும்
நலமே எண்ணும் வாழும்!

வாடிய செடிகள் வாழ்த்தி
வருகெனத் தலையை ஆட்டும்
ஊடிய பெண்போல் மதுவே
ஊறிட நிற்கும் பூவைச்
சூடிய சின்னச் செடியோ
சூழ்ந்திடு என்னை என்னும்
கூடிடும் சிற்று(று) இன்பம்
குவியும் பூக்கும் அங்கே!

தழையுதிர்த்த மரநிழலே போலும்
தனைவிரித்து நீளுமுடன் பாயும்
மழைவிரிந்து பெய்தால்நீர் வெள்ளம்
கரைபுரளும் ஓடும்நீர் பாயும்
உழைவிரிந்த மரங்கொடிகள் தோயும்
உடன்நிமிரும் உவகையெலாம்பூக்கும்
இழைநேர்ந்து நெய்ததுபோல் பச்சை
எழிலாகும் புல்பட்டுப் பாயும்!

பாவளர்க்கும் கவிஞனுளத் தோடே
பண்வளர்க்கும், தாளமொடு பாயும்
பூவளர்க்கும் காவின்வழி யோடும்
பூங்காற்றில் ஆடும்நீர் தூவும்
போய்வளர்க்கும் புவியெல்லாம் இன்பம்
பொன்கதிரில் நீந்தியுடன் மின்னும்
தாய்வளர்க்கும் அன்பெனவே மண்ணில்
தான்வளர்க்கும் இன்பமுடன் பாயும்!

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு
> —திருவள்ளுவர்.

# இதயம்

மலர் 7 | சேலம் 1—8—57 | இதழ் 11

## பன்மொழியார் பொன்விழா.

பன்மொழி பயின்று தேர்ந்த நல்லாசிரியரும், நற்றமிழ் வாழ—வளர அரும்பணிகள் பல ஆற்றி வருபவரும், சீர்திருத்தச் செம்மலும், பகுத்தறிவு மணம் எங்கணும் பரப்பி வருபவரும், பொதுநலத் துறைக்கே தம்மை முழுக்க முழுக்க ஒப்படைத்துச் செயலாற்றி வருபவரும், நேரிய கொள்கைகளுக்காகப் பரிந்து பேசவும்-போராடவும்-தடியடி தாங்கவும்-சிறை புகவும் துணிந்த செயல் வீரரும், திராவிட முன்னேற்றக் கழகத்திடத்து நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும் கொண்டு உழைத்து வருபவரும் ஆன **பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார்** அவர்கள் ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெறுகிறார்கள் என்பது நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியை அளிப்பதாகும்.

**பன்மொழிப் புலவரின் பொன்விழாவைப்** பெருமைக்குரிய வகையிலும், பூரிப்புக் கொள்ளும் முறையிலும் சிறப்பாக நடத்தவேண்டும் என்பது நண்பர்கள் பலரின் வேணவாவாகும். அவரது பொன்விழாவைக் கொண்டாடி நாம் மகிழ்ச்சியடைவதோடு மட்டுமல்லாமல், அவரையும் நிலையாக மகிழ்விக்க வேண்டிய கடப்பாடுடையவர்களாகவும் இருக்கிறோம். பொதுவாகப் புலவர் பெருமக்களைப் பீடிக்கின்ற வறுமை அவரைப் பெருமளவுக்குப் பீடித்து வாட்டி வதைக்கிறது. அந்தக் கொடுமையினின்றும் அவரை விடுவித்து, மகிழ்ச்சிகொள் அமைதியான வாழ்வில் அவரை ஈடுபடுத்த வேண்டியும், அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் பயக்க வேண்டியும் அவருக்குச் சிறப்புக்குரிய வகையில் பணமுடிப்பைப்பரிசாக வழங்கவேண்டும் என்று நண்பர்கள் பலரும் விரும்பியுள்ளனர்.

பன்மொழிப் புலவர் பொன்விழாக்குழு ஒன்றை உருவாக்கி, அதில் அன்பர்கள் பலரையும் உறுப்பினர்களாக ஆக்கிடும் பொறுப்பினை **கண்ணதாசன்** அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள்.

விழாக் குழுவின் பொருளாளராக இருந்து பணியாற்ற **அண்ணா** அவர்கள் இசைவு தந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதி தந்து உதவுவோர்,

**சி. என். அண்ணாதுரை, C/o 'நம்நாடு'**
**24, சூரியநாராயண செட்டித் தெரு,**
**இராயபுரம், சென்னை-13.**

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும், தமிழார்வங்கொண்ட பிற அன்பர்களையும் **பன்மொழிப் புலவரின் பொன்விழா** முயற்சி வெற்றியுற பேருதவி புரியுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

நமது பொதுச்செயலாளர் **நாவலர் இரா. நெடுஞ்செழியன்** அவர்கள் விடுத்துள்ள இவ் வேண்டுகோள் தன்மானத் தமிழர் ஒவ்வொருவர் நெஞ்சிலும் தவறாது இடம் பெறல் வேண்டும். மனித சமூகத்தின் மடமை இருள் நீக்கும் ஒளிவிளக்குகளாய் விளங்கிடும் மேதைகளைப் போற்றுவதிலே, நலிவுகொண்ட புலவர்களைப் புரப்பதிலே தமிழகம் என்றும் பின்னடைந்ததில்லை. தாயகத் தமிழர்கள் மட்டுமல்லாமல், இலங்கை, மலாயா போன்ற வெளிநாட்டுத் தமிழர்களும் தக்க பொருளுதவி செய்தல் வேண்டுமென விழைகின்றோம்.

இஃது தனிப்பட்ட ஒருவரின் முயற்சியன்று; கழகத்தின் பொது முயற்சியாக மேற்கொள்ளப்பட்டு விட்டது. எனவே கழகத் தோழர்களும், கழக ஆதரவாளர்களும், தமிழார்வமிக்கோரும், தமிழும் அறிவும் தழைத்திட விரும்புவாரும் உடனடியாகத் தமது கடமையினை மேற்கொண்டு நிதி வழங்க வேண்டுகிறோம்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கட்கு சிறப்புச் செய்ய அன்னாள் கையேந்தினோம். கண்ணியமான தொகை கிடைத்தது; பன்மொழிப் புலவர் அப்பாதுரையாருக்காக—சீர்திருத்தச் செம்மலுக்காக இன்று கரமேந்துகிறோம். பொருள் வழங்குங்கள்; பகுத்தறிவு எழுத்து வேந்தனின் வறுமை போக்குங்கள்; பொன்விழாவை சிறக்கச் செய்யுங்கள்,

—ப. கண்ணன்.



# இன்பக் கோட்டையிலே...

நீலாம்பாள்.

"என்ன புறப்படுவோமா" எனக் கேட்டவண்ணம் உள் நுழைந்தாள் என் தோழி, பெரும் விழைவி.

"சரி" என்றேன் நான். என்ன அதிசயம்! உடனே என் இரு தோள்களிலும் இரு வெண் சிறகுகள். தோழியைப் பார்த்தேன்; அவளுக்கும் அவ்வாறே; சிறகுகள் விரிந்தன! மேலே பறந்தோம். ஆ..கா! அந்த நிலையை எந்தச் சொற்களைக் கொண்டு விளக்குவது!

வெகு வெகு உயரத்தில் போய்க் கொண்டிருந்தோம். 'அதோ' என்று சுட்டிக் காட்டினாள் தோழி. அவ்விடத்தைப் பார்த்தேன். அது ஓர் பெரிய மலையுச்சி. உச்சிதான்; ஆனால் அதன் பரப்பை மைல் கணக்கில்தான் சொல்லவேண்டும். அந்தப் பரந்தஉச்சியைஅடைந்தோம் நாங்கள். அங்கே ஒரு புறத்தில் திரளான ஆண்களும், ஒரு புறத்தில் திரளான பெண்களும் கூடியிருந்தனர்.

"என்ன விசேஷம் இங்கே" என்று நான் கேட்டேன்.

அவள் சொன்னாள்: "அருகிற் சென்றால் நீயே அறிந்து கொள்வாய்" என்று.

சென்றோம் அங்கே. 'ஆண், பெண்' இருபாலரும் கையில் ஒரு கொடியைத் தாங்கி நின்றார்கள். கொடிகள் வெண்ணிறமாயும், அதில் பச்சை வண்ணத்தில் 'காதலர்' என்று பொறிக்கப்பட்டும் இருந்தன. அவர்கள் எல்லோரும் ஒரே திசையை நோக்கி நின்றிருந்தனர். அவர்களுக்கு எதிர்ப்புறத்தே ஓர் பெரிய மதிற் சுவரும் ஓர் அகன்ற வாயிலும் காணப்பட்டன. வாயிலின் முன் புறத்தில் ஓர் பொற் பலகை தொங்கியது. அதிலே நவரத்தினங்களைக் கொண்டு பின் வரும் வாக்கியம் பொறிக்கப்பட்டிருந்தது.

"இன்பக் கோட்டைக்குச் செல்ல விரும்புவோர், இந்த வாயில் வழியாகச் செல்ல வேண்டும்"

வாயிலின் முன் ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். அவள் தூய்மையான வெண்ணுடை தரித்திருந்தாள். அவள் நெற்றியிலே 'அறிவு' என பொறிக்கப்பட்டிருந்தது. அவ்வாயிற் காவலாளி போலும் அவள்.

நானும் என் தோழியும் அவள் அருகில் நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தோம். ஒரு ஆடவன் கையில் கொடியைத் தாங்கியவாறு—அதுதான் 'காதலர்' என்று பொறிக்கப் பட்டகொடி—வந்தான் அந்தக் காவற் பெண்ணைப் பார்த்து "நான் உள்ளே செல்ல வேண்டும்" என்றான்.

"ஓ! அப்படியாயின் உங்கள் காதலி எங்கே" என்று கேட்டாள் அவள்.

**ஆடவன்:-** பின்னாலே வருகிறாள் அவள்.

**கா. பெண்:-** அவளும் வரட்டும்; சற்று நில்லுங்கள். இருவரும் சேர்ந்துதான் இவ்வாயிலிற் புகவேண்டும்.

**ஆடவன்:-** அதை நான் விரும்பவில்லை.

**கா. பெண்:-** ஏன்?

**ஆடவன்:-** உண்மையில் நான் அவளைக் காதலிக்கிறேன். அவளும் அவ்வாறே என்னைக் காதலிக்கிறாள். ஆனால், எங்களிடையே இருக்கும் ஓர் பெரிய வேற்றுமையைக் குறித்து மற்றையோர் எங்களை கேலி செய்வார்கள். ஆதலால் நாங்கள் சேர்ந்து வாயிலில் நுழைவதற்கில்லை. எனவே தயவுசெய்து என்னை முன்னே விட்டு விடுங்கள். அவள் பின்னால் வருவாள்; கோட்டைக்குள் இருவரும் சந்தித்துக் கொள்கிறோம்.

**கா. பெண்:-** உமக்காகவும், உமதுகாதலிக்காகவும்வருந்துகிறேன். என் செய்வது! காதலனும் காதலியும் கைகோர்த்தவண்ணந்தான் இவ் வாயிலிற் புகவேண்டும். இது பகுத்தறிவு நகரின் இயற்கை யரசியின் சட்டம். ஆணாயினும் சரி பெண்ணாயினும் சரி; தனித்து இவ்வாயிலிற் புக முடியாது. மேலும் சாதி, மதம், அழகு, ஆற்றல், அந்தஸ்து, கைமை எதை ஒன்றையும் காரணமாகக் கொண்டு காதலர் இடையேவேற்றுமை உள்ளம் படைத்தவர்கள், இந்தப் புனிதமான காதற் கொடியைத் தொடுவதற்கும் தகுதியற்றவர்கள் எனக் கூறிக் கொண்டே அவன் கையில் இருந்த கொடியைப் பிடுங்கிக் கொண்டு 'போ! கீழே இறங்கு' என்று கட்டளையிட்டாள் கடுமையாக.

ஆ! அப்படியானால் எங்கள் கதி? என்று கூறியவண்ணம் அடியற்ற மரம்போல் கீழே சாய்ந்தாள் தோழி.

"ஐயோ, என் தோழி!" என்று அலறிவிட்டேன் நான்!

"ஏன் மீனா! கனவு கண்டாயா?" என்ற என் அன்னையின் மொழிகளைக் கேட்ட பின்னரே யாவும் கனவென்பதுணர்ந்தேன். பால்ய விதவையான என் தோழி, தன்

காதலன் ஊர்ப்பழிப்பிற்கஞ்சி, கால இறுதிவரைக் களவியலில்தான் வாழ முடியும் என்று கூறினதாகச் சொல்லி மாலையில் வருந்தியதைக் கேட்டு வருந்தியதன் விளைவு என்பதையும் அறிந்தேன். "காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" என்று இனிமையாக யாரோ பாடும் குரல் எங்கிருந்தோ வந்தது!

"காதல் இருவர்களும் கருத்தொருமித்தபின் வாதுகள் வம்புகள் ஏன்? இதில் மற்றவர்க்கென்ன உண்டு?" என்ற புரட்சிக்கவி பாரதிதாசனின் பொன்மொழியும் நினைவுக்கு வந்தது. "நாடகத்தில், காவியத்தில், காதலென்ருல் நலமாம் என்பார்; ஊடகத்தே, கிணற்ருேரத்தே காதல் என்ருல்குழிதோண்டுவார் புதைப்பதற்கு" எனப் பாடிய பாரதியாரின் கவிதையும் நினைவுக்கு வந்தது!

என்ன சொல்லி என்ன? இன்பக்கோட்டையிலேகாதற் கொடியேந்தி, காதலனேடு கைகோர்த்தவாறு நுழைவாளோ, கைம்பெண்ணுகி விட்ட என் தோழி? ****

## சேலத்துக்கு தொழில் நுட்பப்பள்ளி.

மதுரைப் பெருவணிகர் தோழர், கருமுத்து தியாகராசனுர் அவர்கள், தியாகராசர் கல்வி அறநிலையத்தின் சார்பில் சேலத்தில் ஒரு தொழில் நுட்பக் கல்லூரியைத் தொடங்க முன் வந்துள்ளார். கல்லூரி மூலதனத்திற்காக மூன்றே முக்கால் லட்ச ரூபாயும், ஒவ்வோராண்டுச் செலவுக்கும் தொண்ணூருயிரம் ரூபாயும் வழங்குவாராம்.

## இலக்கிய நோக்கு.

இலக்கியம் சமுதாயத்தின் விளைபொருள். மனிதன் தனது வளர்ச்சிக்கேற்ப வரலாற்றுக் கட்டங்களில் எவ்வாறு தனது சாதனங்களையும், கருத்துக்களையும் மாற்றி வந்திருக்கிருனே, அதைப் போலவே மனிதனுடைய உன்னதமான படைப்புக்களிலொன்ருன இலக்கியச் செல்வமும் வளர்ந்துவந்திருக்கிறது. மனுக்குலத்தின் வரலாறு எவ்வாறு ஒரு மகத்தான தொடர்கதையாக அமைந்துள்ளதோ, அதைப் போலவே மனிதனின் சிருஷ்டியான இலக்கியத்திற்கும் தொடர்ச்சியான வரலாறு உண்டு. இது பொதுவான இலக்கிய உண்மையாகும். இந்த உண்மைக்குப் புறம்பானதல்ல தமிழ் இலக்கியம்.

இன்று நமக்குக் கிடைத்துள்ள பழந்தமிழ் இலக்கியங்கள் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கி வளர்ந்துவந்தவையே. இந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக இருந்துஇன்றுவரை பெருகிச் செழித்துவந்துள்ள நமது இலக்கியங்கள் எண்ணிறந்தவை. தமிழர் சமுதாயத்தின் வளர்ச்சியையே இவ்விலக்கியங்கள் காட்டுகின்றன என்பது உண்மை.

பழைய இலக்கியங்களை நாம் உதவாதவை என ஒதுக்கி விடப்போவதில்லை. வாழப்பிறந்த மனிதனின் வாழ்க்கைப் பற்றையும்—அவன் வாழும் சமுதாய அமைப்பையும் வெளிப்படையாகவோ, அல்லது மறைமுகமாகவோ கருவாகக் கொண்டு படைக்கப்பட்ட எல்லா இலக்கியங்களையும் நாம் இனங்கண்டு, நமது இலக்கிய பாரம்பரியத்தை நிர்ணயிக்க வேண்டும்.

—"தேசாபிமானி"

## நாசமாகாதீர்!

**ஜபஸ்தப தீர்த்த யாத்ரா;**
**ப்ரவ்ராஜ்யா மந்த்ர சாதனம்**
**தேவதா ராதனம்;**
**ஸ்திரீ சூத்திர பதனுனிஷத்.**

—அத்ரி சம்:.கிதை.

**இதன் பொருள்:** ஜபம், தபம், தீர்த்த யாத்திரை, மந்திரம் ஜெபித்தல், சித்தியடைதல், கடவுளை ஆராதித்தல் முதலான காரியங்களை சூத்திரர்களும் பெண்களும் செய்தல் கூடாது. செய்தால் அவர்கள் நாசமடைவார்கள்.

அத்ரி சம்:.கிதை என்ற சமஸ்கிருத நூல் இவ்வாறு சட்டம் வகுக்கின்றது.

பக்தி செய்யவும், பஜனை பாடவும், அபிஷேக, ஆராதனைகளைச் செய்யவும் சூத்திரர்கள் என்று பார்ப்பனர்களால் அழைக்கப்படும் நமக்கும், நமது தாய்மார்களுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது, சாஸ்திரப்படி! காரணம் 'அவா'ளைவிட நாமெல்லாம் தாழ்ந்தவர்கள்—இழிந்தகுலத்தார்களாம்! நமக்கு பகவானை ஆராதிக்கத் தகுதியில்லை; யோக்யதையில்லை; அப்படி மீறிச் செய்தால் நாசந்தான் கிடைக்குமாம்! நாசம்!

சாஸ்திரத்தில் நம்பிக்கையுள்ளவர்களே! சற்குண சம்பன்னர்களே! இத்தனை நாள் போனது போகட்டும். இனியேனும் நீங்கள் ஆண்டவனை வணங்காதீர்கள்! மந்திரம் ஜெபித்து சித்தியடைய முயலாதீர்கள்! ஜபம், தபம், தீர்த்த யாத்திரை செய்யாதீர்கள்! செய்தால் ஐயோ, நாசமாய்ப் போய் விடுவீர்கள்!






(முன் இதழ் தொடர்ச்சி)

**இரா:-** கூடாது! நீ போகக்கூடாது!

**சீதை:-** **(சினந்து)** விடும்! போதும் ஒம்மோடு வாழ்ந்தது! கருணையே இல்லாத கல்நெஞ்சு படைச்சவர்; சுயநல ஜாதிவெறி கொண்டவர்; துணிச்சலோடு அக்ரமம் செய்யும் துராசைக்காரர் நீர்!

**இராம:-** **(சினந்து)** ஆங்! இவ்வளவு மோசமாகவா என்னைத் திட்டறே! **(இழுத்துக் கீழே தள்ளி உதைத்து)** அடங்காப்பிடாரி; ஆணவக்காரி! இடுப்பை ஒடிச்சுடுவேன்! ஜாக்ரதை! என் சொல்படி நீ நடந்தாகணும்!

**சீதை:-** **(கடுப்பாக)** முடியாது. இனி ஒருக்காலும் நடக்கமுடியாது.

**இராம:-** **(சினந்து)** முடியாதா? எதிர்த்தா பேசறே என்னிடம்? தகப்பன் பெயர் தெரியாத தட்டுவாணி!

**சீதை:-** போதும் நிறுத்தும். ஒம்மோட யோக்யதை மட்டும் என்ன வாழறதாம்? மாதா கோசலையாக இருக்கலாம்;பிதா யாகப் புரோகிதாள் தானே!...

**இராம:-** ஆங்! என்ன சொன்னே?....

(அவள் கூந்தலைப்பிடித்து இழுத்து முதுகிலே குத்துகிருன். "நிறுத்து" என்று அதட்டியவண்ணம் மாவீரர் விராதப் பெரியார் வருகிருர். இராமன் அடிப்பதை நிறுத்துகிருன்.)

**விராத:-** யாரடா இவன்? ஏனடா இப்படிம் பெண்ணைப்போட்டு அடிக்கிருய்? என்ன குற்றமப்பா செய்தாள்? ஏனிந்தக் கொடுந் தண்டனை?

**இராம:-** கிழவனுரே! நீர் யார்? முதலில் அதைச் சொல்லும்.

**விராத:-** நான்தான் விராதன்! விந்திய நாட்டு வீரர்களின் தலைவன். எந்த நாட்டுக்கும் சென்று படைக்கலப் பயிற்சியளிக்கும் ஆசிரியன். இதுபோல் அக்கிரமத்தைக் கண்டால் பொறுக்காது என் நெஞ்சம்!

**இராம:-** எதடா அக்கிரமம்? என்னடா செஞ்சிடுவே கெழட்டுநாயே? நாங்க யார் தெரியுமா? தசரத மகாராஜாவோட புத்ராள்! ஜாக்ரதை!இவள் என்னுடை பாரியாள். இவளை எதுவும் செய்ய நேக்கு சுதந்திரமிருக்கு! என்னைத் தடுக்க ஒனக்கென்ன உரிமை?

**விராத:-** **(ஏளனமாகச் சிரித்து)** அயோத்திய நாட்டு ஆரிய புத்திரனு? நீதானு? உன்னைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். அப்பனே! இந்த நாடு எங்களுடையது. இங்கு வேண்டாம் உங்கள் காரியங்கள்!

**இராம:-** என்னைப்பற்றி நோக்குத் தெரியுமோ? எப்படித் தெரியும்?

**விராத:-** இராமா! நீ சீதையை மணம் புரிந்துசென்று பிறகு, மிதிலையில் ஜனக மன்னரின் படைகளுக்குப் பயிற்சியளிக்கும் பொறுப்பேற்றுப் பணிபுரிந்திருக்கிறேன் நான். அப்போது தெரிந்தேனப்பா உனது அருமை பெருமைகளை!

**இலக்கு:-** அண்ணா! இவேனுடை வார்த்தையிலே நேக்கு நம்பிக்கையில்லே! இவன் துஷ்டன்!

**சீதை:-** ஐயா! பெரியவரே! எங்கப்பா ஜனக சக்கரவர்த்தியை ஒமக்கு நன்னாத் தெரியுமோ?

**விராத:-** நன்ருகத் தெரியும். என்னைப் பாராட்டிப் பரிசுபலவழங்கியிருக்கிருர்! எனது ஒழுக்கமும் நேர்மையும் வியந்திருக்கிருர்.

**சீதை:-** **(கெஞ்சலாக)** ஐயா! ஐயா! அப்படியானு நேக்கு ஒரு ஒதவி செய்யும், ஐயா! இவா சோறு தண்ணியில்லாமெ கொடுமைப் படுத்தரு! கேட்டா துன்புறுத்தரு. இவாளோட இருக்க முடியலே! எப்படியாவது எங்கப்பாவிடம் என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்துடும். ஒமக்குக் கோடி புண்ணியம்!

**விராத:-** இராமா! ஏனப்பா இப்படி? பெண்கள் வாழ்வின் தேன்மலர்களல்லவோ? வதங்காமல், வாடாமலல்லவோ வைத்திருக்க வேண்டும்? என்ன சொல்லுகிருய்! சீதையை கண்ணியமாக நடத்துகிருயா?

**இராம:-** (சினந்து) கிழவா! இவள் என்னுடை மனைவி. கண்ணியமா நடத்துவேன், கழுத்தையும் வெட்டுவேன்! சுகமும் கொடுப்பேன்; சுட்டும் எரிப்பேன்! மரியாதையா ஒன்னுடை வேலையை நீ பார்த்துண்டுபோ! **(அவனைப் பிடித்து இழுக்கிருன். சீதை ஐயோ என்று அலறுகிருள்)**

**விராத:-** அநியாயக்காரரை தண்டிப்பதும், ஆதரவற்ருேரைக் காப்பதும் எனது வேலைகளில் ஒன்றுதான். விவேகமற்றவனே! விடடா சீதையை!

(இராமனின் கையைப்பிடிக்க, அவன் வலி பொறுக்கமுடியாமல் விட்டுவிடுகிருன் சீதையை. கையை முறுக்கிக் கீழே தள்ளுகிருர் விராதன்.)

**இராம:-** ஐயோ! லக்ஷ்மணா! செத்தேண்டா லக்ஷ்மணா!

(விழுந்து புரண்டு எழுந்திருக்க முடியாமல் தவிக்கிருன். இலக்குவன் விராதன் மேல் பாய, அவனையும் பிடித்து மண்ணிலே உருட்டுகிருர். "ஐயோ! அண்ணா!" என்று அலறி விழுகிருன் இலக்குவன்.)

**சீதை:-** ஐயா! பெரியவரே! என்னை மிதிலைக்கு அழைச்சிண்டுபோம். கருணைசெய்யும். உம்மோடு நான் வர்றதாலே எங்கப்பா தவருக நெனைக்கமாட்டார். இந்தப் பாபிகளோட நான் இருக்கவே முடியாது. நீர் என்னைக் காப்பாத்தலேன்னா கழுத்திலே சுருக்கை மாட்டிண்டு மரத்திலே தொங்க வேண்டியதுதான்! ஐயா! ஐயா!

**விராத:-** **(சிறிது யோசித்து)** சரி, வாம்மா, சிறிதுநாள் நீ விலகியிருந்தால்தான் இந்த வீணர்களுக்கும் புத்திவரும். வா, சரியோ, தப்போ, உனது தந்தையிடம் கொண்டு போய்ச் சேர்ப்பது என் பொறுப்பு. அதனால் எது வந்தாலும் ஏற்றுக்கொள்கிறேன். புறப்படு!

(சீதையை அழைத்துக்கொண்டு வேகமாகப் போகிருர். இராமனும் இலக்குவனும் முக்கி முனகி மெதுவாக எழுந்திருக்கின்றனர்.)

**இராம:-** **(பரிதாபத்தோடு)** தம்பி! லக்ஷ்மணா! போயிட்டாளடா என் ஜானகி! போகப் போறதடா என்னுடை பிராணன்! அங்கே சந்தோஷப் படுவாளடா சண்டாளி கைகேசி!.... லக்ஷ்மணா! ஐயோ!.... **(அழுகிருன்)**

**இலக்:-** **(யோசித்து)** அண்ணா! அழாதீங்க! இப்படி அழாதீங்க! அண்ணியை மீட்க நான் மார்க்கம் சொல்றேன். வாங்க போவோம்.

**இராம:-** **(கண்களைத் துடைத்து)** அண்ணியை மீட்கவா? மார்க்கமா? மார்க்கம் சொல்றயா தம்பி! வா, வா, போவோம்.

(இருவரும் போகின்றனர்.)

## காட்சி 10.

**இடம்:** **வனப்பாதை.**

**காலம்:** **இருள்மாலை.**

(உடம்பெல்லாம் சேற்றைப் பூசிக்கொண்டு குட்டரோகி போன்று மாறுவேடத்தில் விழுந்து கிடக்கிருன் இலக்குவன். குரலைமாற்றிக் கரைகிருன்.)



**இலக்கு:-** **(வேகனையோடு)** ஐயோ! அம்மா! பிராணன் போறதே! பசியும், தாகமும் கொல்றதே என்னை! ஐயோ! அம்மா! ஜீவகாருண்யம் உள்ளவா இந்தப்பக்கமே கெடையாதா? ஒரு நல்ல மனிதரைக்கூட காணுமே? ஆண்டவந்தான் கைவிட்டான்னா, எந்த அயோக்யப் பயலும் காப்பாத்த வரலியே! ஐயோ! பிராணன் போறதே! பசி! பசி! காப்பாத்தறவங்க இல்லியா? ஐயோ! ஐயோ! இந்தப் பக்கத்திலே நல்லவங்களே இல்லியோ! பிராணன் போறதே! போறதே........

(விராதப் பெரியாரும் சீதையும் வருகின்றனர், சற்று தொலைவில்.)

**விராத:-** சீதை! நீ சற்று இப்படியே இரு. யாரோ ஒருவன் பசிக்கொடுமையால் பதைப்புற்று அலறுகிருன். பார்த்து வருகிறேன்.

**சீதை:-** **(அச்சத்தோடு)** ஐயா! பொழுது மறைஞ்சுடுத்து....இருளும் சூழத் தொடங்கிடுத்தே! ...நேக்கு பயமா இருக்கு.

**விராத:-** பயப்படாதேம்மா! பாதை எனக்குப் பழக்கமானதுதான். வான ஊர்தியில் வேண்டுமாயினும் செல்லுவோம். சற்று நில், வந்துவிட்டேன்.

(அலறித் துடித்துக்கொண்டிருக்கும் குட்டரோகியிடம் செல்லுகிருர். சீதை ஒரு மரத்தின் மறைவில் சற்று தொலைவில் ஒதுங்கி நிற்கிருள்.)

**விராத:-** **(அன்போடு)** யாரப்பா நீ? குட்டரோகியா? பாவமே! ஏன் இப்படித் துடிக்கிருய்?

**இலக்கு:-** ஐயோ! ரோகம் ஒரு பக்கம்; தாகம் ஒரு பக்கம்! தாகம்! பசி! பசி! ஏந்திரிக்க முடியலே! நடக்கமுடியலே. பேச முடியலே! கொஞ்சம் ஜலம் வேணும்! பிராணன் போறது; ஐயா, ஜலம்! ஜலம்!

**விராத:-** அட கண்ருவியே! ஏனய்யா இப்படித் தனியே வந்து தொலைத்தீர்? நீர் எங்கே போகவேண்டும்?

**இலக்கு:-** விந்தியம் போகணும். விந்தியராணியைப் பார்க்கணும். அதுக்குள்ளே தாகம்! பசி! தாங்கமுடியலியே! ஐயயோ! பிராணன் போறதே!........

**விராத:-** சற்று பொறும் ஐயா! இதோ வருகிறேன்.

(வேகமாகச் சென்று. ஒரு இலைக் குவளையில் தண்ணீர் கொண்டு வருகிருர். மண்டியிட்டு உட்கார்ந்து பரிவோடு அவனுக்குக் கொடுக்கிருர். வேறு பக்கம் மறைந்திருந்த இராமன், பின்னல் வந்து குத்துவாளால் விராதன் முதுகில் குத்துகிருன்.)

**விராத:-** ஆ! ஐயோ! பாபிகளா? **(மீண்டும் குத்துகன். மடிகிருர் விராதன்)**

**சீதை:-** **(ஓடிவந்து பார்த்துப் பதறி)** ஐயோ! இதென்ன அநியாயம்! அக்ரமம்! உபகாரம் செய்தவர்க்கு அபகாரமா? உதவிக்கு நன்றி உயிர்க்கொலையா? அட பாபிகளா!

(இலக்குவன் எழுந்து விடுகிருன். "ஜெயம்! ஜெயம்!" என்று அண்ணனைக் கட்டிக்கொள்கிருன்.)

**சீதை:-** **(பார்த்து வியந்து)** வேஷம்! விபரீதமான வேஷம்! மறைஞ்சிருந்தும், மாறுவேஷமிட்டும் கொலைசெஞ்சிட்டேளே, இந்த மகா வீரனை! பாபிகளா! அடுக்குமா இது? நீங்களா ஆண்மையுள்ளவா? நீங்களா நீதி பரிபாலனம் செய்யறவா? சே! ஒங்களைக் கண்ணல் பார்க்கவே நேக்கு வெட்கமா இருக்கு! தூ! கோழைகள்!........

**இலக்க:-** **(சினந்து)** பைசாசமே! எங்களைத் திட்ற வாயை தீய்ச்சுப் பொசுக்கிடுவேன்! அக்னிசாக்ஷியா மணந்த புருஷன்னு பார்க்காமெ, அண்ணா ராமச்சந்திர மூர்த்தியையா இவ்வளவு கேவலமா வையறே? அறுக்கிறேன் பார் நாக்கை!

(குத்துவாளை உருவிக்கொண்டு சீதையின் மேல்பாயப் போகிருன். இராமன் அவன் கையைப்பற்றித் தடுக்கிருன்)

**இராம:-** லக்ஷ்மணா! பொறு. சீதை பவித்ரமான ஸ்ரீரத்தினம். பிதாவீட்டு ஞாபகம் வந்துட்டா எந்தப் பெண்ணுக்கும் பிடிவாதம் பொறந்துடும். கன்னா பின்னன்னு பேசுவா, பாதகமில்லே தம்பி! இன்னொருவன் எதுக்கு! சீதையோட அபிலாஷையை நாமே நெறைவேத்திடுவோம்! சீதே! மிதிலைக்கு உன் பிதா வீட்டுக்குத்தானே நீ போகணும்?

**சீதை:-** ஆமாம். இனிமேலும் இந்தக் காட்டிலே இருந்துவாழ நேக்கு இஷ்டமில்லே!

**இராம:-** எனக்கு மாத்திரம் இஷ்டமா? ஜானகி! இன்னும் கொஞ்சநாளிலே எப்படியாவது ஒன்னைக் கொண்டுபோய் ஒங்கப்பா வீடு சேத்திடறேன். சரிதானே? வா. போகலாம்.

(கையைப்பற்றி இழுத்துக்கொண்டு செல்லுகிறான். விருப்பமின்றிப் போகிறாள் சீதை. தலையிலடித்துக்கொண்டு பின்னால் செல்லுகிறான், இலக்குவன்.)

## காட்சி 11.

**இடம்:** விந்திய அரண்மனை.

**காலம்:** முற்பகல்.

(காமவல்லி யாழ் இசைத்து இனிமையாகப் பாடுகிறாள். ஒரு பெண் மத்தளம் கொட்டுகிறாள். ஐவணம் அபிநயம் பிடித்து நாட்டியம் ஆடுகிறாள். பாட்டுக்கு முத்திரை தவறுகிறது, பாட்டை நிறுத்துகிறாள் காமவல்லி. நாட்டியம் நிற்கிறது.)

**காமவ:-** ஐவணம்! பாட்டின் கருத்துக்கு முத்திரை பொருந்தவில்லை. (எழுந்து) இங்கேவா. நீ பாடு, நான் ஆடுகிறேன்.

**ஐவண:-** ஆ..கா! அற்புதமான நடனவிருந்து கெடைக்கப் போவுது.

**காமவ:-** ஆமாமடி! இப்போது தேவை விருந்துதான்; மருந்தல்ல! ஆடலும் பாடலும் உயிரும் உடலும்போல் ஒன்றுவதில்தான் விருந்து கிடைக்கும். கலைப்பேரின்பம் நன்கு கனிந்து நலம் விளைக்கும்!

**ஐவண:-** உயிரும் ஒடலும்! இப்ப ஆட்டமாகிய ஒடம்புக்கு, பாட்டாகிய உயிர்வேணும். அவ்வளவுதானே? தர்றேன் பாருங்களேன்.

(சென்று வீணைமுன்பு அமர்ந்து, அதனை மிழற்றி அந்தப் பாட்டைப் பாடுகிறாள். அழகுமிளர ஆடுகிறாள் கலையரசி காமவல்லி. முடிவில் அமைச்சர் தினகரனும், புதல்வன் சம்புகுமாரனும் வருகின்றனர்.)

**காமவ:-** அண்ணா! வாருங்கள்.

**தினக:-** தங்கையே! பெருமகிழ்ச்சி! ஒடுங்கிக்கிடந்த உன்னதமான கலையுணர்வு, மீண்டும் ஊற்றெடுத்துப் பெருகத் தொடங்கிவிட்டது! வெல்க உனது கந்தருவ வாழ்க்கை!

**சம்பு:-** மாமா! அம்மாமாதிரி நானும் ஆடக் கத்துக்கிறேன் மாமா.

**தினக:-** ஆகட்டும் சம்பு! ஏற்பாடு செய்கிறேன்.

**ஐவண:-** இளவரசே! நாட்டியந்தானே? நான் கத்துக் கொடுக்கிறேன்! கவலைப்படாதீங்க!

**சம்பு:-** கவலையா? அதூ நீ கத்துக்கொடுக்கறேன்னு சொன்னப்பறந்தானே வருது. ஐவணம்! நாட்டியத்தைப்பத்தி ஒனக்கு ஏதாச்சும் தெரியுமா?

**காமவ:-** அப்படிக் கேட்காதேடா மகனே! ஐவணம் கலைமகள்! அவளுக்குத் தெரிந்த கலை நுணுக்கம் எனக்குக்கூடத் தெரியாது!

**சம்பு:-** (வியந்து) அப்படியா? தெரியாமெ கேட்டுட்டேன். மன்னிக்கணும் ஐவணம்.

**ஐவண:-** மன்னிக்கமாட்டேன் மகாராஜா.

(அவனை திருஷ்டிகழித்து, தூக்கிக்கொஞ்சுகிறாள் மகிழ்வோடு.)

**தினக:-** காமவல்லி! கூடகிரி மலைச்சாரலில் கலைகோயிலின் வேலைகள் மும்முரமாக நடைபெறுகின்றனவாம். அருள்நெறி வளர்க்கும் சமண பௌத்த துறவிகள்—ஓவியக் கலைவல்லுனர், தமது காவியக்கனவுகளை அங்கே இறவாத சித்திரங்களாகத் தீட்டுகின்றார்களாம்!

**காமவ:-** என் கணவரின் நினைவால் எழுகின்றது கலைக்கோயில். நான் பெறப்போவது பேரின்பம்! பெரும் புகழ்!

**தினக:-** கிடைக்கின்ற புகழ் உனக்கு மட்டுமா? நமது இனத்திற்கே!

**ஐவண:-** ஐயா! சிற்பி காந்தமர் (நாணி) அங்கே என்ன செய்கிறாராம்....?

(வளரும்)



[15-ம் பக்கம் தொடர்ச்சி]

அரசாங்கம் என்பது நாட்டினுடைய அரசியல் அமைப்பு அல்லது நிறுவனமாகும். அரசாங்கத்தின் மூலமாகத்தான் நாடு தன் பணிகளைச் செய்கின்றது. ஒரு அரசியல் சமுதாயத்திலுள்ள எல்லா மனிதர்களும் சேர்ந்து நாட்டை உருவாக்குகிறார்கள்; ஆனால், அதைவிடக் குறைந்த எண்ணிக்கையினரே அரசாங்கத்தை உருவாக்குகின்றனர். நாட்டினுடைய விருப்பத்தை அமுலுக்குக் கொண்டுவர பணியாற்றுபவர்களெல்லோரையும் அரசாங்கம் தன்னுள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் இல்லாமல் நாடு வாழ முடியாது. அரசாங்கம் இல்லாவிட்டால், நாட்டிலுள்ள மக்களைக் கட்டுப்படுத்த முடியாமல் போவதோடு, கூட்டு நடவடிக்கைகளுக்கும் வழியில்லாமற் போய்விடும். எனவே, நாட்டினுடைய விருப்பத்தை அரசியல் ரீதியில் உருவாக்கவும, வெளிப்படுத்தவும், பிறகு அதை நிறைவேற்றவும் பயன்படும் அரசியற் கருவிதான் 'அரசாங்கம்' என்பது!

### அரசுரிமை (Sovereignty)

ஒரு நாட்டிற்கு இருக்க வேண்டிய மிக முக்கியமானது அரசுரிமை. இதுதான் நாட்டை மற்ற சமுதாய அமைப்புகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது குறிப்பிடப்பட்ட நிலப்பரப்பில் ஒரு அரசாங்கத்தின் கீழ் மக்கள் வாழ்ந்தாலும், அதை 'நாடு' என்று நிச்சயமாகச் சொல்லிவிட முடியாது. ஒவ்வொரு நாடும்வேறெந்த அரசியலமைப்பிற்கும் அடிமைப்பட்டோ, கட்டுப்பட்டோ இருக்கக் கூடாது. அதேபோல், அரசியல் ரீதியில் தனக்குச் சேராத நிலப்பரப்பையோ, மக்கள் தொகையையோ தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கக் கூடாது. இதைத்தான் 'அரசுரிமை' என்று கூறுகிறார்கள். அரசுரிமை என்பது எதற்கும் கீழ்ப்படியாமல் ஒரு நாட்டிலிருக்கும் மிக மேலான சக்தி, அல்லது அதிகாரம் என்று கூறலாம். ஒரு நாடு, உள்நாட்டு வெளிநாட்டு அலுவல்களில் யாருக்கும் கட்டுப்படாமல் மேலான அதிகாரத்தை வகிக்கும் பொழுது, அது **அரசுரிமையுள்ள நாடு (Sovereign State)** என்று சொல்லப்படுகிறது. அரசுரிமை என்பதற்கு "சட்டங்களைச் செய்யவும், அவற்றைத் தான் விரும்பும் வழிகளில் அமுல் நடத்தவும் ஒரு நாட்டிற்குள்ள அதிகாரம்" என்று வரையறை (Definition) கூறலாம். இனத்தின் மற்ற கூட்டமைப்புகளிலிருந்து நாட்டைத் தனியாகப் பிரிப்பது அரசுரிமைதான்! இது அகில உலகப் பழக்க வழக்கங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கலாம். ஆனால், அவ்வாறு கீழ்ப்படியுமாறு உலகிலுள்ள எந்த சக்தியும் வற்புறுத்த முடியாது.

இந்த இடத்தில் நாம் மற்றொன்றை நினைவு படுத்திக்கொள்ள வேண்டும். 'மாநிலம்' என்பதற்கு 'Province' என்ற சொல் ஆங்கிலத்திலிருந்தாலும், அரசியலுலகில் மாநிலத்தைக் குறிக்கவும் 'State' என்ற சொல்லே பயன்படுத்தப்படுகிறது. எனவே, அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருக்கும் ஒவ்வொரு மாநிலமும் நாடல்ல. அவையெல்லாம் சேர்ந்துதான் ஒரு நாடாகும். ஆனால், ஐரோப்பா பூகோளரீதியில் ஒன்றுபட்டிருந்தாலும், அதை ஒரு 'நாடு' என்று அழைக்க முடியாது. அதனுள் பல நாடுகள் அடங்கியிருக்கின்றன. ஆகவே, நிலப்பரப்பு, மக்கட் தொகை, அரசாங்கம் ஆகிய எல்லாவற்றிலும் ஒரு நாட்டினுடைய முக்கியத்துவம் அரசுரிமையில் அமைந்திருக்கக் காண்கிறோம்.

(அடுத்த பக்கம் பார்க்க)

## பொன் மொழிகள்

ஒருவன் தன் தகுதியை வெளிப்படுத்தும் ஆற்றல் பெறும் வரையில், அவனுக்கு உலகில் மதிப்பு ஏற்படாது.

—**காந்தியார்.**

எவரிடத்திருந்து மன்பதைக்கெல்லாம் அதிகமான நன்மையுண்டாகிறதோ, அவரே தாம் மனிதர்களுக்குள் எல்லாம் மேலானவர்.

—**முகம்மது நபி.**

வகுப்புப் பகைமையைத் தூண்டிவிடுவதால் மனித சகோதரத்துவத்தை தோற்றுவிக்க முடியாது.

—**ஆபிரகாம் லிங்கன்.**

சுதந்திரப் போராட்டம் மிகக் கடுமையானது. மட்டற்ற தியாகங்கள் செய்தாலன்றிக் காரியம் சாயாது.

—**லாலா லஜபதிராய்**

திருட்டுப் பொருளை விலை கொடுத்து வாங்குபவன் திருடனைப் போன்றவனே; அவதூறுகளை செவிகொடுத்துக் கேட்பவனும் அவ்வாறே!

—**லார்டு செஸ்டர்ஃபீல்டு.**

**பிறரிடம் குறைகளைக் காண்பவன்; தான் பெரிய அறிவாளி என்று எண்ணிக்கொள்கிறான். தன் குறைகளை என்றுமே சிந்திக்காத அவன் தான் அறிவீனன். நம் அறிவீனத்தை நாம் உணர்வதே உண்மையான அறிவைப் பெறுவதற்கான முதற் படி.**

—**சாக்ரடீஸ்.**

**பொருளைமயாகிய தீ நெறியால் குற்றம் வருதலை அறிந்து, அப்பொருளை காரணமாக அறம் அல்லாதனவற்றை அறிவுடையார் செய்யார்.**

—**திருவள்ளுவர்.**

அரசுரிமையை உள்பகுதி வெளிப்பகுதி என்று இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். உள் பகுதி என்பது, ஒரு நாடு தன்னுள்ளிருக்கும் எல்லா தனி மனிதர் மீதும், கூட்டங்கள் மீதும் சட்ட பூர்வமான அதிகாரத்தைச்செலுத்தும் தன்மையுடையது என்ருகும். வெளிப்பகுதி என்பது, ஒரு நாடு வேறெந்த நாட்டிற்கும் கட்டுப்படாமல் சுதந்திரமாக தனித்தியங்கும் உரிமையுடையது என்ருகும்.

"நாடு என்பது ஒரு நிச்சயமான நிலப்பரப்பில் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு வாழும் மக்கள் கூட்டம்" என்று **வில்ஸன்** (Wilson) என்னும் அரசியலறிஞர் வரையறை விதிக்கின்ருர்.

எனவே, அரசியல் நூல் கண்ணேட்டத்திலிருந்து பார்க்கும் பொழுது, கூட்டாட்சி நாட்டிலிருக்கும் (Fed-ral State) மாநிலங்களை 'States' என்று கூறமுடியாது. அதே போன்று, **பிரிட்டிஷ் காமன வெல்த்தையும்** (British Comm--nwealth), **ஐக்கியநாட்டு சபையையும்** (U. N. O) நாடுகள் என்று அழைக்க முடியாது. இவ்விரண்டு அமைப்புகளுக்கும் நிலப்பரப்போ, மக்கட் தொகையோ, அரசாங்கமோ, அரசுரிமையோ கிடையா. ஆனல், தென்னுப்பிரிக்காவில் இருக்கும் **டொமினியன்களை** (Dominions), அவை சில விஷயங்களில் பிரிட்டனுக்குக் கட்டுப்பட்டிருந்தாலும், நாடுகள் என்று சொல்லலாம்

'நாடு' பற்றி 'அரசியல்' பேசுவது இவைதான். திராவிட நாடு 'நாடாக' முடியுமா என்று வசை மொழியை வில்லாக்கி, கேள்விக் கணைகளை நம்மீது வீசும் மாற்றுக் கட்சித் தோழர்கள் இப்போது கூறட்டும், திராவிட நாடு அரசியல் ரீதியில் அமைய முடியுமா, முடியாதா வென்று!

●●

# ~●~ வடக்கும் தெற்கும்! ~●~

தென்னுட்டில் "சைவம்" என்ருல் அருள் நெறியைக் குறிக்கும்; வடநாட்டிலும், வடநாட்டிலிருந்து வருபவர்களுக்கும் "வைஷ்ணவம்" என்ருல்தான் அருள்நெறியைக் குறிக்கும்.

—**"கல்கி" 19-5-57.**

சைவம்,வைணவம் இரண்டுமே அருள் நெறிகளல்ல. பிள்ளைக்கறி கேட்கும் பரமசிவனும், மான்கறி தின்னும் இராமச்சந்திரமூர்த்தியும் சைவ,வைணவக் கடவுள்கள், கடவுளரே புலால் உண்ணுவோர் எனில் அவர் வழிநடக்கும் பக்தர்கள் எப்படி இருப்பர்?

கொல்லாமையை — புலால் உண்ணுமையை விரதமாகக் கொண்டிருந்த "பவுத்தம்" "சமணம்" அருள்நெறி என்ருல் ஒப்பலாம். எனவே,

புலால் உணவு சமைக்காத ஓட்டலுக்கு "சமண ஓட்டல்" அல்லது "பவுத்த ஓட்டல்" என்ற பெயர்ப்பலகையே பொருந்தும். புலால் உணவு சமைக்கும் "மிலிட்டரி" ஓட்டல்களையே சைவ ஓட்டல், வைணவ ஓட்டல், பிராம்மணுள் ஓட்டல் என்று கூற வேண்டும். கொள்கைப்படி!

யாகத்தின் பெயரால் ஆடுமாடுகளை நெருப்பிலிட்டுப் பொசுக்கித் தின்னுகின்ற பழக்கம் இன்று வரை "அவா"ளிடமிருந்து போய் விடவில்லை! நிற்க,

வடவரும் தென்னவரும் வாழ்வு முறையில், கலாச்சாரத்தில் மாறுபட்டவர்கள் என்று நாம் கூறுவதை "கல்கி"யார் இனியேனும் ஒப்புவாரா?

வடக்கத்தியார்களுக்கு சைவச் சாப்பாடு என்ருல் என்னவென்று தெரியாது; தெற்கத்தியார்களுக்கு வைணவச் சாப்பாடு என்ருல் அருள்நெறியுணவு என்பது தெரியாது. சப்பாத்திக்கும், தோசைக்குமுள்ள வேற்றுமையைக் காட்டினும் பெரிதாக இருக்கிறதே! உணவிலும் வேறுபாடு! நெறியிலும் வேறுபாடு!

வடக்கே வைணவம் அருள் நெறி! தெற்கே சைவம் அருள் நெறி! எனவே வடக்கு வேறு, தெற்கு வேறுதானே?

**—வாலி.**


**வெண்சங்கு சீயக்காய் தூள்** எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

**செல்வம் ராணி**

**&**

**சேகர் ஊதுபத்திகளை**

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

**வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,**

3037-38, டபீர்குளம் ரோடு, தஞ்சாவூர்.




# சூடச்சூட!

**ஒழிவாரா "ஐயர்?"**

*தூத்துக்குடி நகராண்மைக் கழக அவசரக் கூட்டத்தில் அந்நிய ஏகாதிபத்தியக்காரர்களின் நினைவுச் சின்னங்களை ஆகஸ்டு 15-ல் அகற்றிடல் வேண்டும் என்ற இந்திய அரசினரின் அறிவிப்பு பற்றி ஆலோசித்தனர்.*

*"ஆஷ் ஞாபகார்த்த மண்டபம்" என்றிருப்பதை, 'வாஞ்சி ஐயர் மண்டபம்" என்று மாற்றக் கோரி ஒரு உறுப்பினர் தீர்மானம் கொண்டு வந்தார். இது அப்படியே நிறைவேறியிருந்தால் அந்த மண்டபம் நாளடைவில் "ஐயர் மண்டபம்" ஆகியிருக்கும். ஐயர் சாதி உயர்வுக்கு வேண்டிய காரியங்களை அங்கே நிகழ்த்த வசதி ஏற்பட்டிருக்கும். எழுந்தார் ஒரு அங்கத்தினர். 'ஐயர்' என்ற சொல்லை அகற்ற வேண்டும் என்ருர். எல்லோரும் ஆமோதித்தனர். ஒழிந்தார் ஐயர்! முளையிலேயே கிள்ளப்பட்டது உபத்திரவம்!*

*இந்த வாலறுப்பு வேலை தொடர்ந்து எங்கெங்கும்— பொது நிறுவனங்கள் எல்லாவற்றிலும் நடைபெற வேண்டாமா? அண்மையிலே அரசாங்கத்தினர் நிறுவப் போகும் தியாகிகள் நினைவுச் சின்னங்களிலே திருப்பூர் குமரன், வ. உ. சிதம்பரனர் இவர்களின் சின்னங்களோடு, சேரமாதேவிகுருகுலம் நடத்தி, வருணசிரமம்வளர்த்த வ. வே. சு. ஐயர் அவர்களுடையதும் இருக்குமாம். இருந்துதொலையட்டும்! ஆனல் அவர் பெயரில் ஒட்டிக்கொண்டிருக்கும் "ஐயர்" என்ற வாலை நறுக்கவேண்டும். சாதி ஒழிப்புக்குப் பரிசு நல்கும் காங்கிரஸ் அரசாங்கம், இந்தச் சாதிப் பெயர் ஒழிப்பையாவது துணிந்து செய்யுமா? தூத்துக்குடி நகர சபை அங்கத்தினர்களுக்கு இருந்த தைரியம்கூடவா அமைச்சர்களுக்கு இல்லாமற் போய் விடும்? பார்க்கலாமே!*

**சவால்! சவால்!**

தென்னகத்தின் பெருங்குடி மக்கள் செய்ய வேலையில்லை, உண்ண உணவில்லை என்ற நிலையில் வாடி வதங்குகின்றனர்; வறுமையாளர், பிச்சைக்காரர் தொகை பெருகிய வண்ணமுள்ளது. இங்கு கால் ரூபாயைக் கண்டால் ஐந்து ரூபாயாக மதிப்பவர்கள் 100-க்கு 50 பேர்இருப்பார்கள். இந்தலட்சணத்தில் உணவு தானியங்கள்-வாழ்வுக்குத் தேவையான பொருட்களின்விலையோ பூனை ஆனையான கதைபோல், உப்பி, ஊதி, பெருத்துக்கொண்டே போகிறது. "வாழ்க்கை ஒரு பெருஞ் சுமை" என்ற வரட்டு வேதாந்தம் பலிக்கத் தொடங்கிவிட்டது! அநியாயம்! அநியாயம்!!

இதற்குக் காரணம் கேட்டால் கோயில் குருக்கள் சொல்லுகிருர்: "மக்களுக்கு ஆண்டவனிடம் பக்தி குறைந்துவிட்டது; அபிஷேக ஆராதனைகள் நடைபெறுவதில்லை. அல்லற்படுகின்றனர்" என்று லோககுரு சங்கராச்சாரியாரோ "வைதிக மார்க்கம் பலமிழந்து, பகுத்தறிவு நெறி தலை தூக்குகிறது; நாடெங்கும் நாத்திகம் பரவுகின்றது. நலிகின்றனர் மக்கள்" என்கிருர். சைவ சமயத் தலைவர் கூறுகின்ருர்; "சிவபெருமான்வழிபாடு சிறப்பெய்த வேண்டும். நலிதரு சிறு தெய்வங்கள், கொலை வணக்கங்கள் ஒழிதல் வேண்டும்" என்று. வைணவத் திருநாமம் "நாடெங்கும் நாராயணனை வணங்க வேண்டும், பொல்லாங்கு நீங்கிடும்" என்று செப்புகின்ருர்.

இந்தப் பாலைவனத்திலே ஒரு நீரூற்று! தென்னகத்தின் கேவல நிலைக்குரிய காரணங்களை அரசியல் கண்ணேட்டத்திலே கணித்துக் கூறுகின்ருர் டாக்டர், பி. ஜே. தாமஸ்-பொருளாதார நிபுணர்.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழும், இராணுவச் செலவின் கீழும் இந்தியப் பேரரசின் வருமானத்தில், பெரும் பகுதி வடநாட்டு மாநிலங்களில் செலவிடப்பட்டிருப்பதே பொருள் விலை ஏற்றத்தின் மூலகாரணம்.

வடக்கு மாநிலங்களின் அதிகமாகப் பணம் குவிந்திருப்பதன் பயனுக உணவு தானியங்களுக்கும், இன்றியமையாப் பொருட்களுக்கும் அங்கு மிகுதியான தேவையிருக்கிறது. அதுவே மேற்படி பொருட்களின் விலையை உயர்த்தி விட்டது. பொருள் விலையேற்றத்தின் தீமைகளை தெற்கு மாநில மக்கள் அனுபவிக்கின்றனர். இப்பகுதி மக்களின் வருமானம் குறிப்பிடத்தக்க வகையில் உயராததே அதற்குரிய சிறப்பான காரணம்."

டாக்டர், பி. ஜே. தாமஸ் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர் என்று எந்த "ஏக இந்தியா"வும் செப்பிட முடியாது. 'வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது"என்பது வெறும் அரசியல் கோஷமல்ல; பிரத்தியட்ச நிலையும், புள்ளி விபரமும், வறுமையும்—செம்மையும் காட்டிடும் பிரம்மாண்டமான உண்மை என்பதைப் பொருளாதார நிபுணரே கூறுகின்ருர்! இதனைத் தவறு என்று மெய்ப்பிக்க எந்த விபீஷண, சுக்கிரீவ மேதாவியாவது முன்வருவரா?

பத்தாண்டு பொறுங்கள், நாச வேலை செய்யாதீர்கள் என்று நல்லுபதேசம் செய்யும் கனம், சுப்ரமணியம் இக்கூற்று தவறு என்று மறுப்பாரா? தென்னக விடுதலை உணர்ச்சி தனக்குவிட்ட ஒருசவாலாக ஏற்பாரா? இல்லை, குருக்கள், ஆச்சாரியார், சமய வாதிகளைப் போல, ஒன்றுகிடக்க ஒன்றைக் காட்டி "ஒப்பாரி" வைத்தே காலத்தை ஓட்டுவாரோ?

**—"அகப்பை"**

# கேள்விக்கணை

இம்முறை பரிசு பெற்றவர்:
● இர.மா.பெ.பண்பரசன்
7 B மதங்கீஸ்வரர்
கோவில் தெரு,
பெரிய காஞ்சீபுரம்.

**இரா. சம்பூரணன், மதுரை.**

கே: ஓட்டல் மறியல், பிராமணாள் அழிப்புப் போராட்டம் நடப்பது குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன?

*ப: நோகாமல் அடிக்கிறேன் என்கிறார் கனம் காமராசர்; ஓயாமல் அழுகிறேன் என்கிறார் பெரியார் இராமசாமி; இருவர்க்குள்ளும் என்ன ஏற்பாடோ, என்ன ஒப்பந்தமோ யாமறியோம் பராபரமே!*

*　*　*

கே: ஜாதியை ஒழிக்க சட்டசபையில் தீர்மானம் கொண்டு வருவதாக தி. மு. க. தலைவர்கள் சொன்னார்களே; ஏன் கொண்டு வரவில்லை?

*ப: தீர்மானம் கொண்டு வந்தார்கள்; பேசினார்கள்; காமராசர் எதிர்த்து ஒழித்து விட்டார்; அதனால் என் காரியம் கெட்டுப் போய்விட்டது என்று பெரியார் பேசிடக் கூடாதல்லவா? அவரால் முடியாதபோது இவர்கள் செய்வார்கள்!*

**இர. மா. பெ. பண்பரசன், பெரிய காஞ்சி.**

கே: படித்தவர்கள் கற்புத் தவறுவது அதிகமா? படிக்காதவர்கள் தவறுவது அதிகமா?

*ப: படிக்காதவர்கள் எளிதாகத் தவறுவார்கள்; படித்தவர்கள் தவறுமுன் சற்று யோசிப்பார்கள்!*

● கே: நாகரிகம் நட்டத்தையும், நாசத்தையும் விளைவிக்கிறதா? நன்மையை விளைவிக்கிறதா?

*ப: நாகரிகம் என்பது பகுத்தறிவுக்கேற்ற பண்பாடு எனக் கொள்வோமாயின் நன்மையினையே விளக்கும்; கண்டதே காட்சி, கொண்டதே கோலமெனக் கருதுவோமாயின் நட்டமும், நாசமும் விளைந்திடுவதில் அட்டியில்லை!*

**வி. மாணிக்கம், மா. ஓலைப்பட்டி.**

கே: மனிதன் அறிவை இழப்பது எப்போது?

*ப: அன்பு, ஆசை, பசி, சினம் காமம் போன்ற உணர்ச்சிகள் எல்லையினைக் கடந்து கொந்தளிக்கும்போது மனிதன் அறிவை இழக்கிறான்.*

*　*　*

கே: வயிற்றுக்குப் பாலும், தலைக்கு எண்ணெயும் இல்லாது வாடும் குழந்தைகளுக்குக் கொடுக்காமல் அவற்றைக் கற்சிலை மேல் ஊற்றிப் பாழாக்குபவரை என்னவென்று அழைப்பது?

*ப: மனித சமுதாயத்தின் இரக்கமற்ற பக்தப் பிராணிகள்! கொலைகளவு செய்தும் மோட்சலோகம் போக விரும்பும் தன்னல வெறியர்கள்!*

**தூ. s. சம்பத்குமார், சத்தியமங்கலம்**

கே: பழையன கழிதலும், புதியன புகுதலும், பழையன கழித்தலும், புதியன புகுத்தலும். இவற்றில் எது சரி?

*ப: முன்னது "நன்னூ"லில் உள்ளது. பின்னது நடைமுறையில் உள்ளது; இரண்டுமே சரிதான்.*

**ஏ. தெட்சணாமூர்த்தி, புட்பவனம்.**

கே: காந்தீயம் இப்போது எதற்குப்பயன் படுத்தப்படுகிறது?

*ப: வடநாட்டு ஏகாதிபத்தியத்தைத் தென்னாட்டில் பலப்படுத்தும் பிரசாரத்திற்கு!*


# இனிய தென்றல்

வெளியீடுகள்.

**ப. கண்ணன்.**

| | |
|---|---|
| புரட்சிப் பாடகன் | 1-50 |
| வீரவாலி | 1-25 |
| ஜமீன்தார் | 1-00 |
| காதல் மணம் | 0-50 |
| கன்னியின் சபதம் | 0-50 |
| சிந்தனைச் சித்திரம் | 0-62 |
| மின்னொளி | 0-37 |

**மு. கருணாநிதி.**

| | |
|---|---|
| ஒரே முத்தம் | 1-25 |

**சி. பி. சிற்றரசு**

| | |
|---|---|
| சிந்தனைச் சுடர் | 0-31 |

**அறிஞர் இங்கர்சால்**

தமிழில்: இரா. நெடுஞ்செழியன்

| | |
|---|---|
| சமுதாய விடுதலை | 0-75 |

**பாவலர், வேலாயுதசாமி.**

திருக்குறள் இசைப்பாடல்கள்

| | |
|---|---|
| அறத்துப்பால் | 0-44 |
| அறிவுத் துளிர் | 0-19 |

**குஞ்சிதம்—வடிவேலு.**

| | |
|---|---|
| கெட்டிக்காரன் | 0-16 |
| பைங்கிளி | 0-12 |
| ஆலமரத்துப்பேய் | 0-12 |
| வால்முளைத்த சாமியார் | 0-12 |
| அன்புமணி | 0-12 |

விற்பனையாளர்களுக்கு ஏற்ற கழிவுண்டு.

**தென்றல்**
**நூற்பதிப்புக் கழகம்,**
சலகண்டபுரம். சேலம் மாவட்டம்.

தென்றல் நூல்கள் சென்னையில் கிடைக்குமிடம்:
**பாரி நிலையம்,**
**59, பிராட்வே, சென்னை.**

தென்றல் நூல்கள் இலங்கையில் கிடைக்குமிடம்:
**ப சுப்ரமணியம்,**
பகுத்தறிவுப் பண்ணை,
**113, கடல் தெரு, கொழும்பு.**




[உ-ம் பக்கம் தொடர்ச்சி]

றையும் விதிக்க முடியாது. இன்று உலகத்தில் ஏறக்குறைய 80 நாடுகள் உள்ளன. இவற்றுள், இத்தாலியில் இருக்கும் **சான் மெரீனோ** (San marino) என்ற நாடு 38 சதுர மைல் பரப்பளவையே கொண்டது. ஆயின், **அமெரிக்க ஐக்கிய நாடுகள்** (U. S. A.) 3738335 ச. மைல் பரப்பளவையும், **சோவியத் ரஷ்யா** (U. S. S. R) 834894 ச மைல் பரப்பளவையும் கொண்டிருக்கின்றன. இருப்பினும், இந்த மூன்றுமே 'நாடு' என்ற அழைக்கத் தகுதி வாய்ந்திருக்கின்றன.

பெரிய நாடுகளைவிட சிறிய நாடுகள்தான் பலம் வாய்ந்தவை என்று சில அறிஞர்கள் வாதிடுகின்றனர். சிறிய நாட்டில்தான் ஒற்றுமையும், நாட்டுப் பற்றும் மிகுதியாக இருக்கின்றன. அத்துடன், சனநாயகம் (Democracy) வெற்றிகரமாக செயல்படுவதற்கும் சிறிய நாடுதான் ஏற்றது. இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக **ஸ்விட்சர் லாந்தை** (Switzrland) காட்டலாம். ஆனால், பெரிய நாடுகளுக்கு இருக்கும் பொருளாதார, இராணுவ வசதிகளை சில ஆசிரியர்கள் வலியுறுத்தி வருகின்றனர். சிறிய நாடுகள் பொருளாதாரத்தில் சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாதிருப்பதால், பெரும் நாடுகளில் ஆக்கிரமிப்புக்கு எளிதாக அடிபணிந்து விடுகின்றன. இரண்டாவது உலகப்போரில் **பெல்ஜியத்திற்கும்** (Belgium), ஹாலந்திற்கும் (Holand) ஏற்பட்ட முடிவை இங்கு சான்றாக எடுத்துக் கொள்ளலாம். அதே சமயம், மனித இனத்தின் நாகரிகத்திற்கு சிறிய நாடுகள் செய்திருக்கும் சேவைகளை மறக்க முடியாது. ஒரு நாட்டினுடைய பெருமை அதனுடைய அளவைக் கொண்டு அளக்கப்படுவதல்ல. பூகோள அமைப்பு, இயற்கைச் செல்வங்கள், மக்களின் மனப்பான்மை ஆகிய இவைதான் ஒரு நாட்டினுடைய சமூக, அரசியல் அமைப்புகளின் முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைந்திருப்பவை.

**மக்கட்தொகை** (Populon)

ஒரு நாட்டிற்கு அமைந்திருக்க வேண்டிய அடுத்தகுணம் 'மக்கட்தொகை' மக்களே வசிக்காத நிலப்பரப்பை நாடு என்று சொல்லமுடியாது. ஆனால், ஒரு நாட்டில் இவ்வளவு எண்ணிக்கையுள்ள மக்கள் தான் இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டுக் கூற இயலாது. ஒரு நாடு தன்னுடைய சுய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளப் போதுமான அளவுக்கு அதிக மக்கட் தொகையையும், நன்றாக ஆளப்படுவதற்கு ஏதுவாகப் போதுமான அளவுக்குக் குறைந்த மக்கட் தொகையையும் கொண்டிருக்க வேண்டும் என்று **அரிஸ்டாட்டில்** (Aristotle) விதித்தார். ஒரு இலட்சிய நாட்டின் (Ideal State) மக்கள்தொகை 5000 ஆக விருக்க வேண்டும் என்பது **பிளாட்டோவின்** (plato) கருத்து. ஆனால், இன்றைய உலக நாடுகள் மக்கள் எண்ணிக்கையில் பெரிதும் மாறுபடுகின்றன. **அந்தோரா** (Andora) நாட்டின் மக்கள் தொகை 5000; **சீனாவினுடைய** (China) மக்கட் தொகையோ 422 மில்லியனுக்கும் அதிகம். நல்ல அரசாங்கம் அமைவதற்குக் குறைவான மக்கள் தொகைதான் ஏற்றது என்று முற்கால ஆசிரியர்கள் நம்பி வந்தனர். ஆனால், தற்பொழுது செய்தியனுப்பல், போக்குவரத்து முதலிய துறைகளில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தின் விளைவாக, மிக அதிகமான மக்கட் தொகையைக் கொண்ட நாட்டில் கூட வெற்றிகரமான அரசாங்கம் இயங்கி வருவதைக் காண முடிகிறது.

**அரசாங்கம்** (Government)

மூன்றாவதாக ஒரு நாட்டிற்குத் தேவைப்படுவது 'அரசாங்கம்'

(11-ம் பக்கம் பார்க்க)




விமர்சனம்.

## மல்லிகா.

தங்கைக்காகத் தமக்கை மேற்கொள்ளும் தியாகத்தை ஆதாரமாக வைத்து பின்னப்பட்டது மல்லிகா! கதையில் புதுமை ஏதும் இல்லாவிடினும் சமூக வாழ்வை ஒட்டியது. எம். ஏ. துரையின் கதை அமைப்பும், நாஞ்சில்நாடு டி.என். ராஜப்பாவின் கச்சிதமான வசனங்களும் படத்தின் தரத்தை உயர்த்துகின்றன.

இடைவேளைவரை வேகமாக ஓடுகின்றகதை,இடைவேளைக்குப்பின்படுக்கிறதென்ருலும், நடிகர்களின் திறமையான நடிப்பும், இசையமைப்பாளரின் செவிக்குணவான இசையும் படத்தை இழுத்துச் செல்லுகின்றன.

மோகனுக வரும் ஜெமினி கணேசன் கனகச்சிதமாக நடித்திருக்கிருர் என்ருலும் இவருக்கு வேறு மாதிரியான நடிப்பே நடிக்கத்தெரியாதோ என்றெண்ணுகின்ற அளவில் எல்லாப் படங்களிலும் ஒரே மாதிரியாக நடித்திருப்பது பாராட்டத் தக்கதல்ல.

தந்தை கொலையுண்டு கிடப்பதைக் கண்டு தனயன் திடுக்கிட்டு அலறும் கட்டத்தில் ஜெமினி கணேசன் சிறிது சிரமப்பட்டிருந்தால் மக்கள் கண்ணீர் விட்டிருப்பார்கள்; படமும் சோபித்திருக்கும்.

மல்லிகாவாக வரும் பத்மினி அழகாக ஆடி-இனிமையாகப் பேசி-அருமையாக நடித்திருக்கிருர். மற்றும் பாலையா,தங்கவேலு, எம். என். ராஜம், என். எஸ். நாராயணபிள்ளை, டி. வி. குமுதினி முதலானேர் அவரவர் பாத்திரங்களை உணர்ந்து பேசி, நடித்திருக்கின்றனர். பேபி ராஜகுமாரியை இப்படத்தில் மிக நல்ல முறையில் பயன் படுத்தியிருக்கிருர்கள். சிறுமியின்பேச்சில் மட்டுமல்ல; முகபாவங்களிலும் திறமை வெளிப்படுகிறது. நல்ல எதிர்காலம் உடையவள் இந்தச் சிறுமி.

## கலைக்கூடம்

டைரக்ஷனின் சில தவறுகள்: பத்மினி ஆடும் ஒரு கட்டத்தில் ஆடைக் குறைவு அவ்வளவு தேவையில்லை. அப்படியிருந்தால்தான் நடனம் எடுபடும் என்ற டைரக்டரின் கருத்து கலையுலகிற்கு இழுக்காகும். மற்றபடி டைரக்டரின் திறமையைக் குறைகூறுவதற்கில்லை.

ஜிக்கி, ராஜா, நாகேஸ்வரராவ், கிருஷ்ணன், மைதிலி, சுசீலா ஆகியோரால் பாடப்பெற்ற பாடல்களில் நல்ல கருத்துக்கள் இருந்தும், டி. ஆர். பாப்பாவின் திறமையான இசையமைப்பு இருந்தும் ஓரளவுதான் எடுபடுகின்றன பாட்டுக்கள்! ஒளி, ஒலிப்பதிவு பரவாயில்லை.

"ஞான சௌந்தரி"யைப் போல் சிட்டாடலுக்கு "மல்லிகா" அபாரமான வெற்றியைத் தேடித்தரவில்லையாயினும், "இதயகீத"த்தைப் போன்ற இரண்டாந்தரமான வெற்றியையாகிலும் தந்திருக்கிருள்! குடும்பத்தோடு சென்று ஒரு முறை தாராளமாகப் பார்க்கலாம்.

— ஏ. பி. எஸ். மணி.

### நந்திவர்மன்.

கலைஞர், கே. என். இரத்தினம் அவர்களின் தேவி நாடக சபா சேலம்—ஆத்தூரில் சிறந்த நாடகங்களை நடத்தி ரசிக மக்களின் மனதைக் கவர்ந்து வருகிறது.

ஆசிரியர், ப. கண்ணன் அவர்களின் வரலாற்று நாடகமாகிய "நந்திவர்ம"னை தக்க வகையில் அரங்கேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். அதற்கென புதிய சீன்கள், உடைகள், அணிகலன்கள் தயாரிக்கப்படுகின்றன.

விரைவில் அரங்கேறப் போகும் 'நந்திவர்மன்' 'தேவி'யின் சிறந்த நாடங்களில் ஒன்ருகத் திகழும் என்பதில் ஐயம் இருக்க முடியாது.

### ராணி தனபாக்கியம்.

தோழர், செங்குட்டுவன் தீட்டிய "ராணி தனபாக்யம்" என்ற வரலாற்றுச் சாயலில் எழுந்த வண்ணத் தமிழ் நாடகம், 2—8—57-ல் இராசீபுரம் ரங்கவிலாஸ் தியேட்டரில் நடைபெறும். ஆசிரியர், ப.கண்ணன் தலைமைதாங்கிக் கருத்துரை வழங்குவார்.

### என்று வருமோ?

கொள்வது மிகை கொளாது கொடுப்பதும் குறைகொடாத காலம் என்று வருமோ? பொருளின் உண்மை மதிப்பிற்குத் தக்க விலைகொடுத்து வாங்கக் கூடிய காலம் என்று வருமோ? உழைப்பிற்கேற்றஊதியம் வழங்கிடும் உயரிய காலம் தோன்றிடாதோ?

—இங்கர்சால்.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனுல் அச்சிடப்பட்டு; சேலம்—1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

திங்கள் இருமுறை. ஆசிரியர்:- ப. கண்ணன்.

மலர் 7 | 1-10-57 | விலை 0-2-0 | (12 காசு) | இதழ் 13



## தன்மானத் தமிழ் மறவன்.

அடிமையுற்று தாழ்வுற்று அல்லற்படும் தாயகம்; அறிவினை மறந்துஉணர்விழந்து கிடக்கும் மக்கள் வாழ்வு பெறவும் வலிவு பெறவும் பெரும் பணிபுரிந்த அருஞ்செயல் மறவர் கே.வி.கே. சாமி.

மலைகுலைந்தாலும் கொள்கையிலே—கொண்ட நோக்கிலே — நிலைகுலையாத மாவீரர்; நெல்லை மாவட்டச் செயலாளர்; தலைமைக் கழகச் செயற்குழு உறுப்பினர்;தொழிலாளர்த் தலைவர்;துன்புற்ரேரின் துணைவர்; தன்மானத்தமிழ் மறவர்; அந்தோ! அவர் நம்மைவிட்டுப்பிரிந்து. அல்ல அல்ல. பிரிக்கப்பட்டு ஓராண்டு ஓடிவிட்டது. அஞ்சா நெஞ்சம் படைத்த சாமி இன்று நம்மிடையே இல்லை!

பொதுச்செயலாளரின் அறிக்கையின்படி 29—9—57 சாமியின் நினைவு நாள் கொண்டாடப் பட்டது. உழைப்பின் செல்வமாக-தியாகத்தின் சின்னமாக—பகுத்தறிவுச் சுடராக விளங்கிய செயல்வீரர் சாமிக்கு கரம் கூப்பி வீர வணக்கம் செலுத்துகிருேம்! வாழ்க அவர் புகழ்! வளர்க அவர்பணி!

இந்தி வெறியரின் ஆதிக்கமும், இந்திய அரசினரின் பிடிவாதமும் தாயகத்தைப் பாழ்படுத்தப் படை திரட்டிவரும் இந்த நேரத்திலே, எதிர்த்துப் போராடும் நமக்கு சாமியின் திருவுருவும், தீரச்செயலும் புத்துணர்ச்சி நல்குமாக! உள்ளத்திலே புதுமுறுக்கு ஏற்றுமாக! வெல்க திராவிடம்!

# தேசியம்.

வித்துவான் :
## இரா. சொக்கலிங்கம்.

**1. இன்று.**

தேசியம் என்ற சொல் இன்றைய காலப் போக்கில்,மாறுபட்ட பொருந்தாப் பொருளை உணர்த்தத் துவங்கியுள்ளது பல இனமக்களையும் மொழிகளையும் உள்ளடக்கிய இந்திய உபகண்டம் என்னும் இந்நாட்டில், சில பொதுவான கூறுகளில் இந்நாட்டு மக்கள் சூழ்நிலையின் வற்புறுத்தலினால் வலிந்து ஒன்றுகூடும் உணர்வு எங்ஙனம் தேசிய உணர்வாகும்? நமக்கு 'இந்திய ஒருமைப்பாடு' என்ற அடிப்படை ஒற்றுமையற்ற உணர்வு எற்படக் காரணமாயிருந்தது கடந்தகால வெள்ளையராட்சியே என்பதை மறுத்தற்கில்லை. ஆகவே இவ்வுணர்வு வாலாற்றின் விளைவுகளில் ஒன்று என்பதில் ஐயமில்லை. ஆனால் நம்மில் பலர் இவ்வுண்மையை மறந்து விட்டனர். ஆகையால்தான் இவ்வுணர்வை வலிந்து செயற்கை முறைகளில் வளர்க்கத் தலைப்படுகின்றனர். அன்னாரின் இத்தகைய முயற்சியால், வேறுபட்ட மொழி இனங்களையும், மக்கள் இனங்களையும் கொண்ட இந்நாட்டில் பெரும்பான்மை மொழியினர் ஆதிக்க வல்லாட்சி நடத்தவும், சிறுபான்மையினரும் அவர்தம் மொழியும் நசுக்கப்படுதற்கேற்ற சூழ்நிலையும் உண்டாகின்றது. உண்டாக்கப்படுகின்றது.

'இந்திய ஒருமைப்பாடு' என்ற போர்வையில் இனவுணர்வு, தாய் மொழிப்பற்று போன்ற உயர்ந்த பண்புகள் 'குறுகிய நோக்கமுடையன' என்ற பழிச் சொல்லைப் பெறுகின்றன.

அரசியல் சட்டப்படி இந்தியாவிலுள்ள பதினான்கு மொழிகளும் தேசிய மொழிகளே. ஆனால் நடைமுறையில் இந்தி மொழிக்கே 'தேசிய மொழி' என்ற உயர்நிலையும் செல்வாக்கும் ஏற்படுத்தப் பட்டுளது. குறிப்பிடத்தக்கக் கல்வியறிவுடைய ஒருவரைக்கூட, இந்தியாவின் தேசிய மொழிகள் எவை? அல்லது எத்தனை? என்று கேட்போமேயானால், கேட்கப்பட்ட அவர், நாம் பன்மையில் கேட்பதற்கு வியந்து—தயங்கி, 'ஏன்?.... இந்திதான் இந்தியாவின் தேசிய மொழி' என்பார்! சொல்பவரைச் சினந்து பயனில்லை தேசிய மொழி என்றால் இந்தி மாத்திரம்தான் என்ற நிலையை தில்லி ஆட்சியினர் ஏற்படுத்தி விட்டனர்.

'இந்திய ஒருமைப்பாடு' என்ற பெயரில்தான் "சாகா சகாப்தம்" போன்ற வடமொழிச் சார்பான முறைகளைப் பின்பற்றும் நாட்காட்டி (காலண்டர்) முறைகளும் வானொலி முதலிய தில்லி ஆட்சியினர் துறைகளின் மூலமாகப் புகுத்தப்படுகின்றன. வள்ளுவர் ஆண்டு, சித்திரைத் திங்கள் போன்ற தமிழ் நாட்காட்டி முறைகள் தமிழ்ப்பற்றுக் கொண்டோரின் ஏட்டளவில் நின்று மறைந்த வாழ்வு பெறும் நிலையிலேயேயுள்ளன. 'தேசியஒற்றுமையை வளர்க்கும் வழி' என்ற பெயரில்தான் எல்லா மொழிக்கும் ஒரே வகையான பொது எழுத்து (லிபி) நியமிக்கும் முயற்சிகள் நடைபெற இருக்கின்றன. இம்முயற்சிகள் வளருமேயானால் நமது வட்டார மொழிகள் எல்லாம் தங்களுடைய வரிவடிவ எழுத்துக்களைத் தியாகம் (?) செய்ய நேரிடும் என்பதில் ஐயமில்லை. இவற்றைப் போன்ற முயற்சிகள் இந்திய மக்கள் தங்களுக்குள் அதிக ஒற்றுமையை உண்டாக்கிக் கொள்ளவும், உள்ள வேற்றுமைகளைப் போக்கிக் கொள்ளவும் உதவக்கூடும் என்று சிலர் கூறலாம். இதில் சிறிதும் உண்மையில்லை என்பதோடு இந்தி ஆதிக்க வெறியர்களின் நோக்கமும் அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. அண்மையில் இந்தி மொழிக்குழுவினர் அரசினரிடம் அளித்த அறிக்கையில், இந்தியைக் கட்டாய பாடமாக்க வேண்டுமென்றும், வட இந்தியர் தென்னிந்திய மொழி எதையும் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லையென்றுங் கூறியுள்ளது. ஒருவரையொருவர் அறிந்து கொள்ளாமலும் புரிந்து கொள்ளாமலும் தேசியவுணர்வு வளர்வது எங்ஙனம்?

இந்த இடத்தில் மொழித்துறையில் சென்னை அரசினரின் வருந்தத் தக்கப் போக்கினைக் குறிப்பிடுதல் பொருந்துமென எண்ணுகின்றேன். சுமார் ஒரு ஆண்டுக்கு முன்னர் சென்னை அரசினர் தமிழ் நாட்டுக் கல்விக் கூடங்கட்கு விடுத்த சுற்றறிக்கையில் தமிழ்த் தேசியப் பாடலுக்குத் தடைவிதித்திருந்தனர். பள்ளிக்கூடங்களின் சார்பாக நடக்கும் பொது நிகழ்ச்சிகளின் முடிவில் 'ஜன கண மன' என்று துவங்கும் பாடலைத்தான் பாடவேண்டுமென்றும் 'வாழிய செந்தமிழ்' என்ற பாரதியார் பாடலைப் பாடக்கூடாது என்றும் அவ்வறிக்கையில் கண்டிருந்தது.

தேசிய மொழிகள் பதினான்கில் தமிழும் ஒன்று. ஆனால் அம்மொழிக்குப் பொது நிகழ்ச்சிகளில் இடமில்லை.

வங்கக் கவிஞனின் தேசிய உணர்வுக் குரலுக்கு வரவேற்பு! தமிழ்க் கவிஞனின் தேசிய எழுச்சிக் குரலுக்குத் தடை!

ஏன் இந்த இழிநிலை? உரிமை உணர்வினைப் புறக்கணிக்கும் தேசியவுணர்வு வளர இயலுமா? வட்டார மொழி வளர்ச்சியில் சிறப்பாகக் கவனம் செலுத்த வேண்டிய மாநில அரசாங்கம் இது போன்ற சுற்றறிக்கை விடுத்தல் வருந்தத்தக்க செயலேயாம். மேலும் மாநில அரசினர் ஷ-ஹ-ஜ போன்ற தேவையற்ற வடமொழி எழுத்துக்களைப் பயன்படுத்திக் கொள்ள ஆட்சிமொழிக் குழுவினரிடம் ஒப்புதல் அளித்துவிட்டனர்.'

(11-ம் பக்கம் பார்க்க)

# எதிரொலி

சேலம் நகரில் மட்டும் 1138 பிச்சைக்காரர்கள்! கல்லூரி மாணவர்களின் கணக்கெடுப்பு!

—செய்தி.

ஐயோ, சேலமே! பிச்சைக்காரர் உற்பத்தியை விட்டு, இரும்பு, அலுமேனியம், மாக்னசைட் உற்பத்தியை எப்போது மேற்கொள்வாயோ?

* * *

சிதம்பரம் கோவிலில் கே. பி. சுந்தராம்பாள் பாடியவண்ணம் கண்ணீர் விட்டு அழுதாள்.

—செய்தி.

சிற்சபேசா! தென்னகத்தில் சாதிச்சண்டையின் கொலையால் எத்தனையோ தாய்மார்கள் என் போலாகி விட்டார்களே! நீ கல்லாகச் செம்பாகக் கிடப்பதென்ன என்ன என்று கேட்டிருப்பாரோ; ஐந்து கட்டை சுருதியில்?

* * *

சென்னை நகரில் லோககுரு சங்கராச்சாரியார், கோயில் மரியாதைகளுடன் ஊர்வலம்.

—செய்தி.

நடமாடும் சாதிவெறியை நாட்டிலே பரவவிட்ட இந்த சனாதனச் சழக்கரை கோயில்தான் மரியாதை செய்யவேண்டும்! மக்களா செய்வர்?...

* * *

உபரி வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய சர்க்கார் உதவும்.

—செய்தி.

பெரியார் திருவாயிலே மணக்கும் வெங்காயம் என்ன ஆவது?

* * *

கும்பகோணம் - மாயூரம் பகுதிகளில் நாற்றுகளுக்குப் பூச்சிநோய்

—செய்தி.

நவக்ரகங்களுக்கு ஒரு மண்டலம் பூசை செய்தால் ஒழிந்து போகும் என்கிறார் குருக்கள் குமரானந்த சுவாமிகள்!

# அக்டோபர்-13

## இந்தி எதிர்ப்பு நாள்

### நாடெங்கும் கொண்டாடுக!

இந்தியப் பேரரசு தென்னகத்தின் மீது இந்தியைத் திணிக்கும் அநீதியை எதிர்த்து, 1957 அக்டோபர்-13, ஞாயிற்றுக்கிழமையை 'இந்தி எதிர்ப்பு நாளாகக் கொண்டாடுமாறு தி. மு. கழகக் கிளைகளையும், துணை அமைப்புகளையும், தென்னாட்டின் நலனிலும்-திராவிடமொழிகளின் நலனிலும் அக்கறை கொண்ட பிற அமைப்புகளையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

அன்று இந்தி எதிர்ப்பு ஊர்வலங்கள்-பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றை மிகச் சிறப்பாக நடத்துவதோடு, இந்தியை எதிர்க்கும் தீர்மானத்தை நிறைவேற்றி, அதன் ஒரு படியை இந்தியப் பேரரசின் உள்நாட்டமைச்சருக்கும், மற்றொரு படியை மாநில அரசியலாருக்கும், வேறொரு படியைத் தலைமைக் கழகத்துக்கும் அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

அமைதிக்குக் கேடு விளையாத வகையில் கண்ணியத்தோடும்—கட்டுப்பாட்டோடும் கடமையாற்ற வேண்டுகிறோம்.

"அறிவகம்"
சென்னை—13
30-9-57

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர்,
தி. மு. க.

## கண்ணகியா? மாதவியா?



சிலப்பதிகாரக் காலத்திலாவது, கண்ணகி அளிக்க முடியாத சுகத்தை மாதவி அளித்தாள் என்பதற்காக வழிதவறிய ஒரு வணிகன் மாதவி இல்லத்துக்குச் சென்றான். இங்கு வழிதவறிய கோவலர்கள் இல்லை; வழி தவறவேண்டுமென்று நினைக்கின்றவர்களும், நீ கட்டிய மனைவி அழகாகத்தானிருக்கின்றாள்; நான் கொண்டு வருபவள் குணத்திலேயும் குடிகேடி; பார்ப்பதற்கு அருவருப்பாகத்தானிருப்பாள். இருந்தாலும் எத்தனை நாளைக்குத்தான் அந்தக் கட்டழகியோடு நீ இருப்பது? அவளைப் பின் அறையிலே தள்ளிவிடு; இவளை நீ முன்கட்டிலே வைத்துக்கொள் என்று கேட்கிறார்கள் என்றால், நாம்கூடச் சும்மாயிருக்கலாம், இங்கே கூடியிருக்கின்ற ஆயிரக்கான தாய்மார்கள் ஆர்த்தெழவேண்டும். —அறிஞர், அண்ணா,
திருவண்ணாமலை மாநாட்டில்

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு
—திருவள்ளுவர்.

இதயம்

மலர் 7 | சேலம் 1—10—57 | இதழ் 13

# பயங்கரப் பேராபத்து.

இடி விழுந்து மக்கள் மடிகின்றனர்; சூறை நோயால் சுருண்டு விழுகின்றனர்; நச்சுக் காய்ச்சலால் நலிந்து மாள்கின்றனர்; தீப்பிடித்து வெந்து நீருகின்றனர். புயல் காற்ருல்–பொங்கும் கடலால்–பூகம்பத்தால் கோர மரணம் எய்துகின்றனர் மக்கள்! இவற்றையெல்லாம்விட பயங்கரப் பேராபத்து மக்களின் தாய்மொழியைக் கொன்று, அன்னிய மொழி ஒன்றினை அரசியல் ஆதிக்க வெறியால் அவர்கள் மீது பலாத்காரமாத் திணிக்கும் பெருங் கொடுமை! மனித உரிமையினை — உயர் பண்பினை—வாழ்வு நெறியினை — வளமார் மரபினை — பன்னெடுங் காலமாக வளர்த்த பண்பாட்டினை-இலக்கியச் செல்வத்தினை-வீர வரலாற்றினை– நிலப்பற்று, இனப்பற்று, மொழிப் பற்றினை சிறுகச் சிறுகச் சித்திரவதை செய்து கொன்றுகுவிப்பது அன்னிய மொழிஆதிக்கம்! "திராவிட மொழிகள் எங்களது, நான் திராவிடன்" என்ற தென்னக மனிதஉணர்ச்சித்தோலினை உரித்துவிட்டு, "இந்தி எங்கள் மொழி, நான் இந்தியன்" என்ற வடக்கத்திய மாட்டுத் தோலினைப் போர்த்திவிட்டு, நடமாடும் பிணங்களாக, நல்ல விலங்குகளாக, அடிமைச் சீவன்களாக ஆக்குவது அவ்வாபத்து!

இந்திமொழி ஏகாதிபத்திய வெறியர்களின் பலாத்கார இந்தித்திணிப்பு வெற்றி பெற்றுவிட்டால், சீர்குலைந்து தலைகுனிந்து துவண்டு நிற்கும் தென்னகமும், சிரித்து மகிழ்ந்து தலை நிமிர்ந்து தருக்கி நிற்கும் வடநாடும் ஆகிய ஆண்டான் அடிமைக் காட்சியினையே உலகம் காண நேரிடும்!

கொடுமை! பயங்கரம்! குலைநடுங்கும் சதித் திட்டம்! இந்த பயங்கரப் பேராபத்தினை ஏற்க வேண்டுமா? அதற்கு ஈடு கொடுத்துப் போக்கவேண்டுமா?

இதோ, 21-22-ல் திருவண்ணாமலையில் கூடிய தி. மு. க. மாநாடு முடிவெடுத்துவிட்டது, இந்திப் பேராபத்தை விரட்டியடிக்க! சிங்கக் குரல் எழுப்பி விட்டனர் செந்தமிழின் படைத் தளபதிகள்! இந்திப் பேயின் ஆதிக்கத்தை ஒழிப்பதற்கு திட்டங்கள் தீட்டிட, நடவடிக்கைகள் வகுத்திட அதிகாரம் அளித்து விட்டனர் பொதுச்செயலாளருக்கு!

தன்மானத்தோரே! தாயக விடுதலை வீரர்காள்! பொங்கிவரும் தீங்கினைப் போக்கவல்லோரே! கேளுங்கள் நமது எதிர்ப்புக்குரலை.

(அ) இந்தி அல்லாத மொழியினர் மீது—குறிப்பாகத் தென்னாட்டின் மீது தபால்—தந்தி, இரயில்வே, புதிய நாணயமுறை, வானொலிச் செய்தி போன்றவைகளில் நேர்முகமாகவும் மறைமுகமாகவும், இந்தியைத் திணித்து அரசியல் ஆதிக்கம் பெற எடுத்துக்கொண்டு வரும் பல்வேறு முயற்சிகளோடு கூட, பிற மொழியினர்மீது அரசியல் ஆதிக்கம் செலுத்த இந்தி ஏகாதிபத்தியத்தை உருவாக்குவதற்காகக் கேர் கமிட்டி மூலம் மத்திய அரசாங்கமும், அதனை நடத்தும் காங்கிரசுக் கட்சியும் பயங்கரத் திட்டம் தீட்டியிருப்பது, தென்னாட்டுக்கு வரவிருக்கும் பேராபத்து என்பதை எடுத்துக்காட்டுவதுடன், அந்தப் பேராபத்தினின்றும் நம்நாடு தப்பி விடுதலை பெற எத்தகைய நியாயமான நடவடிக்கைகளில் ஈடுபடவும், எல்லாவிதமான தியாகங்கள் புரியவும், தமிழர்கள் இன்று முதலே தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டுமென்று இந்த மாநாடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

(ஆ) மக்களின் கவனம் வேறு பக்கங்களில் ஈர்க்கப்பட்டிருந்த நேரத்தில் மக்களின் குறிக்கோளை எடுத்துக் காட்டத்தக்க முறையில் அல்லாமல், மக்களின் நேரடி வாக்குகளைப் பெருமல், ஒரு கட்சியின் ஏதேச்சாதிகார முறையுடன் அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையின் ஆதரவில் ஒரே ஒரு ஓட்டு மெஜாரிட்டியில், அவசர அவசரமாகவும், பொறுப்பற்ற முறையிலும் நிறைவேற்றப்பட்ட மொழி சம்மந்தமான விதி, மக்களின் உண்மையான குறிக்கோளைக் காட்டுவதாகாது என்பதாலும், அந்த விதி, இந்தியல்லாத பிற மொழியாளர்களை அடிமைப்படுத்தப் பயன்படும் ஆதிக்கக் கருவியாக இருப்பது தெளிவாகத் தெரிந்துவிட்டபடியாலும், உடனடியாக அரசியல் சட்டத்திலிருந்து மொழி சம்மந்தப்பட்ட அந்த விதி அகற்றப்பட வேண்டுமென்று இந்த மாநாடு மத்திய அரசை வற்புறுத்துகிறது.

(இ) தாய் மொழியில் ஆட்சித் துறை, நீதி மன்றத் துறை அலுவல்களை வெற்றிகரமாக்குவதுடன், பிற மாநிலங்களுடனும், உலகுடனும் தொடர்புகொள்ள ஆங்கிலத்தை இப்போது போலப் பயன்படுத்திக்கொள்ளும் திட்டத்தை நீடிப்பது என்ற கருத்தினையும், இந்த மாநாடு ஆட்சியாளர்களுக்கு வலியுறுத்திக் கூறுகிறது.

வடாற்காட்டு மாநாடு மட்டுமல்ல, தமிழகமே இக் கருத்தினை வலியுறுத்தும் நாள் அக்டோபர் 13. அறம் காப்போர் முன்வருக! ஆண்மையாளர் வரிந்து கட்டுக!

—ப. கண்ணன்.



5




(முன் இதழ் தொடர்ச்சி)

## காட்சி 14

இடம்: காடு.
காலம்: காலை.

(அகஸ்தியர் காபாலிகர், இராமன் மூவரும் வருகின்றனர். அகஸ்தியர் கையிலே புதிய அம்புகள் இருக்கின்றன)

**அகஸ்:-** இராமா! நேக்குப் பரமசந்தோஷம்! விராதனை மடிச்சது, பிரமாத சாதனை; "அத்தியாபானம் சாத்தியனம், யஜனம் யாஜனம், ததாதானம் ப்ரதிக்ரகம், சைவப் பிராம்மணு மகல்பயத" என்பதாகச் சொல்றது மனுதர்ம சாஸ்திரம். இதனுலே கற்பதும் கற்பிக்கிறதுமான தொழில் நமக்குத்தான் சொந்தம்; வித்தைக்குரியவாளே நாம்ப தான்னு ஏற்படறது. யானையேற்றம், குதிரையேற்றம், வில்வித்தை, வாள்வித்தை போர்ப் பயிற்சி எல்லாத்தையும் கற்பிக்கிற நம்ம தொழிலுக்கே போட்டியாக வந்தானே விராதன்!

**காபா:-** அதுமட்டுமல்ல, ஆரியாவர்த்தமெல்லாம் சுத்தி, நம்ம ராஜாக்கள் பலபேருக்கும் பயிற்சி கொடுத்தானே, எவ்வளவு அகம்பாவம்! தனக்குநிகர் யாருமில்லேன்னு தருக்கிக் கெடந்தான் தறுதலை!

**அகஸ்:-** இதேமாதிரி அந்தக் காமவல்லி, தினகரன், தூயவன் இவாளையும் ஒழிச்சுக் கட்டிட்டா, தண்டகாரண்யத்திலே நம்மைத் தட்டிக் கேக்கறவா யாருமில்லே. மத்தவாளை நாங்க பக்குவப்படுத்திண்டு வர்ரோம். தலைமையிலிருக்கிற அவா ஒழிஞ்சாத்தான் பகைமைஒழியும், அப்புறந்தான் நம்ம யாகாதிகார்யங்கள் விக்னமில்லாமெ நடக்கும். (காதருகே சென்று) நாளடைவிலே இந்திரன் சொன்னபடி திராவிட தேசத்தையே நம்மதாக்கிடலாம்,

**இராம:-** ரொம்ப பேராசைப்படறேள், அகஸ்திய முனிவரே! இந்த நாட்டின் அரசாட்சியை காமவல்லி குறையில்லாதபடி நன்னு நடத்தருள்; ஜனங்களோட இன்ப துன்பத்தை தன்னுடையதா மதிச்சு அருளரசு புரியராள்னு நீங்களே செல்றேள்; அவளை ஒழிக்கணும்னும் சொல்றேள்; எப்படி சுவாமி முடியும்?

**அகஸ்:-** (யோசித்து) ராமா! நான் ஒண்ணு சொல்றேன். நீ தவரு நெனைக்கமாட்டையே?

**இராம:-** சொல்லுங்கள் சுவாமி!

**அகஸ்:-** (காதருகே சென்று) ராணி காமவல்லி நளினகலைகளுக்கு அரசி; மகா சௌந்தர்யவதி; அவளோட ரூபலாவண்யம்...... அடடா!

**இராம:-** (ஆசையோடு) சீதையைவிட அழகா இருப்பளோ?

**அகஸ்தி:-** ஃபூ! சீதை! அவளோட கடல் போன்ற கட்டழகுக்கு முன்னாலே, சீதை ஒரு குட்டேன்னா! ராமா! ஓங்கிட்டே வேறே என்ன இல்லேன்னாலும் பிரமாதமான இனக்கவர்ச்சி இருக்கு. ஒன்னைக் கண்டாலே எந்த ஸ்திரீயும் மயங்கி வசமாயிடுவள். நீமாத்ரம் மனசு வச்சா........

**இராம:-** காமவல்லியை வசப்படுத்திடலாம்னு சொல்றேளா? நிச்சயமாவா? முடியுமா என்னாலே?

**அகஸ்தி:-** நிச்சயமா, பிரம்ம சத்தியமா ஒன்னாலே முடியும். அவளை நீ வசப்படுத்திண்டே; இந்த விந்திய தேசத்தையே நாம் வசப்படுத்திண்ட மாதிரி. அப்பறம் தினகரன், தூயவனைப் பற்றிய கவலையே வேணும்!

**காபாலி:-** ராமா! அகஸ்தியர் வாக்கு; ஆண்டவர் வாக்கு! நோக்கு சௌபாக்யம் கெடைக்கும்!

**இராம:-** சுவாமி! காமவல்லியை நான் எங்கே சந்திக்கறது? எப்படிச் சந்திக்கறது? என்ன செய்யறது? நீங்கதானே சொல்லணும்!

**அகஸ்தி:-** நான் சொல்றேன்; நானே சொல்றேன். மொதல்லே நீங்க கோதாவரி நதிக்கரையிலே, பஞ்சவடியிலே போய்த் தங்கணும், கூடகிரி மலைச்சாரல்லே கலைக்கூடம் பார்க்க வந்து தங்கியிருக்கிறா காமவல்லி. ஆயிரக்கணக்கான சைத்ரிகர், சில்பிகள் அங்கே வேலை செய்யறா. சில்பியோட சில்பியா உள்ளே நொழைஞ்சிட வேண்டியதுதான்.

**இராம:-** அதனாலே ஆபத்து ஏற்பட்டா?

**அகஸ்தி:-** அதுக்குத்தான் நாங்க இருக்கோமே! ராமா! கலைஞனுக்கு ஆபத்து கணமா வராது; தைரியமா போ! காரியம் ஜெயமாயிடுத்து. ஆரிய தர்மத்தைப் பரிபாலிச்ச ஒன்னோட கீர்த்தி இந்த லோகம் உள்ளவரைக்கும் மறையாது! ஸ்ரீமன் நாராயணன் ஒமக்கு சகல சௌபாக்யங்களும் கொடுப்பன்.

**இராம:-** ஆக்ஞை சுவாமி!

**அகஸ்தி:-** இந்தாரும், இவை விஷபாணங்கள். நான் சிரமப்பட்டு தயாரிச்சது. இந்த அம்புகள் பட்ட எந்தப் பிராணியும் ஜீவிக்க முடியாது. ஒமது பாதுகாப்புக்காகவும், பகைவர்களை ஜெயிப்பதற்காகவும் இதை பத்ரமா வச்சுக் கொள்ளும்.

(சீதை, இலக்குவன், லோபா மூவரும் வருகின்றனர். லோபா கையிலே சிறு துணி மூட்டை இருக்கிறது)

**சீதை:-** முனீஸ்வராளே! நீங்க செய்யற காரியம் நேக்கு கொஞ்சங்கூட பிடிக்கலே!

**அகஸ்தி:-** என்ன சீதை அப்படிச் சொல்றே? நாங்க என்ன தவறான காரியம் செஞ்சிட்டோம்?

**சீதை:-** குடும்பத் தகராறு பதவிப் போட்டி காரணமா, நாங்க இப்படி வனவாசம் புரியும்படியான துர்ப்பாக்கியம் ஏற்பட்டுடுத்து. இங்கே ஓங்களோட ஆரிய திராவிடப் பகைமையைப் பெரிசு பண்ணி நீங்கவேறே எங்களுக்குத் தொல்லை உண்டாக்கறேளே!

**அகஸ்தி:-** அப்படி ஒண்ணுமில்லியே! தர்மத்தைக் காப்பாத்த வேண்டிய, அதர்மத்தை அழிக்கணும்னு சொல்றோம். இது தவறா சீதே?

**சீதை:-** (மனம் குமுறி) சுவாமி! ஓங்களோட நான் வாதம் பேசத் தயாராக இல்லே. இந்த மாதிரி விஷம் தோய்த்த அம்புகளையும், விபரீதமான யோசனைகளையும் என் பர்த்தாவுக்குக் கொடுத்து, நல்லவாளான திராவிட மக்களையெல்லாம் எங்களுக்கு விரோதிகளாக்கி, என் வாழ்வை நாசமாக்கறீங்க! செய்யுங்கள் சுவாமி; செய்யுங்கள்! தர்மம்னு சொல்லிபிட்டு எதையும் செய்யலாம்; செய்யுங்கள்! (கண்களைத் துடைக்கிறள்)

**இராம:-** (அருகே சென்றணைத்து) சீதே! ஏன் இப்படி ஆத்திரப்படறே? குடிமக்களைப் பரிபாலிக்க வேண்டிய க்ஷத்திரிய வம்சத்திலே பிறந்தவ நாம்ப. விரோதிகளை வெல்லக்கூடிய வீரம்தான் நம்மளோட சம்பத்து. அதைக் களங்கப்படுத்தலாமோ நீ? இப்படி நீ நடந்து கொள்றதை உன் பிதா, ஜனகமகாராஜாவே ஒப்புக்கமாட்டாரே, பைத்தியக்காரி! வா போகலாம். சுவாமி! நாங்க வர்றோம்.

**முனிவர் இருவரும்:-** (கையுயர்த்தி) இஷ்ட சித்திப் பிராப்தி ரஸ்து!......

(இராமன், இலக்குவன், சீதை மூவரும் வணங்கிச் செல்லுகின்றனர். லோபா ஒதுக்குப்புறமாக நிற்கிருள்)

**அகஸ்தி:-** என்ன காபாலிகா! ராமன் காமவல்லியைப் பிடிச்சுட்டான்; அப்பறம் இந்த ராஜ்யமே நம்பளோடது! (சிரிப்பு)

**காபாலி:-** நேக்கென்னமோ மனசு சலனப்படறது. காமவல்லியோட ராமன் ஐக்யமாயிட்டா, சீதையோட கதி என்னமாகிறது? அக்னி சாக்ஷியா கைப்பிடிச்ச சகதர்மினியாச்சே!



**அகஸ்தி:-** அட போப்பா! நீயொருத்தன், சீதையாவது; சகதர்மினியாவது; அக்கினி சாக்ஷியாவது! நம்மளவா ஆதிக்கம் வலுவடையறதுன்னா மனைவியானா என்ன, மகளானா என்ன, அவாளைப் பத்தியெல்லாம் கவலையே படக்கூடாது! எங்கேயும், எப்படியும் ஆர்யம் வெல்லணும்! ஜெய் ஆர்யம்!

**லோபா:-** (பின்னாலிருந்து) அடப்பாவிகளா! மனைவியைப் பத்திய கவலையில்லியாமே! அப்படியானா எம்மேலே ஏன் சந்தேகப்பட்டு சாவனும்? கொம்பனோட போனா என்ன? சிலம்பனோட போனா என்ன? அம்போன்னு இருக்கவேண்டியதுதானே!

**அகஸ்தி:-** (திடுக்கிட்டுத் திரும்பி) அடடே! லோபாவா? நீ இங்கேயா இருக்கே?

**லோபா:-** இனிமே இருக்கப் போறதில்லே. என்னைப்பத்தி ஒமக்கு கவலையில்லியே! ஒம்மோட நான் ஏன் இருக்கணும்? கொம்பனோடவே போறேன்!

(போகிருள். சென்று தடுக்கிருன்)

**அகஸ்தி:-** ஐயயோ லோபா! நீ போயிட்டா நான் என்னடீ செய்வேன்? மன்னிச்சுக்கடி. நான் சொன்னதெல்லாம் நமக்கில்லையடி! நமக்கில்லே! க்ஷத்திரியாளுக்கு! நான் இனிமே ஒன்னை சந்தேகிக்கிலேடி! என்ன செஞ்சாலும் சந்தேகிக்க மாட்டேன். சந்தேகிச்சது தப்பு! தப்பு!! தப்பு!!!

(அவள் முன்னால் காதைப் பிடித்துக் கொண்டுதோப்புக்கரணம் போடுகிருன். சிரிக்கிருர் காபாலிக முனிவர்.)

## காட்சி 15.

**இடம்:** கலைக்கூடம்-தனி அறை.

**காலம்:** பிற்பகல்.

(கணவர் காலகேயரின் ஓவியத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிருள் காமவல்லி. பழைய இன்ப நினைவுகள் மேலெழ பிரிவுக்கு ஆற்ருது நெஞ்சம் குமுறிப் பாடுகிருள். சிற்பி வேடத்தில் உள்ளே நுழைகிருன் இராமன். அவள் காலடியில் பணிகிருன்)

**காமவ:-** நீர் யார்?

**இராம:-** நான் ஒரு சிற்பக் கலைஞன். என் பெயர் சோமன். தங்களைப் போலவே நானும் ஒரு அபாக்யவான் மகாராணி!

**காமவ:-** என்னைப் போலவா? எப்படி?

**இராம:-** மகாராணி! நீங்கள் மகா சௌரியம் மிகுந்த புருஷனை கணவரை இழந்துவிட்ட கைம்பெண்ணாக இருக்கறேள். நான் மகா சௌந்தரியவதியான சகதர்மினியைப் பறிகொடுத்துட்டு சங்கடத்தோடு வாழறேன்!

**காமவ:-** (பரிவோடு) பாவம்! இப்போது இங்கு எதற்கு வந்தீர்?

**இராம:-** கலா சேவை புரிய வந்தேன். கருணை மிகுந்த கலையரசியே! ஏழைக் கலைஞனிடம் இரக்கம் காட்டணும். சிற்பம் சமைப்பதிலே மகா திறமையுள்ளவன் நான். மகாராணியாரின் கலையார்வமும், மகத்தான கலா சேவையும் நேக்குத் தெரியும். இந்தக் கலைக்கூடப்பணியில் பங்குகொள்ள நேக்கு அனுமதியளிக்கணும்.

**காமவ:-** அவ்வளவுதானே? அளிக்கின்றேன்.

**இராம:-** ஆஃகா! பரம சந்தோஷம்! பரம சந்தோஷம்! (நாணிக் கோணி) மகாராணி!......

**காமவ:-** வேறு என்ன வேண்டும்?

**இராம:-** என் நெடுங்கால ஆசையொண்ணு. பெண்மைக்குரிய சகல லட்சணங்களும் பொருந்திய ஸ்ரீ ரத்னம்! மாதர்குல திலகம், நீங்கள்! ஓங்களைப் பார்த்து, ஓங்க மாதிரி சிற்பம் ஒண்ணு நான் செதுக்கணும், அனுமதி கொடுக்கணும் நேக்கு. அப்பத்தான் நான் கற்ற வித்தைக்கு கௌரவம்; எடுத்த ஜென்மத்திற்கும் சாபல்யம்! தயது செய்யணும் மகாராணி!

**காமவ:-** உமது விருப்பம் வரவேற்கத் தக்கதுதான். என்ருலும், இது குறித்து அருளாளரோடு ஆலோசித்துத்தான் முடிவு சொல்ல வேண்டும்.

**இராம:-** ஐயோ, வேணும் மகாராணி! நீங்களே சொல்லிடுங்க! ஓங்களை நம்பித்தான் நான் வந்தேன். ஓங்களுக்குச் சிலை செய்யறது மட்டுமல்ல; சகலமும் செய்வேன்! நீங்க காலாலிட்ட பணிகளையெல்லாம் தலையாலே செய்வேன்! தேனோட சுவை பாலுக்குத் தெரியும்; பாத்திரத்துக்குத் தெரியாது. என்னோட

மதிப்பை ஒங்களாலேதான் உணர முடியும். நீங்கதான் என் கலைக்கு ஜீவனளிக்கும் கலா தெய்வம்! மகாராணி! கலைக்கடவுளே! கருணை காட்டுங்கள் இந்தக் கலைஞனுக்கு. கட்டளை கிடைக்கும்வரை விடமாட்டேன்.

(திடீரென்று மண்டியிட்டு அரசியின் பாதங்களைப் பிடிக்கிறான். அரசி பின்னடைகிறாள்)

**காமவ:-** ஐயா! இதென்ன கோலம்? ஏன் இந்தக் குழப்பம்? கலைவெறி கொண்டவரோ நீர்?

**இராம:-** ஆம் தேவி! என் கலைவெறி தணிக்க உங்கள் கருணைக்கு இறைஞ்சுகிறேன். சிலை செதுக்க உத்தரவு கொடுத்தாலொழிய நகரமாட்டேன். நான் செத்தாலும் கவலையில்லே! என் ஜீவிய லட்சியமே நிறைவேறாதபோது வாழ்வு ஏன்? வளர்கலையேன்? ஒழியட்டும்! ஒழியட்டும்!

**காமவ:-** நல்ல பிடிவாதக்காரர்! சரி! ஐயா; சிற்பம் செதுக்க அனுமதிக்கிறேன், எழுந்திரும்.

**இராம:-** **(எழுந்து வணங்கி)** ஆ:கா! நான் பாக்யவான்! நானே பாக்யவான்! மகாராணி! நாளைய தினமே என்னோட வேலையைத் தொடங்கிடறேன்.

(காந்தமன் வருகிறான். புதியவனைப் பார்த்து நிற்கிறான்)

**காந்த:-** மகாராணி! யார் இவர்?

**காமவ:-** ஒரு சிற்பக்கலைஞர். ஆர்வம் மிகுந்த கலைப்பித்தராக இருக்கிறார். கலைக்கூடத்தில் என்னைப்போல் படிவம் சமைக்க வேண்டுமாம். பிடிவாதமாக வேண்டினார்; ஒப்பி விட்டேன். அதற்குரியன செய்யும்.

**காந்த:-** **(அவனை ஏற இறங்கப் பார்த்து)** மகாராணி! உங்கள் படிவம் செய்ய இவருக்குத் தகுதி........

**இராம:-** இருக்கிறதோ, இல்லையோன்னு சந்தேகப்படறீர். செய்யத் தொடங்கறேன்; என்னோட திறமையும், தகுதியும் அப்புறம் பாரும் சுவாமி!

**காந்த:-** **(கிண்டலாக)** அப்படிங்களா? பாக்றேனுங்க; ஏம்பின்னாலே வாங்க சுவாமி!

(காந்தமன் போக, இராமன் தயங்கி நிற்கிறான்)

**இராம:-** மகாராணி!.... என்னோட கலைத் தொழில் தனிவழி. ஒங்களோட திருவுருவைப் பார்த்துண்டே படிவத்தை சிருஷ்டிக்கணும்! பாக்காமெ செய்ய முடியாது. தயவு பண்ணணும்.

**காமவ:-** அதற்குத்தான் ஒப்புக் கொண்டேனே!

**இராம:-** அப்பசரிங்க, அப்பசரிங்க!

(திரும்பிப் பார்த்தவண்ணம் காந்தமனோடு போகிறான்)

## காட்சி 16.

**இடம்: மலைச்சாரல்.**

**காலம்: மாலை**

(காந்தமனும், ஐவணமும் இருக்கின்றனர். கையிலே மலரொன்று வைத்திருக்கிறாள் ஐவணம்)

**ஐவண:-** விந்தியத்திலேருந்து நான் வல்லேன்னா, இந்தப் புதுமையான பூவை பார்த்திருக்க முடியுமா?

**காந்த:-** ஐவணம்! நீ வல்லேன்னா, நான் பார்த்து ரசித்திருக்க முடியுமா இந்தப் பூவை?

(தோளைப் பற்றுகிறான். அவள் விலகுகிறாள்)

**ஐவண:-** ஏன்? நான் வல்லேன்னா இந்த மலைச்சாரல்லே இருக்கற மலரெல்லாம் ஒங்க கண்ணிலே படாதோ?

**காந்த:-** எந்தப் பூ எப்படியிருந்தா என்ன? பார்வை வேணுமே! என் ஐவணப் பூ வந்தப் புறந்தானே என் கண்களுக்கு பார்வையே கெடைச்சிருக்குது!

**ஐவண:-** ஓ:கோ! அப்படியானா இனிமே, புதுப் புதுப் பூவைத் தேடியலையும் இந்தப் பொன்னான கலைவண்டு! பார்வைதான் கெடைச்சுப் போச்சே?

**காந்த:-** ஐவணம்! தண்டக வனத்திலே விதவிதமான பூக்கள் மலிஞ்சு கெடக்குது. கண்டா மனசை இழுத்து, தீண்டினா ஒடம்பை இழுத்து, முன்னூறாண்டு வாழ வைக்கற மூலிகைப் பூக்கூட இருக்கு! ஆனா, இந்தப் பொன் வண்டுக்கு ஐவணப் பூதான் வேணும்! வேறெ பூவோட பக்கத்திலே போகமாட்டேன்! ஆமாம், எப்படி வானா?

(வளரும்)



# எழுக இந்தி எதிர்ப்புக் குரல்!

இந்த நாட்டு மக்களுக்கு இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை யூட்டவும், இந்த நாட்டுத் தாயகமொழித் தமிழைக்காப் பாற்றவும், இந்தி நமக்கு இம்மியளவும் அவசியமில்லையென்பதை எடுத்துரைக்கவும், அதற்கான கருத்துரைகளைப் பரப்புவதற்கான பணிகளை இன்றிலிருந்தே நாம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

எனவேதான். முதல் கட்டமாக அக்டோபர் மாதம் 13-ம் நாள் ஞாயிறன்று "இந்தி எதிர்ப்பு நாள்' என்ற நாளைக் கொண்டாடுவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதை அறிக்கையாக நான் விடுப்பதற்குஇருக்கிறேன். எனவே, அக். 13-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையை, இந்தி எதிர்ப்பு நாளாகக் கொண்டு, நாடு நகரங்கள், பட்டிதொட்டிகள் அத்தனையிலும், கழகச் சொற்பொழிவாளர்கள் அத்தனை பேரையும் வரவழைத்து- கழகச் சொற்பொழிவாளர்கள் வர இயலாத இடத்திலே ஆங்காங்குள்ள தோழர்களே கட்டாயம் ஊர்வலம் நடத்தி, ஒலி முழக்கம் செய்து, கூட்டங்கள் போட்டு, இத்தகைய கருத்து விளக்கங்களை நாட்டு மக்களிடையே பரப்பி, எதிர்காலத்தில்—இந்தி எதிர்ப்புப் போராட்டம் வருகின்ற காலத்தில் அதற்கான வீரர்கள் படையைத் திரட்டுகிற அளவிலே, நல்ல பல கருத்துரைகளை எடுத்துக் கூறுகின்ற நாளாக அக். 13-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையைக் கொள்ள வேண்டுமென்று கழகத் தோழர்கள் அத்தனை பேரையும், பொதுமக்களையும், இந்தி எதிர்ப்புணர்ச்சியிலீடுபட்டிருக்கின்ற அத்தனை பேரையும், நான் விரும்பி, வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அக். 13-ந் தேதியை, இந்தக் குரல் எழுப்புகிற அளவுக்கு நீங்களெல்லாம் தீர்மானம் நிறைவேற்றி, அடுத்து, இந்திப் பரிசீலனைக் குழுவுக்குத் தலைவராக வந்திருக்கிற பந்த் (இந்தியாவினுடைய உள்நாட்டமைச்சர்) அவர்களுக்கு ஒரு தீர்மானத்தையும், தலைமைக் கழகத்துக்கு ஒரு தீர்மானத்தையும் அவ்வளவு படிப்பகங்களும், அவ்வளவு நூலகங்களும், அவ்வளவு அமைப்புகளும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அமைப்புகளும், தமிழ் மன்றங்களும் தமிழார்வம் கொண்டிருக்கிற மன்றங்களும், தீர்மானம் நிறைவேற்றி முன் சொன்னபடி பந்த் அவர்களுக்கும், தி. மு. கழகத் தலைமை நிலையத்திற்கும் அனுப்பிவைப்பீர்களேயானால்—தலைமைக் கழகத்துக்கு பல்வேறு அமைப்புக்கள், கிளைக் கழகங்களிலிருந்து வந்திருக்கும் தீர்மானங்கள் ஆயிரக்கணக்கில் இருக்குமேயானால், அவற்றை நான் சம்பத் அவர்களிடத்திலே கட்டிக் கொடுத்து, பாராளுமன்றத்தில் இந்தப் பிரச்சினை வரும்போது அங்கு (டில்லிக்கு) அனுப்பப்பட்டவைகளின் நகல் என்று எடுத்துச் சொல்லவும், இவ்வளவு எதிர்ப்பு இருக்கிறது என்று எடுத்துக் காட்டவும் அந்தக் கட்டுகளைப் பார்க்கின்ற பொழுது— அமைப்புக்களின் எண்ணிக்கைகளைப் பார்க்கின்ற பொழுது, எதிர்ப்புணர்ச்சியைப் பாராளுமன்ற உறுப்பினர்களும், அங்கே இருக்கிற அமைச்சர்களும் அறிந்து கொள்கிற அளவுக்கு நாம் காட்டித் தீருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தரும்படியாக கிளைக் கழகத் தோழர்களையும், பிற அமைப்புகளைச் சார்ந்தவர்களையும், தி. மு. கழகத் துணை அமைப்புகளையும் நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, இப்போதிருந்தே அதற்கான முயற்சிகளில் நீங்கள் ஈடுபட்டு அக். 13-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையை **எதிர்ப்பு நாளாகக்** கொண்டாடி, அதனுடைய ஒலி முழக்கம் எங்கு பார்த்தாலும் கேட்கிற அளவுக்கு — நிறைவேற்றப் படுகிற தீர்மானங்கள் நம்முடைய வலிவையும் பொலிவையும் காட்டுகிற அளவுக்கு-நீங்கள் அனைவரும் பணிபுரிய வேண்டுமென்று அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

**—இரா. நெடுஞ்செழியன்,**
**22-9-57-ல், திருவண்ணாமலை**
**தி.மு.க. மாநாட்டில்.**

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்து ஆசனங்களில் உட்கார்ந்து மன்னன் நுகருகையில், செந்தமிழின் சுவையை நுகர்ந்து நாமும் இறும்பூது எய்துகின்றோம். தமிழ்ச் சுவையிலே சொக்கிப் போகின்றோம்!

எங்கள் நாடக சபாவுக்கு மகுடம்போல் இந்த நாடகம் என்று தேவி நாடக சபாவின் உரிமையாளர் திரு. கே. என். ரத்தினம் அவர்கள் கூறியதிலும், கலைஞர், மு. கருணாநிதி அவர்கள் மகிழ்ந்து பாராட்டியதிலும் வியப்பில்லை. உயர்ந்த நாடகம்! செந்தமிழ் நாடகம்! ஒவ்வொரு தமிழனும் பார்க்கவேண்டிய பண்பு நாடகம் நந்திவர்மன்!

**—கே. சி. [illegible]**

## கேள்விக்கணை

இம்முறை பரிசு பெற்றவர்:
● ஏ. பி. சாமராசன், வண்டிக்காரத் தெரு, **நாமக்கல்,** சேலம் மாவட்டம்.

**இரா. இலக்குவன், பள்ளவள்ளி.**

கே: டாக்டர். உ.வே. சாமிநாத ஐயர் பண்டைய தமிழ்க் காப்பியங்களை கறையான் அரிப்பிலிருந்து மீட்டு அச்சிட்ட தமிழ்த் தொண்டர் என்பது சரியா? சேகரித்த பழம் நூல்களில் புராணத்தைக் கலந்து, தன் பெயரையும் சேர்த்து புகழ் தேடிக்கொண்ட தமிழ்ப் பகைவர் என்பது சரியா?

*ப: பிழைப்புக்காகத் தமிழ்க் கற்ற தமிழ்ப் பகைவர், புகழுக்காகவும், தன் கொள்கை உயர்வுக்காகவும் தமிழ் நூல்களைப் புதுக்கினர் என்பதே சரியானது.*

**ஏ. பி. சாமராசன், நாமக்கல்.**

● கே: "தமிழ்நாடு" என்ற பெயர் வேண்டாம் என்கின்ற மந்திரிகளும், மற்றவரும் "தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி"யில் தொடர்பு கொள்கிறார்களே; அவர்களுக்கு வெட்கமிருக்காதா?

*ப: மாதம் ரூ. 1500-ம், பட்டம்—பதவி சலுகை-சம்பள-விளம்பரமும், இந்தி ஏகாதிபத்தியக் கடைக்கண் வீச்சும் சேர்ந்து சுட்டுப் பொசுக்கி டெல்லி தேவதையின் காலடியிலே கரைத்து விட்டனவே பாழும் வெட்கத்தை!*

* * *

கே: கலைவாணர், வள்ளல் என். எஸ். கே. தங்கள் பத்திரிகைக்கு நிதி உதவி செய்திருக்கிறாரா? செய்திருந்தால் எப்போது? என்ன தொகை?

*ப: அந்த வாய்ப்பு நமது இதழுக்குக் கிட்டவில்லையே!*

**எம். ஏ. எழுத்தழகன், இடைப்பாடி.**

கே: மனிதன் மற்றவர்களை மடையர்களாகக் கருதுவது எப்போது?

*ப: தன்னைத்தான் மறக்கும்போது.*

* * *

கே: சட்டம் உண்டா இல்லையா என்பதை விடுத்து; ஏன், எதற்காக என்று ஆராயும் காலம் வருமா?

*ப: புதிய வழக்கறிஞர் பலர் அந்தப் பாதையில் நடை பயிலுகிறார்களே!*

**துரை-முருகேசன், காரமடை.**

கே: சுதந்திர தின விழாவில் வெளியிட்ட "சுதந்திரப் பயணம்" சினிமாப் படத்தில் தென்னகத்தின் தியாகிகள் ஏன் இடம் பெறவில்லை?

*ப: காங்கிரஸ் மேலிடமும், ஆளவந்தாரும் தென்னகத் தலைவர்களை, தென்னக வீரத்தை, வாழ்வை, வளத்தை அவ்வளவுக்குத்தான் மதிக்கிறார்கள்!*

**சு. ப. சுந்தரேசன், சென்னை-13.**

கே: தி. மு. க. இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தினால் யார் யார் ஆதரவு கிடைக்கும்?

*ப: இந்தி வெறியர்களின்-இந்துமதப் பித்தர்களின் ஏகாதிபத்தியப் பேராசையை ஒழித்துக்கட்டி, தாயகத்தையும், தாய்மொழியையும் காக்க விரும்பும் அனைவரது ஆதரவும் கிடைக்கும்.*

* * *

கே: முதுகளத்தூர் ஜாதிச் சண்டை எதனைக் காட்டுகிறது?

*ப: தமிழர்களின் மத சாஸ்திர நம்பிக்கையோடு, தன்னல போலி வேடத் தலைவர்களின் வழிகாட்டுதலும் சேர்ந்து விளைத்திட்ட கோரத்தைக் காட்டுகிறது!*

## பொன் மொழிகள்

தாய் குழந்தைக்காக உயிர் விடுகிறாள்; போர்வீரன் நாட்டுக்காக மடிகிறான்; தத்துவ ஞானி தன் கொள்கை பரப்ப உயிரையே கொடுக்கிறான். மூவாது செயற் பண்பும் ஒன்றே!

—**பிளாட்டோ.**

சோம்பேறித் தனத்துக்கு பசியே நன்மருந்து.

—**ஞானி.**

கல்லாதவரே யாயினும் கற்றாரைச் சேர்ந்து பழகினால் பண்பட்ட மெய்யறிவு வர வர உண்டாகப் பெறுவர்.

—**நாலடியார்.**

நாணலை ஒத்தவர்கள் பெண்கள்; சிறுகாற்றுப்பட்டாலும் அசைந்து கொடுப்பார்கள், ஆனால், புயலடித்தாலும் ஒடிய மாட்டாகள்.

—**வாட்லி.**

மிகச் சிறந்த குணங்கள்எவை? குறையாப் பொறுமை; சந்தர்ப்பங்களை ஆயும் சிந்தை; தவறான செயல்களை வன்மையோடு கண்டிக்கும் பான்மை; ஆனால், தவறியோரிடம் தயையுடைமை.

—**மாத்யூ ஆர்னால்டு.**

தன்னம்பிக்கையோடு முயற்சி செய். வெற்றி உனதேயாகும்.

—**ஜேம்ஸ் ஆலன்.**

அறிவு தரும் கல்விக்கு ஆவதை விட அறியாமைக்கே செலவு அதிகம்.

—**ஆவ்பரி.**

பயன் நிறைந்த மொழிகளில் வல்ல சான்றோரின் பெருமையை உலகத்தில் அழியாது விளங்கும் அவர்களது **மறைமொழிகளே** காட்டிவிடும்.

—**திருவள்ளுவர்.**



[2-ம் பக்கம் தொடர்ச்சி]

நமது நாள் இதழ்கள் சிலவற்றின் போக்கோ சொல்ல வேண்டுவதில்லை. கலைச் சொல்லாக்கத்தில் புதிய தனித்தமிழ்த் தொடர்களையும் சொல்லாக்கங்களையும் கேலிசெய்யும் அவ்விதழ்கள், 'லோக்சபா'—'தெட்சிண ரயில்வே' போன்ற வாயில் நுழைய இயலாததும் வேண்டாததுமான சொற்களைத் தொடர்ந்து பயன்படுத்துவதில் எவ்வளவு நிம்மதியடைகின்றன!

இன்றைய நிலையில் 'தேசியம்' 'தேசிய ஒற்றுமை' 'இந்திய ஒருமைப்பாடு' என்ற வெற்று ஆரவாரங்கள் மொழித்துறையில் விளைத்துவரும் கேடுகளே இது காறும் கூறப்பட்டன. அவை அரசியல், பொருளாதாரத் துறையிலும் விளைத்துவரும் கேடுகளை விரிக்கின் பெருகும்.

இவ்வாறு 'தேசியம்' என்பது ஆதிக்க முயற்சியாளரின் வெற்றிச் சின்னமாக மாறிவரும்போது அச்சொல் இனவுணர்வு கொண்டோருக்கு வேம்பு எனக் கைப்பதில் வியப்பு என்ன இருக்கிறது?

### 2. நேற்று.

*இன்று நடைமுறையிலுள்ள தேசியம், முன்னர்க் கூறியவாறு இனவுணர்வுகளைக் கொல்லும் படையாக விளங்கிவர, இனி, கடந்தகால வெள்ளையராட்சியில் தேசிய உணர்வு விளங்கிய நிலையைக் காண்போம்.*

*அன்று வெள்ளையராட்சியை ஒழிப்பதற்கு எழுந்த சுதந்திர வேட்கையே, நம்மவர்க்கு இந்தியத் தேசியவுணர்வு எழக் காரணமாக இருந்தது. ஆனால் அவ்வுணர்வு பல இயல்பான வேற்றுமைகளைக் கடக்க இயலாத தொன்றாகவே விளங்கிற்று. அதனால்தான் அனைத்திந்தியத் தேசிய உணர்வு ஒரு உயர்ந்த குறிக்கோள் போலவும் நனவாக வேண்டிய கனவுபோலவும் கவிதைகளில் காணக்கிடந்தது.*

"முப்பது கோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்-இவள்
செப்புமொழி பதினெட்டுடையாள்-
சிந்தனை ஒன்றுடையாள்" [எனிற்

*என்ற பாரதியாரின் தேசியப் பாடல் மேற் கூறியவாறு மொழி வேற்றுமையைக் கடக்கக் கருதிய தேசியவுணர்வுக் கனவே என்க. ஆனால் இது பொன்ற, அனைத்து இந்தியத் தேசியவுணர்வு, அன்றைய விடுதலைப் போராட்ட நாட்களில் வெள்ளையராட்சிக்கு எதிர்ப்பு உணர்ச்சியைத் திரட்டி ஒரு ஐக்கிய அணி காணப்பயன் பட்டிருக்கக் கூடும்.*

*இந்த இடத்தில் நாம் மற்றொன்றையும் நினைவில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.* **இந்திய உபகண்டம் முழுமைக்கும் ஒரே தேசியவுணர்வைக் கனவு கண்ட அன்றைய தமிழ்த் தேசிய வீரர்கள் தமது இன உணர்வை இன்றையத் தேசிய அன்பர்களைப்போல புறக்கணித்து விடாமலும், உதறிவிடாமலும் எவ்வளவோ மேலாகப் போற்றி வந்துள்ளனர் என்பதே அது.**

"முப்பது கோடியும் வாழ்வோம்-வீழில்
முப்பது கோடியும் வீழ்வோம்"

*என்று ஒருமைத் தேசியம் பாடிய பாரதியாரே, 'வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்' என்ற* **இனவுணர்வுத் தேசியக் குரலையும்** *எழுப்புதல் காண்க. இன்று பாரதம்—பாரதம் என்று இந்திய உபகண்டத்திற்கு அன்புப் பெயரிட்டுத் தேசியம் பாராட்டுவோர் வட்டார மொழி வளர்ச்சியில் கருத்தே செலுத்துவதில்லை. ஆனால் நேற்றைய தேசியக் கவிஞர் பாரதியாரோ, 'போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும்' என்ற தலைப்பில்.*

"வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ"

*என வட்டார மொழிவளர்ச்சியைக் கருதாத பாரதத்தை விரட்டுதல் காண்க. 'தன் தாய்மொழியில் அறிவுக் கலைகள் பெருக வேண்டும்' என்ற மொழிப்பற்றிலிருந்து தனது இனமக்கள் அயல்நாடுகளில் கூலிகளாய் நின்று அனுபவிக்கும் தொல்லைகள் அகல வேண்டும் என்ற இனப்பற்று வரையில் பாரதியார் பாடாத கருத்து இல்லை. அவற்றை விரிக்கப் புகுந்தால் பெருகும்.*

*விடுதலைப் போராட்ட நாட்களிலேயே தேசியத்தில் இனவுணர்வை பாரதியார் கண்டதைப் போல தேசிய வீரரான வ. உ. சிதம்பரம் பிள்ளையும் கண்டார். தீவிர தேசிய வீரராக விளங்கிய அவர் வெறும் அரசியலோடு நின்றுவிடாமல் தமிழ் மொழிக்குத் தன்னாலியன்ற தொண்டுகள்பல செய்துள்ளார். அவர் மொழி பெயர்ப்பு நூல்கள் எழுதினமையும் பழந்தமிழ் நூல்கள் சிலவற்றைப் பதிப்பித்தமையும், தமிழ், கற்க விரும்பிய ஒருவருக்குத் தனது இல்லத்தே உண்டியும் உறையுளும் அளித்துத் தமிழ் கற்பித்தமையும், ஒரு தேசியவாதி செய்த வட்டார மொழி வளர்ச்சித் தொண்டே என்பதில் ஐயமில்லை.*

(அடுத்த இதழில் முடிவுறும்)

தன்னிடம் உள்ள குறைக்கு ஈடுசெய்து கொள்ள மனிதனுக்குக் கற்பனை உதவுகிறது. அதற்கு ஆறுதல் செய்துகொள்ள அவனுக்கு நகைச்சுவை உதவுகிறது.

—பென்சான்.

<u>கலைஞர், மு. க. தலைமையில்,</u>

## நந்திவர்மன் அரங்கேற்றம்.

சேலம்-ஆத்தூரில் 28-9-57 சனி இரவு ஸ்ரீ தேவி நாடக சபையார் கலைஞர் மு. கருணாநிதி **M. L. A.** அவர்கள் தலைமையில், பைந்தமிழ்ச் சுவையிலே தன்னுயிர்நீத்த "நந்திவர்மன்" நாடகத்தை அரங்கேற்றினர்.

முதல் நாடகம் இரவு 7-30 மணிக்குத் தொடங்கப் பெற்று 10-30 மணிக்கு முடிவுற்றது. தேவி நாடக சபாவின் உரிமையாளர் தோழர், கே. என். இரத்தினம் அவர்கள் தலைவரை மேடைக்கு அழைத்து மலர்மாலை யணிந்து வரவேற்றார்.

"நந்திவர்மன்" நாடகத்தின் சிறப்பு; அதனை உருவாக்கிய ஆசிரியரின் தகுதி குறித்தும் அரங்கேற்றிய கே. என். இரத்தினம் அவர்களின் திறமை—தொடர்பு; நடிகமணிகளின் நடிப்புத்திறன் குறித்தும் கலைஞர் கருணாநிதி அவர்கள் பெரிதும் பாராட்டினார். இந்தி எதிர்ப்பு இயக்கம் உருவாகும் இந்த நேரத்திலே மொழிப் பற்றிலே உயிர்நீத்த தாளமுத்து நடராசன்களின் வரலாறு மட்டுமல்ல; ஒன்பதாம் நூற்றாண்டிலே வாழ்ந்த செந்தமிழ் நந்திவர்மனின் வரலாறும் நாட்டுக்குத் தேவை என்றார். நாடகத் துறையிலே பகுத்தறிவு இயக்கப்பணி குறித்து விளக்கினார்.

ஆசிரியர், ப. கண்ணன் அவர்களுக்கு மலர்மாலை யணிந்து பாராட்டினார் தோழர், கே. என். இரத்தினம். நாடகம் உருவாக்கிய வகையினைக் கூறி, அரங்கேற்றிய இரத்தினம் அவர்கட்கும், தலைமை தாங்கிச் சிறப்பித்த கலைஞர் கருணாநிதி அவர்கட்கும்.நன்றி நவின்றார் தோழர், கண்ணன்.

புரட்சி நடிகர் எம்.ஜி. ராமச்சந்திரன், இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராசேந்திரன், நடிகமணி டி. வி. நாராயணசாமி, நவாப் டி.எஸ். ராசமாணிக்கம் விருதை ந. இராமசாமி மற்றும் பலரிடமிருந்து வந்திருந்த வாழ்த்துத் தந்திகளையும் தபால்களையும் நாடகக் கம்பெனி மேலாளர் தோழர், சோமு படித்தார்.

தமிழ்ப் பற்று மிகுந்த எல்லாக் கட்சித் தமிழர்க்கும் "நந்திவர்மன்" ஓர் புத்தெழுச்சியை நல்கி விட்டான் என்பதை எதிர்பாராத இடங்களினின்றும் கிளம்பிய பாராட்டுக் குரல்களும், ரசிகர்களிடையே எழுந்த ஆரவாரமும் நன்கு உறுதிப்படுத்தின.

<u>விமர்சனம்.</u>

## நந்திவர்மன்

சரித்திர நாடகங்களிலே ஒருதலை சிறந்த நாடகம் "நந்திவர்மன்" கதையமைப்பு, காலத்தைக் காட்டும் காட்சி, ஆடை, அணிகள் எல்லாம் மிகப் பொருத்தம்.

சைவத்திற்கும் சமணத்திற்கும் மோதல்! சதியின் விளைவு! ஆலயத்தில் மலரெடுத்து முகர்ந்தமைக்காக மகாராணியின் கையை வெட்டுகிறான் மன்னன். தந்தையின் செயலை வெறுத்த தனயன்—சிறுவன் நிருபதுங்கன் சீறும் நேரத்தில் கையை வெட்டிய கணவனைக் கடிந்து பேசாதே என்று கூறும் கட்டத்தில் சங்காதேவி — தோழியர், ராஜாமணியின் நடிப்பு மிக மிகப் பிரமாதம்! "நந்திவர்ம"னை நடித்த தோழர், கே. என். காளை பெயருக்குப் பொருத்தமானவர். நடிப்புத்திறனால் மாவீரன் "நந்திவர்மனை" நம் முன் நிறுத்திக் காட்டினார்!

சந்திரவர்மன் — கோபால், விக்ரமகேசரி — தங்கராஜ், மைத்திரேயன்—கருப்பண்ணன் மிகத் திறமையாகவும் அழகாகவும் நடித்தனர். சிறுவன் நிருபதுங்கன் பலே!

தாசி குலத்தவளாயினும்,தன் மானத்தோடு வாழ்ந்தவள்; சாம்ராச்சியமே கிடைத்தாலும் சதித்திட்டத்திற்கு உடன்பட மறுத்த வித்யாவதியாக நடிக்கும் சாந்தா பாத்திரம் உணர்ந்து நடித்தார். முல்லையாக பைரவனும்,பச்சையாக சக்திவேலும் பிரமாதமாக நடித்து, நகைச் சுவை விருந்தளித்து சிந்தை குளிர வைத்தனர்.

சரளா,சக்திவேல் இருவரின் பின்னணிப் பாடல்களும் இனிமையாக இருந்தன. மெட்டுக்கள் அத்தனையும் கர்நாடக இசை,கருத்துள்ள பாடல்கள். இயற்றிய தோழர் "அருணா" பாராட்டத் தக்கவர்!

காதல், கடமை, வீரம், மொழிப்பற்று, தியாகம் இவைகள் ஒருங்கே அமைந்தது இந் 'நந்திவர்மன்!' காலப் போக்கை ஒட்டி ஆசிரியர் திரு. ப. கண்ணன் அவர்கள் தீட்டியுள்ள தனிச் சுவையுள்ள நாடகக் காவியம். மகத்தான வெற்றி!

"நந்திக்கலம்பகம்" பாடல்கள் அரங்கேற்றும் நேரத்தில்,

(9-ம் பக்கம் பார்க்க)

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்-1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

பகுத்தறிவு

திங்கள் இருமுறை. ஆசிரியர் :- ப.கண்ணன்.

மலர் 7. | 15-10-57 | விலை 0-2-0 (12 காசு) | இதழ் 14

# விடுதலையே!  விடுதலையே!

ஏ விடுதலையே! நீ தொலைவிலுள்ள அடிவானத்தருகிலேயே எப்பொழுதும் மிதந்து கொண்டிருக்காதே! உணர்ச்சியாளர், கொடையாளர்,புலவர் ஆகியோரின் உள்ளத்தின் கனவாகவே என்றென்றும் தங்கியிருக்காதே! நீ இங்கே வந்து மக்களின் குழந்தைகளிடையே குடிகொள்வாயாக.

எந்த ஆராய்ச்சிகள், எந்தக் கண்டுபிடிப்புகள், எந்த எண்ணங்கள் உலகின் அறிவுக் களஞ்சியத்திலிருந்து வெளிப்படுமோ எனக்குத் தெரியாது. வருங்காலம் எப்படிப்பட்ட புகழணிமாலையை உலகிற்குச் சூட்டப்போகிறதோ, அதுவும் எனக்குத் தெரியாது. சிந்தனைப் போர்க்களங்களில், எப்படிப்பட்ட எண்ணங்கள் வெற்றி பெறுமோ அதுவும் எனக்குத் தெரியாது. ஆனால், எதிர்காலம் என்னும் எல்லையற்றப் பெருங் கடலிலிருந்து,இந்தக் காலம் என்னும் மணல்திட்டைத் தொட்டுத் தழுவிக் கொள்ள வரும் சிறந்த பரிசு—அரிய வாழ்த்து. "ஆண்—பெண்—குழந்தை ஆகியோர்க்கான விடுதலை"யைத் தவிர, வேறொன்று இருக்க முடியாது என்பதை மட்டும் நான் அறிவேன்.

—அறிஞர் இங்கர்சால்.

# தேசியம். நேற்று, இன்று, நாளை.

(முன் இதழ் தொடர்ச்சி)

வித்துவான்: இரா. சொக்கலிங்கம்

அண்மையில் காலஞ் சென்ற தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் ஒரு சிறந்த தேசிய வாதியாகவும் அதே சமயத்தில் தமிழ் இனவுணர்வை நாடெல்லாம் பரப்பும் நற்றமிழ்த் தொண்டராகவும் விளங்கியதை தமிழுலகு நன்கு அறியும். தேசியவுணர்ச்சியைத் தமிழுணர்ச்சியுடன் குழைத்துக் கொடுத்த நல்லமுது அல்லவா அவருடைய சொற்பொழிவுகள்?

**ஆகவே நேற்றைய தேசியம் தீமை பயவாத பண்பாக-கவிஞர் காணும் இலட்சியக் கனவாக-இனவுணர்வைக் குழிதோண்டிப் புதைக்காத பண்பாக நிலவி வந்தது என்பது வெளிப்படை.**

நமது கண்ணோட்டத்தில் நேற்றைய தேசியம் (வெள்ளையராட்சிக் காலத் தேசியம்) பழிக்கத் தக்கது அல்ல. அதே சமயத்தில் அது புகழ்ச்சிக்கும் உரியதல்ல; ஏனெனில் அது நோக்கத்தால் உயர்ந்த குறிக்கோளாக மட்டும் விளங்கி, உடனடியான பயனை மட்டும் கண்டதே தவிர விளைவால் உயர்ந்து விளங்கி நிலைத்த பயனைத்தர இயலாது போயிற்று.

**நோக்கமும், விளைவும்:** எந்த விதமான திட்டங்களிலும், குறிக்கோள்களிலும் நோக்கம், விளைவு என்று இரண்டு கூறுகள் உள்ளன. இவை இரண்டும் தம்முள் முரண் ஆகாதவாறு ஒத்து நல்லனவாக அமையுமாறு திட்டம் கொள்கைகளை வகுப்போர் கவனித்துக் கொள்ளுதல் வேண்டும்; ஏனெனில் நோக்கமும் விளைவும்ஒருங்கே நல்லனவாக அமைதல் பல நிகழ்ச்சிகளிலும் அரிதாகவே உள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாகச் சில நிகழ்ச்சிகளைக் கூறலாம்.

மதுவிலக்குத் திட்டம் உயர்ந்த குறிக்கோள் உடையதே. குடி மக்களை, குடி மக்களாகாவாறு தடுத்தல் உயர்ந்த குறிக்கோள் என்பதில் யாருக்கும் ஐயம்இல்லை. ஆனால்,மதுவிலக்குத் திட்டத்தின் விளைவு என்ன ஆயிற்று? அரசினருக்குப் பெரியதோர் வருவாய் குறைந்தது. வருவாய் குறைந்தாலும் போகிறது;மக்கள்நல அரசாங்கம் தீய வழியில் வரும் வருவாயைப் புறக்கணிப்பது அறமே. ஆனால், இதைவிடத் தீய விளைவு உண்டாகியுள்ளது.சட்ட வரம்பை மீறித் திருட்டுத்தனமான முறையில் மக்களிற்பலர் மதுவகைகளைத் தயாரித்தல் இப்பொழுது வழக்கமாகிவிட்டது. இந்நிகழ்ச்சியில் திட்டத்தின் **நோக்கம்** சிதைந்து போயுள்ளதையும் **விளைவு**, சட்டத்தை மீறும் மனப்பான்மையை மக்களிடையே வளர்க்கும் தீய சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளதையும் அறியலாம்.

போர்க்காலத்தில், பொருள்கள் நியாய விலையிலேயே மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு விலைக் கட்டுப்பாட்டுமுறை(கண்ட்ரோல்) நடைமுறைக்குக் கொணரப் பட்டது. ஆனால், அம்முறையின் ஊடேயே மறைந்து கள்ள வாணிகம் (பிளாக் மார்க்கெட்) சரக்குகளைப் பதுக்குதல், ஆகிய தீய விளைவுகள், விளைந்து வளர்ந்தன. இந்நிகழ்ச்சியில் **நோக்கமும் விளைவும்** முரண் ஆயினவாறு காண்க.

இவ்வளவு தூரம் போவானேன்? நமது நாட்டில் வழங்கும் பழமொழிகள் சிலவற்றையே பாருங்கள்.

'பிள்ளையார் பிடிக்க குரங்காய்முடிந்தது கிணறுவெட்ட பூதம் கிளம்பிய கதை போல்'

இவை நமக்கு உணர்த்துவது என்ன? 'நோக்கம் உயர்ந்ததாயிருக்க, விளைவு பாழாதல் உண்டு' என்ற அனுபவப் பாடத்தை அல்லவா?

திருவள்ளுவரும்,உயர்ந்த குறிக்கோளாயினும் தன் எல்லை கடந்தால் தீய விளைவினையே சந்திக்க நேரும் என்பதை

"நுனிக்கொம்பர் ஏறினர் அஃதிறந் தூக்கின் உயிர்க்கிறுதி ஆகிவிடும்"

என்ற குறளில் குறிப்பிடுகின்றார். ஆகவே எந்தக் கொள்கையிலும் திட்டத்திலும் நோக்கத்தைவிட அதிக அளவிற்கோ அல்லது அதே அளவிற்கோ, விளைவைப் பற்றியும் சிந்தித்தல் வேண்டும் என்பது புலனாகிறதல்லவா?

எனவே இந்தக் கோணத்தில் பார்த்தோமேயானால் **நேற்றைய தேசியமோ, இன்றைய தேசியமோ நோக்கத்தால் உயர்வுடையது என்பதற்காக அதனைப் போற்றிப் புகழவோ, இன்றும் நாளையும் அதேவிதமான இந்திய ஒருமைப்பாட்டுத் தேசியவுணர்வே மக்களிடையே வளர்தல் வேண்டும்என்று கோரிக்கை எழுப்பவோ நம்மில் யாரும் முன்வரமாட்டோம்.**

இவ்வாறு கூறுவதால் வேறுபாட்டைக் கடந்து ஒன்றுபடும் பரந்த மனப்பான்மைக்குக் கல்லறை கட்டவேண்டும் என்பது கருத்தல்ல.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தமிழ்ப் புலவனின் உண்மைத் தேசியவுணர்வு காலத்திற்கு ஏலாதது என்பதும் நோக்கமன்று. சொல்லப் போனால் அப்புலவனின் உயர்ந்த குறிக்கோள் மற்ற (இந்திய) இனத்தாரால்

(11-ம் பக்கம் பார்க்க)



## எதிரொலி

தமிழ் நாட்டின் எதிர்ப்புக்குப் பணிவு. "சுதந்திரப் பயணம்" திரைப்படம் திரும்பப் பெறப்பட்டு விட்டது

—செய்தி.

இதனால் வடநாட்டு சர்க்காரின் பகிரங்க ஓரவஞ்சனை நடத்தையின் மேல் திராவிடர்களுக்கு ஏற்பட்ட வெறுப்புணர்ச்சியை யார், எங்கே, எப்படித் திரும்பப் பெறுவது?

*   *   *

அரசாங்கம் பணியாவிட்டால் கத்தியைத் தீட்டவேண்டியதுதான். பத்து நூறுபேர் சாகட்டுமே! ரத்தக் களரி ஆகட்டுமே!

—பெரியார்.

குறைந்த செலவில் நிறைந்த பலன்கொடுப்பது எங்கள்கிளர்ச்சி என்று குத்தூசிகள் இனியேனும் நர்த்தனமிடாமல் நாவொடுங்கிக் கிடக்க வேண்டுமே!

*   *   *

ராஜாஜியின் ராமாயணமும், பாரதமும் ஆங்கிலத்தில் சினிமாப் படமாக்க முயற்சிகள் நடைபெறுகின்றன.

—செய்தி.

சினிமா ஒழிப்புத் தலைவர்களான பெரியாரும், ராஜாஜியும் இது பற்றிக் கலந்து பேசுவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

*   *   *

ரஷ்ய யுத்த மந்திரி ஜுகாவ்யு, எஸ். விஜயத்தை டல்லஸ் நிராகரித்தார்?

—"சுதேசமித்திரன்"

யார் இந்த எஸ். விஜயம்? 'வருகை' என்ற தமிழை 'விஜயம' என்ற வடமொழியாக்கியதால் வந்த குழப்பம், இது.

*   *   *

கல்வியின் பயன் என்ன? உண்மையை அறிவதுதான்.

—சங்கராச்சாரியார்.

அதனால்தானோ சூத்திரன் படிக்கக் கூடாதுஎன்கிறது சாஸ்திரம்?

[11-ம் பக்கம் தொடர்ச்சி]

**முடிவுரை:-** இவ்வாறு நாளைய தென்னகத்தில் தேசிய உணர்ச்சியும் அதன் அடுத்த நிலையான ஒருலக உணர்ச்சியும் படிப்படியாக வளர்ந்து சிறப்பெய்தும். சிறப்பு எய்த வேண்டியதற்கான சூழ்நிலையையும்,மக்களெழுச்சியையும் தென்னத்தின் பல்வேறு அரசியல் தலைவர்களும் சேர்ந்து ஏற்படுத்துதல் வேண்டும். அதற்கான கூட்டு முயற்சிகள் இன்றுஉருவாகவில்லை; ஆனால் தனித்தனி முயற்சிகள் தென்னக அரசியலில் துவங்கியுள்ளன.

தமிழகத்திற்கு என்று ஒரு தேசியம் வேண்டும் என்று ம. பொ. சி. போன்றவர்கள் கூறி வருகின்றனர்.

தமிழர்களின் இனரீதியான உரிமைப் போர்க் குரலுக்கு இதுவரையில் செவிசாய்த்து அறியாத சில அனைத்திந்திய அரசியல் கட்சிகள் இப்பொழுது செவிசாய்க்கத் துவங்கியுள்ளதோடு, போராட்டம் நடத்துகின்ற அளவிற்குக்கூட வந்துள்ளன.

இவையெல்லாம் தமிழர்களின் தனிமைத் தேசிய வேட்கையின் விளைவுகளேயாம்.

இந்த வேட்கையினை நன்முறையில்பயன்படுத்தி, நடைமுறையில் உள்ள போலித் தேசியத்தைக்களைந்தெறிந்து, உரிமை வழித் தேசியத்தை அடையதென்னக அரசியலுலகம் முயலுமா?

நெல்லும் கரும்பும் நிலத்திற்கு அழகு; தாமரை குளத்திற்கு அழகு; நாணம் பெண்மைக்கு அழகு; அறங்கள் ஆண்மைக்கு அழகு.

—[illegible]



எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்.

# இதயம்

மலர் 7 | சேலம் 15—10—57 | இதழ் 14

## தீங்கான தீபாவளி!

—:—

பண்டிகை, திருநாள், திருவிழா என்பன பற்பல நாட்டிலும், பலவகையான அடிப்படையிலே நடைபெறுகின்றன.

போரில் வென்றமைக்கு, தலைவர்கள் பிறந்தமைக்கு, விடுதலை பெற்றமைக்கு, வீரர் வணக்கத்திற்கு, பேரறிஞர் நினைவுக்கு, நாட்டுப்பற்றுக்கு, பகவானிடம் பக்திக்கு, பரலோக முக்திக்கு, பருவமாற்றத்துக்கு, இலட்சிய சித்திக்கு, இன்பக் கிளர்ச்சிக்கு, இனப்போர் நினைவுக்கு, அரசியல் மாற்றத்திற்கு, ஆண்டவன்மகிழ்வுக்கு, மதத்திற்கு, சாதிக்கு என்பன போன்ற பலவகை அடிப்படையின் மேல் பண்டிகைகள் நிகழ்கின்றன.

நாட்டிலே பண்டிகைகள் நடைபெறக் கூடாது என்று எவரும் சொல்ல முடியாது. ஆனால், மதவெறி-இனவெறி-மடமைக் கருத்துக்களின்மேல் எழுந்துள்ள தீபாவளிபோன்ற திருநாட்கள் தீங்கானவை; ஒழிக்கப்பட வேண்டியவை என்று சொல்ல அஞ்சுதல் கூடாது.

தேவர்கள் எனப்படும் ஆரியர்க்கும், அசுரர்கள் எனப்படும் திராவிடர்க்கும் நடைபெற்ற இனப் போரைக் குறிப்பதுவே நரகாசூரன் கதை! அந்தக்கதையே தீபாவளிப் பண்டியையின் சீவனாக கருதப்படுகிறது—நம்பப்படுகிறது, பரம்பரை பரம்பரையாக!

திராவிடத்திலேயே மலையாளத்திற்கொரு வகையான கதை; ஒருவகையான பண்டிகை முறை; ஆந்திரநாட்டுக் கொருவகையான கதையும், முறையும்; கன்னடத்தார்க்கு ஒரு வகையான கதை, நடப்பு முறை; தமிழகத்திற்கு ஒரு வகையான கதை நம்பிக்கை—நடைமுறை என்பதாக தீபாவளிப் பண்டிகையின் தன்மை மாறுபட்டுள்ளது. விந்தியம் கடந்த வடநாட்டார் வேறு பல வகையானும் கொண்டாடுகின்றனர். எப்படி எவர் கொண்டாடினும் தீபாவளிப் பண்டிகை மதவெறி, இனவெறி, பக்திவெறி, முக்திவெறி போன்ற இந்துமத சாஸ்திர சம்பிரதாய மூட நம்பிக்கைகளை வளர்ப்பதே தவிர குறைப்பதன்று; நாட்டுக்குத் தேவையான திருநாளல்ல! எனவேதான் ஒவ்வோராண்டும் வேண்டாம் தீபாவளி என்று நாம் முழங்குகின்றோம்.

எட்டிக் காயின்மேல் சர்க்கரை பூசி இன்சுவைக் கனி என்பதுபோல், நச்சுப் பாம்புக்கு நகையணிவித்து நல்லழகு பாரென்பதுபோல் தீங்கான தீபாவளியை மகத்தான தேசியப் பண்டிகையென்று பறைசாற்றும் பிரசாரப் பணியினைத் தொடர்ந்து புரிந்து வருகின்றனர், தொல்லை வளர்க்கும் தீயோர்!

"ஆனந்த விகடன்" "கல்கி" "கலைமகள்" "சுதேசமித்திரன்" போன்ற ஆரிய ஏடுகளும், திராவிட விபீஷணப்பத்திரிகைகளும் தீபாவளி விசேஷ மலர்கள் வெளியிட்டு மகிழ்கின்றன! என்ன நோக்கம்?

வாணிபங் கருதி, இதழ் வளங்கருதி செய்கின்றனர் என்றால், பொங்கல் பண்டிகை இல்லையா? திருவள்ளுவர் திருநாள் இல்லையா? ஏன் மலர்கள் வெளியிடக் கூடாது?

பழைமையான கருத்துக்களும், சாஸ்திர புராண இதிகாசக் கதைகளும், அதன் மீதுள்ள நம்பிக்கைகளும் நலிந்து போகாமல் பாதுகாப்பதே நம்மை நாம் பாதுகாக்கும் அருஞ்செயல் என்பதாகக் கருதியிருக்கின்றனர் ஏமாந்த காலத்திலே ஏற்றங் கொண்டவர்! இது காலம் ஏற்கும் செயலன்று. இனப் பகைமை வளர்க்கும் இழிசெயல், இனியேனும் ஒழியட்டும். இன்பநிலை வளரட்டும்!

ஆரியர்—திராவிடர், பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்ற வேற்றுமை மறந்து திராவிடத்தைக்காப்பாற்றும் எண்ணம்வளரும் நேரத்தில், தீபாவளிபோன்ற தீங்கான விழாக்கள் வேண்டாம், பழையனவற்றை வழியனுப்பிவிட்டு, பகுத்தறிவு பூர்வமான புதியவிழாக்களுக்கு வரவேற்புக் கூறுவோம், வாருங்கள்.

—ப. கண்ணன்.






(முன் இதழ் தொடர்ச்சி)

**ஐவண:-** அப்படித்தான் குருவே!

**காந்த:-** ஓ! வாணன் வல்லியா? ஐவணம்! ஒரு முக்கியமான சேதி; தெரியுமா ஒனக்கு? அதுக்குத்தான் அவனை அனுப்பியிருக்கிறேன்!

**ஐவண:-** (வியந்து) மூலிகைப் பூ! முகர்ந்தா முன்னூறு வருஷம்! ஆ..கா! அந்த மூலிகைப் பூவை நான் பார்க்கணுமே!

**காந்த:-** ஐவணம்! நாஞ் சொல்றதைக் கொஞ்சம் கேளேன்!

**ஐவண:-** (தன்னிச்சையாக) கண்டா மனசை இழுத்து, தீண்டினா ஒடம்பை இழுத்து, முகர்ந்தா முன்னூறாண்டு வாழ வைக்கற மூலிகைப் பூ! ஆமாம்! நகரம் திரும்பறதுக்குள்ளே அந்தப் பூவை எப்படியும் நான் பார்த்தாகணுமே! பறிச்சாகணுமே!! மொகர்ந்தாகணுமே!!!

**காந்த:-** (கடுப்பாக) முடியாது! முடியாது! முடியாது!

**ஐவண:-** (சினந்து) என்ன சொன்னீங்க?

**காந்த:-** அது இருக்கற எடம் எனக்குத்தாந் தெரியும். எம்பேச்சைக் கேட்டாத்தான் முடியும்.

**ஐவண:-** ஒங்க பேச்சைக் கேக்கலேன்னு நான் எப்ப சொன்னேன்?

**காந்த:-** அப்படின்னா கேளு! அழையா விட்டிலே நொழையா விருந்தா வந்திருக்கானே. சோமன்னு ஒரு சிற்பி.

**ஐவண:-** ஆமாம், வந்திருக்கான்.

**காந்த:-** அவனுடைய பேச்சு, நடை, நொடி, பாவனையெல்லாம் பார்த்தா, வடக்கத்திய ஆரியனைப் போலத் தோணுது! அவன் உண்மையான சிற்பியல்ல; அரசாங்க ஒளவாளியாக இருப்பான்னு நெனைக்கறேன்.

**ஐவண:-** ஆமா, அவன் சிற்பியல்லன்னா, மகாராணியின் சிலையுருவை எப்படிச் செதுக்கி முடிப்பான்?

**காந்த:-** ஐவணம்! கலையுலகத்திலே சுருதி தெரியாதவன் பாட்டுப் பாடறான்; தாளந் தெரியாதவன் நாட்டியம் ஆடறான்; இலக்கணந் தெரியாதவன் ஏடு எழுதறான்; இதெல்லாம் நடக்கும்போது சிற்பந் தெரியாதவன் ஏன் சிற்பீன்னு சொல்லிகிட்டு வரமாட்டான்? அந்த சோமனோட கலைத் திறமையை சோதிச்சுப் பார்க்கச் சொல்லியிருக்கிறேன், வாணனை விட்டு!

**ஐவண:-** அவன் சிற்பியல்லன்னு தெரிஞ்சா?

**காந்த:-** வேஷக்காரன்னு வெளங்கிப் போயிடுது! அப்பறம் அதுக்குண்டானதைச் செய்ய வேண்டியதுதான்!

(சம்புகுமாரனைத் தூக்கிக்கொண்டு வந்த வாணன், அவன் கிச்சுகிச்சு மூட்ட சிரித்தவண்ணமே ஓடி வருகிருன். அவன் விடாது கிச்சு மூட்டுகிருன். தாளமுடியாத சிரிப்போடு அவனைக் கீழே விட்டுவிட்டு ஓடிச் சுற்றுகிருன். துரத்துகிருன் சம்புகுமாரன்)

**ஐவண:-** (**அவனைத் தடுத்து**) இளவரசே! விட்டுடுங்க இளவரசே! சிரிச்சு சிரிச்சு செத்துடப் போருன் இளவரசே!

**சம்பு:-** (**நின்று**) ஐவணம்! சிரிக்கறவங்கெல்லாம் செத்துடுவாங்களா?

**ஐவண:-** சிரிக்கறவங்களும் சாவருங்க; சிரிக்க வைக்கறவங்களும் சாவருங்க; எல்லாரும் ஒரு நாளைக்கு செத்துத்தானே ஆவணும்?

**சம்பு:-** ஐயயோ! நான் சாவமாட்டேன்! எங்கம்மாளுக்கப்பறம் விந்திய தேசத்தை நாந்தானே கட்டியாளணும்? நாஞ் செத்துட்டா என்ன ஆவறது?

**ஐவண:-** (**அவனைத் தூக்கி**) என் ராஜா! நீங்கத்தான் விந்தியத்தின் எதிர்கால மன்னவர்! அதிலென்ன சந்தேகம்?

**வாணன்:-** அதுலே சந்தேகமில்லே!........ சந்தேகமேயில்லே! ஆனா........

**ஐவண:-** பின்னே, எதுலே சந்தேகமாம்?

**வாணன்:-** ஐயயோ! இதில்லே! இதில்லே! என் குருநாதர் சொன்னபடி அந்த சிற்பியை சோதிச்சுப் பார்த்தேன். அவன் சிற்பக்கலை தெரியாத அன்னியன்கிறதிலேயும், காரியார்த்தமா வந்து புகுந்திருக்காங்கிறதிலேயும் சந்தேகமில்லேன்னேன்!

**காந்த:-** வாண! நிச்சயமாகவா? அப்படியானா நாமெல்லாம் சாக்கரதையா இருக்கணும். மகாராணி அவனுக்கு அனுதாபங் காட்டருங்க; எப்படியோ அவங்க மனசைக் கவர்ந்திருக்கருன். நல்ல கலைஞன்று நெனைக்கருங்க; அவன் நல்ல களவாணிப்பயலா இருந்திட்டா....? நம்ப ராச்சியத்துக்கே கேடாச்சே!

**சம்பு:-** நீங்க யாரைப்பத்தி பேசறீங்க?

**காந்த:-** புதுசிற்பி சோமனைப்பத்தி!

**சம்பு:-** அடடே! நானே சொல்லணும்னு நெனைச்சேன். காந்தமரே! அவன் என்னை உத்து உத்துப் பாக்கறதும், நெருங்கிப் பேச வர்றதும் பாத்தா எனக்கென்னமோ பயமா இருக்குது! காட்டுப்பூனை கோழிக்குஞ்சை பாக்கருப்பலே பாக்கருன்! ஆமா; அவன் யாரு? ஏன் என்னை அப்படிப் பாக்கருன்? அம்மா ஏன் அவனுக்கு எடங்குடுத்திருக்கருங்க?

**காந்த:-** அதுதான் இளவரசே; எங்களுக்கும் புரியலே! மகாராணியைத் தனி அறையிலே குந்தவச்சு வேறேயல்ல சிற்பம் செதுக்கருன்! அவன் கலைஞனகவே இருககட்டும்; வரன்முறை வேணும்? அந்தச் செயல் நம்ம அருளாளருக்கே பிடிக்கலே!

**சம்பு:-** சின்னப்பையன்; எனக்கே வெறுப்புன்னு....அப்பறம் என்ன? காந்தமரே! கொஞ்சம் பொறுங்க! எப்படி, ஏன், என்னுங்கறதை இப்பவே ஓடிப்போயி தெரிஞ்சுகிட்டு வந்திடறேன். (**ஓடுகிருன்**)

**ஐவண:-** (**கடித்து**) இளவரசே! நில்லுங்க, இது மலைச்சாரல்; தனியே போகக்கூடாது. இதோ நானும் வர்றேன்!

**காந்த:-** ஐவணம்! நீயுமா போறே? நாம்ப மூலிகைப்பூ பாக்க வேணுமா?

**ஐவண:-** கண்டிப்பா பாக்கணும், இன்னொரு நாளைக்கு!

(சொல்லிவிட்டு சம்புகுமாரனைத் தொடர்ந்து ஓடுகிருள் ஐவணம்.)

## காட்சி 17.

**இடம்: கலைக்கூடம்-தனிஅறை.**

**காலம்: பிற்பகல்.**

(பீடமொன்றில் காமவல்லி உட்கார்ந்திருக்கிருள். சிலை செதுக்க கல் வைக்கப் பட்டிருக்கிறது. கையிலே சுத்தியலும் உளியுமாக எதிரே நிற்கிருன் சோமன்.)



**சோம:-** (**சாகசமாக**) மகாராணி! ஒங்களோட திவ்யமான அழகைப் பார்த்துத்தான் லட்சண சாஸ்திரமே செஞ்சிருப்பான்னு நேக்கு தோணறது!

**காமவ:-** லட்சண சாஸ்திரமும் கற்றிருக்கிறீரோ?

**சோம:-** எந்த சாஸ்திரத்தை நான் விட்டேன்? தேவி! லட்சண சாஸ்திரம் படிக்காமெ சிற்பக் கலைஞனுக முடியாதே! லட்சண சாஸ்திரத்தோட சுருக்கத்தை சொல்றேன் கேளுங்க. மனித தேகத்துக்குரிய உத்தம லட்சணங்கள் முப்பத்திரெண்டு; அதனோட இலக்கணம் கேளுங்க: நகங்கள், கண்கள், மூக்கு, தன் மத்யபாகம், முழங்கால்கள் இவை ஐந்தும் நீண்டிருக்கணும்; கழுத்து, கணுக்கால், முதுகு, குறி என்கிற நான்கும் குறுகியிருக்கணும்; நகம், தோல், கூந்தல், பற்கள், விரலின் கணுக்கள் ஐந்தும் மிருதுவாக இருக்கணும்; வயிறு, பிடரி, தோள்கள், மூக்கு, மார்பு, நெற்றி, இந்த ஆறும் உயர்ந்திருக்கணும்; கண்கள், உதடு, மோவாய்க்கட்டை, உள்ளங்கால், உள்ளங்கை, நகம், பீஜம் ஆகிய ஏழும் சிவந்திருக்கணும்; முஷ்டி, மணிக்கூடு, மார்பு என்கிற மூன்றும் வலுத்திருக்கணும்; நெற்றி, மார்பு இரண்டும் விரிஞ்சிருக்கணும்! புரிஞ்சுதோ?

**காமவ:-** புரிந்தது சிற்பியாரே; புரிந்தது. அங்கலட்சணம் குறித்து யானும் சற்று அறிவேன். நீர் கூறியது அனைத்தும் லட்சணங்கள்தான்! ஆனால், பெண்களுக்குரியவையல்ல; ஆண்களுக்குரியவை!

**சோம:-** (**திகைத்து**) அ...ஆமாம் தேவி! அம்...இது பொதுவானது! இதுவந்து... ஆண்களுக்கென்றாலும் பெண்களுக்கும் பொருந்தும். இதிலேருந்து ஸ்திரீகளுக்கென்று சிறப்புவ்திவகுத்திருக்காங்க. அதுதான் எங்களோட தலைவழியான மகா சிற்ப சாஸ்திரம்! அதிலே ஒரு பெண்ணோட அவயங்களின் அளவு, பருமன், திரட்சி இவ்வளவுதான்னு இருக்கு. அதையெல்லாம் நன்னு பார்த்தப்புறந்தான் சிற்பம் செதுக்கத் தொடங்கணும். இது சரசுவதியின் தெய்வாக்ஞை! மகாராணி அனுமதிக்கணும்.

**காமவ:-** எதை அனுமதிப்பது?

**சோம:-** ஏதையுமில்லே! நகம், தோல், கூந்தல், பற்கள், விரலின் கணுக்கள் மிருதுவாக இருக்கணும்னு சாஸ்திரம்! அதையெல்லாம் பரீட்சை பார்த்து, அதனோடமிருதுத்தன்மைகளை சிற்பத்திலே பிரத்தியட்சமா பிரதிபலிக்கப் பண்ணனும், அதுதான் உத்கிருஷ்டமான கலாசேவை; அதிலேதான் கலாதெய்வத்தின் சான்னித்தியம் பரிபூரணமா பொருந்தியிருக்கும்.

(கையிலிருந்ததை வைத்துவிட்டு, சொல்லியவண்ணமே அவள் முன்னல் மண்டியிட்டு, சாகசமாகக் கைவிரல், நகங்களைப் பார்க்கிருன். கணுக்களைப் பார்க்கிருன். "சபாஷ்" என்கிருன். பிறகு எழுந்து பின்னல் சென்று தலையை நீவிக் கூந்தலைப் பார்க்கிருன். அவளறியாமல் அதற்கு முத்தமிடுகிருன். "சபாஷ்! அற்புதம்" என்கிருன். துள்ளிவருகிருன் முன்னல்.)

**சோமன்:-** (**சாகசமாக**) தேவி! கொஞ்சம் தெய்வீகப் புன்னகை புரியுங்கள். அந்த திவ்யமான பற்களை தரிசித்து தன்யனுகிறேன்!

(காமவல்லி புன்னகை புரிகிருள்.)

**சோம:-** சபாஷ்! பற்களா இவை? நிலவு சிந்தும் வெண் முத்துக்கள்! உதட்டின் இளஞ்சிவப்புக்கும், அதற்குள்ளே ஒளிருகின்ற வெண்பற்களுக்கும், அடடா; என்ன தேஜஸ்! எனன தேஜஸ்! படைத்த பிரம்மதேவனே பார்த்தால் சொக்கிப் போவான்!

(சாகசமாக பற்களை விரலால் தட்டிப் பார்க்கிருன். "ஆ:கா! அற்புதமான படைப்பு" என்கிருன்.. பிறகு முன்னல் உட்கார்ந்து தோலைப்பார்க்க கையைப்பற்றி சாகசமாக நீவுகிருன்.)

**சோமன்:-** பொன்னுன பூங் கரங்கள்! அடடா! எவ்வளவு மிருதுவான தோல்! எவ்வளவு மிருதுவான தன்மை! லட்சண சாஸ்திரத்தோட சிறப்பு; சிற்பக்கலையோட ஜீவன் இங்கேன்னு இருக்கு!

(மெதுவாக தடவிக் கொடுத்து இன்பக் கிளர்ச்சியை விளைவிக்கிருன் அவள் தேகத்தில், அவனது சாகசத்திலே சொக்கிப்போய், சுய நினைவிழந்து பெருமூச்சு விடுகிருள் காமவல்லி.

மெதுவாக இரு கைகளையும் பற்றுகிறான் சோமன். "அம்மா, அம்மா" என்று அழைத்துக்கொண்டே சிறுவன் சம்புகுமாரன் ஓடி வருகிறான். திடுக்கிட்டு விலகுகிறான் சோமன். மயக்கநிலை கலைந்து எழுந்திருக்கிறாள் காமவல்லி.)

**சம்பு:-** *அம்மா! என்னம்மா இது? இவன் ஏன் ஒன் கையைப் பிடிச்சுகிட்டிருந்தான்? கால்லே விழுந்து வணங்க வேண்டியவன், கையை ஏன் தொடணும்?*

**காமவ:-** **(தத்தளித்து)** *மகனே!.... நீ யா? இவன் என் கையைப்பற்றினான்!...இல்லை!.... ஆம்!... ஏன் பற்றினான்.....ஆமடா!.... இவர் இணையற்ற கலைஞர்! சிற்பநூல் முறைப்படி அளவெடுத்தார்! ஆமாம்.....அளவு!*

**சம்பு:-** *நல்ல அழகுதான்! அம்மா! சிற்பம் செய்யறவங்கெல்லாம் இப்படித்தான் ஆளை அளவு எடுக்கறாங்களா? கையைக் காலைப் புடிக்கறாங்களா?*

**சோம:-** *இளவரசர்! தவறாக நெனைக்கப்படாது. பவித்ரமான சிற்பக்கலை விதிச்சிருக்கிற மொறைப்படி செய்தேன். இதோட மகத்துவம் எளவரசருக்கு சொன்னா புரியாது! காரணம்; ரொம்பச் சிறு வயசு பாருங்க!*

**சம்பு:-** *ஆமாங்க! நான் சின்னப்பையன் தான். அதனாலே தான் பார்வையிலும் பேச்சிலும் இருக்கிற ஒன்னோட சின்னத்தனம் எனக்கு நல்லாத் தெரியுது! நீ ஏதோ கேடுகாலத்துக்குத்தான் இங்கே வந்திருக்கே!*

**காமவ:-** **(சினந்து)** *சம்பு! மூடுவாயை! என்ன மரியாதையற்ற வார்த்தை! கலைப் பணிக்கு இசைவுதந்த உன் தாய்க்கு மாற்ற முடியாதமாசு கற்பித்துவிடுவாய் போலிருக்கிறதே! நல்லது கெட்டது நானறிவேனடா! இதிலெல்லாம் நீ தலையிடாதே!* **(சோமனைப் பார்த்து)** *ஐயா! சிறுவன் பேச்சை மனதில் வைக்க வேண்டாம், சென்றுவாரும். பிறகு பார்ப்போம்.*

(சோமன் சிறுவனை முறைத்துப் பார்த்தவண்ணமே போகிறான்.)

**சம்பு:-** (அஞ்சி) *அம்மா! நான் தவறாகப் பேசியிருந்தா தயவுபண்ணி மன்னிச்சுடம்மா.*

**காமவ:-** **(வாரியணைத்து)** *பாதகமில்லேடா கண்ணு! எவரையும் எளிதில் குற்றவாளியாக்கிவிடக் கூடாது. குற்றம் புரிவோர், அதனை மூடிமறைத்துத் தப்பிவிடவும் முடியாது. சாமர்த்திசாலியானாலும், பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்! ஆமாம், இப்போது எதற்கு நீ ஓடி வந்தாய்?*

**சம்பு:-** *நாம்ப கூடகிரிக்கு வந்தப்புறம் இலங்கைசக்கரவர்த்தி மாமாவுக்கு முடங்கலே எழுதலையேம்மா. என் நெனைவுக்கு வந்தது. அதைச் சொல்லத்தான் ஓடிவந்தேன்!*

**காமவ:-** **(அஞ்சி)** *ஆமடா கண்ணு! நான் மறந்தே போனேன். அண்ணா கோபித்துக் கொள்வாரே! வா இப்பொழுதே செய்தியனுப்புவோம் வா! வா!*

(இருவரும் வேகமாகப் போகின்றனர்.)

## காட்சி 18.

**இடம்:** பஞ்சவடி.

**காலம்:** முற்பகல்.

(குடிசையில் சீதை, முறத்தில் அரிசி புடைத்துக் கொண்டிருக்கிறாள். தன் நிலை நினைந்து மனம் வெந்து பாடுகிறாள். பாடியவண்ணமே விறகு, சட்டி, தண்ணீர் எல்லாம் எடுத்து வந்து வைக்கிறாள். பாட்டு முடிவில் இலக்குவன் கீரை, பழம், காய், கிழங்கு முதலியன கொண்டு வருகிறான். அவளைப் பார்த்தவண்ணமே வைக்கிறான் )

**இலக்:-** *என்னாமன்னி! ஒரு மாதிரி இருக்கே? அண்ணாபோயி பத்துநாளைக்கு மேலாச்சே இன்னும் வரல்லியேன்னு வருத்தப்படறியா?*

**சீதை:-** **(கடுப்பாக)** *இல்லே! அவுருதாம் போயிட்டாரே, இனிமே நம்ம இஷ்டந்தானேன்னு சந்தோஷப்படறேன்!*

**இலக்:-** *வேண்டாம் மன்னி! அப்படியெல்லாம் நெனைக்காதே! அண்ணா வந்துடுவாரு! அறுசுவையோடு பதார்த்தம் தயார்பண்ணு. இதோ கீரை, காய், கெழங்கு எல்லாம் கொணர்ந்திருக்கேன்! நோக்குப் பிடித்தமான சேப்பங் கெழங்குகூட இருக்கு!*

(வளரும்)



வானொலி வம்பு.

# விவித் பாரதியா? விபரீத நிகழ்ச்சியா?

"தென்னாட்டின் நான்கு வட்டார மொழிகளில் ஏதேனும் ஒன்றிலோ அல்லது தமிழ் மொழியிலோ நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்குசக்திவாய்ந்த ஒலிபரப்புக் கருவிகள் இல்லாமையால், தென்னாட்டு மக்கள்—குறிப்பாகத் தமிழக மக்களும் தூரக்கிழக்கு நாடுகளிலும் தென் ஆப்பிரிக்கா, இலங்கை முதலிய நாடுகளிலும் வாழும் இலட்சக் கணக்கான தமிழர்களும் பெரும் கஷ்டத்திற்காளாகியுள்ளனர். இப்போது சென்னையிலிருக்கும் நடுத்தர அலை ஒலிபாப்புக் கருவி 20 கிலோவாட் சக்தி கொண்டதுதான்; இது வெளிநாடுகளிலும் தென்னாட்டின் தொலைதூரத்திலும் வாழும் தமிழ் பேசும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இல்லை. எனவே, சென்னையில் ஒரு 100 கிலோவாட் ஒலிபரப்புக் கருவி அமைக்கப்படவிருக்கிறது என்ற செய்தி கேட்டபோது பொதுவாக அனைவரும் மகிழ்நதனா; ஆனால், இந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை.

சென்னையில் உள்ள இந்த சக்தி வாய்ந்த ஒலிபரப்புக் கருவி, பம்பாயில் இதேபோல் உள்ள ஒரு 'யூனிட்'டுடன் சேர்ந்து **'விவித் பாரதி'** என்றபெயருடைய நிகழ்ச்சிகளைக் கூட்டாக ஒலிபரப்பும் என்று புதுடில்லியில் முடிவு செய்யப்பட்டவுடனேயே தென்னாட்டு மக்கள் கோபப்பட்டனர்; அவர்கள் உள்ளத்தை அச்சமும் ஆத்திரமும் ஆட்கொண்டன. இதன் காரணம் எளிதில் அறியக்கூடியதே.

நேரடியாகவும் மறைமுகமாகவும் கட்டாய இந்தி திணிக்கப்படுவதற்குப் பொதுவாகத் தென்னாட்டில் பரவலான எதிர்ப்பு இருக்கிறது. என்பது, பிரச்சினையை ஏறெடுத்துப் பார்க்க மறுப்பவர்களுக்கும்கூட இப்போது தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும்.

'விவித் பாரதி' தலைப்பின் கீழ் ஒலிபரப்ப அறிவிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரல், எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்திருக்கிறது; விரும்பாத மக்கள்மீது தேவைப்படாத ஒன்றைத் திணிப்பதற்கு டெல்லி சர்க்கார் எல்லாவகையான முயற்சிகளையும் மேற்கொள்ளுவர் என்ற தென்னாட்டவரின் சந்தேகங்களை, இந்த அறிவிப்பு உறுதிப்படுத்துவதாகவே கருதப்படுகிறது.

1957 அக்டோபர் 3-ந் தேதியன்று 'விவித் பாரதி' நிகழ்ச்சி மொத்தம் 7 மணி 15 நிமிடங்களுக்கு இருந்தது; இதில் 9-15 முதல் 9-30 வரை (பாரத் வாணி) 15 நிமிடங்கள் மட்டுமே—மேலும் 8-15 முதல் 8-35 வரையிருந்த (மஞ்ஜூஷா) 20 நிமிட நேரத்தில் ஒரு பகுதியும் மட்டுமே பிரதேச மொழிகளில் ஒலிபரப்பிற்கு ஒதுக்கப்பட்டது. இதர நாள் நிகழ்ச்சிகளிலும் அதிக மாற்றம் ஒன்றும் இல்லை. மொத்தம் 5 மணிநேர நிகழ்ச்சிகளில் சுமார் 15 நிமிடங்கள் மட்டுமே ஏதோ பிச்சையிடுவதுபோல, பிரதேச மொழிகளில் ஒலிபரப்பிற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன; எஞ்சியுள்ள நேரம் முழுவதிலும் இந்தி நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்பட்டு விடுகின்றது. தென்னாட்டு மக்களுக்கு இந்த நிகழ்ச்சிகளின் தலையும் தெரிவதில்லை; காலும் தெரிவதில்லை. இது 'தங்களுக்குப்புரியாத மொழியில் நிகழ்ச்சிகளை ஒழிபரப்பி, மக்கள்மீது வலுக்கட்டாயமாக அவற்றைத் திணிப்பதற்கு ஒப்பாகும்.

பிரதேச மொழிகளில் ஒலிபரப்பிற்கென ஒதுக்கப்பட்டுள்ள 15 நிமிட நேரத்தைக்கூட 14 மொழிகள் பங்கு போட்டுக்கொள்ள வேண்டியுள்ளது; அதாவது, ஒவ்வொரு 15 நாளுக்கும் 15 நிமிட நேரம் அல்லது ஒரு நாளில் 5 மணிநேர ஒலிபரப்பில் சராசரியாக ஒரு நிமிடம் மட்டுமே தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பிற்குக் கிடைக்கும்! இந்த அநீதிகுறித்து விளக்கத் தேவை இல்லை; இது அனைவருக்கும் தெரிந்தே இருக்க வேண்டும்.

இந்தித் திணிக்கப்படுவதை உறுதியாக எதிர்த்து நிற்கும் திராவிட முன்னேற்றக் கழகம் தென்னாட்டின் பிரதான அரசியல் கட்சிகளுள் ஒன்றாகும். அறிவிக்கப்பட்டுள்ள வகையிலேயே 'விவித் பாரதி' நிகழ்ச்சிகள் தொடர்ந்து ஒலிபரப்பப்படுமானால், அது தென்னாட்டு மக்களின் உணர்ச்சிகளை குறிப்பிடத்தகுந்த அளவு கிளப்பிவிடும் என்பதை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டியது தனது கடமை எனக் கழகம் கருதுகிறது.

பிரதேச மொழிகளை நிந்திக்கிற வகையில் — திட்டமிட்டு இந்தி நிகழ்ச்சிகள் தொடர்ந்து ஒலிபரப்பப்படுவது, சிலர் தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறபடி இந்தியைப் பரப்புவதற்கு உதவாது; இந்தி பேசாத மக்களின் நியாயமான உணர்ச்சிகளை, கொஞ்சமும் முன் யோசனையின்றி மிதிதது துவைப்பதானது நிலைமையை மேலும் பாதகமாக்கும்; அந்த மொழியை (இந்தி) பரப்புவதற்கு உதவாது என்பதுடன் இந்தி பேசுகிற மக்களுக்கும்—பேசாத மக்களுக்கும் இடையில், நீக்கமுடியாத நிரந்தரமான பிளவைத்தான் உண்டுபண்ணும்.

எனவே, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் என்ற முறையில் நான், கீழ்க்காணும் உருவான யோசனைகளை தகவல், மற்றும் ஒலிபரப்பு அமைச்சரவை முன் வைக்க விரும்புகிறேன்:—

(1) சென்னையில் உள்ள 100 கிலோவாட் ஒலிபரப்புக் கருவி தென்னாட்டின் — தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் என்ற

நான்கு மொழிகளிலும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பப் பயன்படுத்தப்பட வேண்டும்; இதனுல் ஒவ்வொரு மொழிக்கும் தினந்தோறும் ஒன்றரை மணி நேரம் நிகழ்ச்சிகள் ஒலிபரப்ப சந்தர்ப்பம் கிடைக்கும். மேலும், இந்த நிகழ்ச்சிகளை சிற்றலைகளிலும் ஒலிபரப்பவேண்டும். மேலும், இந்த 4 மொழிகளிலும் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளின் சாரங்களை, சென்னை, விஜயவாடா, கோழிக்கோடு, பெங்களூர் ஆகியவற்றில் உள்ள நடுத்தர அலை ஒலிபரப்புகள் மூலமும், பிரதேசத்தில் உள்ளவர்களும் பயன்பெறும்வண்ணம் ஒலிபரப்ப வேண்டும்.

(2) தென்னுட்டு மொழிகளில் சென்னையிலிருந்து ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் தூரக்கிழக்கு நாடுகளிலும், இலங்கையிலும் வாழும் தமிழர்களுக்கும் பயன்படும் வகையில் தக்க நேரத்தில் ஒலிபரப்பப்பட வேண்டும்.

(3) எது எப்படி இருந்தாலும், இப்போதைய ஏற்பாட்டின்படி தென்னுட்டின் நான்கு பிரதேச மொழிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நேரம் மிகக் குறைவானது என்பதால், "விவித் பாரதி" நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுவதை உடனே நிறுத்தவேண்டும்; இன்றேல், விபரீதமான விளைவுகள் தோன்றக் கூடும்."

நமது பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், தோழர் வி. பி. இராமன் அவர்களோடு சென்ற 5—10—57-ல், அகில இந்திய வானெலியின் டைரெக்டர் ஜெனரலான ஜே. சி. மத்தூர் அவர்களை சென்னை வானொலி நிலையத்தில் சந்தித்தார்கள். இவ்வறிக்கையினை அவரிடம் கொடுத்து "விவித் பாரதி" நிகழ்ச்சியானது தென்னுட்டின் மேல வலுவந்தமாக இந்தியைத் திணிக்கும் மற்றொரு ஏற்பாடென்றும், இதனை உடனே நிறுத்த வேண்டுமென்றும் விளக்கி கூறினார்கள். கவனிக்கப்படுமா?

~ ★ ~


# இனிய தென்றல்

**வெளியீடுகள்.**

**ப. கண்ணன்.**

| | |
|---|---|
| புரட்சிப் பாடகன் | 1-50 |
| வீரவாலி | 1-25 |
| ஜமீன்தார் | 1-00 |
| காதல் மணம் | 0-50 |
| கன்னியின் சபதம் | 0-50 |
| சிந்தனைச் சித்திரம் | 0-62 |
| மின்னொளி | 0-37 |

**மு. கருணாநிதி.**

| | |
|---|---|
| ஒரே முத்தம் | 1-25 |

**சி. பி. சிற்றரசு.**

| | |
|---|---|
| சிந்தனைச் சுடர் | 0-31 |

**அறிஞர் இங்கர்சால்**

தமிழில்: இரா. நெடுஞ்செழியன்

| | |
|---|---|
| சமுதாய விடுதலை | 0-75 |

**பாவலர், வேலாயுதசாமி.**

திருக்குறள் இசைப்பாடல்கள்

| | |
|---|---|
| அறத்துப்பால் | 0-44 |
| அறிவுத் துளிர் | 0-19 |

**குஞ்சிதம்—வடிவேலு.**

| | |
|---|---|
| கெட்டிக்காரன் | 0-16 |
| பைங்கிளி | 0-12 |
| ஆலமரத்துப்பேய் | 0-12 |
| வால்முளைத்த சாமியார் | 0-12 |
| அன்புமணி | 0-12 |

விற்பனையாளர்களுக்கு ஏற்ற கழிவு உண்டு.

## தென்றல்

**நூற்பதிப்புக் கழகம்,**

சகிகண்டபுரம். சேலம் மாவட்டம்.

**தென்றல் நூல்கள் சென்னையில் கிடைக்குமிடம்:**

**பாரி நிலையம்,**

**59, பிராட்வே, சென்னை.**

**தென்றல் நூல்கள் இலங்கையில் கிடைக்குமிடம்:**

**ப. சுப்ரமணியம்,**

**பகுத்தறிவுப் பண்ணை,**

**113, கடல் தெரு, கொழும்பு.**


# பொன் மொழிகள்

**குற்றமற்றவரின் உறவை எப்போதும் மறத்தலாகாது; துன்பம் வந்த காலத்தில் உறுதுணையாய் உதவியவர்களின் நட்பை எப்போதும் விடலாகாது.**

**—திருவள்ளுவர்.**

**நீங்கள் சோம்பி நின்றால் ஆண்டவன் உதவிபுரியான்; முயன்றால் நின்றால் பகவான் முன்வந்து நிற்பான்.**

**—திலகர்.**

**கற்பனையை நம்பி, கண்ணால் பார்க்கக் கூடியதை அலட்சியம் செய்வது அறியாமை.**

**—ஞானி.**

**பணம், பதவி, பட்டம், விருது பெறுதல் எல்லோராலும் முடியாது. ஆனால், நல்லவராக—குணவானாக—அறிவுடையோராக இருக்க ஒவ்வொருவராலும் முடியும்.**

**—வாவனூர்கூஸ்.**

**கற்றோரைக் கைவிடுதலும், ஆராயாமல் காரியஞ் செய்யத் துணிதலும், தீங்குகளைச் செய்து அவை குறித்துப் பேசி மகிழ்தலும் துன்பத்தைத் தருவன.**

**—நல்லாதனார்.**

**ஒரு நாட்டின் மிகுந்த விலை மதிப்புள்ள செல்வங்கள் எவையென்றால் ஆரோக்கியத்தோடும்மகிழ்ச்சியோடும் வாழுகின்ற அதன் மக்கள்தான்.**

**—ரஸ்கின்.**

**காமம், பொன்னாசை இவைகளுக்கு வசப்பட்ட அற்பர்கள் பொருட்படுத்தக் கூடியவரல்லர்.**

**—விவேகானந்தர்.**



(2-ம் பக்கம் தொடர்ச்சி)

தெளிவாக உணரப்பட்டுத் தடையின்றி வளரவேண்டும் என்பதே உட்கருத்தாகும். ஆனால், அவ்வளர்ச்சிக்கேற்ற சூழ்நிலையை நாம்முதலில் காணுதல்வேண்டும். 'யாவரும் கேளிர்' என்ற உறவு நிலையானது, உரிமையுணர்வுக்குக் கல்லறை எழுப்பி, அதன்மேல் எழுப்பப்படும் மாளிகை அல்ல; 'எங்கள் வீட்டிற்கு வந்தால் என்ன கொண்டுவருகிறாய், உன் வீட்டிற்கு வந்தால் என்ன தருகிறாய்' என்ற லாபப் பேரமுமல்ல; **உரிமையுணர்வைத் தழைக்கவிட்டு உறவு நிலையை வளர்விடு** என்பதே மேற்கண்ட தமிழ்த் தேசியவுணர்வுக் குரலின் விளக்கமும் உண்மையுமாகும். இவ்வுண்மையை மற்றவர்கள் (குறிப்பாக இந்தி மொழிக்காரர்கள்) உணரா திருக்கும் வரையில்-உணர்ந்தும் கடைப் பிடிக்காதிருக்கும் வரையில் தமிழனின் பரந்துபட்ட தேசிய உணர்ச்சி—நன்மைகளை, யார் செய்தாலும் வஞ்சகமின்றிப் புகழ்தல் ஆகிய உயர் பண்புகள் அவனுக்கே இன்னல்கள் பலவற்றை உண்டாக்கும். அவ்வின்னல்களை நீக்க வேண்டுமானால் அவன் தனது உயர்ந்த பண்புகளுக்குச் சில நாட்கள் ஓய்வு கொடுத்துவிட்டு அவை போற்றப்படுவதற்கேற்ற சூழ்நிலையையும், மற்றவர்களால் அவ்வுயர் பண்புகளின் அடிப்படை உண்மை உணரப்படும் நிலையையும் காணுதல் வேண்டும்.

இம்முறையைக் கடைப் பிடிக்காவிடில் தமிழன் இழப்பன மிகப்பல; காண்பன தோல்விகள்; முடிவோ தன்னினை வீழ்ச்சி! ஆம், ஐயமில்லை தமிழ்இன வீழ்ச்சியே. தேசியம்என்ற அடைமொழியோடு இன்று நாட்டில் நடப்பனவற்றை இனவுணர்வுக் கண் கொண்டும் மொழியுணர்வுக் கண் கொண்டும் பார்ப்பவர் எவர்க்கும் மேற்கண்ட உண்மை நிலைகள் விளங்கும் என்பதில் ஐயம் இல்லை.

இதுகாறும் இன்றைய, நேற்றைய தேசியப் பண்பின் நிலைகளை ஆய்ந்தோம். அவ்வாய்வின் மூலம் நாம் உணர்ந்த உண்மை நாளைய தேசியத்தைச் செம்மையாக வளர்க்க, ஒரு கலங்கரை விளக்கம் போல் நின்று உதவும்; ஏனெனில் அவ்வுண்மை நமக்கு நிகழ்கால இறந்தகால அனுபவத்தால் கிடைத்த உண்மை. அவ்வுண்மை அழிவற்றது; நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துள்ள நிழற்படக் கருவி போன்றது; அறிவியல் கலையில், செய்முறைக்குப் பின்னர் ஏற்படும் தெளிவு போன்றது; அது நம் நெஞ்சத்தில் நின்று நாளைய தேசியத்திற்குப் புது விளக்கம் காணத் துணைசெய்யும். ஆம், எதிர்காலத்தில் தேசியம் என்ற சொல்லுக்கு, 'அரசியல் செல்வாக்கு பெற்ற இனம், சிறுபான்மை இனத்தினரின் மொழி,கலை, பண்பாடுகளைக் கொல்லுதல்' என்ற பொருந்தாப் பொருள் நிலவாது. 'அனைத்து இனங்களும் மொழிகளும் ஒத்த உரிமையுடனும், ஒத்த உறவுனும் வாழும் நிலை'என்ற புதிய-உரிய பொருளே நிலவும்.

'தேசியமொழி' என்ற பெயரில் ஒரு மொழி வைத்து உலகாளும் பேராசை இருக்காது.

ஐம்பத்தொன்பது மொழிகளில் உயர்தரக் கல்வி கற்பிக்கும் ருசியா போலவும், மூன்று மொழிகளில் அரசியல் நடத்தும் 'ஸ்விட்சர்லாந்து' போலவும் எதிர்காலத் தென்னகத்தில் தேசிய மொழிகள் வளம்பெற்று வாழும்.

'ஒருமைப்பாடு' என்ற பெயரில் இருவேறு துருவங்களைப் போன்ற வேறுபட்ட கலாசார வேற்றுமைகளை வலிந்துஒன்றாக்கும் பயனற்ற முயற்சிகள் எதிர்காலத் தென்னகத்தில் நடைபெறுவாம். ஆனால், கலாசார அடிப்படையிலும் மொழி அடிப்படையிலும் சில இனங்களுக்குள் வரலாற்று ஆதாரங்களுடன் ஒன்றுபடும் வாய்ப்பும் மனநிலையும் கிடைக்கப்பெறின் அவை வளர்வதற்கேற்ற இயற்கைச் சூழ்நிலையைத் தென்னகம் காணும். அப்போது தென்னகத்தில் வளர்ச்சியடைந்த புதிய தேசிய உணர்வு எழும். எழுந்த அந்நிலையில் தேசியம் என்ற பெயரில் வடபுலத்தில் வாழ்ந்தோர் வல்லாதிக்க ஆட்சி நிறுவ முயன்றமை பழங்கதையாகி தென்னக மொழி இனத்தோர் தம் தாய்மொழி வழி, உரிமையால் வேறுபட்டு, கலை, பண்பாட்டு மொழிவழி உறவினுல் ஒருமைப்பாட்டைக் கண்டு வாழும் உயர் நிலை நிலவும். ஆம்! அந்தப் பொற்காலத்தில் உரிமையைப் பாதிக்காத உறவும்,உறவைப் பாதிக்காத உரிமையும் கைகோர்த்துவாழும்.

அந்நிலையில் தமிழ்ப் புலவன் கணியன் பூங்குன்றனாரின், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பாடல்வரி உண்மையில் பரந்த மனப்பான்மையை வளர்க்கும் இனிய தொடராக ஒலிக்கும். அப்பொழுது அப்புலவனின் கனவு, உரிமையைப்பறிகொடுத்த தேசிய உணர்வாக இல்லாமல் உரிமை போற்றி, அனைத்துலக தேசிய உணர்வுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காகவிளங்கும். அப்பொழுது உலகின் ஒரு சிறு மூலையில் இருந்துகொண்டு தமது பாடல்களில் உலகு, உலகு என்று உலகத்தைத் தமிழ்ப் புலவர்கள் அழைத்த காரணத்தை எல்லோரும் அறிந்து பாராட்டுவர்.

[3-ம் பக்கம் பார்க்க]


## பகுத்தறிவு.

(திங்களிருமுறை)

**புதிய நாணய விகிதத்தில்:**

**உள் நாடு:**

| | |
|---|---|
| ஆண்டு 1-க்கு | 3-50 |
| 6 மாதங்களுக்கு | 2-00 |

தனிப்படி 12 காசுகள்

சிலோனில் 15 சதம்

**பகுத்தறிவு அலுவலகம்**

**சேலம்-1.**

Regd No. M. 5721. PAKUTHARIVU. 15—9—57

விமர்சனம்.

## நீலமலைத் திருடன்.

கதையம்சத்தைப் பிரதானப் படுத்தாமல், சண்டைக் காட்சிகளுக்கும், வீர தீரச் செயல்களுக்கும் முக்கியம் கொடுத்து எடுக்கப்பட்டுள்ள சமூகப் படம் "நீலமலைத் திருடன்"

கதை, வசனத்தை தோழர், ச. அய்யா (பிள்ளை) எழுதியிருக்கிருர். ஓரிரு கட்டங்களில் பண்பற்ற பெண்களுக்கு சூடு கொடுத்துள்ளார். வேறு புதியன எதுவுமில்லை. கதாநயகியை கதாநாயகன் விபத்திலிருந்து காப்பாற்றுவதன் மூலம் காதல் ஏற்படுவதாகச் சித்தரிக்கப் பட்டிருப்பது பார்த்துப் புளித்துப்போன காட்சி.

ரஞ்சன் நன்ருக நடித்திருக்கிருர் என்றுதான் கூறவேண்டும். ஏனென்ருல் தமிழ்ப்படங்களில் அவரை இதைவிட சோபிக்க வைப்பதென்பது கடினமான காரியமாகும். அஞ்சலிதேவி வழக்கம்போல் சிறப்பாக நடித்திருக்கிருர். வீரப்பா தனது வழக்கமான சில பாணிகளை மாற்றி நடிக்க முயன்றிருக்கிருர். பாராட்டத் தக்கது. எம். கே. ராதா, கண்ணம்பா, பாலையா, ஈ. வி. சரோஜா, தங்கவேலு, சகாதேவன், சின்னப்பா முதலானோர் குறையின்றி நடித்திருக்கின்றனர்.

இத்தனை பிரபல நடிகர்கள் நடித்திருந்தும் நாயும் குதிரையும் நடிக்காதிருந்தால் படம் இந்த அளவிற்குக்கூட ஓடாது. நாயும் குதிரையும் செய்யும் நன்றிமிக்க தீரச்செயல்கள் மிக நன்ருக உள்ளன.

### சலனக்கூடம்

ரீடாவின் நடனம் பரவாயில்லை. ரஞ்சனுக்காக சௌந்திரராஜன் பாடும் மருதகாசியின் "சத்தியமே லட்சியமாய்க் கொள்ளடா" என்ற ஒரு பாடல் எடுப்பாகவும் கருத்துச் செறிவுடனும் இருக்கிறது. அப் பாடலை ரஞ்சன் பாடுவதுபோல் காட்டாமல் ரஞ்சனின் வாயை மூடவைத்து பின்னணியில் பாடுவதாகக் காட்டியிருந்தால் இன்னும் நன்ருக இருந்திருக்கும். அஞ்சலிக்கும், சரோஜாவுக்கும் ஆணுடை தரித்து அவ்வளவு அவலட்சணமாகக் காட்டியிருக்க வேண்டியதில்லை.

பல குறைகளுக்கு டைரக்டர் எம். ஏ. திருமுகம் நிறைய இடமளித்திருக்கிருர். கே. வி. மகாதேவனின் இசையமைப்பு சுமார். மொத்தத்தில் படம் வெற்றிபெறவில்லை. வாயில்லாப் பிராணிகளான நாயும் குதிரையும் நடித்திருக்கிறது என்பதற்காக ஒரு முறை பார்த்து வைக்கலாம்.

—ஏ. பி. எஸ். மணி.

சேலத்தில்

### நந்திவர்மன்.

அக்டோபர் 19. 20. நாட்களில் சூரமங்கலத்தில் நடைபெறும் சேலம் மாவட்ட பஞ்சாயத்துக்களின் முதல் மாநாட்டுக் கலையரங்கில், நாட்டாண்மைக் கழகத் துவக்கப் பள்ளிக் கட்டிட நிதிக்காக 20—10—57. ஞாயிறு இரவு 10-மணிக்கு, ஸ்ரீ தேவி நாடக சபாவினர், ஆசிரியர், ப. கண்ணன் அவர்களின் "நந்திவர்மன் நாடகத்தை நடத்துவார்கள். அமைச்சர் லூர்து சைமன் அம்மையார் தலைமை தாங்குவார்கள். டாக்டர், மா. இராசமாணிக்கனுர் நாடக சபாவின் அதிபர் திரு. கே என். இரத்தினம் அவர்களுக்கு பட்டமளித்துச் சிறப்பிப்பார்கள்.

சேலம் மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர்கள் சங்கத் தலைவரும், மாநாட்டின் வரவேற்புத் தலைவரும், தமிழறிஞருமான சேலம் டாக்டர், முத்து. நமசிவாயம் அவர்கள் இச் செய்தியினை அறிவிக்கின்ருர்கள்.

### பாண்டிய மகுடம்.

"வீரவாலி" "அரக்கு மாளிகை" ஆகிய நாடகங்களை வெற்றிகரமாக நடத்திக் காட்டிய இடைப்பாடி வள்ளுவர் கலா மன்றத்தினர், புதிய நாடகமொன்றை அரங்கேற்ற முனைந்துள்ளனர். ஆசிரியர், ப. கண்ணன் அவர்கள் வரைந்துள்ள, பாண்டியப் பேரரசின் வீழ்ச்சியினைச் சித்திரிக்கும், "பாண்டிய மகுடம்" என்ற வரலாற்று நாடகத்தைப் பயிலத் தொடங்கியுள்ளனர். பொங்கல் புதுநாளிலே இதனை அரங்கேற்றுவார்களாம்.

**முகவரி மாற்றம்.**

"மன்றம்" அலுவலகமும் எனது குடியிருப்பும் கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளன. என்னேடும், 'மன்றம்' அலுவலகத்தோடும் தொடர்பு கொள்பவர்கள் இனி புதிய முகவரிக்கே தொடர்பு கொள்ளவும்.

இரா. நெடுஞ்செழியன்,
"மன்றம்" 93, பிராட்வே,
சென்னை-1.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப கண்ணனுல் அச்சிடப்பட்டு;
சேலம்-1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

திங்கள் இருமுறை. ஆசிரியர் :- ப. கண்ணன்.

மலர் 7 | 1-11-57 | விலை 0-2-0 | இதழ் 15

16 NOV 1957 MADRAS

## பெரியார் பேசுகிருர்!



"திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு நீங்கள் ஆதரவு அளிப்பீர்களா?" இவ்வாறு பெரியாரிடம் கேள்வி கேட்கப்பட்டது. அவர் கூறினுர்: அந்தப் போராட்டம் பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். வரவேற்கவும் செய்கிறேன். அந்த வேலையும் நாங்கள் செய்யவேண்டிய வேலைதான். ஆனல், இப்பொழுது சாதி ஒழிப்பு வேலையைத்தான் மிக முக்கியமாகக் கொண்டிருக்கிரேம். ஆகவே, தயவு செய்து இந்தி எதிர்ப்பு வேலையை அவர்கள் பார்க்கட்டும்; அதற்காக அவர்கள் செய்வதைச் செய்யட்டும். அவர்கள் தோற்றுப் போவார்கள் என்று நாங்கள் நினைக்கவில்லை. எங்களால் முடிந்தவரை அவர்களுக்கு ஆதரவு அளிப்போம்

—21-10-57 திருச்சி பொதுக்கூட்டத்தில் பெரியார் ஈ.வே.ரா. பேசியது. 25-10-57 "தமிழ் நாடு" தந்தது.

# பேசுகின்ற மிருகம் - பேசாத கடவுள்!

மரம் பேசுகிறது என்றேன் நான், நண்பன் நகைத்தான், நாம் பேசுவது கிடையாது என்கிறது கொடி; மீண்டும் நகைப்புக்கு இடமாயிற்று. கடவுள் உண்டு என்றேன். சந்தேகத்திற்கு இடமில்லை என்ருன். இதனையே நான் மரம், செடி, கொடி, முதலியன பேசுகின்றன: கால்நடைப் பிராணிகளும் உரையாடல் நிகழ்த்துகின்றன என்று கூறினுல் நகைப்பிற்கு இடமேது என்று வினவினேன். அவைகள். பேசுவதனைக் கேட்டாயோ என்று சிரித்தான். ஆம்: நீ கடவுளைப் பார்த்துக் கைலாயத்திற்கு வழியனுப்பியபோது என்றேன். திகைத்துப் பின் பேசினுன். "கடவுளைப் பழியாதே கண் அவிந்து விடும்" என்ருன்.

கடவுளை நீ கண்டாயா என்றவுடன் அவதாரமெடுத்து அழித்து விட இரணியன் — பிரகலாதன் காலமல்ல இது; இருபதாம் நூற்றுண்டு. மனிதன் பறக்கும் காலம்: செயற்கைச் சந்திரனைத் தோற்றுவித்துகுழந்தைகட்கு விளையாட்டு காட்டப் புகும் காலம் மழை பெய்யுங் காலமல்ல; வானேக்கி நிற்பதற்கு பெய்விக்கும் காலமாகும். மாயனுர் குயவன் செய்த மட்பாண்டமாகிய இம் மனித உடலையே — உறுப்புக்களையே விஞ்ஞான ஏற்றத்தால் மாற்றி அமைக்கும் காலமடா; நான் கூறுவதனைக் குறித்து நகைக்கின்ருயே; இதனைக் கேள் எனத் தொடர்ந்தேன்.

* * *

பசு ஒன்று தன் மடியிடத்துச் சுரந்த பாலினைத் தன் கன்று உண்ண வேண்டும் என நினைக்கிறது. 'மா'....எனக் கூவுகிறது. கன்று ஒடோடியும் வருகிறது: பாலினைக் குடித்துப் பசியினைத் தணித்துக் கொள்கிறது. பசு கூப்பிட்டிராவிடின் கன்று ஓடி வந்திராது.

ஆடு ஒன்று தனிமையாகத்தன் குட்டியினை ஓரிடத்தே விட்டு மேய்கிறது. பசுமையான இடத்தினைக் கண்டவுடன் பே...என்று அழைக்கிறது. குட்டியோ துள்ளியோடித் தன் தாயுடன் சேர்ந்து கொள்கிறது. ஆடு கூப்பிட்டிராவிடின், குட்டி தன் தாய் அழைக்கிருள் என்று தெரிந்திராவிடின் அவ்விடம் ஓடிவரத் தேவையில்லை. காக்கை இனங்களின் தன்மையும் அவ்வாறேயாம். இவைகள் முதல் எழுத்தாகிய 'மா'...'பே' 'கா' என்ற எழுத்துக்களை அழுத்தந் திருத்தமாக உச்சரிப்பதாற்ருன் இவ்விடத்து விளக்கவும் ஏதுவாயுள்ளது. நாம் 'ஹே' என்று ஒரு மாட்டினை அதட்டுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அம்மாடு அந்த முதல் எழுத்தாகிய 'ஹே' என்பதனை அந்த வர்க்கத்தின், மொழியின் பொருள்படி புரிந்துகொண்டு நம்மின் விருப்பத்திற்கிசைந்தவாறு நிற்பதையோ, அன்றி செல்வதையோ காணலாம்.

**க. சி சுப்ரமணியன்.**

ஆகவே மனிதன் ஓரெழுத்து இராக மொழியினிலே பிராணிகட்குக் கட்டளையிட்டாலுகில் அவைகள் புரிந்துகொண்டு விடுகின்றன. ஆனுல் பேசுவதனைப் புரிந்து கொள்வதில்லை. இதனுல் நாம் பேசுவது கிடையாது என்று அவைகள் கருதுகின்றன. பசு ஒன்று தன் கன்றினை அழைப்பதை நாம் புரிந்து கொள்ளுகிறோம்; அவைகள் பேசுவதனை நாம் புரிந்து கொள்வதில்லை.

காதலன் ஒருவன் தன் காதலியிடத்துப் புணர்ச்சியின்பத்திற்கு முன்னர் மகிழ்ச்சிக்குறிய வார்த்தைகளை இரகசியமான மொழிகளில் பரிமாறிக் கொள்கிருன். இதனை ஒப்ப, காளை ஒன்று தன் பசுவிடத்து அவ்வின்பம் அடையுமுன் நோக்கின் தன் வாயினைப் பசுவின் வாயிடத்துக் கொண்டு சென்று சிறிது நேரம் வைத்திருப்பதனையும், அச்சமயம் ஒலி ஏற்படுவதனையும் காணலாம். இதற்கும், மனித இனத்திற்கும் வித்தியாசம் இருப்பதாகத் தோன்றவில்லை!

மனிதன் பேசுகின்ருன். பகுத்து அறியும் அறிவுடையவன் எனும் இவ்வுலகினையே நோக்குவோம். பிரான்சு நாட்டு மனிதனுக்கு பெர்ஷிய நாட்டு மொழி தெரியாது. இந்தோ சீன நாட்டு மனிதனுக்கு இந்திய நாட்டு மொழித் தெரிய நியாயமில்லை. இதனுல் பிரான்சு நாட்டவன் பெர்ஷியனுக்குப் பேசத் தெரியாது என்றே, இந்தோ சீனவன் இந்தியனுக்குப் பேச வராது என்றே சொல்லிவிட முடியுமா? ஆகவே மனிதர்களாகிய நாமும் பிராணிகள் பேசுவது கிடையாது என்று கூறிட முடியாது.

"சாலமனும் எறும்புகளும்" என்னும் ஆங்கிலக் கவிதை ஒன்றினை ஆராய்வோமாயின்; அதில் சாலமன் என்னும் அரசன் குதிரையின் மீது வருவதனைக் குறித்து எறும்புகள் பயந்து, வரும் அரசனுல் நேரும் ஆபத்தினைக் குறித்துப் பேசியதாகவும்; அதனை அறிந்து அரசன் உயிர்கட்கு ஆபத்து விளைவிக்கா வண்ணம் ஒதுங்கித் தன் குதிரையினைச் செலுத்திச் சென்ருன் என்றும் அறியலாம். இது கற்பனைக் கவிதையாகத் தோன்றினுலும் மேற்கூறிய வற்றுடன் ஒப்பிட்டு நோக்குவோமாயின் நம் பத் தகுந்த ஒன்ருகக் கருத இடமிருக்கிறது.

(11-ம் பக்கம் பார்க்க)



# எதிரொலி



தமிழ் மொழியைப்போல் இனிமையான மொழி வேறு எதுவுமில்லை

—சுனிதிகுமார் சட்டர்ஜி.

ஐயோ! எங்கள் ஆண்டவன்மார்களுக்கே இதுபுரியவில்லையே! சம்ஸ்கிருதத்தையல்லவோ சப்புகின்றனா!

* * *

கப்பல் தளம் கட்டுவது பற்றி ஆலோசனை கூறும பிரிட்டன் நிபுணர் குழு அடுத்த மாதம் இந்தியா வருகிறது

—செய்தி.

கப்பல் கட்டும் தளமோ, துறைமுகங்களோ ஏராளமாக அமைய வேண்டிய இடம் திராவிடம்தான்! நிபுணர்கள் இப்பக்கம் வருவரோ? வந்தாலும் ஆளவந்தாரிடம் கருத்தினைக் கூறுவரோ? கூறினும் ஏற்பரோ ஏகாதிபத்திய வெறியா?

* * *

டாடா இரும்புக்கம்பெனிக்கு அமெரிக்க கடன! ரூபா 16 கோடி கிடைக்கும்.

—செய்தி.

காங்கிரஸ் அரசின் அன்பு, ஆதரவு, கடாட்சம் எல்லாமே கம்பெனிக்குஏறகனவே கிடைத்து விட்டனவ! பிறகேன் கடன கிடைக்காது?

* * *

மொழிப் பிரச்சினை, சாதி வேற்றுமை போன்ற அற்பப் பூசல்களில் மக்கள் சக்தியை விரயமாக்கல் கூடாது.

—ஜவகர்லால்நேரு.

சாதிக்கு ஓட்டுப்போடு, இந்தியைப் படி என்று வறபுறுத்துகினற அற்பர்கள்; அயோககியர்கள் மனம் மாறவேண்டுமே!

* * *

ஓட்டல்களில் சாதிப் பெயர் குறிக்கும் பலகை வேண்டாம. லைசென்சு கொடுக்கபபட மாட்டாது. கேரள சர்க்கார் அறிவிப்பு.

—செய்தி.

பலே! சாதி ஒழித்து சமதர்மப் பாதையில் நடைபோடுவதாகச் சொல்லும் காங்கிரஸ் காமராச நாடார் சர்க்கார், இதைக்கூடச் செய்யவில்லையே!


## இனிய தென்றல்

வெளியீடுகள்.

**ப. கண்ணன்.**

| | |
|---|---|
| புரட்சிப் பாடகன் | 1-50 |
| வீரவாலி | 1-25 |
| ஜமீன்தார் | 1-00 |
| காதல் மணம் | 0-50 |
| கன்னியின் சபதம் | 0-50 |
| சிந்தனைச் சித்திரம் | 0-62 |
| மின்னெளி | 0-37 |

**மு. கருணுநிதி.**

| | |
|---|---|
| ஒரே முத்தம் | 1-25 |

**சி. பி. சிற்றரசு.**

| | |
|---|---|
| சிந்தனைச் சுடர் | 0-31 |

**அறிஞர் இங்கர்சால்**

தமிழில்: இரா.நெடுஞ்செழியன்

| | |
|---|---|
| சமுதாய விடுதலை | 0-75 |

**பாவலர், வேலாயுதசாமி.**

திருக்குறள் இசைப்பாடல்கள்

| | |
|---|---|
| அறத்துப்பால் | 0-44 |
| அறிவுத் துளிர் | 0-19 |

**குஞ்சிதம்—வடிவேலு.**

| | |
|---|---|
| கெட்டிக்காரன் | 0-16 |
| பைங்கிளி | 0-12 |
| ஆலமரத்துப்பேய் | 0-12 |
| வால்முளைத்த சாமியார் | 0-12 |
| அன்புமணி | 0-12 |

விற்பனையாளர்களுக்கு ஏற்ற கழிவு உண்டு.

**தென்றல்**

**நூற்பதிப்புக் கழகம்,**

சலகண்டபுரம். சேலம் மாவட்டம்

தென்றல் நூல்கள் சென்னையில் கிடைக்குமிடம் :

**பாரி நிலையம்,**

**59, பிராட்வே, சென்னை.**

தென்றல் நூல்கள் இலங்கையில் கிடைக்குமிடம் :

**ப. சுப்ரமணியம்,**

பகுத்தறிவுப் பண்ணை,

**113, கடல் தெரு, கொழும்பு.**


[11-ம் பக்கம் தொடர்ச்சி]

*அதனை இயக்குவித்திருக்குமல்லவா? இவ்விதம் ஒன்றை ஒன்று தாவி நிற்கும் செயலினை ஆராய்வோமாயின் அதற்கு முடிவேயில்லை எனலாம். அதற்காகவே அறிஞர் பெர்னர்ட்ஷா "கடவுள் உண்டு என்பவன் முட்டாள்; இல்லை என்பவன் அறிவற்றவன்" என்று கூறித் தீர்ப்பினை அளிக்க நம்மிடம் விட்டு விட்டார்.*

*ஒன்றை ஒன்று தாவி நிற்கும் செயலினை முன்பு கூறினேம்; தாவிநிற்றல் என்பதன் பொருள் தான் என்னை என்று நோக்குவோமாயின், தன்னைத்தானே இயக்கிக் கொள்ளும் சக்தி அற்றமையாகும். அங்ஙனம் இயக்கிக் கொள்ளும் சக்தி மட்டும் இருந்தால் ஒவ்வோர் உயிரும் ஒவ்வோர் உலகினைப் படைத்துவிடும்.*

*அப்படிச் சகதி,பின உயிருக்கு எவ்விதம் கிடைக்கிறது? உணவு வகைகளாற்ருன் உயிர்கள் இயங்குகின்றன என்பதனை எவரும் மறுக்க முடியாது. இந்த உணவு வகைகள் தாவரங்களானும், பிற உயிருள்ள பிராணிகளானும் கிடைக்கிறது என்பதனையும் எதிர்க்க முடியாது. ஆகவே ஓர் உயிர் உலகில் நிலவ, பிற உயிர்களின் உதவியும் அவைகளினின்று ஏற்படும் மறைமுக சக்தியும் தேவைப்படுகிறது: இந்தச் சக்தியையே இயற்கை எனக் கூறுகிறோம். இதனைப் பேசுகின்ற கடவுள் என்று கூறி உலகை ஏமாற்றுதல் கூடாது என்று சொல்லி முடித்து, குனிந்து காலடியில் கிடந்த "பகுத்தறிவு" இதழை எடுத்துக்கொண்டு நிமிர்ந்து பார்த்தேன். நண்பன் வேகமாகப் போய்க் கொண்டிருந்தான். அவன் திருந்தினுனே, வருந்தினுனே நானறியேன். என் காரியாலயத்தை நோக்கி நான் புறப்பட்டேன்.*

★○★

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு
> —திருவள்ளுவர்

## இதயம்

மலர் 7 | சேலம் 1—11—57 | இதழ் 15

# ஏக இந்தியப் பேயே!

—:.:—

"**வா**னொலியின் புதிய இந்திப் படையெடுப்பான "விவித பாரதி" நிகழ்ச்சியானது, தென்னாட்டின்மேல் வலுவந்தமாக இந்தியைத் திணிக்கும் மற்றொரு ஏற்பாடு. அதலே [illegible] தமிழகத்திலே அமைத்துள்ள புதிய சக்திவாய்ந்த ஒலிபரப்பு சாதனத்தை தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய நான்கு மொழிகளின் நிகழ்ச்சிகளுக்கும், தூரக்கிழக்கு நாடுகளிலும், இலங்கையிலும் வாழும் தமிழர்களுக்கும் பயன்படுத்துக" என்று இந்திய அரசினரை வேண்டினர், நமது பொதுச்செயலாளர் நாவலர்—நெடுஞ்செழியன் அவர்கள்.

அந்தப் புகாருக்கும் — திட்டத்திற்கும் விடையிறுக்கின்ற முறையில், இந்திய அரசாங்கச் செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. கேசுகர் கூறியுள்ளார்: "சென்னையிலே புதிதாக நிறுவப்பட்டுள்ள சக்திவாய்ந்த ஒலிபரப்புச் சாதனம், தமிழகத்து மக்களுக்கு தமிழ் நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்காக ஏற்படுத்தவில்லை. சென்னையில் கிடைக்கும் வசதிகளுக்காகவும், தொழில் நுணுக்கக் காரணங்களுக்காகவுமே நிறுவினோம்." என்று.

"ஏக இந்தியா" என்ற அடிப்படையின்மேல் வடவர்கள் பெற்றிருக்கும் அதிகாரக் கருவமும், ஆணவப் போக்குமே இதிலே வெளிப்படுகின்றன!

"அகில இந்தியா"வின் மீதும் தாம் கொண்டிருக்கும் ஆட்சியுரிமையை நிரந்தரமாக்கிக் கொள்ளவே தகுதியற்ற இந்தி மொழிக்கு மிகுதியான அரசாங்க மதிப்பு தந்து, எங்கும் பரப்பப்படுகின்றது. ஆங்கிலேயன் மொழியாதிக்கத்தின்மூலம்இந்தியரை அடிமைகளாக்கியது போல் இந்திக்காரனும் ஆக்கிட முனைந்து விட்டான்! மக்கள் சிறிது அரசியலறிவு பெற்றிருக்கிற காரணத்தால் நேர்முகமாகவின்றி, மறைமுகமாக இந்திச்சுமை மககள்மீது சுமத்தப்படுகிறது! மாற்றுமொழி – மாற்று நாகரிகம்—மாற்றார் உரிமை அழிக்கப்படுகின்றது!

நேரிய வழி நடந்த வீரவாலியை ஆரிய ராமன் கொன்றான், மரத்தின் மறைவிலிருந்து! இதிகாச ராமாயணம் காட்டுகின்ற அவ்வழியினையே இந்திய அரசாங்கம் கடைப்பிடிக்கின்றது. மறைமுகமோ,நேர்முகமோ எப்படிக் கொன்றாலும் கொலை, கொலையே யன்றோ?

இந்திபரப்பு மறைமுக பலாத்கார கற்பழிப்பு கொலை முயற்சி நாடகங்கள் பலவற்றிலே இந்த "விவித பாரதி" ஒன்று என்ற குற்றச்சாட்டிற்கு டெல்லி அமைச்சரின் பதில் எங்கே? "சென்னையில் அமைத்துள்ள புதிய கருவி சென்னைக்கல்ல;திராவிட மக்களுக்கல்ல!" என்று கூறிவிட்டால் பிரச்சினை தீர்ந்திடுமோ? பெருமை கிட்டிடுமோ தமிழகத்திற்கு?

"தென்கிழக்கு ஆசியா, மலேயா சிங்கப்பூர் வாழ் தமிழர்களுக்கு ஒலிபரப்பும் முக்கிய பணிக்கும் புதிய ஒலிபரப்புக் கருவி பயன்பட இருக்கிறது" என்கிறா அமைச்சர். எப்படி நம்புவது இதனை? "இந்தி மொழிக் கட்டாயமில்லை." என்று சொல்லிக்கொண்டே கட்டாயப்படுத்தும் விசித்திர வேலையிலே தேர்ந்தவர்களாயிற்றே இந்த தீரர்கள்!

**விவித பாரதி – இந்திக் கதம்ப நிகழ்ச்சி** ஜனரஞ்சக சங்கீத நாடக துக்கடாக்களுக்கு என்றே தொடங்கப்பட்டதாம்! ஜரோகா, ஜங்கார், மதுவன், தார்:.கார்,கஜரா, மன்-தூ:.கே கீத் என்ற வேடிக்கையான தலைப்புகளிலே மணமற்ற இந்திக் கதம்பப் பூவை "ஏக இந்திய ரீதி"யில் எம்மொழி பேசுவோரின் தலையிலும் சுற்றுகிற சூழ்ச்சியே இந்த விவித பாரதி சினிமா இசைத் தட்டுகளுக்காக வானொலி ரசிகர்கள் சிலோன் நிலையத்தை நாடுவதுபோல், துக்கடாக்களுக்காக விவித பாரதியை நாட வேண்டும் என்பது இந்தி வெறியரின் விருப்பம்.

இதற்கு மற்றொரு சான்று: நவம்பர் 3-ம் நாளிலிருந்து எல்லா நிலையங்களிலும் ஒலிபரப்பு நேரத்தில் 30நிமிடங்கள்குறைக்கப்படுகின்றன.மதராஸ்-1 மதராஸ்-2, மூன்றாவது ஒலிபரப்பு, மாலை-5-10 க்கு பதில் 5-30-க்கே இனித் தொடங்கும். பெங்களூர், விஜயவாடா, திருவனந்தபுரம், கோழிக்கோடு நிலையங்களிலும் மாற்றங்கள்! பிரதேச மொழி நிலையங்களில் பிரதேச மொழி நிகழ்ச்சிகளின் நேரத்தைக் குறைப்பதன் அந்தரங்க நோக்கம் என்ன? அவற்றை வளர்க்கவா? ஏக இந்தியப் பேயே! இந்தியை நீ பரப்ப இன்னும் என்னென்ன செய்வாயோ!

—ப. கண்ணன்.






கோபு

முன் இதழ் தொடர்ச்சி

***சீதை:-*** எல்லாந் தெரியுமே நேக்கு. நல்லா சமைச்சா அண்ணேபோராலே அமுக்கலாம்னு பாக்கறே! அண்ணவாவது இந்தக் கந்த மூலாதிகளைச் சாப்பிட வர்றதாவது! எங்கேயாவது பெரிய வேட்டையல்ல புடிச்சிருப்பாரு!

***இலக்:-*** அண்ணி! நானும் அண்ணாவும் சோத்துமுக்கிங்க அப்டீன்னு சொல்லாமெ சொல்லிட்டே! எங்கமேலே ஏமன்னி இவ்வளவு கோபம்? நாம்ப அயோத்தியாவுக்குத் திரும்ப மாட்டோம்; அரசாட்சி புரியவே மாட்டோம்னு முடிவு கட்டிட்டியா?

***சீதை:-*** தெரியுதே நீங்க திரும்பவும் ராஜ்யம் ஆளப்போற லட்சணம்! திராவிடாளோட சண்டை சச்சரவு, வம்படி வழக்கு வேண்டாண்ணு சொன்னேன்; காதிலியே போட்டுக்கலியே ஒங்கண்ணவும் நீயும்! இப்படி எங்கிட்டேயும் சொல்லாமெ எங்கேதான், எதுக்குத்தான் போகணும், அவர்?

***இலக்:-*** ஏங்கிட்டேயும் சொல்லலியே! அவுரு இஷ்டத்துக்கு நடக்காமெ, நீ சிடுமூஞ்சித் தனமா கடிஞ்சுபேசி, அதனலே கோவிச்சுகிட்டுப் போயிட்டாரோ என்னமோ! இருந்தாலும் ஒரு ஆம்பளேன்னு இருந்தா, அவனோட இஷ்டப்படிதான் நடக்கணும், பொம்பளே!

***சீதை:-*** ஆம்பளே! ஆம்பளேன்ன எந்த வார்த்தையும் சொல்லலாம்; எந்த அக்கிரமத்தையும் பண்ணலாங்கிறதை நான் அடியோட வெறுக்கறேன்! லட்சுமணா! நெனச்சா நேக்கு வயிறு எரியறது! வனவாசம் பொறப்படறச்சே; "சீதே! நீ என்னோட காட்டுக்கு வேணம். பாதன் சொன்னபடி கேட்டுண்டு, அவனோடே பிரியமா நடந்துண்டு, அரண்மனையிலியே இருந்துடு"ன்னு சொன்னரே ஒங்கண்ண! அதுவா நேர்மை? அதுவா ஆம்பளேத்தனம்? இதைக் கேட்டு எந்தப் பொண்ணு நடப்பா? எந்தப் பத்தினி பண்ணுவா இந்தப் பதிவாக்குப் பரிபாலனம்?

***இலக்:-*** (அலட்சியமாக) சும்மா ஏமன்னி பிரமாதப் படுத்தறே? அழகிலேயும் ரெண்டாந்தாரம்! வயசிலேயும் மூத்தவ; என்னமோ வில்லைத் தொட்ட பாவம் கையோட ஒட்டிகிட்டு வந்திட்டே! அண்ண சொன்னபடி நடந்துகிட்டிருந்தா மட்டும் என்ன முழுகிப் போயிடுமாம்!

***சீதை:-*** (சினந்து) ஆங்! சண்டாளா! நீயுமா அப்படிச் சொல்றே? ஒழுக்கங்கெட்ட பாவிகளா! நாளைகு நீயும் ஏங்கையைப் புடிச்சு இழுப்பே போலிருக்கே!

***இலக்:-*** சே! சே! கெழவி! இருந்திருந்தும் ஒன்னையா பிடிப்பேன்?

***சீதை:-*** (மனம் பொங்கி) கெழவி; கேடுகெட்டவ; சிடுமூஞ்சி; ஏங் கையாலே சமைச்சு நீ

சாப்பிடக்கூடாது. இந்தக் குடிசையிலே நீ இருக்கப்படாது போ! போ! வெளியே! போ! போயிடு!

(கீரைக் கத்தையை எடுத்து அடிக்கிருள் ஆத்திரத்தோடு "அண்ணி, அண்ணி" என்று தடுத்தவண்ணம் பின்னடைகிருன், இலக்குவன். அப்போது "நாராயண! நாராயண!" என்று சொல்லிய வண்ணம் காபாலிக முனிவர் வருகிருர்.)

**காபாலி:-** அட நாராயணு! இதென்ன வேடிக்கை! நிறுத்தம்மா சீதே! நிறுத்து. (**நிற்கிறது**) லட்சுமணு?....

**இலக்:-** மகரிஷே! வேறே ஒண்ணுமில்லே! அண்ணுமேலே உள்ள கோபத்தை, அண்ணி எம்மேலே காட்டரு! அவ்வளவுதான்!

**காபாலி:-** சீதே! புருஷன்மேலே என்னம்மா அப்படிப்பட்ட கோபம்? இராமன் என்ன தப்பு செஞ்சான்?

**சீதை:- (கத்தையைக் கீழேபோட்டு)** தப்பு! அவுரு செய்யறது எல்லாமே தப்புதான்! மகரிஷே! முன்னுலே செஞ்சதெல்லாம் இருக்கட்டும். இப்படி என்னேயும் லட்சுமணனேயும் ஒரு குடிசையிலே விட்டுட்டு சொல்லாமெ எங்கெயோ போயிட்டாரே! போகலாமா? பத்து நாளேக்கு மேலாச்சே; எங்களோட கதி என்னுச்சுன்னு யாரு கேக்கறது இந்தக் காட்டிலே?

**காபாலி:-** இதோ, நான் வந்திருக்கேனே! சீதை! அந்தக்கவலே நோக்கு வேணும். நாங்க எங்கே இருந்தாலும் எங்களோட தபோவலிமை பாதுகாப்பா ஒங்க குடிசையைச் சுத்திண்டே இருக்கும். ஒருகேடும் சம்பவிக்காது. நீங்க சந்தோஷமா இருக்கலாம்!

**சீதை:-** என்ன? எம் புருஷன் இல்லாமெ லேயா?

**காபாலி:-** இராமன் அவதார புருஷன்! அவன் எங்குமிருப்பான்! அவன் நோக்குப் புருஷனு வாய்ச்சது இருக்கே; பூர்வஜன்ம புண்ணிய பலன்! சீதே! கவலேப்படாதே! இராமன் ஒரு முக்கிய காரியார்த்தமாகத்தான் போயிருப்பன். சீக்கிரம் வந்துடுவன். நீ சமையல் வேலேயைப்பாரு! மத்ததையெல்லாம் நாங்க பாத்துக்கரேும். நீ போம்மா!

**இலக்:-** இதைத்தான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன்.

**காபாலி:-** லட்சுமணு! நீ பால்யன்; நான் விருத்தாப்பியன்; விஷயம் ஒண்ணுன்னுலும் அது நாஞ்சொனு ஒரு மாதிரியாத்தான் படும்; நீ சொன்னு ஒரு மாதிரியாத்தான் படும்! வா! வா! சீதை சமைச்சு வைக்கட்டும். நாம் போயி ஸ்னுனபானுதிகளே முடிச்சிண்டு வருவோம்.

**இலக்:-** நல்லது மகரிஷே!

(இருவரும் வெளியே செல்லுகின்றனர். சீதை சமையலே கவனிக்கிருள்.)

## காட்சி 19.

**இடம்: இலங்கை அரண்மனே.**

**காலம்: மாலே.**

(இராவணச் சக்கரவர்த்தி வீணேமிழற்றி, அற்புதமான இலட்சியப் பாடல் ஒன்றைப் பாடுகிருர். அருகே விபீஷணன் வீற்றிருக்கிருன்.

பாட்டின் கருத்து: **வீரத்தை**—அருளறத்தைப் போற்றியும், நரித் தந்திரத்தை — ஆரிய நெறியைத் தாக்கியும் இருக்கின்றது. பாட்டு முடிகின்றது.)

**விபீஷ:- (மெய்மறந்து)** ஆ.:கா! நான் பாக்கியவான்! தென்னகத்தின் இசைக்கலேயைத் தேமதுரக் கனியாக்கிச் சுவைக்கவைத்த தன்னிகரற்ற தார்வேந்தரை அண்ணனுகப்பெற்ற நானே பாக்கியவான்! நானே பாக்கியவான்! பல்லுயிரும் களிக்கச் செய்யும் பண்பான இசைக்கலேயின் நல்லுயிரை வாழவைக்க இராவணீயம் இயற்றித்தந்த ஈடற்ற பெரும் புலவர் என் அண்ணன்! வானுயரப் பறக்கும் கொடியினிலே வீணேச் சின்னம் பொறித்து, அருளறம் சிறக்கப் புவியாளும் ஆண்டகை என் அண்ணன்! என் அண்ணன்! ஆ.:கா! நான் எத்தகைய பாக்கியவான்! எத்தகைய பாக்கியவான்!

**இராவ:-** தம்பி விபீஷணு! இன்றென்ன இவ்வளவு மகிழ்ச்சி? என்றும் இல்லாதவாறு இசையின்பம் நுகரத் தொடங்கிவிட்டாயே! இசைபாடிப் பசுவை மகிழ்விக்கலாம்; பாம்பை



ஆட்டலாம்; யானேயையும் அடிபணிய வைக்கலாம்; என் தம்பி விபீஷணனின் இதயத்தை மட்டும் தொடமுடியாது என்றல்லவா எண்ணியிருந்தேன். புதுமை! புதுமைதான் நான் கண்டேன்!

**விபீஷ:-** அண்ணு! நான் இசைக் கலேயின் பெருமை உணராதவனன்று. நுணுக்கமறிந்து நுகரும் தன்மை வாய்க்கவில்லே! அதனுலென்ன? இப்பொழுது நான் மெய்மறந்து பாராட்டியது, பாட்டுச் சுவையிலே சொக்கிப் போயன்று! பாட்டுக் கலேக்குத் தாங்கள் ஆற்றியுள்ள நிகரற்ற பெரும்பணி கருதினேன்; நெஞ்சம் உருகினேன்!

(எழுந்து வருகிருர் இராவணன், விபீஷணனும் எழுகின்ருன்.)

**இராவ:- (வியந்து)** விபீஷணு! இப்பொழுதும் கூட பாட்டின் இன்னிசையும், கருத்தும் உன் இதயத்தைத் தொடவில்லேயா?

**விபீஷ:-** இல்லேயண்ணு! வெளிப்படையாகச் சொல்லப்போனுல், பாட்டின் கருத்து எனக்குப் பிடிக்கவேயில்லே!

**இராவ:-** பிடிக்கவில்லேயா? ஏன்? கருத்திலே என்னப்பா களங்கம்?

**விபீஷ:-** என்னிடமா? அணுவளவும் இல்லேயண்ணு! நான் களங்கமற்றவன்! பாட்டின் கருத்திலே எனக்குச் சிறு வேற்றுமை!

**இராவ:-** அது என்ன சிறுவேற்றுமை?

**விபீஷ:-** அருளறமும், ஆண்மையும் நமக்கு வேண்டியவைதான். அதற்காக தந்திரத்தையும் ஆரிய தருமத்தையும் பழிக்கவேண்டாமே! தந்திரம் பலவகைப்பட்டது. அதிலே இராசதந்திரமும் ஒன்று. ஆட்சிபுரியும் நமக்கு அது தேவைதானே? ஆரிய தருமம் குறைபாடுடையதே என்ருலும் ஆண்டவனேயடைகின்ற பக்தி மார்க்கம் அதிலே ஒரு விசேடமாயிற்றே!

**இராவ:-** தம்பி! கருத்து வேற்றுமைக்கு மதிப்பளிக்கின்றேன்! ஆனுல், ஆதிக்கப் போட்டியை வெறுக்கின்றேன்! அன்பின் அடிப்படைமீது நிர்மாணிக்கப்பட்ட அழகு மாளிகையாம் நமது அருளறத்தை இடித்துத் தகர்த்துவிட்டு, அங்கே அறியாமைக்கால்போட்டு அதர்மக்கோட்டையெழுப்பி நம்மவரை அடிமையாக்க விரும்புகின்ற சூதுமதி படைத்த சுரண்டல் காரரை நான் பாராட்ட வேண்டுமென்ரு சொல்லுகிருய்? ஆண்டவனிடம் பக்தி வேண்டிவதுதான்; எந்த ஆண்டவனிடம்? எத்தகைய பக்தி? யார் ஆண்டவன்? ஆண்டவனது இலக்கணம் என்ன? குறுமதி படைத்தோன்; குழந்தைக்கறி கேட்போன்; கொலேபுரிய அஞ்சாதவன்; பெற்றமகளேப் புணருவோன்; நரபலி வேண்டுவோன்; யாகத்திலே ஆடுமாடுகளேத்தின்ன விழைவோன்; அன்னியப் பெண்டிர் மோகத்திலே கள், காமம், களவு, பொய், சூது, சூழ்ச்சிகளேப் பெருக்குவோன்; அவற்றைக் கலேயாக்குவோன்; காவியமாக்குவோன்; லீலா விநோதமாக்குவோன்! இவர்க்ள்தானே ஆரியர்களின் ஆண்டவர்கள்? இவர்களிடம் பக்தி செய்து பெறுகின்ற முக்தி எப்படியிருக்கும்? இவர்களுக்காகப் புரிந்து பேசுவோரின் புத்திதான் எப்படிப்பட்டது?

**விபீஷ:-** மன்னிக்க வேண்டும் அண்ணு! பரிந்து பேசவில்லேயே! ஆரியதருமம் குறைபாடுடையது என்றுதானே நானும்கூறினேன்?

**இராவ:-** ஆடை கிழிந்தது; அழுக்கு மிகுந்தது; உடுத்தினுல் உடற் சுகத்தை கெடுக்க வல்லது என்பது தெரியும். தெரிந்தும் அதனே விரும்புகிருய் நீ, மயங்கவைக்கும் என்பதறிந்தும் மதுவைக் குடிப்பவன்போல்!

**விபீஷ:-** இல்லே அண்ணு! அணுவளவும் அதனே நான் விரும்பவில்லே. ஆரிய துவேஷம் கூடாதென்றே கூறினேன்!

**இராவ:- (சிரித்து)** விபீஷணு! இன்னமும் நீ நீ தெளிவுபெற வில்லேயடா! ஏதேதோ பகருகின்ருய்! எட்டிக்காய் கசக்கும் என்போர் எட்டித் துவேஷிகள்! நஞ்சுண்டார் மாண்டிடுவார் என்பவர்கள் நஞ்சுத் துவேஷிகள்! ஆரிய தர்மம் அடிமையாக்குவது--ஆதிக்கவெறி கொண்டது என்போர் ஆரியத் துவேஷிகள்! இதுதானே உன் மகத்தான கருத்து?

(தலேகுனிந்து நிற்கிருன் விபீஷணன். அப்போது வாயிற்காவலன் வந்து வணங்குகிருன்.)

**வாயிற்:-** மன்னர் வாழ்க!

**இராவ:-** என்ன செய்தி?

**வாயிற்:-** விந்திய நாட்டு வீரன் ஒருவன், மகாராணியிடமிருந்து சமுகத்திற்கு ஓலே கொண்டுவந்திருக்கிருன்.

**இராவ:-** வரவிடு.

(வாயிற் காப்போன் செல்ல, வீரன் வந்து பணிந்து ஓலையைத் தருகிறான். பெற்றுப் படிக்கிறார் வேந்தர்.)

**இராவ:-** (**மகிழ்வோடு**) நன்று. கலைக்கூடம் வளருகின்றது; காமவல்லி மனச்சாந்தி பெறுகின்றாள்! தம்பி! இவற்றைவிட மகிழ்வுதரும் செய்தி நமக்கென்ன விருக்கின்றது?

**விபீஷ:-** அண்ணா! தங்கை கூடகிரியில்தானே தங்கியிருக்கிறாள்?

**இராவ:-** ஆம்! அங்கிருந்துதான் முடங்கல் விடுத்திருக்கின்றாள், அன்புக்கொரு தங்கை!

**விபீஷ:-** அண்ணா! நீங்கள் கோபித்துக் கொண்டாலும் சரி. கலைஞர்களும், பெண்களும் பலவீனர்கள்; நாடாளத் தகுதியற்றவர்கள். அன்புக்கொரு தங்கையை இப்படி ஆட்சிக்கொரு தங்கையாக்கியது மாண்புக்குரியதல்ல!

**இராவ:-** (**கடுப்பாக**) விபீஷணா! கலை ஞானம் பெண்ணின் பெருமை கண்டோரே நாடாளத் தகுதி பெற்றவர். இவ்விரண்டுமறியாத உன்னைக் காட்டிலும், தங்கை காமவல்லி பண்பு நிறைந்தவள்; பன்மடங்கு சிறந்தவள்; விந்தியத்தின் சிங்காதனத்தில் உன்னை அமர்த்தவில்லை என்பதற்காகத் தங்கையை நிந்திக்காதே! சமத்காரமாகப் பேசித் தத்துவத்தைக் குழப்பாதே! ஆமைபுகுந்த இல்லம் அழிந்துவிடாது; பொறாமை புகுந்த நெஞ்சம் வாழ்ந்துவிடாது!

**விபீஷ:-** (**அஞ்சுவதுபோல் நடித்து**) அண்ணாவுக்குக் கோபம் வந்துவிட்டது! கோபம் வந்துவிட்டது! இனி நாம் போகவேண்டியதுதான்! அண்ணா!...

**இராவ:-** போய்வாடா தம்பி! போய்வா!

(சேட்டை செய்தவண்ணம் போகிறான் விபீஷணன்.)

## காட்சி 20.

**இடம்: கலைக்கூடம்—தனிஅறை.**

**காலம்: முற்பகல்.**

(காமவல்லி வீற்றிருக்கிறாள் கம்பீரமாக. அவளைப் பார்த்தவண்ணம் சிற்பம் செதுக்குவதுபோல் பாசாங்கு செய்கிறான் சோமன். உளியையும், சுத்தியலையும் வைத்துவிட்டு அவள்முன் வந்து நின்று முகத்தைப் பார்க்கிறான்.)

**சோமன்:-** (**சாகசமாக**) உதடுகள் செம்பவளத் துண்டுகள்; மூக்கோ எள்ளின் மலர்; செவிகளோ செந்தாமரை இதழ்கள்; கன்னங்கள் கொம்பிலே பழுத்த மாம்பழம்; கண்களோ கடலிலே துள்ளுகின்ற கயல்கள்; புருவம் காமவேளின் கை வில்; பருவமோ மதன நூலுக்குப் புதியவுரை எழுதுபவர் கண்டும் கேட்டும், கொண்டும் கொடுத்தும், உண்டு உயிர்க்கும் பக்குவமான நேரம்! இவ்வளவு இருந்தும்...ஐயோ!...

**காமவ:-** ஏன்? என்ன குறை?

**சோமன்:-** மீட்டப்படாத மகர வீணை போல்; ஆட்டுவோனில்லாத அழகுப் பம்பரம் போல்; வான்முகில் காணாத மாமயில்போல் வினையற்றுப் பயனற்று ஒளியிழந்து போச்சுதே எல்லாம்! கடவுள் தந்த பொன்மேனியை இப்படியா பாங்காட்டில் வீசும் நிலவாகப் பாழாக்கறது? நினைத்தால் இதயம் குலைந்து போகிறதே நேக்கு!

**காமவ:-** எனக்கு....ஒன்றுமே புரியவில்லையே! கலையென்பது இன்பமா? துன்பமா?

**சோம:-** (**அருகில் நெருங்கி**) மகாராணி! ஒங்களுக்கு அதைப் புரியவைக்கும் தகுதியுள்ளவன் இந்தலோகத்திலே நான் ஒருத்தன்தான்! ஒங்களைப்போலவே கலாசேவை செய்பவன்; ஒங்களைப் போலவே விவாகம் செய்து கொண்டவன்; ஒங்களைப் போலவே இல்லறம் நடத்தியவன். ஒங்களைப் போலவே ஜோடியை இழந்து தவிக்கிறவன் நான்! கணவனில்லை ஒங்களுக்கு, மனைவியில்லை எனக்கு! (**அவள் கையைப் பற்றி**) சேவல் காணாத பெட்டை நீங்கள்; பெட்டை காணாத சேவல் நான்; வாழ்க்கைப் பூங்காவிலே நாம் இருவரும் கைகோர்த்துவிட்டால்.... அடடா! என்ன ஆனந்தம்....எத்தகைய பேரின்பம்....எந்த மோட்சலோக சாம்ராஜ்யம் இதற்கு ஒப்பாகும்?

(வளரும்)

அதிகப்படியாக நம்பிக்கை வைத்துவிட்டால் நாம் ஏமாந்து போகலாம்; போதுமான அளவு நம்பிக்கை கொள்ளாவிடில் நெருப்பில் நிற்பது போன்ற துன்பத்தை அனுபவிப்போம்.

—**கிரேன்.**



புதிய சுவை! புதிய உணர்வு! புதிய பீடி!

சோர்வுற்ற நேரத்தில் சுறு சுறுப்பு வேண்டிடில்



போட்டோ மார்க்கு

செந்தாமரை

பீடியைச் சுவையுங்கள்.

எல்லா ஊர்களிலும் விற்பனையாளர்கள் தேவை.

விபரங்களுக்கு

எம். பழனியப்பன்,

உரிமையாளர்:

செந்தாமரை பீடித் தொழிற்சாலை,

சலகண்டபுரம், :-: சேலம் மாவட்டம்.




"நாடகக் குரிசில்"

## கே. என். இரத்தினம்.

சேலம்-சூரமங்கலத்தில் நடைபெற்ற சேலம்மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் மாநாட்டிலே, 19-10-57 இரவு தேவி நாடக சபாவினர் "அன்னை பவானி" என்ற நாடகத்தை நடத்தினர். அத்தோடு "நந்திவர்மன்" நாடகத்தின் முக்கியகாட்சிகள் சிலவற்றை நடத்திக் காட்டினர்.

தேவியின் உரிமையாளர் கலைஞர், கே. என். இரத்தினம் அவர்களின் நாடகப் பணியினைப் பாராட்டி, டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் "நாடகக் குரிசில்" என்ற பட்டம் வழங்கினார்கள். அவர்கள் பேசுகையில்: தான் பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஆக்கிய பல்லவர் வரலாறு என்ற நூலின் முடிவுகளின்மேல் எழும்பியுள்ள "நந்திவர்"மனைக் காண மகிழ்வதாகவும், இதனைச் சமைத்தவர் நாடகச் சுவையிலே-நளபாகத்திலே வல்லவரென்றும், உடம்பிலே தமிழ் இரத்தம் ஓடும் ஒவ்வொரு தமிழனும் "நந்திவர்ம"னைப் பார்த்து ரசிக்க வேண்டுமென்றும், இதுபோன்ற வரலாற்று நாடகங்களையே இனி மக்கள் விரும்புவரென்றும், இதை அரங்கேற்றிய இரத்தினம் அவர்களைப் பெரிதும் பாராட்டுவதாகவும் குறிப்பிட்டார்கள்.

மறுநாள் 20-10-57 டாக்டர் எஸ். எம். நமசிவாயம் அவர்கள் தலைமையில் "நந்திவர்மன்" நாடகம் நடைபெற்றது. நாடக முடிவில் பள்ளிக் கட்டிட நிதிக்காக இலவசமாக நாடகம் நடத்திக் கொடுத்த கே. என். இரத்தினம் அவர்களைப் பாராட்டியும், நாடகப் பணியினைப் போற்றியும் பேசிய தலைவர்; ஆசிரியர், ப. கண்ணன் அவர்கட்கு மாலையணிவித்துப் பாராட்டினார். ஆசிரியர் நாடகம் குறித்துச் சிறிது நேரம் பேசிய பின்பு, நன்றி தெரிவித்தார். இறுதியில் நாடகக் குரிசில், கே. என். இரத்தினம் அவர்கள் நன்றி நவின்றார்.

# கேள்விக்கணை

இம்முறை பரிசு பெற்றவர்:
● செ. துரைசாமி,
ஐந்தாம் படிவம்,
உயர்நிலைப்பள்ளி,
அரூர், சேலம் மாவட்டம்.

**மா. அரங்கசாமி, கோவை.**

ப: இன்றைய மனிதனால் இயற்கையை வெல்ல முடியுமா?

*ப: வானிலே வட்டமிடும் செயற்கைச் சந்திரன் மனிதனுக்குள்ள அந்த வல்லமையைத்தானே காட்டுகிறது!*

* * *

கே: உலகிலேயே மிகவும் விசித்திரமான மனித மிருகம் யார்?

*ப: நரபலி கேட்கும் காளிக்கு நாதம் எழுப்பும் பூசாரி.*

**● செ. துரைசாமி, அரூர்.**

கே: தி. மு. க. வின் செயல்களை மைனர் விளையாட்டு என்கிறாரே பக்தவச்சலனார்; மைனர்களின் பந்தய விளையாட்டுக்கு அவர் வருவாரா?

*ப: பதவி விளையாட்டென்றால் எப்போதும் தயார்! பந்தய விளையாட்டா? சி! சி! உடம்பிலே வலுவுள்ளவன் செய்யும் காரியமல்லவோ அது!?*

**ஆர். வெங்கட்ராமன், கோவை.**

கே: இந்தியாவில் உண்மையாக சுதந்திரப் போராட்டம் நடத்தியவர் காந்தியைத் தவிர வேறு யாரேனும் உண்டா?

*கட்டபொம்மன், வேலுத்தம்பி, திப்புசுல்தான் போன்றவர்கள் நடத்திய வீரசுதந்தரப் போராட்டம், காந்தியாருக்கே கருத்துவளம் தந்திருக்குமே!*

**செ. நல்லப்பன், நாமக்கல்.**

கே; ஏ பூனையே! பாலின் நிறம், அதன் சத்து முதலியவைகளைத் தெரிந்து வைத்துக்கொள். ஆனால் அதைக் குடித்துவிடாதே என்று சொல்லுவது அறிவுக்குப் பொருந்துமா?

*ப: சுதந்திரம் குறித்து நமக்கு வடநாட்டான் செய்யும் உபதேசங்கள் அறிவுக்குப் பொருந்துமெனில், இதுவும் பொருந்தும்.*

**க. சோமசுந்தரம், சென்னை-5.**

கே:- தி. க. ஒரு சமுதாயப் புரட்சி இயக்கம்; தி. மு. க. ஒரு அரசியல் புரட்சி இயக்கம் என்று நான் கருதுகிறேன். சரியா? தப்பா?

*ப: தி. க. வின் சமுதாயப் புரட்சி சக்தியும், தி. மு. க வோடு பரிபூரணமாகக் கலந்து விட்டது என்பதே சரியானது.*

**பா. சு. மணியம், சேலம்.**

கே: சினிமாவை ஒழிப்பவர்கள்-சினிமாக் கட்சி என்று தி. மு. க. வைத் திட்டுகிறவர்கள் நடத்தும் மாநாட்டை சினிமாப்படம் எடுக்கலாமா?

*ப: எடுக்கலாமே! எடுத்து, சினிமாவை ஒழிக்கும் எங்களைப்பாரீர்; திறமை காணீர் என்று சினிமா ரசிகர்களுக்கு விளம்பரப் படுத்தலாமே சினிமா மூலமாகவே!*

**இரா. சுந்தரம், வேலூர்.**

கே: இந்திமொழி ஏகாதிபத்தியத்தை எதிர்க்கின்ற ராஜாஜி; சர். சி. பி. ராமசாமி போன்றவர்கள் தி. மு. க. மேடைக்கு வந்து பேசுவார்களா?

*ப: இந்தியினால் வரும் ஆபத்தைக் கருதும்போது இவர்களென்ன; தென்னகத்தில் வாழ விரும்பும் சங்கராச்சாரியார், ஜீயர், பாதிரிகள், முல்லாக்கள் கூட தி. மு. க. மேடைக்கு வருவார்கள்!*

# பொன்மொழிகள்

**வஞ்சகம் பொருந்திய மனத்தை உடையவனது மறைவான ஒழுக்கத்தைப் பிறர் அறியாராயினும், தம் உடம்பில் உள்ள ஐம்பூதங்களும் அறிந்து சிரிக்கும்!**

**—திருவள்ளுவர்.**

**சிந்தனை இருக்கும்வரை மனிதன் வாழ்க்கையோடு போராடுகிறான்; அவன் மூளை சிந்திப்பதை நிறுத்தும் போது தற்கொலை செய்து கொள்கிறான்.**

**—பாபுராவ்.**

**தேச விடுதலைக்காக நடத்துகின்ற போராட்டத்தின் முதற்படி, பச்சை வாதம்போல் நமது கைகளை சக்தியற்றதாகச் செய்திருக்கும் பழங் கொள்கையினின்றும் நம்மை விடுவிப்பதே யாகும்,**

**—எம். என். ராய்.**

**கடந்தகாலம் சில பாடங்களை கற்றுத் தந்திக்கிறது; வருங்காலம் நம்பிக்கையைத் தருகிறது; ஆனால், நிகழ்காலத்தின் நல்ல பொழுதை நழுவ விட்டுவிட்டால் எதிர்கால நம்பிக்கை என்றும் நிறைவேறாது.**

**—அமிர்தகௌரி.**

**கடலை யடுத்தும் இன்சுவை ஊற்றுநீர் தோன்றுகிறது. மலையை யடுத்தும் உப்புநீர் உண்டாகிறது; பகுத்தறிவுடைய மக்களென்று சிறப்பிக்கப்படுவோர் தமதுசார்போடு ஒத்த இயல்பினரல்லர்; தம் இயற்கையறிவோடு ஒத்த நிலையினராவர்.**

**—நாலடியார்.**

**விஞ்ஞானத்தின் பெயரால் உலகில் பாவிவரும் நம்பிக்கைகளில் மூடநம்பிக்கைகளும் சில உண்டு; பழைய மூடக் கருத்துக்களையே விஞ்ஞானத்தின் பெயரால் கூறினால் மக்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.**

**—பெர்னார்ட்ஷா.**



(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சீதையை இராவணன் ஆகாய மார்க்கமாக எடுத்துச் செல்லுகையில் சடாயு என்ற பறவை அவனை இகழ்ந்து போரிட்டு மடிந்ததாகவும், அனுமான், சுக்ரீவன், வாலி முதலிய குரங்கினங்கள் பேசியதாகவும் கூறுகின்ற இராமாயணத்தைவிட'' சாலமனும் எறும்புகளும்'' என்ற கவிதை ஓரளவு உயர்ந்ததாகவே தோன்றுகிறது. சிந்தனைச் சிறகைச் சிறிது இவ்விடத்துப் பறக்க விடுங்கள். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னால் நாகரிகம் தோன்றாத அந்தக் காலத்தே குரங்குகள் பேசியும் விவாதித்தும் உள்ளன என்பதனை இராமாயணம் வாயிலாக அறிகிறோம். அங்ஙனம் விவாதித்துள்ள அந்தக் குரங்குகளின் வழித்தோன்றல்களாகிய நாகரிகத்தின் உச்சிப் படியில் நிற்கும் இக்காலத்துக் குரங்குள் ஏன் பேசுவது கிடையாது என்பதனை. நோக்கின் உண்மை புலனாகும். மனிதன் குரங்கிலிருந்து தோன்றினான்; எனவே குரங்காகிய மனிதன் பேசுகின்றான் என்னும் டார்வின் தத்துவத்தைப் பேசித் தட்டிக் கழிக்க விரும்பும் அன்பர்கட்கு கூறுகிறேன். மனிதன்—குரங்கிலிருந்து தோன்றினான் என்றால் தற்கால குரங்குகள் எதிர்காலத்தில் மனித இனத்தைத் தோற்றுவிக்கும் அல்லவா? ஆகவே, அவைகள் அனுமான் சுக்ரீவனைப் போன்று பேசவேண்டும் என்பதனை மறுக்க முடியுமா? இதனை நிரூபித்தால் ''மேற்கூறிய கவிதையைப்'' பொய்ப்பிக்கலாம்.

''அதற்கென்ன சந்தேகம்'' என்ற ஒரு கிளியின் கதை யாவரும் அறிந்ததே: கிளி ஒன்றிற்கு அதன் தலைவன் அவ்விரு வார்த்தைகளை மட்டும் ஊட்டினான். அது பேசிற்று. இந்தியன் தற்பொழுது அந்நிய நாட்டு மொழியாகிய ஆங்கிலத்தைப் பிறர் கற்றுக் கொடுத்துத்தானே பேசுகிறான். ஆகவே தலைவன் அந்தக் கிளிக்கு வேறு பல சொற்களும் கற்றுத் தந்திருப்பானேயானால் அது பேசாமல் இருந்திராது. இதனைச் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை'' என்னும் தொடர் வலியுறுத்தும்.

சமீபத்தில் ஓநாயினிடத்து அகப்பட்ட ஒரு குழந்தை இரண்டு கைகளையும், இரண்டு கால்களையும் ஊன்றி நான்கு கால் பாய்ச்சலில் ஓநாய் வர்க்கத்தினைப் போன்று அவைகள் கூப்பிட்டவுடன் ஓடி ஏழாண்டுகள் வாழ்ந்து பின் மக்களால் மீட்கப்பட்டதாகவும், தற்பொழுது அவனுக்குப் பேசக் கற்றுக் கொடுப்பதாகவும் செய்தித் தாள்கள் அறிவித்துள்ளன. சுமார் ஏழாண்டுகளாக ஓநாய்க் கூட்டத்தில் இருந்தமையால் நம்மின் மொழி அவனுக்குப் புரிந்திராது. ஆனால் அவனுக்கு ஓநாய்களின் குரல்களும் பேச்சுகளும் நமக்குப் புரியாதது போன்று, புரியவில்லை என்று கூறிவிட முடியாது. அச்சிறாரை ஓநாய்களிடமிருந்து மீட்டுப் பேசப்பழகி வரவில்லை என்று வைத்துக் கொள்வோம். சிறுவனொருவன் கால்களையும், கைகளையும் தரையில் ஊன்றி நான்கு கால் பாய்ச்சலில் செல்கிறான் என்றும், ஓநாய் போன்று கத்துகிறான். என்றும் ஒருவர் சொல்கிறார் என்றால் அதனை எவராகிலும் நம்புவரா? ஓநாய்களாவது அவனை உயிருடன் வைத்திருந்தலாவது, என்றும் அப்படியே வைத்திருந்தாலும் ஓநாய் போன்று கூவி ஓடுவதாவது என்றும் கூறி நகைப்பரன்றோ; அது போன்றே கால் நடைப் பிராணிகள் உரையாடல் நடத்துகிறது—மரம் பேசுகிறது – நாம் பேசுவது கிடையாது என்கிறது கொடி என்று கூறினால், நம்பத்தகுந்த தொன்றாகத் தோன்றவில்லை போலும்; என்று கூறி நிறுத்தினேன்.

பகுத்தறிவு
(திங்களிருமுறை)
புதிய நாணய
விகிதத்தில்:
உள் நாடு:
ஆண்டு 1-க்கு 3–50
6 மாதங்களுக்கு 2–00
தனிப்படி 12 காசுகள்
சிலோனில் 15 சதம்
பகுத்தறிவு அலுவலகம்
சேலம்–1.

மரம் பேசட்டும்; கொடி நம்மைக் குறை கூறட்டும்; கவலையில்லை. கடவுளை ஏனடா வம்புக்கு இழுக்கிறாய் என்றான் நண்பன். ஆத்திரப் படாதே; அதனையும் விளக்குகிறேன் என்று தொடர்ந்தேன்.

ஆதியில் கடவுள் வானத்தையும் பூமியையும் படைத்தான். அடுத்து இரவினையும் பகலினையும் தோற்றுவித்தான். மற்றதை பின்னால் எனத் தெரியவருகிறது. வானம், பூமி, இரவு, பகல் முதலியன தோற்றுவிக்குமுன் கடவுள் இருந்தாரா இல்லையா என்பது அறிவிற் சிறந்தோரால் ஆராய வேண்டிய ஒன்றாகும். நாம் இருந்ததாகவே கொள்வோம், எந்தக் காலந்தொட்டு கடவுள் இருந்திருப்பார்? அவர் எப்படித் தோன்றினார். தோன்றிய பொழுதே உலகைத் தோற்றுவித்தாரா? அன்றி காலந்தாழ்த்தி அதனைச் செய்தாரா? காலந்தாழ்த்தி செய்தாராயின் அதனின் அவசியம் யாதாயிருக்கலாம்? விதையின்றி செடி தோன்றாது எனின் கடவுளுக்கும் ஒரு மூலம் இருக்கத்தானே வேண்டும். வானமும் பூமியும் உண்டாகுமுன் அவரின் இருப்பிடம் யாதாயிருந்திருக்கலாம்? சூனியமான இடமாக இருந்திருக்குமாயின் அதில் தேவன் இருந்திருக்க முடியுமா? அரூபி அவர் என்றால் உயிரில்லை என்று அர்த்தமா? உயிர் உண்டு என்றால் தத்துவப்படி அவ்வுயிருக்கும் மேலான ஒன்று

(3-பக்கம் பார்க்க)

விமர்சனம்.

## முதலாளி.

வெளிநாடு சென்று படித்து விட்டுத் தாயகம் திரும்பிய ஒரு தொழிலக முதலாளி "தொழிலாளர்களின் நிலையை தொழிலாளியால்தான் உணர முடியும்" என்று தொழிலாளியாக மாறுகிறார். உழைப்பாளர்களின் துயரமுணர்ந்து அதற்குக் காரணமாவோர் யார் என்பதறிந்து தக்க பரிகாரங்களைத் தேடுகிறார். முடிவில் தானே முதலாளி என்பதை உணர்த்தி தொழிலாளர்களின் மகிழ்வுக்கும், மற்றவர்களின் வியப்புக்கும் ஆளாகிறார். இடையிலே ஒரு ஏழைக் காதலி. மணக்கவிருக்கும் ஒரு மமதைக்காரி, தொழிலாளரைத் துச்சமென மதிக்கும் மேலாளர் போன்ற வாழ்க்கைப் பாதையிலே நாம் காணுகின்ற பலவகைப்பட்ட பிரகிருதிகள் வந்து கதைக்கு பலம் கொடுக்கிறார்கள்.

கதை வசனத்தை ஏ. கே. வேங்கடராமானுசம் எழுதியிருக்கிறார். புதியவர் என்றாலும் பரவாயில்லை. "அம்மையப்ப"னுக்குப் பிறகு கதாநாயகனாக இலட்சிய நடிகர், எஸ்.எஸ். இராசேந்திரன் இதிலே நடித்துள்ளார். பாராட்டத்தக்க முறையில் அவருக்குரிய தனிப்பாணியில்பரபரப்போடும் பண்போடும் நடித்திருக்கிறார். கதாநாயகியாக வரும் தேவிகாவின் நடிப்பில் துடிப்பிருக்கிறது; உயிர் இருக்கிறது; தோற்றம் சிறிது வளர்ந்தால் நல்ல எதிர்காலம் இருக்கும்!

டி. கே. ராமச்சந்திரன், எம்.என். ராஜம், சி. டி. இராசகாந்தம், டி. பி. முத்துலட்சுமி, சிவசூரியன், பக்கிரிசாமி, கன்




னையன் ஆகியோர் பொறுப் புணர்ந்து நடித்திருக்கின்றனர். படத்திற்கு மணம் ஊட்டுகின்றனர்.

முதலாளி, தொழிலாளர்களின் இல்லத்திற்கு மாறுவேடத்தில் சென்று அவர்களின் நிலையை விசாரித்து அவர்களுக்கு உதவும் கட்டம் நெஞ்சைத் தொடுகின்றது. படத்தின் உயிர்நாடி அந்தக் கட்டம் என்றால் வியப்பில்லை.

தொழிலாளியாகச் சென்றவர் தன் முகத்தில் ஏதும் மாறுதல் இல்லாது முதலாளியாகத் திரும்பிவரும்பொழுது, மேலாளரின் உள்ளத்தில் சிறிதும் ஐயம் ஏற்படாமலிருப்பதும், தாய் மகனைப் பார்த்து 'நீ என் மகன் தானா?' என்று கேட்பதும் பொருத்தமாக இல்லை.

இலட்சிய நடிகருக்காக டி. எம். சௌந்திரராஜன் பாடும் 'ஏரிக்கரையின் மேலே' என்ற பாடல் செவிக்கினிமையாக அமைந்திருக்கிறது. பாடல்களை கவி கா. மு. ஷெரீப் எழுதியிருக்கிறார் சொல்லிலோ, கருத்திலோ பலமில்லை! கே. வி. மகாதேவன் இசையமைத்திருக்கிறார். எடுப்பும், கவர்ச்சியும் குறைவு. ஒளி, ஒலிப்பதிவுகள் குறை கூற முடியாது. ரத்னாவின் வளர்ச்சி அவற்றிலே பளிச்சிடுகின்றன.

டைரக்ஷனை இளம் டைரெக்டர் வி. சீனிவாசன் ஏற்றுள்ளார். சிரமப்பட்டு செய்திருக்கிறார். இரண்டொரு கட்டங்களிலே அவரது திறமை வெளிப்படுகிறது. பாராட்டுக்குரியவர்!

"முதலாளி"யை மேடையேற்றி திரைக்களித்த பெருமை, தேவி நாடக சபாவைச் சார்ந்தது.

பெரிய பெரிய நட்சத்திரங்களாகச் சேர்த்து, நீண்ட நாட்களாக வளர்த்தும் மக்களிடம் தலைநீட்ட வெட்கப்பட்டு மூலை முடுக்குகளிலே ஓடி மறைந்த படங்கள் எத்தனை எத்தனையோ! அத்தகைய பெரிய படமெடுக்கும் படாதிபதிகளுக்கு "முதலாளி" ஒரு நல்ல வழிகாட்டியாகும்! சேலம் ரத்னா ஸ்டுடியோவின் அதிபர் திரு. எம். ஏ. வேணு அவர்களின் துணிச்சலையும், பெற்ற வெற்றியினையும் மனமுவந்து பாராட்டுகிறோம்.

—ஏ. பி. எஸ். மணி.

## பணிப்பெண்.

திருச்சி வானொலி பரப்பு நிலயத்தில் 2—11—57 சனிக்கிழமை இரவு 7-45 மணிக்கு, என். ராகவன் எழுதிய "பணிப்பெண்" என்ற நாடகம் நடைபெறும். நிலைய நடிகர்களோடு ஆசிரியர், ப. கண்ணன் அவர்களும் நடிப்பில் பங்கெடுத்துக் கொள்கிறார்.

> கலைகளின் வளர்ச்சியைச் சார்ந்தே மனித சமூகத்தின் முன்னேற்றம் வளர்கிறது; கலைகளோடு நெருங்கிய உறவு கொள்பவர்களே அழகின்பத்தை நுகரும் ஆற்றலைப் பெறுவர்
>
> —அறிவன்.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்-1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

திங்கள் இருமுறை. ஆசிரியர் :- ப. கண்ணன்.

மலர் 7. | 15-11-57 | விலை 0-2-0 | இதழ் 16

18 NOV 1957

## பெரியாரை அடக்காதீர்!



## நட்டாற்றில் விடுக்காதீர்!

பெரியார் இராமசாமி அவர்களின் செயலுக்குப் பின்னால் இருக்கிற நோக்கத்தை கவனித்துப் பாருங்கள். பெரியாரை பைத்தியக்காரர் என்று சொல்லுவது எளிது. அவர் பைத்தியம் என்றால் நாம் எல்லோரும் பைத்தியக்காரர் ஆகிவிடுவது எளிது. ஜாதி ஒழிய வேண்டும் என்றே அவர் சொல்லுகிறார். அதிகாரத்தைக்கொண்டு இம் மசோதாவை நிறைவேற்றலாம். இது உங்கள் பலவீனத்தைத்தான் காட்டுகிறது.

ஜாதியை ஒழிக்க பெரியார் நடத்திய மாநாட்டில் திரு. காமராஜர் தலைமை வகித்துப் பேசுகையில் "நான் முதலமைச்சராக வந்தால் எனது முதல்வேலை ஜாதி ஒழிப்பாக இருக்கும்" என்று கூறினார். உங்களை நம்பினவரை இப்பொழுது நட்டாற்றில் விடுகிறீர்கள்...... பெரியாரை அடக்க சட்டம் கொண்டுவந்தால் இலட்சக்கணக்கானவர் மனம் புண்படும். இந்தத் தீதான, தேவையற்ற, கொடுங்கோன்மைக்கு இடமளிக்கும் சட்டம் வேண்டாம்.

பெரியார் ஏதோ ஆஃப்ரிக்க நாட்டிலிருந்து இங்கு வந்தவரல்ல; தங்களது மாஜி தலைவர், முன்னாள் தோழர் என்ற முறையில் திரு. காமராஜர் ஏன் அவரை சந்தித்துப் பேசக்கூடாது? இந்த சட்டத்தைவிட சந்திப்பே முக்கியம் என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

(11-11-57. சென்னை சட்டசபையில் "தேசீய கௌரவ அவமதிப்பு மசோதா"வின்மேல் அறிஞர் அண்ணா அவர்கள் கருத்துரைகளிலே சில.)

# பாரதப்பண்பாடு சிரிக்கிறது!

இராமாயணம் சரித்திர சம்பந்தமானதோ அல்லவோ என்பது இன்னும் விவாததுக்கு இடமாயிருக்கிறது. ஆனல். மகாபாரதம் பூர்வ இந்தியாவின் சரித்திரத்தை எடுத்துக்கூறும் நூல் என்பதை எல்லாச் சரித்திராசிரியர்களும் ஒப்புக்கொண்டு, சரித்திர நூல்களிலும் அதற்கு இடம் கொடுத்திருக்கிறார்கள்.

மகாபாரத நிகழ்ச்சிகள் சரித்திர ரீதியானவை என்பதை சிந்துவெளி நாகரிக ஆராய்ச்சிகள் சந்தேகத்துக்கிடமின்றிப் பலப்படுத்துகின்றன. இந்த ஆராய்ச்சிகளால் புலப்படும் உண்மைகள் பாரதத்தின் கூற்றுக்கு எதிர்மாருகவும், அநேகருக்குப் பெரும் அதிராச்சியைக் கொடுக்கக் கூடியனவாகவும் இருக்கின்றன. அதாவது: பொதுவாக பாரத யுத்தம் ஆரியர்களாகிய கவுரவர் (துரியோதனதியர்) களுக்கும் அவர்களின் பந்துக்களாகிய பாண்டவர்களுக்குமிடையில் நாட்டு உரிமைக்காக நடத்தப்பட்ட போர் என்று எண்ணப்பட்டது. அப்படியிருந்தும் சிந்துவெளி நாகரிகம் வெளியாவதற்கு முன்பிருந்தே சில பல ஆராய்ச்சியாளர் கவுரவர்களும் பாண்டவர்களும் பந்துக்கள் அல்லரென்றும், கவுரவர்கள் யாராயிருப்பினும் பாண்டவர்கள் ஆரியர்களோ அல்லது திராவிடரோ அல்லரென்றும், அவர்கள் சிதியன் காட்டுச் சாதியாரென்றும் ஒரு நவீன கொள்கையைக் கொண்டிருந்தார்கள்.

இக் கொள்கைக்கு அவர்கள் காட்டிய ஆதாரங்களுள் பிரதானமானவை இரண்டு: முதலாவது ஆரியரிடத்திலாவது திராவிடரிடத்திலாவது பாஞ்சாலி செய்ததுபோல் ஒருபெண் ஒரேகாலத்தில் பல புருஷர்களை—அநேகமாய் சகோதரர்களை மணக்கும் முறை (poliyandry) இருந்ததில்லை. இரண்டாவது, ஒரு போர்வீரன் தன்னுடன் யுத்தம் செய்து தோற்ற சத்துருவின் இரத்தத்தை வீமன் துரியோதனின் இரத்தத்தை குடித்தது போல ஆரியரோ திராவிடரோ குடித்ததில்லை. மேற்சொல்லப்பட்ட இருபழக்கங்களும் காட்டுச் சாதியாராகிய சிதியரிடத்தில் காணப்பட்டன.

இந்தக்கூட்டத்தவர் பூர்வ இந்தியாவில் குடியேறியிருந்தார்கள் என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. இவர்களே படிப்படியாய் உயர்ந்து, பழைய இராச குடும்பங்களில் விவாகங்களும் செய்து ஈற்றில் பூர்வ இந்தியாவின் பிரபல இராச குடும்பத்தவராகிய கவுரவர்களுடன் போரிட்டு வெற்றியும் பெற்றார்கள். இந்தக் கொள்கையைப் பெருமளவில் சிந்துவெளி நாகரிக ஆராய்ச்சி பலப்படுத்தி நம்பகமான அநேக உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கிறது. இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்களுள் ஒருவர் ஜெர்மன் தேசத்தவராகிய டாக்டர் ராபர்ட் ஷாபர் (Dr. Robert Shafer) என்பவர். இப் பெரியார் தன்னுடைய நூலாகிய "பூர்வ இந்தியாவின் சாதி தேசப் பாகுபாடு" (Ethnography of ancient India) என்ற நூலில் பல நவீன கொள்கைகளை வெளியிட்டிருக்கிறார்.

அவரின் கருத்துப்படி பாரத யுத்தம் ஓர் ஆரிய திராவிட யுத்தம்! கவுரவர்கள் திராவிடர்கள். பாண்டவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் ஆரியர்கள். இன்னும் பாண்டவர்களை அக்கிரமக்காரர்கள் என்றும், பேராசையும் இரத்த வெறியும் பிடித்த அற்பர்கள் என்றும் (Udistra and his brother-Pandavas were a band of bloody upstarts) அவர்களுக்கு உதவி செய்து அவர்கள் வெற்றியீட்டிய பின் அவர்களை அறநெறி வழுவாத உத்தமர்களென்றும் கவுரவர்களை வஞ்சகம், சூது, பொறாமை, களவு, காமம், துகிலுரிதல் முதலிய துர்க்குணங்கள் நிறைந்த நீசர்களென்றும் விவரித்த முனிவர்கள் ரிஷிகள் எனப்படுபவர்கள், தற்காலத்தில் பொய்ப் பிரச்சாரம் செய்பவர்களைத் தோற்கடிக்கக் கூடிய பொய்யர்களென்றும், பிற்சந்ததியாரை ஏமாற்றுவதற்காக பாரதத்தை ஐந்தாம் வேதம் என்று அழைத்தார்களென்றும் ஷாபர் விவரித்திருக்கிறார். (Ethnography of ancient India, by Robert Shafer) என்ற இந்நூலை கொழும்பு புதினசாலை நூல் நிலையத்தில் (Colombo Museum-Library) பார்க்கலாம்.

சிந்துவெளி நாகரிக ஆராய்ச்சி முதிர்ச்சியடையும்போது இன்னும் பல உண்மைகள் வெளிப்படக் கூடும். பாரத யுத்தம் இன்றைய ஆராச்சியாளர் எண்ணுவதுபோல் ஆரிய திராவிட யுத்தமல்லாமல் தனித் திராவிட யுத்தமேயென்றும் அதாவது இரு திறத்தாரும் கவுரவரும், பாஞ்சாலரும் திராவிடரே

(3-பக்கம் பார்க்க)


**பகுத்தறிவு**

(திங்களிருமுறை)

**புதிய நாணய விகிதத்தில்:**

**உள் நாடு:**

| | |
|---|---|
| ஆண்டு 1-க்கு | 3-50 |
| 6 மாதங்களுக்கு | 2-00 |

தனிப்படி 12 காசுகள்

சிலோனில் 15 சதம்

**பகுத்தறிவு அலுவலகம்**

**சேலம்-1.**




## எத்ரொலி

கோர்ட்டுகளில் இந்திக்கு எதிர்ப்பு. இந்தி ராஜ்யபா ஷைகாரே இந்தி காமலை 1962 வரை தள்ளிப் போடுகிறது

—செய்தி.

கழுதைக்குக் குட்டியின் அழகு பிடிக்கவில்லைதான். அதை வைத்து வாணிபம் நடத்துவோனுக்கு "என்ன அழகுபார்" என்று பல்லிளிக்காவிட்டால் லாபம் போய்விடுமே!

*　　*　　*

பசுவையும் குதிரைபோல்தான் மதிப்பேன் என்று ஜவகர்லால் நேரு கூறியது என் மதவுணர்ச்சியைப் புண்படுத்தி விட்டது.

—சீதாராம் கேம்கா.

மதவுணர்ச்சியின் பெயரால் மனிதர்கள் இப்படி மட வெறியர்களாக மாறுவது, மனித சமூகத்தையே பழிப்பது என்று எந்த மனிதராவது இந்துமத கேம்கா மீது ஏன் வழக்கு தொடுக்கக்கூடாது?

*　　*　　*

சென்னை, கோவை திருச்சிகளிலே மழையால் பெருத்த சேதம் ஆயிரக்கணக்கானபேர் வீடிழந்து தவிக்கின்றனர்.

—செய்தி.

மழைவேண்டும் என்பதற்கு வருணஜபம் செய்யென்று ஆலோசனை கூறும் அக்ரகாரம், வேண்டாம் என்று நிறுத்துவதற்கு என்ன யோசனை கூறுகின்றது? கேளுங்கள்!

*　　*　　*

சட்டத்தைக் கொளுத்தி சாம்பலை மந்திரிக்கு அனுப்புக.

—பெரியார்.

ஐயயோ! அவர்கள் விபூதிப் பிரசாதம் என்று கருதிவிடுவார்களே!

*　　*　　*

கோயில்களில் பெண்கள் நடனம் ஆடத் தடை கூடாது

—மந்திரி பக்தவத்சலம்.

ஏன்? ஷோக்கு வாலிபர்களின் நடமாட்டம் குறைந்துவிட்டதோ? வருமானம் வறண்டு விட்டதோ?


**இனிய தென்றல்**

**வெளியீடுகள்.**

| | |
|---|---|
| **ப. கண்ணன்.** | |
| புரட்சிப் பாடகன் | 1-50 |
| வீரவாலி | 1-25 |
| ஜமீன்தார் | 1-00 |
| காதல் மணம் | 0-50 |
| கன்னியின் சபதம் | 0-50 |
| சிந்தனைச் சித்திரம் | 0-62 |
| மின்னொளி | 0-37 |
| **மு. கருணாநிதி.** | |
| ஒரே முத்தம் | 1-25 |
| **சி. பி. சிற்றரசு.** | |
| சிந்தனைச் சுடர் | 0-31 |
| **அறிஞர் இங்கர்சால்** | |
| தமிழில்: இரா. நெடுஞ்செழியன் | |
| சமுதாய விடுதலை | 0-75 |
| **பாவலர், வேலாயுதசாமி.** | |
| திருக்குறள் இசைப்பாடல்கள் | |
| அறத்துப்பால் | 0-44 |
| அறிவுத் துளிர் | 0-19 |
| **குஞ்சிதம்—வடிவேலு.** | |
| கெட்டிக்காரன | 0-16 |
| பைங்கிளி | 0-12 |
| ஆலமரத்துப்பேய் | 0-12 |
| வால்முளைத்த சாமியார் | 0-12 |
| அன்புமணி | 0-12 |

விற்பனையாளர்களுக்கு ஏற்ற கழிவு உண்டு.

**தென்றல்**

**நூற்பதிப்புக் கழகம்,**

சலகண்டபுரம். சேலம் மாவட்டம்

தென்றல் நூல்கள் சென்னையில் கிடைக்குமிடம்:

**பாரி நிலையம்,**

**59, பிராட்வே, சென்னை.**

தென்றல் நூல்கள் இலங்கையில் கிடைக்குமிடம்:

**ப. சுப்ரமணியம்,**

**பகுத்தறிவுப் பண்ணை,**

**113, கடல் தெரு, கொழும்பு.**


(2-ம் பக்கம் தொடர்ச்சி)

யென்றும் இரு கட்சிகளிலும் பிற்காலத்தில் வந்து சேர்ந்த ஆரியர், சிதியர் முதலிய சின்னச்சாதியார் வெளியாகவும் மறைமுகமாகவும் சேர்ந்து நின்று சிந்துவெளி காலந் தொடங்கிவந்த கவுரவ பாஞ்சால இராச்சியங்களிடையில் யுத்தத்தை மூட்டி, இரு பகுதியாரையும் அழித்தொழித்தார்களென்றும், குருக்ஷேத்திர போர்க்களத்திலேயே வட இந்தியாவில் திராவிட நாகரிகமும், ஆதிக்கமும் மாண்டுமடிந்து மறைந்தன என்ற உண்மைகள் புலப்படக்கூடும் என்றும்தான் நான் கருதுகிறேன்.

பாண்டவர்கள் உத்தமர்களென்று எண்ணுபவர்கள் அவர்கள் பாண்டுவின் புத்திரர் அல்லரென்பதையும், பலருக்கும் குந்தி வயிற்றில் பிறந்தவர்களென்பதையும். ஆகையினல் அவர்கள் கவுரவரின் நாட்டுக்கு உரிமைபாராட்ட தகுதியற்றவர்களென்பதையும் மறந்தோ மறைத்தோ விடுவார்கள். குருக்ஷேத்திர வெற்றியின் பின்னர் ஆரியரின் தலைவர்களாகிய ரிஷிகளெனப்பட்டவர்கள் திராவிட [illegible] ஆதிச்சைவ சமயத்தை தங்கள் விருப்பத்தின்படி மறைத்தும், மாற்றியும், பொய்களைச் சேர்த்தும் இன்றைய இந்து சமயம் என்று சொல்லப்படும் சமயத்தை உண்டு பண்ணிவிட்டார்கள். பொய், களவு, அகந்தை, போர் மூட்டுதல், கொள்ளையடித்தல், சாபம் போடுதல் முதலிய குணங்களையுடையவர்கள் தானே இறைவனிடமிருந்து உபதேசங்கள்... வேதங்கள் முதலிய ஆரிய சமஸ்கிருத நூல்[illegible] மைகளைப் பெற்றார்கள் என்பதை, தமிழர்கள் சற்றே சிந்தித்துப் பார்த்தால் அது நடந்திருக்க மாட்டாது என்பது இலகுவில் புலப்படும். இந்த ஞானத்தைத் தமிழர்கள் சமதர்மப் பொருளாதார நிலையைக் கைக்கொண்டு திருக்குறளில் போதிக்கப்படும் அறநெறியில் வாழ்ந்து இறைவனின் சாயலை அடைந்தே பெற்றார்கள் என்பதும் புலப்படும்.

—"சுதந்திரன்"

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு
— திருவள்ளுவர்

# இதயம்

மலர் 7 | சேலம் 15—11—57 | இதழ் 16

## இரும்புத்திரை நொறுங்குமா?

"சாதிகள் இல்லையடி பாப்பா—குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" என்று அந்நாள் குரலெழுப்பினர் பாரதியார்.

"முன்னை இலங்கை அரக்கர் அழிய முடித் தவில் யாருடைவில்?-எங்கள் அன்னை பயங் கரி பாரதேவி நல் ஆரியராணியின் வில்" என்று அவரே பாடிக் குழப்பிவிட்டார் அதனை!

"பயங்கரியான காளிகாதேவி இந்துமதத் தின் கற்பனைக் கடவுள். அந்தக் காளிதான் எங்கள் அன்னை. அவளதான் ஆரியராணி, திராவிடவேந்தர் குலத்தைக் கருவறுத்தவள்" என்றகருத்தானது ஆரிய திராவிடப்பகைமை மூட்டுவது;சாதி முறைகளை-வருணாசிரம நெறி களை நிலைநாட்ட காளிகாதேவி புரிந்த லீலா விநோதங்களையெல்லாம் ஒப்புக்கொள்வது; எனவே, ஒழிந்துபோக வேண்டிய சாதி ஓங்கி வளருகின்றது, ஆரியக் காளியின் அருளால்!

சாதிகள் ஒழிக்கப்படவேண்டும். சமதர்ம சமுதாயம் [illegible] வேண்டும் என்பதிலே மெய்யான பற்றும் பாசமும் [illegible] அடியாராகவோ, ஆரிய மதவா திகளாகவோ நிச்சயமாக இருக்க முடியாது. ஆண்டவனும், ஆரிய மதமுமே சாதிமுறைக் கொடுமைகளின் பிறப்பிடங்கள்! குலதர்மக் கோட்பாடுகளின் அரண்களன்றோ?

வளர்ந்து வரும் திராவிட சமுதாயத்தை பலவீனப்படுத்துகின்ற சாதீயக் கேடுகளை அழித்திட, பகுத்தறிவு பூர்வமான படைக்க லன்கள் தேவை.புரையோடிப்போன புண்ணை ஆற்ற அறுவை சிகிச்சையே தேவை; புனுகுப் பூச்சல்ல. அந்த அறுவை சிகிச்சை புரியும் பணியில் தி. மு. க. முன்னணியில் நிற்பதை நாடறியும்.திராவிட முன்னேற்றக் கழகத்தின் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கோஷம் புகாத இடங்களில்தான் "முதுகுளத் தூர்" முளைக்கின்றது! கொலை, கொள்ளை, கற் பழிப்புக்கொடுமைகள் கோரநடம்புரிகின்றன!

சாதி முறைகளை ஒழிக்கவேண்டுமெனில், பரம்பரையாகப் படிந்துள்ள மூடநம்பிக்கை கள், குறுகிய எண்ணங்களை முறியடித்தாக வேண்டும். கடவுளோ, மதமோ, மதக் குறி களோ, வைதிகச் சின்னங்களோ; வேறு பாடுகளை வளர்ப்பன எல்லாவற்றையும் அழித்தே தீரவேண்டும்!

தி. மு. க. கூறுகின்ற பகுத்தறிவு பூர்வ மான இந்தப் பரிகாரத்தை பண்டித ஜவகர் லால் நேரு அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளார். அண்மையில் டெல்லியில் நடைபெற்ற 1600 கல்லூரிகளின் மாணவ மாணவியர்களின் மாநாட்டில் பேசியுள்ளார்:

"விஞ்ஞானம் மனிதனுக்கு பெரும் சக்தியைக் கொடுத்துள்ளது. சந்திரனுக்கே மனிதர்கள் போய் வரலாம் என்று மற்ற நாட்டார்கள் முன்னேறும் போது,நாமோ ஒருபயங்கரமான இரும்புத் திரைக்குப் பின்னல் இருக்கிறோம். சாதிவெறி, வைதிகம், மூட நம்பிக்கை,குறுகியமனப்பான்மை கொண்டதே இந்த இருமபுத்திரை. இந்தத் திரைக்குப் பின்னால் கிணற் றுத் தவளைகளாக நாம் இருக்கிறோம்.

மிகக் குறுகிய மனப்பான்மையுடன் வாழுகின்ற னர் இந்திய மக்கள்! யாரைத் தொடலாம், யாரைக் கல்யாணம் செய்யலாம், யாருடன் உட்கார்ந்து சாப் பிடலாம் என்பது பற்றியெல்லாம்கூட கட்டுப்பாடு வைத்துக கொண்டிருக்கின்றனர்.

சாதி முத்திரைகளாக நெற்றியில் நாமம் போடு வது விபூதி பூசுவது ஆகியவை மூலம் மற்றவர்களை விடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்பதைக் காட்டிக் கொள்ளப் பார்க்கிறார்கள். இதெல்லாம் குறுகிய மனப்பான்மையையே காட்டுகிறது. இவற்றைவிட்டு முன்னேற நாம் வழிதேடவேண்டும்' என்கிறார்.

"வாய்ந்த போர்க்குறிபோல் மதக்குறி இனிதா? மனமொழி மெய் ஒன்றி வாழுதல் இனிதா" என்ற [illegible]க்கு இந்தியப் பிரதர் ஏற்ற விடையளித்து விட்டார். மதக் குறிகளான போர்க்குறிகள் விஞ்ஞா னத்திற்கு முரண்பட்டவை. முன்னேறத்திற்கு முட் டுக்கட்டையான இரும்புத்திரைஎனப் பகர்ந்திட்டார். மனமுவந்து வரவேற்கிறோம் அவர் கருத்தினை.அந்த இரும்புத்திரையை நொறுக்கும் பணி நமது குறிக் கோள்! ஆனால், ஜவகர்லால் நேரு அவர்களே தலை வரெனக் கொண்டோர்; அவரது பிறந்த நாளைக் கொண்டாடுவோர் என்ன செய்யப் போகிறார்கள்? விபூதிப்பையும் ருத்ராட்சமும்,துளபமும், திருநாமமும் கொண்டு சாதிஒழிப்பு சாகசம்புரியப்போகிறார்களா? இல்லை, பயங்கர இரும்புத் திரையை நொறுக்க பகுத் தறிவுச் சம்மட்டி தூக்கப்போகிறார்களா?

—ப. கண்ணன்.






(முன் இதழ் தொடர்ச்சி)

(காமவல்லியை மெதுவாகத்தூக்கி,அவள் கையைத் தன் மார்பிலே வைத்து அணைக்க முயலுகிறான். பிரம்மை பிடித் தவளாய், உணர்வற்று செயலற்று நிற் கிறாள் காமவல்லி. "அம்மா! அம்மா" என்ற குரல் கேட்கிறது. ஓடி வருகி றான் சம்புகுமாரன். தொடர்ந்து காந்த மனும் ஐவணமும் வருகின்றனர். சோமன் விலகுகிறான். தன்னுணர்வு பெற்று விழிக்கிறாள் காமவல்லி.)

**காமவ:-** (கலங்கி) ஆங்! மகனே! சம்பு குமாரா!...

**சம்பு:-** அம்மா! என்னை மன்னிக்கணும்.... இந்த சோமன் உண்மையிலே சிற்பியல்ல; சரியான திருடன்; புரட்டன்! ஒங்களை ஏமா த்தி, வசப்படுத்தி என்னவோ செய்ய வந் திருக்கும் எத்தன்! வெட்ட வெளிச்சமா தெரிஞ்சு போச்சு!

**காமவ:-** (கலக்கத்தோடு) என்ன? என்ன? உண்மையாகவா?

**சம்பு:-** நம்ம சிற்பிகளோட, ஓவியரோட, மத்த கலைஞரோட இவன் கலந்து பழகறதே இல்லையாம். வலுவந்தமா கூட்டு கலைகளைப் பத்தி விவாதம் பேசினபோது கண்டபடி ஒளறியிருக்கான்! பிரம்மா, விஷ்ணுன்னு புரா ணம் படிச்சிருக்கான்; ஆண்டவனே ஒங்க ளுக்காக அனுப்பினானும் இவனை! என்ன அக் கிரமம்!நம்ம பண்பாட்டுக்கும் பழக்க வழக்கங் களும் மாறுபட்ட அன்னிய நாட் டானம்மா இவன்! இவனை சிற்பம் செய்ய அனுமதிச்சதே தப்பு. சிற்பக்கலையைப்பத்தி இவனுக்கு ஒண்ணுமே தெரியாது! கேளுங்க காந்தமரை! கேளுங்க ஐவணத்தை!

**காமவ:-** (பதறி) ஐவணம்! காந்தமரே! என் உள்ளம் கலங்கியிருக்கிறது! ஏனென்று எனக்கே விளங்கவில்லை! சம்பு குமாரன் சொல்லுவது உண்மைதானா? உண்மைதானா?

**இருவரும்:-** அப்பட்டமான உண்மை மகா ராணி.

**சோமன்:-** (அஞ்சி) மகாராணி! இவாள் ளாம் பொறாமைக்காரர்!என்மேலே பழிபோட ஏதோ சதி செஞ்சிருக்கா. நம்பவேண்டாம்! நம்ப வேண்டாம் இவர்கள் வார்த்தையை!

(காந்தமன் சிலையருகே சென்று, அதனை மகாராணியார்க்குக் காட்டுகிறான்.)

**காந்த:-** இதோ பாருங்க, இந்தச் சிலையை ஏதாவது உருப்படியா கடந்திருக்கிறதா? அவ் கொண்ணும் இங்கொண்ணுமா கன்னபின் னுன்னு உளியாலே வெட்டியிருக்கான்! அ[illegible]

லும் கையெங்கே? காலங்கே? தலையெங்கே? ஒண்ணும் வெளங்கலே! இதுவா சிற்பம்? இவனா சிற்பி?

(அருகேவந்து அதனைப் பார்க்கிறாள் காமவல்லி. வியப்படைகிறாள்.)

**காமவ:-** **(வியந்து)** ஆங்! இத்தனை நாளாக இதையேன் நான் பார்க்கவில்லை? எப்படி என் மதி மயங்கிற்று? என் சிலையா இது? என் சிலையா?

**சோமன்:-** ஆமாம் மகாராணி! ஆரம்ப நிலை; அடிப்படை முடிஞ்சிருக்கு. இனிமேல் தானே மேற்கொண்டு வேலையைத் தொடங்கணும்.

**சம்பு:-** அதுக்குள்ளேதான் சங்கதி அம்பலமாயிட்டுதே!

**காமவ:-** **(கடுமையாக)** அட பாபி! நான் எவ்வளவு பயங்கரமாக ஏமாற்றப்பட்டிருக்கிறேன் உன்னால்! நீ சிற்பக்கலை பற்றி வருணித்தபோதே ஐயப்பட்டேன்! **(சிலையைக் காட்டி)** இது காட்டுகிறதே உன் தகுதியை! நிச்சயமாக நீ சிற்பியல்ல! சிற்பம் செதுக்குவதற்காக இங்கு வந்தவனுமல்ல! கலைநலம் கூறி—கலைச்சுவை காட்டி என் வாழ்வைக் களங்கப்படுத்த முயன்ற சதிகாரா! உண்மையைச் சொல்லிவிடு. நீயார்? எங்கே இருந்து எதற்குவந்தாய் இங்கு?

**சம்பு:-** **(கையிலே வேல் கம்பெடுத்து)** உண்மையை ஒளிக்காமெ சொல்லிடு! இல்லே; குத்திடுவேன் குத்தி....

**சோமன்:-** **(கெஞ்சலாக)** மகாராணி! வாழவைப்பீர்கள் என்று பூரணமா நம்பினேன்; இப்படி வகைமோசம் செய்யலாமா? யாருக்கும் எந்தக் குற்றமும் செய்தறியேனே! வடக்கே இருந்து வந்தவன் நான்; சாமான்யனல்ல. அங்கே நாடாளும் ராஜகுமாரன்; நானும் ஒரு திராவிடந்தான் மகாராணி!

('இல்லை. இல்லை; பொய். பொய்" என்று கூறிய வண்ணம் கையிலே வில்லும் அம்பறாத் தூணியுமாக வருகிறான் வாணன்.)

**வாணன்:-** இவன் திராவிடனல்ல; வேஷம் போட்டு ஏமாத்தற மோசக்காரன்! காட்டுமிராண்டியா காளகத்திலே சுத்தியலையற ஆரியன்! இதோ, இவன் மரத்திலே மறச்சு வச்சிருந்த வில்லு, அம்பறாத்தூணி, பூணூல், பஞ்சகச்சம்! இவன் அயோத்தி அரசகுடும்பத்தைச் சேர்ந்தவன்; விராதப் பெரியாரைக் கொலைசெஞ்ச அயோக்யன் இவனேதான்!

**சோமன்:-** **(வியந்து, பயந்து, சினந்து)** ஆங்! சண்டாளா!...

(வாணனை எட்டி உதைக்கிறான். "ஐயோ" என்று அலறி விழுகிறான் வாணன். வில்லம்பு விழுகின்றன. இடுப்பிலிருந்து குத்துவாளை எடுத்துக்கொண்டு அவன்மேல் பாய்ந்து உட்கார்ந்து குத்தப் போகிறான் சோமன். வேல் கம்பால் சோமனின் மணிக்கட்டில் ஓங்கி அடிக்கிறான் சம்பு குமாரன். "ஐயோ" என்று அலறியவண்ணம் குத்துவாளைப் போட்டுவிட்டு எழுந்திருக்கிறான். மேலும் அடிக்கிறான் சம்புகுமாரன்; காந்தமனும் தாக்குகிறான். அலறிக்கொண்டே கீழே கிடந்த வில், அம்பறாத்தூணி, துணிமூட்டை முதலியவற்றை எடுத்துக்கொண்டு ஓடுகிறான், சோமன். வாணன் எழுந்திருக்கிறான்.)

**காமவ:-** **(கலங்கி, வருந்தி)** ஐவணம்! காந்தமரே! நான் எவ்வளவு பெரிய இழிவுக்கு ஆளாகவிருந்தேன்! அண்ணா இராவணச் சக்கரவர்த்தியும், தினகரரும் படித்துப் படித்துச் சொன்னார்களே ஆரியப் பாம்பு கடித்துவிடும்; சாக்கிரதை, சாக்கிரதை என்று! கடித்துக் கொல்லும் ஆரிய நச்சுப் பாம்பை படுக்கையறையிலே வைத்தல்லவா பால்வார்த்து வந்திருக்கிறேன்! அம்மம்மா! என்ன பயங்கரம்! நினைக்கவே நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறதே! என் தேகத்தை அது தீண்டியிருந்தால் நான் மாள்வதோடு மட்டுமல்லாமல், என் பழங்குடிக்குமல்லவா பெருங் களங்கம் தேடியிருப்பேன்! ஐயகோ! நான் எத்தகைய பேதை!...

**ஐவண:-** கவலைப்படாதிங்க தேவி! சந்திரனுக்கு கிரகணம் பிடிச்சதுபோல சண்டாளன் வந்து ஒட்டினான்; வெட்டித் தள்ளிட்டார் இளவரசர்; விட்டது வேதனை!

**காந்த:-** நடந்தது நடந்து போச்சு! இனிமே நாம்ப சாக்கிரதையா இருந்தாப் போதும் மகாராணி!



**சம்பு:-** அம்மா! அன்னைக்கு அந்த சோமனை நாங் கண்டிச்சபோது, "நல்லது கெட்டது நானறிவேன். இதிலெல்லாம் நீ தலையிடாதேன்னீங்க!" நான் கண்டதையும் கேட்டதையும் என்னாலே மறக்க முடியலே! தலையிடும் படியா வந்திடுச்சி; தவறாக இருந்தா கருணைகூர்ந்து என்னை மன்னிச்சிடம்மா!

(அன்னையின் காலில் வணங்குகிறான் சம்புகுமாரன். துக்கம் பொங்கியெழுகிறது காமவல்லிக்கு.)

**காமவ:-** **(தேர்பிய வண்ணம்)** மன்னிப்பா! என் செல்வ மகனே! என் மானம்காத்த மாணிக்கமே! என் குலக்கொழுந்தே! உன்னிடமல்லவோ நான் மன்னிப்புக் கேட்க வேண்டும்!...

(ஆவலோடு மகனை எடுத்து அணைத்துக் கொள்ளுகிறாள் மகாராணி.)

## காட்சி 21.

**இடம்: கலைக்கூடம்—பொது அறை.**

**காலம்: பிற்பகல்.**

(அருளாளர் ஏட்டுப் பிரதியிலுள்ள காவியமொன்றினைப் பார்த்துப் படித்துக் கொண்டிருக்கிறார். காமவல்லி வந்து பணிகிறாள்.)

**காமவ:-** **(பணிவோடு)** அருளய்யா! நான் பெருந் தவறொன்று செய்துவிட்டேன். மன்னிக்க வேண்டும் என்னை.

**அருளா:-** அன்பரசி! என்ன தவறம்மா எப்படி விளைந்தது? நான் ஏன் மன்னிக்க வேண்டும்?

**காமவ:-** கலைக்கூட நிருவாகப் பொறுப்பு தங்களுடையது என்பதை மறந்து, தவறு செய்தேன். தங்களது அனுமதியில்லாமல் தாந்தோன்றித் தனமாக, சிற்பியொருவன் என்போல் சிலை செதுக்க ஒப்பினேன்.

**அருளா:-** கலைப்பண்பும், கையாளுவோனின் தகுதியும் அறிந்திருப்பாய்; ஒப்பினாய்!

**காமவ:-** இல்லை அருளய்யா! அதுதானில்லை. கண்மூடித் தனமாக பருந்தினை பச்சைக் கிளியென்று நம்பிவிட்டேன். வருந்துகின்றேன். பேச்சிலே என்னை மயக்கிய அந்தப் பேடி மகன். நமது அருளறத்தின் பகைவன்: ஆரிய நச்சரவம்; என் கற்பினை அழிக்க வந்த காலாக்கினி என்பன இறுதியில் தெரிந்தேன். திடுக்கிட்டேன்! பிடிக்க முயலும்போது மறைந்து விட்டான் மாபாவி!

**அருளா:-** வியப்புக்குரிய நிகழ்ச்சிதான்! "அறிவுக்குப் புறம்பான அசம்பாவிதங்கள். சீலத்திற்கு மாறுபட்ட செயல்கள் நிகழாத வண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று எனக்குக் கட்டளையிட்டார் தினகரர்; கடமையென ஒப்பினேன்! ஆம். அதனை ஒருவகையில் நிறைவேற்றவும் செய்தேன் மகாராணி.

**காமவ:-** தாங்கள் கூறுவது, எனக்கு விளங்கவில்லையே!

**அருளா:-** மகாராணி! கலையிலே பற்றும், புகழிலே விருப்பும் சில வேளையில் கருத்தைக் குருடாக்கி விடுகின்றன. மனிதரிடம் இயல்பாகத் தோன்றும் இந்த பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு படுநாசம் விளைப்போருமுண்டு. சோமனைப் பார்த்ததும் ஐயப்பட்டேன். அவனது நடத்தைகளை இரகசியத்தில் கவனிக்கும்படி காந்தமனைப் பணித்தேன். பார்வை பெருகிற்று; பலனும் கிடைத்தது. இலகுவாக அவனை விரட்டும் செயல் முடித்தான் சம்புகுமாரன்!

**காமவ:-** விளங்கிவிட்டது! இப்போது விளங்கிவிட்டது அருளய்யா! தங்கள் பேருதவி களங்கப் பெருநெருப்பில் கவிழவிருந்த என்னைக் காப்பாற்றியது! அண்ணாவின் கட்டளையை நிறைவேற்றினீர்கள்; ஆரியமாயையினின்றும் என்னை விடுவித்தீர்கள்! அனந்த கோடி சரணம்!

(மீண்டும் வணங்குகிறாள்.)

## காட்சி 22.

**இடம்: வனப்பாதை.**

**காலம்: பிற்பகல்.**

(இராமன் நடந்து வருகிறான். பசி, கால் வலி வேறு. ஒரு மரத்தினின்றும் கனியொன்று பறித்துக் கடித்துத் தின்ற வண்ணம் மரத்தடியில் உட்காருகிறான்.)

ஒரு முயலைத் துறத்தியவண்ணம் அங்கு ஓடி வருகிறான் இலக்குவன். முயலைத் தேடுகிறான் புதர்களில்.)

**இராம:-** **(கடித்த வண்ணம்)** தம்பி!

**இலக்:-** யாரது?...

**இராம:-** லட்சுமணா!

**இலக்:-** **(பார்த்து, வியந்து)** ஆங்! அண்ணா! நீங்களா? எங்கே அண்ணா போயிருந்தேள் இத்தனை நாளா? ஏன் இப்படி இங்கே சோர்ந்து உட்கார்ந்திட்டேள்?

**இராம:-** பசிக்கொடுமை, வழி நடைக் களைப்பு!

**இலக்:-** அவ்வளவுதானே? வேறே ஆபத் தொண்ணுமில்லியே?

**இராம:-** ஆபத்தா? அற்புதமான விசேஷம்னா நடந்திருக்கு! வா, இப்படி உட்கார்.

**இலக்:-** என்ன விசேஷமண்ணா! நேக்கு சொல்லுங்களண்ணா!

**இராம:-** லட்சுமணா! நான் ஒரு மானைத் பிடிக்க தொரத்திண்டு போனேன்;போனேனா? அது கூடகிரிமலை வரைக்கும் என்னை இழுத்துண்டு போச்சு; போச்சா? மலைச்சாரல்லே மகாராணி காமவல்லி கலைக்கூடம் பார்க்க வந்திருந்தா; இருந்தாளா? அந்த மானகப் பட்டது அவளிடத்திலேபோய் என்னைக் காப்பாத்தணும்னு சரண் அடைஞ்சுட்டுது!

**இலக்:-** **(வியந்து)** அப்படியா? மான் பேசித்தா அண்ணா?

**இராம:-** பேசணுமா தம்பி? அவளோட அரண்மனையிலே நொழைஞ்சா போறுதா? அதுதானே அர்த்தம்?

**இலக்:-** உம்...அப்பறம்?

**இராம:-** மகாராணி காமவல்லி வந்தா, மானுக்கு அடைக்கலம் கொடுத்திட்டா. ஆனா, அந்தக் கட்டழகி என்னைப் பாத்தாள், என் மேல் அபார மையல்கொண்டு சொக்கிச் சுழண்டு அப்படியே மயங்கிப் போயிட்டா!

**இலக்:-** ஐயயோ! அண்ணா! நீங்க என்ன பண்ணினேள்! மகாராஜாவுக்கேத்த மகாராணி, காமவல்லின்னாலே நல்ல அழகிதானே?

**இராம:-** லட்சுமணா! பழகற இருட்டிலே முழு நிலவுபோல் அவளோட அழகு வெளிச்சம் பாய்ஞ்சுது என்மேலே! பற்றி இழுத்தது! மனம்பதறியிருந்தேன்னா சீதையின் கதி அதோ கதியாகியிருக்கும்! ஆகவே, சீசீ! இது வேணாம்னு ஒதுக்கிட்டேன்!

**இலக்:-** பேசாமே அழைச்சுகிட்டு வந்திருக்கலாம்!

**இராம:-** அடடா! எவ்வளவு அன்பா பேசினா; எவ்வளவு ஆசையா நெருங்கினா! எவ்வளவு பிரியமா நடந்தா; கமலமலர்க் கரத்தாலே கட்டிப் பிடிச்சாளே! விட்டிடுவேனா?

**இலக்:-** ஆங்...விட வில்லையா?

**இராம:-** லட்சுமணா! என்னுடை ஏகபத்தினி விரதத்தை நான் விட்டுடுவேனா? ஆனா, ஒண்ணு மட்டும் நெனைச்சேன்; அதுக்கு ஒரு முட்டுக் கட்டை விழுந்துடுத்து.

**இலக்:-** என்னண்ணா?

**இராம:-** அந்தக் கட்டழகு மகாராணியை நோக்கு முடிச்சு வைக்கணும்னு நெனைச்சேன். எணங்கச் செய்ய நன்னா வசதியும் கெடைச்சுது! அவளோட மகன்,வாண்டுப்பய சம்புகுமாரன் குறுக்கே விழுந்து காரியத்தை கெடுத்துட்டான்! தம்பி! அந்தப்பய மட்டும் இல்லாமெ இருந்திருந்தா காமவல்லியை கையோட அழச்சிண்டுவந்து ஒங்கிட்டே ஒப்படைச்சிருப்பேன்! நீ விந்திய தேசத்து ராஜா ஆகியிருக்கலாம்! கெடுத்திட்டானே படுக்காலிப்பய!

**இலக்:-** **(சினந்து)** ஆங்! அண்ணா! நேக்குத் தெரிஞ்சிருந்தா, அந்தப் பயலோட தலையைத் திருகி எடுத்திட்டு காமவல்லியை இழுத்துண்டு வந்திருப்பனே!

**இராம:-** பொறுடா தம்பி! எங்கே போயிடுறா! சங்கர்ப்பம் வரட்டும். முயற்சி பண்ணுவோம். ஆமா, மன்னி எப்படி இருக்கா?

**இலக்:-** சொல்லாமெ போயிட்டேள்னு, ஒங்கமேலே ரொம்பகோவமா இருக்காண்ணா!

**இராம:-** கோபமா?...உம்...அதை எப்படிச் சொல்றது?....மிதிலைக்குப் போறேன்னு பொறப்படலியே!...

**இலக்:-** இல்லே.

(வளரும்)



சுடச்சுட.

## பச்சைக் குழந்தையா? பத்தினி கண்ணகியா?

சூலூர்த் தோழியர், புலவர் குழந்தையம்மாள் எம். எல். ஏ. கோவையில் நடைபெற்ற "சிலம்பு விழா"வில் பேசுகையில், "தமிழ் நாடு என்று பெயர் வைக்க சட்ட சபையிலே நான் கண்ணகிபோல் போராடுவேன்" என்று வீரம்பேசினார்களாம்! ஐயோ! பாவம்!

பத்தினிக் கண்ணகிபோல் நடக்க நிச்சயமாக இவரால் முடியாது' ஏனென்றால் குற்றம் புரிந்தான் பாண்டியன் நெடுஞ்செழியன்; அது ஒருதரப்பு; குற்றம் புரிந்ததை எடுத்துக் காட்டிக் கண்டித்தாள் கண்ணகி; அது எதிர்த்தரப்பு.

"தமிழ்நாடு" என்று பெயர் வைக்க தி. மு. க. வின் வெட்டுப் பிரேரேபணையின் மீது ஓட்டளிக்க நேர்ந்தபோது "தமிழ் நாடு" என்ற பெயர் வேண்டாம் என்று குற்றம் புரியும் பாண்டியன் தரப்பிலே எழுந்து நின்று ஆதரித்தார் குழந்தையம்மாள். அதன் மூலம் தான் பாண்டியன் கட்சி — அரசாங்கத் தரப்பு—என்பதை உறுதிசெய்து விட்டார்.

பாண்டியன் செய்தது குற்றமல்ல என்று கூறிடும் பத்தினி கண்ணகியை சிலப்பதிகாரம் காட்டவில்லையே! தமிழகத்து இன்றைய அரசியல் அடிமைநிலையன்றோ காட்டுகிறது. அந்தோ பத்தினியே! அந்தோ குழந்தையே!

தோழியர் குழந்தையம்மாளால் பத்தினிக் கண்ணகிபோல் நிச்சயமாகப் போராட முடியாது. பத்தினிபோல் நடந்து நாட்டினரிடம் நற்புகழ் பெறவேண்டுமானால், குற்றம் புரிந்த பாண்டியனின தேவியாக அவனைச் சார்ந்து நின்று, மறம்கண்டு உயிரைவிட்ட கோப் பெருந்தேவியாரைவேண்டுமானால் பின்பற்றலாம்! குற்றம் புரிவோரின் தரப்பில் இருப்போர்க்கு அதை விட்டால் நற்பெயரெடுக்க வேறு வழியில்லை!


வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

**செல்வம் ராணி**

&

**சேகர் ஊதுபத்திகளை**

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,

3037-38, டபீர்குளம் ரோடு, தஞ்சாவூர்.





பணமே வாழ்வின் லட்சியமாக ஆகிவிட்டால், அது தவறான வழியில்தான் தேடப்படும். தவறான வழியில் தான் செலவழிக்கப்படும். தேடும் பொழுதும் செலவிடும் பொழுதும் அது தீமையே பயக்கும்.

—ரஸ்கின்

# கேள்விக்கணை

இம்முறை பரிசு பெற்றவர்:
● ப. குருதேவன்,
வணிகவைசியர் தெரு,
தேவதானப்பட்டி
மதுரை மாவட்டம்.

**● ப. குருதேவன், தேவதானப்பட்டி**

கே: ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்து ஜாதிவெறியும் பணப்பேயும் தாண்டவமாட விட்டு, குறுக்கு வழியில் தேர்தல் வெற்றி கண்டவாகள் இறுதியில் எந்த நிலைமை பெறுவார்கள்?

ப: ஜனநாயகத்திற்காகத் தோண்டிய குழியிலேயே,கையிலே விபூதிப்பை, ருத்ராட்சம், தண்டு கமண்டலங்களோடு தலைகுப்புற விழுந்து மண்ணைப் போட்டு மூடிக் கொள்வார்கள்!

*    *    *

கே: காந்தியார் வளர்த்த அகிம்சைக்கும், தேசீயத்திற்கும் இப்போது பேசும் சக்தி இருந்திருந்தால்......?

ப: முதுகுளத்தூர் ஜாதிச் சண்டை,துப்பாக்கிப் பிரயோகம்,கொள்ளை, கொலைகுறித்து நீதிமன்ற விசாரணை நடத்துமாறு ஆளவந்தார்க்கு அறைகூவல் விட்டிருக்கும்.

**தா. மாசிலாமணி, சேலம்.**

கே: சினிமாத்துறையில் தி. மு. க. எங்களைப் பார்த்து காப்பியடிக்கிறதுஏன்று, ம. பொ. சிவஞானம் கூறுகிறரே! உண்மையா?

ப: "சினிமாக்காரர்'' என்று நம்மை கேலி செய்தர்களில் இவரும் ஒருவர். இவரே சினிமாவுக்குக் கதை வசனம் எழுத முன் வந்திருக்கிறர்! எது காப்பியடித்தல் என்பது, பொது மக்களுக்குமா தெரியாது?

கே: "கட்ட பொம்மன்'' கதையைப் பார்த்து, அதுபோலவே "ஊமையன் கோட்டை'' எழுதி கவிஞர் கண்ணதாசன் படம் பிடிப்பது உண்மையா?

ப:- 'ஊமையன் கோட்டை' படம் பிடிப்பது உண்மை. அந்தக்கதையிலே கட்டபொம்மன் இல்லையென்று கண்ணதாசன் கூறியிருப்பதும் உண்மை! கட்டபொம்மன் போல் எழுதியதென்பது பச்சைப் பொய். தமிழகத்தின்வரலாறு தொடர்ந்து படிப்போர்க்குத் தெரியும்.இதுபோல் இன்னும் ஆயிரம் கோட்டைகள் கட்டலாம் என்பது!

**சி. சு. தேவராசன், சிறுவைதயூர்.**

கே: எம். ஆர். ராதா திராவிட கழகத்தில் அங்கத்தினர் இல்லையாமே! உண்மையா?

ப: முறையோடு அங்கத்தினர் சேர்த்து, முறையோடு இயங்கும் "கெட்ட வழக்கம்'' திராவிட கழகத்திற்கே இல்லையே!


செந்தாமரை
பீடிகள்



புதிய சுவை, புதிய சுறுசுறுப்பு நல்குவது
**
எங்கும் விற்பனையாளர் தேவை.
**
எம். பழனியப்பன்,
அதிபர்:
செந்தாமரை பீடி
தொழிற்சாலை,
சலகண்டபுரம்,
(சேலம் மாவட்டம்.)


# பொன் மொழிகள்

வைவார்க்கு இன்பம் இல்லை; பொறுத்தார்க்குத் துன்பம் இல்லை.

—அறிவன்.

நீ எண்ணியதையெல்லாம் வெளியிடாதே; நன்ருய் ஆலோசியாமல் எதையும் செய்யாதே; எல்லோரிடமும் நேசமாயிரு. ஆனல்,அற்பத்தனமுடையனுய் இராதே.

—ஷேக்ஸ்பியர்.

நல்ல மேற்கோள் அறிவாளி கை வைரமோதிரம்; அறிவிலி கைக் கூழாங்கல்.

—ஜே. ரு.

நன்றியறிதல் அறங்களிலே குறைந்தது; நன்றி யறியாமை மறங்களிலே கொடியது.

—ஞானி.

பானை கீறலா அன்ருு; ஒலியால் அறியலாம். அறிவாளியா அறிவிலியா; பேச்சால் அறியலாம்.

—டெமாஸ்தனீஸ்.

பிடிவாதமான மூட நம்பிக்கை, தனக்கு விருப்பமான பொய்யினை மணந்து கொண்டால்; விடாப் பிடியாக இறுதிவரை அணைத்துக் கொள்ளும்.

—மூர்.

அனுதாபம் காட்டுமளவே அறநெறியில் முன்னேறுவதாகக் கூற முடியும்.

—ஜார்ஜ் எலியட்.

நாவைப் பரிசோதித்த மருத்துவர் உடலின நோயை அறிவர்; அறிஞர் உள்ளத்தின் நோயை அறிவர்.

—இர்விங்.

அதிர்ஷ்டத்தை வார்த்தெடுக்கும் அச்சு, அவனவன் கையிலேயே இருக்கிறது.

—பேக்கன்.



விமர்சனம்.

## ஆரவல்லி.

அரபு நாட்டுக் கதையில் ஆண்களைப் பெண்கள் அடிமைபடுத்தியதுபோல் 'ஆரவல்லி'யில் பெண்ணுக்கு ஆணடிமை பிரமாதப் படுத்தப்படுகிறது! கதையில் சிறந்த லட்சியமோ, கருத்தோ கிடையாது.

நல்ல வேளையாக அத்தினபுரத்திற்கும், ஆரவல்லி நாட்டிற்கும்,இரதகசதுரகபதாதிகளுடன் படையெடுக்காமலும், மாயாஜாலத்தின் மூலம் மண்டையுடையும் சண்டை நடக்காமலும் வாய்ச்சண்டை மூலமாகவே முடித்திருக்கிறர்கள். திரு. வி. என். சம்பந்தம் வசனம் எழுதியுள்ளார். சில இடங்களிலே நற்றமிழும் இருக்கிறது.

இராணியாக வரும் ஜி. வரலட்சுமிக்கு வேடப் பொருத்தம் ஏனோதானோ வென்றிருக்கிறது. வசனத்தை நிதானமின்றி பேசவிட்டிருக்கின்றனர்.

புதுமுகம் ஈசுவர் ஐயோ பாவம்! "செங்கம்மா! அங்கம்மா! ஜில்ஜில் மங்கம்மா!'' பாடல் உவகை தருகிறது. மைனவதிக்கு ஆரவல்லி புகழ் தேடிக் கொடுக்கவில்லை. மோகன நன்கு சோபிக்கிருள். படத்தில் எல்லாம் வல்லியராகக் காட்சியளிப்பது சப்பென்று போய்விடுகிறது. நகைச்சுவை கருணநிதியை நன்கு பயன்படுத்திக்கொள்ளவில்லை.

பின்னணி பாடும் சௌந்தரராசனின் "இருட்டறையில் உள்ளதடா உலகம்'' அல்லி முத்துவின் அவலநிலையையும், ஆரவல்லியின் ஆணவச் செயலையும் தெட்டெனக் காட்டுகிறது.

மற்ற பாடல்களில் ஒன்ருவது செவிக்கின்பம்தருவதாக அமையவில்லை. ரீடா-சரோசாவின் பாட்டும், கூத்தும் தேவலாம். ஒளி, ஒலிப்பதிவு சரியாக அமையவில்லை. மாடர்ன் தியேட்டரின் செட்டிங்ஸ் இப்படத்திற்கே ஒரு தனிச் சிறப்பைத் தருகிறது. படம் சாதாரணம்! சகிப்புணர்ச்சியோடு ஒருமுறை பார்க்கலாம்.

இன்றைய இருபதாம் நூற்ருண்டின் காலச் சூழ்நிலையில் "ஆரவல்லி'' போன்ற இதிகாசக் கதைகள் திரையுலகிற்கு வருவது விந்தையே!

—மா. அரங்கசாமி.
கோவை.

# கலைக்கூடம்

பவானியில்

## தேவி நாடக சபா.

தேவி நாடக சபாவினர் தற்போது கோவை மாவட்டம் பவானி மோகன் பேலஸில் தமது நாடகங்களை நடத்தி வருகின்றனர்.

புதிய காட்சியமைப்பு,நடை உடைப் புதுமைகளோடு, புதிய நாடங்களும் அரங்கேற்றி வருவதால் ரசிக மக்களின் ஆதரவு பெருகி வருகின்றது.

பவானியில் 'மௌரிய சாம்ராஜ்யம்'' என்ற வ்ரலாற்று நாடகம் ஒன்றினை அரங்கேற்றப் போகிருர்கள். ஏற்கனவே அரங்கேறி, அவர்களின் புகழ் பரப்பி வரும் "நந்திவர்மன்'' நாடகத்தை திரு. குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடத்தப் போகிருர்களாம். தமிழுக்குப் பெருமை நல்கும் "நந்திவர்மன்'' மொழிப் பற்றின் அடிப்படையில் கட்சி-கீருத்து வேற்றுமை கடந்து பாராட்டப் படவேண்டியவன் தானே!

## உயரும் உழைப்பாளி.

நாளுக்கு இருமுறை உயரத்தில் ஏறி உழைத்திடும் பனைமரத் தொழிலாளி வாழ்க்கையிலே உயர்வு பெற்ருனு? இல்லையென்கிறது இன்றைய இருள் சூழ்ந்த கிராமியப் பிரத்தியட்ச வாழ்க்கை நிலை!

கல்வி பெற்று. கலைகற்று உயர முனைந்த உழைப்பாளி இளைஞன் இடுக்கண்களைப் பரிசாகப் பெறுகிருன். இறுதியில் வளர்த்தோர் நலனுக்காக காதலையும் தியாகம் செய்து, புரியாதகுற்றத்தை புரிந்ததாகவும் ஒப்புகிருன். கொடுமையாளரின் கண் திறக்கிறது!

மதுமரத் தொழிலாளியின் குடும்ப நாடகம் "உயரும் உழைப்பாளி'' ஆசிரியர், ப. கண்ணன் அவர்கள் தீட்டியுள்ள இந்நாடகம் 16-முதல் 22-வரை நடைபெறும் திருச்சி வானொலி நிலைய நாடக விழாவில், மூன்ருவது நாடகமாக 18—11—57 திங்கள் இரவு 9-15 முதல் 10-மணி வரை ஒலிபரப்பப் படுகிறது. நிலைய நடிகர்கள் பெரும் பங்கு ஏற்கின்றனர்.

**பன்னீர் செல்வம்.**

—::—

ஆசிரியர், ப. கண்ணன் அவர்கள் தலைமையில் திருந்திய மணம் புரிந்துகொண்ட திருச்சி, வேலாயுதம் பாளையம் கழகத் தோழர் நண்பர் க. பெரிசாமி-இலட்சுமி தம்பதிகளுக்கு 5-10-57-ல், ஓர் ஆண் மகவு பிறந்துள்ளது. குழந்தைக்கு 'பன்னீர்செல்வம்' என்று பெயரிடப்பட்டு "பகுத்தறிவு'' வளர்ச்சிக்கென ரூபா ஒன்று நன்கொடையளிக்கப்பட்டது. மகிழ்வோடு பெற்றுக் கொண்டோம். குழவிக்கு எமது வாழ்த்து!

—ஆசிரியர்.

முதலாளி தொழிலாளி உறவுக்கு வழிகாட்டி ★

★ முளும்பகை தீர்க்கும் சமுதாயச் சித்திரம்!




சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்–1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

திங்கள் இருமுறை. ஆசிரியர் :- ப. கண்ணன்.

மலர் 7 | 1-12-57 | விலை 0-2-0 (12 காசு) | இதழ் 17

OFFICE OF THE ... 16 DEC 1957 MADRAS

அறியாமை ஒழிப்பே



விடுதலையின் முதற்பணி.

மதம் அறியாமையை அடிப்படையாகக் கொண்டது. இந்தியாவின் பெரும்பாலோர் தெய்வக் கொள்கையை, தவரான நம்பிக்கையை ஒப்புக்கொள்வதற்காக மூடர்களாகவே ஆக்கப்பட்டிருக்கின்றனர். நமது மதக் கலையும் ஒழுகக்கக் கலையும்; முட்டாள் தனத்தையும், மூட நம்பிக்கையையும் விதியையுமே பரப்புகின்றன.

நமது கலை, பொறுமையைச் சிறந்த குணமாக போதிக்கும் வரையில் நமது நிலை பின்னணியிலேயே இருக்கும். நமக்கு நல்ல எதிர்காலம் இருக்க முடியாது.

புரட்சியும், பணிதலும் மாறுபட்ட குணங்கள். தேசத்தின் விடுதலைக்காக நடத்துகின்ற போராட்டத்தின் முதற்படி, நமது கரங்களை பலவீனப்படுத்தும் பச்சைவாதம் போன்ற இந்தப் பழைய கொள்கையினின்றும் மக்களை விடுவிப்பதேயாகும்.

—அறிஞர். எம். என். ராய்.

ால்.

# நல்வழி எது?

*தமிழில்:* **கு. நெடுமாறன்.**

**நாம்** வாழ்வில் முன்னேற, வளமான வாழ்க்கை நடத்த இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று நமக்காக நாம் வாழ்வது. பிரிதொன்று கடவுளுக்காக நாம் வாழ்வது; கடவுளுக்காக வாழ்ந்து வகைகெட்ட நாடுகளை, வரலாறு நமக்குப் படம் பிடித்துக் காட்டும்.

பாலஸ்தீனத்திலே இவ்வழி பரிசோதிக்கப்பட்டது. பலன்....? பணம் படைத்தோர் பராரியானது தான் மிச்சம். வாழ நினைத்தவர்களெல்லாம்வீழ்ந்தார்கள். இணைந்து வாழ்ந்தோர் பிரிந்து நாற்றிசையிலும் சிதறி நலிந்தார்கள். அவர்களைக் கடவுள் காப்பாற்றவில்லை. கைவிட்டுவிட்டார். பகைப் புலத்தை முறியடித்து உலகின் மீது ஆதிக்கம் செலுத்தலாம், அதற்கு கடவுள் உதவிசெய்வார் என்ற எண்ணத்தில் மண் விழுந்தது; மனமும் சோர்ந்தது. நாட்கள் செல்லச் செல்ல இந்த நம்பிக்கையை கரையான் அரித்து விட்டது. இப்பொழுது இந்த எண்ணம் பகற்கனவு என்ற முடிவுக்கு வந்துவிட்டனர்.

கடவுளுக்காக வாழ்க்கைநடாத்தும் விந்தை சுவிட்லாந்திலும் சோதித்துப் பார்க்கப்பட்டது. முடிவு? இவ்வழி, மனிதரின் முன்னேற்றத்திற்கே முட்டுக்கட்டையாக இருந்தது என்று கண்டார்கள். சிறையில் சித்ரவதையாக முடிந்தது. பேச்சுரிமையளிக்கப் பட்டது. பாராள்வோர்மட்டும் தான் தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்ல அனுமதிக்கப்பட்டனர். அடிமைத்தனத்தை அணைத்துக் கொண்டனர் மக்கள். இன்பம் காண நினைத்து துன்பச் சூருவளியில் சிக்கித் தவித்தனர். குற்றமற்ற இன்பங்கள்கூட பாவமாக பாவிக்கப்பட்டது. சிரித்தால் சிறைச்சாலை, மதவாதிகளின் கட்டளையை மறுத்த மக்கள் மரணத்தின் மடியில் துயின்றனர். காதலித்தால்கூட பாபம் என்ற பரிதாபத்துக்குரிய நிலைமை. நோன்பும், பிரார்த்தனையும் அவர்கள் நோயைத் தீர்க்கவில்லை. சோதித்த சுவிட்லாந்தில் மட்டுமல்ல, ஸ்காட்லாந்திலும் இந்த நிலமைதான். மக்கள் எல்லாம் மதவாதிகள் முன்பு மண்டியிட்டனர். மக்களின் வாழ்க்கையின் ஊற்றுக் கண்ணிலேயே நஞ்சு கலந்துவிட்டனர். அந்த நாசக்காரர்கள்! மக்களிடம் பீதி கலந்த பக்தியை பரப்ப பலாத்காரத்தைத்தான் துணையாகக் கொண்டனர் அந்த துன்மார்க்க சிகாமணிகள். அவர்கள் கோரத் தாண்டவத்தால் நிலை குலைந்து, பகுத்தறிவு மங்கி சோர்ந்து நிற்கும் அந்தப்பாமரமக்களிடம் "நான் பரலோகத்தின் தபால்பெட்டி" என்றனர் பாதிரியார்கள், இளித்த வாயர்கள் நம்பினார்கள். அரசன் பேருக்குத்தான்! அங்குள்ள ஒவ்வொரு பாதிரியும் கொடுமை நிறைந்த குட்டி ராஜாக்கள். பட்டினித் துயரம் தாங்காமல் எண்ணற்ற பிணங்கள் வீதியின் ஓரத்தில் வீழ்ந்து கிடந்தன. எங்கு காணினும் அங்கெல்லாம் அழுகையும், புலம்பலும்தான். துன்பங்கள் மக்களை துரத்தியடித்தன. மக்கள் அயோக்கியர்களின் பாதத்தின் அடியில் அகப்பட்டுப் பரிதவித்தனர்.

ஸ்காட்லாந்தில் மட்டுமா இந்தக் கொடுமை? இங்கிலாந்தும் இதற்கு சளைத்ததல்ல. மதம் மகுடம் பூண்டு மக்களை மாக்களாக்கிற்று. அற்பத்தனமாக அமைக்கப்பட்ட அரசாங்கத்தின் சட்டங்கள், சமுதாயத்தை சாய்க்கும் சதித்திட்டங்களாகத்தான் இருந்தன. ஆபாசக் களஞ்சியமாக விளங்கியது அந்தச்சட்டம். தண்டனையோ தாங்கமுடியாதவை. குருதிப் பசிகொண்ட கோமாளிகளின் ஆட்சியிலே குடிகள் கோலாகலமாகவா வாழ முடியும்?

அடிமை புத்திகொண்ட மக்கள் அலங்கோல வாழ்வில் அல்லற்பட்டனர். மத சுதந்திரம் மாபாவமாக கருதப்பட்டது. பாசிசம் பவனிவந்த இங்கிலாந்தில் பழமை சிரித்தது. பாதிரியார்கள் பகவானுக் கருதப்பட்டனர், அவர்கள்கடைக்கண் பார்வைக்கு சோர்வுற்று தவித்த மக்கள் எண்ணற்றோர். இகழ்ச்சிக்குரிய நிலைமை இங்கிலாந்தில்.

அநாகரிக காலத்திலும் ஆண்டவனுக்காக வாழும் வாழ்க்கை ஆராயப்பட்டிருக்கிறது. முடிவு....? தூக்கு மரத்தில் பிணங்கள் ஊசலாடின. சுதந்திரம் மண்ணுலகை விட்டு மறைந்துவிட்டது. சிந்தனையாளர்களெல்லாம் சித்திரவதை செய்யப்பட்டனர். உரிமை உரைப்போர்க்கு இருட்டறைதான் இருப்பிடம். மதவாதிகள் மக்கள் இதயத்தில் ஈட்டிகளைப் பாய்ச்சினர். அதி

(11-ம் பக்கம் பார்க்க)


**பகுத்தறிவு.**

(திங்களிருமுறை)

புதிய நாணய விகிதத்தில்:

உள் நாடு:

| | |
|---|---|
| ஆண்டு 1-க்கு | 3-50 |
| 6 மாதங்களுக்கு | 2-00 |

தனிப்படி 12 காசுகள்

சிலோனில் 15 சதம்

**பகுத்தறிவு அலுவலகம்**

**சேலம்-1.**




# எத்ரோல்



**தமிழ் நாட்டில் புதிய தொழிற் சாலைகள் இல்லை. டெல்லி கைவிரிப்பு!**

**—செய்தி.**

இதற்காக வெட்கமோ, வேதனையோபட்டு நமது பிசின் மந்திரிகள் பிய்த்துக்கொள்ள மாட்டார்கள்!

* * *

**நேரு திருச்சிக்கு வருவதால், ஈ. வே. ரா. வழக்கு ஒத்திவைப்பு**

**—செய்தி.**

பச்சைத் தமிழர் அந்தப் படுகிழவர் மீது இப்படியாக இரக்கப் படுகிறார் போலும்!

* * *

**ஜாதி ஒழியும் வரை தாடி வளர்ப்பு; கருப்புச் சட்டைக்காரர் சபதம்**

**—செய்தி.**

தேர்தல் ஆதாவுப் பிரசாரத்திற்கும், தஞ்சை மாநாட்டுத் தீர்மானத்திற்கும், பெரியாரின் கடுமையான அறிவிப்புக்கும் மேலாகவா இந்த சபதத்திற்கு சக்தி இருக்கப் போகிறது?

* * *

**சைவ உணவே சத்துள்ள உணவு**

**—"ஆனந்த விகடன்"**

சைவர் கண்ணப்பர் உண்டதும்; சைவர் சிறுத்தொண்டர் தந்ததும்; சாமான்யமாகவா இருக்கும்?

* * *

**சென்னை ராஜ்யத்தில் தனிப்பட்ட நபர்கள் சிலர் முட்டாள்தனமாக செய்யும் காரியங்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை.**

**—ஜவகர்லால்நேரு.**

**தவறு! தவறு! மனுதர்ம வேத சாஸ்திர மூலம் சாதிக் கொடுமையை விதைத்த நபர்களின் பரம்பரை, நாட்டில்நடமாடுவதைப் பற்றி கவலைப்படவே வேண்டும்!**

# துரத்திடு இந்தியை!

~ **துரை-கணேசன்.** ~

1. பச்சைத் தம்பி இங்கேவா
   பகுத்தறி விதோ பெற்றுக்கொள்!
   இச்சை யுடனே கேளப்பா!
   இனிதாய்ப் பின்பு யோசிப்பாய்!
   நச்சு இந்தி பலவழிபால்
   நாட்டில் வந்து புகுதப்பா!
   அச்சம் தீர்ந்து அம்மொழிதான்
   ஆட்சி மன்றம் ஏறுதப்பா!

2. அன்றே அரசு வீற்றிருக்க
   ஆவல் கொண்டு துடித்ததடா!
   இன்றோ மீண்டும் எழுச்சியுற்று
   இளித்த படியே நெருங்குதடா!
   அன்னிய மொழியெனக் கூறிநல்ல
   ஆங்கில மொழியைக் கொன்றிட்டு
   வன்மை இலாத இந்திப்பேய்தான்
   வாழ்வு பெறுவதை ஒப்பாதே!

3. பூனை நரிதனை பிடித்திடவே
   புலித்தோல் போர்த்த கதைபோல
   ஏனைத் தகுதி யின்மையினுல்
   எடுக்குது சூழ்ச்சி உருவெல்லாம்!
   சேனை யிருக்குது எங்களிடம்
   செலுத்துவோம் ஆட்சி என்கிறது!
   ஏனோ வீணாய் எதிர்க்கின்றாய்,
   எளிதே படிடா என்கிறது!

4. வேரிலா மரமே வாழ்ந்திடுமோ?
   வேதபுராணம் வளர்ந்திடுமோ?
   பேருடன் இந்தியும் அரசிருந்து
   பெருமை குலைத்திட ஆளுவதோ?
   வீரமொ டெதிர்த்து நில்லப்பா!
   விளங்கிய உண்மையை சொல்லப்பா!
   தீரச் செயல்புரி திராவிடனே!
   தீதாம் இந்தியைத் துரத்தப்பா!

ார் யார் வாய்க்கேட்பினும்
..ருண் மெய்ப்பொருள் காண்பதறிவு
—திருவள்ளுவர்

# இதயம்

மலர் 7 | சேலம் 1—12—57 | இதழ் 17

## குட்டக்குட்டக் குனிவதா?

பாரதம் நமது நாடு, நாம் அனைவரும் பாரத மாதாவின் புத்திரர்கள் என்ற குருட்டுக் கற்பனையிலே முழுகியிருக்கும் காங்கிரஸ் தமிழன் கண் விழிக்கும் காலம் என்று வருமோ?

பாரத மாதாவின் வாரிசுகளான வடவர்கள் செய்திடும் வஞ்சனைகளை மக்கள் மன்றத்திலே மட்டுமல்லாமல் சட்ட மன்றத்திலும் முழக்கிவரும் தி.மு.கவின் விடுதலை முழக்கத்தையும் பொருட்படுத்தாமல் ஒருதலைப்பட்சம் ஓரவஞ்சனை தலைதூக்கியாடுகின்றது. பச்சைத்துரோகம் பகிரங்கமாக நடைபெறுகின்றது! பிரதேச நலன்கள் பிய்த்தெறியப்படுகின்றன.

நாட்டின் வளத்தையும், மக்களின் வாழ்வையும் கணிசமாக உயர்த்துபவை கனரகத் தொழிற்சாலைகள். மறுப்பாரில்லை. ஆனால், அவையனைத்தும் வடநாட்டில்தான் வளருகின்றன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் கஞ்சமலைப் பகுதியிலே இரும்பு எடுக்கும் தொழிற்சாலை தோன்றுகிறது; ஏற்காட்டு பாக்சைட்டை பதப்படுத்தி உருவாக்க மேட்டூரில் அலுமேனியத் தொழிற்சாலை அரும்புகிறது; நெய்வேலி பழுப்பு நிலக்கரியிலே கிடைக்கும் பொருட்களால் ரசாயன உர உற்பத்திச் சாலை உண்டாகிறது என்றெல்லாம் ஊர்சுற்றவந்த மந்திரிகள் தம்பட்டமடித்தார்கள்; தாசா பண்ணினார்கள்! அதை நம்பிய காங்கிரஸ் பிஞ்சுகளும், பீத்தல்களும் வடக்காவது தெற்காவது; தெற்கைத் தேய விடுவார்களா எங்கள் தீரத் தலைவர்கள் என்று வாய்கிழியக் கத்தினரே! என்ன நடக்கிறது இப்போது? எவர் உயருகின்றனர்?

சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை இல்லை என்றிட்டார்கள்! பணப்பஞ்சத்தின் விளைவாக அலுமேனியத் தொழிற்சாலைக்கும் 'அரோகா'' போடுகிறார்கள்! ஆத்திரப்படவில்லையே நாம்!

உர உற்பத்திச் சாலையும் ஊமையன் கண்ட கனவாகிறது. தமிழ்நாட்டில் புதிய தொழிற்சாலைகள் எதுவும் தோற்றுவிக்கப் பணமில்லை என்று டெல்லி தேவதை கைவிரித்து விட்டதாம்.

தென்னாட்டின் தொழில் வளத்திட்டங்களுக்கு மட்டும் ஏன் இந்த நிலை?ஏன் இந்தக் கதி? ஏன் இந்தப் புறக்கணிப்பு? ஏன் இந்தக்கொடுமை? ஏன்?ஏன்?

வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்பது தி. மு. க. வின் வெறும் அடுக்குமொழி என்று இன்னமும் பேசுகிறார்களே, கனம் காமராசர்களும், சுப்ரமணியங்களும், பக்தவச்சலங்களும்!நாட்டு நலம் காக்கும் நன் மந்திரிகளா இவர்கள்? தமிழ் நாட்டின் வாழ்வும் வளமும் இத்தகையோர் கைகளிலா இன்னமும் இருப்பது?

"தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு'' என்றாரே நாமக்கல் கவிஞர் குட்டக் குட்டக் குனிந்துகொடுத்து தமிழ்ச் சமூகத்தைத் தலைகுனிய வைக்கும் இந்தக் குணம்தானோ அந்தக் குணம்?

வாழ்வை உயர்த்துவதிலே, வளத்தைப் பெருக்குவதிலே புதிய புதிய தொழிற்சாலைகளைத் தோற்றுவிப்பதிலே வடக்கையும் தெற்கையும் ஒன்றாகப் பார்க்கமுடியாத பாரதமாதா, இதமற்ற இந்தியை அரசாங்க மொழியாக ஏற்றுக்கொள்ளுங்கள்; ஒன்றாக வாழலாம், நன்றாக வாழலாம் என்று சொன்னால் எப்படி நம்புவது? அதிலே எப்படி உண்மை இருக்க முடியும்? நன்மைகாண முடியும்?

வயிறுநிறைய உணவளித்து, வண்ண உடை தந்து, வலிவும் வனப்புமாக ஒருவனை வாழவிடுபவளும், பட்டினிபோட்டு கையிலே புத்தகத்தைக் கொடுத்து மனப்பாடம் செய்யென்று மண்டையிலே அடிப்பவளுமான மாதா உண்மையான மாதாவாக இருக்க முடியுமா? அவள் யாருக்கு மாதா? எவருடைய தாய்? யார் கேட்பது?

ஒரு கண்ணுக்கு வெண்ணையும், மறுகண்ணுக்கு சுண்ணாம்பும் வைக்கின்ற பாரதமாதா எங்கள் மாதாவல்ல என்று சொல்லுகின்ற துணிவு தி.மு.க. தொண்டனுக்கு மட்டுமல்ல; தமிழகக் காங்கிரஸ் ஊழியனுக்கும் பிறக்கவேண்டுமே. அந்தத் துணிவு பிறக்கும நாளன்றோ, குட்டக்குட்டக் குனியும் இந்த ஈனத்தனம் பறக்கும்நாள்!

—ப. கண்ணன்.






[முன் இதழ் தொடர்ச்சி]

**இராம:-** ஐயோ!... சீதையை என்னன்னு சொல்லிடா சமாதானப்படுத்தறது?

(யோசித்தபடி உலாவுகிறான். அருகே பாதையில் புரவி பூட்டிய தேர் போகும் சப்தம் கேட்கிறது. இராமம் அப்பக்கம் பார்க்கிறான். இலக்குவனும் பார்க்கிறான்)

**இராம:-** அதோ,அங்கே போறது காமவல்லியோட ரதம். சம்புகுமாரன் அதிலே இருக்கான். பக்கத்திலே காமவல்லி போலத்தான் இருக்கு! (**அஞ்சி**) அடடே! இவ்வளவு தூரம் எதுக்கு வந்தா? தம்பி! நாம்ப பொறப்படுவோம்!

**இலக்:-** ஏன்? என்ன பயமண்ணா?

**இராம:-** பயமா? (**சிரித்து**) அது ஒண்ணுமில்லே. சீதை கோவிச்சுக்குவளே, நான் உடனே போயி சீதையை சமாதானப்படுத்தணும். நீஅப்பறம் வறயா?

**இலக்:-** ஆமாண்ணா! முயல் பிடிச்சுண்டு வர்றேன்! நீங்க போங்க.

**இராம:-** தம்பி, லட்சுமணா! ஜாக்ரதை!முயலுக்கு வைக்கற கண்ணியிலே,புலி விழுந்திடப் போறது!

**இலக்:-** விழுந்தா என்ன? விட்டுடுவனா பிடிக்காமெ? இந்த லட்சுமணங்கிட்டியா அது நடக்கும்?

(இராமன் வேகமாகப் போகிறான். இலக்குவன் தேர் போன திக்கில் போகிறான்)

### காட்சி 23.

**இடம்:** பூக்காடு.

**காலம்:** பிற்பகல்.

(இரதத்தில் வந்த சம்புகுமாரனும் ஐவணமும் இறங்கிச் சென்று, மூலிகைப் பூ தேடுகின்றனர்)

**ஐவண:-** இளவரசே!நாம்ப காந்தமருக்குத் தெரியாமெ மூலிகைப் பூவைப் பறிக்க வந்துட்டோம். கெடைக்காமெ திரும்பினோம்; ரொம்ப அவமானம்!

**சம்பு:-** அதுசரி, இங்கெதானே பூ இருக்குதுண்ணு சொன்னாரு? பூவை நீ பாத்திருக்கியல்ல?

**ஐவண:-** தாமரையைவிடப் பெரிசா இருக்குமாம். நெறம், ரெத்தச் சிவப்பாம்! ஆனா... செடி,எப்படியிருக்குங்கிறதை சொல்லலியே!

..ர் ! ஐவணம்!இது, திருட்டுப்
..ருண ..ாலு குருடனுங்க சேர்ந்து
கதையால்ல இருக்குது!
.., தாமரைப் பூவைவிடப் பெரிசா,
..பா இருக்குமா? அதையாச்சும் தெரிஞ்
..டுவந்தியே! உம்... தேடு! தேடு! நானும்
தேடிப்பார்க்கறேன்.

(வேறுபக்கம் போகிருன். அப்போது இலக்குவன் வருகிருன். ஐவணத்தைப் பார்த்து மகாராணி காமவல்லியென்றே கருதுகிருன். ஆசை கொள்கிருன்)

**இலக்:-** (நெருங்கி) மகாராணி! நமஸ்காரம்!

**ஐவண:-** (திடுக்கிட்டு, வியந்து) ஆங்!...மகாராணியா?... யாரையா நீர்?

**இலக்:-** நான் ஒரு தேவன்.

**ஐவண:-** தேவனு? மனிதரைப் போல இருக்கிறீரே!

**இலக்:-** உருவத்திலே மனுஷா, விஷயத்திலே தேவாள்! விந்தியநாட்டு மகாராணி! நானும் எத்தனையோ ஸ்திரீகளைப் பார்த்திருக்கிறேன்; இந்த லோகத்திலே இருக்கிற அழகான ஸ்திரீகளுக்கெல்லாம் நீ மகாராணிதான்! சந்தேகமேயில்லே! காமவல்லியென்கிற திருநாமம், நோக்குப் பொருந்தியிருக்கருப்லே வேறே யாருக்கும் பொருந்தாது. அடடா! என்ன லட்சணம்! என்ன லட்லணம்!! நீ சர்வாங்க சௌந்தர்யவதி!

**ஐவண:-** இந்தாய்யா! என்ன வருணிக்கிறே? நான் காமவல்லியுமல்ல; மகாராணியுமல்ல! அவங்களோட வேலேக்காரி. நீ வந்த வேலையைப் பாத்துகிட்டு போய்யா!

**இலக்:-** இப்ப வந்த வேலையைத்தானே பார்க்கறேன். மகாராணி! தன்னையே மறைச்சு, தன்னோட பெருமையெல்லாம் மறச்சுப் பேசற இந்தத் தன்மை, ஒன்னோட அடக்கம், அன்பு, அறிவு இவைகளையே காட்றது! ரொம்ப சந்தோஷம்!

**ஐவண:-** (கடுப்பாக) சந்தோஷந்தானே? அப்படியானு, சந்தோஷமாகவே இங்கேருந்து போயிடு!

**இலக்:-** உண்மையான சந்தோஷம், ஒரு ஆணும் பெண்ணும்கைகோர்த்து காலிணைஞ்சு நடக்கறதிலேதானே காணமுடியும்? காமல்லி! என் அண்ணனை நீ அடைய விரும்பினே; அவர் தனது சகதர்மிணியோட வந்திருக்கார். மன்னி சீதை ரொம்ப பொல்லாதவ; அவளுக்கு பயந்துண்டு ஒன்னை நிராகரிச்சுட்டார். நான் அப்படியில்லே! மூக்கணங் கயிறு இல்லாத காளை; கட்டுப்பாடில்லாத கட்டை; மனப்பூர்வ ஓமேலே ஆசை வச்சிட்டேன்! நேக்கு அழகு, அந்தஸ்து, பராக்கிரமம் எதிலேயும் கொறையில்லே! நாம்ப ரெண்டு பேரும ராஜாவும், ராணியுமா காலங்கழிக்கலாம், வா! (நெருங்கி)

**ஐவண:-** (விலகி, சினந்து) சீ! மனிதப் பதரே! நீயா தேவன்? மனித உருவத்திலே ஒரு பன்றி! மானங்கெட்டவனே! பொய் பித்தலாட்டத்தையே பக்தியும், பஜனையுமாகக் கொண்டு காலட்சேபம் செய்யும் கூட்டத்தைச் சேர்ந்தவன் அண்ணன்! அவனுக்குத் தம்பியா நீ? ரெண்டு பேரும் சரியான பேர் வழிங்கத்தான்; சண்டாளப் பசங்க!

**இலக்:-** காமவல்லி! ஒன்னோட பேச்சு நேக்கு ஆசையைத்தான் அதிகப்படுத்தறது! அவனுக்குத் தம்பீன்னு அலட்சியமா சொல்லாதே! ஸ்ரீ ராமச்சந்த்ரமூர்த்தியின் இளைய பெருமாள் இலட்சுமணசாமீன்னு சொல்லு!

**ஐவண:-** (வியந்து) ஆங்! அந்தச் சண்டாளனுங்க நீங்கதானு?

**இலக்:-** சண்டாளரல்லடி நாங்கள்; சத்வ குண போதகர்கள்! சாலோக சாமீப, சாயுச்ய பதவிக்கு சொந்தக்காராள்! இன்பம்வேணுமானு மரியாயாதையா எணங்கிடு! கோபம் வர்றதுக்கு முன்னமேயே கொஞ்சிப் பேசிடு எங்கிட்டே! விடமாட்டேன்! என்னைத் தடுக்க இங்கே எந்தப் பயலுமில்லே!

**ஐவண:-** (சினந்து) அஞைச்சார அடிவண்டலே! உயிரே போனலும் ஒனக்கு எணங்கமாட்டேன்!

**இலக்:-** ஆங்! மாட்டியா? பார்க்கறேண்டி!

(ஐவணத்தை பலாத்காரமாக அலறித் துடிக்க, அலாக்காகத் தூக்கிச் செல்லுகிருன் இலக்குவன். கையிலே கம்போடு ஓடிவருகிருன் சம்புகுமாரன். இலக்குவனைச் சாடுகிருன். ஐவணத்தைக் கீழே விட்டுத் திரும்பிப் பார்க்கிருன் இலக்குவன்)

**சம்பு:-** பேடிப்பயலே! ஏண்டா இந்த அக்கிரமம்? யாரடா நீ?

**இலக்:-** நீ யாரடா; வாண்டுப் பயலே?



**சம்பு:-** இந்த நாட்டின் மன்னனுக முடிபுனைந்து, உன்னைப் போன்ற பெண் திருடிப் பயல்களை தண்டிக்க வேண்டிய இளவரசன்; சம்புகுமாரனடா; சம்புகுமாரன், நான்!

**இலக்:-** ஓ! நீதானு அந்தத் தறுதலே? பெரியவர் சின்னவர் என்கிற மரியாதையில்லாமல் நடந்த மடப்பயலே! நல்லா மாட்டினே ஏங்கிட்டே! எமலோகத்துக்கே ஒன்னை அனுப்பறேன்!

(இடுப்பிலிருந்த குத்துவாளை எடுத்துக் கொண்டு சிறுவன் மீது பாய்கிருன். தொண்ணையால் இலக்குவனை எதிர்த்துச் சண்டையிடுகிருன் சம்புகுமாரன்)

**ஐவண:-** (பதறி) ஐயோ! இளவரசே! இளவரசே!......

(இலக்குவன் சம்புகுமாரனைக் குத்தி விடுகிருன். "ஐயோ! அம்மா!" என்று வீழ்ந்து மடிகிருன். சிறுவன்)

**ஐவண:-** (மேலும் பதறி) ஐயோ! கொண்ணுட்டானே இளவரசரை! கொண்ணுட்டானே பாவிப்பய!.... (சோகமாக) ஐயயோ! வாணு! வீரா! காந்தமரே! ஓடியாங்க; ஓடியாங்க! அநியாயக் கொலே! அக்ரமக் கொலே! ஓடியாங்க ஓடியாங்க! ஆரியப் பிசாசு கொண்ணுட்டுது சம்புகுமாரனை! வந்து பிடிங்க இந்தப் பிசாசை! ஓடியாங்க! ஓடியாங்க!

(அவர்கள் எல்லோரும் வந்து விடுவார்களோ என்று அஞ்சுகிருன் இலக்குவன். சுற்றுமுற்றும் பார்க்கிருன். தப்பிப் பிழைக்க ஓடுகிருன். அவன் போய் விட்டான் எனக் கண்டதும், அவசரமாக சம்புகுமாரனின் பிணத்தைக் தூக்கிக்கொண்டு தேருக்கு ஓடுகிருள் ஐவணம்)

## காட்சி 24.

**இடம்:** பஞ்சவடி.

**காலம்:** முன்னிரவு.

(குடிசையில் இராமனும், சீதையும் இருக்கின்றனர்)

**சீதை:-** (கோபமாக) போதும் நிறுத்தும்! கோபத்தைக் கிளப்பாதீர்! பேச்சிலே பெரும் வள்ளல்; செய்கையிலே ..ற.. ஒம்ம பேச்சுக்கும் செயலுக்..மா.. ..ல் ஆட.. தம் கெடையாதே! ..என்..

**இரா:-** எனில்லே? சீதே! ஒம.. நேக்கு அளவுகடந்த ப்ரீதின்னு அடி.. சொல்லுவேன்! ஒரு பதினஞ்சு நாளா ஒன்னை விட்டுப் போயிட்டதுக்காக திட்டறே! வாயிலே வந்தபடி வையறே! நீயும் ஒரு மனுஷனுன்னு காறித்துப்பறே! நேக்கு கோவம் வர்றதா பார்த்தையாடி? இதுதாண்டி உண்மையான ப்ரீதி!

**சீதை:-** (வெறுப்போடு) சே! சே! இதுவா ப்ரீதி? கெஞ்சினு மிஞ்சறதும், மிஞ்சினு கெஞ்சறதுமான கோழைத்தனம்னு, இது?

**இராம:-** சீதே! எருதோட புண்ணு காக்கைக்குத் தெரியாதுண்ணு சொல்லுவா. எங்கெங்கெங்கே சுத்தியலேஞ்சு, எவ்வளவு ஆபத்தெல்லாம் கடந்து வந்திருக்கேன்னு நோக்குத் தெரியுமோ?

**சீதை:-** நீர் ரொம்ப யோக்யர். தவறு செய்யத்தான் ஓமக்குத் தெரியாதே! எங்கெயாவது கைவரிசையைக் காட்டியிருப்பீர்; ஏதாச்சும் கெடைச்சிருக்கும்! அதுக்கு நானு பொறுப்பாளி? நாந்தான் ஆரம்பத்திலேருந்தே சொல்றேனே, திராவிட ஜனங்களோட விரோதிக்க வேணும்னு, கேட்டாத்தானே!

**இராம:-** (சினந்து) சீதே! இனிமேலும் என்னுலே பொறுக்க முடியாது! என்னைத் திட்றதையே விரதமா வச்சுண்டையோ? நேக்கு புத்தி சொல்றதையே வேலேயா வச்சுண்டையோ? நான் ஒரு வீர புருஷன்; சக்கரவர்த்தி திருமகன்கிறதையே மறந்திட்டையாடி, மரியாதை கெட்டவளே?

**சீதை:-** (சினந்து) நான் எதையும் மறக்கலே! சீதையைக் கண்ணின் பாவைபோலக் காப்பாத்துவேன். வனவாசத்திலே ஆபத்து வந்தா நீங்கதான் தொணேன்னு எங்கப்பா ஜனக சக்கரவர்த்தியிடம் கெஞ்சினதை நீர் தான் மறந்திட்டீர்! இல்லேன்னு; என்னை விட்டுட்டு, மகாராணி காமவல்லியிடம் சுகமடையப் போயிருப்பீரோ? கட்டிய மனைவிக்குத் துரோகம் செய்யத் துணிஞ்சிருப்பீரோ?

**இராம:-** (அஞ்சி, வியந்து) என்ன? என்ன மகாராணி காமவல்லியிடம் சுகமடைஞ்சேனு நோக்கு துரோகம் செய்தேனு? யாரடி சொன்ன இந்த கட்டுக்கதையை?

...கதையல்ல சுவாமி! கண் ...ருண் ஒ ஒம்மை காமவல்லிகிட்டே ...னுப்பிச்சாரோ, அந்த மகரிஷி ...னி! லோபாவே நேக்கு சொன்னாள்!

**இராம:-** **(அஞ்சி)** லோபாவா? இங்கே எப்ப வந்தா? எதுக்கு வந்தா? ஏன் வந்தா?

**சீதை:-** ஏன் இப்படிப் பதர்றீர்? நாலு நாளைக்கு முன்னே வந்தா, அன்னிக்கி ஆஸ்ர மத்திலே நடந்ததெல்லாம் சொன்னாள். நேக்குத் தெரியாதாஒம்மோட யோக்யதை? எங்கப் பாகிட்டக்க சொல்லி ஒம்மை என்னபாடு படுத்தறேன் பாரும்!

**இராம:-** **(அஞ்சி)** ஐயயோ! சீதே! வேணுண்டி சீதே! லோபா கெட்டுப்போன முண்டை. அவபேச்சை கேக்காதே! நேக்கு அவமானம் தேடாதே! **(கையடித்து)** நான் சத்தியமா நோக்கு துரோகம் செய்ய மாட்டேண்டி; மாமாவுக்கு சொன்ன வாக்கை மீறி நடக்க மாட்டேண்டி; அவரோட ஆதரவு இல்லேன்னு இந்த வனத்திலே எப்படியடி வாசம் பண்ண முடியும்? சீதே! சீதே! சொல்றவா பேச்சை கேட்டுண்டு என்னை சோதிக்காதடி! ஒண்ணைக் காலே வேணுலும் கட்டிக்கிறேண்டி. இந்தப் பேச்சை இத்தோட விட்டுடு! மறந்துடு! மன்னிச்சுடு!

**(சீதையின் காலைப் பிடிக்கிறான் இராமன். "நாராயண! நாராயண!" என்று சொல்லியவண்ணம் காபாலிக முனிவர் வருகிறார். இராமன் எழுந்து நிற்கிறான்)**

**காபா:-** **(நகைத்து)** அடடா! அசந்தர்ப்பமான வேளையிலே விஜயம் செய்திட்டேனே? நாராயணா! நாராயணா!

**இராம:-** அப்படியொண்ணுமில்லே, சுவாமி! தாம்பத்ய சச்சரவுகள்; இதெல்லாம் எங்கேயும் சகஜந்தானே? பெரியவா திடீர் வருகை என்ன காரணமாகவோ?

**காபா:-** இராமா! உன்னிடம் நிறையப் பேசணுமே. **(சீதையைப் பார்க்கிறார்)**

**இராம:-** பேஷா பேசுவமே! **(சீதையைப் பார்த்து)** சீதை மகா உத்தமி, புருஷாளோட கார்யாதிகளிலே தலையிடவே மாட்டாள். சமையல் வேலையும் இருக்கும், சீதே!.......

**சீதை:-** **(கடுப்பாக)** நீங்க பேசறதைக் கேட்டுண்டு நில்லூன்னு சொன்னாலும் நான் நிற்கத் தயாராயில்லே! எதையும் பேசுங்க; எப்படியும் செய்யுங்க; எந்த கதியாவும் போங்க!!

**(வெடுக்கென்று முகம் திருப்பி உள்ளறைக்குப் போகிறாள். அசட்டுத்தனமாகச் சிரிக்கின்றனர் இராமனும், காபாலிகரும்)**

**காபா:-** **(பதற்றமாக)** இராமா! நம்ம மகரிஷிகள் சிலருக்கு ஆபத்து நேர்ந்துடுத்தே! யாகம் செய்ததைக் குத்தம்னு சொல்லி, விந்தியத்து அரசாங்க வீராள் பிடிச்சுண்டு போயிட்டாளே! தண்டிப்பா போலேருக்கே! என்ன ராமா செய்யறது?

**இராம:-** ஆங்! முன்னாலெல்லாம் யாகத்தைத் தடுப்பான்னுதானே சொன்னேள்! பிடிச்சுண்டே போயிட்டாளோ? காபாலிகரே! நேக்கு மனம் பதர்றது! இப்ப என் கையிலே கொஞ்சம் படை வீராளும், ஆயுதங்களும் இருந்தா, அந்த ராட்சதாளை துவம்சமே செஞ்சுடுவேன்! ஒண்ணுமில்லியே!

**காபா:-** ஏனில்லே? ராபா! கொம்பன், சிலம்பன் போன்ற வளைவேடாள் நம் பக்கத்திலே இருக்கா! நாம்ப எள்ளுங்கிறதுக்குள்ளே எண்ணெயா நிப்பா. நன்னா தயார் பண்ணியிருக்கோம். அவா கூட்டத்தைக் கொண்டே பகைவாளை ஒழிச்சுக் கட்டணும்! ஆமா, மகாராணி காமவல்லி ஒன்னோட வலையிலே விழுந்திட்டதாகக் கேள்விப்பட்டேனே! என்ன நடந்தது? ஏது ஆச்சு? சுபகரம்தானே?

**இராம:-** வலையிலே விழுந்தது நிஜந்தான் சுவாமி! தாவிப் பிடிக்கறதுக்குள்ளே தப்பி ஓடிட்டுதே! என்னை நன்னா புரிஞ்சுனுட்டா காமவல்லி. சாகசம், இனிமே நிச்சயமா அவகிட்டே சாயாது!

**காபா:-** அப்படியானா, சண்டைதான் வழி! இராமா! நமக்கு உதவிசெய்ய யாருமில்லேன்னு நெனைக்காதே; நீ கோதண்டத்தைத் தூக்கினா, நோக்குப் பின்னாலே லட்சம் வீராளை அனுப்ப நேக்குத் தெறமையுண்டு! தீரமுண்டு! பயப்படாதே! பயப்படாதே!

**(இராமனைத் தட்டிக் கொடுக்கிறார் காபாலிக முனிவர். வணங்குகிறான் இராமன்)**

**(வளரும்)**



<u>சூடச் சுட.</u>

# புலால் மறுப்புக் கொள்கையும் "கல்கி"யாரின் புது மெருகும்!

புலால் உண்ணக் கூடாது என்ற கொள்கையுடையவர்கள் உலகின் எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்றனர்; இருக்கத்தான் வேண்டும். அத்தகையோர் சேர்ந்து "உலகப் புலால் மறுத்தல் மாநாடு" பல நாடுகளிலும் நடத்தி வருகின்றனர்-பதினான்கு ஆண்டுகளாக!

நவம்பர் 9-ம் நாள் முதல் நான்கு நாட்கள் பம்பாயில்நடந்த அம்மாநாடு நவம்பர் 28 முதல் 30 வரை சென்னையில் நடைபெறுகிறது. நல்லன யார் செய்யினும் பாராட்டி வரவேற்போம். வாழ்த்துவோம்!

புலால் உண்பது கொல்லா நெறிக்குப் புறம்பானது, உடல், உள்ளம், அறிவு வளத்திற்கு அடுக்காததுஎனக்கூறின் பொருந்தலாம். விஞ்ஞான முறையோடு விளக்கம் தந்தால் ஏற்கலாம்.

"நம் நாட்டுப் பெரியோர்களான பீஷ்மர், மனு இவர்கள் முதல் காந்திஜி வரையில் பல ஞானிகள் சைவ உணவே மனிதனுக்கு உகந்தது என்று வற்புறுத்தி வந்திருக்கிறார்கள்" என்கிறது "கல்கி" ஏடு, நவம்பர் 24, இதழில்! இது நகைப்புக்கிடமான மூத்த பொய்மை!

**மனுவையும் பீஷ்மரையும் இந்த நாட்டுப் பெரியோர்கள் என்று கூறுவதே தவறு. இந்த திராவிட நாட்டின் பகைவர்கள்; திராவிட கலாச்சாரத்தின் எதிரிகள் அவர்கள்!**

**மேலும் அவர்கள் புலால் உண்ணும் கொள்கையான வைதிக** நெறியின் பிரதிநிதிகள் என்பதோடு, புலால் மறுக்கும் சீவகாருண்ய சீலத்தின் கடும் விரோதிகளும் ஆவார்கள்.

யாக்ஞவல்கியர் கூறுகிறார்:

"மஹோக்ஷம் வா மஹாஜம் வா
ச்ரோத்ரியாயோப கல்பயேத்
ஸத்க்ரியா, ஸேவனம்
ஸ்வாதுபோஜனம் ஸூந்ருதம் வச:"

இதன் பொருள்: வேதமறிந்த பிராம்மணன் வீட்டிற்கு வந்தால், ஒரு பெரிய எருதையேனும், அது கிடைக்காதவிடத்து கொழுத்த வெள்ளாட்டையேனும் கொன்று விருந்து செய்ய வேண்டும். இன்சொற்களால் அவனை மகிழ்விக்க வேண்டும்.

இது மனுதர்மத்தின் சாரம்! இதுபோன்ற புலால் சாஸ்திரங்களைச் செய்தவர்களும், இதன் வழி ஒழுகுபவர்களும் எத்தகைய மாமிச வெறியர்களாக—கொலை பாதகர்களாக இருக்க வேண்டும்? இவர்களா புலாலை மறுப்பவர்கள்? இவாகளா நம் நாட்டுப் பெரியோர்கள்? நமக்கு வழி காட்டிகள்?

"கொல்லான் புலாலை மறுத்தானை கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" என்ற ... ழறம் எங்கே? "மா... கிடைக்காவிட்டால் ஆட்... வது அறுத்துப் போடு" என்... கூறும் ஆரிய தர்மம் எங்கே?

"கல்கி"யார் புலால் உண்ணாமையை ஆதரிப்பதை நாம் மனமுவந்து வரவேற்போம். அதற்காக, கசாப்புக் கடைக்காரனை கருணை வள்ளல் என்றும், காசுக்குப் பாய்விரிக்கும் குச்சுக்காரியை கற்புக்கரசியென்றும் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? பழைய கந்தல்கள் புதுச்சலவைக்குத்தாங்கா; பழைய அக்கிரமங்களுக்குப் புது மெருகு வேண்டாம்! சங்கராச்சாரியாரையும், திருவள்ளுவரையும் ஒன்றாக இணைத்து எழுதி, படம் போட்டுக் காட்டினாலும் அது வேறு இதுவேறு என்று பிரித்தறியும் சக்தி — பகுத்தறியும் பண்பு மக்களிடம் வளர்ந்து வருகிறது என்பதை "கல்கி"யார் மறப்பது நலமன்று!

வள்ளுவர் நூலுக்குப் புதிய பூணூல் போடும் குழப்பத்தில், கோமேதம், அஸ்வமேதம், நரமேதம், அஜமேதம் போன்ற ஆரியக் கொலை வேள்விகளுக்குப் புது மெருகேற்றி சித்திரம் புனைந்து, புலால் மறுப்பு மாநாட்டின் காட்சிப் பொருளாக வைக்க விரும்பலாம் "கல்கி"யார்! விருப்பம் மட்டும் போதாது; அதிலே விவேகமும் இருக்க வேண்டுமே!


# இராச புதல்வன்

**"அமரன்" ஆக்கிய அருமை நாடகம்!**

△ △

**தென்றல் வெளியீடாக**
**விரைவில் வருகிறது.**

## ...க்கணை

இம்முறை பரிசு பெற்றவர்:
● டி. பி. பழனிசாமி,
தொளசம்பட்டி,
ஓமலூர் தாலூக்கா,
சேலம் மாவட்டம்.

**ப. க. சின்னபப்ன், கோயம்புத்தூர்.**

கே: தி. க. வின் சட்டப் புத்தக எரிப்புப் போரில், தி. மு. க. வின் பங்கு என்ன?

ப: *அனுதாபம்!*

* * *

கே: நடிகர் எம். ஆர். ராதா திராவிட கழகா? சினிமாக் கட்சியா?

ப: *தி. க. வின் சொள்கையைப் பேசிக் கொண்டே அதற்கு விரோதமாக நடக்க முடியும்; சினிமாவை ஒழிப்பதாகச் சொல்லிக்கொண்டே சினிமாத் தொழிலில் ஈடுபட முடியும் என்பதை மெய்ப்பிக்கும் ஒரு புதிய மெய்யன்பர் கட்சி!*

**சி. சு. தேவராசன், சிறுதையூர்.**

கே: ம. பொ. சி. இப்போது எங்கே இருக்கிறார்? என்ன செய்கிறார்?

ப: *ஒரு காலத்தில் பரிகசித்த சினிமா உலகில் இருக்கிறார்! திராவிடக் கட்டபொம்மன் கதைக்கு ஆதாரம் தேடும் வேலையில் அலைந்து கொண்டிருக்கிறார்!*

* * *

கே: அண்ணாவின் வெற்றிக்கும், காமராஜர் வெற்றிக்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப: *அண்ணாவின் வெற்றி விடுதலை வேட்கையின் வெற்றி; அதனாலே விடுதலை கோரும் பெரியாரைக் சட்டமன்றத்திலே ஆதரித்தது; காமராஜரின் வெற்றி ஆதிக்க வெறியரின் கையாள் வெற்றி; அதனாலே சட்டசபையிலே பெரியாரை ஒடுக்கிட சட்டம் போட்டது!*

**கோவை. செயபாலன், நாகப்பட்டினம்.**

கே: ஒருவன் சிறந்த மதிப்பைப் பெற்று. சிறந்த நடிகன் என்று பெயர் வாங்க நடிப்பு தேவையா? முயற்சி தேவையா?

ப: *சிறந்த சித்திரம் எழுதி சிறந்த ஓவியன் என்று பெயர் வாங்குவோன், முதலில் எழுத முயலுகிறான்; பிறகு முன்னேறுகிறான்; அதன் பிறகே பெயர் பெருகிறான்!*

**● டி. பி. பழனிசாமி, தொளசம்பட்டி.**

கே: சொற்சுவை, பொருட்சுவை, மொழிச்சுவை, இலக்கியச் சுவை ஆகிய இவற்றில் எச்சுவை சிறந்தது?

ப: *சொல், பொருள், மொழி இவை பால், பழம், சர்க்கரை போன்ற தனிச்சுவையுள்ளவை. இம் மூன்றையும் ஒருங்கு சேர்த்த இலக்கியச் சுவையே சிறந்தது!*


செந்தாமரை
பீடிகள்



புதிய சுவை, புதிய சுறு சுறுப்பு நல்குவது
எங்கும் விற்பனையாளர் தேவை.
எம். பழனியப்பன்,
அதிபர்:
செந்தாமரை பீடி தொழிற்சாலை,
சலகண்டபுரம்,
(சேலம் மாவட்டம்.)


## பொன் மொழிகள்

**சாமர்த்தியத்தைக் காட்டிலும் தன்னம்பிக்கையே சொல்லாடலில் வெற்றி தரும்.**

—ரோஷிவைகண்டு.

**மக்களிடை இரக்கமும், சகோதர அபிமானமும், வாழ்க்கையிலே பெற முயல வேண்டிய பேருணர்ச்சிகள்.**

—மார்லி.

**குளிர் மிகுதிதான்; கந்தை உடைதான்; ஆனால், என் ஒழுக்கம் எனக்கு வெதுவெதுப்பைத் தருகின்றது.**

—ட்ரைட்டன்.

**ரோஜாச் செடியில் முள் இருப்பதற்கு வருந்தாதே; முட்செடியில் மலர் இருப்பதற்கு மகிழ்ச்சி கொள்.**

—ஆவ்பரி.

**படித்துக்கொண்டே இருந்தால் அறிவு பெருகும் என்று எண்ணுவது, உண்டு கொண்டே இருந்தால் பலம் பெருகும் என்பதை ஒக்கும்.**

—புல்லர்.

**மகிழ்ச்சியோடு இருக்க, ஒருவன் பெருமை வாய்ந்தவனாக இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை.**

—இங்கர்சால்.

**கருப்புக்கட்டியை யார் தின்றாலும் இனிக்கும்; தேவர்களே தின்றாலும் வேப்பங்காய் கசக்கும்.**

—நாலடியார்.

**பெரிய விஷயத்திற்காக உயிர் துறப்பவர் ஒருநாளும் தோற்றவாராகார்.**

—பைரன்.



(2-ம் பக்கம் தொடர்ச்சி)

லிருந்து சிந்தும் சென்னீரை சிந்தனையாளர்களை நக்கிக் குடிக்கச் சொன்னார்கள், அந்த நயவஞ்சகச் சாமியார்கள்! (பாதிரிகள்) இவ்வழி வாழ்வின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்காது. இம் மணகுதிரையை நம்பி வாழ்க்கைக் கடலை கடக்க முடியாது.

வேறொரு வழி இருக்கிறது. அதுதான் மக்களுக்காகவாழ்வது. அதற்காக நாம் அறிவை அபிவிருத்தி செய்வோம். உள்ளத்தை நாகரிகப் படுத்துவோம். அறியாமையை அகற்றி, வறுமையை விலக்கி, குள்ளர்களைக் களைந்து மக்களினம் முன்னேற, மக்கள் இனம் இன்பத்துக்குரிய வழிகளை ஆராய்ந்து அதற்கு அனுகூலமாக வாழ்க்கை நடத்துவோம். பலனுக்கு எட்டாத சக்திகளை எல்லாம் நம் வயப்படுத்தி உலகின் இன்பத்தை விருத்திசெய்ய, உடலின் தேவைகளைப் பூர்த்திசெய்ய, மனப்பசியைத் தணிக்க, இயற்கை ரகசியங்களை அறிய நம்மாலியன்ற முயற்சிகளைச் செய்வோம். செய்துகொண்டிருப்போம். செய்பவர்கள் தம்மைத்தாமே காப்பாற்றிக் கொள்ளட்டும். அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டாம். நாம் மக்களுக்காகவே வாழ்வோம். இயற்கை இரகசியங்களை அறிய எண்ணுவோர் நம் போன்றவர்களை இம்சிக்கவில்லை. வானிலை ஆராய்ச்சிகாரர்கள், ரசாயன சாஸ்திரிகள் நம்போன்றவர்களை வதைக்கவில்லை. அவர்கள் மக்களுக்காக சிறைகளையோ இரும்புச்சாலைகளையோ கண்டுபிடிக்கவில்லை. பூகர்ப்ப சாஸ்திரிகள் சித்ரவதை செய்யும் கருவிகளைச் செய்யவில்லை.

தத்துவ ஞானிகள் தம்கொள்கைக்குத் தலை வணங்காதவரை துன்புறுத்தியல்ல தம் கொள்கையை நிலை நாட்டியது. சிந்தனைச் செல்வர்கள் எல்லாம் மக்கள் சமுதாயம்செம்மையுறவேவாழ்ந்து வந்தனர். அவர்கள் உண்மையை உரைத்தார்கள். உண்மையாகவே நடந்தார்கள். உண்மை அறியை வளர்த்தார்கள். உள்ளநிலையை உள்ளபடியே பிறருக்கு விளக்கிக் காட்டினார்கள். உயர்குணம் படைத்தோர் அந்தப் பெரியோர்கள் என்பதை யாவரும் உணர வேண்டும்.

இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று ஒடுக்கமான வழி. அவ்வழி சுயநலமிகளுக்குத்தான் சொந்தம். கணவனும், மனைவியும் தான் பெற்ற பச்சைக் குழந்தைகளை அழைத்துக்கொண்டு அப்பாதையில் செல்ல முடியாது. அவ்வழி மூடபக்தி மணற்காட்டினூடே செல்கிறது. அப்பாதையில் அதிகப் பிரயாணிகளை நாம் பார்க்க முடியாது. சிற்சில நேரங்களில் சில சிறுமதியாளர்கள்தான் செல்லுவர். அவ்வொடுங்கிய பாதையிலே உல்லாசமாக உலாவ முடியாது. கண்ணாடித்துண்டுகளும், கற்செதில்களும் நம் காலைப் பிளக்கும். கஷ்டப்பட்டுத்தான் செல்ல வேண்டும். முட்கள் நம் காலின் மென்மையை சோதிக்கும். சோர்ந்துவிடக் கூடாது. சப்பாத்திப் புதர்கள் ஓரத்தில் உண்டு. அங்கு பூக்களும் இருக்கும். அதன் மறைவிலே பூநாகம் மறைந்திருக்கும். நீங்கள் புது எருசலேம் நகரை நோக்கிக்கொண்டே, மனைவியையோ, பிள்ளையையோ, நண்பர்களையோ திரும்பிப்பார்க்காமல் முன்பார்த்து நீங்கள் முன்னேற வேண்டும். உன் ஆத்மாவிற்கு மட்டும் மோட்சம் கிடைக்க வழி தேட வேண்டும். உன் அன்புக்குரியவர்கள் அல்லறபட நீ மட்டும் ஆனந்தமாக இரு. சுற்றத்தார் துன்பத்தால் சோர்ந்து நிற்க நீ மட்டும் சுவர்க்கத்தில் சுகமாக இரு. நீ இதை நம்பு. கட்டாயம் நம்பு. இடர் ஏற்படின் ஏற்றுக் கொள். எப்பக்கமும் திரும்பிப் பாராதே. முன்நோக்கிக்கொண்டு நேரே நட. சுயநலம் வாய்ந்த பயனற்ற வாடிய உன் ஆத்மாவை நீ காப்பாற்றிக்கொள்.

(அடுத்த இதழில் முடிவுறும்)


## இனிய வெளியீடுகள்.

**ப. கண்ணன்.**

| | |
|---|---|
| புரட்சிப் பாடகன் | 1-50 |
| வீரவாலி | 1-25 |
| ஜமீன்தார் | 1-00 |
| காதல் மணம் | 0-50 |
| கன்னியின் சபதம் | 0-50 |
| சிந்தனைச் சித்திரம் | 0-62 |
| மின்னொளி | 0-37 |

**மு. கருணாநிதி.**

| | |
|---|---|
| ஒரே முத்தம் | 1-25 |

**சி. பி. சிற்றரசு.**

| | |
|---|---|
| சிந்தனைச் சுடர் | 0-31 |

**அறிஞர் இங்கர்சால்**
தமிழில்: இரா. நெடுஞ்செழியன்

| | |
|---|---|
| சமுதாய விடுதலை | 0-75 |

**பாவலர், வேலாயுதசாமி.**
திருக்குறள் இசைப்பாடல்கள்

| | |
|---|---|
| அறத்துப்பால் | 0-44 |
| அறிவுத் துளிர் | 0-19 |

**குஞ்சிதம்—வடிவேலு.**

| | |
|---|---|
| கெட்டிக்காரன் | 0-16 |
| பைங்கிளி | 0-12 |
| ஆலமரத்துப்பேய் | 0-12 |
| வால்முளைத்த சாமியார் | 0-12 |
| அன்புமணி | 0-12 |

விற்பனையாளர்களுக்கு ஏற்ற கழிவு உண்டு.

**தென்றல்**
**நூற்பதிப்புக் கழகம்,**
சலகண்டபுரம். சேலம் மாவட்டம்.

**தென்றல் நூல்கள் சென்னையில் கிடைக்குமிடம்:**
**பாரி நிலையம்,**
**59, பிராட்வே, சென்னை.**

**தென்றல் நூல்கள் இலங்கையில் கிடைக்குமிடம்:**
**ப. சுப்ரமணியம்,**
பகுத்தறிவுப் பண்ணை,
**113, கடல் தெரு, கொழும்பு.**



ரேடியோ நாடகம்.

## உயரும் உழைப்பாளி.

தங்கள் திருச்சி வானொலி நாடகமான "உயரும் உழைப்பாளி"யை 18-11-57 அன்று சுவைத்து மகிழ்ந்தோம். நானும் நண்பர்களும்! கடமை, கண்ணியம், தியாகம் மிக்க கந்தப்பனின் பாத்திர சிருஷ்டி கதைக்கு மட்டுமல்ல; கருத்துக்கும் சிறந்தது! சிறியகதை பெரிய எண்ணக் குவியல்! படிப்பறிவற்ற பாமர மக்களின் வாழ்க்கைச் சூழ்நிலையை மையமாக வைத்து, கற்பனையைச் சுழற்றி இருப்பது நல்ல முறை! உரையாடல் கொச்சைத் தமிழில் புனைந்திருப்பதால் சிலசமயம் புரிந்து ரசிக்க முடியவில்லை. இனிமையான பாடல் இரண்டொன்று சேர்க்காததால் சுவையான உணவில் உப்பில்லாதது போல் இருந்தது! நாற்பத்தைந்து நிமிடங்களில் நாட்டிற்கு வேண்டிய நல்ல கருத்தை நாடக உருவில் சொல்லி விடுவது—அதே நேரத்தில் சுவைக்கும் வண்ணமும் செய்வது கடினமான வேலைதான்! தங்கள் எழுதுகோல் அதைத் திறம்படச் செய்திருப்பதைப் போற்றத்தானே வேண்டும்! வளர்க உங்கள் முயற்சி!

—இரா. இலக்குவன்.

கதை: கந்தப்பன் ஓர் ஏழை-மரமேறி! குண்டுமல்லிகை நிகர் பாவாயி அவனுக்கு முறைப் பெண்! மணம் செய்ய விரும்புகிறான்! தடைக்கல்லாக நிற்கிறார் ராமதுரை என்ற பணக்காரர்! அவர், ஒரு நெருக்கடியில் பாவாயியின் தந்தை மாரிமுத்துமேல் திருட்டுக் குற்றம் சுமத்தி சிறைக்கனுப்புகிறார்! குடும்ப மரியாதை கருதிதானே குற்றவாளி எனச் சொல்லி மாமனை விடுவிக்கிறான் கந்தப்பன்! இறுதியில் உண்மை வெளியாகி பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத் தலைவரான ராமதுரையே குற்றவாளியாகிறார். பாவாயி கந்தப்பனை மணக்கிறாள்.

வசனம்: கிராமிய நடை! கிராம வாசிகளும் ரசிக்கும் விதத்தில் அமைந்திருந்தது.

நிலைய வாத்ய கோஷ்டியாரின் இசை நன்றாக விருந்தது!

நடிப்பு: கந்தப்பனாக நடித்த சினிமா நடிகர், எம். கே. முஸ்தபா நடிப்பு வெகுஜோர்! மாரிமுத்து எஸ். எஸ். கதிரேசன், பாவாயி எம். எல். இந்திரா, மாரக்காள்—வீரம்மாள் இவர்கள் பேச்சும் வெகு பொருத்தம்! மற்றவர்களும் நன்கு ஒத்துழைத்தனர்.

மொத்தத்தில் "உயரும் உழைப்பாளி" கிராமத்தின் பிரத்தியட்ச நிலையை விளக்கும் ஓர் ஜீவனுள்ள நாடகம்! ஆசிரியர், ப. கண்ணன் அவர்களின் கிராமிய நடை ஓர் வெற்றி!

இத்தகைய நாடகங்களை வானொலி நிலையத்தார் ஒலி பரப்புவது வரவேற்கத் தக்கது!

—ஹுமாயூன்.




சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்—1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

திங்கள் இருமுறை. ஆசிரியர் :- ப. கண்ணன்.

மலர் 7 | 15-12-57 | விலை 0-2-0 (12 காசு) | இதழ் 18


OFFICE OF ... 16 DEC 1957 MADRAS

## உரிமையரசே



## மக்களரசு!

சட்டத்தின் முன்பு சகலரும் சமம். சகலருக்கும் வாழ்க்கையில் சம உரிமைகள் உண்டு. ஆற்றலிலும், அறிவிலும் மனிதர்களுக்குள் பேதங்கள் காணப்படலாம். ஆனால், அளிக்கப்படும் அடிப்படை உரிமைகளில் பேதங்கள் இருக்க எவ்வித நியாயமும் இல்லை. ஒவ்வொரு தனி மனிதனுடைய உரிமைகளையும் பாதுகாக்கப் பலருடைய பொது பலம் பயன்பட வேண்டுமென்ற எண்ணத்தில்தான் சமுதாயம் என்ற அமைப்பு உருவாகக் கூடுமேயல்லாது. எல்லோருடைய உரிமைகளையும் ஒருவனுக்காக, அல்லது சிலருக்காக இழப்பதற்கு மாந்தர் சமுதாய அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. ஆகவே தனி மனிதனுடைய சுதந்திரம் மிகப் புனிதமானது. அதற்கு ஆபத்து என்று எண்ணும்போது சமுதாயம் என்ற சொல்லுக்கே பொருள் இல்லை. தனி மனிதனுடைய சுதந்திரத்தைப் பாதுகாக்கும் அரசுதான் மக்கள் அரசு. தனி மனிதனது சுதந்திரத்தைப் பறிக்கும் அரசு மக்களால் அனுமதிக்கப்படக்கூடாத அரசு ஆகும்.

—ரூஸ்ஸோ.

மூலம்: இங்கர்சால்.

# நல்வழி எது?

[முன் இதழ் தொடர்ச்சி]

தமிழில்: நெடுமாறன்.

சுவர்க்கத்தைப்பற்றிசுவையாகச் சொல்லுகிருர்களே மதவாதிகள். அந்த சுவர்க்கம் செல்லும் ஒடுக்கமானவழி இதுதான். இவ்வழியே இரத்தம் சொட்டச் சொட்ட இருபிறப்பாளர் நொண்டி நொண்டி நடக்கிருர்கள். வேருெரு வழி இருக்கிறது! விசாலம் நிறைந்த வழி அது. பண்படுத்தப்பட்ட பாதை. அப் பாதையை எனக்குக் காட்டு. எல்லோரும் சமமாக நடக்கக் கூடிய சாலையை எனக்குக் காட்டு. மாங்குயில்கூவிடும், ஓடைகள் ஒலிக்கும், கதிரவன் காயும், கழனிகள் ஊடே செல்லும், புட்பச் செடிகள் நிறைந்த புனித பாதையை எனக்குக் காட்டு. மகிழ்ச்சியைத் தரும் மன எழுச்சியை உண்டு பண்ணும்—மனதைத் தூய்மைப் படுத்தும் பாதையை எனக்குக் காட்டு. விழிப்பு ஏற்படுத்தும் விஞ்ஞான சாத்திரங்கள், களிப்பை உண்டாக்கும் கலைகள், சாந்திதரும் சங்கீதம் முதலியவற்றின் துணைகொண்டு அவ்வகலப் பாதையில் நாம் செல்வோமாக. ஆசை மனைவி, அருமைக் குழந்தைகள், அன்புமிக்க நண்பர்களுடன் அப்பாதையிலே நாம்செல்லுவோமாக.

இந்த உலகம் ஒரு பெரிய ஆரஞ்சு மரத்துக்கு ஒப்பாக இருக்கிறது. அதில் பூக்களும், பிஞ்சுகளும், காய்களும், கனிகளும் நிறைந்திருக்கின்றன. மரத்தின் கீழ் உதிர்ந்த பூக்கள், மண்ணோடு மண்ணுகி மக்கி மடிந்து போகின்றன.

ஒவ்வொரு ஆரஞ்சும் ஒரு உயிர். அதைப் பிழியு மட்டும் பிழிந்து அதிலுள்ள ரசத்தை எல்லாம் கிரகித்துக் கொள்வோம். மரணம் நம்மைத் தழுவ வரும்போது அதில் ஒன்றுமில்லை. அது வெறும் சக்கை என்று கூறிட ஆயத்தமாக இருப்போம். நாம் அகலமான இயற்கைப் பாதை வழியே இன்பமாக நடப்போம். நாம் மக்களுக்காக வாழ்வோமாக!

மூட பக்தியால் மூண்ட போர், மதத்திஞல் ஏற்பட்ட மாபாதகங்கள், கடவுளால் ஏற்பட்ட கயமைக் கொடுமைகளுக்கு கணக்குண்டா...? அறியாமைப் பேய் அச்ச இருட்டுடன் சேர்ந்து, மக்களுக் கிழைத்த இன்னல்களை எண்ணிப் பார்த்தால், அம்மம்மா யாருக்குத்தான் பைத்தியம் பிடிக்காது? கழிந்துபோன பழைய நாட்களிலே நமக்கேற்பட்ட பாதகங்களை—புலம்பல்களை, துன்பங்களை, உரத்த குரலில் ஓலமிட்டோமே அதை—அந்த இதயத்தைப் பிழிந்த நிகழ்ச்சிகளை நினைத்துப் பாருங்கள்.

இதோ நான் பார்க்கிறேன், சமுதாயம் சரிவடைவதற்குக் காரணமான சனியன்களை. இதோ நான் காணுகின்றேன். இருட் குகைகளிலே இரையை எதிர்நோக்கிக் கிடக்கும் தெய்வீகப் பாம்புகளின் பிளந்த வாய்களை, ஒளிவீசும் கண்களை, நாக்குகளை, நச்சுப் பற்களையும் பார்க்கின்றேன்! தான் பெற்ற சேய்கள் சர்ப்பக் கடவுளை திருப்திபடுத்த பலியிடப் படுவதையும் நான் பார்க்கிறேன். தந்தம் பூசிய கற்கோயில்கள், மனிதர்கள் சிந்திய இரத்தத்தால் சிவப்பேறியபலி பீடங்களையும் நான் பார்க்கிறேன். பெண்களின் மார்பில், மமதை கொண்ட மாபாவிகள், குருதிப் பசிகொண்ட குடிகேடர்களின் ஈட்டி ஊடுருவிச் செல்வதையும் நான் பார்க்கிறேன். அவதி தாங்க முடியாமல் அவ்வணங்குகள் அலறுவதைக் கண்டு ஆனந்தப்படும் அயோக்கியர்களையும் நான் பார்க்கிறேன்.

வேறு பல ஆலயங்களும் பலி பீடங்களும் என் கண்முன்னே தெரிகின்றன. அங்கு அக்கினிப் பிழம்புகளிலே பச்சிளம் குழந்தைகள் பரிதவித்து துடித்துக்கொண்டிருக்கின்றன. மாடுகளும், ஆடுகளும் பறவைகளும் பலியிடப்படும் பலிபீடங்களும் தெரிகின்றன. நான் இன்னும் பார்க்கின்றேன், மடமைக்கு மனிதனின் சுதந்திரம் பலியிடப் படுவதை. அரசர்களின் ஆடம்பரமான ஆபரணங்களையும், ஆண்டவனின் அந்தரங்க சீடர்களின் (பாதிரிகள்) பெரும் ஆஸ்திகளையும், அதே நேரத்தில் சத்தியவாதிகளின் நித்திய சரித்திரத்தையும் நான் காணுகின்றேன். உண்மை உரைப்போர்க்கு உடுத்தத் துணியில்லை. கந்தலைக்கட்டி காலம் கழிக்கும் கேலிக்குரிய நிலைமை நாட்டில் நடமாடுவதை நான் காணுகின்றேன்.

பரமனுக்கு பக்தர்கள் மனிதனின் ரத்தம் கொண்டு அபிஷே

(11-ம் பக்கம் பார்க்க)


**பகுத்தறிவு**

(திங்களிருமுறை)

**புதிய நாணய விகிதத்தில்:**

**உள் நாடு:**

ஆண்டு 1-க்கு 3-50

6 மாதங்களுக்கு 2-00

தனிப்படி 12 காசுகள்

சிலோனில் 15 சதம்

**பகுத்தறிவு அலுவலகம்**

**சேலம்-1.**




## சேலம் மாநாடு, ஃபிப்ரவரி 8, 9-ல்.

சேலம் மாவட்ட தி. மு. கழக 3-வது மாநாட்டு வரவேற்புக் குழுக் கூட்டம் சேலம்-வேலூரில் 5-12-57-ல், மாவட்டச் செயலாளர் தோழர், ஜி.பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கீழ்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. சேலம் மாவட்ட தி மு. கழக 3-வது மாநாட்டை சேலம்-வேலூரில் 1958 ஃபிப்ரவரித்திங்கள் 8,9. தேதிகளில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

2. மாநாட்டின் தலைவராகக் **கலைஞர், மு. கருணாநிதி** அவர்களையும், திறப்பாளராக நடிப்புப் புலவர், திரு. **கே. ஆர். இராமசாமி** அவர்களையும் அழைக்கலாமாகத் தீர்மானிக்கப்பட்டது.

3. வரவேற்புக் குழுத் தலைவராகத் திரு. ஜி. பி. சோமசுந்தரம், செயலாளராகத் திரு. ப. இராமலிங்கம், பொருளாளராக திரு. பி. எம். குப்புசாமி, தொண்டர் படைத் தலைவராகத் திரு. இரா. தாண்டவன் ஆகியோர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

4. செயற்குழு உறுப்பினர்களாக, வரவேற்புக் குழுவிலிருந்து அடியிற்கண்ட தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

க. பெருமாள், எச் எல். முருகேசன், ப. கண்ணன், க. கு. சின்னுசாமி, இ. ஆர். கிருஷ்ணன், சிற்றுளி-சுப்பிரமணியம், எம். பி சுப்பிரமணியம், யு. எஸ். இராமசாமி, ஏ. கே. கே. இராசமாணிக்கம், ரா. வரதராசன், லோ. கருப்பையா, எம். கமலநாதன், பி. கே மன்னர், முத்துகிருஷ்ணன், இரா. சகந்நாதன், வேலப்பன், சிவநேசன்.

## பச்சைத் தமிழன்களே! பாவியர் பாண்டவரே!

சாதியை ஒழிப்போம் என்று சென்னை அரசாங்கம் வாய்ப் பேச்சில் சொல்லுகிறது. மாதிரிக்கு ஏதாவது செய்திருக்கிறதா? சாதியை ஒழிக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று 15 நாள் தவணை கொடுத்தேனே; "செய்கிருேம்" என்று ஒரு வார்த்தை சொன்னார்களா? சாதிக்குப் பாதுகாப்புத் தானே கொடுத்தார்கள், புதிய சட்டத்தின் மூலம்!

டெல்லி சர்க்காரின் கட்டளைக்காக புதியசட்டத்தைக் கொண்டு வந்த சென்னை சர்க்கார் "ஏன்? நாம்தான் சாதிகளை ஒழித்து விட்டால், என்ன? அதில் என்ன தவறு இருக்கிறது?" என்று ஒரு வார்த்தை கேட்கக்கூடாதா?

துரோபதையை துச்சாதனன் துகில் உரிந்தபோது சும்மா இருந்த பாண்டவர்களைப்போல சென்னை மந்திரிகளும், திராவிட கழகத்தினர் தண்டனை பெறுவதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கிருர்களே! ஏண்டா பாவி என்று கேட்க ஒருவனும் முன்வரவில்லையே!

**—பெரியார், ஈ. வே. ரா.**

8-12-57 சிதம்பரம் பொதுக் கூட்டத்தில்.

*அன்பு, நாணயம், உலக நடையறிதல், கண்ணோட்டம், உண்மை கூறுதல் ஆகிய ஐந்து குணங்களும் குணநிறைவு என்பதைத் தாங்கும் ஐந்து தூண்களாகும்.*

**—திருவள்ளுவர்.**

## எத்ரோல்

தென்னிந்தியர்கள்மீது இந்தியைத் திணித்தால் வீண் தொல்லைகளே ஏற்படும்

**—ஜவகர்லால்.**

ஆகவே திணிக்காதீர்கள், தடவிக்கொடுத்து மெதுவாகத் தலையில் ஏற்றுங்கள்!

* * *

கொல்லுவது பற்றிப் பேசும் அளவு கீழ் நிலைக்கு எந்த மனிதனும் போய்விடக் கூடாது

**—ஜவகர்லால்.**

வாய் பேசாது காந்தியாரைக் கொலை செய்த காட்டுமிராண்டி கோட்சே கும்பலுக்கல்லவோ இந்த உபதேசம் தேவை.

* * *

வெளிப்படையாக "கொல்லுங்கள்" என்று ஒரு மனிதர் பேசியதாகக் கூறுவது ஏன் என்பதுதான் எனக்குப்புரியாத விசித்திரமாக உள்ளது.

**—ஜவகர்லால்.**

கொலைத் தூண்டுதல் வழக்கு நீதிமன்றத்தில் இருக்கையில் நாட்டின் பிரதமர் புரிந்து கொள்ளாமல் இப்படி கர்த்தபக்கச்சேரியும் குரங்கு நாட்டியமும் புரிவது எவ்வகை சனநாயக விசித்திரமோ; நமக்குப் புரியவில்லை.

* * *

தேசத்துரோகிகளுக்கு இந்த நாட்டில் இடமில்லை.

**—ஜவகர்லால்.**

சபாஷ்! அப்படியானல் இனி அக்ராகாரம் இருக்காது!

* * *

வடநாடு, இந்தி ஆதிக்கம் என்று தென்னிந்தியாவில் எழுப்பப்பட்ட கூச்சல்கள் வெறும் அசட்டுத்தனம்

**—ஜவகர்லால்.**

மிகப்பெரிய சிக்கல்களையும், அசட்டுத்தனம், முட்டாள்தனம், சிறுபிள்ளைத்தனங்களிலே மூடி மறைக்கும் புரியாத வெறியர்களுக்கு இனி சூடுபோட்டுத்தான் நோயை குணமாக்க வேண்டும் போலும்!

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு
>
> —திருவள்ளுவர்

# இதயம்

மலர் 7 | சேலம் 15—12—57 | இதழ் 18

## கையாலாகாதவர்கள்!

சாதிப் பாகுபாடுகளின் தீங்கால் நாட்டின் கௌரவம் பாதிக்கப்படுகிறது; மக்களின் வாழ்வு குலைக்கப்படுகின்றன; குழப்பங்கள், கொள்ளை, கொலை போன்ற விபரீதங்கள் பயங்கர விளையாட்டுக்களை நடத்துகின்றன! நிலைமையிது; மறுப்பாரில்லை.

சாதியெனும் பழம்பெரும் தீய சக்தியை மடிக்க வேண்டும். மீண்டும் தலைதூக்காதவாறு ஆழக் குழிவெட்டிப் புதைக்க வேண்டும் என்பதை வைதிக வெறியரைத் தவிர எல்லா அரசியல் கட்சியினரும் ஒப்புகின்றனர்; எப்படிச் செய்வது, எவ்வழியில் சாதிப்பது என்பது குறித்து கருத்து வேற்றுமை இருக்கலாம். அது, மனம் கலந்து பேசினால் மறையக்கூடியதேயாகும்.

சாதி ஒழிப்பிலே தீவிரமான கருத்துக் கொண்ட பெரியார் அவர்கள், தனது ஆதரவுப் பிரசாரத்தின் மூலம் ஆளவந்தாராகி வீற்றிருப்போர் அப்பணியினை மேற்கொள்ள வேண்டுமென்று விரும்பினர்; வேண்டுகோள் விடுத்தார்; தீண்டினர்களில்லை! தீர்மானங்களை அனுப்பினர்; ஏனென்று கேட்டார்களில்லை; தஞ்சையிலே மாநாடு நடத்தினர்; "15 நாட்களில் அரசாங்கம் சாதிஒழிப்பு வேலையை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் சாதிக்குப் பாதுகாப்பளிக்கும் இந்தியக் குடியரசுச் சட்டப் புத்தகம் எரிக்கப்படும்" என்ற முடிவெடுத்தார்; அனுப்பிவைத்தார் அரசாங்கத்திற்கு!

மகாமந்திரிகள் அதனைச் சட்டைப்பண்ணவில்லை! பெரியாரின் அறைகூவலைக் குப்பையிலே போட்டுவிட்டு, "சாதிக் கொடுமைகளைப் பாதுகாக்கிறோம் பார்" என்பதுபோல் தேசீய கௌரவப் பாதுகாப்புச் சட்டம் இயற்றிக் கொண்டனர், தி. மு. க. வின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல்! அறிஞர் அண்ணாவின் ஆலோசனையையும் புறக்கணித்து!

பெரியார்மீது வழக்கு தொடரப்பட்டது! எரிப்புக் கிளர்ச்சி நிற்கவில்லை. சுமார் 3000 பேர் பெண்கள், குழந்தை குட்டிகளோடு சிறைக் கோட்டம் புகுந்துள்ளனர்!

இந்நிலையில் இந்திய துணைக் கண்டத்தின் பிரதமர், ஜவகர்லால் நேரு சென்ற வாரம் தென்னகம் வந்தார். முற்போக்கு எண்ணம் படைத்தவர்; மூண்டுள்ள தீயை அணைக்க அன்பு நீர் வார்ப்பார்; அறிவுப்புனல் கொட்டுவார்; சாதிச்சனியன் சாக வழி பிறக்கும் எனக்கருதினோம்;என்ன கண்டோம்?

அன்பும் அறிவும் கொலுவிருக்கும் இடத்தை, அகந்தையும் அதிகாரச் செருக்கும் அடைத்துக் கொண்டன! பொறுப்பும் கடமையும் மறந்து வசையம்புகளை வாரி இரைத்துவிட்டார்; பிரச்சினையைப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டார் நாட்டின் பிரதமர்!

சட்டப்புத்தக எரிப்பினை நாம் ஆதரிக்கவில்லை. என்றாலும் எரிப்பதற்கான காரணங்களை பெரியார் சொல்லுகிறார்; நாம் கேட்கிறோம்; புரிந்துகொள்ள முடிகிறதே! காங்கரஸ் மந்திரிகளால் ஏன் புரிந்துகொள்ள முடியவில்லை? பிரதமர் ஜவகர்லால் நேரு ஏன் கேளாக் காதராகிவிட்டார்? பெரியார் குற்றவாளி யென்று நீதிமன்றம் தீர்ப்பளிக்கு முன்பே, "காட்டுமிராண்டி, கொலைப் பேச்சுக்காரன், போடு சிறையில், தள்ளு பைத்தியச் சாலையில்" என்று ஏன் சீறிவிழுகிறார்? தென்னகத்தை மட்டுமல்லாமல், நீதிமன்றத்தையும் ஏன் இப்படி அவமதிக்கிறார்?

நாம் சொல்லுகிறோம்: அவர்கள் கையாலாகாதவர்கள், சாதியெனும் கொடிய சக்தியை ஒழித்துக்கட்ட சாதாரண காங்கரஸ்காரன் முதல், சர்வதேச விளம்பரம் பெற்ற ஜவகர்லால் நேருவரை; பச்சைத் தமிழன் காமராசர் உள்பட எவருக்கும் மனமில்லை; மார்க்க மறியார்; அக்கரையில்லை; ஆர்வம் கிடையாது; திராணியில்லை; தீரமில்லை!

—ப. கண்ணன்.

**பகுத்தறிவு பொங்கல் மலர் பூக்கிறது விலை 0—8—0**






(முன் இதழ் தொடர்ச்சி)

### காட்சி 25.

**இடம்: கூடகிரி அரண்மனை.**

**காலம்: பிற்பகல்.**

(மகாராணி காமவல்லி வீற்றிருக்க, சிற்பி காந்தமன் நின்றுகொண்டிருக்கிறான்)

**காந்த:-** மகாராணி! இளவரசரும் ஐவணமும் எங்கே போனாங்க?

**காமவ:-** அதைத்தானே உம்மைக் கேட்கிறேன்.

**காந்த:-** எனக்கு என்ன தெரியுமுங்க? ஏங்கிட்டே ஒண்ணும் சொல்லலியே!

**காமவ:-** நீர்தானே கூறினீராம்: முகர்ந்தால் முன்னூறாண்டு வாழவைக்கும் மூலிகைப் பூவைப்பற்றி! பார்க்க விரும்பினான் சம்புகுமாரன். ஐவணத்தை அழைத்துக்கொண்டு காட்டுப்புறம் போயிருக்கிறான். எங்கே போயிருப்பார்கள்? எங்கே இருக்கிறது அந்த மூலிகைப் பூ?

**காந்த:-** ஏந்தலையிலேதானுங்க!

**காமவ:-** (வியந்து) என்ன? தலையிலா? இதென்ன விளையாட்டு?

**காந்த:-** (சிரித்து) விளையாட்டுத்தான் தேவி! மூலிகைப் பூ ஏந் தலைமண்டையிலே உதிச்ச கற்பனைங்க! உண்மையிலே அப்படியொரு பூவே கெடையாதுங்க! தமாஷா ஐவணத்துகிட்டே புளுகிவச்சேன்! தேடவே போயிட்டாங்களா?

(சிரிக்கிறான் காந்தமன். சம்புகுமாரனின் சடலத்தை கரங்களில் ஏந்தியவண்ணம் வருகிறாள் ஐவணம். பின்னாலே அழுதவண்ணம் வாணன் வருகிறான். மகாராணி திகைக்கிறாள்.)

**காமவ:-** (பதறியெழுந்து) ஆ ங்! என்னடி என்மகனுக்கு? என்ன நேர்ந்தது? ஐயோ! ஏன் இந்தக் கோலம்?

**ஐவண:-** (வருந்தி) மகாராணி! ஆரிய ராமன் தம்பி, லட்சுமணன், பூக்காட்டிலே வந்து என்னிடம் வம்பு பண்ணினான்! தடுத்த இளவரசரை—எங் கண்மணியை — இப்படிக் கொண்ணுட்டான் மகாராணி; கொண்ணுட்டான்! அநியாயம் நடந்திட்டுதே!...ஐயோ!

(ஐவணத்தின் கையிலிருந்த சம்புகுமாரன் சடலத்தை வாங்குகிறாள். துடிக்கிறாள் மகாராணி.)

**காமவ:-** ஐயகோ!... அம்மா!.... கொலையுண்டானா என்மகன்? மடிந்துவிட்டதா என் குலக்கொழுந்து? ஆரியன் ஒருவன் அழித்துவிட்டானா என் உயிரோவியத்தை? ஐயோ!... ஐயயோ!....

(ஆசனமொன்றில் கிடத்துகிறாள். மேலே விழுந்து புரண்டு கதறுகிறாள். துடிக்கிறாள். அருளாளர் வருகிறார். கலங்கி நிற்கிறார்.)

**காமவ:-** ஐயகோ! மாண்டாயோ என் மகனே! என் மன்னவரை இழந்த துயர் மறக்கச் செய்த அருமருந்தே! ஆவியிழந்தாயோ? அடங்கியதோ உன் மூச்சு? பொங்கிவரும் நெஞ்சக் குமுறலை பொன்முகம் காட்டிப் போக்கிய என் மகனே! இனி எம்முகம் பார்த்தடா இவ்வுலகில் நான் வாழ்வேன்? சோர்வுற்ற வேளையிலே அம்மாவென்றழைத்து, அன்புமொழிபேசி ஆறுதலளித்த என் சொக்கத்தங்கமே! இனி யார்மொழி கேட்டடா உயிர் வாழ்வேன்? எவருக்கு உண்டடா உன் தகுதி? ஐயகோ!...மணாளனை இழந்த துயர் போக்க நாடு தந்தார் அண்ணன்; நல்லாட்சி நடத்தத் துணைபுரிந்தனர் சோதரர்கள்; மகாராணியாக முடிபுனைந்து சிங்காதனம் ஏறிச் சீரோங்க வாழ்ந்தேன்; இருந்துமென்ன? என் சிறப்புக் குலைக்க வந்த சிறு நரியை, கற்புக் குலைக்கவந்த கள்வனை விரட்டியடித்து, மடியவிருந்த என் மானத்தைக் காப்பாற்றியவன் நீயன்றோ? நீயன்றோ மகனே? ஆரியச் சூறாவளியால் கவிழவிருந்த கப்பலைக் காப்பாற்றிக் கரைசேர்த்த ஆற்றல் மறவனே! அறிவுலகச் செம்மல்களின் இளந்தளிரே! விந்திய நாட்டின் எதிர்கால வீரப் பெருவிளக்கே! மாண்டுவிட்டாயோ? பிரிந்துவிட்டாயோ இந்தப் பாவியை விட்டு? இருண்டுவிட்டதோ உலக வாழ்வு? ஐயயோ!.... ஒழிந்துவிட்டதம்மா என் பெருமையெல்லாம்! இனி எனக்கு மணிமுடி ஏன்? மானிலம் ஆளும் பொறுப்பு ஏன்? அழகுபடுத்தும் அணிகலன்கள் ஏன்? (எல்லாவற்றையும் கழற்றி எறிகிறாள்) வளம் ஏன்? வாழ்வு ஏன்? ஆளனைப்பிரிந்த பிறகு அன்பு மகனுக்காக வாழ்ந்திட்டாள் வனிதையென்றால் பெருமையுண்டு. அன்புக்கு ஒரு மகனைப் பிரிந்த பிறகும் அவனியிலே வாழ்வதற்குப் பற்றுக்கோடு யார்? பாசக்கருவி எது? பண்பு மிக்க அன்பு நெஞ்சம் எங்கே? எங்கே? ஐயகோ!...வஞ்சக உலகமே! வாய்மையற்ற சண்டாளர்களின் சதித்தீயிலே வீழ்த்தி விட்டாயே என் மகனை! கல் நெஞ்சர்களின் கயமைக்குப் பலியாக்கி விட்டாயே என் பாலகனை! ஐயயோ! எப்படிச் சகிப்பேனம்மா இந்தக் கொடுமையை!....ஐயோ!....ஐயோ!....

(தலையில் அடித்துக்கொண்டு மயக்குற்று விழுகிறாள்.)

**ஐவண:-** (பதறி) ஆங்! மகாராணிக்கு மயக்கம்!

(காமவல்லியை மெதுவாகத் தூக்குகிறாள்.)

**அருளா:-** ஐவணம்! அரசி மனம் ஒடிந்துவிட்டாள். போ! உடனே சென்று மருத்துவரை அழைத்துவா! (படிக்கவிட்டு ஓடுகிறாள்) காந்தபா! கொலைஞர்களான ஆரியர்களைத் தேடிப் பிடிக்க ஏற்பாடு செய்யவேண்டும். விந்தியத்திற்கு இப்போதே செய்தி போகவேண்டும். விபரம் யாவும் அறியவேண்டும் அமைச்சர் தினகரர்! பிறகுக வேண்டும் விமோசனம்!

**காந்த:-** எப்படி வாணா?

**வாணஅ:-** அப்படித்தான் குருவே. இதோ இப்பவே பொறப்படறேன்.

(ஓடுகிறான் வாணன்)

## காட்சி 26.

**இடம்: அகஸ்தியர் ஆசிரமம்.**

**காலம்: முற்பகல்.**

(அகஸ்தியரும், காபாலிகரும் இருக்கின்றனர்.)

**அகஸ்தி:-** சுவாமிஜீ! இராமன் எப்படி இருக்கான்? விஷயம் எப்படி இருக்கு?

**காபாலி:-** நாம்ப எதிர்பார்த்ததுபோலவே விஷயம் உருவாயிண்டு வர்றது. அகஸ்தியரே! மகாராணி காமவல்லியை மயக்கப்போன ராமன், படுதோல்வியடைஞ்சு திரும்பியிருக்கான். அவன் சீதைகிட்டே பட்ட அவமானம் இருக்கே; போங்காணும், சொல்லவே நேக்கு வாய் கூசறது!

**அகஸ்தி:-** ஏன்? இராமன் கூடகிரிக்குப் போன சங்கதி அவளுக்குத் தெரிஞ்சுட்டுதோ?

**காபாலி:-** ஆமாங்காணும், அப்பட்டமா தெரிஞ்சுபோச்சு.



**அகஸ்தி:-** எப்படித் தெரிஞ்சுது? ஏந் தெரிஞ்சுது? என் ஆத்துப் பிசாசு சொல்லியிருக்குமோ? சமீபத்திலே இது சீதையைப் பார்க்கணும்னு பஞ்சவடிக்குப் போயிட்டு வந்ததே!

**காபாலி:-** அப்படியானா அந்தப் பிசாசுக்கு, நிச்சயமா இந்தப் பிசாசுதான் சொல்லியிருக்கணும். ஓய்! அகஸ்தியரே! அடிமையாக இருக்கவேண்டிய ஸ்திரீ ஜென்மங்களுக்கு நீர் இவ்வளவு சுதந்திரம் கொடுக்கப்படாதுங்காணும்!

(கையிலே அகப்பையும், நெஞ்சிலே நெருப்புமாக, சமையல் அறையிலிருந்த லோபா அங்கு தோன்றுகிறாள். இருவரும் திடுக்கிடுகின்றனர்)

**லோபா:-** (காபாலிகரிடம் கோபித்து) ஆமாங்காணும் மகரிஷே! அதிகப் பிரசங்கத்தை நிறுத்துங்காணும்! இந்தப் பிசாசுதான் அந்தப் பிசாசுக்கு எல்லாத்தையும் சொல்லிடுத்து! அதுக்கு என்ன செய்யணும்கிறீர்? என்னை அடிமைகளோட சேர்த்து ஆரியாவர்த்தம் அனுப்பி விலைக்கு விற்கச் சொல்றீரோ? ஒங்களோட சூது, சூழ்ச்சி, பொய், பித்தலாட்டங்களை அங்கெல்லாம் போய் அம்பலப்படுத்தணும்கிறீரோ? என்னங்காணும் சங்கதி? ஏங்காணும் ஓமக்கிந்த துர்ப்புத்தி?

**காபாலி:-** (அஞ்சி) ஐயயோ! இதென்ன ஆபத்து? நான் என்ன பேசினேன், லோபா? ஒன்னைப்பத்தி ஒண்ணுமே சொல்லலியே! ஒன்னோட பர்த்தாவையே கேட்டுப்பாரேன்!

**லோபா:-** எல்லாத்தையும் கேட்டுண்டுதான் இருந்தேன்! இந்தாரும் மகரிஷே! பேய், பிசாசு, அடிமை, அவலக்ஷணம்னு எங்களை இழிவாப் பேசறது; சமயத்திலே வந்து எங்க கால்லே விழறது; எங்களைக்கொண்டே காரியாதிகளை சாதிக்கப் பார்க்கறது; இதுபோன்ற புருஷாளுக்கு சீதையைப்போன்ற வீராங்கனைகளை நெனைச்சாலே அச்சம் உச்சிக்குடுமியைப் பிடிச்சு உலுக்குங்காணும்! உலுக்கும்!

**அகஸ்:-** லோபா! ஏண்டி இப்படிக் கோவிச்சுக்கறே? இவர் இராமனைப் பத்தின்னா சொன்னார்?....

**லோபா:-** நான் மாத்திரம் வேறே யாரைப் பத்திச் சொல்றேனாம்? ஓங்க துராலோசனைகளைக் கேட்டுண்டு சீதைக்குத் துரோகமும் காமவல்லியோட கற்புக்கு பங்கமும் செய்யத் துணிஞ்ச புருஷரத்தினம் இராமனைப்பத்தித்தான் நானும் பேசறேன்!

**அகஸ்தி:-** அடியே! அவர் நம்மையெல்லாம் ரக்ஷிக்கவந்த அவதார புருஷனடி! ஆபத்பாந்தவன்; ஆரிய க்ஷத்திரியன்; அனாதரக்ஷகனடி! ஆரிய தர்மம், ஆரியகுலம், ஆரிய ஆதிக்கமே அவராலே உன்னதம் அடையப் போறதடி! என்னை நாலு அடி வச்சாலும் வச்சுடு! அவரை தூஷிக்காதடி, அவரை தூஷிக்காதே!

("ஆபத்து, ஆபத்து" என்று கூறிய வண்ணம் வேகமாக ஓடிவருகிறான் கொம்பன்.)

**அகஸ்தி:-** (அஞ்சி) என்ன? என்ன? என்ன?

**காபாலி:-** (அஞ்சி) யாருக்கு? என்ன ஆபத்து?

**கொம்ப:-** நம்ப எல்லாருக்குமே ஆபத்து! பெரிய ஆபத்து! விபரீதம் நடந்துபோச்சு! இராமச்சந்திரனோட தம்பி இலட்சுமணப் பெருமாள், இளவரசன் சம்புகுமாரனை பூக்காட்டிலே அநியாயமா குத்திக் கொன்னுட்டாரு! செஞ்சது யாருங்கிறது மகாராணிக்கு தெரிஞ்சு போச்சு. விந்தியத்துக்கு செய்தி போயிட்டுது! தண்டக வனத்திலே ஆரியர்னு இருக்கிறவங்க அத்தனை பேரையும் புடிக்கும்படியா சொல்லிட்டாங்க!

**லோபா:-** வம்படிவழக்கிலே எறங்கி, வந்ததா ஆபத்து?

**அகஸ்தி:-** லோபா! அதைரியப்படாதே! இந்த ஆபத்திலேதான்டி நம்ப அதிர்ஷ்டமும் இருக்கு! கொம்பா! நீயும் சிலம்பனும் சற்சூத்திராள்! அதிகாரத்தைக் கையிலே வச்சிண்டிருப்பவா! ஒங்களோட ஆர்யாபிமானத்துக்கும், வைதிக தர்மத்தைப் பாதுகாக்கிற தன்மைக்கும், தேவர்களை ஆதரிச்சி, அசுராளை அழிக்கக்கூடிய வல்லமைக்கும், வீரதீர பராக்கிரமங்களுக்கும் தக்கபடியானவேலை கெடைச்சுடுத்து! தக்கபடியான வேலை!

**காபாலி:-** கொம்பா! இந்த சம்பவம் விபரீதமல்ல; ஈஸ்வர சங்கல்பம்! ஆண்டவனது திருவிளையாடல்! அவனோட அனுக்ரகத்தையடைய இதுதான் சந்தர்ப்பம்! தேவாசுராள் சண்டை மூண்டுடுத்து! இந்தச் சண்டையிலே உயிர் நீப்பவாளெல்லாம் பூர்வத்திலே கொடுத்து வச்சவா!

**அகஸ்தீ:-** கொம்பா! மாவீரா! ஓடனே படையைத் தெரட்டு, தினகரன் வந்தாலும் எதிர்த்துப் போராடும் தீரர்களை ஐக்யப் படுத்து! படைக்கலன்களை தயார்பண்ணு! இது தெய்வாக்ஞை! போ! போ!

**கொம்ப:-** கட்டளைப்படி செய்யறேனுங்க. ஆனா, நீங்கெல்லாம் இந்தக் குடிசையிலே இருக்கறது ஆபத்து! எடத்தை மாத்தணும்! எங்கெயாவது மறைஞ்சிருக்கணும்! பொறப் படுங்க! பொறப்படுங்க!

**அகஸ்தீ:-** ஆ.:கா! அதை இப்பவே செய்ய ரேம்.

(அங்கிருந்த மான்தோல், தண்டு, கமண்டலம், சட்டி, பானைகளை ஆளுக்கு ஒன்ருகத் தூக்குகின்றனர். கொம்பன் வேகமாகச் செல்லுகிருன்.)

**லோபா:-** (**கூவுகிருள்**) கொம்பா! கொம்பா!

**கொம்ப:-** (**நின்று**) என்ன லோபா! ஏன்?

**லோபா:-** (**நெருங்கி**) நேக்கு பயமாருக்கே! நான் ஒன்னேடயே வந்திடறேனே!

**கொம்ப:-** (**தடுத்து**) ஐயோ! வேணும்! வேணும்! அது எனக்கு ஆபத்து!

(ஓடுகிருன் கொம்பன்.)

## காட்சி 27

**இடம்: விந்திய நீதிமன்றம்.**

**காலம்: பகல்.**

(அமைச்சர் தினகரன், ஆசனத்தில் இருக்கிருர். அறிஞர்கள், காவலர்கள் சூழ்ந்திருக்கின்றனர். தூயவன் குற்றவாளிகளாக இரண்டு ஆரிய முனிவர்களை நிறுத்துகிருன்.)

**தூயவன்:-** (**நின்று**) அமைச்பெருமா! நமது நாகரிகத்தையும் நல்வாழ்வையும் சிதைத் தொழிப்பதையே நோக்கமாகக் கொண்ட சிறுமதியாளர்கள்; அருள் நெறியையும், அறிவுச் செல்வத்தையும் அழிப்பதையே தொழிலாகக்கொண்ட ஆரிய முன்னேடிகள், இவர்கள்! கொலைவேள்வி செய்தும், செய்வித்தும், வேள்விக்கு உதவி செய்யாதவர்கள் கொடிய நரகத்தையடைவார்கள் என்று மிரட்டியும், இணங்காத மக்களைச் சித்திரவதை செய்தும் நாட்டிலே அராஜகமும்,குழப்பமும் விளைவித்த அயோக்கியர்கள்! இவர்களோடு பிடிபட்ட மற்றவர்கள், கீழ்ச்சபையிலே குற்றத்தை ஒப்புக்கொண்டனர்; தக்க தண்டனை விதிக்கப் பெற்றனர். மறுத்துரைத்த இவர்களை இம்மாமன்றத்தில் நிறுத்தியுள்ளேன். விசாரித்து நீதி வழங்குமாறு வேண்டுகிறேன்.

**தினக:-** குற்றவாளிகளே! என்ன உங்கள் கருத்து?

**மகரிஷி 1:-** மந்திரியாரே! வேள்வீன்னு சொல்லப்படுவதானது ஆண்டவனை வழிபடற ஒருமுறை தானே தவிற, விபரீதமான காரியமல்ல. நாங்கள் தெய்வப் பிராமணாள்! எங்களுக்கெல்லாம் தலைவர்களான இந்திரன், வருணன், வாயு, அக்கினி, போன்ற தேவர்களுக்குப் பிரீதியான வஸ்துகளை யாகத்தின் மூலமாக அவாளுக்கு சமர்ப்பிக்கிருேம். இது எங்கள் பவித்ரமான யக்ஞம்! பவித்ரமான கடமை! பவித்ரமான தர்மம்!

**தினக:-** உங்களது ஆண்டவன்; அவனை வழிபடுகின்ற உங்கள் முறை; உங்களுக்கு உவர்வாக இருக்கலாம். எங்கள் பரம்பரைப் பண்பாட்டுக்கு முன்னல் மிகமிக மட்டமானவை; எங்கள் கலாசாரத்திற்கு மாறுபட்டவை; இங்கு பிழைக்கவந்த நீங்கள் எங்கள் நெறிப்படிதான் நடக்கவேண்டும். இல்லையேல் எங்கள் நாட்டைவிட்டு வெளியேறிட வேண்டும். வினைவிதைத்தால் வினையறுக்க வேண்டும்!

**மகரிஷி 1:-** நீதியில்லையா? பக்தியில்லையா? தர்மமில்லையா ஓங்க தேசத்திலே?

**தினக:-** எல்லாம் இருக்கின்றன. யாவும் அன்பை, அருளை, தியாகத்தை அடிப்படையாகக் கொண்டவை! கொலை, கொள்ளை, பொய், சூதுக் கழனிகளிலே வளர்ந்த உங்கள் தர்ம மார்க்கம் எங்களுக்குத் தேவையில்லை. குளிரில் நடுங்குவோனுக்குக் கம்பளி தேவை. வெய்யிலில் காய்வோனுக்குத் தேவையில்லையே! பொய்யழகு காட்டிப் பொல்லாங்கு விளைத்திடும் நல்ல பாம்புகளே! செய்திருப்பவை பெருங்குற்றங்கள். உரிய தண்டனை பெற்றே தீரவேண்டும்.

(வளரும்)



# காட்டுமிராண்டித்தனம்!

**அறிஞர், அண்ணா**

தமிழன் உயர்ந்த பண்புள்ள வீரன்; மனிதனை நன்ருக வாழ வைப்பதைத் தன் உயர்ந்த பண்பாகக் கருதியவன்.

இந்த நாட்டில் சாதிப் பாகுபாடுகளை நீக்குவதற்கு எல்லாப் பேரறிஞர்களும் ஒன்று சேர்ந்து அதற்கான மார்க்கத்தைக் காண முயலவேண்டும் 'துரதிருஷ்ட வசமாக'இந்த நாட்டில் ஒரு குறிப்பிட்ட மக்களிடம்-ஒரு குறிப்பிட்ட கட்சியிடம் — ஒப்படைக்கப்பட்டிருக்கிறது சாதி ஒழிப்பு வேலை.

நான் வலியுறுத்திக் கூறுவதெல்லாம், ஒரு குறிப்பிட்ட கூட்டத்தார்தான் அந்த வேலையைச் செய்யவேண்டுமென்ருல்—அவர்கள் மட்டுமே ஒருபுறம் அந்த வேலையைச் செய்து கொண்டிருந்து,மற்றவர்கள் ஒதுங்கியிருந்துவிட்டால் இருசாராருக்கிடையில் துவேஷம் ஏற்படத்தான் செய்யும். அந்த துவேஷம் காரணமாகத் தங்களுக்கு என்ன சாதகம் கிடைக்குமென ஆராயும் அரசியல்கள்—கட்சிகள் இருக்கத்தான் செய்கின்றன. நல்ல வேளையாக, மக்களிடையே குரோத உணர்ச்சி ஒழிய வேண்டுமென விரும்புபவர்களும் இன்னும் இருக்கிருர்கள்: அவர்களையெல்லாம் நாம் இந்த காரியத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அரசியல் கட்சியையும் கடந்த பேரறிவாளர்கள்கூடி,இந்தத் தலைமுறையிலேயே செய்யவேண்டியுள்ள ஒன்று இந்த சாதி ஒழிப்பு வேலைதான்.

குலத்திலே பல வேறுபாடுகள்; ஏழை-பணக்காரன் என்ற பாகுபாடுகள்; முதலாளி-தொழிலாளி என்ற வேற்றுமை; ஒரே ஊரிலே கிழக்குத் தெருவிலிருப்பவருக்கும் மேற்குத் தெருவிலிருப்பவருக்கும் பகை-இவற்றையெல்லாம் இன்று ஏட்டிலே காண முடியவில்லை; நாட்டிலே காண முடிகிறது.

'தீயினுல் உடலிலே சுட்ட புண் ஆறிவிடும்; ஆனுல், நாவினுல் உள்ளத்தைச் சுட்ட வடு ஆருது' என்று வள்ளுவர் சொல்லியிருக்கிருர். செஞ்சிலுவைச் சங்கம், மக்களின் உடலில் மட்டுமல்ல— உள்ளத்தில் ஏற்பட்டுள்ள புண்ணையும் போக்க முயலவேண்டும்; சாதியின் காரணமாக உள்ளத்தில் ஏற்படும் தழும்பை அகற்ற வேண்டும். உள்ளத்தில் ஏற்பட்டுள்ள இந்தப் புண் நமக்கு மட்டுமல்ல- நம் குழந்தைகளையும் பாதிக்கக் கூடியவை.

நாமாவது உலகம் காணுதவர்கள்; உலக மேதாவிகள் என்பவர்கள்கூட,'இரண்டு சைனுக்களிலே எந்தச் சைனு நல்ல சைனு' என்ற பிரச்சினையிலே தலையிட்டு குழப்பம் விளைவித்து வருவதைக் காண்கிருேம். டில்லியிலே நடந்த செஞ்சிலுவைச் சங்க மாநாட்டில் இந்தச் கருத்தைக் கிளப்பி வெளி நடப்புச் செய்து குழப்பம் உண்டாக்க முயன்றதைக் கண்டோம்.

இதை எதற்குச் சொல்லுகிறேன் என்ருல், ஒருவன் கீழிருந்து மேல் நிலைக்குப் போவதனுல், அவனிடமிருந்து வந்த தாழ்வான கருத்து போய்விடுவதாக இல்லை; அவன் அந்தத் தாழ்வான கருத்தோடு தான் மேலே போயிருக்கிருன் என்று பொருள்.

ஒரு வீட்டின் மாடிக்கு நகை வியாபாரிபோனுல் நகைகளோடு போவான்; மருத்துவன் போனுல் கையில் மருந்துகளோடுபோவான். கள்ளன் போனுல் கையில் கன்னக் கோலோடுதான் போவான். அதைப்போல உலகிலேயே மிக மேல்நிலையிலிருந்தாலும் மிருக உணர்ச்சியை விட்டுவிட்டதாகப் பொருளில்லை.

நான் சில தினங்களுக்கு முன் பத்திரிகையிலே செய்தியொன்று படித்தேன்; "அமெரிக்காவில் ஏழு நீக்ரோ மாணவர்கள், பாதுகாப்பு இல்லாமல் பள்ளிக்குப் போய் வந்தார்கள்" என்பதுதான் அந்தச் செய்தி. நீக்ரோ மாணவர்கள் பாதுகாப்பு இல்லாமல் பள்ளிக்குப் போய்வருவது உலக அதிசயமாக இருக்கிறது.'இன்றுதான் போலீஸ் பாதுகாப்பில்லாமல் நீக்ரோ மாணவர்கள் பள்ளிக்குச் சென்று வந்தார்கள்' என்று பத்திரிகைகளெல்லாம் அதிசயச் செய்தியாக இதை வெளியிட்டிருந்தன; ஆனுல் இன்னெரு செய்தியும் அதிலே இருந்தது; 'அந்த மாணவர்கள் பள்ளிக்குப் போகும்போதும்வரும்போதும், போலீசார் தொலைவிலிருந்தபடியே அவர்களுக்கு ஏதேனும் ஆபத்து நேராத வகையிலே கண்காணித்துக் கொண்டிருந்தனர்' என்று அந்தச் செய்தி கூறுகிறது.

நாம் ஏதோ, 'காட்டு மிராண்டிகள்'தான் அமெரிக்காவில் இருப்பதாக எண்ணக் கூடாது; நாம், அமெரிக்கா காட்டுமிராண்டித்தனமாக நடக்கிறது என்று எண்ணுகிறபோது, அமெரிக்கர்கள் இந்தியாவில் உள்ளவர்களை காட்டுமிராண்டிகள் என்று எண்ணுகிருர்கள்.

இன்னும் சிலர் யார்யாரையோ பார்த்து காட்டுமிராண்டிகள் என்று கூறுகிருர்கள்; அவரவர் உள்ளம்போல்தான் பார்வையும், எண்ணங்களும் இருக்கும்!

எங்கு எது நடந்தாலும், அது காட்டுமிராண்டித்தனமாக இருந்தாலும் நாகரிகத்தால் அதைப் போக்க முடியவில்லை. நாதனைத் தொழுதோ போதனை புரிந்தோ போக்கமுடியவில்லை. அதை அழிக்கக்கூடிய பொருள் மனிதனின் ஆய்ந்த அறிவுதான்.

**சென்னையில் 4-12-57-ல செஞ்சிலுவைச் சங்க நிதி திரட்டும் இயக்கத் துவக்க விழாவில், அறிஞர் அண்ணா அவர்கள் பேசியதன் ஒரு பகுதி.**

வழக்கம்போல் பகுத்தறிவு பொங்கல் மலர் விலை 0—8—0

## கேள்விக்கணை

இம்முறை பரிசு பெற்றவர்:
● இரா. அ. பழனிசாமி,
இராசிபாளையம்,
(வழி) சூலூர்,
கோவை மாவட்டம்.

**சுப. சொக்கலிங்கம், நடராசபுரம்.**

கே: காங்கிரசு ஆட்சியாளர் சமத்துவ வாழ்வு வேண்டும் என்கிறார்களே; பள்ளிகளில் சாதி மதங்களைக் கேட்டு எழுதுகிறார்களே! அது எதற்கு?

*ப; பள்ளிப் பருவத்திலேயே பையன்களுக்கு அது பதிந்துவிட்டால்தானே வருணாசிரம ராம ராஜ்யத்தில் நல்ல குடிமக்களாக — "நாயும் பூனையுமாக" வாழ முடியும்?*

* * *

கே: இந்தியைத் தமிழகத்தின் ஆட்சி மொழியாக்க இந்திய அரசாங்கம் வன்மையாக முனைகிறதே, வடநாட்டுப் பள்ளிகளில் தமிழைப் பாட மொழியாக ஏன் வைக்கக் கூடாது?

*ப: தோழனே! இந்தியை இங்குள்ள அடிமைகள் தான் எங்கள் தாய்மொழி என்கிறார்கள். வடநாட்டு ஆளவந்தார்கள் தமிழ் எங்கள் தாய்மொழி என்று சுட்டுப் போட்டாலும் ஒப்பமாட்டார்களே! எப்படி அவர்கள் மதிப்பார்கள்?*

**டி. பி. பழனிசாமி, தொளசம்பட்டி.**

கே:- அள்ள அள்ளக் குறையாத அமுத சுரபி என்னும் அதிசய பாத்திரம் இருந்ததாக "மணிமேகலை" செப்புகிறதே; இது பற்றித் தங்கள் கருத்தென்ன?

*ப: அப்படியொரு பாத்திரம் இருந்திருக்க முடியாது. தரும சிந்தையுள்ள மணிமேகலையின் பரந்த உள்ளம், அத்தகைய வள்ளல் தன்மைக்குப் பாத்திரமாகியிருக்கலாம்!*

**● இரா. அ. பழனிசாமி, இராசிபாளையம்**

கே: நேரு பண்டிதர் ஒரு தென்னாட்டவராய் இருந்திருந்தால்?

*ப: சென்றவார நிலவர்ப்படி, விபூதி வீரமுத்து சாமியாருடைய புழுத்த நாக்கிற்கு கொழுத்த துணை நாக்காகக் கொள்ளுவோம்!*

* * *

கே: தந்நம்பிக்கையற்ற மக்களின் வாழ்வும, அவர்கள் வாழும் நாடும் எந்த நிலையில் காட்சியளிக்கும்?

*ப: அடிமை மந்திரிகளின் சொரணை கெட்டத்தனமும், அவர்களை ஆதரித்தவர்களின் குருட்டுத்தனமும் கும்மாளமிடுவதும், குப்புற விழுவதுமான அவலநிலைக்காட்சியைக் காணலாம்!*


# செந்தாமரை
## பீடிகள்



புதிய சுவை, புதிய சுறு சுறுப்பு நல்குவது
எங்கும் விற்பனையாளர் தேவை.

**எம். பழனியப்பன்,**
அதிபர்:
செந்தாமரை பீடி தொழிற்சாலை,
சலகண்டபுரம்,
(சேலம் மாட்டம்.)


## பொன்மொழிகள்

மனிதன் வெற்றி பெறுவதும் தோல்வியடைவதும், ஒரு நொடிப் பொழுதின் முடிவிலேயே ஊசலாடுகிறது.

— அறிவன்.

உண்மையான ஒரு விஷயம் உலகில் ஒருவராலும் போற்றப்படாமல் போகாது.

—விவேகானந்தர்.

உலகத்தில் இறவாத உயிர்களில்லை; கெடாத வலிமைகளில்லை; மூவாத இளமைகளில்லை; குறையாத செல்வங்களுமில்லை.

—விளம்பிநாகனார்.

பெரிய விஷயங்களைப் போலவே சிறிய விஷயங்களையும் கவனிக்கக் கூடிய மனமே உண்மையும், உரமும் கொண்ட மனமாகும்.

—சாமுவேல் ஜான்சன்.

அறிவில்லாதார் இருக்குமிடம்; நன்மை தீமையறியாத கோபம்; தீயவைகளிலே விருப்பம் மேன் மேலும் அறியாமையை வளர்ப்பன.

—நல்லாதனார்.

பலகாலைய நங்கினைவு பிறகோர் நாள் உயர் விளைவு.

— அனுபவசாலி.

தேசத்தின் ஏகதேச அதிகாரம் ஒரு தனி மனிதனிடமோ, ஒரு சிலரிடமோ இருக்குமயாயின்; மக்கள் மதிப்பும், மனிதத் தன்மையும் இழந்திடுவர்.

—ராடனே.

தன்னைக் காப்பாற்றிக்கொள்ளப் பிறரது உதவியை எப்போதும் நாடுவதில் பயனில்லை.

—காந்தியார்.



கம் செய்விக்கும் கண்ருவிக் காட்சியையும் நான் காணுகின்றேன். சிந்தனையாளர்கள் சித்திரவதை செய்யப்பட்டு செத்து அழிவதையும், அன்புள்ளம் படைத்தோர் அழிவதையும், அனாதைகள், வாழ்விழந்த விதவைகள் வீணர்கள் கையில் அகப்பட்டு அழிவதையும் நான் காணுகின்றேன். ஓலமிடும் பிணங்கள் என் கவனத்தை இழுக்கின்றன. சிறைகள் காட்டுமிருகங்களை அடைக்கும் கூண்டாகஇருக்கின்றன. சிதைகள் எரிவதையும், மதவாதிகளின் காலில் அகப்பட்டு நலிந்து நிற்கும் ஒரு சமுதாயத்தையும் நான் பார்க்கிறேன். சுவாலையில் கருகிய முகங்களையும், சுதந்திரம் இழந்த மக்களையும் நான் காணுகின்றேன். நற்செயல்களெல்லாம் பாபமாகக் கருதப்படும் பரிதாபத்துக்குரிய நிலைமையையும் நான் பார்க்கின்றேன். அறிவு அலட்சியப் படுத்தப்படுவதையும், மதம் மகுடம்பூண்டு மக்களைக் கசக்கிப்பிழிவதையும் நான் காணுகின்றேன். பித்தலாட்டம் அரசு செலுத்துவதையும், மானத்தின் நெற்றியில் அவமானச் சூடு போடப்பட்டிருப்பதையும் நான் பார்க்கின்றேன்.

நான் அப்பால் பார்க்கிறேன்: நம்பிக்கை வானத்தின் கீழ்த்திசையில் அருணோதய ஒளிவீசுகிறது. சாம்பல், இரத்தம், கண்ணீர்க் கடலின் மத்தியிலெழுந்த வீரர்கள் விழிப்படைந்து, இக்காலக் கொடுமைகளை மன்னித்துவிட்டு எதிர்காலத்தை வாழ்த்துகின்றார்கள். உலக மக்களின் விழிப்புணர்ச்சி வீணர்களின்மீது மோதி வெட்டி வீழ்த்துவதையும் பார்க்கிறேன். மகுடங்கள் மண்ணில் சாய்கின்றன. மதங்கள் மாற்றமடைகின்றன இரும்புத்தூண்கள், விலங்குகள் தவிடு பொடியாகின்றன. பெரிய மலை உச்சிகளிலே புனித ஒளி வீசுகின்றது. புதுமைகளைக் காண பலர் கலத்தில் பிரயாணம் செய்கிறார்கள். புதிய பெரிய கல்விச்சாலைகள் கட்டப்படுகின்றன. விஞ்ஞானப் புயலால் மதவாதிகள் தூக்கிச் செல்லப்படுகிறார்கள். தத்துவ ஞானிகள் பலர் தோன்றுகின்றனர். சிந்தனையாளர்கள் அறிவுச் செல்வங்களை ஈன்று மக்களுக்களித்து மகிழ்கிறார்கள். மக்கள் உதடுகள் எல்லாம் உண்மையால் பொலிவடைகின்றன. கடைசியாக ஒருமுறை எதிர்காலத்தைப் பார்க்கிறேன்: இப்பொழுது மதவாதிகள் மடிந்துவிட்டனர். அரசர்கள் அழிந்துவிட்டார்கள். தெய்வங்கள் தீக்கிரையாக்கப்பட்டு விட்டன. சிறுமதியாளர்கள் செத்து விட்டனர். பூமண்டல அதிகாரிகள்பொசுங்கிவிட்டனர். சதிகாரர்கள் பிடிசாம்பலாய்விட்டனர். மண்ணுலக வேதத்தால் மனிதகுலம் புகழ் பெற்றது. புது மதத்தினால் மனிதன் புனிதனானான். மனிதன் மாற்றமடைந்து மகிழ்ச்சியாக விளங்குகின்றான். அம்மதம்தான் உடலுறுப்புகள் அத்தனையும் உழைத்து உண்டாக்கிய மதம்.

அமைதி நிலவும் அறிஞர்கள், உலகத்தில் உழைப்பாளிகள், உல்லாசமாக வாழ்கிறார்கள். உழைப்பிறகேற்ற ஊதியம் உண்டு. ஆனால், உஞ்சிவிருத்திகள் எவரும் இல்லை. அங்கு சிறையோ, சித்ரவதையோ, பைத்தியக்கார ஆஸ்பத்திரியோ, அனாதை நிலையங்களோ கிடையாது. அங்கு இரப்போர் இல்லை. நோயும் நொனபும் கிடையாது. அகால மரணமோ அச்சமோ கிடையாது. மகிழ்ச்சி வளர்கிறது. மனிதன் உணர்வு பெற்றுவிட்டான். காதல் விருத்தியாகிறது. விடுதலைபெற்ற உலகத்தில் வீரர்கள்தான் உலாவுவார்கள். வீணர்கள் உலாவமாட்டார்கள். அவர்களிடமிருந்து விடுதலை பெற்றுவிட்டது வீரர் உலகம்! அவர்கள் மக்களுக்காகவே வாழ்கிறார்கள்.

(முற்றும்)


# இனிய தென்றல்
### வெளியீடுகள்.

**ப. கண்ணன்.**

| | |
|---|---|
| புரட்சிப் பாடகன் | 1-50 |
| வீரவாலி | 1-25 |
| ஜமீன்தார். | 1-00 |
| காதல் மணம் | 0-50 |
| கன்னியின் சபதம் | 0-50 |
| சிந்தனைச் சித்திரம் | 0-62 |
| மின்னொளி | 0-37 |
| **மு. கருணாநிதி.** | |
| ஒரே முத்தம் | 1-25 |
| **சி. பி. சிற்றரசு.** | |
| சிந்தனைச் சுடர் | 0-31 |
| **அறிஞர் இங்கர்சால்** | |
| தமிழில்: இரா. நெடுஞ்செழியன் | |
| சமுதாய விடுதலை | 0-75 |
| **பாவலர், வேலாயுதசாமி.** | |
| திருக்குறள் இசைப்பாடல்கள் | |
| அறத்துப்பால் | 0-44 |
| அறிவுத் துளிர் | 0-19 |
| **குஞ்சிதம்—வடிவேலு.** | |
| கெட்டிக்காரன் | 0-16 |
| பைங்கிளி | 0-12 |
| ஆலமரத்துப்பேய் | 0-12 |
| வால்முளைத்த சாமியார் | 0-12 |
| அன்புமணி | 0-12 |

விற்பனையாளர்களுக்கு ஏற்ற கழிவு உண்டு.

**தென்றல்**
**நூற்பதிப்புக் கழகம்,**
சலகண்டபுரம். சேலம் மாவட்டம்

**தென்றல் நூல்கள் சென்னையில் கிடைக்குமிடம்:**
**பாரி நிலையம்,**
**59, பிராட்வே, சென்னை.**

**தென்றல் நூல்கள் இலங்கையில் கிடைக்குமிடம்:**
**ப. சுப்ரமணியம்,**
பகுத்தறிவுப் பண்ணை,
**செட்டியார் தெரு, கொழும்பு.**

விமர்சனம்.

## மகாதேவி.

சோழன் விசயாலயனின் படைவீரர் சாளுக்கிய மன்னனை வென்று அரசனையும், அவனது அழகுமகள் மகாதேவியையும் சிறைபிடித்துவருகின்றனர்.

வல்லபன், கருணாகரன், வேதநாயகம் மூவரும் சோழ சேனாபதிகள், பின்னிருவரும் மகாதேவியைக் காதலிக்கின்றனர். மகாதேவி முன்னவரை காதலிக்கிறாள். காதல் வெறியால்ஏற்பட்ட நெருக்கடியால் சோழகுமாரியான மங்கம்மாளை கருணாகரன் மணக்கிறான். மகாதேவி வல்லபனுக்கு மனைவியாகிறாள். மகாதேவியையடைய கருணாகரன் பல கொடூரச்செயல்கள் புரிகிறான். அவள் மகன் என்று தன்குழந்தையையே கொல்லுகிறான். இறுதியில் தற்கொலைசெய்து கொண்டு மடிகிறான்.

கி. பி. 9-ம் நூற்றாண்டில் பிற்காலச் சோழ வம்சத்தை உருவாக்கிய மாவீரன விசயாலயனுக்கும், இந்த "மகாதேவி" விசயாலயனுக்கும் பெயர் மட்டுமே ஒன்று. மற்றதெல்லாம் வேறு. புலிக்கொடி பறக்கிறதெனினும், இது தமிழக வரலாற்றுக்கற்பனையன்று; கற்பனை வரலாறு!

திரைக்கதை முறையாக அமையவில்லை. மகாதேவியைக் காட்டிலும் மங்கம்மாவுக்கு முக்கியமும், வல்லபனைக் காட்டிலும் கருணாகரனுக்குப் பிரதானமும் ஏற்பட்டு விடுகிறது.

கவிஞர் கண்ணதாசனின் வசனங்களிலே செந்தமிழ் கொஞ்சுகிறது. "வசனம் எழுதுவதற்கெல்லாம் தி. மு. க. தானப்பா" என்று மற்றவரைச் சொல்ல வைக்கிறது!

வல்லபனாக எம். ஜி. ஆர். நடித்துள்ளார். சிறந்த முறையில்




பொறுப்பை நிறைவேற்றுகிறார்! காதல் காட்சிகளில், பிச்சைக்காரன் வேடத்தில் புதுமை செய்கிறார்.

"மகாதேவி"யாக வரும் சாவித்திரியோடு, கனம் பொருந்திய உடல் ஒத்துழைக்கவில்லையெனினும், உயர்வாக நடித்துள்ளார். நாட்டியமாடுவதன் மூலம் இவர் நமக்களிப்பது அகமகிழ்ச்சியன்று; அனுதாப உணர்ச்சியே!

பி. எஸ். வீரப்பா, பயங்கரமாகச் சிரித்து நடித்துள்ளார். எம். என். ராஜம் தியாகவதி மங்கம்மாவின் பாத்திரத்திற்கு உயிர் தந்துள்ளார். கருணாநிதி சந்திரபாபு, சுசீலா நகைச்சுவை ரசிக்க முடிகிறது.

முத்துப் புலவரான கண்ணதாசன், ஒரு கோமாளி முத்துப் புலவரைச் சிருஷ்டித்துள்ளார்!

"கிண்கிணி" சுசீலா நன்கு சோபிக்கிறார். மற்றவர்களும் கடமையை செய்யத் தவறவில்லை.

பாட்டுக்கள் சில கணீரென்று ஒலிக்கின்றன. 'குறுக்கு வழியில்' "காக்கா, காக்கா" "கண்மூடும் வேளையிலும்" குறிப்பிடத் தக்கவை. "மானம் ஒன்றே பெரிதெனக்கொண்டு" சூழ்நிலையின் பலத்தைக் கவர்ந்த பாடல். எனினும், கருத்துக் குழப்பத்தால் பாரதக் கதைக்குப் பெருமை தேட முனைந்து கவிழ்ந்து விடுகிறது! இதுபோன்ற புராண விளம்பரம்பங்கள் கண்ணதாசன் பேனாவினின்றும் புறப்படுவது வருந்தத்தக்கது.

டைரெக்ஷன் மிகமிகச் சாதாரணம். புதுமைகள் ஏதுமில்லை. சுந்தரராவ் நட்கர்னி பழையடைரெக்டர்; எனினும் அனுபவம் பளிச்சிடவில்லை.

நல்ல செட்டிங்ஸ், உடைகள், கோட்டை, கொத்தளங்கள், நல்ல தமிழ் இவைகள் "மகாதேவி"யைப் பெரிய படமாக்குகின்றன. சிறந்த படமாக்கவில்லை! —நீலன்.


நாஞ்சில் மாவட்ட

**தி. மு. கழக 2-வது மாநாடு**

**டிசம்பர் 27, 28-ம் நாட்களில்**

**நாகர்கோயிலில் நடைபெறும்.**

டெல்லிப் பாராளுமன்ற உறுப்பினர் **ஈ. வே. கி. சம்பத்** அவர்கள் தலைமை தாங்குகிறார்.

மதுரை-டாக்டர் **ஏ. அருணாசலம்** அவர்கள் மாநாட்டைத் திறந்து வைக்கிறார்.

**அண்ணா,** பொதுச் செயலாளர் **இரா. நெடுஞ்செழியன்** மற்றும் இயக்க முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

—வரவேற்புக் குழு.


சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்-1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

224167